வட இந்திய வரலாறு

[ஹர்ஷரது மரணம் முதல்
கி.பி. 1206 வரை]

HISTORY OF NORTH INDIA
(from the Death of Harsha to 1206 A.D.)

இர. ஆலாலசுந்தரம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—754

வட இந்திய வரலாறு

(ஹர்ஷரது மரணம் முதல் கி.பி. 1206 வரை)

(மேல் பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.,
கூடுதல் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
அரசு கலைக் கல்லூரி,
சேலம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — July, 1977
Number of Copies — 1,000

T.N.T.B.S. (C.P.) No. 754

© Government of Tamilnadu

HISTORY OF NORTH INDIA

(From the Death of Harsha to 1206 A.D.)

R. ALALASUNDARAM

Price Rs. 19-10

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
V. P. S. PRINTERS,
Madras-600 005.

பதிப்புரை

வட இந்திய வரலாறு (ஹர்ஷரது மரணம் முதல் கி.பி. 1206 வரை) என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் 754 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 789 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

முதற் பகுதி

இந்து அரசர்கள் காலம்

		பக்கம்
1. கனோஜ்	...	3
1. ஹர்ஷரது பேரரசின் சிதைவு	...	3
2. மகதத்தில் பிந்திய குப்தர்கள்	...	7
3. யசோவர்மன்	...	11
4. ஆயுத வம்சம்	...	17
5. கூர்ஜரப் பிரதிகாரர்கள்	...	19
6. கனோஜ் ராஷ்டிரகூடர்கள்	...	46
7. காகதவாலர்கள்	...	48
2. வங்காளம்	...	56
1. சசாங்கருக்குப் பின் நிலைமை	...	56
2. பாலர்கள்	...	59
3. சேனர்கள்	...	83
3. காஷ்மீரம்	...	92
1. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்	...	94
2. கார்கோட வம்சம்	...	97
3. உத்பல வம்சம்	...	108
4. யசஸ்கர வம்சம்	...	115
5. பர்வகுப்தர் வம்சம்	...	117
6. முதலாம் லொகாரா வம்சம்	...	122
7. இரண்டாம் லொகாரா வம்சம்	...	131
8. உப்பதேவர் வம்சம்	...	137

			பக்கம்
4.	**பரமாரர்கள்**	...	**140**
1.	மாளவத்துப் பரமாரர்கள்	...	140
2.	அபுப் பரமாரர்கள்	...	185
3.	வாகதத்துப் பரமாரர்கள்	...	189
4.	பின்மால் பரமாரர்கள்	...	191
5.	ஜாலோர்ப் பரமாரர்கள்	...	192
5.	**சந்தெல்லர்கள்**	...	**194**
6.	**கலச்சூரிகள்**	...	**212**
1.	திரிபுரிக் கலச்சூரி அரசு	...	214
2.	சரயுபாரக் கலச்சூரி அரசு	...	231
7.	**சௌளுக்கியர்கள்**	...	**239**
8.	**குகிலர்கள்**	..	**271**
1.	மேடபாடத்துக் குகில அரசு	...	271
2.	மற்றக் குகில அரசுகள்	...	285
9.	**சாகமானர்கள்**	...	**289**
1.	சாகம்பரிச் சாகமானர்கள்	...	292
2.	நத்துலத்துச் சாகமான அரசு	...	315
3.	ஜாவாலிபுரத்துச் சாகமான அரசு	...	322
10.	**தொமரர்கள்**	...	**327**
11.	**சாகிகள்**	...	**331**
1.	துருக்கிய சாகிகள்	...	335
2.	இந்து சாகிகள்	...	340
12.	**சிந்து**	...	**352**
1.	அராபியப் படையெடுப்புக்கு முன்	...	352
2.	சிந்துவை அராபியர் கைப்பற்றுதல்	...	358
3.	சிந்துவில் முஸ்லிம் ஆட்சி	...	378

பக்கம்

13. இந்து அரசுகளில் நிர்வாகம், சமுதாயம், பொருளாதாரம், சமயம் முதலியன ... 390

1. அரசியல் அமைப்பும் நிர்வாகமும் ... 390
2. சமுதாயம் ... 408
3. பொருளாதாரம் ... 422
4. சமயம் ... 431
5. இலக்கியம் ... 453

பிற்சேர்க்கை (Annexure) ... 468

ராஜபுத்திரர்களின் பூர்விகம் ... 468

இரண்டாம் பகுதி

முஸ்லிம் அரசர்கள் காலம்

14. கசினி சுல்தான்கள் ... 479

1. கசினியின் எழுச்சி ... 479
2. சுல்தான் மகமூத் ... 485
3. மகமூதுக்குப் பிந்திய யமீனி அரசர்கள் ... 512

15. கோரி முகம்மது ... 526

1. கோரி அரசின் துவக்கம் ... 526
2. கோரி முகம்மதுவின் ஆட்சி ... 529
3. குத்புதீன் அய்பக் அரசராதல் ... 556

முதற் பகுதி

இந்து அரசர்கள் காலம்

1. கனோஜ்

1. ஹர்ஷரது பேரரசின் சிதைவு

ஹர்ஷரது பேரரசு வடமேற்கில் கிழக்குப் பஞ்சாபில் உள்ள ஜலந்தரிலிருந்து (Jalandhar) கிழக்கில் அசாமின் எல்லை வரையில் பரவியிருந்தது. கி.பி. 620ஆம் ஆண்டு வாக்கில் சசாங்கரின் மரணத்துக்குப் பின்னர் வங்காளம் முழுவதையும் ஹர்ஷர் கைப்பற்றிக்கொண்டார் என்று தெரிகிறது. தெற்கில் ஒரிசா மாநிலத்தில் கஞ்சம் (Ganjam) மாவட்டத்தை 643-ல் ஹர்ஷர் கைப்பற்றினார். அதுவும் நர்மதை நதியும் அவரது தென் எல்லையாக விளங்கின. இரண்டாம் புலிகேசியினால் தோற்கடிக்கப்பட்ட ஹர்ஷர் நர்மதை நதியுடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று. மேற்கில் வலபீயும் (Valabhi) வடக்கில் காஷ்மீரமும் ஹர்ஷரது மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு, தமது பழைய அரசர்களாலே தொடர்ந்து ஆளப்பட்டு வந்தன. கிழக்குக் கோடியில் அசாமின் பெரும் பகுதியை ஆண்டுவந்த பாஸ்கரவர்மன் ஹர்ஷரது நட்பரசராக இருந்தார். வலபீயின் அரசர் இரண்டாம் துருவசேனர் ஹர்ஷரது மகளை மணந்து, சாளுக்கியருக்குப் பகைவராகவும் ஹர்ஷருக்கு நண்பராகவும் இருந்து வந்தார். நேப்பாளத்தை ஹர்ஷர் ஆட்சி புரிந்தாரா என்பது பற்றிய ஆராய்ச்சி இன்றுவரை முடிவற்றதாக உள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஹர்ஷப் பேரரசின் எல்லைக்குள்ளாகவே கூட சி-சி-டோ (Chih-chi-to), மோ-ஹி-சு-பா-லோ-பு-லோ (Mo-hi-su-fa-lo-pu-lo), ஊ-ஷே-யென்-ன (Wu-she-yen-na), கு-சே-லோ (Ku-che-lo) ஆகிய நான்கு அரசுகள் தத்தமது அரசர்களால் ஆளப்பட்டுவந்தன என்று யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். மத்திய இந்தியாவிலுள்ள பண்டேல்கந்து, குவாலியருக்கருகிலுள்ள மகேசுவரபுரம், உஜ்ஜெயினி, கூர்ஜர அரசு ஆகிய நான்கே யுவான் சுவாங் குறிப்பிடும் அரசுகளாகும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றின் அரசர்கள் ஹர்ஷரது மேலாதிக்கத்தை ஏற்று அமைதியாக ஆட்சி புரிந்து வந்திருக்கவேண்டும். யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்[1],

[1] Hiuen Tsang's *Hsi Yu Chi.* Translated by S. Beal as *Buddhist Records of the Western World*, and by T. Watters as *On Yuan Chwang's Travels in India.*

பாணபட்டரது ஹர்ஷ சரிதம், அய்ஹொளெ (Aihole) கல்வெட்டுப் போன்றவற்றின்மூலம் இச் செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. ஏறத்தாழ வட இந்தியா முழுவதும் ஹர்ஷரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்ததாக இவற்றின் மூலம் நமக்குத் தெரியவந்தாலும், அவரது நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசம் கிழக்குப் பஞ்சாபின் சில பகுதிகளும் யமுனா நதிக்குக் கிழக்கிலான வட இந்தியாவுமே ஆகும். காஷ்மீரம், குஜராத், ராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகள் அவரால் நேரடியாக ஆளப்படவில்லை. அவற்றில் பல அரசுகள் பெயரளவில் ஹர்ஷரது மேலாதிக்கத்தை ஏற்றிருந்தன.

இந் நிலையில், கி.பி. 647ஆம் ஆண்டின் இறுதியிலோ அல்லது 648ஆம் ஆண்டு துவக்கத்திலோ அப் பேரரசர் மரணமுற்றதும் அரசு கட்டில் ஏறுவதற்கு வாரிசில்லாமல் போனதால் குழப்பம் ஏற்பட்டது. இக் குழப்பமே ஹர்ஷரால் நேரடியாக ஆளப்பட்ட பிரதேசங்களில் சிறு சிறு அரசுகள் முளைப்பதற்குக் காரணமாயிற்று. மாநில அதிகாரிகளும் குறுநிலத் தலைவர்களும் படையதிகாரிகளும் தத்தமது பகுதிகளில் சுதந்திர அரசர்களாக மாறினர். ஹர்ஷரது மரணத்துக்குப் பின் அவரது வம்சத்தின் ஆட்சி எவ்வாறு முடிவுக்கு வந்தது, யார் யார் போட்டியிட்டனர், என்னென்ன சிற்றரசுகள் தோன்றின என்பன போன்ற தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இந் நிலையில் சீனச் சான்றுகள் மட்டுமே அக் குழப்பம் நிறைந்த காலத்தைப்பற்றி அறிவதற்குச் சற்று உதவுகின்றன.

சீனச் சான்றுகள் : படை நடவடிக்கை

ஹர்ஷருக்கும் சீன அரசவைக்குமிடையிலான உறவுகள் பற்றிப் பதினொரு பண்டைச் சீன நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் எழுதப்பட்ட இந் நூல்களில் சீனப் பேரரசர்களின் வாழ்க்கை வரலாறு, டாங் (Tang) வம்சத்து வரலாறு, சுங் (Sung) வம்சத்து வரலாறு, உலக வரலாறு என்பன போன்ற தலைப்புகளில் இவை வரையப்பட்டுள்ளன.[1] இத்தகவல்களையெல்லாம் திரட்டிப் பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த மா-டுவான்-லின் (Ma-Tuan-lin) என்ற சீன அறிஞர் பெரும் நூல் ஒன்றினைத் தொகுத்தார். அது பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் (1319-ல்) சீனாவில் அச்சிடப்பட்டது.[2] இந் நூலே

[1] இவையடங்கிய பட்டியலும், இவற்றின் விளக்கங்களும் டி. தேவாஹூதி எழுதிய 'ஹர்ஷர்' என்ற நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. D. Devahuti's *Harsha*.

[2] *Wen Hsien Tung Kao* by Ma-Tuan-lin.

இந்திய வரலாற்று அறிஞர்களுக்குச் சமீப காலம் வரையில் பெருந் துணையாயிருந்து வந்தது. ஹர்ஷரது மரணத்துக்குப் பிந்திய நிலைபற்றி இச் சீன நூல்களிலிருந்து கீழ்வரும் செய்தி தெரியவருகிறது:

சீனாவில் அப்பொழுது பேரரசராக இருந்தவர் டாய்-சுங் (Tai-tsung, 627-649). நேப்பாளத்து அரசரான அம்சுவர்மனது (இவர் ஹர்ஷரது மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு நேப்பாளத்தை ஆண்டார் என்று சிலரும், இக் கருத்துத் தவறானது என்று வேறு சிலரும் கருதுகின்றனர்) மகளை டாய்-சுங் மணந்திருந்தார். அவரது காலத்தில், குறிப்பாக 641-க்கும் 648-க்கும் இடையில் ஹர்ஷர் மூன்று தூதுக் குழுக்களைச் சீனாவுக்கும், டாய்-சுங் மூன்று தூதுக் குழுக்களை ஹர்ஷரது அரசவைக்கும் அனுப்பினர் என்பது தெளிவாகக் கூறப்படுகிறது. இரண்டாவது சீனத் தூதுக் குழு 643-ல் சீனாவை விட்டுப் புறப்பட்டது. வாங்-சுவான்-சே (Wang-Hsuan-tse) என்பவர் அதன் துணைத் தலைவராய் இருந்தார். மூன்றாவது தூதுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு, 648ஆம் ஆண்டில் மீண்டும் இந்தியாவை வாங்-சுவான்-சே அடைந்தார். சிறிது காலத்துக்கு முன்னர்தான் ஹர்ஷர் காலமாகியிருந்தார் என்ற செய்தி அவருக்குத் தெரியவந்தது. (ஹர்ஷர் மரணமடைந்த ஆண்டினை முடிவு செய்வதற்கு இச் செய்தி பயன்படுகிறது என்பதை இங்குக் கவனித்தல் வேண்டும்.)[1]

ஹர்ஷர் இறந்துபோய்விட்டார் என்றும், நாடு பெருங் குழப்பத்தில் சிக்கியிருந்தது என்றும், அவரது அமைச்சராயிருந்த அ-லோ-ன-ஷுன் (A-lo-na-shun—அர்ஜுனன் அல்லது அருணாஸ்வன்) மத்திய இந்தியாவில் ஆதிக்கத்தைக் கைப்பற்றியிருந்தார் என்றும் சீனச் சான்றுகள் தெரிவிக்கின்றன. அவரது அரசை ந-பு-தி அல்லது தி-ன-பு-தி என்று அவை குறிப்பிடு

[1] இரண்டு சீனத் தூதுக் குழுக்களே இந்தியாவுக்கு வந்தன என்றும், இரண்டாவது குழுவின் தலைவராகவே வாங்-சுவான்-சே 646-ல் சீனாவை விட்டுப் புறப்பட்டார் என்றும், இந்தியாவை 647-ல் அவர் அடைந்திருக்க வேண்டுமென்றும், ஹர்ஷரது மரணம்பற்றிய செய்தியை அவர் அப்பொழுது அறிந்தார் என்றும் R. C. மஜும்தார் (R C. Majumdar, *The Classical Age*) எழுதுகிறார். எனவே கி.பி. 646ஆம் ஆண்டு இறுதியில் அல்லது 647ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஹர்ஷர் காலமாகி இருத்தல் வேண்டும் என்பது அவரது முடிவு. K. A. நீலகண்ட சாஸ்திரி (Advanced History of India) போன்றோரும் இவ்வாறே கணித்தனர். ஆனால் ஆசிரியர் தேவாஹுதி (D. Devahuti, *Harsha*) தெளிவாக எடுத்துக்காட்டும் சீன நூல் மேற்கோள்கள் இக் கூற்றைத் தவறெனக் காட்டுகின்றன. தேவாஹுதிக்கு முன்பே R. S. திரிபாதி வெளியிட்ட டாக்டர்ப் பட்ட ஆராய்ச்சிப் பதிப்பான 'கனோஜ் வரலாறு' என்ற நூலும் (R. S. Tripathi, *History of Kanauj*), அவருக்கும் முன்பே வாட்டர்ஸ் எழுதிய 'யுவான் சுவாங்பற்றிய ஆராய்ச்சி' என்ற நூலும் (Watters, *On Yuan Chwang's Travels*) ஹர்ஷர் கி.பி. 647 அல்லது 648-ல் தான் மரணமுற்றிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்கின.

கின்றன. வடக்கு பீகாரிலுள்ள தீரபுக்தியாகவே (Tirabhukti) இது இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. அர்ஜுனன் சீனத் தூதுக் குழுவினைத் தாக்கிக் கொன்றார். உயிர்தப்பிய வாங்-சுவான்-சே திபெத்துக்குத் தப்பித்துச் சென்று, அதை ஆட்சி புரிந்து வந்த ஸ்ராங்-சான் கம்பா (Srong-tsan Gampa) என்ற வலிமைமிக்க அரசரின் படையுதவியையும் (இவ்வரசர் சீனப் பேரரசரது மருமகனுவார்), வழியில் நேப்பாள அரசர் அனுப்பிவைத்த படையொன்றையும்கொண்டு அர்ஜுனனது படைகளை முறியடித்து, அவரையும் சிறை செய்து சீனுவுக்குக் கொண்டுசென்றார். சா-போ-ஹோ-லோ (சம்பாரன்) என்ற நகரும் மற்ற 580 நகரங்களும் கிராமங்களும் சீனர்களால் கைப்பற்றப்பட்டன. காமரூபத்து (அசாம்) அரசரான பாஸ்கர வர்மனும் வாங்-சுவான்-சேவுக்குப் பரிசுப் பொருள்களை அனுப்பித் தமது நட்பைத் தெரிவித்துக் கொண்டார்.

சீன நூல்கள் அனைத்தும் ஹர்ஷரை மகத அரசர் என்றே குறிப்பிடுவதும், கனோஜ் அரசர் என்று சுட்டாததும் கவனிக்கத் தக்கன. (யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளை மட்டுமே இதற்கு விதிவிலக்காகக் கூறலாம்.) மகதத்துக்கு அருகிலுள்ள தீரபுக்தியில் ஆட்சிபுரிந்ததாகக் கூறப்படும் அர்ஜுனர் ஹர்ஷரின் மாநில ஆளுநராகவும் அமைச்சர்களுள் ஒருவராகவும் இருந்திருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்கலாம். சீனச் சான்று களில் குறிப்பிடப்படும் ஊர்கள், நதிகள் ஆகியவை யாவை என்பதுபற்றி இரண்டு விதக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சீனப் படைகள் அடைந்ததாகக் குறிப்பிடப்படும் சியான்-டோ-விய் (Chien-to-wei) நதி நேப்பாளத்திலுள்ள பாக்மதியே (Bagmati) என்று வின்செண்ட் ஸ்மித் குறிப்பிட்டார். ஆனால், லெவி (Levi) அதைக் கண்டகி என்று குறிப்பிடுவதே பொருத்த மானது என்பது பலரது கருத்து. மேலும், கண்டகி நதியின் கரையிலுள்ள சம்பாரன் நகரே தீரபுக்தி அரசில் ஏழாம் நூற்றுண்டில் பெரும் நகரமாக விளங்கிற்று என்றும் லெவி எழுது கின்றார். இவையனைத்தும் 'மத்திய தேசத்தில்' உள்ளனவாகச் சீன நூல்கள் குறிப்பிடுகின்றன. பஞ்சாபுக்கும் வங்காளத்துக்கு மிடையில் அவை இருந்தமையால் இவ்வாறு குறிப்பிடப்பட்டன போலும்.

அதே சமயம் சீனச் சான்றுகள் கனோஜைப்பற்றியோ, ஹர்ஷருக்குப் பின் அதையோ, தானேசுவரத்தையோ யார் ஆண்டனர் என்பதுபற்றியோ தெரிவிக்கவில்லை. இந்தியச் சான்றுகளும் இதுபற்றி நமக்குத் தெரிவிக்கவில்லை. இவ்வாறு

ஹர்ஷருக்குப்பிந்திய சில ஆண்டுகள் இன்னமும் இருள் மண்டியே கிடக்கின்றன. வடக்கில் வாங்-சுவான்-சேயால் கைப்பற்றப்பட்ட சில பகுதிகள் திபெத்திய அரசரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று சீன நூல்கள்மூலம் அறிகிறோம். சான்றாக, தீரபுக்தி (இன்றைய திர்ஹூத்—Tirhut) 703ஆம் ஆண்டு வரையில் திபெத்தின் ஆட்சியிலிருந்தது.

2. மகதத்தில் பிந்திய குப்தர்கள்

ஹர்ஷரது மரணத்துக்குப் பின் அவரது பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் பலர் தமது ஆட்சியை நிறுவினர். அவர்களில் ஒருவர் மாதவ குப்தர். ஹர்ஷவர்த்தனரின் ஆட்சிக் காலத்தில் அவரது ஆதரவின்கீழ்த் தானேசுவரத்தில் வாழ்ந்துவந்த மாதவ குப்தர் அவரது ஆட்சியின் கடைசிச் சில ஆண்டுகளில் மகதத்தின் ஆளுநராக நியமிக்கப்பெற்று, ஹர்ஷரது மரணத்துக்குப் பின்னர் மகதத்தில் தமது ஆட்சியை நிலை நாட்டினார். பிந்திய குப்தர்களது பூர்விகத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சிறிது குறிப்பிடுவது பயனுள்ளதாகும்.

பூர்வீகம்

புகழ்மிக்க குப்தப் பேரரசர்களின்கீழ்ச் சிற்றரசர்களாக இருந்த பல அரச குலத்தினருள் ஒரு பிரிவினரே பிந்திய குப்தர்கள் (Later Guptas). இவர்கள் குப்தப் பேரரசர்களின் வழியில் வந்தவர்கள் அல்லர் என்பதையும், பெயர் ஒற்றுமையை மட்டும் வைத்து இருவரையும் ஒரே வம்சத்தினராக்குவது தவறு என்பதையும் எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒப்புக்கொள்கின்றனர். மேலும், பிந்திய குப்தர்களின் கல்வெட்டுகள்கூட, குப்தப் பேரரசர்கள் வழியில் அவர்கள் வந்தவர்கள் என்பதை ஓரிடத்திலும் குறிப்பிடாததும் கவனிக்கத் தக்கது. பிந்திய குப்த அரசர்களில் ஒருவரான ஆதித்திய சேனரது அப்சத் (Aphsad) கல்வெட்டு அவர்களின் வம்சாவளியை எடுத்துரைக்கிறது. அதன்படி, கிருஷ்ண குப்தர் என்பவரே அவ் வம்சத்தின் முதலரசராவார். அவர் கி.பி. 500ஆம் ஆண்டுவாக்கில் குப்தப் பேரரசர்களுக்குக் கட்டுப்பட்டவராக ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த வம்சத்தினருக்குப் ‘பிந்திய குப்தர்கள்’ (Later Guptas) என்ற பெயரைச் சூட்டியவனே பிளீட் (Fleet) என்ற வரலாற்றாசிரியன்தான். குப்தப் பேரரசர்களின் வலிமை ஒடுங்கியதற்குப் பின்னர் மகதத்தின் ஆட்சியை இவர்கள் கைப்பற்றிக்கொண்டனர். இவர்களுக்கும் மௌகரி

களுக்கும் (Maukharis) இடையே இடையருமல் சண்டைகள் நடைபெற்றன. இச் சண்டையில் மௌகரிகளுக்கெதிராகப் பலரது உதவியையும் பெறும் நோக்கத்துடன் பிந்திய குப்த வம்சத்து ஆருவது அரசரான மகாசேன குப்தர் என்பவர் புஷ்யபூதி அல்லது புஷ்பபூதி அரச வம்சத்தைச் சேர்ந்த ஆதித்திய வர்த்தனருக்குத் தம் தங்கை மகாசேன குப்தா என்பவரைத் திருமணம் செய்துதந்தார். இந்த ஆதித்திய வர்த்தனர் ஹர்ஷ வர்த்தனருடைய பாட்டனுராவார். ஆனல், தக்கணத்தை ஆண்ட சாளுக்கிய அரசர் கீர்த்தி வர்மனும் வடக்கில் திபெத்தியர்களும் பிந்திய குப்தர்களின் பிரதேசத்தின் மீதுபடையெடுத்தனர். இதுதான் சமயமென்று மௌகரிகளும் பிந்திய குப்தர்களைத் தாக்கியிருத்தல் கூடும். இந் நிலையில், மகாசேன குப்தர் தமது அரசின் தென்மேற்குப் பகுதியான மாளவத்துக்குச் சென்று உஜ்ஜெயினியிலிருந்து ஆளலானுர். ஆனல் கலச்சூரி அரசரான சங்கரகாணர் கி.பி. 595-6-ல் உஜ்ஜெயினியைக் கைப்பற்றிக் கொள்ளவே, கிழக்கு மாளவமான விதிசாவுக்குள் மகாசேன குப்தர் அடைக்கலம் புகுந்து வாழ்ந்து கி.பி. 601ஆம் ஆண்டுவாக்கில் காலமானுர். அடுத்த சில ஆண்டுகளில் விதிசாவையும் கலச்சூரிகள் கவர்ந்து கொண்டனர். இந் நிலையில்தான் மகாசேன குப்தரது பிள்ளைகளான குமார குப்தரும் மாதவ குப்தரும் தானேசுவரத்தில் அடைக்கலம் புகுந்தனர். பாணபட்டரது ஹர்ஷ சரிதம் இவர்கள் தானேசுவரத்தில் பிரபாகர வர்த்தனர், ஹர்ஷர் ஆகியோரது பாதுகாப்பின்கீழ்ச் சிறப்பாக வாழ்ந்ததை நன்கு வர்ணிக்கிறது.[1] மூத்தவரான குமார குப்தர் தானேசுவரத்தில் இறந்து போயிருத்தல் வேண்டும். பின்னர், மகதத்தில் ஹர்ஷரது ஆளுநராயிருந்த பூர்ணவர்மன் என்ற மௌகரி வம்சத்துச் சிற்றரசன் காலமானதும், மாதவ குப்தர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். ஹர்ஷரது மரணத்துக்குப் பின்னர் மகத அரசராக மாதவ குப்தரே தம்மைப் பிரகடனம் செய்து கொண்டார்.

மாதவ குப்தரும் ஆதித்தியசேனரும்

கி.பி. 601ஆம் ஆண்டு வாக்கில் ராஜ்யவர்த்தனருக்குச் சுமார் பதினைந்து வயதாகவும் ஹர்ஷருக்குப் பதினெரு வயதாகவும் இருக்கும்போது ஏறத்தாழப் பதினெட்டு வயதை எட்டிக் கொண்டிருந்த குமார குப்தரும் பதினுறு வயதுள்ள மாதவ குப்தரும் தானேசுவர அரண்மனையில் அடைக்கலம் புகுந்தனர் என்று ஹர்ஷ சரிதம் குறிப்பிடுகிறது. இதன்படி, சுமார் 648ஆம்

[1] ஆதித்திய வர்த்தனருக்கும் பிந்திய குப்த வம்சத்தைச் சேர்ந்த மகாசேன குப்தாவுக்கும் மகனுகப் பிறந்தவரே பிரபாகர வர்த்தனர்.

ஆண்டில் மகதத்தில் அரசரானபோது மாதவ குப்தருக்கு வயது அறுபதுக்கு மேல் ஆயிற்று என்பது தெளிவு. சிறிது காலமே அவர் அரசராயிருந்த பின், அவரது மகனான ஆதித்திய சேனர் அடுத்த மகத மன்னராக அரியணையேறினார். தமது தந்தையின் சார்பில் மகதத்தைக் கைப்பற்றித் தமது வம்சத்தின் ஆட்சியை நிறுவியவர் ஆதித்திய சேனரே என்பது அவரது அப்சத் கல்வெட்டின் வாசகங்களில் தொனிக்கிறது. பிந்திய குப்தர்களில் அதிகமாக நமக்குத் தெரியவரும் அரசரே இவர் ஒருவர்தாம். நமக்குக் கிடைத்திருக்கும் இவரது பல கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது கயாவுக்கு அருகிலுள்ள அப்சத் (Aphsad) கல்வெட்டே. கி.பி. 650-க்கும் 660-க்குமிடையில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருக்கலாம். ஆதித்திய சேனரின் மற்றொரு கல்வெட்டான ஷாபூர் (Shahpur) கல்வெட்டில் காணப்படும் ஆண்டு 66 என்றும், அது ஹர்ஷ அப்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பிளீட் போன்றோர் கருதுகின்றனர். அவ்வாறாயின், அது கி.பி. 672-ஐக் குறிக்கும். ஆதித்திய சேனர் அப்பொழுது ஆண்டுகொண்டிருந்தார் என்பது தெளிவாகும்.

அப்சத் கல்வெட்டே பிந்திய குப்தர்களின் வம்சாவளியை நமக்கு அளிக்கின்றது. அதன்படி கிருஷ்ணகுப்தர், ஹர்ஷகுப்தர், ஜீவித குப்தர், குமார குப்தர், தாமோதர குப்தர், மகாசேன குப்தர், மாதவ குப்தர், ஆதித்திய குப்தர் ஆகிய அரசர்கள் அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களாக ஆட்சிபுரிந்தனர் என்பது தெரிய வருகிறது.[1] ஆதித்திய சேனர் தமது சுதந்திரமான ஆட்சியைக் குறிப்பிடும் வகையில் மகாராஜாதிராஜர், பரமபட்டாரகர் ஆகிய பட்டங்களை அணிந்துகொண்டார். மிகவும் கீர்த்தியுடன் அவர் ஆட்சிபுரிந்தார் என்பது அவரது மகள் ஒருத்தி மௌகரி வம்சத்தைச் சேர்ந்த போகவர்மன் என்பவருக்குத் திருமணம் செய்யப்பட்டிருந்ததிலிருந்து உணரப்படுகிறது. இப் போகவர்மன் நேப்பாள அரசர் அம்சுவர்மனின் சகோதரி மகன். போகவர்மனுக்கு இந்த அரசகுமாரியின்பால் பிறந்த வத்சதேவி என்ற பெண்ணே (அதாவது ஆதித்திய சேனரின் பேர்த்தி) நேப்பாளத்து அரசர் சிவதேவரின் பட்டமகிஷியானார். நேப்பாள அரச வம்சத்துக் குறிப்புகளில் இத் திருமண உறவுகள் எல்லாம் எழுதப்பட்டுள்ளன. ஆதித்திய சேனரது செல்வாக்கு அக்காலத்தில் எத்தகையதாயிருந்தது என்பதை நமக்குப் புலப்

[1] மாதவ குப்தரின் அண்ணனாயிருந்து, ஹர்ஷரது ஆதரவிலேயே அரசகுமாரனாகவே இறந்துபோய்விட்ட குமார குப்தரை இது குறிப்பிடவில்லை. மேலும், இவர்கள் தானேசுவரத்தில் அடைக்கலம் புகுந்த பின் மாளவத்தைக் கலச்சூரிகளிடமிருந்து கைப்பற்றிச் சிறிதுகாலம் ஆட்சிபுரிந்த தேவகுப்தரைப்பற்றியும் இது குறிக்கவில்லை. எனவே, அத் தேவகுப்தர் இவ் வம்சத்தினர் அல்லர் என்று ஊகிக்கலாம்.

படுத்த அவை பயன்படுகின்றன. ஆதித்திய சேனரது பட்டத்தரசியின் பெயர் கோணதேவி. இவ்வரசர் சோழர்களையும் வென்றார் என்றும், அசுவமேத யாகங்கள் போன்ற பல வேள்விகளை நிகழ்த்தினார் என்றும் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

இவர் அசுவமேத யாகம் போன்ற வேள்விகளை இயற்றியிருக்கக்கூடும் எனினும், சோழரை வெல்லும் அளவுக்குத் தெற்கில் படையெடுத்தார் என்று கூறுவது மிகையானதே. வலிமை மிக்க பல்லவர்களைக் கடந்து இவர் மேலும் தெற்கில் சென்றிருக்க முடியாது. இதற்கு மேல் இவ்வரசரைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை.

பிந்திய குப்த அரசின் முடிவு

இவருக்குப் பின் ஆட்சிபுரிந்த தேவ குப்தர், விஷ்ணு குப்தர், இரண்டாம் ஜீவித குப்தர் ஆகிய மூன்று அரசர்களின் கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளனவாயினும், அவர்களைப்பற்றி முக்கியமான தகவல்கள் எவற்றையும் அவை தெரிவிக்கவில்லை. மகாராஜாதிராஜர் என்ற பட்டத்தினை ஆதித்திய சேனரைப் போலவே அவர்களும் சூடியிருந்தனர். மௌகரி அரசின் ஒரு பகுதியாக இருந்த கோமதி நதியின் கரையில் ஜீவித குப்தரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே, அவர் அப்பகுதியைக் கைப்பற்றியிருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம். ஜீவித குப்தருக்குப் பின் அவரது வம்சம் எவ்வாறு முடிவுற்றது, மகதத்தை ஆட்சிபுரிந்தவர் யாவர் என்பவை தெளிவாக வில்லை.

கி.பி. 740ஆம் ஆண்டு வாக்கில் கனோஜை ஆண்ட யசோ வர்மன் கிழக்கில் படையெடுத்துச் சென்று மகதத்தையும் கௌடத்தையும் (Gauda) வென்றார். அப்பொழுது மகதம் எவரது ஆட்சியிலிருந்தது என்பதை எச் சான்றும் தெரிவிக்கவில்லை. இரண்டாம் ஜீவித குப்தரே அப்பொழுது ஆண்டு கொண்டிருந்தார் என்று R. D. பானர்ஜி வங்காள ஏஷியாட்டிக் சொசைட்டியின் இதழ் ஒன்றில் எழுதினார். கௌடத்தையும் ஜீவித குப்தரே அப்பொழுது ஆட்சிபுரிந்தார் என்றும், வாக்பதியால் குறிப்பிடப் படும் கௌட அரசர் அவரே என்றும் பானர்ஜி எழுதுகிறார். ஆனால், இதற்கான ஆதாரங்கள் போதுமானவையாக இல்லை. மகதத்தையும் கௌடத்தையும் ஓரரசர் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார் என்றும், அவரை யசோ வர்மன் தோற்கடித்தார் என்றும் வாக்பதியின் கௌடவாகோ குறிப்பிடுவது ஒன்றே

இதற்கு ஆதாரமாக உள்ளது. ஆனால், R. C. மஜூம்தார் 'வங்காள வரலாறு' (History of Bengal, Vol. 1) நூலில் இதை மறுக்கிறார். கௌட அரசர் ஒருவரே அப்பொழுது மகதத்தையும் ஆட்சிபுரிந்திருக்க வேண்டுமென்றும், எனவேதான் இரண்டையும் ஆட்சிபுரிந்த அரசரை 'கௌட அதிபதி' என்று கௌடவாகோ குறிப்பிடுகின்றது என்றும் மஜூம்தார் கருதுகிறார். எப்படியிருப்பினும், மகதத்தில் பிந்திய குப்தர்களின் ஆதிக்கம் கி.பி. 740ஆம் ஆண்டுவாக்கில் அழிந்தது என்பதும், கௌட அரசர் எவரோ ஒருவரோ அல்லது கனோஜை ஆண்ட யசோ வர்மனே அதற்குக் காரணமாயிருந்தார் என்பதும் புலனாகின்றன.

3. யசோவர்மன் (725—752)

ஹர்ஷருக்குப் பின் கனோஜ்

ஹர்ஷருக்குப் பின் சுமார் முக்கால் நூற்றாண்டு காலம் கனோஜின் வரலாறு இருள்மூடிக் கிடக்கிறது. இந்த இருண்ட காலத்தில் கனோஜில் ஆட்சிபுரிந்தவர்கள் யாவர் என்பதைக் கண்டறிவதற்குக் கன்னிங்ஹாம் (Cunningham) புதை பொருள், இலக்கியம் முதலிய பல கோணங்களிலிருந்து ஆராய்ச்சிகள் நடத்தினார். அபுல் பசல் எழுதிய அயினி-அக்பரியையும் சச்நாமாவையும் ஆதாரமாகக் கொண்டு, முகம்மது-பின்-காசிம் இந்தியாவின் மீது படையெடுத்தபோது கனோஜில் அரசோச்சியவர் ஹர்சந்த் என்பவரே என்ற முடிவுக்குக் கன்னிங்ஹாம் வந்தார். அவ்வாறே கி.பி. 700ஆம் ஆண்டு வாக்கில் ரான்முல் (Ranmul) என்பவர் கனோஜில் அரசாட்சி செய்திருக்க வேண்டும், சிந்துவின் மீதும் அவர் படையெடுத்திருக்க வேண்டும் என்றும் எழுதினார். ஆனால், கல்வெட்டுகள் போன்ற சான்றுகள் இவற்றை ஆணித்தரமாக உறுதி செய்யாத நிலையில், பிற்காலத்திய நூல்களைக் கொண்டு மட்டும் இம் முடிவினை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந் நிலையில், ஹர்ஷருக்கு முக்கால் நூற்றாண்டு காலத்துக்குப் பின் கனோஜை ஆண்டதாகத் திட்டவட்டமாகத் தெரியவரும் யசோவர்மன் என்ற அரசரைப்பற்றியே நாம் அடுத்துக் கவனிக்க வேண்டியதாகிறது.

யசோவர்மன்பற்றிய சான்றுகள்

யசோவர்மனைப்பற்றி நமக்குத் தெரிவிக்கும் முக்கியமான இலக்கியச் சான்றுகள்: (1) வாக்பதி எழுதிய கௌடவாகோ (Gaudavaho) என்ற பிராகிருத காவியம். (2) கல்ஹணர் எழுதிய ராஜதரங்கிணி. (3) பிரபாசந்திரர் எழுதிய பிரபாவக

சரிதம் என்ற சமண நூல். (4) ராஜசேகரர் எழுதிய பிரபந்த கோசம் என்ற மற்ருெரு சமண நூல். (5) மாணிக்ய சூரி என்பார் எழுதிய பப்பபட்டிசூரி சரிதம் (Bappabhattisuri Charita) என்ற சமண நூல். (6) ஜினபிரபுசூரி என்ற சமணர் எழுதிய விவிததீர்த்த கல்பம். (7) தர்மசாகர்கணி என்ற மற்ருெரு சமணரின் தபாகச்ச-பட்டாவலி. இவற்றில், கௌடவாகோ மட்டுமே யசோவர்மரது காலத்தவரும் அவரால் ஆதரிக்கப்பட்டவருமான ஒரு கவிஞரால் புனையப்பட்ட நூலாகும். பிற்காலத்தில் புனையப்பட்டதாயினும் ராஜதரங்கிணியின் ஆதாரங்கள் பெரிதும் நம்பத்தக்கவை. பதின்மூன்று, பதினுன்காம் நூற்ருண்டுகளில் எழுதப்பட்ட மேற்கண்ட சமண நூல்களும் ஓரளவில் கல்ஹணர், வாக்பதி ஆகியோரின் சான்றுகளை உறுதிப்படுத்துகின்றன.

இவையன்றி, யசோவர்ம தேவர் என்ற அரசரால் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று நாளந்தாவில் கிடைத்துள்ளது. ஆனுல், இக் கல்வெட்டானது மாளவத்தை ஆண்டவரும், மண்டசோர் (Mandesor) கல்வெட்டுகளில் குறிக்கப்படுபவருமான யசோதர்மன் என்ற அரசருடையதே என்று கருதுகிருர், அதை முதன்முதலில் பதிப்பித்தவரான டாக்டர் ஹீரானந்த சாஸ்திரி இக் கருத்தை ஏற்றுக்கொள்ளாத ஆசிரியர்களும் உளர்.

கவிஞர் வாக்பதிராஜரின் பிராகிருதக் காவியமான கௌடவாகோ ('கௌட அரசரின் வதம்' என்பது இதன் பொருள்) யசோவர்மனின் திக்விஜயத்தைக் குறிப்பிடுகிறது. தலைப்புக்கு முரணுன வகையில், கௌட அரசரின் தோல்வியையும் மரணத்தையும்பற்றி நூலின் முடிவில் ஒரு சில வரிகளில் மட்டுமே கூறப்படுகின்றன. மேலும், ஆடம்பரமான வர்ணனைகளை நீக்கிவிட்டுப் பார்க்கையில், இதில் அடங்கியிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் மிகவும் சொற்பமே என்று டாக்டர் கீத், தமது 'சமஸ்கிருத இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுவது முற்றிலும் உண்மையானதாகும். கௌட அரசரின் அவையில் புலவராக இருந்த பின், அவரது தோல்விக்கும் மரணத்துக்கும் பிறகு யசோவர்மனுல் போர்க்களத்திலிருந்து கொண்டு வந்து ஆதரிக்கப்பட்டவர் வாக்பதி. ஆனுல், கௌட அரசரின் பெயரைக்கூடத் தமது நூலில் அவர் தெரிவிக்காதது விந்தையே!

யசோவர்மனின் குலம்

'சந்திரகுல அரசர்களின் வரிசையில் மாணிக்கம் போன்றவர்' என்று வாக்பதி யசோவர்மனை வர்ணிக்கிருர். வர்மன் என்ற

பெயர் முடிவை வைத்து, மௌகரி வம்சத்தைச் சேர்ந்தவராக இவர் இருத்தல்வேண்டும் என்றார் கன்னிங்ஹாம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய சமண நூல்களான பப்பபட்டிசூரி சரிதம், பிரபாவக சரிதம் ஆகிய இரண்டுமே சந்திரகுப்தரது குலத்தில் மௌரியக் குடும்பத்தில் தோன்றிய 'முடிமணி' என்று யசோவர்மனைப் புகழ்கின்றன. ஆயினும், மௌரியர்களோ வர்மன் என்ற பெயர் முடிவினைக் கொண்டதில்லை. யசோவர்மனின் குலத்தைப்பற்றித் திட்டவட்டமாகக் கணிப்பதற்கு வேறு சான்றுகள் கிடைக்காத நிலையில் எந்த முடிவுக்கும் நாம் வர இயலவில்லை.

யசோவர்மனின் காலம்

யசோவர்மனும் காஷ்மீர் மன்னரான லலிதாதித்யரும் சமகாலத்தவர் என்பது ராஜதரங்கிணி மூலம் நன்கு உறுதிப்படுகின்றது. லலிதாதித்யர் கி.பி. 724 முதல் 760 வரையில் ஆட்சிபுரிந்தார் என்பது ஆராய்ச்சிகளின் முடிவு. இந்தியாவில் மத்திய தேசத்தில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த ஐ-சா-பான்-மோ (I-cha-fon-mo) என்ற ஓரரசர் கி.பி. 731-ல் தமது அமைச்சரைச் சீனாவுக்கு அனுப்பினார் என்று சீனச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இவ் வரசர் யசோவர்மனே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அவ்வாறாயின், கி.பி. 731-ல் யசோவர்மன் ஆட்சிபுரிந்துகொண்டிருந்தார் என்பது முடிவாகிறது. விக்கிரம அப்தம் 800ஆம் ஆண்டில்—அதாவது, கிறிஸ்துவ அப்தம் 743-ல்—யசோவர்மன் ஆண்டுகொண்டிருந்தார் என்பதைச் சமண ஆசிரியர்கள் அனைவருமே குறிக்கின்றனர். மேலும், விக்கிரம அப்தம் 807-ல் (கி. பி. 750) சமண சந்நியாசியாகத் தீட்சை பெற்றுக்கொண்ட பப்பபட்டி என்பவர் யசோவர்மனது மகனான ஆமராஜரைச் சமண சமயத்துக்கு மாற்றினார் எனவும், தமது சீடரான ஆமராஜர் அரியணையேறிய பின், சூரி (Suri) என்ற நிலைக்கு அவர் (பப்பபட்டி) உயர்த்தப்பட்டார் எனவும் பிரபந்திர சந்திரரும் ராஜசேகரரும் தமது நூல்களில் எழுதுகின்றனர். கி.பி. 750-க்கும் 754-க்குமிடையில் யசோவர்மன் இறந்து, ஆமராஜர் பட்டமேற்றார் என்பது இதன்மூலம் விளங்குகிறது. இச் சான்றுகளையெல்லாம் வைத்துப் பார்க்கையில், யசோவர்மன் கி.பி. 725—752 ஆகிய காலத்தில் ஆட்சிபுரிந்தவராதல்வேண்டும். இதற்குமேல் திட்டவட்டமாக அவரது ஆட்சிக் காலத்தைக் கணக்கிடுவதற்குச் சான்றுகள் கிடைத்தில.

யசோவர்மனின் விஜய யாத்திரை

யசோவர்மனின் விஜய யாத்திரையை மிகவும் அலங்கார மாக வர்ணிக்கிறது கௌடவாகோ. முதலில் சோணை (Son) நதிப் பள்ளத்தாக்கின் வழியாகச் சென்று விந்திய மலையை அடைந்து, விந்தியா-வாசினி என்ற தெய்வத்துக்கு நரபலியிட்டு வணங்கியபின் மகதநாதரை (மகத அரசரை) எதிர்த்துப் புறப்பட்டாராம் யசோவர்மன். அவரைத் தோற்கடித்துக் கொன்றபின், வங்க (இன்றைய கிழக்கு வங்காள) அரசரையும் அடிபணியச் செய்து மலய மலைகளைக் (தெற்கு சயாதிரி-Sahyadri - மலைகள்) கடந்து தக்கண அரசரையும் அடிபணியுமாறு யசோ வர்மன் செய்தார். பின்னர், ராவணனை வென்ற வாலி அரசு புரிந்த (தென்) கடற்கரை வரையில் சென்று, எதிர்ப்பாரின்றித் திரும்பி, பாரசீகர்களைக் (Parasikar) கடும்போர் ஒன்றில் புறங் கண்டு, கடக்க முடியாத மேற்கு மலைத்தொடருக்கு அப்பா லிருந்த பிரதேசங்களிடமிருந்து திறைகள் வசூலித்து, நர்மதை யின் கரையினை யசோவர்மன் அடைந்தார். அதன் பின்னர் நர்மதையையும் மருதேசத்தையும் (மார்வார்) கடந்து ஸ்ரீகந்த நாட்டை (தானேசுவரத்தைச் சுற்றியுள்ள பகுதி) அடைந்தார். அங்கிருந்து குருக்ஷேத்திரத்தையெல்லாம் பார்வையிட்டுப் புறப் பட்டு, அயோத்தியை அவர் எய்தினர்; பின்னர், வடக்கில் மந்தரமலைகளையெல்லாம் கடந்து, இமயமலை வரை சென்றார். இவ்வாறு உலகம் முழுவதையும் வென்றபின், தலைநகரான கனோஜுக்கு அவர் மீண்டார். போரில் பிடிபட்டுக் கொண்டு வரப்பட்ட அரசர்கள் அனைவரும் தத்தம் நாடுகளுக்கு இப் பொழுது திருப்பி அனுப்பப்பட்டனர்.

இது வழக்கமாக அவைக்களப் புலவர்களால் பாடப்படும் துதிப்பாடல் போலவே உள்ளது. கௌடவாகோ என்ற தலைப் பிடப்பட்ட இந் நூலில் கௌட அரசரைப்பற்றிய குறிப்பே இத் திக் விஜயத்தில் குறிப்பிடப்படவில்லை. மகத அரசர் ஒருவரை யும் வங்க அரசர் ஒருவரையும் யசோவர்மன் தோற்கடித்திருத் தல் கூடும். ஆனல், அவர்களின் பெயர்கள்கூட இதில் குறிப் பிடப்படாதது விந்தையே! தோற்கடிக்கப்பட்ட மகத அரசரே கௌட அரசராகவும் இருக்கக்கூடும் என்று சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். அந்த அரசர் இரண்டாம் ஜீவித குப்தராக இருக்கலாம் என்று R. D. பானர்ஜி கருதினர். சமண நூலான பப்பபட்டிசூரி சரிதம், போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப் பட்ட அரசர் வங்காளத்தைச் சேர்ந்த தர்மர்என்றும், அப்போர்க் களத்தில் அவரது அவைக்களப் புலவரான வாக்பதிராஜர் சிறைசெய்யப்பட்டு, கனோஜுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்

என்றும், பின்னர் கௌடவாகோ காவியத்தை இயற்றி விடுதலை பெற்ருர் என்றும் தெரிவிக்கிறது. ஆயினும், இந்தத் தர்மர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர் என்ற எந்தத் தகவலும் நமக்குத் தெரியவில்லை. பாலவம்சத்தைச் சேர்ந்த கோபாலருக்கும் தர்ம பாலருக்குமிடையில் ஆட்சிபுரிந்த அரசர்களுள் ஒருவராக இவர் இருக்கலாம் என்று சிலர் ஊகிக்கின்றனர். ஆயினும், தம்மை ஆதரித்த ஒரு அரசனின் பெயரைக்கூட வாக்பதி தமது நூலில் குறிப்பிடாதது வேடிக்கை! மேலும், யசோவர்மனுல் 'விஜய யாத்திரை'யின்போது தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் எந்த ஒரு அரசனின் பெயரையும் அவர் குறிப்பிடவில்லை. எனவே, வழக்கமான புனைந்துரையாகவே அவரது வர்ணனையை எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

யசோவர்மனுல் தோற்கடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பாரசீகர்கள் அராபியர்களாக இருக்கக் கூடும். அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்றிய பின், கனோஜுக்கெதிராகவும் படைகளை அனுப்பினர். அப் படைகளை எதிர்த்து யசோவர்மன் போரிட்டிருக்கக் கூடும். காஷ்மீர அரசரான லலிதாதித்தியரும் யசோவர்மனும் அராபியப் படைகளை எதிர்த்துப் போர் நடத்தினர் என்பதும், இதற்கான உதவி பெறும் நோக்கத்துடனேயே சீனுவுக்கு இருவரும் தூதர்களை அனுப்பினர் என்பதும் தெரிகின்றன. திபெத்தியர்களுக்கு எதிராகவும்கூடச் சீன உதவியை இவர்கள் நாடியிருக்கக் கூடும். 731-ல் ஐ-சா-பான்-மோ அல்லது இ-ஷா-பு-மோ (அதாவது, யசோவர்மன்) சீனுவுக்கு அனுப்பிய அமைச்சரின் பெயர் பு-டா-சின் (புத்தசேனர்) என்று கூறப்படுகிறது. 736-ல் லலிதாதித்தியரும் சீனுவுக்குத் தூதனுப்பினர்.

லலிதாதித்தியர்மீது போர்

காஷ்மீர மன்னர் லலிதாதித்திய முக்தாபீடரும் கனோஜ் அரசர் யசோவர்மனைப்போலவே திக் விஜயங்களில் விருப்பமுடைய மன்னர். தமது ஆதிக்கத்தை எல்லாத் திசைகளிலும் பரப்ப வேண்டுமென்று இருவருமே முயன்றனர். எனவே, இருவருக்குமிடையே விரைவில் போர் மூண்டது. துவக்கத்தில் இருவரும் நட்புறவு கொண்டிருந்தனர். அராபியர்கள், திபெத்தியர் ஆகியோரின் படையெடுப்புகளை இருவருமே சேர்ந்து எதிர்த்தனர்போலும். ஆயினும், விரைவிலேயே நீண்டதொரு போர் இவர்களுக்கிடையில் மூண்டதென்பதை ராஜதரங்கிணி மூலம் அறிகிருேம். யசோவர்மன் தோற்கடிக்கப்பட்டார் என்றும், லலிதாதித்தியருடன் சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார்

என்றும் கல்ஹணர் எழுதுகிருர். ஆனுல், உடன்படிக்கையில் எவருடைய பெயரை முதலில் குறிப்பது என்பதில் இருவருக்கு மிடையில் வேற்றுமைகள் ஏற்பட்டன. போர் மீண்டும் துவங்கப் பெற்றது. இறுதியில் 'வாக்பதி, பவபூதி ஆகிய இரு பெருங் கவிஞர்களை ஆதரித்த யசோவர்மன்' தோற்று, லலிதாதித்திய ருக்குப் பணிந்தார் என்று கல்ஹணர் முடிக்கிருர். கனேஜ் அரசு முழுவதையும் கைக்கொண்ட பின், கீழைக் கடல் வரையில் லலிதாதித்தியரின் வெற்றிப்படைகள் சென்று திரும்பினவாம்.

இவ்வாறு போரில் தோற்று அரசை இழந்த யசோவர்மன் போரில் கொல்லப்பட்டதாகக் கல்ஹணர் கூறவில்லை. 'வேருடன் யசோவர்மர் கெல்லி எறியப்பட்டார்' என்று அவர் எழுதுவதன் முழுப்பொருள் விளங்கவில்லை. இருப்பினும், இதற்கு மேல் யசோவர்மனைப்பற்றி எதுவும் தெரியவில்லை. இப் போரானது லலிதாதித்தியர் சீனுவுக்கு 736-ல் தூதனுப்பியதற்குப் பல ஆண்டுகள் கழித்து நிகழ்ந்திருத்தல்வேண்டும் என்பது ஸ்டீன் (Stein) அவர்களின் முடிவு. ராஜதரங்கிணி நூலின் மொழி பெயர்ப்பின் முன்னுரையில் அவர் இவ்வாறு கூறுகிருர். ஆனுல், வின்சென்ட் ஸ்மித்தோ இது 745-ல் நடைபெற்றிருக்க வேண்டு மென ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியின் இதழில் முதலில் எழுதினுர். பின்னர் அவரே 740-ல் இது நடைபெற்றிருக்கலாம் என்று தமது பழைய கருத்தினை மாற்றிக்கொண்டார்.[1] ஆயினும், மேலே குறிப்பிட்டுள்ள சமணநூற் சான்றுகளையும் நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை. கி.பி. 752 ஆம் ஆண்டு வாக்கில் இது நிகழ்ந்திருக்கக் கூடும் என்பதை அவை தெரிவிக்கின்றன.

முடிவுரை

நாளந்தாவில் காணப்படும் சம்ஸ்கிருதக் கல்வெட்டொன் றில் யசோவர்ம தேவர் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இம் மன்னரது அமைச்சர் ஒருவரின் மகன் பௌத்தர்களுக்கு அளித்த கொடை ஒன்றினை இது குறிப்பிடுகிறது. 'மற்ற மன்னர்களின் முடிகளின்மீதெல்லாம் தம் பாதத்தைப் பதித்ததாகப்' புகழப் படும் இந்த யசோவர்ம தேவர் எவர் என்பது நன்கு புலனுக வில்லை.

யசோவர்மன் சிறந்த கவிஞரென்பதைக் கல்ஹணரது ராஜ தரங்கிணி மட்டுமன்றி, சமண இலக்கியங்களும்கூடத் தெரிவிக் கின்றன. ஆனுல், அவர் இயற்றியதாக எந் நூலும் இதுவரை கிடைக்கவில்லை.

[1] V. A. Smith, *Early History of India.*

ஆம நாகாவலோகர்

யசோவர்மனின் சந்ததியினரைப்பற்றிச் சுமார் ஐந்து நூற்றுண்டுகளுக்குப் பிந்திய சமண நூல்கள் மட்டுமே நமக்குத் தெரிவிக்கின்றன. யசோவர்மனுக்கும் அவரது மனைவியான யசோதேவிக்கும் பிறந்த ஆம நாகாவலோகர் என்பவரே அடுத்தபடியாக அரியணையேறினர் எனப் பப்பபட்டி சூரி சரிதமும் பிரபந்த கோசமும் கூறுகின்றன.மேலும், குவாலியருக்கருகில் கோபகிரி என்ற ஊரினையே அவர் தலைநகராகக் கொண்டிருந்தார் என்றும் அவை எழுதுகின்றன. ஆனால், மற்றொரு சமண நூலான பிரபாவக சரிதமோ, ஆம நாகாவலோகர் கனோஜிலிருந்தே ஆண்டார் என்று கூறுகின்றது. வேறு சான்றுகளில்லாத நிலையில், இக் கூற்றுகளை ஒப்பிட்டு உண்மையை உணர இயலவில்லை. ஆமர் சமணரென்பதும் பப்பபட்டிசூரியே அவரது குரு என்பதும் நன்கு தெரிகின்றன. ஆமருக்குப் பின் அவரது மகன் துந்துகர் (Dundukar) அரசரானர். இவர் தவற்றொழுக்கங்கள் நிறைந்தவரென்றும், எனவே தமது மகனை போஜரால் கொலை செய்யப்பட்டார் என்றும் பிரபாவக சரிதம் தெரிவிக்கிறது. இவ் வரசர்களைப்பற்றி இதற்குமேல் நமக்குத் தெரியவில்லை.

ஆமரின் காலம்

ஆமர் கி.பி. 752 முதல் 833 வரை ஆட்சி புரிந்தார் என்று பப்பபட்டி சரிதம் கூறுகிறது. (கி.பி. 752ஆம் ஆண்டு வாக்கில் யசோவர்மன் காலமானர் என்று சமணச் சான்றுகள் தெரிவிக்கின்றன.) வங்காள அரசரான தர்மர் அல்லது தர்ம பூபாலர் என்பாருக்கும் ஆம நாகாவலோகருக்குமிடையே பகை நிலவிற்றென்பதும், இறுதியில் தர்மரால் இப் பகை உணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதும் அதே நூலில் குறிப்பிடப் படுகின்றன. தர்மர் (தர்மபாலர்) ஆமர் மீது போரிட்டார் என்பதை இது உணர்த்துகிறது. தர்மபாலரது காலம் கி.பி. 770 முதல் 810 வரையில் என்று மதிப்பிடப்படுகிறது. இவ்வாருயின், ஆமரும் அதுவரை ஆட்சி புரிந்திருத்தல் வேண்டும். இறுதியில் தர்மபாலரால் தோற்கடிக்கப்பட்ட கனோஜ் அரசர் இந்திரராஜர் என்பவர் ஆமராகவே இருக்கலாம். ஆமரது மறு பெயர்களில் ஒன்ருகவே 'இந்திரராஜர்' என்பது இருக்கக்கூடும். (மேலும் விளக்கங்கள் பின்னர்க் கூறப்பட்டுள்ளன.)

4. ஆயுத வம்சம்

மூன்று வெவ்வேறு சான்றுகள் வஜ்ராயுதர், இந்திராயுதர், சக்ராயுதர் ஆகிய மூன்று அரசர்கள் கனோஜை ஆண்டதாக

அறிவிக்கின்றன. வஜ்ராயுதர்பற்றி ராஜசேகர் எழுதிய 'கற்பூர மஞ்சரி' குறிப்பிடுகிறது. இந்திராயுதர்பற்றி ஜினசேனர் எழுதிய ஹரி வம்சம் என்ற சமண நூல் தெரிவிக்கின்றது. சக்ராயுதரைப்பற்றி பாலர், பிரதிகாரர் ஆகியோரது சாசனங்கள் தெரிவிக்கின்றன. இம் மூவரது பெயர் முடிவுகளையும் வைத்து இவர்கள் ஆயுத வம்சம் (Ayudha Dynasty) என்ற ஒரு வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று வின்சென்ட் ஸ்மித் முடிவு கட்டினார்.[1] வஜ்ராயுதருடைய காலம் கற்பூர மஞ்சரியில் குறிக்கப்படவில்லை. காஷ்மீர் அரசர் ஜெயாபீடரால் தோற்கடிக்கப் பட்டதாக ராஜதரங்கிணி குறிப்பிடும் கனோஜ் அரசர் வஜ்ராயுதராகவே இருக்க வேண்டுமென்று முடிவுகட்டி, இந்திராயுதருக்கும் சக்ராயுதருக்கும் முன்னால் அவரை வைத்தார் ஸ்மித். அவரையே R. S. திரிபாதி[2] முதலிய பலரும் பின்பற்றினர்.

ஜினசேனர் வர்த்தமானபுரம் என்ற ஊரில் இருந்துகொண்டு சகஅப்தம் 705-ல் (கி.பி. 783) **ஹரி வம்சம்** என்ற நூலை எழுதிய போது வடக்கில் இந்திராயுதரும், தெற்கில் ஸ்ரீவல்லபரும், கிழக்கில் வத்சராஜரும், மேற்கில் வீரஜெயவராகரும் ஆண்டு கொண்டிருந்ததாகத் தெரிவிக்கிறார். குஜராத்திலுள்ள வத்வான் (Wadhwan) என்ற ஊரே வர்த்தமானபுரம் என்று அறிஞர்கள் முடிவு செய்தனர். இவ்வாறானால், அதற்கு வடக்கில் ஆண்ட இந்திராயுதர் கனோஜின் அரசராக இருக்கமுடியாது என்றும், வடக்கில் லாட்டேசுவர மண்டலம் என்ற பகுதியில் ஆண்டு கொண்டிருந்த இந்திரராஜர் என்பவரே இந்த இந்திராயுதர் என்றும் டாக்டர் குலாப் சந்திர செளதரி கருதுகிறார்.[3] இந்நிலையில் சக்ராயுதர் ஒருவர் மட்டுமே கனோஜில் ஆட்சி புரிந்ததாகத் திட்டவட்டமாக நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பாலர்கள், பிரதிகாரர்கள் ஆகியோரது கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இவரைப்பற்றிச் சிறிதும் ஐயத்திற்கிடமின்றி, கனோஜ் அரசர் என்று குறிப்பிடுகின்றன. பாலர்களது பாகல்பூர் (Bhagalpur) செப்பேடு கனோஜை இந்திரராஜர் ஆண்டதாகக் குறிப்பிடுகிறது. வஜ்ராயுதர், இந்திரராஜர் என்ற பெயர்கள் ஆம நாகாவலோகருடைய வேறு பெயர்களாக இருக்க வேண்டுமென்பது டாக்டர் செளதரி அவர்களின் கூற்று ஆகும். பப்பபட்டிசூரி சரிதம் ஆமர் நீண்டகாலம் ஆண்டதாகக் கூறுவது உண்மையாயின், இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்வது இயலும்.

[1] Vincent Smith, *Early History of India.*

[2] R. S. Tripathi, *History of Kanauj.*

[3] Gulab Chandra Choudhari, *Political History of Northern India from Jain Sources* (c. 650 A.D. to 1300 A.D).

தர்மபாலர் என்ற வங்காள அரசர் கனோஜை ஆண்ட இந்திர ராஜரைத் தோற்கடித்த பின், வாமனர்போல் வந்து பிச்சை கேட்ட சக்ராயுதருக்குக் கனோஜ் அரசைக் கொடுத்ததாக பாகல்பூர் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்திரராஜருடைய மகனாகவோ அல்லது சகோதரராகவோ சக்ராயுதர் இருந்திருக்கக் கூடும். இத்தகைய கூற்றுகளின்படி பார்த்தால், கனோஜில் யசோவர்மனுக்குப் பின்னர் ஆமராஜர், சக்ராயுதர் ஆகிய இருவர் மட்டுமே ஆட்சி புரிந்ததாக முடிவாகும். ஆனால், பிரபாவக சரிதம் ஆமருக்குப்பின் துந்துகர் ஆட்சி புரிந்தாரென்று கூறுகிறது. இன்றுள்ள சான்றுகளை வைத்து இச் சிக்கலைத் தீர்ப்பது இயலாததாக உள்ளது.

5. கூர்ஜரப் பிரதிகாரர்கள்

பூர்விகம்

கூர்ஜரர்கள் யார் என்பதுபற்றிப் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திப் பல சிற்றரசுகள் தோன்றின. அவற்றுள் ஒன்றே கூர்ஜர அரசு. கி.பி. ஆறும் நூற்றாண்டின் இறுதிவாக்கில் ராஜஸ்தானத்தில் இவர்கள் தமது முதல் அரசை நிறுவினர். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் இப் பகுதியைக் கூர்ஜராட்டிரா (Gurjaratra) என்று குறிப்பிடுகின்றன. கூர்ஜரர்களது ராஷ்டிரம் என்பது இதன் பொருள் போலும்! இதுவே பின்னர் மருவி, குஜராத் என்றாகி இன்றைய மாநிலத்தைக் குறிப்பதாயிற்று. பஞ்சாபில் குஜ்ரன்வாலா, குஜர்கான், குஜராத் ஆகிய இடங்கள் உள்ளன. சகரான்பூர் மாவட்டம் 18ஆம் நூற்றாண்டில் குஜராத் என்றே அழைக்கப்பட்டது. மத்தியப் பிரதேசத்தில் பழைய குவாலியர் அரசின் ஒரு மாவட்டம் குஜர்கர் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.[1] ஆதியில் கூர்ஜரர்கள் என்ற மக்கள் இவ்விடங்களில் வாழ்ந்ததன் நினைவாகவே இப் பெயர்கள் இன்றும் நிலவுகின்றன. அவர்களின் வழித்தோன்றல்களான குஜர்கள் (Gujars) என்போர் இன்றும் பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு ராஜஸ்தானம் முதலிய பகுதிகளில் வாழ்கின்றனர். குஜராத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர் கூர்ஜரர்களே. இவர்களது பூர்விகம்பற்றிப் பலவிதமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவர்கள் வெளியிலிருந்து இந்தியாவுக்குள் புகுந்து பஞ்சாப், ராஜபுதனம் ஆகியவற்றில் துவக்கத்தில் குடியேறினர்

[1] R. C. Majumdar, Editor, *The Classical Age.*

என்று ஒரு சாரார் கருதுகின்றனர். ஹூணர்களைப் போலவே இவர்களும் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்குள் புகுந்திருக்க வேண்டுமென்பது இவர்களது கருத்து. ஹூணர்களின் நாணயங்களுக்கும் கூர்ஜர அரசர்களின் நாணயங்களுக்குமுள்ள சில ஒற்றுமைகள், பிரபாகரவர்த்தனரின் போர் வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஹூணர்கள் மற்றும் கூர்ஜரர்கள் ஆகிய இருவரையும் ஒன்றுசேர்த்து ஹர்ஷசரிதம் குறிப்பிடுவது, ஆறும் நூற்றுண்டுக்கு முந்திய இந்தியக் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் இவர்களைப்பற்றிய குறிப்பின்மை முதலிய பல சான்றுகளை இவர்கள் தங்களுக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகின்றனர்.

இக் கூற்றினை எதிர்த்து, கூர்ஜரர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களே என்ற கருத்தை C. V. வைத்தியா,[1] K. M. முன்ஷி[2] போன்றோர் வெளியிட்டுள்ளனர். வேதகால க்ஷத்திரியர்களின் வழித்தோன்றல்களே இவர்கள் என்பது வைத்தியாவின் தீவிரமான வாதம். இவ்விரு கருத்துகளும்பற்றி எவ்விதமான முடிவையும் இறுதியாகக் கூறுவது இயலாது.

பிரதிகாரர்கள் யார்?

கூர்ஜரர்களுக்குள் பிரதிகாரர்கள் என்ற ஒரு பிரிவினர் இருந்தனர். இவர்கள் நாளடைவில் புகழ்மிக்க பேரரசு ஒன்றினை நிறுவி ஆட்சி புரிந்தனர். கூர்ஜர மக்களுள் தாங்கள் ஒரு பிரிவினர் என்பதைக் காட்டுவதுபோல, கூர்ஜரப் பிரதிகாரர்கள் என்று இவர்கள் தம்மை அழைத்துக் கொண்டனர். கி.பி. 959ஆம் ஆண்டைச் சேர்ந்த மதனதேவரது கல்வெட்டொன்று ராஜோர் (Rajor) என்றவிடத்தில் உள்ளது. அதில் 'கூர்ஜரப் பிரதிகாரண்வய' என்ற சொற்கள் காணப்படுகின்றன. மதனதேவர் கூர்ஜரப் பிரதிகார வம்சத்தில் தோன்றியவர் என்பதே இதன் பொருள்.

ஆனால், பின்னர் வந்த கூர்ஜர அரசர்களும் புலவர்களும் பிரதிகாரர் என்ற பெயர் வந்ததற்குப் புராண காரணங்களைக் கற்பித்தனர். கக்குகர் (Kakkuka) என்ற கூர்ஜர சிற்றரசர் ஒருவரது கட்டியாலா (Ghatiyala) கல்வெட்டு, 'ரகு குலத்தைச் சேர்ந்த லட்சுமணர் தமது அண்ணன் ராமனின் வாயில் காப்போனாக (பிரதிகாரனாகப்) பணிபுரிந்தார். அவர் வழியில் வந்ததே பிரதிகார வம்சம்,' என்று குறிப்பிடுகிறது. கூர்ஜரப் பிரதிகார அரசரான வத்சராஜரது கல்வெட்டு ஒன்றும் இதே

[1] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India*, Vol. I

[2] K. M. Munshi, *The Glory that was Gurjaradesa*.

கதையைக் கூறுகிறது. கூர்ஜரர்கள் பூர்விகத்தில் இந்தியர்களே என்பதை நிரூபிப்பதற்கு இக் கல்வெட்டுகளை C. V. வைத்தியா போன்ருேர் ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

பிரதிகாரர்கள் அக்னிகுல ராஜபுத்திரர்கள் என்று சந் பர்தாய் எழுதிய பிருதிவிராஜ ராசோ என்ற நூலில் கூறப்படு கிறது. அபு குன்றின்மீது முனிவர் ஒருவரது அக்னி குண்டத்தி லிருந்து நான்கு ராஜபுத்திர குலங்கள் தோன்றியதாக மிகவும் பிற்காலத்திய இந்த நூல் கூறுகிறது. சாகமானர்கள், பரமாரர்கள், சௌளுக்கியர்கள், பிரதிகாரர்கள் ஆகியோரே இந் நால்வர். அந்நியர்கள் இந்துக்களாக ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு முன் அக்னி சடங்குகள் மூலம் புனிதப்படுத்தப் படுவதையே இக் கதை மறைமுகமாகத் தெரிவிக்கிறது என்று குருக் (Crooke) 1911-ல் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் இதற்கு விளக்கம் கூறினர்.

(அ) ஜோத்பூர் பிரதிகார அரசர்கள்

ஹர்ஷ சரிதம், யுவான் சுவாங், அய்ஹொளெக் கல்வெட்டு ஆகியவையே கூர்ஜரர்களைப்பற்றி முதன் முதலில் தெரிவிக்கும் சான்றுகளாகும். ஹர்ஷரின் தந்தையான பிரபாகரவர்த்தனர் கூர்ஜர அரசரைக் கதிகலங்கச் செய்தார் என்று ஹர்ஷ சரிதத் தில் பாணபட்டர் எழுதுகின்ருர். கி.பி. 634-ல் செதுக்கப்பட்ட அய்ஹொளெக் கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் காலத்தில் சாளுக்கிய அரசுக்கு வடக்கே இருந்த அரசர்களில் கூர்ஜரர்களை யும் குறிப்பிடுகின்றது. யுவான் சுவாங்கும் தமது நூலில் கூர்ஜரது தலைநகரைப்பற்றித் தெரிவிக்கின்ருர். கி.பி. 840-ல் செதுக்கப்பட்ட ஜோத்பூர் கல்வெட்டும், கி.பி. 861-ல் செதுக்கப்பட்ட கட்டியாலா கல்வெட்டும் கூர்ஜராட்டிரத்தில் கூர்ஜரப் பிரதிகாரர்கள் பன்னிரண்டு தலைமுறைகளாக ஆண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கின்றன. இதன்படி பார்த்தால், கி.பி. ஆரும் நூற்ருண்டின் நடுப்பகுதி முதல் ஜோத்பூர் பகுதி யில் அவர்கள் அரசோச்சி வந்தனர் என்று தெரிகிறது.

அரிச்சந்திரரும் அவரது வம்சத்தினரும்

இக் கல்வெட்டுகள் குறிப்பிடும் முதல் அரசர் அரிச்சந்திரர். அவர் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் சிறந்த பிராமணர் என்றும், ரோகில்லாதி (Rohilladhi) என்ற மற்ருெரு பெயரும் அவருக்கு உண்டென்றும் அவை தெரிவிக்கின்றன. பிராமண மனைவி ஒருவரும், க்ஷத்திரிய மனைவி ஒருவரும் அவருக்கு இருந்

தார்களாம். பிராமண மனைவிக்குப் பிறந்த பிள்ளைகள் பிரதிகார பிராமணர்களாகவும், க்ஷத்திரிய மனைவிக்குப் பிறந்த பிள்ளைகள் பிரதிகார அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர்களாகவும் ஆயினராம். குப்த அரசு, ஹூண அரசு, மாளவத்தில் யசோ தர்மனின் அரசு ஆகியவை நிலைகுலைந்த பொழுது அரிச்சந்திர ரும் அவருடைய பிள்ளைகளும் சிற்றரசு ஒன்றினை நிறுவியிருக்கக் கூடும். க்ஷத்திரிய மனைவியான பத்ரா மட்டுமே அரசியாகக் குறிப்பிடப்படுகிறார். அவருக்குப் போகபட்டர், கக்கர், ரஜ்ஜில்லர், தட்டர் ஆகிய நான்கு பிள்ளைகள் இருந்தனர். இவர் கள் ஜோத்பூருக்கு வடக்கில் ஐந்து கல் தொலைவிலுள்ள, இன்று மாண்டோர் (Mandor) என்று அழைக்கப்படும் மாண்டவ்ய புரத்தைக் கைப்பற்றினர். இதுவே அவர்களது அரசின் முதலா வது தலைநகராயிற்றுப் போலும்!

அரிச்சந்திரரின் முதலிரண்டு மகன்கள் என்னவாயினர் என்பது தெரியவில்லை. ஏனெனில், மூன்றாவது மகனான ரஜ்ஜில்லரே (Rujjila) தமது தந்தைக்குப் பின் மாண்டவ்ய புரத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ரஜ்ஜில்லரது மகனான நரபட்டரே அடுத்த அரசரானார். இவரது போராற்றல் காரணமாக இவருக்குப் பெல்லாபெல்லி (Pellapelli) என்ற பெயரும் சூட்டப்பட்டது.

(ரோகில்லாதி, பெல்லாபெல்லி முதலிய பெயர்கள் இந்திய மொழிப் பெயர்கள் அல்ல என்றும், கூர்ஜரப் பிரதிகாரர்கள் வெளியிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் என்பதை இவை நிரூபிக்கின்றன என்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர். அதே சமயம், சமஸ்கிருத சொற்களின் பிராகிருத வடிவங்களே இப் பெயர்கள் என்று குலாப் சந்திர சௌதரி போன்றோர் இக்கூற்றை மறுக்கின்றனர்.) நரபட்டருக்குப் பின் அரசரானவர் அவரது மகனான நாகபட்டர். இவர் நாகதர் (Nahada) என்று கட்டியாலா கல்வெட்டில் குறிக்கப்படுகிறார். மேடந்தகம் (Medantaka) என்ற ஊருக்குத் தமது தலைநகரை இவர் மாற்றினார். ஜோத் பூருக்கு எழுபது மைல் வடகிழக்கிலுள்ள மெர்தா (Merta) என்ற ஊராக இது இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அரிச்சந்திரர் உள்ளிட்ட இந் நான்கு அரசர்களும் ஏறத்தாழ கி.பி. 550 முதல் எண்பது (அ) தொண்ணூறு ஆண்டுகள் வரை ஆட்சி புரிந்திருக்கக்கூடும்.

மற்ற அரசர்கள்

நாகபட்டரின் காலத்திலோ அவரது மகனான டாட்டாவின் (Taṭa) காலத்திலோ சீன யாத்திரிகர் யுவான் சுவாங் கூர்ஜர

அரசு ஒன்றுக்கு விஜயம் செய்திருக்க வேண்டும். அவர் விஜயம் செய்த கியு-சே-லோ (Kiu-che-lo) என்பது கூர்ஜர அரசே என்று வாட்டர்ஸ் (Watters) யுவான் சுவாங்கின் பயணம்பற்றிய தமது நூலில் கூறுகிறார்.[1] அதன் தலைநகரமான பி-லோ-மோ-லோ (Pi-lo-mo-lo) என்பதை யுவான் சுவாங் வர்ணிக்கிறார். பில்லமாலா (Bhillamala) என்பதே அவ்வூராக இருக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். ஆனால், பில்லமாலாவான பின்மால் (Bhinmal) என்ற இன்றைய ஊர் யுவான் சுவாங் குறிப்பிடுவதுபோல் வலபீயிலிருந்து 300 கல் வடக்கில் இல்லையென்பதால், பால்மர் (Balmer) என்ற ஊரே பி-லோ-மோ-லோவாக இருக்கக் கூடும் என்பது R. C. மஜும்தார் போன்றோரின் கருத்தாகும். இதுபற்றி முடிவாக எதையும் கூறுவதற்கில்லை. தாம் சென்ற கூர்ஜரநாட்டு அரசர் பௌத்தர் என்று யுவான் சுவாங் எழுதுகிறார். ஆனால், கூர்ஜர அரசர்களது சமயம்பற்றி ஜோத்பூர் கல்வெட்டும் கட்டியாலா கல்வெட்டும் எதுவும் தெரிவிக்கவில்லை.

நாகபட்டருக்குப் பின் ஆட்சிபுரிந்த டாட்டா, போஜர், யசோவர்த்தனர், சந்துகர், சீலுகர் (Siluka) ஆகியோரைப் பற்றி முக்கியமாக எத் தகவலும் தெரியவில்லை. ஜோத்பூர் கல்வெட்டு இவர்களது பெயர்களையும் முக்கியமில்லாத வேறுசில தகவல்களையும் மட்டுமே நமக்குத் தெரிவிக்கிறது. இவர்கள் அனைவரும் கி.பி. 640 முதல் 740 வரையில் ஆட்சிபுரிந்திருக்கலாம். சீலுகர் பட்டிவம்சத்தைச் சேர்ந்த தேவராஜர் (Bhattika Devaraja) என்ற அரசரைத் தோற்கடித்தார் என்றும், வல்லமண்டலபாலிகா என்ற விருதைப் பெற்றிருந்தார் என்றும் ஜோத்பூர் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. வல்லமண்டலம் என்னும் ராஜபுதனத்தின் ஒரு பகுதி, மாளவம், லாட்டம் (Lata) என்றழைக்கப்பட்ட தெற்கு குஜராத் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கிருந்த பல கூர்ஜரச் சிற்றரசுகளுக்கெல்லாம் தலைவர்போல் மிகுந்த செல்வாக்கோடு சீலுகர் விளங்கியிருத்தல் வேண்டுமென்றும் அதனாலேயே இவ் விருதுப் பெயர் அவருக்கு ஏற்பட்டதென்றும் கருதலாம்.

சீலுகரது காலத்திலோ அல்லது அவரது மகனான ஜோடர் (Jhota) என்பாரது காலத்திலோ அராபியர்கள் கூர்ஜர அரசர்களின் மீது படையெடுத்தனர். சிந்துவின் கவர்னராயிருந்த ஜுனைத் (Junaid) இஸ்லாமிய ஆதிக்கத்தைப் பரப்பும் நோக்கத்துடன் ஒரு பெரும் படையோடு குஜராத், ராஜஸ்தானம் ஆகியவற்றின் வழியாகக் கிழக்கில் மாளவத்திலிருந்த உஜ்ஜெயினி,

[1] Watters, *On Yuan Chwang's Travels*, Vol II.

தெற்கில் புரோச் (Broach) ஆகியவை வரை வெற்றிகரமாகப் படையெடுத்துச் சென்றுர். கி.பி. 724க்கும் 743க்குமிடையில் இப் படையெடுப்புகள் நிகழ்ந்திருக்க வேண்டும். [காரணம், ஜுனைதின் அரசரான கலீபா ஹிஷாம் (Hisham) ஆட்சிபுரிந்த ஆண்டுகள் இவையே.] அவந்தியில் (மாளவம்) ஆட்சிபுரிந்து கொண்டிருந்த பிரதிகார அரசரான நாகபட்டர், லாட்டத்தில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த அவனிஜனுஸ்ரய புலிகேசி ராஜர் ஆகியோர் அராபியப் படைகளை விரட்டியடித்தனர்.[1] இப் படையெடுப்புகளின் விளைவாக, ஜோத்பூர் பிரதிகார அரசு தோல்வியுற்று நிலைகுலைந்தது. அவந்தியை மையமாகக் கொண்ட பிரதிகார அரசு வலிமையும் கீர்த்தியும் பெற்று முன் னுக்கு வந்தது. இவ்வாறு ஜோத்பூர் பிரதிகாரர்களின் வீழ்ச்சி துவங்கிற்று.

ஜோடருக்குப் பின் பில்லாதித்யர், கக்கர் (Kakka), பாவ்கர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். பாவ்கர் கி.பி. 837-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பது கல்வெட்டு ஒன்றின் மூலம் தெரிகிறது. இவர் ஆட்சிக்கு வந்தபோது நாட்டில் குழப்பம் நிலவிற்று என் பதும், இவர் மிகவும் திறமையோடு தமது ஆட்சியையும் வலிமையையும் நிலைநிறுத்தினுர் என்பதும் ஜோத்பூர் கல்வெட் டால் அறியப்படுகிறது. இவருக்கு அடுத்துப் பதவிக்கு வந்த கக்குகரே (Kakkuka) கி.பி. 861-ல் கட்டியாலாக் கல்வெட்டைப் பொறித்தவர். இவருக்குப் பின் இந்த வம்சம்பற்றிய வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. ஆனுல், இதற்கிடையில் அவந்தியைச் சேர்ந்த பிரதிகார அரசர்கள் கனேஜைக் கைப்பற்றி வட இந்தி யாவில் ஒரு பேரரசை நிறுவிவிட்டனர். முதலாம் போஜர் முதலியோர் பாவ்கரது ஆட்சி முதலே ஜோத்பூர் அரசின்மீது தமது தாக்குதல்களைத் துவக்கி வெற்றியும் பெற்றனர். இதன் காரணமாக ஜோத்பூர் பிரதிகார அரசு சிதைவுற்றிருத்தல் வேண்டும். ஜோத்பூருக்கு அருகிலுள்ள தௌலதாபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடு கனேஜ் அரசரான முதலாம் போஜர் கி.பி. 843-ல் ஜோத்பூர் பிரதிகார அரசைக் கைப்பற்றி யிருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. ஆயினும், கி.பி. 861-ம் ஆண்டைச் சேர்ந்த கட்டியாலாக் கல்வெட்டு, கக்குகர் தமது அரசை மீட்டுவிட்டார் என்பதைத் தெரிவிக்கிறது.

(ஆ) புரோச் கூர்ஜரப் பிரதிகாரர்கள்

இன்றைய புரோச் மாநிலப் பகுதியில் மற்ெருரு பிரதிகார வம்சம் ஆட்சிபுரிந்தது. அவ் வம்சத்தின் கல்வெட்டுகளும்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

செப்பேடுகளும் கிடைத்துள்ளன. புரோச் பண்டைக்காலத்தில் பிருகுகச்சம் (Bhrgukaccha) என்று வழங்கப்பட்டது. இப் பகுதியில்தான் இச் சிற்றரசின் தலைநகரம் இருந்திருக்க வேண்டும். கெய்ரா (Kaira) என்னும் ஊரில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகள் கி.பி. 629, கி.பி. 634 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்தவை. 'நாந்திபுரியிலிருந்து' என்ற சொற்கள் இவற்றில் வருவதை ஆதாரமாக வைத்து நாந்திபுரியே இவர்களின் தலைநகரம் என்று பகவன்லால் இந்திராஜி எழுதி, இன்றைய நாந்தோத் (Nandod) என்ற ஊரே நாந்திபுரியாகுமென்று குறிப்பிட்டார். ஆனால், டாக்டர் பஹ்லரோ (Buhler) புரோச்சே நாந்திபுரியாகுமென்று கருதுகிறார். புரோச் மாவட்டத்திலேயே இவ் வம்சத்தினரின் சாசனங்கள் பெரும்பாலும் கிடைப்பதால் பஹ்லர் கூறுவதையே ஏற்றுக்கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. மத்திய குஜராத், வடக்கு குஜராத்தின் ஒரு பகுதி ஆகியவை இவ்வரசில் அடங்கியிருந்தன. கெய்ரா சாசனங்களை வைத்துப் பார்க்கையில், அவற்றை வெளியிட்ட இரண்டாம் தட்டர் (Dadda) என்ற அரசருக்கு முன் அவரது தந்தையான முதலாம் ஜெயபட்டர், பாட்டனாரான முதலாம் தட்டர் ஆகியோர் ஆண்டதாகத் தெரிகிறது. இந்த அரசை நிறுவியதாகக் கருதப்படும் முதலாம் தட்டர் ஜோத்பூர் வம்சத்தை நிறுவிய அரிச்சந்திரருடைய கடைசி மகனை தட்டராகவும் இருக்கலாம் என்று R. C. மஜும்தார் கருதுகிறார்.

இம் முதலரசர் சுமார் கி.பி. 575ஆம் ஆண்டுவாக்கில் தமது அரசை நிறுவி இருக்கக் கூடும். முதலாம் தட்டரும் அவரது வாரிசுகளும் சாமந்தர்கள் என்றே தங்களை அழைத்துக் கொண்டனர். பேரரசர் ஒருவருக்கு அடங்கிய குறுநில மன்னர்கள் மட்டுமே இப் பட்டத்தை மேற்கொள்ளுவது வழக்கம். அவ்வாறாயின், இவர்கள் எப் பேரரசருக்குக் கட்டுப்பட்டு இருந்தனர் என்பது விளங்கவில்லை. தங்களது உறவினர்களான ஜோத்பூர் பிரதிகாரர்களுக்கும் சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசிக்கும் இவர்கள் அடங்கியிருந்தனர் போலும்!

ஜெயபட்டர் கி.பி. 600 முதல் 625 வரையில் ஆண்டிருக்கலாம். அவருக்கும், வலபீ அரசர்கள் கலச்சூரிகள் ஆகியோருக்குமிடையே போர்கள் நடைபெற்றன. இவற்றின் விளைவாக அவரது அரசு விரிவடைந்தது. அவரது மகனான இரண்டாம் தட்டர் கி.பி. 629-ல் அரியணையிலிருந்தார் என்பதை அவரது கெய்ரா கல்வெட்டு நன்கு புலப்படுத்துகிறது. ஹர்ஷருக்கெதிராக வலபீ அரசர் ஒருவரை இவர் காப்பாற்றியதாக இவரது நவ்சாரி

செப்பேடு குறிப்பிடுகிறது. இரண்டாம் புலிகேசியின் காலத்தவரான இவர் ஹர்ஷருக்கெதிராகச் சாளுக்கியர்களை ஆதரித்தார் போலும்! இரண்டாம் தட்டரது மகனான இரண்டாம் ஜெயபட்டர் கி.பி. 650ஆம் ஆண்டுவாக்கில் அரியணை ஏறினார். இவரைப் பற்றி முக்கிய தகவல் எதுவும் தெரியவில்லை. இவரது மகனான மூன்றாம் தட்டர் (சுமார் கி.பி. 675-700) 'பாகுசகாயர்' என்ற விருதுப் பெயரைப் பூண்டிருந்தார். சொந்த பலத்தையே நம்பி இருந்தவர் என்று இதற்குப் பொருள். மேற்கிலும் கிழக்கிலும் ஆண்ட பெரிய அரசர்கள்மீது இவர் போர் புரிந்தார் என்று கூறப்படுகிறது. மேற்கத்திய அரசர் வலபீயைச் சேர்ந்தவராகவும், கிழக்கத்திய அரசர் மாளவத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது மேலைச் சாளுக்கியராகவோ அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாகவோ இருக்க வேண்டும்.[1] அடுத்து அரசு புரிந்தவர்கள் மூன்றாம் ஜெயபட்டர், அகிரோலா (Ahirola), நான்காம் ஜெயபட்டர் ஆகியோர். இவர்களின் காலத்தில் கி.பி. 724க்கும் 743க்குமிடையில் சிந்துவின் அராபிய ஆளுநரான ஜுனைத் படையெடுத்தார். புரோச்சுக்கு அருகிலுள்ள கல்வெட்டொன்று நான்காம் ஜெயபட்டர் வலபீ அரசில் அராபியர்களைத் தோற்கடித்ததாகக் கூறுகிறது. வலபீ அரசருக்கு உதவியாக இவர் சென்று லாட்டத்து அரசர் அவனிஜனாஸ்ரய புலிகேசி ராஜாவுடன் சேர்ந்து அராபியப் படையைத் தோற்கடிப்பதில் உதவினார் போலும்! இதற்குப்பின் இக் கூர்ஜர அரசு திடீரென்று வீழ்ச்சியுற்றது. லாட்டத்தை ஆண்ட சாளுக்கியர்கள் இவ்வரசை அழித்துக் கைப்பற்றியிருக்கக்கூடும். பின்னர் ராஷ்டிரகூடர்கள் இப் பகுதியைச் சில காலம் கைப்பற்றியிருந்த பின், மாளவத்தை ஆண்ட பிரதிகாரர்கள் இதைக் கைப்பற்றியாண்டனர். பிருகுகச்சா கூர்ஜர அரசின் கடைசி அரசர் நான்காம் ஜெயபட்டரே. கி.பி. 735ஆம் ஆண்டைச் சேர்ந்த அவரது கல்வெட்டொன்று கிடைக்கிறது. அதற்குப் பின்னரே அவரது முடிவு ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) அவந்தி கூர்ஜரப் பிரதிகாரர்கள் தோற்றம் : முதலாம் நாகபட்டர்

அவந்தியில் ஆட்சி புரிந்த கூர்ஜரப் பிரதிகாரர்களும் ஜோத்பூர் கூர்ஜரப் பிரதிகார வம்சத்தோடு உறவு பூண்டவர்களாகவே இருக்க வேண்டும். ஜோத்பூர் பிரதிகார அரசரான பாவ்கரது கல்வெட்டொன்று ராமனது வாயில்காப்போனாகப்

[1] Bombay Gazateer இவ் வம்சத்தைப்பற்றி நிறையத் தகவல்களைத் தொகுத்துக் கூறுகிறது.

பணிபுரிந்த லட்சுமணனது வழியில் தோன்றியதே தங்களது பிரதிகார வம்சம் என்று குறிப்பிடுவதை முன்பே சுட்டிக் காட்டினேம். அவந்தியை ஆண்ட பிரதிகார வம்சத்தினர்களும்[1] தங்களைப்பற்றியும் இதே கதையை எடுத்துக் கூறுவது கவனிக்கத்தக்கது.

இந்த வம்சத்தினர் அவந்தியில் எப்பொழுது தமது ஆதிக்கத்தை நிறுவினர் என்பது தெரியவில்லை. குஜராத்தின் மீதும் ராஜஸ்தானத்தின் மீதும் படையெடுத்த ஜுனைதின் படைகளை உஜ்ஜெயினியைத் தலைநகராகக் கொண்ட ஓர் அரசர் தோற்கடித்தார் என்று அல் பிலாதூரி (Al Biladuri) போன்ற அராபிய வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்றனர்.[2] இந் நிகழ்ச்சி கி.பி. 724க்கும் 743க்கும் இடையில் நடந்திருத்தல் வேண்டுமென்பதை முன்பே பார்த்தோம். மிலேச்சர்களது பெரும் படையை முதலாம் நாகபட்டர் தோற்கடித்ததாகக் குவாலியர் கல்வெட்டுக் கூறுகிறது. இந்த வெற்றியே உஜ்ஜெயினியைத் தலைநகராகக் கொண்ட அவந்தி பிரதிகார அரசின் புகழையும் செல்வாக்கையும் பெருக்கிற்று. இப் பெரு வெற்றியானது, நாகபட்டரது குறுநில மன்னரும் புரோச் பகுதியை அவரிடமிருந்து பெற்று ஆண்டவருமான சாகமானச் சிற்றரசர் இரண்டாம் பர்திரிவத்தர் (Bhartrivadha) என்பாரது 756ஆம் ஆண்டு செப்பேடு ஒன்றில் குறிப்பிடப்படுகிறது. நாகபட்டருக்கு நாகாவலோகர் என்ற பெயரும் இருந்தது என்பதை இந்த ஹன்சோட் (Hansot) செப்பேடு மூலமாக நாம் தெரிந்து கொள்கிருேம். ஜினசேனரது ஹரிவம்சம் கி.பி. 783-ல் கிழக்கில் அவந்தியில் வத்சராஜர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டோம். இவர் அவந்தி பிரதிகார வம்சத்தின் நான்காவது அரசராவார். மேலும் மற்றொரு சமண ஆசிரியரான உத்யோதனசூரி என்பவர் கி.பி. 778-ல் தாம் வாழ்ந்து கொண்டிருந்த ஜாவாலிபுரம் அல்லது ஜாலோர் (Jalor) என்பது வத்சராஜரால் ஆளப்பட்டது என்று குறிப்பிடுகிருர். இவற்றின்மூலம் அவந்தி வம்சத்தில் பிரதிகாரர்கள் ஆட்சி புரிந்த பகுதிபற்றியும் தோராயமாக அவர்களது ஆட்சிக் காலம்பற்றியும் நாம் அறிய முடிகிறது. இவ் வம்சத்தின் பெயரும் புகழும் ஆதிக்கமும் முதலிடம் பெறுவதற்குக் காரணமாயிருந்த முதலாம் நாகபட்டர் கி.பி. 730ஆம் ஆண்டுவாக்கில் ஆட்சி புரிந்தவராதல் வேண்டும். ஜோத்பூர், புரோச் ஆகியவற்றைச் சேர்ந்த கூர்ஜர அரசுகள் நிலைகுலைந்து

[1] B. N. Puri, *History of Gurjara Pratiharas.*

[2] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

போக, அவந்தி கூர்ஜர அரசு மட்டும் பெரும் கீர்த்தி பெற்று முன்னுக்கு வருவதற்கு முதலாம் நாகபட்டரே காரணமாயிருந்தார்.

முதலாம் நாகபட்டர் அவந்தியையும் (மாளவம்) மார்வார் பகுதியையும் (இங்குத்தான் ஜாலோர் உள்ளது) ஆட்சி புரிந்திருக்க வேண்டும். ஜோத்பூர் பிரதிகாரர்கள் இவரது மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். புரோச் பகுதியில் ஆட்சி புரிந்த கூர்ஜரர்கள் அழிக்கப்பட்டு, அப் பகுதி சாகமானர்களுக்கு இவரால் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. உஜ்ஜெயினியைத் தலைநகராகக் கொண்ட நாகபட்டர் வலிமையும் செல்வாக்குமுள்ளவராகத் திகழ்ந்தாலும்கூட, பெருந் தோல்வியொன்று அவருக்குக் காத்திருந்தது. ராஷ்டிரகூடர்கள் தெற்கில் பேரரசு ஒன்றை நிறுவி வந்தனர். தந்திதுர்கர் என்ற ராஷ்டிரகூட அரசர் அப்பொழுது அதை ஆட்சி புரிந்து வந்தார். அவர் உஜ்ஜெயினியை ஆண்ட பிரதிகார கூர்ஜர வம்சத்து அரசரை வென்று தமக்கு வாயில்காப்போனாகப் (பிரதிகாரனாக) பணிபுரியுமாறு செய்தார் என்று ஒரு செப்பேடு கூறுகிறது.[1] மேலும் உஜ்ஜெயினியில் ஹிரண்யகர்ப்ப தானச் சடங்கையும் தந்திதுர்கர் செய்து கொண்டார். கி.பி. 578க்கு முன் தந்திதுர்கரது ஆட்சி முடிவுற்றது. இந்த வெற்றிக்குப் பின் தமக்குப் பணிந்து போக இணங்கிய நாகபட்டரிடமே அவரது ஆட்சியை மீண்டும் தந்திதுர்கர் ஒப்படைத்திருக்க வேண்டும். புரோச்சைச் சேர்ந்த சாகமானச் சிற்றரசர் 756-ல் முதலாம் நாகபட்டர் உஜ்ஜெயினியில் ஆண்டு கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிடுவது இதற்குச் சான்று.

வத்ச ராஜர்

கக்குகர், தேவராஜர்

முதலாம் நாகபட்டர் கி.பி. 756க்குப் பின் இறந்திருக்க வேண்டும். வத்சராஜர் கி.பி. 778க்கு முன் அரியணை ஏறியிருக்க வேண்டுமென்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட உத்தியோதன சூரியின் குவலய மாலா என்ற நூலிலிருந்து தெரிகிறது. இவ்விருவருக்குமிடையிலான காலத்தில் காகுஸ்தர், தேவராஜர் ஆகிய இருவர் ஆண்டனர் என்பது குவாலியர் கல்வெட்டுமூலம் புலப்படுகிறது. இவ் விருவரும் நாகபட்டரது சகோதரர் ஒருவரின் பிள்ளைகள் என்று அது கூறுகிறது. ஆனால்,

[1] ராஷ்டிரகூடப் பேரரசர் முதலாம் அமோகவர்ஷரது கி.பி. 871ஆம் ஆண்டைச் சேர்ந்த சஞ்சான் செப்பேடுகள் (Sanjan Plates).

அச்சகோதரரின் பெயர் தெரியவில்லை. காகுஸ்தர் எப்பொழுதும் கேலி நிறைந்த பேச்சுகளையே பேசுவார் என்றும், இதனால் கக்குகர் (எப்பொழுதும் சிரிப்பவர்) என்ற மற்றொரு பெயரும் அவருக்கு உண்டென்றும் அது கூறுகிறது. அடுத்து அரசரான அவரது தம்பி தேவராஜருக்குத் தேவசக்தி என்ற மறுபெயரும் உண்டெனக் குவாலியர் கல்வெட்டுமூலமாக அறிகிறோம். இவர் பல அரசர்களையும் சிற்றரசர்களையும் அஞ்சச் செய்தார் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இதன் முழுப்பொருள் நமக்கு விளங்க வில்லை. இவர் விஷ்ணுவை வழிபட்டவர்.

வத்சராஜர்

தேவராஜரது பிள்ளையான வத்சராஜர் கி.பி. 778க்கு முன் அரசராக இருக்கவேண்டும் என்பது உத்யோதன சூரி எழுதிய குவலய மாலா மூலம் தெரிகிறது. மேலும் ஜினசேனர் எழுதிய ஹரிவம்சம் வத்சராஜர் கி.பி. 783-ல் அவந்தியில் அரசரா யிருந்தார் என்று குறிப்பிடுகிறது. இவர் மாளவம், கிழக்கு ராஜஸ்தானம் முதலிய பகுதிகள்மீது ஆட்சி புரிந்தார் என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது. மேலும் மத்திய ராஜஸ்தானிலும் பின்னர் இவர் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர் என்ப தற்குச் சான்றாக தௌலத்புரச் செப்பேடுகள் விளங்குகின்றன. இவர் பல திசைகளிலும் பல பகைவர்களை வென்று வட இந்தியா வில் முக்கியமான அரசர்களுள் ஒருவராகத் திகழ்ந்திருத்தல் வேண்டும். கௌட அரசரையும் இவர் வென்று கிழக்கில் வெகு தூரம் வரையில் தமது புகழைப் பரப்பினர் என்று ராஷ்டிரகூட அரசர் மூன்றாம் கோவிந்தரின் ரத்தன்பூர் செப்பேடுகளும் வணி திந்தோரி (Wani-Dindori) செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. கௌட அரசருடனான இப் போரில் சாகம்பரி அரசின் சாகமான வம்சத்தைச் சேர்ந்த துர்லப ராஜர் வத்சராஜருக்கு அடங்கிய சிற்றரசர் என்ற முறையில் படையுடன் வந்து உதவினர் என்பது பிற்காலத்தில் எழுதப்பட்ட பிருதிவிராஜ விஜயம் என்ற நூலில் கூறப்படுகிறது. இந்தச் சாகம்பரி அரசர் கங்கை நதியின் கழிமுகம் வரையில் சென்றதாகவும் அது தெரிவிக்கிறது. அப்போது கௌட அரசராக இருந்தவர் தர்மபாலராக இருக்க லாம். அவரது அரசு மேற்கில் கங்கை-யமுனை இடைநிலம் வரையில் விரிந்திருந்தது. தர்மபாலர், வத்சராஜர் ஆகிய இருவருமே தமது அரசைப் பெருக்க எண்ணங்கொண்டிருந்த தால் இவ்விருவருக்கிடையில் போர் நிகழ்ந்தது இயற்கையே. இப் போர் எங்கே நடைபெற்றது என்பது தெரியவில்லை. ஆயினும் கௌட அரசர் தோற்று அவரது கொற்றக் குடைகள்

வத்சராஜரால் கைப்பற்றப்பட்டன என்பதை மேலே கூறப்பட்ட ராஷ்டிரகூட சாசனங்கள் தெரிவிக்கின்றன.

ராஷ்டிரகூடரை எதிர்த்துப் போர்

ஆனால், ராஷ்டிரகூட அரசரான துருவர் வடக்கே படையெடுத்து வந்து வத்சராஜரைப் போரில் புறங்கண்டு ராஜஸ்தானப் பாலைவனத்துக்குள் விரட்டியடித்தார். இதன் பின்னர் தர்மபாலரையும் அவர் தோற்கடித்தார்.

மேற்கிந்தியாவில் பல பகுதிகளை வென்ற ராஷ்டிரகூட அரசர் தமது மகனை இந்திரராஜர் என்பவரை லாட்டத்தில் தமது பிரதிநிதியாக நியமித்து ஆளச் செய்தார் என்ற செய்தி கர்க்கராஜரது பரோடா செப்பேடுகளில் (812) கூறப்பட்டுள்ளது. சமண நூலான ஹரிவம்சத்தில் கி.பி. 783-ல் வடக்கில் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படும் இந்திராயுதர் இந்த ராஷ்டிரகூட இந்திரராஜரே தவிர, கனோஜ் அரசர் இந்திராயுதர் அல்லர் என்று குலாப் சந்திர சௌதரி கருதுகிறார். வத்சராஜருக்கும் துருவருக்குமிடையிலான போர் 783க்கு முன் நடைபெற்றிருக்க வேண்டுமென்பது இதிலிருந்து புலப்படுகிறது.

கௌட அரசர் தர்மபாலரின்மீது தொடுத்த போரின்போது கனோஜையும் அவர் கைப்பற்றி இருக்க வேண்டுமென்றும், அப்பொழுது இந்திரராஜர் என்பவர் அதை ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார் என்றும் சிலர் கருதுகின்றனர். வத்சராஜருக்கும் தர்மபாலருக்குமிடையே போர் எவ்விடத்தில் நடந்ததென்பது தெரியாத நிலையில் இதுபற்றி முடிவு செய்வது இயலாது. பின்னர், தர்மபாலரால் தோற்கடிக்கப்பட்ட கனோஜ் அரசர் இந்திரராஜர் ஆயுத வம்சத்தைச் சேர்ந்த இந்திராயுதரே என்ற கூற்றையும் சில அறிஞர்கள் மறுக்கிறார்களென்பதையும் முன்பே பார்த்தோம்.

அதிராஜர், நிருபர் முதலிய விருதுகளைச் சூடி, வத்சராஜர் வலிமைமிக்க அரசராக விளங்கியிருத்தல் வேண்டும். ஆனால், ராஷ்டிரகூட அரசரால் தோற்கடிக்கப்பட்ட பின் அவர் நிலை குலைந்தார். அதற்குப் பின் அவரது நிலை என்ன என்பதுபற்றிய சான்றுகள் இல்லை. அத் தோல்விக்குப் பின் ஜாவாலிபுரத்தை (ஜாலோர்) தலைநகராகக் கொண்டு தாம் இழந்த பகுதிகளை மீட்பதற்கு அவர் முயற்சி செய்தார் என்று குவலய மாலாவை ஆதாரமாக வைத்துச் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[1]

[1] B. N. Puri, *History of Gurjara Pratiharas.*

இரண்டாம் நாகபட்டர்

கி.பி. 778க்கு முன் அரியணை ஏறிய வத்சராஜர் 795க்கு முன் மறைந்திருக்க வேண்டும். அவரையடுத்து அரசரான இரண்டாம் நாகபட்டர் தமது நிலையை உயர்த்திக் கொள்ளப் பெருமுயற்சி செய்தாரென்பது பல கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. கி.பி. 802ஆம் ஆண்டைச் சேர்ந்த மன்னே (Manne) செப்பேடுகளும், அவரது பேரரான முதலாம் போஜரது குவாலியர் கல்வெட்டும் நாகபட்டரது போர் முயற்சிகள்பற்றித் தெரிவிக்கின்றன. ராஷ்டிரகூட அரசர் மூன்ரும் கிருஷ்ணர் நாகபட்டரைத் தோற்கடித்தார் என்று கி.பி. 871ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் அமோகவர்ஷரது சஞ்சான் செப்பேடுகள் கூறுகின்றன. இத் தோல்விக்குப் பின் நாக பட்டரது ஆதிக்கம் நிலை குலைந்தது. ஆந்திரம், சைந்தவம், விதர்பம் ஆகிய அரசர்கள் நாகபட்டருக்குக் கட்டுப்பட்டனர் என்றும், சக்ராயுதரும் வங்க அரசரும் அவரால் தோற்கடிக்கப் பட்டனரென்றும், அராபியர், மாளவர் போன்ற பலரது கோட்டைகள் அவரால் கைப்பற்றப்பட்டன என்றும் குவாலியர் கல்வெட்டுக் கூறுகிறது. இவற்றில் ஓரளவு உண்மை இருக்கலாம். கலிங்கம், ஆந்திரம் ஆகியவை வரை அவர் படையெடுத்தா ரென்பதை ஏற்றுக் கொள்ளாமல் போனாலும்கூட, பொதுவாகப் பல சிற்றரசர்களை அவர் வென்றிருக்கலாம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். மேற்குக் காத்தியாவாரில் ஆட்சி புரிந்த சைந்தவக் குறுநில மன்னர்கள் பிரதிகாரர்களைத் தங்களது மேலரசராக ஏற்றுக் கொண்டதை அவர்களது செப்பேடுகள் தெளிவாக்குகின்றன.

கனோஜ் படையெடுப்பு

அடுத்தபடியாக, கனோஜின்மீது நாகபட்டர் படையெடுத் திருக்கக்கூடும். இந்திரராஜரைத் தோற்கடித்து, அவரது தம்பி யாகவோ மற்ற உறவினராகவோ இருந்த சக்ராயுதரைப் பால அரசரான தர்மபாலர் கனோஜில் ஏற்கெனவே அரசராக்கி யிருந்தார். நாகபட்டர் சக்ராயுதர்மீது போரிட்டு அவரது பிரதேசமான காலஞ்சர மண்டலம் என்பதைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் பின்னர்க் கனோஜையும் அவர் கைப்பற்றி ஞர் என்று சிலர் முடிவு செய்கின்றனர். இதற்கான ஆதாரம் இல்லை. (கி.பி. 815ஆம் ஆண்டுவாக்கில் இரண்டாம் நாகபட்டர் கனோஜைக் கைப்பற்றிக் கொண்டார் என்று R. S. திரிபாதி முடிவு செய்கிருர். நாகபட்டருக்கு 'நாகாவலோகர்' என்ற பட்டம் இருந்ததாக அவர் முடிவு கட்டியதே இதற்குக்

காரணம். அந்த ஆண்டில் கனோஜில் ஆண்டதாகக் குறிப்பிடப் படும் நாகாவலோகர் ஆமரே. இரண்டாம் நாகபட்டர் அல்லர்.) தமக்குக் கீழ்ப்பட்ட சக்ராயுதரை நாகபட்டர் தோற்கடித்ததால் தர்மபாலர் வெகுண்டு போருக்கு எழுந்தார். பிரதிகாரர்களது குவாலியர் கல்வெட்டும், போரில் பங்கெடுத்துக் கொண்ட அவர்களது சிற்றரசர்களின் சாசனங்களும் மாங்கிர் வரையில் தமது படைகள் சென்றன என்றும், வங்க அரசரான தர்மர் தோற்கடிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கின்றன. இச் செய்திகள் உண்மை என்றே தெரிகின்றன. ஜோத்பூர் கூர்ஜர அரசரான கக்கர், குகில (Guhilat) அரசரான சங்கரகாணர் முதலியோர் கௌட அரசில் முட்ககிரி என்னுமிடத்தில் கௌட அரசனின் மாபெரும் படைகளை நாகபட்டரோடு சேர்ந்து தோற்கடித்ததாக அவர்களது சாசனங்களில் குறிப்பிடப்படுகிறது. முட்ககிரியாகிய மாங்கிரில் (Monghyr) போர் நடைபெற்றது இவ்வாறு உறுதியாகிறது.

ராஷ்டிரகூடரிடம் தோல்வி

ஆனால், விரைவிலேயே இவரது வெற்றிகள் வீணாயின. ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கோவிந்தர் பிரதிகார அரசின்மீது படையெடுத்து இரண்டாம் நாகபட்டரோடு போரிட்டார். ராஷ்டிரகூடரது கல்வெட்டுகள் பல இப் போர்பற்றிக் குறிப்பிடுகின்றன. இரு தரப்புக்குமிடையில் பல ஆண்டுகள் பல போர்கள் நடைபெற்றிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ராஷ்டிரகூட அரசரின் பிரதிநிதியாக லாட்டத்தை ஆண்டு வந்த இந்திரர் கி.பி. 795-லேயே கூர்ஜர அரசரைத் தோற்கடித்ததாக ஒரு சான்று தெரிவிக்கிறது. இந்தக் கூர்ஜர அரசர் நாகபட்டராகவே இருக்கக்கூடும். இந்திரரது மகனான கர்க்கராஜரும் கூர்ஜரர்கள் வடக்கில் ஆக்கிரமிப்புச் செய்ய முடியாதபடி தாம் தடுத்து நிறுத்தியதாக பரோடா செப்பேட்டில் குறித்துள்ளார். பிரதிகார அரசரும் சிறுசிறு போர்களில் ராஷ்டிரகூடரை வென்றிருக்கக் கூடும் என்பது அவர்களது கல்வெட்டுகளால் தெரிகிறது. பேரரசரான மூன்றும் கோவிந்தர் தமது ஆதிக்கத்தை நன்கு நிலைநிறுத்திய பின் தாமே பிரதிகாரர்களுக்கெதிராகப் படையுடன் புறப்பட்டார். பல்வேறு செப்பேடுகள் ராஷ்டிரகூடப் பிரதிகாரப் போர்பற்றிக் குறிப்பிடுகின்றன. நாகபட்டர் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்ட பின் மூன்றும் கோவிந்தர் இமயமலை வரையில் சென்றார் என்று சஞ்சான் செப்பேடு தெரிவிக்கிறது. அதே செப்பேடு தர்மபாலரும் சக்ராயுதரும் மூன்றும் கோவிந்தரிடம் போரிடாமலேயே பணிந்தனர் என்றும் குறிப்பிடுகிறது. இப் படையெடுப்பு எப்போது நிகழ்ந்தது என்பதுபற்றித் திட்ட

வட்டமாக எந்தச் சான்றும் தெரிவிக்கவில்லை. கி.பி. 809-10ஆம் ஆண்டுக்கு முன்பு இது நடைபெற்றிருக்க வேண்டுமென்று R. C. மஜூம்தார்[1] எழுதுகிருர்.

நாகபட்டரின் முடிவு

இத் தோல்வி நாகபட்டருக்கு ஒரு பேரிடியாக இருந்தது என்பதில் ஐயமில்லை. நாகபட்டர் தமது முந்திய நிலையை இழந்து கிழக்கு ராஜஸ்தானத்திலும் மாளவத்திலும் மட்டும் ஒரு சிற்றரசர்போல் ஆளலானுர். ஆயினும், பரமபட்டாரகர், பரமேசுவரர், மகாராஜாதி ராஜர் போன்ற பேரரசருக்குரிய விருதுகளை அவர் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார் என்பது ஜோத்பூருக்கு அருகிலுள்ள புச்கலா (Buckala) கல்வெட்டால் தெரியவருகிறது. இது 818-ல் செதுக்கப்பட்டதாகும். நான்கு நூற்றுண்டுகளுக்குப் பின் எழுதப்பட்ட பிரபாவக சரிதம் கி.பி. 833-ல் கங்கை நீரில் மூழ்கி, கனேஜை ஆண்ட நாகாவலோகர் இறந்தார் என்று தெரிவிக்கிறது. இந்த நாகாவலோகர் இரண்டாம் நாகபட்டரே என்று பல அறிஞர்கள் முடிவு செய்கின்றனர். ஆனல், பிரபாவக சரிதம் குறிப்பிடும் நாகாவலோகர் யசோவர்மனது மகனுன ஆம நாகாவலோகரே என்று எழுதுகிருர் குலாப் சந்திர சௌதரி.[2]

நாகபட்டர் கனேஜைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்று சில நூல்கள் எழுதுவதும் தவறேயாகும். நாகபட்டருக்குப் பின்னரே பிரதிகாரர்களது தலைநகரம் கனேஜுக்கு மாற்றப்பட்டது. மேலும், கனேஜில் கி.பி. 836 வரையில் யசோவர்மனது வம்சம் ஆட்சியிலிருந்தது என்றும் சௌதரி கருதுகிருர். இரண்டாம் நாகபட்டரின் பேரரான முதலாம் போஜர் கனேஜைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார் என்பது தெளிவு. ஆனல், எவருடைய காலத்தில் தலைநகர் இவ்வாறு மாற்றப்பட்டது என்பது புலனுகவில்லை. மேற்கில் அடிக்கடி ராஷ்டிரகூடர்கள் படையெடுத்ததாலும், கனேஜ் நகரம் அன்றைய வடஇந்திய நகரங்களிலேயே புகழ் வாய்ந்த தாக இருந்ததாலும் பிரதிகாரத் தலைநகரம் அவ்வூருக்கு மாற்றப்பட்டது.

நாகபட்டர் இவ்வாறு ராஷ்டிரகூட அரசரால் தோற்கடிக்கப் பட்டுப் பழைய பெருமை குன்றினுலுங்கூட, பிரதிகார அரசர்

[1] R. C. Majumdar, *The Age of Imperial Kanauj.*

[2] Dr. G. C Choudhary, *Political History of Northern India from Jain Sources.*

களில் வத்சராஜரைப்போல் இவரும் முக்கியமானவர் என்பதில் ஐயமில்லை. பிரதிகார வம்சத்தை வட இந்தியாவில் கீர்த்தியும் வலிமையும் மிக்க ஒன்ருக உயர்த்தியவர்கள் இவ்விரு அரசர்களே.

முதலாம் போஜர்

ராமபத்ரர்

இரண்டாம் நாகபட்டரின் மகனுன ராமபத்ரர் அடுத்த அரசரானுர். நாகபட்டர் கி.பி. 833-ல் காலமாளுரென்று சமண நூலான பிரபாவக சரிதம் தெரிவிக்கிறது. ராமபத்ரர் வலிமையற்ற அரசராக விளங்கினுர். கிழக்கில் குவாலியர் வரையில் ராமபத்ரரது அரசு துவக்கத்தில் பரவியிருந்தது. ஆட்சிக்கு வந்தவுடனேயே சில மன்னர்கள் அவரை எதிர்த்தார் களென்றும், குதிரைப் படையில் சிறந்த வேறு அரசர்களைக் கொண்டு அவர்களை அவர் அடக்கினுர் என்றும் குவாலியர் சாசனம் தெரிவிக்கிறது. இவர்களெல்லாம் யார் என்பது நன்கு புலனுகவில்லை. பால அரசர்கள் இவரது பிரதேசங்களின்மீது படையெடுத்திருக்கக் கூடும் என்று தேவபாலரது பாதல் (Badal) தூண் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு கூறுவதற்கு இட மிருக்கிறது. கௌட அரசர் (தேவபாலராக இருக்கக்கூடும்) கூர்ஜர அரசரின் ஆணவத்தை அடக்கியதாக இக் கல்வெட்டுக் கூறுகிறது. காலஞ்சர மண்டலம், கூர்ஜராட்டிரம் ஆகிய இரண்டும் இவரது ஆட்சியிலிருந்து ஏதோ காரணத்தினுல் கைந்நழுவின என்பது அங்குக் கிடைத்த இரு செப்பேடுகளால் தெரிய வருகின்றது. இவரது மகனுன மிகிரபோஜர் அமைச்சர் களின் உதவியோடு தம் தந்தையைக் கொன்று அரியணை ஏறினுர் என்று பிரபாவக சரிதம் கூறுகிறது. இது எவ்வளவு தூரம் நம்பத்தக்கது என்பது புலனுகவில்லை. மிகிரபோஜர் தந்தையைக் கொன்றவர் என்று வேறு எந்தச் சான்றும் தெரிவிக்கவில்லை. ராமபத்ரர் மூன்றே ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

முதலாம் போஜர்

ராம பத்ரரின் மகனுன இவர் மிகிரர் என்றும் அழைக்கப்பட் டார். ஆதி வராகர், பிரபாசர் போன்ற வேறுபல பெயர்களும் இவருக்கு இருந்தன என்பது சாசனங்களால் தெரியவருகிறது. கி.பி. 836-ல் மகோதயபுரத்திலிருந்து இவர் வெளியிட்ட பரா (Barach) செப்பேடு அந்த ஆண்டிலோ அதற்குச் சற்று முன்

னரோ போஜர் அரசரானார் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. மகோதயம் என்பது கனோஜ் நகரமே. ஆகவே, கி.பி. 836-ல் கனோஜ் பிரதிகார அரசின் தலைநகராய் விட்டது. இது எவ்வாறு எப்போது நிகழ்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ளச் சான்றுகளில்லை. முதலில் காலஞ்சர மண்டலமும், அடுத்து, கி.பி. 843க்கு முன் ஜோத்பூர் பிரதிகாரரது கூர்ஜராட்டிரமும் இவரது ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டன. இவ் வரசரது தௌலத்புரச் செப்பேடும், பரா செப்பேடும் இதற்குச் சான்றுகளாகும்.

போஜரது போர்கள்

வடக்கில் இமயமலையின் அடிவாரம் வரையில் இவரது ஆதிக்கம் சென்றது என்பதற்கு அடையாளமாக, கலச்சூரி வம்சத்துச் செப்பேடுகள் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன. வடக்கில் ஆதிக்கத்தைப் பரப்பும் முயற்சியில் போஜருக்குக் குகில அரசரான ஹர்ஷதேவர் உதவினாரென்பதைக் குகில வம்ச சாசனம் ஒன்று தெரிவிக்கின்றது. வடக்கத்திய அரசர்களை வென்று, போஜருக்கு ஹர்ஷராஜர் குதிரைகளைப் பரிசளித்தாராம். இவ்வாறு அவரது ஆதிக்கம் விரிவடைந்த பின் பால அரசர் தேவபாலரை எதிர்த்துப் போர்கள் மூண்டன. தேவபாலரும் வலிமைமிக்க ஓர் அரசர். கூர்ஜர அரசனின் ஆணவத்தைத் தேவபாலர் அடக்கியதாக பாதல்தூண் கல்வெட்டுக் கூறுகிறது. போஜர் தோற்கடிக்கப்பட்டார் என்பதை இதன்மூலம் நாம் உணரலாம். இதன் பின்னர், ராஷ்டிரகூடர்கள்மீது போஜர் போர் தொடுத்தார். ராஷ்டிரகூட அரசரின் பிரதிநிதியாக லாட்டத்தில் ஆட்சிபுரிந்துவந்த துருவர் என்பவர் போஜரைத் தோற்கடித்தார். கலச்சூரி அரசரான கோகல்லரும் (Kokkala) போஜரை ஒரு போரில் தோற்கடித்தார். தேவபாலர் காலமானதும், வங்காளத்தின்மீது ராஷ்டிரகூட அரசரான அமோகவர்ஷர் படையெடுத்து வெற்றியோடு மீண்டார். தேவபாலருக்குப் பின் வங்காளத்தில் அரசராகியிருந்த நாராயணபாலர் வலிமையற்றவர். ராஷ்டிரகூடப் படையெடுப்பை எதிர்க்கும் ஆற்றல் அவருக்கு இல்லை. நாராயணபாலரைத் தோற்கடித்து விட்டு ராஷ்டிரகூடப் படைகள் திரும்பியதும், மிகிரபோஜரும் பால அரசின்மீது படையெடுத்தார். நாராயணபாலர் தோற்கடிக்கப்பட்டு அவரது மேற்குப் பிரதேசங்கள் பல போஜரால் கைப்பற்றப்பட்டன.

அமோகவர்ஷருக்குப் பிறகு அரியணை ஏறிய ராஷ்டிரகூட அரசர் இரண்டாம் கிருஷ்ணர் (சுமார் கி.பி. 878-914). இவரது ஆட்சியிலும் கி.பி. 880ஆம் ஆண்டு வாக்கில் ராஷ்டிரகூடருக்

கும் பிரதிகாரருக்குமிடையே போர்கள் நிகழ்ந்தன. போஜரே முதலில் படையெடுத்தாரென்று தெரிகிறது. ராஷ்டிரகூட அரசின் வடபகுதியில் ஏதோ ஒரு நதியின் கரையில் நடந்த கடும் போரில் இரண்டாம் கிருஷ்ணர் தோற்கடிக்கப்பட்டு அந் நதியின் தெற்குப் பகுதிக்குப் பின்வாங்கினர். இதன் பின்னர் ராஷ்டிரகூடர்கள் ஆட்சிபுரிந்த லாட்டத்தின் மீதும் போஜர் படையெடுத்தார். இவ் வெற்றிகளின் விளைவாக நர்மதைக்கு வடக்கிலான ராஷ்டிரகூடப் பிரதேசம் முழுவதும் போஜர் வச மாயின என்று நாம் கருதலாம். ஆனால், விரைவிலேயே இரண்டாம் கிருஷ்ணர் எதிர்த்தாக்குதல் தொடுத்தார். நர்மதையைக் கடந்து ராஷ்டிரகூடப் படைகள் முன்னேறி உஜ்ஜெயினிக்கு அருகில் போஜரது படைகளைப் படுதோல்வி அடையச் செய்தன. இவ்வாறு மாளவத்தைப் போஜர் இழந்தாராயினும், விரைவிலேயே ராஷ்டிரகூடப் படைகள் திரும்பிச் சென்றபின் மீண்டும் அது அவரால் கைப்பற்றப்பட்டது. (மாளவத்தை மீண்டும் கைப்பற்றியவர் போஜரது மகனை மகேந்திரபாலரே என்றும் சிலர் கருதுகின்றனர்.) அப் பகுதியை ஆண்டுவந்த சாகமான அரசர்கள் இப்போர்களில் போஜருக்கு உதவியதோடு மட்டுமின்றி, பத்தாம் நூற்றண்டு வரையில் பிரதிகார அரசர்களது சிற்றரசர்களாகவே தங்களைக் கூறிக்கொண்டனர். காத்தியாவார் தீபகற்பத்தின் பெரும் பகுதியும் கூட அவரது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது.

வடமேற்கிலும் போஜர் படையெடுத்தார். பஞ்சாபில் கிடைத்துள்ள சில கல்வெட்டுகள் போஜரது ஆதிக்கம் கர்னல் (Karnal) மாவட்டம் வரையில் பரவியிருந்தது என்பதைப் புலப்படுத்துகின்றன. கிழக்கில் உத்திரப் பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் ஆட்சிபுரிந்த கலச்சூரிகளும் போஜருக்குக் கட்டுப்பட்டிருந்தனர். தெற்கில் பண்டேல்கந்துவை ஆண்ட சல்தெல்லர்களும் போஜரையே தமது பேரரசராக ஏற்றிருந்தனர். இவ்வாறு வட இந்தியாவில் பஞ்சாப் முதல் அவுத் வரையிலும் இமய மலையின் அடிவாரம் முதல் மாளவம் வரையிலுமான பரந்த பேரரசு ஒன்றைப் போஜர் நிறுவினர்.

மதிப்புரை

மிகிர போஜர் கி.பி. 836 முதல் 882 வரையில் நிச்சயம் ஆண்டார் என்பது அவரது கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. இதற்கு முன்னும் பின்னும்கூடச் சில ஆண்டுகள் அவர் ஆண்டிருக்கக் கூடும். இவரது காலத்தில் இந்தியாவுக்கு வந்து சென்ற சுலைமான் என்ற அராபியர் 851-ல் ஜுசர்

(Juzr) அரசரைப்பற்றி எழுதுகிறார். இவர் குறிப்பிடும் அரசர் கூர்ஜர அரசரே என்பதைப்பற்றிச் சிறிதும் ஐயமில்லை. கூர்ஜர அரசர் பெரும் படைகளை வைத்திருந்தாரென்றும், அவரது குதிரைப் படைக்கு ஈடாக வேறு எந்த அரசரிடமுமில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார். அராபியர்களிடம் அவர் பகைமை பாராட்டினார் எனவும், இந்தியாவில் அவரைவிடப் பெரிய பகைவர்கள் இஸ்லாமிய சமயத்துக்கு இல்லையெனவும் அவர் தெரிவிக்கிறார். கூர்ஜர அரசு நீண்டு இருந்ததாம். பெருஞ்செல்வமும், ஒட்டைகளும், குதிரைகளும் அவரிடம் நிறைய இருந்தனவாம். அவரது நாட்டில் தங்க வெள்ளிச் சுரங்கங்கள் இருந்தன. கொள்ளைக்காரர்பற்றிய பயமில்லாத நாடு கூர்ஜர நாடு என்று சுலைமான் எழுதுகிறார்.[1] கூர்ஜரப் பிரதிகார அரசர்களுள் மிக முக்கியமானவராக மிகிர போஜர் விளங்கினார். அவரது நீண்ட ஆட்சியில் பிரதிகார அரசு எல்லாத் திசைகளிலும் முடிவுற்றதோடு அமைதியும் நல்ல நிர்வாகமும் அவரால் ஏற்படுத்தப்பட்டன. இவர் வைணவர் என்று தெரிகிறது. இவரது வெள்ளி நாணயங்கள் சில கிடைத்துள்ளன. வின்செண்ட் ஸ்மித்தும் கன்னிங்ஹாமும் இவற்றை ஆராய்ந்து இவை முதலாம் போஜருடையனவே என்று கூறினர்.

முதலாம் மகேந்திர பாலர்

மிகிர போஜர் தம் மகனை மகேந்திரபாலரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு முடிதுறந்து புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்றார் என்று ஸ்கந்த புராணம் தெரிவிக்கிறது. போஜரது மகனை மகேந்திரபாலரின் முதலாவது கல்வெட்டுக் கி.பி. 893ஆம் ஆண்டைச் சேர்ந்தது. எனவே, இதற்குச் சற்று முன்பு மகேந்திரபாலர் அரியணை ஏறியிருக்க வேண்டும்.

மகேந்திரபாலர் மகதத்தின் மீதும் வங்காளத்தின் மீதும் படையெடுத்து அவற்றை வெல்வதற்கு முயன்றார். அப் பகுதிகளில் காணப்படும் பல கல்வெட்டுகள் இதை உறுதி செய்கின்றன. அதேபோல், மேற்கில் சௌராஷ்டிரமும் இவரால் வெல்லப்பட்டது. இவ்வாறு வங்கக்கடல் முதல் சௌராஷ்டிரக் கடற்கரை வரையில் இவரது அரசு பரந்திருந்தது. வடமேற்கில் கிழக்குப் பஞ்சாபிலும் இவரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்வாறு, தம் தந்தை விட்டுச்சென்ற அரசை மகேந்திரபாலர் மேலும் விரிவுபடுத்தினார். ஆயினும், போஜரிடம்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

பஞ்சாபில் தமது பகுதிகளை இழந்த தக்கியகர்கள் (Thakkiyakas) என்போர் பின்னர் காஷ்மீர் அரசர் சங்கரவர்மனின் உதவியை நாடியதாகவும், இவர் சில ஆண்டுகள் கழித்து அப் பகுதிகளை மீட்டு அவர்களிடம் தந்ததாகவும் ராஜதரங்கிணி தெரிவிக்கிறது. இவ்வாறு பஞ்சாபில் ஒரு சிறு பகுதியை மட்டுமே மகேந்திர பாலர் இழந்திருக்கக் கூடும். மற்றப்படி தமது தந்தையை விடவும் விரிவானதொரு பேரரசை இம் மன்னர் கொண்டிருந்தார்.

பெருங் கவிஞராகிய ராஜசேகரரை இவர் தமது குருவாக ஏற்றிருந்தார். அக் கவிஞரது கற்பூர மஞ்சரி, வித்தசால பஞ்சிகா ஆகிய நூல்கள் இதை நமக்குத் தெரிவிக்கின்றன. மகோதய நகரின் வனப்பையும் வளத்தையும்பற்றி ராஜ சேகரரது நூல்கள் வருணிக்கின்றன. ஆனால், தமது மாணவ ரான மகேந்திரபாலரது ஆட்சியை ராஜசேகரர் எங்கும் வருணிக் காதது ஒரு பெரும் குறையாகும்.

மகேந்திரபாலரது கடைசிக் கல்வெட்டுக் கி.பி. 907-08ஆம் ஆண்டைச் சேர்ந்தது. எனவே, இதற்கு ஓரிரு ஆண்டுகளுக்குப் பின் அவர் காலமானார் என்று நாம் கொள்ளலாம்.

இரண்டாம் போஜர்

மகேந்திரபாலருக்கு இரண்டு மனைவிகள் மூலம் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் இரண்டாம் போஜர், விநாயக பாலர் ஆகியோர். விநாயகபாலர் கி.பி. 917-ல் வெளியிட்ட அஸ்னி (Asni) கல்வெட்டில் மகேந்திரபாலருக்குப் பின் தாமே அரசரானதாகக் குறிப்பிடுகிறார். ஆனால், கி.பி. 931-ல் வெளியிடப் பட்ட ஒரு செப்பேட்டில் தமக்கு முன் தம் அண்ணன் போஜர் ஆட்சிபுரிந்ததாக அவர் தெரிவிக்கிறார். அஸ்னி கல்வெட்டில் இச்செய்தி ஏன் தெரிவிக்கப்படவில்லை என்பதற்குப் பல ஆசிரியர் கள் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். இருவருக்குமிடை யில் வாரிசுப் போட்டி ஏற்பட்டு, போஜர் அரசராகியிருத்தல் வேண்டுமென்று பேராசிரியர் R. S. திரிபாதி கருதுகிறார்.[1] ஆண்டுகள் செல்லச் செல்லக் காழ்ப்புணர்வு மறைந்து போன தாலேயே தமது அண்ணனைப்பற்றி 831ஆம் ஆண்டில் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்று இவர் விளக்கம் கூறுகிறார். மேலும், இரண்டாம் போஜர் குறுகிய காலமே ஆட்சிபுரிந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்பது இவரது கூற்று. ஆனால், R. C. மஜூம்தார் இந்த வாதங்களை ஏற்க வில்லை.[2]

[1] R. S. Tripathi, *History of Kanauj.*

[2] R. C. Majumdar, *The Age of Kanauj.*

இடையில் வரும் அண்ணன்களின் பெயர்களை விட்டு விட்டுத் தந்தையின் வழியையே நேராகக் குறிப்பிடும் மரபு பல அரசர்களிடம் காணப்படுகிறது என்பது அவரது கருத்து.

கலச்சூரிகளின் பிலாரி (Bilhari) கல்வெட்டுப் போன்றவை தமது அரசரான முதலாம் கோகல்லர் சிறந்த போர்வீரர் என்றும் போஜர் போன்ற பல அரசர்களைப் 'பயத்திலிருந்து விடுவித்தார்' என்றும் தெரிவிக்கின்றன. தமது தம்பி விநாயக பாலருடனான வாரிசுப் போரில் போஜருக்கு இவர் ஆதரவு நல்கி யிருத்தல் வேண்டுமென்பதை இது புலப்படுத்துகிறது என்கிறார் திரிபாதி. ஆனால், வாரிசுப் போட்டி நடைபெற்றது என்பதே எந்தச் சான்றாலும் நமக்குத் தெரியவில்லை. மேலும், கலச்சூரி சாசனங்கள் குறிப்பிடும் போஜர் முதலாம் போஜரா இரண்டாம் போஜரா என்பதும் தெரியவில்லை. ராஷ்டிரகூட அரசர் இரண் டாம் கிருஷ்ணர் பிரதிகார அரசின்மீது படையெடுத்துக் கங்கை-யமுனை இடை நிலத்தைக் கைப்பற்றினார் என்று ராஷ்டிரகூட சாசனங்கள் தெரிவிக்கின்றன. இது உண்மையாயின், இந்தப் படையெடுப்புக்கு எதிராக இரண்டாம் போஜர் கோகல்லரது உதவியை நாடியிருக்கக் கூடும். இரண்டாம் போஜரது ஆட்சி பற்றி வேறு எவ்விதத் தகவலும் நமக்குக் கிடைக்கவில்லை.

முதலாம் மகிபாலர்

அக்காலத்திய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் விநாயக பாலர், மகிபாலர், க்ஷிதிபாலர், ஹேரம்பபாலர் ஆகிய பெயர் களைத் தெரிவிக்கின்றன. மகிதேவியின் மகனான மகிபாலரது வேறு பெயர்களே இவையென்று அனைத்து ஆசிரியர்களும் முடிவு செய்கின்றனர். ஹேரம்பபாலர், விநாயகபாலர் ஆகிய இரண்டு பெயர்களும், க்ஷிதிபாலர், மகிபாலர் ஆகிய இரண்டு பெயர்களும் ஒரே பொருளுடையவை. எனவே, இப் பெயர்கள் அனைத்தும் மகிபாலரையே குறிப்பிடுகின்றன என்று கொள்ள முடிகிறது. மகிபாலரது முதலாவது சாசனம் கி.பி. 914-ல் காத்தியாவாரில் வெளியிடப்பட்டது. எனவே, அதற்குச் சற்று முன்பு அவர் அரியணை ஏறினார் என்று நாம் கொள்ளலாம். இதன்படி பார்த் தால் அவரது அண்ணனான இரண்டாம் போஜர் 908 முதல் 912 வரையில் ஆண்டிருக்கக் கூடும்.

ராஷ்டிரகூடர்மீது போர்

வழக்கம்போல் முதலாம் மகிபாலரது ஆட்சியிலும் ராஷ்டிர கூடர்கள் பிரதிகார அரசின் மீது படையெடுத்தனர். கி.பி. 914ஆம் ஆண்டு இறுதியில் ராஷ்டிரகூட அரசில் இரண்டாம்

கிருஷ்ணர் காலமானதும் அவரது பேரனுன மூன்ரும் இந்திரர் அரியணை ஏறினர். அடுத்த ஓரிரு ஆண்டிலேயே மகிபாலரது நாட்டின்மீது இந்திரர் படையெடுத்தார். இந்திரரது மகனுன நான்காம் கோவிந்தரது கேம்பே (Cambay) செப்பேடுகள் இப் படையெடுப்புப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. நர்மதையைக் கடந்து மாளவத்துள் புகுந்த இந்திரரின் படைகள் உஜ்ஜெயினியைக் கைப்பற்றி அங்கிருந்த காலப்பிரிய தேவியின் ஆலயத்தின் முன் முகாமிட்டன. பின்னர், யமுனை நதியைக் கடந்து கனேஜையும் அவை கைப்பற்றின. இப் படையெடுப்பில் இந்திரரது சிற்றரசரான சாளுக்கிய நரசிம்மர் பெரும் பங்கு ஆற்றினர் என்று பம்பபாரதம் குறிப்பிடுகிறது. மகிபாலர் இடிவிழுந்தது போல் கலங்கி ஓடினர் என்றும், கனேஜ் நகரம் அழிக்கப்பட்டதென்றும் அந் நூல் தெரிவிக்கிறது. திரிவேணி சங்கமமாகிய அலகாபாத் வரையில் ராஷ்டிரகூடப் படைகள் சென்று கங்கையின் கூடல் துறையில் தமது குதிரைகளைக் குளிப்பாட்டின என்று பம்பர் விவரிக்கிருர். இதற்குப் பின் வழக்கம்போல ராஷ்டிரகூடர்கள் படைகளோடு திரும்பிச் சென்றனர்.

மகிபாலரது வெற்றிகள்

இத் தோல்வியினுல் மகிபாலரது ஆதிக்கம் முடிவுக்கு வரவில்லை. கஜுராஹோவில் உள்ள கல்வெட்டொன்று சந்தெல்ல அரசரான ஹர்ஷர் க்ஷிதிபாலரை அரியணையில் அமர்த்தியதாகக் கூறுகிறது. குகில அரசர் பட்டர் (Bhatta) தெற்கத்திய அரசரைப் போரில் வென்று தமது பேரரசைக் காப்பாற்றியதாக மற்ருெரு சாசனம் கூறுகிறது. ராஷ்டிரகூடப் படையெடுப்பின் போதும் அதற்குப் பின்னரும் மகிபாலருக்குத் தாங்கள் செய்த உதவியையே இச் சிற்றரசர்கள் ஒருவேளை இவ்வாறு குறிப்பிடுகின்றனர் போலும்!

கவிஞர் ராஜசேகரர் மகிபாலரது காலத்திலும் அவரது அவைக் களத்தில் வாழ்ந்தார். அவரது பாலபாரதம் என்ற நூல் ரகுவம்சத்தில் தோன்றிய, ஆரிய வர்த்தத்தையாண்ட மகாராஜாதிராஜர் என்று மகிபாலரைக் குறிப்பிடுகின்றது. முரலர்கள் (Muralas), மேகலர்கள் (Mekalas), கலிங்கர்கள், கேரளர்கள், குலூதர்கள் (Kulutas), குந்தளர்கள், ராமதர்கள் ஆகியோரை மகிபாலர் வென்றதாகவும் அந் நூல் எழுதுகிறது. இது வழக்கமான துதியே என்ருலும், தக்கணத்தில் புகுந்து ராஷ்டிரகூடர்களைத் தோற்கடித்து, குந்தளநாடு, கேரளம் ஆகிய

வற்றை மகிபாலர் கைப்பற்றினார் என்பது வெறும் புனைந்துரையே என்றாலும், அம் மன்னர் தமது தந்தை விட்டுச்சென்ற விரிவான அரசைப் பழுதின்றி ஆண்டார் என்பதை அவரது சாசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. காத்தியாவார் வரையில் இவர் ஆண்டார் என்பது அங்குக் கிடைக்கும் இவரது சாசனங்களால் தெரிகிறது. அண்டையிலிருந்த சில அரசுகளின்மீது படையெடுத்துத் தமது அரசை இவர் சற்று விரிவு படுத்தியிருக்கவும் கூடும். கிழக்கில் வாராணசி வரையில் அவரது எல்லை சென்றது என்பதும் ஒரு செப்பேட்டால் தெரிகிறது. இந்திரரின் படையெடுப்புக்குப்பின் தமது நாட்டை மீண்டும் ஒன்றிணைத்து மகிபாலர் ஆற்றலோடு ஆட்சிபுரிந்தார் என்பதில் ஐயமில்லை. மாளவமும்கூட அவரது ஆட்சியிலேயே இருந்தது.

கி.பி. 915-16-ல் இந்தியாவுக்கு வந்த அல் மசூதி (Al Masudi) பிரதிகார அரசைப்பற்றிக் குறிப்பிடுகிறார். கனோஜ் அரசர் சிந்து உட்பட ஆண்டார் என்றும், தெற்கில் ராஷ்டிரகூட அரசு வரையில் அவரது தென் எல்லை பரந்திருந்தது என்றும், நான்கு திசைகளிலும் பல லட்சம் பேர்களைக்கொண்ட படைகளை அவர் வைத்திருந்தார் என்றும் அல் மசூதி குறிப்பிட்டார்.[1]

மகிபாலரது முடிவு

ராஷ்டிரகூடப் பேரரசில் இந்திரர் கி.பி. 922-ல் மரணமடைந்த பின் சிறிது காலம் குழப்பம் நிலவிற்று. அதன் பின்னர், வலிமை மிகுந்த மூன்றாம் கிருஷ்ணர் அரியணை ஏறினார். இவர் வடக்கில் படையெடுத்து ஒரு சில வெற்றிகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கி.பி. 940ஆம் ஆண்டைச் சேர்ந்த தேவ்லி (Deoli) செப்பேடுகள் தெரிவிக்கின்றன. பெரும் படையெடுப்பாக இது தோன்றவில்லை. கிருஷ்ணர் பட்டத்துக்கு வந்த உடனேயே தெற்கில் சோழர்களை எதிர்த்துப் போர்களில் ஈடுபட்டதால் வடக்கில் அவர் அதிக கவனம் செலுத்தவில்லை என்று தெரிகிறது. காலஞ்சரா, சித்திரக்கூடம் ஆகிய தெற்கத்திய கோட்டைகள் ராஷ்டிரகூடப் படையால் தாக்கப்பட்டிருக்கக் கூடும். இதற்குமேல் போர் எதுவும் நடைபெறவில்லை.

இம் மன்னர் பிரதிகாரர்களுள் முக்கியமான அரசர்களுள் ஒருவராவார். கி.பி. 942க்குப் பின் இவரது ஆட்சி முடிவுற்றிருக்க

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

வேண்டும். இவருக்குப் பின் பிரதிகாரப் பேரரசு வலி குன்றியது.

பிரதிகார அரசின் வீழ்ச்சி

இரண்டாம் மகேந்திரபாலர்

விநாயகபாலர் (மகிபாலர்) கி.பி. 942க்குப் பின் இறந்திருக்க வேண்டும். அவருக்குப் பின் இரண்டாம் மகேந்திர பாலர் என்ற அவரது மகன் கி.பி. 945க்கு முன் அரியணை ஏறியிருக்க வேண்டுமென்பதைத் தெற்கு ராஜஸ்தானப் பிரதாப்கர் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டின்மூலம் நாம் அறிகிறோம். அடுத்த பதினைந்து ஆண்டுகளில் நான்கு அரசர்களாவது கனோஜில் ஆண்டிருக்க வேண்டுமென்பது பல்வேறு சாசனங்களால் உணரப்படுகிறது. அவற்றில் தெரிவிக்கப்படும் பெயர்கள் வெவ்வேறு அரசர்களைக் குறிக்கின்றனவா அல்லது ஓரிரு அரசர்களையே பல்வேறு பெயர்களால் குறிக்கின்றனவா என்பது தெரியவில்லை. மகேந்திரபாலருக்குப் பின்னரான அரசர்களின் பட்டியல், அவர்களுக்கிடையிலான உறவு முறைகள் ஆகியவை பற்றி R. D. பானர்ஜீ, டாக்டர் D. R. பந்தர்கார், R. C. மஜும்தார், R. S. திரிபாதி முதலியோர் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டுள்ளனர். போதிய தெளிவான சான்றுகள் கிடைக்காததால் இறுதியாக இவைபற்றி முடிவுக்கு வர இயலவில்லை.[1]

இரண்டாம் மகேந்திரபாலரின் ஆதிக்கம் மாளவம் வரையில் சென்றது என்பதை மேலே குறிப்பிடப்பட்ட கல்வெட்டு நன்கு தெரிவிக்கிறது. குவாலியரில் சந்தேரிக்கு அருகில் ரகேத்ரா (Rakhetra) என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டின்மூலம் அப்பகுதியும் மகேந்திரபாலரது ஆட்சியில் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் உணர முடிகிறது.

தேவபாலர்

க்ஷிதிபாலரது மகன் தேவபாலர் என்பவர் கி.பி. 948-49-ல் கனோஜில் ஆண்டு கொண்டிருந்ததாகச் சியதோனி (Siyadoni) கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவர் மகிபாலருடைய இளைய மகனாகவும் இரண்டாம் மகேந்திரபாலருடைய தம்பியாகவும் இருக்கலாம். தமது தந்தைக்குப் பின் அரியணை ஏறியவர் இவரே என்று அக் கல்வெட்டுக் கூறுகிறது. இரண்டாம் மகேந்திரபாலர் அரியணை ஏறியதுபற்றி அதில் சொல்லப்படவே

[1] Also refer Dr. H. C. Ray, *Dynastic History of Northern India,* 2 Vols.

யில்லை. (கி.பி. 917ஆம் ஆண்டைச் சேர்ந்த மகிபாலரது கல்வெட்டு இதேபோல் அவரது அண்ணன் இரண்டாம் போஜரைப் பற்றிக் குறிப்பிடாததை முன்பே சுட்டிக் காட்டினோம்.)

இரண்டாம் விநாயகபாலர்

இவ் வரசர் கி.பி. 953-54-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. கி.பி. 955-ல் ஆட்சி புரிந்ததாக (இரண்டாம்) மகிபாலர் என்ற மற்றொரு அரசரின் பெயரும் தெரிய வருகிறது. இந்த விநாயகபாலரும் மகிபாலரும் ஒரே அரசராகவும் இருக்கலாம். இதுமுதல் பிரதிகார அரசுக்குக் கட்டுப்பட்டு வந்த பல்வேறு சிற்றரசர்கள் சுதந்திரம் பெறத் துவங்கினர். இம் முயற்சியில் அச் சிற்றரசர்களுக்கும் பிரதிகாரர்களுக்குமிடையே போர்கள் மூண்டிருக்கலாம். சான்றாக, கஜுராஹோவில் காணப்படும் ஒரு கல்வெட்டு, சந்தெல்ல அரசன் யசோவர்மன் 'கூர்ஜரர்களுக்குச் சுடும் நெருப்பாய் விளங்கினார்' என்று கூறுகிறது. பிரதிகாரர் வசமிருந்த கலஞ்சரா கோட்டையையும் இவ்வரசர் கி.பி. 954-ல் கைப்பற்றிக் கொண்டார். அதே சமயம் விநாயகபாலரைத் தமது பேரரசராக இவர் குறிப்பிடுவதும் கருதத்தக்கது.

விஜயபாலர்

இவர் கி.பி. 959-60-ல் கனோஜில் ஆட்சி புரிந்தார் என்பது ராஜோர்கள் கல்வெட்டினால் தெரிய வருகிறது. க்ஷிதிபாலரின் மகன் என்று இவர் அதில் குறிப்பிடப்படுகிறார். எனவே, இவர் முதலாம் மகிபாலர் அல்லது இரண்டாம் மகிபாலரின் மகனாக இருக்கக்கூடும். இக் கல்வெட்டை வரைந்தவரான மதனதேவர் என்பவர் தாம் கூர்ஜரப் பிரதிகார வம்சத்தைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்வதோடு, மகாராஜாதிராஜர், பரமேசுவரர் முதலிய பட்டங்களையும் சூட்டிக் கொள்கிறார். பிரதிகாரப் பேரரசர் விஜயபாலருக்கு உட்பட்டவர் என்று தம்மை இவர் கூறிக்கொண்டாலும், இவரது பட்டங்கள் இவரது சுதந்திர ஆட்சியை நன்கு புலப்படுத்துகின்றன. இவருக்குப் பின் அரசு புரிந்த பிரதிகார அரசர்களைப்பற்றி எதுவும் தெரியவில்லை; எந்த எந்தப் பகுதிகள் இவரது ஆட்சியில் இருந்தன என்பதும் தெளிவாகவில்லை.

தென்மேற்கில் கத்தியாவாரும் குஜராத்தும் பிரதிகார ஆட்சியில் இருந்து விடுபட்டு, கி.பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மூலராஜரால் நிறுவப்பட்ட சோலங்கி அல்லது சௌளுக்கிய வம்சத்தின் ஆட்சிக்கு உட்பட்டன. அதேபோல் சந்தெல்லர்கள்

பிரதிகார ஆதிக்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு மத்திய இந்தியாவில் ஜெஜாகபுத்தி அரசை நிறுவினர். மாளவத்தில் பரமார வம்சம் ஆளத் துவங்கிற்று. மத்திய ராஜஸ்தானத்தில் சாகம்பரியைச் சேர்ந்த சாகமானர்கள் வேறு ஒரு அரசை நிறுவினர். சேடிகள், குகிலர்கள் ஆகியோரும் இவ்வாறே சிறு அரசுகளை நிறுவினர். பஞ்சாபில் ஷாஹிகளின் ஆதிக்கம் வளர்ச்சியுற்றது. இவ்வாறு பிரதிகாரர்களின் பேரரசு கி.பி. பத்தாம் நூற்றுண்டின் பின்பகுதியில் சிதையலாயிற்று.

ராஷ்டிரகூடருக்குக் கட்டுப்பட்ட கங்கபாடி அரசரான மாரசிம்மனின் செப்பேடு ஒன்றும் பண்டேல்கந்தில் ஜுரா (Jura) என்ற இடத்தில் காணப்படும் கன்னடக் கல்வெட்டு ஒன்றும் ராஷ்டிரகூடப் பேரரசர் மூன்ரும் கிருஷ்ணர் பிரதிகார அரசின் மீது கி.பி. 963ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பு இரண்டாவது முறை படையெடுத்திருக்க வேண்டுமென்பதைப் புலப்படுத்துகின்றன. இப் படையெடுப்பின் போது கங்க அரசரான மாரசிம்மன் கூர்ஜர அரசரை வெற்றி கொண்டதாகக் கூறிக் கொள்கிருர். அடுத்த ராஷ்டிரகூட அரசரான கர்க்கர் கி.பி. 972க்கு முன்பு கூர்ஜரர்கள்மீது படையெடுத்து வென்றதாக ஒரு சாசனம் தெரிவிக்கிறது.

பிரதிகாரர்களின் முடிவு

ராஜ்யபாலர்

விஜயபாலர் அரசரான பின் ஐம்பது ஆண்டுகள் கழித்து ராஜ்யபாலர் என்பவரது பெயர் நமக்குத் தெரிய வருகிறது. இவர் விஜயபாலரது பிள்ளையாகவோ தம்பியாகவோ அல்லது பேரராகவோ இருக்கலாம் என்பதைத் திரிலோசனபாலரது ஜுசி (Jhusi) சாசனம் புலப்படுத்துகிறது. இவரது காலத்தில் பிரதிகார அரசு மிகவும் சுருங்கிப் போய், கங்கை-யமுனை இடை நிலத்துடன் நின்று போயிற்று. இவரது காலத்தில்தான் கசினிமகமூது கனோஜியைத் தாக்கினர். கி.பி. 1018 ஆம் ஆண்டு டிசம்பர் இருபதில் மகமூதின் படைகள் கனோஜை அடைந்தன. ராஜ்யபாலர் கங்கை நதியைக் கடந்து தப்பி ஓடினர். கனோஜ் நகரம் பகைவர்களால் சூறையாடப்பட்டது.

ராஜ்யபாலர் இவ்வாறு கோழையாகிக் கனோஜைப் பகைவர்களிடம் விட்டுச் சென்றதைப்பற்றி ஆத்திரமுற்ற சந்தெல்ல அரசரான கண்டர் பல அரசர்களை ஒன்றுதிரட்டித் தமது மகன் **வித்தியாதரன்** என்போனின் தலைமையில் கனோஜின்மீது

ஏவினுர். இப் படையில் கச்சபகாட (Kacchapaghata) அரசர் அர்சுணர் என்பவரும் இருந்தார். இப் படை ராஜ்யபாலரிடம் போரிட்டது. அர்சுணர் விட்ட அம்புகள் ராஜ்யபாலரது கழுத்தில் பாய்ந்து அவரைக் கொன்றன. ராஜ்யபாலர் வித்யாதரரது படையெடுப்பினுல் கொல்லப்பட்டார் என்பதை இப்னுல்-ஆசிர் (Ibn-ul-Asir) என்ற முஸ்லிம் ஆசிரியரும் தமது நூலில் குறிப்பிடுகிருர்.

திரிலோசனபாலர்

ராஜ்யபாலருக்குப் பின் அவரது மகனுன திரிலோசனபாலர் அரியணை ஏறினுர். 1018 அல்லது 1019-ல் இது நிகழ்ந்திருத்தல் வேண்டும். தமக்குக் கீழ்ப்படிந்து போன ராஜ்யபாலரைப் பகைவர்கள் கொன்றதுபற்றிக் கேள்வியுற்று ஆத்திரமடைந்த மகமூது 1019 அக்டோபரில் மீண்டும் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். திரிலோசனபாலர் முஸ்லிம் படையை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றுப் பின்வாங்கினுர். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் அவர் தமது நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏதோ ஒரு ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்பதைக் கி.பி. 1027-ல் வெளியிடப்பட்ட அவரது ஜூசி சாசனம் தெரிவிக்கிறது. பிரயாகை எனும் அலகாபாத் பகுதி அவரது ஆட்சியில் இருந்தது என்பது இக் கல்வெட்டால் தெரியவருகிறது. இவர் எப்பொழுது இறந்தார் என்பதும் தெரியவில்லை.

இவருக்குப் பின் யசபாலர் என்பவர் கி.பி. 1036-ல் அப் பகுதியில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். இவர் திரிலோசன பாலருக்கு என்ன உறவு என்பதும் தெரியவில்லை. மகாராஜாதி ராஜர் என்று ஒரு கல்வெட்டில் இவர் குறிப்பிடப்படுகிருர். யசபாலரைப்பற்றியும் இதற்குமேல் செய்தி இல்லை.

பிரதிகாரர்களின் பெருமை

சுமார் ஒன்றரை நூற்ருண்டு காலம் வட இந்தியாவில் வலிமைமிக்க பேரரசு ஒன்றை நிறுவி, சிறக்க ஆண்டவர்கள் பிரதிகாரர்கள். இவர்களது அரசின் பரப்பு ஹர்ஷர், குப்தர்கள் ஆகியோருடைய பேரரசுக்குச் சற்றும் குறைவில்லாததாக இருந்தது. ஹர்ஷரைக் காட்டிலும் கனோஜின் பெருமைக்குப் பிரதிகாரர்களே காரணம். வட இந்தியாவிலேயே முதன்மையான நகரமாக அதை ஆக்கி, அராபியர்களும் அதைப்பற்றி மரியாதையோடு குறிப்பிடுமாறு செய்தவர்கள் இவ் வரசர்களே.

இந்து அரசர்கள் நிறுவிய கடைசி வட இந்தியப் பேரரசு கூர்ஜரப் பிரதிகார அரசே.

வத்சராஜர், இரண்டாம் நாகபட்டர், மிகிரபோஜர், முதலாம் மகேந்திரபாலர், மகிபாலர் (விநயகபாலர்) ஆகிய ஐந்து சிறந்த அரசர்களை இந்த வம்சம் தோற்றுவித்தது. இவர்கள் வலிமைமிக்க ராஷ்டிரகூடர்களையும் வங்காளத்துப் பாலர்களையும் எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. இவ்வாறு இரு பெரும் பகைவர்களின் தாக்குதல்களையும் சமாளித்து விரிவானதொரு பேரரசைக் கூர்ஜரப் பிரதிகாரர்கள் நிறுவியது அவர்களது ஆற்றலை நன்கு புலப்படுத்துகிறது. அவர்களது அரசு அமைதியும் செல்வமும் நிறைந்து காணப்பட்டது என்பதற்கு அராபியரின் குறிப்புகளே சான்றுகள்.

சிந்துவைக் கைப்பற்றிய முஸ்லிம்கள் மேலும் வட இந்தியாவில் தமது ஆதிக்கத்தைப் பரப்பாததற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானதொரு காரணம், பிரதிகாரர்களது வலிமையே என்பதை யாரும் மறந்துவிடலாகாது. முஸ்லிம் படையெடுப்பாளர்களுக்குப் பெரும் பகையாக விளங்கியவர்கள் பிரதிகாரர்களே என்பதை அராபியர்களே குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சிந்து மாநிலத்துக்குக் கிழக்கே முஸ்லிம் ஆதிக்கம் பரவுவதைச் சுமார் இரண்டு நூற்றுண்டு காலம் தடுத்துக் காத்தவர்கள் இவ்வம்சத்து அரசர்களே. இவர்களது அரசவையில் வாழ்ந்த ராஜசேகரர் 'ஆரியா வர்த்தத்து மகாராஜாதிராஜாக்கள்' என்று இவர்களைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது ஆகும்.

6. கனோஜ் ராஷ்டிரகூடர்கள்

தக்கணத்தில் ஆட்சி புரிந்த ராஷ்டிரகூடப் பேரரசர்கள் குஜராத்தில் தமது உறவினர்கள் சிலரை ஆட்சி புரியுமாறு நியமித்தனர். இந்த ராஷ்டிரகூடக் கிளை வம்சமானது குஜராத்தில் ஏறத்தாழ இரண்டு நூற்றுண்டுகள் (சுமார் 743 முதல் 974 வரையில்) ஆட்சி புரிந்தது.[1] வட இந்தியாவின் வேறு பல பகுதிகளிலும் ராஷ்டிரகூடக் குடும்பங்கள் சில இதே போல் ஆட்சி புரிந்தன. கனோஜ், மத்திய இந்தியாவில் மாளபுரம், பெட்டூல் (Betul), பத்தாரி (Pathari) ஆகிய இடங்கள், ராஜஸ்தானத்தில் ஹஸ்திகுந்தி, தனோப் (Dhanop), பித்து (Bithu) ஆகியன போன்ற பல இடங்களில் ராஷ்டிரகூட வம்சங்கள் ஆட்சி புரிந்தன. இவர்களைப்பற்றிய முழுமையான

[1] Bombay Gazeteer.

வரலாறு நமக்குத் தெரியவில்லை. இவர்களில் முக்கியமானவர்களாகிய கனோஜ் ராஷ்டிரகூடர்களைப்பற்றி இப்போது கவனிக்கலாம். வட இந்தியாவில் காணப்பட்ட இந்த ராஷ்டிரகூடக் குடும்பங்கள் பலவும் தக்கண ராஷ்டிரகூடர்களின் வழியில் வந்தவையாக இருக்கக் கூடும்.

உத்திரப் பிரதேசத்தில் பதாவுன் (Badawn) நகரின் கோட்டையில் லக்கணபாலர் என்பாரின் கல்வெட்டுக் காணப்பட்டது. லக்கணபாலருடைய வம்சாவளி அதில் குறிப்பிடப்படுகிறது. இவரது மூதாதையர்கள் ஓடமயூதம் (Vodamayuta) என்ற ஊரிலிருந்து ஆட்சி புரிந்ததாக அது தெரிவிக்கிறது. பதாவுன், ஓடமயூதம், கனோஜ் ஆகிய மூன்றும் வெகு அண்மையிலுள்ள ஊர்களே. [ஓடமயூதம் என்பது பதாவுனே என்று கீல்ஹார்ன் (Kielhorn) கருதுகிறார்.] எனவே, இவர்கள் கனோஜ் ராஷ்டிரகூடர்கள் என்று அழைக்கப்பட்டனர். சான்றாக, ராஜஸ்தானத்தில் ஜோத்பூரில் ஆட்சி புரிந்த ராத்தோர்கள் (Rathors) கனோஜ் ராஷ்டிரகூடர்களின் வழித்தோன்றல்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டதை இங்குச் சுட்டிக் காட்டலாம்.

பதாவுன் கல்வெட்டு, சந்திரர், விக்கிரகபாலர், புவனபாலர், கோபாலர், கோபாலரின் மூன்று பிள்ளைகளான திரிபுவனர், மதனபாலர், தேவபாலர், தேவபாலரின் பிள்ளையான பீமபாலர், சூரபாலர், அமிர்தபாலர், லக்கணபாலர் ஆகிய பதினொரு அரசர்களைக் குறிப்பிடுகிறது. சகேத் மகேத் (Sahet Maheth) என்ற ஊரிலுள்ள கல்வெட்டு (கி. பி. 1118—19-ல் பொறிக்கப்பட்டது) காதிபுரத்தில் ஆட்சி புரிந்த கோபாலர், மதனர் ஆகியோரைக் குறிப்பிடுகிறது. இவ்விருவரும் பதாவுன் கல்வெட்டில் காணப்படும் கோபாலரும் மதனபாலருமே என்று N. B. சன்யால், H. C. ரே[1] போன்றோர் கருதுகின்றனர். லக்கணபாலரது பதாவுன் கல்வெட்டின் காலம் 12ஆம் நூற்றாண்டின் துவக்கம் என்று தெரிகிறது. எனவே, பதினோராம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் காகதவால சந்திரதேவர் இந்த ராஷ்டிரகூடர்களிடமிருந்து கனோஜைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும்.

இவர்களின் பெயர் முடிவுகள் பாலர் என்று இருப்பதால் இவர்கள் பிரதிகார குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்

[1] H. C. Ray, *The Dynastic History of Northern India.*

என்பது தெளிவாகிறது. காதிபுரமாகிய கனோஜைக் காகதவாலர்கள் வென்ற பின்னருங்கூட, கனோஜ் பகுதியில் இந்த ராஷ்டிர கூடர்கள் குறுநில மன்னர்களாகத் தொடர்ந்து ஆண்டிருக்கக் கூடும். 1202-ல் குத்புதீன் அய்பெக் பதாவுனைக் கைப்பற்றிய காலத்தில் அதை ஆட்சி புரிந்து கொண்டிருந்தவர் லக்கணபாலராக இருக்கலாம். அவரோடு கனோஜ் ராஷ்டிரகூட வம்சம் முடிவுக்கு வந்து அல்தாமிஷிடம் பதாவுன், கனோஜ் பகுதி ஒப்படைக்கப்பட்டது.

சகேத்-மகேத் கல்வெட்டு மதனரை க்ஷிதிபதி என்றே குறிப்பிடுகிறது. இது சுதந்திரமான அரசருக்குரிய பட்டப் பெயராகத் தெரியவில்லை. எனவே, குறுநில மன்னர்களாகவே இவ்வரசர்கள் இருந்தனர் போலும்! கலச்சூரி அரசரான லக்ஷ்மி-கர்ணர் கி.பி. 11-ஆம் நூற்றுண்டின் பின் பகுதியில் பேரரசராக விளங்கினுர். ஒருவேளை அவர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக இவர்கள் விளங்கியிருக்கக் கூடும். அவரது மரணத்துக்குப் பின்னர், குறுகிய காலத்திலேயே காகதவாலர்களுக்கு இவர்கள் ஆட்பட்டனர்.

7. காகதவாலர்கள்

பூர்விகம்

ஏராளமான சாசனங்களும் கல்வெட்டுகளும் காகதவால அரசர்களைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. ஆயினும், இவர்களது பூர்விகம்பற்றி ஆதார பூர்வமாக எந்தச் செய்தியும் நமக்குத் தெரியவில்லை. இவர்கள் ராத்தோர்கள் அல்லது ராஷ்டிரகூடர்களாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனல் இவர்களது சாசனங்கள் எதுவும் இவர்கள் ராத்தோர்கள் அல்லது ராஜபுத்திரர்கள் என்பதைத் தெரிவிக்கவே இல்லை. காகதவால வம்சத்தைத் தோற்றுவித்தவர் யசோவிக்ரகர் என்று அவர்களது செப்பேடுகள் பலவும் தெரிவிக்கின்றன. இவரோ, இவரையடுத்துப் பதவியேறியதாகக் குறிப்பிடப்படும் மகிச்சந்திரரோ அரசருக்குரிய பட்டம் எதையும் பூண்டிருக்கவில்லை. எனவே, உண்மையில் இந்த வம்சத்தின் ஆட்சியை நிறுவியவர் சந்திரதேவரே.

சந்திரதேவர்

உத்திரப்பிரதேசத்தில் எட்டாவா (Etawah) மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பசகி (Basahi) செப்பேடு கோவிந்த சந்திரர் என்ற காகதவால அரசரால் வெளியிடப்பட்டது. அதில் சந்திர

தேவரது ஆதிக்க வளர்ச்சிபற்றிக் குறிப்பிடப்படுகிறது. போஜர், கர்ணர் ஆகிய அரசர்கள் இறந்ததற்குப் பின் உலகில் குழப்பம் நிலவிற்று என்றும், அதை நீக்குவதற்காகச் சந்திரதேவர் அரசராகி, கான்யகுப்ஜத்தைத் தமது தலைநகராக ஆக்கிக் கொண்டார் என்றும் அது கூறுகிறது. இங்குக் குறிப்பிடப்படுபவர்கள் பரமார போஜரும், கலச்சூரி லக்ஷ்மி கர்ணருமே என்று நாம் கருதலாம். கான்யகுப்ஜம், கன்யாகுப்ஜம், காதிபுரம் என்ற பெயர் கொண்ட கனோஜை இவர் எவரிடமோ இருந்து கைப்பற்றியதையே இது இவ்வாறு குறிப்பிடுகிறது. அவ்வாறு கனோஜை இவரிடம் இழந்த அரசர் ராஷ்டிரகூட வம்சத்தைச் சேர்ந்த கோபாலராகவோ, மதனபாலராகவோ இருக்கக்கூடும். சந்திரதேவரின் தந்தை மகிச்சந்திரராவார். சந்திரதேவரது செப்பேடுகளில் மிகவும் முந்தியது கி.பி. 1091ஆம் ஆண்டைச் சேர்ந்ததே. எனவே, அதற்குச் சற்று முன் இவர் கனோஜைக் கைப்பற்றிப் பரமபட்டாரகர், மகாராஜாதிராஜர், பரமேசுவரர் ஆகிய பட்டங்களை மேற்கொண்டிருக்க வேண்டும். கனோஜைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த முதலாவது காகதவால அரசர் இவரே. கீர்த்தி வாய்ந்த நகரமாகக் கனோஜ் விளங்கியதால் அதையும் ஒரு தலைநகரமாகக் காகதவாலர்கள் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் வழக்கமாகக் குடியிருந்த இடமோ வாராணசியே (காசி) ஆகும். அவர்களது சாசனங்களில் பெரும்பாலானவை காசியைச் சுற்றியே கிடைத்துள்ளன. மேலும், முஸ்லிம் ஆசிரியர்கள் பலரும் இவர்களைக் 'காசி அரசர்கள்' என்றே குறிப்பிடுகின்றனர். சந்தெல்லர்களுடைய சாசனங்களும் இவ்வாறே அவர்களைக் குறிப்பிடுகின்றன. சந்திரதேவர் காசி, குசிகம் (Kusika), உத்தரகோசலம், இந்திரஸ்தானம் ஆகிய புண்ணியத் தலங்களைத்[1] தம் குடையால் காத்தார் என்று காகதவாலச் செப்பேடுகள் குறிப்பிடுவதால் அவர் டில்லி முதல் காசி வரையிலான பகுதிகள்மீது ஆட்சி புரிந்திருக்கலாமென்று முடிவு செய்யலாம். கலச்சூரி அரசரான யசகர்ணரை அவர் தோற்கடித்துக் கிழக்குப் பகுதிகளை வென்றிருக்கக் கூடும். சந்திர தேவரது கடைசிக் கல்வெட்டு 1099ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

காகதவாலர்கள் க்ஷத்திரியர்கள். சந்திரதேவர் பிராமணர்களுக்கு நிலக் கொடையும் துலாதானமும் அளித்தார் என்று செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

[1] கௌசிகம் என்பது கனோஜ், உத்தரகோசலம் என்பது அயோத்திப் (அவுத்) பகுதி, இந்திரஸ்தானம் என்பது இந்திரப் பிரஸ்தமான பழைய டில்லி என்பது அறிஞர்களின் முடிவு.

மதனபாலர்

சந்திர தேவருக்குப் பின் அவரது மகனாகிய மதனபாலர் அரியணை ஏறினார். கி.பி. 1104-ல் இவர் அரசராயிருந்தார் என்பதை இவரது மகனாகிய மகாராஜபுத்திர கோவிந்த சந்திரரது பசகி செப்பேடு கூறுகிறது. எனவே, 1099க்கும் 1104க்குமிடையில் சந்திரதேவர் இறந்து, மதனபாலர் பட்ட மேற்றிருக்க வேண்டும். மதனதேவர், மதனசந்திரர் என்றும் மதனபாலர் அழைக்கப்பட்டார். இவ் வரசர் குறுகிய காலமே ஆட்சியில் இருந்தார். இவர் காலத்திய நான்கு சாசனங்களில் ஒன்றுகூட மதனபாலரால் வெளியிடப்படவில்லை. அவரது மகனான கோவிந்த சந்திரர் யுவராஜாவாக இருந்து ஆட்சியை நடத்தினார் என்று தெளிவாகப் புலப்படுகின்றது. கௌட அரசருடனும் முஸ்லிம் ஹம்மீரருடனும் (அமீர் என்பதன் திரிபே இது) யுவராஜர் கோவிந்த சந்திரர் போரிட்டு வென்றார் என்று ஒரு செப்பேடு கூறுகிறது. இந்தக் கௌட அரசர் கடைசி முக்கிய பால அரசரான ராமபாலராக இருக்கக் கூடும். அடுத்துக் குறிப்பிடப்படும் முஸ்லிம் அரசர் கசினியை ஆண்ட யமீனி வம்சத்து சுல்தான் ஒருவரே என்பதில் ஐயமில்லை. கி.பி. 1098 முதல் 1115 வரையில் ஆட்சி புரிந்த கசினி சுல்தான் மூன்றும் மசூத் (Masud) கனோஜின்மீது படையொன்றை அனுப்பியதாகத் தபகாத்-தெ-நாசிரி என்ற நூல் தெரிவிக்கிறது. ஹாஜிப் துகாடிஜின் (Hajib Tughatigin) என்பாரின் தலைமையில் இப் படை சென்றது. மூன்றும் மசூதின் அவையில் வாழ்ந்த புலவரான சல்மான் (Salman) என்பவரது திவான் (Diwan) என்ற கவிதையும் இப் படையெடுப்பைப் பற்றி வர்ணிக்கிறது.[1] முஸ்லிம்களுக்குக் காபா (மக்காவிலுள்ள ஆலயம்) எவ்வளவு புனிதமானதோ, இந்துக்களுக்குக் கனோஜ் அவ்வளவு புனிதமானது என்று சல்மான் எழுதுகிறார். அதன் அரசர் மதனபாலர் மல்ஹி, மல்ஹீரா என்று குறிப்பிடப் படுகிறார்.

இவரது வெள்ளி, தாமிர நாணயங்கள் சில கிடைத்துள்ளன. எருது, குதிரை ஆகிய உருவங்கள் அவற்றில் பொறிக்கப் பட்டுள்ளன. காகதவாலர்கள் பரம மகேசுவரர்கள், அதாவது சிவனை வழிபடுபவர்கள் என்பதை எருதின் வடிவம் உணர்த்துவதாகச் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். காசி அரசர் மதனர் எழுதியதாக 'மதனவிநோத நிகண்டு' என்ற மருத்துவ நூல் கிடைத்துள்ளது. மதனபாலரால் இயற்றப்பட்ட நூலாக இது

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

இருக்கலாம். ஆனால், இதுபற்றி உறுதியாக எதையும் கூற முடியாது.

கோவிந்த சந்திரர்

கோவிந்த சந்திரர் கி.பி. 1114 ஆம் ஆண்டுக்கு முன்பு அரசரானார். இவரது ஆட்சியில் வெளியிடப்பட்ட நாற்பதுக்கு மேற்பட்ட செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவ்வரசர் கி.பி. 1114 முதல் கி.பி. 1154 வரையில் நிச்சயமாக ஆண்டார் என்பதை அவை புலப்படுத்துகின்றன. இவர் யுவராஜாவாகத் தம் தந்தையின் சார்பில் நிர்வாகத்தை நடத்தி வந்த காலத்திலேயே கசினி சுல்தானின் படையெடுப்பையும் பால அரசரின் தாக்குதலையும் வெற்றிகரமாகச் சமாளித்தார் என்பதை முன்பு பார்த்தோம். தாம் அரசரான பின்னரும் 'துருக்ஷர்களின்' (முஸ்லிம்கள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றனர்) படையெடுப்பிலிருந்து வாராணசியை இவர் காத்ததாகச் சாரநாத் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. கசினி சுல்தான்களின் படைகள் தொடர்ந்து கங்கைச் சமவெளியைத் தாக்கின என்பதையும், அவற்றைக் கோவிந்த சந்திரர் எதிர்த்துச் சமாளித்தார் என்பதையும் இதன்மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். இவ்வரசர் கோவிந்தபாலர் என்றும் அழைக்கப்பட்டார் என்பது இக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

பால அரசர் ராம பாலரது தாய் மாமனின் பேர்த்தியான குமாரதேவி என்பவரை இவர் மணந்திருந்தார். ஆயினும், ராம பாலரது அரசின்மீது இவர் படையெடுத்து மாங்கிர் வரையில் சென்று வெற்றியோடு திரும்பினார் என்பது பல சாசனங்களால் தெரிகிறது. திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரிகளுக்கும் காகதவாலர்களுக்குமிடையிலான பகைமை கோவிந்த சந்திரரது காலத்திலும் தொடர்ந்து நீடித்தது. பாலர்கள்மீதான போர் காரணமாக மகதத்தின் ஒரு பகுதி இவ் வரசர் வசமாயிற்று.

கங்கை கொண்ட சோழபுரக் கல்வெட்டு

சோழ அரசர்களோடு காகதவாலர்களுக்கு ஓரளவு நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பது கங்கை கொண்ட சோழபுரத்தில் காணப்படும் சமஸ்கிருதக் கல்வெட்டால் தெரியவருகிறது. கோவிந்த சந்திரரின் கமௌலி (Kamauli) செப்பேட்டின் வாசகமே இக் கல்வெட்டிலும் பொறிக்கப்பட்டுள்ளது. காகதவாலர்களின் வம்சாவளி யசோவிக்கிரகர் முதல் சந்திரதேவர் வரையில் இதில் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர்க் கல்வெட்டுத் திடீரென்று பாதியில் நின்றுபோய் விடுகிறது. காகதவால அரசகுமாரன் ஒருவன் கங்கை கொண்ட சோழபுரம் சென்று கோயிலுக்கு நிவந்தம் அளித்ததைக் குறிப்பிடுவதற்காகவே இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

காஷ்மீரத்துடன் உறவு

பன்னிரண்டாம் நூற்ருண்டின் முன்பாதியில் காஷ்மீரத்தை ஆண்ட ஜெய சிம்மருடன் கோவிந்த சந்திரர் நட்புறவு பூண்டிருந்தாரென்பது ராஜதரங்கிணியால் தெரியவருகிறது. ஜெய சிம்மருடைய அமைச்சரான அலங்காரர் என்பவர் காஷ்மீரத்தில் புலவர்கள் நிறைந்த அவை ஒன்றைக் கூட்டிஞரென்றும், அதற்குச் சுகலர் (Suhala) என்பவரைக் கோவிந்த சந்திரர் அனுப்பிஞரென்றும் ஸ்ரீ கந்த சரிதம் என்ற நூல் கூறுகிறது.

முடிவு

கோவிந்த சந்திரரது போர் அமைச்சரான லக்ஷ்மீதரர் என்பவர் 'கிருத்திய கல்பதாரு' என்ற ஒரு சட்ட நூலை இயற்றிஞர். 'விவிதவித்ய-விசார-வாசஸ்பதி' என்று கோவிந்த சந்திரர் சாசனங்களில் குறிப்பிடப்படுவதால், புலவர்கள் பலரை அவர் ஆதரித்தார் என்பது தெரிகிறது. ஆனல், அவர்களது பெயர்களோ நூல்களோ குறிப்பிடப்படவில்லை. இவ் வரசரது தங்க நாணயங்களும் கிடைத்துள்ளன. சேடி அரசர் காங்கேய தேவரது நாணயத்தில் உள்ளதைப்போல், நான்கு கைகளுடன் கூடிய பெண் தெய்வ வடிவம் இவற்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் சிவனை வழிபட்டார் எனினும் இவரது மனைவிகளில் சிலர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவராயிருந்தனர். இவ் வரசரது சகேத்-மகேத் செப்பேடு சோழ நாட்டிலிருந்தும், உத்கல நாட்டிலிருந்தும் வந்த இரண்டு பௌத்த துறவிகளுக்கு இவர் தானம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. சமயத்தில் மிகுந்த பரந்த மனத்தோடு இவ் வரசர் நடந்து கொண்டார் என்பது தெளிவு. நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்த பின், 1154க்குப் பின் இவ் வரசர் காலமாஞர்.

விஜய சந்திரர்

கோவிந்த சந்திரரது வாராணசி செப்பேட்டில் அவரது யுவ ராஜாவாக அஷ்போத சந்திரர் இருந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. வேறு இரு பிள்ளைகளது பெயர்களும் ஏனைச் சாசனங்களில் காணப்படுகின்றன. ஆனல், இவை எதிலும் கூறப்படாத

மகனான விஜய சந்திரரே அடுத்த அரசரானார். இதற்கான காரணம் தெரியவில்லை. மற்றப் பிள்ளைகள் இறந்துவிட்டதாலோ அல்லது வாரிசுப் போட்டியின் விளைவாகவோ விஜய சந்திரரே தமது தந்தைக்குப் பின் அரசரானார். விஜய பாலர், மல்ல தேவர் ஆகிய வேறு பெயர்களும் இவருக்கு வழங்கின. கி.பி. 1168க்கு முன்பு இவர் அரசராகி, 1170-ல் காலமானார். பிற் காலத்து நூலாகிய பிருதிவிராஜ-ராசோ இவ் வரசரது போர் வெற்றிகள்பற்றி விவரிக்கிறது. ஆனால், இதில் குறிப்பிடப்படும் அரசர்கள் யாரும் விஜயசந்திரரின் காலத்தவர் அல்லரென்பதால் இது வெறும் கட்டுக்கதை என்று அறிஞர்களால் புறக்கணிக்கப் படுகிறது.

இவரது மகனான ஜெயச் சந்திரரது செப்பேடு ஒன்று முஸ்லிம் படை ஒன்றை இவர் (விஜய சந்திரர்) தோற்கடித் தார் என்று கூறுகிறது. தமது அரசின்மீது படையெடுத்து வந்த யமீனி சுல்தான் குஸ்ராவ் மாலிக்கின் படையொன்றினை இவர் ஒருவேளை தோற்கடித்தார் போலும்!

ஜெயச்சந்திரர்

1168 ஜூனில் யுவராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்ட ஜெயச் சந்திரர் சரியாக இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு, 1170 ஜூனில் பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். பல செப்பேடுகளும் கல்வெட்டுகளும் இவரது தானங்களைப்பற்றிக் குறிப்பிடு கின்றனவே ஒழிய, வரலாற்றுக்குத் தேவையான முக்கியமான செய்திகளைத் தெரிவிக்கவில்லை. சேன அரசரான லக்ஷ்மண சேனர் காசி அரசரைத் தோற்கடித்துக் காசியிலும் பிரயாகை யிலும் வெற்றித் தூண்களை நாட்டினார் என்று சேனர்களது சாசனங்கள் தெரிவிக்கின்றன. சிறிதும் வலிமையற்ற லக்ஷ்மண சேனர்பற்றிய இச் செய்தி முற்றிலும் புனைகதையே என்பதில் ஐயமில்லை.

பிருதிவிராஜ-ராசோ என்ற நூல் ஜெயச்சந்திரர் சந்தெல்ல அரசர் பரமார்த்தியுடன் நட்புறவு கொண்டிருந்தார் என்றும், சாகமான அரசர் பிருதிவிராஜரைத் தோற்கடிப்பதில் அவருக்கு உதவினாரென்றும் எழுதுகிறது. ஜெயச் சந்திரரது மகளான சம்யோஜிதையைப் பிருதிவிராஜர் தூக்கிச் சென்று மணந்த கதையையும் இந் நூலே தெரிவிக்கின்றது. கோரியைச் சேர்ந்த ஷிகாபுதீனைப் பல இடங்களில் ஜெயச்சந்திரர் தோற்கடித்தார் என்று 'புருஷ பரிக்ஷா', 'ரம்பாமஞ்சரி' போன்ற நூல்கள் தெரி விக்கின்றன. ஜெயச்சந்திரர் வட இந்தியா முழுவதையும்

வென்று, குஜராத்தை ஆண்டுவந்த சித்தராஜர் என்ற அரசரையும் தோற்கடித்தார் என்று ராஜஸ்தானத்தில் வழங்கிய பல கதைகள் கூறின. இவையெல்லாம் உண்மையாக இருக்க முடியாது. சந்தெல்லர், சாகமானர் முதலியோரைத் தோற்கடித்துக் குஜராத் வரையில் இவர் சென்றார் என்பதை நம்பமுடியவில்லை. ஷிகாபுதீனை இவர் பல போர்களில் தோற்கடித்தார் என்பதும் வேறு எந்தச் சான்றாலும் உறுதியாகவில்லை.

தரைன் (Tarain) அல்லது தரோரி (Taraori) என்ற போர்க்களத்தில் சாகமான அரசர் பிருதிவிராஜரை 1192-ல் ஷிகாபுதீன் தோற்கடித்தபோது ஜெயச்சந்திரர் பிருதிவிராஜரின் தோல்வியைக் கேட்டு மகிழ்ந்தார் என்று தெரிகிறது. ஆனால், அடுத்த ஆண்டிலேயே கனோஜையும் காசியையும் நோக்கி ஷிகாபுதீன் படைகள் புறப்பட்டன. மீரட், டெல்லி ஆகியவற்றைக் கைப்பற்றியபின், ஷிகாபுதீன் கனோஜை நோக்கி முன்னேறினார். இரு படைகளின் பலத்தையும் போர்களையும்பற்றித் தாஜுல் மாசிர் (Tajul-Maasir) என்ற நூல் விவரமாகத் தெரிவிக்கிறது. இதை எழுதிய ஹசன்-நிசாமி ஷிகாபுதீனின் காலத்தில் வாழ்ந்தவர். 1205-ல் இந் நூலை எழுதும் பணியை ஹசன்-நிசாமி துவக்கினார்.[1] எட்டாவாவுக்கு அருகில் கடுமையான போர் நிகழ்வுற்றது. ஜெயச்சந்திரர் அம்பு பாய்ந்து யானையின் மீதிருந்து விழுந்து இறந்தார். ஜெயச்சந்திரரின் செல்வங்கள் பாதுகாத்து வைக்கப்பட்ட அஸ்னி (Asni) கோட்டை ஷிகாபுதீனால் அடுத்துக் கைப்பற்றப்பட்டது. பின்னர், வாராணசியையும் முஸ்லிம்கள் கைப்பற்றினர். அங்கிருந்த ஆலயங்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டனவாம்.

ஸ்ரீ ஹர்ஷர் என்ற கவிஞரை ஜெயச்சந்திரர் ஆதரித்தார் என்று பல்வேறு சான்றுகளும் தெரிவிக்கின்றன.

கனோஜ் அரசின் முடிவு

அரிச்சந்திரர்

ஜெயச்சந்திரரின் மரணத்தோடு காகதவால அரசு முடிவுறவில்லை. அவரது மகன் அரிச்சந்திரர் 1197 ஜனவரியில் வெளியிட்ட சாசனம் ஒன்று மகாராஜாதிராஜர் போன்ற பட்டங்களோடு அவர் ஆட்சிபுரிந்து வந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது. இவரது செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவரது தந்தை போரில் இறந்தபோது அரிச்சந்திரருக்

[1] Elliot and Dowson, மேலே குறிப்பிடப்பட்ட நூல்.

குப் பத்தொன்பது வயது என்று இவற்றின் மூலம்தெரிகிறது. வெற்றிபெற்ற முஸ்லிம் அரசன் ஒரு சிறிய பிரதேசத்தை அரிச்சந்திரரிடம் ஒப்படைத்துத் தனக்குக் கப்பம் செலுத்தி ஆண்டு வருமாறு செய்திருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர். இவரது ஆட்சியில் எந்த எந்தப் பகுதிகள் இருந்தன என்பது நன்கு தெரியவில்லை. அரிச்சந்திரரது ஆட்சி எப்பொழுது முடிவுற்றது என்பதும் தெரியவில்லை. கன்னோஜை அடுத்திருந்த சில பகுதிகள் 1196-ல் முகம்மது-இப்னு-பக்தியார் கில்ஜிக்கு அளிக்கப்பட்டதாகத் தபக்காத்-தெ-நாசிரி குறிப்பிடுகிறது.1226-ல் வாராணசிப் பகுதியில் மாலிக் நாசிருதீன் மகமூத் என்பவர் இந்துக்களின் கிளர்ச்சியை ஒடுக்கியபின், அவரிடமே ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது என்று அதே நூல் தெரிவிக்கிறது. எனவே, இந்த ஆண்டிலோ அதற்கு முன்போ அரிச்சந்திரரின் ஆட்சி முடிவுக்கு வந்தது என்பது தெளிவு. வட இந்தியாவில் சுமார் ஆறு நூற்றாண்டுகள் வரை பிரதான தலைநகரமாக இருந்த பின், கன்னோஜில் இந்து அரசர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்து, முஸ்லிம் ஆட்சிக்குள் அது சிக்கிற்று.

2. வங்காளம்

1. சசாங்கருக்குப் பின் நிலைமை

ஏழு சிற்றரசுகள்

சசாங்கர் வங்காளம், பீகார், ஒரிசா, உத்திரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி ஆகியவற்றின்மீது ஆட்சிபுரிந்தார். மேற்கு வங்காளத்தின் கர்ணசுவர்ணம் என்ற ஊர் அவரது தலைநகராய் இருந்தது. ஆனால், மேற்கிலிருந்து ஹர்ஷரும் கிழக்கிலிருந்து பாஸ்கரவர்மரும் அவரைத் தாக்கினர். மகதம் வரையிலான மேற்குப் பகுதி ஹர்ஷராலும் வங்காளத்தின் பெரும் பகுதி பாஸ்கரவர்மராலும் கைப்பற்றப்பட்டன. சசாங்கரது தலைநகரான கர்ணசுவர்ணத்தில் பாஸ்கரவர்மர் சிறிது காலம் முகாமிட்டிருந்தார். சசாங்கரது முடிவுபற்றித் தெரியவில்லை. சசாங்கருக்குப் பிறகு வங்காளம் சிறுசிறு அரசுகளாகப் பிளவுண்டது என்பது யுவான் சுவாங்கின் குறிப்புகளால் தெரிய வருகிறது. கி.பி. 638ஆம் ஆண்டுவாக்கில் வங்காளத்தில் பயணம் செய்த யுவான்-சுவாங் அங்கு ஏழு சிற்றரசுகளைத் தாம் கண்டதாகக் குறிப்பிடுகிறார். அவற்றின் பெயர்கள்: (1) க-சு-வென்-கி-லோ (கஜங்கலா), (2) புன்-ன-பா-டான்-ன (புந்திரவர்தனம்) (3) சன்-மோ-த-தா (சமததா) (4) டான்-மோ-லி-டி (தாம்ரலிப்தி), (5) கி-லோ-ன-சு-பா-லா-ன (கர்ணசுவர்ணம்), (6) இ-லான்-நா-போ-பா-டோ (ஹிரண்ய பர்வதம்), (7) சன்-போ (சம்பா).[1] இவற்றில் முதலாவது ராஜ்மகல் பிரதேசம் என்றும், இரண்டாவது வடக்கு வங்காளத்தின் ஒரு பகுதி என்றும், மூன்றாவது நான்காவது ஐந்தாவது ஆகியவை மேற்கு வங்காளத்தின் பகுதி என்றும், ஆறாவது மாங்கிரைச் சுற்றியிருந்த மலைப்பகுதி என்றும், ஏழாவது பாகல்பூர் மாவட்டம் என்றும் அறிஞர்கள் ஊகிக்கின்றனர்.

திபேத் அரசர்களும் இதுதான் தருணம் என்று வங்காளத்தின் வடபகுதியைக் கைப்பற்றி இருக்கலாம் என்பது திபேத்திய சான்றுகளால் தெரிகின்றது. ஆனால், கி.பி. 700ஆம் ஆண்டு

[1] Ka-chu-wen-ki-lo, Pun-na-fa-tan-na, San-mo-ta-ta, Tan-mo-lil-ti, Ki-lo-na-su-fa-la-na, I-lan-na-po-fa-to, Chan-po.

வாக்கில் இந்தியா (அதாவது வடக்கு வங்காளம்) திபேத்தின் ஆட்சியிலிருந்து விடுபட்டதாகச் சீனுவின் டாங் (Tang) வம்சத்துக் குறிப்புகள் கூறுகின்றன.

ஜெயநாகர்

வங்காளத்தைச் சேர்ந்த சான்றுகளை வைத்துப் பார்க்கும் பொழுது சசாங்கரது மரணத்துக்குப் பின் அவரது மகன் ஆட்சிக்கு வந்து எட்டு மாதகாலம் சிறிய பிரதேசம் ஒன்றை ஆண்டார் என்பது புலப்படுகின்றது. மேலும், மகாராஜாதிராஜ ஜெயநாகர் என்ற ஒரு அரசர் கர்ணசுவர்ணப் பகுதியிலிருந்து ஆட்சி புரிந்தார் என்பதும் அப் பகுதியில் கிடைக்கும் அவர் நாணயங்கள் மூலமாகத் தெரிகிறது.[1] இவர் ஓரளவு வலிமை மிக்க அரசராக இருந்திருக்கலாம். ஆனுல், இவரது ஆட்சிக் காலம்பற்றியோ, இவரது அரசின் பரப்புப்பற்றியோ அறிஞர் களிடையில் இன்னமும் ஒருமித்த கருத்து இல்லை.

கட்கர்கள்

கி.பி. ஏழாம் நூற்றுண்டின் பிற் பகுதியில் வங்காளத்தின் இரு பகுதிகளை மகதத்தைச் சேர்ந்த பிந்திய குப்தர்களும் சமததாவைச் சேர்ந்த கட்கர்களும் (Khadgas) ஆண்டனர். பிந்திய குப்த அரசர்களின் கல்வெட்டுகள் ஒரு சில மேற்கு வங்காளத்தில் கிடைத்துள்ளன. கிழக்கு வங்காளத்தில் கட்கர் களுடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைத்துள்ளன. இவர்கள் இன்றைய கோமில்லா (Comilla) வுக்கு அருகிலிருந்த கர்மந்தம் (Karmanta) என்ற ஊரிலிருந்து கிழக்கு வங்காளத்தை ஆட்சி புரிந்தனர். தெற்கு, மத்திய வங்காளத்தின் ஒரு பகுதி யும் சிறிது காலம் இவர்களது ஆட்சியில் இருந்தது. கட்கோதி யாமர் (Chadgodyama), ஜாடகட்கர் (Jatakhadga), தேவகட்கர், ராஜராஜபட்டர் ஆகிய நான்கு கட்க அரசர்களது சாசனங்கள் கிடைத்துள்ளன. அக்காலத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இத்சிங் (I-tsing) என்ற சீன யாத்திரிகர் குறிப்பிடும் சமததா அரசர் ராஜபட்டர் என்பவர் இந்த ராஜராஜபட்டரே என்பதில் ஐயமில்லை. ராஜராஜபட்டரது அஷ்ரப்பூர் (Ashrafpur) செப்பேடு நமக்குக் கிடைத்துள்ளது. அவர் கி.பி. 680ஆம் ஆண்டுவாக்கில் ஆட்சிபுரிந்தார் என்பது தெரிகிறது.

சைலர்கள்

கி.பி. எட்டாம் நூற்றுண்டின் துவக்கத்தில் இமயமலைப் பகுதியில் ஆட்சிபுரிந்த சைல வம்சத்தினர் (Sailas) வடக்கு

[1] R. C Majumdar (Editor), *History of Bengal.*

வங்காளத்தின்மீது படையெடுத்தனர். இவ் வம்சத்து அரசரான ஜெயவர்த்தனர் என்பவரது செப்பேடு ஒன்று மத்தியப் பிரதேசத்தில் பாலாகட் (Balaghat) மாவட்டத்தில் கிடைத்துள்ளது. இவ் வரசரது பாட்டனுர் காசியையும், பாட்டனுரின் அண்ணன் புந்திரவர்தனத்தையும் வென்றதாக அச் செப்பேடு தெரிவிக்கிறது. சைலர்கள் விந்திய மலேப்பகுதி, காசி, வடக்கு வங்காளம் ஆகிய இடங்களில் ஆட்சி புரிந்திருக்கக்கூடும் என்பது இதிலிருந்து புலனுகிறது. ஆனுல், இவர்களேப்பற்றி இதற்குமேல் எதுவும் தெரியவில்லே.

யசோவர்மனும் காஷ்மீர அரசர்களும்

கனேஜ் அரசரான யசோவர்மன் அடுத்தபடியாக வங்காளத்தைக் கைப்பற்றினுர். கி.பி. 725க்கும் 735க்குமிடையில் இது நிகழ்ந்திருத்தல் வேண்டும். விரைவிலேயே காஷ்மீர அரசரான லலிதாதித்திய முக்தாபீடர் வங்காளத்தை வென்ருர். ஆயினும், வங்காளத்தின்மீது அவர் ஆட்சி புரியவில்லே. காமரூப அரசரான ஸ்ரீ ஹர்ஷர் என்பவரும் கௌடத்தின் ஒரு பகுதியைச் சிறிது காலம் ஆண்டார் என்று தெரிகிறது. இதன் பின்னர், லலிதாதித்திய முக்தாபீடரின் பேரரான ஜெயாபீடர் கி.பி. 760ஆம் ஆண்டுவாக்கில் 'கௌட அரசருக்குக் கட்டுப்பட்ட ஜெயந்தர் என்பவரால் ஆளப்பட்ட புந்திரவர்தனம் என்ற நகரை' அடைந்ததாகக் கல்ஹணர் கூறுகிருர். ஜெயந்தரின் மகளான கல்யாணதேவியை மணந்த ஜெயாபீடர் 'பஞ்ச கௌடாதிபதிகளேயும்' (ஐந்து கௌட அரசர்கள்) வென்று தம் மாமனுரின் சிற்றரசர்களாக ஆக்கினுராம். இக் கதை எவ்வளவு தூரம் உண்மை என்பதை நம்மால் உணர முடியவில்லே.

சந்திரவம்சம்

வங்காளத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் ஆண்ட மற்ற அரசர்கள் சிலரின் சாசனங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் கூறப்படும் அரசர்களின் பெயர்களே மட்டும் வைத்து நம்மால் முழு உண்மையையும் அறிய முடியவில்லே. 'இந்தியாவில் பௌத்தத்தின் வரலாறு' என்ற நூலே எழுதிய திபேத்திய துறவியான தாரநாதர், பாலவம்சம் ஆட்சிக்கு வருமுன் சந்திர வம்சத்தினர் கிழக்கு வங்காளத்தில் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிருர். இவர்களில் கடைசி இரு அரசர்களான கோவிந்த சந்திரர், லலிதசந்திரர் ஆகியோர் கி.பி. எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். இவர்களுக்குப்

பின் வங்காளத்தின் நிலைமையைத் தாரநாதர் கீழ்வருமாறு வர்ணிக்கிறார் : 'சந்திரவம்சத்து அரசர்கள் மறைந்து போய் விட்டார்கள். ஒதிவிசா, வங்காளம், கிழக்கிலான ஐந்து மாவட்டங்கள் ஆகியவற்றில் (பொதுவாகக் கிழக்கு, மேற்கு வங்காளங்களை அவர் குறிப்பிடுகிறார்) ஒவ்வொரு க்ஷத்திரியனும் பிராமணனும் வைசியனும் தனது பகுதியில் தானே அரசனாக இருந்தான். நாட்டை ஆளும் அரசன் ஒருவனும் இல்லை.' இதையேதான் தர்மபாலரது கலிம்பூர் செப்பேடு 'மத்சய நியாயம்' என்று வர்ணிக்கிறது. இந்நிலையில்தான் கோபாலர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. பாலர்கள்

பூர்விகம்

எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வங்காளம் குழப்பத்தில் ஆழ்ந்து கிடந்தது. பல்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு குறுநில மன்னர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இக் குழப்பத்துக்கு முடிவுகட்டி, வங்காளம் முழுவதையும் ஒரு கொடையின்கீழ்க் கொண்டுவந்த பெருமை பால வம்சத்தைச் சேரும். இவ் வம்சத்தைச் சேர்ந்த அரசர்களின் பெயர்கள் அனைத்தும் பாலர் என்று முடிவதால் பால வம்சம் என்று இதற்குப் பெயர் ஏற் பட்டது. பாலர் என்ற சொல்லுக்குக் காப்போர் அல்லது பாது காப்பவர் என்ற பொருளுமுண்டு. சான்றாக, வாயில்காப்போன் துவாரபாலன் என்று அழைக்கப்பட்டான். குழப்பத்திலிருந்து வங்காளத்தைக் காத்ததால் இவர்கள் பாலர் என்ற பெயர் முடிவை வைத்துக் கொண்டனர் போலும்!

இவ் வம்சத்தின் பூர்விகம்பற்றித் தெரிந்துகொள்ளப் போது மான சான்றுகள் இல்லை. இவ் வரசர்கள் வங்காளத்தின் ஒரு பகுதியில் குறுநில மன்னர்களாக இருந்திருத்தல் வேண்டும். பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சோதலர் (Soddala) என்பவரால் இயற்றப்பட்ட உதயண சுந்தரி கதா என்ற நூலில் பால வம்சத்து இரண்டாவது அரசரான தர்மபாலர் புராணங்களில் கூறப்படும் சூரிய வம்சத்து அரசரான மாந்தாதா (Mandata) என்பாரது வழியில் தோன்றியவர் என்று வருணிக்கப்படுகிறார். பால அரசர் மூன்றாம் விக்கிரக பாலரது அமைச்சரான வைத்திய தேவர் என்பாரது கமௌலி (Kamauli) செப்பேட்டிலும் சூரிய வம்சத்தவர் என்று பாலர் குறிப்பிடப்படுகின்றனர். அவ் வம்சத்தின் தொன்மையைக் காட்டுவதற்காகவே இவை குறிப் பிடப்பட்டன போலும்! ஆயினும், இந்த வம்சத்தின் ஆரம்ப வரலாறு எங்கும் குறிப்பிடப்படவே இல்லை.

தர்மபாலரது கலிம்பூர் (Khalimpur) செப்பேட்டில் (இதுவே பாலர்களின் முதலாவது செப்பேடு) அவரது பாட்டனாரான தைதவிஷ்ணுபற்றிக் குறிப்பிடப்படுகிறது. இந்தத் தைதவிஷ்ணு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று அதில் சுட்டப்படுகிறார். அரச குடும்பத்தில் பிறக்காமல் அன்று நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தி எவ்வாறோ ஒரு குறுநில மன்னராகத் தைதவிஷ்ணு ஆனார் என்பதை நாம் ஊகிக்கலாம். பிராமணர்கள் என்றோ, அல்லது க்ஷத்திரியர்கள் என்றோ பாலர்கள் தங்களை அழைத்துக் கொள்ளவில்லை. தாங்கள் பௌத்தர்களாக இருந்ததால் இதுபற்றிக் குறிப்பிட அவர்கள் விரும்பவில்லை போலும்! தங்களது பூர்விகம்பற்றித் தங்களது செப்பேடுகளில் பால அரசர்கள் குறிப்பிடாததற்கு ஒரு காரணம் அவர்கள் ஒரு சாதாரண குடும்பத்தில் வந்தவர்கள் என்பதாகவும் இருக்கக் கூடும்.

இவர்கள் துவக்கத்தில் வங்காளத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது ஐயத்துக்கு இடமின்றிப் புலப்படவில்லை. பிந்திய பால அரசர்களில் ஒருவரான ராம பாலர்பற்றிய ராம சரிதம் என்ற நூல் அவ் வரசரது ஜனக பூமி (சொந்த நாடு) வரேந்திரி (Varendri) என்று குறிப்பிடுகிறது. வரேந்திரி என்பது வடக்கு வங்காளத்தின் ஒரு பகுதியாகும். ஆனால், சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த தாரநாதர் பால வம்சத்தை நிறுவியவரான கோபாலர் புந்திரவர்தனத்தில் க்ஷத்திரிய குலம் ஒன்றில் தோன்றியவர் என்று கூறுகிறார். (குலம் தெரியாத அரசர்களைக்கூட க்ஷத்திரியர்கள் என்று பிற்காலத்தில் அழைக்கும் வழக்கம் புலவர்களிடையில் உண்டு.) புந்திரவர்தனம் என்பது கிழக்கு வங்காளத்திலுள்ள போக்ரா (Bogra) மாவட்டமே ஆகும். கோபாலர் துவக்கத்தில் கிழக்கு வங்காளமாகிய வங்கத்திலேயே ஆட்சி செலுத்தினார் என்பது பல்வேறு சான்றுகளாலும் தெரிகிறது. எனவே, தாரநாதர் கூறும் பிரதேசமே பாலர்களின் பூர்விகமாக இருக்கக் கூடும்.[1]

கோபாலர்

தைதவிஷ்ணுவின் மகனான வப்யதரின் (Vapyata) மகனே கோபாலர் என்றும், அங்கு நிலவிய குழப்பத்தை (மத்சிய நியாயம்) நீக்க மக்கள் இவரை அரசராகத் தேர்ந்தெடுத்தனர் என்றும் கலிம்பூர் செப்பேடு கூறுகிறது. இச்

[1] For more details, see **R. C. Majumdar** (Editor), ***History of Bengal.***

செய்தியைத் திபேத்திய ஆசிரியரான தாரநாதரும் குறிப்பிடுகிருர். எந்த அரசை ஆளுவதற்காக இவர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. வங்காளத்தின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று தாரநாதர் குறிப்பிடுவது அக்காலத்தில் வங்கம் அல்லது வங்காளம் என்றழைக்கப்பட்ட கிழக்கு வங்காளத்தையே குறிப்பிடும். அவரை அவ்வாறு தேர்ந்தெடுத்த பிரகிருதிகள் (குடிகள்) யாவர் என்பதும் குறிப்பிடப்படவில்லை. கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்களே கோபாலரைத் தங்களுக்கு மேற்பட்ட அரசனுகத் தேர்ந்தெடுத்தனர் போலும்! ஆயினும், தமது ஆட்சியின் முடிவுக்குள் இன்றைய வங்காளம் முழுவதையும் கோபாலர் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து விட்டார். மகதத்தையும் தம் கொடையின்கீழ்க் கோபாலர் கொண்டுவந்தார் என்று தாரநாதர் தெரிவிக்கிருர். சுமார் எட்டு நூற்ருண்டுகளுக்குப் பின் வாழ்ந்த தாரநாதர் குறிப்பிடும் மகதம்பற்றிய செய்தி பொருத்தமாகத் தோன்றவில்லை. தேவபாலரது மாங்கிர் செப்பேடு கடற்கரை வரையிலான பிரதேசம் முழுவதையும் கோபாலர் கைப்பற்றினுர் என்று கூறுகிறது. வங்காளம் முழுவதையும் வென்ற செய்தியையே இது குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை. ஓடந்தபுரிக்கு அருகில் நாளந்தாவில் (மகதத்தில்) கோபாலர் ஒரு பௌத்த ஆலயத்தைக் கட்டினுர் என்றும் தாரநாதர் கூறுகிருர்.

கோபாலரின் காலம்

தமது மரணத்துக்கு முன் வலுவான ஓர் அரசைக் கோபாலர் நிறுவிவிட்டார் என்பதில் ஐயமில்லை. இவரது காலம்பற்றி உறுதியாகத் தெரியவில்லை. இவர் நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆண்டார் என்று தாரநாதர் எழுதுகிருர். அவரது கூற்றின்படி, கி.பி. 660-ல் இருந்து 705 வரையில் கோபாலர் ஆட்சி புரிந்தார். கிட்டத்தட்ட ஒரு நூற்ருண்டு காலம் முற்பட்டதாக இது இருக்கிறது என்றும், கி.பி. 750 முதல் கி.பி. 770 வரையில் அவர் ஆட்சி புரிந்ததாக வைத்துக் கொள்வதே பொருத்தமாக இருக்கும் என்றும் மேலே கூறப்பட்ட 'வங்காள வரலாறு' என்ற நூலில் R. C. மஜூம்தார் விளக்குகிருர். பால அரசர்களின் ஆண்டுக் கணக்கீடுபற்றி அந் நூலில் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளது. டாக்டர் H. C. ரே என்ற அறிஞர் கோபாலர் கி.பி. 765-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பது உறுதி என்று முடிவு செய்கிருர். பாலர்களில் ஒன்பதாவது அரசரான மகிபாலர் 1026-ல் இறந்தார் என்பது தெளிவாகிறது. இரண்

டாவது அரசரான தர்மபாலர் முதல் மகிபாலர் வரையில் பல் வேறு சான்றுகளின்படி மொத்தம் 257 ஆண்டுகள் அவர்கள் ஆட்சிபுரிந்திருக்க வேண்டும் என்று கணக்கிட்டு, 769-ல் (1026—257 = 769) தர்மபாலர் அரியணை ஏறியிருக்க வேண்டுமென்பது டாக்டர் ரேயின் கணக்கீடு. அதாவது, கோபாலரது ஆட்சி கி.பி. 769-ல் முடிவுற்றிருக்க வேண்டும். R. C. மஜும்தாரின் கணக்கீடும் (கி.பி. 770) கிட்டத்தட்ட இத்துடன் ஒத்துள்ளது. கோபாலரது காலத்திய கல்வெட்டோ, செப்பேடோ, நாணயமோ கிடைக்காததால் பிந்திய அரசர்களின் காலத்தை வைத்தே இவரது காலத்தைக் கணக்கிட வேண்டியிருக்கிறது.

தர்மபாலர்

கோபாலருக்குப் பின் அவரது மகனுன தர்மபாலர் அரசரானுர். இவரது கலிம்பூர் செப்பேடும் ராஷ்டிரகூடர்களது சஞ்சான் செப்பேடும் இவரது ஆட்சிபற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன. இவர் கி.பி. 770 ஆம் ஆண்டுவாக்கில் அரசராகியிருக்கக் கூடும்.

பிரதிகாரர்மீது போர்

தர்மபாலரின் ஆட்சியின் துவக்கத்தில் மாளவத்தைச் சேர்ந்த பிரதிகாரர்கள் கங்கைச் சமவெளியை நோக்கித் தமது ஆதிக்கத்தைப் பரப்பி வந்தனர். அப்பொழுது பிரதிகார அரசராக இருந்தவர் வத்சராஜர். வத்சராஜர் கௌட (வங்காள) அரசரைத் தோற்கடித்தார். இச் சண்டை கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் நடந்திருக்கலாமென்று இரண்டாம் கர்க்கரது பரோடா செப்பேட்டைக் கொண்டு அறிஞர்கள் ஊகிக்கின்றனர். ஆனுல், விரைவிலேயே வத்சராஜரை ராஷ்டிரகூட அரசரான துருவர் தோற்கடித்தார். வத்சராஜர் தோற்கடிக்கப்பட்டு ராஜஸ்தானப் பாலைவனத்துக்குள் விரட்டியடிக்கப்பட்டார் என்று சஞ்சான் செப்பேடு நமக்குக் கூறுகிறது. கங்கைச் சமவெளியில் பிரதிகார ஆதிக்கத்தை நிறுவும் முயற்சி துருவரது இந்த வெற்றியால் தோற்றது. பின்னர், துருவர் மேலும் முன்னேறி, கௌட அரசரைக் கங்கைக்கும் யமுனைக்குமிடையில் தோற்கடித்தார். இச் செய்தியும் ராஷ்டிரகூட அமோகவர்ஷருடைய சஞ்சான் செப்பேட்டில் தெளிவாகக் கூறப்படுகிறது. ஆயினும், இந்த வெற்றிக்குப் பின் துருவர் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுர்.

தர்மபாலரது பேரரசு

வத்சராஜர் தோற்று ஓடியபின், தர்மபாலர் தம்மை எதிர்ப்பார் யாருமின்றி, கனேஜைக் கைப்பற்றி, அங்கு ஆட்சிபுரிந்து கொண்டிருந்த இந்திரராஜரை அகற்றிவிட்டு, அவருக்குப் பதி

லாகச் சக்ராயுதரைக் கனோஜில் அரசராக்கினார். இந்த இந்திர ராஜரே இந்திராயுதர் என்று வின்சென்ட் ஸ்மித் போன்றோர் முடிவு செய்தனர். சமண நூலான ஹரிவம்சத்தில் கூறப்படும் இந்திராயுதர் அந் நூலாசிரியர் குறிப்பிடும் வர்தமானபுரத்தி லிருந்து வடக்கில் ஆட்சிபுரிந்த ராஷ்டிரகூட இளவரசராகவே இருத்தல் வேண்டுமென்பதையும், வடக்கில் ஆளும் அரசர் என்பதைக் கனோஜ் அரசர் என்று முடிவு கட்டுவது தவறு என் பதையும் முன்பே குறிப்பிட்டோம். இந்நிலையில், தர்மபாலரால் தோற்கடிக்கப்பட்ட இந்திரராஜர் கனோஜை ஆட்சிபுரிந்த ஆம ராஜராகவே (ஆம நாகாவலோகர்) இருக்கக் கூடும் என்பது டாக்டர் குலாப் சந்திர சௌத்திரியின் முடிவு என்பதை முன்பே பார்த்தோம்.[1] மேலும், கனோஜ் அரசரான ஆமராஜரைத் தோற்கடிக்க வேண்டுமென்பது தமது நெடுநாள் ஆசையாக இருந்தது எனத் தர்மபாலர் கூறினார் என்று பப்பபட்டி சரிதம் எடுத்துரைப்பதை இவ்வாசிரியர் மேற்கோள் காட்டுகிறார்.

சக்ராயுதரைத் தமக்குக் கீழ்ப்பட்ட அரசரென்ற முறையில் கனோஜில் அரசராக்கிய பின் அந் நகரில் தர்மராஜர் சிறிது காலம் தங்கியிருந்தார் போலும்! அப்பொழுது தமது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட போஜம், மத்சயம், குரு, யது, யவனம், அவந்தி, காந்தாரம் முதலிய நாடுகளின் அரசர்களைக் கொண்ட அவை ஒன்றைத் தர்மபாலர் கனோஜில் கூட்டினார் என்று அவரது கலிம்பூர் செப்பேடு கூறுகிறது. இந் நிகழ்ச்சி கி.பி. 783-84-ல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட உதயண சுந்தரி கதை 'உத்தராபத சுவாமி' (வட இந்தியா முழுவதுக்குமான அரசர்) என்று தர்மபாலரை வருணிக்கிறது. ஆயினும், கிழக்கு ஆப்கானிஸ்தானமான காந்தாரம், பிரதிகாரர் ஆட்சி புரிந்த அவந்தி, புராதன காலத்தில் காத்தியாவாரிலும் யமுனைக் கரை யிலும் வாழ்ந்த யதுகுலத்தவர் போன்றோர் கனோஜுக்கு வந்து தர்மபாலரை வணங்கினர் என்று கூறுவது புனைந்துரை என்பது ஐயமில்லை. இருப்பினும், துருவர் தமது அரசுக்குத் திரும்பிச் சென்ற பின், கனோஜ் முதல் வங்காளம் வரையில் ஆட்சிபுரிந்த தர்மபாலர் வட இந்தியாவிலேயே மிகச் சிறந்த அரசராகச் சிறிது காலம் விளங்கினார் என்பது உண்மை.

தர்மபாலரின் தோல்வி

தர்மபாலரின் ஆதிக்கம் சுமார் இருபது ஆண்டுகள் இவ்வாறு நீடித்தது. வத்சராஜரின் மகனான இரண்டாம் நாகபட்டர்

[1] Dr. Gulab Chandra Choudhary, *Political History of Northern India from Jain Sources.*

பிரதிகார அரசரான பின், தர்மபாலரை எதிர்த்துப் போருக்கு ஏற்பாடுகள் செய்தார். பல்வேறு அரசர்களோடு வங்க அரசரையும் அவர் தோற்கடித்தார் என்பதைப் பிரதிகாரரது குவாலியர் கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது. பல சிற்றரசர்களையும் தோற்கடித்த பின், நாகபட்டர் தர்மபாலரது பேரரசின்மீது படையெடுத்தார். மாங்கிர் வரையில் அவர் படையெடுத்துச் சென்று தர்மபாலரைத் தோற்கடித்து வெற்றியோடு மீண்டார். இதுபற்றிய மேலும் தகவல்களுக்கு இரண்டாம் நாகபட்டர் பற்றிய தலைப்பில் பார்க்கவும். தர்மர் என்ற அரசரை அவர் தோற்கடித்ததாகச் சில சாசனங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தர்மர் தர்மபாலராகவே இருக்க வேண்டும். சக்ராயுதரும் தர்மபாலரும் நாகபட்டருக்கு எதிராக ராஷ்டிரகூடர்களின் உதவியை நாடியிருக்கக் கூடுமென்பது சஞ்சான் செப்பேடுகள் வாயிலாகப் புலப்படுகிறது. அவர்களுக்கு உதவுவதற்காகவே ராஷ்டிரகூட அரசரான மூன்றாம் கோவிந்தர் கி.பி. 808ஆம் ஆண்டு வாக்கில் வட இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்றார் போலும்![1] நாகபட்டர் தோற்கடிக்கப்பட்டார். ஆயினும், விரைவிலேயே மூன்றாம் கோவிந்தர் தம் நாட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. இருப்பினும், நாகபட்டரது படையெடுப்புக்கு முற்றுப்புள்ளி வைத்ததன் வாயிலாக ராஷ்டிரகூடர்கள் தர்மபாலரின் ஆதிக்கத்தைக் காத்தனர்.

மதிப்புரை

மகாராஜாதிராஜர், பரமேசுவரர், பரமபட்டாரகர் போன்ற விருதுகளைத் தர்மபாலர் சூடியிருந்தார். பாடலிபுரத்திலும் அவர் கோலாகலமாகச் சிறிது காலம் கொலுவீற்றிருந்தார் என்று அவரது கலிம்பூர் செப்பேடு தெரிவிக்கிறது. அவர் பௌத்த சமயத்தைத் தழுவி இருந்தார். விக்கிரமசீலா மடாலயத்தை நிறுவியவர் இவரே என்று திபேத்திய நூல்கள் கூறுகின்றன. பிற்காலத்தில் சிறந்த பல்கலைக்கழகமாக இது வளர்ச்சியுற்றது. வங்காளத்தில் ராஜ்ஷாஹி மாவட்டத்தில் சோமபுரி என்னும் ஊரில் பெரிய பௌத்த விகாரம் ஒன்றையும் தர்மபாலர் கட்டினார். ஓடந்தபுரியிலுள்ள பௌத்த மடாலயமும் இவ் வரசராலேயே கட்டப்பட்டதாகத் திபேத்திய நூல்கள் கூறுகின்றன. ராஷ்டிரகூட அரசர் பரபலர் (Parabala) என்பாரது மகள் ரண்ணாதேவியைத் தர்மபாலர் மணந்திருந்தார். இந்த ராஷ்டிரகூட அரசர் எவர் என்பது தெரியவில்லை. வட இந்தியாவில் பல இடங்களில் ஆட்சி புரிந்த ராஷ்டிரகூடச் சிற்றரசர்களுள் ஒருவராக

[1] R. C. Majumdar (Editor), *History of Bengal.*

அவர் இருந்திருக்க வேண்டும். இந்த ரண்ணுதேவிக்குப் பிறந்தவரே அடுத்த அரசரான தேவபாலர்.

தர்மபாலரது சாசனங்களில் நமக்குக் கிடைத்துள்ளவற்றில் கடைசியானது அவரது முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. ஆனால், தாரநாதரோ இவர் அறுபத்துநான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிறார். சுமார் நாற்பது ஆண்டுகளே (சுமார் கி.பி. 770-810) தர்மபாலர் ஆண்டிருக்கக் கூடும் என்பது R. C. மஜூம்தாரின் முடிவு. நாற்பத்து ஆறு ஆண்டுகள் (கி பி. 769-815) இவர் ஆண்டார் என்று H. C. ரே கருதுகிறார்.

தேவபாலர்

தர்மபாலருக்கு அடுத்த பால அரசர் தேவபாலர். வலிமை மிக்க பேரரசராக இவர் விளங்கினார். தர்மபாலரது ஆட்சியின் முப்பத்திரண்டாம் ஆண்டில் வெளியிடப்பட்ட கலிம்பூர் செப்பேட்டில் திரிபுவன பாலர் என்பவர் யுவராஜாவாக இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தம் தந்தையின் மரணத்துக்கு முன் காலமாகி விட்டதால் தேவபாலரே அரசரானார் போலும்! தேவபாலர் தொல்லையில்லாமல் அரசரானார் என்று அவரது மாங்கிர் செப்பேடு தெரிவிக்கிறது. தர்மபாலரின் மூத்தபிள்ளை இவரல்லர் என்பதை இது சுட்டுகிறது போலும்!

தேவபாலரின் போர் வெற்றிகள்

தேவபாலரது காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்பேடுகள் மாங்கிர், நாளந்தா ஆகியவிடங்களில் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து தேவபாலருடைய போர்களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. தெற்கில் விந்தியமலை வரையிலும், மேற்கில் காம்போஜ நாடுவரையிலும் அவரது படை சென்றதாக மாங்கிர் செப்பேட்டில் கூறப்படுகிறது. காம்போஜம் என்பது ஆப்கானிஸ்தானத்தின் எல்லைப் பகுதியாகும். அதே கல்வெட்டில் இன்னொரு இடத்தில் வடக்கில் இமயமலையும் தெற்கில் குமரிமுனையும் அவரது எல்லைகளாக விளங்கின என்று கூறப்படுகிறது. இவையனைத்தும் வழக்கமான புனைந்துரைகள் என்பதில் ஐயமில்லை. நாராயணபாலரது பாகல்பூர் செப்பேடு கௌட அரசர் ஒரிசா, அசாம் ஆகியவற்றின் மீதும் படையெடுத்து வென்றார் என்று கூறுகிறது. இவை உண்மையாக இருக்கக்கூடும். ஹூணர்கள், திராவிடர்கள், கூர்ஜரர்கள்

ஆகியோரையும் இவர் வென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. ஹூணச் சிற்றரசர்கள் சிலர் வட இந்தியாவில் இமயமலையின் அடிவாரப் பகுதியில் சில அரசுகளை அமைத்து ஆண்டு வந்திருக்கக்கூடும். அவர்களுள் சிலரைத் தேவபாலர் தோற்கடித் தார் போலும்! இரண்டாம் நாகபட்டருக்குப் பின் கூர்ஜரப் பிரதிகார அரசர்களான ராமபத்திரர், போஜர் ஆகியோர் தேவ பாலரிடம் தோற்றிருக்கலாம். இவரால் தோற்கடிக்கப்பட்ட திராவிட அரசர் ராஷ்டிரகூட அமோக வர்ஷராகவோ அல்லது பாண்டிய அரசர் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபராகவோ இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் தாமும் கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மகதர் முதலியோரின் கூட்டணி ஒன்றைத் தோற்கடித்ததாகக் கூறுவதால் இது உண்மையாக இருக்கலாம் என்பது அவர்களது வாதம். ஆனால், இவற்றைப் பற்றி உறுதியாகத் தெரிந்து கொள்வதற்குப் போதுமான சான்றுகள் இல்லை.

தேவபாலரது வெற்றிகள்பற்றிய செய்திகளில் பல புனைந் துரைகள் என்றாலும், வட இந்தியாவில் அவர் ஒரு பேரரசராய் இருந்தார் என்பதில் ஐயமில்லை. ராஷ்டிரகூடர்கள் வட இந்தியாவின் மீது அவரது காலத்தில் படையெடுக்காததால் தேவபாலரின் ஆதிக்கத்துக்கு இடையூறு ஏற்படவில்லை. பிரதிகார அரசரான மகிரபோஜர் தேவபாலர் மீது போரிட்டுத் தோற்றிருக்கக்கூடும் என்பது ராஷ்டிரகூடர்களது செப்பேடு களால் தெரியவருகிறது. இவ்வாறு தேவபாலர் வட இந்தியாவில் தலையாய அரசராகச் சுமார் நாற்பது ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்.

ஹூணர்கள், உத்கலர்கள், திராவிடர்கள், கூர்ஜரர்கள் ஆகியோருடனான போரில் தேவபாலருக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் அவரது அமைச்சரான கேதார மிஸ்ரா என்பவரே என்பதை ஒரு கல்வெட்டின்மூலம் அறிகிறோம். அதேபோல், தர்பபாணி என்ற அமைச்சர் விந்தியமலை முதல் இமயம்வரையி லான பகுதிகளை வெல்வதில் தேவபாலருக்கு உதவினாராம். சோமேசுவரர் என்ற மற்றொரு அமைச்சரும் அவருக்கு இருந்தார். திபேத்திய அரசரான தாரநாதரும் தேவபாலர் பால அரசை விரிவுபடுத்தினார் என்று தெரிவிக்கிறார்.

சைலேந்திரருடன் நட்புறவு

தென்கிழக்காசியாவில் ஆட்சிபுரிந்து வந்த சைலேந்திரப் பேரரசர்கள் இப் பால அரசரோடு நல்லுறவு பூண்டிருந்தன ர்

சைலேந்திர அரசிலிருந்து பௌத்தர்கள் புத்த கயை, நாளந்தா முதலிய இடங்களுக்கு ஆண்டு தோறும் வந்தனர். இவர்களது வசதிக்கென நாளந்தாவில் மடாலயம் ஒன்றைக் கட்டுவதற்குச் சைலேந்திர அரசரான பாலபுத்திர தேவர் முடிவு செய்து, அதற்கு மானியமாகச் சில கிராமங்களை அளிக்குமாறு தேவபாலருக்குத் தூது அனுப்பினர். பீகாரில் ஐந்து கிராமங்கள் மானியமாக அளிக்கப்பட்டன. நாளந்தா செப்பேடு இத் தகவலைத் தெரிவிக்கிறது. வங்காளமும் பீகாரும் தேவபாலரது ஆட்சியில் இருந்தன என்பதை இவை தெளிவாக்குகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் நகரஹாரா என்ற ஊரைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவர் நாளந்தா மடாலயம் ஒன்றின் தலைவராகத் தேவபாலரால் நியமிக்கப்பட்டார் என்று ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. நகரஹாரா என்ற ஊர் இன்றைய ஜலாலாபாத்தாக இருக்கக் கூடும்.

மதிப்புரை

பாலவம்சத்து அரசர்களில் தர்மபாலரைக் காட்டிலும் சிறந்தவராகத் தேவபாலர் விளங்குகிறார். இவர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர். ஆயினும், அமைச்சர் தர்பபாணி போன்ற பிராமணர்களையும் சமய வேற்றுமை பாராட்டாமல் இவ்வரசர் போற்றினர். தேவபாலர் நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார் என்று தாரநாதரது 'இந்தியாவில் பௌத்தத்தின் வரலாறு' என்ற நூல் குறிப்பிடுகிறது. ஆனல், தேவபாலரது முப்பத்தொன்பதாவது ஆட்சியாண்டுக்குப் பிந்திய சாசனங்கள் கிடைக்கவில்லை. எனவே, முப்பத்தொன்பதாவது ஆட்சியாண்டுக்குப்பின்னர் ஓரிரு ஆண்டுகளில் தேவபாலர் காலமானர் என்று வைத்துக் கொள்ளலாம். இக் கணக்கின்படி பார்த்தால், கி.பி. 850 ஆம் ஆண்டு வாக்கில் தேவபாலரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

முதலாம் விக்கிரக பாலர்

தேவபாலரின் இருபத்து மூன்றும் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட மாங்கிர் செப்பேட்டில் அவரது மகனை ராஜ்யபாலர் யுவராஜாவாக இருந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. இதற்குப் பின் ராஜ்யபாலர் இறந்திருக்க வேண்டும். எனவே, தேவபாலரது மரணத்துக்குப் பின் தர்மபாலரது தம்பியான வாக்பாலரது பேரரான விக்கிரகபாலர் அடுத்த பால அரசரானர். பாதல்தூண் கல்வெட்டில் தேவபாலருக்குப் பின் சுர

பாலர் அரசரானார் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தச் சுரபாலர் விக்கிரகபாலராகவே இருக்க வேண்டும். காரணம், விக்கிரக பாலரது மகனான நாராயணபாலருடைய அமைச்சர் குரவ மிஸ்ராவால் இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதாகையால் தவறு நேர்ந்திருப்பதற்கு வழியில்லை. கீழ்வரும் வம்சாவளியைக் காண்க.[1]

- தயிதவிஷ்ணு
  - வப்யதர்
    - முதலாம் கோபாலர்
      - தர்மபாலர்
        - திரிபுவன பாலர்
        - தேவ பாலர்
          - ராஜ்ய பாலர்
      - வாக்பாலர்
        - ஜெயபாலர்
          - விக்கிரக பாலர் (சுரபாலர்)
            - நாராயண பாலர்
              - ராஜ்ய பாலர்

சுரபாலர் என்பது அவரது பிள்ளைப் பெயராகவும், விக்கிரக பாலர் என்பது அபிஷேகப் பெயராகவும் இருந்திருக்கக் கூடும். (விக்கிரக பாலர் தேவபாலரது மகனாகவும் இருக்கக்கூடும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[2]) விக்கிரக பாலரது ஆட்சியைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. நாராயணபாலரது பாகல்பூர் செப்பேடு விக்கிரக பாலர் தம் மகனான நாராயண பாலரிடம் அரசை ஒப்படைத்துவிட்டு, சந்நியாசம் பூண்டார் என்று கூறுகிறது. தேவபாலரின் அமைச்சரான கேதாரமிஸ்ரர் சுரபாலருக்கும் அமைச்சராய்த் தொடர்ந்து இருந்தார் என்பது பாதல்தூண் கல்வெட்டுமூலம் தெரிகிறது. மூன்று அல்லது நான்கு ஆண்டுகளே அரசராய் இருந்த பின் விக்கிரகபாலர் ஆட்சியைத் துறந்திருக்க வேண்டும்.

[1] Dr. H. C Ray, *Dynastic History of Northern India.*

[2] இதுபற்றிய பல்வேறு கருத்துகளும் R. C. மஜும்தார் தொகுத்துள்ள History of Bengal என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நாராயணபாலர்

விக்கிரகபாலரது மகனான நாராயணபாலர் கி.பி. 855ஆம் ஆண்டு வாக்கில் அரசராகி அரை நூற்றாண்டுக்கு மேல் ஆட்சிபுரிந்தார். அவரது கல்வெட்டுகளும் செப்பேடும் அவர் ஐம்பத்துநான்கு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்தார் என்பதைத் தெரிவிக்கின்றன. தர்மபாலரின், மற்றும் தேவபால ரின் போர் வெற்றிகளை விவரித்துக் கூறும் பாதல் (Badal) தூண் கல்வெட்டானது நாராயணபாலரது போர்களைப்பற்றிக் குறிப் பிடாதது கவனிக்கத் தக்கது. இவர் போர்த் திறமை இல்லாத, அமைதியிலும் சமயத்திலும் நாட்டமுடைய அரசராயிருந்தார். கி.பி. 866-67-ல் பொறிக்கப்பட்ட அமோகவர்ஷரது நில்குந்த் (Nilguld) கல்வெட்டும் சிரூர் (Sirur) கல்வெட்டும் அந்த ராஷ்டிர கூட மன்னர் அங்கம், வங்கம், மகதம் ஆகியவற்றின் அரசர்கள் தம்மை வணங்குமாறு செய்தார் என்று குறிப்பிடுகின்றன. ராஷ்டிரகூடரிடம் நாராயணபாலர் தோற்றதையே இவை தெரிவிக்கின்றன. மேலும், பிரதிகார அரசரான போஜர் கி.பி. 836ஆம் ஆண்டு வாக்கில் மகோதய புரத்தைக் (கனோஜ்) கைப்பற்றிப் பின்னர் மூன்று உலகங்களையும் வெல்லத் திட்ட மிட்டதாகத் தெரிகிறது. அவரும் அவரது மகனான மகேந்திர பாலரும் கங்கைச் சமவெளியில் கிழக்கு நோக்கித் தமது அரசை விரிவுபடுத்தினர். வங்காளத்தை அவர் தோற்கடித்ததாகப் பிரதிகாரரது கல்வெட்டு ஒன்று கூறுகிறது. மேலும், மகேந்திர பாலரது பல கல்வெட்டுகள் பீகாரில் கிடைக்கின்றன. மகேந்திர பாலர் பீகாரின் பல பகுதிகளை நாராயணபாலர் காலத்தில் வென்றார் என்பதை இவை தெளிவாக்குகின்றன. ராஷ்டிரகூடர் களும் பால அரசின்மீது இக்காலத்தில் தாக்குதல் தொடுத்து அல்லற்படுத்தினர். இதுதான் தருணம் என்று, அசாமை ஆண்டு வந்த ஹர்ஜரர் (Harjara) என்ற அரசர் பாலர்களின் மேலாதிக் கத்திலிருந்து விடுபட்டு அவரைத் தோற்கடிக்கவும் செய்தார். அதேபோல் ஒரிசாவில் சைலோத்பவர்களும் சுதந்திரம் பெற்ற னர். வடக்கு வங்காளமும் பிரதிகார அரசர் மகேந்திரபாலரால் சிறிது காலம் கைப்பற்றப்பட்டது. மகதமாகிய தெற்குப் பீகார், வடக்கு வங்காளத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மகேந்திர பாலரது கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

ஆயினும், விரைவிலேயே பிரதிகாரர்களின் ஆக்கிரமிப்பு கள் முடிவுக்கு வந்தன. ராஷ்டிரகூட அரசரான இரண்டாம் கிருஷ்ணர் பிரதிகாரர்களைத் தோற்கடித்தார். நாராயண பாலரையும் ராஷ்டிரகூடர்கள் தோற்கடித்தனராயினும், பின்னர்

ராஷ்டிரகூட அரசர் இரண்டாம் கிருஷ்ணரின் மகன் ஜகதுங்கரின் மகன் நாராயணபாலரின் மகனுன ராஜ்யபாலருக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்.[1] இதன் பின்னர், நாராயணபாலர் வடக்கு வங்காளம், மகதம் ஆகியவற்றை மீண்டும் பெற்றுர். ராஷ்டிரகூடர்களின் உதவியாலேயே இப் பகுதிகளைப் பாலர்கள் மறுபடியும் பெற்றனர் போலும்!

ஐம்பத்துநான்கு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்த பின் கி.பி. 910ஆம் ஆண்டு வாக்கில் நாராயணபாலர் மரணமடைந்தார்.

பால அரசின் சீர்குலைவு

ராஜ்ய பாலர்

நாராயணபாலருக்குப் பின் அவரது மகனுன ராஜ்யபாலர் அரசரானுர். இவரது இருபத்துநான்காம் ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒரே ஒரு கல்வெட்டுத்தான் பீகாரில் கிடைத்துள்ளது. பீகாரின் ஒரு பகுதி இவரது ஆட்சியில் தொடர்ந்து இருந்தது என்பதும், குறைந்தது இருபத்துநான்கு ஆண்டுகளாவது இவர் ஆட்சிபுரிந்தார் என்பதும் இதிலிருந்து புலனுகின்றன. இவ்வரசர் விசாலமான மண்டபங்களைக் கொண்ட பல ஆலயங்களையும் கடலைப்போல ஆழமான பல ஏரிகளையும் வெட்டினுர் என்று பிற்கால பால அரசரான முதலாம் மகிபாலரது பாங்கத் (Baugad) செப்பேடு தெரிவிக்கிறது. இதற்கு மேல் இவ் வரசரைப்பற்றி எதுவும் தெரியவில்லை. சுமார் கி.பி. 910 முதல் 935 வரையில் இவர் ஆட்சிபுரிந்திருக்கக் கூடும்.

இரண்டாம் கோபாலர்

ராஜ்யபாலரது மகனுன இரண்டாம் கோபாலருடைய கல்வெட்டுகள் புத்த கயை, நாளந்தா ஆகிய இடங்களில் காணப்பட்டன. அவரது காலத்தில் எழுதப்பட்ட பனை ஓலை நூல் ஒன்றில் (மைத்ரேய வியாகரணம் என்ற பழைய ஏட்டின் பிரதி அது) இவ்வரசரது ஐம்பத்தேழாவது ஆட்சியாண்டு குறிப்பிடப் படுகிறது. ஆனுல், இது பதினேழு, அல்லது பதினென்ருகவும் இருக்கலாம் என்று R. D. பானர்ஜீ, D. R. பந்தர்கார் ஆகியோர் கருதுகின்றனர். ஆனுல், இவ் வரசர் நீண்ட காலம் வாழ்ந்தார் என்று மகிபாலருடைய பாங்கத் செப்பேடு குறிப்பிடுவதால் இவர் ஐம்பத்தேழு ஆண்டுகள் ஆண்டிருக்கலாம். ராஜ்ய

[1] இக் கருத்தும், இதை மறுக்கும் உரைகளும் R. C. மஜூம்தார் தொகுத்துள்ள History of Bengal என்ற நூலில் விவரமாகத் தரப்படுகின்றன.

பாலரது கல்வெட்டுகள் கயை மாவட்டத்தில் கிடைக்கவில்லை. ஆனால், இவரது கல்வெட்டு அங்குக் கிடைக்கிறது. கூர்ஜரப் பிரதிகார அரசர் முதலாம் மகிபாலர் போன்றோர் ராஷ்டிரகூடர்களிடம் தோல்வியுற்றதைப் பயன்படுத்தி இரண்டாம் கோபாலர் கயை போன்ற பகுதிகளை மீட்டிருக்கக்கூடும். ஆனால், பிரதிகார அரசின் சீர்குலைவைப் பயன்படுத்தி, தமது அரசை வலுப்படுத்திக் கொள்ளும் ஆற்றலைப் பாலர்கள் இழந்து போயினர். சந்தெல்ல அரசர் யசோ வர்மனின் கஜுராஹோ சாசனம் கௌட அரசரை அவர் கி.பி. 953க்குச் சற்று முன்பு தோற்கடித்தார் என்பதைத் தெரிவிக்கிறது.

காம்போஜர் முதலியோர்

கோபாலருக்குப் பின் அவரது மகனான இரண்டாம் விக்கிரக பாலர் அரசரானார். கோபாலரது ஆட்சிக் காலத்திலோ அல்லது விக்கிரகபாலரின் ஆட்சியிலோ வங்காளத்தைக் காம்போஜர் போன்றோர் கவர்ந்து கொண்டனர். காம்போஜர்கள் யார் என்பதுபற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இவர்கள் மேற்கு, வடக்கு வங்காளத்தில் மகாராஜாதிராஜர், பரமேசுவரர், பரமபட்டாரகர் முதலிய பெரிய விருதுகளைப் பூண்டு ஆண்டனர். ராஜ்யபாலர், அவரது இரு பிள்ளைகளான நாராயணபாலர், நயபாலர் ஆகிய மூன்று காம்போஜ அரசர்களின் பெயர்கள் நமக்குத் தெரிகின்றன. பிரியங்கு (Priyangu) என்ற ஊர் அவர்களுடைய தலைநகரமாய் இருந்தது. இந்த ஊர் எது என்பதும் தெளிவாகவில்லை. இவ்வரசர்களது பெயர்கள் பாலமன்னர்களின் பெயர்களைப் போலவே இருப்பதால் பாலவம்சத்தோடு உறவு பூண்டவர்களாக இவர்கள் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். பாலர்களின் உயர் அதிகாரிகளில் சிலராக இவர்கள் இருக்கக்கூடும் என்றும், திபேத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடுமென்றும் அல்லது காம்போஜ தேசமாகிய இன்றைய கம்போடியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென்றும் பலப்பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு வங்காளத்தையும் பாலர்கள் இழந்தனர் என்பது சிட்டகாங்கில் கிடைத்த ஒரு செப்பேட்டின் மூலம் புலப்படுகிறது. ஹரிகேலாவை (Harikela) ஆண்ட மகாராஜாதிராஜ காந்தி தேவருடைய செப்பேடு அது. ஹரிகேலம் என்பது கிழக்கு வங்காளம். வர்த்தமானபுரம் என்பதே இவரது தலைநகராய் இருந்ததாம். காந்தி தேவருக்குப் பின் சந்திரர் என்ற பெயர் முடிவைக் கொண்ட சில அரசர்கள் கிழக்கு வங்காளத்தில் ஆட்சி புரிந்தனர். லயகசந்திரர், திரைலோக்கிய

சந்திரர், ஸ்ரீசந்திரர் ஆகிய அரசர்கள்பற்றி நமக்குத் தெரிகிறது. இவர்கள் பின்னர்த் தெற்கு வங்காளத்தையும் கைப்பற்றியாண்டனர். காம்போஜர்களும் சந்திரர்களும் சுமார் அரை நூற்றுண்டுக்கு மேல் ஆட்சி புரிந்திருத்தல் வேண்டும். ஸ்ரீசந்திரர் மட்டுமே நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. கி.பி. பத்தாம் நூற்ருண்டின் முடிவு வரையில் இவரது ஆட்சி நடைபெற்றது போலும்!

முதலாம் மகிபாலர்

இரண்டாம் விக்கிரகபாலரின் மகனே முதலாம் மகிபாலர். இவரது கல்வெட்டுகள் பல நமக்குக் கிடைத்துள்ளன. கி.பி. 990ஆம் ஆண்டுவாக்கில் இவர் அரசரானுர். ஆரம்பத்தில் தமது தந்தையைப் போல் தென் பீகாரில் மட்டுமே இவரது ஆட்சி நடைபெற்றது. ஆனுல், தாம் ஆட்சிக்கு வந்த முதல் மூன்ருண்டுகளிலேயே வடக்கு, கிழக்கு வங்காளத்தை இவர் பகைவர்களிடமிருந்து கைப்பற்றினுர். இவரது பாங்கத் செப்பேடு தெள்ளத் தெளிவாக இதைக் குறிப்பிடுகிறது. எனவே, பால அரசை இரண்டாம் முறை நிறுவியவர் என்று மகிபாலரை அழைப்பது பொருத்தமாகும். இவ்வாறு பாலஅரசை மீண்டும் இவர் நிறுவிய பின், கர்நாடக அரசர்களான கல்யாணி சாளுக்கியரின் படையெடுப்பு நிகழ்ந்தது போலும்! இப் படையெடுப்பை மகிபாலர் தோற்கடித்து வெற்றி பெற்றதாகப் பிற்காலத்திய நூற் சான்றுகள் தெரிவிக்கின்றன. மேலும், பீகாரின் வடபகுதி காங்கேயதேவர் என்பாரது ஆட்சியில் சிறிது காலம் இருந்தது. இவர் மகாராஜாதிராஜர், கௌடத்துவஜர் போன்ற பட்டங்களைப் பூண்டு தீரபுக்தியில் (இன்றைய திர்ஹுத்) கி.பி. 1019-ல் ஆட்சி புரிந்து வந்தார். இந்தக் காங்கேயதேவர் கலச்சூரி லக்ஷ்மிகர்ணருடைய தந்தை காங்கேய தேவராகவோ அல்லது கலச்சூரி கிளைவம்சம் ஒன்றைச் சேர்ந்த ஓர் அரசராகவோ இருக்கலாம் என்று கருதப்படுகிருர். கி.பி. 1026ஆம் ஆண்டைச் சேர்ந்த மகிபாலரது கல்வெட்டொன்று சாரநாத்தில் உள்ளது. எனவே, அந்த ஆண்டுக்குள் வடக்கு பீகாராகிய திர்ஹுத்தையும் வாராணசி வரையிலுள்ள பிரதேசத்தையும் மகிபாலர் கைப்பற்றி இருக்க வேண்டும். மகிபாலரது அரசு கிழக்கு வங்காளத்திலிருந்து வாராணசி வரையிலும் பரந்திருந்தது.

சோழர் படையெடுப்பு

இவரது காலத்தில்தான் சோழப் பேரரசராகிய முதலாம் ராஜேந்திர சோழர் வங்க நாட்டின்மீது படையெடுத்து வந்தார்.

இப் படையெடுப்புக் கி.பி. 1021ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்றிருத்தல் வேண்டும். வேங்கி நாடு, மத்தியப் பிரதேசத்தில் உள்ள சித்திரகோட்டம் ஆகியவற்றைக் கைப்பற்றிய பின், ஒட்டர தேசத்தையும் தென் கோசல நாட்டையும் சோழப் படைகள் வென்றன. அதன் பின்னர், தர்மபாலர் என்பவரால் ஆளப்பட்ட தண்டபுக்தி, ரணசூரரால் ஆளப்பட்ட தக்கணலாடம், கோவிந்தசந்திரரால் ஆளப்பட்ட வங்காளம், மகிபாலரால் ஆளப்பட்ட உத்தரலாடம் ஆகியவற்றைச் சோழப் படை வென்றதாக ராஜேந்திர சோழருடைய மெய்க்கீர்த்தி கூறுகிறது. தண்டபுக்தி என்பது இன்றைய மித்னபூர் மாவட்டம். இது ஒரிசாவை அடுத்து இருந்த வங்காளத்தின் பகுதியாகும். ஒட்டரதேசமும் தென் கோசலமும் கைப்பற்றப்பட்ட பிறகு தண்டபுக்தி கைப்பற்றப்பட்டது. அடுத்து வெல்லப்பட்ட தக்கணலாடம் என்பது ஹூக்ளி, ஹௌரா மாவட்டங்களாகும். அடுத்து, முர்ஷிதாபாத் பீர்பூம் ஆகிய மாவட்டங்களைக் கொண்ட உத்தரலாடமும் கைப்பற்றப்பட்டது. வங்காளம் என்பது இன்றைய வங்காளத்தின் தென்பகுதி, கிழக்குப் பகுதி ஆகியவற்றின் சில பகுதிகளைக் கொண்டதாகும். இங்கு ஆண்டதாகச் சொல்லப்படும் கோவிந்தசந்திரரின் இரண்டு கல்வெட்டுகள் அப் பகுதிகளில் கிடைத்துள்ளன. இந்தச் சான்றுகளின்படி பார்த்தால், தண்டபுக்தி, தக்கணலாடம், வங்காளம் ஆகிய பகுதிகள் மகிபாலரது ஆட்சியில் சேர்ந்திருக்கவில்லை என்று நாம் கருதலாம். உத்தரலாடமாகிய பகுதி மட்டுமே மகிபாலரது ஆட்சியில் இருந்ததாக அது குறிப்பிடுகிறது. இப் படையெடுப்பினால் வங்காளத்தில் பெரிய அரசியல் மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிட வில்லை. சோழப் படைகள் வங்க அரசுகளின் ஊடே விரைந்து முன்னேறிப் பின்னர் விரைவிலேயே நாடு திரும்பின. வங்காளத்தின் பல பகுதிகளையும் ஆண்டதாக இம் மெய்க்கீர்த்தியில் சொல்லப்படும் அரசர்கள் மகிபாலரது மேலாதிக்கத்தை ஏற்று அவரது குறுநில மன்னர்களாக அப் பகுதிகளை ஆட்சி புரிந்தனர் போலும்! (தமிழ்க் கல்வெட்டில் லாடம் என்று வரும் சொல் ராதம்—Radha—என்ற வங்காள சொல்லின் திரிபே.)

இவ்வரசரும் பௌத்தரே. சாரநாத், நாளந்தா ஆகிய இடங்களிலிருந்த பௌத்த ஆலயங்களையும் மடங்களையும் இவர் செப்பனிட்டார். அதே சமயம் காசியிலிருந்த இந்து ஆலயங்கள் பலவும்கூட இவரால் செப்பனிடப்பட்டன. பீகாரில் இவர் பல ஏரிகளையும் நகரங்களையும் நிறுவியதாகச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இவர் ஐம்பத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகத்

தாரநாதர் தெரிவிக்கிறுர். இது உண்மை என்றே தெரிகிறது. பீகாரில் முசபர்பூர் மாவட்டத்தில் இமத்பூர் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட இரு வெண்கலச் சிலைகளின் அடியில் மகிபாலரது நாற்பத்தெட்டாவது ஆண்டு குறிப்பிடப்படுகிறது. எனவே, இவ்வரசர் சுமார் கி.பி. 990 முதல் கி.பி. 1040 வரையில் ஆட்சி புரிந்திருக்கக்கூடும். இவர் பிற்காலப் பால அரசர்களில் மிகவும் முக்கியமானவர் என்பதில் ஐயமில்லை.

நயபாலர்

முதலாம் மகிபாலரது மகனுன நயபாலர் அடுத்து அரியணை ஏறினுர். இவரது பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு கயையில் கிடைத்துள்ளன. இவர் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சி புரிந்தார் என்பது இவற்றிலிருந்து தெரிகிறது.

இவரது ஆட்சிக்கால நிகழ்ச்சிகள்பற்றி அக் கல்வெட்டுகள் எதையும் தெரிவிக்கவில்லை. ஆனுல், கலச்சூரிகளின் கல்வெட்டுகள் கலச்சூரி அரசரான லக்ஷ்மிகர்ணருக்கும் கௌட அரசருக்கும் இடையே போர் நிகழ்ந்ததென்பதைப் புலப்படுத்துகின்றன. இக் கௌட அரசர் நயபாலராகவே இருத்தல் வேண்டும். திபேத்திய நூல்கள் இப் போர்பற்றி மேலும் விளக்கங்களைத் தருகின்றன. லக்ஷ்மிகர்ணர் கிழக்கில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மகதத்தின்மீது படையெடுத்தார் என்றும், அவர் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்ளையிட்ட பின் நயபாலர் படையுடன் சென்று அவரைத் தோற்கடித்தார் என்றும் அவை கூறுகின்றன. அச்சமயத்தில் தீபங்கர ஸ்ரீஞானர் என்றும் அதீசர் (Atisa) என்றும் அழைக்கப்பட்ட விக்கிரமசீல மடாலயத்தின் தலைவர் நயபாலரின் சார்பில் கர்ணரிடம் தூது சென்றுர். பலமுறை அவர் இரு அரசர்களுக்குமிடையில் தூது சென்று பேச்சு வார்த்தை நடத்திய பின், சமாதான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று. இரு தரப்பினரும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளைத் திருப்பித் தந்தனர். பின்னர், தீபங்கர ஸ்ரீஞான அதீசர் திபேத்திய அரச குமாரர் ஒருவரின் அழைப்புக்கு இணங்கத் திபேத்துக்குச் சென்று அங்கேயே பதினுன்கு ஆண்டுகள் வாழ்ந்த பின் தமது எழுபத்துமூன்ருவது வயதில் காலமானதாகத் திபேத்திய நூல்கள் தெரிவிக்கின்றன

தெற்குக் கோசலத்தில் ஆட்சிபுரிந்து வந்த சோமவம்ச அரசரான மகாசிவகுப்த யயாதி என்பவர் கௌடத்தையும்

ராதத்தையும் தாக்கியதாகத் தெரிகிறது. இத் தாக்குதல் நய பாலரின் காலத்தில் நடந்திருக்கலாம். நயபாலர் பதினைந்து ஆண்டுகட்குக் குறையாமல் ஆட்சிபுரிந்த பின், கி.பி. 1055 ஆம் ஆண்டுவாக்கில் காலமானார். மேற்கே கயை வரையில் அவரது அரசு விரிந்திருந்தது.

மூன்றாவது விக்கிரக பாலர்

நயபாலருக்குப் பின் அரசரானவர் அவரது மகனான மூன்றாம் விக்கிரகபாலர். இவரது கல்வெட்டுகள் கயை, பீகார் நகரம் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. கலச்சூரி அரசர் லக்ஷ்மி கர்ணர் இவ்வரசர் காலத்திலும் பால அரசின்மீது படையெடுத்தார். இப் போரில் விக்கிரகபாலர் கர்ணரைத் தோற்கடித்தார் என்றும், இதன் விளைவாகக் கர்ணரின் மகள் யௌவனஸ்ரீயை அவர் மணந்து கொண்டார் என்றும் ராமசரிதம் என்ற நூலின் உரை கூறுகிறது. இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் மேலைச் சாளுக்கிய அரசர் முதலாம் சோமேசுவரரின் படைகள் அவரது மகனான ஆறும் விக்கிரமாதித்தியரின் தலைமையில் கௌட அரசரையும் காமரூப அரசரையும் தோற்கடித்தன என்று பில்ஹணரது விக்கிரமாங்கதேவ சரிதம் குறிப்பிடுகிறது. இந் நிகழ்ச்சி உண்மையே என்பதில் ஐயமில்லை. இவரது அரசும் மேற்கில் கயை வரை விரிந்திருந்தது.

விக்கிரகபாலர் பதின்மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் இரண்டாம் மகிபாலர், இரண்டாம் சுரபாலர், ராம பாலர் ஆகியோர். விக்கிரகபாலர் வங்காளத்தையும் மகதத்தையும் ஆட்சிபுரிந்தார்.

இரண்டாம் மகிபாலர்

மகிபாலரது ஆட்சியைப்பற்றியும் வங்காளத்தில் நிலவிய குழப்பம்பற்றியும் தெரிவிக்கும் ஒரே சான்று சந்தியகரநந்தி என்பவரின் ராமசரிதம் என்ற நூலாம். இது தவிர, கல்வெட்டுப் போன்ற எந்த ஆதாரமும் நமக்குக் கிடைக்கவில்லை. மகிபாலரது ஆட்சியில் பல மண்டலத் தலைவர்கள் வலிமையும் சுதந்திரமும் பெற்று மத்திய அரசுக்கு எதிராகச் செயல்படலாயினர். நயபாலரின் காலத்தில் லக்ஷ்மி கர்ணருக்கெதிரான போரில் உதவியதற்காக, சூத்ரகர் என்ற பிராமணர் கயாமண்டலத்தில் மண்டலாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவரது மகனான விசுவாதித்தியர் இரண்டாம் மகிபாலரின் காலத்தில் முழு உரிமை மன்னர்

போலவே ஆளலானர். இவ்வாறு மற்றப் பகுதிகளிலும் வேறு மண்டலாதிபதிகள் சுதந்திரமாக ஆளத் துவங்கினர்.

இரண்டாம் மகிபாலர் தம் தம்பிகளான சூரபாலர், ராம பாலர் ஆகியோரை ஏதோ காரணங்களினல் சிறையில் அடைத் தார். இதுதான் தக்க சமயம் என்று கைவர்த்த (Kaivarta) குலத்தைச் சேர்ந்த திவ்வகர் அல்லது திவ்யர் (Divya) என்ற ஓர் அதிகாரி அரசருக்கெதிராகக் கிளர்ச்சி செய்து வடக்கு வங்காள மாகிய வரேந்திரியைக் கைப்பற்றிக் கொண்டார். அவருக்கெதி ராகப் படையெடுத்துச் சென்ற அரசர் மகிபாலர் போரில் தோற்றுக் கொல்லப்பட்டார். கி.பி. 1070 முதல் 1077 வரை யில் இரண்டாம் மகிபாலர் ஆட்சிபுரிந்திருக்கக்கூடும். தமது இறுதிக் காலத்தில் கிட்டத்தட்ட வங்காளம் முழுவதையும் இம் மன்னர் இழந்து பீகாரின் வடபகுதி, மத்திய பகுதி ஆகிய வற்றையே ஆண்டார் என்று தெரிகிறது.

ராமபாலர்

சூரபாலர்

இரண்டாம் மகிபாலர் கொல்லப்படவே, சூரபாலரும் ராம பாலரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ராமசரிதம் மகி பாலருக்குப் பின் ராமபாலரையே அரசர் என்று குறிப்பிடுகிறது. ஆயினும், ராமபாலரது மகனை மதனபாலரது மனஹலி (Manahali) செப்பேடு சூரபாலர் அரசரானர் என்பதைத் தெளி வாகக் குறிப்பிடுகிறது. இவர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டு களே ஆட்சிபுரிந்திருக்கக் கூடும். இவர் தமது தம்பியான ராம பாலரால் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அதனல்தான் ராம சரிதத்தில் அவரது ஆட்சிபற்றிக் குறிப்பிடப் படவில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ராமபாலர்

இவ்வாறு சூரபாலருக்குப் பின்னர் அரியணை ஏறிய ராம பாலர் திறமை மிக்க அரசராவார். அவரது தாயார் ராஷ்டிரகூட வம்சத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. இந்த ராஷ்டிர கூடர்கள் வட இந்தியாவில் எங்கோ ஆதிக்கம் செலுத்திய சிற்றரசர்களாக இருந்திருத்தல் வேண்டும். தாய்மாமனை ராஷ்டிரகூட மதனதேவர் என்பவர் ராமபாலருக்குப் பெரிதும் உதவியாயிருந்தார். இவர் இன்றைய பாகல்பூர் (Bhagalpur) மாவட்டமாகிய அங்க நாட்டை ஆண்டார். காகதவால கோவிந்த சந்திரரின் ராணியான குமாரதேவியின் சாரநாத்

கல்வெட்டு இவர் ராமபாலருக்குப் பேருதவி புரிந்தார் என்பதைக் குறிப்பிடுகிறது.

ராமபாலர் பதவிக்கு வந்த காலத்தில் வடக்கு வங்காளமாகிய வரேந்திரி திவ்யரின் ஆட்சியின்கீழ் மிகவும் செழிப்பாக இருந்ததென்று ராமசரிதம் தெரிவிக்கிறது. திவ்யருக்குப் பின் அவரது தம்பி ருதோகர் (Rudoka), பின்னர் ருதோகரது மகன் பீமர் ஆகியோர் வரேந்திரிமீது ஆட்சிபுரிந்தனர். ஜாடவர்மன் என்ற யாதவகுல அரசன் கிழக்கு வங்காளத்தை ஆண்டு வந்தான். இவ் வரசன் திவ்யரைத் தான் போரில் தோற்கடித்ததாக ஒரு கல்வெட்டில் கூறுகிறான். பீமரது ஆட்சியில் வரேந்திரியை லக்ஷ்மதேவர் என்ற பரமார அரசர் தாக்கினார். அதே சமயம் ராமபாலரும் மதனதேவரும் வரேந்திரியைத் தாக்கினர். தங்களது படை போதாது என்பதை உணர்ந்த இவ்விருவரும் ஏனைப் பதினான்கு சிற்றரசர்களின் உதவியை நாடிப் பெரும் படையொன்றைத் திரட்டினர். மகதம், தண்டபுக்தி, கஜங்கலம் போன்ற பதினான்கு அரசுகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் பல வங்காளத்தில் அல்லது பீகாரில் எங்கிருந்தன என்பது புலப்படவில்லை. இப் பெரும் படையானது கங்கையைக் கடந்து வரேந்திரிக்குள் புகுந்தது. ராமபாலர் பெருவெற்றி பெற்றார். பீமரும் அவரது உறவினர்களும் போரில் கொல்லப்பட்டனர். இந் நிகழ்ச்சிகளை எல்லாம் சந்தியாகரநந்தியின் நூல் மிக விவரமாகக் குறிப்பிடுகிறது. இப் போரில் மதனதேவரும் அவருடைய பிள்ளைகளும் பெரும் பங்காற்றினர்.

இந்த வெற்றிக்குப் பின்னர் வங்கத்தின் பெரும் பகுதி ராமபாலருக்குக் கிடைத்தது. இந்த வெற்றியைக் கொண்டாடும் முறையில் ராமபாலர் ராமாவதி என்ற நகரை நிறுவினார். இது ராமபாலரது தலைநகராக இருந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இந்த ராமாவதியே ராமவ்ட்டி (Ramauti) என்று அபுல் பசலின் அயினி அக்பரி நூலில் குறிப்பிடப்படும் ஊராக இருக்கக் கூடும்.

மற்ற வெற்றிகள்

இதற்குப் பின்னர், அண்டையிலிருந்த மற்ற அரசுகளின் மீதும் ராமபாலர் படையெடுத்தார். வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் ஆட்சிபுரிந்து வந்த வர்மன் என்ற அரசனை இவர் தமக்குக் கீழ்ப்படியச் செய்தார். இந்த அரசன் கிழக்கு வங்காளத்தையாண்ட யாதவ குலத்தைச் சேர்ந்த ஹரிவர்மனாக இருக்கக் கூடுமென்று ஊகிக்கப்படுகிறது. இதன் பின்னர்,

உத்கலம், கலிங்கம், காமரூபம் ஆகியவற்றையும் ராமபாலர் வென்றுர் என்று ராமசரிதம் எழுதுகிறது. உத்கலத்தில் இரு அரச குமாரர்களுக்கிடையில் அரசுரிமைக்குப் போட்டி நடைபெற்றது என்பதும், அதில் தலையிட்டு அவ்விருவரில் ஒருவனை ராமபாலர் அரசனுக்கி இருக்கக் கூடுமென்பதும் தெரிகின்றன. ஆனுல், விரைவிலேயே அனந்தவர்மன் சோடகங்கன் என்ற கங்க அரசர் இந்த உத்கல அரசனை விரட்டிவிட்டுத் தமக்குப் பிடித்த மற்ருெருவனை அரசனுக்கினுர். இந் நிகழ்ச்சிகளெல்லாம் கி.பி. 1110ஆம் ஆண்டு வாக்கில் நிகழ்ந்திருக்கக்கூடும். கலிங்கத்தையும் காமரூபத்தையும் இவர்வென்றதுபற்றி வேறெந்தச் சான்றும் தெரிவிக்கவில்லை. ராமபாலர் கனேஜை ஆண்டுவந்த காகதவால அரசர் கோவிந்த சந்திரருக்கு எதிராகவும் படைகளை அனுப்பினுர். ஆனுல், அவை தோற்கடித்து விரட்டப்பட்டன என்று காகதவால சாசனங்கள் தெரிவிக்கின்றன.

இவ் வரசரின் அமைச்சர்களுள் ஒருவரான பிரஜாபதி நந்தி என்பாரின் மகனுன சந்தியாகா நந்தியே ராமசரிதம் என்ற காவியத்தை இயற்றினுர். ராமாயணக் கதையைக் கூறுவதைப் போல் ராமபாலரின் வரலாற்றை இது எழுதுகிறது. ராமபாலர் எவ்வளவு துணிச்சலோடும் திறமையோடும் பால ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்தினுர் என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது. இவ் வரசர் பால மன்னர்களில் மிகச் சிறந்த ஒருவர் என்பதில் ஐயமில்லை. இவரது இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று ராமபாலரின் நாற்பத்திரண்டாவது ஆட்சி யாண்டைக் குறிக்கிறது. அதே சமயம் நாற்பத்தாறு ஆண்டுகள் இம் மன்னர் ஆட்சி புரிந்தார் என்று தாரநாதர் தெரிவிக்கிருர். எனவே, நாற்பத்திரண்டு ஆண்டுக்குக் குறையாமல் இவ்வரசர் ஆட்சி புரிந்தார் என்று நாம் வைத்துக் கொள்ளலாம்.

தம் தாய்மாமன் மதனதேவர் இறந்ததைக் கேட்டுத் துயரம் தாங்காத ராமபாலர் மாங்கிருக்கருகில் கங்கையில் மூழ்கி உயிர்விட்டார் என்று ராமசரிதம் தெரிவிக்கிறது. இதன் உண்மையை நம்மால் உணர இயலவில்லை. அவர் மரணத்துக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே முதுமை காரணமாக ஆட்சிப் பொறுப்பைத் தம் மகன் ராஜ்யபாலரிடம் ஒப்படைத்து விட்டார் என்றும் ராமசரிதம் கூறுகிறது. ஆனுல், தாரநாதரோ ராமபாலரின் மரணத்துக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் யக்ஷபாலர் என்ற அவர் மகன் அரசராகி, ஒரே ஆண்டில் காலமானுர் என்று கூறுகிருர். இவைபற்றிய உண்மைகள் தெளிவாகப் புலப்படவில்லை. மதனபாலரது மனஹலி சாசனம் ராமபாலருக்குப் பின் அவரது மகன் குமாரபாலர் அரியணை ஏறினுர்

என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ராமபாலரின் இறுதிக் காலத்தில் அவரது மூத்த பிள்ளைகளில் ஒருவரோ இருவரோ இறந்துவிட்டனர் போலும்! ராமபாலர் கி.பி. 1120ஆம் ஆண்டு வாக்கில் காலமாகி யிருத்தல் வேண்டும்.

குமாரபாலர்

குமாரபாலர் அரசரானபோது வங்காளத்தின் பெரும் பகுதியும், மகதமும், காமரூபமும் அவரது அரசில் அடங்கியிருந்தன. ஆனால், இவர் வலிமையற்ற அரசராய் இருந்ததால், சிற்றரசர்கள் வலிமை பெற்றுச் சுதந்திர அரசர்களாகத் துவங்கினர். இவ் வரசரது அமைச்சரான வைத்தியதேவர் என்பவரது கமௌலி செப்பேடு இதை நன்கு புலப்படுத்துகிறது. மகதத்தைச் சேர்ந்த சில சிற்றரசர்கள் குமாரபாலரின் மேலாதிக்கத்தை உதறி எறிந்தனர். முன்பு நாம் பார்த்த விசுவாதித்தியரின் மகன் யக்ஷபாலர் கயாமண்டலத்தில் சுதந்திர அரசரானார். அதேபோல், வர்ணமானர் என்பவர் மகதத்தில் அரசரானார். மகதத்தின் மேற்குப் பகுதியைக் காகதவால கோவிந்த சந்திரர் கைப்பற்றிக் கொண்டார். மிதிலை அரசர் நான்யதேவர், கலச்சூரி அரசர் இரண்டாம் ரத்னதேவர், கங்க அரசரான அனந்தவர்மன் சோடகங்கர் ஆகியோர் இப் பால அரசரைத் தத்தம் பகுதிகளில் தோற்கடித்தனர். தென்மேற்கிலிருந்து சோடகங்கர் படையெடுத்து வந்தபோது காமரூபத்தில் திங்கிய தேவர் (Tingya Deva) என்பவர் கிளர்ச்சி செய்தார். அவரை அடக்குவதற்குக் குமாரபாலர் காமரூபம் சென்றார். இதைப் பயன்படுத்தி ஹூக்ளி வரையிலான பகுதிகளைச் சோடகங்கர் கைப்பற்றிக் கொண்டார். சேன வம்சத்து விஜயசேனர் சோழகங்கருக்குப் பெரிதும் உதவிபுரிந்ததால், ராதத்தில் சேன அரசு உருவாயிற்று. காமரூபத்தில் திங்கிய தேவரின் கிளர்ச்சியை அடக்கிய பின், அங்கு அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட வைத்திய தேவர் விரைவிலேயே அப் பகுதியில் சுதந்திர அரசரானார். இந்த வைத்திய தேவரது கமௌலி கல்வெட்டில் குமாரபாலரது நான்காம் ஆட்சியாண்டு குறிக்கப்படுகிறது. எனவே, இவர் சுமார் ஐந்து ஆண்டுகளே (கி.பி. 1120-25) ஆட்சி புரிந்தார் என்று அறிஞர்கள் கொள்கின்றனர்.

மதனபாலர்

மூன்றும் கோபாலர்

குமாரபாலர் இறந்த பின், அவரது மகனான மூன்றும் கோபாலரே அடுத்த அரசரானார். இவ் வரசர் தம் தந்தையைப்

போலவே வலிமையற்று, பகைவர்களை அடக்க முடியாதவரா யிருந்தார். இவரது ஆட்சி நிகழ்ச்சிகள்பற்றி ஒன்றும் தெரிய வில்லை. இவர் சுமார் பதினான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தாலும் இவரைப்பற்றி அறிவதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. தம் சிற்றப்பாவான மதனபாலரால் இவர் கொலையுண்டிருக்கக் கூடுமென்றும் சில சான்றுகளின்மூலம் தெரிய வருகின்றது.

மதனபாலர்

இவர் ராமபாலரின் கடைசி மகன். மூன்றும் கோபாலருக்குக் குழந்தை இல்லாததாலோ அல்லது வேறு காரணத்தினாலோ இவரே அடுத்த பால அரசரானார். இவர் பத்தொன்பது ஆண்டு களுக்குக் குறையாமல் ஆட்சி புரிந்தார் என்பது இவரது கல்வெட்டுகளால் தெரியவருகிறது. இவரது மனஹலி (Manahali) செப்பேடு முதலாம் கோபாலர் முதல் இவ்வரசர் வரையிலான பால அரசர்களின் வம்சாவளியைக் குறிப்பிடுகிறது. இவர் துவக்கத்தில் பீகாரின் ஒரு பகுதி, வடக்கு வங்காளம் ஆகிய வற்றை ஆண்டார் என்பது இவரது சாசனங்களின் மூலம் தெரிய வருகிறது. காகதவால கோவிந்தசந்திரருக்கும் மதனபாலருக்கு மிடையே போர்கள் நிகழ்ந்தன. காகதவால அரசர் மாங்கிர் வரையிலான பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால், அடுத்த சில ஆண்டுகளில் அவற்றை மதனபாலர் மீட்டார். கலிங்கத்தை ஆண்ட கங்கர்கள் போன்ற பலருடனும் இவர் போரிட வேண்டி இருந்தது. கிழக்கு வங்கத்தில் ஆட்சி புரிந்து வந்த சேனர்கள் இவர்மீது தொடர்ந்து போரிட்டு, இவரது எட்டாவது ஆட்சியாண்டில் வரேந்திரியைக் கைப்பற்றிக் கொண்டனர். இதன் பின்னர், மதனபாலர் தம் உறவினர்கள் ஆட்சி புரிந்த அங்க நாட்டுக்கு ஓடவேண்டியதாயிற்று. பீகாரில் மாங்கிர் பகுதியில் தமது பத்தொன்பதாம் ஆட்சியாண்டுவரை மதனபாலர் தொடர்ந்து ஆண்டு வந்தார். வங்காளம் முழு வதையும் பாலர்கள் இழந்து போயினர். பால வம்சத்துக் கடைசி அரசர் மதனபாலரே. இவர் கி.பி. 1160ஆம் ஆண்டு வரையில் ஆண்டிருக்கக் கூடும். இவருக்குப் பின் பாலவம்சம் எவ்வாறு முடிவுற்றது என்பது தெரியவேயில்லை.

கோவிந்தபாலர், பலபாலர்

கயையில் கி.பி. 1162ஆம் ஆண்டைக் குறிக்கும் கல்வெட் டொன்று கோவிந்தபாலர் என்ற அரசரின் பதினான்காம் ஆட்சி யாண்டைக் குறிக்கிறது. பெயரைப் பார்த்தால், இவர் பால வம்சத்தோடு தொடர்பு பூண்டவர் என்று கொள்ள முடிகிறது.

இவர் கி.பி. 1148ஆம் ஆண்டில் அரசராகி இருக்கலாம். மதன பாலருக்கும் இவருக்குமிடையே என்ன உறவோ தெரியவில்லை.

அதேபோல மாங்கிர் மாவட்டத்தில் (பீகார்) ஜெயநகர் என்னும் ஊரில் ஒரு சிலையின் கீழ்ப்புறம் கௌடேசுவர பலபாலர் என்பவரின் முப்பத்தைந்தாவது ஆட்சியாண்டு பொறிக்கப் பட்டுள்ளது. இந்தக் கௌட அரசர் பலபாலர் எவர் என்பதும் தெளிவாகப் புலப்படவில்லை. (மதனபாலரின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டைக் குறிக்கும் மற்றொரு சிலையும் இதே ஊரிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.)

பாலர்பற்றிய மதிப்பீடு

சுமார் நான்கு நூற்றுண்டு காலம்வரை பால அரசர்கள் வங்காளத்தையும் பீகாரையும் ஆண்டுவந்தனர். ஹர்ஷருக்குப் பிந்திய வட இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியமான அரச வம்சங்களுள் பால வம்சமும் ஒன்று. தர்மபாலர், தேவபாலர், முதலாம் மகிபாலர், ராமபாலர் போன்ற பல வலிமைமிக்க மன்னர்களை இந்த வம்சம் தோற்றுவித்தது. வங்காளத்தின் வரலாற்றில் பால அரசர்களுக்கு முதன்மையான ஒரு சிறப்பிடம் உண்டு என்பதில் ஐயமில்லை. காகதவாலர்கள், சேனர்கள் போன்றோரின் தாக்குதல் காரணமாகப் பன்னிரண்டாம் நூற்றுண்டின் பின்பாதியில் பால அரசு முடிவுக்கு வந்தது.

இவ்வரசர்கள் அனைவரும் பௌத்த சமயத்தைத் தழுவியவர் கள். புத்தகயை, சாரநாத், நாளந்தா, விக்கிரமசீலம் போன்ற இடங்களில் பௌத்த ஆலயங்களையும் மடங்களையும் இவ்வரசர் கள் நிறுவினர். இவர்களால் நிறுவப்பட்ட விக்கிரமசீல பௌத்த மடத்தில் தலைமைத் துறவியாயிருந்த தீபங்கரஸ்ரீஞான அதீசரைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவர் அரசர் நயபாலரது வேண்டுகோளுக்கிணங்கவே தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டாராம். தமது ஐம்பத்தொன்பதாவது வயதில் திபேத்துக்குச் சென்று பௌத்த நூல்களை ஆராய்ந்து தமது எழுபத்து மூன்றாவது வயதில் அவர் அங்கேயே காலமானார். பௌத்த சமயத்தை இவ்வரசர்கள் தழுவி இருந்த போதிலும், இந்து மதத்தைச் சேர்ந்த பிராமணர்களை இவர்கள் பெரிதும் மதித்தனர். பிராமணர்கள் பலர் இவர்களுக்கு அமைச்சர் களாகவும் இருந்து பணிபுரிந்தனர். பிராமணர்களுக்கு இவர்கள் அளித்த கொடைகள்பற்றிப் பல சாசனங்கள் புலப்படுத்து கின்றன. முதலாம் மகிபாலர் போன்ற அரசர்கள் காசி, மாங்கிர் போன்ற இடங்களில் இந்து ஆலயங்களுக்கும் நிவந்த மும் மானியமும் அளித்தனர். இந்து ஆலயங்களும் இவர்களால் கட்டப்பட்டன. ஆனால், பால அரசர்கள் காலத்திய ஆலயங்கள்

மடங்கள் எவையும் இன்று பார்ப்பதற்குக் கிடைக்கவில்லை. முஸ்லிம் படையெடுப்புக் காலத்தில் அவையனைத்தும் அழிந்து விட்டன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

விவசாயத்துக்கெனப் பல ஏரிகளும் வாய்க்கால்களும்கூட இம் மன்னரால் வெட்டப்பட்டன. அவர்கள் காலத்தில் செதுக்கப் பட்ட வெண்கலச் சிலைகளும் கற்சிலைகளும் நமக்குக் கிடைத் துள்ளன. தீமானர் (Dhimana), விடாபாலர் (Vitapala) ஆகிய இரண்டு சிறந்த சிற்பிகள் பாலர் காலத்தில் இருந்தனர் என்று வின்செண்ட் ஸ்மித் குறிப்பிடுகிறார்.

ஆயினும், சுமார் நானூறு ஆண்டுகாலம் ஆட்சிபுரிந்த இம் மன்னர்களது தலைநகரம் எது என்று இன்னமும் புலப்படவே யில்லை. முட்ககிரியாகிய மாங்கிரிலிருந்தே இவர்களது சாசனங் களில் பலவும் வெளியிடப்பட்டுள்ளமையால் அதுவே இவர்களது தலைநகராக இருந்திருக்கக்கூடும் என்பது ஒரு ஊகம். ஆனால், இறுதியான முடிவாக இதைக் கொள்ள முடியாது. தாரநாதர், ராமசரித ஆசிரியர் சந்தியாகர நந்தி போன்றோர் பாலர் வரலாற்றை விரிந்து விளக்கினர் என்றாலும் அவர்களின் தலைநகர் பற்றிக் குறிப்பிடாதது வேடிக்கையாயுள்ளது. ஓடந்தபுரி (உத்தண்டபுரி), விக்கிரமசீலம் ஆகிய விடங்களில் பால அரசர் கள் நிறுவியிருந்த பல்கலைக்கழகங்கள் வடஇந்தியா முழுவதிலும் புகழ் பெற்று விளங்கின.

பால வம்சாவளி (தொடர்ச்சி)

ராஜ்யபாலர்
|
இரண்டாம் கோபாலர்
|
இரண்டாம் விக்கிரகபாலர்
|
முதலாம் மகிபாலர்
|
நாராயண பாலர்
|
மூன்றாம் விக்கிரகபாலர்
|
இரண்டாம் மகிபாலர் | இரண்டாம் சூரபாலர் | ராமபாலர்

ராமபாலர்
|
ராஜ்யபாலர் | குமாரபாலர் | மதனபாலர்

குமாரபாலர்
|
மூன்றாம் கோபாலர்

3. சேனர்கள்

பூர்விகம்

வீரசேனர்

பதினும் நூற்றுண்டில் ஆனந்தபட்டர் என்பவரால் எழுதப்பட்ட பல்லாலசரிதம் என்ற நூல் சேனர்கள்மகாபாரத காலத்துக் கர்ணனது கொள்ளுப் பேரரான வீரசேனர் வழியில் வந்தனரெனக் கதை அளக்கிறது. வீரசேனர் கௌட பிராமணர் ஒருவரின் மகளான சோமதா என்ற பெண்ணை மணந்துகொண்டார் என்றும், இவர்களது வழியில் வந்த சேனர்கள் பிராமண-க்ஷத்திரியர்கள் என்றும் அந் நூல் கூறுகிறது. கர்ணன்பற்றிய கதையை நாம் நம்பாவிட்டாலும்கூட, வீரசேனர் என்ற சேன குலத் தலைவன் ஒருவன் சோமதா என்ற பிராமணப் பெண்ணை மணந்ததும், அவர்கள் வழியில் சேனவம்சம் தோன்றியதும் ஒருவேளை உண்மையாக இருக்கலாம். சான்ருகச் சேனர்களது சாசனங்கள் வீரசேனரைக் குறிப்பிடுகின்றன. அவ் வம்சத்தின் ஆட்சியை நிறுவியவரான சாமந்தசேனர் வீரசேனர் வழியில் வந்தவர் என்று அவை குறிப்பிடுகின்றன. சேன அரசர்கள் தங்களைப் பிரம்ம-க்ஷத்திரியர்கள் என்று உயர்வாகத் தமது கல்வெட்டுகளில் குறிப்பிட்டுக் கொள்வது ஒரு பிராமணப் பெண்ணின் வழியில் தாங்கள் வந்தவர்கள் என்பதால் இருக்கக் கூடும்.

கர்நாடகத் தொடர்பு

விஜயசேனரது தேவ்பரா (Deopara) கல்வெட்டு வீரசேனரும் வேறு சேன அரசர்களும் தெற்கத்திய அரசர்களாக இருந்தார்கள் என்றும், அவர்களது வழியிலேயே விஜயசேனர் வந்தாரென்றும் தெரிவிக்கிறது. சேனவம்சத்தைச் சேர்ந்த சாமந்தசேனர் என்ற குலசிரோமணியாகிய பிரம்ம-க்ஷத்திரியர்[1] 'கர்நாடகச் செல்வத்தை அபகரிக்க வந்த கொள்ளைக்காரர்களைக் கொன்ற மனிதர்' என்று குறிப்பிடப்படுகிருர். லக்ஷ்மணசேனரது மதைநகர்ப் (Madhainagar) பட்டயம் 'கர்நாட-க்ஷத்திரிய குலசிரோமணி' என்று சாமந்த சேனரை அழைக்கிறது. எனவே, கர்நாடக தேசத்திலிருந்து வந்து மேற்கு வங்காளத்தில் ராதத்தில் (Radha) குடியமர்ந்தவர்களே சேனர்

[1] பிரம்ம-க்ஷத்திரியர் என்ற சொல் கர்நாடகத்திலும் வழக்கிலிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கர்நாடக சமண ஆசாரியருள் ஒருவரான அஜிதசேனரது சீடரும், மேலைக்கங்க அரசர் இரண்டாம் மாற சிம்மரது அமைச்சருமான சாமுண்டராயர் (10 ஆம் நூற்றுண்டு) பிரம்ம-க்ஷத்திரியர் என்றே அழைக்கப்பட்டார்.

கள் என்று புலனுகிறது. கர்நாடகத்தில் தார்வார் மாவட்டத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் கி.பி. 900 முதல் 1054 வரையில் அப் பகுதியில் சேனர் என்ற பெயர் முடிவைக்கொண்ட ஜைன ஆசாரியர்கள் பலர் வாழ்ந்ததாகப் புலப்படுத்துகின்றன. இவர்களில் ஒருவரான கனகசேகர் சேனகுலத்தில் தோன்றியவர் (சேனுன்வய) என்று ராஷ்டிரகூட அரசர் இரண்டாம் கிருஷ்ணரின் சாசனம் ஒன்றில் குறிப்பிடப்படுகிருர். வங்காள சேனர்களும் 'சேனுன்வய' என்றே குறிப்பிடப்படுகின்றனர். எனவே, இவர்கள் வழியிலேயே வங்காளத்தை ஆண்ட சேனர்கள் தோன்றியிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. ஆனுல், இதைப்பற்றி உறுதி செய்வதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. சமணர்களின் கோட்டையாக இருந்த கர்நாடக நாட்டில் கி.பி. 11-12 ஆம் நூற்றுண்டுகளில் வீரசைவ லிங்காயத் பிரிவு தோன்றி, சமணர்கள் பலரைச் சைவராக்கியது. மேலைச் சாளுக்கிய அரசரான இரண்டாம் ஜெயசிம்மர் இவ்வாறுதான் கி.பி. 11 ஆம் நூற்றுண்டில் சமணத்தை விடுத்துச் சைவரானுர்.

மேலைச் சாளுக்கியரான ஆறும் விக்கிரமாதித்தியர் தாம் அரசராவதற்கு முன்னரும் அரசரானதற்குப் பின்னரும் வட இந்தியாவின் மீதும் வங்காளத்தின் மீதும் நிகழ்த்திய படையெடுப்பின் போது அவருடன் வந்த கர்நாடக வீரர்களும் குடும்பங்களும் அவர் வென்ற பகுதிகளில் குடியமர்ந்ததாகத் தெரிகிறது. கர்நாடக-க்ஷத்திரியர்கள் இவ்வாறே வங்காளத்திற்கு வந்தனர் போலும்! சாமந்தசேனரது முன்னேர்கள் இவ்வாறு ராதத்துக்கு வந்திருக்கக்கூடும்.

பிரம்ம-க்ஷத்திரியரான சாமந்தசேனர் தமது இறுதிக் காலத்தில் கங்கை நதியின் கரையில் ஓர் ஆசிரமத்தில் தமது வயோதிகத்தைக் கழித்ததாகத் தேவ்பராக் கல்வெட்டுக் கூறுகிறது. 'பிரம்மவாதி' என்று அவர் அழைக்கப்படுகிருர். ஆனுல், போகப் போகச் சேனர்களது சாசனங்களில் பிரம்ம-க்ஷத்திரியர்கள் என்ற சொல் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போகிறது. தங்களது பிராமண குலத் தொடர்பை மறந்து, க்ஷத்திரியர்கள் என்றே தங்களை அவர்கள் பிற்காலத்தில் அழைத்துக் கொண்டனர். இதற்குமேல் சேனர்களது பூர்விகத்தைப்பற்றி எதையும் உறுதியாகச் சொல்வதற்கில்லை.[1]

[1] R. C. Majumdar (Editor), *History of Bengal*. H. C. Ray, *The Dynastic History of Northern India.*

சாமந்தசேனர்

வங்காளத்துச் சேன அரசவம்சத்தில் நமக்குத் தெரியவரும் முதலாவது அரசர் சாமந்தசேனரே. விஜயசேனர், பல்லால சேனர், லக்ஷ்மணசேனர் ஆகியோரது சாசனங்கள் பிரம்ம-க்ஷத்திரியர், கர்நாடக-க்ஷத்திரியர், சந்திரகுலத்தில் ராஜபுத்திர வழியில்வந்த ராதநாட்டு அரசர் என்றெல்லாம் இவரைப்பற்றி வருணிக்கின்றன. இங்கு ராஜபுத்திரர் என்ற சொல் அரச குலத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிக்கிறது. இவர் ராதத்தில் (மேற்கு வங்காளத்தில்) வாழ்ந்தார். அங்கே குறுநில மன்னராக இவர் இருந்திருக்கக்கூடும். 'கர்நாடகச் செல்வத்தை அபகரிக்க வந்த கொள்ளைக்காரர்களைக் கொன்ற மனிதர்' என்று சாமந்தசேனர் வருணிக்கப்படுவதன் பொருள் விளங்க வில்லை. கர்நாடகத்தில் மேலைச்சாளுக்கியருக்கும் சோழர்களுக்கு மிடையே நடந்த போரில் சாளுக்கியர்களின் தரப்பில் நின்று சாமந்தசேனர் போரிட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். கர்நாடகத்தையாண்ட சாளுக்கிய அரசரான ஜெயசிம்மரைத் தோற்கடித்த பின், ராதத்தின்மீது முதலாம் ராஜேந்திர சோழர் படையெடுத்து வந்தபோது அவருக்கு எதிராக ராதத்தில் தமது சிற்றரசைக் காக்கும் பொருட்டு, சாமந்தசேனர் போரிட்டிருக்கக் கூடுமென்றும் சிலர் கருதுவர். ஆனால், இது பொருத்தமாகத் தோன்றவில்லை. காரணம், ராஜேந்திர சோழரது இப் படையெடுப்புக் கி.பி. 1023 ஆம் ஆண்டுக்கு முன் நடைபெற்றது. ஆனால், சாமந்தசேனரது காலமோ அதற்குப் பிந்தியதாகும். மேலும், சாளுக்கிய ஆறும் விக்கிரமாதித்தியர் வடகிழக்கு இந்தியாவின்மீது படையெடுத்த காலம் கி.பி. 1048க்குப் பிந்திய தாகும். எனவே, கி.பி. 11 ஆம் நூற்றாண்டின் பின்பாதியிலேயே சாமந்தசேனர் குறுநில மன்னராய் இருந்திருக்க வேண்டும். அவர் அரசர்ப் பட்டத்தைப் புனைந்திருக்கவில்லை. தமது முதுமைக் காலத்தில் ஆட்சியைத் துறந்து, கங்கைக் கரையில் ஓர் ஆசிரமத்தில் சாமந்தசேனர் வேதங்களிலீடுபட்டுத் தமது இறுதிக் காலத்தைக் கழித்தார் என்று சேனர் சாசனங்கள் தெரிவிக்கின்றன. இவரது ஆட்சிக் காலம் கி.பி. 1050 முதல் 1075 வரையில் இருக்கக்கூடும்.

ஹேமந்த சேனர்

கி.பி. 1075 ஆம் ஆண்டு வாக்கில் சாமந்தசேனருக்குப் பின் அவரது மகனான ஹேமந்தசேனர் அரசரானார் என்பதைத் தேவ்பராக் கல்வெட்டும் வேறு சான்றுகளும் தெரிவிக்கின்றன. இவர் மகாராஜாதிராஜர் என்றும், இவர் மனைவி

யசோதேவி மகாராணி என்றும் அழைக்கப்படுகின்றனர். முடிதரித்த பல மன்னர்கள் இவர்களது பாதங்களை வணங்கினராம். ஹேமந்தசேனர் பல அரசர்களைக் காத்தவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். எனவே, இவர் ராதத்தில் சுதந்திரமும் செல்வாக்கும் மிகுந்த ஓர் அரசராக வளர்ச்சியுற்றிருந்தார் என்பது தெளிவாகிறது.

விஜயசேனர்

ஹேமந்தசேனரது மகனான விஜயசேனர் சேன வம்சத்து அரசர்களுள் மிகவும் முக்கியமானவராவார். இவரது அறுபத்திரண்டாவது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட பாரக்பூர் (Barrackpur) செப்பேடு கிடைத்துள்ளது. எனவே, இவர் அறுபத்திரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்தார் என்பது தெளிவு. சூரவம்சத்தைச் சேர்ந்த விலாசதேவி என்ற அரசகுமாரியை இவர் மணந்து கொண்டார். இந்தச் சூரர்கள் தெற்கு ராதத்தில் சிற்றரசர்களாயிருந்தனர். இத் திருமணத்தினால் விஜயசேனரது செல்வாக்குப் பெருகியது என்று தெரிகிறது. இவ்வரசர் தமது ஆட்சியின் துவக்கத்தில் பால அரசர் ராமபாலருக்கு வரேந்திரியில் கைவர்த்தர்களைத் தோற்கடிப்பதில் உதவிபுரிந்திருக்கக் கூடும். ஆனால், ராமபாலரின் மரணத்துக்குப் பின்னர், மற்றச் சிற்றரசர்களைப் போலவே விஜயசேனரும் அண்டை அரசுகளைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வர விழைந்தார். கலிங்க அரசர் அனந்தவர்மன் சோடகங்கர் ஹூக்ளி வரையில் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்தியிருந்தார். அவரோடு நல்லுறவு பூண்டு, மற்ற அரசர்களைத் தோற்கடிப்பதில் விஜயசேனர் இறங்கினார். நான்யர், வீரர், கௌட அரசர், காமரூப அரசர், வர்ம அரசர் ஆகியோரை இவர் தோற்கடித்ததாக இவரது சாசனங்கள் கூறுகின்றன. இவற்றில் கூறப்படும் கௌட அரசர் பால வம்சத்தைச் சேர்ந்த மதன பாலராக இருக்கக் கூடும். மிதிலையை ஆண்ட நான்யதேவர் என்ற அரசரே இங்குக் குறிப்பிடப்படும் நான்யர் ஆவார். மேற்கில் கங்கை நதியில் இவரது போர்க் கப்பல்கள் சென்று பல அரசர்களை அடக்கி வந்ததாகக் கூறப்படுகிறது. மதன பாலர் ஆண்டுவந்த வரேந்திரியாகிய வடக்கு வங்காளம் இவரால் கைப்பற்றப்பட்டது. அதேபோல், கிழக்கு வங்காளமும் விக்கிரமபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்துவந்த போஜவர்மனிடமிருந்து கைப்பற்றப்பட்டது. சோடகங்கருக்குப் பின் அவரது மகனான ராகவன் என்பவரை விஜயசேனர் தோற்கடித்தார். ராமபாலரது சிற்றரசர்களாகவும் கூட்டாளிகளாகவும் இருந்த கொட்டாதவியை (Kotatavi) ஆண்ட வீரகுணர் என்பவரும், கௌசாம்பியை

ஆண்ட துவோரப வர்தனருமே சாசனங்களில் குறிக்கப்படும் வீரரும், வர்தனருமாவர். காமரூப அரசரான ராயாரிதேவர் இவரால் தோற்கடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறு பல போர்களை இவர் நிகழ்த்திக் கிட்டத்தட்ட வங்காளம் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். வங்காளத்தின் பல பகுதிகளிலும் கிடைக்கும் சாசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. விக்கிரமபுரம், விஜயபுரம் ஆகியவை இவரது தலைநகர்களாயிருந்தன. உமாபதிதரர் என்ற புலவர் இவரால் ஆதரிக்கப்பட்டார். தேவ்பராச் செப்பேட்டின் பிரசஸ்தி இப் புலவரால் இயற்றப்பட்டது. இந்த உமாபதிதரரைப்பற்றிக் கீத கோவிந்தம், பிரபந்த சிந்தாமணி போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. இவரால் இயற்றப்பட்ட சுமார் நூறு செய்யுட்கள் இதுவரை கிடைத்துள்ளன. இப் புலவர் லக்ஷ்மண சேனரது காலம் வரையில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

விஜயசேனர் கி.பி. 1095 முதல் 1155 வரையில் ஆண்டிருக்கக் கூடும். இவருக்குப் பின் இவரது மகனான பல்லாலசேனர் (வல்லால சேனர்) அரியணை ஏறினார்.

வல்லால சேனர்

தமது தந்தையின் காலத்திலேயே நிர்வாகத்தில் இவர் பங்கெடுத்துக் கொண்டார் என்பதைப் பாரக்பூர் செப்பேடு உணர்த்துகின்றது. அப்போதே இவர் கல்வியிற் சிறந்து விளங்கினார் என்பதையும் அதே செப்பேட்டின் மூலம் நாம் அறிகிறோம். மிகவும் பிற்காலத்திய நூலான பல்லால சரிதம் என்ற நூலிலிருந்தே இவரைப்பற்றி நாம் அதிகம் அறிகிறோம். சாசனங்கள் இவரது ஆட்சியைப்பற்றி அதிகம் தெரிவிக்கவில்லை. தமது தந்தையின் காலத்திலேயே இவர் மிதிலைமீது படையெடுத்தார் என்றும், வங்கம், வாகதி (Vagadi), வரேந்திரி, ராதம், மிதிலை ஆகிய ஐந்து மண்டலங்கள் அவரது அரசில் இருந்தன என்றும், கௌடபுரம், விக்கிரமபுரம், சுவர்ணகிராமம் ஆகிய மூன்று தலைநகரங்களில் அவர் வாழ்ந்தார் என்றும் பல்லால சரிதம் தெரிவிக்கின்றது. இந் நூல் பதினாறும் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. எனவே, இதன் கூற்றில் தவறுகள் இருப்பதற்கும் இடமுள்ளது. பீகாரில் கங்கையின் கரையில் உள்ள கால்காங் (Colgang) என்ற இடத்திலுள்ள இவரது ஒன்பதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, அப் பகுதி இவரது ஆட்சியில் இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது. மிதிலை இவரது ஆட்சியில் இருந்தது என்பதற்கு இது போதுமான சான்றாகும்.

இவ் வரசர் தானசாகரம் என்ற நூலைக் கி.பி. 1169-70-ல் எழுதி முடித்தாரென்று அந் நூலிலேயே கூறப்படுகிறது. இது பல்வேறு தானங்களையும் சடங்குகளையும்பற்றிய நூல். அநிருத்தர் என்ற குருவிடமிருந்து புராணங்களையும், ஸ்மிருதி நூல்களையும் வல்லாலசேனர் கற்ருர் என்று அது தெரிவிக்கிறது. சகுனங்கள்பற்றிக் கூறும் அற்புதசாகரம் என்ற நூலையும் கி.பி. 1168-69-ல் இவர் எழுதத் துவங்கினுர். ஆனுல், இவரது மரணத்துக்குப் பின் லக்ஷ்மணசேனரால் இது எழுதி முடிக்கப் பட்டது. இவ் விரண்டு நூல்களும் மிகவும் விரிவானவையே. இவரது குருவான அநிருத்தர் இவற்றை இயற்றுவதில் பெரும் பங்கு ஆற்றியிருத்தல் வேண்டும். வங்காளச் சமுதாயத்தில் குலினிசம் (Kulinism) என்ற உயர் வகுப்பைத் தோற்றுவித்தவர் வல்லால சேனரே என்று மரபுவழிக் கதைகள் கூறுகின்றன. ஆனுல், இக்கூற்றுக்கான ஆதாரங்கள் சேனர்காலத்துச் சாசனங்களிலோ, நூல்களிலோ காணப்படவில்லை. சாளுக்கிய அரசரின் மகளான ரமாதேவியை இவர் மணந்திருந்தார். ஆரும் விக்கிரமாதித்தியரே இந்தச் சாளுக்கிய அரசராக இருக்கலாம். வல்லால சேனர் பரமமகேசுவரர் என்று குறிக்கப்படுவதாலும், இவரது நைஹாட்டி (Naihati) செப்பேட்டில் சிவன், அர்த்தநாரீசுவரன் ஆகிய தெய்வங்களே வணங்கப்படுவதாலும் இவர் சைவர் என்பதில் ஐயமில்லை. இவரது தந்தையான விஜய சேனரும் சைவரே. இவ் வரசரது பதினொன்ருவது ஆட்சியாண்டில் நைஹாட்டி செப்பேடு வெளியிடப்பட்டது. இவரது ஆட்சி கி.பி. 1155 முதல் 1178 வரையில் நீடித்தது என்று ஊகிக்கலாம். முதுமை காரணமாகத் தமது மகன் லக்ஷ்மணசேனரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வல்லால சேனர் தம் மனைவியோடு திருவேணிசங்கமம் சென்று சிறிது காலத்துக்குப் பின் மரணமுற்றதாகக் கூறப்படுகிறது.

லக்ஷ்மணசேனர்

லக்ஷ்மணசேனர் கி.பி. 1178-ல் அரசரானுர் என்பதைப் பல சான்றுகள் தெரிவிக்கின்றன. தம்முடைய பாட்டனுரையும் தந்தையையும் போலவே சங்கரர் என்ற விருதினை இவர் பூண்டிருந்தார். எனவே, இவரும் சைவரே யாவார். இவரது சாசனங்கள் வங்காளத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிடைத்துள்ளன. தோயி (Dhoye) எழுதிய பவனதூதம் என்ற நூலும் இவரைப்பற்றி நமக்குத் தெரிவிக்கிறது. இவர் போர்களில் பெருவெற்றி பெற்ருர் என்பதை இவரது சாசனங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. கலிங்கம், காசி, காமரூபம் போன்றவற்றின் அரசர்களை இவர் தோற்கடித்தார். இவரால் தோற்கடிக்கப்பட்ட

காசி அரசர் காகதவால ஜெயச்சந்திரராக இருத்தல் வேண்டும். ஜெயச்சந்திரர் கிழக்கு நோக்கிப் புத்த கயை வரையில் தமது அரசை விரிவுபடுத்தி இருந்தார். அதற்கு அப்பாலும் கிழக்கு நோக்கி அவர் படையெடுத்தபோது லக்ஷ்மணசேனர் அவரைத் தோற்கடித்திருத்தல் வேண்டும். கலிங்கத்தின் மீதான போர் இவர் இளைஞராயிருந்தபோது நடைபெற்றது என்று கூறப்படு கிறது. அவ்வாருயின், இவரது பாட்டனுரான விஜயசேனரது காலத்தில் நடைபெற்ற போராக அது இருக்கக் கூடும். காம ரூபத்தின்மீது இவர் நிகழ்த்திய போர்பற்றிப் போதுமான சான்று களில்லை.

உமாபதிதரர் என்ற புலவர் லக்ஷ்மணசேனரது அவை யிலும் தொடர்ந்து இருந்ததாக ஜெயதேவரது கீத கோவிந்தம் குறிப்பிடுகிறது. உமாபதிதரரும், குமார தேவரும் அச் சேன அரசரின் அமைச்சர்களாக இருந்தனர். இவ்வரசர் லக்ஷ்ணுவதி என்ற ஊரைத் தமது தலைநகராகக் கொண்டிருந்ததாக ராஜ சேகரரின் பிரபந்தகோசம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வரசர் 1178 முதல் 1206 வரையில் ஆட்சிபுரிந்தார்.

லக்ஷ்மணசேனர் சிறந்த புலவராகவும் விளங்கினுர். தந்தையால் துவங்கப்பட்ட அற்புத சாகரம் என்ற நூலை முடித் தவர் இவரே என்பதை முன்பே குறிப்பிட்டோம். கீர்த்தி மிக்க கவிஞர்களான ஜெயதேவரும் தோயியும் இவரது அவையில் வாழ்ந்தனர். பிராமண சர்வஸ்வம் என்ற நூலை எழுதிய ஹாலாயுதரும் இவரது அவையில் வாழ்ந்தவரே. லக்ஷ்மண சேனரின் மண்டலாதிபதிகளுள் ஒருவரான ஸ்ரீதரதாசர் என்பவ ரும் கல்வி கேள்விகளில் சிறந்தவராக விளங்கினுர். ஹாலாயு தரும் சங்கரதரரும் இவ் வரசின் அமைச்சர்களாயிருந்தனர். ஏதோ காரணத்தினுல் லக்ஷ்மணசேனர் சைவத்தை விடுத்து வைணவரானுர். புகழ் மிக்க கீத கோவிந்தத்தை இயற்றிய ஜெயதேவர் இதற்கு ஒருவேளை காரணமாயிருக்கலாம். இம் மன்னரது கடைசிக் கல்வெட்டு 1205-ல் வெளியிடப்பட்டது. ஸ்ரீதரதாசரின் 'சதுக்தி கர்ணும்ருதம்' என்ற நூல் இம் மன்னர் 1206-ல் வாழ்ந்து கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறது. எனவே, 1206க்குப் பின் லக்ஷ்மணசேனர் இறந்திருக்க வேண்டும்.

சேன அரசின் சிதைவு

இஸ்லாமியர் படையெடுப்பு

தென்பகுதியிலுள்ள இருபத்துநான்கு பர்காஞக்கள் என்ற மாவட்டம் அக் காலத்தில் 'காதிமண்டலம்' என்றழைக்கப்

பட்டது. இது ஆரம்பத்தில் லக்ஷ்மணசேனரது அரசில் இருந்த பின்னர் அதிலிருந்து பிரிந்து சுதந்திர அரசாயிற்று. கி.பி. 1196-ல் தொம்மணபாலர் என்பவர் அதை ஆண்டு கொண்டிருந்தார். இவர் பழைய பால வம்சத்தோடு ஏதாவது ஒரு வழியில் தொடர்புடையவராக இருந்திருக்கக்கூடும்.

விரைவிலேயே மேற்கிலிருந்து முஸ்லிம்களும் சேன அரசைத் தாக்கலாயினர். கி.பி. 1192-ல் இரண்டாவது தரைன் போரில் வெற்றி பெற்ற இஸ்லாமியர்கள் யமுனையைக் கடந்து கங்கை நதிச் சமவெளியிலும் புகுந்தனர். அவர்களது குதிரைப் படைத் தலைவர்களுள் ஒருவனான மலிக் ஹிசாமுத்தீன் ஆகூல்பக் என்பவன் அவுத் பகுதியில் ஒரு சிற்றரசை அமைத்துக் கொண்டான். அவனது அதிகாரிகளுள் ஒருவரான இக்தியாருதீன் முஹம்மத் பின் பக்தியார் கில்ஜி என்பவர் அவனது மானியதாரராயிருந்தார். இவர் இருநூறு குதிரை வீரர்களோடு கிழக்கு நோக்கிப் புறப்பட்டார். இதைப்பற்றியெல்லாம் அவரது காலத்திலேயே வாழ்ந்த மௌலானா மின்ஹாஜு-த்தீன் என்பவரின் 'தபக்காத்-தெ-நாசிரி' என்ற நூல் மிகவும் விரிவாகக் குறிப்பிடுகின்றது. நிசாமுதீன் என்பார் எழுதிய 'தபக்காத்-தெ-அக்பரி' என்ற நூலும் மின்ஹாஜின் கூற்றுகளை மெய்ப்படுத்துகின்றது. சிறிய படையோடு புறப்பட்ட இக்தியாருதீன் முஹம்மத் பீகார் என்ற அரண்சூழ்ந்த ஒரு நகரைக் கைப்பற்றி அதிலிருந்தோரைக் கொன்று தீர்த்துச் சூறையிட்டபின் டெல்லிக்குச் சென்று குத்புதீன் அய்பக்கைச் சந்தித்து, லக்னவ்டியை (Lakhnauti) வெல்லுமாறு ஆணையிடப்பட்டார். அதை ஆண்ட லக்ஷ்மணசேனர் புகழ்பெற்ற பெரிய அரசர் என்றும் அவரது தலைநகரம் நாதியா (Nadiya) என்றும் மின்ஹாஜ் தெரிவிக்கிறார். முஸ்லிம் படை வருவதை அறிந்து நாதியாவிலிருந்த அனைவரும் ஓடிய பின்னரும் லக்ஷ்மணசேனர் அரண்மனையிலேயே இருந்தார் என்று கூறப்படுகிறது. பின்னர், பதினெட்டே குதிரை வீரர்களோடு நாதியாவில் நுழைந்த முஹம்மது கில்ஜி அரண்மனை வாயில் காப்போர்களைக் கொன்றுவிட்டு உள்ளே நுழைந்தபோது பகல் உணவு அருந்திக் கொண்டிருந்த லக்ஷ்மணசேனர் பின்புற வாயில் வழியாகத் தப்பித்து ஓடினாராம். இவ்வாறு நாதியாவைக் கைப்பற்றிய முஸ்லிம்கள் அங்கும் அனைவரையும் கொன்று, ஊரைக் கொள்ளையிட்டனர். மின்ஹாஜின் விவரங்கள் ஓரளவு நம்பமுடியாதவையாயினும், நாதியாவை முஸ்லிம் படைகள் கைப்பற்றியதைப்பற்றி எந்த ஐயமும் தேவையில்லை. வயோதிகரான லக்ஷ்மணசேனர்

இதற்குப்பின் விரைவிலேயே இறந்து போனுர் என்று மின்ஹாஜ் தெரிவிக்கிருர்.

நாதியாவிலிருந்து அகன்று சென்ற லக்ஷ்மணசேனர் கிழக்கு வங்காளத்தில் ஓரிரு ஆண்டுகள் தொடர்ந்து அரசராயிருந்தார். கி.பி. 1205ஆம் ஆண்டைச் சேர்ந்த அவரது இருபத்தேழாம் ஆட்சியாண்டுச் சாசனம் டாக்கா மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

முடிவு

லக்ஷ்மணசேனருக்குப் பின் அவரது மகன்களான விசுவரூப சேனர், கேசவசேனர் ஆகியோரது சாசனங்கள் கிடைத்துள்ளன. விசுவரூபசேனரே அடுத்த அரசராயிருந்தார் என்று தெரிகிறது. இவர் பதினுன்கு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்தபின், கேசவசேனர் அரசரானுர். விசுவரூப சேனரும் கேசவசேனரும் முஸ்லிம்களை எதிர்த்துத் தொடர்ந்து போரிட்டனர் என்பதை அவரது சாசனங்களும் மின்ஹாஜ் போன்ருேரின் நூல்களும் தெரிவிக்கின்றன. முஸ்லிம்கள் மேற்கு வங்காளத்தையும் வடக்கு வங்காளத்தையும் கைப்பற்றி லக்னுவதி அல்லது லக்னவ்டியைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்றினை நிறுவினர். நாதியாவை அழித்தபின் முஸ்லிம்கள் லக்னவ்டி என்ற மற்ருெரு நகரை நிறுவி அதைத் தலைநகராக்கினர் என்றும், அதுவே பின்னர் காவ்ர் (Gaur) என்று பெயர் பெற்று அழிந்து போயிற்று என்றும் நிசாமுதீன் தெரிவிக்கிருர்.

கேசவ சேனருக்குப் பின் சேனவம்சம் மறைந்தது. கி.பி. 1250ஆம் ஆண்டு வாக்கில் தேவகுடும்பத்தைச் சேர்ந்த தனுஜமாதவ தசரததேவர் என்பவர் கிழக்கு வங்காளத்தைச் சேனர்களிடமிருந்து கைப்பற்றி ஆண்டார் என்பது தெரிகிறது.

கேசவசேனருக்குப் பின் சதாசேனர் என்பவர் பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார் என்று அயினி அக்பரியில் கூறப்படுகிறது. கி.பி. 1289-ல் மதுசேனர் என்ற பௌத்த அரசர் ஒருவர் வங்காளத்தின் ஒரு பகுதியில் ஆட்சிபுரிந்ததை அவரது சாசனம் தெரிவிக்கிறது. ஆனுல், அவர்கள் சேனவம்சத்தோடு எவ்வகையில் உறவு பூண்டவர்கள் என்பது புலப்படவில்லை. பதின்மூன்ரும் நூற்ருண்டின் இறுதிவாக்கில் சேன அரசு மறைந்தது என்று கொள்வதே பொருத்தமாகும்.

3. காஷ்மீரம்

சான்றுகள்

காஷ்மீரத்தின் வரலாற்றைப்பற்றி நாம் அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றின் உதவி கிடைப்பதில்லை. காஷ்மீர அரசர்கள் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் வெளியிடுவதில் சிறிதும் அக்கறை காட்டாதது விந்தையாக உள்ளது. இவற்றுக்குப் பதிலாகப் பல்வேறு வரலாற்று நூல்கள், கதைப் பாடல்கள் போன்றவை நமக்குத் துணை நிற்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானது கல்கணர் எழுதிய ராஜதரங்கிணி என்ற நூல்.

யுவான்-சுவாங் கி.பி. 631-ல் காஷ்மீரத்துக்குச் சென்று அங்கு இரண்டு ஆண்டு காலம் தங்கியிருந்தார். அசோகராலும் கனிஷ்கராலும் கட்டப்பட்ட பௌத்த ஸ்தூபங்களையும் விகாரங்களையும் அவர் அங்கே கண்டார். அப்பொழுதுதான் தலைநகராகியிருந்த ஸ்ரீநகருக்கும் அவர் விஜயம் செய்தார். பௌத்தப் பேரவை கனிஷ்கரால் காஷ்மீரத்தில் கூட்டப்பட்டது என்ற தகவலையும் அவரது பயணக் குறிப்புகள் நமக்குத் தெரிவிக்கின்றன. காஷ்மீரத்தின் சமயம், சமுதாயம் ஆகியவை பற்றி இவரது நூல் மூலம் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.[1] இவருக்கு முன்னர் சே-மாங் (Che-mong), பா-யோங் (Fa-yong) போன்ற சீனர்கள் ஐந்தாம் நூற்றாண்டிலும், இவருக்குப் பின் ஊ-காங் (Ou-kong) போன்றோர் எட்டாம் நூற்றாண்டிலும் காஷ்மீரத்துக்குச் சென்று தமது குறிப்புகளை எழுதியுள்ளனர்.

கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அல்பெருனி காஷ்மீர அறிஞர்களைப் பஞ்சாபில் சந்தித்துப் பின்னர்த் தாம் எழுதிய கிதாபுல்-ஹிந்த் (Kitab-ul-Hind) என்ற அராபிய மொழி நூலில் அந் நாட்டைப்பற்றி நிறையக் குறிப்பிட்டார்.

[1] S. Beal, *Buddhist Records of the Western World* (Hiuen Tsang's Hsi-yu chi).

கல்கணர்

மார்க்கோ போலோ போன்றவரின் நூல்களும் பில்ஹணரது விக்கிரமாங்கதேவ சரிதம், சோமதேவரது கதாசரித் சாகரம் போன்ற நூல்களும் காஷ்மீரத்தைப்பற்றித் தெரிவிக்கின்றன. ஆயினும், அந் நாட்டின் வரலாற்றைப்பற்றித் தெரிந்து கொள்வதற்குக் கல்கணரது ராஜதரங்கிணியைப் போல வேறு எந்த நூலும் நமக்குப் பயன்படவில்லை.

கி.பி. பதினொன்றும் நூற்றுண்டின் நடுப்பகுதியில் கல்கணர் இப் பெரும் நூலை எழுதி முடித்தார். அதன் பின்னர், ஜோனராஜர் (Jonaraja) என்பவர் 1420 வரையில் காஷ்மீரத்தின் வரலாற்றை ராஜதரங்கிணியின் தொடர்ச்சியாகவே தொடர்ந்து எழுதினுர். இதற்குப் பின்னர் ஸ்ரீவரர் (Srivara), பிராஜ்யபட்டர் (Prajyaphatta) ஆகியோர் 1586-ல் அக்பர் காஷ்மீரத்தைக் கைப்பற்றியவரையில் வரலாற்றைத் தொடர்ந்தனர். கல்கணரின் ராஜதரங்கிணியை ஸ்டீன் என்ற பெரியார்[1] ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு, அருமையான விளக்கக் குறிப்புகளையும் எழுதியது மிகவும் பாராட்டத் தக்கதாகும். ஜோனராஜரது 'திவிதீய ராஜதரங்கிணி' ஸ்ரீவரரது 'ஜெய்ன ராஜதரங்கிணி' ஆகியவையுங்கூட இதேபோல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

ஏழாம் நூற்றுண்டுக்கு முந்திய காஷ்மீரத்தின் வரலாற்றைப் பற்றி ஏராளமான கர்ண பரம்பரை, அல்லது எழுத்து மூலமான கதைகளும் செய்திகளும் கல்கணருக்குக் கிடைத்தன. அவை முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்பதைக் கல்கணர் உணர்ந்திருந்தாராயினும், வேறு வழியின்றி அவற்றின் அடிப்படையிலேயே அந் நூற்றுண்டுகளின் வரலாற்றை அவர் தொகுத்து எழுதினுர். அசோகர், கனிஷ்கர், தோரமானர், மிகிரகுலர் ஆகிய மௌரிய, குஷாண, ஹூண அரசர்களின் ஆட்சிபற்றித் தாம் கேள்வியுற்ற கதைகளை அவர் அப்படியே எழுதியுள்ளார். அச் செய்திகள் உண்மையான வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அதிகம் பயன்படவில்லை. கி.பி. நான்கு, ஐந்து, ஆரும் நூற்றுண்டுகளில் கோநந்த (Gonanda) வம்சத்தைச் சேர்ந்த ரஞதித்தியர் முந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கல்கணர் எழுதுவது பழைய கதைகளை நம்பியதன் விளைவேயாகும். இவ்வாறு கி.பி. ஏழாம் நூற்றுண்டு வரையில் கல்கணரது ராஜதரங்கிணி கூறும் செய்திகளை முழுவதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

[1] M. A. Stein, *Kalhana's Chronicle of the Kings of Kashmir.*

ஏழாம் நூற்றாண்டின் முன் பகுதியில் கார்கோட (Karkota) வம்சம் ஆட்சிக்கு வந்தது முதல் கல்கணரது வரலாற்றில் புதிய திருப்பம் ஆரம்பமாகிறது; வரலாற்றுச் செய்திகள் புனை கதைகளெல்லாம் இல்லாமல், ஓரளவு தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. கார்கோட வம்சம் பதவி ஏற்றது முதல் கிடைக்கும் பல்வேறு சான்றுகளையும் அலசி ஆராய்ந்து உண்மையை உணர்ந்தே கல்கணர் எழுதினார். அது முதல் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடைபெற்ற ஆண்டுகள் விவரமாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆயினும், குறிப்பிடப்படும் ஆண்டுகளனைத்தும் 25 அல்லது 30 ஆண்டுகள் முந்தியனவாக இருக்கின்றன என்றும், எனவே, இந்த ஆண்டுகளைக் கல்கணர் தரும் ஆண்டுகளோடு கூட்டிக்கொள்ள வேண்டுமென்றும் ஸ்டீன் கருதினார்.

கி.பி. 855-ல் உத்பல (Utpala) வம்சம் காஷ்மீரத்தில் அரியணை ஏறியது. அதுமுதல் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஆண்டு, மாதம், கிழமை ஆகிய எல்லாத் தகவல்களும் மிகத் தெளிவாகக் கல்கணரால் குறிப்பிடப்படுகின்றன. இது முதலான கல்கணரது வரலாற்றை முழுக்க முழுக்க வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ராஜதரங்கிணியைப்போல வேறு ஒரு வரலாற்று நூல் பண்டை இந்தியாவில் எழுதப்படவே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனவே, பண்டை இந்தியா தோற்றுவித்த மாபெரும் வரலாற்று ஆசிரியராகக் கல்கணரை நாம் கருத வேண்டும்.

1. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்

ஐம்பத்திரண்டு அரசர்கள்

அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது காஷ்மீரானது அபிசார (Abhisara) நாட்டு அரசரால் ஆளப்பட்டு வந்தது. உரசா (Urasa) என்ற அரசையும் அபிசார மன்னரிடம் ஒப்படைத்துவிட்டு, அலெக்சாந்தர் இந்தியாவை விட்டு அகன்றார்.[1] இந்த உரசாவானது இன்றைய ஹசாரா (Hazara) பகுதியாகும்.

ஆதியில் ஐம்பத்திரண்டு அரசர்கள் காஷ்மீரத்தை ஆண்டதாகக் கல்கணரது ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது. ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவேயில்லை. நீலமதபுராணம் என்ற சமய நூல் முதலாம் கோநந்தர், அவரது மகன் முதலாம் தாமோதரர், தாமோதரரின் மகன்

[1] Mc Crindle, *The Invasion of India by Alexander the Great.*

இரண்டாம் கோநந்தர் போன்ற சில அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. ஆனால், இச் செய்திகளையெல்லாம் நாம் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்வதற்கில்லை. இவ்வாறு ஐம்பத்திரண்டு அரசர்கள் ஆண்டதற்குப் பின்னர், அசோகர் காஷ்மீரத்தை ஆண்டதாகக் கல்கணர் தெரிவிக்கிறார்.

அசோகர்

அசோகர் பௌத்தராயிருந்தார் என்றும், விடஸ்தாத்திரம் (Vitastatra), சுஸ்கலேத்திரம் (Suskaletra) ஆகியவிடங்களில் பௌத்த விகாரங்களையும் ஸ்தூபங்களையும் அவர் எழுப்பினாரென்றும் கல்கணர் எழுதுகிறார். ஸ்ரீநகர் என்ற நகரத்தையும் அவர் கட்டியதாகக் கூறப்படுகிறது. மேலும், சிவனுக்கு ஆலயங்கள் இரண்டையும்கூட அசோகர் கட்டினாராம். காஷ்மீர அரசர் என்றே அசோகரைக் கல்கணர் குறிப்பிடுகிறார். ஆனால், யுவான்-சுவாங் நூலும் இலங்கையைச் சேர்ந்த மகாவம்சமும் காஷ்மீர் அசோகரது பேரரசில் அடங்கியிருந்தது என்பதைக் குறிப்பிடுகின்றன. எனவே, மௌரிய அசோகராகவே இவர் இருத்தல் வேண்டும்.

குஷானர்கள்

அசோகருக்குப் பின் அவரது மகனான ஜலௌகர் (Jalauka) காஷ்மீரத்தை ஆண்டதாகக் கல்கணர் கூறுகின்றார். இவர் மிலேச்சர்களது படையெடுப்பை விரட்டியடித்ததாகவும், கனோஜையும் வென்றதாகவும் கூறப்படுகின்றன. இவை ஏற்றுக் கொள்ளத்தக்க கூற்றுகள் அல்ல. ஜலௌகருக்குப் பின் இரண்டாம் தாமோதரர் ஆட்சிபுரிந்த பின்னர், துருக்ஷர்கள் காஷ்மீரத்தைக் கைப்பற்றினார்களாம். இவர்கள் குஷானர்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை. அல்பெருனியும் குஷானர்களைத் துருக்ஷர் என்றே அழைத்தார். கல்கணர் குறிப்பிடும் மூன்று துருக்ஷ அரசர்களின் பெயர்கள் ஹுஷ்கர், ஜுஷ்கர், கனிஷ்கர் ஆகியவை. இவர்கள் குஷான் அரசர்களான ஹுவிஷ்கர், வாசிஷ்கர், கனிஷ்கர் ஆகியோரே. இம் மூவரும் தங்களது பெயரில் மூன்று நகரங்களை நிறுவியதாகக் கூறப்படுகிறது. இவர்கள் அனைவரும் பௌத்த சமயத்தை ஆதரித்ததாகவும் பௌத்த ஆலயங்களை நிறுவியதாகவும் கல்கணர் எழுதுகிறார். யுவான்-சுவாங்கும் இதே தகவலை நமக்குத் தருவதால் கல்கணரது கூற்றை உண்மையென்று ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

ஹுணர்கள்

இதற்குப்பின் கூறப்படும் காஷ்மீர அரசர்கள்பற்றி வேறு சான்றுகள் மூலம் நமக்கு எதுவும் தெரியவில்லை. குஷானர்

களுக்குப்பின் ஆட்சிபுரிந்ததாகப் பல அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டபின், ஹூண அரசரான மிகிரகுலர் குறிப்பிடப் படுகிறார். குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வட இந்தியாவின் பல பகுதிகளை ஹூணர்கள் கைப்பற்றி ஆண்டனர். காஷ்மீரத்தை மிகிரகுலர் ஆண்டார் என்பது யுவான்-சுவாங்கின் நூலாலும் உறுதிப்படுகிறது. காஷ்மீரத்தில் மிகிரகுலரது நாணயங்கள் கிடைத்துள்ளன. மிகிரகுலர் சிவனை வழிபட்டார் என்ற கல்கணரது செய்தியை இந் நாணயங்கள் மெய்ப்பிக்கின்றன. மிகிரகுலர் இரத்த வெறிபிடித்த கொடிய அரசராயிருந்தார் என்பது கல்கணர், யுவான்-சுவாங் ஆகிய இருவரது நூல்களாலும் தெரிய வருகிறது.

மிகிரகுலரை அடுத்துப் பல அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் எவை உண்மை, எவை புனை கதை என்பதை அறிந்துகொள்வது கடினமாயுள்ளது. மிகிரகுலருக்குப் பல தலைமுறைகளுக்குப்பின் தோரமாணர் என்ற ஓர் அரசர் குறிப்பிடப்படுகிறார். இவ் வரசரது தாமிர நாணயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. கி.பி. ஆறும் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையில் தோரமாணர் பெயர் பொறித்த நாணயங்கள் காஷ்மீரத்தில் வழக்கிலிருந்தன. இந்தத் தோரமாணர் மிகிரகுலரது தந்தை அல்லரென்பதும், அதே பெயரைப் பூண்ட மற்றொரு பிற்காலத்திய அரசரே என்பதும் புலப்படுகின்றன. தோரமாணரது மகனாக இரண்டாம் பிரவரசேனர் என்ற ஓர் அரசர் குறிப்பிடப்படுகிறார். இவரது தங்க, வெள்ளி நாணயங்கள் கிடைத்துள்ளன. இவரால் பிரவரபுரம் என்ற நகரம் கட்டப்பட்டது. இவர் ஆறும் நூற்றாண்டின் பின்பாதியில் வாழ்ந்தார் என்பது புலப்படுகிறது. ஹிரண்யகுலர், வசுகுலர், கிங்கிலர் (Khinkhila) போன்ற அரசர்களின் பெயர்கள் ஹூணப் பெயர்களாகத் தெரிகின்றன. மிகிரகுலருக்குப் பின்னர் ஹூணர்கள் காஷ்மீரத்தில் மேலும் சிறிது காலம் தொடர்ந்து ஆட்சிபுரிந்திருக்கலாம் என்பதை இவை உணர்த்துகின்றன.[1] ஆயினும், உருப்படியாகக் காஷ்மீரத்தின் துவக்க கால வரலாற்றை அறிந்துகொள்வதற்குத் திட்டவட்டமான சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. கார்கோட வம்சம் அரியணைக்கு வந்தது முதலே காஷ்மீரத்தின் வரலாறு தெளிவுபெறுகின்றது.

[1] ராஜதரங்கிணியின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் விளக்க உரையில் பேராசிரியர் ஸ்டீன் ஹூணர்களின் நாணயங்கள், ஆட்சிபற்றி ஆராய்ந்துள்ளமை படிக்கத்தக்கன.

2. கார்கோட வம்சம்

பூர்விகம்

கார்கோட வம்சத்தைச் சேர்ந்த முதல் அரசர் துர்லப வர்தனர்.[1] கார்கோட நாகமெனும் பாம்புத் தேவதையின் குலத்தில் தோன்றியவராம் இவர். இதற்குமேல் கார்கோட வம்சத்தின் பூர்விகம்பற்றி நமக்கு எச் செய்தியும் இல்லை. மகாபாரதம், ஹரிவம்சம், பத்மபுராணம் ஆகிய நூல்கள் கார்கோட நாகர்கள் தக்கணத்தில் சிறு பகுதிகளை ஆண்டதாகக் குறிப்பிடுகின்றன. இவர்களில் ஒரு பிரிவினரது தலைநகரமாக மாகிஷ்மதி குறிப்பிடப்படுகிறது. எனவே, காஷ்மீரத்துக் கார்கோடர்கள் தக்கணத்தையே பூர்விகத்தில் சேர்ந்தவர்கள் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், நாகர்களைப்பற்றி எதுவுமே நிச்சயமாகத் தெரியாதபோது கார்கோடர்களின் பூர்விகம்பற்றி ஒரு முடிவுக்கு வருவது முடியாதாகும்.

துர்லப வர்தனர்

துர்லப வர்தனர் காஷ்மீர அரசின் முக்கியமான மனிதர்களில் ஒருவராகத் துவக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும். கோநந்த வம்சத்தின் கடைசி அரசரான பாலாதித்தியருக்கு ஆண்பிள்ளை இல்லாமையால், அவரது மகளை மணந்த துர்லப வர்தனரே காஷ்மீர அரசரானார். கி.பி. 627 ஆம் ஆண்டில் அவர் அரியணை ஏறியிருக்கலாம். துர்லப வர்தனரின் ஆட்சிக்காலத்தில்தான் கி.பி. 631-ல் யுவான்-சுவாங் காஷ்மீரத்துக்குச் சென்றார். அப்பொழுதே காஷ்மீரம் ஒரு பெரிய அரசாக வளர்ந்திருந்தது என்பது அவரது குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. தட்சசீலமாகிய இன்றைய ராவல்பிண்டி மாவட்டம், சிம்மபுரமாகிய சால்ட் மலைப்பகுதி, உரசாவாகிய இன்றைய ஹசாரா மாவட்டம் ஆகிய பகுதிகளையும் துர்லப வர்தனர் ஆட்சிபுரிந்தார். மேலும், புஞ்ச் (Punch), ராஜபுரம் (அல்லது ராஜபுரி என்ற இன்றைய ராஜோரி) ஆகிய இரண்டு சிறிய மலைப்பிரதேசங்களும்கூட துர்லபவர்தனரின் ஆட்சியில் இருந்தன. உரசா, தட்சசீலம், சிம்மபுரம் ஆகியவற்றைச் சாஹிகளிடமிருந்து (Sahis) துர்லப வர்தனரோ அல்லது அவருக்கு முந்திய வேறு அரசர்களோ கைப்பற்றினர். இவ்வாறு மேற்கிலும் தென்மேற்கிலும் காஷ்மீர அரசு விரிவடைந்ததாலேயே சாஹிகள் சிந்து நதிக்கரையிலிருந்த

[1] ராஜதரங்கிணியின் 4ஆம் பாகம் (Book IV) கார்கோட வம்சத்தின் வரலாற்றைத் தருகிறது.

உதபாண்டம் (Udabhanda) என்ற ஊரிலிருந்து தமது தலை நகரை மாற்ற வேண்டி இருந்தது போலும்!

சீன நூல்களில் குறிக்கப்படும் து-லோ-பா (Tu-lo-pa) என்ற காஷ்மீர அரசர் துர்லப வர்தனராகவே இருக்கலாம். சீனுவிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் பாதை இவ்வரசர் வசமே இருந்ததாக அவை கூறுகின்றன. இவரது நாணயங்கள் சிலவும் கிடைத்துள்ளன. இவ் வரசர் முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கல்கணர் தெரிவிக்கிறார். சுமார் கி.பி. 662 வரையில் இவரது ஆட்சி நீடித்ததாக நாம் கொள்ளலாம்.

சந்திராபீடர்

துர்லப வர்தனருக்குப் பின் அவரது மூத்த மகனுகிய இரண்டாம் பிரதாபாதித்திய துர்லபகர் அரசரானுர். இவர் ஐம்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்ததாகக் கூறப்படினும், குறிப்பிடத்தக்க செயல்கள் எவையும் இவர் புரிந்ததாகத் தெரியவில்லை. ஒரு நகரை இவர் நிறுவியதாக மட்டும் கூறப்படுகிறது.

துர்லபகருக்குப் பின் அவரது மூத்த மகனுன சந்திராபீடர் அரியணை ஏறினுர். கி.பி. 713-ல் சென்-டோ-லோ-பி-லி (Tchen-to-lo-pi-li) என்ற காஷ்மீர அரசர் அராபியர்களுக்கு எதிராகப் படையுதவி கோரி, சீனப் பேரரசரான ஹ்யூன்-சுங் (Hiuen-tsung) என்பாருக்குத் தூது அனுப்பியதாகச் சீன வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. இங்குக் குறிப்பிடப்படும் அரசர் சந்திராபீடரே என்பதில் ஐயமில்லை. சிந்துவைக் கைப்பற்றிய முகம்மது-இப்னு-காசிம் காஷ்மீர அரசின் எல்லைவரை சென்றிருக்கக் கூடுமென்றும், சீன உதவியைக் கோரியதற்கு அதுவே காரணமாயிருக்க வேண்டுமென்றும் தோன்றுகின்றன. ஆனுல், இந்த உதவிக்கு அவசியமே இல்லாமல், முகம்மது-இப்னு-காசிம் விரைவிலேயே இந்தியாவிலிருந்து திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டார். கி.பி. 720-ல் சந்திராபீடருக்கு 'அரசர்' என்ற பட்டத்தைச் சீனப் பேரரசர் அளித்தாராம். காஷ்மீர மன்னனை ஓர் அரசராகச் சீனப் பேரரசர் ஏற்றுக்கொண்டார் என்பதே இதன் பொருள் போலும்!

சந்திராபீடர் நீதியும் சமயப்பற்றும் மிக்க அரசராயிருந்தார். அவரது நற் செயல்கள் ராஜதரங்கிணியில் பல சான்றுகளோடு விவரிக்கப்பட்டுள்ளன. இன்னெரு பிராமணனைச் சூன்யம் வைத்துக் கொன்றதற்காக ஒரு பிராமணனைச் சந்திராபீடர் தண்டித்தாரென்றும், அவ்வாறு தண்டிக்கப்பட்ட பிராமணன்

சந்திராபீடரின் தம்பியான தாராபீடரை வசப்படுத்திச் சந்திராபீடரைக் கொன்றுன் என்றும் கூறப்படுகின்றன. சந்திராபீடரது ஆட்சி எட்டரை ஆண்டுகள்வரை நீடித்ததாம்.

தம் அண்ணனைக் கொன்ற தாராபீடரே அடுத்த அரசரானுர். நான்கு ஆண்டுகள் நீடித்த இவரது ஆட்சி கொடுமைகளும் கொலைகளும் நிறைந்ததாக இருந்தது. இவருக்குப் பின் இவரது தம்பியான லலிதாதித்தியர் அரியணை ஏறினுர்.

லலிதாதித்திய முக்தாபீடர்

கன்னிங்ஹாமின் கணக்கின்படி, கி.பி. 724ஆம் ஆண்டு வாக்கில் ($662+50+8\frac{1}{2}+4=724$) லலிதாதித்தியர் அரியணை ஏறியிருத்தல் வேண்டும்.[1] காஷ்மீர வரலாற்றில் மிகவும் கீர்த்தி பெற்ற அரசர் இவரே. இவரது திக்விஜயத்தைப்பற்றி ராஜ தரங்கிணி விரிவாக எழுதுகிறது.

திக்விஜயம்

முதலில் கனோஜ்மீது ஆட்சிபுரிந்த யசோவர்மனை இவர் வென்று கிழக்குக் கடல்வரை சென்று, பின்னர் கலிங்கத்தையும் தோற்கடித்தாராம். அங்கிருந்து கர்நாடகத்தை ஆண்ட ரட்டா (Ratta) என்ற அரசியைத் தோற்கடித்துக் காவேரிக் கரையை அடைந்து சில தீவுகளை வென்ற பின், மேற்கில் சென்று கொங்கணத்திலிருந்த எழு அரசுகளையும் வென்று, பின் துவாரகையை லலிதாதித்தியர் அடைந்தாராம். அங்கிருந்து புறப்பட்டு, அவந்தியைக் கைப்பற்றி, வடமேற்கில் சென்று உத்தராபதத்தில் காம்போஜர்கள், துக்காரர்கள் (Tukharas), பௌட்டர்கள் (திபேத்தியர்கள்), மும்முனி என்ற அரசன், தரதர்கள் (Daradas) ஆகியோரை அவர் தோற்கடித்தாராம். சாஹி அரசர்கள் லலிதாதித்தியருக்குப் பணிவிடைகள் செய்ய முன்வந்தனராம். அதன் பின்னர், இந்தியாவின் வடகிழக்குக் கோடியில் பிராக்ஜோதிசம் (Pragjyotisa), ஸ்ரீ ராஜ்யம், உத்தர குரு ஆகியவற்றையும் காஷ்மீர மன்னர் கைப்பற்றினுராம்.[2]

யசோவர்மன்மீது போர்

இந்தத் திக்விஜயச் செய்தி பெரிதும் மிகையானது என்பதில் ஐயமில்லை. கனோஜின்மீதும் வங்காளத்தின்மீதும் அவர் படை

[1] கல்கணரது நூலின்படி, லலிதாதித்தியர் கி.பி. 699-ல் அரசரானுர் என்று ஆகிறது. ஆனுல், கன்னிங்ஹாம் போன்ற பல அறிஞர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

[2] M. A. Stein, *Kalhana's Chronicle of the Kings of Kashmir.*

யெடுத்தார் என்ற செய்தி உண்மையே என்பதில் ஐயமில்லை. கனோஜ் அரசர் யசோவர்மனும் லலிதாதித்தியரும் துவக்கத்தில் நண்பர்களா யிருந்தபின் பகைவராயினர். காஷ்மீர அரசரால் தோற்கடிக்கப்பட்ட யசோவர்மன் சமாதானம் செய்து கொள்ள இணங்கினாரென்றும், ஆனால், அதற்கான ஒப்பந்தத்தில் எவருடைய பெயரை முதலில் குறிப்பிடுவது என்பதுபற்றித் தகராறு ஏற்பட்டு மீண்டும் சண்டை ஏற்பட்டது என்றும் கல்கணர் விவரிக்கிறார். நீண்ட போருக்குப் பின்னர், யசோவர்மன் லலிதாதித்தியரால் 'வேருடன் கல்லி எறியப்பட்டார்'. இந்தச் சொற்றொடரின் பொருள் விளங்கவில்லை. போர்க்களத்திலிருந்து யசோவர்மன் தப்பித்து ஓடினாரா அல்லது அப் போரிலேயே கொல்லப்பட்டாரா என்பது தெரியவில்லை. இந் நிகழ்ச்சிக்குப் பின் வேறு எந்தத் தகவலும் யசோவர்மனைப்பற்றி நமக்குக் கிடைக்கவில்லை.

கி.பி. 731-ல் யசோவர்மன் சீனாவுக்குத் தூதர்களை அனுப்பினார் என்று சீன வரலாறுகளில் குறிப்பிடப்படுகிறது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு லலிதாதித்தியரும் சீனாவுக்கு இதே போன்ற மற்றொரு தூதுக் குழுவை அனுப்பினார். ஆனால், சீனா படையுதவி செய்ததாகத் தெரியவில்லை. கி.பி. 736-ல் லலிதாதித்தியரும் யசோவர்மனும் ஒன்றுசேர்ந்து, திபேத்தியர்களைத் தோற்கடித்தனர். ஆகவே, இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னரே லலிதாதித்தியரின் கனோஜ் படையெடுப்பு நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

கௌடத்தின் மீது வெற்றி

கனோஜிலிருந்து வங்காளத்துக்குச் செல்லும் வழியில் மகதத்தில் காஷ்மீர மன்னர் சூறையாடிய பொருள்களில் புத்தர் சிலையும் ஒன்று. பின்னர், காஷ்மீரத்தில் அது மதிப்போடு வைத்துப் பூஜிக்கப்பட்டது என்று கல்கணர்மூலம் அறிகிறோம். வங்காள அரசர் போரிடாமல், யானைகளையும் பிற பொருள்களையும் பரிசளித்துச் சமரசமாகப் போய்விட்டார் என்று தெரிகிறது. கௌட (வங்காள) அரசர் லலிதாதித்தியருடைய உறுதிமொழிகளை நம்பித் தமக்குத் தீங்கு நேராது என்ற நம்பிக்கையோடு காஷ்மீரத்துக்கு வந்து, அங்கு லலிதாதித்தியரால் கொல்லப்பட்டாரென ராஜதரங்கிணி கூறுகிறது. இதனால் ஆத்திரமுற்ற கௌட மக்கள் சிலர் வங்காளத்திலிருந்து காஷ்மீரம் சென்று, காஷ்மீர அரசரின் விருப்பத் தெய்வமாகிய பரிகாசகேசவரது சிலையைத் தகர்க்க முயன்றார்களாம். ஆனால், தவறுதலாக வேறொரு தெய்வமாகிய ராமசுவாமியின் சிலையை அவர்கள்

உடைத்தார்கள். பின்னர், அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்டு அவர்கள் மரண தண்டனை பெற்றார்கள். கல்கணர் தரும் இச் செய்திகள் வங்காளத்தை லலிதாதித்தியர் வென்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மற்ற வெற்றிகள்

ஆயினும், கலிங்கம், கர்நாடகம், கொங்கணம், துவாரகை (காத்தியாவார்), அவந்தி (மாளவம்) ஆகியவற்றைக் காஷ்மீர மன்னர் வென்றார் என்ற கூற்றுப் புனைந்துரையே. பிராக் ஜோதிசமாகிய அசாம் வரையிலும் அதற்கப்பாலும் லலிதாதித் தியர் படையெடுத்துச் சென்றார் என்பதையும் நாம் அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. வங்காளத்தில் பிராக்ஜோதி அரசர் ஒருவரோ அல்லது அவர்களின் தூதர்களோ லலிதாதித்தியரைச் சந்தித்துப் பணிந்து சென்றிருக்கக் கூடும்.

துக்காரர்கள் ஆக்சஸ் நதிக்கரையிலுள்ள துக்காரிஸ்தான் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் துருக்கிய இனத் தவர்கள். அல்பெருனி என்ற முஸ்லிம் ஆசிரியர் துருக்கியர்களைக் காஷ்மீர அரசர் 'முத்தாய்' என்பவர் வென்றார் என்று தெரிவிக் கிறார். முக்தாபீடராகவே அவர் இருக்கக்கூடும். துருக்கியர் கள்மீது லலிதாதித்தியர் போரிட்டு வென்றார் என்பது இவ்வாறு உறுதிப்படுகின்றது. கிழக்கு ஆப்கானிஸ்தானம் காம்போஜம் என்று அப்போது அழைக்கப்பட்டது.[1] அப் பகுதியில் வாழ்ந்த காம்போஜர்களே லலிதாதித்தியரால் தோற்கடிக்கப்பட்டிருத் தல் வேண்டும். தரதர்கள் அல்லது தரத்கள் (Daradas or Dards) காஷ்மீரத்துக்கு வடக்கில் வாழ்ந்தனர். பௌட்டர்களாகிய திபேத்தியர்கள் கிழக்கில் வாழ்ந்தனர். திபேத்தியர்களை லலிதா தித்தியர் வென்றார் என்ற செய்தியைட் டாங் (Tang) வம்சத்துச் சீன வரலாற்று நூல்களும் கூறுகின்றன என்பதை முன்பே பார்த்தோம். மும்முனி என்ற பெயருள்ள அரசர் எவராயிருக்கக் கூடும் என்பது தெரியவில்லை. அண்டையிலிருந்த அராபிய அரசரையே மும்முனி என்பது குறிக்கிறது போலும்! மும்முறை அவரை லலிதாதித்தியர் தோற்கடித்தார் என்கிறார் கல்கணர்.

லலிதாதித்தியரின் கட்டடங்கள்

போர் வல்லமையிலும் ஆட்சித் திறனிலும் சிறந்தவராய் விளங்கிய லலிதாதித்தியர் கட்டடக் கலையிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். பரிகாசபுரம் என்ற நகரம் அவரால் கட்டப்பட்டது.

[1] Dr. S. C. Ray, *Early History and Culture of Kashmir.*

இந்த அழகிய நகரில் பரிகாச கேசவம், முக்தா கேசவம், மகா வராகம், கோவர்தனதரம் ஆகிய நான்கு விஷ்ணு ஆலயங்களை யும் ராஜவிகாரம் என்ற பௌத்தப் பள்ளியையும் லலிதாதித் தியர் நிர்மாணித்தார். பரிகாசபுரம் பரஸ்பூர் (Paraspor) என்ற மாவட்டத்தில் இருந்தது என்று பேராசிரியர் ஸ்டீன் (Stein) ஆராய்ந்து கூறினார். அங்குப் பழைய ஆலயங்கள், கட்டடங் கள் ஆகியவற்றின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. பரிகாசபுரம் லலிதாதித்தியரின் தலைநகராகவும் சிறிது காலம் இருந்தது. பின்னர், வஜ்ராதித்தியர் அந் நகரைவிட்டகன்றார். இதனால் அந் நகர் முக்கியத்துவம் இழந்தது. இதற்குப் பின்னர், சங்கரவர்மன் காலத்தில், பரிகாசபுரத்தில் இருந்த தூண்கள் கதவுகள் போன்றவை பட்டண் நகரில் (Patan) புதிய நகர் ஒன்றையும் ஆலயங்களையும் கட்டுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டன. பதினொன்றாம் நூற்றாண்டில் அரசர் ஹர்ஷரது படைகள் பரிகாசபுரத்தை அழித்ததோடு, அந் நகரிலிருந்த விக்கிரகங்களையும் கவர்ந்து சென்றன. பதினான்காம் நூற் றாண்டின் துவக்கத்தில் முஸ்லிம்கள் அந் நகரத்தைத் தரைமட்ட மாக்கினர். புகழ்மிக்க மார்த்தாண்ட சுவாமி ஆலயத்தையும் அவரே கட்டினார். இதுவும் இன்று அழிந்து காணப்படுகிறது. இவையனைத்தும் அம் மன்னரது கலை ஆர்வத்தைப் புலப் படுத்துகின்றன. பண்டைக் காஷ்மீரக் கட்டடக் கலைக்குச் சிறந்த உதாரணமாகவும் அவை திகழ்கின்றன.

மதிப்புரை

இவ்வளவு சிறந்தவராக விளங்கிய இந்த அரசர் கௌட அரசரை வஞ்சித்துக் கொன்றது தவறாகும் என்பதைக் கல் கணரே குறிப்பிடுகிறார். அதேபோல், மது வெறியில் இருந்த போது, பிரவரபுரம் என்ற நகருக்குத் தீ மூட்டி அழிக்குமாறு அவர் உத்தரவிட்டாராம். இவ் விரு தவறுகளையும் அவர் புரிந் திருந்தாலும்கூடக் காஷ்மீர அரசர்களுள் தலைசிறந்தவர் அவரே: முப்பத்தாறு ஆண்டு ஆட்சிக்குப் பிறகு, கி.பி. 760ஆம் ஆண்டு வாக்கில் லலிதாதித்திய முக்தாபீடர் காலமானார்.

கார்கோட அரசர்களின் ஆட்சியில் தாமரர்கள் (Damaras) என்ற நிலப் பிரபுக்கள் பெருஞ் செல்வாக்குப் பெற்று வளரலாயி னர். இவர்கள் அரசருக்குப் போட்டியாக வளர்ச்சியுறும் அபாயம் இருந்தது. இவர்களைப்பற்றி விழிப்பாக இருக்க வேண்டு மென்றும், அரசனுக்குப் போட்டியாக வளராமல் இவர்களைக் கண்காணித்து வர வேண்டுமென்றும் தமது வாரிசுகளுக்கு லலிதாதித்தியர் ஆலோசனைகள் கூறினார் என்று ராஜதரங்கிணி

குறிப்பிடுகிறது. ஓராண்டுக்கு வேண்டிய உணவுத் தானியம், உழவுக்குத் தேவையான எருதுகள் ஆகியவை மட்டுமே கிராமங்களில் இருக்குமாறு தமது வாரிசுகள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அதற்கு மேலும் இருந்தால் தாமரர்களின் பலம் ஓங்கி விடும் என்றும் லலிதாதித்தியர் எச்சரித்தாராம்.

வஜ்ராதித்தியர்

லலிதாதித்தியருக்குப் பின் அவரது மகனாகிய குவலயாபீடர் அரசரானார். இவர் ஓராண்டு காலமே ஆட்சிபுரிந்தபின், அரியணையைத் தமது தம்பியான வஜ்ராதித்தியப் பப்பியகர் (Bappiyaka) என்பாரிடம் ஒப்படைத்துவிட்டு, சமய வாழ்வில் ஈடுபட்டார். வஜ்ராதித்தியர் கி.பி. 762ஆம் ஆண்டுவாக்கில் அரசராயிருக்கக் கூடும். இவர் தீயொழுக்கங்களும் கொடுமைகளும் நிறைந்தவர். பல மனிதர்களை மிலேச்சர்களுக்கு இவர் விற்றார் என்றும், மிலேச்சர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பல பழக்க வழக்கங்களை இவர் தம் நாட்டில் புகுத்தினாரென்றும் கூறப்படுகின்றன. இவை நன்கு விளக்கப்படவில்லை என்றாலும், சிந்துவின் முஸ்லிம் ஆளுநர் காஷ்மீரத்தின்மீது இவரது காலத்தில் படையெடுத்தார் என்ற செய்தி பலாதுரி (Baladhuri) என்ற முஸ்லிம் எழுத்தாளர் மூலம் தெரியவருகிறது. கலீபா அல்-மன்சூர் என்பாரின் ஆளுநராகச் சிந்துமீது ஆட்சிபுரிந்து வந்த ஹிஷான்-இப்னு-அம்ருத்-தக்லிபி (Hishan-Ibn-Amr-at-Taghlibi, 768-72 A.D.) காஷ்மீரத்தைக் கைப்பற்றி, பல போர்க் கைதிகளையும் அடிமைகளையும் பெற்றார் என்று பலாதுரி தெரிவிக்கிறார். கல்கணர் தரும் செய்தி பலாதுரியின் தகவல்மூலம் உறுதிப்படுவதைக் காணலாம். சிந்துவின் முஸ்லிம் ஆளுநரான ஹிஷாமின் படைகள் காஷ்மீரத்தின் ஆட்சியில் இருந்துவந்த பஞ்சாபின் சில பகுதிகளில் ஊடுருவி வெற்றி பெற்றன என்பது புலனாகிறது. வஜ்ராதித்தியரே தமது தந்தை கட்டிய பரிகாசபுரத்தை விடுத்து ஸ்ரீநகருக்குக் குடிபெயர்ந்தார்.

ஜெயாபீடர்

விஜயாதித்தியருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருவரான பிருதிவியாபீடர் அடுத்த அரசரானார். ஆனால், விஜயாதித்தியருக்கு மற்றொரு மனைவியின் வயிற்றில் பிறந்த சங்கராமபீடர் என்பவர் இவரை விரட்டி விட்டு அரியணையைக் கைப்பற்றினார். ஏழாம் நாளிலேயே சங்கராமபீடர் இறந்ததால், மூன்றாவது மகனான ஜெயாபீடர் அரியணை ஏறினார். தமது பாட்டனார் லலிதாதித்தியரைப் போல இவ்

வரசரும் காஷ்மீர வரலாற்றில் சிறந்து விளங்குகிறார். இவருக்கு விநயாதித்தியர் என்ற மற்றொரு பெயருமிருந்தது.

வங்காளத்தின் மீது படையெடுப்பு

ஜெயாபீடர் கங்கைச் சமவெளியின்மீது படையெடுத்துச் சென்றார் என்றும், அதுதான் தருணமென்று ஜஜ்ஜர் (Jajja) என்ற அவரது மைத்துனர் தாமே அரசர் என்று காஷ்மீரத்தில் முடிசூட்டிக் கொண்டார் என்றும் ராஜதரங்கிணி தெரிவிக்கிறது. ஜெயாபீடர் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளிலேயே இது நிகழ்ந்தது. ஜெயாபீடரோடு சென்ற போர்வீரர்களும் அதிகாரிகளும்கூடப் பெரும் எண்ணிக்கையில் அவரைக் கைவிட்டுக் காஷ்மீரத்துக்குத் திரும்பினராம். இந் நிலையில் பிரயாகையை அடைந்து தமது எஞ்சிய துருப்புகளையும் அங்கேயே விட்டு விட்டு, மாறுவேடத்தில் பல அரசுகளில் சுற்றியபின், இறுதியில் அவர் வங்காளத்துக்கு வந்தார்; அங்குப் புந்திரவர்தன நகரில் பலராலும் அஞ்சப்பட்ட சிங்கம் ஒன்றினைக் கொன்று அவ்வூர் அரசரான ஜெயந்தரது அன்பைப் பெற்றார். மாறுவேடத்தில் வந்துள்ள மனிதன் காஷ்மீர அரசரே என்பதை அறிந்த ஜெயந்தர் தமது மகளை அவருக்குத் திருமணம் செய்து தந்தார். பின்னர், படையொன்றைத் திரட்டிக் கொண்டு, கௌடத்திலிருந்த ஐந்து சிற்றரசர்களையும் வென்று, தமது மாமனாருக்குக் கீழ்ப்பட்டவர்களாக அவர்களை ஜெயாபீடர் ஆக்கினார். பின்னர் திரும்பிச் சென்று, பிரயாகையில் இருந்த தமது போர் வீரர்களைத் திரட்டிக் கனோஜ் அரசரைத் தோற்கடித்த பின் காஷ்மீரத்துக்கு அவர் திரும்பினார். ஜஜ்ஜர் அஸ்கலேத்திரத்தில் ஜெயாபீடரைப் படை கொண்டு எதிர்த்தார். ஜஜ்ஜரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, தமக்குரிய அரச பதவியை ஜெயாபீடர் மீண்டும் எய்தினார். வங்காளத்தில் ஜெயாபீடர் நிகழ்த்தியதாகக் கூறப்படும் போர்கள் ஓரளவு உண்மையாக இருக்கக் கூடும். ஆயினும், ஜெயாபீடர் மாறுவேடத்தில் சென்றது, சிங்கத்தைக் கொன்றது போன்ற செய்திகள் மிகையான புனைகதைகளே என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர். வங்காளத்தில் வலிமையான அரசர்கள் யாருமில்லாமல் ஒற்றுமையின்மை நிலவிய காலத்தில் ஜெயாபீடர் பல கௌட அரசர்களைத் தோற்கடித்தார் என்பது உண்மையாயிருக்கக் கூடும்.[1]

மற்றப் படையெடுப்புகள்

ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கழித்து இவ்வாறு ஆட்சியுரிமையைத் திரும்பப் பெற்ற ஜெயாபீடர் சிறிது காலம் தலைநக

[1] R. C. Majumdar, (Editor), *History of Bengal.*

ரில் தங்கியிருந்து தமது ஆட்சியை நன்கு நிறுவியபின் மீண்டும் படையெடுத்துப் புறப்பட்டார். இப் படையெடுப்பின்போது கிழக்கு இந்தியாவில் எங்கோ ஆட்சிபுரிந்த பீமசேனரையும், நேபாளத்தையாண்ட அரமுடியையும் (Aramudhi) ஜெயாபீடர் தோற்கடித்தார். ஓரிடத்தில் இவர் பகைவர்களால் சிறை பிடிக்கப் பட்டார் என்றும், ஆனால் சாமர்த்தியமாகத் தப்பி மீண்டார் என்றும் கல்கணர் கூறுகிறார். இறுதியில் கிழக்குக் கோடியில் இருந்த ஸ்ரீராஜ்யத்தையும் இவர் வென்றாராம். கல்கணர் கூறும் கதைகளும் நிகழ்ச்சிகளும் வெறும் கற்பனையே என்று தெரிகிறது. இப் படையெடுப்பில் கூறப்படும் அரசர்கள் பற்றி வேறு எந்தச் சான்றுகள்மூலமும் நமக்குத் தெரியவில்லை. நேபாளத்துடன் புரிந்ததாகச் சொல்லப்படும் போர் உண்மையானதாக இருக்கக் கூடுமென்று லெவி (Levi) கருதுகிறார்.

மதிப்புரை

ஜெயாபீடர் சுமார் கி.பி. 770ஆம் ஆண்டு முதல் முப்பத்தொரு ஆண்டு காலம் ஆட்சிபுரிந்தார். பல்வேறு போர்கள் காரணமாகவும் பிறச் செலவுகள் காரணமாகவும் மட்டுமீறிய வரிகளை அவர் விதிக்கலானார். இதனால் பல்வேறு தரப்பினரும் அவரை வெறுக்கலாயினர். இறுதியில், கி.பி. 800ஆம் ஆண்டு வாக்கில் அவரது பகைவர்கள் சிலரின் தூண்டுதலோடு பிராமணர்கள் சதிசெய்து ஜெயாபீடரைக் கொன்றனர். க்ஷிரர் (Kshira), உத்பட்டபட்டர், தாமோதர குப்தர் போன்ற பல அறிஞர்களும் புலவர்களும் ஜெயாபீடரால் ஆதரிக்கப்பட்டனர். இவ் வரசர் ஜெயபுரம், துவாரவதி (Dvaravati) ஆகிய இரு நகரங்களைக் கட்டினார். ஜெயாபுரம் என்பதே இன்று அந்தர்கோட் (Andarkoth) என்ற சிற்றூராக உள்ளது. ஜெயாபுரம் இவரது தலைநகராகவும் இருந்தது. அதில் பௌத்த விகாரம், ஜெயாதேவி ஆலயம், கேசவ ஆலயம் ஆகியவற்றை இம் மன்னர் நிறுவினார். இந் நகரம் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் நிலைபெற்றிருந்தது என்பது ஸ்ரீவரரது ஜெய்ன ராஜதரங்கிணியால் தெரிய வருகிறது. துவாரவதியைப்பற்றி அந் நூலில் எதுவுமே கூறப்படவில்லை. இவ்விரு நகரங்களும் அருகருகே இருந்திருக்கலாம் என்றும், அந்தர்கோட்டுக்கு அருகில் காணப்படும் இடிபாடுகளே இவ்விரு நகரங்கள் என்றும் பஹ்லர் (Buhler), கன்னிங்ஹாம் போன்றோர் கருதுகின்றனர்.

கார்கோட வம்சத்தின் வீழ்ச்சி

ஜெயாபீடருக்குப் பின் கார்கோட வம்சம் வலுவிழந்தது. அடுத்து அரசரான அவரது மகன் லலிதாபீடர் ஆற்றலும் சுறு

சுறுப்புமில்லாத மனிதர். தமது செல்வத்தைத் தேவையில்லாத களியாட்டங்களிலும் கேளிக்கைகளிலும் இவர் வீணடித்தார். இவருக்குப் பின்னர் இவரது தம்பியான இரண்டாம் சங்கராம பீடர் அரசரானார். பிருதிவியாபீடர் என்றும் இவர் அழைக்கப் பட்டார். ஏழாண்டுகள் நீடித்த இவரது ஆட்சியிலும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் எவையும் நிகழவில்லை. சங்கராம பீடருக்குப் பின் ஜெயாபீடருக்கு ஜெயாதேவி என்ற வைப்பாட்டி ஒருத்தி யின்மூலம் பிறந்த சிப்பத ஜெயாபீடர் அரசரானார். அப்பொழுது வயதுவராத சிறுவராகவே இவர் இருந்தார். பிருகஸ்பதி என்ற அருமையான பெயரும் இவருக்கு இருந்ததாயினும் இவரது தாய் மாமன்களான பத்மர், உத்பலர், கல்யாணர், மம்மர், தர்மர் ஆகிய ஐவரே ஆட்சியை நடத்தினர். பன்னிரண்டு ஆண்டு களுக்குப் பின் சிப்பத ஜெயாபீடரை அவர்கள் கொன்றனர். ஜெயாதேவியும் இந்த ஐவரும் சாராயம் காய்ச்சும் ஒருவனின் பிள்ளைகள் என்று கூறப்படுகிறார்கள்.

சிப்பத ஜெயாபீடர் கி.பி. 813ஆம் ஆண்டு வாக்கில் கொலை செய்யப்பட்ட பின் அவரது தாய்மாமன்களும் அவரது பிள்ளை களும் பற்பல அரச குமாரர்களை அரியணைமீதமர்த்தி நாற்ப தாண்டு காலம் தாமே ஆட்சியை நடத்தினர். இத் தாய்மாமன் களுக் கிடையிலும் அடிக்கடி போட்டியும் பொறாமையும் காரண மாகத் தகராறுகள் எழுந்தன. சிப்பத ஜெயாபீடரின் கொலைக்குப் பிறகு உத்பலர் (உத்பலகர் என்றும் இவர் அழைக்கப்பட்டார்) அஜிதாபீடரை அரசராக்கினார். இந்த அஜிதாபீடர் வஜ்ராதித் தியப் பப்பியகரின் பேரன். உத்பலரின் ஆதிக்கத்தைக் கண்டு பொறாமையுற்ற மம்மர் அவரையும் அஜிதாபீடரையும் தோற் கடித்து விரட்டிவிட்டு, இரண்டாம் சங்கராமபீடரின் மகனான அநங்காபீடரை அரசராக்கினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் உத்பலரது மகன் சுகவர்மன் என்பவன் அநங்காபீடரை விரட்டி விட்டு அஜிதாபீடரின் மகன் உத்பலாபீடர் என்பவரை அரசனாக் கினான். சிறிது காலத்துக்குப் பிறகு சுகவர்மனை அவனது உற வினர்கள் சிலர் கொன்றனர். அப்பொழுது அமைச்சராயிருந்த சூரர் (Sura) நாட்டில் குழப்பத்தை ஒழித்துக் கட்ட எண்ணி, உத்பலாபீடரை அரியணையிலிருந்து அகற்றிவிட்டு, சுகவர்மனது மகனான அவந்திவர்மனைக் காஷ்மீர அரசராக்கினார். இது கி.பி. 855 அல்லது 856-ல் நிகழ்ந்தது. இத்துடன் கார்கோட வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது. உத்பலரது பேரனான அவந்தி வர்மன் ஆட்சிக்கு வந்தது முதல் காஷ்மீர வரலாற்றில் உத்பல வம்சம் துவங்கிற்று.

மதிப்பீடு

ஜெயாபீடருக்குப் பிந்திய ஐம்பதாண்டுகளில் காஷ்மீர அரசின் பல்வேறு பகுதிகளையும் பலர் கவர்ந்து கொண்டனர். காஷ்மீர எல்லைக்கு அப்பாலிருந்த பகுதிகள் அனைத்தும் கார்கோட அரசர்களின் பிடியிலிருந்து நழுவின. பொருளாதாரமும் பாழ்பட்டது. பத்மரும் அவரது நான்கு தம்பிகளும் அரசாங்கத்தின் செல்வமனைத்தையும் கொள்ளையிட்டனர். வெள்ளப் பெருக்குகள் அடிக்கடி ஏற்பட்டு, பெருத்த நாசமும் உணவுப் பஞ்சமும் பரவலாகக் காணப்பட்டன. ஜெயாபீடருக்குப் பிந்திய கார்கோட அரசர்களின் நாணயங்கள் கிடைக்காதது எந்த அளவுக்கு அரசின் நிதி நிலை பாழ்பட்டிருந்தது என்பதை நன்கு உணர்த்துகின்றது. இருப்பினும், சுமார் கி.பி. 627 முதல் கி.பி. 855 வரையில் காஷ்மீரத்தில் நீடித்த கார்கோட அரச வம்சத்தின் ஆட்சி அதன் பண்டைய வரலாற்றில் ஒரு முக்கியமான காலமாகும்.

கல்கணரின் காலக் கணக்கீடு

கார்கோட வம்சத்தின் ஆட்சி இருநூற்று ஐம்பத்து நான்கு ஆண்டுகளும் ஆறுமாதமும் நீடித்ததாகக் கல்கணர் கூறுகிறார். அவந்திவர்மனின் ஆட்சி முதல் லௌகிக அப்தத்தில் (Laukika Era) ஆண்டுகள் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. லௌகிக அப்தத்தின் துவக்கம் கி.மு. 3076-75 ஆகும். இந்த அப்தக் கணக்கின்படி அவந்திவர்மன் கி.பி. 855-56-ல் அரசரானார் என்பது ஐயத்துக்கிடமின்றித் தெளிவாகிறது. ஆனால், கார்கோட அரசர்களைப் பொறுத்தவரையில் லௌகிக அப்தத்தில் ஆண்டுகள் குறிப்பிடப்படவில்லை. (இதற்கு ஒரே ஒரு விதிவிலக்காகச் சிப்பத ஜெயாபீடரின் மரணம் மட்டுமே லௌகிக ஆண்டு 3889-ல் நிகழ்ந்ததாக ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது.) கார்கோட அரசர்களின் ஆட்சியாண்டுகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கூட்டிப் பார்க்கும் பொழுது, கார்கோட வம்சம் $254\frac{1}{2}$ ஆண்டுகள் ஆட்சிபுரிந்தது என்றாகிறது. அவ்வாறானால் (கி.பி. $855-254\frac{1}{2}$) கி.பி. 600ஆம் ஆண்டுவாக்கில் கார்கோட வம்சத்து முதல் அரசர் துர்லப வர்தனர் அரியணையேறினார் என்று ஆகிறது. இதை ஏற்றுக் கொள்வதால் நேரும் ஒரே ஒரு சிக்கலை மட்டுமே இப்பொழுது பார்ப்போம்:

ஒவ்வொரு கார்கோட அரசரும் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்பதைக் கல்கணர் குறிப்பிடுகிறார். அக்கணக்கின்படி, முதல் ஐந்து கார்கோட அரசர்களின் ஆட்சிக் காலம் கீழ்வருமாறு ஆகிறது:—துர்லப வர்தனர், கி.பி. 600—636; இரண்

டாம் பிரதாபாதித்திய துர்லபகர், 636-686; சந்திராபீடர், 686-694; தாராபீடர், 694-699; லலிதாதித்திய முக்தாபீடர், 699-736.

சீனச் சான்றுகள் இத் தேதிகளோடு ஒத்திருக்கவில்லை. சென்-டோ-லோ-பி-லி (சந்திராபீடர்) என்ற காஷ்மீர அரசர் அராபியர்களுக்கு எதிராகச் சீனுவின் உதவிகோரி, கி.பி. 713-ல் தூதொன்றை அனுப்பியதாகவும், கி.பி. 720-ல் சீனப் பேரரசர் அக் காஷ்மீர மன்னருக்கு அரசர் என்ற பட்டத்தை அளித்ததாக வும் டாங் (Tang) வம்சத்து வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக் கின்றன என்பதை முன்பே பார்த்தோம். மேலும், லலிதாதித் திய முக்தாபீடரும் இதேபோல் கி.பி. 733-ல் சீனுவுக்கு உதவி கோரி ஒரு தூதனுப்பினுர். இவையெல்லாம் சந்திராபீடர், லலிதாதித்தியர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தை நிர்ணயிப்ப தற்கு உதவுகின்றன. இவற்றையெல்லாம் கணக்கிட்டுத்தான் கன்னிங்ஹாம், ஸ்டீன் போன்ற ஆராய்ச்சியாளர்கள் கார்கோட அரசர்களின் ஆட்சிக் காலத்தைச் சுமார் இருபத்தைந்து ஆண்டு கள் பின்னுக்குத் தள்ளினர்.

3. உத்பல வம்சம்

அவந்திவர்மன்

உத்பல வம்சத்தின்[1] முதல் அரசரான அவந்திவர்மன் ஆட்சிக்கு வந்தது முதல் முக்கியமான நிகழ்ச்சிகள் அனைத்தும் கல்கணரால் லௌகிக ஆண்டுக் கணக்கில் கொடுக்கப்படு கின்றன. எனவே, இது முதல் ஆட்சியாண்டுகளையும் பிற நிகழ்ச்சிகளின் காலத்தையும் தெள்ளத் தெளிவாக நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. அவந்திவர்மன் கி.பி 855-56 முதல் 883 வரையில் ஆட்சிபுரிந்தார்.

அமைதிப் பணிகள்

இம் மன்னர் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதிலும் பொருளாதாரத்தைச் செப்பனிடுவதிலுமே தம் கவனத்தைச் செலுத்தினுர். நாட்டை விரிவுபடுத்தும் போர்களில் நேரத்தை யும் நிதியையும் இவர் வீணடிக்கவில்லை. இவர் அரியணைக்கு வருவதற்குக் காரணமாயிருந்த சூரரே (Sura) இவரது தலைமை அமைச்சராகவும் இருந்தார். கார்கோட வம்சம் வலிமையற்

[1] உத்பல வம்சத்தின் வரலாறு ராஜதரங்கிணி, பாகம் V-ல் (Book V) கொடுக் கப்படுகிறது.

றிருந்த பிற்காலத்தில் தாமரர்கள் என்ற பெரும் நிலப் பிரபுக்களின் செல்வாக்கும் வலிமையும் ஓங்கி இருந்தன. அவர்களுள் ஒருவரான தன்வர் (Dhanva) லகரா மாவட்டத்தில் (Lahara—இன்றைய Lar District) பூதேசுவரர் ஆலயத்துக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்த கிராமங்களை அபகரித்துக் கொண்டு முதலமைச்சரான சூரரையும் மதியாதவராக இருந்தார். எனவே, அவரைக் கொல்வதன்மூலம் மற்றத் தாமரர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டியது அவசியமாயிற்று.

அடிக்கடி வெள்ளப் பெருக்குகள் ஏற்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை அவந்திவர்மன் மேற்கொண்டார். இதில் சுய்யர் (Suyya) என்ற அமைச்சர் முழுக் கவனத்தைச் செலுத்தினர். விட்டஸ்தா (இன்றைய ஜீலம்) நதியில் பெரும் பாறைகள் விழுந்து அடைத்துக் கொண்டதாலேயே இத்தகைய வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டு அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலைப்புறங்கள் சரிந்து விழாவாறு அந் நதியின் கரைகள் பலப்படுத்தப்பட்டன. விட்டஸ்தா நதியும் சிந்து நதியும் ஒன்று கலக்கும் இடமும் வெள்ளப் பெருக்குக்குக் காரணமாயுள்ளது என்பதை அறிந்து, அந் நதிகள் திசை திரும்பி வேறொரு இடத்தில் கலக்குமாறு செய்யப்பட்டன. இந் நடவடிக்கைகளால் பரவலான பகுதிகள் வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றப் பட்டதோடு, புதிதாகப் பல கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதியும் கிடைத்தது. அனுலா (Anula) போன்ற சிற்றாறுகளின் நீரும் சுய்யரது முயற்சியால் பாசனத்துக்குப் பயன்படுத்தப் பட்டது. இக் காரணங்களினால் பல கிராமங்கள் புதிதாகத் தோன்றியதோடு, வெள்ளமும் பஞ்சமும் தவிர்க்கப்பட்டன. உணவுத் தானியங்களின் உற்பத்தி அதிகரித்து விலைகள் குறைந்தன.

இலக்கியமும் கலையும்

அவந்திவர்மன் நான்கு கவிஞர்களை ஆதரித்ததாகக் கல்கணர் தெரிவிக்கிறார். அவர்கள் ஆனந்தவர்தனர், ரத்னகரர், சிவசுவாமி, முக்தாகணர் ஆகியோர். ஆனந்தவர்தனர் எழுதிய த்வன்யாலோகம், தேவி சதகம் ஆகிய நூல்கள் இன்றும் உள்ளன. ரத்னகரர் சிப்பத ஜெயாபீடரின் காலத்திலேயே வாழ்ந்தவர். ஹர விஜயம் என்ற நூலை அவர் எழுதினர். மற்ற இருவரது செய்யுள்கள் மட்டுமே பிந்திய திரட்டுகளில் காணப்படுகின்றன.

அவந்திவர்மர் அவந்திபுரம் என்ற ஒரு நகரத்தை நிறுவி னூர். இன்று வாந்திபூர் என்று ஜீலத்தின் கரையிலுள்ள ஊரே இது. அவந்தீசுவரர் என்ற சிவாலயமும், அவந்தி சுவாமி என்ற விஷ்ணு ஆலயமும் அந் நகரில் கட்டப்பட்டன. இவற்றின் 8 இடி பாடுகளை இன்றும் காணலாம். இந் நகரத்தின் பெருமைபற்றிப் பிற்காலத்திய நூல்களும் குறிப்பிடுகின்றன. அமைச்சரான சூரர் சூரபுரம் என்ற ஒரு நகரை நிறுவினூர். இன்று இது ஹுர பூர் (Hurapur) என்று வழங்கப் பெறுகிறது. அக் காலத்தில் சிறந்த வாணிப நகரமாக இது விளங்கிற்று. மற்றொரு அமைச்ச ரான சுய்யர் சூரியபுரம் (சுய்யபுரம்) என்ற மற்றொரு பெரிய நகரை நிறுவினூர்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அவந்திவர்மனும் அவரது அமைச்சர்களும் நாட்டில் அமைதியையும் செழிப்பை யும் ஏற்படுத்தினர். அரை நூற்றுண்டு காலக் குழப்பத்துக்குப் பின்னர்க் காஷ்மீர மக்களால் நிம்மதியாக வாழ முடிந்தது. இவ் வரசர் பரம வைஷ்ணவராக வாழ்ந்து லௌகிக அப்தம் 3959ஆம் ஆண்டில் (கி.பி. 883) இறந்தார் என்று ராஜதரங்கிணி குறிப்பிடு கிறது.

சங்கரவர்மன்

அவந்திவர்மனின் மரணத்துக்குப் பின் அரண்மனையின் தலைமை அதிகாரியான (பிரதிகாரண்) ரத்னவர்தனர் மறைந்த அரசரின் மகன் சங்கரவர்மனை அரசனுக்கினூர். ஆனால், அமைச்சர்களுள் ஒருவரான கர்ணபர் என்பவர் அவந்திவர்ம னின் தம்பியான சூரவர்மன் என்பாரது மகன் சுகவர்மனை யுவ ராஜாவாக்கினூர். (அவந்திவர்மனின் காலத்தில் சூரவர்மன் யுவராஜாவாக இருந்து நிறைந்த அதிகாரங்களைப் பெற்றிருந் தார்.) விரைவிலேயே சங்கரவர்மனுக்கும் சுகவர்மனுக்கும் இடையே பகைமை ஏற்பட்டு உள்நாட்டுப் போர் துவங்கிற்று. மிகுந்த சிரமத்துக்குப் பின்னர் சுகவர்மனும் அவரைச் சார்ந் தோரும் தோற்கடிக்கப்பட்டனர்.

போர்கள்

இதன் பின்னர், கார்கோட வம்சத்தின் இறுதிக் காலத்தில் காஷ்மீரத்தின் பிடியிலிருந்து நழுவிப்போன அண்டை அரசு களையெல்லாம் மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் இம் மன்னர் ஈடுபடலானூர்; பெரும் படையோடு தம் வாழ்நாள் முழுவதை யும் போர்களிலேயே செலவிட்டார். பஞ்சாபிற்கு வடக்கில் ஜீலத்

துக்கும் சீனுபுக்கும் இடையிலான தார்வாபிசாரம் (Darvabhisara) என்ற அரசை அவர் கைப்பற்றினர். பின்னர், திரிகர்த்தம் (இன்றைய காங்ரா பகுதி) என்பதன் அரசராயிருந்த பிருதிவி சந்திரரையும் இவர் தோற்கடித்தார். பின்னர், பஞ்சாபிலிருந்த கூர்ஜர அரசின்மீது சங்கரவர்மன் படையெடுத்து அதன் அரசர் அலகானரிடமிருந்து தக்கா (Takka) என்ற பிரதேசத்தைக் கைப்பற்றினர். அலகானருக்கு உதபாண்டத்தைச் சேர்ந்த சாஹி அரசர் லல்லியர் உதவி புரிந்ததால் அவர்மீதும் அடுத்துப் போர் தொடுக்கப்பட்டது. இப் போர் வெற்றியில் முடியவில்லை. மேலும், பிரதிகார அரசர் மகேந்திரபாலரும் பஞ்சாபில் தமது பிரதேசங்களைச் சங்கரவர்மனிடம் ஒப்படைத்தார். இப் பகுதிகளைத் தக்கியர் (Thakkiya) வம்சத்துச் சிற்றரசர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு, சங்கரவர்மன் தலைநகரம் திரும்பினர்.

தார்வாபிசாரத்தின் அரசரான நரவாகனர் சங்கரவர்மனிடம் பணிந்ததால் அவரது அரசு திருப்பியளிக்கப்பட்டது. ஆனல், விரைவிலேயே அவர் துரோகச் செயல்களில் ஈடுபடுகிருர் என்பதைக் கண்ட சங்கரவர்மன் அவரையும் அவரது கூட்டாளிகளையும் கொன்றுர். நரவாகனரின் மகன் ஃபுல்லர் (Phulla) லொகாராவில் (Lohara) மற்றொரு அரசை நிறுவினர். இவரது வம்சத்தினர் நான்கைந்து தலைமுறைக் காலம் அங்கு ஆண்டு வந்தனர்.

அரசரின் கொடுமைகள்

இத்தகைய போர்கள் காரணமாக அரசாங்கத்தின் பொருள் கரைந்தது. எனவே, கூடுதலான வரிகள் விதிக்கப் பட்டன. இவ் வரிகளை வசூலிப்பதற்கெனப் புதிதாகப் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவற்றையெல்லாம்பற்றி ராஜதரங்கிணியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் பல்வேறு வரிகளையும் கட்டணங்களையும் செலுத்துமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். இக் கொடுமைகளை எல்லாம் அரசரது மகன் கோபாலவர்மன் கண்டித்தார். ஆனல், அரசர் தமது மகனின் கருத்துகளை லட்சியம் செய்யவேயில்லை. ஏழைகளின் இன்னல்களைப் பயன்படுத்தி, காயஸ்தர்கள் என்போர் ஏராளமான நிலங்களை மக்களிடமிருந்து பறித்துக் கொண்டனர். இக் காயஸ்தர்கள் கீழ்மட்டத்தில் அரசாங்க அதிகாரிகளாக இருந்தனர். கற்ருேரும் புலவர்களும் இக் காலத்தில் மதிப்பிழந்தனர் என்று கல்கணர் தெரிவிக்கிருர். பல்லதர் (Bhallata) போன்ற புலவர்கள் வறுமையில் வாழலாயினர். பல்லத சதகம் என்பதையும்

பதமஞ்சரி என்ற நிகண்டையும் பல்லதர் இயற்றினர். மது அருந்துதலில் சங்கரவர்மன் அதிக அக்கறை காட்டினர்.

கட்டடங்கள், நாணயங்கள்

ஆயினும், சங்கர கௌரீசர், சுகந்தேசர் என்ற பெயரில் சிவனுக்கு ஆலயங்களைச் சங்கரவர்மன் கட்டினர். சங்கரபுரம் என்ற நகரையும் இவர் நிறுவினர். இன்று பட்டண் (Patan) என்று வழங்கப்படும் கிராமமே அது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[1] இவ் வரசரின் செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. இதுமுதல் எல்லா அரசர்களது நாணயங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. கல்கணர் தரும் அரசர்ப் பட்டியலை ஒப்பிட்டு நோக்குவதற்கு இந் நாணயங்கள் பெரிதும் பயன்படுகின்றன.[2]

அரசரின் முடிவு

காஷ்மீரத்தின் மேற்குப் பகுதியைப் பஞ்சாபுடன் இணைக்கும் பாராமூலா (Baramula) மலைப் பகுதியில் கணவாய்களைக் காக்கும் காஷ்மீர அதிகாரி வீரநகர் என்ற இடத்தில் பகைவர்களால் கொல்லப்பட்டார். உடனே சங்கரவர்மன் படையுடன் புறப்பட்டுச் சென்று வீரநகரைக் கைப்பற்றி அழித்து, மேலும் முன்னேறிச் சிந்துநதிக் கரையில் இருந்த பல சிற்றரசர்களையும் தமக்குப் பணியுமாறு செய்தார். பின்னர், உரசா வழியாக அவர் திரும்பிவந்து கொண்டிருந்தபொழுது அப் பகுதி மக்கள் மறைந்திருந்து அவர் படைமீது தாக்குதல் தொடுத்தனர். அவர்கள் விடுத்த ஓர் அம்பு சங்கரவர்மனது கழுத்தில் பாய்ந்தது. அதை வெளியே இழுக்க முயலும்போது அவர் லௌகிக ஆண்டு 3977-ல் (கி.பி. 902) காலமானர். இதன் பின்னர், அவரது படைகள் அமைச்சர் சுகராஜர் என்பாரது தலைமையில் ஆறு நாட்கள் பயணம் செய்து காஷ்மீரத்தை அடைந்தன. அங்குப் போலியாசகம் (Bolyasaka) என்ற ஊரில் அரசரது உடல் அடக்கம் செய்யப்பட்டு அவரது மகனை கோபாலவர்மன் என்ற சிறுவன் அரசனுக்கப்பட்டான்.

உத்பல வம்சத்தின் சீர்குலைவு

குழப்பங்கள்

கோபாலவர்மன் சிறுவராயிருந்ததால், அவரது தாயாரான சுகந்தா என்பவரே நிர்வாகத்தை நடத்திவந்தார். பிரபாகரர்

[1] Cunningham, *Ancient Geography of India.*

[2] Cunningham, *Coins of Mediaeval India.*

என்ற ஒரு அமைச்சர் சுகந்தாவைத் தம் கைக்குள் போட்டுக் கொண்டு எல்லா அதிகாரங்களையும் பறித்துக் கொண்டார். இவர் சாஹி அரசின்மீது படையெடுத்து, அங்கு அரசைக் கைப் பற்றி யிருந்த சாமந்தர் என்பவரைத் தோற்கடித்துவிட்டு, லல்லிய சாஹியின் மகனுன கமலுகரை (தோரமாணர்) உத பாண்டபுரியில் அரசராக்கிவிட்டு ஸ்ரீநகரம் திரும்பினுர். பின்னர், அரசாங்கத்தின் சொத்துகளை யெல்லாம் சிறிது சிறிதாக அவர் களவாடலானுர். இதை அரசரான கோபாலவர்மர் கண்டிக் கவே, அவரைப் பிரபாகரர் ஏதோ தந்திரம் செய்து காய்ச்ச லுண்டாக்கிக் கொன்ருர். இரண்டு ஆண்டுகளே கோபாலவர்மர் ஆட்சிபுரிந்தார். அவருக்குப் பின் சங்கரவர்மனின் மற்ருெரு மகன் என்று எவனே ஒருவனைக் கொண்டுவந்து, சங்கடர் (Sankata) என்ற பெயரில் அமைச்சர் பிரபாகரர் அரியணையில் அமர்த்திஞர். ஆனுல், பத்தே நாட்களில் இவனும் இறந்து போகவே, அரியணைக்கு வாரிசுகள் யாருமில்லாததால் சுகந்தா விடமே ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஒப்படைத்தனர். அவர் அரசியாகவே ஆகி இருக்க வேண்டுமென்று தெரிகிறது. கோபாலபுரம் என்ற ஊரையும் கோபால கேசவம் என்ற ஆல யத்தையும் சுகந்தா கட்டினுர்.

தந்திரிகளின் ஆதிக்கம்

இக் காலத்தில் நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தித் தந்திரிகள் (Tantrins) என்ற சில படைப் பிரபுக்கள் வலிமை பெற லாயினர். இவர்கள் உயர் அதிகாரிகளையெல்லாம் கூட அச் சுறுத்தி, செல்வாக்கோடு விளங்கினர். இந் நிலையில் சுகவர்ம னின் மகனுன நிர்ஜிதவர்மன் என்பவனை அரசனுக்கும் நோக்கத் தோடு அமைச்சர்களையும் மற்ற அதிகாரிகளையும் சுகந்தா கலந்து பேசினுர். பங்கு (Pangu) என்ற மற்ருெரு பெயரையும் பெற்ற நிர்ஜிதவர்மன் அரசனுவதைத் தந்திரிகள் எதிர்த்தனர். சுமார் இரண்டாண்டுகள் ஆட்சியிலிருந்த சுகந்தாவைப் பதவியி லிருந்து நீக்கி, நிர்ஜிதவர்மனின் மகனுன பார்த்தன் என்ற பத்து வயதுப் பையனைக் கி.பி. 906-ல் அவர்கள் அரியணையில் அமர்த்தினர். அரசியார் அரண்மனையை விட்டு ஹுஷ்கபுரம் என்ற ஊரில் வசிக்கலானுர். காஷ்மீர அரசில் ஒழுங்கையும் அமைதியையும் பராமரிப்பதற்கென ஏகாங்கர்கள் (Ekangas) என்ற காவற்படையொன்று இருந்தது. இதைத் திரட்டி, கி.பி. 914-ல் ஸ்ரீநகரைக் கைப்பற்றுவதற்குச் சுகந்தா முயன்ருர். ஆனுல், தந்திரிகள் இம் முயற்சியைத் தோற்கடித்துச் சுகந் தாவைக் கொன்றனர்.

இதன் பின்னர், தம் மகனுன அரசன் பார்த்தனுக்குப் பாது காவலராக நிர்ஜிதவர்மரே தந்திரிகளால் நியமிக்கப்பட்டார். இதற்காகத் தந்திரிகளுக்கு அடிக்கடி பெரும் தொகைகளை நிர்ஜிதவர்மர் அளிக்க வேண்டியதாயிற்று. இதற்கென மக்கள் மீது பல வரிகளை நிர்ஜிதவர்மர் விதிக்கலானுர். நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கி.பி. 917-ல் இறந்தனர். கி.பி. 918 முதல் 936 வரையில் தந்திரிகளின் ஆதிக்கமே காஷ்மீரில் நடைபெற்றது. கி.பி. 921-ல் தம் மகன் பார்த்தனைத் தந்திரிகளின் உதவியோடு அரியணையிலிருந்து அகற்றிவிட்டு நிர்ஜிதவர்மரே அரசரானுர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தமது இளைய மகன் சக்கரவர்மனை அரசனுக்கிவிட்டு, சில நாட்களிலேயே நிர்ஜிதவர்மர் இறந்து போனுர்.

சக்கரவர்மன் சிறுவனுயிருந்ததால், அவனது தாயும் பாட்டியும் பாதுகாவலராக நியமிக்கப்பட்டனர். பத்தாண்டுகள் வரையில் தந்திரிகளுக்குப் பொருளையும் சலுகைகளையும் நல்கி, சக்கரவர்மனை இவர்கள் அரியணையில் வைத்திருந்தனர். ஆனுல், தந்திரிகளின் பேராசை ஆண்டு தோறும் மிகவாக அதிகரித்துக் கொண்டே சென்றது. கி.பி. 933-ல் சக்கரவர்மனை அகற்றிவிட்டு, அவரது தம்பியான (நிர்ஜிதவர்மரின் மற்றொரு மனைவிக்குப் பிறந்தவர்) முதலாம் சூரவர்மனைத் தந்திரிகள் அரசராக்கினர். ஆனுல், அடுத்த ஆண்டிலேயே பார்த்தர் அதிகப் பணம் கொடுக்கத் தயாராக இருந்ததால், அவரே அரசராக்கப்பட்டார். அதற்கடுத்த ஆண்டில் தாம் மேலும் அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்லி மீண்டும் சக்கரவர்மனே அரியணையைப் பெற்ருர். ஆயினும், தந்திரிகளின் பேராசைக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை விரைவிலேயே உணர்ந்து, அவர்களது தண்டனைக்கு அஞ்சி, தலைநகரைவிட்டு அவர் ஓடினுர். அதன் பின்னர், அமைச்சர்களுள் ஒருவனுன சம்புவர்தனன் என்பவனைத் தந்திரிகள் அரசனுக்கினர்.

தாமரரின் ஆதிக்கம்

கி.பி. 936-ல் இவ்வாறு ஓடிச் சென்ற சக்கரவர்மனை நிலப்பிரபுக்களாகிய தாமரர்கள் ஆதரிக்க முன்வந்தனர். தாமரர்கள் தமக்குள் ஒருவரான சங்கராமர் (Sangrama) என்பாரின் தலைமையில் படையோடு வந்து, பத்மபுரத்துக்கு அருகில் தந்திரிகளைத் தோற்கடித்தனர். இவ்வாறு சக்கரவர்மன் மீண்டும் அரியணையைப் பெற்ருர். சம்புவர்தனர் கொல்லப்பட்டார். ஆயினும், சக்கரவர்மனது ஆட்சி சிறிது காலமே நீடித்தது. தாமரர்கள் விரைவிலேயே அவருக்குப் பகையாயினர். கி.பி.

937-ல் அவர்களில் சிலர் அரண்மனைக்குள் புகுந்து அவரைக் கொன்றனர். இதன் பின்னர், பார்த்தரின் மகன் உன்மத்தா வந்தி (பைத்தியக்கார அவந்தி) என்பவரைத் தாமரர்கள் அரச ராக்கினர். இம் மன்னரும் கொடுமையும் இழி செயல்களும் நிறைந்தவர். அமைச்சரான பர்வ குப்தரின் தீச் சொற்களைச் கேட்டு, தம் தந்தையையும் நெருங்கிய உறவினர்கள் பலரை யும் இவ்வரசர் கொன்றார். எனவே, நாட்டு மக்கள் அனைவரும் இவரை வெறுத்தனர். கி.பி. 939-ல் இவ் வரசர் இறந்தபொழுது மக்கள் மட்டுமின்றி, அவரது பதினான்கு அரசிகளும்கூட மகிழ்ச்சி யில் ஆழ்ந்தனர் என்று கல்கணர் தெரிவிக்கிறார்.

உத்பல வம்சத்தின் முடிவு

தாம் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பே இரண்டாம் சூரவர்மன் என்ற ஒரு சிறுவனைத் தத்தெடுத்து அவனையே அரச னாகவும் உன்மத்தாவந்தி ஆக்கியிருந்தார். அவர் இறந்த உடனேயே அவரது படைத் தலைவரான கமலவர்தனர் படை திரட்டி, மடவராஜ்யம் என்ற ஊரிலிருந்து புறப்பட்டுவந்து, தம்மை எதிர்த்த காவற் படைகளைத் தோற்கடித்துவிட்டு, ஸ்ரீநகரைக் கைப்பற்றினார். தாமே அரசராக அவர் விரும்ப வில்லை. எனவே, பிராமணர்களின் அவையொன்றைக் கூட்டி, மற்றொரு நல்ல அரசரைத் தேர்ந்தெடுக்குமாறு அவர் வேண்டிக் கொண்டார். 'கொம்பில்லாத காளை மாடுகள்' போன்ற இந்தப் பிராமணர்கள் (இது கல்கணரின் வர்ணனை) பேராசைக்காரரும் கொடியவரும், ஆனால் நாவாற்றல் மிக்கவருமான யசஸ்கரர் (Yasaskara) என்பவரை ஐந்தாறு நாட்கள் ஆலோசனைக்குப்பின் தேர்ந்தெடுத்தனர். இந்த யசஸ்கரரின் தந்தையாகிய பிரபாகர தேவர் என்பவர் முந்திய அரசர்களான சங்கரவர்மன், கோபால வர்மன் ஆகியோரது கருவூல அதிகாரியாக (Treasurer) இருந் தவர்; கல்வி கேள்விகளில் சிறந்தவர்.

இவ்வாறுதான் கி.பி. 939-ல் உத்பல வம்சத்தின் ஆட்சி காஷ்மீரத்தில் முடிவுக்கு வந்தது.

4. யசஸ்கர வம்சம்

யசஸ்கரர்

யசஸ்கரர் கி.பி. 939-ல் பதவிக்கு வந்தது முதல் நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலவின என்று கல்கணர் தெரிவிக்கிறார். ஊரிலும் சாலைகளிலும் திருடுகளும் கொள்ளைகளும் நின்று

போயினவாம். மக்களை அதிகாரிகள் கொடுமை செய்யாவாறு யசஸ்கரர் மிகவும் விழிப்போடு பார்த்துக் கொண்டாராம். ஆரிய தேசமாகிய வட இந்தியாவிலிருந்து காஷ்மீரத்துக்குக் கல்வி கற்பதற்காக வந்த மாணவர்கள் தங்குவதற்கென மடம் ஒன்றை அவர் கட்டினுர். இவ்வாறு ஒன்பது ஆண்டுகள் இவர் ஆட்சிபுரிந்தார். இவர் நீதி வழங்கிய திறமையைப்பற்றிக் கல்கணர் புகழ்ந்து பேசுகிருர். ஆயினும், கீழ்க் குலத்தினராகிய தொம்பர்கள், சண்டாளர்கள் ஆகியோரோடு அவர் நெருங்கிப் பழகினுர் என்றும், பேராசை கொண்டு தமது இறுதிக் காலத்தில் கண்ட வழிகளிலெல்லாம் பொருள் சேர்க்கலானுர் என்றும், தீயொழுக்கங்களில் ஈடுபட்டார் என்றும் ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது.

இறுதியில், கொடிய நோயால் அவர் பீடிக்கப்பட்டார். அப்பொழுது தமது மகன் சங்கராமதேவர் என்பவரை வாரிசாக்காமல் தமது சிறிய பாட்டனுரான ராமதேவர் என்பவரின் மகன் வர்ணதர் (Varnata) என்பாரை அமைச்சர்கள், ஏகாங்கர்கள், பெரும் பிரபுக்கள் ஆகியோரது ஆலோசனையின் பேரில் யசஸ்கரர் நியமித்தார். சங்கராமதேவர் தமக்குப் பிறந்த பிள்ளை அல்லர் என்ற ஐயமே இதற்குக் காரணமாம். ஆனுல், யசஸ்கரர் மரணப் படுக்கையில் இருந்தபோதுகூட வர்ணதர் அவரைச் சென்று பார்க்கவில்லை. எனவே, கடைசியில் பர்வகுப்தர் என்ற அமைச்சரின் ஆலோசனையின் பேரில் சங்கராமதேவரையே அவர் வாரிசாக்கினுர். பின்னர், மகனுடனுன தகராறு காரணமாக அரண்மனையைவிட்டு அகன்று ஒரு மடத்துக்குச் சென்று, அங்கே தமது வேலையாட்களால் நஞ்சூட்டப்பட்டு, கி.பி. 948-ல் யசஸ்கரர் இறந்தார்.

சங்கராமதேவர்

சங்கராமதேவர் அரியணை ஏறியபொழுது சிறு பிள்ளையாக இருந்ததால், அவரது பாட்டியார் அவருக்குப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டார். ஆட்சிப் பொறுப்பு முழுவதும் பர்வகுப்தர், மற்ற ஐந்து அமைச்சர்கள் ஆகியோரின் கையிலேயே இருந்தது. பர்வகுப்தர் உன்மத்தாவந்தியின் காலத்திலிருந்தே ஆட்சியைக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டு வந்தார். சிறு பிள்ளையொருவன் அரசனுயிருந்த இத் தக்க தருணத்தைக் கைவிட்டுவிட அவர் விரும்பவில்லை. தமது பகைவர்கள் அனைவரையும் ஒருவர் பின் ஒருவராகத் தீர்த்துக் கட்டி விட்டு, கி.பி. 949-ல் சங்கராம தேவரையும் கொன்று, அவரது சடலத்தை ஜீலம் நதியில் எறிந்துவிட்டு, பர்வகுப்தர் அரியணையில் அமர்ந்தார்.

யசஸ்கரரது ஆட்சி முதல் ராஜதரங்கிணியின் ஆருவது பாகம் (Book VI) தொடங்குகிறது.

5. பர்வகுப்தர் வம்சம்

பர்வகுப்தர்

பர்வகுப்தரைப்பற்றி முன்பே சிறிது பார்த்தோம். எளிய குடும்பத்தில் இவரது பாட்டனுரான அபிநவர் என்பவர் பிறந்தார். அவர் அரசாங்கத்தில் எழுத்தராகப் பணியாற்றினுர். பர்வகுப்தரது தந்தை சங்கராம குப்தர் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியை வகித்தார். எனவேதான், பர்வகுப்தர் அமைச்சராகி, செல்வாக்கோடு திகழ முடிந்தது. இவர் தந்திரமும் பேராசையுமிகுந்த மனிதராயிருந்தார். ஆயினும், ஆட்சிக்கு வந்த பின் மிகுந்த திறமையோடு தந்திரிகள், ஏகாங்கர்கள், பிரபுக்கள், அமைச்சர்கள் முதலிய அனைவரும் தமக்கு அஞ்சும்படியும் அடங்கி நடக்கும்படியும் பர்வகுப்தர் செய்தார். ஆனுல், நோய் கண்டு ஒரே ஆண்டில் அவர் காலமானுர்.

க்ஷேமகுப்தர்

அடுத்தபடியாகப் பர்வகுப்தருடைய மைந்தரான க்ஷேமகுப்தர் கி.பி. 950-ல் அரியணை ஏறினுர். குடி, கேளிக்கைகள் முதலியவற்றில் இந்த இளைஞர் காலத்தை வீணடித்தார். தாமரர்கள் இவரது காலத்தில் சங்கராமர் என்பாரது தலைமையில் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சி க்ஷேமகுப்தரால் அடக்கப்பட்டது. இவ் வரசர் திட்டா (Didda) என்ற ஓர் அரசகுமாரியை மணந்திருந்தார். இப் பெண் லொகாரா அரசரான சிம்மராஜர் என்பவரின் மகளாகவும், சாஹி அரசரான பீமரின் மகள் வயிற்றுப் பேர்த்தியாகவும் இருந்தார். செல்வாக்குமிக்க இரு அரச குடும்பங்களைச் சேர்ந்தவராகத் திட்டா இருந்ததால் க்ஷேமகுப்தரால் இவர் பெரிதும் விரும்பப்பட்டார் என்று தெரிகிறது. க்ஷேமகுப்தரது நாணயங்களில்[1] தி-க்ஷேமகுப்த-தேவர் என்று, அரசர் அரசியார் ஆகிய இருவரின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. திட்ட-க்ஷேமர் என்றே அரசர் அழைக்கப்பட்டார். எட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தபின், கி.பி. 958-ல் க்ஷேமகுப்தர் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

அரசி திட்டா

அபிமன்யு

க்ஷேமகுப்தரின் மரணத்துக்குப் பின், அவர் மகனுன சிறுவன் அபிமன்யு என்பவன் அரசனுனுன். அன்னையாரான

[1] Cunningham, *Coins of Mediaeval India*, See Plate IV.

திட்டா பாதுகாவலராகப் பொறுப்பேற்று நிர்வாகத்தை நடத்த லானுர். அறிவுக் கூர்மையும் ஆற்றலும் மிகுந்த இந்த அரசியார் அக்காலத்திய காஷ்மீர வரலாற்றில் மிகவும் சிறந்த ஒருவராவார். சிறு பிள்ளைகள் அரியணையில் அமர்ந்தபோதெல்லாம் அவர்களை ஏய்த்து அமைச்சர்களும் பிரபுக்களும் அதிகாரத்தைக் கவர்ந்து கொள்வது வழக்கம். எனவே, திட்டாவுக்கும் இத்தகைய மனிதர்களுக்குமிடையில் போட்டி ஏற்பட்டது. தம் கணவரின் காலத்திலேயே நிர்வாகத்தில் மிகுந்த அக்கறை செலுத்தியவர் இந்த அரசியார். காஷ்மீரத்தில் இவரது ஆதிக்கமே கி.பி. 958 முதல் 1003 வரையில் நடைபெற்றது எனலாம்.

சதிகளும் கிளர்ச்சிகளும்

அபிமன்யு பதவிக்கு வந்த சிறிது காலத்திலேயே தலைநக ரான ஸ்ரீநகர் பெரும் தீ விபத்து ஒன்றுக்கு உள்ளாயிற்று. தொம்பர்கள், சண்டாளர்கள் ஆகியோரது தொடர்பால் தீட்டுப் பட்டுப்போன பெரும் அரண்மனைகள் இத் தீயில் வெந்து மாசு நீங்கின என்று கல்கணர் எழுதுவதால், பகைவர்களது செய லாக இது இருக்கலாம் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. பின்னர், அமைச்சர்களுள் ஒருவரான பல்குணர் என்பாருடன் அரசி திட்டாவுக்கு மோதல் ஏற்பட்டது. இந்தப் பல்குணர் தம்முடைய மகள் சந்திரலேகா என்பவளைக் காலஞ்சென்ற அரசர் க்ஷேமகுப்தருக்கு மணமுடித்துக் கொடுத்துப் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தார். எனவே, மற்ற அமைச்சர்களும் திட்டாவும் அவரை வெறுத்தனர். சிறந்த படை வீரராகவும் விளங்கிய பல்குணர் இவர்களின் பகைக்கு அஞ்சித் தமது படை யுடன் நாட்டின் ஒரு மூலைக்கு அகன்று சென்றுர். இதையடுத்து மகிமான் (Mahiman), பாடலர் (Patala) ஆகிய இரு பிரபுக்கள் திட்டாவுக்கு எதிராகச் சதிசெய்வது கண்டுபிடிக்கப் பட்டது. இவர்கள் இருவரும் பர்வகுப்தரது மகள் வயிற்றுப் பேரர்களாக அரண்மனையிலேயே செல்வாக்குடன் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களை அரண்மனையிலிருந்து திட்டா விரட்டினுர். பின்னர் இவர்கள் படைதிரட்டிக் கிளர்ச்சியில் இறங்கினர். இவர்களைப் பல பிராமணர்கள் ஆதரித்தனர். இவர்களை முறியடிப்பது கடினம் என்பதைக் கண்ட அரசியார் இவர்களுடன் சமாதானம் செய்து கொண்டார். இந்தப் பிராமணர்களுள் ஒருவரான யசோதரர் என்பவர் பின்னர்ப் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்த யசோதரர் சாஹி அரசர் தக்கணர் என்பவரைத் தோற்கடித்தார். ஆனுல், அவரிடமிருந்து கையூட்டுப் பெற்றுக் கொண்டு, அவரையே தொடர்ந்து அரசராக இருக்க யசோதரர்

அனுமதித்தார் என்று திட்டாவிடம் கூறப்பட்டது. இதனால் யசோதரரை நாடுகடத்தினார் அரசியார். உடனே யசோதரர் தமது படையோடு சென்று அரண்மனையை முற்றுகையிட்டார். அமைச்சர் நரவாகனர், காவற்படையினரான ஏகாங்கர்கள் ஆகியோர் யசோதரரைத் தோற்கடித்தனர். இக் கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் கடுந் தண்டனைக்கு ஆளாயினர். இதற்குப் பின், நரவாகனருடைய செல்வாக்குப் பெரிதும் அதிகரித்தது. இதனால் பொருமை கொண்ட கருவூல அதிகாரி ஒருவன் நரவாகனர் அரியணையைக் கவர்ந்துகொள்ளச் சூழ்ச்சி செய்கிறார் என்று அரசி திட்டாவிடம் பொய்க் கதைகளைக் கட்டிவிட்டான். இதை நம்பிய அரசியார் நரவாகனரை மிகவும் அவமரியாதையாக நடத்தலானார். இதனால் மனம் நொந்த அவ் வமைச்சர் தற்கொலை செய்து கொண்டார். இச் சமயத்தில் தாமரர்கள் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சி நடந்து கொண்டிருந்த பொழுது, திட்டாவுக்கு வலது கரம் போன்றிருந்த படைத் தளபதி ரக்கா (Rakka) காலமானார். நிலைமையைச் சமாளிக்க வேண்டி, பல்குணருக்கு அரசியார் தூதனுப்பி அவரை அழைத்தார். அவரும் பழைய நிகழ்ச்சிகளை மறந்து திரும்பிவந்து படைத்தலைவராய் அமர்ந்தார். தாமரர்களின் கிளர்ச்சியை ஒடுக்கியதோடு, ராஜபுரி (இன்றைய ராஜோரி) என்ற மலைப் பிரதேசத்தையும் பல்குணர் வென்றார்.

திட்டாவின் தீச்செயல்கள்

அரசன் அபிமன்யு பதினான்கு ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு கி.பி. 972-ல் மரணமடைந்தான். இம் மரணம் திட்டாவுக்குப் பெருந் துக்கத்தைத் தந்தது. அபிமன்யுவின் மூத்த மகனான நந்திகுப்தனை அரசனாக்கிவிட்டு, ஆலயங்கள், மடங்கள், நகரங்கள் ஆகியவற்றை நிறுவுவதில் திட்டா கவனம் செலுத்தினார். திட்டாசுவாமி என்ற பெயரில் விஷ்ணுவுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. திட்டாபுரம், கங்கணபுரம் எனும் நகரங்களும், பல விகாரங்களும் மடங்களும் நிருமிக்கப்பட்டன. அவரால் கட்டப்பட்ட திட்டாமடம் என்னும் பெயரே இன்றும் ஸ்ரீநகரின் மேற்குப் பகுதிக்கு வழங்கி வருகிறது.

இச் சமயப் பணிகளெல்லாம் ஓராண்டு மட்டுமே நடைபெற்றன. இதன் பின்னர்ப் பதவி ஆசையும் மற்றத் தீக் குணங்களும் அவரைப் பீடித்தன. ஏதோ காரணத்தினால் தம் பேரனும் அரசனுமான நந்திகுப்தனையே கி.பி. 973-ல் சூனியம் வைத்து திட்டா கொலை செய்தார் என்று கூறப்படுகிறது. அடுத்தபடி

யாக அபிமன்யுவின் மற்ெருரு மகனுன திரிபுவனன் அரசனுக்கப் பட்டான். ஆனுல், இவனையும் அதேபோல் இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு கி.பி. 975-ல் திட்டா கொல்ல ஆணையிட்டார். அடுத்தபடியாக, அபிமன்யுவின் கடைசி மகனுன சிறுவன் பீமகுப்தன் அரியணையில் அமர்த்தப்பட்டான். ஓரிரண்டு ஆண்டுகளில் அமைச்சர் பல்குணர் காலமானுர். பீமகுப்தன் ஓரளவு வளர்ந்து வாலிபனுகி, தன் பாட்டியின் திட்டங்களும் இயல்புகளும் நடத்தையும் பிடிக்காமையால், அவற்றைக் கண்டித்து மாறுதல்கள் செய்ய விரும்பினுன். உடனே அவனை யும் திட்டா சிறையிலடைத்துக் கி.பி. 980-ல் சித்திரவதை செய்து கொன்ருர்.

திட்டா அரியணை ஏறுதல்

இதன் பின்னர், திட்டாவே அரசியாக முடிசூட்டிக் கொண் டார். இச் சதிகளிலெல்லாம் அவருக்கு உதவியாக இருந்த துங்கர் (Tunga) முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இந்தத் துங்கர் ஆரம்பத்தில் எருமை மந்தையை மேய்ப்பவராக இருந்து, பின்னர் அரசாங்கத்தின் கடிதங்களை எடுத்துச் செல்லும் தூத ஞகச் சிறிது காலம் பணியாற்றி, திட்டாவுக்கு மிகவும் நெருங்கிய ஆளாக ஆனுர் என்று சொல்லப்படுகிறது. துங்கரின் நான்கு சகோதரர்கள் உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இதனுல் பதவியும் செல்வாக்குமிழந்த முன்னுள் அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒன்றுகூடி, திட்டாவின் சகோதரர் மகனுன விக்கிரகராஜரை ஸ்ரீநகர்மீது படையெடுத்து வருமாறு அழைத் தனர். அவரும் லொகாராவிலிருந்து படையுடன் ஸ்ரீநகர் நோக்கிப் புறப்பட்டார். விக்கிரகராஜருக்கு ஆதரவாக ஸ்ரீநகரில் பிராமணர்கள் உண்ணுவிரதம் துவக்கினர். திட்டா இவர்களில் பலருக்குப் பொன்னையும் பொருளையும் தந்து இத் திட்டத்தை முறியடித்தார். விக்கிரகராஜரின் முயற்சி தோற்றது. அவர் லொகாராவுக்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று. விக்கிரக ராஜர் இரண்டாவது முறையும் படையெடுத்துத் தோல்வியுற்றுப் பின்வாங்கினுர்.

இத் தருணத்தில், காஷ்மீரத்துக்குக் கட்டுப்பட்டிருந்த ராஜபுரி அரசர் பிருதிவிபாலர் என்பவர் சுதந்திரமான அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். அவருக்கெதிராக அனுப்பப் பட்ட காஷ்மீரப் படை முற்றிலுமாக அழிக்கப்பட்டது. துங்கரும் அவருடைய சகோதரர் ஒருவரும் வேறொரு வழியாக ராஜபுரி அரசுக்குள் புகுந்து பிருதிவிபாலரது படைகளைத் தோற்கடித்து அவரது தலைநகருக்கும் எரியூட்டினர். உடனே பிருதிவிபாலர்

பணிந்து காஷ்மீரத்துக்குக் கப்பம் செலுத்த மீண்டும் இணங்கினர். இந்த வெற்றிக்குப் பரிசாகப் படைத் தலைவராகத் துங்கர் நியமிக்கப்பட்டார்.

திட்டாவின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் தாமரர்கள் மீண்டும் ஒரு கிளர்ச்சியைத் துவக்கினர். துங்கர் இதனையும் மிகுந்த திறமையோடு அடக்கினர். வயது முதிர்ந்த நிலையில் அரசி திட்டா தம் சகோதரரும் லொகாராவின் அரசருமான உதயராஜர் என்பாரின் மகன் சங்கராமராஜருக்கு இளவரசுப் பட்டம் கட்டியபின், கி.பி. 1003-ல் காலமானர். இவ்வாறு தான் 'லொகாரா வம்சம்' என்ற புதிய அரசவம்சம் காஷ்மீரத்தில் பட்டத்துக்கு வந்தது.

மதிப்பீடு

அரசி திட்டா ஆற்றல்மிக்க ஒரு பெண்மணி என்பதில் சிறிதும் ஐயமில்லை. பழைய அமைச்சர்கள், அதிகாரிகள், பிராமணர்கள், தாமரர்கள், சிற்றரசர்கள் ஆகிய அனைவரின் எதிர்ப்பையும் கிளர்ச்சிகளையும் துணிச்சலோடு சமாளித்து வெற்றி பெற்றார் இவர். இவருடைய கொடுமைகளும் தீச்செயல்களும் அருவருக்கத் தக்கனவாயினும், அவற்றை மட்டும் வைத்து இவரது அரிய திறமையினைக் குறைத்து மதிப்பிட முடியாது. இவருக்கு உறுதுணையாக இருந்த துங்கர் எந்தச் சவாலையும் சமாளிக்கும் திறமை மிக்கவராய் இருந்தார். துணிச்சலும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஆசையும், செயல்களில் நிதானமும் திட்டாவிடம் காணப்பட்ட நல்ல அம்சங்களென்று கல்கணரே ஒப்புக்கொள்கிறார். குழப்பங்கள் நிறைந்த ஒரு காலத்தில் காஷ்மீர அரசைச் சிதறுண்டு போகாமல் காத்த பெருமை அரசி திட்டாவையும் அமைச்சர் துங்கரையுமே சாரும். மேலும், அரியணைக்கு வாரிசில்லாத நிலையில் லொகாரா வம்சத்து இளவரசன் ஒருவனைப் பட்டத்து வாரிசாக்கிப் போரோ அல்லது குழப்பமோ நேரிடாமல் அமைதியான முறையில் புதிய அரச வம்சம் ஒன்று ஸ்ரீநகரில் ஆட்சிக்கு வருமாறு திட்டா செய்தது பெரிதும் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும். இந்த அரசியார் நிருமித்த ஆலயங்களும், மடங்களும், விகாரங்களும், நகரங்களும் பல நூற்றுண்டுகள் வரையில் நிலைபெற்றிருந்தன. இவற்றைப்பற்றி மேலும் சிறிது விரிவாக ஏற்கெனவே பார்த்தோம்.

6. முதலாம் லொகாரா வம்சம்

சங்கராமராஜர்

திட்டாவின் விருப்பத்துக்கிணங்க, சங்கராமராஜர் துங் கரையே தம் முதலமைச்சராகத் தொடர்ந்து இருக்குமாறு செய் தார். மீண்டும் பிராமணர்களும் புரோகிதர்களும் துங்கருக்கெதி ராகத் திரண்டு அவரைப் பதவியிலிருந்து விரட்ட முயன்றனர். இம் முயற்சியும் தோற்கடிக்கப்பட்டது. ஆயினும், நாளடைவில் வயோதிகம் காரணமாகவும் இடையருத அரசாங்க வேலை, தொல்லைகள் ஆகியவை காரணமாகவும் அவரது ஆற்றல் குறையலாயிற்று. உதவிக்காக அவரால் நியமிக்கப்பட்ட முக்கிய அதிகாரிகள் சிலர் தங்களது ஊழல்கள் காரணமாக மக்களிடையில் அதிருப்தியைச் சம்பாதித்தனர். ஆலயங்கள், மடங்கள், பிராமணர்கள் ஆகியோரின் மானிய நிலங்களையும் சொத்துகளையும் இந்த அதிகாரிகள் அபகரித்துக் கொண்டனர். இதனுல் துங்கரின் நற்பெயர் கெட்டது.

துங்கரின் முடிவு

இச் சமயத்தில்தான் கசினி மகமூது இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தார். அவரால் தாக்கப்பட்ட சாஹி அரசர் திரி லோசன பாலர் தமது நாட்டை இழந்து, காஷ்மீரத்துக்குள் அடைக்கலம் புகுந்தார். உடனே துங்கரின் தலைமையில் ஒரு பெரும் படை சாஹி அரசருக்குத் துணையாக அனுப்பப்பட்டது. திரிலோசன பாலரின் யோசனைகளை உதாசினம் செய்து துங்கர் அவசரப்பட்டுத் தோசி (Tosi) அல்லது தௌசி (Tausi) நதியைக் கடந்து கசினியின் படைகளைத் தாக்க முயன்ருர். ஆனுல், பகைவர்கள் அவரை அடியோடு முறியடித்து நிலைகுலைந்து புற முதுகு காட்டி ஓடும்படி செய்தனர். தோல்வியுற்று ஸ்ரீநகருக்குத் திரும்பிய துங்கரைக் கண்டு எதிரிகள் மகிழ்ந்தனர். அரசர் சங்கராமராஜரின் தம்பியான விக்கிரகராஜரும் துங்கருடைய விரோதிகளுடன் சேர்ந்து கொண்டார். அரசரும் இவர்கள் வகுத்த திட்டங்களுக்கு மறைமுகமாக ஆதரவு நல்கினுர். ஒரு நாள் துங்கரும் அவர் மகனும் அரண்மனைக்கு வந்தபொழுது சதி காரர்கள் அவர்களைத் தாக்கிக் கொன்றனர். பெரிய அதிகாரிகள் அனைவரும் சுயநலம் மிகுந்தும், அரசருக்குத் துரோகம் செய்யச் சற்றும் கூசாமலும் இருந்த ஒரு காலத்தில் இறுதி வரையில் தமது அரசுக்கும் அரசருக்கும் மிகுந்த விசுவாசத்துடனும் உண்மை யோடும் பணியாற்றிய துங்கர் கீழ்க்குலத்தில் பிறந்தவராயினும், உயர்ந்த மனிதர்களில் ஒருவராவார். அவரை அடுத்துவந்த

அமைச்சர்களும் அதிகாரிகளும் கருவூலத்தையும் மக்களையும் கொள்ளையடித்துக் கோடி கோடியாகப் பணம் சம்பாதித்தனர் என்று கல்கணர் தெரிவிக்கிறார். சங்கராமராஜரின் ஆட்சி முதல் ராஜதரங்கிணியின் ஏழாவது பாகம் (Book VII) துவங்குகிறது.

கசினி மகமூதின் படையெடுப்பு

கசினி மகமூது காஷ்மீரத்தின்மீது படையெடுப்பதற்குப் பல முறை முயன்றார். முதலாவது முறை கி.பி. 1013-ல் தோசி (இன்றைய தோகி) நதிக்கரை வரையில் அவர் வந்தார். அங்கிருந்து காஷ்மீரத்துக்குள் அவரால் நுழைய முடியவில்லை. துங்கரும் திரிலோசனபாலரும் தோசி நதிக்கரையில் கசினி மகமூதுடன் பொருத ஆண்டு கி.பி. 1013 ஆகும். பின்னர்க் கி.பி. 1015-லும் 1021-லும் மகமூது மீண்டும் முயன்றார். சில இந்து அரசர்களின் உதவி அவருக்கு இருந்தும் கூட, இம் முயற்சிகள் பலனளிக்க வில்லை. இவற்றை யெல்லாம்பற்றிக் கசினி மகமூதுவின் படையெடுப்புப்பற்றிய தலைப்பில் விரிவாகப் படிக்கலாம்.

அனந்தர்

சங்கராமராஜர் ஆற்றல்மிக்க அரசர் அல்லர். அவரால் சாதிக்கப்பட்டதாக எந்த நிகழ்ச்சியையும் கல்கணர் குறிப்பிடவில்லை. கி.பி. 1028-ல் அவர் காலமானபின், அவர் மகனை ஹரிராஜர் அரசரானார். இருபத்திரண்டே நாட்கள் அரியணையில் இருந்தபின் அவரும் காலமானார். அவரது தாயாரான ஸ்ரீலேகா தானே ஆளும் எண்ணத்துடன் சூனியம் வைத்து ஹரிராஜரைக் கொன்றதாக மக்கள் பேசிக் கொண்டனர். ஆனால், காவற் படையினரான ஏகாங்கர்கள் ஸ்ரீலேகாவின் கடைசிப் பிள்ளையான அனந்தரை அரசராக்கினர். இக் குழப்பத்தைப் பயன்படுத்தி, லொகாரா அரசர் விக்கிரகராஜர் படையுடன் வந்து ஸ்ரீநகரத்தைக் கைப்பற்றினார். ஆனால், ஸ்ரீலேகாவின் படைகள் அவரைக் கொன்று அவரது போர் வீரர்களை விரட்டியடித்தன. இந்த விக்கிரகராஜர் அனந்தரின் பெரிய தந்தை ஆவார் (சங்கராமராஜரின் அண்ணன்).

காஷ்மீரத்தில் சாஹிகள்

சாஹிகள் தங்களது அரசை இழந்து காஷ்மீரத்தில் அப்போது வசித்து வந்தனர். அவர்கள் அனந்தருடன் மிகவும் நெருங்கிப் பழகி, அவரால் பெரிதும் நேசிக்கப்பட்டு, நிறைந்த ஊதியங்களும் பெற்று வந்தனர். பின்னர், காஷ்மீரத்தின்மீது

தொடுக்கப்பட்ட அந்நியரின் படையெடுப்புகளின்போது காஷ்மீரத்துக்காக இவர்கள் தீரத்துடன் போரிட்டனர். சாஹிகளின் நெருங்கிய உறவினர் ஒருவரின் பெண்ணாகிய சூரியமதியை அனந்தர் திருமணம் செய்துகொண்டார்.

சாஹி இளவரசர் ருத்திரபாலர் என்பாரது மைத்துனியே (மனைவியின் தங்கை) சூரியமதி. சில ஆண்டுகளுக்குப் பின்னர், சாஹி இளவரசர்கள் பலர் ஏதோ கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்து போயினர். இதன் பின்னர்ச் சூரியமதி பல ஆலயங்களையும் மடங்களையும் நிறுவினார். அனந்தருக்கும் சூரியமதிக்கும் ராஜராஜன் என்ற மகனொருவன் பிறந்தான். இம் மகன் இளமையிலேயே இறந்துபோனான். அரசு நிர்வாகத்திலும் சூரியமதி தன் கணவருக்குப் பெரிதும் உதவியாயிருந்தாள்.

போர்கள்

அனந்தர் ஆட்சிக்கு வந்து அமர்ந்த சிறிது காலத்திலேயே அவருடைய படைத் தலைவரான திரிபுவனர் தாமரர்களுக்குத் தலைமை தாங்கி, அவரை எதிர்த்தார். மிகுந்த சிரமத்தோடு, சாஹி இளவரசரான ருத்திரபாலரது துணையோடு, ஏகாங்கர்களைத் திரட்டி அனந்தர் இந்த முயற்சியை முறியடித்தார். பின்னர், தரதர்களின் (அல்லது தரத்களின்) அரசரான அசலமங்கலர் என்பவரைக் காஷ்மீரத்தின்மீது படையெடுத்து வருமாறு சில தாமரர்கள் வேண்டிக் கொண்டனர். இப் படையெடுப்பில் பஞ்சாபில் இருந்த முஸ்லிம் பிரபுக்கள் சிலரும் பங்கு கொண்டனர். இப் படையெடுப்பையும் ருத்திரபாலரே வென்று, எதிரிகளை விரட்டினார். இவ்வாறு சாஹிகள் அனந்தருக்குச் செய்த உதவிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அனந்தர் ஆடம்பரமான பல செலவுகள் காரணமாகக் கடனில் மூழ்கினாரென்றும், சூரியமதியின் திறமைமிக்க நிதி நிர்வாகம் காரணமாகவே இந்நிலை மாறிற்று என்றும் தெரிகின்றன.

ஹலதரர் என்ற வைசியரை முதலமைச்சராகச் சூரியமதி நியமித்தாள். இவரும் திறமை மிகுந்த மனிதர். அரசியும் அமைச்சரும் காஷ்மீரத்தில் அனுமதியையும் வளப்பத்தையும் நிலைநாட்டினர். நல்ல நிதி நிலைமையைப் பயன்படுத்தி அனந்தர் அந்நியப் படையெடுப்புகளில் இறங்கினார். சம்பா, தார்வாபிசாரம், திரிகர்த்தம், பர்துலம் (Bhartula) ஆகிய மலைப் பிரதேசங்களை அனந்தர் வென்றார் என்பது பில்கணரது விக்கிரமாங்க தேவசரிதம் என்ற நூலின்மூலம் அறியப்படுகிறது. சம்பாவில் கிடைத்த செப்பேட்டில் குறிக்கப்படும் சாலவாகன

தேவரே அனந்தரால் தோற்கடிக்கப்பட்ட சாலர் (Sala) ஆவார் என்று கீல்ஹார்ன் போன்ற அறிஞர்கள் முடிவு செய்கின்றனர். இந்தச் சாலருக்குப் பதிலாக அவர் மகனுன சோமவர்மனைச் சம்பாவில் அனந்தர் அரசராக்கினுர். பின்னர் உரசா, வல்லாபுரம் ஆகிய மலைப்பிரதேசங்களின்மீது இவர் தொடுத்த போர்கள் தோல்வியில் முடிந்தன.

முடிதுறத்தல்

நீண்ட ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட இத் தோல்விகள் அனந்தரது செல்வாக்கைக் குறைத்தன. சில தாமரர்கள் கிளர்ச்சியும் செய்தனர். இந் நிலையில் அரசியாரான சூரியமதி தமது மகன் கலசருக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்று கணவரை வற்புறுத்திஞர். ஹலதரர் போன்ற சிலர் இந்தத் திட்டத்தை எதிர்த்தனராயினும், அனந்தர் தம் மனைவியின் வற்புறுத்தலுக் கிணங்கக் கி.பி. 1063-ல் தம் மகன் கலசருக்கு அரச பட்டம் சூட்டி, முடிதுறந்தார்.

கலசர்

கலசர் அரசராக்கப்பட்டு விட்டாலும்கூட, அனந்தருக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை. எனவே, ஹலதரருடைய உதவியுடன் அனந்தரே ஆட்சிப் பொறுப்பைச் சிறிது காலத்திற்குப் பின்னர் மேற்கொண்டார். கலசர் பெயரளவில் மட்டுமே அரசராயிருந்தார். இச் சமயத்தில் லொகாரா அரசரான க்ஷிதிராஜர் (அனந்தரின் பெரிய தந்தையாகிய விக்கிரகராஜரது மகன் இவர்) தம் மகனுகிய புவனராஜன் கலகம் செய்த காரணத்திஞல், அவனை வெறுத்தொதுக்கிக் கலசரது மகனுன உத்கர்ஷர் (Utkarsha) என்பவரையே தமது வாரிசாக்கினுர். ராஜபுரி போன்ற பல அண்டை அரசுகளின் சிற்றரசர்களை அனந்தர் தோற்கடித்து, அவர்கள் தமக்குக் கப்பம் கட்டுமாறு செய்தார்.

தந்தையுடன் தகராறுகள்

கலசர் எவ்வித நிர்வாகப் பொறுப்புமின்றிச் சிறிது காலம் கேளிக்கைகளில் மூழ்கிக் காலம் கழித்து வந்தார். விரைவிலேயே நிர்வாகத்தைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று தம் தந்தையுடன் அவர் சண்டை பிடிக்கலாஞர். இறுதியில் சூரியமதியின் ஆலோசனையை ஏற்று, நிர்வாகத்திலிருந்து விலகி, செல்வமனைத்தையும் எடுத்துக் கொண்டு, புண்ணிய தீர்த்தமான விஜயேசுவர நகரத்துக்கு அனந்தர் சென்று விட்டார் (1079). சூரியமதியும் ஏராளமான படைகளுடன் அரசரோடு

சென்றுவிட்டாள். நிதியனைத்தையும் அவருடைய தந்தை கொண்டு சென்றுவிட்டதால், கலசர் மிகுந்த சிரமங்களுக்கு ஆளானுர். எனவே, தந்தைக்கும் மகனுக்குமிடையே பகைமை தொடர்ந்தது. அனந்தர் தம் மகன்மீது படையெடுத்து அவரை அரியணையிலிருந்து அகற்றுவதற்குத் திட்டமிட்டார். சூரியமதி இதற்கும் குறுக்கே நின்ருள். பின்னர்க் கலசரது மூத்த மகன் ஹர்ஷரை அரசராக்கும் நோக்கத்துடன் அவரை (ஹர்ஷரை) விஜயேசுவரத்துக்கு அனந்தர் வருமாறு செய்தார். இதனுல் வெகுண்ட கலசர் விஜயேசுவர நகரத்துக்குத் தீயிட்டுத் தம் தந்தையின் நிதியனைத்தையும் அழித்தார். அனந்தர் வேறொரு சிற்றூருக்குச் சென்று வாழவேண்டுமென்றும் கலசர் வற்புறுத்திஞர். இந் நிலையைக் கண்ட அனந்தர் கி.பி. 1081-ல் தற்கொலை செய்து கொண்டு தமது வாழ்க்கையை முடித்துக் கொண்டார். சூரியமதியும் உடன்கட்டை ஏறிஞள்.

திறமையான ஆட்சி

தந்தையின் மரணத்துக்குப் பின்னர், கலசர் நாட்டின் நிர்வாகத்தைச் சீர்படுத்துவதில் மிகுந்த நாட்டம் செலுத்திஞர். மக்களை அவர் தம் சொந்தப் பிள்ளைகள் போல் பாவித்து, அவர்களுக்குப் பல நன்மைகளைப் புரிந்தார் என்று கல்கணர் எழுதுகிருர். பாட்டனுரின் தூண்டுதலால் தந்தைமீது பகைமை பாராட்டிய ஹர்ஷருக்கு நல்ல அறிவுரைகள் கூறி, ஸ்ரீநகருக்குத் திரும்பி வந்து ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்தார் கலசர். நாட்டின் நிர்வாகமும் நிதிநிலையும் மேம்படுத்தப்பட்டன. மக்கள் மகிழ்ச்சியிலும் செழிப்பிலும் வாழ்ந்தனர்.

ராஜபுரியைச் சேர்ந்த சிற்றரசர் சங்கராமபாலரை எதிர்த்து அவரது சிற்றப்பராகிய மதனபாலர் அரியணையைக் கவர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் கிளர்ச்சி செய்து வந்தார். சங்கராமபாலரது வேண்டுகோளுக்கிணங்கக் காஷ்மீரப் படைகள் ராஜபுரிக்குச் சென்று மதனபாலரைத் தோற்கடித்து அவரைச் சிறைப்பிடித்துக் காஷ்மீரத்துக்குக் கொண்டுவந்தன. இதனுல் ராஜபுரி காஷ்மீரத்துக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாயிற்று. பின்னர்க் கலசருடைய படைகள் உரசாவைத் தாக்கிக் கைப்பற்றின. கி.பி. 1087-ல் அண்டையிலிருந்த எட்டுச் சிற்றரசர்கள் ஸ்ரீநகரில் கலசரது அவைக்கு வந்து அவரைப் பணிந்து சென்றனர். சம்பா, வல்லாபுரம், ராஜபுரி, லொகாரா, உரசா, காண்டா (Kanda), காஷ்தவாதம் (Kashthavata), பத்தாபுரம் ஆகியவற்றின் அரசர்களே இவர்கள். காஷ்மீரத்தின் மேலாதிக்

கத்தை இவர்கள் ஏற்றுக் கொண்டதையே இது தெரிவிக்கின்றது.

முடிவு

திறமையும் அன்பும் நிறைந்தவராகக் கலசர் இருந்தபோதிலும், அவரது மூத்த மைந்தராகிய ஹர்ஷர் தம் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சிகளிலும் சதிகளிலும் ஈடுபடலானார். இத்தகைய சதியொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஹர்ஷர் சிறையிலடைக்கப்பட்டார். இது கி.பி. 1088ஆம் ஆண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அடுத்த ஆண்டிலேயே அரசரது உடல்நிலை மிகவும் சீர்கெட்டது. லொகாராவில் அரசனாக இருந்த தம் இரண்டாவது மகன் உத்கர்ஷரைத் தருவித்து அவரையே அரியணைக்கு வாரிசாக நியமித்துவிட்டுக் கலசர் காலமானார்.

உத்கர்ஷர்

கி.பி. 1089-ல் அரியணை ஏறிய உத்கர்ஷரை விரைவிலேயே அரச குடும்பத்தினர் பலரும் எதிர்க்கலாயினர். கலசரின் மற்றப் பிள்ளைகளான விஜயமல்லர், ஜெயராஜர் ஆகியோரும் ஒன்று சேர்ந்து சில தாமரர்களையும் தம் பக்கம் திரட்டிக் கொண்டு உத்கர்ஷருடைய படைகளைத் தோற்கடித்தனர். பின்னர், ஸ்ரீநகரிலிருந்த அவரது அரண்மனையும் சூழ்ந்து கொள்ளப்பட்டது. ஹர்ஷரை விடுவிப்பதே தங்களது நோக்கம் என்று இவர்கள் கூறினர். சமாதானத்தை விரும்பிய உத்கர்ஷர் தம் அண்ணன் ஹர்ஷரைச் சிறையிலிருந்து விடுவித்தார். உடனே உத்கர்ஷரை அவருடைய பகைவர்கள் பிடித்துச் சிறையில் தள்ளினர். இந்த அவமானத்தைத் தாங்கமுடியாமல் தமது கையாலேயே தம் கழுத்தை அறுத்துக் கொண்டு உத்கர்ஷர் தற்கொலை புரிந்துகொண்டார். இருபத்திரண்டு நாட்கள் மட்டுமே காஷ்மீரத்து அரசராயிருந்தார் அவர்.

ஹர்ஷர்

ஹர்ஷரது திறமைகள்

கி.பி. 1089-ல் இவ்வாறு அரியணையைப் பெற்ற ஹர்ஷர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். பல மொழிகளை அவர் தெரிந்திருந்தார்; அம் மொழிகள் அனைத்திலும் கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்தார். எல்லா நூல்களையும் அறிந்திருந்ததுடன், இசைப் புலவராயும் ஹர்ஷர் திகழ்ந்தார். அவரது இசையைக்

கேட்டு அவர் தந்தையே மிகவும் மகிழ்ந்தாராம். போர்த் திறமையிலும் இம் மன்னர் சிறந்து விளங்கினர். அரசரான பின், இவரது அவையில் புலவர்களும் கலைஞர்களும் சூழ்ந்திருந் தனர். கலசரது காலத்தில் காஷ்மீரத்தை விட்டகன்று கர்நாட கத்தில் சாளுக்கிய அரசரின் அவைக்குச் சென்றுவிட்ட பெருங் கவிஞர் பில்கணர்கூட, ஹர்ஷரது அரசவையில் தம்மால் இருக்க முடியாமற் போயிற்றே என்று வருத்தப்பட்டாராம்.

படையெடுப்புகளும் சதிகளும்

ஆட்சிக்கு வந்ததும், தம் தந்தையின் அமைச்சர்கள் அதி காரிகள் ஆகியோரை மதித்து, தொடர்ந்து அவர்கள் தத்தம் பதவிகளில் நீடித்திருந்து வரலாமென்று ஹர்ஷர் அவர்களை வேண்டிக் கொண்டார். இதனல் நிர்வாகம் தொடர்ந்து நன் முறையில் இருந்தது. அரசவையில் கோலாகலமும் ஆடம்பரமும் குடிகொண்டன. புதிய ஆடைகளிலும் அணிகலன்களிலும் ஹர்ஷர் நிறைந்த விருப்பம் காட்டினர். புதிய தங்க நாணயங் களும் அவரால் வெளியிடப்பட்டன. ஹர்ஷர் ஆட்சிக்கு வந்த தும் ராஜபுரி அரசர் சங்கராமபாலர் அவருக்குப் பகையாகிப் படைதிரட்டினர். தமது படைத் தலைவர் கந்தர்ப்பர் என்பாரது தலைமையில் படையை அனுப்பி, சங்கராமபாலரைத் தமக்குத் தொடர்ந்து கப்பம் கட்டிவருமாறு ஹர்ஷர் செய்தார். லொகாரா வின்மீதும் கந்தர்ப்பர் படையெடுத்துச் சென்று, அந் நாட்டை யும் தம் அரசருக்குப் பணியுமாறு செய்தார். எனினும், சீக்கிரமே கந்தர்ப்பரது விசுவாசத்தை ஹர்ஷர் சந்தேகிக்கலானர். இதனல் கந்தர்ப்பர் தமது குடும்பத்தோடு காஷ்மீரத்தை விட்டு வெளியேறி, வாராணசிக்குச் சென்று வசிக்க வேண்டிய நிலை உருவாயிற்று. ஹர்ஷரின் தம்பிகளான விஜயமல்லர், ஜெய ராஜர் ஆகியோர் தங்கள் அண்ணனின் அதிகாரிகளாகச் சிறிது காலம் இருந்தனர். பின்னர் விஜயமல்லர் கிளர்ச்சி செய்யவே, அவர் தோற்கடிக்கப்பட்டு, தரதர் நாட்டுக்கு ஓடவேண்டிய தாயிற்று. அங்குப் பனிமலை சரிந்து வீழ்ந்ததால் அவர் கொல்லப் பட்டார். சிறிது காலத்துக்குப்பின் ஜெயராஜரும் சதிகளில் ஈடு பட்டார். அவை வெளிப்பட்டு, அவரும் அவருடைய பல உடந்தைக் குற்றவாளிகளும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். உத்கர்ஷரின் மூத்த மகனை தொம்பரும் (Domba) இச் சதி காரணமாக உயிரிழந்தார்.

ஆட்சியில் சீர்கேடுகள்

ஹர்ஷரது ஆடம்பரச் செலவுகளும் போர்களும் கரு வூலத்தைக் காலியாக்கின. எனவே, ஆலயங்களின் மடாலயங்

களின் செல்வங்களை ஹர்ஷர் சூறையிடலானார். தெய்வ விக்கிரகங்கள்கூட விற்றுக் காசாக்கப்பட்டன. அரசர் மேற்கொண்ட ஓரிரு படையெடுப்புகள் இப்பொழுது தோல்வியில் முடிந்தன. சான்றாக, தரத்களுக்கு எதிராக அவர் நடத்திய போரில் அவருடைய படை வீரர்கள் படுதோல்விக்கு ஆளாயினர். கி.பி. 1099-ல் உணவுப் பஞ்சம் தோன்றிற்று. உணவுப் பொருள்களின் விலை மட்டுமீறிப் பெருகியதால் மக்கள் பட்டினி கிடந்தார்கள். அவர்களிடையில் பிளேக் போன்ற கொள்ளை நோய்களும் பரவின. கொடிய வறுமை காரணமாகத் திருட்டும் கொள்ளைகளும் கொலையும் வழிப்பறியும் மிகுந்தன. அதே சமயத்தில் காயஸ்தர்கள் கிராமப் புறங்களில் மக்களைக் கசக்கிப் பிழிந்தார்கள். மக்கள் சிக்கிக்கிடந்த அவல நிலையைச் சிறிதும் உணராமல், தமக்கேற்பட்ட நிதி நெருக்கடியைச் சரிகட்டுவதற்காகப் பல புதிய வரிகளை அரசர் விதிக்கலானார்.

உள்நாட்டுப் போர்

நாட்டில் நிலவிய இக் குழப்பத்தையும் வறுமையையும் பயன்படுத்தித் தங்களது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள, சுயநலம் மிக்க நிலப் பிரபுக்களாகிய தாமரர்கள் முயன்றனர். அரசனிடும் கட்டளைகளையும் அவனது அதிகாரத்தையும் இவர்கள் அலட்சியம் செய்தனர். இவர்களை எதிர்த்து இரண்டாண்டு காலம் வரை ஹர்ஷர் போரிட வேண்டியதாயிற்று. இந்த நெருக்கடியான வேளையில், முன்பு தரத்கள்மீதான போரின் போது காஷ்மீரப் படைகளைப் பேரழிவிலிருந்து காத்த உச்சலர், சுஸ்சலர் ஆகிய இருவரும் இப்பொழுது தமக்கெதிராகச் சதி செய்கிறார்கள் என்ற எண்ணம் அரசருக்கு உதித்தது. அரசர் அவர்களைக் கைது செய்வதற்கு முன்னமேயே செய்தியறிந்த அவ்விருவரும் ஸ்ரீநகரை விட்டு, கி.பி. 1100-ல் ஓடிவிட்டனர். உச்சலர் ராஜபுரி அரசரான சங்கராமபாலரது அவையில் அடைக்கலம் புகுந்தார். சுஸ்சலர் காஷ்மீரத்தின் எல்லையிலிருந்த ஒரு சிற்றரசரான, கலிஞ்சரா என்ற நாட்டின் மன்னராயிருந்த கல்கரிடம் (Kalha) அடைக்கலம் புகுந்தார். தாமரர்கள் போன்றோர் ரகசியமாக இவர்களோடு தொடர்பு கொண்டனர்.

ஒரு படையைத் திரட்டிக் கொண்டு கி.பி. 1101-ல் உச்சலர் வடக்கிலிருந்து காஷ்மீரத்துக்குள் வந்து நுழைந்தார். தாமரர்கள் போன்றோரும் தத்தம் படைகளுடன் அவரோடு சேர்ந்து கொண்டனர். ஆனால், ஹர்ஷரின் படைகள் அவரைத் தோற்கடித்துப் பின்வாங்குமாறு செய்தன. அதே சமயத்தில் தெற்கிலிருந்து சுஸ்சலர் காஷ்மீரத்தின்மீது படையெடுத்தார். அவரை எதிர்ப்பதற்காக ஹர்ஷர் சென்றதும், உச்சலர் மறுபடியும் தாக்குதலைத் தொடுத்தார். சுஸ்சலரது படை ஹர்ஷரது புதிய

படைத் தலைவரான சந்திரராஜரால் தோற்கடிக்கப்பட்டது. ஆயினும், உச்சலர் வடக்கில் அரசரது மற்றொரு படையைத் தோற்கடித்து ஸ்ரீநகரை நோக்கி முன்னேறினர். வழியில் ஹிரண்யபுரம் என்ற ஊரில் பிராமணர்கள் ஒன்றுகூடி, உச்சலரை அரசராக அபிஷேகம் செய்தனர். அக்கணமே ஹர்ஷரைச் சுற்றியிருந்த பலரும் துரோகத்தில் ஈடுபட்டனர். நிலைமை மோசமடைந்ததைக் கண்ட சிலர் ஸ்ரீநகரைவிட்டுத் தப்பித்துச் சென்றுவிடும்படி அரசருக்கு ஆலோசனைகள் வழங்கினர். இச் சமயத்தில் சுஸ்சலரும் சந்திரராஜரைக் கொன்று ஸ்ரீநகரை நெருங்கினர். சுஸ்சலரும் உச்சலரும் சகோதரர்களாக இருந்தாலும்கூட, தாம் தாமும் ஸ்ரீநகரைக் கைப்பற்றி அரியணையைப் பெறவேண்டுமென்ற எண்ணத்தினால் பரஸ்பரம் பகைமை பூண்டனர். அரசரின் மைந்தராகிய போஜர் அதிதீரத்துடன் ஸ்ரீநகரைக் காத்துக் கடுமையாகப் போரிட்டார். இறுதியில் தோல்வி நிச்சயம் என்பது தெரிந்ததும் அவர் நகரைவிட்டு வெளியேறினர். உச்சலரின் படைகள் ஸ்ரீநகரில் நுழைந்து அரசர் ஹர்ஷர் தங்கியிருந்த அரண்மனைக்குத் தீயிட்டன. தம் மகனைப்பற்றிய செய்தியொன்றுமறியாமல் மனமுடைந்துபோன அரசருக்கு உறுதுணையாக இருந்த ஒரு சிலரில் கல்கணரின் தந்தையான சம்பகரும் ஒருவராவார். அரசரின் வற்புறுத்தலுக்கிணங்க, போஜரைத் தேடிச் சம்பகர் அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டார். அதே நேரத்தில் அரசரும் தமது சிறிய காவற்படையால் கைவிடப்பட்டமையால், ஸ்ரீநகரைவிட்டு, உயிர்தப்பிக்க ஓடினர். ஜீலம் நதிக்கரையில் ஒரு குடிசையில் அவர் மறைந்து வாழலானர். தம் மகனை போஜர் பகைவரால் கொல்லப்பட்ட செய்தி அரசருக்குத் தெரியவந்தது. சில நாட்களிலேயே அவரது இருப்பிடத்தைக் கண்டுபிடித்த உச்சலரது ஆட்கள் அவரையும் கொன்றனர் (கி.பி. 1101). அப்பொழுது ஹர்ஷருக்கு வயது நாற்பத்திரண்டு.

முடிவுரை

கல்வியிற் சிறந்து, கவிபாடும் ஆற்றலும் இசைப் புலமையும் இணைந்து, போர்த் திறமை பெற்றிருந்த, இளவயதிலேயே அரசராக உயர்ந்த ஹர்ஷர் காஷ்மீர மன்னர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். தொடக்கத்திலேயே திறமையும் புலமையும் செறிந்த சீர்மிகு மன்னராக அவர் காட்சியளித்தார். நிர்வாகத் திறனும் அவரிடம் பாராட்டத்தக்க அளவிலிருந்தது. ஆயினும், கேளிக்கைமிக்க ஆடம்பரங்கள், போர்கள் முதலியவற்ருல் ஏற்பட்ட வீண் செலவுகளாலும், தாமரர்கள் அதிகாரிகள் முதலியோர் புரிந்த சதிகளாலும் இம் மன்னர் நிதானமிழந்தார். இவ

ரிழைத்த கொடுமைகளைக் கண்டு, சற்றே இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கக்கூடுமோ என்று சிலர் கருதினர். சதிகாரர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் இவர் தண்டிக்கக் கடைப்பிடித்த முறைகள் மிருகத்தனமானவை. முகம்மது-பின்-துக்ளக்குடனும் ரோமாபுரிப் பேரரசர் நீரோவுடனும் ஹர்ஷரைச் சில ஆசிரியர்கள் ஒப்பிடுவர்.

7. இரண்டாம் லொகாரா வம்சம்

உச்சலர்

ஹர்ஷரது மரணத்துக்குப் பின் உச்சலர், சுஸ்சலர் ஆகிய இரு சகோதரர்களுள் மூத்தவரான உச்சலர் அரசரானார். இது முதல் ராஜதரங்கிணியின் எட்டாவது பாகம் (Book VIII) துவங்குகிறது. இவர் அரசி திட்டாவின் தம்பியான காந்திராஜரது கொள்ளுப் பேரரான மல்லரது மகன். தங்களுடைய தந்தையான மல்லரை, அரசரான ஹர்ஷர் கொன்றதாலேயே உச்சலரும் சுஸ்சலரும் அரசருக்கெதிராகக் கிளர்ச்சிகளில் இறங்கினர்.



உச்சலர் தோற்றுவித்த அரசவம்சம் 'இரண்டாவது லொகாரா வம்சம்' என்று அழைக்கப்படுகிறது. தம் தம்பி சுஸ்சலரை லொகாராவின் அரசராக்கி அவரைத் திருப்தி செய்ய முயன்ருர் உச்சலர். கிளர்ச்சிக்காரர்களான தாமரர்கள் எந்த அரசனுக்கும் ஆபத்து உண்டுபண்ணுகிறவர்களாகவே விளங்குவார்கள் என்பதை உணர்ந்து அவர்களில் முக்கியமானவர்களான ஜனகசந்திரர், காலியர் போன்றவர்கள்மீது போரிட்டு அவர்களை உச்சலர் அடக்கினுர். தாமரர்களில் பலர் போரில் கொல்லவும் பட்டனர். நாட்டில் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்து, காயஸ்தர்கள் போன்ற அதிகாரிகள் மக்களுக்குக் கொடுமை இழைக்காவாறு அரசர் கவனித்துக் கொண்டார் என்று கல்கணர் குறிப்பிடுகிருர். நாட்டில் பஞ்சம் சூழ்ந்த பொழுது அரசாங்கக் களஞ்சியங்களிலிருந்த கையிருப்புத் தானியத்தைக் குறைந்த விலைக்கு மக்களிடம் விற்று அரசர் உதவினுராம். முன்பு குழப்பங்களின் போது தகர்ந்து போன ஆலயங்களும் மடங்களும் இப்பால் புதுப்பிக்கப்பட்டன. அரசரை எதிர்த்த அனைவரும் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

எதிர்ப்புகள்

லொகாராவில் அரசராயிருந்த சுஸ்சலர் தம் அண்ணனிடமிருந்து காஷ்மீரத்தைப் பறித்துக் கொள்ளும் எண்ணத்துடன் படையெடுத்தார். ஆனுல், கர்கசந்திரர் என்ற தாமரரின் தலைமையில் உச்சலரது படை சுஸ்சலரைத் தோற்கடித்து விரட்டியது. தம்பியின்மீது இருந்த பாசத்தினுல் லொகாராவை உச்சலர் கைப்பற்றவில்லை. முந்திய அரசர் ஹர்ஷரின் மகனுன போஜரது சிறுபிள்ளை பிக்ஷாசரண் என்பவன் உச்சலர் பதவிக்கு வந்தபோது சிறையிலடைக்கப்பட்டான். பின்னர், அச் சிறுவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்பொழுது அவனுச்கு ஆறு அல்லது ஏழு வயதே ஆகியிருந்தது. இச் சிறுபிள்ளை சிலர் நல்கிய உதவியால் சிறையிலிருந்து தப்பித்து, பரமார அரசரான நரவர்மன் என்பாரது அவையில் வளர்ந்து வரலாயினன். இதற்கிடையில் தாமரப் பிரபுவான பீமதேவர் என்பவர் தரத் சிற்றரசர் ஜகதலர் என்பாரது உதவியோடு முன்னுள் அரசர் கலசரது இளைய மகனும் ஹர்ஷரது தம்பியுமான போஜர் என்பவரை அரியணைமீது அமர்த்தும் நோக்கத்துடன் முயற்சிகள் செய்தார். உச்சலர் பீமதேவரிடமிருந்து ஜகதலரைப் பிரித்தார்; பின்னர்த் தாமரப் படையைத் தோற்கடித்து, பீமரைக் கைது செய்து சிரச்சேதம் செய்தார். ஶ்ரீநகரத்துத் தலைமை நகரதிகாரியாக இருந்த சுத்தர் (Sudda) என்பவரால் ஒரு சதித் திட்டம் தீட்டப்பட்டது. பல அதிகாரிகளும் இச் சதியை ஆதரித்

தனர். கி.பி. 1111-ல் அரசரை இச் சதிகாரர்கள் பிடித்துக் கொன்றனர்.

சுஸ்சலர்

சல்கணர்

உச்சலரைக் கொன்ற பின், சுத்தரின் தம்பியான ரத்தர் (Radda) என்பவர் சங்கராஜர் என்ற பெயரில் தம்மை அரசராக அறிவித்துக் கொண்டார். ஆனால், வலிமைமிக்க தாமரப் பிரபுவான கர்கசந்திரர் ரத்தரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, உச்சலரது மாற்றாந்தாய் மகனான சல்கணர் என்பவரை அரசராக்கினர். இதைக் கேள்வியுற்ற சுஸ்சலர் லொகாராவிலிருந்து படைதிரட்டி வந்து அரியணையைக் கைப்பற்ற முயன்றார். கர்கசந்திரர் இவரைத் தோற்கடித்து விரட்டினர். கர்கசந்திரரது அதிகாரமும் செல்வாக்கும் உயர்ந்தன. சல்கணரும் அவரது குடும்பத்தினரும் இதைக் கண்டு பொறாமையுற்று, வேறு சில தாமரர்களைக் கர்கசந்திரர்மீது தாக்குதல் தொடுக்குமாறு ஏவினர். இதனால் வெகுண்ட கர்கசந்திரர், காஷ்மீரத்துக்கு வந்து அரச பதவியை ஏற்குமாறு சுஸ்சலருக்குத் தூதனுப்பினர். சுஸ்சலரும் படைதிரட்டிக் காஷ்மீரத்துக்கு வந்து, தாமரர்கள் பலரின் ஆதரவைப் பெற்றுச் சல்கணரது அரண்மனையை முற்றுகையிட்டார். சில நாட்களிலேயே சல்கணர் சிறை பிடிக்கப்பட்டார். நான்கு மாதங்களே சல்கணரது ஆட்சி நீடித்தது.

சுஸ்சலருக்கு எதிர்ப்புகள்

இவ்வாறு கி.பி. 1112-ல் பட்டமேற்ற சுஸ்சலர், துரோகிகள் என்று சந்தேகிக்கப்பட்ட பல தாமரர்களையும் அதிகாரிகளையும் ஈவு இரக்கமின்றிக் கொலை செய்தார். சிறிது காலத்திற்குப் பின்னர், கர்கசந்திரருக்கும் அவருக்குமிடையே வேற்றுமைகள் வளர்ந்தன. உச்சலருடைய மகனான சிறுவன் ஒருவனைத் தம் வயம் ஒப்படைக்குமாறு சுஸ்சலர் வேண்டியபொழுது கர்கசந்திரர் இணங்க மறுத்தார். இதனால் அரசரது படைகள் அவர்மீது போர் தொடுத்தன. கர்கசந்திரரது லொகாராக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. ஸ்ரீநகருக்கு ஐம்பத்தாறு கல் தொலைவில் இக் கோட்டை இருந்தது என்று அல்பெருனி தெரிவிக்கிறார். இறுதியில் வேறு வழியின்றி, கர்கசந்திரர் பணிந்து போனர். சிறிது காலத்திற்குப் பின்னர், சில தாமரர்கள் அரசரைக் கொல்வதற்காகச் செய்த சூழ்ச்சி தோற்றது. இதற்கப்பால் சில தாமரர்கள் அண்டைச் சிற்றரசர்களின் உதவியுடன் கிளர்ச்சிகளைத்

தோற்றுவித்தனர். பிக்ஷாசரணும் அண்டைச் சிற்றரசர்களின் உதவியுடன் படையெடுத்து வந்தார். இம் முயற்சிகள் அனைத்தும் சுஸ்சலரது விழிப்பான எதிர்நடவடிக்கைகளால் முறியடிக்கப்பட்டன.

இவற்றையடுத்து ஓரிரு ஆண்டுகள் அமைதி நிலவியது. ஆனால் வரிச்சுமை, காயஸ்த அதிகாரிகளின் கொடுமைகள் முதலியவற்றால் மக்கள் பெரிதும் அதிருப்தியுற்றனர். இச் சமயத்தில் கர்கசந்திரரைத் தீர்த்துக் கட்டிவிடத் திட்டமிட்டு அவருக்குப் பகைவர்களா யிலங்கிய சில தாமரர்களின் தலைமையில் ஒரு படையை அரசர் அனுப்பினார். கர்கசந்திரர் அரசருக்குப் பணிந்து ஸ்ரீநகரத்துக்கு வந்தார். அங்கு அவரும் அவருடைய மூன்று பிள்ளைகளும் கி.பி. 1118-ல் சிறையில் அடைக்கப்பட்டு, அரசரது ஆணையின் பேரில் கொல்லப்பட்டனர்.

சுஸ்சலரின் ஓட்டம்

ராஜபுரி அரசில் சோமபாலர் அரியணைமீது வீற்றிருந்தார். அவருக்கெதிராக அவர் தம்பியான நாகபாலரை ஆதரித்து அரசராக்க முயன்றார் சுஸ்சலர். ஆத்திரமுற்ற சோமபாலர் பிக்ஷாசரணைத் தம் அரசவைக்கு அழைத்து அங்கேயே இருக்குமாறு செய்தார். உடனே சுஸ்சலர் ராஜபுரியின்மீது படையெடுத்து, சோமபாலரை விரட்டிவிட்டு, நாகபாலரை அரசராக்கினார். இதை எதிர்த்த மக்களை அடக்குவதற்காக ஏழு மாதங்கள் ராஜபுரியிலேயே தங்கியிருந்தார் சுஸ்சலர். ஆனால், கி.பி. 1119-ல் காஷ்மீரத்துக்கு அவர் திரும்பிய உடனேயே நாகபாலரும் ராஜபுரியிலிருந்து விரட்டப்பட்டார். சுஸ்சலரின் தோல்வி தாமரர்களின் கிளர்ச்சியொன்றுக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. அவர்களில் பலரைப் பிடித்துக் கொன்றார் அரசர். எஞ்சியிருந்த தாமரர்கள் பிக்ஷாசரணை ஆதரிக்கலாயினர். தொடர்ந்து சண்டைகள் நடைபெற்றன. ஸ்ரீநகர் பகைவர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டது. சுஸ்சலர் தலைநகரைவிட்டு வெளியேறி லொகாராவுக்கு ஓடினார் (கி.பி. 1120).

மீண்டும் காஷ்மீரத்தைப் பெறுதல்

சில மாதங்களுக்குப் பிறகு பிக்ஷாசரணின் படைகள் லொகாராவைத் தாக்கின. சுஸ்சலர் அவற்றைத் தோற்கடித்ததோடு மட்டுமல்லாமல் காஷ்மீரத்தையும் கைப்பற்றினார் (கி.பி. 1121). பிக்ஷாசரண் ராஜபுரிக்கு ஓடவேண்டியதாயிற்று. ஆயினும், சுஸ்சலரால் நிம்மதியாக ஆளமுடியவில்லை. தாமரர்

கள் அண்டை அரசர்களின் உதவிபெற்றுக் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினர். இச் சமயத்தில் கடும் பஞ்சமொன்றும் ஏற்பட்டது. ஸ்ரீநகர் தாமரர்கள் பகைமை காரணமாகத் தீ விபத்து ஒன்றுக்கும் ஆளாயிற்று. கி.பி. 1122-லும் 1124-லும் பிக்ஷாசரணின் படைகள் ஸ்ரீநகரை இரு முறை முற்றுகை யிட்டன. இச் சவால்கள் அனைத்தையும் சுஸ்சலர் வெற்றிகர மாகச் சமாளித்தார். கி.பி. 1123-ல் தம் மகன் ஜெயசிம்மரை அரசராக்கிவிட்டு ஓய்வு கொள்ளலாம் என்று அவர் கருதினர். ஆயினும், அந்த மகனையும் அவரால் நம்பமுடியவில்லை. மீண்டும் அதிகாரத்தைத் தம் வசமே அவர் பற்றிக்கொண்டார். கி.பி. 1128-ல் பிக்ஷாசரணுக்கு எதிராக ஏவப்பட்ட சில கொலையாளி கள் சுஸ்சலரையே கொலை செய்வித்தனர். சுஸ்சலர் மிகவும் திறமையும் விடாமுயற்சியும் மிகுந்த அரசர் என்பது நன்கு புலப்படும். ஏராளமான எதிர்ப்புகளிருந்தும் அவை அனைத்தை யும் மன வலிமையோடும் முயற்சியோடும் இம் மன்னர் சமாளித்தது மிகவும் பாராட்டத்தக்கது.

ஜெயசிம்மர்

அடுத்து அரசரான சுஸ்சலரது மைந்தராகிய ஜெயசிம்மர் தலைநகரில் அமைதியை நிலைநாட்டுவதில் முதற் கவனத்தைச் செலுத்தினர். சிறையிலிருந்த அனைவரையும் விடுதலை செய்து நற்பெயர் சம்பாதித்துக் கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சி பயனளித்தது. கர்கசந்திரரது மகனுகிய பஞ்சசந்திரர் இக் காலத்தில் அரசருக்குப் பெரிதும் உதவியாயிருந்தார். பிக்ஷா சரண் மீண்டும் ஸ்ரீநகரைக் கைப்பற்ற முயன்றுர். ஜெயசிம்மரது முதலமைச்சரான லக்ஷ்மகர் மிகுந்த சாமர்த்தியத்தோடு பிக்ஷா சரணை ஆதரித்த தாமரப் பிரபுக்களைத் தம் பக்கம் கவர்ந்தார். அவர்களுக்குப் பெருந் தொகைகள் கையூட்டாக அளிக்கப் பட்டன. பின்னர், ராஜபுரி சிற்றரசரான சோமபாலருடனும் நட்புடன்படிக்கை யொன்று ஜெயசிம்மரால் செய்து கொள்ளப் பட்டது. இந் நடவடிக்கைகளால் பிக்ஷாசரணுக்குப் பக்கபலம் குன்றிற்று. அவர் காஷ்மீரத்தை விட்டே வெளியேற வேண்டிய நிலைமை உருவாயிற்று.

பகைவர்களின் தோல்வி

ஜெயசிம்மர் நன்கு சிந்திக்கக்கூடிய அரசர். தாமரர்கள் ஆபத்துமிக்கவர்கள் என்பதை அவர் அறிவார். ஆயினும், அவர்களைப் படைப்பலம் கொண்டு அடக்குவதைவிட, நய வஞ்சகமாகப் பிளவுபடுத்துவதே பயனுள்ளது என்பதை அவர்

அறிந்திருந்தார். எனவே, அவர்களுக்கிடையில் பகைமையை யும் பிளவுகளையும் தோற்றுவித்து, அவர்கள் தமக்கு அடங்கி நடக்குமாறு ஜெயசிம்மர் செய்தார். கி.பி. 1130-ல் பிக்ஷாசரண் மீண்டும் காஷ்மீரத்தின்மீது படையெடுத்தபோது, லக்ஷ்மகர் அவரைத் தோற்கடித்துக் கொன்றார். இவ்வாறு பல முயற்சிகள் செய்தும் காஷ்மீரத்தின் அரியணையைப் பெறமுடியாமல் பிக்ஷா சரண் மரணமெய்தினர்.

முன்பு அரியணையைக் கவர்ந்து கொண்ட சல்கணரது தம்பி லோதனர் (Lothana) சிறையிலிருந்து தப்பித்து லொகாராக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். அமைச்சர் லக்ஷ்மக ரது தலைமையில் அக் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக அனுப்பப்பட்ட படை தோல்வியுற்றது. நான்கு ஆண்டுகளுக் குப் பின்னரே லொகாராக் கோட்டையை ஜெயசிம்மரால் கைப் பற்ற முடிந்தது. இதன் பிறகு சிறிது காலம் அமைதி நிலவிற்று. கடந்தகாலக் குழப்பங்களில் சிதைவுற்றுப்போன ஆலயங்களை யும் மடங்களையும் பழுது பார்ப்பதில் ஜெயசிம்மர் தமது நேரத்தை யும் பொழுதையும் செலவிட்டார்.

தரதர் அல்லது தரத்களின் அரசரான யசோதரர் இறந்த தும், அந் நாட்டில் அரியணைக்குப் போட்டி ஏற்பட்டது. இதில் ஜெயசிம்மர் தலையிட்டார். லொகாரா அரியணையை இழந்த லோதனர், பழைய அரசர் சல்கணரது மகன் போஜர், சில தாமரர்கள் ஆகியோர் ஒன்று திரண்டு காஷ்மீரத்தின்மீது படை யெடுத்தனர். ஆனல், ஜெயசிம்மரிடம் தோல்வியுற்று இவர்கள் அனைவரும் சரணடைந்தனர். கி.பி. 1145-ல் இந்த எதிர்ப்புக ளெல்லாம் முடிவுக்கு வந்தபின், சுமார் பத்தாண்டு காலம் ஜெயசிம்மர் நிம்மதியாக ஆண்டார். தம் மூத்த மகன் குல கணரை லொகாராவின் அரசராக முடிசூட்டி வைத்தார் ஜெய சிம்மர். காகதவால கோவிந்தசந்திரர் போன்ற பல அரசர் களோடு நட்புறவும் இவர் கொண்டிருந்தார். இவ் வரசர் 1155-ல் காலமானர்.

இதுமுதல் கி.பி. 1338 வரையிலான காஷ்மீரத்தின் வரலாறு ஜோனராஜரது ராஜதரங்கிணியில் விவரிக்கப்படு கிறது.[1]

இவ் வம்சத்தின் முடிவு

அடுத்தபடியாக ஜெயசிம்மரின் மகன் பரமாணுகர் என்பவர் கி.பி. 1155 முதல் 1165 வரை அரசாண்டார். இவரது ஆட்சி

[1] *Dvitiya Rajatarangini of Jonaraju,* edited by Peterson.

யில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் நிகழவில்லை. பிரயாகர், ஜனகர் ஆகிய இரு அமைச்சர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று இவரது ஆட்சியில் முதன்மையானவர்களாகத் திகழ்ந்தனர். இவரது பத்தாண்டு கால ஆட்சிக்குப் பிறகு இவரது மகனுன வந்திதேவர் என்பவர் அரியணை ஏறினுர். ஏழாண்டுகளுக்குப் பிறகு 1172-ல் இவரும் காலமானதும், இரண்டாவது லொகாரா வம்சத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

8. உப்பதேவர் வம்சம்

மூட அரசர்கள்

வந்தி தேவருக்குப் பின் நல்ல அரசன் வேண்டுமென்று விரும்பிய மக்கள் உப்பதேவர் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர் என்று திவிதீய ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது. (வந்திதேவர் வர்த்திதேவர் என்றும், உப்பதேவர் ஒப்யதேவர் என்றும்கூட அழைக்கப்பட்டார்.) ஆனுல், உப்பதேவரோ மக்கள் எதிர்பார்த்ததுபோல் திறமை ஏதும் பெற்றிருக்கவில்லை. மந்த புத்தி படைத்தவராக இருந்து, மூடத்தனமான பல நடவடிக்கைகளை இவர் மேற்கொண்டதாக ஜோனராஜர் குறிப்பிடுகிருர். கி.பி. 1180ஆம் ஆண்டு வாக்கில் இவர் காலமானதும், இவரது தம்பியான ஜஸ்சகர் என்பவர் அடுத்த அரசரானுர். இவர் தம் அண்ணனைக் காட்டிலும் பெரிய மூடராயிருந்தாராம். இவருக்கு அரசராவதிலேயே விருப்பம் இல்லையென்றும், லாவண்யர்கள் என்ற தாமரர்களே இவரைப் பிடித்து அரசராக்கி உண்மையான அதிகாரத்தைக் கவர்ந்து கொண்டனர் என்றும் கூறப்படுகின்றன. சுக்ஷர், பீமர் ஆகிய இரண்டு பிராமண அமைச்சர்கள் மிகுந்த அதிகாரம் பெற்று அரசர்கள் போல் இம் மன்னரது காலத்தில் விளங்கினர். சுமார் கி.பி. 1198-ல் இம் மன்னர் காலமானுர்.

அதிகாரிகளின் சதிகள்

இவருக்குப் பின் கல்வியிற் சிறந்த இவரது பிள்ளையான ஜகதேவர் அரசரானுர். மக்களது நலனில் நாட்டமுடைய இம் மன்னர் அதிகாரிகளின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காக்கப் பெரிதும் முயன்ருர். அந்த அதிகாரிகள் ஆத்திரமுற்றுச் சதி செய்து ஜகதேவரையே தலைநகரைவிட்டு ஓடுமாறு செய்தனர். ஆயினும், விசுவாசமிக்க தமது அமைச்சரான குணகர ராகுலர் என்பாரது உதவியோடு தலைநகரைக் கைப்பற்றி இவர் மீண்டும் அரசரானுர். ஆனுல், அரண்மனை வாயிற்காப்பு அதிகாரியாக இருந்த பத்மர் என்பவரால் இவ் வரசர் நஞ்சூட்டிக் கொல்லப்

பட்டார். கி.பி. 1213ஆம் ஆண்டு வாக்கில் இவர் மரணமுற்றிருத்தல் வேண்டும்.

ஜகதேவரின் மகனுன ராஜதேவரால் ஓர் உள்நாட்டுப் போருக்குப் பின்னரே அரசராக முடிந்தது. அரசரான பின்னருங்கூடத் தாமரர்களாகிய லாவண்யர்கள் இவரை மதியாமல் சிற்றரசர்கள் போல் வாழ்ந்தனர். லொகாராவைச் சேர்ந்த சிற்றரசர் பாலாத்திய சந்திரர் (Baladhya Chandra) என்பவரும் காஷ்மீரத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டார். இவர் கி.பி. 1236 வாக்கில் காலமானுர்.

இவருடைய மகனுன சங்கராமதேவர் திறமை மிக்கவர். தாமரப் பிரபுக்களின் கொட்டத்தை இவர் அடக்க எண்ணினுர். ஆனல், இவரது தம்பியான சூரியர் என்பவரின் தலைமையில் தாமரப் பிரபுக்கள் சிலர் இவர்மீது போர் தொடுத்தனர். அவர்கள் தோற்கடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஆயினும், விரைவிலேயே அதிகாரிகள் சிலர் சதிசெய்து ராஜபுரி அரசரிடம் அடைக்கலம் புகுமாறு சங்கராமதேவரை விரட்டியடித்தனர். சில ஆண்டுகள் காஷ்மீரத்தில் பெருங் குழப்பம் நிலவிற்று. சிறிது காலத்திற்குப் பின்னர், ராஜபுரி அரசரின் உதவியோடு அரியணையை இவர் மீண்டும் பெற்ருர். ஆயினும், கி.பி. 1252 ஆம் ஆண்டு வாக்கில் சில அதிகாரிகள் இவரைக் கொன்றனர்.

இஸ்லாமியர் ஆட்சி நிறுவப்படல்

சங்கராமதேவரது மகன் ராமதேவரும், பின்னர் அவரது வளர்ப்பு மகனுன லக்ஷ்மதேவர் என்ற பிராமணரும் அரசர்களாயிருந்தனர். கஜ்ஜலர் என்ற முஸ்லிம் ஒருவர் கி.பி. 1286 ஆம் ஆண்டு வாக்கில் படையெடுத்து, இந்த லக்ஷ்மதேவரைக் கொன்றுவிட்டார். இதன் பின்னர்க் காஷ்மீரத்தில் குழப்பம் நிலவிற்று. அப்பால் சிம்மதேவர், அவரது தம்பியான சுகதேவர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். சகாமேரா (Sahamera) என்னும் முஸ்லிம் ஒருவர் தம் குடும்பத்தோடு ஸ்ரீநகருக்குவந்து, சுகதேவரது படையில் சேர்ந்து காஷ்மீரத்தின் பல பகுதிகளிலும் அரசரின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் உதவி நல்கினுர். சுகதேவரின் இறுதிக் காலத்தில் கர்மசேனர் என்ற அரசர் துலுச்சர் (Dulucha) என்ற முஸ்லிம் படைத் தளபதியின்கீழ்க் காஷ்மீரத்தின்மீது ஒரு படையை அனுப்பினுர். காண்டகார் அரசருடைய படைத் தளபதியாகத் தல்ஜா (Daljau) என்பார் இருந்ததாக அயினி அக்பரியில் கூறப்படுகிறது. இவரே இந்தியாவின்மீது படையெடுத்த முஸ்லிம் தளபதியாதல் வேண்டும். மிலேச்சர்,

துருக்ஷர், தாஜிக்குகள் ஆகியோர் அப் படையில் இருந்ததாக ஜோனராஜர் குறிப்பிடுகிருர். இப் படை காஷ்மீரத்தின் பல பகுதிகளையும் படுநாசம் செய்து, சுகதேவர் ஈந்த பெரும் பொருளோடு, கொள்ளையிட்ட செல்வத்தையும் பறித்துக் கொண்டு வெளியேறிற்று. பெரு எண்ணிக்கையிலான காஷ்மீர மக்கள் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். கி.பி. 1320 ஆம் ஆண்டு வாக்கில் ரிஞ்சணர் என்ற அண்டை அரசன் ஒருவன் காஷ்மீரத்தின் அரியணையைக் கவர்ந்து கொண்டான். மூன்றே ஆண்டுகளில் இந்த அரசனும் சதிகாரர்களால் கொல்லப் பட்டான். இந்த ரிஞ்சணர் திபேத்தைச் சேர்ந்த ரிண்-சென் என்ற அரசனே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. லடாக் பிரதேசத்துக் கதைகள் இதை உறுதிப்படுத்துகின்றன. இதன் பின்னர், முஸ்லிமாகிய சகாமேராவின் செல்வாக்குக் காஷ்மீரத்தில் பெருகிற்று. இவர் ரிஞ்சணரின் மகனை அரசனுக்காமல், காந்தாரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பழைய காஷ்மீரத்து அரச குமாரர்களுள் ஒருவரான உதயணதேவரை வரவழைத்து முடி சூட்டுவித்தார். உதயணதேவர் காஷ்மீரத்து அரச குடும்பத்தைச் சேர்ந்த கோதா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். கி.பி. 1338-ல் உதயணர் இறந்தபின், கோதா தேவியே அரியணைமீது அமர்ந்தார். அரசியார் ஸ்ரீநகரில் இல்லாத ஒரு சமயத்தில் சகாமேரா கிளர்ச்சி செய்து தலைநகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர், கோதாதேவியையும் அவருடைய இரண்டு மகன்களையும் கொன்றுவிட்டு, 'சுல்தான் ஷம்சுதீன்' என்ற பெயரில் சகாமேரா கி.பி. 1338-ல் காஷ்மீரத்தில் அரசரானுர். இங்ஙனமாகக் காஷ்மீரத்தில் இந்துக்களின் ஆட்சி முடிவுற்று இஸ்லாமியர் ஆட்சி துவங்கிற்று.

4. பரமாரர்கள்

1. மாளவத்துப் பரமாரர்கள்

பூர்விகம்

கி.பி. எட்டாம் நூற்றுண்டு முதல் பல பரமார அரசுகள் மாளவம், அற்புதமண்டலம், வாகதம் (Vagada), பிமல்-கிராடு (Bhimal-Kiradu), ஜாலோர் ஆகியவிடங்களில் இருந்தன. இவற்றில் மிகவும் முக்கியமானது உபேந்திரரால் நிறுவப்பட்ட மாளவ அரசேயாகும். கி.பி. பதினுன்காம் நூற்றுண்டின் துவக்கம் வரையில் இவ்வரசு நிலைபெற்றிருந்தது.

அக்கினி குலத்தினர்

பரமாரர்களது பூர்விகம்பற்றிப் பல அறிஞர்கள் வெவ்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் வாசிஷ்ட கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று பழம் பாடல்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றிய கதையொன்றைப் பத்மகுப்தர் என்ற ஒரு கவிஞர் 'நவசாகசாங்க சரிதம்' என்ற நூலில் கூறுகிறுர். இவர் கி.பி. பத்தாம் நூற்றுண்டில் வாக்பதி முஞ்சர், சிந்துராஜர் எனும் அரசர்களின் அவைக்களப் புலவராயிருந்தவர். வசிஷ்டரால் வளர்த்து வரப்பட்ட காமதேனுவை விசுவாமித்திரர் களவாடிச் சென்றுவிட்டபோது, அதை மீட்பதற்கென அபு மலையில் அக்கினி வளர்த்து மந்திரம் சொல்லி வசிஷ்டர் ஆகுதி பெய்தாராம்; அத் தீயிலிருந்து ஒரு வீரன் தோன்றினும். அவனுக்குப் பரமாரன் (பகைவரைக் கொல்பவன்) என்ற பெயரை வசிஷ்டர் சூட்டி அவனை அரசனுக்கினுராம். பின்னர், அவனே விசுவாமித்திரர் கவர்ந்து சென்ற காமதேனுவை மீட்டுவந்து வசிஷ்டரிடம் ஒப்படைத்தானும்.

இக் கதையை ஆதாரமாக வைத்துப் பரமாரர்கள் அக்கினி குலத்தினர் என்று குறிப்பிடப்படுகின்றனர். ராஜபுத்திரர்கள் பற்றியும் இத்தகைய அக்கினிக் கதைகள் வழங்குவதால் பரமாரர்களும் ராஜபுத்திரர்களே என்ற முடிவு மேற்கொள்ளப்படுகிறது. அக்கினி குல ராஜபுத்திரர்களான பிரதிகாரர்கள், பரமாரர்கள்,

சௌளுக்கியர்கள், சாகமானர்கள் ஆகிய நால்வரும் கூர்ஜரர் களே என்பதும், வெளியிலிருந்து இந்தியாவுக்குள் வந்து குடி புகுந்தவர்கள் என்பதும் ஆரம்பகால ஆராய்ச்சியாளர்களான D. R. பந்தர்கார், ஃபோர்பெஸ் (Forbes), H. C. ரே (H. C. Ray) போன்ரேரின் கூற்ருகும்.

பரமாரர்கள் அக்கினி குலத்தவர் என்பதை வலியுறுத்தும் பல கதைகள் கி.பி. பதினென்ரும் நூற்ருண்டுக்குப் பின் எழுந் தன. ஆனல், அந்த நூற்ருண்டுக்கு முற்பட்ட பரமாரர்களது பிரசஸ்திகளில் இவையொத்த கதைகள் கூறப்படவேயில்லை. பிற்காலத்திய ராஜஸ்தானத்துக் கதைகள், பிருதிவிராஜ ராசோ என்ற நூல், அயினி அக்பரி, கடைசியாகப் பிற்காலப் பரமாரர் களின் சாசனங்கள் முதலியவற்றில் அக்கினி குலம்பற்றிய கதை கள் காணப்படுகின்றன. இக் கதைகள் நம்ப முடியாதவை என்பதாலும், பரமாரர்களது ஆரம்பக்காலக் கல்வெட்டுகளில் இவைபற்றி எதுவுமே சொல்லப்படவில்லை என்பதாலும் இவற் றினை வைத்துக் கொண்டு முடிவுகளை மேற்கொள்வது சரியா காது.

இவர்கள் கூர்ஜரர்களா?

பரமாரர்கள் கூர்ஜர இனத்தைச் சேர்ந்தவர்களென்று சில அறிஞர்கள் கருதினர்கள் என்பதை முன்பே பார்த்தோம். அக்கினி குலம்பற்றிய கதைகளில் பரமாரர்கள் உள்ளிட்ட நான்கு ராஜபுத்திர குலங்கள் வசிஷ்டரின் வேள்வித் தீயிலிருந்து பிறந் தனவாகக் கூறப்படுவதால், இவர்களனைவரும் கூர்ஜரர்களே என்று D. R. பந்தர்கார் குறிப்பிட்டது இதற்குச் சான்று.[1] இக் கூற்றின்படி பார்த்தால், சௌளுக்கியர்கள், சாகமானர்கள் ஆகி யோரும் கூர்ஜரர்களே என்ருகிறது. ஆனல், பிரதிகாரர் மட்டுமே கூர்ஜரர்கள் என்றும், கூர்ஜராட்டிரத்தில் ஆட்சிபுரிந் தவர்களென்றும் அவர்கள் காலச் சான்றுகள் தெரிவிக்கின்றன. பிற்காலச் சான்றுகளோ கூர்ஜரத்தில் ஆட்சிபுரிந்த எல்லோரை யுமே 'கூர்ஜரர்கள்' என்று குறித்தன. பரமாரர்களது சாசனங் களோ, அவர்களது அவையில் இயற்றப்பட்ட நூல்களோ கூர்ஜ ரர்கள் என்று அவர்களை அழைக்காதது குறிப்பிடத்தக்கது. பிற் காலத்திய நூலான பிருதிவிராஜ ராசோ பிரதிகாரர்களுடன் பர மாரர்களைச் சம்பந்தப்படுத்தி, அவர்கள் கூர்ஜரர்களே என்று கருதப்படுதற்கு இடமளிக்கிறது. ஆனல், இந் நூல் 15, 16 ஆம் நூற்ருண்டுகளில் பலரது கையில் பலரது இடைச்செருகல்களுக்கு

[1] Indian Antiquary, Bombay, XL.

ஆளாயிற்று.[1] அதன் துவக்க காலப் பதிப்புகளில் பிருதிவிராஜரது சாகமர்ன குலத்தைப்பற்றி அது குறிக்கிறதேயொழிய, பரமாரர்கள், பிரதிகாரர்கள், சௌளுக்கியர்கள் முதலியவர்களைப்பற்றி எதுவும் குறிப்பிடவேயில்லை.

கூஜர்களாகிய (Gujaras) சாப்பர்கள் (Chapas) பரமார குலத்தின் கிளையினர் என்று தங்களைக் கூறிக்கொள்கின்றனர். அதே போல், கூஜர மக்களில் ஒரு பிரிவினரான ஆஸ்வல்களும் (Oswals) தங்களைப் பரமாரர்களே என்று கூறிக்கொள்கின்றனர். இதன் அடிப்படையிலும் பரமாரர்கள் கூர்ஜரர்களே என்று சில ஆசிரியர்கள் முடிவு செய்கின்றனர்.[2] இச் சான்றுகள் எப்படியாயினும், பரமாரரது சாசனங்களையும் நூற் சான்றுகளையும் நம்மால் புறக்கணிக்க முடியவில்லை. பரமாரர்கள் கூர்ஜரர்களே என்று ஓரிடத்திலும் அவை குறிப்பிடாதது அலட்சியப்படுத்தத்தக்க ஒரு விஷயமன்று. 'கூர்ஜர தேசத்தில் ஆட்சிபுரிந்த பரமாரர்கள்' என்று மேற்கூறப்பட்ட சான்றுகளில் ஓரிரு இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் ராஷ்டிரகூடர்களா ?

பரமாரர்கள் கூர்ஜரர்களோ அக்கினி குலத்தவரோ அல்லரென்றும், தக்கணத்துப் பேரரசர்களாகிய ராஷ்டிரகூடர்களின் வழித் தோன்றல்களே இவர்கள் என்றும் D. C. கங்குலி தமது ஆராய்ச்சி நூலில் கூறுகின்றார்.[3] இதற்கு அவர் எடுத்துக்காட்டும் ஆதாரங்கள் உள்ளன. பரமார அரசர் சீயகர் ராஷ்டிரகூடர்கள் தரித்துக் கொண்ட 'அமோகவர்ஷர்', 'ஸ்ரீவல்லபர்', 'பிருதிவி வல்லபர்' எனும் பட்டங்களைப் புனைந்து கொண்டதை ஒரு சான்றாக அவர் எடுத்துக் காட்டுகிறார். மேலும், ராஷ்டிரகூட அரசர்களான அமோகவர்ஷர், அவரது மகனான அகாலவர்ஷ மூன்றாம் கிருஷ்ணர் ஆகியோரது பெயர்கள் நமக்குக் கிடைத்துள்ள முதலாவது பரமார சாசனமாகிய ஹர்சோலா (Harsola) செப்பேட்டில் பொறிக்கப்பட்டிருப்பதும் இதற்கொரு சான்றாக எடுத்துக்காட்டப்படுகிறது. இச் செப்பேடு மிகவும் வேடிக்கையானது. ராஷ்டிரகூடர்களது நகரம் ஒன்றைத் தாக்கிச் சூறையாடிய பரமார அரசர் இரண்டாம் சீயகர் என்பவர் ராஷ்டிரகூடருக்குச் சொந்தமான இச் செப்பேட்டைக் கொண்டுவந்து, அதில் பல பகுதிகளை அழித்துவிட்டு, தாம் விரும்பியபடி சாசனத்தைப் பொறித்துக் கொண்டார். ராஷ்டிரகூடர்களைத் தோற்

[1] C. V. Vaidya, *History of Medieval Hindu India.*

[2] Bombay Gazeteer.

[3] D. C. Ganguly, *History of the Paramara Dynasty.*

கடித்துவிட்டதால் 'பிருதிவிவல்லபர்' என்பன போன்ற ராஷ்டிர கூட விருதுகள் தமக்குப் பொருந்தும் என்ற வகையில் அப் பகுதியை மட்டும் கலைக்காமல் சீயகர் வைத்துவிட்டார் போலும்! ராஷ்டிரகூடர்களேகூடத் தங்களால் தோற்கடிக்கப்பட்ட சாளுக் கியர்களின் விருதுகளை இவ்வாறே பின்னர்க் கவர்ந்து புனைந்து கொண்டனர். பரமாரர்களது சாசனம் எதிலும் ராஷ்டிரகூட வம்சத்திலிருந்து அவர்கள் வந்தவர்களென்பது எவ்விடத்திலும் குறிக்கப்படவேயில்லை.

தக்கணத்திலிருந்து வந்தவர்களா ?

அக்பரது காலத்திய நூலான 'அயினி அக்பரி' பரமார வம்சத்தை நிறுவியவரான தனஞ்சயர் தக்கணத்திலிருந்து மாள வத்துக்கு வந்து ஆட்சிபுரிந்தார் என்று குறிப்பிடுகிறது. இதுவும் அவர்கள் பூர்விகத்தில் ராஷ்டிரகூடர்களே என்பதற்கான ஓர் ஆதாரம் என்று கங்குலி கருதுகிறுர். தக்கணத்திலிருந்து வந்த தால் தனஞ்சயர் ராஷ்டிரகூடராகத்தாம் இருக்க வேண்டு மென்று முடிவு கட்டத் தேவையில்லை. மேலும், தன்சி என்ற தனஞ்சயரைப் பரமாரர் என்று பரமார சாசனங்கள் குறிப்பிட வில்லை. தனஞ்சயருக்கு ஐந்து தலைமுறைக்குப்பின் வந்த பூத ராஜர் வாரிசின்றி இறந்தாரென்றும், எனவே தனஞ்சயரது வம்சம் முடிவுற்றது என்றும், இதனுல் பிரபுக்கள் கூடி ஆதித்திய பொன்வார் (Ponwar) என்பவரை அரசராக்கினர் என்றும் அயினி அக்பரியே கூறுகின்றது. இவரே மாளவத்தில் பரமார வம்சத்தைத் துவக்கியவர். இவரது பூர்விகம்பற்றி நமக்குத் தெரியவில்லை.

முடிவுரை

புகழ்மிக்க ராஷ்டிரகூட வம்சத்தில் பரமாரர்கள் தோன்றியது உண்மையாயிருக்குமாயின், அதை அவர்கள் தங்கள் பிரசஸ்தி களில் ஆயிரம் தடவை எடுத்தியம்பி மகிழ்ந்திருப்பார்கள். ஆனுல், இப்படி ஏதும் செய்யப்படவேயில்லை. ராஷ்டிரகூடர் களது வழித்தோன்றல்கள் என்று சொல்லிக் கொள்வதைவிடப் பெருமைமிக்க கீர்த்தி வேறு எதுவுமே இருந்திருக்க முடியாது. அப்படியிருக்க, தலைசிறந்த பரமார அரசரான முஞ்சரின் அவைக்களப் புலவரான பத்ம குப்தர் தாம் இயற்றிய 'நவசாக சாங்கசரித'த்தில் பரமாரரது பூர்விக இடம் அபுக் குன்றே என்று கூறுவது எதனுல்? பரமாரர்கள் அபுமலைப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவே இருக்கக் கூடுமென்பது இதிலிருந்து புலனு கிறது.

பரமாரர்கள் வசிஷ்ட கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது துவக்கத்தில் வசிஷ்ட பிராமணர்களாயிருந்தவர்கள். பின்னர், பிரம்ம-க்ஷத்திரியர்களாக இவர்கள் ஆயினர். இவை யனைத்தும் அக்காலச் சான்றுகளில் தெளிவாகக் கூறப்படு கின்றன. பிராமணர்களான இவர்கள் க்ஷத்திரியத் தொழிலை மேற்கொண்டு, போரிலும் ஆட்சியிலும் ஈடுபட்டதால் பிரம்ம-க்ஷத்திரியர்களாயினர். கூர்ஜரப் பிரதிகார வம்சத்தை நிறுவிய வரான அரிச்சந்திரரும் இவ்வாறே பிரம்ம-க்ஷத்திரியராய் விளங் கியதை ஏற்கெனவே நாம் குறிப்பிட்டோமல்லவா? இப்படி பிரம்ம-க்ஷத்திரியர்களென்று பல அரசர்களைப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அதே முறையில், பரமார வம்சத்தை நிறுவிய அரசர் ஒருவர் வசிஷ்ட பிராமணராயிருந்திருப்பினும், அரச குடும்பத்தைச் சேர்ந்த க்ஷத்திரியப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டு க்ஷத்திரியத் தொழிலில் இறங்கியிருக்கக் கூடும்.[1]

பரமாரர்களின் எழுச்சி

மாளவத்துக்கான போர்கள்

மாளவம் கூர்ஜரப் பிரதிகாரர்களுக்கும் ராஷ்டிரகூடர்களுக்கு மிடையிலான போர்க்களமாக நீண்ட காலம் இருந்துவந்தது. துருவர், மூன்றும் கோவிந்தர், மூன்றும் இந்திரர், மூன்றும் கிருஷ்ணர் போன்ற ராஷ்டிரகூட அரசர்கள் மாளவத்தையும் அதன் தலைநகரமான உஜ்ஜெயினியையும் பிரதிகாரரிடமிருந்து கைப்பற்றினராயினும், தொடர்ந்து அவற்றை ஆளவில்லை. கி.பி. 946 வரையில் மாளவத்தின் பல பகுதி பிரதிகாரர் வசமே தொடர்ந்து இருந்தது என்பதைப் பிரதாப்கர் என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இதற்குப் பின்னர், மாள வத்தையும் மற்ற மேற்குப் பகுதியையும் பிரதிகாரர்கள் இழந் தனர். கனோஜைத் தலைநகராகக் கொண்டு, கங்கைச் சம வெளிப் பிரதேசத்தை அவர்கள் தொடர்ந்து ஆளலாயினர்.

ஆயினும், பரமாரர்கள் கி.பி. எட்டாம் நூற்றுண்டு முதலே மாளவத்தில் இருந்தனர் என்பது தெரிகிறது. பிரதிகாரர்களுக் கும் ராஷ்டிரகூடர்களுக்குமிடையில் போர்கள் நடைபெற்ற காலத்தில் பரமாரர்கள் குறுநில மன்னர்களாக மாளவத்தின் ஒரு பகுதியில் இருந்தனர். அவர்களில் சிலர் ராஷ்டிரகூடர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக இருந்ததை ராஷ்டிரகூடச் சாசனங்

[1] Dr. Pratipal Bhatia, *The Paramaras*. Also : Dr. H. C. Ray, *Dynastic History of Northern India.*

கள் நன்கு தெரிவிக்கின்றன. கி.பி. 812ஆம் ஆண்டுவாக்கில் ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கோவிந்தர் பிரதிகார அரசரான இரண்டாம் நாகபட்டரைத் தோற்கடித்து, மாளவத்தைக் கைப் பற்றி, தம்மை ஆதரித்த எவனே ஒரு சிற்றரசனிடம் தந்தார். இந்த 'எவனே ஒருவன்' பரமார உபேந்திரராக இருக்கக்கூடும். இரண்டாம் நாகபட்டர் மாளவத்தை மீட்பதற்காகப் படை யெடுத்து வந்தார். லாட்டத்தை ஆண்டுகொண்டிருந்த தமது சிற்றரசரான கர்க்கராஜர் என்பவரை மூன்றும் கிருஷ்ணர் அனுப்பி, மாளவத்தைக் காத்தார். ஒருசில மலைக் கோட்டை களை மட்டுமே பிரதிகார அரசரால் கைப்பற்ற முடிந்தது.

உபேந்திரர்

பரமாரர்களது சாசனங்களில் அவர்களது காலத்தைக் குறிப் பிடும் முதலாவது சாசனம் ஹர்சொலாச் (Harsola) செப்பேடே யாகும். இது இரண்டாம் சீயகரின் காலத்தில் வெளியிடப் பட்டது. இவர் கி.பி. 949-ல் ஆண்டுகொண்டிருந்ததாக அச் செப்பேடு தெரிவிக்கிறது. இவருக்கு முந்திய பரமார அரசர் களைப்பற்றிப் பிரதிகாரர்கள், ராஷ்டிரகூடர்கள் ஆகியோரின் சாசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. முதலாவது முக்கிய மான பரமார அரசர் உபேந்திரரே. தமக்கிருந்த சொந்த வலிமையால் இவர் அரசப் பதவியை எய்தினுர் என்று உதயபூர் பிரசஸ்தி தெரிவிக்கிறது. வத்சராஜர் என்ற பிரதிகார அரசரை மாளவத்திலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் ராஜஸ்தானத்துக் குள் ராஷ்டிரகூட துருவர் விரட்டியடித்தபின், உபேந்திரர் மாள வத்தில் அரசரானுர் போலும்! இவர் உபேந்திரராஜர் என்று உதயபூர் பிரசஸ்தியில் குறிக்கப்படுகிருர். கி.பி. 790 ஆம் ஆண்டுவாக்கில் இவர் அரசராகி, கி.பி. 818-ல் இறந்திருக்கலா மென்று அறிஞர்கள் கொள்கின்றனர். அவந்தி அரசர் என்று இவர் அழைக்கப்படுகிருர். மாளவத்தின் ஒரு பகுதி மட்டுமே இவரது ஆட்சியில் இருந்தது.

துருவரின் மகனுன மூன்றும் கோவிந்தர் பிரதிகாரர்கள்மீது படையெடுத்து வடக்கே வந்தபொழுது, உபேந்திரர் அவருக்குப் பணிந்து போனுர். இதன் விளைவாகவே பிரதிகார அரசரான இரண்டாம் நாகபட்டருக்கு அவர் பகையானுர். நாகபட்டரது படையெடுப்பிலிருந்து உபேந்திரரைக் காத்தவர் லாட்டத்துச் சிற்றரசர் இரண்டாம் கர்க்கராஜர் என்பதை ஏற்கெனவே குறிப் பிட்டோம். கி.பி. 814-ல் கோவிந்தரின் மரணத்திற்குப் பிறகு சில ஆண்டுகள் கழிந்தபின் நாகபட்டர் மீண்டும் மாளவத்தின்

மீது படையெடுத்துச் சில கோட்டைகளைக் கவர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

உதயபூர் பிரசஸ்தியானது, இரண்டாம் சீயகருக்கு நான்கு அரசர்களுக்கு முந்தியவர் உபேந்திரர் என்று தெரிவிக்கிறது. அதன்படி பார்த்தால், உபேந்திரர், முதலாம் வைரிசிம்மர், முதலாம் சீயகர், முதலாம் வாக்பதி, இரண்டாம் வைரிசிம்மர், இரண்டாம் சீயகர், இரண்டாம் வாக்பதி ஆகிய பரமார அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர். ஆனால், நவசாகசாங்க சரிதமானது இரண்டாம் சீயகருக்கு முன் ஆறு பரமார அரசர்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இதன்படி, பரமார அரச வம்சத்தின் முதல் ஏழு அரசர்களைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தலாம் :

1. உபேந்திரர்

2 முதலாம் வைரிசிம்மர் — தம்பர சிம்மர் (பரமாரர்களின் வாகத அரசை நிறுவியவர்)

3. முதலாம் சீயகர்

4. பெயர் தெரியாத ஓர் அரசர்

5. முதலாம் வாக்பதி (இவர் கிருஷ்ணராஜர் என்றும் குறிப்பிடப்படுகிறார்)

6. இரண்டாம் வைரிசிம்மர் (வஜ்ரத் சுவாமி)

7. இரண்டாம் சீயகர்

இரண்டாம் சீயகர் கி.பி. 949-ல் ஆண்டுகொண்டிருந்ததாக ஹர்சொலாச் (Harsola) செப்பேடு தெரிவிப்பதால், அதன் அடிப்படையிலேயே உபேந்திரர் கி.பி. 790ஆம் ஆண்டு வாக்கில் அரசராகியிருக்கலாமென்று கணிக்கப்பட்டது. இவர் ஆற்றல்மிக்க அரசராயிருந்தார் என்பதை உதயபூர் பிரசஸ்தி மட்டுமன்றி, நவசாகசாங்க சரிதமும் குறிப்பிடுகிறது. பல வேள்விகளை இவர் செய்ததோடு, மக்களது வரிப்பளுவையும் குறைத்தாராம். சீதை என்ற ஒரு பெண் கவிஞரை இவர் ஆதரித்தார். இவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களுள் மூத்தவரான வைரிசிம்மர் அடுத்த அரசரானார். மற்றொரு மகனான தம்பர சிம்மர் மாளவத்துப் பரமார அரசுக்குக்

கட்டுப்பட்ட வாகதம் (Vagada) என்ற மற்ருேர் அரசின் சிற்றரச ராக நியமிக்கப்பட்டார். நர்மதைக்கு வடக்கிலிருந்த தாரா (Dhara) என்ற ஊரே மாளவப் பரமாரர்களின் தலைநகரா யிருந்தது. இது இன்று தார் (Dhar) என்னும் பெயர் பெற்று, மத்தியப் பிரதேசத்திலுள்ளது.

அடுத்த அரசர்கள்

உபேந்திரரை அடுத்த பரமார அரசர்களைப்பற்றி அதிகம் தெரியவில்லை. உபேந்திரரது மகனுன முதலாம் வைரிசிம்மர் (Vairisimha I) கி.பி. 818ஆம் ஆண்டுவாக்கில் அரசராகியிருக்க வேண்டும். இவரது ஆட்சியின் நிகழ்ச்சிகள்பற்றி எச் செய்தி யும் கிடைக்கவில்லை. இவருக்குப்பின் முதலாம் சீயகர் (Siyaka I) அரசராஞர். இவ்விரு அரசர்களைப்பற்றியும் உதயபூர் பிரசஸ்தி யானது வழக்கமான புனைந்துரையில் துதிபாடுகிறதேயொழிய, எந்த ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சியையும் திட்டவட்டமாகக் குறிப்பிடவேயில்லை. அதே சமயம், நவசாகசாங்க சரிதம் இவர் களது பெயரைக்கூட நமக்குத் தெரிவிக்கவில்லை. உபேந்திரருக் கும் முதலாம் வாக்பதிக்குமிடையில் மற்றும் சில அரசர்கள் ஆட்சி புரிந்ததாக அந் நூல் எழுதுகிறது. இந்த 'மற்றும் சில அரசர் களின்' எண்ணிக்கை இரண்டுக்கு மேற்பட்டதாகவே இருக்க வேண்டுமென்று அந் நூலில் வரும் சொற்களை வைத்து டாக்டர் பஹ்லர் (Buhler) கருதினுர். அவ்வாருனல், முதலாம் சீயகருக் குப் பின் மற்றுமோர் அரசர் தாராவில் ஆட்சிபுரிந்திருக்கக்கூடும். ராஷ்டிரகூட அரசரான முதலாம் அமோகவர்ஷர் மாளவத்து அரசர் தம்மை வழிபட்டதாகக் குறிப்பிடுகிருர். அந்த மாளவ அரசர் இவர்களுள் எவரோ ஒருவராக இருக்க வேண்டும். மேலும், மற்ருெரு ராஷ்டிரகூட அரசரான இரண்டாம் கிருஷ்ணர் (அமோகவர்ஷரது மகன்) கூர்ஜரப் பிரதிகார அரசரான போஜரை எதிர்த்துப் போர்கள் நிகழ்த்தினுர். அப் போர்களின் போது இரண்டாம் கிருஷ்ணர் தோற்கடிக்கப்பட்டு, பிரதிகாரப் படைகள் நர்மதை நதி வரையில் வந்தன. பின்னர், மாள வத்தையும் அவை கைப்பற்றி, குஜராத்தின்மீதும் படையெடுத் தன. இரண்டாம் கிருஷ்ணர் மீண்டுமொரு படையோடு திரும்பி வந்து, உஜ்ஜெயினிக்கு அருகில் நடைபெற்ற கடும் போர் ஒன்றில் போஜரைத் தோற்கடித்தார் என்பது பெகும்ரா (Begumra) என்ற இடத்தில் கிடைத்துள்ள இரண்டாம் கிருஷ்ணர், மூன்ரும் இந்திரர் ஆகியோரது செப்பேடுகளால் நன்கு புலனு கின்றது. இதன் பின்னர், மாளவத்தின் சில பகுதிகளில் பிரதி காரர்களின் ஆட்சி முற்றிலும் அழிந்தது. இப் போர் கி.பி. 885 ஆம் ஆண்டுவாக்கில் நடைபெற்றிருத்தல் வேண்டும். பரமார

அரசர் இதில் எத் தரப்பில் என்ன பங்காற்றினர் என்பது தெரியவேயில்லை.

முதலாம் வாக்பதி

அடுத்தபடியாக, பரமார அரசரான முதலாம் வாக்பதி 'அவந்தி அரசர்' என்று உதயபூர் பிரசஸ்தியில் குறிக்கப்படுகிறார். இவருக்குக் கிருஷ்ணராஜர், பப்பைராஜர் (Bappairaja) எனும் வேறு பெயர்களும் உண்டு. இம் மன்னர் கி.பி. 893ஆம் ஆண்டுவாக்கில் அரசரானார். சற்றேறக் குறையக் கி.பி. 918 வரையில் இவரது ஆட்சி நடைபெற்றது. ஆகவே, பிரதிகார அரசர்களான முதலாம் மகேந்திரபாலர், இரண்டாம் போஜர், முதலாம் மகிபாலர் ஆகியோர் இவரது காலத்தவராயிருந்தனர். உபேந்திரருக்கு அடுத்தபடியாக இவரது பெயரையே நவசாக சாங்க சரிதம் குறிப்பிடுகிறது. ஹர்சொலாச் செப்பேடும் இவ்வரசர் முதற்கொண்டே பரமார அரசர்ப் பட்டியலைத் தொடங்குகின்றது. எனவே, முதலாவது வாக்பதி குறிப்பிடத்தக்க அரசராயிருந்தார் என்பது தெளிவாகும். ராஷ்டிரகூடப் பேரரசரான மூன்றும் இந்திரர் வடக்கே படையெடுத்தபொழுது மாளவத்தின் வழியாகச் சென்றார். காலப்பிரியா என்ற ஆலயத்தின் மன்றத்தில் அவரது யானைகள் தங்கியிருந்தன என்று ராஷ்டிரகூடரது செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இந்தக் காலப்பிரியா ஆலயம் உஜ்ஜெயினியிலுள்ள மகா காளியின் ஆலயமே என்று H. C. ரே போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] (இக் கருத்திலிருந்து முரண்படும் ஆராய்ச்சியாளர்களும் இல்லாமலில்லை.[2]) இந்த முடிவு சரியானதே என்றால், வாக்பதி மூன்றும் இந்திரருக்கு அவரது படையெடுப்பில் உதவியிருக்கக்கூடும்.

பரமபட்டாரகர், மகாராஜாதிராஜர், பரமேசுவர் என்னும் விருதுகளை மேற்கொண்ட முதலாவது பரமார அரசர் முதலாவது வாக்பதியே ஆவார். மூன்றும் இந்திரரின் படையெடுப்பினால் பிரதிகார அரசு பெரும் அல்லலுக்கு ஆளானபொழுது, ராஷ்டிரகூடர்களின் அனுமதி பெற்று இவ் விருதுகளை வாக்பதி புனைந்து கொண்டார் போலும்!

இவரது படைகள் 'கங்கா சமுத்திரத்தின் (வங்காளம்) நீரை உண்டன' என்று உதயபூர் பிரசஸ்தி எழுதுகிறது. காமரூபம்

[1] H. C. Ray, *Dynastic History of Northern India*. D. C. Ganguly, *History of the Paramara Dynasty*.
[2] Pratipal Bhatia, *The Paramaras*.

வரையிலும் இவரது படைகள் சென்று வெற்றியுடன் திரும்பிய தாகவும் கூறப்படுகிறது. இவற்றின் உண்மையை நம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை.

இரண்டாம் வைரிசிம்மர்

வாக்பதியின் மகனுன இரண்டாம் வைரிசிம்மரே கி.பி. 918 ஆம் ஆண்டுவாக்கில் அடுத்துப் பரமார அரசராயினுர். வஜ்ரதர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. ராஷ்டிரகூட அரசில் மூன்றும் இந்திரரின் மரணத்துக்குப் பின் (கி.பி. 922) கி.பி. 939-ல் மூன்றும் கிருஷ்ணர் அரியணை ஏறியது வரையில் குழப்பம் நில விற்று. இதுதான் தருணமென்று பிரதிகாரப் பேரரசர் முதலாம் மகிபாலர், இந்திரரிடம் முன்பு தோற்றதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு படையுடன் புறப்பட்டார். கோரக்பூர்ப் பகுதி யில் ஆட்சிபுரிந்துவந்த கலச்சூரி சிற்றரசன் பாமனதேவன் என் பவனும் மகிபாலரது அணியில் இருந்தான். இவ்விருவரும் உஜ் ஜெயினி, தாரா ஆகிய நகரங்களைக் கைப்பற்றி நர்மதை வரை யில் வந்தனர். உஜ்ஜெயினியில் பிரதிகார ஆளுநர் ஒருவர் நிய மிக்கப்பட்டார். மாளவத்தின் பல பகுதிகளை இரண்டாம் வைரி சிம்மர் பிரதிகாரரிடம் இழந்தார் என்பது இதன்மூலம் தெளிவா கிறது. கி.பி. 946 வரையில் உஜ்ஜெயினியும் வேறு பகுதிகளும் பிரதிகாரர்களின் ஆட்சியில் இருந்தன என்பது பிரதாப்கர் (Pratapgarh) கல்வெட்டினுல் உறுதியாகத் தெரிகிறது. எனவே, ஏதோ ஒரு சிறிய பகுதியில் மட்டுமே பரமார ஆதிக்கம் நிலைபெற் றிருத்தல் வேண்டும்.

ஆனுல், ராஷ்டிரகூட மூன்றும் கிருஷ்ணரது உதவியுடன் தாராவையும் சில பகுதிகளையும் இரண்டாம் வைரிசிம்மர் மீட் டார். தமது வாள் வலிமையால் தாரா நகரம் தமக்குச் சொந்த மானது என்பதை வைரிசிம்மர் நிருபித்தார் என்று உதயபூர் பிரசஸ்தி கூறுவதன் பொருள் இதுவே.

இரண்டாம் சீயகர்

இரண்டாம் வைரிசிம்மர் சுமார் கி.பி. 945-ல் காலமானதும், அவர் மகனுன இரண்டாம் சீயகதேவர் அரியணை ஏறினுர். 'ஹர்ஷதேவர்', 'சிம்மதந்தபட்டர்' என்பன போன்ற வேறு பெயர்களும் அவருக்கு இருந்தன. பரமார அரசர்களுள் பெருங் கீர்த்தி பெற்றவர் இவரேயாவார். இவ் வரசர் கி.பி. 949-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பதை ஹர்சொலாச் செப்பேட்டின் மூலம் நாம் அறிகிறேம். பாய்யலச்சி கோசம் என்ற நூலை

கி.பி. 974-ல் தனபாலர் என்ற சமணப் பெரியார் எழுதி முடித்த தற்குச் சிறிது முன்பு ராஷ்டிரகூடத் தலைநகரான மான்ய கேதத்தை மாளவ அரசர் வாக்பதி கைப்பற்றி அழித்ததாக அதில் கூறப்படுகிறது. ஆகவே, கி.பி. 949-க்கு முன்பு ஆட்சிக்கு வந்து, 974-க்குச் சற்று முன்வரை இம் மன்னர் ஆட்சி புரிந்தார்.

துவக்கத்தில் இவர் மகாமண்டலாதிபதியாக—ராஷ்டிரகூடருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராக—இருந்தார் என்பதை ஹர்சொலாச் செப்பேடு தெளிவாகக் கூறுகிறது. இவர் பதவிக்கு வந்த காலத்தில் பிரதிகாரர்கள் பழைய நிலையை இழந்துவிடவே, அவர்களது அரசு சீர்குலைந்து வந்தது. அதுவரை பிரதிகாரருக்குக் கட்டுப்பட்டிருந்த சந்தெல்லர்கள், சாகமானர்கள், குகிலர்கள், சேடிகள் ஆகியோர் பிரதிகார அரசர் தேவபாலரின் காலம் முதல் சுதந்திர அரசர்களாக வளர்ச்சியுறலாயினர். இத் தருணத்தில்தான் இரண்டாம் சீயகர் அரியணை ஏறினார். மேலும், அச் சமயத்தில் ராஷ்டிரகூடர்களும் வடக்கில் கவனம் செலுத்த முடியாதவாறு தெற்கில் வளர்ந்துவரும் சோழர்களை எதிர்க்கும் போர்களில் ஈடுபட நேர்ந்தது. இந்த வாய்ப்பினை இரண்டாம் சீயகர் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

இம் மன்னரின் போர்கள்

இரண்டாம் சீயகரது ஹர்சொலாச் செப்பேடு (கி.பி. 949) இம் மன்னர் 'மகாராஜாதிராஜர்', 'மகாமண்டலிகர்' எனும் இரு விருதுகளையும் புனைந்திருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. சுதந்திரமான அரசருக்குரிய 'மகாராஜாதிராஜர்' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்ட அதே நேரத்தில், சிற்றரசருக்குரிய 'மகாமண்டலிகர்' என்னும் பட்டத்தையும் அவர் கைவிடாமல் தரித்திருந்தது குறிப்பிடத் தக்கது. இன்னமும் ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கிருஷ்ணருக்கு அவர் கட்டுப்பட்டிருந்ததே இதற்குக் காரணம். அதே சமயம் மாளவத்தின் மேற்குப் பகுதியில் சில பகுதிகள் இரண்டாம் சீயகரால் புதிதாக வெல்லப்பட்டிருத்தல் வேண்டும். அத் திசையில் யோகராஜர் என்பவரைச் சீயகர் மகீ (Mahi) நதிக்கரையில் தோற்கடித்ததாக ஹர்சொலாச் செப்பேடு தெரிவிக்கிறது. இந்த யோகராஜர் சௌராஷ்டிரத்தில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த சாளுக்கிய அரசரான இரண்டாம் அவனிவர்மன் யோகராஜராகவே இருக்கக்கூடுமென்று டாக்டர் கங்குலி[1] போன்றோர் கருதுகின்றனர். வேறு யோகராஜர் எவரும் இருந்ததாகத் தெரியாததால், கி.பி. 899-ல் ஆண்டு

[1] D. C. Ganguly, *History of the Paramara Dynasty*. R. C. Majumdar (Editor), *The Age of Imperial Kanauj*, article by Ganguly.

கொண்டிருந்ததாக ஒரு செப்பேட்டின்மூலம் தெரியவரும் இந்த அவனிவர்மன் யோகராஜரையே இரண்டாம் சீயகரிடம் தோற்ற மன்னராக நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. இதன்படி பார்த்தால், இந்த அவனிவர்மன் அறுபது ஆண்டுகளுக்குமேல் ஆட்சிபுரிந்தவராக இருக்க வேண்டும். யோகராஜருடனான போரில் குஜராத்தில் கேதக மண்டலத்தைச் (இன்றைய கைரா — Khira) சேர்ந்த ஒரு குறுநில மன்னர் இரண்டாம் சீயகருக்கு உதவினார்.

அடுத்தபடியாக ஹூணர்கள்மீது போர்தொடுத்துச் சீயகர் பெருவெற்றி பெற்றதாக நவசாகசாங்க சரிதம் தெரிவிக்கிறது. மாளவத்துக்கு வடமேற்கில் இருந்த ஹூணமண்டலத்தைச் சீயகர் தாக்கினார் என்பது தெளிவு. ஆனால், வடகிழக்கில் கஜுராஹோவிலிருந்து ஆட்சி செலுத்திய சந்தெல்ல மன்னர் யசோவர்மனிடம் இரண்டாம் சீயகர் தோல்வியுற்றுச் சில பகுதிகளையும் இழந்தார். யசோவர்மனின் கஜுராஹோக் கல்வெட்டு (கி.பி. 956) இதை நமக்குத் தெரிவிக்கிறது. இந்த வெற்றியால் மாளவத்தின் வடகிழக்குப் பகுதியிலிருந்த வெட்ராவதி (Vetravati) நதியின் கரையிலிருந்த பில்சா (Bhilsa) நகர் வரையில் சந்தெல்லர் வசமாயிற்று.

ராஷ்டிரகூடரின் தோல்வி

இரண்டாம் சீயகரின் மாபெரும் போர் வெற்றி ராஷ்டிரகூடர்களது தலைநகரமான மான்யகேதத்தைக் கைப்பற்றியதேயாகும். கேதமண்டலம் ராஷ்டிரகூடருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர் ஒருவரின் வசமிருந்தபோதுதான் சீயகர் அதைக் கைப்பற்றினார். ராஷ்டிரகூடருக்கெதிரான முதல் பகை நடவடிக்கையாக இதை நாம் கருதவேண்டும். ராஷ்டிரகூடப் பேரரசரான மூன்றாம் கிருஷ்ணர் தெற்கில் சோழர்களை எதிர்த்துக் கடும்போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் சீயகர் கேதமண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஏதோ காரணத்தினால் சீயகரைத் தண்டிப்பதற்குக் கிருஷ்ணர் முயற்சி செய்யவில்லை. கி.பி. 968-ல் மூன்றாம் கிருஷ்ணர் இறந்த பின், கோட்டிங்கர் அரசரானார். சீயகருக்கு எதிராக இவர் படையெடுத்துச் சென்றார். நர்மதையின் கரையில் காளிகட்டம் (Kalighatta) என்ற இடத்தில் கடும்போர் நிகழ்வுற்றது. வாகதத்தை ஆண்டுவந்த பரமார அரசர் கம்கதேவர் (Kamkadeva) சீயகருக்கு உதவியாகப் படையுடன் வந்தார். கீர்த்திமிக்க ராஷ்டிரகூடர்களின் சேனையானது பகைவர்களால் தோற்கடிக்கப்பட்டது. சோழரைப் பொருத போர்களினாலும் கோட்டிங்கரது திறமையின்மையாலும் ராஷ்டிரகூடரது

வல்லமை பரமாரர்களிடம் தோல்வி காணும் அளவுக்கு ஒடுங்கிப் போயிருந்தது. கம்கதேவர் போரில் கொல்லப்பட்டாராயினும், சீயகர் வெற்றிகரமாக முன்னேறிச் சென்று, கி.பி. 972-ல் ராஷ்டிரகூடர்களின் தலைநகரான மான்யகேதத்தைக் கைப்பற்றி அழித்தார். ராஷ்டிரகூடரது கருவூலத்திலிருந்த பொன்னும் பொருளும், செப்பேட்டுச் சாசனங்களின் பிரதிகளும் பரமாரரால் எடுத்துச் செல்லப்பட்டன. எந்த அரசரும் பெருமைப்படத்தக்க வெற்றியாகும் இது. மேலும், முன்னேற விரும்பிய சீயகரை ராஷ்டிரகூடருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசரும், கங்கபாடி நாட்டு மன்னருமான இரண்டாம் மாறசிம்மர் தடுத்து நிறுத்தினர். சீயகர் தமது நாட்டுக்கு மீண்டார்.

இந்த வெற்றியின் விளைவாகத் தபதி நதிக்கரை வரையில் பரமார அரசின் தென் எல்லை விரிவடைந்தது. மாளவத்தின் ஒரு பகுதியை மட்டுமே தம் தந்தையிடமிருந்து சீயகர் பெற்ருரெனினும், சொந்த முயற்சியினுல் தம் அரசை அவர் மிகவும் விரிவுபடுத்தினர். பரமாரப் பேரரசை நிறுவியவர் இவரே என்று கூறுவது பொருத்தமாகும். இவரது ஆட்சி கி.பி. 974க்குச் சிறிது முன்பு 973 அல்லது 972-ல் முடிவுற்றிருக்க வேண்டும்.

வாக்பதி முஞ்சர்

மெருதுங்கரின் கதை

இரண்டாம் சீயகருக்கு வாக்பதி, சிந்துராஜர் எனும் இரு பிள்ளைகளிருந்தனர். இந்த வாக்பதியே முஞ்சர் என்றும், உத்பலர் என்றும் வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டார். முஞ்சர் என்ற பெயருக்கான காரணம்பற்றிப் 'பிரபந்த சிந்தாமணி' என்ற காவியத்தின் ஆசிரியரான மெருதுங்கர் ஒரு கதை கூறுகிருர். சீயகர் பல ஆண்டுகள் பிள்ளைப் பேறின்றி இருந்ததாகவும், ஒருநாள் அவர் நாட்டுவலம் வந்துகொண்டிருந்தபொழுது முஞ்சை என்ற புற்புதரில் ஒரு குழந்தையைக் கண்டெடுத்து அதற்கு முஞ்சர் என்று பெயர் சூட்டிப் பட்டத்து வாரிசாக வளர்த்து வந்ததாகவும் மெருதுங்கர் கூறுகிருர். இதற்குப் பின்னர் அரசிக்குச் சிந்துராஜர் என்ற ஆண் மகவு பிறந்தது; ஆயினும், முஞ்சருக்குப் பின்னரே சிந்துராஜர் ஆளவேண்டுமென்று சீயகர் ஏற்பாடு செய்தாராம். இதே கதை 'புராதன பிரபந்த சங்கரகம்', 'அயினி அக்பரி' ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றது. இவையனைத்தும் பிற்காலத்திய கதைகளே.

இக் கதையை நாம் உண்மையென்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. கி.பி. 11ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த 'திலக மஞ்சரி'

என்ற நூல் சீயகருக்குப் பின் வாக்பதி ராஜர் அரசரானர் என்றும், அவரது தம்பியே சிந்துராஜர் என்றும் குறிப்பிடுகிறது. வாக்பதிக்கு ஆண் மகவு பிறக்காததாலேயே சிந்துராஜர் அரச ரானர் என்பது தெளிவு. பரமாரர்களது சாசனங்களோ அவ்ர் களது காலத்திய நூல்களோ முஞ்சர் இவ்வாறு கண்டெடுக்கப் பட்ட குழந்தை என்று குறிப்பிடவேயில்லை.

பத்ம குப்தரது நவசாகசாங்க சரிதம் இரண்டாம் சீயகர் தமது இறுதிக் காலத்தில் சந்நியாசம் பூண்டு விரதங்களில் ஈடு பட்டார் எனவும், இதனுல் முடிதுறந்து தம் மகன் வாக்பதி ராஜரை அரியணையில் அமர்த்தினர் எனவும் உரைக்கிறது. மான்யகேதப் படையெடுப்பிலிருந்து திரும்பிவந்த சில மாதங் களிலேயே இது நிகழ்ந்தது எனப் பத்ம குப்தர் தெரிவிக்கிருர்.

முஞ்சரின் போர்கள்

இரண்டாம் வாக்பதிராஜ முஞ்சர் தம் தந்தையைப் போலவே பெரு வீரர். ராஷ்டிரகூடரது விருதுகளான பிருதிவி வல்லபர், ஸ்ரீவல்லபர், அமோக வர்ஷர் ஆகியவற்றை இவர் புனைந்துகொண்டார். தமது அரசை விரிவுபடுத்தும் முயற்சி களில் இவர் இறங்கலானர். முதலில் இவரால் தாக்கப்பட்ட அரசர் மேவார் நாட்டுக் குகில வம்சத்து சக்திகுமாரர். (டாக்டர் D. C. கங்குலி, பாரதீய வித்தியா பவன் வெளியிட்டுள்ள இந்திய வரலாறு நான்காவது தொகுதியான '*The Age of Imperial Kanauj*' என்ற நூலின் முதற் பதிப்பில், பக்கம் 96-ல் சக்தி குமாரர் நரவாகனரது மகன் என்று குறிப்பிட்டுள்ளார்; இது பிழையாகும். நரவாகனரது மகனுன சாலிவாகனரின் மகனே சக்தி குமாரர்.) மேவாரிலிருந்த இந்தக் குகில அரசு மேடபாடம் (Medapata) என்றழைக்கப்பட்டது. அதன் தலைநகரான அகதம் (Aghata) என்ற நகரம் பரமாரப் படைகளால் சூறையாடப் பட்டது. குகில அரசர் போர்க்களத்திலிருந்து ஓடி, அஸ்தி குண்டியை ஆண்டுகொண்டிருந்த தவலர் (Dhavala of Hasti-kundi) என்ற ராஷ்டிரகூடச் சிற்றரசரிடம் அடைக்கலம் புகுந் தார். இந்த வெற்றியின் பயனுக மேவாரின் கிழக்குப் பகுதியைப் பரமாரர்கள் பெற்றனர். சுமார் ஒரு நூற்ருண்டு காலம் வரையில் இப் பகுதி பரமாரர் வசமே இருந்தது.

உஜ்ஜெயினியைப் பெறுதல்

சக்தி குமாரருக்கு உதவியாக வந்த கூர்ஜரச் சிற்றரசன் ஒரு வனும் படுதோல்வியுற்று, மார்வார்ப் பாலைவனத்துக்குள் ஓடி

யொளிந்தான் என்று நவசாகசாங்க சரிதத்தின் ஆசிரியரும் இரண்டாம் வாக்பதியின் அவைக்களப் புலவருமான பத்மகுப்தர் விரிவாகக் குறிப்பிடுகிறார். இந்தக் கூர்ஜர அரசர் குஜராத்தை யாண்ட சௌளுக்கிய அரசரான மூலராஜரே என்பது சில அறிஞர்களின் கூற்று.[1] ஆனால், அவர் கனோஜையாண்ட கூர்ஜரப் பிரதிகார அரசரான விஜயபாலராக இருக்கக் கூடு மென்று மற்ற ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[2] கி.பி. 946 வரை யில் கூர்ஜரப் பிரதிகாரர் வசமிருந்த உஜ்ஜெயினி நகரம் கி.பி. 974-ல் இரண்டாம் வாக்பதியின் வசம் வந்துவிட்டதை இதற்குச் சான்றாக இவர்கள் எடுத்துரைக்கின்றனர். அந் நகரிலிருந்து இந்தப் பரமார அரசர் கி.பி. 974-ல் வெளியிட்ட செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. எனவே, இந்தக் கூர்ஜர அரசரிடமிருந்து உஜ்ஜெயினியையும் அதைச் சுற்றியிருந்த மாளவத்தின் மற்றப் பகுதிகளையும் பரமார அரசர் பெற்றார்.

சாகமானர்கள்மீது போர்

இதன் பின்னர், மார்வார்ப் பகுதியையாண்ட சாகமானரை எதிர்த்துப் போர் மூண்டது. இப் போரின் ஆரம்பக் கட்டத்தில் பரமார அரசரைச் சாகமானர்கள் தோற்கடித்தனர். இந்தச் சாகமானர்கள் நாதோல் (Nadol) அரசைச் சேர்ந்த சோபிதர், பலிராஜர் அல்லது விக்கிரபாலராக இருக்க வேண்டும். இம் மூவரும் மிகவும் குறுகிய காலமே ஆட்சிபுரிந்ததால், இதுபற்றித் திட்டவட்டமாகக் கூறுவது கடினம். அவர்கள் அனைவருமே பரமாரர்களை எதிர்த்துச் சண்டையிட்டதாக அவர்களது சாசனங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும், இறுதியில் வாக்பதி முஞ்சர் சாகமானப் படைகளைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். இந்த வெற்றியின்மூலம் அவர்களுக்குச் சொந்தமான அபுக் குன்று பரமாரர் கைக்கு மாறியது என்று டாக்டர் கங்குலி போன்றவர்கள் கருதினர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட பகுதிகள் முஞ்சரின் பிள்ளைகளான ஆரண்யராஜர், சந்தனர் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டன.

சாளுக்கியரின் சிறையில் மரணம்

ஹூணமண்டலத்திலிருந்து ஹூணர்களுக்கெதிராகவும் இம் மன்னர் போரிட்டு வெற்றி பெற்றார். அம் மண்டலத்தின் சில பகுதிகள் முஞ்சரால் கவர்ந்து கொள்ளப்பட்டன.

[1] D. C. Ganguly, *History of the Paramara Dynasty.*

[2] R. S. Tripathi, *History of Kanauj.* B. N. Puri, *History of Gurjara Pratiharas.*

கி.பி. 975-ல் கீர்த்திமிக்க ராஷ்டிரகூட வம்சம் முடிவுக்கு வந்து இரண்டாம் தைலப்பரால் மற்ெருரு சாளுக்கிய அரசுக்குத் தக்கணத்தில் வித்திடப்பட்டது. இந்தத் தைலப்பருக்கும் பரமார அரசர் இரண்டாம் வாக்பதிக்கும் இடையே பகைமை இருந்து வந்தது. தைலப்பரின் தாயாரான பந்தா தேவி திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரி அரசர் இரண்டாம் யுவராஜரின் சகோதரி யாவார். இதனுல் கலச்சூரிகள் மீதும் வாக்பதிராஜருக்குப் பகை ஏற்பட்டது. வாக்பதி திரிபுரியைக் கைப்பற்றி யுவராஜரை விரட்டியடித்தார் என்பதை உதயபூர் பிரசஸ்தி தெளிவாக எடுத்துரைக்கிறது. லாட்டம், கர்நாடகம், கேரளம், சோழ அரசு ஆகியவற்றையும் வாக்பதி வென்ருர் என்று இதே பிரசஸ்தி கூறுவது வழக்கமான புனைந்துரையே என்பதில் ஐயமில்லை. லாட்டத்தை அவர் வென்றதாகக் குறிப்பிடுவது சௌளுக்கிய மூலராஜருடன் நிகழ்ந்த போரினைக் குறிப்பதாக இருக்கக்கூடும். சோழநாட்டுக்கும் கேரளத்துக்கும் இப் பரமார மன்னர் படையெடுத்துச் சென்ருர் என்பது தேவையில்லாத வெறுங் கற்பனையே. கர்நாடகம் என்பது மேலைச் சாளுக்கிய அரசைக் குறிக்கிறது. மான்யகேதத்தைத் தாக்கி அழித்த பின், ராஷ்டிரகூடப் பேரரசுக்குத் தாங்களே வாரிசாக விளங்க லாம் என்று பரமாரர்கள் கனவு கண்டனர். ஆனுல், தைலப் பரின் சாளுக்கிய அரசு ராஷ்டிரகூடருக்குப் பின் எழுச்சியுற்ற தால் இக் கனவில் மண் விழுந்தது. தைலப்பரை எதிர்த்து இடப்பட்ட போரில் துவக்கத்தில் ஓரிரு வெற்றிகளை வாக்பதி முஞ்சர் பெற்ருர். இவ் வெற்றிகளினுல் மிகுந்த நம்பிக்கை பெற்று, தமது அமைச்சர் ருத்திராதித்தியரின் சொல்லையும் தட்டி, கோதாவரி நதியைக் கடந்து, சாளுக்கிய அரசுக்குள் வாக்பதி நுழைந்தார். அங்குப் படுதோல்வியுற்று, சாளுக்கிய ரால் இரண்டாம் வாக்பதி சிறை பிடிக்கப்பட்டார். சிறையி லேயே தைலப்பரின் ஆணையின்படி அவர் கொல்லப்பட்டார் என்பதைச் சாளுக்கியரது சாசனங்கள் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. இப் போர் கி.பி. 995-ல் நிகழ்ந்தது. இரண் டாம் தைலப்பரின் மகனுன சத்தியாஸ்ரயர் என்பவரே (தைலப் பருக்குப் பின் மேலைச் சாளுக்கிய அரசரானவர் இவரே) சாளுக் கியப் படைகளுக்கு இப் போரில் தலைமை தாங்கினுர்.

பிரபந்த சிந்தாமணியானது வாக்பதி ராஜரின் சிறை வாழ்வு பற்றி ஒரு கதை கூறுகின்றது. சிறையில் கிடந்தபோது தைலப் பரின் தங்கையான மிருணளாவதி என்ற விதவைப் பெண்மீது அவருக்குக் காதல் சுரந்ததாக அந்நூல் தெரிவிக்கிறது. பரமார அதிகாரிகள் மாறு வேடத்தில் சாளுக்கியத் தலைநகருக்கு வந்து

தம் அரசரின் விடுதலைக்காகத் திட்டங்கள் வகுத்தனர். இதை வாக்பதி மிருணளாவதியிடம் கூறவே, அப் பெண் இதைத் தன் அண்ணனிடம் தெரிவித்தாள். இதன் விளைவாகவே முஞ்சர் சிரச் சேதம் செய்யப்பட்டாராம்.

மதிப்புரை

முஞ்சர் பேராற்றல் மிக்க அரசர். நர்மதை நதிக்குத் தெற்கிலும் அவரது தென் எல்லை விரிந்திருந்தது என்பது தெரிகிறது. அவரது தோல்விக்குப் பின் பரமார அரசின் தென்பகுதிகளை மேலைச் சாளுக்கியர் கவர்ந்து கொண்டனர். இரண்டாம் வாக்பதி பெயரில் மட்டுமின்றி (வாக்பதி என்றால் சிறந்த வாக்கு வன்மை பெற்றவர் என்பது பொருள்) உண்மையிலும் எழுத்து வன்மை பெற்றவராக இருந்தார். அவரது கவிபாடும் ஆற்றலைப் பற்றி அவரது காலத்தைச் சேர்ந்த பத்மகுப்தர் போன்ற புலவர்களே புகழ்ந்துள்ளனர். அவரது சாசனங்களிலும் அவர் சிறந்த கவிஞர் என்பது குறிப்பிடப்படுகிறது. அவர் எழுதியதாகக் கூறப்படும் பல சமஸ்கிருத, பிராகிருதச் செய்யுட்கள் பிரபந்த சிந்தாமணி, புராதன பிரபந்த சங்கரகம் ஆகிய நூல்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளன. தனஞ்சயர், ஹாலாயுத பட்டர், தனிகர், பத்ம குப்தர், அமிதகதி போன்ற பல புலவர்களை அவர் ஆதரித்தார். அவரது காலத்தில் உஜ்ஜெயினி அறிஞர்களும் புலவர்களும் நிறைந்த நகரமாக விளங்கிற்று. தாரா நகரம் பெரிதும் அழகுபடுத்தப்பட்டதாம். முஞ்ச சாகரம் என்ற மிகப் பெரும் ஏரி ஒன்றை இம்மன்னர் வெட்டுவித்தார். உஜ்ஜெயினியிலும் மற்ற நகரங்களிலும் பல ஆலயங்களை இவர் எழுப்பினர். குஜராத்திலிருந்த முஞ்சபுரம் என்ற நகரம் இவராலேயே நிறுவப்பட்டிருக்கக் கூடுமென்று கருதப்படுகிறது. பரமார அரசர்களுள் வாக்பதி முஞ்சர் தலைசிறந்த ஒருவர் என்பதில் ஐயமில்லை. சமஸ்கிருத, பிராகிருதச் செய்யுட்கள் பல முஞ்சரது துயர மரணத்தைக் குறித்து மனம் நெகிழ்ந்து பாடுகின்றன. இவ்வரசர் எவ்வளவு பெயரும் புகழும் பெற்றவராயிருந்தார் என்பதற்கு அவையே போதுமான சான்றுகளாம்.

சிந்துராஜர்

கி.பி. 974ஆம் ஆண்டுவாக்கில் அரியணை ஏறிய வாக்பதி முஞ்சர் கி.பி. 995-க்குப் பின் சாளுக்கியரது சிறையில் மாண்டார். இம் மரணம் இரண்டாம் தைலப்பரின் கடைசி ஆண்டான 997-ல் அல்லது அதற்குச் சற்று முன் நிகழ்ந்திருக்க வேண்டும். எனவே, வாக்பதியின் தம்பியான சிந்துராஜர் கி.பி. 997-ல் பதவியேறினர் என்று நாம் கொள்ளலாம்.

பிரபந்த சிந்தாமணி போன்ற சமணப் பிரபந்தங்கள், போஜ சரிதம் ஆகிய நூல்கள் இரண்டாம் வாக்பதிக்குப் பின் சிந்து ராஜரின் மகனுன போஜரே அரசராஞர் என்று குறிப்பிடு கின்றன. ஆனல், நவசாகசாங்க சரிதம் முதலிய நூல்களும் சில கல்வெட்டுகளும் இச் செய்தி உண்மையன்று என்பதை நன்கு புலப்படுத்துகின்றன. முஞ்சர் கர்நாடகத்தின்மீது படை யெடுத்துச் செல்லும்போதே தம் தம்பி சிந்துராஜரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்துச் சென்ருர் என்று நவசாகசாங்க சரிதம், உதயபூர் பிரசஸ்தி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. போஜரது காலத்தவரான யசோவர்மனின் கல்வன் (Kalvan) செப்பேடுகள் தரும் பரமார வம்சாவளிப் பட்டியலில் இரண்டாம் வாக்பதிராஜருக்கு அடுத்த அரசராகச் சிந்துராஜரையே குறிப் பிடுகின்றன.

சிந்துராஜருக்குச் சிந்தலர் என்ற மற்ரெரு பெயரும் இருந் தது. 'நவசாகசாங்கர்', 'நவீனசாகசாங்கர்', 'குமார நாராய ணர்' எனும் பல விருதுகளே இவர் புனேந்திருந்தார். இவரது ஆட்சியைப்பற்றி அறிந்துகொள்வதற்கு இவரால் வெளியிடப் பட்ட ஒரு சாசனமும் கிடைக்கவில்லே. பிற்காலத்திய பரமார சாசனங்கள், நவசாகசாங்க சரிதம் போன்ற நூல்கள் ஆகிய வற்றைக் கொண்டே இவரைப்பற்றி நாம் தெரிந்து கொள் கிருேம்.

போர்கள்

மேலேச் சாளுக்கியர்கள் கவர்ந்து கொண்ட பரமாரப் பகுதி களே மீட்பதற்காகச் சிந்துராஜர் போர் துவக்கினுர். இரண்டாம் தைலப்பருக்குப் பின் சாளுக்கிய அரியணே ஏறிய அவருடைய மகன் சத்யாஸ்ரயர் சோழப் பேரரசர் ராஜராஜரை எதிர்த்துக் கடுமையான போர்களில் ஈடுபட்டுத் தோல்வியுற்று வந்த வேளேயில் சிந்துராஜரின் படைகள் முஞ்சர் முன்பு இழந்த பகுதி களே மீட்டன. இதன் பின்னர்க் கோதாவரி நதி பரமாரர்களின் தென் எல்லேயாக இருந்திருக்கக்கூடும்.

அடுத்தபடியாக, ஹுணமண்டலமும் இவ்வரசரால் தாக்கப் பட்டது. அதில் பரமாரருக்கு உட்படாமல் எஞ்சியிருந்த பகுதி கள் அனைத்தும் இப்பொழுது சிந்துராஜரால் சேர்த்துக் கொள் ளப்பட்டிருத்தல் வேண்டும். சிந்துராஜருக்குப் பின் ஹுண மண்டலத்தைப் பரமாரர்கள் தாக்கியதாக எங்கும் குறிப்பிடப் படாததால் இவ்வாறு நாம் ஊகிக்கலாம்.

ஏதோ காரணத்தினுல், வாகதத்தையாண்ட பரமாரக் கிளை வம்சத்தின்மீது இப்பொழுது பகை எழுந்தது. வாகத அரசரையும் சிந்துராஜர் தோற்கடித்துப் பணியுமாறு செய்தார். சிந்துராஜரால் தோற்கடிக்கப்பட்ட வாகத அரசர் சந்தப்பராக (Chandapa) இருக்கக்கூடும். இதன் பின்னர், தென் கோசலத்தின் மீதும் சிந்துராஜர் படையெடுத்தார். தென் கோசலத்தை அப்பொழுது ஆண்டு கொண்டிருந்தவர்கள் சோமவம்சி அரசர்கள். ஆனுல், இதுபற்றி அறிஞர்களிடையில் மாறுபட்ட பல கருத்துகள் நிலவுகின்றன. அடுத்தபடியாக, லாட்டத்தின் மீது இவர் படையெடுத்தார். அதைச் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த பாரப்பரின் (Barappa) மகன் கொக்கிராஜர் (Goggiraja) அல்லது கொங்கிராஜர் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார். இவரே முன்பு வாக்பதி முஞ்சரால் தோற்கடிக்கப்பட்டவர். மேலைச் சாளுக்கிய அரசர்களின் உதவி கொண்டு தமது அரசை மீண்டும் பெற்ற கொக்கிராஜர் விரைவிலேயே சிந்துராஜரால் மறுபடியும் தோற்கடிக்கப்பட்டார். சிந்துராஜருக்குக் கட்டுப்பட்டுத் திறை செலுத்தி வாழக் கொக்கிராஜர் இணங்கினுர் போலும்!

கொங்கணத்தில் (இது அபராந்தா என்றழைக்கப்பட்டது) ஆட்சி புரிந்து கொண்டிருந்த சிலாஹார (Silahara) வம்சத்து அபராஜிதர் என்ற அரசர் சிந்துராஜரால் தோற்கடிக்கப்பட்டார். இத் தோல்விக்குப் பின் பரமாரர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராக அவர் ஆனுர். ஆனுல், விரைவிலேயே சோழப் படையெடுப்பிலிருந்து சற்று விடுபட்ட சாளுக்கிய மன்னர் சத்யாஸ்ரயர் அபராஜிதரைத் தோற்கடித்துத் தமக்குப் பணியுமாறு செய்தார் என்பதைக் 'கதாயுத்தம்' என்ற கன்னட நூலின் மூலம் நாம் அறிய முடிகிறது. இதனையடுத்து, முரலர்கள் (Muralas) என்போர்மீதும் சிந்துராஜர் படையெடுத்து வென்ருராம். இந்த முரலர்கள் யாவர் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. கொங்கணத்துக்கும் கேரளத்துக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியாக முரலம் என்பது இருக்கக்கூடும். இதுவரையிலான படையெடுப்புகளும் வெற்றிகளும் நவசாகசாங்க சரிதம், உதயபூர் பிரசஸ்தி ஆகியவற்றில் குறிக்கப்பட்டவையாகும்.

சசிப் பிரபா

இறுதியாக, மிகவும் விரிவாக நவசாகசாங்க சரிதம் குறிப்பிடும் மற்ருெரு போர் நிகழ்ச்சியைப்பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகும். நர்மதைக்குத் தெற்கில் இருநூறு கல் தொலைவில் ஆண்டுகொண்டிருந்த நாகவம்ச அரசர் சங்கபாலர் என்

பவர் வஜ்ராங்குசன் என்ற அரக்க அரசனுக்கு எதிராகச் சிந்து ராஜரின் உதவியை நாடினாராம். சிந்துராஜர் வித்யாதரர்களின் (சிலாஹாரர்களின் மற்றொரு பெயர்) உதவியோடு கோதாவரி நதியைக் கடந்து சென்று, வஜ்ராங்குசனின் தலைநகரான ரத்னு வதியைக் கைப்பற்றினாராம். அங்கு நடைபெற்ற போரில் வஜ்ராங்குசனும் அவனது மகனான விசுவாங்குசனும் கொல்லப் பட்டனர். பின்னர், ரத்னுவதியில் பணிகுமாரன் என்ற நாக இளைஞன் ஒருவனைச் சிந்துராஜர் அரசராக்கினார். வஜ்ராங்குச னின் தடாகத்தில் பூத்த பொற்றாமரைப் பூவைக் கொண்டு சென்று, நாக அரசன் சங்கபாலரிடம் தந்து, அவனது மகளான சசிப் பிரபா என்ற பெண்ணைச் சிந்துராஜர் மணந்துகொண்டா ராம். இதன் பின்னர், உஜ்ஜெயினிக்கும் தாராவுக்கும் சிந்து ராஜர் திரும்பினார். உண்மையில் நிகழ்ந்த ஒரு போரானது கற்பனைக் கதை ஒன்றோடு பின்னிப் பிணைந்து இவ்வாறு உரு வெடுத்துள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர். ரத்னுவதி என்பது விந்திய மலைக்குத் தெற்கில், பழங்குடியினர்களின் தலை நகரங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இந்த ஊரே இன்று ரத்தன்பூர் (Ratanpur) என்று அடையாளம் சொல்லப் படுகிறது. தெற்கு மத்தியப் பிரதேசத்தில் பஸ்தார் (Bastar) மாவட்டத்தில் இந்த நாக அரசர் சங்கபாலர் என்பவர் சக்கர கோட்டியா என்ற ஊரில் ஆட்சி புரிந்த ஒருவராக இருக்கலா மென்றும் ஊகிக்கப்படுகிறது. இந்த வெற்றியின்மூலம் நாக இளவரசியாகிய சசிப் பிரபாவை சிந்துராஜர் மணந்து கொண் டார்.

இம் மன்னரது பெருமை

சிந்துராஜர் தம் அண்ணனைப் போலவே சிறந்த ஒரு போர் வீரர் என்பதில் ஐயமில்லை. ஆயினும், தமது இறுதிக் காலத்தில் மேலைச் சாளுக்கிய அரசருக்கெதிராக நிகழ்த்தப்பெற்ற போரில் சிந்துராஜர் பெருந் தோல்வியுற்றார். வடக்கு குஜராத்தின்மீது ஆட்சிபுரிந்த முதலாம் மூலராஜருடைய மகன் சாமுண்ட ராஜர் பரமார அரசரான சிந்துராஜரை அழித்ததாக வாத்நகர் (Vadnagar) பிரசஸ்தி தெரிவிக்கிறது. இதுபற்றிய உண்மையை வேறு எச் சான்றாலும் அறிய முடியவில்லை. இவ்விரு தோல்வி கள் நீங்கலாக, சிந்துராஜரது போர் முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியிலேயே முடிந்தன. நவசாகசாங்க சரிதத்தை எழுதிய பத்ம குப்தர் என்ற மகாகவியை இம் மன்னர் ஆதரித்தார். 'நவசாகசாங்கர்' என்ற விருதினைப் பூண்டிருந்த சிந்துராஜரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் போர்களையும்பற்றி இந் நூல் கூறு கிறது. சிந்துராஜரை வட குஜராத் அரசர் சாமுண்டராஜர்

போரில் கொன்ருர் என்று 'குமாரபால சரிதம்' என்ற நூல் எழுது கிறது. இது எந்த அளவுக்கு உண்மையென்பது புலனுகவில்லை. சிந்துராஜரின் மகனுன போஜதேவர் கி.பி. 1011 ஆம் ஆண்டில் அரியணையில் இருந்தார் என்பது அவரது மொதாசா (Modasa) செப்பேட்டினுல் தெரிய வருகிறது. எனவே, இந்த ஆண்டுக்கு முன்பு சிந்துராஜரின் ஆட்சி முடிவுற்றது என்பது நிச்சயம்.

பேரரசர் போஜர்

போஜர் அரியணை ஏறல்

இரண்டாம் வாக்பதிக்குப் பின் போஜரே அரியணை ஏறினு ரென்று மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி, பல்லாளரின் போஜ சரிதம் ஆகிய நூல்கள் குறிப்பிட்டன. பின்னர், அபுல் ஃபசலும் தமது அயினி அக்பரியில் இவ்வாறே எழுதினுர். இச் செய்திகள் உண்மையல்ல என்பதைப் பத்ம குப்தரின் நவசாகசாங்க சரிதம் என்ற நூலும் பல சாசனங்களும் நன்கு நிரூபிக்கின்றன. வாக்பதி முஞ்சர் தமக்குக் குழந்தை இல்லாத காரணத்தினுல் தம் தம்பியான சிந்துராஜரின் மகன் போஜரையே யுவராஜா வாக நியமித்திருந்தார். ஆயினும், முஞ்சர் காலமானபொழுது சிந்துராஜர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய உடல் நலத் தோடும் வலிமையோடும் இருந்ததால் தாமே அரசரானுர். இவையெல்லாம் எந்தவிதமான சிக்கலுமின்றி மிகவும் இயல்பாக நடப்பன போன்றே நடந்தேறின என்று கருதலாம்.

மெருதுங்கர் மற்ருெரு கதையையும் நமக்குக் கூறுகிருர். போஜர் தென் இந்தியாவான தட்சிணுபதத்தையும், வங்காள மான கௌடத்தையும், மத்திய இந்தியாவையும் ஒன்ருக ஆளும் சக்கரவர்த்தியாகத் திகழ்வார் என்று எவனே ஜோசியம் உரைத்ததைக் கேட்டு வாக்பதி முஞ்சர் பொருமையுற்று, தம் தம்பி மகன் தம்மையும் விஞ்சிவிடுவான் போல் இருக்கிறதே என்று மனம் புழுங்கி, போஜரைக் கொன்று விடுமாறு ஆணை யிட்டாராம். அப் பணிக்கென ஏவப்பட்ட கொலையாளிகள், சிறு வரான போஜரின் களங்கமற்ற முகத்தைக் கண்டு, அவரைக் கொல்லாமல் திரும்பி வந்து முஞ்சரிடம் போஜரது கடைசி வார்த்தைகள் என்ற முறையில் சிலவற்றைக் கூறினுர்களாம். முஞ்சரது பெருமையும் அருங்குணங்களும் போஜரது இச்செய்தி யில் புகழப்பட்டன. இதைக் கேட்டு முஞ்சர் பெரிதும் துய ருற்றுப் போஜரை மீண்டும் காணத் துடித்தாராம். அப்பொழுது போஜர் உயிருடனேயே இருக்கிருர் என்று அவருக்குத் தெரி விக்கப்படவே, முஞ்சர் மட்டற்ற மகிழ்ச்சியுற்ருர் என்று அக்

கதை முடிகிறது. வாக்பதி முஞ்சர் போஜரிடம் எப்பொழுதும் மிகவும் அன்பொழுக நடந்து கொண்டார் என்பதற்கான பல நிகழ்ச்சிகள் வேறு சான்றுகள்மூலம் நமக்குத் தெரிய வருகின்றன. எனவே, மிருதுங்கரின் கதையை நாம் உண்மையென ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை.

போஜரின் ஆட்சிக் காலம்

போஜர் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகப் பிரபந்த சிந்தாமணி தெரிவிக்கிறது. ஆனால், போஜர் காலத்திய சாசனங்களில் முதலாவது 1011 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகவும், கடைசியானது கி.பி. 1055 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகவும் உள்ளன. எனவே, போஜர் கி.பி. 1011 ஆம் ஆண்டிலோ அதற்குச் சிறிது முன்போ அரியணை ஏறியிருத்தல் வேண்டும். அடுத்த அரசரான முதலாம் ஜெயசிம்மரின் முதலாவது செப்பேடு கி.பி. 1055 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. எனவே, போஜரது ஆட்சி கி.பி. 1055-ல் முடிவுற்றது என்பதில் ஐயமில்லை. மெருதுங்கர் குறிப்பிடும் ஐம்பத்தைந்து ஆண்டுக் காலத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, போஜர் சுமார் கி.பி. 1000 முதல் 1055 வரையில் ஆட்சி புரிந்தார் என்று டாக்டர் கங்குலி போன்றவர்கள் முடிவு செய்தனர்.[1]

போஜரின் போர்கள்

பட்டத்துக்கு வந்தபோது போஜர் சிறுவராக இருந்திருக்கக் கூடும். இவரது முதலிரண்டு செப்பேடுகள் (கி.பி. 1011, 1018 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்தவை) இவரது போர்கள் எதையும் பற்றிக் குறிப்பிடாமை இதனை உணர்த்துகின்றது. போதிய வயதை அடைந்த பின் இவர் துவக்கிய முதல் போர் மேலைச் சாளுக்கியருக்கு எதிரானதாகும். சாளுக்கிய அரசரான இரண்டாம் ஜெயசிம்மர் அப்பொழுது சோழப் பேரரசரான ராஜேந்திர சோழரை எதிர்த்தும், கலச்சூரி அரசரான காங்கேய தேவரை எதிர்த்தும் போர்களில் ஈடுபட்டிருந்தார். இதுதான் தருணமென்று கர்நாடகத்தின்மீது இப் பரமார அரசர் படையெடுத்தார். போஜர் காங்கேய தேவருடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு மேலைச் சாளுக்கியரின் வடபகுதிகள் சிலவற்றைக் கவர்ந்து கொண்டார். இரண்டாம் ஜெயசிம்மருக்கு உதவியாகப் போருக்குச் சென்ற கடம்பச் சிற்றரசர் சட்டுகர் என்பாரது கல்வெட்டு (கி.பி. 1019) சோழர், காங்கேயர், போஜராஜர்

[1] D. C. Ganguly, *History of the Paramara Dynasty*, R. C. Majumdar (Editor) *The Struggle for Empire*: article by Ganguly.

ஆகிய மூவரும் ஒன்ருகத் திரண்டு தாக்கியதாகக் குறிப்பிடு கிறது. கோதாவரியின் கரையில் பரமார-கலச்சூரிப் படை களும் சாளுக்கியப் படைகளும் கடும் போர் புரிந்தன. அங்குச் சாளுக்கியப் படைகள் பகைவரது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தின. ஆயினும், இழந்த பகுதிகளை இரண்டாம் ஜெய சிம்மரால் மீட்பித்துக் கொள்ளமுடியவில்லை.

போஜர் நிகழ்த்திய படையெடுப்புகள்பற்றி உதயபூர் பிரசஸ்தி, போஜரது பல்வேறு சாசனங்கள், அவரது குறுநில மன்னர்களுள் ஒருவரான யசோவர்மனது கல்வன் செப்பேடு போன்றவை நிறையத் தகவல்களைத் தருகின்றன. பல்லாளரது (ராஜவல்லபர் என்றும் இவர் அழைக்கப்பட்டார்) போஜ சரித மும் நமக்கு உதவுகின்றது. ஆனால், பல கட்டுக் கதைகள் இந் நூலில் மலிந்துள்ளன. மெருதுங்கரது பிரபந்த சிந்தாமணியும் இதேபோல் ஓரளவில் நமக்குத் துணை நிற்கிறது.

சாளுக்கிய அரசர் இரண்டாம் ஜெயசிம்மரைப் போஜர் போரில் கொன்ருர் என்று, பில்கணரின் விக்கிரமாங்கதேவ சரி தத்தில் வரும் சில வரிகளை ஆதாரமாகக் கொண்டு, கங்குலியும் மற்றும் சில வரலாற்று ஆசிரியர்களும் கருதினர். இது உண்மை யில் நிகழ்ந்திருக்குமாயின், போஜருடைய சாசனங்கள் அதைக் குறிப்பிடாமல் விட்டிருக்கமாட்டா. ஜெயசிம்மரது சாசனங்களும் வேறு சான்றுகளும் கூட இதுபற்றி நமக்குக் குறிப்புக் காண்பிக் கவேயில்லை.

மத்தியப் பிரதேசத்தில் சாம்பல்பூர் மாவட்டத்தில் மகாநதி யின் கரையில் அமைந்திருக்கும் ஆதிநகரம் என்ற ஊரைத் தலை நகராகக் கொண்டு இந்திரரதர் என்னும் சோமவம்சி அரசர் ஆட்சிபுரிந்து வந்தார். காங்கேய தேவருடனும் ராஜேந்திர சோழருடனும் சேர்ந்துகொண்டு, கி.பி. 1018க்குச் சற்றுமுன்பு போஜர் இந்திரரதரைத் தோற்கடித்தார்.

மேற்குக் கரையில் போர்கள்

மாளவத்துக்கு மேற்கில் லாட்டத்தைக் கீர்த்திராஜர் என்ப வர் அப்பொழுது ஆண்டு வந்தார். இவர் முன்பு நாம் விவரித்த கொக்கிராஜரின் மகனுவார். இவரையும் போஜராஜர் தோற் கடித்துத் தமக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசராகச் செய்து, பின்னர்க் கொங்கணத்தின்மீது படையெடுத்தார். கொங்கணத்தைச் சிலாஹாரர்கள் அப்பொழுது ஆண்டு வந்தனர். முன்பு நாம் குறிப்பிட்ட சிலாஹார அரசர் அபராஜிதருக்கு அடுத்தபடியாக

எவரோ ஒருவர் அந் நாட்டை அப்பொழுது ஆண்டு வந்தார். ஏதோ காரணத்தினுல் போஜர் கி.பி. 1020 ஆம் ஆண்டு வாக்கில் சிலாஹார அரசைத் தாக்கி, அது தமக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாக ஆகுமாறு செய்தார். கொங்கணத்திலிருந்து போஜர் 1020-ல் வெளியிட்ட இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. யசோவர்மனது கல்வன் என்ற ஊரிலுள்ள கல்வெட்டும் போஜர் கொங்கணத்தை வென்றதைக் குறிப்பிடுகிறது. பின்னர், போஜர் வட இந்தியாவின்மீது கவனம் செலுத்த வேண்டியவரானுர். இதைப் பயன்படுத்தி, சாளுக்கிய இரண்டாம் ஜெயசிம்மர் கொங்கணத்திலும் வேறு பகுதிகளிலும் முன்பு தாம் இழந்த பிரதேசங்களைக் கி.பி. 1024க்குச் சற்று முன்பதாகப் போஜரிடமிருந்து மீட்டுக்கொண்டார்.

கசினி மகமூதுவின் படையெடுப்பு

பரமார அரசின் வட எல்லையில் பெரிய அபாயம் ஒன்று இப்பொழுது சூழ்ந்தது. கி.பி. 1024-26-ல் கசினி சுல்தான் மகமூது ராஜஸ்தானத்தின் வழியாகச் சோமநாதபுரம் முதலிய இடங்களைத் தாக்கலானுர். சோமநாதபுரத்தைக் கொள்ளையிட்டுப் பெருஞ் செல்வத்தோடு திரும்பிய கசினி சுல்தான், ‘பரமதேவர்’ என்ற இந்தியாவிலேயே வலிமைமிக்கவராயிருந்த இந்து அரசர் வழிமறிக்கக் கூடுமென்று அஞ்சி, வந்த வழியே மீளாமல் ஒரு வழிகாட்டியின் உதவியோடு நேராகச் சென்று, வழியில் நீரற்ற பாலைவனத்தில் நேர்ந்த இன்னல்களால் ஆயிரக்கணக்கான படைவீரர்களையும் ஒட்டை, குதிரைகளையும் இழந்து, முல்தானை அடைந்தார் என்று கர்திசி (Gardizi) என்ற முஸ்லிம் ஆசிரியர் எழுதினுர். கசினி மகமூதுவின் இப் படையெடுப்புப்பற்றி முதன் முதலில் எழுதிய ஆசிரியர் இவரே யாவார். எனவே, இவர் கூறுவதை உண்மையென்று ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. கர்திசி குறிப்பிடும் ‘பரமதேவர்’ பரமார போஜராகவே இருக்க வேண்டும். சிறிய அரசர்களான சந்தெல்ல வித்யாதரர், சௌளுக்கிய முதலாம் பீமர் முதலிய பலர் இப் பரமதேவராக இருக்கலாம் என்று பல்வேறு ஆசிரியர்கள் ஊகிக்கின்றனர். முதலாம் பீமர் கசினி சுல்தான் வருகிருர் என்ற செய்தியைக் கேட்ட உடனேயே ஓடிப்போனுர் என்று கர்திசி சொல்வதாலும், வித்யாதரர் என்ற பெயருக்கும் பரமதேவர் என்பதற்கும் சிறிதும் பொருத்தமில்லை என்பதாலும், பரமார போஜரே இந்தப் பரமதேவர் என்று நாம் கொள்ளலாம்.

கசினி சுல்தானின் தளபதியான தொக்கலர் (Toggala) என்புவரைப் போஜர் தோற்கடித்ததாக உதயபூர்ப் பிரசஸ்தி குறிப்

பிடுகிறது. இது ஒரு சிறு நிகழ்ச்சியாக இருந்திருக்கக் கூடும். பொதுவாக, மகமூதுவின் படைகளுக்கும் போஜருக்கும் இடையே சண்டை ஏதும் நடைபெறவேயில்லை.

வடக்கில் போர்கள்

சந்தெல்லர்களது மகோபா (Mahoba) கல்வெட்டு, போஜரும் கலச்சூரிகளும் சந்தெல்ல வித்யாதரரைக் கண்டு நடுங்கியொடுங்கிக் கிடந்தனரெனக் குறிப்பிடுகிறது. இதுபற்றி வேறு எத் தகவலும் நமக்குக் கிடைக்கவில்லை. கச்சபகாட சிற்றரசனுன கீர்த்திராஜன் என்பவன் மாளவ அரசனின் பெருஞ் சேனையைச் சிதறடித்ததாக ஒரு கல்வெட்டில் கூறப்படுகிறது. இந்தக் கச்சபகாட சிற்றரசன் தனது பேரரசரான சந்தெல்ல வித்யாதரரது அணியில் நின்று போஜரது படைகளை, அல்லது போஜரது ஆதரவு பெற்ற கலச்சூரிக் காங்கேய தேவரது படைகளைத் தோற்கடித்திருக்கக் கூடும். இப் போர் குவாலியருக்கருகில் நிகழ்ந்திருக்க வேண்டும். கி.பி. 1022-ல் குவாலியரை மகமூது தாக்கினுர். இந் நிகழ்ச்சிக்குச் சிறிது முன்பு மேலே குறிப்பிடப்பட்ட போர் நடைபெற்றிருக்கலாம்.

பல்வேறு சான்றுகளிலிருந்து கிடைக்கும் குறிப்புகளை வைத்துப் பார்க்கும் பொழுது, போஜர் கூர்ஜரப் பிரதிகாரர்களின் தலைநகரமான கனேஜையும் தாக்கினுர் என்பதை உணரலாம். தமக்கு நண்பனுகிவிட்ட கச்சபகாட அரசன் ஒருவனின் தூண்டுதலின் பேரில் கனேஜைப் பரமார அரசர் தாக்கியிருக்கலாம்.

ஆரம்பத்தில் கலச்சூரி அரசரான காங்கேய தேவரோடு போஜர் நட்புறவு கொண்டிருந்தார். ஆயினும், விரைவில் இந்த நட்பு மறைந்து பகைமை மூண்டது. காங்கேயர் போஜரால் தோற்கடிக்கப்பட்டார்.

சாகமானருடன் போர்

கி.பி. பத்தாம் நூற்ருண்டு முதல் மாளவத்தை ஆண்ட பரமாரர்கள், குஜராத்தையாண்ட சௌளுக்கியர்கள், சாகம்பரியைச் சேர்ந்த சாகமானர்கள் ஆகிய மூவருக்குமிடையில் ஆதிக்கப் போட்டி இருந்து வந்தது. வாக்பதி முஞ்சர் குகில அரசின் தலைநகரான ஆகடத்தைக் கைப்பற்றியதிலிருந்து பரமாரர்களே மேற்கு இந்தியாவில் வலிமை மிக்கவர்களாக இருந்தனர். முஸ்லிம்களோடு போரிட வேண்டியிருந்த சௌளுக்கியர்களாலும் சாகமானர்களாலும் பரமாரர்களோடு சரிசமமாகப் போட்டியிட முடியாமல் போய்விட்டது.

குகிலர்கள் இரண்டாம் வாக்பதிராஜரின் காலம் முதலே பரமாரர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். இவ்வாறு இருக்கையில், சாகம்பரியைச் சேர்ந்த சாகமான அரசர் (இவருக்கும் இரண்டாம் வாக்பதி என்றே பெயர்) முன்பு நாம் பார்த்த குகில அரசரான சக்தி குமாரருக்கு அடுத்தபடியாக அரசரான அவரது மகன் அம்பா பிரசாதர் (Amba Prasada) என்பார்மீது போர் தொடுத்துக் கொன்றுர். தமக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர் ஒருவரைச் சாகமான அரசர் கொன்றதால், போஜராஜர் ஆத்திரமுற்றுச் சிறிது காலத்திற்குப் பிறகு போர் தொடுத்தார். அப்பொழுது சாகம்பரியில் அரசராக இருந்தவர் இரண்டாம் வாக்பதியின் மகனுன வீரியராமர் என்பவராவார். இந்த வீரியராமர் போஜரால் போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். பிற்காலத்திய நூலான ஜயானகரது 'பிருதிவிராஜ விஜயம்' இத்தகவல்களைத் தருகிறது. பரமாரப் படைகள் சாகம்பரியைக் கைப்பற்றிச் சிறிது காலம் சும்மா இருந்தன. வீரியராமரின் தம்பியான சாமுண்டராஜர் தமது உறவினரும் நாதோலை (Nodol) ஆண்டு கொண்டிருந்த சாகமான சிற்றரசருமான அணஹில்லர் (Anahilla) என்பாரது உதவியை நாடிப் பெற்று, சாகம்பரியை மீட்டு, அங்கு அரசராஞர். நீண்ட போருக்குப் பிறகு, தமது தளபதியான சாதர் (Sadha) என்பாரைப் போரில் இழந்த பின்னரே பரமாரப் படைகள் சாகமானப் பிரதேசத்திலிருந்து வெளியேறின.

சௌளுக்கியர்மீது போர்

குஜராத்தில் ஆட்சிபுரிந்துவந்த முதலாம் பீமர் என்ற சௌளுக்கிய அரசர் ஆற்றலும் முயற்சியும் மிக்க ஒருவர். மற்ற அரசர்களைப் போலவே இவரும் அண்டையிலிருந்த சிற்றரசர்களை அடக்கியாளத் திட்டமிட்டார். சந்திராவதி என்ற நகரிலிருந்து ஆட்சிபுரிந்துவந்த தந்துகர் என்ற பரமார குலச் சிற்றரசர் ஒருவரைத் தமக்கு உட்படுமாறு முதலாம் பீமர் வற்புறுத்திஞர். அவரோ தமது வம்சத்தினரான போஜருக்கே விசுவாசமாயிருக்க எண்ணி, இச் செய்தியை இவருக்குத் தெரிவித்தார். முதலாம் பீமர் சிந்து மாநிலத்தில் கசினி மகமூதுவின் படைகளை எதிர்த்துப் போர்களில் ஈடுபட்டிருந்த நேரத்தில் போஜரது படைகள் குலச்சந்திரர் என்ற தளபதியின் தலைமையில் பீமரது தலைநகரமான அணகிலப் பட்டணத்தைக் கைப்பற்றின. பிரபந்த சிந்தாமணி, உதயபூர்ப் பிரசஸ்தி ஆகியவை இச் செய்தியைத் தெரிவிக்கின்றன. அந் நகரிலிருந்த செல்வமனைத்தையும் கொள்ளையடித்தபின், பரமாரர்களால் தாங்கள் தோற்கடிக்கப்பட்டதை ஒப்புக் கொள்ளும் 'ஜெயபத்

திரம்' ஒன்றைப் பீமரின் தலைமை அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டு பரமாரப் படைகள் மாளவத்துக்கு மீண்டன. கி.பி. 1027 ஆம் ஆண்டு வாக்கில் இப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம்.

இதன் பின்னர், பீமரும் போஜரும் பல ஆண்டுகள் பரஸ்பரம் நல்லுறவு பூண்டிருந்தனர். பீமரது அமைச்சரான தாமரர் அல்லது தாமோதரர் என்பவர் போஜரது அரசவையில் பல ஆண்டுகள்வரையில் தங்கியிருந்தார். இவ்வாறு அண்டையிலிருந்த பல அரசுகளையும் சிற்றரசுகளையும் தோற்கடித்துப் பரமார அரசர்களிலேயே தலைசிறந்தவராகப் போஜர் திகழ்ந்தார். பல திசைகளிலும் பரமார அரசு இவரது காலத்தில் விரிவடைந்து, ஒரு பேரரசாகத் திகழ்ந்தது. ஆயினும், இறுதியில் தோல்விகள் அவருக்குக் காத்திருந்தன.

சாளுக்கியரிடம் தோல்வி

மேலைச் சாளுக்கிய அரசர் இரண்டாம் ஜெயசிம்மருக்குப் பின் அவரது மகனான முதலாம் சோமேசுவரர் அரியணை ஏறினார். இவர் பெரு முயற்சியும் பேராற்றலும் மிக்க மன்னராவார். கொங்கணத்தையும் விந்தியமலை வரையிலான பகுதிகளையும் சோமேசுவரர் தமது பிராமணத் தளபதியாகிய நாகவர்மரின் உதவிகொண்டு கைப்பற்றினார். பரமாரர்களுக்கு உட்பட்ட இப் பகுதிகள் சாளுக்கியப் படைகளால் கைப்பற்றப்பட்டன என்னும் தகவல் போஜரின் இந்தத் தோல்வியை உறுதிப்படுத்துகின்றன. கி.பி. 1047க்கு முன் இது நிகழ்ந்திருக்க வேண்டும். போஜர் தோல்வியுற்று, தாரா நகரமும் சாளுக்கியரால் கைப்பற்றப்பட்டதென்று அவ்வாண்டைச் சேர்ந்த நாண்டர் (Nandar) என்ற இடத்திலுள்ள ஒரு கன்னடக் கல்வெட்டு அறிவிக்கிறது. கி.பி. 1058 ஆம் ஆண்டைச் சேர்ந்த நாகைக் (Nagai) கல்வெட்டு, தாரா நகரமும், உஜ்ஜெயினியும், அந் நகரின் திண்மையான அரண்களும் கைப்பற்றப்பட்டுத் தீயூட்டப்பட்டன என்று குறிப்பிடுகிறது. சாளுக்கியரிடம் போஜர் படுதோல்வியைப் பெற்றுக் கொண்டார் என்பதில் ஐயமில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு போஜர் தாரா, உஜ்ஜெயினி, விந்தியத்துக்கு வடக்கிலுள்ள பகுதிகள் ஆகியவற்றை மீண்டும் கைப்பற்றினார். எனினும், விந்திய மலைக்குத் தெற்கில் கோதாவரி நதிக்கரை வரையிலான பிரதேசங்கள் அனைத்தையும் பரமார போஜர் இழந்தார்.

மரணம்

வயது முதிர்ந்த போஜருக்கு இது பெருந்தோல்வி என்பதில் ஐயமில்லை. தாரா நகரிலேயே தம் பகைவர்களான சாளுக்கியர்

களுக்கு அவர் பணிந்து பணிவிடை செய்ய நேர்ந்தது பெருத்த அவமானமாகும். இதுதான் தருணமென்று கலச்சூரிகளும் சௌளுக்கியர்களும் அவர்மீது பழிவாங்கத் திட்டமிட்டனர். காங்கேய தேவரின் மகனுன கர்ணர் இப்பொழுது கலச்சூரி அரசராகியிருந்தார். குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் முதலாம் பீமரும் இந்தக் கர்ணரும் ஒன்று சேர்ந்து, பரமார அரசைத் தாக்கிப் பங்கிட்டுக் கொள்ளத் திட்டம் வகுத்தனர். அவர்களுடைய படைகள் மாளவத்துக்குள் புகுந்தன. போருக்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்த போஜர் திடீரென்று நோயுற்றுக் காலமானுர். இதன் பின்னர், பகைவர்கள் இருமடங்கு ஊக்கம் பெற்றுத் தாரா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். போஜரது மரணமும் தாராவின் வீழ்ச்சியும் கி.பி. 1055-ல் நிகழ்ந்தன.

இவ்வரசரது பெருமை

இவ்வாறு போஜரது இறுதிக் காலம் தோல்வி நிறைந்ததாக இருந்தபோதினும், அவரது பெருமையை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. பரமார அரசர்களுள் தலைசிறந்தவர் அவரே ஆவார். போரில் ஓரிரு தோல்விகளை ஏற்க நேரிட்டாலும், அவர் ஈட்டிய வெற்றிகளைக் குறைவுபடுத்திக் கூறமுடியாது. பரமார அரசை ஒரு பேரரசாக உருவாக்கியவர் இம் மன்னரேயன்றோ?

'திரிபுவன நாராயணன்' என்ற விருதினை இவர் பூண்டிருந்தார். ஏராளமான கவிஞர்கள் அன்று முதல் பல நூற்றண்டு காலம் வரையில் போஜராஜரது பெருமைகளை இடைவிடாமல் பாடி வந்தனர். இம் மன்னர் பல புலவர்களையும் கவிஞர்களையும் தமது அவையில் வைத்து ஆதரித்தார். பிற்காலத்துப் புலவர்கள், தமக்குத் தெரிந்த புலவர்கள் அனைவரும் போஜரது அவைக்களப் புலவர்களே என்று எழுதிக் குழப்பத்தை விளைவித்துவிட்டதால், உண்மையில் அவரது அவையில் வாழ்ந்த புலவர்களின் பெயர்களை நம்மால் பிரித்துணர முடியவில்லை. தனபாலர், சோபணர் ஆகிய இரு புலவர்கள் போஜரால் ஆதரிக்கப்பட்டனர் என நிச்சயமாகத் தெரிகிறது. போஜரது வேண்டுகோளுக்கிணங்க, 'திலக மஞ்சரி' என்ற நூல் தனபாலரால் இயற்றப்பட்டது.

அறிஞர்களை ஆதரித்ததோடு நில்லாமல், தாமும் பல்வேறு கலைகளிலும் வல்லவராகப் போஜர் விளங்கினுர். கவிபாடுதல், இலக்கணம், மருத்துவம், தர்மசாஸ்திரங்கள், வானநூல்,

நிகண்டு, இசை முதலிய பல்வேறு துறைகளிலும் வியக்கத்தக்க அறிவு பெற்றவராகப் போஜர் திகழ்ந்தார். இவருக்குப் பகைவரான மேலைச் சாளுக்கியரின் அவைக்களப் புலவரா யிலங்கிய பில்கணர்கூட, போஜரை ஈடு இணையில்லாத ஓர் அரசரென்று புகழ்ந்துள்ளார் என்பது கவனிக்கத் தக்கது. சுபந்து, பாசமகா கவி, குணத்தியர், பாணபட்டர் ஆகியோருக்கு இணையான பெருங் கவிஞராகப் போஜரைச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. மதிநுட்பத்திலும் ஆட்சித் திறனிலும் பிருகஸ்பதி, சாணக்கியர், தருமகீர்த்தி முதலியோருக்கு இணையாக இவர் குறிப்பிடப்படுகிறார்.

போஜரது நூல்கள்

சிருங்கார மஞ்சரி கதா, சிருங்கார பிரகாசம், சமராங்கண சூத்திரதாரம், தத்துவப் பிரகாசம், யுக்தி கல்பதரு, சரஸ்வதீ காந்தாபரணம் போன்ற நூல்கள் போஜராஜரால் எழுதப்பட்டனவாக இன்றும் நிலவுகின்றன. பதஞ்சலியின் யோகசூத்திரத்துக்குப் போஜர் இயற்றிய உரை மற்ற உரைகளுக்குச் சிறிதும் தாழ்ந்ததாயில்லை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்ட சமராங்கண சூத்திரதாரம், யுக்தி கல்பதரு ஆகிய இரண்டு பெருநூல்களும் கட்டடக்கலை, பிறகலைகள் ஆகிய வற்றைப்பற்றிய இலக்கண நூல்களாகும். இவையன்றி, வான நூல், மருத்துவம், சமயம், இலக்கணம், இசை, குதிரை வளர்ப்பு, நிகண்டுக் கோவை ஆகிய பல துறைகளிலும் அவர் இயற்றிய நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. கல்கணரது ராஜதரங்கிணியும் இம் மன்னரது புலமையை வாயாரப் புகழுகிறது. தாரா நகரிலுள்ள (இன்றைய தார் நகரம்—Dhar) கம்லாமௌலா மசூதியில் உள்ள கற்பலகைகளில் இம் மன்னரது 'கூர்ம சதகம்' என்ற நூலின் செய்யுட்கள் செதுக்கப்பட்டுள்ளமையை இன்றும் நாம் காணலாம். இக் கட்டடம் போஜரின் காலத்தில் 'சரஸ்வதி பவனம்' என்றழைக்கப்பட்டது.

போஜரின் கட்டடங்கள்

போஜர் கட்டடக் கலையிலும் சிறந்து விளங்கினார். இன்றைய போபாலுக்கருகில் உள்ள போஜ்பூர் (போஜபுரம்) என்ற நகரை நிறுவியவர் இம் மன்னரே யாவார். அதற்கு அருகில் 250 சதுர மைல் பரப்பளவுள்ள மிகப் பெரிய ஏரி ஒன்றையும் இம் மன்னர் அகழ்ந்தார். பெட்வா (Betwa) நதியின் குறுக்கே அணையிடப்பட்டு இப் பேரேரி உருவாக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டில் மாளவத்திலிருந்து ஆட்சி புரிந்த ஹோஷங் ஷா என்ற சுல்தானின் காலத்தில் இந்த ஏரி மண்ணிட்டு நிரப்பப்பட்டு

விளைநிலமாக்கப்பட்டது.[1] அங்குப் போஜேசுவரம் என்ற சிவாலயம் இன்றும் உள்ளது. அவர் அமைத்த சரஸ்வதி பவனம் கலைமகளின் ஆலயமாகவும், அதே சமயம் ஒரு கல்விக்கூடமாகவும் திகழ்ந்தது. அதில் பிரதிஷ்டை செய்வதற்காக அழகிய சரஸ்வதியின் சிலையொன்றைக் கி.பி. 1034-ல் போஜர் செய்வித்தார். இன்று லண்டனில் பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள இச் சிலையின் ஒவ்வொரு அம்சமும் பாராட்டத்தக்கது என்று கலை வல்லுநர்கள் புகழ்கின்றனர்.

போஜரது சமயம்

போஜர் தமது முன்னோர்களைப் போலவே சைவராயிருந்தார். ஆயினும், ஏராளமான சமணப் பெரியார்கள் இவரால் ஆதரிக்கப்பட்டனர். தனபாலர், அவர் தம்பியான சோபணர் ஆகியோர் மட்டுமின்றி, பிரபாசந்திரர், சாந்திசேனர், மகேந்திரசூரி போன்ற சமண அறிஞர்களும் போஜரின் அரசவையை அலங்கரித்தனர். நீதி வழங்குவதிலும் கொடையிலும் இம்மன்னர் சிறந்து விளங்கினார். இவ்வளவு ஆற்றலும் அருங்குணங்களும், அறிவும் புலமையும் பெற்றிருந்ததாலேயே பிற்காலத்தினர் புகழ்மிக்க விக்கிரமாதித்தியர் இவரே என்று கதை கூறலாயினர்.[2] தாரா, உஜ்ஜெயினி ஆகிய இரண்டுமே இவரது காலத்தில் சிறந்து விளங்கின. தாராவே தலைநகரா யிருந்தது. பரமார வம்சத்தில் மட்டுமின்றி, இந்திய மன்னர்களுக்குள்ளும் போஜராஜருக்குச் சிறப்புமிக்க ஒரு தனி இடமுண்டு. இந்திய வரலாற்றில் மறக்கவொண்ணா அரசர்களின் பட்டியலில் பரமாரப் போஜருக்கும் ஓரிடம் உண்டு.

முதலாம் ஜெயசிம்மர்

மேலைச் சாளுக்கியரின் உதவி

போஜரது மரணத்துக்குப் பின் நாட்டில் பெருங் குழப்பம் நிலவிற்று. தலைநகரான தாராவும் மற்றுமுள்ள பகுதிகளும் கலச்சூரிகள், குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கியர்கள் ஆகியோரது படைகளின் பிடியில் இருந்தன. போஜருக்கு ஆண் மக்கள் இருந்தார்களா என்பது தெரியவில்லை. அரச பதவிக்குப் போட்டிகள் ஏற்பட்டன. போஜர் இறந்த உடனேயே முதலாம் ஜெயசிம்மர் என்பவர் அரியணை ஏறினார். இவர் போஜருக்கு மகனா அல்லது வேறு எவ்விதத்தில் அவருக்கு உறவினர் என்பது

[1] V. A. Smith, *The Oxford History of India.*

[2] P. T. Srinivasa Iyangar, *Bhoja Raja.*

புலப்படவில்லை. இவர் 'போஜரின் பாதங்களைத் துதித்தவர்' என்று மட்டுமே மாந்தாதாச் செப்பேடு வர்ணிக்கிறது. பரமாரரது ஒரு சாசனமும் இவர் போஜரின் மகன் என்று குறிப்பிடவே இல்லை. இவர் அரியணை ஏறியதை வேறு சிலர் எதிர்த்தனர். இக் குழப்பத்தைப் பயன்படுத்தி, தலைநகரை முற்றுகையிட்டிருந்த பகைவர்களால் அதைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. முதலாம் ஜெயசிம்மர் தலைநகரைவிட்டு விரட்டப்பட்டார். பரமாரர்களின் நெடுநாளைய பகைவர்களான மேலைச் சாளுக்கியர்களுடைய உதவியை அவர் நாடினார். ஏதோ காரணத்தினால் சாளுக்கிய அரசர் முதலாம் சோமேசுவரர் ஜெயசிம்மருக்கு உதவ முன்வந்தார். மாளவத்தைச் சௌளுக்கிய பீமரும் கலச்சூரிக் கர்ணரும் தங்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்வது சாளுக்கிய அரசுக்கு நல்லதன்று என்று சோமேசுவரர் கருதினார் போலும்! எனவே, அவருடைய மகன் ஆறும் விக்கிரமாதித்தியரது தலைமையில் சாளுக்கியப் படைகள் மாளவத்துக்கு வந்தன. கலச்சூரிகளும் சௌளுக்கியரும் மாளவத்திலிருந்து விரட்டப்பட்டனர்.

இவ்வாறு, சில மாதங்களுக்குப் பிறகு ஜெயசிம்மர் மீண்டும் தாரா நகரில் அரசரானார். இந்த உதவிக்குக் கைம்மாறாக, அவர் தம் மகளைச் சாளுக்கிய இளவரசர் விக்கிரமாதித்தியருக்கு மணமுடித்துக் கொடுத்திருக்கலாம் என்பது விக்கிரமாங்க தேவ சரிதத்திலிருந்து உணரப்படுகிறது. இந் நிகழ்ச்சிகள் அனைத்தும் கி.பி. 1055-லேயே நிகழ்ந்தன. தாரா நகரிலிருந்து ஜெயசிம்மர் அதே ஆண்டில் வெளியிட்ட செப்பேடு ஒன்று (இது நர்மதை நதியில் உள்ள மாந்தாதா—Mandhata—என்ற தீவில் கண்டெடுக்கப்பட்டதால் மாந்தாதாச் செப்பேடு எனப்படுகிறது) அவர் மாளவத்தின் அரியணையில் அச்சமின்றி அமர்ந்திருந்தார் என்பதை உணர்த்துகிற காரணத்தால் இந்த முடிவுக்கு நாம் வருகிறோம். மேலைச் சாளுக்கியப் படைகள் உட்பகையிலிருந்தும் வெளிப்பகையிலிருந்தும் ஜெயசிம்மரைக் காத்தன என்பது நிச்சயம். இறுதி வரையில் சோமேசுவரருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர் போலவே ஜெயசிம்மர் இருந்தார்.

மேலைச் சாளுக்கியரோடு சேர்ந்து கொண்டு பரமார ஜெயசிம்மர் கீழைச் சாளுக்கியரது வேங்கி நாட்டின்மீது படையெடுத்து, கி.பி. 1063 ஆம் ஆண்டு வாக்கில் வேங்கியைக் கைப்பற்றிக் கொண்டார். கீழைச் சாளுக்கியர்கள் சோழப் பேரரசரான வீரராஜேந்திரரது உதவியை நாடினர். சோழப் படைகள் வேங்கியை மீட்டுப் பகைவர்களை விரட்டியடித்தன.

இப் போரில் தோற்கடிக்கப்பட்டதாக வீரராஜேந்திரரது மணி மங்கலம் கல்வெட்டு, திருமுக்கூடல் கல்வெட்டு முதலியவை குறிப்பிடும் பரமார இளவரசர் எவர் என்பதுபற்றி நீண்ட சர்ச்சைகள் நிலவுகின்றன.[1] இப் போர் 1066க்குச் சற்று முன்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

அரியணை இழத்தல்

முதலாம் சோமேசுவரர் கி.பி. 1068 ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவரது மூத்த மகன் இரண்டாம் சோமேசுவரருக்கும் மற்றொரு மகனை ஆறும் விக்கிரமாதித்தியருக்கும் இடையே பகைமை நிலவிற்று. இந்த ஆறும் விக்கிரமாதித்தியருக்கு மிகவும் நெருங்கியவராகப் பரமார அரசர் ஜெயசிம்மர் இருந்ததால், அவருக்கு எதிராகவும் இரண்டாம் சோமேசுவரர் செயல்படத் துவங்கினர். ஜெயசிம்மர் அரியணை ஏறிய பொழுது அவருக்கு எதிர்ப்பு இருந்தது என்பதை முன்பே பார்த்தோம். அவ்வாறு எதிர்த்தவர்களில் மிகவும் முக்கியமானவர் உதயாதித்தியர் ஆவார். இவர் முதலாம் சோமேசுவரரின் மரணத்திற்குப் பின் மீண்டும் கிளர்ச்சியைத் துவக்கினர். பரமார அரசில் இவ்வாறு உள்நாட்டுப் போர் நீடித்துவந்த வேளையில் இரண்டாம் சோமேசுவரர் கலச்சூரி அரசரான கர்ணரோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு மாளவத்தைத் தாக்கினர். நாகபுரிப் பிரசஸ்தி இதை நமக்குத் தெரிவிக்கின்றது. கங்க வம்சக் குறுநில மன்னர் உதயாதித்தியர், ஹொய்சள வம்சக் குறுநில மன்னர் எரியங்கர் ஆகியோரும் சாளுக்கியப் படையிலிருந்தனர். தாரா நகரைக் கைப்பற்றி, இப் பகைவர்கள் அதற்கு எரியூட்டினர். வேறு பல நகரங்களும் கூட இவ்வாறே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. கங்கர், ஹொய்சளர் ஆகியோரது சாசனங்கள் இவற்றையெல்லாம் விரிவாக வருணிக்கின்றன. இப் படையெடுப்பினுல் முதலாம் ஜெயசிம்மர் அரியணையை இழந்ததுடன், போர்க் களத்தில் கொல்லவும்பட்டார். கி.பி. 1070 ஆம் ஆண்டு வாக்கில் இப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

[1] K. A. Nilakanta Sastri, *The Colas*. D. C. Ganguly, *History of the Paramara Dynasty*. Pratipal Bhatia, *The Paramaras.*

வம்சாவளி (தொடர்ச்சி)

1. இரண்டாம் சீயகர்

2. வாக்பதி முஞ்சர் — 3. சிந்துராஜர்

4. முதலாம் போஜர் — 6. உதயாதித்தியர்

5. முதலாம் ஜெயசிம்மர்

7. லக்ஷ்மதேவர் — 8. நரவர்மன் — ஜகத்தேவர்

9. யசோவர்மன்

10. முதலாம் ஜெயவர்மன் — அஜயவர்மன் — மகாகுமார லக்ஷ்மிவர்மன் — மகாகுமார திரைலோக்கிய வர்மன்

உதயாதித்தியர்

முதலாம் ஜெயசிம்மருக்குப் பின் உதயாதித்தியர் அரசரானர். இவர் போஜரது தம்பியாவார். அதாவது, சிந்துராஜரது பிள்ளைகளுள் இவர் ஒருவர். முதலாம் ஜெயசிம்மரின் மரணத்தின்போது சாளுக்கிய இளவரசரான ஆரும் விக்கிரமாதித்தியர் சோழப் பேரரசர் வீரராஜேந்திரருடன் சேர்ந்துகொண்டு, தம் அண்ணன் சோமேசுவரருக்குத் தென்புறத்தில் தொல்லைகள் விளைவித்து வந்தார். இச் சூழ்நிலை உதயாதித்தியருக்கு மிகவும் சாதகமாக இருந்தது. அதிகாரிகளின் ஒத்துழைப்போடு தமது ஆதிக்கத்தை அவர் நன்கு நிறுவினர்.

உதயாதித்தியர், அவருக்குப் பின் வந்த பரமார அரசர்கள் ஆகியோரது சாசனங்களில் போஜருக்கு அடுத்த அரசராக உதயாதித்தியரே குறிப்பிடப்படுகிறர். முதலாம் ஜெயசிம்மரது பெயரே அவற்றில் காணப்படவில்லை. ஜெயசிம்மர்மீதிருந்த பகைமை உணர்வும், அவர் சாளுக்கியருக்குக் கட்டுப்பட்டவராக இறுதிவரை இருந்ததுமே இதற்குக் காரணமாகும்.

போர்கள்

ஜெயசிம்மரை ஆதரித்த வாகத நாட்டுப் பரமாரச் சிற்றரசர் மண்டலிகரின் மகனை சாமுண்ட ராஜர் உதயாதித்தியர் பட்

டத்துக்கு வந்ததை விரும்பவில்லை. மேலும், உதயாதித்தியரும் சாமுண்டராஜரை வென்று பணியவைக்க வேண்டுமென்று விரும்பிப் படையெடுத்தார். ஆனால், வாகதத்தில் உதயாதித்தியரின் படைகள் சாமுண்டராஜரிடம் பலமுறை தோற்றன. மேலைச் சாளுக்கியரின் தலைநகரமான கல்யாணியில் (கல்யாணபுரம்) ஆளும் விக்கிரமாதித்தியர் கி.பி. 1076-ல் இரண்டாம் சோமேசுவரரைத் தோற்கடித்து அரசரானார். ஏதோ காரணத்தினால் உதயாதித்தியர்மீது இவருக்குப் பகை மூண்டது. இதன் விளைவாக, கி.பி. 1076 அல்லது 1077-ல் உதயாதித்தியரை விக்கிரமாதித்தியர் தோற்கடித்தார்.

குஜராத்தையாண்ட சௌளுக்கிய மன்னரான கர்ணரும் பரமார அரசின்மீது கி.பி. 1080 ஆம் ஆண்டு வாக்கில் படையெடுத்தார். பல இடங்களில் வெற்றிபெற்று முன்னேறிய அவரை, சாகம்பரியைச் சேர்ந்த சாகமான அரசர் மூன்றும் விக்கிரகராஜர், நாதோலைச் சேர்ந்த சாகமான பிருதிவிபாலர், மேவாரைச் சேர்ந்த குகில அரசர் விஜயசிம்மர் முதலிய அனைவரையும் தமக்கு ஆதரவாகத் திரட்டி உதயாதித்தியர் திருப்பியடித்தார். சௌளுக்கிய கர்ணர் தோற்றுத் திரும்ப வேண்டியதாயிற்று.

இவ்வரசரது பெருமைகள்

இம் மன்னர் கிட்டத்தட்ட கி.பி. 1086 வரையில் ஆண்டார். வாக்பதி முஞ்சர், போஜராஜர் ஆகியோரைப் போலவே உதயாதித்தியரும் கல்வி கேள்விகளிலும் கலைகளிலும் ஆர்வங் காட்டினார். உதயபூர் நகரை நிறுவியவர் இம் மன்னரே யாவார். அதில் நீலகண்டேசுவரர் (இதன் மற்றொரு பெயர் உதயேசுவரர்) ஆலயத்தை இவ் வரசர் கட்டி எழுப்பினார். இந்த உதயபூர் நகரம் பில்சாவுக்கு அருகில் இருந்தது. (இன்றைய போபாலுக்குச் சுமார் அறுபது மைல் வடகிழக்கில் இது உள்ளது.) பரமாரக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த உதாரணமாக நீலகண்டேசுவரர் ஆலயம் கருதப்படுகிறது. உதய சமுத்திரம் என்ற ஒரு ஏரியையும் அதன் அருகில் இவர் அகழ்வித்தார். இன்று உன் (Un) என்னும் ஊருக்கு அருகில் காணப்படும் பல ஆலயங்கள் இம் மன்னராலேயே கட்டப்பட்டன என்று கருதப்படுகிறது. இவர் சைவராயிருந்தார் என்பதை இவ் வாலயங்கள் புலப்படுத்துகின்றன.

இவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் சில செய்யுட்கள் தாரா, உஜ்ஜெயினி, உன் ஆகியவிடங்களில் கற்சுவர்களில்

பொறிக்கப்பட்டுள்ளன. இவரும் பரமார அரசர்களுள் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்தவர். இவரது கல்வெட்டுகள் 1080 முதல் 1086 வரையுள்ள ஆண்டுகளில் வெளியிடப்பட்டமையால், கி.பி. 1080 முதல் 1086 வரையிலேயே இவர் ஆட்சி புரிந்தார் என்று டாக்டர் கங்குலி போன்ரூேர் கருதினர்.[1] ஆனல், கீழைச் சாளுக்கியரது கி.பி. 1071 ஆம் ஆண்டைச் சேர்ந்த பலகௌமி (Balagaumi) கல்வெட்டு இரண்டாம் சோமேசுவரர் முதலாம் ஜெயசிம்மருக்கு எதிராக மாளவத்தின்மீது படையெடுத்ததைத் தெரிவிக்கிறது. எனவே, கி.பி. 1071 ஆம் ஆண்டில் அல்லது அதற்குச் சற்று முன்னர் ஜெயசிம்மர் கொல்லப்பட்டு, உதயாதித்தியர் அரசராகியிருத்தல் வேண்டும். உதயாதித்தியர் முதல் பல பரமார அரசர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை உதயாதித்தியர், தேவபாலர் ஆகியோரால் வெளியிடப்பட்டவை. இவை தாராவைச் சேர்ந்த பரமார அரசர்களின் பட்டியலை நமக்கு அளித்துப் பெரிதும் உதவுகின்றன. உதயபுரிப் பிரசஸ்தி என்று இவையே பொதுவாக அழைக்கப்படுகின்றன.

லக்ஷ்மதேவர்

உதயாதித்தியரின் மூத்த மகனை லக்ஷ்ம தேவரே அடுத்த பரமார அரசராவார். இவரது கல்வெட்டு ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லையாயினும், இவருடைய தம்பியான நரவர்மனது நாகபுரிக் கல்வெட்டு (நாகபுரிப் பிரசஸ்தி) இவரைப்பற்றி நாம் அறிந்துகொள்ள மிகவும் உதவுகிறது. வசிஷ்டரின் அக்கினி குண்டத்திலிருந்து தோன்றிய பரமாரர் முதல் நரவர்மன் வரையிலான அரசர்ப் பட்டியலையும் இது தருகின்றது. (இதிலும் முதலாம் ஜெயசிம்மரது பெயர் விடுபட்டுப் போயுள்ளது.)

நாகபுரிப் பிரசஸ்தி லக்ஷ்மதேவரது திக்விஜயத்தை விஸ்தாரமாக விவரிக்கிறது. வங்கம், அங்கம், கலிங்கம், சேடி (கலச்சூரி) அரசு, சோழப் பேரரசு, பாண்டிய நாடு, இலங்கை போன்ற அரசுகளை வென்றதுடன், திமிங்கிலங்கள் போன்ற ராக்ஷசர்களையும் துருக்ஷர்கள், கீரர்கள் (Kiras) போன்ரூேரையும் லக்ஷ்ம தேவர் வென்று திரும்பினூராம்! ஓரரசரது பெயர்கூடக் குறிக்கப்படாத இந்தக் கட்டுக்கதையை நாம் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. திரிபுரியைச் சேர்ந்த சேடி அரசரான யசகர்ணரை எதிர்த்து இவர் போரிட்டார் என்பதை வேறு சான்றுகள்

[1] D. C. Ganguly, *History of the Paramara Dynasty*. R. C Majumdar, (Editor) *The Struggle for Empire*; article by D. C. Ganguly,

உறுதிப்படுத்துகின்றன. மேலும், இவரது காலத்தில் பஞ்சாபை ஆண்டுவந்த முஸ்லிம் ஆளுநரான மகமூதென்பவர் உஜ்ஜெயினி யின்மீது படையெடுத்தார் என்பதும், அம் முயற்சி தோல்வி யில் முடிந்தது என்பதும் இவ்வாறே பிற சான்றுகளால் தெரிய வருகின்றன. துருக்கியர்களையும் கீரர்களையும் (பஞ்சாபிலுள்ள காங்ராப் பள்ளத்தாக்கு அப்போது கீரநாடு என்றழைக்கப் பட்டது) இவர் வென்றதாகக் குறிப்பிடுவது இதனாலேயே போலும்! இவரது தம்பியான நரவர்மரது முதலாவது கல்வெட் டுக் கி.பி. 1094-ம் ஆண்டைக் குறிப்பதால், லக்ஷ்மதேவரது ஆட்சி 1094-லோ அல்லது அதற்குச் சற்று முன்னரோ முடிவுற் றது எனலாம்.

லக்ஷ்மதேவரும் ஜகத்தேவரும் (இருவரும் உதயாதித்தியரின் பிள்ளைகள்) ஒருவரே என்று அறிஞர்களால் சமீப காலம்வரை கருதப்பட்டது.[1] இது தவறான கருத்து என்பதை இன்றைய ஆராய்ச்சியாளர் நிரூபித்துள்ளனர். இதுபற்றிப் பின்னர்ப் பார்ப்போம்.

நரவர்மன்

நரவர்மன் கி.பி. 1094 முதல் 1133 வரையில் ஆட்சிபுரிந் திருக்க வேண்டுமென்பது அவரது கல்வெட்டுகளால் உணரப் படுகிறது. இத்துணை நீண்டகாலம் ஆட்சிபுரிந்த இம் மன்னரது காலத்திய நிகழ்ச்சிகள் நமக்கு அதிகம் தெரியவில்லை. இவரது கல்வெட்டுகளும் செப்பேடுகளும் குறிப்பிடும் இடங்களைப் பார்த் தால், இவர் விரிவான ஓர் அரசை ஆண்டார் என்பது நன்கு புலனாகிறது. ஆயினும், வலிமையற்றவராக இவர் விளங்கினார். சமண நூல்களான பிரபந்தசிந்தாமணி, புராதன பிரபந்த சங்க ரகம், குமாரபால சரிதம், குமாரபால பிரபந்தம், பிரபந்த கோசம், கீர்த்தி கௌமுதி போன்ற நூல்களும் இவரைப்பற்றி நாம் அறிந்து கொள்ள உதவுகின்றன.

இவரது தோல்விகள்

இம் மன்னர் 'நிர்வாண நாராயணர்' என்ற விருதினைப் பூண்டிருந்தார். ஆயினும், இவர் தமது அரசைக் காப்பதில் நாராயணரைப் போல விளங்கவில்லை. சல்லக்ஷணவர்மன் என்ற சந்தெல்ல அரசர் பரமார அரசுக்குள்ளிருந்த பில்சாவில் முகா மிட்டு, அங்கிருந்த நிலத்தை மானியமாக அளித்ததைச் சந்

[1] Refer works of Dr. D. C. Ganguly and Dr. Gulab Chandra Choudhary cited above.

தெல்லக் கல்வெட்டொன்று கூறுகிறது. இந்த மானியம் 1134-ல் அளிக்கப்பட்டதால், நரவர்மனது கடைசி ஆண்டிலோ, அடுத்த அரசரான யசோவர்மனது ஆட்சியின் துவக்கத்திலோ பில்சா வரையில் சந்தெல்லர்கள் வெற்றிகரமாக ஊடுருவினர் என்பதை உணரலாம். மேலும், உஜ்ஜெயினிக்கு ஐம்பது கல் வடமேற்கில் 'மகாராஜாதிராஜ பரமேசுவரர்' என்ற பட்டத்துடன் பிருதிவி பாலதேவர், திருணபாலதேவர், விஜயபாலதேவர் ஆகிய மூன்று பேர் ஒருவர் பின் ஒருவராக ஓர் அரசை ஆண்டதாகக் கி.பி. 1133 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டின்மூலம் நாம் அறிகிறோம். இவர்கள் பரமார அரசின் எல்லைக்குள்ளேயே நரவர்மனின் காலத்தில் இப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டு ஆட்சிபுரிந்தது பரமார அரசின் பலவீன நிலையை எடுத்துக் காட்டுகிறது.[1]

அண்டையிலிருந்த பல அரசர்கள் நரவர்மனின் காலத்தில் பல போர்களில் பரமாரர்களைத் தோற்கடித்தனர். சான்றாக, சாகமான அரசரான அஜயதேவர் மாளவ அரசரைத் தோற்கடித்து, அவரது தளபதியான சொல்லணர் அல்லது சுல்ஹணர் என்பவரைச்சிறைப்பிடித்தார். விக்கிரம சோழர் என்ற சோழப் பேரரசரது படைகளும் மாளவ அரசரைத் தோற்கடித்ததாக விக்கிரம சோழன் உலா கூறுகிறது. இம் மாளவ அரசன் நரவர்மனாகவே இருக்கவேண்டும். குஜராத்தில் ஆட்சிபுரிந்த சௌளுக்கிய அரசரான ஜெயசிம்ம சித்தராஜருக்கும் இப் பரமார அரசருக்குமிடையே பன்னிரண்டு ஆண்டுகள் வரை போர் நடைபெற்றது. சமண நூல்கள் இப் போரினைப்பற்றி மிகவும் விரிவாக எழுதியுள்ளன. கல்வெட்டுகளும்கூட இந் நூற் செய்திகளை மெய்ப்படுத்துகின்றன. சித்தராஜர் இறுதியில் தாரா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றி, நரவர்மனையும் சிறைப்பிடித்தார். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார். இதனால் பரமார அரசின் சில பகுதிகளைச் சௌளுக்கியர்கள் கவர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இவ்வாறு பலராலும் தோற்கடிக்கப்பட்ட நரவர்மன் திக்விஜயம் சென்று பல அரசர்களையும் வென்றதாக அவரது பிரசஸ்தி குறிப்பிடுவது நகைக்கத் தக்கதாகும்.

இம் மன்னரும் நிரம்பப் படித்த ஒரு புலவராக விளங்கினார். நாற்பத்தொரு வரிகளைக் கொண்ட நாகபுரிப் பிரசஸ்தியானது இவராலேயே இயற்றப்பட்டது. வேறு பல செய்யுட்களையும் இம் மன்னர் இயற்றினார் என்று தெரிகிறது. இவரால் கட்டப்பட்டன

[1] H. C. Ray, *Dynastic History of Northern India.*

வாகப் பல ஆலயங்களும், அகழப்பட்டனவாகப் பல ஏரிகளும் குறிப்பிடப்படுகின்றன. ஜினவல்லப சூரி போன்ற பல ஆசாரியர்களையும் புலவர்களையும் இம் மன்னர் ஆதரித்தார். இவற்றின் காரணமாக, 'விவேக நாராயணர்' என்றும் இவர் அழைக்கப்பட்டார். இம் மன்னரது ஆட்சி கி.பி. 1133-ல் முடிவுக்கு வந்தது.

பரமார அரசின் சீர்குலைவு

யசோவர்மன்

நரவர்மனது மகனான யசோவர்மன் கி.பி. 1133-ல் அரியணை ஏறி, 1142 ஆம் ஆண்டு வாக்கில் மரணமடைந்தார். இவர் ஆட்சிக்கு வந்தவுடனேயே ஜெயசிம்ம சித்தராஜர் மாளவத்தின்மீது போர் தொடுத்தார். தாரா நகரம் கைப்பற்றப்பட்டு, யசோவர்மன் சிறையிலடைக்கப்பட்டார். இந் நிகழ்ச்சிகள் கி.பி. 1135-ல் அல்லது 1136-ல் நடைபெற்றிருக்க வேண்டும். இதன் பின்னர், யசோவர்மன் விடுதலை செய்யப்பட்டு, சௌளுக்கியர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராகப் பரமார அரசின் ஒரு சிறு பகுதியை ஆண்டுவருமாறு அனுமதிக்கப்பட்டார். அவந்தி மண்டலமானது (மாளவம்) ஜெயசிம்ம சித்தராஜரது ஆளுநரான மகாதேவரால் நிர்வகிக்கப்பட்டது. 'மகாராஜாதிராஜர்' என்ற பட்டத்தை 1134-ல் சூடியிருந்த யசோவர்மன் ஒரு சிற்றரசனின் நிலைக்கு இவ்வாறு தாழ்த்தப்பட்டார். 'அவந்தி நாதர்' என்ற பட்டத்தை ஜெயசிம்ம சித்தராஜர் சூட்டிக் கொண்டார்.[1]

முதலாம் ஜெயவர்மன்

யசோவர்மனது மகனாகிய முதலாவது ஜெயவர்மன் என்பவர் ஜெயசிம்ம சித்தராஜரின் இறுதிக் காலத்தில் தமக்குரிய பிரதேசங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டார். இம் முயற்சியில் ஓரளவு வெற்றியும் இவர் பெற்றார். 'பரமபட்டாரக மகாராஜாதிராஜ பரமேசுவரர்' என்ற விருதினையும் இவர் பூண்டு கொண்டார். ஆயினும், சந்தெல்லர்கள் போன்ற பகைவர்கள் இவரைத் தாக்கினர். மேலைச் சாளுக்கிய அரசரான ஜகதெக்கமல்லர் ஹொய்சளச் சிற்றரசரான விஷ்ணுவர்தனர் ஆகியோர் படையெடுத்து, தாராவைக் கைப்பற்றினர். இதற்குப் பின், விஷ்ணுவர்தனரின் மகனான முதலாம் விஜயநரசிம்மர் சாளுக்கியருடன் சேர்ந்து கொண்டு, கி.பி. 1142 அல்லது அதற்கு அடுத்த

[1] A. K. Majumdar, *Chaulukyas of Gujarat.*

ஆண்டில் மீண்டும் ஒரு படையெடுப்பைத் துவக்கினர். இப் போரின்போது முதலாம் ஜெயவர்மன் கொல்லப்பட்டார் போலும்! இவரது ஆட்சி சுமார் ஓராண்டு காலமே (கி.பி. 1142-1143) நீடித்தது.

பல்லாளர்

முதலாம் ஜெயவர்மனுக்குப் பிறகு பல்லாளரது கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இந்தப் பல்லாளர் (வல்லாளர்) ஜெயவர்மனே என்று முன்பு கருதப்பட்டார். இப் பெயர் ஹொய்சளர்களிடையிலேயே காணப்பட்டதாகையால், தாராவைக் கைப்பற்றிய சாளுக்கியர்களாலும் ஹொய்சளர்களாலும் அங்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒரு ஹொய்சளச் சிற்றரசனே இவன் என்பது பின்னர்த் தெளிவாயிற்று.[1]

சௌளுக்கியரின் ஆதிக்கம்

இதனிடையில், குஜராத்தில் ஜெயசிம்ம சித்தராஜர் இறந்து, குமாரபாலர் அரசராகியிருந்தார். இவருக்கெதிராகப் பல்லாளரும் சாகம்பரியைச் சேர்ந்த சாகமான அரசரான அருணராஜரும் கூட்டுச் சேர்ந்து தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டனர். குமாரபாலர் காலந் தாழ்த்தாது இரு படைகளோடு உடனே புறப்பட்டார். ஒரு படையுடன் தாமே சாகம்பரி அரசின் தலைநகரமான அஜ்மீர் (Ajmer) நோக்கிச் சென்று அருணராஜரைக் குமாரபாலர் கொன்றார். அவரது மற்றொரு படை மாளவத்தை நோக்கி விரைந்து பல்லாளரைக் கொன்றது. இப் போர் கி.பி. 1150-ம் ஆண்டு வாக்கில் நிகழ்ந்தது. இதனால் மாளவம் முழுவதும் மீண்டும் சௌளுக்கியரின் வசமாயிற்று. பல ஆண்டுகள்வரையில் சௌளுக்கிய ஆளுநர்கள் மாளவத்தை நிர்வகித்து வந்தனர். அவர்களின் சாசனங்கள் பல அங்கே கிடைத்துள்ளன. குமாரபாலரும் 'அவந்தி நாதர்' என்ற விருதினைச் சூட்டிக்கொண்டார். ஆயினும், பில்சா, போபால், ஹோஷங்காபாத் ஆகிய பகுதிகளில் பரமார குலத்தினர் சிற்றரசர்களாகச் சிறு சிறு பகுதிகளைச் சிறிது காலம் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் 'மகா குமாரர்கள்' என்று தங்களை அழைத்துக் கொண்டனர். சுமார் இருபதாண்டு காலம் இந் நிலை நீடித்தது.

மகா குமாரர்கள்

இந்த மகா குமாரர்களது சில செப்பேடுகள் நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால், அவை தரும் வம்சாவளிப் பட்டியல்

[1] Pratipal Bhatia, *The Paramaras.*

கள் ஒன்றுக்கொன்று சிறிது மாறுபட்டுக் குழப்பத்தை யளிக்கின்றன. இவர்களது வரலாற்றைப்பற்றி விரிவாகக் கவனிக்கத் தேவையில்லை. இச் செப்பேடுகளையும் பரமாரர்களின் மற்றச் சாசனங்களையும் நன்கு ஆராய்ந்த டாக்டர் பிரதிபால் பாட்டியா என்பவர் இந்த மகா குமாரர்களின் வம்சாவளி கீழ்வருமாறு இருக்கலாம் என்று முடிவு செய்துள்ளார். பரமாரர்களைப்பற்றி ஆராய்ந்த மிகவும் சமீபத்திய ஆராய்ச்சியாளர் இவரேயாதலால், இவர் தரும் பட்டியலை இங்கே குறிப்பிடுகிறோம்:

அரசர் யசோவர்மன்
- அரசர் முதலாம் ஜெயவர்மன்
- ஸ்ரீ அஜய வர்மன்
- மகா குமார லக்ஷ்மி வர்மன்
  - மகா குமார அரிச்சந்திரர்
    - மகா குமார உதயவர்மன்
    - தேவபாலர்[1]
- மகா குமார திரை லோக்கிய வர்மன்

இம் மகா குமாரர்கள் மாளவத்தின் தென்கிழக்கில் மேலே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் ஆட்சி புரிந்து வந்தனர். வேறு பரமார அரசகுமாரர்களும் மாளவத்தின் வேறு சில பகுதிகளில் குறுநில மன்னர்களாக ஆண்டு வந்திருக்கலாம். சான்றாக, மேலே வம்சாவளிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர் யசோவர்மனின் இரண்டாம் மகன் அஜயவர்மன் 'மகா குமாரர்' என்று தன்னை யழைத்துக் கொள்ளாமல், வெறும் ஸ்ரீ அஜய வர்மன் என்ற பெயரோடு மாளவத்தின் ஒரு பகுதியில் சௌளுக்கியருக்குக் கட்டுப்பட்டு ஆண்டு வந்தான். இந்த அஜயவர்மனது மகன் விந்தியாவர்மன் பரமார அரசர்களில் அடுத்தபடியாக முக்கியமானவனாவான்.

இதற்கிடையில் மற்றொரு சிக்கலையும் நாம் கவனிப்பது அவசியமாகும். அஜயவர்மன் என்பது முதலாம் ஜெயவர்மனின் மற்றொரு பெயரே என்று டாக்டர் கங்குலியும் அவரைப் பின்பற்றி வேறு சிலரும் முன்பு கருதினர். அரசர் யசோவர்மனுக்கு முதலாம் ஜெயவர்மன், ஸ்ரீ அஜயவர்மன், மகாகுமார லக்ஷ்மி

[1] Pratipal Bhatia, *The Paramaras.*

வர்மன் என்ற மூன்று பிள்ளைகள் இருந்தனர் என்று டாக்டர் கீல்ஹார்ன் ஏற்கெனவே சொல்லியிருந்த முடிவை இவர்கள் நிராகரித்தனர். கி.பி. 1210ஆம் ஆண்டைச் சேர்ந்த அரசர் அர்ச்சுனவர்மனின் பிப்பிலியநகர்ச் செப்பேடும் இதற்குப் பிந்திய அரசர்களின் செப்பேடுகளும் யசோவர்மனுக்குப் பின் அஜயவர்மனே அரசாண்டான் என்று குறிப்பிட்டதால், முதலாம் ஜெயவர்மரே இவர் என்று அவர்கள் கருதினர். வம்சாவளிப் பட்டியலை வரையும்போது இந்து அரசர்கள் தமக்கு முன்பு ஆண்ட அண்ணன்மார்களை விட்டுவிட்டு, தந்தை, பாட்டனார், முப்பாட்டனார் போன்ற நேர்வழியையே குறிப்பது வழக்கமாயிருந்தது. மகா குமாரர் ஒவ்வொருவரது செப்பேடும்கூட இவ்வாறே அவரவரது தந்தையை மட்டும் குறிக்கிறதேயொழிய, அண்ணனைக் குறிப்பிடவில்லை என்பது இதற்குச் சான்று.

பரமாரரது மறு எழுச்சி

விந்தியாவர்மன்

சௌளுக்கிய அரசில் குமாரபாலர் இறந்து, அஜயபாலர் அரசரானார். இவர் வல்லமையற்ற ஓர் அரசர். வலிமையற்ற குகிலர்களால்கூட இவரைத் தோற்கடிக்க முடிந்தது.[1] கி.பி. 1175-ல் இவர் கொலை செய்யப்பட்ட பின், சிறு குழந்தையான இரண்டாம் மூலராஜர் சௌளுக்கிய அரியணையில் அமர்த்தப்பட்டார். இரண்டாம் மூலராஜர் பதின்மூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின், இரண்டாம் பீமர் அரசரானார். இச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி, பரமார ஸ்ரீ அஜயவர்மனின் மகனாகிய விந்தியாவர்மன் தாராவையும் மற்றப் பகுதிகளையும் பகைவரிடமிருந்து மீட்கத் திட்டமிட்டார். பல ஆண்டுகள் வரை போரிட்ட பின்னர், கி.பி. 1187க்கும் 1190க்குமிடையில் அவரது கனவு நனவாயிற்று. தலைநகரான தாராவும் மாளவமும் மீண்டும் பரமாரர்களது ஆட்சிக்குட்பட்டன.

இதன் பின்னர்த் தெற்கில் கல்யாணிச் சாளுக்கியரை நிலைகுலையச் செய்துவிட்டு ஆதிக்கம் செலுத்தி வந்த ஹொய்சளர்கள், யாதவர்கள் ஆகியோர்மீதும் விந்தியாவர்மர் போரிட்டார். இவ்விருவருமே மாளவ அரசரைத் தோற்கடித்தனர். ஆயினும், மாளவத்தின் சுதந்திரம் பறிபோகவில்லை. இவ்வாறு பல முறை தோல்வியுற்றாலும், விந்தியாவர்மன் பரமார வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த அரசராவார். பரமார அரசுக்குப்

[1] A. K Majumdar, *Chaulukyas of Gujarat*, G. C. Ray Choudhuri *History of Mewar*.

புத்துயிர் ஊட்டியதோடல்லாமல், புலவர்கள் பலரையும் இம் மன்னர் ஆதரித்தார். ஆசாதரர் என்ற சமண ஆசாரியர் ஒருவர் இவரால் ஆதரிக்கப்பட்டு, தாராவில் வாழ்ந்தார். இவரது நூலான 'சாகர தர்மாமிருதம்' நமக்குக் கிடைத்துள்ளது. சுல் ஹணர் என்பவர் இம் மன்னரது அவைக்களப் புலவராயிருந் தார். பில்கணர் என்பாரும் இவரால் சிறிது காலம் ஆதரிக்கப் பட்டார். ஆனால், இந்தப் பில்கணர் விக்கிரமாங்க தேவ சரி தத்தின் ஆசிரியர் அல்லர். தமிழில் பல 'ஔவையார்கள்' இருந்தது போல, சமஸ்கிருத இலக்கிய உலகில் 'பில்கணர்கள்' பலர் இருந்தனர். இம் மன்னரது ஆட்சி கி.பி. 1194 ஆம் ஆண்டு வாக்கில் முடிவுற்றது.

சுபதவர்மன்

விந்தியாவர்மனின் மகனை சுபதவர்மன் 1194 முதல் 1209 வரையில் ஆட்சியில் இருந்தார். ஸ்ரீபதர், சோகதர் என்றும் இவர் அழைக்கப்பட்டார். இவரது காலத்தில் குஜராத்தில் அரசராயிருந்த இரண்டாம் பீமர் வலுவிழந்து தமக்கு உட்பட் டிருந்த குறுநில மன்னர்களாலேயேகூடத் தோற்கடிக்கப்பட்டுக் கிடந்தார். இந் நிலையைப் பயன்படுத்தி, சுபதவர்மர் பெரும் படையுடன் சௌளுக்கிய அரசுக்குள் புகுந்து, பல சமண ஆலயங்களைச் சூறையிட்டு, அணகிலப்பாடகம் போன்ற நகரங் களையும் கொள்ளையடித்து ஏராளமான பொருள்களுடன் மாளவம் திரும்பினர். இதன் பின்னர், தேவகிரியைச் சேர்ந்த யாதவ அரசர் ஜெய்துகி என்பார் சுபதவர்மனை ஒரு போரில் தோற்கடித் தார். இருப்பினும், தம் தந்தையின் பணியைத் தொடர்ந்து ஆற்றி மாளவத்தில் பரமார அரசை வலுப்படுத்திய பெருமை இவ்வரசரையும் சாரும். ஆசாதரர் இவரது காலத்திலும் வாழ்ந்து நூல்கள் பலவற்றையும் எழுதி முடித்தார்.

மற்றப் பரமார அரசர்கள்

முதலாம் அர்ச்சுனவர்மன்

சுபதவர்மனின் மகன் முதலாம் அர்ச்சுனவர்மன் கி.பி. 1210 முதல் 1215 வரையில் அரசராயிருந்தார். இவர் மேற்கில் புரோச் வரையில் தமது அரசினை விரிவுபடுத்தினர். சௌளுக் கியரது அரசான குஜராத்தை இவரது படைகள் கைப்பற்றின. மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி போன்ற நூல்கள் சௌளுக் கிய அரசரை இவர் தோற்கடித்து விரட்டியதை விளக்குகின் றன. யாதவர்கள் அர்ச்சுனவர்மன்மீது இருமுறை போர்

தொடுத்தனர். முதன்முறை பரமாரப் படைகள் வென்றன வெனினும், இரண்டாவது படையெடுப்பில் அவை அடியோடு தோற்கடிக்கப்பட்டன. இம் மன்னரும் பல புலவர்களை ஆதரித்தார். ஆசாதரர், பில்கணர், மதனர் போன்றோர் அவரால் ஆதரிக்கப்பட்டன ரென்று கூறப்படுகிறது. பில்கணர் சாந்தி விக்கிரகர் என்ற பெயரில் இரண்டு பரமார அரசர்களுக்குப் போர் அமைச்சராயிருந்தவர்.

தேவபாலர்

அர்ச்சுனவர்மனது கடைசிக் கல்வெட்டு, கி.பி. 1215 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. அடுத்த அரசரான தேவபாலரின் முதற் கல்வெட்டு 1218ஐச் சேர்ந்தது. இவர் மகாகுமாரரான அரிச்சந்திரரின் மகனுவார். அர்ச்சுனவர்மனுக்குப் பின் அரியணை ஏறுவதற்குச் சந்ததி இல்லாததாலோ அல்லது வேறு ஏதோ காரணத்திருலோ இவர் அரசரானுர். இதற்கான உண்மையான காரணங்கள் தெரியவில்லை. இவரது ஆட்சி இருபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. மேற்கில் புரோச் முதல் கிழக்கில் உதயபூர் வரையில் இவரது அரசு விரிந்திருந்தது. வழக்கம் போல் சௌளுக்கியர்களும் யாதவர்களும் இவரது காலத்திலும் பரமாரர்களுக்குப் பகைவர்களாயிருந்தனர். புரோச்சைச் சுற்றியிருந்த பகுதியான லாட்டத்தைப் பரமாரரிடமிருந்து கைப்பற்றிக்கொள்ள அவ்விருவரும் முனைந்தனர். இதனிடையில், வடக்கில் அல்தாமிஷின்[1] தலைமையில் டெல்லி சுல்தானியம் (சல்தனத்) வலுப்பெற்று விரிவடைந்து வந்தது. அல்தாமிஷும் தெற்கில் பரமார அரசை நோக்கித் தமது படையெடுப்பைத் தேவபாலரது காலத்தில் துவக்கினுர்.

சிங்கணர் என்ற யாதவ அரசர் லாட்டத்தைத் தாக்கி, அதன் அரசரான சங்கா என்பவரைச் சிறைப்பிடித்தனர். இதன் பின்னர், தேவபாலருக்கும் சிங்கணருக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டு, சங்காவிடமே லாட்டம் ஒப்படைக்கப்பட்டது. அப்பால் தேவபாலர், சங்கா, சிங்கணர் ஆகிய மூவரும் சேர்ந்து குஜராத்தின்மீது படையெடுத்தனர். அப்பொழுது வடக்கில் முஸ்லிம்களின் தாக்குதலைச் சமாளிப்பதில் சௌளுக்கியப் படை ஈடுபட்டிருந்தது. சௌளுக்கிய அமைச்சரான வீரதவலரும், கேம்பேயில் (Cambay) சௌளுக்கிய ஆளுநராக இருந்த வஸ்துபாலரும் தேவபாலருக்கும் சிங்கணருக்குமிடையில் பகைமையைத் தோற்றுவித்து, அவர்கள் திட்டமிட்ட படையெடுப்பு முயற்சி

[1] அல்தாமிஷ் என்னும் பெயரே ஆங்கிலத்தில் 'இல்டுமிஷ்' என்று சிதைவுற்றது.

யைத் தோற்கடித்தனர். முஸ்லிம்களை எதிர்த்துப் புரிந்த போரிலிருந்து திரும்பி வந்த வீரதவலர் லாட்டத்தைச் சங்கா விடமிருந்து பின்னர்க் கைப்பற்றிக் கொண்டார். 1233-34-ல் அல்தாமிஷ் பரமார அரசின்மீது படையெடுத்து, பில்சாவையும் உஜ்ஜெயினியையும் கைப்பற்றி, அந் நகரிலுள்ள ஆலயங்களைக் கொள்ளையிட்டுப் பெருஞ் செல்வத்துடன் திரும்பிச் சென்றூர். சில ஆண்டுகளுக்குப் பின்னரே முஸ்லிம்களின் பிடியிலிருந்து பில்சாவைத் தேவபாலரால் மீட்க முடிந்தது.

ஜெய்துகி

தேவபாலரது காலத்திலேயே பரமார அரசு முஸ்லிம் படையெடுப்புக் காரணமாகக் கலகலத்துப் போய்விட்டது. அவரது மகனுன ஜெய்துகி (Jaitugi) கி.பி. 1239க்கு முன் அரியணை ஏறி, 1255க்கு முன் காலமானுர். இவரது காலத்தில் தேவகிரியைச் சேர்ந்த யாதவர்களும் டெல்லி சுல்தான் நாசிருதீனின் முதலமைச்சரான பால்பனும் பரமார அரசின்மீது படையெடுத்தனர். முஸ்லிம்கள் மாளவத்தை டெல்லி சுல்தானியத்தோடு சேர்த்துக் கொள்ளாது போயினும், அவர்களது இப் படையெடுப்பால் பரமார அரசு பெரிதும் சீர்குலைந்தது. இதுதான் சமயமென்று குஜராத்தைச் சேர்ந்த வாகேல (Vaghela) வம்சத்து அரசன் விசாலதேவன் என்பவன்கூட மாளவத்தைத் தாக்கித் தாரா நகரைக் கொள்ளையிட்டான். அம் மன்னனது அரசவைப் புலவரான கணபதி வியாசர் என்பவர் இவ் வரிய செயலைத் 'தாரா வம்சம்' என்ற பிரபந்தம் பாடித் தமது சோற்றுக் கடனைத் தீர்த்துக் கொண்டார். இவ்வாறு வேறு சில குட்டி அரசர்கள்கூட மாளவத்தைத் தாக்கி வெற்றிகள் பெற்றனர்.

பரமார அரசின் வீழ்ச்சி

இரண்டாம் ஜெயவர்மன் முதலியோர்

ஜெய்துகியின் தம்பியான இரண்டாம் ஜெயவர்மன் கி.பி. 1255க்கு முன் அரியணை ஏறி, சுமார் இருபது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். ராந்தம்பாரி லிருந்த சாகமானர்கள் இவர்மீது படையெடுத்தனர். துவக்கத்தில் சாகமானர்கள் வெற்றி பெற்றுலும், ஜெயவர்மன் அடுத்துச் சில போர்களில் வெற்றி பெற்றுர் என்று தெரிகிறது. இவருக்குப் பின் இவரது மகனுன இரண்டாம் அர்ச்சுனவர்மன் அரியணை ஏறினுர். யாதவ அரசரான ராமச்சந்திரர், ராந்தம்பாரின் அரசரான ஹம்மீரர் ஆகியோர் இவரது காலத்தில் மாளவத்தைத் தாக்கினர். குஜராத்தைச் சேர்ந்த வாகேல அரசரான சாரங்கதேவரின்

படைகளும் இவ்வாறே மாளவத்தைத் தாக்கின. இவ் வரசனது தலைமை அமைச்சர் ஒருவரும் கிளர்ச்சி செய்து மாளவத்தின் ஒரு பகுதியைக் கவர்ந்து கொண்டு ஆட்சி புரியலானார். இவ் வமைச்சரது பெயர் கோக்கர் (Goga அல்லது Koka) என்று முஸ்லிம் நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு மாள வத்தில் அராஜகம் நிலவிற்று.

முஸ்லிம் படையெடுப்பு

இரண்டாம் அர்ச்சுனவர்மனுக்குப் பின் இரண்டாம் போஜர் என்பவர் 1284ஆம் ஆண்டு வாக்கில் பரமார அரியணை ஏறினார். இவரது காலத்திலும் சாகமான அரசரான ஹம்மீரரும், டெல்லி சுல்தானான ஜலாலுதீன் கில்ஜியும் மாளவத்தின்மீது படையெடுப்புகளை நிகழ்த்தினர். அந்தக் கில்ஜி சுல்தான் கி.பி. 1291-ல் உஜ்ஜெயினியைக் கைப்பற்றிச் சூறையாடினார். சிறிது காலத்திற்குப் பின்னர் மஹ்லகதேவர் என்பவர் பரமார அரசரா யிருந்தார். இரண்டாம் அர்ச்சுனவர்மனுக்கும் இரண்டாம் போஜருக்கும், இரண்டாம் போஜருக்கும் மஹ்லகதேவருக்கும் இடையே இருந்த உறவுமுறைகள் என்ன என்பன தெரியவில்லை ஒரு சில கல்வெட்டுகள், முஸ்லிம் ஆசிரியர்களின் குறிப்புகள் ஆகியவற்றை வைத்தே இவர்களது பெயர்களை நாம் தெரிந்து கொள்கிறோம். அலாவுதீன் கில்ஜி சாகமானர்கள், குகிலர்கள், வாகேலர்கள் முதலியோரைத் தோற்கடித்த பின், கி.பி.1305-ல் மாளவத்தின்மீது படையெடுத்து மஹ்லகதேவரையும் கடுமையாகத் தோற்கடித்தார். மஹ்லகதேவர் மாண்டு (Mandu) கோட்டைக்குள் ஓடி ஒளிந்து கொண்டார். அக் கோட்டையானது கில்ஜி தளபதி அய்னுல் முல்க் என்பவரால் முற்றுகையிடப்பட்டது. அக் கோட்டை பிடிபட்டவுடன் மஹ்லகதேவர் பகைவரால் கொல்லப்பட்டார்.[1]

இதன்பின்னர், மூன்றும் ஜெயசிம்மர் என்ற ஒரு பரமார அரசர் உதயபூரைத் தலைநகராகக் கொண்டு, கி.பி. 1309-ல் ஒரு சிற்றரசை ஆண்டு வந்தார். இந்தச் சிறிய பரமார அரசும் முகம்மது துக்ளக்கின் காலத்தில் டெல்லி சுல்தானியத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாறு பதினான்காம் நூற்றாண்டில் பரமார அரசு முற்றிலும் மறைந்தொழிந்தது.

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol III. Wolseley Haig, Cambridge History of India, Vol. III, *Turks and Afghans.*

(வம்சாவளி) தொடர்ச்சி

தேவபாலர்
|
ஜெய்துகி
|
இரண்டாம் ஜெயவர்மன்
|
இரண்டாம் அர்ச்சுனவர்மன்
⋮
இரண்டாம் போஜர்
⋮
மஹ்லக தேவர்
⋮
மூன்றும் ஜெயசிம்மர்

(கடைசி நான்கு அரசர்களும் ஒருவருக்கொருவர் என்ன உறவுமுறையி லுள்ளவர்கள் என்பது தெரியவில்லை. இவர்கள் அனைவருமே மாளவத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்தவர்களாகவும் இருக்கலாம்.)

2. அபுப் பரமாரர்கள்

மாளவத்தை மையமாகக் கொண்ட பரமாரப் பேரரசு மட்டுமின்றி, வேறு சில பரமார அரசுகளும் இருந்து வந்தன. அத்தகைய பரமார அரசுகளில் முக்கியமானது ராஜஸ்தானத்தில் அபுக் குன்றைச் சுற்றியிருந்த பகுதியை உள்ளடக்கியதாயிருந்தது. பரமாரர்களது பூர்விகம்பற்றிய கதைகள் அவர்கள் அபுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதால், அபு அரசைச் சேர்ந்த பரமாரர்களே மிகவும் பூர்விகமானவர்களாக இருக்கக்கூடும். ஆயினும், மாளவத்துப் பரமாரர்களைப் போல் ஒரு பேரரசை இவர்கள் நிர்மாணித்து எழுப்பவில்லை. சுதந்திரமான சிற்றரசர்களாகச் சில வேளைகளிலும், குஜராத்தையாண்ட சௌளுக்கியர் போன்றோருக்குக் கட்டுப்பட்டவர்களாகப் பல வேளைகளிலும் இந்த அபுப் பரமாரர்கள் ஆண்டு வந்தனர். மகாராஜாக்கள், மகாராஜாதிராஜாக்கள் என்பன போன்ற எளிய பட்டங்களை மட்டுமே இவர்கள் பூண்டிருந்தனர். மாளவத்துப் பரமாரர்களைப் போல் 'பரமபட்டாரக மகாராஜாதிராஜ பரமேசுவரர்கள்' என்ற பேரரசர்களுக்குரிய பட்டத்தினை இவர்கள் பூணவில்லை. இவர்கள் ஆட்சிபுரிந்த பகுதி 'அற்புத மண்டலம்' என்றழைக்கப்பட்டது. சந்திராவதி என்ற நகரம் இவர்களது தலைநகரா யிருந்தது.

ஆரம்பகால வரலாறு

அபுப் பரமாரர்களும் மாளவத்துப் பரமாரர்களைப் போலவே நீண்ட வரலாற்றைப் பெற்றுள்ளனர். ஆனால், இவர்களது ஆரம்பகால வரலாறு நமக்குத் தெளிவாகப் புலப்படவில்லை; பிந்திய வரலாறும் போதுமான அளவு தெளிவாக விளங்கவில்லை. கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பிறச் சான்றுகளும் அதிகமாகக் கிடைக்காமையே இதற்குக் காரணம். கிராடுவைச் (Kiradu) சேர்ந்த பரமாரச் சிற்றரசரான சோமேசுவரரின் கல்வெட்டின் படி, அபுப் பரமார வம்சத்தின் முதலாவது அரசர் மகாராஜா சிந்துராஜர் ஆவார். இவருக்குப் பின், உத்பலராஜர் என்பவர் ஆட்சி புரிந்தார். இவர் சிந்துராஜரின் மகன் ஆவார். அபுப் பரமாரர்களின் சாசனங்கள் தமது முதல் அரசராக உத்பல ராஜரையே குறிப்பிடுகின்றன. மாளவத்துப் பரமார அரசரான வாக்பதி முஞ்சருக்கும் உத்பலராஜர் என்ற பெயர் இருந்ததால், இருவரும் ஒருவரே என்று டாக்டர் கங்குலி போன்றோர் கருதினர்.[1] வாக்பதி முஞ்சர் அபுப் பகுதியைக் கைப்பற்றித் தம் மகன் ஆரண்யராஜன் என்பவனை அங்கு ஆளுநராக்கினார் என்று கங்குலி கருதினார். ஆனால், வாக்பதி முஞ்சரின் காலத்தவரான சௌளுக்கிய அரசர் முதலாம் மூலராஜர் அற்புத மண்டலத்தின் மீது படையெடுத்தபொழுது, அங்கு ஆண்டு கொண்டிருந்தவர் தரணிவராகர். இம் மன்னர் உத்பலராஜரின் கொள்ளுப் பேரர். எனவே, வாக்பதிராஜருக்குச் (சுமார் கி.பி. 973-995) சுமார் அரை நூற்றாண்டு காலம் முந்தியவர் உத்பலராஜர் என்பதை உணரலாம்.

நிந்துகர்

உத்பல ராஜருக்குப் பின் அவரது மகன் ஆரண்யராஜர், இவருக்குப் பின் இவரது மகன் அற்புத கிருஷ்ணராஜர் (முதலாம் கிருஷ்ணராஜர்) ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். கிருஷ்ணராஜர் கி.பி. 967-ல் ஆட்சிபுரிந்து வந்தார் என்பது ஜோத்பூருக்கருகில் வர்க்கானு (Varkana) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட மகாவீரரது சிலையின் பீடத்திலுள்ள வாசகத்தால் தெரிய வருகிறது. அற்புத கிருஷ்ணராஜருக்குப் பிறகு அவரது மகனான தரணிவராகர் கி பி. 967க்குப் பின் அரசரானார். இவருக்கும் குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் முதலாம் மூலராஜருக்கும் இடையே போர் ஏற்பட்டது. தரணிவராகர் தோற்றுத் தமது நாடிழந்து ஹஸ்திகுண்டியில் தவலரிடம் அடைக்கலம்

[1] Dr. D. C Gangulv, *History of the Paramara Dynasty*. Dr. R. C. Majumdar (Editor), *The Struggle for Empire*, article by D C. Ganguly.

புகுந்தார். இவர் எவ்வாறு தமது அரசை மீண்டும் பெற்ருர் என்பது தெரியவில்லை. இவருக்குத் துர்பதர் (Dhurbhata), மகி பாலர் எனும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இவ் விருவரும் தரணிவராகருக்குப் பின் ஒருவர் பின் ஒருவராக அரசாண்டனர். மகிபாலருக்குத் தேவராஜர் என்ற பெயரும் இருந்தது. இவரது கி.பி. 1002 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இவருடைய மகனுன தந்துகர் கி.பி. 1002க்குப் பின் அரச ராஞர். இவர் பொறித்த கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை என்ருலும், அபுப் பரமாரர்கள், கிராடு பரமாரர்கள் ஆகியோரது பல கல்வெட்டுகளிலும் இவரது பெயர் அடிக்கடி குறிப்பிடப்படுவ தால், இவர் ஏதோ ஒரு வகையில் முக்கியமான அரசராக இருந் திருக்க வேண்டும். சௌளுக்கிய அரசர் துர்லபராஜருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராக இவர் இருந்துவந்தார். பின்னர், குஜராத்தில் துர்லபராஜரை அடுத்து முதலாம் பீமதேவர் அரச ரானதும், அவரால் தந்துகருக்கு ஏதோ தொல்லை ஏற்பட்டது. தந்துகர் மாளவத்துப் பரமார அரசர் போஜரிடம் அடைக்கலம் புகுந்தார். பீமர் அற்புத மண்டலத்தை ஆளுவதற்கு விமலர் என்பவரை நியமித்தார். இது கி.பி. 1030-ல் நிகழ்ந்திருக்க லாம். விமலரது முயற்சியின் பயனுகத் தந்துகருக்கும் பீமருக்கு மிடையில் சமாதானம் ஏற்பட்டது. அற்புத மண்டலம் தந்துக ரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுமார் முப்பதாண்டுகால ஆட்சிக் குப் பிறகு, கி.பி. 1040 வாக்கில், தந்துகர் காலமாஞர்.

தந்துகரின் மூன்று பிள்ளைகள்

தந்துகருக்குப் பூரணபாலர், தந்திவர்மன், இரண்டாம் கிருஷ்ணதேவர் என்னும் மூன்று மகன்கள் இருந்தனர். மூத்தவ ரான பூரணபாலர் கி.பி. 1042-க்கு முன் அரசராஞர். இவரது மூன்று கல்வெட்டுகளும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளே இவர் ஆட்சிபுரிந்தார் என்பதைத் தெரிவிக்கின்றன. இவருக்குப் பின் இவரது தம்பியான தந்திவர்மன் சுமார் பதினைந்து ஆண்டு களும் (ஏறத்தாழ, கி.பி. 1045-1060), இதன் பின்னர்த் தந்தி வர்மனது தம்பியான இரண்டாம் கிருஷ்ணதேவர் ஆறு ஆண்டு களும் (ஏறத்தாழ, கி.பி. 1060-1066) ஆட்சிபுரிந்தனர். தந்தி வர்மனது மகன் லோகராஜர் சிறுவராயிருந்ததாலோ அல்லது வேறு எதனுலோ அரசராகவில்லை. இவ் வரசர்கள் அனைவருமே மாளவத்துப் பரமாரப் பேரரசர் போஜரது ஆதரவைப் பெற்று, சௌளுக்கியர்களது தாக்குதல்களிலிருந்து தமது அரசினைக் காத்து வந்தனர். ஆனுல், போஜர் கி.பி. 1055-ல் இறந்த பின்னர், சௌளுக்கிய அரசரான முதலாம் பீமர் இரண்டாம் கிருஷ்ணதேவர்மீது தாக்குதல் தொடுத்தார். சந்திராவதி கைப்

பற்றப்பட்டு, கிருஷ்ணராஜரும் சிறைப் பிடிக்கப்பட்டார். பின்பு நாதோலேச் சேர்ந்த சாகமான அரசர் பாலப்பிரசாதர் என்பார் பீமரைப் போரில் வென்று, கிருஷ்ணதேவரை விடுவிக்குமாறு செய்தார். கிருஷ்ணதேவருக்குக் காகலதேவர், சொச்சராஜர் எனும் இரு பிள்ளைகள் இருந்தனர்.

வீழ்ச்சி

கிருஷ்ணதேவருக்குப் பின் அவரது மூத்த மகன் காகல தேவரோ அல்லது தந்திவர்மனின் மகன் யோகராஜரோ அரச ரானர். இதுபற்றி அறிஞர்களிடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. போதிய சான்றுகளின்மையே இதற்குக் காரணம். யோகராஜர், அவரது மகன் ராமதேவர், காகலதேவர் ஆகிய மூவருமே அரசர்களாயிருந்தனர். ராமதேவருக்குப் பின் காகல தேவர் அரியணையைக் கவர்ந்து கொண்டிருக்கலாம். காகல தேவருக்குப் பின் அவரது மகன் விக்கிரமசிம்மர் ஆண்டார். ஆனல், விக்கிரமசிம்மர் சௌளுக்கிய அரசர் குமாரபாலரால் தோற்கடிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டு, ராமதேவரின் மகன் யசோதவலர் சந்திராவதியில் அரசராக்கப்பட்டார். விக்கிரம சிம்மரின் மகன் ரணசிம்மர் வாரிசுரிமையை இழந்தார். தந்தி வர்மன், இரண்டாம் கிருஷ்ணதேவர் ஆகிய இருவரது வாரிசு களுக்கிடையிலும் அரியணைபற்றித் தகராறுகள் இருந்திருக்க வேண்டுமென்பதை இவை புலப்படுத்துகின்றன. யசோதவலர் கி.பி. 1145 முதல் 1163 வரையில் ஆண்டிருக்கக் கூடுமென்பது தெரிகிறது. அவருக்குப் பின்னர் அவரது மகன் தாராவர்ஷர் அரசரானர். சௌளுக்கிய அரசர் இரண்டாம் பீமருக்கு அடங் கிய சிற்றரசராகத் தாராவர்ஷர் ஆட்சிபுரிந்தார். கி.பி. 1197-ல் குத்புதீன் அய்பக் அற்புத மண்டலத்தின்மீது படையெடுத்தார். அபுக் குன்றுக்கு அருகில் நடந்த சண்டையில் தாராவர்ஷர் தோற்கடிக்கப்பட்டார்.[1] ஆனல், இதன் பின்னரும் சுமார் கி.பி. 1220 வரையில் தாராவர்ஷரது ஆட்சி நடைபெற்றது. சுமார் அறுபது ஆண்டுகள் தாராவர்ஷர் ஆண்டார்.

கி.பி. 1220ஆம் ஆண்டு வாக்கில் தாராவர்ஷரது மகன் சோமசிம்மர் அரசரானர். இவருக்குப் பின் மூன்றும் கிருஷ்ண ராஜர், பிரதாபசிம்மர் ஆகியோர் ஆண்டனர். இவர்களது காலத் தில் அற்புத மண்டலம் குகிலர்களால் தாக்கப்பட்டது. வாகேலர் களின் உதவியுடன், அவர்களுக்குக் கட்டுப்பட்ட அரசர் களாகப் பிரதாபசிம்மரும் அவருக்குப் பிந்திய அர்ச்சுனர், விக்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

கிரமசிம்மர் ஆகியோரும் ஆட்சிபுரிந்தனர். இம் மூவருக்கும் இடையே இருந்த உறவுமுறை என்ன என்பது புலப்படவில்லை. கி.பி. 1300க்குப் பிறகு தெற்கு மார்வாரைச் சேர்ந்த சாகமானச் சிற்றரசர் லுண்டிகர் (Luntiga) என்பவர் அற்புத மண்டலத்தைக் கைப்பற்றிக்கொண்டு பரமார ஆட்சிக்கு அப் பகுதியில் முற்றுப் புள்ளி வைத்தார்.

வம்சாவளி

- சிந்துராஜர்
  - உத்பலராஜர்
    - ஆரண்யராஜர்
      - அற்புத கிருஷ்ணர்
        - தரணிவராகர்
          - துருபதர்
          - மகிபாலர்
            - தந்துகர்
              - பூரணபாலர்
              - தந்திவர்மன்
                - யோகராஜர்
                  - ராமதேவர்
                    - யசோதவலர்
                      - தாராவர்ஷர்
                        - சோமசிம்மர்
                          - மூன்றும் கிருஷ்ணராஜர்
                            - பிரதாப சிம்மர்
              - இரண்டாம் கிருஷ்ண தேவர்
                - காகல தேவர்
                  - விக்கிரமசிம்மர்
                    - ரணசிம்மர்
                - சொச்ச ராஜர்

3. வாகதத்துப் பரமாரர்கள்

வாகதம் என்பது பன்ஸ்வாரா (Banswara), துங்கர்பூர் (Dungarpur) என்னும் பிரிட்டிஷ் காலத்து இரு சுதேச சமஸ்

தானங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இப் பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் பரமாரக் கிளை வம்சமொன்று ஆதிக்கம் செலுத்தி வந்தது. பன்ஸ்வாராவிலுள்ள உத்தூனகம் (இன்றைய அர்துனம்—Arthuna)—என்ற ஊர் அந்த அரசின் தலைநகராயிருந்தது. மாளவத்துப் பரமார வம்சத்தை நிறுவியவரான உபேந்திரருக்கு முதலாம் வைரிசிம்மர், தம்பரசிம்மர் என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தனர் என்பதை முன்பே பார்த்தோம். வைரிசிம்மர் மாளவத்தில் அரசரானார். தம்பரசிம்மர் தம் தந்தையின் காலத்தில் வாகதத்தின் தென்கிழக்குப் பகுதியில் (மாளவத்தை அடுத்திருந்த இப் பகுதி மட்டுமே உபேந்திரரின் ஆட்சியில் அப்போது இருந்தது) ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரது வம்சத்தினர் சிறிது சிறிதாகச் செல்வாக்குப் பெற்று, பின்னர் வாகதத்தில் தனியரசு ஒன்றை நிறுவும் அளவுக்கு வளர்ச்சியுற்றனர். தம்பரசிம்மருக்குப் பின் தனிகர், சச்சர், கம்கதேவர் (Kamkadeva), சந்தப்பர் போன்றோர் வாகதத்தில் வெளியிட்ட சாசனங்கள் கிடைத்துள்ளன. இவர்கள் மாளவப் பரமாரருக்குக் கட்டுப்பட்ட குறுநில மன்னர்களாவர். சந்தப்பருக்கு அடுத்தவரான சத்தியராஜர் பரமார போஜருக்கு, அவர் புரிந்த போர்களில் பேருதவி நல்கி வெகுமதிகள் பெற்றார். இவரது பிள்ளைகளான லிம்பராஜர், மண்டலிகர் ஆகியோரும் மாளவப் பரமார அரசர்களுக்கு இவ்வாறே பணிபுரிந்தனர். மண்டலிகர் நாதோலைச் சேர்ந்த சாகமான அரசர் பிருதிவிபாலரால் தோற்கடிக்கப்பட்டார். இவர் மண்டலேசுவரம் போன்ற பல ஆலயங்களைக் கட்டிப் பலராலும் புகழப்பட்டு வாழ்ந்தாரெனத் தெரிகிறது.

மண்டலிகர் கி.பி. 1045 முதல் 1070 வரையில் ஆண்டிருக்கலாம். இவரது மகனான சாமுண்டராஜரது அர்துனக் கல்வெட்டுகள் இந்தக் குடும்பத்தின் வம்சாவளியை நமக்குத் தருகின்றன. மாளவத்தில் போஜரது மரணத்துக்குப்பின் நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தி, வாகதப் பரமாரர்கள் சிறிது சிறிதாகத் தமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டனர். இந்த வகையில் சாமுண்டராஜரை முக்கியமானவராகக் கருத வேண்டும். இவர் மாளவப் பரமார அரசரான உதயாதித்தியரை எதிர்த்து நின்று தமது வல்லமையைக் காட்டிக் கொண்டார். இவர் கி.பி. 1110 ஆம் ஆண்டு வாக்கில் காலமானதும், விஜயராஜர் என்பவர் அரசரானார். இவருக்குப் பின்னர் ஆண்ட வாகதப் பரமாரர்களைப்பற்றி நமக்குத் தெரியவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சௌளுக்கிய அரசரான ஜெயசிம்ம சித்தராஜர் மாளவத்தோடு வாகதத்தையும்

கைப்பற்றிக்கொண்டார். ஒரு தலைமுறைக்குப் பின்னர், குகில அரசர் சாமந்தசிம்மர் என்பவர் வாகதத்தின்மீது ஆட்சி புரிந்தார். பின்னர், மீண்டும் சௌளுக்கி யர்கள் இப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

வாகதப் பரமாரர்களின் பெயர்கள் நமக்குத் தெரிகின்றன வாயினும், அவர்கள் பலருக்கிடையிலிருந்த உறவு முறைகள் என்ன என்பது தெளிவாக விளங்காததால், வம்சாவளிப் பட்டியலை வரைய முடியவில்லை. வரிசைப் படியாக வாகதப் பரமாரர்களின் பெயர்கள் வருமாறு: 1. தம்பரசிம்மர், 2. தனிகர், 3. சச்சர், 4. கம்கதேவர், 5. சந்தப்பர், 6. சத்தியராஜர், 7. சத்தியராஜரின் மூத்த மகனான விம்ப ராஜர், 8. சத்தியராஜரின் இளைய மகனும் விம்பராஜரின் தம்பியுமான மாண்டலிகர், 9. சாமுண்டராஜர், 10. விஜயராஜர்.

4. பின்மால் பரமாரர்கள்

அபுப் பரமார வம்சத்தைச் சேர்ந்த இரண்டாம் கிருஷ்ண ராஜருக்கு (சுமார் கி.பி. 1060-66) காகல தேவர், சொச்சராஜர் என்ற இரு பிள்ளைகள் இருந்தனர் என்பதை முன்பே குறிப்பிட்டோம். இந்தச் சொச்சராஜரே அவருடைய தந்தையால் ஜோத்பூர் சமஸ்தானத்திலுள்ள கிராடகூபம் என்ற ஊரில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்னர், இந்தச் சொச்சராஜரது சந்ததியினர் அப் பகுதியில் ஒரு சிற்றரசை நிறுவினர். இவர்கள் பின்மால் பரமாரர்கள் அல்லது கிராடு பரமாரர்கள் என்றழைக்கப்பட்டனர். கிராடகூபமே கிராடு என்று மருவிற்று. சொச்சராஜரின் பேரரான சோமேசுவரரது கி.பி. 1141ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கிராடுவிலுள்ள சிவாலயம் ஒன்றின் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வம்சத்தின் வம்சாவளி இக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. அதில் அபுப் பரமார அரசர்களான சிந்துராஜர் முதல் இரண்டாம் கிருஷ்ணதேவர், காகலதேவர், சொச்சராஜர் ஆகியோர் வரையிலான பெயர்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. (இவ் வரசர்களின் பெயர் வரிசையை அபுப் பரமாரர்பற்றிய தலைப்பில் காண்க.) சொச்சராஜருக்குப் பின் உதயராஜரும், பின்னர் சோமேசுவரரும் கிராடு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்.

சொச்சராஜர் (Sochchharaja) கி.பி. 1100 ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார். இவருக்குப் பின் இவருடைய மகனான உதயராஜர் பட்டத்துக்கு வந்து, சோழர்

கள், கர்நாடகர்கள், கௌடர்கள், மாளவர்கள் ஆகியோரை வென்றூராம்! இது அர்த்தமில்லாத வெறுங் கற்பனைக் கதை. உதயராஜருக்குப் பின் அவரது மகன் சோமேசுவரர் அரசரானூர். இவர் கி.பி. 1140 ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கி, 1161க்குப் பின் வரையில் ஆட்சி செலுத்தினூர். இவர் சௌளுக்கிய அரசரான ஜெயசிம்ம சித்தராஜரது உதவியுடன் இழந்த அரசை மீண்டும் பெற்ளூர் என்று சௌளுக்கியர் கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறது. இதன் பொருள் விளங்கவில்லை. பின்னர், சித்த ராஜருக்கு அடுத்த அரசரான குமார பாலருக்கு அடங்கிய சிற்றரசராகவும் இவர் இருந்தார். நாதோலைச் சேர்ந்த சாகமான அரசர் ஆல்கணதேவர் இவர்மீது போரிட்டு, கிராடகூபத்தைக் கைப்பற்றிக் கொண்டார் (கி.பி. 1152). குமார பாலரைச் சோமேசுவரர் பகைத்துக் கொண்டதே இதற்குக் காரணம். ஆயினும், சில ஆண்டுகளுக்குப் பின்னர், குமார பாலரைத் திருப்திப்படுத்தி, இழந்த அரசைச் சோமேசுவரர் மீண்டும் பெற்ளூர்.

சோமேசுவரருக்குப் பின் இந்த வம்சத்தின் கதி என்ன வாயிற்று என்பது தெரியவில்லை. சௌளுக்கிய அரசர் இரண்டாம் பீமருக்குக் கட்டுப்பட்ட மதன பிரம்ம தேவர் என்ற சாகமானச் சிற்றரசர் ஒருவர் கி.பி. 1178-ல் கிராடகூபத்தில் ஆட்சி புரிந்தார். பின்மால் பரமார அரசு மூன்று தலைமுறைக் காலமே நீடித்து மறைந்தது. சொச்சராஜர், உதயராஜர், சோமேசுவரர் என்னும் அரசர்களைக் கொண்ட வம்சம் இது.

5. ஜாலோர்ப் பரமாரர்கள்

அதே ஜோத்பூர் சமஸ்தானத்திலுள்ள ஜாலோர் என்ற ஊரில் சிவன் கோயிலில் உள்ள கி.பி. 1118 ஆம் ஆண்டுக் கல்வெட்டு மற்ளெரு பரமாரக் கிளைவம்சத்தைப்பற்றி நமக்குத் தெரிவிக்கிறது. இவ்வூர் ஜாவாலிபுரம் அல்லது ஜாபாலிபுரம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டது. இக் கல்வெட்டைப் பொறித்தவர் இந்த வம்சத்துச் சிற்றரசரான விசாலதேவர் ஆவார். இந்த வம்சத்தினரும் அபுப் பரமார வம்சத்தின் ஒரு கிளையினராக இருக்கலாம். ஜாலோர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள வம்சாவளிப் பட்டியலில் முதலாவது அரசர் வாக்பதி ராஜர். இவர் மாளவப் பரமார அரசரான இரண்டாம் வாக்பதி ராஜராக (முஞ்சர்) இருக்க முடியாது. ஏனெனில், முஞ்சருக்கு ஆண் பிள்ளை எவருமிலர். ஆளுல், ஜாலோர் வாக்பதி ராஜருக்கோ

சந்தனர் என்ற ஒரு மகன் உண்டு. ஜாலோர் வம்சாவளிப் பட்டியல் கீழ்வருமாறு :

வாக்பதிராஜர்
|
சந்தனர்
|
தேவராஜர்
|
அபராஜிதர்
|
விஜ்ஜலர்
|
தாரா வர்ஷர்
|
விசாலர்

வாக்பதி முதல் விஜ்ஜலர் வரையிலான சிற்றரசர்களைப்பற்றி அவர்களது பெயர்கள் நீங்கலாக வேறெந்தச் செய்தியையும் ஜாலோர்க் கல்வெட்டுத் தெரிவிக்கவில்லை. விசாலரின் தந்தையான தாராவர்ஷர் பெரிய வீரர் என்று மட்டும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாயிருந்தனர். சாகம்பரிச் சாகமான சிற்றரசர் நான்காம் விக்கிரகராஜர் சௌளுக்கியர்மீது போர் தொடுத்தபோது, ஜாவாலிபுரத்தைத் தீக்கிரையாக்கினர். சௌளுக்கிய அரசர் குமார பாலர் ஜாவாலிபுரத்தில் குமார விகாரம் என்ற ஓர் ஆலயத்தை நிருமித்தார்.

விசாலருக்குப் பிந்திய அரசர் எவரது கல்வெட்டும் கிடைக்காததால், இந்த வம்சத்தின் வரலாறு புலனாகவில்லை. கி.பி. 1180 ஆம் ஆண்டு வாக்கில் கீர்த்திபாலர் என்ற சொங்கிரச் (Songira) சாகமான அரசர் ஜாவாலிபுரத்தைக் கைப்பற்றிய பொழுது, அதை ஆண்டு கொண்டிருந்தவர் குந்தபாலர் என்ற பரமார அரசர். (இந்தக் குந்தபாலரைச் சாகம்பரிச் சாகமான அரசர் நான்காம் விக்கிரக ராஜரும் ஏற்கெனவே தோற்கடித்திருந்தார்.) இந்தக் குந்தபாலரே ஜாலோர்ப் பரமார அரசின் இறுதி அரசராக விளங்கியிருக்க வேண்டும். இவர் தோல்வி கண்ட பின், ஜாலோர் அரசு கீர்த்திபாலரது சாகமான அரசின் ஒரு பகுதியாயிற்று.

5. சந்தெல்லர்கள்

பூர்விகம்

கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டு முதல் யமுனை நதிக்குத் தெற்கில் பண்டேல்கந்து பகுதியில் சந்தெல்லர்கள் ஆட்சி செலுத்தத் துவங்கினர். இப் பகுதி ஜெஜாகபுக்தி (Jejakabhukti) என்று அக் காலத்தில் அழைக்கப்பட்டது. இவர்களது பூர்விகம் தெளிவாக விளங்கவில்லை. பண்டைக் காலத்திலிருந்தே இவர்கள் அப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பது மட்டும் பழங்காலத்து நூல்கள், மரபுவழிக் கதைகள் முதலியவற்றுல் தெளிவாகின்றது. இதுபற்றி ஆராய்ந்த கன்னிங்ஹாம் போன்ற அறிஞர்களும் இந்த முடிவுக்கே வருகின்றனர்.

மரபுவழிக் கதைகள் சந்தெல்லர்களைச் 'சந்திராத்ரேயர்கள்' (Chandratreyas) என்ற பெயரால் அழைத்து, அதற்கென ஒரு கதையையும் வகுத்தன. காசி அரசரின் மகள் ஹேமாவதிக்கும் சந்திரமன் என்ற நிலவுத் தேவனுக்கும் பிறந்த சந்திரவர்மன் என்பவன் கி.பி. மூன்றும் நூற்றுண்டில் பண்டேல்கந்தில் ஒரு சிற்றரசை நிறுவி, இந்த அரச வம்சத்தைத் தோற்றுவித்தானும். இது கட்டுக் கதை என்பதில் ஐயமில்லையாயினும், சந்தெல்லர்கள் பல நூற்றுண்டு காலமாகவே அப் பகுதியில் வாழ்ந்து வந்தனர் என்பதை உணருவதற்கு இது பயன்படும். சந்தெல்ல அரசர்களின் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் வம்சாவளிப் பட்டியலில் இந்தச் சந்திரவர்மனின் பெயர் எங்கும் குறிப்பிடப்படவேயில்லை. சந்திரெல்லர் என்ற பெயரே சந்தெல்லர் என்று பின்னர் மருவியிருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

சந்தெல்லர் சாசனங்கள் தரும் வம்சாவளிப் பட்டியல்களில், பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பிரம்மா, முதல் மனிதனை புராண புருஷன், முனிவர்களான மரீசி போன்ருேர், இறுதியில் சந்திராத்ரேய முனிவர் ஆகியோரது வழியில் தாங்கள் உதித்ததாகச் சந்தெல்லர்கள் கூறிக்கொள்கின்றனர். சந்திராத்ரேய முனிவரின் பிள்ளைகளே முதலாவது சந்தெல்ல அரச குமாரர்களாக இருந்தமையால், சந்திராத்ரேயர்கள் என்பதே சந்தெல்

லர்களின் பூர்விகப் பெயர் என்றும் அவை குறிப்பிடுகின்றன. இக் கதை எப்படி இருப்பினும், சந்திரெல்லர் அல்லது சந்திராத் ரேயர் என்ற பெயர் அவர்களுக்கு ஆரம்பத்தில் உண்டு என்பது உண்மை.

சந்தெல்லர்கள் மத்தியப் பிரதேசத்தில் வாழும் பழங்குடியினரான பார்கள் (Bhars) அல்லது கோண்டுகளே (Gonds) என்று வின்சென்ட் ஸ்மித் கருதினர்.[1] இதற்கெனச் சில சான்றுகளையும் அவர் எடுத்துக்காட்டினர். ஆனல், இவை ஒவ்வொன்றையும் C. V. வைத்தியா மறுத்துள்ளார்.[2] எனவே, இவர்களது பூர்விகம்பற்றி மேலே கூறியுள்ள பொதுவான தகவல்களுக்கு மேலதிகமாகத் திட்டவட்டமாக எம் முடிவுக்கும் வருவது இயலாததாகும்.

நன்னுகர்

முப்பத்தாறு ராஜபுத்திர குலங்களுள் சந்தெல்லர்களும் ஒருவராவர் என்று மரபுவழிக் கதைகள் கூறுகின்றன. இவர்கள் ஜெஜாகபுக்தியில் கூர்ஜரப் பிரதிகாரர்களின் குறுநில மன்னர்களாக இருந்தனர். ஆரம்ப முதலே கஜுராஹோவே (Khajuraho) இவர்களது பூர்விக இடமாக இருந்ததென்று சாசனங்களிலும் இலக்கியங்களிலும் குறிப்பிடப்படுகின்றது. பிரதிகாரப் பேரரசு சீர்குலையும் தறுவாயில் தோன்றிய பல சுதந்திர அரசுகளில் சந்தெல்ல அரசும் ஒன்றும்.

சந்தெல்ல அரசை முதலில் நிறுவியவராகக் கருதத்தக்கவர் நன்னுகர் (Nannuga) என்பவராவார். இவரது காலத்தை நிர்ணயிப்பதற்குக் கன்னிங்ஹாம் வழக்கமான ஒரு முறையைக் கடைப்பிடித்தார். நன்னுகருக்கு அடுத்த ஏழாவது அரசரான தங்கர் என்பவரது காலத்திய கி.பி. 954ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட கல்வெட்டொன்று கஜுராஹோவில் கிடைத்தது. வருடம் குறிக்கப்பட்ட முதலாவது கல்வெட்டு இதுவே. தங்கருக்கு முந்திய அரசர்கள் ஒவ்வொருவரும் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள்வரை ஆண்டிருக்கலாம் என்று வைத்துக் கொண்டால், நன்னுகர் கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்தைச் சேர்ந்தவராக இருக்கலாமென்று இந்த ஆராய்ச்சியாளர் கணக்கிட்டார். இதையே மற்ற ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இன்றுவரை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

[1] Dr. V. A. Smith, *Early History of India.*
[2] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.*

சந்திரவர்மன் என்பது நன்னுகருடைய விருதுப் பெயராக இருக்கலாமென்று மரபுவழிக் கதைகளும் சாசனங்களும் புலப்படுத்துகின்றன. சந்திரவர்மன் 225 ஆம் ஆண்டில் (சம்வத் 225) அரசரானுரென்று பழம் நூலொன்று குறிப்பிடுகிறது. இந்த ஆண்டானது ஹர்ஷ அப்தத்தைக் குறிக்கிறது என்று வைத்துக் கொண்டால், சந்திரவர்மனுகிய நன்னுகர் அரியணை ஏறிய ஆண்டு 225+606 = கி.பி.831 என்று ஆகிறது என்கிருர் கன்னிங்ஹாம்.[1] (ஹர்ஷ அப்தம் கி.பி. 606 அக்டோபர் முதல் துவங்குகிறது.) இக் கணக்கின்படியும், நன்னுகர் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்தார் என்பது புலப்படுகிறது. அந் நூற்ருண்டில் அப் பகுதியிலிருந்து பிரதிகாரர்களை விரட்டிவிட்டுச் சந்தெல்லர்கள் அரசை நிறுவினர் என்று ஸ்மித் கூறுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.[2] பிரதிகாரர்கள் சந்தெல்லர்களை விடவும் பன்மடங்கு வலிமை பெற்ற மன்னர்களாக அப்பொழுது இருந்தனர். எனவே, கூர்ஜரப் பிரதிகாரர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாகவே சந்தெல்லர்கள் இருந்திருக்க வேண்டும். நன்னுகர் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்தவர் என்ருல், அவர் பிரதிகார அரசர் இரண்டாம் நாகபட்டரின் காலத்தவராகவும், இவருக்குக் கட்டுப்பட்டவராகவும் இருந்திருக்க வேண்டும். ராஷ்டிரகூடர்களிடம் நாகபட்டர் பெருந் தோல்வியுற்றதைப் பயன்படுத்தி நன்னுகர் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டு இருக்கலாம்.

தங்கரது காலத்திய கஜுராஹோக் கல்வெட்டு நன்னுகரை நிருபர் என்றும், பகைவர்களைப் பணியச் செய்தவர் என்றும் குறிப்பிடுகிறது. மற்ெருரு கஜுராஹோக் கல்வெட்டில் அவர் மகிபதி என்றும், அர்ச்சுனனைப் போன்ற வீரர் என்றும் வர்ணிக்கப்படுகிருர். பிரதிகாரர்களை அவர் தோற்கடித்திருந்தால், ஒன்றுமில்லாமலேயே இந்திரன் சந்திரன் என்று ஒன்றுக்கும் உதவாத மனிதர்களையும் புகழும் நமது பிரசஸ்திகாரர்கள் அதைக் குறிப்பிடத் தவறி இருக்கமாட்டார்கள் என்று மிகவும் பொருத்தமாகக் குறிப்பிடுகிருர் டாக்டர் H.C. ரே. நிருபர், மகிபதி என்னும் விருதுகள் நன்னுகர் ஓர் எளிய குறுநில மன்னராயிருந்தார் என்பதற்குச் சான்று பகருகின்றன.

[1] Cunningham, *Archaeological Survey Report.* Dr. H. C. Ray, *The Dynastic History of Northern India.*

[2] V. A. Smith, *Early History of India.*

மேலே குறிப்பிடப்பட்ட கி.பி. 954ஐச் சேர்ந்த தங்கரது கஜுராஹோக் கல்வெட்டுத் தரும் வம்சாவளி கீழ்வருமாறு :

நன்னுகர்
|
வாக்பதி
|
ஜெயசக்தி — விஜயசக்தி

விஜயசக்தி
|
ராஹிலர்
|
ஹர்ஷர்
|
யசோவர்மன்
|
தங்கர்

நன்னுகரது தலைநகரம் கஜுராஹோவே. இது அப்பொழுது கர்ஜ்ஜுரவாஹகம் (Kharjjuravahaka) என்று அழைக்கப்பட்டது. சத்தர்ப்பூர்ப் பகுதியில் அது இருந்தது. அதற்கு நாற்பது மைல் வடகிழக்கில் உள்ள காலஞ்சர் அல்லது காலிஞ்சர் என்பது அக் காலத்தில் வலிமை மிக்க ஒரு கோட்டையாக இருந்தது. அது காலஞ்சர மண்டலம் என்ற பெயரில் பிரதிகார அரசர் இரண்டாம் நாகபட்டரால் ஆளப்பட்டுவந்தது.

வாக்பதி முதலியோர்

நன்னுகரின் மகனான வாக்பதியும் வீரத்தில் சிறந்தவர் என்று மேலே கூறப்பட்ட கஜுராஹோக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர் விந்தியமலை வரையில் தெற்கில் போர்கள் நிகழ்த்தி வென்றிருக்கலாமென்று உணர முடிகிறது. அப்பொழுது பிரதிகார போஜர், பால அரசர் தேவபாலர், கலச்சூரி அரசர் முதலாம் கோகல்லர் ஆகியோர் விந்திய மலைப் பகுதியில் பல போர்களை நிகழ்த்தினர். ராஷ்டிரகூடர்களும் அப் பகுதியைப் போர்க்களமாக்கி வந்தனர். இந் நிலையில் சந்தெல்ல அரசர்கள் அப் போர்களிலிருந்து விலகிநிற்க முடியாமல் இருந்திருக்கலாம் ; அல்லது இக் குழப்பத்தைப் பயன்படுத்தித் தங்களுடைய அரசை மேலும் சிறிது விரிவுபடுத்தியிருக்கலாம்.

ஜெயசக்தி

வாக்பதிக்குப் பின் அவருடைய மூத்த மகனான ஜெயசக்தி என்பவர் அரசரானார். இவருக்கு ஜெஜ்ஜாகர், ஜெஜ்ஜர் என்ற

வேறு பெயர்களுமிருந்தன. எனவேதான், இவரது பிரதேசம் ஜெஜாபுக்தி அல்லது ஜெஜாகபுக்தி என்று இவரது பெயராலேயே அழைக்கப் படலாயிற்று என்று மகோபாவிலுள்ள (Mahoba) கல் வெட்டொன்று தெரிவிக்கிறது. 'புக்தி' என்ருல், மாநிலம் அல்லது பிரதேசம் என்று பொருள். இவரது அரசு புக்தி என்ற எளிய பெயரால் அழைக்கப்பட்டதால், இவர் பரமாரப் பேரரசர் போஜரின்கீழ் ஒரு சிற்றரசராக இருந்திருக்கலாம். இவருக்கு நட்டா என்ற மகள் இருந்தாளென்றும், அப் பெண் முதலாம் கோகல்லருக்கு மணமுடித்துக் கொடுக்கப் பட்டாளென்றும் சில சான்றுகள்மூலம் ஊகிக்கப்படுகின்றன. அடுத்து அரசரானவர் ஜெயசக்தியின் தம்பியான விஜயசக்தியாவார். இவருக்கு விஜ்ஜகர் என்ற பெயருமிருந்தது. இவரும் போரில் சிறந்து விளங்கிஞரென்று கஜுராஹோக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

ராகிலர்

விஜயசக்தியின் மகனுன ராகிலரே அடுத்தபடியாக அரச ராஞர். இவரும் பெரிய வீரராக வர்ணிக்கப்படுகிருர். ஆனுல், இவர் புரிந்த போர்கள்பற்றி ஏதொன்றும் உருப்படியாகக் குறிப் பிடப்படவில்லை. இவ்வரசர்களில் எவரோ ஒருவரது காலத்தில் கஜுராஹோப் பகுதியோடுகூட அதற்குச் சுமார் ஐம்பது மைல் வடக்கிலிருந்த மகோத்சவ நகரம், அதைச் சுற்றியிருந்த பகுதி கள் (இன்றைய உத்தரப் பிரதேசத்திலுள்ள ஹமீர்ப்பூர் மாவட் டம்) ஆகியவையும் வெல்லப்பட்டன. இந்த மகோத்சவ நகரமே இன்று மகோபா என்றழைக்கப்படுகிறது. இவ்வூருக் கருகில் இரண்டு கல் தொலைவில் ராகில்ய சாகரம் என்ற ஏரியும் அதன் கரையில் இடிந்த ஓர் ஆலயமும் உள்ளன. இவற்றை ராகில்லவர்மன் என்ற அரசர் நிர்மாணித்தாரென்று சொல்லப் படுகிறது. இவர் ராகிலராகவே இருக்கக்கூடும். இவ் வரசர்கள் அனைவரும் குறுநில மன்னர்களே யாவர். அரசர்க்குரிய பட்டமெதையும் இவர்கள் பூண்டிருக்கவில்லை.

ஹர்ஷர்

அடுத்தபடியாகக் கி.பி. 900 ஆண்டு வாக்கில் அரசரான ஹர்ஷர் இவ் வம்சத்தின் முதலாவது முக்கிய அரசராவார். இவர் ராகிலரின் மகன். இவர் க்ஷிதிபாலதேவரை அரியணை மீது அமர்த்தியதாகக் கஜுராஹோக் கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இந்த க்ஷிதிபாலர் பிரதிகார அரசர் முதலாம் மகிபாலரே என்று பலரும் கருதுகின்றனர். ராஷ்டிரகூட அரசர் மூன்ரும் இந்திரரால் கனேஜிலிருந்து விரட்டப்பட்ட இந்த

மகிபாலரை மீண்டும் கனோஜில் அரசராக்குவதற்கு ஹர்ஷர் உதவி நல்கியிருக்கலாம். கூர்ஜரப் பிரதிகாரருக்குக் கட்டுப் பட்ட சிற்றரசராகவே ஹர்ஷர் இந்த உதவி புரிந்தாரெனினும், இதனுல் அவரது செல்வாக்குப் பெருகிற்று. அப் பகுதியில் எங்கோ ஆண்டு கொண்டிருந்த சாகமான குடும்பத்தைச் சேர்ந்த கஞ்சுகா என்ற அரசகுமாரியை இம் மன்னர் மணந்து கொண்டு, அதன்மூலம் தமது செல்வாக்கை மேலும் பெருக்கிக் கொண்டார். இவரது ஆட்சி கி.பி. 925ஆம் ஆண்டு வாக்கில் முடிவுக்கு வந்தது என்று நாம் கொள்ளலாம்.

யசோவர்மன்

அடுத்த அரசரான ஹர்ஷரின் மகன் யசோவர்மன் தம் தந்தையைக் காட்டிலும் கீர்த்தி மிக்கவர். இவருக்கு லக்ஷ்ம வர்மன் என்ற பெயரும் இருந்தது. இவரது காலத்தில் பிரதிகார அரசு சீர்குலேந்து வந்தது. இந் நிலேயைப் பயன்படுத்தி, கி.பி. 950ஆம் ஆண்டு வாக்கில் யசோவர்மன் பிரதிகாரர்களிட மிருந்து காலஞ்சராவைக் கைப்பற்றிக் கொண்டார். இவ் வெற்றி யினுல் அவரது அரசு மேலும் வடக்கில் பரவியது. யமுனே நதி யிலும் கங்கை நதியிலும் அவர் நீராடினுர் என்று கஜுராஹோக் கல்வெட்டுக் கூறுவதற்குக் காரணம், வடக்கில் அந் நதிகளின் கரைவரையில் சந்தெல்ல அரசு விரிவடைந்து விட்டது என் பதேயாகும். இவ்வாறு மத்திய இந்தியாவில் மிகவும் முக்கிய மான ஓர் அரசாகச் சந்தெல்ல அரசு யசோவர்மனின் காலத்தில் வளர்ச்சியுற்று விட்டது. பின்னர்த் தெற்கிலும் இம் மன்னர் படையெடுப்புகளே நிகழ்த்திஞர். இவரது காலத்தில் திரிபுரியில் கலச்சூரி அரசர் முதலாம் யுவராஜரும், தாராவில் பரமார அரசர் இரண்டாம் சீயகரும் அரியணேயில் இருந்தனர். சீயகர் ராஷ்டிர கூட அரசர் மூன்ரும் கிருஷ்ணருக்குக் கட்டுப்பட்டு ஆண்டு வந்தார். கிருஷ்ணர் தெற்கில் சோழர்களே எதிர்த்து நின்று நீண்ட கடும் போர்களில் ஈடுபட்டிருந்த வேளேயில், சீயகரையும் யுவராஜரையும் யசோவர்மன் போர்களில் வென்று தெற்கில் இருந்த சில பிரதேசங்களேயும் கைப்பற்றிக் கொண்டார். தென் கோசலத்தையாண்ட சோமவம்சி அரசர்கள்மீதும் யாசோ வர்மன் போரிட்டு வென்றதாகத் தெரிகிறது.

கஜுராஹோக் கல்வெட்டானது யசோவர்மனின் திக்விஜ யத்தைப்பற்றிக் கூறுகிறது. கௌடம் (வங்காளம்), கோசலம், குருநாடு, மிதிலே, மாளவம் போன்ற பல நாட்டு அரசர்கள்மீது அவர் போரில் வெற்றி கொண்டார் என்று அது வர்ணிக்கிறது.

இவ் வர்ணனையில் பெரும் பகுதி கற்பனையே. எனினும், மேலே குறிப்பிட்டது போல், யசோவர்மன் கலச்சூரி அரசர், பரமார அரசர் போன்றோர்மீது வெற்றிகள் பெற்றுச் சந்தெல்ல அரசை நிலைநிறுத்தினர் என்ற பெருமையைச் சான்றுகள் உணர்த்து கின்றன. பரமார அரசர் தேவபாலரிடமிருந்து விஷ்ணுவின் விக்கிரகம் ஒன்றை யசோவர்மன் பெற்றார். [இந்த விக்கிரக மானது திபேத்தியச் சிற்றரசன் ஒருவனிடமிருந்து கீராவை (காங்ரா பள்ளத்தாக்கு) ஆட்சிபுரிந்த சாஹி என்ற அரசனால் பெறப்பட்டு, பின்னர் ஹேரம்பபாலர் என்ற முதலாம் மகிபால ரால் அடையப்பட்டது.] இந்த விஷ்ணு விக்கிரகத்தைக் கஜுராஹோ நகரில் பிரதிஷ்டை செய்வதற்கென ஒரு பெரிய ஆலயத்தை யசோவர்மன் கட்டினாராம். இன்றைய சதுர்புஜ ஆலயம் என்பதே அவ் வாலயமாக இருக்கலாமென்று கன்னிங் ஹாம் கருதினர். பெரிய ஏரி ஒன்றையும் இம் மன்னர் அகழ்ந் தார்.

தங்கர்

இவரது போர்கள்

யசோவர்மனது மகனான தங்கர் கி.பி. 950ஆம் ஆண்டு வாக்கில் சந்தெல்ல அரசரானர். இவரது இரண்டு கஜுரா ஹோக் கல்வெட்டுகளே சந்தெல்லர் வரலாற்றைத் தெரிவிக்கும் முதலாவது கல்வெட்டுகளாகும். இவரும் ஆரம்பத்தில் பிரதி கார அரசர் விநாயகபாலரது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண் டிருந்தார். ஆனால், இவருக்குப் பிந்திய சந்தெல்லர்களது சாசனங்களில் பிரதிகார அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட வில்லை. எனவே, இவரது ஆட்சியின் பிற்பகுதியில் சந்தெல்லர் கள் பிரதிகாரரிடமிருந்து முற்றிலுமாகச் சுதந்திரம் பெற்று விட்ட னர் என்பது நன்கு தெளிவாகிறது. இவரது அரசு காலஞ்சரா, பில்சா, யமுனை, குவாலியர் ஆகியவற்றை வடக்கிலும் மேற் கிலும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. கச்சபகாட அரசரான வஜ்ரதாமன் என்பவர் கி.பி. 975 ஆம் ஆண்டு வாக்கில் குவாலி யரை (அக்காலத்திய பெயர் கோபகிரி), பிரதிகார அரசரையும் தங்கரையும் தோற்கடித்துக் கைப்பற்றிக் கொண்டார். இதன் பின்னர்ப் பிரதிகாரர்களின் பரிதாப நிலையைப் பயன்படுத்தி, யமுனைக்கு வடக்கிலிருந்த பிரதிகாரப் பகுதிகள் சிலவற்றைத் தங்கர் கவர்ந்து கொண்டார். கி.பி. 998-ல் தங்கர் வாரணசி யில் தங்கியிருந்தார் என்பது அவ்வாண்டைச் சேர்ந்த அவரது செப்பேடு அவ்வூரில் கிடைத்ததன் மூலம் தெரிய வருகிறது. வாராணசி வழியாகப் பால அரசின்மீதும் தங்கர் படையெடுத் தார். பால அரசர் இரண்டாம் விக்கிரபாலரோ அல்லது முத

லாம் மகிபாலரோ இப் படையெடுப்பின் போது ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். தெற்குக் கோசலத்தைச் சேர்ந்த சோமவம்சி அரசர் ஒருவரும் தங்கரால் தோற்கடிக்கப்பட்டார். கிழக்குச் சாளுக்கியர்கள், மேற்குச் சாளுக்கியர்கள், காஞ்சி, சிங்களம் ஆகியவற்றின் அரசர்கள் ஆகியோரும் தங்கரால் தோற்கடிக்கப் பட்டதாகக் கூறப்படுவது வெறும் புனைந்துரையே.

காலஞ்சரா நகரம்

யசோர்வர்மன், தங்கர் ஆகியோரது காலத்தில் காலஞ்சரா நகரம் கஜுராஹோவுக்கு அடுத்த முக்கியமான நகரமாக வளர்ச்சியுற்றது. கல்யாண கடகம் என்று அக்காலத்தில் அந் நகரத்துக்கு மற்றொரு பெயர் இருந்திருக்கக் கூடுமென்று கருதப் படுகிறது.[1] எனவேதான், 'புராதன பிரபந்த சங்கரகம்' என்ற சமண நூல் கல்யாணகடக அரசர் என்று யசோவர்மனைக் குறிப் பிடுகிறது. (இந் நூல் கூறும் ஒரு கதையையும் இங்குக் கவனிப் பது நலம். தமிழில் வழங்கும் மனுநீதி சோழன் கதையோடு இது ஒத்துள்ளது. யசோவர்மன் கல்யாணகடக நகரில் தமது அரண்மனை வாயிலில் 'நியாய கண்டா' என்ற ஓர் ஆராய்ச்சி மணியைக் கட்டி வைத்து, நீதி வேண்டுவோர் அதை அடிக்க லாம் என்று செய்தாராம். இதைச் சோதிக்க விரும்பிய தெய்வமே ஒரு நாள் பசுவின் உருவில் வந்து அம் மணியை அடித்து, இறந்த தன் கன்றுக்காக நீதி கேட்டதாம். இவ் வரசர் தம் மகனையே பலியிட்டு நீதி வழங்கினாராம்.) தங்கர் 'காலஞ்சராதிபதி' என்று அவரது கல்வெட்டில் குறிக்கப் பெறு கிறார். கஜுராஹோவுக்கு அடுத்த இரண்டாவது தலைநகராகக் காலஞ்சரா நகரம் வளர்ச்சியுற்று விட்டது என்பதை இவை நன்கு புலப்படுத்துகின்றன. சபக்திஜின் படையெடுத்து வந்த போது, அவரை எதிர்ப்பதற்கென்று சாஹி அரசர் ஜெயபாலர் வடஇந்திய அரசர்கள் அடங்கிய ஒரு கூட்டணியைத் திரட்டினா ரென்று பிற்காலத்தில் ஃபரிஷ்தா (Ferishta) எழுதினார். (இது எத்துணைத் தூரம் உண்மை என்பதுபற்றி ஆசிரியர்களிடையில் கருத்து வேற்றுமை நிலவி வருகிறது.) அந்த இந்து அரசர் களின் கூட்டணியில் 'காலிஞ்சர் ராஜா'வும் இருந்தாராம். சபக்திஜின் கி.பி. 989-ல் இக் கூட்டணிப் படையைத் தோற் கடித்து, மேலும் இந்தியாவுக்குள் முன்னேறினார்.

மதிப்புரை

மகோபாவிலுள்ள சிதைந்த கல்வெட்டொன்று படை வலிமை மிக்க ஹம்வீரருடன் (Hamvira) தங்கர் சமமாகப்

[1] Dr. G. C. Choudhary, *Political History of Northern India.*

பொருதார் என்று உரைக்கிறது. அமீர் என்ற அராபிய சொல்லே ஹம்மீர், ஹம்மீரர், ஹம்வீரர் என்றெல்லாம் இந்திய நூல்களிலும் கல்வெட்டுகளிலும் திரிந்தது. பால்பன் வரையிலான முஸ்லிம் அரசர்கள் ஹம்மீரர், ஸ்ரீஹமீரர் என்பன போன்ற சொற்களாலேயே அழைக்கப்பட்டனர். தங்கரது கஜுராஹோக் கல்வெட்டுகள் கி.பி. 954ஐயும் 1002ஐயும் சேர்ந்தவை. நீண்ட காலம் இவர் ஆட்சியிலிருந்தார் என்பதை ஐயத்துக்கிடமின்றி அவை தெளிவாக்குகின்றன. இக் காலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த யமீனி சுல்தான்களான சபக்திஜின், மகமூது ஆகியோரை எதிர்த்தோ அல்லது அவர்களில் ஒருவரை எதிர்த்தோ தங்கர் போரிட்டார் என்பதை மகோபாக் கல்வெட்டு உணர்த்துகிறது.

'மகாராஜாதிராஜர்' என்ற பட்டத்தைச் சூடியிருந்த முதலாவது சந்தெல்ல அரசர் தங்கரேயாவார்; பிரதிகாரரிடமிருந்து முற்றிலுமாக விடுபட்டு ஆட்சி செலுத்திய முதலாவது சுதந்திர அரசரும் இவரே. இவரது கி.பி. 954 ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாவது கஜுராஹோக் கல்வெட்டானது ஜினநாதர் ஆலயத்தில் உள்ளது. இதே ஆண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு இடிந்துபோன லக்ஷ்மணர் ஆலயத்தில் கிடைத்தது. கி.பி. 1002ஆம் ஆண்டைச் சேர்ந்த இரண்டாவது கஜுராஹோக் கல்வெட்டு வைத்தியநாதர் ஆலயத்திலுள்ளது. கஜுராஹோவிலுள்ள பல ஆலயங்களுள் சிலவற்றைத் தங்கர் நிருமித்திருக்கக் கூடுமென்பதில் ஐயமில்லை. பிரபாசர் என்ற அறிஞர் ஒருவர் இவரது தலைமையமைச்சரா யிருந்தாரென்று ஒரு கல்வெட்டின் மூலம் நாம் அறிகிறோம். நீண்டகால ஆட்சிக்குப் பின்னர், கங்கையும் யமுனையும் கூடும் பிரயாகையில் இம் மன்னர் தமது இறுதிக் காலத்தைக் கழித்து உயிர் துறந்தார். அப்போது இவருக்கு வயது கிட்டத்தட்ட நூறு ஆகும்.

வித்யாதரர்

தங்கரது ஆட்சியில் வெளியிடப்பட்ட கடைசிக் கஜுராஹோக் கல்வெட்டுக் கி.பி. 1002ஐக் குறிப்பதால், அதற்குப் பின் அவர் இறந்தார் என்பது தெளிவாகிறது. அவருக்குப் பின் அரசரானவர் அவரது மகனான கண்டர் (Ganda). இவரது காலத்திய கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை. இவருக்கு அடுத்து அரசரானவர் இவரது மகனான வித்யாதரர். இவரது காலத்திய முதலாவது கல்வெட்டுக் கி.பி. 1019ஆம் ஆண்டைச் சேர்ந்தது. எனவே, அவ் வாண்டுக்குச் சிறிது முன்பு அவர் அரசரானார்.

இவ் வரசரது காலத்தில் கச்சபகாடர்கள் சந்தெல்லர்களது சிற்றரசர்களாயிருந்தனர். அவ்வாறு வித்தியாதரருக்குக் கட்டுப்பட்ட அர்ச்சுனன் என்ற கச்சபகாட அரசனே பிரதிகார அரசரான ராஜ்யபாலரைக் கொன்றுன்.

இவரது காலத்தில் கசினி மகமூது இருமுறை காலஞ்சராவின் மீது படையெடுத்து வந்தார். கி.பி. 1019-ல் முதல் படையெடுப்பும் 1022-ல் இரண்டாம் படையெடுப்பும் நிகழ்ந்தன. பீடா (Bida) என்ற கஜுராஹோ அரசன் கனேஜின் அரசரான ராஜ்யபாலரை எதிர்த்து நீடித்த காலம் போரிட்டு அவரைக் கொன்றுன் என்று முஸ்லிம் எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர். மகமூதை எதிர்த்து நின்று போரிட அஞ்சி ஓடிப்போய், தமது பிரதேசத்தை மகமூது கவர்ந்து கொள்ளும்படி ராஜ்யபாலர் விட்டதே பீடாவின் போருக்குக் காரணம் என்றும் அவர்கள் எழுதுகின்றனர்.[1] இந்தக் கஜுராஹோ அரசன் பீடா வித்யாதரரே என்பதில் ஐயமில்லை. இதனுல் வெகுண்ட கசினி மகமூது வித்யாதரரைத் தண்டிக்கும் நோக்கத்துடன் காலஞ்சராவை முற்றுகையிட்டார். ஆனுல், இரு முறையும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. இறுதியில், வித்யாதரரிடமிருந்து பெருந்தொகையைப் பெற்றுக்கொண்டு மகமூது திரும்பிச் சென்றுர். இதன் பின்னர்ப் பல ஆண்டுகள் வரையில் மகமூதுவுக்கும் சந்தெல்லர்களுக்குமிடையில் நட்பு நிலவிற்று.

வித்யாதரர் பரமார அரசர் போஜரை எதிர்த்தும், கலச்சூரி சந்திரர் என்ற அரசரை எதிர்த்தும் போரிட்டு வென்றுர் என்று ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்தக் கலச்சூரி அரசர் திரிபுரியைச் சேர்ந்த இரண்டாம் கோகல்லரே என்று கருதப்படுகிருர். தங்கரின் தலைமையமைச்சர் பிரபாசரது மகன் சிவநாகர் என்பவர் வித்யாதரருக்கு அமைச்சரா யிருந்தார். வித்யாதரரது ஆட்சி கி.பி. 1022க்குப் பின் முடிவுற்றது.

கீர்த்திவர்மன்

வித்யாதரருக்குப் பின் அவருடைய மகன் விஜயபாலர் அரசரானுர். இவர் கலச்சூரி அரசர் காங்கேய தேவரைத் தோற்கடித்தார். இதற்குமேல் இவரைப்பற்றி முக்கியமான செய்தி எதுவும் தெரியவில்லை.

விஜயபாலரது மகனுன தேவேந்திரவர்மன் அல்லது தேவவர்மன் கி.பி. 1051-ல் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார் என்பது

[1] Elliot and Dowson, *The History of India as told by its own Historians*, Vol. V.

ஒரு சாசனத்தின் வாயிலாகத் தெரிகிறது. ஆனால், இந்தச் செப்பேடும் இவரது ஆட்சியில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி எதையும் குறிப்பிடவில்லை. இவருக்குப் பின்னர் இவரது தம்பி யான கீர்த்திவர்மன் கி.பி. 1070 ஆம் ஆண்டு வாக்கில் அரச ரானார். கிருஷ்ணமிஸ்ரா எழுதிய 'பிரபோத சந்திரோதயம்' என்ற நூலில் இவரது ஆட்சியைப்பற்றிச் சில குறிப்புகள் காணப் படுகின்றன. இவர் பதவிக்கு வந்த உடனேயே கலச்சூரி அரசர் கர்ணர் இவரைத் தோற்கடித்து, இவரது தலைநகரைக் கைப் பற்றிக்கொண்டு, இவரையும் அரியணையிலிருந்து இறக்கி விரட்டி விட்டார். பின்னர்த் தமது குறுநில மன்னர்களுள் ஒருவரான கோபாலர் என்பாரது உதவியோடு கர்ணரைத் தோற்கடித்துத் தம் அரியணையை இம் மன்னர் மீண்டும் பெற்றார். வேறு பல நூற் சான்றுகளும்கூட இச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன. பிந்திய சந்தெல்ல அரசரான வீரவர்மனின் மகோபாக் கல்வெட் டும், கர்ணரைக் கீர்த்திவர்மன் தோற்கடித்துத் தமது அரி யணையை மீட்டார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இங்குக் குறிப்பிடப்படும் கர்ணர் தாகல மண்டலத்தை ஆண்ட லக்ஷ்மி கர்ணரே. இவர் சுமார் கி.பி. 1040 முதல் 1070 வரையில் திரி புரியில் ஆண்டுகொண்டிருந்தார். கலச்சூரிக் கர்ணருடன் நடந்த போரில் அவருடைய பிரதேசங்கள் சிலவற்றையும் கீர்த்தி வர்மன் கைப்பற்றிக் கொண்டார். அங்குக் கீர்த்திகிரி என்ற கோட்டை கட்டப்பட்டது. இது ஜான்சி மாவட்டத்தில் இருந்தது.

கசினி சுல்தானின் ஆளுநராகப் பஞ்சாபை ஆண்டு கொண் டிருந்த மகமூது என்பவர் சந்தெல்ல அரசின்மீது கீர்த்திவர்மன் காலத்தில் படையெடுத்தார். கலஞ்சராவைக் கைப்பற்று வதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சி கீர்த்திவர்மனால் முறி யடிக்கப்பட்டது. இது கி.பி. 1090க்கு முன்பு எப்போதோ நடைபெற்றது. கலச்சூரிக் கர்ணர் சந்தெல்ல அரசைக் கைப் பற்றி யிருந்த பொழுது, அவரது தந்தையான காங்கேய தேவ ரின் நாணயங்கள் அங்குப் புகுத்தப்பட்டன. பின்னர், கீர்த்தி வர்மனும் அதேபோன்ற தங்க நாணயங்களைத் தாமும் அச்சிட்டு வெளியிடலானார். அந்த நாணயங்களில் சில தொல்பொருள் ஆராய்ச்சியாளரால் கண்டெடுக்கப்பட்டன. இம் மன்னருக்கு வத்சராஜர் என்ற ஓர் அமைச்சர் இருந்தாரென்றும், கலச்சூரி களிடமிருந்து ஜான்சி மாவட்டத்தைக் கைப்பற்றியவர் இவரே என்றும் அங்குள்ள கீர்த்திவர்மனின் தேவ்கார்ப் (Deogarh) பாறைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இம் மன்னர் ஏறத்தாழக் கி.பி. 1070 முதல் 1090 வரையில் ஆட்சிபுரிந்தார்.

சல்லக்ஷணவர்மன்

கீர்த்திவர்மனின் மகஞன சல்லக்ஷணவர்மன் என்பவரே அடுத்த சந்தெல்ல அரசராவார். ஹல்லக்ஷணவர்மன் என்றும் நாணயங்களின்மீது இவருடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவரது கல்வெட்டு எதுவும் கிடைக்காததால், இவருக்குப் பிந்திய அரசர்களின் கல்வெட்டுகளைக் கொண்டே இவரைப் பற்றி ஓரளவு நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது. பரமார அரசர் நரவர்மனைத் தோற்கடித்து மாளவத்தைச் சூறையிட்டு இம் மன்னர் திரும்பினுர். சேடிகளையும் இவர் தோற்கடித்தார் என்று கூறப்படுகிறது. அவ்வாறு தோற்கடிக்கப்பட்ட சேடி அரசர், லக்ஷ்மிகர்ணரின் மகஞன யசகர்ணராக இருக்கலாம். யமுனைக்கும் கங்கைக்கும் இடைப்பட்ட தோவாப் (Doab) பகுதி யானது அப்பொழுது அந்தர்வேதி என்று அழைக்கப்பட்டது. அதை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த காகதவாலர்மீதும் படை யெடுத்து இம் மன்னர் வெற்றியுடன் திரும்பினுர். இவரது தந்தையின் அமைச்சரான அனந்தர் என்ற பிராமணர் இவரது ஆட்சியிலும் தொடர்ந்து அமைச்சராயிருந்தார். அனந்தரின் மகன்கள் நால்வரும் சல்லக்ஷணவர்மனுக்குப் போரிலும் நிர்வா கத்திலும் உதவிபுரிந்தனர். இவரது ஆட்சி கி.பி. 1090 ஆண்டு வாக்கில் தொடங்கி, 1115ஆம் ஆண்டு வாக்கில் முடிவுற்றிருக்க லாம்.

மதனவர்மன்

சல்லக்ஷணவர்மனுக்குப் பின் அவர் மகன் ஜெயவர்மன் அரசராஞர். இவருக்குப் பின் இவரது சிற்றப்பரான பிருதிவி வர்மன் அரசராஞர். ஜெயவர்மன் ஒரு சில ஆண்டுகளே ஆட்சி புரிந்து, ஏதோ காரணத்திஞல் ஆட்சிப் பொறுப்பை நிர்வகிக்க விரும்பாமல், தம் சிற்றப்பரிடம் அரசபதவியை ஒப்படைத்தார் என்று ஒரு கல்வெட்டின்மூலம் உணரப்படுகிறது. முன்பு குறிப் பிடப்பட்ட அனந்தர் என்ற அமைச்சரின் மகன் கதாதரர் என் பவர் பிருதிவிவர்மனின் காலத்தில் முதலமைச்சராயிருந்தார். இவரது ஆட்சியும் சிறிது காலமே நீடித்தது. இவரது மகஞன மதனவர்மர் சந்தெல்லர்களில் முக்கியமான அரசர்களுள் ஒருவ ராவார்.

மதனவர்மன் கி.பி. 1125ஆம் ஆண்டு வாக்கில் பதவிக்கு வந்து, சுமார் நாற்பதாண்டு காலம் வரை ஆட்சிபுரிந்தார். இவரது கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் ஆகியவை நிறையக் கிடைத்துள்ளன. அவற்றுள் முதன்மையானது கி.பி. 1129-லும், இறுதியானது 1163ஆம் ஆண்டிலும் வெளியிடப்

பட்டவை. அவை கிடைத்துள்ள இடத்தை வைத்து, மதன வர்மரது அரசு எந்த அளவுக்கு விரிந்திருந்த தென்பதை நம்மால் அறிய முடிகிறது. சந்தெல்ல அரசு இவரது திறமையால் மீண்டும் புத்துயிர் பெற்றது. ஜெஜாகபுக்தி மட்டுமின்றி, ஜான்சி மாவட்டம், பண்டா (Banda) மாவட்டம் போன்ற பகுதிகளையும் இவர் ஆண்டார். பரமார அரசர் யசோவர்மனைத் தோற்கடித்து, இவ்விரு மாவட்டங்களையும் இவர் கைப்பற்றிக் கொண்டார். இவை இப்பொழுது உத்தரப் பிரதேசத்தில் உள்ளன. பில்சா, மாவ் (Mau) எனும் நகரங்கள் பரமாரர்களிடமிருந்தே இவரால் கைப்பற்றப்பட்டன. சேடி அரசரான கலச்சூரிக் கயாகர்ணரும் மதனவர்மனுல் தோற்கடிக்கப்பட்டார். காகதவால அரசர் கோவிந்த சந்திரருக்கெதிராக இவர் போர் நிகழ்த்தவும் நேர்ந்தது. இப் போரில் கோவிந்த சந்திரர் வெற்றி பெற்று, பில்சாப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டாரென்று தெரிகிறது. ஆனுல், பின்னர் இரு அரசர்களும் நட்புப் பூண்டு வாழலாயினர். குஜ ராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் ஜெயசிம்ம சித்தராஜர் பரமார அரசைக் கைப்பற்றிய பின், தாராவிலிருந்து காலஞ் சராவை நோக்கிச் சென்ருர். இப் படையெடுப்பானது மதன வர்மரால் முறியடிக்கப்பட்டது.

பரமார்த்தி

மதனவர்மருக்கு யசோவர்மன் என்ற மகன் இருந்தார். ஆனுல், அவர் தந்தைக்கு முன்னமேயே காலமாகி விட்டதால், அவரது மகனை பரமார்த்தி என்பவரே அடுத்த அரசரானுர். பரமால், பரிமளதேவர் என்ற வேறு பெயர்களும் இவருக்கு இருந்தன. இவர் கி.பி. 1155க்கு முன் அரசரானுர் என்பதை இவரது செப்பேடு ஒன்றின்மூலம் தெரிந்து கொள்ளலாம். தம் பாட்டனுர் மதனவர்மனைப் போலவே இவரும் முக்கியமான சந்தெல்ல அரசராவார். இவரும் முப்பத்தைந்து ஆண்டு களுக்கு மேல் ஆட்சி புரிந்து, ஏராளமான சாசனங்களை வெளி யிட்டுள்ளார். ஆனுல், இத்தனை சாசனங்களிருந்தும், இவரது ஆட்சியின் முக்கியமான நிகழ்ச்சி எதையும் இவை தெரிவிக்க வில்லை. ஜெயசிம்ம சித்தராஜரால் தாக்கப்பட்ட மதனதேவர் பகைவரை விரட்டியடித்தாலும்கூட, பில்சாவை அவருக்குக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டிருக்கக் கூடுமென்று கருதுவதற்கு இடமிருக்கிறது. இந்தப் பில்சா கி.பி. 1173 வரை யில் சௌளுக்கியர் வசமே இருந்தது. இதற்குப் பின் சந்தெல்ல அரசர் பரமார்த்தி அதை மீட்டுக் கொண்டார். சாகமான அரசர் மூன்ரும் பிருதிவிராஜருக்கும் பரமார்த்திக்கும் இடையே நிலவிய பகைமையைப்பற்றிப் 'பிருதிவிராஜ ராசோ' போன்ற நூல்கள்

நமக்குத் தெரிவிக்கின்றன. பரமார்த்திக்கு ஆதரவாகக் காகத வால ஜெயச் சந்திரரும் வேறு சிலரும் இருந்தனர் என்ற கூற்று எத்துணையளவுக்கு உண்மை என்பது புலப்படவில்லை. ஆயினும், பரமார்த்திக்கும் பிருதிவிராஜருக்குமிடையே போர் நிகழ்ந்தது என்பதென்னவோ உண்மை. இப் போரில் பிருதிவிராஜர் வெற்றி பெற்று, மகோபாவையும் காலஞ்சராவையும் கொள்ளையிட்டு, டெல்லிக்குத் திரும்பினார். மகோபாவில் பிருதிவிராஜரின் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். காலஞ்சராவையும் வேறு பகுதிகளையும் பரமார்த்தி போரிட்டு மீட்டுக் கொண்டார். இப் போர்கள் கி.பி. 1201க்குள் நடைபெற்றிருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் படையெழுச்சி

பிருதிவிராஜரால் தாக்கப்பட்டுச் சில பகுதிகளை இழந்த பரமார்த்தி கி.பி. 1202-ல் குத்புதீன் அய்பக்கின் படையெடுப்பைச் சமாளிக்க வேண்டியவரானார். அல்தாமிஷும் குத்புதீனின் படையிலிருந்தார். முஸ்லிம்களிடம் தோற்றுக் காலஞ்சராக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டார் பரமார்த்தி. பகைவர் காலஞ்சராக் கோட்டையை முற்றுகையிட்டனர். நீரும் உணவும் இல்லாத நிலையில் அக் கோட்டையைக் கைவிடுவதெனப் பரமார்த்தி முடிவு செய்தார். இதற்கென முஸ்லிம் படைத்தளபதியுடன் அவர் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். ஆனால், அவரது அமைச்சரான அஜயதேவர் சரணடைய ஒப்புக் கொள்ளாமல், கோட்டைக்குள்ளிருந்தவாறே தொடர்ந்து போரிட்டார். இதனிடையில், இயற்கையான காரணங்களினால் பரமார்த்தி இறந்து போனார் என்று ஹசன் நிசாமி என்ற முஸ்லிம் ஆசிரியர் தாஜுல்-மஆசிர் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.[1] இந் நிகழ்ச்சி நடந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே எழுதப்பட்ட இந் நூல் நம்பத் தகுந்தது. மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இதைப்பற்றி எழுதிய ஃபெரிஷ்தாவோ (Ferishta) கோழையான தம் அரசர் பரமார்த்தியை அஜயதேவர் கொன்று விட்டுத் தொடர்ந்து போரை நடத்தினார் என்று குறிப்பிடுகிறார். மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த ஃபெரிஷ்தாவைவிட, சம்பவம் நிகழ்ந்த காலத்தைச் சேர்ந்தவரான ஹசன்நிசாமி கூறும் கூற்றையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அஜயதேவராலும் தொடர்ந்து போரிட முடியவில்லை. உணவின்மை, குடிநீர்ப் பஞ்சம், நோய் சூழ்ந்தமை ஆகியவை

[1] Elliot and Dowson, *The History of India as told by its own Historians,* Vol II.

காரணமாகக் காலிஞ்சர்க் கோட்டையை அஜயதேவர் பகைவர் வயம் விட்டு விட்டார். கோட்டையிலிருந்த வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அக் கோட்டையைக் கொள்ளையிட்ட பின், மகோபாவையும் குத்புதீன் கைப்பற்றினார். காலஞ்சராவில் (காலிஞ்சர்) முஸ்லிம் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இதன் பின்னர், குத்புதீனின் படைகள் திரும்பிச் சென்றன.

கி.பி. 1202-ல் பரமார்த்தி இறந்திருக்கக் கூடுமென்பது தாஜுல்-மஆசிர் என்னும் நூலில் உள்ளசெய்திகள்மூலம் உணரப் படுகிறது. மூன்றும் பிருதிவிராஜரிடம் தோற்றபின், பரமார்த்தி கயைக்குச் சென்று அங்கு இறந்தார் என்று பிருதிவிராஜ ராசோ தெரிவிக்கும் செய்தியும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. இஸ்லாமியர்ப் படையெடுப்பின்போது இயற்கையாகவே பரமார்த்தி காலமானார் என்பதே உண்மையாக இருக்கக்கூடும்.[1]

திரைலோக்கிய வர்மன்

பரமார்த்தியின் மகனான திரைலோக்கிய வர்மன் கி.பி. 1202 ஆம் ஆண்டு வாக்கில் அரியணை ஏறி, சுமார் நாற்பதாண்டு காலம் வரை ஆட்சி புரிந்தார். திரைலோக்கிய மல்லர் என்றும் இவர் அழைக்கப்பட்டார். தாம் ஆட்சிக்கு வந்ததும் முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட்டு அவர்கள் வசமிருந்த காலஞ்சராவையும் மற்றப் பகுதிகளையும் இம் மன்னர் மீட்டார். இதைக் குறிக்கும் வகையில் 'காலஞ்சராதிபதி' என்ற விருதினை அவர் சூடிக் கொண்டார். முஸ்லிம்களுக்கும் திரைலோக்கியவர்மனுக்கு மிடையே பல இடங்களில் கடும் போர்கள் நிகழ்ந்தன என்பது பல சான்றுகள்மூலம் தெரியவருகிறது. அவற்றுள் முக்கியமானது, ககத்வா (Kakadwa) என்ற இடத்தில் கி.பி. 1205க்கு முன் நடைபெற்றது. கலச்சூரிகளுக்கெதிராகவும் இவர் போர் புரிய நேர்ந்தது. அதன் விளைவாக, கலச்சூரி அரசர் விஜயசிம்மரிடமிருந்து அவருக்குச் சொந்தமான தாகல மண்டலத்தின் சில பகுதிகளை இச் சந்தெல்ல அரசர் கைப்பற்றிக் கொண்டார். இவர் ஆற்றல் மிகுந்த மன்னர் என்பதை இவையனைத்தும் தெளிவாக்குகின்றன. ஜெஜாகபுக்திக்கு அண்மையிலிருந்த சில குறுநில மன்னர்கள் கலச்சூரி அரசருக்குப் பதிலாகத் திரைலோக்கிய வர்மனையே தமது அரசராக ஏற்றுக்கொண்டனர். அவர்களுள் இருவர் கௌரவ வம்சத்தைச் சேர்ந்த குறுநில மன்னரான ஹரிராஜர், அவரது மகனான குமாரபாலர் ஆகியோர்.

[1] See also : C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.* H. C. Ray, *The Dynastic History of Northern India.*

போஜுகர் (Bhojuka) என்பவர் திரைலோக்கியவர்மனைத் தோற்கடித்துப் பண்டேல்கந்தைக் கைப்பற்றிக் கொண்டார் என்று ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவர் அஜய்கர்ப் (Ajaigarh) பகுதியில் ஒரு சிற்றரசராய் இருந்திருக்க வேண்டுமென்று கீல்ஹார்ன் கருதுகிறார். திரைலோக்கிய வர்மனின் மற்றொரு சிற்றரசரான வாசேகர் (Vaseka) என்பவர் அப்போது ஜெயதுர்கம் என்று அழைக்கப்பட்ட அஜய்கரில் ஆளுநராயிருந்து வந்தார். இவர் படையோடு கிளம்பிச் சென்று, போஜுகரைத் தோற்கடித்துக் கொன்று, திரைலோக்கிய வர்மனைக் காத்தார். இதன் பின்னர், வாசேகரின் தம்பியான ஆனந்தர் ஜெயதுர்கத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்டார்; இவர் அண்டையிலிருந்த மலைக் குலத்தினரான பில்லர்கள் (Bhillas), சபரர்கள், புலிந்தர்கள் ஆகியோரை வென்று திரைலோக்கிய வர்மனுக்குக் கீழ்ப்படுமாறு செய்தார். டெல்லி சுல்தானான அல்தாமிஷின் தளபதியான மாலிக் நஸ்ருதீன் தயசாய் (Tayasai) என்பவர் காலஞ்சராவின்மீது படையெடுத்து, அங்கிருந்த பல ஊர்களைச் சூறையிட்டுப் பெரும் பொருளுடன் திரும்பிச் சென்றார். ஆனால், எப் பகுதியையும் இதனால் திரைலோக்கிய வர்மன் இழந்து விடவில்லை.

சந்தெல்லர்களின் முடிவு

திரைலோக்கிய வர்மனின் மகனான வீரவர்மன் கி.பி. 1241க்குச் சிறிது முன்பு அரியணை ஏறினார். இவர் நீண்ட காலம் ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்பது, கி.பி. 1286 ஆம் ஆண்டைக் குறிக்கும் ஒரு கல்வெட்டினால் நன்கு புலனாகிறது. தம் தந்தை விட்டுச்சென்ற பிரதேசங்கள் அனைத்தையும் இறுதி வரை இவர் கட்டியாண்டார். இவரது படைகள் மல்லயர் என்பவரின் தலைமையில், குவாலியரைச் சேர்ந்த ஹரிராஜர், இன்று நர்வார் என்றழைக்கப்படும் அன்றைய நளபுரத்தையாண்ட கோபாலர், பெயர் தெரியாத மதுரா அரசர் ஒருவர் ஆகியோரைத் தோற்கடித்தன. கி.பி. 1286க்குப் பிறகு, வீரவர்மனுக்குப் பின், அவர் மகன் போஜவர்மன் அரசரானார். சுமார் மூன்று ஆண்டுகளே இவர் அரசராயிருந்தார். கி.பி. 1289-ல் ஹம்மீரவர்மன் என்பவர் போஜவர்மனுக்குப் பின் அரசரானார். இவர் போஜவர்மனின் தம்பியாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறார். கி.பி. 1308க்குப் பின் இவரது கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. கி.பி. 1309-ல் இவர் காலத்திலோ அல்லது இவருக்கு அடுத்த அரசரான எவரோ ஒருவரின் காலத்திலோ டெல்லி சுல்தானான அலாவுதீன் கில்ஜி ;சந்தெல்ல அரசின்மீது படையெடுத்தார்.

தமோ (Damoh) மாவட்டம் போன்ற சில முக்கியமான பகுதிகள் கில்ஜியால் கைப்பற்றப்பட்டன. போஜவர்மனுக்குப் பின், சந்தெல்ல அரசர்களின் பெயர்ப் பட்டியல் நமக்குக் கிடைக்கவில்லை. வாகதேவர் என்ற ஒரு சிற்றரசர் சந்தெல்லர்களின் பிரதேசத்தில் அலாவுதீனின் படையெடுப்பின் போது ஆண்டு வந்தது சில கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. இத்தகைய கல்வெட்டு ஒன்றே அலாவுதீனின் படையெடுப்பைப்பற்றியும் நமக்குத் தெரிவிக்கிறது. இந்த வாகதேவர் பிரதிகார வம்சத்தைச் சேர்ந்தவர் என்று அவற்றில் குறிப்பிடப்படுகிறது. தக்கணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அலாவுதீனின் படைகள் சந்தெல்ல அரசினூடே நுழைந்து சென்றன போலும்!

இரண்டாம் வீரவர்மன் என்பவர் கி.பி. 1315-ல் பண்டேல்கந்தின் ஒரு சிறு பகுதியில் ஆண்டு கொண்டிருந்தார். இவர் சந்தெல்லரே என்பதை இவரது பெயரை வைத்து நாம் அறிய முடிகிறது என்றாலும், இவரது அரசின் பரப்பு என்ன, இவருக்கு முந்திய அரசர், பிந்திய அரசர் யாவர் என்பன போன்ற எத் தகவலும் தெரியவில்லை. சந்தெல்ல அரசு திடீரென்று பதின் மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் யாரோ இரண்டொரு அரசர்களின் காலத்தில் சின்னபின்னமுற்றது. ஆயினும், பண்டேல் கந்தின் சிறுசிறு பகுதிகளில் சில சந்தெல்ல சிற்றரசர்கள் பதினறும் நூற்றுண்டுவரை தொடர்ந்து ஆட்சிபுரிந்தனர். அப் பகுதிகளில் ஒன்று காலஞ்சரா. இக் கோட்டையைப் பிடிப்பதற்கு முஸ்லிம் மன்னர்கள் மூன்று நூற்றுண்டு காலம்வரை முயன்று தோல்வியுற்றனர். ஷேர்ஷாவின் காலத்தில் காலஞ்சராவைக் கிரத்சிங் (Kirat Singh) என்பார் ஆட்சிபுரிந்தார். இவர் சந்தெல்லராக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. 1564-ல் அக்பரை எதிர்த்துப் போரிட்டு மாண்ட துர்காவதி என்ற சந்தெல்ல இளவரசியைப்பற்றி நாம் கேள்வியுறுகிறோம். இவர் மகோபாவைச் சேர்ந்த சந்தெல்ல அரசரின் மகள் என்று கதைகள் கூறுகின்றன. இதற்குப் பின் சந்தெல்லர் களைப்பற்றிய குறிப்புகள் எவையும் கிடைக்கவில்லை.

சந்தெல்லரின் வம்சாவளி (தொடர்ச்சி)

- தங்கர்
  - கண்டர்
    - வித்யாதரர்
      - விஜயபாலர்
        - தேவவர்மன் (தேவேந்திர வர்மன்)
        - கீர்த்திவர்மன்
          - சல்லக்ஷணவர்மன்
            - ஜெயவர்மன்
          - பிருதிவிவர்மன்
            - மதனவர்மன்
              - (இரண்டாம் யசோவர்மன்; இவர் அரியணையேறு முன்பே காலமானார்)
                - பரமார்த்தி
                  - திரைலோக்கிய வர்மன்
                    - வீரவர்மன்
                      - போஜவர்மன்
                      - ஹம்மீரவர்மன்

6. கலச்சூரிகள்

பூர்விகம்

கைகயர்கள்

ஆதிகாலத்தைச் சேர்ந்த கைகயர்களின் (Haihayas) வழியில் வந்தவர்களே பிற்காலத்தைச் சேர்ந்த கலச்சூரிக ளாவர். மத்திய இந்தியாவில் நர்மதை நதியின் கரையில் கைகய அரசு இருந்ததாக ராமாயணம், மகாபாரதம், புராணங் கள் ஆகியவை கூறுகின்றன. அவர்கள் க்ஷத்திரியர்கள் என்றும், சந்திர வம்சத்தினரென்றும் அவை தெரிவிக்கின்றன. சகஸ் ரார்ஜுனர் (Sahasrarjuna) என்ற கைகய அரசனைப் பரசுராமர் கொன்றதாக அவற்றில் கூறப்படுகிறது. இந்த சகஸ்ரார்ஜுனர் அல்லது சகஸ்ராஜித் என்பவருக்குக் கைகயன் என்ற ஒரு பேரன் இருந்தானும்; அவனது வழியில் வந்தவர்களே கைகயர்கள் என்று அழைக்கப்பட்டனராம். இந்தக் கைகயர்கள் ஆதியி லிருந்தே நர்மதை நதியின் கரையில் மாகிஷ்மதி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். இவ்வூர் இன்று மந்ததா (Mandhata) என்ற பெயரிலுள்ளது. கைகயனின் வழியில் வந்த மகிஷ்மந்த் என்பவனின் பெயரில் இந் நகர் நிறுவப்பட்டதாம். காடுகள் நிறைந்த அப் பகுதியில் கைகய அரசகுமாரர்கள் நாளாவட்டத்தில் பற்பல அரசுகளை நிறுவினர். அத்தகைய அரசுகளில் ஒன்று கோசலம் என்பதை மகாபாரதத்தின்மூலம் அறிகிறோம். இக் கோசலமானது ராமனால் உத்தர கோசலம், தட்சிணகோசலம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அவ ருடைய இரு பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டதாம். கங்கைக்கு வடக்கிலிருந்தது உத்தர கோசலமென்றும், தெற்கிலிருந்தது தட்சிண கோசலமென்றும் அழைக்கப்பட்டன. இந்தத் தட்சிண கோசலம்தான் கைகயர்களின் அரசுகளில் ஒன்ருகப் பின்னர் ஆயிற்று.[1]

இந்தத் தெற்குக் கோசலத்தைப்பற்றி யுவான் சுவாங் நமக்குத் தெரிவிக்கிருர். இவ்வரசு கலிங்கத்துக்கு வடமேற்கில்

[1] Dr. R. C. Majumdar, Editor, *Vedic Age* C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.*

மலைகள் சூழ்ந்த பிரதேசமாய் இருந்ததென்பதையும், க்ஷத்திரியர்கள் அதை ஆண்டு வந்தனர் என்பதையும் அவர் தெரிவிக்கிறார். இதுவே பிற்காலத்தில் 'மகாகோசலம்' என்று அழைக்கப்பட்டது. கைகயர்கள் தோற்றுவித்த பல அரசுகளில் ஒன்று திரிபுரியைத் தலைநகராகக் கொண்டு எழுச்சியுற்ற கலச்சூரி அரசாகும்.

சேடி அரசு

யமுனைக்குத் தெற்கில் சேடி (Chedi) என்ற அரசு இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது. மத்தியப் பிரதேசத்தில் ஜபல்பூருக்கு அருகில் திரிபுரம் அல்லது திரிபுரி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு கைகயர்களில் ஒரு கிளையினரான கலச்சூரிகள் ஆண்டு வந்தனர். இவர்களது ஆதிபெயர் குலச்சூரிகள் என்று சிலர் கருதுகின்றனர். கலச்சூரிக் கைகயர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர். இந்தக் கலச்சூரிகள் சேடி அரசைப் பின்னர் வென்று தமதாக்கிக் கொண்டனர். ஆதிகாலத்திலேயே புகழ்பெற்று விளங்கிய காலஞ்சராக் கோட்டையானது சேடி நாட்டில்தான் இருந்தது. இதைக் கைப்பற்றிக்கொண்ட பின், திரிபுரிக் கலச்சூரிகள் காலிஞ்சரபுரவராதீசுவரர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளலாயினர்.[1] கி.பி. 7ஆம் நூற்றாண்டில் யுவான் சுவாங் மத்திய இந்தியாவில் பயணம் செய்த போது, திரிபுரிக் கலச்சூரிக் கைகயர்களின் சேடி அரசு முக்கியமில்லாத ஓர் அரசாக இருந்தது போலும்! எனவேதான், அதைப்பற்றி யுவான் சுவாங் குறிப்பிடவில்லை. (காலஞ்சராவானது பின்பு சந்தெல்லர்களின் வசமாகி, மீண்டும் கலச்சூரி அரசர் கர்ணரின் காலத்தில் கலச்சூரிகள் வசமே வந்தது.)

கலச்சூரி அப்தம்

திரிபுரிக் கலச்சூரிகள் 'சேடி அப்தம்' என்ற ஒன்றைப் பின்பற்றினர். சாதவாகன அரசின் முடிவுக் காலத்தில் ஒரு சிற்றரசை நிறுவியிருந்த ஆபீரர்களே (Abhiras) துவக்கத்தில் இந்த அப்தத்தை நிறுவியிருக்கலாமென்று தெரிகிறது. ஆபீரர்களின் கீழ்க் குறுநில மன்னர்களாயிருந்து, பிறகு சுதந்திரம் பெற்று, வடக்குக் கொங்கணத்தில் அபராந்தாவில் ஆட்சிபுரிந்த திரைகூடர்கள் (Traikutas) இந்த அப்தத்தைத் தங்களது சாசனங்களில் பயன்படுத்தினர்.[2] இந்த அப்தத்தையே பின்னர்ச் சேடி நாட்டை ஆண்ட கலச்சூரிகள் பயன்படுத்தியதால் **சேடி அப்தம்**

[1] Dr. H. C Ray, *The Dynastic History of Northern India.*

[2] R. C. Majumdar, Editor, *The Classical Age.*

என்று இது பெயர் பெற்றது. இந்த அப்தத்தின் துவக்கம் கி.பி. 248, செப்டம்பர், ஐந்தாம் தேதி என்று கீல்ஹார்ன் கணித்தார்.

1. திரிபுரிக் கலச்சூரி அரசு

கலச்சூரி என்ற பெயர் கி.பி. ஏழாம் நூற்றுண்டு முதலே காணப்படுகிறது. வாதாபி சாளுக்கிய அரசரான மங்களேசர் கலச்சூரிகளைத் தோற்கடித்ததாகக் கி.பி. 634 ஆம் ஆண்டைச் சேர்ந்த அய்ஹொளெக் (Aihole) கல்வெட்டுக் கூறுகிறது. மூன்று கலச்சூரி அரசுகள்பற்றி நமக்குத் தெரியவருகின்றன. அவை, திரிபுரிக் கலச்சூரி அரசு, சரயுபாரக் கலச்சூரி அரசு, ரத்தன் பூர்க் கலச்சூரி அரசு என்பனவாம். இவற்றுள் முக்கியமானது திரிபுரிக் கலச்சூரி அரசே. இந்த அரசானது தாகல (Dahala) மண்டலம் என்றும், சேடி நாடு என்றும்கூட அழைக்கப்பட்டது. சந்தெல்ல அரசுக்குத் தெற்கில் இந்த அரசு இருந்தது. இதன் தலைநகரான திரிபுரி இன்றைய மத்தியப் பிரதேசத்தில் ஜபல்பூர் நகருக்கு மேற்கில் ஆறு கல் தொலைவில் தீவார் (Tewar) என்ற சிற்றூராக உள்ளது.

கோகல்லர்

திரிபுரிக் கலச்சூரிகளின் சாசனங்கள் கோகல்லர் (Kokkalla) அல்லது கோகல்ல தேவர் என்பவரையே தங்களது முதலாவது முக்கிய அரசராகக் குறிப்பிடுகின்றன. அவரைப்பற்றிக் குறிப் பிடும் முதலிரண்டு கல்வெட்டுகள் அக் காலத்திய சில அரசர் களின் பெயரையும் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன. லக்ஷ்மி கர்ணரது வாராணசிச் செப்பேட்டில் கோகல்லரோடு போஜர், வல்லபராஜர், ஹர்ஷர், சங்கரகானர் ஆகியோருடைய பெயர் களும் குறிப்பிடப்படுகின்றன. மற்றொரு சாசனமான யுவராஜ ரது பில்ஹரிக் (Bilhari) கல்வெட்டில் கோகல்லரது காலத்தில் தெற்கில் கிருஷ்ணராஜரும் வடக்கில் போஜதேவரும் ஆண்டனர் என்று கூறப்படுகிறது. மாபெரும் ஆராய்ச்சியாளரான டாக்டர் கீல்ஹார்ன் இவ்விரண்டையும் ஆராய்ந்து இவற்றில் குறிக்கப் படும் கிருஷ்ணராஜரும் வல்லபராஜரும் மானிய கடகத்து ராஷ் டிரகூட அரசரான கிருஷ்ண-வல்லபரே என்றும், அதேபோல் ஹர்ஷர் என்ற அரசர் கஜுராஹோவைச் சேர்ந்த சந்தெல்ல அரசர் ஹர்ஷரே என்றும் முடிவுக்கு வந்தார். இந்த முடிவை எல்லா ஆசிரியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். (ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணருக்குக் கிருஷ்ணராஜர், வல்லபராஜர் என் னும் பெயர்களும் இருந்தன. இந்தக் கிருஷ்ணராஜர் இரண்டாம்

கிருஷ்ணராகவே இருக்கக் கூடுமென்று முதன்முதலில் கருத்துத் தெரிவித்தவர் கன்னிங்ஹாம் ஆவார். இங்குச் சொல்லப்படும் போஜர் பிரதிகார அரசரான மிகிரபோஜரே என்பதில் ஐயமில்லை. சங்கரகாணர் என்பவர் சரயுபாரக் கலச்சூரி அரசர் ஒருவராக இருத்தல் கூடும்.

இரண்டாம் கிருஷ்ணர் கோகல்லரின் மகளை மணந்து கொண்டார் என்பது ராஷ்டிரகூடர்களது பல கல்வெட்டுகளி லிருந்து தெரியவருகிறது. இப் பெண்ணின் வயிற்றிலேயே புகழ் மிக்க ராஷ்டிரகூட அரசரான மூன்றும் இந்திரரின் தந்தையான ஜகதுங்கர் அவதரித்தார். கோகல்லருக்கு நட்டா அல்லது நட் டாக்கியதேவி என்ற சந்தெல்ல அரசகுமாரி ராணியாயிருந்தார். இந்தப் பெண்மணி சந்தெல்ல அரசர் ஹர்ஷரது மகளாகவோ அல்லது வேறு நெருங்கிய உறவினராகவோ இருக்கக் கூடும். மேலே குறிப்பிட்ட ராஷ்டிரகூட, பிரதிகார அரசர்களுடன் கோகல்லருக்கு என்ன உறவு இருந்தது என்பது தெரியவில்லை. அவர்களுக்குக் கட்டுப்பட்ட குறுநில மன்னராகவோ அல்லது அவர்களது போர்களில் பங்கு கொண்ட சுதந்திர அரசராகவோ அவர் இருந்திருக்கக் கூடும்.

லக்ஷ்மணராஜர்பற்றிய பிரச்சினை

இதனிடையில், லக்ஷ்மணராஜர் என்பவரையும்பற்றிச் சற்றுக் கவனிப்பது அவசியமாகும். கலச்சூரிகளின் பிரதேச மான தாகலமண்டலத்தை ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கோவிந்தர் (கி.பி. 794-814) வென்று, தமது அதிகாரிகளுள் ஒருவரை அங்கு ஆளுநராக நியமித்தார் என்பது அமோக வர்ஷரது சஞ்சான் கல்வெட்டால் தெரியவருகிறது. இப்படி யிருக்க, லக்ஷ்மணராஜர் என்ற தாகலமண்டல அரசர் ஒருவரின் சாசனம் ஒன்று கிடைத்துள்ளது. கி.பி. 841-42-ல் இச் சாச னம் வெளியிடப்பட்டது. அவ்வாறுனல், இம் மன்னர் முன்பு கூறப்பட்ட ராஷ்டிரகூட ஆளுநருக்கோ அல்லது கோகல்ல ருக்கோ எவ்விதத்தில் உறவு பூண்டவர் என்பது விளங்கவில்லை. அவ் விருவருக்குமிடையில் லக்ஷ்மணராஜர் தாகலமண்டலத்தை ஆண்டவர் என்பது தெரிகிறது. கோகல்லரது தந்தையாகவோ பாட்டனுராகவோ இவர் இருந்திருக்கலாம். அவ்வாறுனல், கலச்சூரிகளின் சாசனங்களில் இவரைப்பற்றி ஏன் குறிப்பிடப்பட வில்லை என்பதும் விளங்கவில்லை. மூன்றும் கோவிந்தரால் நிய மிக்கப்பட்ட ஆளுநராகவோ அவரது வாரிசாகவோ லக்ஷ்மண ராஜர் இருந்திருக்கக் கூடுமென்றும் கருதுவதற்கு இடமிருக் கிறது.

கோகல்லரின் போர்கள்

கோகல்லர் ராஜஸ்தானத்துக்குள் படையெடுத்துச் சென்று, சிந்து நாட்டை ஆண்டுவந்த அராபியர்களின் துருப்புகளை எதிர்த்துப் போரிட்டு வென்றார். பின்னர், கிழக்கு வங்காளத்தின்மீதும் அவர் போர் தொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. பின்னர், ராஷ்டிரகூட அரசரும் தம் மருமகனுமான இரண்டாம் கிருஷ்ணரது நாட்டின்மீதும் கோகல்லர் படையெடுத்தார் ; அப் போரில்ராஷ்டிரகூடர் தோற்கடிக்கப்பட்டார். ராஷ்டிரகூடருக்குக் கட்டுப்பட்டிருந்த வடக்குக் கொங்கணம் கோகல்லரது மேலாதிக்கத்தின் கீழ் வந்தது. முடிவில் ராஷ்டிரகூடர்களுடன் ஓர் உடன் படிக்கை கையெழுத்தாயிற்று. இப் போர்கள் காரணமாகக் கலச்சூரி அரசு முதற்றரமான அரசாயிற்று. இச் செய்திகளெல்லாம் கி.பி. 1079ஆம் ஆண்டைச் சேர்ந்த ரத்தன்பூர்க் கலச்சூரிஅரசர் பிருதிவிதேவரது செப்பேடு மூலமாகவே தெரிய வருகின்றன. சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட செப் பேடாக இது இருப்பதால், இதில் கூறப்படுபவை வெறும் கற்பனைச் செய்திகளே என்று சிலர் கருதுகின்றனர். ஆயினும், கோகல்லர் மிக முக்கியமான அரசராகக் கலச்சூரிகளின் செப் பேடுகளில் குறிப்பிடப்படுவதால், மேலே விவரிக்கப்பட்ட போர் களில் ஓரளவு உண்மை இருக்கக் கூடும்.

இம் மன்னரது காலம்

கோகல்லர் ராஷ்டிரகூட அரசர் முதலாம் அமோகவர்ஷர், இரண்டாம் கிருஷ்ணர் ஆகியோரது காலத்தைச் சேர்ந்தவர். இரண்டாம் கிருஷ்ணர் சுமார் கி.பி. 878ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். கோகல்லரது மகனான் சங்கரகானர் அரசராயிருந்த போது ஆந்திரத்தில் கீழைச் சாளுக்கிய அரசரான மூன்றாம் விஜயாதித்தியர் அரியணையிலிருந்தார். இந்த விஜயாதித்தியரது ஆட்சி கி.பி. 888-ல் முடிவுற்றது. எனவே, கோகல்லரது ஆட்சி 878க்கும் 888க்கும் இடையில் முடிவுற்றிருக்க வேண்டு மென்று D. C. கங்குலி கருதுகிறார்.[1] மேலே குறிப்பிடப்பட்ட லக்ஷ்மணராஜருக்குப் பின் கோகல்லர் தாகலமண்டலத்தில் ஆண்டதால், கி.பி. 850ஆம் ஆண்டு வாக்கில் அவரது ஆட்சி தொடங்கிற்று என்று வைத்துக் கொள்ளலாம். திரிபுரிக் கலச் சூரி அரசை நிறுவியவர் கோகல்லரே. இவரை முதலாம் கோகல்லர் என்று குறிப்பிடலாம்.

[1] R. C. Majumdar, Editor, *The Age of Imperial Kanauj.*

சங்கரகானர்

ராஷ்டிரகூடருடன் நெருங்கிய உறவு

கோகல்லருக்குப் பதினெட்டு மகன்கள் இருந்ததாக ரத்தன் பூரைச் சேர்ந்த கலச்சூரிச் சாசனம் ஒன்று குறிப்பிடுகிறது. அவர்களுள் மூத்தவரான சங்கரகானரே தம் தந்தைக்குப் பின் திரிபுரியில் அரசரானார். இவருக்குச் சங்கிலர், சங்குகர், ரணவிக்கிரகர் என்பன போன்ற வேறு மாற்றுப் பெயர்களும் இருந்தன என்பது ராஷ்டிரகூடர்களது சாசனங்களிலிருந்து தெரியவருகிறது. இவரது தங்கையையே ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணர் மணந்திருந்தார். மேலும், இவரது மகளான லக்ஷ்மியையே ராஷ்டிரகூட ஜகதுங்கர் மணந்திருந்தார் என்பதை முன்பே கண்டோம். இந்த ஜகதுங்கர் கோகல்லரது மகள் வயிற்றுப் பேரர்; அதாவது, சங்கரகானரின் தங்கையின் மகன். ஜகதுங்கருக்கும் லக்ஷ்மிக்கும் பிறந்தவரே ராஷ்டிரகூட அரசர் மூன்றும் இந்திரர். மேலும், பின்னர் ஜகதுங்கர் தம் தந்தையின் காலத்தில் ஏதோ ஒரு படையெடுப்பின் போது சேடி நாட்டுக்குச் சென்று அங்குச் சிறிதுகாலம் தங்கியிருந்த போது, சங்கரகானரது இன்னொரு மகளான கோவிந்தாம்பாளையும் மணந்து கொண்டார் என்று மற்றொரு ராஷ்டிரகூடச் சாசனம் தெரிவிக்கிறது. ராஷ்டிரகூட அரசரான மூன்றும் அமோகவர்ஷர் இந்தக் கோவிந்தாம்பாளின் வயிற்றில் பிறந்தவரே. ராஷ்டிரகூட அரசர்களும் இளவரசர்களும் இவ்வாறே சேடி நாட்டுக் கலச்சூரி அரசகுமாரிகளை மணந்து கொண்டனர். பேரரசரான மூன்றும் இந்திரர் சங்கரகானரது தம்பியான அர்ச்சுனரது பேர்த்தியான விஜாம்பாளை மணந்திருந்தார். இரண்டாம் அமோகவர்ஷர், நான்காம் கோவிந்தர் ஆகியோருக்கு இந்த விஜாம்பாளே தாயானார். இவ்வாறு ராஷ்டிரகூட அரச குடும்பத்துடன் கலச்சூரிகள் மிகவும் நெருங்கிய உறவு பூண்டிருந்தனர். இந்த உறவுகள் காரணமாகக் கலச்சூரிகளின் புகழும் செல்வாக்கும் அதிகரித்துவிட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம். மேலும், ராஷ்டிரகூடர்கள் தலைமுறை தலைமுறையாக மண உறவு வைத்துக்கொள்ளும் அளவுக்குக் கலச்சூரிகளின் செல்வாக்கும் வலிமையும் கோகல்லரின் காலத்திலேயே வளர்ந்துவிட்டன என்பதை இவை உணர்த்துகின்றன.

சங்கரகானர் புரிந்த போர்கள்

கோகல்லருக்குப் பின் முக்ததுங்கர் அரசரானாரென்று பில்ஹரிக் கல்வெட்டும், பிரசித்ததவலர் அரசரானாரென்று

வாராணசிச் செப்பேடும் கூறுகின்றன. இவ்விருவரும் முதலாம் யுவராஜரின் தந்தையென்று இரண்டிலும் குறிக்கப்படுவதால், சங்கரகானரின் வேறு பெயர்களே இவை என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவுசெய்தனர். சங்கரகானரது சாசனம் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும், பிறச் சான்றுகள் மூலமாக அவரது போர்களைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. கோசலத்தையாண்ட சோமவம்சி அரசரை எதிர்த்துச் சண்டையிட்டு, பாலி என்ற ஊரைச் சங்கரகானர் கைப்பற்றிக் கொண்டார். மத்தியப் பிரதேசத்தில் பிலாஸ்பூர் மாவட்டத்தில் ரத்தன்பூருக்குப் பன்னிரண்டு மைல் வடமேற்கிலுள்ள இன்றைய பாலி என்ற கிராமமே இது என்று கன்னிங்ஹாம் கூறினர். கீழைச் சாளுக்கிய அரசர் மூன்ரும் விஜயாதித்தியர் ராஷ்டிரகூட அரசின் மீது படையெடுத்தபோது, தமது மைத்துனரான சங்கரகானரின் உதவியை ராஷ்டிரகூட அரசர் இரண்டாம் கிருஷ்ணர் நாடினர். மத்தியப் பிரதேசத்தில் பாலாகட் (Balaghat) மாவட்டத்தில் கிராணபுரம் என்ற ஊருக்கருகில் கீழைச் சாளுக்கியர்க்கெதிராகக் கடும்போர் நிகழ்ந்தது. இதில் சங்கரகானரும் இரண்டாம் கிருஷ்ணரும் தோற்றுப் பின்வாங்கினர். சாளுக்கியரின் பெருவெற்றிக்குக் காரணமாக இருந்தவர் அவர்களது திறமைமிக்க தளபதியான பாண்டுரங்கர். கிராணபுரம் சாளுக்கியப் படையால் தீக்கிரையாக்கப்பட்டது. கீழைச் சாளுக்கியரின் சாசனங்கள் இத் தகவல்களை நமக்கு நல்குகின்றன.[1] கேரளத்தைச் சங்கரகானர் வென்ருர் என்று பில்ஹரிக் கல்வெட்டுக் கூறுவது வழக்கமான புனைந்துரையே. சங்கரகானரது ஆட்சி கி.பி. 900 ஆண்டு வாக்கில் முடிவுற்றிருக்க வேண்டும்.

முதலாம் யுவராஜர்

சங்கரகானருக்கு லக்ஷ்மி, கோவிந்தாம்பாள் என்னும் பெண்களும் பாலஹர்ஷர், யுவராஜர் என்ற மகன்களும் இருந்தனர். ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணரின் மகன் ஜகதுங்கர் லக்ஷ்மியையும் கோவிந்தாம்பாளையும் மணந்து கொண்டார் என்பதை முன்பே கண்டோம். மூத்த மகனுன பாலஹர்ஷரே தம் தந்தைக்குப் பின் திரிபுரியில் அரசரானுர். இவர் மிகவும் குறுகிய காலமே ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சிபற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. இவருக்குப் பிள்ளை இல்லாததாலோ, வேறு காரணத்தினுலோ இவரது தம்பியான முதலாம் யுவராஜரே அடுத்து அரசரானுர். இவர் 'கெயூரவர்ஷர்' என்ற விருதினைப் பூண்டிருந்தார்.

[1] N. Venkataramanayya, *The Eastern Chalukyas of Vengi.*

இவர் நிகழ்த்திய போர்கள்

ஜபல்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பில்ஹரிக் (Bilhari) கல்வெட்டானது இவரைப்பற்றிய செய்திகளை நமக்குத் தருகிறது. தம் தந்தையையும் பாட்டனுரையும் போலவே முதலாம் யுவராஜரும் போர்களில் சிறந்தவராக விளங்கினுர். கௌடம், கர்நாடம், லாட்டம், காஷ்மீரம், கலிங்கம் ஆகியவற்றை இவர் வென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. இம் மன்னர் கி.பி. 925க்கும் 950க்குமிடையில் ஆண்டிருக்கக் கூடுமென்றும் பல அறிஞரும் கருதுகின்றனர். அவ்வாருனுல், கௌடத்தின்மீது யுவராஜர் படையெடுத்துச் சென்றபோது பால வம்சத்தைச் சேர்ந்த ராஜ்யபாலரோ அல்லது அவரது மகன் இரண்டாம் கோபாலரோ அங்கு ஆட்சி புரிந்திருக்கக் கூடும். கர்நாடம் அப்பொழுது ராஷ்டிரகூடரின் வசமிருந்தது. இவர்கள் கலச்சூரிகளுடன் நெருங்கிய மண உறவு பூண்டிருந்தனராகையால், கர்நாடத்தின் மீதான யுவராஜரது போருக்குக் காரணம் தெரியவில்லை. ராஷ்டிரகூட அரசர் மூன்ரும் அமோக வர்ஷர் (கி.பி. 936-939) யுவராஜரின் மகளாகிய குந்தகாதேவியை மணந்திருந்தார். இந்தக் குந்தகாதேவியின் வயிற்றில் பிறந்தவரே அடுத்த ராஷ்டிரகூட அரசரான மூன்ரும் கிருஷ்ணராவார். யுவராஜர் காஷ்மீரத்தின்மீது படையெடுத்தாரென்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. கீழைக் கலிங்கர்கள் ஆட்சி புரிந்த கலிங்கத்தின் மீது ஒருவேளை யுவராஜர் படையெடுத்திருக்கக் கூடும். வேறு தெளிவான சான்றுகள் இல்லாத நிலையில் இவற்றையெல்லாம் பற்றித் திட்டவட்டமாக எதையும் கூறுவதற்கில்லை.

அதே சமயம் யுவராஜர் அடைந்த இரண்டு தோல்விகளைப் பற்றிச் சாசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. சந்தெல்ல அரசரான யசோவர்மன் சேடி அரசர் ஒருவரைத் தோற்கடித்த தாக ஒரு சாசனம் கூறுகிறது இவர் முதலாம் யுவராஜரே என்று கீல்ஹார்ன் கூறினுர். சந்தெல்லர்களும் அவர்களுக்குத் தென்கிழக்கில் இருந்த கலச்சூரிகளும் ஏதோ காரணம்பற்றிப் போரிட்டனர் போலும்! கலச்சூரி அரசர் தோற்ருரெனினும், எப்பகுதியையும் இதனுல் அவர் இழந்துவிட வில்லை. ராஷ்டிரகூடர்களுடன் இருந்துவந்த நல்லுறவும் விரைவிலேயே ஏதோ காரணங்களினுல் முறிந்து போயிற்று. மூன்ரும் கிருஷ்ணர் (கி.பி. 939-967) தம் தந்தையின் காலத்திலும் தமது காலத்திலும் சேடி நாட்டின்மீது படையெடுத்தார். தம்முடைய தாய்க்கும் மனைவிக்கும் நெருங்கிய உறவினரான கலச்சூரி அரசரை அந்த மூன்ரும் கிருஷ்ணர் தோற்கடித்தார் என்று கி.பி. 959ஆம் ஆண்டைச் சேர்ந்த ராஷ்டிரகூடச் சாசனமொன்று (Karhad

Copper plate) தெள்ளத் தெளிவாக இயம்புகின்றது. கலச்சூரிகளின் நாட்டையே சிறிது காலம் மூன்றும் கிருஷ்ணர் தமது பிடியில் வைத்திருந்தார். முதலாம் யுவராஜர் படைகளைத் திரட்டி விரைவிலேயே தமது நாட்டை விடுவித்துக் கொண்டார். யுவராஜரின் அவையில் வாழ்ந்த ராஜசேகரர் சேடி நாடு ராஷ்டிரகூடரது பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடும் வகையில் 'வித்தசால பஞ்சிகம்' என்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றினர். ராஷ்டிரகூடரை யுவராஜர் தோற்கடித்தார் என்பது இந் நாடகத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த வெற்றியையே கர்நாடத்தின் மீதான யுவராஜரின் வெற்றியென்று பில்ஹரிக் கல்வெட்டுக் கூறுகிறது. தெற்குக் குஜராத்தாகிய லாட்டம் ராஷ்டிரகூடர்களால் அப்பொழுது ஆளப்பட்டு வந்தது. எனவேதான், லாட்டத்தையும் யுவராஜர் வென்றதாகக் குறிக்கப்பட்டது. யுவராஜர் ஒரு போர் வல்லமை மிக்க அரசர் என்பதை இவை நன்கு புலப்படுத்துகின்றன.

இவரது ஏனைப் பணிகள்

இவ் வரசர் சைவத் துறவிகள் பலரை ஆதரித்தார். இவர் நாட்டில் கோலகி மடம் ஒன்று நெடுங்காலமாக இருந்தது. கோலகி (Golaki) என்பது சைவ சமயத்தின் பல கிளைகளுள் ஒன்றாகும். இந்தக் கோலகி மடத்துக்கு முதலாம் யுவராஜர் பல கிராமங்களை மானியமாக அளித்தார். மட்டமயூரம் என்ற நகரில் வாழ்ந்து வந்த சௌளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த அவனிவர்மன் என்பாரது மகள் நோகலா (Nohala) என்பவரை யுவராஜர் மணந்து கொண்டார். இந்த ஊரிலும் ஒரு சைவ மடம் இருந்தது. அதிலிருந்த பிரபாவ சிவா என்ற ஒரு துறவியைத் தமது நாட்டுக்கு வரவழைத்து அங்கு ஒரு மடத்தில் அவரை யுவராஜர் தலைவராக்கினர். நோகலாவும் பில்ஹரிக்கு அருகில் சிவாலயம் ஒன்றை எழுப்புவித்தார். இவ்வாறு சமயப் பற்றில் இம் மன்னரும் அரசியாரும் நிறைய ஈடுபாடு கொண்டிருந்தனர். பிரதிகார மகேந்திரபாலர், மகிபாலர் ஆகியோரது அவைகளில் வசித்த கவிஞராகிய ராஜசேகரர் யுவராஜரது ஆதரவின்கீழ்த் திரிபுரியிலும் சிறிது காலம் வாழ்ந்தார். பாகமிஸ்ரர் என்பவர் இம் மன்னரின் தலைமையமைச்சரா யிருந்தார்.

லக்ஷ்மணராஜர்

முதலாம் யுவராஜருக்கும் நோகலாவுக்கும் பிறந்த லக்ஷ்மணராஜரே அடுத்த கலச்சூரி அரசரானர். இவரும் போர்களில் நாட்டம் மிகுந்த அரசர். கிழக்கு வங்காளம், கோசலம்,

ஒட்டரநாடு, லாட்டம், கூர்ஜரம் ஆகியவற்றின்மீது இவர் படையெடுத்தார். ஓரிசாவே அப்பொழுது ஒட்டரம் (Odra) என்றழைக்கப்பட்டது. சோமவம்சி அரசர்கள் ஆட்சி புரிந்து கொண்டிருந்த தெற்குக் கோசலத்தின்மீதும் அவர் வெற்றி பெற்றுப் பின்னர், ராஷ்டிரகூடருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர் ஒருவர் ஆண்டுவந்த லாட்டத்தையும் வென்றார். அவரால் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் கூர்ஜர அரசர் வடக்குக் குஜராத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த சௌளுக்கிய அரசர் மூலராஜராகவே இருக்கக்கூடும். இதையடுத்து, சோமநாத பட்டணத்தையும் (சோமநாதபுரம்) அவர் வென்றார். ஆபீர வம்சத்தைச் சேர்ந்த அரசர் ஒருவர் ஆண்டுகொண்டிருந்த ஜுனகத்தும் அவரால் தோற்கடிக்கப்பட்டது. காஷ்மீரத்தையும் பாண்டிய நாட்டையும் இவர் வென்றார் என்னும் கூற்று மிகையானது. ஆயினும், மேற்கில் கத்தியவார், கிழக்கில் வங்காளம், தென்கிழக்கில் ஓரிசா வரை படையுடன் சென்று வெற்றி பெற்றுத் திரும்பிய இம் மன்னர் பேராற்றல் மிக்கவர் என்பதில் ஐயமில்லை. வங்காளத்தைச் சேர்ந்த பாலர்கள், வர்மன்கள், சந்திரர்கள் ஆகியோரது சாசனங்கள் கலச்சூரி அரசர்கள் வங்காளத்தின்மீது பலமுறை படையெடுத்திருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துகின்றன.[1]

லக்ஷ்மணராஜரும் அவருடைய தந்தையைப் போலவே சைவ ஆசாரியர்கள் பலரை ஆதரித்தார். அவர்களுள் ஒருவர் இருதயசிவா. இவரது அமைச்சரான சோமேசுவர தீட்சிதர் (இவர் முன்பு குறிப்பிட்ட பாகமிஸ்ரரின் மகன்) ஒரு விஷ்ணு ஆலயத்தை நிறுவினார். பில்ஹரியிலுள்ள லக்ஷ்மணசாகரம் என்ற ஏரி இந்த அரசராலேயே அகழப்பட்டிருக்க வேண்டும். இவருக்கும் இவருடைய மனைவியான ராகதாவுக்கும் சங்கரகானர், இரண்டாம் யுவராஜர் என்ற பையன்களும், பந்தாதேவி என்ற பெண்ணும் இருந்தனர். சாளுக்கிய நான்காம் விக்கிரமாதித்தியருக்குப் பந்தாதேவி மணம் செய்து தரப்பட்டார். இவருக்குப் பிறந்த இரண்டாம் தைலப்பரே கி.பி. 973-ல் ராஷ்டிரகூட அரசுக்கு ஒரு முடிவுகட்டி, கல்யாணிச் சாளுக்கிய அரசுக்கு அடிகோலியவர்.

இரண்டாம் யுவராஜர்

லக்ஷ்மணராஜருக்குப் பின், அவரது மூத்த மகனான சங்கரகானர் அரியணை ஏறினார். இவர் ஓரிரு ஆண்டுகளே ஆட்சி

[1] R. A. Majumdar, Editor, *History of Bengal.*

புரிந்து காலமானார். பரம வைஷ்ணவர் என்று இவர் அழைக்கப் படுகிறார். இவருக்குப் பின், இவருடைய தம்பியான இரண்டாம் யுவராஜர் திரிபுரியில் அரியணை ஏறினார். கி.பி. 975ஆம் ஆண்டு வாக்கில் அவர் அரசராகியிருத்தல் வேண்டும். திரிபுரி நகரம் இவரால் விரிவு படுத்தப்பட்டு அழகு செய்யப்பட்டது. சாளுக்கிய அரசரான இரண்டாம் தைலப்பர் ஏதோ காரணத்தினால் தமது தாய்மாமனான இரண்டாம் யுவராஜரின்மீது படையெடுத்தார். சேடிநாடு சாளுக்கியரால் பெருத்த சேதத்திற்கு உள்ளாயிற்று. சாளுக்கியப் படைகள் திரும்பிச் சென்ற உடனே பரமார அரசரான வாக்பதி முஞ்சர் சேடிநாட்டின்மீது படையெடுத்தார். யுவராஜரின் படைகள் தோற்கடிக்கப்பட்டு, தலைநகரமான திரிபுரி கைப்பற்றப்பட்டது. இப் பேரழிவுக்குப் பின்னர் யுவராஜர் தம்முடைய நாட்டைப் பகைவரிடமிருந்து விடுவித்துக் கொண்டார். இரண்டாம் யுவராஜரது ஆட்சி கி.பி. 1000 ஆண்டு வாக்கில் முடிவுற்றிருக்க வேண்டும். இம் மன்னரும் சைவப் பெரியார்கள் பலரை ஆதரித்தார்.

இரண்டாம் கோகல்லர்

இரண்டாம் யுவராஜர் பகைவரிடம் தோற்று ஓடியதால், அவரை மீண்டும் அரசராக ஏற்றுக் கொள்ள விரும்பாமல் அவரது மகனான இரண்டாம் கோகல்லரை அமைச்சர்கள் அரசனாக்கினர் என்று டாக்டர் கங்குலி எழுதுகிறார்.[1] யுவராஜரது அமைச்சர்கள் கோகல்லரை அரியணையில் அமர்த்தினர் என்று மட்டுமே சாசனம் ஒன்று கூறுகிறது. இதை வைத்தே மேற்கூறியவாறு பொருள் கொண்டார் டாக்டர் கங்குலி. சாசனத்தின் பொருள் வேறாகவும் இருக்கலாம். தமது தந்தையின் மூத்த பிள்ளையாகவோ வாரிசாகவோ கோகல்லர் இல்லாமல் இருந்திருக்கலாம்; அல்லது வேறு ஏதோ காரணத்தினால் கோகல்லரை அமைச்சர்கள் அரியணையில் அமர்த்த நேர்ந்திருக்கலாம். கலச்சூரிகளின் சாசனங்கள் இவரைப்பற்றி அதிகமாக எதுவும் குறிப்பிடாமல், வழக்கமான புனைந்துரையோடு நின்று விடுகின்றன. ஆயினும், இவரும் ஓரளவு திறமைமிக்க அரசராகவே இருந்திருக்கக் கூடும். கூர்ஜர நாட்டின்மீது படையெடுத்து அதன் அரசராயிருந்த மூலராஜரையோ அல்லது அவரது மகன் சாமுண்டராஜரையோ இரண்டாம் கோகல்லர் தோற்கடித்தார். தெற்கில் சாளுக்கிய அரசின்மீதும் இம் மன்னர் படையெடுத்தார். தமது தந்தையின் காலத்தில் சாளுக்கிய அரசர் இரண்டாம் தைலப்பர் போர் தொடுத்ததற்குப் பதில்

[1] R. C. Majumdar, Editor, *The Age of Imperial Kanauj*, article by D. C. Ganguly.

நடவடிக்கையாக இது நிகழ்ந்தது. சத்தியாஸ்ரயரது காலத்தில் இப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கக் கூடும். பின்னர், பால அரசர் முதலாம் மகிபாலர்மீது படையெடுத்து அவரையும் வென்று திரும்பினர் கோகல்லர். இவ்வாறு கலச்சூரிகளின் பெருமையை இம் மன்னர் மீண்டும் நிலைநாட்டினர். எனவே, இவரையும் ஒரு முக்கியமான அரசரென்றே கருதுதல் வேண்டும்.

காங்கேயதேவர்

இரண்டாம் கோகல்லரை அடுத்து அவரது மகனான காங்கேயர் அரசரானர். 'மகாராஜாதிராஜ பரமேசுவரர்', 'விக்கிரமாதித்தியர்' என்பன போன்ற பட்டங்களை இவர் சூடியிருந்தார். கி.பி. 1015ஆம் ஆண்டு வாக்கில் காங்கேயதேவர் அரசராகியிருக்கக் கூடும். இவரைப்பற்றி இவரது காலத்தையும் இவரையடுத்த கலச்சூரி அரசர்களின் காலத்தையும் சேர்ந்த பல சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அல்பெருனியும்கூட இவரையும் இவரது அரசையும்பற்றிக் குறிப்பிடுகிருர்.

இவரது போர்கள்

போர்கள் பலவற்றை நடத்தித் தமது அரசை விரிவுபடுத்தினர் இவ் வரசர். கீரம், அங்கம், குந்தளம், உத்கலம் ஆகியவற்றின் அரசர்களை இவர் வென்றதாகப் பல சாசனங்கள் தெரிவிக்கின்றன. குந்தள நாடாகிய சாளுக்கிய அரசை அப்பொழுது (கி.பி. 1019) இரண்டாம் ஜெயசிம்மர் ஆண்டு கொண்டிருந்தார். பரமார அரசர் போஜர், சோழப் பேரரசர் முதலாம் ராஜேந்திர சோழர், காங்கேயதேவர் ஆகிய மூவரும் குந்தள நாட்டின்மீது படையெடுத்தனர். இப் போரில் காங்கேயதேவர் துவக்கத்தில் சில வெற்றிகளைப் பெற்றுரெனினும், சாளுக்கிய அரசரை அவர் அடியோடு தோற்கடிக்கவில்லை என்பது தெரிகிறது. சாளுக்கியப் படைகள் இறுதியில் பகைவர் அனைவரையும் விரட்டியடித்துத் தமது பிரதேசங்களை மீட்டன. அடுத்து, கோசலத்தின்மீதும் கலச்சூரிக் காங்கேயதேவர் படையெடுத்து, நீண்ட போர் ஒன்றை நடத்தினர். அந் நாட்டை ஆண்டு கொண்டிருந்த சோமவம்சத்தைச் சேர்ந்த மகாசிவகுப்த யயாதி என்பவர் தாகல மண்டலத்தின்மீது பதில் போர் தொடுத்தார். இறுதியில், கோசலப் படைகள் காங்கேயதேவரால் தோற்கடிக்கப்பட்டன.

இதன் பின்னர், உத்கலத்தின்மீதும் (ஒரிசா) காங்கேயதேவர் போர் தொடுத்தார். ரத்தன்பூர்க் கலச்சூரி அரசரான

கமலராஜர் இப் படையெடுப்பில் காங்கேயதேவருக்கு உதவினர். கீழைக் கடற்கரை வரையில் கலச்சூரிப் படைகள் வெற்றி சூழச் சென்று திரும்பின. இவ் வெற்றியைக் குறிக்கும் வகையில் 'திரிகலிங்காதிபதி' என்ற பட்டம் காங்கேயதேவரால் பூணப் பட்டது. துவக்கத்தில் பரமார போஜர் இவரது கூட்டாளியா யிருந்து குந்தள நாட்டின்மீது படையெடுத்தார் என்பதைப் பார்த்தோம். ஆனால், விரைவிலேயே இவ் விருவருக்கும் இடை யில் பகைமை முளைத்தது. அப்பொழுது மூண்ட போரில் போஜ ரிடம் காங்கேயதேவர் தோற்றார். 'போஜ-காங்கேய பிரபந்தம்', 'பாரிஜாத மஞ்சரி' போன்ற சமண நூல்களும் இப் போர்பற்றிக் கூறுகின்றன. சந்தெல்ல அரசர் விஜயபாலர்மீது காங்கேய தேவர் தொடுத்த போரும் தோல்வியில் முடிந்தது. பிரயாகை, காசி ஆகிய பகுதிகள் அப்பொழுது பால அரசர்கள் வசமிருந் தன. கி.பி. 1030ஆம் ஆண்டு வாக்கில் அவற்றைக் காங் கேயர் கைப்பற்றிக் கொண்டார். இங்கிருந்து கிழக்காகச் சென்று, பால அரசர் மகிபாலர் வசமிருந்த வங்கத்தையும் (பாகல்பூர் மாவட்டம்) காங்கேயதேவர் வென்றார். இதற்குப் பின்னர், கி.பி. 1034-ல் பஞ்சாபை ஆண்டு கொண்டிருந்த கசினி சுல்தானின் ஆளுநரான அகமத் நியால்திஜின் என்பவர் வாராணசிமீது படையெடுத்துவந்து, அதைக் கைப்பற்றிப் பெருஞ் செல்வத்தைக் கவர்ந்து சென்றார். இதற்குப் பதில் நடவடிக்கையாகப் பஞ்சாபில் முஸ்லிம்களின் ஆளுகையின் கீழ் இருந்த காங்ரா (கீரம்) பள்ளத்தாக்கின்மீது காங்கேயதேவர் படையெடுத்துச் சென்று சூறையிட்டுத் திரும்பினர்.

இவரது பெருமை

தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்களை இம் மன்னர் வெளி யிட்டார். கலச்சூரி அரசர்களில் நாணயங்களை அச்சிட்டு வெளி யிட்ட ஒரே அரசர் இவரே. தலைப்பக்கத்தில் காங்கேயதேவரது பெயரும் பின்பக்கத்தில் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் லக்ஷ்மி யின் உருவமும் இவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. எளிமை யும் நேர்த்தியும் வாய்ந்த நாணயங்கள் அவை என்று கன்னிங் ஹாம் வர்ணித்தார். பெரும் எண்ணிக்கையில் இவை நமக்குக் கிடைத்துள்ளன. பிரயாகையில் தமது இறுதிக் காலத்தைக் கழித்து இம் மன்னர் உயிர் நீத்தார். கி.பி. 1040ஆம் ஆண்டு வாக்கில் இவரது ஆட்சி முடிவுற்றிருக்க வேண்டும். கலச்சூரி அரசர்களுள் முக்கியமான ஒருவர் காங்கேயதேவர். இவரால் எழில்மிக்க ஓர் ஆலயம் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், அது இப்போது காணப்படவில்லை. இம் மன்னர் சைவராயிருந்தார் என்பது 'பரமமகேசுவரர்' என்ற பட்டத்தால்

தெரிகிறது. வடகிழக்கில் பிரயாகை வரையில் இவரது அரசு விரிவடைந்திருந்தது.

லக்ஷ்மிகர்ணர்

காங்கேயதேவரது மகனான லக்ஷ்மிகர்ணர் கி.பி. 1040ஆம் ஆண்டு வாக்கில் திரிபுரியில் அரசராகி ஏறத்தாழ முப்பதாண்டு காலம் வரை பெரும் கீர்த்தியோடு ஆட்சி புரிந்தார். வாராணசிச் செப்பேடு, கோகர்வாச் செப்பேடு (Goharwa, Allahabad District) போன்ற பல முக்கியமான சாசனங்கள் இவரைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. ரஸ் மாலா (Ras Mala), பிரபந்த சிந்தாமணி, ராம சரிதம் போன்ற நூல்களும் இவரது ஆட்சி பற்றிச் சான்று பகர்கின்றன. கர்ணர், கர்ணதேவர் என்றும் இவர் அழைக்கப்பட்டாலும்கூட, லக்ஷ்மிகர்ணர் என்பதே இவரது முழுப்பெயராகும்.

இவர் நிகழ்த்திய போர்கள்

கலச்சூரி அரசர்களுள் மட்டுமின்றி, அக்காலத்திய அரசர்களிடையேயுங்கூடப் பேராற்றல் மிக்க மன்னராக விளங்கியவர் லக்ஷ்மிகர்ணர். இவர் ஆட்சிக்கு வந்த போது வாராணசி, பிரயாகை (அலகாபாத்) ஆகியவை வரையில் இவரது அரசு வடக்கில் விரிவடைந்திருந்தது. மேலும் அதை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு, பால அரசின்மீது இரு படையெடுப்புகளை இம் மன்னர் நிகழ்த்தினர். இவ்விரண்டும் பால அரசர்களான நய பாலர், அவரது மகனான மூன்றாம் விக்கிரக பாலர் ஆகியோரின் காலத்தில் நிகழ்ந்தன. லக்ஷ்மிகர்ணரின் மகளான யவ்வன ஸ்ரீயை விக்கிரக பாலர் மணந்து சமாதானம் செய்து கொண்டார். மேற்கு வங்காளமான ராதமும் கிழக்கு வங்காளமான வங்கமும் லக்ஷ்மிகர்ணரால் வெல்லப்பட்டன. ராதத்தின் அரசர் ரணசூரரோ அல்லது அவருக்கு அடுத்த அரசரோ கலச்சூரி அரசருக்குப் பணிந்தார். வங்கத்து அரசரான ஜாடவர்மன் கர்ணரின் மகளான வீரஸ்ரீயை மணந்து போரை முடித்துக் கொண்டார். பால அரசின் இறுதிக் காலத்தில் வங்காளத்திலும் கிழக்குப் பீகாரிலும் அமைந்திருந்த பல அரசுகளைக் கர்ணர் எளிதில் வென்றார் என்பதில் ஐயமில்லை.[1]

வேறு போர்கள்

அடுத்தபடியாக, ஒரிசாவின்மீதும் கர்ணர் படையெடுத்தார். கலிங்க நாட்டில் கீழைக் கங்க வம்சத்தைச் சேர்ந்த ஐந்தாவது வஜ்ரஹஸ்தர் (Vajrahasta) என்பவரும், ஒட்டர நாட்டை (Odra) ஆண்டு கொண்டிருந்த ஓர் அரசரும் கர்ணரால்

[1] R. C. Majumdar, Editor, *History of Bengal.*

தோற்கடிக்கப்பட்டனர். இதன் பின்னர்க் காஞ்சி விஷயம் (காஞ்சிபுரத்தைச் சுற்றியிருந்த பகுதி) என்பதையும், பல்லவர்கள், கொங்கு நாட்டரசர்கள், பாண்டியர்கள், கேரளத்தைச் சேர்ந்த முரலர்கள் ஆகியோரையும் இவர் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. லக்ஷ்மிகர்ணர் பேராற்றல் மிகுந்த அரசர் என்றாலும், தெற்கில் இவ்வளவு தூரம் படையெடுத்து வந்தார் என்ற கூற்று வழக்கமான திக்விஜயக் கதையே என்பதில் ஐயமில்லை. இதுபற்றிக் கூறும் இவரது ரேவாக் (Rewa) கல்வெட்டு (கி.பி. 1048) குந்தள நாட்டின்மீது இவர் படையெடுத்ததையும் கூறுகிறது. சாளுக்கியருக்கும் கலச்சூரிகளுக்கும் இடையே பல தலைமுறைகளாகவே பகைமை இருந்து வந்ததால், குந்தள நாட்டின்மீது அவர் படையெடுத்த செய்தி உண்மையாகவே இருக்கலாம். அவ்வாறானால், அவரால் படையெடுக்கப்பட்ட சாளுக்கிய அரசர் முதலாம் சோமேசுவரரே.

கி.பி. 1052-ல் கர்ணர் சந்தெல்ல அரசர் கீர்த்தி வர்மனைத் தோற்கடித்து, பண்டேல்கந்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால், கீர்த்திவர்மன் தனது சிற்றரசரான கோபாலரது உதவியோடு விரைவிலேயே தன் நாட்டை மீட்டுக் கொண்டான். மாளவத்துக்கு வடமேற்கிலிருந்த ஹூண மண்டலமும் கர்ணரால் தாக்கப்பட்டது. மாளவம் பரமார போஜரால் அப்பொழுது ஆளப்பட்டு வந்தது. சாளுக்கியப் பேரரசர் முதலாம் சோமேசுவரர் சில ஆண்டுகளுக்கு முன்தான் பரமார அரசின்மீது போர் தொடுத்து, தலைநகரான தாராவையும் சூறையாடியிருந்தார். இவ்வாறு பரமார அரசு உருக்குலைந்திருந்த வேளையில் குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் முதலாம் பீமரும் லக்ஷ்மி கர்ணரும் கூட்டுச் சேர்ந்து, மேற்கிலும் கிழக்கிலுமாக மாளவத்தின்மீது இருமுனைத் தாக்குதல் தொடுத்தனர். இவ்வாறு போர் நடந்து கொண்டிருக்கையில், கி.பி. 1055ஆம் ஆண்டு வாக்கில் நோய்வாய்ப்பட்டுப் போஜர் இறக்கவே, பரமார அரசு பகைவர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டது. போஜருக்கு அடுத்த அரசரான முதலாம் ஜெயசிம்மர் பரமாரர்களின் பகைவரான சாளுக்கிய அரசர் முதலாம் சோமேசுவரரின் உதவியை வேறு வழியின்றி நாடினர். சாளுக்கியப் படைகள் அரசகுமாரரான ஆறும் விக்கிரமாதித்தியரின் தலைமையில் வந்து பரமார அரசிலிருந்து கர்ணரையும் பீமரையும் விரட்டியடித்தன.[1]

இதற்குப் பின்னர் லக்ஷ்மிகர்ணருக்கும் முதலாம் பீமருக்குமிடையே பகைமை மூண்டது. பரமார அரசில் கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதுபற்றித் தகராறுகள்

[1] Pratipal bhatia, *The Paramaras.*

ஏற்பட்டன போலும்! பீமர் பெரும் படை ஒன்றுடன் தாகல மண்டலத்தின்மீது படையெடுத்து வந்தார். கர்ணர் போரில் தோற்கடிக்கப்படவே, தகராறுக்குக் காரணமாயிருந்த பல பொருட்களையும், யானை குதிரைகளையும் பீமர்வசம் அவர் ஒப்படைக்க வேண்டிய கதி வந்துசேர்ந்தது.

இம் மன்னரின் பெருமைகள்

கலச்சூரி அரசர்களுள் மிகவும் சிறந்தவராக லக்ஷ்மிகர்ணர் விளங்குகிறார். இவர் சைவர். காசியில் கர்ணமேரு என்ற ஒரு ஆலயத்தை இவர் கட்டினார். திரிபுரிக்கு ஒரு கல் தொலைவில் கர்ணவதி என்ற நகரையும் இவர் நிறுவினார். இதுவே கரண்பெல் என்ற பெயரில் இன்று உள்ளது. 'திரிகலிங்காதிபதி' என்ற பட்டத்தையும் இவர் சூடியிருந்தார். ஹூணமண்டலத்தின் மீதான படையெடுப்பின் விளைவாக, ஆவல்ல தேவி என்ற ஹூண அரசகுமாரியை இவர் திருமணம் செய்து கொண்டார். இந்த ஆவல்ல தேவிக்கு யசகர்ணர் என்ற மகன் பிறந்தான். முதுமை எய்தியதால், கி.பி. 1072ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குச் சிறிது முன்போ லக்ஷ்மிகர்ணர் தம் மகன் யசகர்ணருக்குப் பட்டம் சூட்டிவிட்டு ஓய்வு பெற்றார்.

யசகர்ணர்

லக்ஷ்மிகர்ணரின் மகனான யசகர்ணரது காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. இவர் இரண்டு படையெடுப்புகளை நிகழ்த்தினார். ஒன்று, தெற்கில் கிழக்குச் சாளுக்கிய அரசர் ஏழாம் விஜயாதித்தியர் ஆண்டுவந்த வேங்கி நாட்டின்மீதும், மற்றது கங்கை நதிக்கு வடக்கிலான பீகாரின் வட பகுதியிலிருந்த சம்பாரன் மாவட்டத்தின்மீதும் நிகழ்த்தப்பட்டன. இவற்றுக்கான காரணங்களும் இவற்றின் விளைவுகளும்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. கல்யாணிச் சாளுக்கிய அரசரான ஆறும் விக்கிரமாதித்தியரது தம்பி ஜெயசிம்மர் என்பவர் 1080ஆம் ஆண்டு வாக்கில் தாகல மண்டலத்தின்மீது படையெடுத்து வந்தார். காகதவால அரசர்களான சந்திர தேவரும் யசகர்ணருக்கு எதிராகப் படையெடுத்து வந்து அலகாபாதையும்[1] வாராணசியையும் கைப்பற்றிக் கொண்டார். பரமார அரசர் லக்ஷ்மதேவர் மற்றொரு முனையிலிருந்து தாக்கித் திரிபுரியைக் கைப்பற்றிக் கொள்ளையிட்டார். இந்தக் குழப்பத்தையெல்லாம் கண்டு சந்தெல்ல அரசர் சல்லக்ஷணவர்மனும் கூடச் சேடி நாட்டின்மீது படையெடுத்தார். இத்தகைய படையெடுப்புகளால் கலச்சூரி அரசு பெரிதும் நிலைகுலைந்தது.

[1] அக்பர் திரிவேணி சங்கமத்துக்கு அருகிலுள்ள இடத்துக்கு 'இலாஹாபாத்' என்று பெயரிட்டார். எக்காரணம்பற்றியோ ஆங்கிலேயர் அதை 'அலகாபாத்' என்று திரித்துவிட்டார்கள்!

இவற்றை யெல்லாம் சமாளித்து அவ் வரசால் எவ்வாறு நிலைத்திருக்க முடிந்தது என்பதே வியப்பாக உள்ளது! அலகாபாதும் வாரணசியும் மட்டுமே கலச்சூரிகளால் கைவிடப்பட்டன. மற்றப்படி, மற்றுமுள்ள பகுதிகள் அனைத்தும் யசகர்ணர் வசமே தொடர்ந்து இருந்தன. இவரது ஆட்சிக் காலமும் தெளிவாகப் புலப்படவில்லை. சுமார் நாற்பதாண்டுகள் இவர் ஆட்சிபுரிந்திருக்கக் கூடுமென்று ஊகிக்கப்படுகிறது.

கயாகர்ணர்

யசகர்ணரின் மகனான கயாகர்ணரின் தீவார் (Tewar) கல்வெட்டு இவர் கி.பி. 1151-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. (தீவார் என்ற இன்றைய ஊர் பழங்காலத்துத் திரிபுரியேயன்றி வேறில்லை.) இம் மன்னர் சைவர் என்பதை இக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அல்ஹணதேவி என்ற குகில அரசகுமாரியை இவர் மணந்திருந்தார். இவ் வரசியின் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. கயாகர்ணருக்கும் அல்ஹணதேவிக்கும் நரசிம்மன், ஜெயசிம்மர் எனும் இரு பிள்ளைகள் இருந்தனரென்பதையும் இவ்வம்மையாரின் கல்வெட்டின் மூலம் அறிகிறோம். சந்தெல்ல அரசரான மதனவர்மன் கயாகர்ணரின்மீது போர் தொடுத்து அவரைத் தோற்கடித்தார் பல பகுதிகளை மதனவர்மன் கைப்பற்றிக் கொண்டார் என்பது அங்குக் கிடைக்கும் அவரது நாணயங்கள்மூலம் தெரிகிறது. ரத்தன்பூரைச் சேர்ந்த கலச்சூரிகள் இதுதான் சரியான சமயமென்று சுதந்திரம் பெறலாயினர். மெருதுங்கரின் 'பிரபந்த சிந்தாமணி' குஜராத்தின்மீது கயாகர்ணர் படையெடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது அப்பொழுது குஜராத்தில் சௌளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த குமாரபாலர் ஆட்சிநடத்தி வந்தார். படைசூழ வந்துகொண்டிருந்த கயாகர்ணர் யானைமீது அமர்ந்தபடியே களைப்பினால் தூங்கிவிட்டாரென்றும், அப்பொழுது அவரது கழுத்திலிருந்த பொற்சங்கிலி ஆல விழுது ஒன்றில் மாட்டிக் கொள்ளவே அச் சங்கிலியே சுருக்காகி அவர் இறந்து போனார் என்றும் மெருதுங்கர் எழுதுகிறார்.[1] இக் கதை எவ்வாறாயினும், படையெடுப்பின்போது கயாகர்ணர் இறந்திருக்கக் கூடும். கயாகர்ணரின் மரணம் கி.பி. 1151க்கும் 1155க்குமிடையில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

நரசிம்மர்

கயாகர்ணரின் மகனான நரசிம்மர் கி.பி. 1155க்கு முன் அரியணை ஏறினார். இவரது தாயான அல்ஹணதேவியின்

[1] A. K. Majumdar, *Chaulukyas of Gujarat*. G. C. Choudhary, *Political History of Northern India from Jain Sources*.

கி.பி. 1155 ஆம் ஆண்டைச் சேர்ந்த பேராகட் (Bheraghat) கல்வெட்டு அவ்வாண்டில் அவர் அரியணையில் இருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் ஜபல்பூர் மாவட்டத்தில் நர்மதையின் கரையிலுள்ளது பேராகட் என்ற ஊர். இவரது காலத்தைச் சேர்ந்த மற்றுமிரு கல்வெட்டுகள் கிடைத்துள்ளனவாயினும், இவரது ஆட்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவை குறிப்பிடவில்லை.

ஜெயசிம்மர்

நரசிம்மரது தம்பியான ஜெயசிம்மர் கி.பி. 1167ஆம் ஆண்டுக்கு முன்பு எப்பொழுதோ அரசரானார். இவரது காலத்தைச் சேர்ந்த நான்கு சாசனங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. எனினும், இவரது காலத்திய நிகழ்ச்சிகளை அவை அதிகம் குறிப்பிடவில்லை. இவரது மகனான விஜயசிம்மரின் கும்பிச் (Kumbhi) செப்பேடானது கூர்ஜர அரசர், துருக்ஷர், குந்தள நாட்டுச் சிற்றரசன் ஒருவன் ஆகியோர் ஜெயசிம்மரைக் கண்டு நடுங்கியதாகத் தெரிவிக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு, குஜராத்தையாண்ட சௌளுக்கிய அரசர் குமாரபாலர், குந்தள நாட்டிலிருந்த ஒரு குறுநில மன்னனான கலச்சூரி வம்சத்து பிஜ்ஜலர் (Bijjala) ஆகியோரை நரசிம்மர் தோற்கடித்தார் என்று டாக்டர் கங்குலி எழுதுகிறார். இவர்மீது போரிட்ட துருக்ஷர் பஞ்சாபிலிருந்து படையெடுத்து வந்த குஸ்ராவ் மாலிக்காகவே இருக்க வேண்டும் என்பதும் கங்குலி அவர்களின் கருத்து.[1] ஆயினும், இவைபற்றி உறுதியாக முடிவு கூறுவதற்கில்லை.

இந்த வம்சத்தின் முடிவு

விஜயசிம்மர்

கி.பி. 1180க்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயசிம்மர் இறந்து, அவரது மகனான விஜயசிம்மர் அரசரானார். திரிபுரிக் கலச்சூரிகளில் கடைசி அரசர் இவரே யாவார். இவரது காலத்தைச் சேர்ந்த சில செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளனவாயினும், இவரது ஆட்சியைப்பற்றி நன்கு தெரிந்து கொள்வதற்கு அவை பயன்படவில்லை கி.பி. 1211 வரையில் இவர் ஆட்சிபுரிந்தார் என்பது உறுதியாகத் தெரிகிறது. அதற்கு அடுத்த ஆண்டிலேயே சந்தெல்ல அரசர் திரைலோக்கியவர்மன் இவரது அரசிலிருந்த பகேல்கந்து (Baghelkhand) போன்ற பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் பின்னர், ஒரு சிறு பிரதேசம் மட்டுமே விஜயசிம்மர்வசம் இருந்

[1] R. C. Majumdar, Editor, *The Struggle for Empire.*

திருக்கக் கூடும். இவருக்குப் பட்டத்து வாரிசாக அஜயசிம்மர் என்ற ஒரு மகன் இருந்தார். இவர் தம் தந்தைக்குப் பின் அரசரானாரா என்பது போன்ற தகவல் எதுவும் தெரியவில்லை. ஜபல்பூர் மாவட்டத்தில் குறுநில மன்னர்களாகவே இவ் வம்சத்தினர் மேலும் சிறிது காலம் தொடர்ந்து ஆண்டிருக்கக் கூடுமென்று கருதுவதற்கு இடமிருக்கிறது. இப் பகுதியே பின்னர் கோண்டுவானா (Gondwana) என்றழைக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் கோண்டுவானாவில் இவர்கள் ஆண்டிருக்கக் கூடும்.

பண்டேல்கந்து பிரதேசத்தைக் கி.பி. 1251ஆம் ஆண்டு வாக்கில் டெல்லி சுல்தான்கள் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் ஆளுநர்கள் பண்டேல்கந்தில் தொடர்ந்து ஆட்சிபுரிந்தனர். அவர்களுக்கு அடங்கிய சுதேச அரசர்களாகக் கலச்சூரிகள் ஆட்சிபுரிந்திருக்கலாம்.

வம்சாவளி

- முதலாம் கோகல்லர்
  - சங்கர கானர்
    - பாலஹர்ஷர்
    - முதலாம் யுவராஜர்
      - லக்ஷ்மண ராஜர்
        - இரண்டாம் சங்கரகானர்
        - இரண்டாம் யுவராஜர்
          - இரண்டாம் கோகல்லர்
            - காங்கேய தேவர்
              - லக்ஷ்மி கர்ணர்
                - யசகர்ணர்
                  - கயாகர்ணர்
                    - நரசிம்மர்
                    - ஜெயசிம்மர்
                      - விஜயசிம்மர்
                        - (அஜயசிம்மர்)

2. சரயுபாரக் கலச்சூரி அரசு

ராஜபுத்திரர்

உத்தரப் பிரதேசத்தில் பரேச் (Bhraich), கோண்டா (Gonda) ஆகிய மாவட்டங்களின் குறுக்கே கோக்ரா நதி ஓடு கிறது. இந்த நதியே பண்டைக் காலத்தில் சரயு என்று அழைக்கப்பட்டது. இப் பிரதேசத்தில் கலச்சூரிக் கிளை வம்ச மொன்று ஓர் அரசை நிறுவியிருந்தது. சரயு நதிக்கரையில் இருந்ததால், சரயுபாரம் (Sarayupara) என்று இப் பிரதேசம் அக் காலத்தில் அழைக்கப்பட்டது. மகாராஜாதிராஜ சோத தேவர் (Sodhadeva) என்பாரது கஹ்லாச் செப்பேடு (கோரக்பூர் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமே கஹ்லா) இக் கலச்சூரிக் கிளை வம்சத்தின் வம்சாவளிப் பட்டியலை நமக்குத் தருகிறது. அதன் படி, சரயுபாரக் கலச்சூரி அரசை நிறுவிய முதலாவது அரசர் ராஜபுத்திரர் என்னும் பெயருடையவர் என்று அறிகிறோம். 'ராஜா ராஜபுத்திரர்' என்ற இவரது வம்சமானது வேத, இதி காச காலங்களைச் சேர்ந்த பல முனிவர்கள், அரசர்கள் ஆகியோ ரது வழியில் வந்தது என்று இச் சாசனம் வழங்குகிற புனைந் துரையை நாம் தள்ளிவிடலாம். இந்த ராஜபுத்திரர் கி.பி. எட் டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டிருக்கலாமென்று டாக்டர் கீல்ஹார்ன் கருதினார். இவருக்குப் பின் பன்னிரண்டாவது அரச ராக, சோத தேவர் ஆண்டார். எனவே, 250 ஆண்டுகள் கழிந் தன என்று கொள்ளலாம். கஹ்லாச் செப்பேடு கி.பி. 1031ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. எனவே, ராஜபுத்திரர்களது காலம் (1031 — 250 = 781) எட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி என்று அந்த அறிஞர் கணக்கிட்டார். அரசர் ராஜ புத்திரர் துரகபதி, வாகலி (Vahali), கீர்த்தன் (Kiritin) போன்ற பலரை வென்று கிழக்கு நோக்கித் தமது அரசை விரிவுபடுத் தினார் என்று கஹ்லாச் செப்பேட்டில் கூறப்படுகிறது. இங்குக் குறிப்பிடப்படும் அரசர்கள் யாவர் என்பது விளங்கவில்லை. அக் காலத்தைச் சேர்ந்த வங்காள அரசர் தர்மபாலர் உத்தரப் பிர தேசத்தின்மீது படையெடுத்து வந்தபோது, அப் படை யெடுப்பை எதிர்த்து ராஜபுத்திரர் போரிட்டிருக்கக் கூடுமென்று நாம் கருதலாம்.

குணம்போதி தேவர்

ராஜபுத்திரருக்குப் பின் அவரது மகனான முதலாம் சிவராஜ ரும், அவருக்குப் பின் அவரது மகனான முதலாம் சங்கரகானரும் அரசராயினர். சிவராஜரைப்பற்றி அவர் பெயர் தவிர வேறு

எச் செய்தியும் தெரியவில்லை. சங்கரகானர் திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரி அரசர் முதலாம் கோகல்லரின் காலத்தைச் சேர்ந்தவர். இந்தக் கோகல்லர் சரயுபாரத்து அரசரான சங்கர கானருக்கு 'அச்சத்திலிருந்து விடுதலையளித்தார்' என்று லக்ஷ்மி கர்ணரது வாராணசிச் செப்பேடு கூறுகிறது. இதன் பொருள் நமக்கு விளங்கவில்லை. சங்கரகானரைத் தோற்கடித்து, அல்லது வேறு பகைவன் எவனிடமிருந்தோ அவரைக் காத்து, தம் பாது காப்பின் கீழ் அவரைக் கோகல்லர் கொண்டு வந்திருக்கக் கூடும். கோகல்லருக்கு அடங்கிய சிற்றரசராகவே சங்கரகானர் வாழ்ந்தார் போலும்!

சங்கரகானருக்குப் பின் அவரது மகனான குணம்போதி தேவர் அரசரானார். இவர் முதலாம் குணசாகரர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் பிரதிகார அரசர் போஜருக்குத் துணையாக நின்று பால அரசின்மீதான அவரது படையெடுப் பின் போது உதவிபுரிந்தார். இதனால் மகிழ்ந்த போஜர் இப் படையெடுப்பின் முடிவில் ஏதோ ஒரு பிரதேசத்தைக் குணம்போதி தேவருக்கு வழங்கினார் என்பது கஹ்லாச் செப் பேட்டின்மூலம் உணரப்படுகிறது. இம் மன்னர் கி.பி. ஒன்ப தாம் நூற்றாண்டின் பின் பாதியில் ஆட்சிபுரிந்த கூர்ஜரப் பிரதி கார அரசர் முதலாம் போஜரது காலத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிகிறது. போஜரால் இவ்வாறு அளிக்கப்பட்ட பிரதேசம் சரயுபாரத்துக்குக் கிழக்கில் இருந்த இன்றைய கோரக்பூர் மாவட்டமே என்று கருதலாம். இம் மாவட்டத்தில் மலயகேது என்ற வம்சத்தைச் சேர்ந்த மகாராஜாதிராஜ ராஜாக்கள் முதலாம் ஜெயாதித்தியர், அவரது மகன் தர்மாதித்தியர், தர்மாதித்தியரது மகன் இரண்டாம் ஜெயாதித்தியர் ஆகிய மூவர் விஜயபுரம் என்ற நகரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்தனர் என்பது இரண்டு கல்வெட்டுகளால் தெரிகிறது. மூன்றாவது அரசரான இரண்டாம் ஜெயாதித்தியர் கி.பி. 870-ல் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார் என்பது அக் கல்வெட்டுகள் ஒன்றில் காணப்படும் தேதியால் நன்கு தெரிகிறது. ஆனால், இதற்குப் பின் கலச்சூரிகளின் கல்வெட்டுகளும் சாசனங்களுமே இப் பகுதியில் காணப்பட்டன. எனவே, இப் பகுதியையே பிரதிகார அரசர் போஜர் வென்று குணம்போதி தேவரிடம் ஒப்புவித்தார் என்று ஊகிப்பது தவறாகாது.

இவ்வரசின் முடிவு

குணம்போதி தேவருக்குக் காஞ்சனாதேவி, மதனதேவி என்ற இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள், காஞ்சனா

தேவிக்கு உல்லபர் என்பாரும், மதனதேவிக்குப் பாமானர் என்பாரும் பிறந்தனர். மூத்த மகனான உல்லபரே அடுத்து அரசரானார். இவரைப்பற்றிக் குறிப்பிடத்தக்க செய்தி எதுவும் தெரியவில்லை. ஏதோ காரணத்தினால் இவர் முடிதுறந்து தம் தம்பியான பாமானரிடம் செங்கோலை ஒப்புவித்தார். தாராவைச் சேர்ந்த ஓர் அரசரை எதிர்த்துப் பாமானர் போரிட்டு வெற்றி பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. அப்பொழுது தாராவில் அரசராக இருந்தவர் பரமாரரான இரண்டாம் வைரிசிம்மராகவே இருத்தல் வேண்டும். கூர்ஜரப் பிரதிகார அரசரான முதலாம் மகிபாலர் கி.பி. 930ஆம் ஆண்டு வாக்கில் பரமாரர்களிடமிருந்து மாளவத்தைக் கைப்பற்றினார். அப்பொழுது பாமான தேவர் பிரதிகார அரசருக்கு உதவிபுரிந்ததையே கஹ்லாச் செப்பேடு இவ்வாறு குறிப்பிடுகிறது போலும்! இதற்குமேல் இவ் வரசரைப்பற்றியும் தகவல்கள் தெரியவில்லை.

பாமான தேவரையடுத்து அரியணை ஏறிய இரண்டாம் சங்கரகானர், இரண்டாம் குணசாகரர், இரண்டாம் சிவராஜர், மூன்றாம் சங்கரகானர், பீமர் ஆகிய ஐவரது பெயர்கள் மட்டுமே தெரிகின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு முந்திய அரசருக்கு மகனாவர். பீமருடைய ஆட்சியின் இறுதியில் இரண்டாம் குணசாகரரது மகனான வியாசர் பீமரை அரியணையிலிருந்து அகற்றிவிட்டுத் தாமே அரசரானார். எதனால் இவ்வாறு செய்யப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை. கி.பி. 1031ஆம் ஆண்டில் இது நிகழ்ந்தது என்பது மட்டும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்த வியாசரது மகனே கஹ்லாச் செப்பேட்டை வெளியிட்ட மகாராஜாதிராஜ சோத தேவராவார். வியாசருக்குப் பின் அரசரான சோததேவர் கி.பி. 1079-ல் இச் செப்பேட்டை வெளியிட்டதால், அவர் அப்பொழுது ஆண்டு வந்தார் என்பது நிச்சயம். 'மகாராஜாதிராஜர்' என்ற பட்டமானது இம் மன்னர் முழு உரிமை பொருந்திய மன்னராகத் திகழ்ந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. இச் செப்பேட்டில் கூறப்படும் பல இடப்பெயர்கள் இதுவரை அடையாளம் காணப்படாமல் உள்ளன. ஆயினும், கோத்ரா (சரயு) நதிக்கும் கண்டக் நதிக்கும் இடையிலான பகுதிகள் இவரால் ஆளப்பட்டன என்பது மட்டும் தெரிகிறது. உத்தரப் பிரதேசத்தில் பரேச் (Bahraich), கோண்டா (Gonda), பஸ்தி (Basti), கோரக்பூர் ஆகிய மாவட்டங்களும், பீகாரில் சரன் (Saran) மாவட்டமும் இவரது அரசில் அடங்கியிருந்தன.

சோததேவருக்குப் பின் இந்த வம்சத்தின் கதியைப்பற்றி அறிந்து கொள்வதற்கு எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. அந்

நூற்றுண்டின் இறுதி வாக்கில் வளர்ச்சியுற்ற காகதவால அரசு சரயுபாரக் கலச்சூரி அரசுக்கு முடிவு கட்டியது போலும்! மேலும் குறிப்பாகச் சொல்லப் போனல், கி.பி. 1090க்கு முன்பே ஆட்சிக்கு வந்துவிட்ட சந்திரதேவ காகதவாலரது அரசு சரயு நதி வரையில் பரவியிருந்தது என்பது அவரது சந்திராவதி செப் பேட்டின்மூலம் தெளிவாகிறது. சரயுபாரக் கலச்சூரிகளின் வரலாறு முழுவதையும் அறிந்து கொள்வதற்கு நமக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு சான்று கஹ்லாச் செப்பேடு மட்டுமே. இவர்களின் தலைநகரம் எவ்வூர் என்பதுகூடத் தெரியவில்லை.

3. ரத்தன்பூர்க் கலச்சூரிகள்

கலிங்கராஜர்

மத்தியப் பிரதேசத்தில் பிலாஸ்பூர் (Bhilaspur) மாவட்டத்தில் பதினென்ரும் நூற்றுண்டின் துவக்கத்தில் கலச்சூரிகள் மற்ருெரு சிற்றரசை நிறுவினர். இதை நிறுவியவர் கலிங்கராஜர் என்பவராவார். திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரி அரசை நிறுவியவரான முதலாம் கோகல்லரது பல பிள்ளைகளில் ஒருவரது வழியில் வந்தவர் கலிங்கராஜர் என்று கூறப்படுகிறது. இக் கலிங்கராஜர் தம்முடைய வம்சத்தினருக்குச் சொந்தமான திரித சௌரியம் (Tritasaurya) என்ற பிரதேசத்தை மேலும் வறுமையில் உழலுமாறு செய்ய விரும்பாமல், அதை விட்டகன்று தமது தோள்வலிமையால் தட்சண கோசலத்தை வென்றூர் என்று கூறப்படுகிறது. திரிதசௌரியம் என்பது திரிபுரிக் கலச்சூரி அரசின் ஏதோ ஒரு பகுதியாக இருக்கக் கூடும். தட்சண கோசலத்தில் தும்மாண (Tummana) என்ற ஊரைக் கலிங்கராஜர் தம் புதிய அரசுக்குத் தலைநகராக்கினூர். இவ் வூரானது பிலாஸ்பூர் மாவட்டத்தில் துமாண (Tumana) என்ற சிறு கிராமமாக இன்று உள்ளது. கலிங்கராஜர் திரிபுரிக் கலச்சூரிகளின்கீழ்ச் சிற்றரசராக இருந்து இப் பகுதியை ஆண்டு வந்தார்.

கமலராஜர்

கலிங்கராஜருக்குப் பின் அவரது மகனை கமலராஜர் தும்மாணுவில் அரசரானுர். இக் கலச்சூரி வம்சத்தின் முதலாவது சாசனம் அமோதாச் (Amoda) செப்பேடாகும். கலிங்கராஜர், கமலராஜர் ஆகியோர்பற்றிய செய்திகளை இச் செப்பேட்டின் மூலம் நாம் அறிந்து கொள்கிருேம். கமலராஜர் திரிபுரி அரசரான காங்கேய தேவரது காலத்தவர். காங்கேய தேவர் உத்கலத்தின் (ஒரிசா) மீது படையெடுத்தபோது கமலராஜரும் படை

யுடன் சென்று அவருக்கு உதவினுர். எனவேதான், உத்கல அரசரைக் கமலராஜர் தோற்கடித்தார் என்று அமோதாச் செப்பேடு குறிப்பிடுகிறது.

ரத்னராஜர்

கமலராஜரது மகன் ரத்னராஜர் என்பவரே தும்மாணுவில் அடுத்த அரசரானுர். ரத்னேசுவரர் என்றும் இவர் அழைக்கப் பட்டார். தும்மாணுவில் வெங்கேசர், ரத்னேசுவரர் முதலிய தெய்வங்களுக்கு ஆலயங்களை எழுப்பியதோடு நந்தவனங்கள், மாஞ்சோலை போன்ற பழச் சோலைகள், அரண்மனைகள் ஆகிய வற்றையும் இம் மன்னர் உருவாக்கினுராம். ஆயினும், இந்த ஊரை விடுத்து ரத்னபுரம் என்ற புதிய நகரம் ஒன்றை அழகுற நிர்மாணித்து அதனையே தமக்குரிய தலைநகராக்கிக் கொண் டார் இவ்வரசர். இப் புதிய நகரே இதுமுதல் தொடர்ந்து தலை நகராய் இருந்து வந்தது. இந் நகர் இன்று ரத்தன்பூர் என்ற பெயரில் பிலாஸ்பூருக்குப் பதினுறு கல் வடக்கிலுள்ளது. இவ் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாலேயே 'ரத்தன் பூர்க் கலச்சூரிகள்' என்று இவர்கள் அழைக்கப்படலாயினர். பிலாஸ்பூர் மாவட்டத்தின் மற்ருெரு பகுதி கோமோ மண்டலம் என்று அழைக்கப்பட்டது. (இன்றும் கோமோ என்ற கிராமம் அப் பகுதியில் உள்ளது.) அதையாண்ட வஜ்ஜுகர் அல்லது வஜுவர்மன் என்பாரது மகளாகிய நோநல்லா (Nonalla) என்ற பெண்ணை ரத்னராஜர் திருமணம் செய்து கொண்டார். இவ் வம் சத்தினரின் சாசனங்களெல்லாம் இம் மண உறவைப்பற்றிப் பெருமையோடு குறிப்பிடுவதால், ரத்னராஜருக்கும் அவரது சந்ததியினருக்கும் இந்த உறவினுல் மிகுந்த செல்வாக்கு ஓங்கி யிருத்தல் வேண்டும்.

பிருதிவி தேவர்

ரத்னராஜருக்குப் பின் அவரது மகன் பிருதிவி தேவர் அரச ரானுர். இவரது அமோதாச் (Amoda) செப்பேடே மேலே கூறப் பட்ட தகவல்கள் அனைத்தையும் நமக்குத் தருகிறது. இது கி.பி. 1079-ல் வெளியிடப் பட்டதால், பிருதிவி தேவரது காலத்தைக் கணிக்க முடிகிறது. (இவருக்கு முன் ரத்னராஜர், கமலராஜர், கலிங்கராஜர் ஆகியோர் ஆண்டதால், கலிங்கராஜர் தும்மாணு வில் தமது அரசை நிறுவிய காலம் அந் நூற்ருண்டின் முன் பகுதி என்று கணக்கிடுகிருேம்.) பிருதிவி தேவருக்குப் பிருதி வீசர் என்ற மற்ருெரு பெயருமுண்டு. இவரும் திரிபுரிக் கலச்சூரி அரசர்களுக்குக் கட்டுப்பட்ட ஒரு சிற்றரசராகவே இருந்தார்.

தும்மாணவில் பிருதிவி தேவேசுவரர் என்ற கடவுளுக்கு ஓர் ஆலயத்தைக் கட்டி, ரத்னபுரத்தில் ஓர் ஏரியையும் பிருதிவி தேவர் அகழ்ந்தார். இவருக்கு ராஜல்லதேவி என்ற மனைவி இருந்தார்.

முதலாம் ஜாஜல்ல தேவர்

பிருதிவி தேவருக்கும் ராஜல்ல தேவிக்கும் பிறந்த முதலாம் ஜாஜல்ல தேவர் என்பவரே அடுத்து அரசரானார். கி.பி. 1114ஆம் ஆண்டைச் சேர்ந்த இவரது கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. அப்பொழுது திரிபுரிக் கலச்சூரி அரசு சீர் குலைந்த நிலையில் இருந்தது. யசகர்ணர் காலத்தில் கல்யாணிச் சாளுக்கியர்கள், காகதவாலர்கள், பரமாரர்கள், சந்தெல்லர்கள் ஆகியோர் சேடி நாட்டின்மீது படையெடுத்து அதை நிலை குலையச் செய்தனர் என்பதை முன்பே பார்த்தோம். பரமார அரசர் லக்ஷ்மதேவர் சேடிகளின் தலைநகரமான திரிபுரியையே கைப்பற்றிச் சூறையாடினார். இவ்வாறு சேடி அரசர்கள் சிறுமைப்பட்டுக் கிடந்த வேளையில் ஜாஜல்ல தேவர் சுதந்திர அரசராக ஆயினார். யசகர்ணருக்குப் பகைவர்களான சந்தெல்ல அரசர் சல்லக்ஷண வர்மனுடனும் காகதவால அரசர் கோவிந்த சந்திரருடனும் இம் மன்னர் நட்புறவு கொண்டிருந்தார். இம் மன்னரது கல்வெட்டானது இவரது போர்களைப்பற்றியும் தெரிவிக்கிறது. பஸ்தார் (Bastar) பகுதியிலுள்ள சக்கரக் கோட்டத்தைச் சேர்ந்த சோமேசுவரர் என்ற நாகவம்ச அரசரை இவர் சிறைப்பிடித்தாராம். ஒரிசாவில் இன்றைய சோன்பூர்ப் (Sonpur) பகுதியில் ஆண்டு கொண்டிருந்த புஜவலர் என்ற ஒரு சிற்றரசரையும் ஜாஜல்லர் தோற்கடித்தார். அண்டையிலிருந்த பல சிற்றரசர்களிடமிருந்து திறைகளும் இவர் வசூலித்தார். கி.பி. 1125-லோ அல்லது அதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னரோ இம் மன்னர் காலமானார். ரத்னபுரிக் கலச்சூரி அரசின் முதலாவது சுதந்திரமான அரசர் இவரே. இவருக்குத் தேவராஜர் என்ற சிறந்த தலைமையமைச்சர் ஒருவர் இருந்தார்.

இரண்டாம் ரத்ன தேவர்

ஜாஜல்ல தேவரது மகன் இரண்டாம் ரத்னதேவர் கி.பி. 1125ஆம் ஆண்டு வாக்கில் அரசரானார். 'சகல கோசலத்துக்கும் (கோசலம் முழுமைக்கும்) அரசர்' என்று இவர் குறிப்பிடப் படுகிறார். தெற்குக் கோசலத்தில் ஆண்டு கொண்டிருந்த சிற்றரசர்கள் அனைவரும் இவரது மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டனர் போலும்! சோடகங்க அரசரான அனந்தவர்மன் பல சிற்

றரசர்களின் துணையுடன் ரத்னதேவர்மீது படையெடுத்து வந்த போது விரட்டியடிக்கப்பட்டார். அண்டையிலிருந்த தலஹாரி பூமி (Talahari-bhumi) போன்ற பகுதிகள் இம் மன்னரால் கைப் பற்றப்பட்டன. இவரது தந்தையின் அமைச்சர்களான தேவ ராஜர், ஜகபாலர் ஆகியோர் இவரது காலத்திலும் தொடர்ந்து பதவியிலிருந்தனர்.

இவ் வம்சத்தின் முடிவு

இவரது மகனான இரண்டாம் பிருதிவிதேவர் கி.பி. 1218க்குப் பின் எப்போதோ அரசரானார் இவரது சாசனங்களில் கி பி. 1141, 1158 ஆகிய ஆண்டுகள் காணப்படுகின்றன. எனவே, 1141க்கு முன் தொடங்கி 1158க்குப் பின் இவரது ஆட்சி முடிவுற்றது. இவரது காலத்திலும் தொடர்ந்து அமைச் சராயிருந்த ஜகபாலர் என்பவர் ஜடேசுவரர் என்ற அரசரின் தாக்குதல்களை முறியடித்துப் பல கோட்டைகளையும் பிரதேசங் களையும் கைப்பற்றியதாகச் சொல்லப் படுகின்றது. ஜடேசுவரர் என்பவர் எவர் என்பதுபற்றியோ, அக் கோட்டைகளும் பிர தேசங்களும் எவை என்பனபற்றியோ உறுதியாக முடிவுக்கு வர இயலவில்லை. இம் மன்னருக்குப் பின் இவரது இளைய மகனான இரண்டாம் ஜஜ்ஜல தேவர் கி பி. 1160ஆம் ஆண்டு வாக்கில் அரசரானார். இவரது காலத்தில் தீரு (Dhiru) என்ற பகைவன் ஒருவன் தோன்றி, இவரது உயிருக்கும் பதவிக்கும் பெரும் ஆபத் தாக விளங்கினான் என்று ஒரு சாசனம் கூறுகிறது. இந்தத் தீரு என்பவன் எவன் என்பது புலப்படவேயில்லை. இவருக்குப் பின்னரே இவரது அண்ணனான ஜகதேவர் ஆட்சிக்கு வந்தார். அதுவரை கிழக்குத் தேசத்தில் எங்கோ இவர் வாழ்ந்து கொண் டிருந்தாராம். கி.பி. 1167க்குப் பின் ஜகதேவர் அரசரானார்.

கி.பி. 1180ஆம் ஆண்டு வாக்கில் ஜகதேவரது மகனான மூன்றாம் ரத்னதேவர் அரியணை ஏறினார். கி.பி. 1181-ம் ஆண்டைச் சேர்ந்த இவரது கரோத் (Kharod) கல்வெட்டு இவ ரது வரையிலான ரத்னபுரிக் கலச்சூரிகளின் பெயர்ப் பட்டியலை நமக்கு அளிக்கிறது. இவரைப்பற்றி வேறு செய்தி எதுவும் தெரியவில்லை. இவருக்குப் பின் இவரது பிள்ளைகளான மூன்றாம் பிருதிவி தேவர், பிரதாபமல்லர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவ ராக ஆட்சி செலுத்தினர். பிரதாபமல்லர் சிறு பையனாயிருக்கும் போதே அரசரானார். இவரது காலத்தில் கீழைக்கங்க அரச ரான மூன்றாம் அனங்கபீமரது அமைச்சனான விஷ்ணு என்பான் படையெடுத்து வந்தான். இப் படையெடுப்புக் கி.பி. 1218ஆம்

ஆண்டு வாக்கில் நடைபெற்றது. ஜகதேவர் முதலான அரசர்கள்பற்றியும் அவர்களது காலத்து நிகழ்ச்சிகள்பற்றியும் நன்கு உணர்வதற்கேற்ற சான்றுகள் கிடைக்கவில்லை. பிரதாபமல்லருக்குப் பின் அவரது கலச்சூரி வம்சம் தனது பழைய நிலையை இழந்து விட்டது போலும்! கலச்சூரிகள் குறுநில மன்னர்களாக மேலும் சிறிது காலம் அப் பகுதியில் ஆட்சி புரிந்திருக்கலாம். பிலாஸ்பூர் மாவட்டம் காடுகளும் மலைகளும் நிறைந்து, பழங்குடிகள் வாழ்கின்ற பகுதியாகவே இன்றுவரை இருந்து வருகிறது.

7. சௌளுக்கியர்கள்

பூர்விகம்

குஜராத்திலும் சௌராஷ்டிரத்திலும் கி.பி. பத்தாம் நூற்றுண்டு முதல் பதினுன்காம் நூற்றுண்டின் துவக்கம் வரையில் (941-1304) சௌளுக்கியர்கள் ஆட்சி புரிந்தனர். அக்காலத்தில் இப் பிரதேசமானது சமண சமயத்தின் கோட்டையாக விளங்கியது. சமண அறிஞர்கள் சௌளுக்கிய அரசர்களால் பெரிதும் போற்றப் பட்டார்கள். இச் சமணப் பெரியார்கள் எழுதிய ஏராளமான நூல்கள் சௌளுக்கியரின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு நிறையப் பயன்படுகின்றன. அக்காலத்து வேறு எந்த அரச வம்சத்துக்கும், சௌளுக்கியர் புற்றிக் கிடைக்கும் அளவுக்கு இலக்கியச் சான்றுகள் அமைந்தில்லையென்றே கூறலாம்.

ஆயினும், சௌளுக்கியர்களின் பூர்விகம்பற்றிய பிரச்சிஜேக்கு இன்னமும் முடிவு தெரியவில்லை. இவர்கள் கூர்ஜரர்களுள் ஒரு பகுதியினர் என்றும், அவர்களைப் போலவே இந்தியாவுக்கு வெளியிலிருந்து இங்கு வந்து குறியேறியவர்கள் என்றும் டாக்டர் D. R. பந்தர்கார் போன்ருேர் கருதினர். சுலக் என்ற பஹ்லவி சொல்லிலிருந்து சௌளுக்கியர் வந்தது என்றும், சுலக்குகள் வாழ்ந்த சோக்டியாளுவிலிருந்து இவர்கள் இந்தியாவுக்கு வந்தனர் என்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர். கூர்ஜரர்களது பூர்விகம்பற்றிய பிரச்சிஜேகளுக்கே இன்று வரை முடிவு ஏற்படவில்லை. எனவே, சௌளுக்கியர்கள் அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் வந்தவர்கள் என்ற கூற்றிஜே ஏற்றுக் கொள்வதற்கோ மறுப்பதற்கோ போதுமான ஆதாரங்கள் இல்லை.

சௌளுக்கியர்கள் என்ற சொல்லானது மூலராஜர் முதல் ஆட்சி புரிந்த அவ் வம்சத்து அரசர்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட்டது. அவர்களது சாசனங்களில் ஒரிரு இடங்களில் தான் சௌளுக்கிகள், சௌளக்கியர்கள் என்ற சற்று மாறுபட்ட பெயர்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவை கல்வெட்டுக்காரர்கள் செய்த பிழையாகவும் இருக்கலாம். மிகப் பெரும்பான்மையான இடங்களில் சௌளுக்கியர் என்ற சொல்லே

பயன்படுத்தப் படுவதால், அதுவே சரியான பிரயோகம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அக் காலத்தைச் சேர்ந்த சமண அறிஞர் ஹேமசந்திரர் வரைந்த 'திவ்யாஸ்ரய காவியம்' என்ற நூலில் சௌளுக்கியர், சுளுக்கியர், சௌளகர் என்று ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு விதமாக இவர்களைக் குறித்துள்ளார். நூலாசிரியரது தவறு என்றே இதை ஒதுக்கிவிட வேண்டும்.

மகாபாரதம், மார்க்கண்டேய புராணம், பிருகத் சம்ஹிதை போன்ற பல நூல்களில் சுளுக்கர்கள், சுளிகர்கள், சைலிக்கியர்கள் என்பன போன்ற பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை காஷ்மீரம் முதல் வட இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ்ந்த சில குலங்களின் பெயர்களாகக் குறிப்பிடப்படுகின்றன. இவர்களும் சௌளுக்கியர்களும் ஒரே பூர்விகத்தைச் சேர்ந்தவர்களா என்ற கேள்விக்கு விடை காண்பது முடியாது.

தக்கணத்தில் ஆட்சிபுரிந்த வாதாபி சாளுக்கியர்கள், வேங்கி சாளுக்கியர்கள் ஆகியோரது வழியில் வந்தவர்களே சௌளுக்கியர்கள் என்று கருதுவதற்கும் இடமுள்ளது. சாளுக்கியர் என்ற சொல்லே சிறிது திரிந்து சமஸ்கிருத இலக்கண விதிகளின்படி சௌளுக்கியர் என மாறிற்று என்று சிலர் கூறுவர். எனவே, எத்தகைய முடிவுக்கு வருவதும் கடினம். இந்தச் சௌளுக்கியர் (Chaulukya) என்ற சொல்லே சௌலுக்கியர் (Saulukya) என்றும் சோலங்கி (Solanki) என்றும் நாளடைவில் திரிந்தது. இப்பொழுது குஜராத்தில் சோலங்கிகள் என்றே ஒரு வகுப்பினர் இருப்பது கவனிக்கத் தக்கது. சௌளுக்கியர்களின் பூர்விகம் பற்றிய பிரச்சினைகள் பல்வேறு அறிஞர்களால் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட்ட பின்னரும் திட்டவட்டமான முடிவு எதுவும் ஏற்படவில்லை.[1]

சௌளுக்கிய வம்சத்தின் துவக்கம்

குஜராத்தில் சௌளுக்கிய வம்சத்தின் ஆட்சியைக் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் துவக்கி வைத்தவர் முதலாம் மூலராஜர். ஆனால், இவர் யார், எங்கிருந்து வந்தார் என்பன போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதும் சிக்கலாய் உள்ளது. 'பிரபந்த சிந்தாமணி' என்ற நூல் இதுபற்றி ஒரு கதையைக் கூறுகிறது. குஜராத்தில் எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் சாவடர்கள்

[1] Proceedings of the Indian History Congress III. K M. Munshi, *Glory that was Gurjaradesa.*

(Chavadas) என்போர் ஆட்சிபுரிந்து வந்தனர். பஞ்சாக்ஷரம் என்ற ஊர் இவர்களது தலைநகராயிருந்தது. இவர்கள் சாப்பர்கள், சாப்போட்கடர்கள் (Chapotkatas) என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களுள் கடைசி அரசர் சாமந்த சிம்மர் என்பவராவார். இவருக்குப் பூயதர் (Bhuyada) என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவரது காலத்தில் கனோஜில் கல்யாணகடகத்தை ஆண்டு கொண்டிருந்த அரசன் ஒருவனின் மூன்று குமாரர்கள் மாறுவேடத்தில் சோமநாதர் ஆலயத்திற்கு யாத்திரை வந்தனராம். அவர்களுள் ஒருவனான ராஜி என்பவனது குதிரைப் பயிற்சியைக் கண்டு மகிழ்ந்த சாமந்தசிம்மர் தம் தங்கை லீலாவதியை அவனுக்குத் திருமணம் செய்து தந்தாராம். லீலாவதிக்குப் பிறந்த மூலராஜரே அவருடைய தாய்மாமனான சாமந்த சிம்மரைக் கொன்று அரியணையைக் கவர்ந்து கொண்டாராம். இக் கதை பல்வேறு விவரங்களோடு பிரபந்த சிந்தாமணியில் விவரிக்கப்படுகிறது. இக் கதையில் எவ்வளவு உண்மை உள்ளது என்பது நமக்குத் தெரியாமற் போயினும், பூயதர் என்ற அரசர் ஆண்டு கொண்டிருந்தார் என்பதை வேறு சமண நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. சாப்பர்களின் ஆட்சிக்கு முடிவுகட்டிய பின்னரே மூலராஜர் அரியணையைப் பெற்றார் என்பது வேறு நூல்கள், சாசனங்கள் முதலியவற்றின் வாயிலாகத் தெரியவருகின்றது. சாப்பர்களின் குடும்பத்தினருடன் நெருங்கிய உறவு பூண்டிருந்த பின்னர், கி.பி. 940ஆம் ஆண்டு வாக்கில் அவர்களது அரசை மூலராஜர் கைப்பற்றிச் சௌளுக்கிய அரச வம்சத்தை நிறுவினார் போலும்! பின்னர், சாப்பர்கள் சௌளுக்கியர்களுக்குக் கட்டுப்பட்டு, குறுநில மன்னர்களாக மத்திய குஜராத்தில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையில் ஆண்டு வந்தனர்.

முதலாம் மூலராஜர்

சௌளுக்கிய வம்சத்தை நிறுவியவரான முதலாம் மூலராஜர் கி.பி. 941-ல் அரசரானார்.[1] (இவர் கி.பி. 961-ல் அரசரானார் என்றும் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[2]) அணகிலப்பாடகம் இவரது தலைநகராயிருந்தது. அணகிலப்பட்டணம், அணகிலவாதம் என்றும் இந் நகரம் அழைக்கப்பட்டது. இவரது ஆட்சி 995ஆம் ஆண்டு வரையில் நீடித்தது.

[1] இது மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணியில் கூறப்படும் தேதியை (விக்ரம அப்தம் 998) அடிப்படையாகக் கொண்டது.

[2] டாக்டர் H. C. ரே போன்றோர் மூலராஜரது செப்பேடு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு இத் தேதியைத் தருகின்றனர்.

மூலராஜரது போர்கள்

இவ் வம்சத்தினரின் கல்வெட்டுகள் இவரது தந்தையான ராஜியை 'மகாராஜாதிராஜர்' என்று குறிப்பிடுகின்றன. எனவே, இவர் (ராஜி) குஜராத்திலோ அல்லது அதை அடுத்திருந்த ஒரு பகுதியிலோ கூர்ஜரப் பிரதிகாரர்கள் போன்ற யாரோ சிலருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராக இருந்திருக்க வேண்டும். பிரதிகாரர்கள், ராஷ்டிரகூடர்கள் போன்ரேர் வலிமை குன்றி வந்த அக் காலத்தில் மூலராஜர் சாரஸ்வத மண்டலத்தையும் (சரஸ்வதி நதிப் பிரதேசம்) அதிலிருந்த அணகிலப்பாடக நகரையும் சாப்ப அரசரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார் என்பதை இவரது (மூலராஜரது) கடிச் (Kadi) செப்பேட்டின் மூலம் உணரலாம். தமது ஆட்சியை நன்கு நிலைநிறுத்திக் கொண்ட பின்னரே அண்டையிலிருந்த அரசுகளின்மீது மூலராஜர் போர் தொடுத்தார். மேற்கில் வர்தமானபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தரணிவாரகர் என்பவர் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார். (இந்த வர்தமானபுரமே இன்று வத்வான் என்று அழைக்கப்படுகிறது.) மூலராஜர் தரணிவராகரைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, அவரது அரசைக் கவர்ந்து கொண்டார். தரணிவராகர் அண்டையிலிருந்த ராஷ்டிரகூடச் சிற்றரசரான தவலரிடம் அடைக்கலம் புகுந்தார். தவலரின் பிஜரபுரக் கல்வெட்டு இதைத் தெரிவிக்கிறது. இந்தத் தரணி வராகர் அற்புத மண்டலத்தை ஆண்ட பரமார அரசராக இருக்கக் கூடும். (இவரைச் சாப்ப அரசர் என்று டாக்டர் கங்குலி கருதுகிருர்.) இதன் பின்னர், இன்றைய கட்ச் பகுதியின்மீதும் மூலராஜர் தாக்குதல் தொடுத்தார். கச்சதேசம் என்று அப்போது அழைக்கப்பட்ட இப் பிரதேசமானது லக்ஷர் என்ற அரசரால் ஆளப்பட்டு வந்தது. இப் படையெடுப்பு வெற்றிபெறவில்லை. சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஜூனகதுக்கு அருகில் வாமனஸ்தலி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துகொண்டிருந்த ஆபீர வம்சத்து அரசரான கிராகரிப்பு (Graharipu) என்பார்மீது மூலராஜர் படையெடுத்தார். கிராகரிப்புத் தோற்கடிக்கப்பட்டு, போர்க் கைதியாக அணகிலப்பாடகத்துக்குக் கொண்டு வரப்பட்டார். கிராகரிப்புக்கு ஆதரவாகக் கச்ச தேசத்து அரசர் லக்ஷர் மூலராஜரின்மீது போரிட்டார். போரில் லக்ஷர் கொல்லப்பட்டார். சிறிது காலத்திற்குப் பின்னர் கிராகரிப்புச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.[1]

வடக்கிலிருந்து சாகம்பரி சாகமான அரசர் விக்கிரகராஜரும், தெற்கிலிருந்து லாட்டத்துச் சிற்றரசரும், கல்யாணிச் சாளுக்கிய

[1] A. K. Majumdar, *Chaulukyas of Gujarat.*

அரசரான இரண்டாம் தைலப்பரது தளபதியான பாரப்பரும் (Barappa) மூலராஜர்மீது தாக்குதல் தொடுத்தனர். பாரப்பரும் சௌளுக்கியரே. (மத்தியப் பிரதேசத்திலும் சேடி நாட்டுக்கு அண்மையில் மட்டமயூரத்தில் மற்றொரு சௌளுக்கிய குடும்பம் ஆட்சிபுரிந்து வந்தது.) ஒரே நேரத்தில் தொடுக்கப்பட்ட இவ்விரு தாக்குதல்களும் மூலராஜரைக் கதிகலங்கச் செய்தன. அவர் கட்சிலுள்ள கந்தா என்ற கோட்டைக்குள் (இன்றைய கந்தகோட்டை) புகுந்து ஒளிந்து கொண்டார். அடை மழையையும் பொருட்படுத்தாது விக்கிரகராஜர் சாரஸ்வத மண்டலத்தைக் கைப்பற்றி, தொடர்ந்து முன்னேறினர். வேறு வழியின்றி, மூலராஜர் விக்கிரகராஜரோடு சமாதானம் செய்து கொண்டார். இதன் பின்னர், மூலராஜரது படைகள் அவரது மகன் சாமுண்டராஜரது தலைமையில் பாரப்பரைத் தாக்கிக் கொன்றன.

பரமார அரசர் முஞ்சரை எதிர்த்தும் போர் நிகழ்ந்தது. இப்போரில் மூலராஜர் பல இடங்களில் தோல்வியுற்று மார்வார்ப் பகுதிக்கு ஓடிப்போனர். பின்னர், ராஷ்டிரகூடச் சிற்றரசர் தவலரது உதவியோடு இழந்த பகுதிகளை மூலராஜர் மீட்டுக் கொண்டார். கலச்சூரி அரசர் லக்ஷ்மணரிடமும் இவர் தோல்வியுற்றர். சிந்துநாடு, வடக்குக் கோசலம் ஆகியவற்றுடனும் மூலராஜர் போரிட்டாரென்று சில சான்றுகள் தெரிவிக்கின்றன.

இவரது பெருமை

பல அரசர்களின் கரத்திடைத் தோல்வியுற்று இன்னல்கள் பலவற்றுக்கு ஆளானபோதும் கூட, புதிய சௌளுக்கிய அரசு ஒன்றை நிறுவினரென்னும் பெருமை முதலாம் மூலராஜருக்கு உண்டு. இவரது சில செப்பேடுகள் நமக்குக் கிடைத்துள்ளன. சோமநாதர் ஆலயத்துக்கு இம் மன்னர் அடிக்கடி சென்று வழிபட்டதாகப் பல நூல்கள் கூறுகின்றன. மண்டலி என்ற ஊரில் இவரால் கட்டப்பட்ட மூலேசுவர ஆலயம் 'மூலநாதர் ஆலயம்' என்ற பெயரில் இன்றும் உள்ளது. இவர் ஒரு முக்கியமான அரசர் என்பதில் ஐயமில்லை. இவரது அரசு வடக்கில் ஜோத்பூரிலிருந்து, தெற்கிலும் கிழக்கிலும் சபர்மதி நதி வரையில் பரவியிருந்தது. கிட்டத்தட்ட சௌராஷ்டிரம், வடக்குக் குஜராத், கட்ச் ஆகியவை இவரது அரசில் அடங்கி இருந்தன. இவர் ஐம்பத்தைந்து ஆண்டு காலம் ஆட்சிபுரிந்தார். இவரது முதுமை காரணமாகப் பிற்காலத்தில் இவரது மகனை சாமுண்டராஜர் பெரும் பொறுப்பை நிர்வகிக்கலானர். விரைவில் தம் மகனையே அரசனாக்கிவிட்டு மூலராஜர் ஓய்வு பெற்றார். கி.பி. 995-ல் இது

நிகழ்ந்திருத்தல் வேண்டும். முடிதுறந்த பின்னர், சரஸ்வதி நதியின் கரையிலிருந்த ஸ்ரீதலம் என்ற ஊருக்குச் சென்று வாழ்ந்து மூலராஜர் உயிர் துறந்தார்.

சாமுண்ட ராஜர்

சாமுண்டராஜரது ஆட்சி பதின்மூன்று ஆண்டுகள்வரை நீடித்ததாகப் பிரபந்த சிந்தாமணி மட்டுமின்றி, அயினி அக்பரி போன்ற முஸ்லிம் நூல்களும் சான்று பகர்கின்றன. எனவே, கி.பி. 996 முதல் 1009 வரையில் இவர் ஆட்சிபுரிந்தார் என்று நாம் கொள்ளலாம்.

இவரது ஆட்சியின்போது மாளவத்தைச் சேர்ந்த பரமார அரசர் சிந்துராஜரும், திரிபுரிக் கலச்சூரி அரசரான இரண்டாம் கோகல்லரும் சௌளுக்கிய அரசின்மீது படையெடுத்து வந்தனர். பரமாரப் படைகளை இவர் விரட்டியடித்தார் எனினும், கலச்சூரிகள் இவரைத் தோற்கடித்து நிறையப் பொருள்களைக் கவர்ந்து கொண்டு திரும்பிச் சென்றனர். இவரது ஆட்சிக் காலத்துச் சாசனம் எதுவும் கிடைக்கவில்லை. இவ் வரசர் முடிதுறந்த விதம்பற்றி திவ்யாஸ்ரய காவியத்தை எழுதிய ஹேமசந்திரரும், அதற்கு உரை எழுதிய அபயதிலககணி என்ற ஆசிரியரும் மாறுபட்ட கதைகளைக் கூறுகின்றனர்.[1] இவ்வரசருக்கு வல்லபராஜர், துர்லபராஜர், நாகராஜர் என்னும் மூன்று பிள்ளைகள் இருந்தனர். சாமுண்டராஜர் அருவருக்கத்தக்க ஓர் இழி செயலில் ஈடுபட்டார் என்றும், எனவே அவரது சகோதரியான வாசினிதேவி என்பவரது தலைமையில் உற்றார் உறவினர் சாமுண்டராஜரை அரியணையிலிருந்து அகற்றி, அவரது மகனை வல்லபராஜரை அரசனாக்கினர் என்றும் கூறப்படுகிறது. சாமுண்டராஜர் தாம் புரிந்த பாவச் செயலுக்குக் கழுவாய் தேடுவதற்காக வாராணசிக்குச் செல்லும் வழியில் மாளவ அரசர் (இவர் சிந்துராஜராகவே இருக்கலாம்) இவரிடமிருந்த அரச சின்னங்களைப் பறித்துக் கொண்டாராம். வாராணசியிலிருந்து திரும்பிய பின் சாமுண்டராஜர் தம் மகனிடம் இதைக் கூறவே, வல்லபராஜர் மாளவத்தின்மீது படையெடுத்துச் சென்றார். வழியில் பெரியம்மை கண்டு வல்லபராஜர் இறந்து போனார். சாமுண்டராஜர் தம் இரண்டாம் மகனை துர்லபராஜரை அரியணைமீது அமர்த்தினார்.

[1] Dr. A. K. Majumdar, *Chaulukyas of Gujarat.* Dr. G. C. Choudhary, *Political History of Northern India.*

துர்லபராஜர்

துர்லபராஜர் கி.பி. 1010ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிக்கு வந்து, கி.பி. 1022ஆம் ஆண்டு வரையில் அரசரா யிருந்தார் என்று தெரிகிறது. இம் மன்னர் நாதோல் (Nadol) சாகமான அரசையாண்ட மகேந்திரராஜர் என்பாரது மகள் துர்லபதேவி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். சுயம்வரத்தில் இப் பெண்ணை இவர் திருமணம் செய்து கொண்டபோது அதனால் ஏமாந்து போன பல அண்டை அரசர்கள் இவர் நாட்டின்மீது போர் தொடுத்தனராம். அங்கம், காசி, சேடி, மாளவம், மதுரா, ஹுண அரசு போன்ற பலவற்றின் அரசர்கள் இவரைத் தாக்கினரெனச் சொல்லப்படுகிறது. அவர்கள் அனை வரையும் இவர் விரட்டியடித்தாராம். இக் கதையை உண்மை யென்று நாம் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. இவரது காலத்தைச் சேர்ந்த சாசனமும் கிடைக்கவில்லை.

தெற்கிலிருந்த லாட்டத்தில் (தெற்குக் குஜராத்) மற்றொரு சௌளுக்கிய வம்சத்தைப் பாரப்பர் (Barappa) நிறுவியிருந்தார். மானியகடகத்தில் ராஷ்டிரகூட ஆட்சி அழிந்ததற்குப் பிறகு லாட்டத்திலிருந்த ராஷ்டிரகூடக் கிளைவம்சம் பாரப்பரால் அழிக்கப்பட்டது. மேலைச் சாளுக்கிய அரசரான இரண்டாம் தைலப்பரின் தளபதியாகவும் சிற்றரசராகவும் பாரப்பர் லாட்டத்தை ஆண்டு வந்தார். இவரைப்பற்றி ஏற்கெனவே நாம் சிறிது படித்தோம். இவரது மகனான கொங்கிராஜரும், கொங்கிராஜரது மகனான கீர்த்திராஜரும் குஜராத் சௌளுக்கியர்களுக்குப் பகைவர்களா யிருந்தனர். துர்லபராஜர் கீர்த்திராஜரைக் கி.பி. 1018ஆம் ஆண்டு வாக்கில் தோற்கடித்து லாட்டத்தைச் சூறையாடினார். இவர் நீதியுணர்வும், உயரிய குணங்களும், நேர்மையாகச் செயலாற்றும் தன்மையும் பொருந்திய அரசர் என்று பல நூல்களும் தெரிவிக்கின்றன. சமணத் துறவிகளையும் அறிஞர்களையும் ஆதரிக்கத் துவங்கிய முதலாவது சௌளுக்கிய அரசர் இவரே யாவார். இவர் பன்னிரண்டு ஆண்டுகள் வரை ஆட்சி புரிந்தபின், கி.பி. 1022ஆம் ஆண்டு வாக்கில் முதுமை காரணமாக முடிதுறக்க முடிவு செய்தார். இவருக்கும் இவர் அண்ணன் வல்லபராஜரைப் போலவே பிள்ளையில்லை என்று தெரிகிறது. எனவே, தம்பியான நாகராஜரின் மகன் முதலாம் பீமரை அரசராக்கி விட்டு, துர்லபராஜர் ஓய்வு பெற்றார். நாதோல் சாகமான அரசர் மகேந்திரராஜரது மகள் துர்லபதேவியைத் துர்லபராஜர் திருமணம் செய்து கொண்டபோது, துர்லபதேவியின் தங்கையான லக்ஷ்மியை நாகராஜர் மணந்து கொண்டார். இந்த லக்ஷ்மிக்குப் பிறந்தவரே முதலாம் பீமதேவர் ஆவார்.

முதலாம் பீமதேவர்

கி.பி. 996 முதல் 1022 வரையிலான காலம் குழப்பம் நிறைந்த ஒரு காலகட்டமாகும். அக் காலத்தில் ஆட்சி புரிந்த சாமுண்டராஜர், வல்லபராஜர், துர்லபராஜர் ஆகியோரது சாசனங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனுல், முதலாம் பீமரது காலத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்குப் பல சாசனங்களும் கல்வெட்டுகளும் நமக்குக்கிடைத்துள்ளன. இம் மன்னர் நாற்பத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்று மெருதுங்கர், ஹேமசந்திரர், அபுல் ஃபசல் போன்ற பலரது நூல்கள் சான்று பகர்கின்றன. எனவே, இவர் 1022 முதல் 1064 வரையில் ஆட்சி புரிந்தார் என்பது தெளிவாகின்றது. இவர் அரசரான பொழுது இவருடைய தந்தையான நாகராஜரும் உயிருடனேயே இருந்தார் என்றும், ஆட்சிப் பொறுப்பில் பற்றில்லாத தந்தையின் வற்புறுத்தலாலேயே பீமர் அரசராக இணங்கினுர் என்றும் ஹேமசந்திரர் எழுதுகிருர்.

கசினி மகமூதின் படையெடுப்பு

முதலாம் பீமதேவர் ஊக்கமும் வலிமையும் மிக்க அரசராயிலங்கினுர். பரமார போஜர், கலச்சூரி லக்ஷ்மிகர்ணர் ஆகிய இரு பேரரசர்களுக்கும் பீமருக்கும் இடையே போர்கள் நிகழ்ந்தன என்பதைப் பிரபந்த சிந்தாமணி விவரமாகக் குறிப்பிடுகிறது. ஆனுல், இப் போர்களுக்கு முன்னதாகவே கசினி மகமூதுவின் சோமநாதபுரப் படையெடுப்பு நிகழ்ந்தது. இப் படையெடுப்பைப்பற்றி மெருதுங்கர், ஹேமசந்திரர் போன்ற பலர் ஏதோ காரணத்தினுல் குறிப்பிடவேயில்லை. அதிக முக்கியமில்லாத இரண்டு சமண நூல்கள் மட்டுமே இப் படையெடுப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மகமூதுவின் அந்தரங்கச் செயலாளர் போன்று பணியாற்றிய அல்-உத்பி (Al-Utbi) தமது தாரிக்கெயமீனி (Tarikhi-Yamini) என்ற நூலிலும் சோமநாதபுரப் படையெடுப்புப்பற்றிக் குறிப்பிடவில்லை. மகமூதின் வாழ்க்கை வரலாற்றை இந் நூலில் உத்பி எழுதுகிருர். சோமநாதபுரப் படையெடுப்பு அவ்வளவு முக்கியமானதாக உத்பிக்குத் தோன்றவில்லை போலும்! இவரது சோமநாதபுரப் படையெடுப்பைப் பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட முஸ்லிம் ஆசிரியர் அல்-கர்திசி (Al-Gardizi) என்பவரே. கி.பி. 1049க்கும் 1052க்குமிடையில் ஜைனுல் அக்பார் (Zain-ul Akhbar) என்ற நூலினை இவர் எழுதினுர். இதில் தான் சோமநாதபுரப் படையெடுப்பு முதலில் குறிப்பிடப்படுகிறது. இது பின்னர் நுழைக்கப்பட்ட இடைச் செருகல் என்றுகூடச் சிலர் கருதுகின்றனர். கி.பி. 1230ஆம்

ஆண்டு வாக்கில் இப்னுல் அசீர் (Ibnul Asir or Athir) என்பார் எழுதிய அல்காமில் ஃபித் தாரிக் (Al-Kamil fit Tarikh) என்ற நூலிலேயே இப் படையெடுப்புப்பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. நாளடைவில் சோமநாதர் ஆலயம்பற்றிய ஒரு சிறிய நிகழ்ச்சி சிறிது சிறிதாகப் புதிய வடிவம் பெற்று, மாபெரும் படையெடுப்பாக இந்துக்களாலும் முஸ்லிம்களாலும் ஆதாரமற்ற வர்ணனைகளுடன் பக்கம் பக்கமாக விவரிக்கப்படலாயிற்று.[1]

கி.பி. 1025-ல் கசினி மகமூது குஜராத்தின்மீது படையெடுத்து வந்தபோது முதலாம் பீமர் தமது தலைநகரை விட்டு ஓடிக் கட்சிலுள்ள கந்தக் கோட்டையில் (Kanthkot) ஒளிந்து கொண்டார் என்று இப்னுல் அசீர் எழுதுகிறார். அணகிலவாதத்தை மகமூது கைப்பற்றி, பின்னர் சோமநாதபுரத்தை நோக்கிச் சென்று அதைச் சூறையாடிவிட்டு, வேறு வழியாகத் திரும்பிச் சென்றாராம்! மகமூது திரும்பிச் சென்ற பின் பீமதேவர் தமது தலைநகருக்கு மீண்டாராம்!

மற்ற அரசர்கள்மீது போர்கள்

கசினி மகமூது திரும்பிச் சென்ற பின்னர், பீமதேவர் தமது நிலையை மேலும் பலப்படுத்திக் கொண்டு பரமாரர்கள்மீது படையெடுத்தார். அற்புத மண்டலத்துப் பரமார அரசரான தந்துகரைத் தோற்கடித்து, அபுக் குன்றைக் கி.பி. 1030ஆம் ஆண்டு வாக்கில் பீமர் கைப்பற்றினார். அங்குப் பீமரால் ஆளுநராக நியமிக்கப்பட்ட விமலர் என்பவரே ஆதிநாதர் ஆலயத்தைக் கட்டி எழுப்பினார். கி.பி. 1031-ல் விமலர் அங்கு நிர்வாகம் நடத்திக் கொண்டிருந்தார் என்பது அந்த ஆலயத்திலுள்ள ஒரு கல்வெட்டிலிருந்து தெரிகிறது. ஆயினும், விரைவிலேயே தந்துகரோ அல்லது அவரது மகன் பூர்ணபாலரோ பீமரிடமிருந்து அபுக் குன்றை மீட்டுக் கொண்டார். கி.பி. 1042-ல் பூர்ணபாலர் இப் பகுதியில் சுதந்திரமாக ஆட்சி புரிந்தமை இதைப் புலப்படுத்துகிறது. எனினும், கி.பி. 1060ஆம் ஆண்டு வாக்கில் முதலாம் பீமர் அற்புத மண்டலத்தை மறுபடியும் கைப்பற்றிக் கொண்டார். அற்புத மண்டலத்தில் பரமாரரின் ஆட்சி அடியோடு ஒழிந்து, பதின்மூன்றாம் நூற்றாண்டின் முடிவு வரையில் சௌளுக்கிய அரசின் ஒரு பகுதியாகவே அது இருக்கலாயிற்று.

[1] M Habib, *Sultan Mahmud of Ghazni*. K. M. Munshi, *Glory that was Gurjaradesa*.

பின்மாலை (Bhinmal) ஆண்டு கொண்டிருந்த பரமார அரசர் கிருஷ்ண ராஜரும் இச் சௌளுக்கிய அரசரால் தோற்கடிக்கப்பட்டார். கிருஷ்ணராஜர் சிறையில் அடைக்கப்பட்டு, பின்மால் சௌளுக்கிய அரசோடு இணைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், விரைவிலேயே நாதோலைச் சேர்ந்த சாகமான அரசர் அகிலர் மீது பீமர் மேற்கொண்ட போர்முயற்சி தோற்றது. அகிலருக்குப் பின் அரியணை ஏறிய அவரது சிற்றப்பரான அணகிலரும் அவரது மகனான பாலபிரசாதரும் பீமரைத் தோற்கடித்து, பின்மால் அரசர் கிருஷ்ணராஜரைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு செய்தனர். சிந்து நாட்டை ஆண்ட ஹம்முகர் (Hammuka) என்பார்மீதும் பீமர் படையெடுத்தார் என்று ஹேமசந்திரர் தெரிவிக்கிறார். அகன்று விரிந்த பெரிய ஆறாகிய சிந்துவுக்குக் குறுக்கே கல்லினால் பாலம் ஒன்றை அவர் அமைத்து, நதியைக் கடந்து ஹம்முகரைத் தோற்கடித்தாரென்று கூறப்படுகிறது. பீமர் இவ்வாறு சிந்துவின்மீது படையெடுத்துச் சென்றிருந்த பொழுது பரமாரப் பேரரசர் போஜரது தளபதியான குலச்சந்திரர் என்பவர் குஜராத்தின்மீது படையெடுத்து அதன் தலைநகரான அணகிலப்பாடகத்தைச் சூறையிட்டார். தமது நாட்டுக்கு மீண்ட பீமர் போஜருக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று முடிவு செய்து, முதலில் பரமார அரசின் எல்லைப் புறங்களைத் தாக்கலானார். கலச்சூரி அரசர் லக்ஷ்மிகர்ணருடன் போஜருக்கெதிராக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பீமரும் கர்ணரும் மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பரமார அரசின்மீது படையெடுத்தனர். இச் சமயத்தில்தான் போஜர் கி.பி. 1055-ல் நோய்வாய்ப்பட்டு இறந்தார். மாளவம் முழுவதையும் பீமரும் கர்ணரும் அபகரித்துக் கொண்டனர். போஜரது மகனான ஜெயசிம்மர் கல்யாணிச் சாளுக்கியப் பேரரசர் முதலாம் சோமேசுவரருக்கு வேண்டுகோள் விடுத்து, சோமேசுவரரின் மகன் ஆறாம் விக்கிரமாதித்தியரது படையுதவியைக் கொண்டு தமது அரசை மீண்டும் பெற்றார். ஆறாம் விக்கிரமாதித்தியரது படைகள் பீமர், கர்ணர் ஆகிய இருவரையும் மாளவத்திலிருந்து விரட்டின.

இதன் பின்னர், லக்ஷ்மிகர்ணருக்கும் பீமருக்கும் இடையே பகை மூண்டது. மாளவத்தில் சூறையாடப்பட்ட பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்பட்ட தகராறே இதற்குக் காரணம் என்று உணரமுடிகிறது. லக்ஷ்மிகர்ணரது அரசாகிய தாகல மண்டலத்தின்மீது பீமர் படையெடுத்துக் கர்ணரிடமிருந்து விலையுயர்ந்த பல பொருள்களைக் கவர்ந்து கொண்டு தமது நாட்டுக்குத் திரும்பினார். முதலாம் பீமர் காசி, அயோத்தி முதலிய பல நாடு

களின் அரசர்களையும் தோற்கடித்தார் என்றும் புந்திரவர்தனம், ஆந்திரம் ஆகிய நாட்டு அரசர்கள் அவரது நண்பர்களாயிருந்தனர் என்றும் ஹேமசந்திரரது நூல் குறிப்பிடுகின்றது. இவை எவ்வளவு உண்மை என்பதை உணர முடியவில்லை.

இம் மன்னரது பெருமைகள்

பீமர் தமது முன்னோர்களைப் போலவே சைவராயிருந்தார். ஆயினும், சமணப் பெரியார்களையும் அறிஞர்களையும் அவர் ஆதரிக்கத் தவறவில்லை. குஜராத்தின் இடைக்கால இலக்கிய வளர்ச்சிக்குச் சமணர்கள் ஆற்றிய பணி அளவிடற்கரியது. இத்தகைய சமண அறிஞர்கள் சிலரைப் பீமர் ஆதரித்தார். மரு (Maru) தேசமாகிய நாதோல் அரசைச் சேர்ந்த சங்கராமசிம்மர் என்பவர் பீமருக்குத் தாய்மாமன். இவரது மகனான சுராச்சாரியர் (Suracharya) என்பவர் அக் காலத்தைச் சேர்ந்த சமண அறிஞர்களுள் ஒருவராயிருந்தார். சாந்தி சூரி என்ற மற்றொரு சமணப் பெரியாரும் இவரால் ஆதரிக்கப்பட்டார். தர்மர் என்றும் கௌல கவி தர்மர் என்றும் அழைக்கப்பட்ட கவிஞர் இவரது காலத்திலேயே வாழ்ந்தார். இவ் வரசருக்குத் தாமரர் அல்லது தாமோதரர் என்ற பேர் அமைச்சர் இருந்தார். இவரது மதி நுட்பத்தைப்பற்றி மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி பல கதைகளைக் கூறுகிறது.[1]

மூன்று ஆலயங்களை முதலாம் பீமர் நிருமித்ததாக மெருதுங்கர் தெரிவிக்கிறார். இவருக்குப் புரோகிதராக இருந்த சோமேசுவரரது மேற்பார்வையின்கீழ் இவை கட்டப்பட்டன. சமணப் பிரபந்தங்கள் இவரது பெருமைகளைப்பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றன. இவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரான மூலராஜர் இளம் வயதிலேயே இறந்துபோனதால் அவரது நினைவாகச் சிவாலயம் ஒன்றைப் பீமர் கட்டினார். எஞ்சியிருந்த இருவருள் க்ஷேமராஜர் என்பவரே மூத்தவர் என்றும், ஆனால் சமய ஒழுக்கங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததால் பட்டம் ஏதும் தமக்கு வேண்டாமென்று அவர் கூறிவிட்டாரென்றும், இதனால் மூன்றாவது மகனான கர்ணருக்கே பட்டம் சூட்டப்பட்டது என்றும் ஹேமசந்திரர் தெரிவிக்கிறார். வயது முதிர்ந்திருந்த பீமர் கி.பி. 1064ஆம் ஆண்டு வாக்கில் கர்ணருக்குப் பட்டம் சூட்டிவிட்டுத் தீர்த்த யாத்திரை சென்றுவிட்டார். க்ஷேமராஜரும் சரஸ்வதி நதிக் கரையிலிருந்த மந்துகேசுவரம் (Mandukesvara) என்ற இடத்துக்குச் சென்று சமய வாழ்வை மேற்கொண்டார். முதலாம் பீமதேவர் அக்

[1] Dr. A. K. Majumdar, *Chaulukyas of Gujarat.*

காலத்தைச் சேர்ந்த மாபெரும் அரசர்களுள் ஒருவர் என்பதில் ஐயமில்லை.

கர்ணர்

கர்ணர் கி.பி. 1064-ல் முடிசூட்டப் பெற்று, 29 ஆண்டும் எட்டு மாதமும் ஆட்சிபுரிந்தார் என்று மெருதுங்கரது பிரபந்த சிந்தாமணி குறிப்பிடுகிறது. திவ்யாஸ்ரய காவியமும் சுகிர்த சங்கீர்த்தனமும் இம் மன்னரது சில படையெடுப்புகளைப்பற்றித் தெரிவிக்கின்றன. சாளுக்கிய அரசர் இரண்டாம் சோமேசுவரரின் உதவியோடு கர்ணர் மாளவத்தின்மீது போர் தொடுத்து, அதை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த பரமார அரசர் ஜெயசிம்மரைக் கொன்றார். பரமாரர்கள் ஜெயசிம்மரின் சிற்றப்பரான உதயாதித்தியரின் தலைமையில் ஒன்று திரண்டு, சாகம்பரியைச் சேர்ந்த சாகமான அரசர் மூன்றும் விக்கிரகராஜரது படையுதவியோடு தமது நாட்டை மீட்டுக் கொண்டனர். தாராவிலிருந்து நீலகண்டரின் சிலையொன்றைக் கர்ணர் அணகிலப்பாடகத்துக்குக் கொண்டு வந்தார்.

இதன் பின்னர், கர்ணர் நாதோலைச் சேர்ந்த சாகமான அரசின்மீது படையெடுத்தார். முன்பு உதயாதித்தியருக்கு நாதோல் சாகமான அரசர் பிருதிவிபாலர் உதவிபுரிந்ததே இதற்குக் காரணம் என்று தெரிகிறது. லாட்டத்தின் மீதும் இவர் படையெடுத்து அதன் சில பகுதிகளை இணைத்துக் கொண்டார் என்பது இவரது நவசாரிக் (Navsari) கல்வெட்டொன்றால் தெரிகிறது. உதயாதித்தியருக்குப் பின் மாளவத்தின்மீது ஆட்சிபுரிந்த ஜகதேவர் (லக்ஷ்மதேவரது மற்றொரு பெயராகச் சிலர் இதைக் கருதுகின்றனர்.) கர்ணரைத் தோற்கடித்ததாகப் பரமாரர்களது சாசனம் தெரிவிக்கிறது. அஹமதாபாதுக்கு அருகில் குறுநில மன்னனாக ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ஆசா (Asa) என்ற ஒரு குறுநில மன்னனைக் கர்ணர் தோற்கடித்தார்.

'திரைலோக்கிய மல்லர்' என்ற விருதினை இம் மன்னர் பூண்டிருந்தார். இவரைப்பற்றி பில்கணர் எழுதிய 'கர்ணசுந்தரி நாடிகா' என்ற நூலில் பல கதைகள் கூறப்படுகின்றன. கோவாவுக்கு அருகில் சந்திரபூரிலிருந்து ஆண்ட ஜெயகேசி என்ற கடம்ப வம்சத்து அரசனின் மகளான மயநல்லா என்ற பெண்ணை இவர் திருமணம் செய்து கொண்டார். இந்த அரசகுமாரிக்குப் பிறந்த ஜெயசிம்மரே அடுத்த அரசரானார். கர்ணருக்கு முஞ்சாலர், தவலகர், சம்பத்கரர் என்போர் அமைச்சர்

களாக இருந்தனர். இவர் பல ஆலயங்களையும் ஏரிகளையும் நகரங்களையும் அமைத்தாராம். கர்ணமேரு என்ற ஓர் ஆலயம் அணகிலப்பாடகத்தில் இவரால் கட்டப்பட்டது. நயசந்திரரது 'ஹம்மீர மகா காவியம்' என்ற நூல், சாகமான அரசர் துஸ்சலரால் கர்ணர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கிறது. ஆனால் ஹேமசந்திரர், மெருதுங்கர் முதலியோர் இதைப்பற்றி எதுவும் சொல்லாததால் இதுபற்றி எந்த முடிவுக்கும் வருவதற்கில்லை. இவர் சைவராயிருந்தாலும், வைணவர்களையும் சமணர்களையும் ஆதரித்தார்.

ஜெயசிம்ம சித்தராஜர்

குஜராத்தையாண்ட சௌளுக்கிய அரசர்களுள் மிகவும் கீர்த்தி பெற்றவரான இந்த ஜெயசிம்மர் கி.பி. 1094ஆம் ஆண்டு வாக்கில் தமது தந்தையான கர்ணர் இறந்த பின் அரியணை ஏறினர். அப்பொழுது இவர் சிறுவராயிருந்தார். எனவே, இவரது தாயான மயநல்ல தேவியே சிறிது காலம் நிர்வாகத்தை நடத்தி வந்தார். ஜெயசிம்மரது ஆட்சி கி.பி. 1094 முதல் 1143 வரையில் 49 ஆண்டுகாலம் நீடித்தது. இம் மன்னரது சாசனங்கள் குவாலியர், ஜோத்பூர், ஜெயபூர், கட்ச், உஜ்ஜெயினி போன்ற இடங்களில் கிடைத்துள்ளமையால் இவரது அரசின் விரிவை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. 'சித்தராஜர்' என்பது இவரது விருதுப் பெயராகும்.

ஜெயசிம்மர் சிறுவராயிருந்த காரணத்தினல் இவரது உறவினர்கள் சிலர் இவரிடமிருந்து அரியணையைக் கவர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் சதிகளிலும் குழப்பங்களிலும் ஈடுபட்டனர். சமண நூல்கள் தரும் தகவல்கள் இவற்றை நமக்கு உணர்த்துகின்றன. இவையனைத்தையும் மயநல்ல தேவியும் அமைச்சர்களும் வெற்றிகரமாகச் சமாளித்து, ஜெயசிம்மர் உரிய வயதினை அடைந்ததும் ஆட்சிப் பொறுப்பினை அவரிடம் ஒப்புவித்தனர். ஜெயசிம்மரது சாசனங்கள் நிறையக் கிடைத்துள்ளன. சமண நூல்கள் பலவும் இவரது போர்களைப்பற்றி விவரிக்கின்றன. குஜராத்தைச் சேர்ந்த சமண நூலாசிரியர்கள், ஏறத்தாழக் கல்கணரைப் போன்றே, நம்பத்தக்க முறையில் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளமை பாராட்டத் தக்கன. இந்தச் சௌளுக்கிய வம்சத்தின் வரலாற்றுக்கு அடிப்படைச் சான்றுகளாக விளங்குபவை இச் சமணப் பிரபந்தங்களேயாகும். நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட பிரபந்த சிந்தாமணி, திவ்யாஸ்ரய காவியம், புராதன பிரபந்த சங்கரகம் போன்ற நூல்கள் இவற்றுள் சில.

சித்தராஜர் நிகழ்த்திய போர்கள்

சரஸ்வதி நதிக் கரையில் பார்பரர் (Barbara or Barbaraka) என்ற பழங்குடியினரின் தலைவன் ஒருவன் முனிவர்களுக்குத் தொல்லை தந்து வந்தானென்றும், படையுடன் சென்று அவனை ஒழித்ததே ஜெயசிம்ம சித்தராஜரின் முதலாவது போர்ச் செயல் என்றும் ஹேமசந்திரர் குறிப்பிடுகிறார். இந்த பார்பரரது படையினர் ராட்சசர்கள் என்று வர்ணிக்கப்படுகின்றனர். இன்றும் தெற்குக் கத்தியாவாரில் பார்பரியர்கள் என்போர் வசித்து வருகின்றனர். இவர்கள் இந்த பார்பரரின் வழியில் வந்தவர்களாக இருக்கலாம். இப் போருக்குப் பின்னர்த்தான் ஜெயசிம்மருக்குச் 'சித்தராஜர்' என்ற பெயர் ஏற்பட்டதாம்.

சௌராஷ்டிரத்தின் ஒரு மூலையில் நவகானன் என்ற ஆபீர அரசன் ஒருவன் ஆண்டு கொண்டிருந்தான். இம் மன்னன் கிர்னாரிலிருந்து (Girnar) புறப்பட்டு, சௌளுக்கியப் படைகளைப் பலமுறை தோற்கடித்து, அணகிலப்பாடகத்தை நோக்கி முன்னேறினானும். பன்னிரண்டாவது முறையாக ஜெயசிம்மரே படையுடன் சென்று, நவகானனைப் போரில் கொன்று, அவனது அரசைப் பறித்துக் கொண்டார். அதை ஆளுவதற்கென சஜ்ஜனர் என்ற அதிகாரியை அங்குத் தண்டாதிபதியாக (ஆளுநராக) ஜெயசிம்மர் நியமித்தார். கிர்னாரில் உள்ள நேமிநாதர் ஆலயத்தில் கி பி. 1120ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட சஜ்ஜனரது கல்வெட்டு இன்றும் உள்ளது. சஜ்ஜனர் ஒன்பது ஆண்டுகள் சௌராஷ்டிரத்தில் தண்டாதிபதியாக இருந்தார் என்று பிரபாவக சரிதம் குறிப்பிடுகிறது

இதற்குப் பின்னர்ப் பரமாரர்களுக்கெதிராகப் போர் நிகழ்வுற்றது. பின்மால் பகுதியானது பரமாரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு, கி.பி 1125ஆம் ஆண்டுவாக்கில் சௌளுக்கிய அரசில் இணைத்துக் கொள்ளப்பட்டது. மற்றும், நாதோலைச் சேர்ந்த சாகமானர்களை எதிர்த்தும் இவர் போர் நிகழ்த்தினார். ஜெயசிம்மர் சிறுவராயிருந்த பொழுது நாதோலின் அரசரான ஜோஜலர் (Jojalla) என்பவர் சௌளுக்கிய அரசின் தலைநகரான அணகிலப்பாடகத்தின்மீது தாக்குதல் நிகழ்த்தி யிருந்தார். அதுமுதல் சாகமானருக்கெதிராகப் போர் விட்டுவிட்டு நடைபெற்றே வந்தது. ஜோஜல்லருக்கு அடுத்தபடியாக அரசரான ஆசாராஜர் ஜெயசிம்மரால் தோற்கடிக்கப்பட்டு, அவருக்கு அடங்கிய சிற்றரசரானார். சாகம்பரிச் சாகமானர்களுக்கெதிராகவும் போர் மூண்டது. அப்பொழுது அதை ஆண்டுவந்த அருணராஜர் ஜெயசிம்மரால் தோற்கடிக்கப்பட்டு, பின்னர்

ஜெயசிம்மரின் மகளை மணந்து அவருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசராகத் தமது நாட்டை ஆண்டு வரலானுர். பரமாரர்களது மற்ருெரு அரசரான வாகதம் (Vagada) மீதும் ஜெயசிம்மர் படையெடுத்து வென்று அதனை இணைத்துக் கொண்டார்.

மாளவத்தை எதிர்த்துப் போர்

மாளவத்தையாண்ட பரமாரர்களுக்கெதிராக நீண்ட போர் நிகழ்வுற்றது. பரமார அரசரான நரவர்மன் ஜெயசிம்மரால் தோற்கடிக்கப்பட்டுக் கைதியாக்கப்பட்டார் என்றும், பின்னர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் பல்வேறு சமண நூல்களும் தெரிவிக்கின்றன. சில ஆண்டுகள் கழிந்த பின்னர் நரவர் மனுக்குப் பின் மாளவத்தில் அரசரான அவரது மகன் யசோ வர்மன் குஜராத்தின்மீது படையெடுத்தார். யசோவர்மன் நீண்ட போருக்குப் பின் தோற்கடிக்கப்பட்டு, போர்க் கைதியாக இழுத்துச் செல்லப்பட்டார். தாரா, உஜ்ஜெயினி ஆகிய நகரங்கள் ஜெயசிம்மரால் கைப்பற்றப்பட்டன. (உஜ்ஜெயினியானது சிம் என்ற மற்ருெரு அரசனிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அரசனைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை). இதன் பின்னர், 'அவந்தி நாதர்' என்ற பட்டத்தையும் ஜெயசிம்மர் சூட்டிக் கொண்டார். அவந்தியானது ஜெயசிம்மரால் இணைத்துக் கொள்ளப்பட்டது. கி.பி. 1135ஆம் ஆண்டு வாக்கில் இது நிகழ்ந்திருக்கக் கூடும். இதற்குப் பின்னர் மாளவத்தை அடுத்திருந்த மற்ற அரசர்கள்மீதும் போர் ஏற்பட்டது. சந்தெல்ல அரசர் மதனவர்மன்மீது படையெடுத்துச் சென்று காலஞ்சரா, மகோபா, பில்சா ஆகியவற்றை ஜெயசிம்மர் கைப்பற்றினுர். இறுதியில், பில்சாவை மட்டும் வைத்துக் கொண்டு, ஏனைப் பகுதிகளை அவர் திருப்பிக் கொடுத்து விட்டார். தாகல மண்டலத்தை யாண்ட கலச்சூரி அரசர் ஒருவர் ஜெயசிம்மரின் நட்பைக் கோரி இச் சமயத்தில் கடிதமொன்றை அனுப்பினுர். இந்தக் கலச்சூரி அரசர் யசகர்ணராகவோ அல்லது கயாகர்ணராகவோ இருக்க வேண்டும்.

இப் பகுதியில் போரிட்டுக் கொண்டிருந்தபோது கல்யாணிச் சாளுக்கிய அரசரான ஆறும் விக்கிரமாதித்தியருக் கெதிராகவும் ஒரு கைகலப்பு நிகழ்ந்ததெனத் தெரிகிறது. அதில் சாளுக்கியப் படைகள் தோல்வியுற்றன. இது பெரும் போராக இருக்க வழியில்லை என்று தெரிகிறது.

இம் மன்னரது பெருமைகள்

ஜெயசிம்ம சித்தராஜர் பேராற்றல் மிக்க மன்னர் என்பதில் ஐயமில்லை. பத்துக்கதிகமான அரசர்களுக்கெதிராகப் போரிட்டு,

குஜராத், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகியவற்றின் பகுதிகளை உள்ளடக்கியதாக ஒரு பேரரசை இவர் உருவாக்கினுர். கைப்பற்றப்பட்ட பல பகுதிகளைச் சுயமே முன்வந்து விட்டுக் கொடுத்தோ அல்லது பகைவர்களின் எதிர்த்தாக்குதல் காரணமாகவோ ஜெயசிம்மர் பின்னர் அவற்றை இழந்தார். பரமார அரசர் யசோவர்மனுக்குப் பின் அரியணை ஏறிய அவரது மகன் ஜெய வர்மன் விரைவிலேயே தாராவில் சுதந்திரமான அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். அதேபோல், நாதோல் சாகமான அரசரான ஆசா ராஜர் ஜெயசிம்மரின் மேலாதிக்கத்தை உதறி எறிந்துவிட்டு, அவருக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தினுர்.

ஜெயசிம்மர் பல ஆலயங்களைக் கட்டினுரென்று கூறப் படுகிறது. அவற்றுள் முக்கியமானதான, சரஸ்வதி நதிக்கரையில் சித்தபுரத்தில் இருக்கும் மகா ருத்திரகாலர் ஆலயம் பார்பரரை வெற்றி கொண்ட இடத்தில் அந்த வெற்றியின் நினைவாக நிறுவப் பட்டது. அணகிலப்பாடகத்துக்கு அருகில் சகஸ்ரலிங்கம் என்ற ஏரியை இம் மன்னர் வெட்டுவித்தார்; அதனருகில் தானசாலை என்ற ஒரு சத்திரத்தைக் கட்டி அதில் மாணவர்களுக்கு இலவசமாக இடவசதியும் உணவு வசதியும் செய்து தந்தார். இவரது காலத்தில் அணகிலப்பாடக நகரம் தாராவையும் உஜ்ஜெயினியையும் போல் செல்வத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்கிற்று. ஜோதிஷ சாத்திரம், நியாய சாத்திரம், புராணங்கள் ஆகியவற்றைக் கற்பித்துக் கொடுப்பதற்கென அவ்வூரில் பள்ளிகள் நிறுவப்பட்டன. பிராமணர்களும் சமணத் துறவிகளும் இம் மன்னரால் ஆதரிக்கப்பட்டனர். சோமநாதர் ஆலயத்திற்கு அடிக்கடி கால்நடையாகப் பயணம் செய்வதை விரதமாக மேற் கொண்டிருந்தார் இந்தச் சைவ அரசர். ஆயினும், மற்றச் சமயத்தினரிடம் மிகுந்த மரியாதையோடு இவர் ஒழுகிக் கொண் டார்.

இவரது அரசவையில் பல புலவர்கள் வாழ்ந்தனர். ஸ்ரீபாலர் என்ற கவிஞர் அரசருக்கு உடன் பிறந்த சகோதரர் போல் இருந்து 'கவீந்திரர்' என்று அழைக்கப்பட்டார். ஜெயசிம்மரது பிரசஸ்திகள் பலவற்றை எழுதியவர் இந்த ஸ்ரீபாலரே. வாக் பட்டர் என்ற மற்ெருரு கவிஞரும் இவரது காலத்தில் வாழ்ந் தார். 'வாக்பட்டாலங்காரம்' என்ற நூலினை இவர் எழுதினுர். ஜெயமங்கலாசாரியர், வர்த்தமானசூரி ஆகிய அறிஞர்களும் இவரது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தனர். சௌளுக்கிய அரசர் களின் வரலாற்றை உணர்ந்து கொள்வதற்குப் பெரிதும் துணை

நிற்கும் திவ்யாஸ்ரய காவியத்தை எழுதிய சமணத் துறவியான ஹேமசந்திரரும் இவ் வரசராலேயே ஆதரிக்கப்பட்டார். அரசரிடம் தமக்கிருந்த அன்பையும் மதிப்பையும் காட்டும் வகையில், தங்கள் இருவரது பெயரையும் சேர்த்து, 'சித்த-ஹேம-வியாகரணம்' என்ற அருமையான இலக்கண நூலை இப் புலவர் இயற்றினர். ஜெயசிம்மருக்கும் ஹேமசந்திரருக்குமிடையில் நிலவிய நெருங்கிய உறவுபற்றிச் சமணப் பிரபந்தங்கள் ஏராளமான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன.

ஜெயசிம்மருக்குப் பாகதர், ஆசுகர், சாந்து, முஞ்சாலர், தாடகர், உதயணர் போன்ற பல அமைச்சர்கள் இருந்தனர். சௌளுக்கிய அரசின் பல்வேறு மாவட்டங்களை ஆளுநர்கள் போல் இவர்கள் நிர்வகித்து அரசனுக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். 'சிம்ம-அப்தம்' என்ற ஒன்றை இம் மன்னர் துவக்கி வைத்தார். அடுத்த அரசரான குமாரபாலரே இந்தப் புது அப்தத்தைத் துவக்கி வைத்தார் என்று முன்பு கருதப்பட்டது. ஆனால், சிம்ம அப்தத்தின் (Simha Era) பதினான்காம் ஆண்டைச் சேர்ந்த அத்ரு (Atru) கல்வெட்டு கிடைக்கப்பெற்று, அதை வெளியிட்டவர் ஜெயசிம்ம சித்தராஜரே என்று தெரியவந்த பின், இக் கருத்து மாற்றிக் கொள்ளப்பட்டது.

குமாரபாலர்

வாரிசுபற்றிய சிக்கல்

ஜெயசிம்ம சித்தராஜருக்கு ஆண் வாரிசு இல்லை. பல ஆண்டுகள் பலவித நோன்புகளையும் விரதங்களையும் மேற்கொண்டிருந்த பின்னரும் பிள்ளையில்லாமல் போகவே, பட்டத்து வாரிசுபற்றிய பிரச்சினை அவருக்குப் பெரும் வேதனையைத் தந்தது. இப் பிரச்சினை எவ்வாறு தீர்ந்தது என்பதுபற்றி ஹேமசந்திரரும் மெருதுங்கரும் வெவ்வேறு விளக்கங்களைத் தருகின்றனர்.[1] திரிபுவனபாலரை (கீழ்வரும் வம்சாவளியைப் பார்க்க) சொந்த மகன் போலவே ஜெயசிம்மர் அன்போடு நடத்தினாரென்றும், அவரது மகனான குமாரபாலரையே பட்டத்து வாரிசாக ஜெயசிம்மர் கருதினாரென்றும் ஹேமசந்திரர் குறிப்பிடுகிறார்.

[1] A. K. Majumdar, *Chaulukyas of Gujarat*. G. C. Choudhary, *Political History of Northern India from Jain Sources*.

வம்சாவளி

1. முதலாம் மூலராஜர்

2. சாமுண்ட ராஜர்

3. வல்லபராஜர் | 4. துர்லபராஜர் | நாகதேவர்

5. முதலாம் பீமர்

மூலராஜர் | க்ஷேமராஜர் | 6. கர்ணர்

தேவப்பிரசாதர் | 7. ஜெயசிம்மர்

திரிபுவனபாலர்

மகிபாலர் | கீர்த்திபாலர் | 8. குமாரபாலர்

ஆனால், ஜெயசிம்மரது மரணத்துக்குப் பின் அவரது பாதுகை பதினெட்டு நாட்கள் அரியணையில் இருந்ததாகப் 'புராதன பிரபந்த சங்கரகம்' என்ற நூல் தெரிவிக்கிறது. குமாரபாலரைத் தமது பட்டத்து வாரிசாக ஜெயசிம்மர் ஏற்றுக் கொண்டார் என்றால், 'பாதுகையின் ஆட்சி' ஏன் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி மாறுபட்ட தகவல்களைத் தருகிறது. அரியணைக்கு உரியவராக இருந்தும், க்ஷேமராஜர் பட்டம் வேண்டாமென்று கூறிவிட்டுச் சமய வாழ்வில் ஈடுபடுவதற்குச் சென்று விட்டதாலேயே ஜெயசிம்மசித்தராஜரின் தந்தையான கர்ணருக்குப் பட்டம் கிடைத்தது என்பதை முன்பே பார்த்தோம். அந்த க்ஷேமராஜரின் பேரரான திரிபுவன பாலரைத் தமது சொந்த மகன் போல் ஜெயசிம்மர் பாதுகாத்தார் என்று ஹேமசந்திரர் குறிப்பிடுகிறார். ஆனால், திரிபுவன பாலர் கீழ்ப்பிறப்பைச் சேர்ந்தவர் என்று ஜெயசிம்மர் ஒதுக்கி வைத்திருந்தாரென்று மெருதுங்கர் கூறுகிறார். முதலாம் பீமருக்கு வேசி குலத்தைச் சேர்ந்த ஒரு மனைவியின் வயிற்றில் க்ஷேமகுப்தர் பிறந்ததே இதற்குக் காரணமாம். எனவே, திரிபுவன பாலரது மகன் குமாரபாலரை வாரிசாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மகாதேவராகிய சிவபெருமான் சொன்னதையும் கேட்காமல், தமது அமைச்சர்களுள் ஒருவரான பாகதர் (Bahada) என்பாரது தம்பியாகிய சாகத குமாரர் என்பவரையே பட்டத்துக்குரிய வாரிசாக ஜெயசிம்மர்

நியமித்தாராம். இறுதியில் சமணர்கள், அதிகாரிகள், மற்ற உறவினர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்று, குமாரபாலரே அரியணையைக் கைப்பற்றினர். பாகதர் உயிருக்கு அஞ்சி, சாகமானர் ஆட்சி புரிந்த சாகம்பரிக்குச் சென்று அடைக்கலம் புகுந்தார். மெருதுங்கரின் இக் கதையை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் போனலும், ஜெயசிம்மரின் மரணத்திற்குப் பிறகு சில வாரங்கள் வரை அரியணைக்குப் போட்டி இருந்தது என்பதை மறுக்க முடியவில்லை.

ஜெயசிம்ம சூரி என்பார் எழுதிய 'குமாரபால சரிதம்' தருகின்ற சில தகவல்கள் உண்மையாக இருக்கக் கூடுமென்று தெரிகிறது. ஜினவிஜய முனி எழுதிய 'புராதன பிரபந்த சங்கரகம்' போன்ற வேறு நூல்களும் இத் தகவல்களை உறுதிப் படுத்துகின்றன. இவை கூறுகின்றபடி பார்த்தால், திரிபுவன பாலரை ஜெயசிம்மர் பல விதங்களிலும் கொடுமைப் படுத்தி இறுதியில் கொன்று விட்டார் என்று தெரிகிறது. திரிபுவன பாலரின் மகனை குமாரபாலருக்கு அப்பொழுது வயது ஏறத்தாழ இருபது. தமது உயிருக்கும் ஆபத்து வரக்கூடுமென்று அஞ்சி அவர் அணகிலப் பாடகத்தை விட்டு, மாறுவேடத்தில் பல புண்ணியத் தலங்களுக்கும் சென்றராம். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு உஜ்ஜெயினியில் ஜெயசிம்மரின் மரணம்பற்றிய செய்தி அவருக்குக் கிடைத்ததாம். அவரது சகோதரியின் கணவரான கண்ணதேவர் அல்லது கிருஷ்ணர் அணகிலபாடகத்தில் முக்கியமான அதிகாரிகளுள் ஒருவராக இருந்தார். ஜெயசிம்மர் இறந்ததும் கண்ணதேவர் தமக்கு ஆதரவாகப் படையினர் சிலரைத் திரட்டி, அமைச்சர்கள் சிலரது ஆதரவோடு குமாரபாலரை வரவழைத்து முடிசூட்டியதாகச் சொல்லப்படுகிறது. இச் செய்தியிலும் ஓரளவு உண்மை இருக்கலாமென்றே தோன்றுகிறது. குமாரபாலர் அரியணை யேறியபோது அவருக்கு வயது ஐம்பது இருக்கலாம் என்று தெரிகிறது.

ஆட்சியின் துவக்கம்

இம் மன்னரது ஆட்சியைப்பற்றி அறிந்து கொள்வதற்குச் சமணப் பிரபந்தங்கள் மட்டுமின்றி, ஏராளமான கல்வெட்டுகளும், 'அயினி அக்பரி' போன்ற நூல்களும் நமக்குத் துணைபுரிகின்றன. கி.பி. 1144-இல் இம் மன்னர் அரியணை ஏறி, கி.பி. 1172ஆம் ஆண்டு வாக்கில் காலமானர் என்று தெரிகிறது. இவர் பதவிக்கு வந்ததும் தமக்கு எதிராகச் சதிகளில் ஈடுபட்டிருந்த பல அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கொன்றர். இதன் பின்னர், பாகதருக்கு ஆதரவாகச் சாகம்பரியைச்

சேர்ந்த சாகமான அரசர் அருணராஜர் வேறு சில அரசர்களை யும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு படையெடுத்து வந்தார். அவருக்குத் துணை சென்ற மற்ற அரசர்களுள் முக்கியமானவர் உஜ்ஜெயினியை ஆட்சி புரிந்த பல்லாளர். வடக்கிலிருந்து அருணராஜரும் கிழக்கிலிருந்து பல்லாளரும் தாக்குதல் தொடுத் தனர். குமாரபாலரது தளபதிகளான விஜயரும் கண்ண தேவரும் (கிருஷ்ணரும்) பல்லாளரை எதிர்த்துப் போர் புரிந் தனர். குமாரபாலரே அருணராஜரை எதிர்க்கச் சென்றுர். அருணராஜர் போரில் காயமுற்று, சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார். இறுதியில், அருணராஜரது மகளைக் குமாரபாலர் திருமணம் செய்து கொண்டார். இப் போரில் அருணதேவருக்கு உதவி நல்கிய அற்புத மண்டலத்துப் பரமார அரசர் விக்கிரம சிம்மர் என்பவர்மீதும் குமாரபாலர் போர் தொடுத்தார். விக்கிரமசிம்மர் தோற்கடிக்கப்பட்டு, அரியணையிலிருந்து அகற்றப்பட்டு, அவரது உறவினர்களுள் ஒருவரான யசோத வலர் அரசராக்கப் பட்டார். இது குமாரபாலர் ஆட்சிக்கு வந்த ஆண்டிலோ (கி.பி. 1144) அல்லது அடுத்த ஆண்டிலோ நடை பெற்றதாகத் தெரிகிறது. இதன் பின்னர், குமாரபாலரும் யசோதவலரும் தமது படைகளுடன் சென்று, பல்லாளருக்கெதி ரான போரில் விஜயருக்கும் கண்ணதேவருக்கும் உதவினர். பல்லாளர் போரில் கொல்லப்பட்டு, உஜ்ஜெயினியைச் சுற்றி யிருந்த அவந்தி முழுவதும் சௌளுக்கிய அரசோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

இப் போர்களைப்பற்றிக் கிட்டத்தட்ட பத்துச் சமண நூல்கள் குறிப்பிடுகின்றன. பல்வேறு மாறுபட்ட தகவல்களை இந் நூல் கள் தருகின்றனவாயினும், அடிப்படையில் இப் போர்கள்பற்றிய உண்மைச் செய்திகளையே அவை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இந் நிகழ்ச்சிகளுக்குச் சற்றுப் பின்னர் இவரது மைத்துனரான கண்ணதேவருக்கும் இவருக்குமிடையே பகைமை ஏற்பட்டது. கண்ணதேவர் மிகுந்த திமிரோடு நடந்து கொண்டார் என்றும், அதனுல் அவரது கண்கள் பறிக்கப்பட்டுக் குருடாக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

மற்றப் போர்கள்

சௌராஷ்டிரத்தில் சம்வரர் (Sumvara) என்ற ஒரு சிற்றரசர் கிளர்ச்சி செய்தார். அவருக்கெதிராக உதயணர் என்ற அமைச் சரின் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. ஆனுல், உதய ணர் தோற்று உயிரிழந்தார். மற்றொரு படை பின்னர் அனுப் பப்பட்டு, சம்வரர் ஒடுக்கப்பட்டார். (சம்பரர், சுஸ்சலர்,

சௌசலர் என்றெல்லாம் இவரது பெயர் திரிந்து காணப்படுகிறது.) ஏதோ காரணம்பற்றி, நாதோலைச் சேர்ந்த சாகமான அரசர் ராஜ்யபாலர்மீதும் பகைமை ஏற்பட்டது. ராஜ்யபாலர் தோற்கடிக்கப்பட்டுச் சுமார் ஐந்தாண்டு காலம் (1154-1159) குமாரபாலரது தண்டநாயகர் வைஜல்லதேவர் என்பவர் நாதோல் அரசை நிர்வகித்து வந்தார். இதே குடும்பத்தைச் சேர்ந்த ஆல்கணதேவர் (முந்திய அரசர் ஆசாராஜரது மகன்) என்பவர் சம்வரருக்கு எதிரான போரின்போது குமாரபாலருக்கு உதவிபுரிந்து, அதற்குக் கைம்மாருக பார்மருக்கு (Barmer) அருகில் உள்ள கிராடகூபம் என்ற ஊரைத் தரப்பெற்று, சிற்றரசராக ஆட்சி புரிந்தார். இந்த ஊர் கிராடு என்ற பெயரில் இன்றும் உள்ளது. பின்மாலைச் சேர்ந்த பரமார அரசர் சோமேசுவரர் குமாரபாலருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராக இருந்து வந்தார். சாகம்பரி அரசர் அருணராஜருக்கெதிராகக் கி.பி. 1150-ல் மற்ருெரு போர் மூண்டது. ஜெயசிம்ம சித்தராஜரின் மகளான தம் மனைவியை அருணராஜர் அவமதிப்புடன் நடத்தியதே இதற்குக் காரணமாம். அருணராஜர் தோற்கடிக்கப்பட்டு அவரது தலைநகரம் சூறையாடப்பட்டதாயினும், தொடர்ந்து ஆண்டுவருமாறு அவர் அனுமதிக்கப்பட்டார். கி.பி. 1160க்குப் பின் கொங்கணத்தையாண்ட மல்லிகார்ஜுனர் என்ற அரசரின் மீது போர் தொடுக்கப்பட்டது. இவரது தலைநகரம் தாணு. பம்பாய்க்கு அருகில் உள்ள தாணுவே இது எனப் பலரும் கருதுகின்றனர். மல்லிகார்ஜுனர் தோற்கடித்துக் கொல்லப்பட்டு, அவரது அரசு இணைத்துக் கொள்ளப்பட்டது.

இம் மன்னரது பெருமைகள்

இம் மன்னர் மேற்கில் துருக்ஷர்களை எதிர்த்தும், கிழக்கில் கங்கை நதிக் கரையில் சில அரசர்களை எதிர்த்தும் போரிட்டதாகக் 'குமாரபால சரிதம்' குறிப்பிடுகிறது. இம் மன்னரது திக்விஜயத்தைப்பற்றிப் பல செய்திகளை அது உரைக்கின்றது. இவற்றில் பல புனைந்துரையே என்பதில் ஐயமில்லை. இருப்பினும், குமாரபாலர் திறமைமிக்க ஓர் அரசர் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இவரது அரசு ஜெயசிம்ம சித்தராஜரது அரசைப் போலவே பரந்திருந்தது. பரமாரர்கள், சாகமானர்கள் முதலிய பலர் குமாரபாலருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாயிருந்தனர். உதயணரும் அவரது மகனை வாக்பட்டரும் (இவரும் பாகதர் என்று அழைக்கப்பட்டார்) இவருக்கு அமைச்சர்களாயிருந்தனர். வேறு பல அமைச்சர்களும் இவருக்கு இருந்தனர் என்பது நூல்களிலும் சாசனங்களிலும் காணப்படும் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.

பெருங் கவிஞராகிய ஹேமசந்திரர் இம் மன்னராலும் ஆதரிக்கப்பட்டு, இவரது அவையில் வாழ்ந்தார். ஹேமசந்திரரது ஆலோசனையின்படியே குமாரபாலர் செயல்பட்டார் என்று நூல்கள் தெரிவிக்கின்றன. ராமசந்திரர், ஸ்ரீபாலர், சித்த பாலர் போன்ற கவிஞர்களும் இம் மன்னரால் ஆதரிக்கப்பட்டனர். தமது இறுதி ஆண்டுகளில் சைவ சமயத்தை விடுத்து, ஹேமசந்திரரின் தூண்டுதல் காரணமாகக் குமாரபாலர் சமணரானுர் என்று பல சான்றுகளும் தெரிவிக்கின்றன. முதலில் சிவாலயங்களைப் பல இடங்களில் கட்டிய இம் மன்னர், பின் பார்சவ நாதருக்கும் இரு ஆலயங்களை எழுப்புவித்தார். இச் சமயத்தில்தான் உயிர்ப் பலியைத் தடைசெய்யும் ஆணைகளை இம் மன்னர் பிறப்பித்தார். பிராமணர்கள் வேள்விகளின் போது உயிர்களுக்குப் பதில் தானியங்களையே பயன்படுத்தும் கட்டம் வந்து வாய்த்தது. குமாரபாலரது சிற்றரசர்களில் சிலர்கூட இதே போல் உயிர்ப் பலியைத் தடை செய்ததைச் சில சாசனங்கள் நிரூபிக்கின்றன. ஆயினும், சைவ சமயத்தையோ பிராமணர்களையோ இவர் அவமதிக்கவில்லை. தமது இறுதிக் காலத்தில்கூட அணகிலப் பாடகத்தில் சிவன் கோயில் ஒன்றை இவர் எழுப்பினுர். சூதாட்டமும் தடைசெய்யப்பட்டது. வாரிசின்றி இறப்போரின் சொத்துகளை அரசு கவர்ந்து கொள்ளும் வழக்கமானது இவரியற்றிய இன்னெரு சட்டத்தின்மூலம் தடை செய்யப்பட்டது.

நஞ்சூட்டப்பட்டு மரணம் எய்துதல்

குமாரபாலருக்கும் ஜெயசிம்ம சித்தராஜரைப் போலவே ஆண் மகவு இலர். மகிபாலர், கீர்த்திபாலர் என்ற இரு அண்ணன்களும் இரு சகோதரிகளும் மட்டுமே அவருக்கு இருந்தனர். சகோதரிகளுள் ஒருவரான தேவலாதேவி சாகமான அரசர் அருணராஜருக்கு மனைவியாயிருந்தார். மற்றெரு சகோதரியின் பெயரோ, மற்றத் தகவல்களோ தெரியவில்லை. தமக்குப் பின் எவர் அரியணை ஏறுவது என்பதுபற்றி ஹேமசந்திரர் போன்றோருடன் அடிக்கடி குமாரபாலர் கலந்து ஆலோசித்தார். குமாரபாலரது தங்கையின் மகனுன பிரதாபமல்லர் என்பாரையே வாரிசாக்கலாமென ஹேமசந்திரர் ஆலோசனை கூறினுராம். (குமாரபாலரது தங்கையின் மகனென்றும் பிரதாப மல்லரைச் சிலர் கருதுகின்றனர்.) மகிபாலரது மகனுன அஜயபாலர் என்பவர் இதையறிந்து, அரியணையைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ரகசியமாகச் செய்துவந்தார். இச் சமயத்தில் ஹேமசந்திரர் காலமானுர். அவர் காலமான

முப்பத்திரண்டாவது நாளில் குமாரபாலரை நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு, அஜயபாலர் அரியணையைக் கவர்ந்து கொண்டார்.

அஜயபாலர்

அஜயபாலர் காலத்துச் சாசனங்கள் சில கிடைத்துள்ளன. அவர் கி.பி. 1173 முதல் 1176 வரையில் சுமார் மூன்று ஆண்டுகள் ஆண்டார் என்று தெரிகிறது. இவர் பதவிக்கு வருவதற்குச் சற்று முன்னர்ப் பிரதாபமல்லருக்கும் அஜயபாலருக்கும் இடையே போர் நடைபெற்றது. பிரதாபமல்லரைச் சமணர்கள் பலர் ஆதரித்தனர். அஜயபாலரோ பிராமணர்களால் ஆதரிக்கப்பட்டார் போலும்! எனவே, வெற்றி பெற்ற அஜயபாலர் சமணர்களைத் துன்புறுத்தியதாகவும் அவர்களது ஆலயங்களை அழித்ததாகவும் மெருதுங்கர் எழுதுகிறார். சமணக் கவிஞராகிய ராமசந்திரரையும் வேறு பலரையும் அஜயபாலர் கொன்றாராம். மெருதுங்கரது பிரபந்த சிந்தாமணி காலத்தால் சற்றுப் பிந்தியது. அதற்கு முந்திய சமண நூல்கள், சான்றாக அரிசிம்மரின் சுகிர்த சங்கீர்த்தனம், யசபாலரின் மோகராஜபராஜயம் போன்ற நூல்கள், சமணர்களை அஜயபாலர் கொடுமைப் படுத்தியதாகக் குறிப்பிடவேயில்லை. மேலும், யசபாலரது தந்தையான தனதேவர் (இவரும் சமணரே) அஜயபாலரிடம் அமைச்சராக இருந்தார். எனவே, அஜயபாலர் சமணர்களை வெறுத்தவர் என்ற குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கில்லை.

சாகம்பரிமீது அஜயபாலர் படையெடுத்து, அதன் அரசரான சோமேசுவரரிடமிருந்து விலைமதிப்புள்ள பல பொருள்களைக் கவர்ந்து கொண்டார். மேவாரைச் சேர்ந்த குகிலர்களுக்கு எதிராகவும் போர் நிகழ்ந்தது. குகில சிற்றரசரான சாமந்தசிம்மர் என்பவர் சௌளுக்கிய நாட்டின்மீது படையெடுத்து, அஜயபாலரைக் காயப்படுத்தினார். அற்புத மண்டலத்தை ஆண்டு வந்த பரமார அரசர் தாராவர்ஷர் தம் தம்பியான பிரகலாதனர் என்பாரின் தலைமையில் ஒரு படையை அனுப்பி, சாமந்த சிம்மரைக் குஜராத்திலிருந்து விரட்டி அஜயபாலரைக் காத்தார்.

இவரது மரணம்

அஜயபாலர் மூன்றே ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பின், தமது காவல் அதிகாரியான (பிரதிகாரண்) வயஜலதேவன் என்பவனால் கொலை செய்யப்பட்டதாகச் சமண நூல்கள் தெரிவிக்

கின்றன. சமணர்களுக்கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பழிதீர்த்துக் கொள்வதற்காகவே இந்தக் கொலை நிகழ்ந்தது என்று மெருதுங்கர் போன்றோர் எழுதுவது எவ்வளவு தூரம் உண்மை என்பது புலப்படவில்லை. அஜயபாலர் அஜய தேவர் என்றும் அழைக்கப்பட்டார்.

இரண்டாம் மூலராஜர்

கோரி முகம்மதுவின் படையெடுப்பு

அஜயபாலருக்குப் பின் அவரது மகனான இரண்டாம் மூலராஜர் அரசரானார். இவர் அப்பொழுது சிறுவராயிருந்தார் என்பது 'பால மூலராஜர்' என்று பிரபந்த சிந்தாமணி அவரை அழைப்பதால் நன்கு புலப்படுகிறது. கி.பி. 1176 முதல் 1178 வரையில் இரண்டாண்டு காலமே இவர் ஆட்சிபுரிந்தார். இவரது தாயான நாயகிதேவி கடம்ப வம்சத்தைச் சேர்ந்த, கோவாப் பிரதேசத்தையாண்ட, பரமார்த்தி என்ற அரசரது மகள். மகன் சார்பில் அன்னை நாயகிதேவியே நிர்வாகத்தை நடத்திவந்தார். கி.பி. 1178-ல் கோரி முகம்மது சௌளுக்கிய அரசின்மீது படையெடுத்து வந்தார். நாயகிதேவி சிறுபிள்ளையான மைந்தன் மூலராஜரைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, அபுக் குன்றின் அடிவாரத்திலிருந்த கதரகட்டம் (Gadaraghatta) என்ற விடத்தில் முஸ்லிம் படைகளை எதிர்த்துத் தோற்கடித்தாள் என்று பிரபந்த சிந்தாமணி குறிப்பிடுகிறது. முகம்மது தோல்வியுற்றார் என்பதை வேறு சமண நூல்கள் மட்டுமின்றி, முஸ்லிம் ஆசிரியர்களும்கூடக் குறிப்பிடுகின்றனர்.

இப் போர்பற்றிய ஒரு சிறு சிக்கலையும் இங்குக் குறிப்பிடுவது அவசியம். முஸ்லிம் ஆசிரியர்கள் அனைவரும் கோரி முகம்மதை எதிர்த்துப் போரிட்ட குஜராத் அரசர் பீமதேவர் (இரண்டாம் பீமர்) என்றே குறிப்பிடுகின்றனர்.[1] ஆனால், சமணப் பிரபந்தங்களோ இரண்டாம் மூலராஜரது காலத்திலேயே இப் போர் நிகழ்வுற்றதென்று தெளிவாகக் குறிக்கின்றன. இப் போருக்குப் பின் குறுகிய காலத்திலேயே இரண்டாம் மூலராஜர் மரணமடைந்து அவரது தம்பியான பீமதேவர் அரசரானதால், பல ஆண்டுகளுக்குப் பின் இப் போர்பற்றி எழுதிய முஸ்லிம் நூலாசிரியர்கள் இத் தவற்றை இழைத்துவிட்டனர் என்று தெரிகிறது. முஸ்லிம் படையெடுப்பைப் பயன்படுத்தி, தாராவைச் சேர்ந்த பரமார

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians* Vol. II.

அரசர் விந்தியவர்மன் என்பவர் சௌளுக்கியர்களின் பிடியிலிருந்து மாளவத்தை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தார். ஆனால், கவிஞரான சோமேசுவரரின் தந்தை குமாரர் என்பவர் தலைமையில் சௌளுக்கியப் படையானது இம் முயற்சியைத் தோற்கடித்தது.[1]

இரண்டாம் பீமர்

இரண்டாம் மூலராஜர் கி.பி. 1178-ல் காலமானதும், அவரது தம்பியான இரண்டாம் பீமதேவர் அரியணை ஏறினர். இவரது காலத்திய செப்பேடுகளும் கல்வெட்டுகளும் பெரும் எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. பதவிக்கு வந்தபோது இவரும் சிறுவராகவே இருந்தார். இவர் அறுபத்து மூன்று ஆண்டுகள்வரை ஆட்சிபுரிந்ததாகப் பிரபந்த சிந்தாமணி குறிப்பிடுகிறது. ஆட்சிக்கு வந்த ஆண்டையும் ஆட்சி முடிந்த ஆண்டையும் கணக்கிட்டால், கி.பி. 1241-ல் இவரது ஆட்சி முடிவுற்றதாக ஆகிறது. ஆனல், இவரது கடைசிக் கல்வெட்டும் சமண நூல்களில் குறிப்பிடப்படும் இவரது கடைசி ஆண்டும் கி.பி. 1238 ஐயே சுட்டுகின்றன. எனவே, கி.பி. 1239-ல் இவரது ஆட்சி முடிவுற்றதாக நாம் கொள்ளலாம்.

குழப்பங்கள்

இவர் அரியணை ஏறியபோது முஸ்லிம்கள் இந்தியாவில் பல பகுதிகளை ஏற்கெனவே கைப்பற்றியிருந்தனர். லாகூரைத் தலைநகராகக் கொண்டு, வடமேற்குப் பகுதியை யமீனி சுல்தான்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். பிரதிகார அரசு சீர்குலைந்து போயிருந்தது. வங்காளத்தில் பாலவம்சம் வீழ்ச்சியுற்று, சேனர்கள் ஆட்சிக்கு வந்திருந்தனர். சாகமானர்கள், காகதவாலர்கள், சந்தெல்லர்கள், கலச்சூரிகள் ஆகியோர் அடிக்கடி தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டு, முஸ்லிம் படையெடுப்பாளர்களுக்கு இரையாவதற்குக் காத்துக் கிடந்தனர். இந் நிலையில், பீமரும் வயது முதிராத சிறுவராக அரியணை ஏறியது பல தீய விளைவுகளைத் தோற்றுவித்தது. இவர் பட்டத்துக்கு வந்தபொழுது குஜராத், ராஜஸ்தானத்தின் ஒரு பகுதி ஆகியவை இவரது ஆட்சியிலிருந்தன. ஆனல், விரைவிலேயே சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் சுதந்திரம் அடைய விரும்பிக் குழப்பங்களைத் தோற்றுவித்தனர். அரசர் சிறுவராயிருந்ததே இதற்குக் காரணம். சமணப் பிரபந்தங்கள் இவரது ஆட்சியின் முதல் பன்னிரண்டு ஆண்டு கால நிகழ்ச்சிகளைப்பற்றி நமக்குச் செய்திகளைத் தெரிவிக்காமையால், உண்மை நிலையைத் தெளிவாக உணர இயலவில்லை.

[1] K. M. Munshi, *Glory that was Gurjaradesa.*

வாகேலர்கள்

சிறுவராயிருந்த இரண்டாம் பீமர் வாகேலர்களின் (Vaghelas) உதவியை நாடினர். முந்திய அரசர்களுள் ஒருவரான குமார பாலரது சிற்றன்னையைச் சௌளுக்கிய அரச குடும்பத்தைச் சேர்ந்த தவலர் என்பவர் மணந்திருந்தார். இவர்களது பிள்ளைகளில் ஒருவரான அருணராஜர் குமாரபாலருக்கு ஆதரவாகப் பல போர்களில் பங்குபற்றினர். இதற்குக் கைம்மாருக அணகிலப் பாடகத்துக்குப் பத்து மைல் தென்மேற்கில் வியாகரபள்ளி என்ற ஊரும் அதை அடுத்திருந்த நிலங்களும் அருணராஜருக்குக் குமாரபாலரால் கொடுக்கப்பட்டன. வியாகரபள்ளி என்பதே வாகேல் என்று பின்னல் திரிந்து, இவர்கள் வாகேலர்கள் என்ற பெயரையும் பெற்றனர். இந்த அருணதேவரும் இவரது மகனுன லவணப் பிரசாதரும் இரண்டாம் பீமருக்குப் பல வழிகளிலும் உதவினர். கிளர்ச்சிகள் செய்து குழப்பம் விளைவித்த சிற்றரசர்கள்மீது அருணராஜர் படையெடுத்துச் சென்றுர். (இவருக்கு ஆனகர் என்ற மற்ருெரு பெயரும் உண்டு.) பல குறுநில மன்னர்கள் இவரால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். ஆயினும், இப் பணி முடிவுறும் முன்னரே ஒரு போரில் அருணராஜர் உயிரிழந்தார். பின்னர், அருணராஜரின் மகனுன லவணப் பிரசாதர் தம் தந்தையின் பணியினை மேற்கொண்டு, அரசர் பீமதேவருக்கு உதவி புரியலானுர். லவணப் பிரசாதரே உண்மையான அரசர் போல, இன்றைய கைரா மாவட்டத்திலிருந்த தோல்கா (Dholka) என்ற நகரிலிருந்து கொண்டு, ஆதிக்கம் நடத்தினுர். தேஜாபாலர் (Tejapala), வாஸ்துபாலர் ஆகிய இரு சகோதரர்கள் இவருக்கு அமைச்சர்களாயிருந்தனர்.

தக்கணத்தில் தேவகிரியை ஆண்ட யாதவ அரசர் பில்லமரும் அவரது மகனுன ஜெய்துகியும் குஜராத்தின்மீது பலமுறை படையெடுத்து வந்தனர். கி.பி. 1179 முதலே பில்லமரது படையெடுப்புகள் துவங்கி, விட்டுவிட்டு நீண்ட போர்கள் நடைபெற்றன. எவ்வாருே யாதவப் படையெடுப்பிலிருந்து குஜராத் காப்பாற்றப்பட்டது. இவற்றையெல்லாம்பற்றிச் சமணப் புலவர்கள் குறிப்பிடவில்லை. வாஸ்துபாலர், தேஜாபாலர் ஆகிய இரண்டு சமணர்கள் அமைச்சர்களாக வந்தபின்னரே சமணப் பிரபந்தங்கள் பீமரின் ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. பரமார அரசர் சுபதவர்மன் லாட்டத்தின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி, அதன் பின்னர்க் குஜராத்துக்குள்ளும் புகுந்தார். லவணப் பிரசாதரால் பரமாரப் படைகள் இறுதியில் தோற்கடித்து விரட்டப்பட்டன.

முஸ்லிம் படையெடுப்பு

இவ்வளவு குழப்பங்கள் நிலவிய வேளையில்தான், கி.பி. 1197-ல் குத்புதீன் அய்பக் குஜராத்தின்மீது படையெடுத்து வந்தார். இதற்கு முன், கி.பி. 1195-ல் அஜ்மீரிலிருந்த முஸ்லிம் படைகளை மெகர்கள் (Mhers) என்போர் பீமதேவரின் படையுதவியோடு தாக்கினர். இரண்டு நாள் போர் நடைபெற்ற பின், முஸ்லிம் படைகள் படுதோல்வியுற்றன. குத்புதீன் அய்பக் காயமுற்று அஜ்மீருக்கு ஓடினுர். பின்னர் ஓராண்டுக்குப் பிறகு (1197-ல்) மீண்டும் அய்பக் படையெடுத்து வந்தார். அபுக் குன்றின் அடிவாரத்தில் முன்பு கி.பி. 1178-ல் முகம்மது கோரி தோற்கடிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் சண்டை துவங்கிற்று. கி.பி. 1197 பிப்ரவரி முதல் வாரத்தில் இது நடைபெற்றது. தாராவர்ஷர், பிரகலாதனர், கர்ணர் ஆகிய மூன்று பேர் சௌளுக்கியப் படைகளுக்குத் தலைமை தாங்கினர். தாராவர்ஷரும் அவரது தம்பியான பிரகலாதனரும் அற்புத மண்டலத்துப் பரமாரர்கள். கர்ணர் இன்னுர் என்பது தெரியவில்லை. அவசரப்பட்டு இந்தியர்களே தாக்குதலைத் துவக்கினர். கடுமையான போருக்குப் பின்னர், பீமரின் படைகள் படுதோல்வியுற்றன. ஐம்பதாயிரம் இந்தியர்கள் கொல்லப்பட்டதாகவும் இருபத்தையாயிரம் பேர் சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இரண்டாம் பீமர் தலைநகரத்தைக் காலி செய்துவிட்டு வெளியேறினுர். கீர்த்தி வாய்ந்த அணகிலப்பாடக நகரம் அய்பக்கால் கைப்பற்றப்பட்டுச் சூறையாடப்பட்டது. இதன் பின்னர், அந் நகரில் முஸ்லிம் ஆளுநர் ஒருவரை நியமித்துவிட்டு, அஜ்மீருக்குத் திரும்பினுர் அய்பக்.[1] இரண்டாம் பீமர் படைகளைத் திரட்டிக் கொண்டு வந்து சில மாதங்களிலேயே முஸ்லிம்களை முற்றிலுமாகத் தமது நாட்டிலிருந்து விரட்டி ஓட்டினுர். இதைக் குறிக்கும் வகையில், கி.பி. 1199-ல் 'அபிநவ சித்தராஜர்' என்ற விருதுப் பெயரை அவர் அணிந்து கொண்டார்.

ஜெயசிம்மரின் கிளர்ச்சி

கி.பி. 1209-ல் சௌளுக்கிய குடும்பத்தைச் சேர்ந்த ஜெயசிம்மர் அல்லது ஜெயந்தசிம்மர் என்பவர் குஜராத்தின் அரியணையைக் கவர்ந்து கொண்டார். ஜெயசிம்மர் என்பவர் எவர் என்பதும், எவ்வாறு அவரால் அரியணையைக் கவர்ந்து கொள்ள முடிந்தது என்பதும் விளங்கவில்லை. தாராவையாண்ட பரமார அரசரான அர்ஜுனவர்மன் ஜெயசிம்மரைத் தோற்கடித்ததாகப்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol. II. Sir W. Haig, *The Cambridge History of India*, Vol. III.

பரமாரர்களது சாசனங்கள் தெரிவிக்கின்றன. அர்ஜுனவர்மன் கி.பி. 1210க்குச் சற்று முன்பு அரசரானார். ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே ஜெயசிம்மரை இவர் தோற்கடித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே, இப் போர் 1210-ல் நடைபெற்ற தாக நாம் கொள்ளலாம். பர்வபர்வதம் என்றவிடத்தில் இப் போர் நிகழ்ந்ததாம். இது எங்கே உள்ளது என்பதையும் நம் மால் அறிய முடியவில்லை. கி.பி. 1213-ல் அர்ஜுனவர்மன் மறுபடியும் படையெடுத்து வந்து, லாட்டத்தின் தலைநகரான பிருகுகச்சம் (இன்றைய புரோச் நகரம்) போன்ற பகுதிகளைக் குஜராத்தின் ஆட்சியிலிருந்து விடுவித்துக் கைப்பற்றினார்.

ஜெயசிம்மரது சாசனங்களும் ஒன்றிரண்டு கிடைத்துள்ளன. அவரது கடிச் (Kadi) செப்பேடானது அவர் 1223-ல் ஆட்சியி லிருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. ஆனால், இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி. 1226ஆம் ஆண்டு பொறித்த பீமரது செப்பேடு அதே ஊரிலிருந்து (கடியிலிருந்து) வெளியிடப் பட்டது. எனவே, 1223க்கும் 1226க்குமிடையில் ஜெயசிம்மர் ஒழிந்து, இரண்டாம் பீமர் மீண்டும் அரியணையைப் பெற்றுவிட் டார். எனவே, சுமார் பதினைந்தாண்டு காலம் இரண்டாம் பீமருக்குப் பதிலாக ஜெயசிம்மரே சௌளுக்கிய அரசராயிருந் தார். இந் நிகழ்ச்சிகளெல்லாம்பற்றிச் சமண நூல்கள் மௌனம் சாதிக்கின்றன.[1]

ஜெயசிம்மர் கி.பி. 1210க்கு முன் அரசராகி விட்டார் என்ற செய்தியைப் பரமார அரசர் அர்ஜுனவர்மனின் குருவான மதனர் என்பவர் எழுதிய ‘பாரிஜாத மஞ்சரி’ என்ற நாடகமும் நமக்குப் புலப்படுத்துகிறது. அர்ஜுனவர்மன் ஜெயசிம்மரைத் தோற்கடித்ததை இது குறிப்பிடுகிறது. இதற்கு மேல் ஜெய சிம்மர்பற்றி எத் தகவலும் கிடைக்கவில்லை. இரண்டாம் பீமர் எவ்வாறு அரியணையை இழந்தார், அதை இழந்த பின் எங்கே எவ்வாறு வாழ்ந்தார் என்னும் தகவல்களையும் அறிய முடிய வில்லை.

குஜராத்தின்மீது படையெடுப்புகள்

லவணப் பிரசாதர்

ஜெயசிம்மர் அணகிலப்பாடகத்தில் ஆட்சியைக் கைப்பற்றி யிருந்த காலத்தில் லவணப்பிரசாதர் தோல்காவில் (Dholka) சிறிது சிறிதாகத் தம்முடைய அதிகாரத்தைப் பெருக்கி வந்தார்.

[1] K. M. Munshi, *Glory that was Gurjaradesa.* H. C. Ray, *The Dynastic History of Northern India*

இரண்டாம் பீமர் மீண்டும் அரியணையைப் பெற்றுலும்கூட, அவரது வலிமையும் செல்வாக்கும் ஒடுங்கிப் போய் இருந்தன. இந்நிலையில் லவணப்பிரசாதரே குஜராத்தின் உண்மையான அரசர் போலச் செயல்படலானுர். அவரும் அவரது மகனுன வீரதவலர் என்பாரும் போர் வலிமை பெற்று விளங்கினர். அன்னியர்களது படையெடுப்புகளிலிருந்து குஜராத்தை அவர்கள் காத்தது பற்றி அவர்களது குடும்ப குருவான சோமேசுவரரது 'சுரதோத்சவம்' (Surathotsava) என்ற நூல் விளக்குகிறது. தேவகிரியைச் சேர்ந்த யாதவகுல அரசரான சிங்கணர் தெற்குக் குஜராத்தின் மீது பலமுறை படையெடுத்து வந்தார். வடக்கிலும் சாகமானர் போன்ற பகைவர்கள் குஜராத்தைத் தாக்கினர். தோல்காவில் தேஜபாலரது தலைமையில் ஒரு படையை லவணப்பிரசாதர் நிறுத்தியிருந்தார். தெற்குக் குஜராத்தைக் காப்பதற்கென வாஸ்துபாலர் ஒரு பெரும் படையோடு கேம்பே (Cambay) பகுதியில் ஸ்தம்பா என்றவிடத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சிங்கணரது படையெடுப்புகள் பலமுறை லவணப்பிரசாதரது முயற்சி காரணமாகத் தோல்வியில் முடிந்தன. சிங்கணர் லாட்டத்தையாண்டச் சாகமான சிற்றரசர் சங்கர் போன்ற பல அரசர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு, மீண்டும் ஒரு முறை படையெடுத்து வந்தார். அதே நேரத்தில் அவரது தூண்டுதலின் பேரில் வடக்கில் மாரவாதர்கள் (Maravadas) என்ற குறுநில மன்னர்கள் போர் தொடுத்தனர். லவணப்பிரசாதரும் வீரதவலரும் வடக்கே விரைந்து மாரவாதர்களைத் தோற்கடித்தனர். தெற்கில் சிங்கணர் மகி (Mahi) நதி வரையில் வந்தார். சங்கரின் லாட்டத்துப் படைகளை வாஸ்துபாலர் தோற்கடித்துத் திருப்பி விரட்டினுர். மற்ருெரு சமயத்தில் அல்தாமிஷின் தலைமையில் முஸ்லிம் படைகள் வடக்குக் குஜராத்தினுள் நுழைந்த பொழுது சிங்கணர், சங்கர் ஆகியோர் தெற்கில் தாக்குதல் தொடுத்தனர். மாளவத்துப் பரமார அரசர் தேவபாலரும் (அர்ஜுனவர்மனுக்கு அடுத்த அரசர் இவர்) இவர்களுக்கு உதவியாகப் போர் தொடுத்தார். வீரதவலர் வடக்கு நோக்கி விரைந்து முஸ்லிம் படைகளை விரட்டி ஓட்டினுர். வாஸ்துபாலர் தெற்கில் சிங்கணரையும் அவரது கூட்டாளிகளையும் தோற்கடித்தார். இதன் பின்னர், கி.பி. 1230ஆம் ஆண்டு வாக்கில் லவணப்பிரசாதரும் சிங்கணரும் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொண்டு சிறிது காலம் நண்பர்களாயிருந்தனர்.

வீரதவலர்

கி.பி. 1232ஆம் ஆண்டு வாக்கில் தள்ளாமை காரணமாக லவணப்பிரசாதர் ஓய்வு பெறவே, அவரது மகன் வீரதவலர்

பொறுப்புகளை மேற்கொண்டார். ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு கிளர்ச்சி செய்த சில சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் வீரதவலரால் ஒடுக்கப்பட்டனர். வீரதவலர் இதற்குப்பின் ஒரு சில ஆண்டுகளே உயிருடன் இருந்தார். அவரது மகனை வீரமர் என்பவர் வித்யுத்புரம் (Vidyutpura) என்ற ஊரில் இரண்டாம் பீமருக்குக் கட்டுப்பட்ட மகா மண்டலேசுவரராக (சிற்றரசராக) கி.பி. 1239-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பது ஒரு சாசனத்தால் தெரியவருகிறது. வீரதவலர் இந்த ஆண்டுக்கு முன் இறந்துவிட்டாரா அல்லது தோல்காவில் இருந்தவாறே தொடர்ந்து ஆட்சி புரிந்து வந்தாரா என்பது புலனாகவில்லை. வீரதவலருக்கு விசாலர் அல்லது விசுவமல்லர் என்றொரு இளைய மகன் இருந்தார். விசாலருக்கும் வீரமருக்குமிடையே பகைமை ஏற்பட்டு, விசாலர் அவரது மாமனாரான உதயசிம்மர் என்பவர் ஆண்ட ஜாலோருக்கு (ஜாவாலிபுரம்) விரட்டப்பட்டார். இதன் பின்னர், வீரமர் சிறிது காலம் குஜராத்தில் அரசரைப் போல ஆண்டு வரலானார்.

சௌளுக்கிய அரசின் முடிவு

வாகேல வம்சம்

இரண்டாம் பீமதேவரது கடைசிக் கல்வெட்டுக் கி.பி. 1239ஆம் ஆண்டைச் சேர்ந்தது. அதற்குப் பின் ஓரிரு ஆண்டுகளில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அதன் பின்னர்த் திரிபுவன பாலர் என்பவர் அணகிலப்பாடகத்தில் அரியணை ஏறினர். இவரது முதலாவது கல்வெட்டுக் கி.பி. 1242ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. எனவே, சுமார் கி.பி. 1241-ல் இவர் அரியணை ஏறினர் என்று நாம் வைத்துக் கொள்ளலாம். இவருக்கும் இரண்டாம் பீமருக்குமிடையே என்ன உறவு இருந்தது என்பது தெரியவில்லை. சௌளுக்கிய அரசவம்சம் விரைவிலேயே முடிவுக்கு வந்தது. இரண்டாம் பீமர் அல்லது திரிபுவன பாலரே அந்த வம்சத்தின் கடைசி அரசராக இருந்தார். திரிபுவன பாலரது காலத்தில் தேவகிரி அரசர் சிங்கணர், பரமார அரசர் ஜெய்துகி, மேவாரைச் சேர்ந்த குகில அரசர் ஜெயத்ரசிம்மர் ஆகியோர் படையெடுத்தனர். அவர்கள் அனைவரையும் விசாலதேவர் விரட்டியடித்தார். இதற்குப் பின் வாகேல வம்சத்தைச் சேர்ந்த வீரமரும் விசாலரும் அரியணைக்காகப் போட்டி போட்டனர். வீரமர் சிறிது காலமும், பின்னர் அவரை அகற்றிவிட்டு, விசாலர் சிறிது காலமும் திரிபுவனபாலருக்குப் பதிலாக அரசராயிருந்தனர். விசாலர் 1243-ல் ஆண்டு

கொண்டிருந்தது ஒரு சாசனத்தால் தெரிய வருகிறது. இளமையிலேயே இறந்துபோன தம் அண்ணன் பிரதாபமல்லர் என்பாரின் மகன் அர்ஜுனனை அரசராக்கிவிட்டு, விசாலர் பதவி துறந்தார். இது 1260ஆம் ஆண்டுவாக்கில் நிகழ்ந்திருக்கக் கூடும். இந்த அர்ஜுனரின் மகன் சாரங்கதேவர் என்பார் கி.பி. 1247-ல் அரசரானார். டெல்லி சுல்தானான பால்பன் இவர்மீது படையெடுத்துச் சென்று, பல வெற்றிகளைப் பெற்றார். குகில அரசர் சமரசிம்மரது உதவிகொண்டு முஸ்லிம் படைகளை இம் மன்னர் விரட்டியோட்டினார். இவருக்குப் பின்னர், இளமையிலேயே காலமான இவரது அண்ணன் ராமரின் புதல்வரான கர்ணர் என்பவர் 1296-ல் அரசரானார். இதற்கு மூன்றாவது ஆண்டில் அலாவுதீன் கில்ஜியின் படைகள் நஸ்ரத்கான், உலூக்கான் ஆகியோரின் தலைமையில் குஜராத்தைத் தாக்கின. கர்ணர் தோற்கடிக்கப்பட்டு, குஜராத் முழுவதும் கில்ஜிப் படைகளால் கைப்பற்றப்பட்டது (1299). கர்ணர் நாசிக் மாவட்டத்திலிருந்த பாக்லான் (Baglan) என்ற ஊருக்குச் சென்று சிறிது காலம் ஆண்டு வந்தார். ஆனால், 1307-ல் குஜராத்தில் டெல்லி சுல்தானின் ஆளுநராயிருந்த அலஃப் கான் (Alaf Khan) என்பவர் பாக்லானைத் தாக்கினார். மிகவும் வீரத்தோடு முஸ்லிம்களை எதிர்த்துப் போராடிய கர்ணர் தோல்வியுற்று, தேவகிரிக்கு ஓடினார். இதற்கு மேல் இவரைப்பற்றிய செய்திகள் இல்லை. குஜராத்தில் இந்து அரசர்களின் ஆட்சி இவ்வளவுடன் முடிவுக்கு வந்தது.

(வம்சாவளி) தொடர்ச்சி

திரிபுவன பாலர்
- மகிபாலர்
  - 9. அஜயபாலர்
    - 10. இரண்டாம் மூலராஜர்
    - 11. இரண்டாம் பீமர்
      - ⋮
      - 12. திரிபுவனபாலர்
- கீர்த்திபாலர்
- 8. குமாரபாலர்

வாகேலர்கள்

தவலர்
|
அருணராஜர்
|
லவணப் பிரசாதர்
|
வீரதவலர்

- 1. வீரமர்
- பிரதாபமல்லர்
  - 3. அர்ஜுனர்
    - ராமர்
      - 5. கர்ணர்
    - 4. சாரங்கர்
- 2. விசாலர்

8. குகிலர்கள்

1. மேடபாடத்துக் குகில அரசு

பூர்விகம்

குகிலர் என்ற பெயர்

ராஜபுத்திர குலங்களிலேயே மிகவும் புகழ்மிக்கவர்களாகக் குகிலர்கள் (Guhilots) கருதப்படுகின்றனர். 'குகில புத்திரர்கள்' என்றும் ஆதியில் இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்களது பூர்விகம்பற்றிப் பல்வேறு வகையான கதைகள் கூறப்படுகின்றன. பெரும் புகழ் படைத்தவர்களாக இவர்கள் விளங்கிய காரணத்தினாலேயே புலவர்கள் கண்டபடியெல்லாம் கதைகளைப் புனைந்து இவர்களைப் பெருமைப்படுத்துவது தங்களுடைய கடமை என்று கருதினர் போலும்! இத்தகைய கற்பனைக் கதைகள் என்ற குப்பையில் குகிலர்களின் பூர்விகம்பற்றிய உண்மைச் செய்திகள் மறைந்து போயின.[1] வலபீயின் கடைசி அரசரான சீலாதித்தியரின் வீழ்ச்சிக்குப் பிறகு, அவரது மனைவி ஒரு குகையில் குழந்தை ஒன்றை ஈன்றாள் என்றும், எனவேதான் குகிலர்கள் என்று பெயர் ஏற்பட்டது என்றும் கூறுமளவுக்குச் சில புலவர்களின் கற்பனை கட்டுப்பாடற்று ஓடிற்று.

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மேற்கிந்தியாவில் தோன்றிய ஒரு சிற்றரசே குகில அரசு என்று தோன்றுகிறது. அரசை நிறுவியவர்கள் குகிலர்கள் அல்லது குகில புத்திரர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டனர். கி.பி. 977ஆம் ஆண்டைச் சேர்ந்த அத்பூர் (Atpur) கல்வெட்டே குகிலர்களின் வம்சாவளியை முழுமையாகத் தரும் முதலாவது சாசனமாகும். அத்பூர் அல்லது அத்புரம் என்பது குகிலர்களின் தலைநகரமான ஆகாடம் (இன்றைய அகர்) என்பதே. அதில் குகதத்தர் முதல் சக்திகுமாரர் வரையிலான இருபது அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. சக்திகுமாரர் 977-ல் ஆண்டார் என்றால், அவருக்கு இருபது தலைமுறைகளுக்கு முந்திய குகதத்தர்

[1] For the stories see Tod, *Annals and Antiquities of Rajasthan*, Edited by W. Crooke.

(20 ஆண்டுகள் × 20 அரசர்கள் = 400 ஆண்டுகள்) கி.பி. ஆரும் நூற்ருண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம். இந்தக் குகதத்தர் அல்லது குகரின் வம்சத்தினரே குகிலர் என்று பெயர் பெற்றனர் என்று ஊகிக்கலாம்.

இவர்களது பூர்விக இடம்

ஆரம்ப காலத்துக் குகில அரசர்களுள் பெருங் கீர்த்தி பெற்ற வராகப் புலவர்கள் அணைவராலும் மிகவாகப் புகழ்ந்து கதைகள் புணையப் பெற்றவரான பப்பா (Bappa) அல்லது பப்பராவல் என்பவர் குஜராத்திலுள்ள ஆனந்தபுரம் என்ற ஊரிலிருந்து வந்து, மேவாரில் சித்தூரைக் கைப்பற்றி, அதையே தலைநகராக்கிய தாகக் கதைகள் கூறுகின்றன. இக் கதைகள் உண்மையென்று ஏற்றுக்கொள்ளத்தக்கன அல்ல எனினும், குஜராத்திலிருந்து அவர் வந்தாரென்று கூறப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். குகிலர்களைக் குஜராத்துடன் சம்பந்தப்படுத்தும் வேறு பல கதைகளும் ராஜஸ்தானத்தில் வழங்கின. குகிலதத்தர் குஜராத்தைச் சேர்ந்த வலபீ அரசர் சீலாதித்தியரின் மகளுக ஒரு குகையில் பிறந்த கதையை முன்பே பார்த்தோம். பப்பாவின் காலத்தில் தான் குகிலர்கள் ராஜஸ்தானத்துக்குள் தங்களது ஆட்சியை விரிவுபடுத்தினர். அத்பூர்க் கல்வெட்டானது ஆனந்தபுரத்திலிருந்தே குகதத்தர் வந்தார் என்று கூறுகிறது. குகிலர்பற்றிய கதைப் பாடல்கள் இடார் (Idar) என்ற பகுதியையே குகிலர்கள் ஆதியில் ஆண்டனர் என்று குறிப்பிடுகின்றன. வலபீ அரசிக்குக் குகையொன்றில் பிறந்த குழந்தையானது இடார்ப் (Idar) பிரதேசத்து மக்களான வில்லர்களால் (Bhils) அரசனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாம். இந்த இடார் என்பது பழைய பம்பாய் ராஜதானியின் வடபகுதியிலிருந்த ஒரு சுதேச அரசாகும். ஆனந்தபுரத்தை அடுத்துக் கிழக்கில் இது இருந்தது. (ஆனந்தபுரம் என்பது தற்காலத்தில் வத்நகர்—Vadnagar—என்று அழைக்கப்படுகிறது. இது பரோடா மாவட்டத்திலுள்ளது.) பண்டைக் காலத்தில் குஜராத்தின் பகுதியாகவே இடார் கருதப்பட்டது. இவற்றையெல்லாம் காணும் பொழுது, குகிலர்கள் துவக்கத்தில் குஜராத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர் என்பது புலப்படுகிறது.[1]

பப்பாபற்றிய கதை

இடார்ப் பிரதேசத்து வில்லர்களால் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குகிலரும் அவரது சந்ததியினரும் வில்லர்கள்மீது சுமார்

[1] Bombay Gazeteer, Vol. I.

ஒன்றரை நூற்றாண்டு காலம்வரை ஆட்சிபுரிந்தனர். இந்த அன்னியரின் ஆட்சியை வில்லர்கள் நாளடைவில் வெறுக்கத் துவங்கி, எட்டாவது அரசரான நாகாதித்தியரைக் கொலை செய்தனராம். நாகாதித்தியரது மூன்று வயது மகனான பப்பாவைப் புரோகிதர்கள் ரகசியமாக ராஜஸ்தானத்தில் உதயபூருக்கு அருகிலுள்ள நாகீந்திரம் (Nagindra) என்ற மலைப் பகுதிக்கு எடுத்துவந்து, இடையர்களிடம் ஒப்புவித்தனராம். இந்த நாகீந்திரம் இன்று நாக்தா (Nagda) என்று அழைக்கப்படுகிறது. இங்குத்தான் பப்பா குகில அரசை நிறுவினாராம். குகில அரசு இங்குத்தான் நிறுவப்பட்டது என்ற கதை தவறானது என்றாலும், குகிலர்கள் குஜராத்திலிருந்து வந்திருக்கலாம் என்ற ஊகத்திற்கு இக் கதையும் துணை நிற்கிறது.[1]

குகிலர்கள் பிராமணர்களா?

வலபீ அரசகுடும்பத்தைச் சேர்ந்தவரே குகிலர் என்று சில கதைகள் கூறினும், ஆனந்தபுரத்தைச் சேர்ந்த பிராமணர்களே குகிலர்கள் என்பதை இலக்கியங்களும் சாசனங்களும் புலப்படுத்துகின்றன. பல்வேறு நூல்களிலும் சாசனங்களிலும் பப்பாவுக்குத் தரப்படும் கோத்திரமானது ஆதியில் குகிலர்கள் பிராமணர்களே என்பதை உணர்த்துகின்றது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த குகிலரது கல்வெட்டொன்று பரசுராமரைப் போலப் புரோகிதத் தொழிலும் போர்த் தொழிலும் புரிந்தவரென்று பர்த்ரபட்டர் (Bhartrapatta) என்ற ஒரு அரசரை வருணிக்கிறது. அத்பூர்க் கல்வெட்டும்கூட இவர்களைப் பிராமணர்கள் என்று அழைக்கின்றது. வேறு சில கல்வெட்டுகளும் பிராமணர்களாக இருந்து க்ஷத்திரியர்களானவர்கள் இவர்கள் என்று தெளிவாகக் குறிக்கின்றன. சித்தூர் அல்லது சித்திரகூடத்தை ஆண்டுவந்த மௌரிய (அல்லது மோரி) அரசர் ஒருவரின் புரோகிதராக இருந்த ஹரீதர் (Harita) என்பாரால் பப்பா வளர்க்கப்பட்டு, பின்னர் ஹரீதரின் மரணத்திற்குப் பிறகு சித்தூர் அரசரின் புரோகிதராகவும் அமைச்சராகவும் ஆனார் என்று கதை உள்ளது. இத்தகைய பல கதைகள் குகிலர்கள் பூர்விகத்தில் பிராமணர்களே என்பதை, உணர்த்துகின்றன. தெற்கில் கடம்பர்கள், வங்காளத்தில் சேனர்கள் போன்ற பலர் துவக்கத்தில் பிராமணர்களாயிருந்து, பிற்காலத்தில் க்ஷத்திரியத் தொழிலாகிய அரசர்த் தொழிலை மேற்கொண்டது அனைவருக்கும் தெரியும்.

[1] G.C. Ray Choudhuri, *History of Mewar.*

பப்பா ராவல்பற்றிய சிக்கல்

அத்பூர்க் கல்வெட்டில் தரப்படும் அரசர்ப் பட்டியலில் பப்பா ராவலின் (Bappa Rawal) பெயர் காணப்படவேயில்லை. ஆனால், குகில அரசர்களுள் மிகவும் கீர்த்தி மிக்கவராகக் கருதப்படுபவர் இம் மன்னரே யாவார். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் குகில அரசர்கள் வெளியிட்ட சாசனங்களில் பப்பாவே மோரி அரசர் மினுராஜரிடமிருந்து சித்தூரைக் கைப்பற்றி மேடபாடத்து (மேவார் நாட்டு)க் குகில அரசை நிறுவினார் என்பது குறிப்பிடப்படுகிறது. அது காரணமாகத்தான் ராவல் என்ற பட்டத்தினை அவர் சூட்டிக் கொண்டாராம். ஹரீத முனிவரை வழிபட்டு, அவரது அருளினால் சித்தூரில் பப்பா அரசரானார் என்றும் அவை தெரிவிக்கின்றன. மேடபாடகம் அல்லது மேவாரில் பப்பாவுக்கு முன்பே குகில அரசர்கள் ஆண்டுகொண்டிருந்தனர். எனவே, குகில அரசை நிறுவியவர் இவரே என்பது தவறாகும். குகதத்தரது வழியில் வந்த அரசர்களுள் பப்பா ராவல் என்ற பெயர் காணப்படாதது ஒரு பெரும் சிக்கலாகும். ஏதோ ஓர் அரசரின் புனைபெயர் அல்லது விருதுப் பெயரே பப்பாவாக இருக்கக் கூடுமென்று பல அறிஞர்களும் கருதுகின்றனர். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராணா கும்பாவின் கும்பல்கர் (Kumbhalgarh) கல்வெட்டானது (கி.பி. 1460) மேடபாடத்துக் குகில அரசர்களுள் முதலிலிருந்து ஐந்தாவது நபரே பப்பா என்றும், நாகாதித்தியருக்கும் அபராஜிதருக்குமிடையில் அவர் ஆட்சி புரிந்தார் என்றும் குறிப்பிடுகிறது. இவ்வளவு தெளிவாக இது பப்பாவைப்பற்றிச் சொன்னாலும், மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்ததாக இது உள்ளதால் இதை ஏற்றுக் கொள்வதில் சில சிரமங்கள் உள்ளன. சான்றாக, அத்பூர் போன்ற கல்வெட்டுகளில் ஐந்தாவது அரசரின் பெயர் சீலர் அல்லது சீலாதித்தியர் என்று உள்ளது. மேலும், சீலாதித்தியரது மகன் அபராஜிதர் கி.பி. 661-ல் அரசராயிருந்தார் என்பது அவரது காலத்திய உதயபூர்க் கல்வெட்டால் தெரியவருகிறது. இதன்படி பார்த்தால், சீலரின் காலம் கி.பி. 650 என்று தோராயமாக நாம் கொள்ளலாம்.

ஆனால், ராணா கும்பாவின் மற்றொரு கல்வெட்டோ கி.பி. 753-ல் பப்பா ஆண்டார் என்று குறிப்பிடுகிறது. அந்த ஆண்டில் பப்பா முடிதுறந்து தம் மகனிடம் ஆட்சியை ஒப்படைத்தார் என்று 'ஏகலிங்க மாகாத்மியம்' என்ற நூல் கூறுகிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்த டாக்டர் D. R. பந்தர்கார், கர்னல் டாட் (Col. Tod), பண்டிட் கௌரிசங்கர் ஓஜா (Ojha)

போன்றோர் பல்வேறு முடிவுகளுக்கு வந்தனர். ஓஜா அவர்கள் கி.பி. 734 முதல் 753 வரையில் பப்பா ஆட்சி புரிந்தார் என்று கணக்கிடுகிறார். இக் காலத்தில் அரசுபுரிந்த குகில அரசர் கால போஜராகவே இருக்கக்கூடும். எனவே, எட்டாவது அரசரான காலபோஜருக்கே பப்பா என்ற விருதுப் பெயர் இருந்தது என்பது பண்டிட் ஓஜாவின் முடிவு. சித்தூரைக் கைப்பற்றியவர் பப்பாவே என்ற கதையை ஏற்றுக் கொண்டு, கி.பி. 728-ல் இச் சாதனையைப் பப்பா நிகழ்த்தினார் என்றும், கி.பி. 764-ல் அவர் முடிதுறந்தார் என்றும் கர்னல் டாட் எழுதினார். டாக்டர் பந்தர்கார் இவ்விரண்டையும் ஏற்றுக் கொள்ளாமல், ஒன்பதாவது அரசரான முதலாம் கொம்மணர் (அல்லது கொம்மாணர்) என்பவரே பப்பா என்று கருதினார். இச் சிக்கல்களுக்கெல்லாம் முடிவு கூறுவது மிகக் கடினம். முதலாம் கொம்மாணரும் புகழ் மிக்க அரசராக விளங்கியதால் அவரே பப்பாவாக இருக்கலாமென்று R. D. பானர்ஜீ, R. C. மஜூம்தார் ஆகியோர் ஊகிக்கின்றனர்.

அடுத்தபடியாக, பப்பா ராவல் என்ற பெயர் எப்படித் தோன்றிற்று என்பதைப்பற்றியும் அறிஞர்கள் ஆராய்கின்றனர். காலபோஜரது விருதுப் பெயரே பப்பா என்றார் பண்டிட் ஓஜா. குழந்தை (பாப்பா) என்ற சொல்லே பப்பா என்று பின்னர் மருவிற்று என்று கர்னல் டாட் கருதினார். குருக் (Crooke) அவர்களோ பாப் (தந்தை) என்பதே இவ்வாறு மருவிற்று என்கிறார். துறவிகளைப் பாவா, பாபா என்று அழைக்கும் வழக்கம் உண்டென்றும், அதுவே ஹரீதரின் சீடரான பப்பாவுக்குச் சூட்டப்பட்டது என்றும் பகவன்லால் இந்திராஜீ, D. R. பந்தர்கார் போன்றோர் கருதினர்.[1]

C. V. வைத்தியா அவர்கள் பப்பா என்பது இயற் பெயராகவே இருக்கலாமென்று கூறுகிறார். பப்பபட்டி சூரி, பப்பராயர், ஸ்ரீவல்லப பப்பர் போன்ற பெயர்கள் பலருக்கு இருந்தனவென்று அவர் சுட்டிக் காட்டுகிறார். ராவல் என்பது ராவ் என்ற சொல்லைப் போல, சிற்றரசரைக் குறிக்கும் ஒரு சொல் என்றும் அவர் உரைக்கிறார். அவரது முடிவின்படி, உதயபூருக்கு வடக்கில் சில கல் தொலைவிலுள்ள நாகதம் அல்லது நாகரதம் (Nagada or Nagahrada) என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு வில்லர்கள்மீது ஆட்சிபுரிந்த ஒரு சிற்றரசரே பப்பா ராவல். இவர் சித்தூரைச் சேர்ந்த மோரி அரசருக்குக் கட்டுப்பட்டவ

[1] For a detailed discussion of all these points, refer: 1. Tod, *Annals and Antiquities of Rajasthan* with the notes of William Crooke. 2. Bombay Gazeteer, Vol. I, Part I.

ராக இருந்தாராம்.[1] இடார்ப் (Idar) பிரதேசத்தில் ஆதியில் வாழ்ந்த குகிலர்கள் முஸ்லிம்களின் தாக்குதல் காரணமாக அதை விடுத்து, மலைகள் சூழ்ந்த நாகதத்தை அடைந்து, அங்குள்ள வில்லர்களைத் திரட்டி ஓர் அரசை நிறுவினராம். பப்பா முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட்டுக் குகிலர்களைக் காத்த வீரர் என்று ராஜஸ்தானத்துக் கதைகள் பலவும் கூறுகின்றன. இவ்வாறு குகிலர்களைக் காத்ததாலேயே குகில அரசை நிறுவியவர் இவர் என்று பிற்காலத்தில் கதைகள் முளைத்துவிட்டிருக்கலாம். (டாக்டர் வைத்தியா அவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தமது நூலின் இரண்டாவது பாகத்தில் எழுதியுள்ள நீண்ட கட்டுரையையும் படிப்பது நலம். Vol. II, Appendix VI – Note on '*Rai Bahadur Gaurishankar Oja on Bappa Rawal*'. குகிலர் அல்லது குகதத்தருக்குத் தந்தையான குகாதித்தியர் என்பவரே பப்பா என்று வைத்தியா அவர்கள் கூறுவதையும் கவனிக்க வேண்டும்.

மேவார்க் குகிலர்களின் ஆரம்பகால வரலாறு

மேலே குறிப்பிடப்பட்ட செய்திகள் அனைத்தையும் வைத்துப் பார்க்கையில், மேடபாடத்துக் (Medapada) குகில வம்சத்தின் துவக்க கால வரலாற்றை முற்றிலுமாக அறிந்து கொள்வது சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. (இன்றைய மேவார்ப் பகுதியே மேடபாடம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டது.) சௌராஷ்டிரத்தில் ஆனந்தபுரத்தைச் சேர்ந்த குகிலர்கள் ஏதோ காரணத்தினுல் அப் பகுதியை விட்டு, சபர்மதி நதிப் பிரதேசத்துக்கு வந்து, இடார்ப் பகுதியில் குடியேறி இருக்கலாம். இதன் பின்னர், இவர்கள் சிற்றரசர்களாக அப் பகுதியில் சிறிது காலம் ஆட்சிபுரிந்தனர் என்று ஊகிக்க முடிகிறது.[2] இவர்களது ஆரம்பகால அரசர்களின் பெயர்கள் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், கி.பி. 977ஆம் ஆண்டைச் சேர்ந்த சக்திகுமாரர் என்ற அரசரது அத்பூர் அல்லது அத்புரம் என்ற ஊரிலுள்ள கல்வெட்டில் காணப்படுகின்றன. அதன்படி முதலில் ஆட்சி புரிந்த அரசர்களின் பெயர்கள் வருமாறு:

குகதத்தர் (சுமார் கி.பி. 550)

போஜர்

(முதலாம்) மகேந்திரர்

[1] C. V. Vaidya, *History of Mediaevel Hindu India.*

[2] G. C. Ray Choudhuri, *History of Mewar.*

நாகாதித்தியர் அல்லது நாகர்

சீலாதித்தியர் அல்லது சீலர் (கி.பி. 646)

அபராஜிதர் (கி.பி. 661)

(இரண்டாம்) மகேந்திரர்

காலபோஜர்

(முதலாம்) கொம்மாணர்

முதற் சான்றுகள்

முதல் நான்கு அரசர்களது கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. ஆனால், ஸ்ரீகுகிலர் அல்லது குகிலஸ்ரீ என்று பொறிக்கப்பட்ட இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வெள்ளி நாணயங்கள் ஆக்ராவில் கிடைத்தன. இவை முதலாவது அரசரான குகிலர் அல்லது குகதத்தரது நாணயங்களாக இருக்கக் கூடுமென்று ஓஜா போன்றவர்கள் கருதுகின்றனர். ஆனால், குகதத்தரின் அரசு ஆக்ரா வரையில் விரிந்திருக்கவில்லை. எனவே, இந் நாணயங்கள்பற்றிய உண்மை முழுவதையும் அறிய இயலவில்லை. இடார்ப் பிரதேசத்திலேயே அவர் அப்பொழுது ஆட்சி புரிந்திருக்க வேண்டும்.

ஐந்தாவது அரசரான சீலரது கி.பி. 646ஆவது ஆண்டு பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இதை ஆதாரமாகக் கொண்டுதான், முதலாவது அரசரான குகதத்தர் கி.பி. ஆறும் நூற்றுண்டின் நடுப்பகுதியில் ஆண்டவராதல் வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது. சீலரது தந்தையான நாகரே நாகதம் என்ற ஊரை நிறுவியதாகப் பழங்கதைகள் கூறுகின்றன. சீலரது மகனான அபராஜிதரது நாகதக் கல்வெட்டொன்று கி.பி. 661ஆம் ஆண்டைத் தாங்கி நிற்கிறது. இதன் மூலம் இவரது ஆட்சிக் காலத்தையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. சீலரும் அபராஜிதரும் விஷ்ணுவை வழிபட்டவர்கள் என்பதையும் இக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. நாகதம் இன்று நாக்தா (Nagda) என்ற பெயருடன் உதயபூருக்கு அருகிலுள்ளது. நாகதமே இவர்களின் தலைநகரமாகச் சிறிது காலம் இருந்திருக்கலாம். எனவே இடார், தென் மேற்கு மேவார் ஆகிய பகுதிகள் அபராஜிதரால் ஆளப்பட்டன என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்த அரசரான இரண்டாம் மகேந்திரரே வில்லர்கள் (Bhils) புரிந்த கிளர்ச்சியின் விளைவாகக் கொல்லப்பட்ட அரச

ராக இருக்கலாம். அவருக்கு அடுத்த அரசரான கால போஜரோ அவருக்குப் பின் அரசரான முதலாம் கொம்மாணரோ பப்பா ராவல் என்ற அரசராக இருந்திருக்கலாம். ஸ்ரீ வொப்பா (Sri Voppa) என்ற பெயர் பொறித்த தங்க நாணயமொன்று ஓஜா அவர்களால் ஆராயப்பட்டது. அதில் லிங்கம் மற்றும் நந்தியின் சின்னங்கள் உள்ளன. நாகதத்தில் ஏகலிங்கத்தைப் பப்பா வழிபட்டார் என்று பல்வேறு சான்றுகளிலும் கூறப்படுவதால், இந்த நாணயம் பப்பா ராவலின் நாணயமே என்று ஓஜா முடிவு செய்தார். பப்பாவின் (காலபோஜர் அல்லது கொம்மாணர்) காலத்தில்தான் அராபியர்கள் சிந்துவிலிருந்து மேவார்ப் பகுதியைத் தாக்கினர். அவர்களை எதிர்த்து வெற்றிகரமாகத் தமது அரசைக் காத்ததோடல்லாமல், அதன் பின்னர்ச் சித்தூர்க் கோட்டையையும் பப்பா கைப்பற்றித் தனதாக்கிக் கொண்டார் போலும்! எனவேதான், சித்தூரில் குகில அரசை நிறுவியவர் என்று இவரைச் சாசனங்களும் நூல்களும் குறிப்பிடுகின்றன என்று ஊகித்துக் கொள்ளலாம்.[1] கி.பி. 753-ல் பப்பா முடிதுறந்தார் என்று கூறப்படுகிறது. இந்த ஆண்டும் தோராயமாகச் சரியானது என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். எனவே, கி.பி. 725 முதல் 753 வரையில் பப்பா ஆண்டிருக்கக்கூடும்.

கொம்மாணருக்குப் பின் ஆண்ட அரசர்கள்

மட்டதர்

முதலாம் பர்த்ரபட்டர்

சிம்மர்

இரண்டாம் கொம்மாணர்

மகாயகர்

மூன்றும் கொம்மாணர்

இரண்டாம் பர்த்ரபட்டர் (கி.பி. 942)

அல்லதர் (கி.பி. 953)

நரவாகனர் (கி.பி. 971)

சாலிவாகனர்

சக்தி குமாரர் (கி.பி. 977)

[1] R. C. Majumdar, *The Classical Age.*

ஆகாடம் தலைநகராதல்

இவ் வரசர்களுள் பலரைப்பற்றி எதுவும் தெரியவில்லை. சிந்துவில் அரேபிய ஆளுநராக இருந்த பஷர் (Bashar) என் பாருக்கெதிராகப் பிரதிகார அரசர் இரண்டாம் நாகபட்டர், சாகமான அரசர் முதலாம் குவாகர் (Guvaka) ஆகியோருடன் சேர்ந்து இரண்டாம் கொம்மாணரும் போரிட்டார் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். 'கும்மண ராசோ' என்ற ஒரு நூல் கர்னல் டாட் அவர்களுக்குக் கிடைத்தது. கும்மாணர், மகமூது கொராசான் பட் (Mahmud Khorasan Pat) என்ற முஸ்லிம் தலைவரை எதிர்த்துப் போரிட்டாரென்று அந் நூல் தெரிவிக்கிறது. இந்த மகமூது கொராசான் பட் யார் என்பது தெளிவாகப் புலப்படவில்லை. எனவே, இக் கும்மாணர் முதலாம் கொம்மாணரே என்று கர்னல் டாடும், இரண்டாம் கொம் மாணரே என்று பண்டிட் ஓஜாவும் கருதினர். மூன்றும் கொம் மாணரது மகனுன பர்த்ரபட்டர் 'மகாராஜாதிராஜர்' என்று கி.பி. 942ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் அழைக்கப் படுகிருர். இக் கல்வெட்டு ஆகாடம் என்ற ஊரிலிருந்து வெளி யிடப்பட்டது. உதயபூருக்குச் சற்று வடக்கிலுள்ள அகர் (Ahar) என்பதே அந்த ஊர். ஆகாடம் குகிலர்களின் தலைநகராக அப்பொழுது விளங்கிற்று. அன்று முதல் நாகதம் அல்லது சித்தூருக்குப் பதிலாக இவ்வூரே குகில அரசின் தலைநகராகத் தொடர்ந்து இருந்து வந்தது.

அல்லதர்

இரண்டாம் பர்த்ரபட்டரது மகனுன அல்லதர் (Allata) என் பாரின் இரண்டு கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவை கி.பி. 951-லும் 953-லும் வெளியிடப்பட்டவை. அல்லதர் தேவபாலர் என்ற ஒரு பெரும் பகைவரைக் கொன்றதாக மற்ருெரு சிதைந்த கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்தத் தேவ பாலர் கனோஜை ஆண்ட பிரதிகார அரசராக இருக்கலாமென்று கருதப்படுகிருர். சாகம்பரியில் சாகமான அரசர் சிம்மராஜரால் சிறையிடப்பட்டிருந்த தம்முடைய சிற்றரசர்களை விடுவிப்பதற் காகத் தேவபாலர் அவ்வூருக்கு வந்திருந்தாரென்றும், அங்கு அல்லதருடன் எவ்வாருே சண்டை நிகழ்ந்து அதில் தேவபாலர் உயிரிழந்திருக்கக் கூடுமென்றும் ராஜஸ்தானத்து வரலாற்றை ஆராய்ந்த பண்டிட் ஓஜா கருதுகிருர். ஹூணவம்சத்து அரச குமாரியாகிய ஹரியதேவி என்பவரை அல்லதர் மணந்திருந் தார். இவரது காலத்தில் ஆகாடம் (Aghata) வாணிபத்தில் சிறந்து விளங்கியதாகவும் கர்நாடம், லாட்டம், மத்தியதேசம்,

தக்கம் போன்றவற்றைச் சேர்ந்த வணிகர்கள் அங்கு வந்து கூடியதாகவும் பல சான்றுகள் தெரிவிக்கின்றன.

அல்லதருக்கும் ஹரியதேவிக்கும் பிறந்த நரவாகனரே அடுத்த அரசரானார். கி.பி. 971ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட இவரது கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. சாகமான அரசர் ஒருவரின் மகளான ஜெஜயா என்ற பெண்ணை இம் மன்னர் மணந்திருந்தார். இவரது காலத்திலோ அல்லது இவரது தந்தையின் காலத்திலோ ஹர்ஷபுரம் என்ற நகரை ஹரியதேவி நிர்மாணித்தார்.

சக்திகுமாரர்

நரவாகனருக்குப் பின் அவரது மகனான சாலிவாகனர் அரியணை ஏறி, ஒரு சில ஆண்டுகள் ஆட்சிபுரிந்தபின், காலமானார். இதனையடுத்து இவரது மகனான சக்தி குமாரர் அரியணை ஏறினார். இவரது மூன்று கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றில் மட்டும் கி.பி. 977ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டில்தான் (அத்பூர்க் கல்வெட்டு) குகதத்தர் முதல் சக்திகுமாரர் வரையிலான குகில அரசர்களின் பெயர்ப் பட்டியல் காணப்படுகிறது. பரமார அரசர் வாக்பதி முஞ்சர் 'மேடபாடத்தில் பெருமைக்குரிய நகரமாகிய ஆகாடத்தை' அழித்ததாக ஹஸ்திகுண்டியைச் சேர்ந்த ராஷ்டிரகூட அரசர் தவலரது கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. இந் நிகழ்ச்சி சக்திகுமாரரின் காலத்திலேயே நிகழ்ந்திருத்தல் வேண்டுமென்பது அறிஞர்கள் அனைவரின் கருத்தாகும்.

சக்திகுமாரருக்குப் பின் இருண்ட காலம்

சான்றுகள்

சக்திகுமாரருக்குப் பிந்திய குகிலர்களின் வரலாற்றினைப் பல்வேறு சான்றுகள்மூலம் நாம் சிறிது அறிகிறோம். அவையெல்லாம் குறைந்தபட்சம் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிந்தியவை. அவற்றுள் மிகவும் முக்கியமானவை சமரசிம்மரது அபுக் கல்வெட்டு, ராணா கும்பாவின் ரான்பூர்க் கல்வெட்டு, இவரது மற்றொரு கல்வெட்டான கும்பல்கர் கல்வெட்டு ஆகியவை. சமரசிம்மருக்குச் சற்று முந்திய சித்தூர்க் கல்வெட்டும் நமக்குத் துணை செய்கிறது. ஆயினும், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முடியும்வரை இக் குகில வம்சத்தின் வரலாற்றை நாம் முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை. எனவே, இதை 'இருண்ட காலம்' என அழைக்கலாம்.

சுசிவர்மன் போன்றோர்

சக்திகுமாரருக்கு அம்பா பிரசாதர், சுசிவர்மன், நரவர்மன், அனந்தவர்மன், கீர்த்திவர்மன் என்னும் ஐந்து மகன்கள் இருந்தனர். சக்தி குமாரரது காலத்தையும் அவருக்கு முந்திய அரசர்களின் காலத்தையும் சேர்ந்த கல்வெட்டுகளை நோக்கினுல், சித்தூர் குகில அரசில் இருக்கவில்லையென்று நாம் கருதுவதற்கு இடமிருக்கிறது. பப்பாவின் காலம் முதல் சிறிது காலம்வரை மேடபாட அரசில் இருந்ததாகச் சொல்லப்படும் இவ்வூர் எப்பொழுது அதிலிருந்து விடுபட்டது என்பதை அறிய முடியவில்லை. ஆகாடம் சித்தூருக்கு அறுபது மைல் வடக்கிலுள்ளது. ஆகாடம் தலைநகரானதற்கே காரணம் சித்தூரைக் குகிலர்கள் இழந்ததாகவே இருக்கலாம்.

சித்தூரே தொடர்ந்து தலைநகரமாக இருந்ததென்றும், ஆகாடம் இரண்டாவது தலைநகராக இருந்ததென்றும் டாக்டர் கங்குலி கருதுகின்ருர். [இதுபற்றி முன்னுக்குப்பின் முரணுக அவர் எழுதுவது கவனிக்கத் தக்கது. *The Age of Imperial Kanauj (1955)*, *The Struggle for Empire (1957)* என்ற இரண்டு நூல்களில் குகிலர்கள்பற்றி அவர் எழுதிய கட்டுரைகளைப் பார்க்க.] சித்தூரிலிருந்து குகிலரின் கல்வெட்டுகள் ஒன்றுகூடக் கிடைக்காததும், ஆகாடத்திலிருந்து (இன்றைய அகர் என்ற ஊரிலிருந்து) பல கல்வெட்டுகள் கிடைப்பதும், 'ஆகாடபதி' என்று குகில அரசர்கள் அழைக்கப்பட்டதும் ஆகாடமே அவர்களின் தலைநகராய் இருந்தது என்பதை ஐயத்துக்கிடமின்றித் தெளிவாக்குகின்றன.

சக்தி குமாரருக்குப் பின், அவரது மூத்த மகனுன அம்பா பிரசாதர் அரியணை ஏறினுர். சாகம்பரிச் சாகமான அரசராகிய இரண்டாம் வாக்பதி ராஜர் ஆகாடபதியாகிய அம்பாபிரசாதரை யமனுலகுக்கு அனுப்பியதாகப் 'பிருதிவிராஜ விஜயம்' குறிப்பிடுகிறது. இவ்வாறு அம்பாபிரசாதர் கொல்லப்பட்டவுடன், அவரது தம்பியான சுசிவர்மன் அரியணை ஏறினுர். இவரது கல்வெட்டொன்று அகர் ஊரில் சிதைந்த நிலையில் ஆலயமொன்றில் உள்ளது. மிகவும் சிதைந்துள்ளதால், இதனுல் நமக்குப் பயனேதுமில்லை. சுசிவர்மனுக்குப் பின் ஆட்சிபுரிந்த பத்து அரசர்களின் பெயர்கள் மட்டும் நமக்குத் தெரிகின்றனவேயொழிய, அவர்களைப்பற்றிய முக்கியமான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

சௌளுக்கியரின் தாக்குதல்

சுசிவர்மனுக்குப் பின், அவரது மூன்று தம்பிகளான நரவர்மன், அனந்தவர்மன், கீர்த்திவர்மன் என்போர் ஆட்சி புரிந்தனர். கீர்த்திவர்மனுக்கு யசோவர்மன் என்ற பெயரும் இருந்திருக்கக் கூடும். இவருக்குப் பின் யோகராஜர், வைரதர், ஹம்சபாலர், வைரிசிம்மர், விஜயசிம்மர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். விஜயசிம்மரது இரண்டு கல்வெட்டுகள் கி.பி. 1108-லும், 1114-லும் அவர் ஆண்டுகொண்டிருந்தார் என்பதை உணர்த்துகின்றன. அவர் பரமார அரசர் உதயாதித்தியரின் மகள் சியாமளாதேவியை மணந்திருந்தார். கலச்சூரி அரசர் கயா கர்ணர் இந்தச் சியாமளாதேவியின்மூலம் விஜயசிம்மருக்குப் பிறந்த அல்கணதேவியை மணந்திருந்தார்.

விஜயசிம்மருக்குப் பின் அரிசிம்மர், சோடசிம்மர், விக்கிரம சிம்மர் எனும் மூவர் ஆட்சிபுரிந்தனர். இவர்களுக்குப் பின் ரண சிம்மர் என்பார் அரியணை ஏறினர். இவருக்குக் கர்ணர் என்ற பெயருமிருந்தது. இவ் வரசர்களது காலத்தில் குஜராத் நாட்டுச் சௌளுக்கிய அரசரான ஜெயசிம்ம சித்தராஜர் மேவாரின் பல பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். ஆனால், மேடபாட அரசு சௌளுக்கிய அரசுக்கு உட்பட்டிருந்ததா என்பது தெரியவில்லை. ஜெயசிம்மருக்கு அடுத்த அரசரான குமாரபாலர் கி.பி. 1150-51-ல் சித்தூரிலிருந்து வெளியிட்ட சாசனம் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. மேடபாடத்து அரசர்களும் குமாரபாலருக்கு அடங்கியவர்களாக இருந்திருக்கலாம். கி.பி. 11, 12ஆம் நூற்றுண்டுகளைச் சேர்ந்த குகில அரசர்களின் வரலாறு இருள்மண்டிக் கிடத்தற்கு இச் சௌளுக்கிய அரசர்களின் ஆக்கிரமிப்பே கூட ஒரு காரணமாக இருக்கலாம். சித்தூர் வழியாகச் சாகம்பரியிலிருந்து சாகமான அரசின்மீது போர்தொடுத்த குமாரபாலர் வெகு அண்மையிலிருந்த குகில அரசை மட்டும் சுதந்திரமாக விட்டு வைத்திருப்பாரா என்பது சந்தேகமே.[1]

கர்ணருக்கு மகனர் (Mahana), க்ஷேமசிம்மர், ராகப்பர் என்னும் மூன்று பிள்ளைகள் இருந்தனர். ராகப்பர் சிசோதம் (Sisoda) என்ற ஊரில் குகிலக் கிளை வம்சமொன்றைத் தோற்றுவித்தார். கர்ணருக்குப் பின் க்ஷேமசிம்மரே ஆகாடத்தில் அரசரானர். இதன் பின்னர், க்ஷேமசிம்மரது மகனை சாமந்த சிம்மர் அரசு கட்டில் ஏறினர். இது முதல் மேடபாடத்துக் குகில அரசர்கள் ராவல் (Rawal), ராஜகுலத்தினர் (Rajakula) என்பன

[1] H. C. Ray, *The Dynastic History of Northern India.*

போன்ற பட்டங்களைச் சூடிக் கொள்ளலாயினர். சாமந்தசிம்ம ரின் காலத்தில் சௌளுக்கிய அரசரான அஜயபாலர் மேடபாடத் தின்மீது படையெடுத்தார். அஜயபாலர் போரில் காயமுற்றுத் தோல்வியுற இருந்த வேளையில் அற்புத மண்டலத்தைச் சேர்ந்த பரமார அரசர் பிரகலாதனர் சௌளுக்கிய அரசரையும் படை களையும் காத்தார் என்பதை முந்திய அத்தியாயம் ஒன்றில் பார்த்தோம். இதற்குச் சற்றுப் பின்னர் நாதோலைச் சேர்ந்த சாகமான அரசர் கேல்கணரின் (Kelhana) தம்பி கீர்த்திபாலர் என்பவர் சாமந்தசிம்மரைத் தோற்கடித்து மேடபாடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஜோத்பூர் சமஸ்தானத்தின் ஒரு சிறு பகுதி மட்டுமே சாமந்தசிம்மரின் வசமிருந்தது. விரைவிலேயே சாமந்தசிம்மரின் தம்பியான குமாரசிம்மர் என்பவர் குஜராத்தின் அரசரான அஜயபாலர் அல்லது இரண்டாம் மூலராஜர் ஆகி யோரின் உதவியுடன் கீர்த்திபாலரிடமிருந்து மேடபாடத்தை மீட்டு, தாமே அரசரானார். இது கி.பி. 1180ஆம் ஆண்டு வாக்கில் நிகழ்ந்திருக்கக் கூடும். இவருக்குப் பின் மதனசிம்மர், பத்மசிம்மர், ஜெயத்ரசிம்மர் ஆகியோர் அரசோச்சினர். ஜெயத்ர சிம்மர் கி.பி. 1213 முதல் 1252 வரையில் ஆட்சிபுரிந்தார் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இவரது காலத்தில் மேட பாடக் குகில அரசு வலிமையும் புகழும் பெற்றுத் திகழ்ந்தது. சித்தூரும் இவரது ஆட்சியில் இருந்தது. ஆனல், இந் நூலின் காலவரையறையான 1206க்குப் பின் இவரது ஆட்சி நடைபெற்றதால், அதைப்பற்றி விரிவாக இங்குப் படிப்பதற் கில்லை.

முஸ்லிம் படையெடுப்பு

ஜெயத்ரசிம்மரின் காலத்திலேயே டெல்லி சுல்தான்களின் தாக்குதல்கள் துவங்கிவிட்டன. அல்தாமிஷ் மேடபாடத்தைக் கைப்பற்றி, நாகதம் போன்ற நகரங்களைச் சூறையாடினர். ஜெயத்ரசிம்மருக்கு உதவியாக வாகேலரான வீரதவலர் படை யுடன் வந்தார். இதனைக் கேள்வியுற்று அல்தாமிஷ் திரும்பிச் சென்ற பின், ஜெயத்ரசிம்மர் மீண்டும் தமக்குரிய பகுதிகளை மீட்டுக்கொண்டு, அண்டையிலுள்ள பல அரசுகளின்மீது போரிட்டார். ஜெயத்ரசிம்மருக்குப் பின் அவரது மகனை தேஜாசிம்மர் கி.பி. 1260க்கு முன் அரசரானர். அவருக்குப் பின் அவரது மகன் சமரசிம்மர் கி.பி. 1260ஆம் ஆண்டு வாக்கில் அரசராகி, முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்தார். கி.பி. 1285க்குச் சிறிது முன்பு பால்பன் குஜராத்தின்மீது படை யெடுத்த பொழுது, அதை ஆண்டுகொண்டிருந்த வாகேல

அரசர் சாரங்கதேவருக்குச் சமரசிம்மர் உதவிபுரிந்து முஸ்லிம் படைகளை விரட்டியடிப்பதில் துணைநின்றூர். இதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், அலாவுதீன் கில்ஜியின் படைகள் அவரது தளபதியான உலூக் கானின் (Ulugh Khan) தலைமை யில் மேவாரின்மீது படையெடுத்து வந்தன. ஏராளமான பொருள்களை உலூக் கானுக்குக் கொடுத்து அவரைத் திருப்பி யனுப்பினுர் சமரசிம்மர். கி.பி. 1302-ல் சமரசிம்மரது மகன் ரத்னசிம்மர் அரசரானுர். கி.பி. 1303-ல் அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பு நிகழ்ந்தது. ரத்னசிம்மரது மகளான பத்மினி சிசோதத்தைச் சேர்ந்த குகில அரசர் லக்ஷ்மணசிம்மருக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டிருந்தார். லக்ஷ்மணசிம்மரும் அவரது பிள்ளைகளும் ரத்னசிம்மருக்கு உதவிபுரிவதற்காக விரைந்தனர். சித்தூர்க் கோட்டை முற்றுகையிடப்பட்டபோது லக்ஷ்மணசிம்மர் போன்றோரின் துணையிருந்தும், மனம் தளர்ந்த ரத்னசிம்மர் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாகச் சென்று பகைவனிடம் சரணடைந்தார். ரத்னசிம்மர் இவ்வாறு ஓடி விட்ட பின், சிசோதத்து லக்ஷ்மணசிம்மர் அரசராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். ரத்னசிம்மரைச் சிறையிலிட்டு, சித்தூர்க் கோட்டையை முஸ்லிம்கள் தாக்கலாயினர். லக்ஷ்மணசிம்மரும், அவருடைய ஏழு மகன்களும், ஆயிரக்கணக்கான வேறு பலரும் கொல்லப்பட்ட பின், சித்தூர்க் கோட்டை முஸ்லிம்களின் வச மாயிற்று. லக்ஷ்மணசிம்மரின் எஞ்சியிருந்த ஒரே மகனுன அஜய சிம்மர் மட்டும் உயிருடன் தப்பித்து, அரவல்லி மலைப்பிரதேசத் தில் நாடோடிபோல வாழ்ந்து, கி.பி. 1314-ல் காலமானுர். அவரது அண்ணன் அரிசிம்மரின் மகனுன ஹம்மீர் அடுத்த அரச ராக்கப்பட்டார்.

சித்தூர்க் கோட்டை விழுமுன், பத்மினியும் காடு சூழ்ந்த மலைப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒளித்து வைக்கப் பட்டார். இதன் பின்னர், குகிலர்களின் தந்திரம் காரணமாக விடுவிக்கப்பட்ட ரத்னசிம்மர் நாகதம், ஆகாடம் ஆகிய நகரங் களிலிருந்து முஸ்லிம் வசமிருந்த சித்தூர்ப் பகுதியை இடைவிடா மல் தாக்கலானுர். சித்தூரைக் கிஜர் கான் (Khizr Khan) என்ற படைத் தலைவனிடம் ஒப்புவித்திருந்த அலாவுதீன் கில்ஜி இத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல், அங்கிருந்த தமது படை களை மீட்டுக் கொண்டு, சித்தூரைச் சாகமான இளவரசர் மால தேவர் என்பவரிடம் ஒப்படைத்தார். இதற்குப் பின் ரத்ன சிம்மரைப்பற்றி எச் செய்தியும் தெரியவில்லை.

2. மற்றக் குகில அரசுகள்

சட்சு அரசு

தணிகர்

ராஜஸ்தானத்தில் ஜெய்பூருக்குத் தெற்கில் இருபத்தாறு கல் தொலைவில் சட்சு (Chatsu) என்ற ஊரில் உள்ள ஒரு கல்வெட்டானது அப் பகுதியில் ஆட்சிபுரிந்த குகிலக் கிளை வம்சமொன்றைப்பற்றி நமக்குத் தெரிவிக்கிறது. சட்சுவோ அல்லது தவகர்த்தம் என்ற ஊரோ இவர்களது தலைநகராய் இருந்திருக்க வேண்டும். தவகர்த்தமானது பழைய உதயபூர் சமஸ்தானப் பகுதியிலுள்ள தோட் (Dhod) நகரமேயாகும். எனவே, 'சட்சு குகில அரசு' என்றும், 'தோட் குகில அரசு' என்றும் இதை அழைக்கின்றனர். இந்த வம்சத்தை நிறுவியவர் பர்த்ர பட்டர் என்பவராவார் என்று தணிகர் என்ற அரசரது கல்வெட்டுக் கூறுகிறது. பர்த்ர பட்டர் பரசுராமரைப் போல் பிராமணத் தொழிலையும் போர்த் தொழிலையும் மேற்கொண்டவர் என்று இக் கல்வெட்டுத் தெரிவிப்பதை நாம் கவனித்தல் வேண்டும். குகிலர்கள் பூர்விகத்தில் பிராமணர்கள் என்பதை இதுவும் உறுதிப்படுத்துகிறது. பர்தர பட்டருக்குப் பின், ஈசான பட்டர், உபேந்திர பட்டர், முதலாம் குகிலர், தணிகர் ஆகியோர் ஆட்சி புரிந்தனர். தணிகரது கல்வெட்டின் காலம் கி.பி. 725. பர்த்ர பட்டர் கி.பி. ஏழாம் நூற்றுண்டின் துவக்கத்தில் வாழ்ந்தவர் என்று நாம் முடிவு செய்வதற்கு இச் சான்று பயன்படுகிறது.

பிரதிகாரரின் சிற்றரசர்கள்

இந்தத் தணிகரது கல்வெட்டே இவ் வம்சத்தின் முதல் கல் வெட்டாகும். சித்தூர்ப் பகுதியில் ஆண்ட மோரி (மௌரிய) அரசரான தவலருக்கு உட்பட்ட சிற்றரசராக இவர் ஆட்சிபுரிந்தார் என்பதை இக் கல்வெட்டுத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. தணிகருக்குப் பின் அவரது மகனான ஆவ்கர் (Auka), பின்னர் ஆவ்கரது மகன் கிருஷ்ணர் ஆகியோர் ஆட்சி செலுத்தினர். இவர்களைப்பற்றி வேறு தகவல்கள் இல்லை. கிருஷ்ணரது மகன் சங்கரகானர் கௌட அரசரை வென்று, தமது மேலரசரான ஒருவருக்குக் கௌடத்தைப் பரிசளித்தாரென்று கூறப்படுகிறது. பிரதிகார அரசரான் இரண்டாம் நாகபட்டருக்கு, வங்காள அரசர் தர்மபாலருக்கு எதிராக நிகழ்ந்த போரில் சங்கரகானர் உதவியதையே இது குறிப்பிடுகிறது என்று நாம் கொள்ளலாம். சங்கரகானருக்கு யஜ்ஜா என்பவர் அரசியாயிருந்தார். இவர்

களுக்குப் பிறந்த ஹர்ஷராஜர் தமது ஆட்சிக் காலத்தில் வடக்கத்திய அரசர்கள் பலரை வென்று போஜருக்குப் பல குதிரைகளைப் பரிசளித்தாராம். இந்தப் போஜர் பிரதிகார முதலாம் போஜரேயாவார். எனவே, பிரதிகாரர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக இவ்விரு குகில அரசர்களும் இருந்தனர். கலச்சூரி அரசர் முதலாம் கோகல்லர் குகில அரசர் ஹர்ஷரை ஒரு போரில் தோற்கடித்தார். ஹர்ஷரை 'த்விஜர்' (Dvija) என்று சட்சு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இது பிராமணர்களையே குறிக்கும் சொல்[1] என்று D. R. பந்தர்கார் கூறிய முடிவை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஹர்ஷருக்குப் பின் அவரது மகனான இரண்டாம் குகிலர் அரசரானார். இவர் பிரதிகார அரசரான போஜர் அல்லது மகேந்திர பாலருடன் சேர்ந்து, பால அரசரான மகேந்திரபாலரைத் தோற்கடித்தார். ஸ்ரீகுகிலர் என்றும் குகிலஸ்ரீ என்றும் பெயர் பொறிக்கப்பட்டன ஏராளமான வெள்ளி நாணயங்கள் ஆக்ராவில் கண்டெடுக்கப்பட்டன என்பது பற்றி முன்பே குறிப்பிட்டோமல்லவா? அவை இரண்டாம் குகிலராலேயே வெளியிடப்பட்டன என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

பாலாதித்தியர்

இரண்டாம் குகிலரின் மகன் பட்டர், பரமார அரசர் வல்லபராஜர் என்பாரின் மகள் ரஜ்ஜிகா என்பாருக்குப் பிறந்தவரென்று கூறப்படுகிறார். பரமார அரச குமாரர்களுள் ஒருவராக வல்லபராஜர் விளங்கியிருத்தல் வேண்டும். பரமார அரசர்கள் பட்டியலில் இவரது பெயர் காணப்படவில்லை. இந்தப் பட்டர் தெற்கத்திய அரசர்கள் பலரை வென்றாரென்று கூறப்படுகிறார். பிரதிகார அரசரான முதலாம் மகிபாலர் ராஷ்டிரகூட அரசரான மூன்றாம் இந்திரருக்கெதிராக நிகழ்த்திய போர்களில் இவர் பங்கெடுத்திருக்கலாம். இவரது மகனான பாலாதித்தியரது காலத்திலேயே சட்சு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது. இந்த வம்சத்து அரசர்களின் வம்சாவளியை இதுவே நமக்குத் தெரிவிக்கிறது. இவருக்குப் பாலார்கர், பாலபானு என்ற மாற்றுப் பெயர்களும் இருந்தன. சாகமான அரசர் சிவராஜரது மகள் ரத்தவை (Rattava) என்பாரை இவர் மணந்ததன்மூலம் வல்லபராஜர், விக்கிரகராஜர், தேவராஜர் என்னும் மூன்று பிள்ளைகள் இவருக்கு இருந்தனர். ரத்தவை இறந்தபின், துயர் மிகுதியால் அவரது நினைவாக, விஷ்ணுவாகிய முராரிக்குப் பாலாதித்தியர் ஓர்

[1] 'துவிஜர்' என்றால், இருமுறை ஜனிப்பவர் (பிறப்பவர்) என்பது நேர்பொருள். பூணூலணிவது ஒரு பிறப்பு ஆதலால், பிராமணர்கள் தங்களைத் துவிஜர் என்று அழைத்துக் கொள்வர்.

ஆலயத்தை எழுப்பினர். அதைக் குறிப்பிடுவதற்காகவே இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது. இக் குகில அரசர்கள் வைண வர்கள் என்பதை இக் கல்வெட்டில் வரும் பல குறிப்புகள் தெரி விக்கின்றன.

இவ் வரசருக்குப் பின் இந்த வம்சத்தைப்பற்றி எச் செய்தி யும் கிடைக்கவில்லே. அடுத்திருந்த சாகம்பரிச் சாகமானர்கள் இப் பகுதியை வென்று தமது அரசில் நாளடைவில் சேர்த்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

வம்சாவளி

பர்த்ரபட்டர்
|
ஈசானபட்டர்
|
உபேந்திரபட்டர்
|
முதலாம் குகிலர்
|
தணிகர்
|
அவ்கர்
|
கிருஷ்ணர்
|
சங்கரகானர்
|
ஹர்ஷர்
|
இரண்டாம் குகிலர்
|
பட்டர்
|
பாலாதித்தியர்

பிற குகில அரசுகள்

மேலே கூறப்பட்டவை அல்லாமல், வேறு பல குகில அரசு களும் பல்வேறு பகுதிகளில் இருந்துவந்தன. சான்ருக, சௌராஷ்டிரத்தில் பவநகர், பலிதனம் (Palitana), வலம் (Vala), லாத்தி (Lathi) போன்ற பல சுதேச சமஸ்தானங்களேச் சேர்ந்த அரசர்கள் தாங்கள் குகிலர்களே என்று இருபதாம் நூற்ருண்டிலும் கூறிக் கொண்டனர். இதற்கு ஆதாரமாக நீண்ட வம்சாவளி ஒன்றையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இதேபோல், பஞ்சாப்

மாநில ஹிசார் மாவட்டத்தில் மற்ருெரு குகில குடும்பம் சிறிது காலம் ஆட்சிபுரிந்து வந்தது. இக் குடும்பத்தைச் சேர்ந்த கில்கணர் (Kilhana) என்பவர் சாகம்பரிச் சாகமான அரசர் இரண்டாம் பிருதிவிராஜரது ஆளுநராக ஹிசார் மாவட்டத்திலுள்ள ஹான்சியில் (Hansi) நியமிக்கப்பட்டிருந்தார். இச் சாகமான அரசரே எங்கிருந்தோ இந்தக் கில்கணரை ஹான்சிக்கு அனுப்பி ஆளுநராக்கினுர். கி.பி. 1165ஆம் ஆண்டு வாக்கில் இது நிகழ்ந்தது. ஆனுல், 1192-ல் கோரி முகம்மது ஹான்சியைக் கைப்பற்றியபொழுது இக் குடும்பத்தின் ஆதிக்கம் ஒழிந்தது. வாகதத்திலும் குகில வம்சமொன்று சிறிது காலம் ஆட்சி புரிந்தது.

இச் சிறு குகில வம்சங்களைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது சிசோதத்தைச் சேர்ந்த குகில வம்சமாகும். மேடபாடத்துக் குகில அரசர் ரணசிம்மருக்கு (கர்ணர்) ராகப்பர் என்ற பிள்ளையொருவர் இருந்தார் என்பதை முன்பே பார்த்தோம். இந்த ராகப்பரே இவருடைய தந்தையின் காலத்தில் சிசோதத்தில் (Sisoda) ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்னர், இவரது வழியினர் சிற்றரசர்களாகி, 'ராணுக்கள்' என்று தங்களை அழைத்துக் கொள்ளலாயினர். சிசோதியர்கள் (Sisodiyas) என்று பிற்காலத்தில் மிகவும் கீர்த்திபெற்று விளங்கியவர்கள் இந்த அரச குடும்பத்தினரேயாவர். முகலாயப் பேரரசர்களின் காலத்தில் இந்தச் சிசோதிய ராஜபுத்திரர்கள் முகலாய ஆதிக்கத்தை எதிர்த்து, வரலாற்றில் பெருங் கீர்த்தி பெற்றனர். இருபதாம் நூற்ருண்டு வரையில் இந்த வம்சம் ராஜஸ்தானத்தில் தொடர்ந்து ஆட்சி செலுத்திற்று. ஆனுல், இதன் ஆரம்பகால வரலாறே இந் நூலின் வரையறையான கி.பி. 1206க்குப் பிற்பட்டதாகையால், இந்த வம்சத்தைப் பற்றி இங்கு விரிவாகப் பார்ப்பதற்கில்லை.

9. சாகமானர்கள்

சாகமானர்களின் பெருமை

மூன்று ராஜபுத்திர குலங்களைக் கர்னல் டாட் அவர்கள் தம் புகழ்மிக்க நூலில் வாயாரப் புகழ்கிறார். சாகமானர்கள், குகிலர்கள், ராத்தோர்கள் (Rathors) ஆகியோரே இம் மூன்று குலத்தினர். இம் மூவருள்ளும் தங்களது போர்த் திறமையாலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருஞ் செயல்களாலும் முதலிடத்தைப் பெறத்தக்கவர்கள் சாகமானர்களே என்பது டாட் அவர்களின் கருத்தாகும்.[1] குகிலர்கள் இருபதாம் நூற்றாண்டு வரையில் மேவாரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியதே சிறப்புமிக்க ஓர் அம்சமாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தொடர்ச்சியாக அப் பகுதியில் ஆட்சி செலுத்திய குகிலர்களது பெருமை மறக்க முடியாத ஒன்றாகும். சாகமானர்களுக்கு இத்துணையளவு நீண்ட வரலாறு கிடையாது. தங்களது பூர்வ பூமியாகிய சாகம்பரியை இவர்கள் இறுதிவரை ஆளவில்லை என்றாலும், இவர்களது கிளைவம்சங்களே பண்டி (Bundi), கோட்டா (Kota), சிரோகி (Sirohi) போன்ற சுதேச அரசுகளில் இருபதாம் நூற்றாண்டுவரையில் ஆதிக்கம் நடத்தின. சாகமான அரசரான மூன்றாம் பிருதிவிராஜரே கடைசி இந்துப் பேரரசர் என்று C. V. வைத்தியா குறிப்பிடுகிறார்.[2] கோரி முகம்மது படையெடுத்துவந்த வேளையில் இந்தியாவைக் காக்கக் கூடிய நிலையிலிருந்த ஒரே அரசர் பிருதிவிராஜரே! இவரது வீரத்தையும் சாகசங்களையும் ராஜஸ்தானத்துக் கவிஞர்களில் பாடாதவரில்லை. கோரியின் படைகளை இவர் முறியடித்து விரட்டிய பின் அடுத்த போரில் இவரே தோற்கடிக்கப்பட்டு வீழ்ந்தாரென்றாலும்கூட, இந்தச் சாதனையை அன்றைய இந்து அரசர்களுள் வேறு எவரும் சாதிக்க முடியாமற் போயினமையால், பிருதிவிராஜர் தமக்கு மட்டுமின்றித் தமது குலத்துக்கே நீடித்த புகழை சம்பாதித்துக் கொடுத்தார். இதனாலேயே முப்பத்தாறு ராஜபுத்திரக் குலங்களுள் சாகமானர்களுக்கே முதலிடம் அளிக்கப்பட்டது.

[1] Tod, *Annals and Antiquities of Rajasthan.*

[2] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.*

இவர்களது பூர்விகம்

அக்னி குலம்

குகிலர்களது பூர்விகத்தை அறிந்து கொள்வதற்குள்ள சான்றுகள்கூடச் சாகமானர்கள்பற்றி நமக்குக் கிடைக்கவில்லை. சாகமானர்கள், சாகவாணர்கள், சாகுவானர்கள் என்றெல்லாம் பலவாறு இவர்களது பெயர் எழுதப்பட்டது. சாகமானர்கள் என்பதே சரியான பிரயோகமாகும். பிற்காலத்தில் இதுவே மருவி, சௌஹான் (Chauhan) என்று ஆயிற்று. வசிஷ்டரது யாக குண்டத்திலிருந்து தோன்றிய நால்வரில் சௌஹானும் ஒருவர் என்று பிற்காலத்தில் சந்த் பர்தாய் (Chand Bardai) போன்ற புலவர்கள் பல கதைகளை எழுதினர். சௌஹான் விஷ்ணுவைப் போல நான்கு கரங்களுடன் (சதுரங்கத்துடன்) வேள்வித்தீயிலிருந்து பிறந்ததால், அப் பெயர் பெற்றுராம். அக்னி குலம்பற்றிய இக் கதை ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை.

வேறு சான்றுகள்

கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் மூன்றும் பிருதிவிராஜ ரின் காலத்தில் வாழ்ந்தவர் சந்த் பர்தாய். அந்த நூற்றுண்டில் தான் 'பிருதிவிராஜ ராசோ', 'பிருதிவிராஜ விஜயம்' ஆகியவை இயற்றப்பட்டன. இவற்றுக்குப்பின், பிருதிவிராஜரையும் மற்று முள்ள சாகமான அரசர்களையும் புகழ்வதற்கென்று பல்வேறு காவியங்கள் இயற்றப்பட்டன. பதினுன்காம் நூற்றுண்டில் நயசந்திர சூரியால் இயற்றப்பட்ட 'ஹம்மீர மகாவிங்கம்' என்ற நூல் இவற்றுள் முக்கியமானது. இப் புலவர்கள் அனை வரும் சாகமான அரசில் வாழ்ந்ததோடல்லாமல், சாகமான அரசர்களால் ஆதரிக்கவும் பட்டனர். ஆனல், சாகமானர் களின் பூர்விகம்பற்றிய வெறும் கதைகளை இவர்கள் எழுதினரே தவிர, வரலாற்று ஆதாரமுடைய உண்மைகளைக் குறிப்பிடவே யில்லை. சாகமானர்களது கல்வெட்டுகளும்கூட இதே முறை யில் வெறும் கற்பனைக் கதைகளைத்தாம் நமக்கு எடுத்துச் சொல் கின்றன. சாகமானர்களது பூர்விகம் மிகவும் எளிமையானதாக இருந்து, அதை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டிய விருப் பம் ஆரம்ப அரசர்கள் எவருக்குமில்லாமல், நாளாவட்டத்தில் காலப் புழுதியில் மறைந்து போய்விட்டது போலும்! எனவே தான், பூர்விகம் என்று சொல்லி, வெறும் கதையளப்பதிலேயே கல்வெட்டுகளும் காவியங்களும் நின்று போகின்றன.

முதலரசரான சாகமானர் (சௌஹான்) முதல், மூன்றும் பிருதிவிராஜரது பாட்டனுரான விசாலதேவர் வரை முப்பத்தாறு

அரசர்கள் ஆண்டனரெனப் பிருதிவிராஜ ராசோ என்ற நூல் குறிப்பிடுகிறது. ஆனல், சாகமானர்களின் சாசனங்கள் இச் செய்தியை உறுதிப்படுத்தவில்லை. 'வம்சபாஸ்கரா' என்ற நூலை வரைந்த சூரஜ்மல் பட் (Surajmal Bhat) என்ற புலவர் பண்டி (Bundi) அரசர்களின் அவையில் வாழ்ந்து, அவர்களைப் பற்றியே அதை எழுதினர். சாகமானருக்கும் மூன்ரும் பிருதிவி ராஜருக்குமிடையில் 136 அரசர்கள் ஆட்சி புரிந்ததாக அவர் எழுதுவது எல்லாவற்றையும்விடப் பெரிய சரடு என்பதில் ஐய மில்லை. சாகமான அரசர்களைப்பற்றிக் கூறும் முதலாவது கல் வெட்டுகள்கூட அவர்களது வம்சாவளியைக் குறிப்பிடவே யில்லை. எனவே, அவர்களது பூர்விகத்தைப்பற்றி நிச்சயமாக எதையும் எழுத இயலவில்லை.

சாகமானர்களது பிஜோலியாக் (Bijolia) கல்வெட்டானது (கி.பி. 1169) சாகமானர்களில் முதல் அரசராய் விளங்கிய சாமந்தர் என்பவர் அகிச்சத்திரபுரத்தில் பிறந்தவர் என்று குறிப் பிடுகிறது. இவ்வூர் எது என்பதுபற்றி அறிஞர்களால் உறுதி யாகக் கூறமுடியவில்லை. உத்தர பாஞ்சாலத்தின் தலைநகரமாக அகிச்சத்திரம் என்ற ஊர் இருந்ததென்று மகாபாரதத்தில் சொல்லப்படுகிறது. உத்தர பாஞ்சாலம் என்பது யமுனை-கங்கைச் சமவெளியின் வடபகுதியாகும். அகிச்சத்திரபுரம் என்பது இத்துணை வடக்கில் தொலை தூரத்துப் பிரதேசமொன் றில் இருந்தது என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. பிருதிவிராஜ விஜயம் ஹம்மீர மகாகாவியம் போன்ற நூல்கள் அகிச்சத்திரபுரத்தைப்பற்றி ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை. ஜோத்பூர், ஜெய்பூர் ஆகிய சுதேச அரசுகளின் எல்லையாக விளங்கிய சாகம்பரி ஏரியின் கரையிலேயே முதலாவது சாக மான அரசர்கள் தங்களது தலைநகரை அமைத்துக் கொண்டிருந் தனர் என்று அவை குறிப்பிடுகின்றன. இந்தச் சாகம்பரி ஏரியே இன்று சம்பார் (Sambhar) என்று வழங்குகிறது.

பிருதிவிராஜ ராசோவும் பிற்காலத்தைச் சேர்ந்த வேறு சில கதைப் பாடல்களும் நர்மதையின் கரையிலிருந்த மாகிஷ் மதியே சாகமானர்களின் பூர்விக நகரம் என்றும், அங்கிருந்தே அவர்களது இருபத்து நான்கு கிளையினர் பல திசைகளிலும் பரந்து சென்று ஆளலாயினர் என்றும் கூறுகின்றன. இதை உறுதி செய்யக் கூடிய சான்றுகளும் இல்லை. எனவே, இவர் களது பூர்விகம்பற்றிய சிக்கலை இதுவரை கிடைத்துள்ள சான்று களைக் கொண்டு அவிழ்த்துவிட முயல்வது இயலாதாகும். பிஜோலியாக் கல்வெட்டில் இவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரத்தைச்

சேர்ந்த பிராமணர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் கட்டுக்கதையோ அன்றி உண்மையோ தெரியவில்லை.

பல சாகமான அரசுகள்

பல்வேறு சாகமான அரசுகள் ராஜஸ்தானத்திலும் குஜராத்திலுமிருந்தன. சாகம்பரி, ரணஸ்தம்பம், நத்துலம், ஜாவாலிபுரம், லாட்டம், பிரதாப்கர் போன்றவிடங்களில் அவை இருந்தன. அவற்றுள் லாட்டம் நீங்கலாக, மற்றவை யனைத்தும் ராஜஸ்தானத்திலேயே இருந்தன. ஆயினும், குஜராத்திலுள்ள லாட்டத்துச் சாகமான வம்சம்பற்றிக் கிடைக்கும் சாசனமே மிகவும் பழமையானதாகத் தெரிகிறது. புரோச் (Broach) மாவட்டத்திலுள்ள ஹன்சோட் (Hansot) என்ற சிறு நகரத்தில் ஒருவரிடமிருந்து பர்த்ரவத்தர் என்ற அரசரது செப்பேடு கிடைத்தது. எனவே, 'ஹன்சோட் செப்பேடு' என்று இது அழைக்கப்படுகிறது. ஆறு அரசர்களின் பெயர்கள் இதில் குறிப்பிடப்படுகின்றன. கி.பி. 756ஆம் ஆண்டில் இது வெளியிடப்பட்டதால், ஆறு தலைமுறைகளுக்கு முந்திய முதலரசர் கி.பி. ஆரும் நூற்றுண்டில் ஆண்டவராக இருக்கலாம். இச் சாசனம் நீக்கி வேறு எந்தச் சான்று கொண்டும் இந்த வம்சத்தைப்பற்றி நம்மால் அறிய இயலவில்லை.

1. சாகம்பரிச் சாகமானர்கள்

இரண்டு கல்வெட்டுகள்

சாகம்பரி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சாகமான வம்சத்தின் அரசர்ப் பட்டியலை இரண்டு கல்வெட்டுகள் நமக்குத் தருகின்றன. அவற்றுள் காலத்தால் முதன்மையானது இரண்டாம் விக்கிரகராஜர் ஆட்சியைச் சேர்ந்த கி.பி. 973-ல் வெளியிடப்பட்ட ஹர்ஷமலைக் (Harsha Hill) கல்வெட்டு. இதற்கு இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பின்னர், கி.பி. 1169-ல் பிஜோலியாக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது. இவ் விரண்டு கல்வெட்டுகளும் ஆரம்பகாலச் சாகமான அரசர்களின் பெயர்களை ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே தருகின்றன. பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கி.பி. 973-ல் ஆண்டு கொண்டிருந்த இரண்டாம் விக்கிரகராஜருக்கு முந்திய அரசர்களைப்பற்றித் தெரிவிக்கவில்லை. ஹர்ஷமலைக் கல்வெட்டானது முதலாம் கூவகர் முதல் துவங்குகிறது. பிஜோலியாக் கல்வெட்டோ கூவகருக்கு முந்திய வேறு ஏழு பெயர்களையும் நமக்குத் தருகிறது. சான்றுகக் கீழ்வரும் அட்டவணையைப் பார்க்க:

ஹர்ஷமலேக் கல்வெட்டு	பிஜோலியாக் கல்வெட்டு
1. முதலாம் கூவகர்	8. முதலாம் கூவகர்
2. சந்திரராஜர்	9. சந்திரராஜர் (சசிநிருபர்)
3. இரண்டாம் கூவகர்	10. இரண்டாம் கூவகர்
4. சந்தனராஜர்	11. சந்தனராஜர்
5. வாக்பதிராஜர்	12. வாக்பதிராஜர் (பப்பையராஜர்)
6. சிங்கராஜர்	13. சிங்கர்
7. விக்கிரகராஜர்	14. விக்கிரகராஜர்
8. துர்லபராஜர்	15. துர்லபர்

பிஜோலியாக் கல்வெட்டானது முதலாம் கூவகருக்கும் முந்திய ஏழு மன்னர்களின் பெயரடங்கிய கீழ்வரும் அரசர்ப் பட்டியலே நமக்குத் தெரிவிக்கிறது :

1. சாமந்தராஜர் (அனந்தர்)
|
2. பூரணதல்லர்
|
3. ஜெயராஜர்
|
4. முதலாம் விக்கிரகராஜர்
|
5. சந்திரராஜர் — 6. கோபேந்திரராஜர்
|
7. முதலாம் துர்லபராஜர்
|
8. முதலாம் கூவகர்

சாமந்தராஜர்

ஜயானகரது 'பிருதிவிராஜ விஜயம்' போன்ற நூல்கள் சாகமான வம்சத்தைத் தோற்றுவித்தவர் வாசுதேவர் என்பதைத் தெரிவிக்கின்றன. வாசுதேவரது வழியிலேயே சாமந்தராஜர் பன்னிரண்டாவது தலேமுறையில் வந்தவர் என்று அவை குறிப்பிடுகின்றன. வாசுதேவர் என்ற நபர் உண்மையான பேர்வழி

யாக இருக்கலாமென்ருலும், சாகம்பரிச் சாகமான அரசுக்கு அடிகோலியவர் சாமந்தராஜரே என்று உணரலாம். சாமந்த ராஜரது அப்பட்டமான பெயர் அனந்தர் போலும்! எவரோ ஒரு பேரரசரின்கீழ்ச் சிற்றரசராக (சாமந்தராக) இவர் இருந்ததால், பிற்காலத்தில் இவரது வழியினர் 'சாமந்தராஜர்' என்று இவரை அழைத்திருக்கலாம். கி.பி. 973-ஐச் சேர்ந்த ஹர் சோலா மலேக் கல்வெட்டு இரண்டாம் விக்கிரகராஜருக்குரியது என்பதை முன்பே பார்த்தோம். (அந்த ஆண்டில் விக்கிரக ராஜரது ஆட்சி முடிவுற்று, அவருடைய தம்பியான துர்லபராஜரது ஆட்சி துவங்கியிருக்கலாமென்று C. V. வைத்தியா அவர்கள் கருதுகிருர்.) இரண்டாம் விக்கிரகராஜரது காலம் கி.பி. 973 என்று கொள்வோமாஞல், அவருக்கு ஆறு தலைமுறைகளுக்கு முந்திய முதலாம் கூவகர் (Guvaka) கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர் என்று முடிவு செய்யலாம். அதே அடிப்படையில், சாமந்தராஜர் ஏழாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர் என்று ஆகிறது.

சாமந்தராஜரையும் அவருக்குப் பின்னர் ஆட்சி புரிந்த பல அரசர்களையும்பற்றி முக்கியமாக எதுவும் தெரியவில்லை. பிருதிவிராஜ விஜயம், பிரபந்த கோசம் (ராஜசேகரரது நூல்), ஹம்மீர மகாகாவியம் போன்ற நூல்கள் அங்குமிங்குமாகச் சில தகவல்களைத் தருகின்றன. சாமந்தருக்கும் அவருக்குப் பின் ஆட்சி புரிந்த அரசர்களுக்குமான உறவு முறைகளைப்பற்றிப் பிருதிவிராஜ விஜயமே நமக்குத் தெரிவிக்கிறது.

முதலாம் கூவகர்

கோவிந்தராஜர் என்பதே முதலாம் கூவகரது முழுப்பெயர் என்றும், கூவகர் என்பது கொச்சைச் சொல் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். சில நூற் சான்றுகள் இதை உறுதி செய்கின்றன. பிற்காலத்திய நூலான பிரபந்த கோசம் இவரைப் பற்றிச் சில தகவல்களைத் தெரிவிக்கிறது. நாகாவலோகரது சிற்றரசராகச் சாகமான கோவிந்தராஜர் இருந்தார் என்றும், சிந்துவில் முஸ்லிம் ஆளுநராயிருந்த பஷர் (Bashar) என்பவர் நிகழ்த்திய படையெடுப்பு ஒன்றை அவர் முறியடித்தாரென்றும் அந்நூல் குறிப்பிடுகிறது. அந்த நாகாவலோகர் பிரதிகார அரசரான இரண்டாம் நாகபட்டரே என்பது அறிஞர்களின் முடிவு. கி.பி. 833-ல் நாகபட்டர் காலமாஞர் என்று பிரபாவக சரிதம் என்ற சமண நூல் தெரிவிக்கின்றது. இதன்மூலம் இம் மன்னருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசரான முதலாம் கூவகரின் காலத்தை

நாம் உணர்ந்து கொள்ளலாம். கோவிந்தராஜருடன் (கூவக ருடன்) இரண்டாம் கொம்மாணரும் சேர்ந்து பஷருக்கு எதிராகப் போரிட்டார். நாகாவலோகரது அவையில் போர் வலியிற் சிறந்த அரசராகக் கூவகர் பெயர் பெற்றிருந்தார் என்று ஹர்ஷ மலைக் கல்வெட்டுச் சொல்கின்றது. இரண்டாம் நாகபட்டரது சிற்றரசர்களுள் புகழ்மிக்கவராகக் கூவகர் இருந்தார் என்பதை நாம் உணரலாம். இம் மன்னர் ஹர்ஷசிவன் அல்லது ஹர்ஷ தேவன் என்ற சிவனுக்கு ஆலயமொன்றை ஹர்ஷமலையில் கட்டி ஞர். சாகமானர்கள் ஹர்ஷசிவனை வழிபட்டவர்கள் என்பது இதனல் புலனுகிறது.

முதலாம் கூவகருக்குப் பிந்திய அரசர்கள்

முதலாம் கூவகரது மகன் சந்திரர் அல்லது சந்திரராஜர் ஆவார். இரண்டாம் சந்திரராஜர் என்று நாம் இவரை அழைக்க லாம். பிஜோலியாக் கல்வெட்டானது சசிநிருபர் (Sasiurpa) என்றும் இவரைக் குறிப்பிடுகிறது. இவருக்கு இரண்டாம் கூவகர் என்ற மகனும் கலாவதி என்ற மகளும் இருந்தனர். கனேஜ் அரசர் ஒருவரைக் கலாவதி மணந்திருந்ததாகப் பிருதிவிராஜ விஜயம் கூறும். கூவகரது மகன் சந்தனர் அல்லது சந்தனராஜர் ருத்ரேனர் (Rudrena) என்ற தொமர அரசர் ஒருவரைப் போரில் கொன்றதாக ஹர்ஷமலைக் கல்வெட்டின் வாயிலாக அறிகிறேம். இத் தொமர அரசரைப்பற்றித் தெரிந்துகொள்ள நமக்கு வேறு சான்றுகள் இல்லை. கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் தொமரர் கள் டெல்லிப் பகுதியில் ஆண்டுகொண்டிருந்தனர். தொமரர் களுக்கெதிராக இப்பொழுது துவங்கிய பகை பின்னர்ப் பல தலைமுறைகள் வரையில் நீடித்தது. சந்தனரது மனைவியான ருத்ராணி இந்த ருத்ரேனரது சகோதரியாக இருக்கக் கூடு மென்று பெயர் ஒற்றுமையை வைத்து நாம் ஊகிக்கலாம். ருத் ராணிக்குப் பிறந்தவரே சந்தனரின் மகனுன வாக்பதிராஜர். வப்பையராஜர் (பப்பையராஜர்), விந்தியநிருபதி என்ற பெயர் களால் பிஜோலியாக் கல்வெட்டு இவரைக் குறிப்பிடுகிறது. 'மகாராஜர்' என்ற பட்டத்தை இவர் பூண்டிருந்தார். இவர் போரில் வல்லவர் என்றும், தந்திரபாலர் போன்ற அரசர்களைத் தோற்கடித்தார் என்றும் சொல்லப்படுகிறது. அஜ்மீர் நகருக்கு அருகிலுள்ள புஷ்கரம் அல்லது புஷ்கரதீர்த்தம் என்ற ஏரியின் கரையில் இம் மன்னர் சிவாலயம் ஒன்றை நிருமித்தார். சாக மானர் ஆட்சி புரிந்த சாகம்பரிப் பகுதிக்கு அனந்த கோசரம் என்ற பெயரும் இப்பொழுது நிலவிற்று. முதலாவது அரசரான சாமந்தரது பெயரான அனந்தர் என்பதையொட்டி இப் பெயர்

ஏற்பட்டிருக்க வேண்டும். விந்தியமலை வரையில் இவரது அரசு விரிவடைந்திருக்கலாம். வாக்பதி ராஜருக்குச் சிம்மராஜர், வத்சராஜர், லக்ஷ்மணர் என்ற பிள்ளைகள் இருந்தனர். இந்த லக்ஷ்மணரே தெற்கு மார்வாரில் நத்துலத்தில் கிளைவம்சமொன்றை நிறுவினர். பிரதிகார அரசர் மகிபாலரது மேலாதிக்கத்தை உதறி எறிந்துவிட்டு வாக்பதிராஜர் சுதந்திரம் பெற்றிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

இவருக்குப் பின் இவரது மகன் சிம்மராஜர் ஆட்சி புரிந்தார். 'மகாராஜாதிராஜர்' என்ற பட்டத்தை இவர் சூடியிருந்தார். தொமர அரசர் லவணர் அல்லது சலவணர் என்பாரை இவர் தோற்கடித்து வேறு பல அரசர்களையும் சிறைப்படுத்தினராம். தோற்கடிக்கப்பட்ட பல சிற்றரசர்களை இவர் சிறையில் வைத்திருந்தாரென்றும், அவர்களது மேலரசரான ரகுகுல சக்கரவர்த்தி ஒருவர் இவரது அரண்மனைக்கு நேரில் வந்து கேட்டுக் கொண்ட பின்னரே அவர்களை இவர் விடுதலை செய்தாரென்றும் நாம் அறிவிக்கப்படுகிறோம். ரகுகுலத்தவர் என்று பிரதிகார அரசர்களை ராஜசேகரர் வருணிப்பதால், இங்குக் குறிப்பிடப்படும் ரகுகுலச் சக்கரவர்த்தி என்பவர் பிரதிகார அரசரான இரண்டாம் மகேந்திரபாலர் அல்லது தேவபாலர் போன்றோராகவே இருக்க வேண்டுமென்று H. C. ரே கருதினர்.[1] சாகமானர்களின் ஆதிக்கம் ஓங்கிவிட்டதையும் பிரதிகாரர்களின் ஆதிக்கம் குன்றிவிட்டதையும் இது உணர்த்துவதாக அறிஞர்கள் கொள்கின்றனர்.

இரண்டாம் விக்கிரகராஜர்

சிம்மராஜருக்குப் பின் அவரது மகனை இரண்டாம் விக்கிரகராஜர் அரியணை ஏறினர். ஹர்ஷமலைக் கல்வெட்டு இம் மன்னரது காலத்தைச் சேர்ந்ததே. இம் மன்னர் கி.பி. 972-73-ல் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார் என்பதை இக் கல்வெட்டின்மூலம் நாம் உணரலாம். இவ் வரசர் தெற்கில் நர்மதை வரையில் படையெடுத்துச் சென்று தமது அரசை விரிவுபடுத்தியதாகப் பிருதிவிராஜ விஜயம் தெரிவிக்கிறது. மேலும், குஜராத்தின்மீதும் இவர் படையெடுத்துச் சௌளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த அரசர் முதலாம் மூலராஜரைத் தோற்கடித்தார் என்றும் அதே நூல் கூறுகிறது. மூலராஜர் கட்ச் பகுதியிலிருந்த கந்ததுர்கம் (இன்றைய கந்தகோட்) என்ற கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டாராம். நயசந்திரரது ஹம்மீர மகா காவியம் மூலராஜர் இரண்டாம் விக்கிரகராஜரால் கொல்லப்பட்டார்

[1] Dr. H. C. Ray, *Dynastic History of Northern India.*

என்று கூறுவது சரியன்று. மூலராஜர் ஓடி ஒளிந்து கொண்ட பின் இரண்டாம் விக்கிரகராஜரது படைகள் கனத்த மழையை யும் பொருட்படுத்தாமல், சாரஸ்வத மண்டலம் (சரஸ்வதி நதியின் கரையிலுள்ள பிரதேசம்) முழுவதையும் சூறையிட்டு லாட்டத்துக்குள்ளும் நுழைந்தன. பின்னர், நர்மதையின் முகத்துவாரத்தில் பிருகுகச்ச நகரிலுள்ள ஆசாபுரி என்ற தேவதைக்கு இச் சாகமான அரசர் ஆலயமொன்றையும் நிறுவி ஞர். இதன் பின்னர், மூலராஜர் சாகமான அரசருடன் உடன் படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டு, தமது அரசினைத் திரும் பப் பெற்ருர்.

துர்லபராஜரும் கோவிந்தராஜரும்

விக்கிரகராஜருக்குப் பின் அவரது தம்பியான துர்லபராஜர் அரியணை ஏறினுர். இவர் கி.பி. 999-ல் ஆட்சியில் இருந்தார் என்பதை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. இது முந்திய ஜோத்பூர் சமஸ்தானத்தில் பர்பத்சார் (Parbatsar) என்ற நகருக் கருகில் கிடைத்ததால், மேற்கில் அவ்வூர் வரையில் சாகமான அரசு பரந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. அதேபோல், வடக்கில் ஜெய்பூர் சமஸ்தானத்தில் ஹர்ஷமலை உள்ள சிகார் (Sikar) என்ற ஊர் வரையிலும், கிழக்கில் ஜெய்பூர் வரையிலும், தெற்கில் அஜ்மீருக்கு அருகிலுள்ள புஷ்கர ஏரி வரையிலும் சாக மான அரசு விரிந்திருந்தது. துர்லபராஜர் நத்துலத்தை (நாதோலை)ச் சேர்ந்த சாகமான அரசர் மகேந்திரரைத் தோற் கடித்து, ஹஸ்திகுண்டியில் ஆண்டு கொண்டிருந்த ராஷ்டிர கூடச் சிற்றரசர் தவலரிடம் ஓடி அடைக்கலம் புகுமாறு விரட்டி யடித்தார். துர்லங்கியமேரு என்ற பெயரும் துர்லபராஜருக்கு இருந்தது.

இரண்டாம் துர்லபராஜருக்குப் பின் அவரது மகன் இரண் டாம் கோவிந்தராஜர் அரியணை ஏறினுர். இவருக்குக் கந்து (Gandu) என்ற பெயரும் இருந்தது. சுல்தான் கசினி மகமூதுடன் போரிட்டு இவர் வென்ருர் என்று பிரபந்த கோசம் தெரிவிக் கிறது. கசினிப் படைகள் சோமநாதபுரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது அவற்றை எதிர்த்துச் சாகமானப் படைகள் சிறு கைகலப்பு ஒன்றில் ஈடுபட்டிருக்கலாமே யல்லாது, இரு தரப்புக்கும் இடையே பெரும் போர் நிகழ்ந்ததென்று தெரிய வில்லை. இந் நிகழ்ச்சி உண்மையாக இருக்குமாஞல், பிருதிவி ராஜ விஜயத்தில் இதை எழுதிப் பெருமைப்படாமல் விட்டிருக்க மாட்டார்கள். அடுத்த அரசரான இரண்டாம் வாக்பதிராஜர் கோவிந்தராஜரது மகன். இவர் ஆகாடபதியாகிய குகில அரசர்

அம்பாபிரசாதரைப் போரில் தோற்கடித்து யமனுலகுக்கு அனுப்பினார் என்று பிருதிவிராஜ விஜயத்தின்மூலம் அறிகிறோம். வாக்பதிராஜருக்குப் பிள்ளைகள் இல்லை போலும்! எனவே, அவரது தம்பிகளான வீரியராமர், சாமுண்டராஜர் ஆகியோரே அடுத்து அரசராயினர். வீரியராமரை நத்துலத்தைச் சேர்ந்த சாகமான அரசர் அணகிலர் என்பவர் போரில் தோற்கடித்தார். பின்னர், பரமார போஜரிடமும் இவர் தோற்றுப் போரில் உயிரிழந்தார். இச் செய்தியைப் பிருதிவிராஜ விஜயம் நமக்குத் தெரிவிக்கின்றது. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் முன் பகுதியில் வீரியராமர் அரியணையிலிருந்தார். இவரது தம்பியான சாமுண்டராஜர்பற்றி முக்கியமான தகவல் எதுவும் தெரியவில்லை. அவருக்குப் பின் வீரியராமரது பிள்ளைகளான சிங்கதர் (Singhata), மூன்றாம் துர்லபராஜர், வீரசிம்மர், மூன்றாம் விக்கிரகராஜர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர்.

வம்சாவளி (தொடர்ச்சி)

முதலாம் கூவகர்
|
இரண்டாம் சந்திரராஜர்
|
இரண்டாம் கூவகர்
|
சந்தனர்
|
வாக்பதிராஜர்
├── சிம்மராஜர்
│   ├── இரண்டாம் விக்கிரகராஜர்
│   └── இரண்டாம் துர்லபராஜர்
│   └── இரண்டாம் கோவிந்தராஜர்
│   ├── இரண்டாம் வாக்பதிராஜர்
│   ├── வீரியராமர்
│   │   ├── சிங்கதர்
│   │   ├── மூன்றாம் துர்லபராஜர்
│   │   ├── வீரசிம்மர்
│   │   └── மூன்றாம் விக்கிரகராஜர்
│   │   └── முதலாம் பிருதிவிராஜர்
│   └── சாமுண்டராஜர்
├── வத்சராஜர்
└── லக்ஷ்மணர்

அஜயராஜர்

மூன்றும் விக்கிரகராஜருக்குத் தூசலர் (Dusala) என்ற ஒரு பெயரும் இருந்தது. பரமார அரசர் உதயாதித்தியர் குஜராத்தின் அரசர் கர்ணருக்கு எதிராகப் படையெடுத்த பொழுது விக்கிரகராஜரது சாகமான குதிரைப் படைகள் பரமாரர்களுக்கு உதவின. விக்கிரகராஜரது மகனை முதலாம் பிருதிவிராஜர் கி.பி. 1100ஆம் ஆண்டு வாக்கில் அரியணை ஏறினர். புஷ்கரத்தில் பிராமணர்களைக் கொள்ளையிடுவதற்காக வந்த எழுநூறு சௌளுக்கியர்களைப் பிருதிவிராஜர் கொன்றதாகப் பிருதிவிராஜ விஜயம் அறிவிக்கிறது. பிருதிவிராஜரது மகன் அஜயராஜர் முதற்கொண்டு சாகமான அரசு அண்டையிலுள்ள அரசுகளையெல்லாம் தாக்கி விரிவடையத் துவங்கிற்று. பரமார அரசின் மீது அஜயராஜர் படையெடுத்துப் பரமாரப் படைத் தலைவரான சுல்கணரைச் (Sulhana) சிறைப்பிடித்தார். உஜ்ஜெயினி நகரமும் இவரால் கைப்பற்றப்பட்டது. சாச்சிகர் (Chachiga), சிந்துலர், யசோராஜர் ஆகிய வேறு மூன்று அரசர்களையும் இவர் போரில் கொன்றெறிந்தா ரென்று பிஜோலியாக் கல்வெட்டுக் குறிக்கிறது. இன்றைய அஜ்மீரான அஜயமேரு (Ajayameru) நகரை நிறுவியவர் அஜயராஜரேயாவார். இவரது வெள்ளி, செம்பு நாணயங்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ராஜஸ்தானத்தில் மட்டுமின்றி, மதுரா வரையிலும் இவரது நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. உலக முழுவதையும் தமது வெள்ளி நாணயங்களைக் கொண்டு (துர்வர்ணரூபகம்) இவர் நிரப்பினர் என்று பிருதிவிராஜ விஜயம் குறிப்பிடுகிறது. மேலும், இவரது மனைவியான சோமலேகா என்பவள் நாள்தோறும் புதிய ரூபங்களை (காசுகளை) வெளியிட்டாளென்றும் அந் நூல் தகவல் தருகிறது. ஸ்ரீசோமலதேவி என்ற பெயர் பொறித்த வெள்ளி, செம்பு நாணயங்கள் கிடைத்துள்ளமை இச் செய்தியை மெய்ப்படுத்துகின்றது. மாதங்கர்கள் (Matangas) என்பாரை அஜயராஜரும் அவருக்கு முந்திய சில அரசர்களும் தோற்கடித்தனரென்று பிருதிவிராஜ விஜயம் அடிக்கடி கூறுகிறது. அந் நூலுக்கு விளக்க உரை எழுதிய ஜோனராஜர் என்பவர் மாதங்கர்கள் என்போர் மிலேச்சர்கள் என்று கூறுகிறர். பஞ்சாபை ஆண்டு வந்த யமீனி வம்சத்தவர்களே இந்த மிலேச்சர்களாக இருக்கலாம்.

அருணராஜர்

அஜயராஜரது மகன் அருணராஜர் கி.பி. 1130ஆம் ஆண்டு வாக்கில் அரசரானர். ஆனகர், ஆனல்லதேவர் என்ற பெயர்களாலும் இவர் வழங்கப்பட்டார். துருக்ஷர்கள் பாலைவனத்தின்

வழியாக வந்து தாக்கியதாகவும், அவர்களை இவர் தோற்கடித்து விரட்டியதாகவும் பிருதிவிராஜ விஜயம் தெரிவிக்கிறது. இப் போர் புஷ்கரதீர்த்தத்துக்கு வெகு அண்மையில் நடைபெற்றது என்பதை ஜோனராஜரது குறிப்புகள் புலப்படுத்துகின்றன. ஹேமசந்திரரது 'திவ்வியாஸ்ரய காவிய'மும் சோமேசுவரரது 'கீர்த்தி கௌமுதி'யும் அருணராஜர் சௌளுக்கிய அரசர் ஜெய சிம்மரிடம் தோல்வியுற்று அவரது மகள் காஞ்சனுதேவியை மணந்து கொண்டார் என்பதைத் தெரிவிக்கின்றன. விரைவில் ஜெயசிம்மர் இறந்து குமாரபாலர் அரசரானதும், அருணராஜருக் கெதிராக மீண்டும் போர்கள் துவங்கின. குமாரபாலர் சாகம்பரி யின்மீது படையெடுத்து, அருணராஜரைத் தோற்கடித்துத் திரும்பினுர் என்று கூறப்படுகிறது. இப் போரின் இறுதியில் அருணராஜரது மகளான ஜல்கணு என்பவரைக் குமாரபாலர் மணந்து கொண்டார். இவைபற்றிக் கூறும் நூல்கள் சாகம் பரியைச் சபாடலட்சம் (Sapadalaksa) என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். அருணராஜர் போரில் தோற்றுப்போய்க் காயமுற்றுர் என்பதைக் குஜராத்தைச் சேர்ந்த வேறு பல நூல்களும் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. குசவர்ணம் என்ற ஒரு நாட்டையும் அருணராஜர் வென்ருரென்று நாம் அறிவிக்கப் பெறுகிறேம். இந் நாடு எங்கே இருந்தது என்பது தெரியவில்லை.

அருணராஜருக்குச் சுதவா என்ற மற்ருெரு மனைவியும் இருந் தார். இவர் அவீசி (Avici) என்ற பாலைவன அரசின் அரசரது மகளாம். மார்வார்ப் பகுதியே அவீசி என்றழைக்கப்பட்ட தாகச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதினர். சுதவாவுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். ஏதோ ஒரு காரணத்தினுல் இந்த மூவருள் மூத்தவனுன ஒருவன் தன் தந்தையைக் கொன்ரு னென்று பிருதிவிராஜ விஜயத்தில் மறைமுகமான ஒரு குறிப்புக் காணப்படுகிறது. பரசுராமர் தமது தாய்க்குச் செய்ததைப்போல இந்த மூத்த மகன் அருணராஜருக்குச் செய்தான் என்று மறை முகமாகச் சுட்டப்படுகிறது. ஆனுல், இம் மகனது பெயர்கூடக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், பல்வேறு சான்றுகளையும் வைத்து, அருணராஜரைக் கொலை செய்த அவரது மூத்த மகன் ஜுகதேவராகவே இருக்கக் கூடுமென்று அறிஞர்கள் கருதுகின்ற னர். இந்த ஜுகதேவர் கி.பி. 1150ஆம் ஆண்டு வாக்கில் அரியணை ஏறினுர்.

நான்காம் விக்கிரகராஜர்

ஜுகதேவரின் ஆட்சி குறுகிய காலமே நீடித்தது. கி.பி. 1153க்கு முன்னமேயே தமது அண்ணனை அரியணையிலிருந்து

அகற்றிவிட்டு, நான்காம் விக்கிரகராஜர் என்ற விசாலதேவர் அதைக் கைப்பற்றிக் கொண்டார். இவரது கல்வெட்டுகள் நான்கு கிடைத்துள்ளன. கி.பி. 1164 வரையில் இவர் நிச்சயம் ஆட்சி செலுத்தி இருக்க வேண்டுமென்பதை அவை தெரிவிக்கின்றன.

இவரது காலத்தில் சாகமான அரசு வடக்கில் பெரிதும் விரிவடைந்தது. தொமரர்களை எதிர்த்துப் போரிட்டு, தில்லிகா என்றழைக்கப்பட்ட டெல்லி நகரை விக்கிரகராஜர் கைப்பற்றினார். அசோகரது பழைய தூண் ஒன்றின்மீது விக்கிரகர், விக்கிரகராஜர், விசாலதேவர் என்னும் பெயர்களால் இவரது மூன்று கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன. உத்தரப் பிரதேசத்தில் யமுனைக்கு மேற்கில் சிவாலிக் மலைகளின் அடிவாரத்தில் இன்றைய கிஸிராபாதுக்கு (Khizrabad) அண்மையில் விக்கிரகராஜரது காலத்தில் அது இருந்தது. ஆனால், பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஃபைரூஸ் ஷா (Firuz Shah) என்ற துக்ளக் அரசரின் காலத்தில் அது டெல்லிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இமய மலையின் அடிவாரம் வரையில் சாகமான அரசு விரிவடைந்திருந்ததை இது புலப்படுத்துகிறது. பஞ்சாபிலும் ஹிசார் மாவட்டத்திலுள்ள இன்றைய ஹான்சியை (Hansi) விக்கிரகராஜர் கைப்பற்றினார். ஆசிகா (Asika) என்று அக்காலத்தில் அது அழைக்கப்பட்டது. அதற்கு மேற்கிலான பகுதியானது கசினியைச் சேர்ந்த யமீனி சுல்தான்களால் ஆளப்பட்டு வந்தது. எனவே, முஸ்லிம்களுக்கெதிராக அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்தன. துருக்ஷர்களுடனும் மிலேச்சர்களுடனும் அடிக்கடி கைகலப்புகள் நிகழ்ந்தனவென்பதை விக்கிரகராஜரது கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

தென்மேற்குத் திசையில் சுக்ரி (Sukri) நதியின் கரை வரையில் இவரது ஆட்சி விரிவுபடுத்தப்பட்டது. தெற்கில் ஜோத்பூர் சமஸ்தானத்தில் பல்லிகா (இன்றைய பாலி—Pali) என்ற ஊர் சூறையாடப்பட்டு, ஜாவாலிபுரமும் (ஜாலோர்) தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. நத்துலத்தைச் சேர்ந்த சாகமான அரசும் இவ்வாறே சூறையாடப்பட்டது. ஜாவாலிபுரமும் பல்லிகாவும் அப்பொழுது சௌளுக்கிய அரசில் இருந்தன. சௌளுக்கிய அரசராகிய குமாரபாலருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராகப் பரமார குமுதபாலர் (Kumtapala) ஜாவாலிபுரத்தை அப்பொழுது ஆண்டு வந்திருக்க வேண்டும். விக்கிரகராஜரது கல்வெட்டொன்று உதயபூர் சமஸ்தானத்திலிருந்த ஜார்ஜ்பூர் மாவட்டத்திலும் கண்டெடுக்கப்பட்டது. இவ்வாறு பல திசைகளிலும் தமது ஆட்சி எல்லையை விரிவுபடுத்திய சிறந்த மன்னராக நான்காம்

விக்கிரகராஜர் விளங்கினர். டெல்லியும், யமுனைக்கும் சட்லெஜுக்குமிடையிலான பிரதேசமும் இவரது காலத்தில் கைப்பற்றப்பட்டமையால், வரவிருக்கும் கோரி முகம்மதுவின் படைகளை வழிமறித்து யமுனை-கங்கைச் சமவெளியைக் காக்கும் பெரும் பொறுப்புச் சாகமானர்மீது சுமந்தது.

இலக்கியத்திலும் சிறந்தவராக இம் மன்னர் விளங்கினர். இவரால் இயற்றப்பட்ட ஹரகேலி நாடகம் (Harakeli Nataka) என்பதன் சில பகுதிகள் அஜ்மீரிலுள்ள ஒரு கல்வெட்டில் காணப்படுகின்றன. இந் நாடகம் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இவரது அவையில் வாழ்ந்த மகாகவி சோமதேவர் என்பவர் இவ் வரசரைப் புகழும் வகையில் 'லலித விக்கிரகராஜம்' என்ற ஒரு நாடகத்தை எழுதினர். அதன் நான்கு அங்கங்களின் சிற்சில பகுதிகள் அஜ்மீரிலுள்ள மற்றொரு கல்வெட்டில் காணப்படுகின்றன. இந்திரபுரத்தில் வாழ்ந்த வசந்தபாலர் என்ற சிற்றரசர் ஒருவரின் மகள் தேசலதேவியை விக்கிரகராஜர் காதலித்ததுபற்றியதே இந் நாடகம். துருக்ஷர்களுக்கெதிராகப் போருக்கு இவர் ஏற்பாடு செய்ததைப்பற்றியும் இக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சுமார் பத்தே ஆண்டுகளில் இவர் சாதித்த இச் செயல்கள் இவரது பேராற்றலை நன்கு தெரிவிக்கின்றன.

இரண்டாம் பிருதிவிராஜர்

இவருக்குப் பின் இவரது மகனை அபரகாங்கேயர் அரசரானர். ஆனல், ஓரிரு ஆண்டுகளிலேயே முன்பு நாம் குறிப்பிட்ட அருணராஜரின் மூத்த மகனும் (இவரது பெயர் ஜுகதேவராக இருக்கலாமென்பதை முன்பே பார்த்தோம்) நான்காம் விக்கிரகராஜரது அண்ணனுமான முன்னாள் அரசரின் மகன் பிருதிவிபட்டர் என்பவர் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார். அபரகாங்கேயர் மணம் செய்து கொள்ளாமலேயே காலமானர் என்று பிருதிவிராஜ விஜயம் கூறுவதால், அவர் சிறுவராயிருந்தார் என்று நாம் முடிவு செய்யலாம். சாகம்பரி அரசரைத் தோற்கடித்ததாகப் பிருதிவிபட்டர் கூறிக் கொள்வதால், அபரகாங்கேயரைத் தோற்கடித்து இவர் அரியணையைக் கவர்ந்து கொண்டார் என்பது தெளிவாகிறது. இவருக்குப் பிருதிவிராஜர் என்ற பெயரும் இருந்தது. எனவே, இரண்டாம் பிருதிவிராஜர் என இவர் அழைக்கப்படுகிருர். சுமார் கி.பி. 1168 முதல் 1170 வரையில் குறுகிய காலமே இவர் ஆண்டார் என்பதை இவரது நான்கு கல்வெட்டுகளைக் கொண்டு நாம் அறிகிறோம். இவரும் சட்லெஜ் நதிக் கரையில் யமீனி அரசர் குஸ்ராவ் மாலிக்கை

எதிர்த்துப் போரிட்டார். பாதுகாப்புக்காக வேண்டி, தமது தாய்மாமனுன குகிலவம்சத்துக் கில்கணரை இவர் ஹான்சியில் ஆளுநராக நியமித்து, அவரின் கீழ் ஒரு பெரும் படையை வைத்திருந்தார். சட்லெஜ் நதிக் கரையிலிருந்த பஞ்சபுரம் (இன்றைய பாச்சபட்டணம்) என்ற ஊரில் முஸ்லிம் படைகளைக் கில்கணர் தோற்கடித்து, பகைவர்கள் பலரைச் சிறைப்பிடித்தார்.

சோமேசுவரர்

இரண்டாம் பிருதிவிராஜர் இளமையிலேயே மாண்டதால் அவரது கடைசிச் சிற்றப்பரான (நான்காம் விக்கிரக ராஜரின் தம்பி) சோமேசுவரர் சுமார் கி.பி. 1170-ல் அரியணை ஏறினுர். சாகம்பரி அரசர் அருணராஜருக்குச் சௌளுக்கிய ஜெயசிம்ம சித்தராஜரின் மகள் காஞ்சனுதேவியின்மூலம் பிறந்தவர் இவர்.

வம்சாவளி (தொடர்ச்சி)

முதலாம் பிருதிவிராஜர்
|
அஜயராஜர்
|
அருணராஜர்
|
ஜகதேவர் (?) — நான்காம் விக்கிரகராஜர் — சோமேசுவரர்

ஜகதேவர் (?) → இரண்டாம் பிருதிவிராஜர்
நான்காம் விக்கிரகராஜர் → அபர காங்கேயர்
சோமேசுவரர் → மூன்றும் பிருதிவிராஜர், ஹரிராஜர்

சோமேசுவரர் அணகிலப்பாடகத்தில் தம் பாட்டனுரான ஜெயசிம்மரது அரண்மனையிலேயே வளர்ந்து வந்தார் என்பது பிருதிவிராஜ விஜயத்தின்மூலம் தெரிகிறது. ஜெயசிம்மருக்கு அடுத்த குமாரபாலரது ஆட்சியின்போதும் சௌளுக்கியத் தலைநகரிலேயே சோமேசுவரர் இருந்தார். குமாரபாலரது போர்களின்போது சோமேசுவரர் அவற்றில் பங்கு கொண்டு போர்ப் பயிற்சி பெற்ற பின், திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரி வம்சத்து அசரராஜர் என்பாரின் மகளான கற்பூரதேவியை மணந்தார். இந்தக் கற்பூரதேவிக்குப் பிறந்தவர்களே மூன்றும் பிருதிவிராஜரும் ஹரிராஜரும் ஆவர். இரண்டாம் பிருதிவிராஜர் இறந்தபின்,

அமைச்சர்கள் சௌளுக்கிய அரசுக்குச் சென்று, சோமேசு வரரைச் சாகம்பரிக்கு அழைத்துவந்து முடிசூட்டினர். மூன்றும் பிருதிவிராஜரும் ஹரிராஜரும் தமது தந்தையுடன் சாகம்பரிக்கு வந்தனர். இச் செய்திகளைப் பிருதிவிராஜ விஜயம் நமக்குத் தெரிவிக்கிறது.

சாகம்பரிச் சாகமான வம்சத்தின் வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் துணை நிற்கும் பிஜோலியாக் கல்வெட்டு இவரது காலத்ததே. 1170ஆம் ஆண்டில் செதுக்கப்பட்ட இச் சாசனத்தில் சாமந்தர் முதல் சோமேசுவரர் வரையிலான அரசர்களின் வம்சாவளி காணப்படுகிறது. மேவாரில் உதயபூருக்கு நூறு கல் தொலைவிலுள்ள பிஜோலியா என்ற கிராமத்தில் ஒரு பாறைமீது இது செதுக்கப்பட்டுள்ளது. இவரது காலத்தைச் சேர்ந்த வேறு நான்கு கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இம் மன்னர் கி.பி. 1170க்கு முன் அரசராகி, கி.பி. 1177-ல் காலமானார். இவரது வெள்ளி, செம்பு நாணயங்கள் நிறையக் கிடைத்துள்ளன.

இவர் காலமான பொழுது மூத்த மகனான மூன்றும் பிருதிவி ராஜர் சிறுவராயிருந்தார். எனவே, கற்பூரதேவியைப் பாது காவலராக நியமித்துவிட்டு, சோமேசுவரர் காலமானார். கடம்ப குலத்தைச் சேர்ந்த வாசர் (Vasa) என்பவர் கற்பூரதேவிக்கும் சிறுவரான அரசருக்கும் அமைச்சராயிருந்து நிர்வாகத்தை நடத்தினார்.

மூன்றும் பிருதிவிராஜர்

சான்றுகள்

சோமேசுவரரின் மூத்த மகனான மூன்றும் பிருதிவிராஜர் இந்திய வரலாற்றில் கீர்த்திபெற்ற ஒரு அரசர். இவரைப்பற்றி அறிந்து கொள்வதற்குப் பல கல்வெட்டுகளும் நூல்களும் துணை செய்கின்றன. இந்திய நூல்களில் பிருதிவிராஜ விஜயம், பிருதிவிராஜ ராசோ ஆகியவை மிகவும் முக்கியமானவை. பிருதிவிராஜ விஜயம் ஏதோ காரணத்தினால் திடீரென்று முற்றுப் பெறாமல் பாதியிலேயே நின்று போகிறது. இருப்பினும், இதில் கூறப்படும் தகவல்கள் பெரிதும் ஆதாரபூர்வமாக உள்ளன. பிருதிவிராஜ ராசோவோ மிகவும் பிந்திய காலத்தைச் சேர்ந்தது. பிருதிவிராஜரின் வாழ்க்கையைப்பற்றி முழுமையாக இந் நூல் விவரிக்கிறது என்றாலும், ஆதாரமற்ற பல தகவல்கள் அதில் காணப்படுகின்றன. பிருதிவிராஜ விஜயத்தை எழுதியவர் ஜெயானகர் என்பதையும் பிருதிவிராஜ ராசோவின் ஆசிரியர்

சந்த் பர்தாய் என்பதையும் ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ளோம். இவ்விரு நூல்கள் மட்டுமின்றி, மெருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி, நயசந்திரசூரியின் ஹம்மீர மகாகாவியம் ஆகியவையும் பல செய்திகளை நமக்குத் தருகின்றன. இவையும் காலத்தால் சற்றுப் பிந்திய நூல்களே. பிருதிவிராஜ விஜயமும் லக்ஷ்மீரதர் எழுதிய 'விருத்தவிதி வித்வம்சம்' என்ற நூலுமே பிருதிவிராஜரது காலத்தைச் சேர்ந்தவை. ஹசன் நிசாமி எழுதிய தாஜுல்-மஆசிரும், மின் ஹாஜுத்தீன் எழுதிய தபகாத்-தெ-நாசிரி என்ற நூலும் இஸ்லாமிய சான்றுகளில் மிகவும் முக்கியமானவை. இஸ்லாமிய சான்றுகளை ஆதாரமாக வைத்து ஃபெரிஷ்தா 'தாரிக்கெ-ஃபெரிஷ்தா' என்ற ஒரு நூலை எழுதினர். நிசாமுதீன் அஹமத் எழுதிய தபகாத்-தெ-அக்பரி[1] என்ற பிற்காலத்து நூலும் பிருதிவிராஜருக்கும் கோரி முகம்மதுவுக்குமிடையிலான போர்களைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆட்சியின் துவக்கம்

பிருதிவிராஜரது ஆட்சியின் ஆரம்பக் கட்டம் பற்றிய தகவல்களுக்கு இந்திய நூல்களையே நாம் நம்பியிருக்க வேண்டியுள்ளது. பிருதிவிராஜர் கி.பி. 1166-ல் பிறந்தார் என்று பிருதிவிராஜ விஜயம் குறிப்பிடுகிறது. ஆனால், சில வேறு சான்றுகள் இச்செய்தி தவறுயிருக்கலாமென்பதைப் புலப்படுத்துகின்றன. கி.பி. 1177-ல் பிருதிவிராஜர் அரியணை ஏறியபொழுது உரிய வயதை அடையாதிருந்தார் என்பதை முன்பே பார்த்தோம். அப்பொழுது அவரது தாயான கற்பூரதேவியும் அமைச்சரான கடம்பவாசரும் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். பின்னர், கற்பூரதேவி புவனைக்கமல்லர் (Bhuvanaikamalla) என்பாரைப் படைத்தளபதியாக்கினுர். இவர் திரிபுரிக் கலச்சூரி வம்சத்தைச் சேர்ந்தவராகவும் கற்பூரதேவிக்கு உறவினராகவும் இருந்தார். ஓராண்டுக் காலமே கற்பூரதேவி நிர்வாகத்தை நடத்தினுர். நாகர்கள் என்பாருடன் புவனைக்கமல்லர் போரிட்டு அவர்களை அழித்தொழித்தாரெனச் சொல்லப்படுகிறது. இவர்கள் யாவர் என்பது புலப்படவில்லை. கற்பூரதேவியின் ஓராண்டுக்கால நிர்வாகத்தின்கீழ் அஜயமேரு நகரம் தோட்டங்களும் துரவுகளும் நிறைந்து அழகுபடுத்தப்பட்டது. கி.பி. 1178-ல் பிருதிவிராஜர்

[1] Hasan Nizami, *Taj-ul-Maasir* ; Minhajuddin, *Tabaqat-i-Nasiri* ; Ferishta, *Tarikh-i Ferishta* ; Nizamuddin Ahmad, *Tabaqat-i-Akbari* இந்நூல்கள், நூலாசிரியர்கள்பற்றிய விவரங்களுக்கும், இந்நூல்களிலிருந்து சில முக்கிய பகுதிகளுக்கும் பார்க்க : Elliot and Dowson, *The History of India as told by its own Historians.*

ஆட்சிப் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். அப்படியானல், அவர் கி.பி. 1166-க்கு முன்பே பிறந்திருக்க வேண்டும். சுமார் பதினைந்து அல்லது பதினறு வயதாவது ஆகாமல் அவர் ஆட்சிப் பொறுப்பைத் தாமே மேற்கொண்டு நிர்வாகத்தை நடத்தியிருக்க முடியாது.

கி.பி. 1170-ல் அல்லது அதற்குச் சற்று முன்பு சோமேசுவரர் குஜராத்திலிருந்து கற்பூரதேவி, பிருதிவிராஜர், ஹரிராஜர் ஆகியோருடன் சாகம்பரிக்குச் சென்ருர். அப்பொழுதே பிருதிவிராஜருக்குக் கல்வியறிவும் போர்ப் பயிற்சியும் ஓரளவு ஊட்டப் பட்டிருந்தன. எனவே, ஐந்துக்குக் குறைவான வயதுள்ளவராக அவர் கி.பி. 1170-ல் இருந்திருக்க முடியாது. ஆயினும், இன்றுள்ள சான்றுகளை வைத்து அவர் பிறந்த ஆண்டு எதுவென்று திட்டவட்டமாக ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை. பிருதிவிராஜர் பிறந்த நாள், நட்சத்திரம் முதலியவற்றையெல்லாம் பிருதிவிராஜ விஜயம் நமக்குத் தெரிவிக்கின்றது. பிருதிவிராஜரும் அவரது தம்பியான ஹரிராஜரும் பிறந்தபொழுது நான்காம் விக்கிரகராஜர் அரியணையி லிருந்தார் என்பதும் தெளிவாகக் கூறப்படுகின்றது. விக்கிரகராஜரது ஆட்சி கி.பி. 1164 வரையில் நிச்சயம் நடைபெற்றது என்பதை முன்பு பார்த்தோம். விக்கிரகராஜர் மரணமடைந்தபொழுது பிருதிவிராஜருக்கு வயது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் இருந்திருக்க வேண்டும். அவரது பிறந்த ஆண்டைப்பற்றி ஆராய்ந்த டாக்டர் கங்குலி அவர்கள் பிருதிவிராஜர் கி.பி. 1162-க்கும் 1165-க்குமிடையில் பிறந்திருக்கலாமென்று ஒரு கருத்தைத் தெரிவிக்கிருர்.[1] கி.பி. 1178 முதல் 1189 வரையிலான காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுகள் அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றித் தோராயமாக நமக்குத் தெரிவிக்கின்றன.

இவரது படையெடுப்பு

பிருதிவிராஜருக்கிருந்த பல மனைவியருள் ஒருவர் சம்யோஜிதை என்று பிருதிவிராஜ ராசோ தெரிவிக்கின்றது. இப் பெண் கனேஜை ஆண்ட காகதவால அரசர் ஜெயசந்திரரது மகள் என்றும், சுயம்வரத்தின் போது பிருதிவிராஜர் இப் பெண்ணைக் கடத்தி வந்து மணந்து கொண்டார் என்றும் சந்த் பர்தாய் விவரமாகக் குறிப்பிடுகிருர். அவர் கொடுக்கும் விவரங்களும் வர்ணனைகளும் அவரது கதையை நம்ப முடியாவாறு

[1] Dr. D. C. Ganguly, *The Age of Prithviraja III* in 'The Struggle for Empire', Edited by R. C. Majumdar.

செய்கின்றன. பிருதிவிராஜர் சந்தெல்ல அரசின்மீது படையெடுத்து மகோபாவையும் காலிஞ்சரையும் சூறையிட்டதாகச் சந்த் பர்தாய் குறிப்பிடுகிறுர். இவ்விரு ஊர்களிலும் கிடைத்துள்ள கல்வெட்டுகள், ஒருசில மாதங்களிலேயே சாகமானப் படைகள் விலகிச் சென்று சந்தெல்லர்களின் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றதைத் தெரிவிக்கின்றன. கி.பி. 1182-ல் இது நிகழ்ந்தது. அப்பொழுது பரமார்த்தியே சந்தெல்ல அரசராக ஆண்டு கொண்டிருந்தார். சந்தெல்லர்களும் காகதவாலர்களும் நட்புப் பூண்டிருந்தனர் என்பதைச் சந்தெல்லர்களது சாசனங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இப் படையெடுப்பின் போதோ அல்லது அதற்கு முன்னரேயோ சந்தெல்லர்களின் நண்பர்களான காகதவாலர்களுக்கும் பிருதிவிராஜருக்கும் இடையே பகைமை மூண்டிருக்கலாம்.

குஜராத்தும் கோரி முகம்மதும்

கோரி முகம்மது கி.பி. 1178-ல் குஜராத்தின்மீது படையெடுத்து வந்தபொழுது, அவரது தூதன் ஒருவன் அஜ்மீருக்கு வந்தான். இதைப்பற்றித் தெரிவிக்கும் பிருதிவிராஜ விஜயத்தில் இதற்கடுத்த சில ஏடுகள் அழிந்து போய் விட்டமை மிகவும் வருந்தற்குரியன. பிருதிவிராஜர் தமக்கு உதவி புரிய வேண்டுமென்றே, அல்லது நடுநிலை வகிக்க வேண்டுமென்றே அத் தூதனின்மூலமாகக் கோரி முகம்மது கோரிக்கை விடுத்தார் போலும்! கிராடு நகரை அடைந்து அம் முஸ்லிம் அதைக் கொள்ளையிட்ட பின், சௌளுக்கியருக்குக் கட்டுப்பட்டிருந்த நத்துலத்தைச் சேர்ந்த சாகமான அரசின்மீதும் தாக்குதல் தொடுத்தார். நத்துலமும் (நாதோல் நகரம்) முஸ்லிம் படைகளால் கைப்பற்றப்பட்டது. சாகமான அரசு ஒன்று இவ்வாறு தாக்கப்படுவதைக் கண்ட பிருதிவிராஜர் அதன் உதவிக்கு விரைந்து செல்ல விரும்பினுர். ஆனுல், இவரது அமைச்சரான கடம்பவாசர் அதை தடுத்து, கூர்ஜரர்களுக்கெதிராக முஸ்லிம்கள் போரிட்டுத் தமது வலிமையைச் சிதறடித்துக் கொள்ளட்டும் என்று கூறினுராம். அப்பொழுது குஜராத்திலிருந்து ஒரு தூதன் வந்து முஸ்லிம் படையெடுப்பாளர்களைக் குஜராத்தின் அரசர் அடியோடு முறியடித்துவிட்டார் என்று தெரிவித்தாளும். இரண்டாம் மூலராஜர் அபுக் குன்றின் அடிவாரத்தில் கோரி முகம்மதுவின் படைகளைத் தோற்கடித்து, அவை பின்வாங்கி விலகுமாறு செய்ததே இவ்வாறு பிருதிவிராஜருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனுல் பெருமகிழ்ச்சியடைந்த பிருதிவிராஜர் அத் தூதனுக்கு நிறையப் பரிசுப் பொருள்கள் வழங்கித் திருப்பியனுப்பினுர்.

உரிய நேரத்தில் தகுந்த ஆலோசனை கூறியதற்காகக் கடம்ப வாசரையும் பிருதிவிராஜர் வாயாரப் புகழ்ந்தார்.

குஜராத்மீது பகைமை

குஜராத்தில் இரண்டாம் மூலராஜருக்குப் பின், இரண்டாம் பீமர் அரசரானார். அவரது காலத்தில் பிருதிவிராஜருக்கெதிராகப் பகைமை ஏற்பட்டது. நத்துலத்துச் சாகமானர்கள், அற்புதமண்டலத்துப் பரமாரர்கள் ஆகியோரைத் தமது சிற்றரசர்களாகக் கொண்டு பிருதிவிராஜரது சாகமான அரசின் பக்கம் தமது ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றனர். சௌளுக்கியர்கள் அல்லது பிருதிவிராஜர் குஜராத்தை நோக்கித் தமது அரசை விரிவுபடுத்த முயன்றிருக்கலாம். எவ்வாறே பகை முற்றி, கி.பி. 1186ஆம் ஆண்டு வாக்கில் பிருதிவிராஜர் குஜராத்தின் மீது தாக்குதல் தொடுத்தார். இரண்டாம் பீமரது அமைச்சரான ஜகதேவ பிரதிகாரர் என்பவரும் அற்புதமண்டலத்துத் தாராவர்ஷரும் சௌளுக்கியப் படைக்குத் தலைமை தாங்கினர். இவ்விருவருமே பிருதிவிராஜரைத் தோற்கடித்தனரென்று கூறப்படுகிறது. சாகமானப் படைகளும் பகைவர்களைப் பல இடங்களில் தோற்கடித்தன போலும்! இறுதியில், பீமருக்கும் பிருதிவிராஜருக்குமிடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று. இப் போரின்மூலமாகவும் பிருதிவிராஜருக்கு ஒரு பிரதேசமேனும் கிடைக்கவில்லை.

இவரது அரசின் நிலை

போர்களினால் புதிதாக எப் பிரதேசமும் பிருதிவிராஜருக்குக் கிடைக்கவில்லையாயினும், அவரது அரசு மிகவும் விரிவுள்ளதாக இருந்தது. வடமேற்கில் மேற்குப் பஞ்சாப், வடக்கில் சிவாலிக் மலைகள், மேற்கில் நாதோல் சாகமான அரசு, தெற்கில் மேடபாடத்துக் குகில அரசு, கிழக்கில் குவாலியர்ப் பகுதியில் இருந்த கச்சபகாட அரசு, காகதவால அரசு ஆகியவை பிருதிவிராஜரின் எல்லைகளாக இருந்தன. வடமேற்கில் யமீனி வம்சத்துக் கடைசி அரசரான குஸ்ராவ் மாலிக் கி.பி. 1186-ல் கோரி முகம்மதுவால் தோற்கடிக்கப்பட்டு, மேற்குப் பஞ்சாபானது கோரி அரசின் ஒரு பகுதியாக ஆயிற்று. எனவே, 1186 முதல் கோரி முகம்மதுவும் பிருதிவிராஜரும் அடுத்தடுத்த அண்டை அரசர்களாகி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போருக்கு வழியேற்பட்டது.

பிருதிவிராஜருக்குக் கடம்பவாசர், புவனைக்கமல்லர் ஆகியோர் மட்டுமின்றி, சோதர் (Sodha) என்பாரும் போர் அமைச்சரா

யிருந்தார். இவரது இரு பிள்ளைகளான ஸ்கந்தர், வாமனர் ஆகியோரும் அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும் இருந்தனர். சோமேசுவரர், வங்காளத்தைச் சேர்ந்த உதய ராஜர் ஆகியோரும் இவரது முக்கிய அதிகாரிகளாக இருந்தனர். பிருதிவிராஜ விஜயத்தை எழுதிய கவிஞராகிய ஜெயானகர் காஷ்மீரத்திலிருந்து வந்து, பிருதிவிராஜரது ஆதரவின் கீழ் வாழ்ந்தார். (பிருதிவிராஜ விஜயத்தின் ஆசிரியர் ஜெயானகர் அல்லர் என்றும், அவரது உண்மையான பெயர் தெரியவில்லை யென்றும் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர் என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.) சமணப் பெரியாரான ஆசாதரர் என்பார் சில ஆண்டுகள் சாகம்பரியில் வாழ்ந்து பல நூல்களை எழுதினர். பிருதிவிபட்டர் என்பவர் பிருதிவிராஜரின் ஆஸ்தானப் புலவராயிருந்தார். வித்யாபதி கௌடர், வாகீஸ்வர ஜனர்த் தனர் ஆகிய புலவர்களும் பிருதிவிராஜரின் அவைக்கு வந்து பரிசுகள் பெற்றுச் சென்றனர். இம் மன்னரது வெள்ளி, தங்க நாணயங்கள் பலவும் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

கோரி முகம்மதுவின் படையெடுப்பு

கோரி முகம்மது என்று பொதுவாக அழைக்கப்படும் முயீசுதீன் முகம்மது அல்லது ஷிகாபுதீன் முகம்மது அபுக் குன்றின் அடிவாரத்தில் கதரகட்டம் என்றவிடத்தில் கி.பி. 1178-ல் சௌளுக்கிய இரண்டாம் மூலராஜரால் தோற்கடிக்கப்பட்டுத் திரும்பிச் சென்றார். இவ் வழியாக வந்து இந்தியாவை வெல்வது முடியாது என்பதை உணர்ந்து, பஞ்சாபின் மூலம் படையெடுப்பதற்கு அவர் தீர்மானித்தார். கசினியைச் சேர்ந்த யமீனி வம்சத்துக் குஸ்ராவ் மாலிக்கைக் கி.பி. 1186-ல் பஞ்சாபில் முற்றிலுமாகத் தோற்கடித்து, மேற்குப் பஞ்சாப் முழுவதையும் கோரி முகம்மது கவர்ந்து கொண்டார். இதன் பின்னர்க் கிழக்குப் பஞ்சாபையும் கங்கை-யமுனை இடை நிலத்தையும் பிருதிவிராஜரிடமிருந்து கைப்பற்றமல் இந்தியாவை வெல்வது முடியாது என்பதை அவர் உணர்ந்தார். பிருதிவிராஜரும் கோரி முகம்மதுவின் திட்டங்களை அறிந்தே இருந்தார். முகம்மதுவின் படைகள் பஞ்சாபில் சாகமானரது பிரதேசத்துக்குள் ஊடுருவல்களை அடிக்கடி நிகழ்த்தலாயின. இரு தரப்பினரும் போரை எதிர்நோக்கி ஆயத்தங்களைச் செய்யலாயினர்.

கி.பி. 1190-1191-ல் முயீசுதீன் முகம்மது பெரும் படையொன்றைத் திரட்டிக் கொணர்ந்து தபர் ஹிந்தாக் (Tabarhindah) கோட்டையைக் கைப்பற்றினர். பிருதிவிராஜரது அரசுக்குள் இருந்த இக் கோட்டை எது என்பதுபற்றித் தபகாத்-தெ-நாசிரி

நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்த ரேவர்டி (H. G. Raverty) அவர்கள் தபர் ஹிந்தா என்பது பாட்டியாலா சமஸ்தானப் பகுதியிலுள்ள சர்ஹிந்தே (Sirhind) என்று கூறினார். தபர் ஹிந்தா என்பது அதே சமஸ்தானத்திலுள்ள பாட்டிண்டாவே (Bhatinda) என்றும் வேறு சிலர் கருதுகின்றனர். அக் கோட்டையைக் கைப்பற்றிய பின், மாலிக் சியாவுதீன் (Malik Ziauddin) என்ற படைத்தலைவரை 1200 குதிரை வீரர்களோடு அங்கு நிறுத்திவிட்டு, கோரி முகம்மது கசினிக்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமானார். இக் கோட்டை பிடிபட்ட செய்தியானது சாகமான அரசருக்கும் ஏனைச் சிற்றரசர்களுக்கும் தெரிய வந்தது. டெல்லியில் ஆளுநராக இருந்த கோவிந்தராஜரது மகன் சந்திரராஜர் இச் செய்தியைத் தெரிவிப்பதற்கென்றே அஜ்மீருக்கு விரைந்தார். ஷிகாபுதீன் என்ற இஸ்லாமியர் பல நகரங்களைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கிவிட்டுப் பெருத்த நாசத்தை விளைத்துவிட்டதாகவும், ஆயிரக்கணக்கான ராஜபுத்திரக் குடும்பங்கள் அப் பகுதியிலிருந்து ஓடி விட்டதாகவும் சந்திரராஜர் தெரிவித்தார். உடனே பிருதிவிராஜர் இரண்டு லட்சம் குதிரை வீரர்களுடனும், மூவாயிரம் யானைகளுடனும் போருக்குப் புறப்பட்டார் என்று ஹம்மீர மகாகாவியம் தெரிவிக்கிறது. டெல்லியின் ஆளுநர் கோவிந்தராஜர் போன்ற சிற்றரசர்கள் பலரும் தமது படைகளோடு வந்து பிருதிவிராஜருடன் சேர்ந்து கொண்டனர்.[1]

முதலாவது தரைன் போர்

கசினிக்குத் திரும்புவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த முயீசுதீன் முகம்மது இச் செய்திகளையெல்லாம் அறிந்தார். உடனே அவர் தம் படைகளைத் திரட்டிக் கொண்டு பிருதிவிராஜரை எதிர்ப்பதற்குப் புறப்பட்டார். டெல்லிக்கு எண்பது மைல் தொலைவிலும் தானேசுவரத்துக்குப் பதினான்கு மைல் தொலைவிலுமிருந்த தரைன் (Tarain) என்றவிடத்தில் இரு சேனைகளும் சந்தித்தன. முஸ்லிம் படைகளின் பல அணிகள் தோற்றுப் போர்க்களத்தை விட்டு ஓடலாயின. அந் நிலையிலும் முயீசுதீன் வாளை உருவி ஏந்திப் பிடித்துப் பகைவர்களை நோக்கி வந்தார். அதைக் கண்ட கோவிந்தராஜர் தாம் வீற்றிருந்த யானையுடன் அவரை நோக்கி விரைந்தார். முயீசுதீன் ஓர் ஈட்டியை அவர்மீது எறிந்தபொழுது, கோவிந்தராஜரின் வாயில் அது குத்தி, முன் பற்கள் இரண்டை உடைத்துவிட்டது. கோவிந்தராஜர் பதிலுக்கு எறிந்த ஈட்டியானது கோரி முகம்மது

[1] Sir Wolseley Haig, *Cambridge History of India*, Vol. III.

வின் புஜத்தில் தைத்துப் பெருங் காயத்தை ஏற்படுத்திற்று. குதிரையிலிருந்து கீழேவிழ இருந்த முகம்மதுவைக் கில்ஜிப் போர் வீரன் ஒருவன் அவரது குதிரைமீது ஏறிப் பிடித்துக் கொண்டு, போர்க் களத்திலிருந்து வெளியே கொண்டு வந்தான். தலைவனைக் காணுத முஸ்லிம் படைகள் கலவரமுற்றுச் சிதறி ஓடின. இச் செய்திகளை மின்ஹாஜுத்தீனும் ஃபெரிஷ்தா போன்ருேரும் தெரிவிக்கின்றனர்.[1] ஷிகாபுதீன் போரில் சிறைப்பிடிக்கப் பட்டாரென்றும், பின்னர்ப் பிருதிவிராஜரால் விடுதலை செய்யப் பட்டார் என்றும் ஹம்மீர மகா காவியம் தெரிவிக்கும் செய்தி சரியானதன்று என்று அனைத்து அறிஞர்களும் கருதுகின்றனர்.

இந்த வெற்றிக்குப் பின்னர், பிருதிவிராஜர் முன்னேறிச் சென்று தபர் ஹிந்தாக் கோட்டையை முற்றுகையிட்டார். பதின்மூன்று மாதம் கோட்டைக்குள்ளிருந்து போரிட்ட பின், முஸ்லிம் படையானது தனது தளபதி மாலிக் சியாவுதீனுடன் பிருதிவிராஜரிடம் சரணடைந்தது. இவ்வாறு தமது பகுதிகள் முழுவதையும் மீட்டுக் கொண்ட பின், பிருதிவிராஜர் அஜ்மீருக்குத் திரும்பினுர்.

இரண்டாம் தரைன் போர்

முயீசுதீன் முகம்மது கசினிக்குத் திரும்பிச் சென்று, ஒரு லட்சத்து இருபதாயிரம் ஆட்களைக் கொண்ட ஒரு பெரும் சேனையோடு கி.பி. 1192-ல் திரும்பி வந்தார். அவரது படையமைப்பைப்பற்றி அவரது காலத்தைச் சேர்ந்தவரான மின் ஹாஜுத்தீன் மிகவும் விவரமாக வருணிக்கிருர். முயீசுதீன் லாகூரை அடைந்ததும், ருக்னுதீன் ஹம்சா (Ruknuddin Hamzah) என்பவரை அஜ்மீருக்குத் தூதனுப்பினுர். இஸ்லாமியச் சமயத்தைத் தழுவி, முயீசுதீனின் ஆதிக்கத்தைப் பிருதிவிராஜர் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதே இத் தூதர் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கையாகும். பிருதிவிராஜர் இதை நிராகரித்து, மூன்று லட்சம் குதிரைவீரர்கள், மூவாயிரம் யானைகள், எண்ணற்ற காலாட் படைகள் ஆகியவற்றுடன் போரெழுந்து சென்ருர். இங்குத் தரப்படும் எண்ணிக்கைகள் மிகைபட்டவை என்பதில் ஐயமில்லை. எனினும், ஹசன் நிசாமியே இந்தத் தகவல்களை நமக்குத் தருகிருர். நூற்றைம்பது சிற்றரசர்களும் அவருடன் சேர்ந்து போருக்குச் சென்றனராம். முன்பு தாமடைந்த வெற்றியால் மிகுந்த நம்பிக்கையுடையவராகப் போதிய ஏற்பாடுகள்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol. II; Habib and Nizami, *A Comprehensive History of India*, Vol. V—The Delhi Sultanate.

இல்லாமலே பிருதிவிராஜர் போருக்குச் சென்ருர் என்று ஹம்மீர மகா காவியம் குறிப்பிடுகிறது. முன்பு பிருதிவிராஜரது படைகளுக்குத் தலைமை தாங்கிய ஸ்கந்தர் என்ற தளபதி வேறெங்கோ போரிட்டுக் கொண்டிருந்த காரணத்தால், இப் பொழுது தரைனுக்கு அவரால் வரமுடியவில்லை. உதயராஜர் என்ற மற்ருெரு தளபதி அஜ்மீரைவிட்டுப் புறப்படுவதில் தாமத மேற்பட்டது. டெல்லி ஆளுநர் கோவிந்தராஜர் வழியில் பிருதிவி ராஜரோடு சேர்ந்து கொண்டார்.

இவ்வாறு பிருதிவிராஜரது பெருஞ் சேனை தரைன் போர்க் களத்தை அடைந்தது. முயீசுதீன் மறுபடியும் தபர் ஹிந் தாவைக் கைப்பற்றிய பின், தாமும் தரைனை அடைந்தார். தபர் ஹிந்தாவோடு திருப்தியடைந்துவிட்டுத் திரும்பிச் செல்லு மாறு கோரி முகம்மதுவுக்குப் பிருதிவிராஜர் கடிதமொன்றை அனுப்பினுராம். தம் அண்ணனின் அனுமதியின்றித் தம்மால் திரும்பிச்செல்ல முடியாதென்றும், அந்த அண்ணனிடமிருந்து பதில் வரும் வரையில் பிருதிவிராஜர் பொறுமையுடன் இருக்க வேண்டுமென்றும் முயீசுதீன் பதிலனுப்பியதாகச் சொல்லப்படு கிறது. இதை நம்பிப் பிருதிவிராஜர் தாக்குதல் தொடுக்காமல் வாளா இருந்தார். முகம்மதுவோ, போருக்குத் தயாராயில்லாத சாகமானப் படைகளின்மீது திடீரென்று தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டார். ஒரு நள்ளிரவில் இடையிலிருந்த நதி ஒன்றினை முஸ்லிம் படைகள் கடந்து, சாகமானப் படைக்குப் பின்புறமாகச் சென்று, பொழுது புலரும் வேளையில் திடீர்த்தாக்குதல் தொடுத் தன. பிருதிவிராஜர் மிகுந்த திறமையோடு இத் தாக்குதலை முறியடித்தார். ஆயினும், மனந்தளராத முகம்மது தம்முடைய படைகளை ஐந்து பிரிவாகப் பிரித்து, இடைவிடாமல் சாகமானர் களைத் தாக்கினுர். பிற்பகலில் சாகமானர்கள் களைத்துப் போயி னர். மாலையில் முகம்மது தொடுத்த மற்ருெரு மிகப் பெரிய தாக்குதலைத் தாங்க முடியாமல் சாகமானர்கள் நிலைகுலைந்தனர். ஒரு லட்சம் பேர் பிருதிவிராஜரின் தரப்பில் கொல்லப்பட்டனர். கோவிந்தராஜரும் போரில் கொல்லப்பட்டு வீழ்ந்தார். முதல் தரைன் போரில் அவர் இரண்டு பற்களை இழந்து விட்டிருந்ததை அடையாளம் வைத்து, அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

தோல்விக்குப் பின், யானையிலிருந்து இறங்கிக் குதிரை மீதேறி, போர்க்களத்திலிருந்து பிருதிவிராஜர் தப்பித்து ஓடினுர் என்று முஸ்லிம் நூலாசிரியர்கள் பலரும் கூறுகின்றனர். வழியில் முஸ்லிம் குதிரைவீரர்கள் அவரை விரட்டிச் சென்று பிடித்தனர். இதன் பின்னர், முஸ்லிம் படைகள் ஹான்சி,

சுர்சுதி (Sursuti), குஹ்ரம் (Guhram), சாமனு (Samana) ஆகிய நகரங்களைக் கைப்பற்றி, அஜ்மீரையும் தாக்கிப் பிடித்தன. பிருதிவிராஜர் தமது தலைநகருக்குக் கைதியாகத் திரும்பினுர். ஆனுல், அங்கே சுல்தான் முகம்மதுவுக்கு எதிராக அவர் சதி களில் ஈடுபட்டாரென்றும், இந்த விஷயம் கண்டுபிடிக்கப்பட்ட பின், அவர் சிரச்சேதம் செய்யப்பட்டா ரென்றும் மின்ஹாஜ், ஹசன் நிசாமி முதலியோர் கூறுகின்றனர். பிரபந்த சிந்தாமணி போன்ற நூல்களும் அஜ்மீரிலேயே பிருதிவிராஜர் கொலை செய் யப்பட்டார் என்று தெரிவிப்பதால், முஸ்லிம் நூலாசிரியர்களின் சான்றை அவை மெய்ப்பிக்கின்றன. பிருதிவிராஜர் சோமேசு வரர் என்ற அமைச்சர் இழைத்த துரோகத்தாலேயே தோல்வி யுற்ருர் என்றும், படை முகாமில் அவர் உறங்கிக் கொண்டிருந்த பொழுது திடீரென முஸ்லிம் எதிரிகள் அவரைத் தாக்கிக் கைது செய்தனர் என்றும் பிரபந்த சிந்தாமணி கூறுவது உண்மை யன்று என்று தெரிகிறது.

மதிப்புரை

பிருதிவிராஜரின் இத் தோல்வி சாகம்பரிச் சாகமானர்களுக்கு மரண அடியாக விழுந்தது. பிருதிவிராஜர் தோல்வியுற்ருலும் கூட, அவரொரு பெரிய வீரர் என்பதை நாம் மறுக்க முடியாது. வழக்கமான இந்தியப் போர்முறையைப் பின்பற்றி, முதல் தரைன் போரில் தோற்ருேடிய பகைவர்களைத் தொடர்ந்து விரட்டிச் சென்று அவர்களை நிர்மூலமாக்கப் பிருதிவிராஜர் தவறி விட்டார். மீண்டும் கோரி முகம்மது மறுமுறையும் படை யெடுத்து வருவார் என்பதை எதிர்பார்த்துப் பஞ்சாபிலேயே காத்திராமல், அவர் அஜ்மீருக்குத் திரும்பி வந்ததும் தவருகும். இருப்பினும், அக் காலத்திய வடஇந்திய அரசர்களுள் அனைத்து வகையிலும் சிறந்தவர் பிருதிவிராஜரே என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் படைகள் சாகம்பரிக்குள் நுழைந்ததுமே குறுநில மன்னர்களும், அதிகாரிகளும், வேறு பலரும் அச்சமுற்று ஊர்களை விட்டு ஓடினர். ஷிகாபுதீனின் வருகைக்குப் பின், குடும்பத் துடன் தாமேகூடச் சாகம்பரியைவிட்டு மாளவத்துக்குக் குடி பெயர்ந்து சென்றதாகச் சமண ஆசாரியரான ஆசாதரரே எழுதியுள்ளார். இவ்வாறு சாகமான அரசு முக்கியமான தலைவர்களின் ஓட்டங் காரணமாக மேலும் நிலைகுலைந்தது.

ஹரிராஜர்

அஜ்மீரில் பிருதிவிராஜரின் பிள்ளை ஒருவரை அரசராக்கி விட்டு, சுல்தான் முயீசுதீன் டெல்லியைக் கைப்பற்றினுர்.

டெல்லியில் முஸ்லிம் படையொன்று நிறுத்தப்பட்டது. கோவிந்தராஜரது மகனும் அதிகாரிகளும் முயீசுதீனுக்குத் திறை செலுத்தி ஆண்டுவர இணங்கினர். இதன் பின்னர், குஹ்ரம் கோட்டையில் பெரும் படையொன்றுடன் குத்புதீன் அய்பக்கை இருக்குமாறு செய்துவிட்டு, சுல்தான் முகம்மது கசினிக்குத் திரும்பினார். குத்புதீனே இந்தியாவிலிருந்த அனைத்து முஸ்லிம் பிரதேசங்களுக்கும் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பிருதிவிராஜரது மரணத்துக்குப் பின் அவரது மகன் ஒருவரை முயீசுதீன் முகம்மது அரசராக்கினாரென்று ஹசன் நிசாமி தெரிவிக்கிறார். ஹம்மீர மகா காவியம் போன்ற நூல்களோ, பிருதிவிராஜரின் தம்பியான ஹரிராஜரே தளபதி ஸ்கந்தரது உதவியோடு சாகம்பரியில் அரசரானார் என்று கூறுகின்றன. இங்குள்ள உண்மையை நம்மால் ஓரளவு ஊகித்தறிய முடிகின்றது. முயீசுதீன் முகம்மது பிருதிவிராஜரின் மகன் ஒருவரையே உண்மையில் அரசனாக்கினார் என்பதை நாம் நம்ப வேண்டியுள்ளது. அவ்வாறு அரசராக்கப்பட்ட சிறுவனின் பெயர் கோவிந்தராஜர் என்பதாக இருக்கக் கூடும். 1177-ல் பிருதிவிராஜர் பதினைந்து அல்லது பதினாறே வயதுடையவராக இருந்ததால், 1192-ல் அவரது மகனும் உரிய வயதை அடையாதவனாகவே இருந்திருக்க வேண்டும். சமகாலத்து ஆசிரியரான ஹசன் நிசாமியின் தெளிவான கூற்றுகளை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான காரணம் ஒன்றுமில்லை. சிறிது காலத்திற்குப் பின்னர், பிருதிவிராஜரின் தம்பியான ஹிராஜ் (ஹரிராஜரே இவ்வாறு குறிப்பிடப்படுகிறார்.) கிளர்ச்சி செய்து, தம் அண்ணன் மகனை விரட்டிவிட்டு, தளபதி ஸ்கந்தரது உதவியோடு தம்மையே அரசராக்கிக் கொண்டிருக்க வேண்டும். ஹிராஜின் கிளர்ச்சிபற்றிய செய்தி குத்புதீனுக்கு வந்தது என்பதை ஹசன் நிசாமியின் நூல் தெரிவிக்கின்றது. கி.பி. 1194-ல் ஹரிராஜர் ஆட்சியில் இருந்தார் என்பதை அஜ்மீரிலுள்ள ஒரு கல்வெட்டுத் தெளிவாக்குகிறது. அரியணையில் அமர்ந்தவுடனேயே முஸ்லிம்களுக்கு எதிராக அவர் போர்க் கொடி உயர்த்தியிருக்கக் கூடும். அதனால் குத்புதீன் அய்பக் அவர்மீது உடனே படையெடுத்துச் சென்றார். வெற்றியில் நம்பிக்கை இழந்துபோன ஹரிராஜர் பகைவரிடம் சரணடைய விரும்பாமல், கோட்டைக்குள் தீமூட்டித் தம் குடும்பத்தினர் அனைவருடனும் அதில் வீழ்ந்து இறந்தார்.

முடிவு

ஹரிராஜருக்கு ஆண்வாரிசு இல்லை. அவரது உற்றாரும் உறவினரும் அஜ்மீரைவிட்டு ஓடி ராந்தம்பாருக்குச் (Ranthambhor)

சென்று, அதை ஆண்டுகொண்டிருந்த கோவிந்தராஜரிடம் அடைக்கலம் புகுந்தனர். எதிர்ப்பார் யாருமின்றி, அஜ்மீர் நகரம் குத்புதீனின் படைகளால் கைப்பற்றப்பட்டது. அங்குச் சிறிது காலம் தங்கியிருந்த பின், முஸ்லிம் ஆளுநர் ஒருவரை நியமித்துவிட்டுக் குத்புதீன் அய்பக் டெல்லி திரும்பினார். சாகம்பரிச் சாகமான அரசு இவ்வாறு கி.பி. 1194 அல்லது 1195-ல் முடிவுக்கு வந்தது.[1]

2. நத்துலத்துச் சாகமான அரசு

லக்ஷ்மணர்

நத்துலம் (Naddula) என்பது இன்று நாதோல் என்ற பெயரில் ராஜஸ்தானத்தில் ஜோத்பூர் மாவட்டத்திலுள்ளது. நத்வலபுரம், நதூலபுரம் என்றும்கூட இது அழைக்கப்பட்டது. இந்த வம்சத்தைப்பற்றி விரிவாக ஆராய்ச்சிகள் நிகழ்த்தி முறைப்படியான வரலாறு ஒன்றினைக் கீல்ஹார்ன் அவர்களும், D. R. பந்தர்கார் அவர்களும் வரைந்தனர்.[2] இந்தச் சாகமான வம்சத்து அரசகுமாரரான (ராஜபுத்திர) கீர்த்திபாலர் என்பாரது செப்பேடு ஒன்று நாதோலில் கிடைத்தது. சாகம்பரியைச் சேர்ந்த முதலாம் வாக்பதிராஜரது மகன் லக்ஷ்மணரே இந்த வம்சத்தை நிறுவியவர் என்று அச் செப்பேட்டினால் அறிந்து கொள்கிறோம். ஏதோ காரணத்தினால் லக்ஷ்மணர் அவருடைய தந்தையின் காலத்திலோ அல்லது அண்ணன் சிம்மராஜரின் காலத்திலோ தனியாக அரச வம்சமொன்றை நத்துலத்தில் நிறுவினார். முதலாம் வாக்பதிராஜரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியாகும். கீர்த்திபாலரது நாதோல் செப்பேட்டில் விக்கிரம அப்தம் 1218ஆம் ஆண்டு குறிப்பிடப்படுகிறது; கிறிஸ்து அப்தம் கி.பி. 1161-க்குச் சமமானது இது. எனவே, கீர்த்திபாலருக்குப் பத்துத் தலைமுறைகளுக்கு முந்திய லக்ஷ்மணரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியே என்று நாம் கொள்ளலாம். நாதோல் நகரில் உள்ள லக்ஷ்மணரது கல்வெட்டுகள் இரண்டு அந் நகரையும் அதன் கோட்டையையும் நிறுவியவர் லக்ஷ்மணரே என்பதை ஐயத்துக்கிடமின்றிப் புலப்படுத்துகின்றன. நாதோல் கோட்டையானது லக்ஷ்மணர்க் கோட்டை என்றே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும்

[1] Dr. H. C. Ray, *The Dynastic History of Northern India*; Dr. D. C. Ganguly, *The Age of Prithviraja III*, cited earlier.

[2] Epigraphica Indica, Vols. IX and XI.—See Kielhorn's article on 'Chahamanas of Naddula' in Vol. IX and D. R. Bhanderkar's on 'Chahamanas of Marwar' in Vol. XI.

வழங்கப்பட்டது என்பதைக் கர்னல் டாட் கண்டு வியப்புற்ருர். லக்ஷ்மணரது கல்வெட்டுகள் இரண்டும் கி.பி. 967, கி.பி. 982 ஆகிய ஆண்டுகளில் பொறிக்கப்பட்டவை.

அடுத்த அரசர்கள்

லக்ஷ்மணருக்குப் பின் சோபிதர் (Sobhita) என்பவர் அரசரானுர். இவருக்கு 'சோஹிதர்' என்றும் பெயர் இருந்தது. இவர் தமக்குத் தெற்கிலான அபுக் குன்றை ஆண்டு வந்த பரமார அரசர் ஒருவரைத் தோற்கடித்தார். சோபிதர் மகனுன பலிராஜர் (Baliraja) காலத்தில் மாளவத்துப் பரமார அரசர் முஞ்சர் அபுவைக் கைப்பற்றினுர். பரமாரர்களது சாசனங்கள் இதைத் தெளிவாக நமக்கு உணர்த்துகின்றன. முஞ்சரது மகனுன ஆரண்யராஜர் அபுவில் சிறிது காலம் ஆளுநராயிருந்தார். நத்துலத்தைக் கைப்பற்றுவதற்காக வாக்பதி முஞ்சர் செய்த முயற்சியானது வெற்றி பெறவில்லை. இதனுலேயே முஞ்சரைத் தாம் தோற்கடித்ததாகப் பலிராஜர் கூறிக் கொள்கிருர். பலிராஜருக்குப் பிள்ளையில்லாததாலோ அல்லது வேறு காரணத்திஞலோ அவரது சிற்றப்பரான (சோபிதரின் தம்பியான) விக்கிரகபாலரது மகன் மகேந்திரர் நத்துலத்தில் அடுத்த அரசரானுர். மகேந்து என்றும் இவரைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இவரது காலத்தில் ஏதோ காரணத்திஞல் சாகம்பரிச் சாகமானர்கள்மீது பகைமை தோன்றிற்று. சாகம்பரி அரசர் துர்லபர் நாதோல்மீது படையெடுத்து வந்தார். (இந்தத் துர்லபர் குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் துர்லபராஜரே என்று H. C. ரே அவர்கள் குறிப்பிடுகின்ருர்.[1]) மகேந்திரர் தமது நாட்டை விட்டோடி, ஹஸ்திகுண்டியில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ராஷ்டிரகூடத் தவலரிடம் அடைக்கலம் புகுந்தார். விரைவில் இழந்த தம் அரசை மகேந்திரர் மீட்டுக்கொண்டு தொடர்ந்து ஆட்சி புரியலானுர். இவரது இரண்டு பெண்களைச் சௌளுக்கிய அரசர் துர்லபராஜரும் அவரது தம்பி நாகராஜரும் மணந்துகொண்டதாக ஹேமசந்திரரது திவ்யாஸ்ரய மகாகாவியம் குறிப்பிடுகின்றது.

அசுவபாலர், அணகிலர்

மகேந்திரருக்கு அசுவபாலர், அணகிலர் எனும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவரான அசுவபாலரே அடுத்த அரசரானுர். ஆசலர் என்றும் இவர் அழைக்கப்பட்டார். ஆசாலேசுவரம் அல்லது ஆசபாலேசுவரம் என்ற சிவாலயம் ஒன்று இவரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவருக்குப் பின்

[1] Dr. H. C. Ray, *The Dynastic History of Northern India.*

இவரது மகனுன அகிலர் அரசரானுர். இவரது காலத்தில் சௌளுக்கியர்மீது பகைமை தோன்றிற்று. சௌளுக்கிய அரசரான முதலாம் பீமர் நத்துலத்தின்மீது படையெடுத்து வந்த போது தோற்கடித்து விரட்டப்பட்டதாக இச் சாகமான வம்சத்தின் கல்வெட்டொன்று (Sundha Hill Inscription) குறிப்பிடுகிறது. அகிலருக்குப் பின் அவரது சிற்றப்பரான அணகிலர் அரசரானுர்.

1. லக்ஷ்மணர்
2. சோபிதர் — விக்கிரகபாலர்
3. பலிராஜர் (2-இன் மகன்) — 4. மகேந்திரர் (விக்கிரகபாலரின் மகன்)
5. அசுவபாலர் — 7. அணகிலர் (4-இன் மக்கள்)
6. அகிலர் (5-இன் மகன்)
8. பாலப் பிரசாதர் — 9. சிந்து ராஜர் (கி.பி. 1075) (7-இன் மக்கள்)

அணகிலர் முதலியோர்

அணகிலர் (அல்லது அணகில்லர்) காலத்தில் சௌளுக்கியர்களுக்கெதிராகப் போர் தொடர்ந்து நடைபெற்றது. அதே சமயத்தில் சாகம்பரிச் சாகமான அரசர் வீரியராமருடனும் இவர் போரிட்டுச் சாகம்பரியைக் கைப்பற்றினுர். மேலும், பரமாரப் பேரரசர் போஜருக்கெதிராகவும் போர் மூண்டது. பரமாரத் தளபதியான சாதர் (Sadha) என்பவர் அணகிலரால் கொல்லப்பட்டார். துருக்ஷர்களை எதிர்த்தும் இவர் போரிட்டார். இந்தத் துருக்ஷர்கள் பஞ்சாபை ஆண்டுவந்த முஸ்லிம்களே. அணகிலேசுவரம் என்ற சிவாலயம் இம் மன்னரால் கட்டப்பட்டது.

அணகிலருக்குப் பின் அவரது மூத்த மகனுன பாலப் பிரசாதர் அரசரானுர். இவரும் சௌளுக்கிய பீமர்மீது போர் தொடுத்து, அவரால் சிறையிடப்பட்டிருந்த அரசர் கிருஷ்ணதேவரை விடுவிக்குமாறு செய்தார். இந்தக் கிருஷ்ணதேவர் அற்புதமண்டலத்தைச் சேர்ந்த அரசரான இரண்டாம்

கிருஷ்ணரே என்று கீல்ஹார்ன் போன்றோர் கருதுகின்றனர்.[1] பாலப்பிரசாதருக்குப் பின் அவரது தம்பியான ஜிந்துராஜர் (Jinduraja) அரியணை ஏறினார். இவர் கி.பி. 1075-ல் ஆண்டு கொண்டிருந்தார் என்பது கல்வெட்டு ஒன்றினால் தெரியவருகிறது. ஜீந்திரபாலர் என்றும் இவர் அழைக்கப்பட்டதாக அக் கல்வெட்டின்மூலம் உணரப்படுகிறது. எவரோ ஓர் அரசரை எதிர்த்து, சந்தேரா என்ற விடத்தில் இவர் போரிட்டு வென்றதாகச் சுந்தாமலைக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. நாதோலுக்கு அருகில் சந்தேராவ் (Sanderao) என்ற பெயருடன் இவ்வூர் இன்றும் உள்ளது. இவருக்குப் பிருதிவிபாலர், ஜோஜலர், ஆசாராஜர் என்னும் மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் மூவரும் ஒருவர் பின் ஒருவராக அரியணை ஏறினர். மூத்த மகனான பிருதிவிபாலரே அடுத்த அரசரானார். சௌளுக்கிய அரசர் கர்ணர் இவர்மீது படையெடுத்துவந்து, தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டார்.

ஜோஜலர்

இவரை யடுத்து அரியணை ஏறிய ஜோஜலர் (அல்லது ஜோஜல்லர்) காலத்திய இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவை யிரண்டுமே இவர் ஓரளவு வல்லமை மிக்க அரசர் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன. 'மகாராஜாதிராஜர்' என்ற பட்டத்தை இவர் பூண்டிருந்தார். இவரும் சௌளுக்கிய அரசரைத் தோற்கடித்ததோடு, அவரது தலைநகரான அணகிலப்பாடகத்தைச் சிறிது காலம் கைப்பற்றி யிருந்தார். இவரது கல்வெட்டுகள் கி.பி. 1090-91-ல் இவர் அரியணையிலிருந்தார் என்பதை அறிவிக்கின்றன. அணகிலப்பாடகத்தைக் கைப்பற்றிய நிகழ்ச்சி எந்த ஆண்டில் நடைபெற்றது என்பது தெரியவில்லை. கி.பி. 1094-க்குப் பின்னரே இது நிகழ்வுற்றிருக்கக்கூடும் என்று கொண்டு, சௌளுக்கிய அரசர் கர்ணருக்குப் பின் அரியணை ஏறிய ஜெயசிம்ம சித்தராஜரது ஆட்சியின் துவக்கத்தில் நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தி ஜோஜலர் அந் நகரைக் கைப்பற்றினாரென்று கருதப்படுகிறது.[2]

ரத்னபாலர், ஆசாராஜர்

ஜோஜல்லருக்குப் பின், அவரது தம்பியான ஆசாராஜர் அரியணை ஏறினார். இவரது மூன்று கல்வெட்டுகள்

[1] Pratipal Bhatia, *The Paramaras.*

[2] A. K. Majumdar, *Chaulukyas of Gujarat.*

கி.பி. 1110 முதல் 1143 வரையில் நிச்சயம் பாலி (Bali) நகரில் இவர் ஆட்சி புரிந்தார் என்பதைத் தெரிவிக்கின்றன. ஜெய சிம்மரது மேலாதிக்கத்துக்கு இவர் கட்டுப்பட்டிருந்தார் என் பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்த ஜெயசிம்மர் சௌளுக்கிய அரசரான ஜெயசிம்ம சித்தராஜரே என்பதில் ஐய மில்லை. ஆசாராஜர் பதவிக்கு வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரது மூத்த அண்ணனை பிருதிவிபாலரது மகன் ரத்னபாலர் கி.பி. 1119ஆம் ஆண்டுவாக்கில் நத்துலத்தில் அரியணையைக் கவர்ந்துகொண்டார் என்பதை ஒரு செப்பேட்டின்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. (ஜோஜல்லருக்குப் பின் ரத்னபாலரே நத்துலத்தில் அரசராகியிருக்கலாமெனவும், ஆசாராஜர் நத்து லத்திலிருந்து ஐம்பது கல் தொலைவிலிருந்த பாலி என்ற நகரில் இருந்துகொண்டு, சுதந்திரமான சிற்றரசர் போல ஆண்டு வந்திருக்கலாமெனவும் கருதுவதற்கும் இடமுள்ளது. ஏனெனில், ஆசாராஜரது மூன்று கல்வெட்டுகளும் பாலி நகரை அடுத்தே கிடைத்துள்ளன. கி.பி. 1119ஆம் ஆண்டைச் சேர்ந்த ரத்ன பாலரது செப்பேடும் பாலியிலிருந்தே கிடைத்துள்ளதாயினும், நத்துலத்தை அவர் ஆண்டு கொண்டிருந்தார் என்பதை அது உரைக்கிறது. இவ் விருவருமே 'மகாராஜாதிராஜர்' என்ற பட் டத்தைச் சூடியிருந்தனர்.)

அடுத்தபடியாக அரசரானவர் ரத்னபாலரது மகனை ராய பாலர். இவரது எட்டுக் கல்வெட்டுகள் இவரது ஆட்சிக் காலம் கி.பி. 1132 முதல் 1145 வரையில் நீடித்தது என்பதைத் தெரி விக்கின்றன. ஆனால், இத்தனை கல்வெட்டுகள் இருந்தும், இவரது ஆட்சி எந்த ஆண்டில் தொடங்கிற்று, எந்த ஆண்டில் முடிவுற்றது என்பது தெரியவில்லை. இவரது ஆட்சியின் போதும் பாலி நகரில் ஆசாராஜர் தொடர்ந்து ஆட்சி புரிந்தார். பரமார அரசர் நரவர்மனுக்கு எதிரான போரில் ஜெயசிம்ம சித்தராஜ ருக்கு ஆசாராஜர் உதவி புரிந்தார். ஆசாராஜரது மகன் கடு தேவர் (Katudeva) என்பவர் கி.பி. 1143-44-இல் நத்துலத்தைக் கவர்ந்து கொண்டார். ஆனால், ராயபாலர் ஒருசில மாதங் களுக்குள்ளேயே அதை மீட்டுக் கொண்டார்.

ஆல்கணதேவர்

சௌளுக்கியர்கள்மீது இதன் பின்னர்க் கடும் பகை வளர்ந் தது. சாகமானர்களுக்கு இடையிலான பூசலைப் பயன்படுத்தி, சௌளுக்கிய அரசர் குமாரபாலர் கி.பி. 1154ஆம் ஆண்டு வாக்கில் நத்துலத்தைக் கைப்பற்றிக்கொண்டார். சௌளுக்கியத்

தண்டநாயகரான வாய்ஜல்லதேவர் என்பவர் நத்துலத்தி லிருந்து வெளியிட்ட பல சாசனங்கள் இதை மெய்ப்படுத்து கின்றன. சுமார் ஆறு ஆண்டு காலம் (கி.பி. 1154-1160) வாய் ஜல்லதேவர் நாதோல்மீது ஆட்சி புரிந்தார். ஆசாராஜரது இரண்டாவது மகனுன ஆல்கணதேவர் ஏற்கெனவே குமாரபால ருக்குக் குற்றேவல் புரிந்து, சௌராஷ்டிரத்தில் அவர் நிகழ்த் திய போர்களில் பங்கெடுத்துக் கொண்டார். இதனுல் மகிழ்ந்த குமாரபாலர் கி.பி. 1150ஆம் ஆண்டு வாக்கிலேயே இவருக்குக் கிராடகூபம் (கிராடு) போன்ற பகுதிகளை அளித்திருந்தார். கி.பி. 1160ஆம் ஆண்டு வாக்கில் நாதோல் அரியணையும் இவ ருக்கே அளிக்கப்பட்டது. ராயபாலரது இரு பிள்ளைகள் வெவ் வேறு பகுதிகளில் குமாரபாலருக்குக் கட்டுப்பட்ட குறுநில மன் னர்களாகச் சிறிது காலம் ஆட்சி புரிந்தனர். அவர்கள் நத்து லத்து அரியணையைப் பெறவே இல்லை. ஆலனதேவர் என்றும் சாசனங்கள் இவரைக் குறிக்கின்றன. இவரது கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைத்துள்ளன. குமாரபாலருக்குக் கட்டுப் பட்டிருந்ததால், மகாராஜர் என்ற எளிய விருதினை மட்டுமே இவர் பூண்டிருந்தார். ஹஸ்திகுண்டியைச் சேர்ந்த ராஷ்டிர கூட அரசகுமாரி அன்னல்லாதேவி என்பவரை இவர் மணந் திருந்தார். இவருக்குக் கெல்கணர், கஜசிம்மர், கீர்த்திபாலர், விஜயசிம்மர் என்னும் நான்கு மகன்கள் இருந்தனர். சாகம்பரிச் சாகமான அரசரான நான்காம் விக்கிரகராஜர் ஆல்கணதேவ ரின் காலத்தில் படையெடுத்து வந்து, நாதோலைச் சூறையிட்டுத் திரும்பினுர்.

கெல்கணர்

ஆல்கணரது மூத்த மகனுன கெல்கணரே (Kelhana) நத்து லத்தில் அடுத்த அரசரானுர். இவரது பல செப்பேடுகளும் கல் வெட்டுகளும் கி.பி. 1163 முதல் 1192 வரையிலான காலத்தைச் சேர்ந்தவை. சௌளுக்கிய அரசர் குமாரபாலருக்கு அடங்கிய அரசராகவே இவர் தமது ஆட்சியைத் துவக்கினுர். கி.பி. 1178ஆம் ஆண்டு வாக்கில் இவர் சௌளுக்கியரின் தளையி லிருந்து விடுபட்டுச் சுதந்திர அரசரானுர். இவரது தம்பியான கீர்த்திபாலர் (கிட்டு என்றும் இவருக்குச் செல்லப் பெயர் இருந் தது.) தம் அண்ணனுக்குப் பெரிதும் துணையாயிருந்தார். தம் தந்தை அல்கணதேவரின் காலத்திலும்கூடக் கீர்த்திபாலர் நிர் வாகத்திலும் போரிலும் பங்குபற்றிச் சிறப்புடன் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதை அவரது (கீர்த்திபாலரது) செப்பேடு ஒன்று தெரிவிக்கின்றது. கெல்கணரின் ஆட்சிக் காலத்தில் கோரி

முகம்மது படையெடுத்து வந்து, கி.பி. 1178-ல் நத்துலத்தைக் கொள்ளையிட்டுத் திரும்பிச் சென்றார். நத்துலத்திலிருந்து குஜ ராத்தை நோக்கிச் சென்ற முஸ்லிம் படைகள் சௌளுக்கிய மன்னரால் முறியடித்து விரட்டப்பட்டன. இதன் பின்னர், கெல்கணரும் கீர்த்திபாலரும் நத்துலத்துக்கு வந்து அமைதியை நிலைநாட்டிய பின் சிறிது காலம் கழித்து, மேவாரைச் சேர்ந்த குகில அரசர் சாமந்தசிம்மரைத் தோற்கடித்தனர். கீர்த்தி பாலரே இப் பெரு வெற்றிக்குக் காரணமா யிருந்தார். சீக்கிரத்தி லேயே சாமந்தசிம்மரின் தம்பியான குமாரசிம்மர் கீர்த்திபால ரின் படைகளை மேவாரிலிருந்து விரட்டியடித்தார். இதன் பின்னர்க் கிராடகூபத்தைச் சேர்ந்த ஆசலர் கீர்த்திபாலரால் தோற்கடிக்கப்பட்டார். ஜாவாலிபுரமும் தோல்வியுற்ற பரமாரர் களிடமிருந்து கீர்த்திபாலரால் கைப்பற்றப்பட்டது. ஜாவாலி புரத்தைக் கைப்பற்றிய பின் கீர்த்திபாலர் அதையாண்ட பரமார வம்சத்துக்கு முடிவுகட்டி விட்டுத் தமது ஆட்சியை அவ்விடத் தில் நிறுவினார். கி.பி. 1180 ஆம் ஆண்டு வாக்கில் இவ்வாறு ஜாவாலிபுரத்தில் சாகமான அரச வம்சமொன்று நிறுவப்பட் டது. கீர்த்திபாலரது மகனான சமரசிம்மர் கி.பி. 1182 முதல் 1185 வரையில் ஜாவாலிபுரத்திலிருந்து வெளியிட்ட கல்வெட்டு கள் கிடைத்துள்ளன. கி.பி. 1187க்குப் பின் தேவகிரியைச் சேர்ந்த யாதவ அரசர் பில்லமர் (Bhillama) கெல்கணருக்கு எதிராகப் படையெடுத்து வந்தார். அப்பொழுது கீர்த்திபாலர் உயிருடன் இல்லை என்பது புலப்படுகிறது. கெல்கணரே யாதவப் படைகளை விரட்டியடித்தார்.

முடிவு

கெல்கணருக்குப்பின் அவர் மகனான ஜெயதாசிகர் (Jayatasiha) என்றழைக்கப்பட்ட ஜெயசிம்மர் அரசரானார். இவர் கி.பி. 1194-க்கு முன்பு அரியணை ஏறியிருக்கலாமென்பதை ஒரு கல் வெட்டுப் புலப்படுத்துகிறது. இவரது ஆட்சிக் காலத்தில், கி.பி. 1197-ல், குத்புதீன் அய்பக் படையெடுத்துவந்து, ஜெயசிம்மரது ஆட்சிக்கு உலைவைத்து விட்டுத் திரும்பினார். என்ன நேர்ந்தது என்பது நமக்கு நன்கு புலப்படவில்லை. மகாராஜ சாமந்தசிம்மர் என்பவரது கல்வெட்டுகள் கி.பி. 1199, 1201 ஆகிய ஆண்டு களில் அவர் பாலி நகரில் ஆண்டு கொண்டிருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றன. இவர் ஜெயசிம்மரது வாரிசா அல்லது அவரைப் பதவியிலிருந்து விரட்டி விட்டு அரியணையைக் கவர்ந்து கொண்டவரா என்பது தெளிவாகவில்லை. இவருக்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னர், கி.பி. 1209-1226-ல், தம்தள

தேவர் (Dhamdala-deva) என்ற ஒரு சாகமான அரசர் சௌளுக்கிய இரண்டாம் பீமரது சிற்றரசராகப் பாலி நகரத்திலிருந்தவாறு ஆட்சிபுரிந்தாரென்று தெரிகிறது. நத்துலத்தில் ஜெயசிம்மரது ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பது புலப்படவேயில்லை. அவரோடு அவ் வம்சத்தின் ஆட்சியும் மறைந்து போயிற்றுப் போலும்! ஜாவாலிபுரத்தைச் சேர்ந்த சாகமான அரசர் உதயசிம்மர் என்பவர் பாலிநகரத்தைக் கைப்பற்றி, அந் நகரை மட்டுமின்றி, நாதோலையுங்கூடத் தமது மேலாதிக்கத்தின்கீழ் வெகு விரைவிலேயே கொண்டுவந்தார்.

வம்சாவளி (தொடர்ச்சி)

9. ஜிந்துராஜர்
- 10. பிருதிவிபாலர்
  - 13. ரத்னபாலர்
    - 14. ராயபாலர்
- 11. ஜோஜல்லர்
- 12. ஆசாராஜர்
  - 15. கடுதேவர்
  - 16. ஆல்கணதேவர்
    - 17. கெல்கணர்
      - 18. ஜெயதசிம்மர்
        - ⋮
        - 19. சாமந்தசிம்மர்
    - கஜசிம்மர்
    - கீர்த்திபாலர்
    - விஜயசிம்மர்

3. ஜாவாலிபுரத்துச் சாகமான அரசு

கீர்த்திபாலர்

நத்துலத்தைச் சேர்ந்த சாகமான அரசர் கெல்கணருக்குக் கீர்த்திபாலர் என்ற தம்பியொருவர் இருந்தார் என்பதை முன்பே பார்த்தோம். இவரே தம் அண்ணனின் ஆட்சிக் காலத்தில் ஜாவாலிபுரத்தில் சாகமானக் கிளை வம்சமொன்றை நிறுவினர். ஜாபாலிபுரம் என்றும் அது அக் காலத்தில் அழைக்கப்பட்டது. இன்று ஜாலோர் (Jalor) என்ற பெயரில் அவ்வூர் உள்ளது. அவ்வூரில் சுவர்ணகிரி என்ற கோட்டையொன்று இருந்தது. இது பிற்காலத்தில் சோனகர், சோனிகர் (Sonigarh) என்றெல்லாம் மருவிற்று. இதனல் இவ் வூரிலிருந்து ஆட்சிபுரிந்த சாகமானர்

கள் சோனிகரர்கள் (Sonigaras) என்று அழைக்கப்படலாயினர். கீர்த்திபாலர் தம் தந்தையின் காலத்திலும் அண்ணனின் காலத்திலும் நத்துலத்துச் சாகமான அரசில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார். அண்ணனுடன் தகராறுகள் எவையும் இல்லாமலேயே ஜாவாலிபுரத்தில் புதிய அரசு ஒன்றினை அவர் நிறுவினார் என்று கருத இடமிருக்கிறது. துருக்ஷர்களைத் தோற்கடித்த பின், ஜாவாலிபுரத்தில் தமது இருக்கையைக் கீர்த்திபாலர் மாற்றிக் கொண்டார் என்று சுந்தா மலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இங்குக் குறிப்பிடப்படும் துருக்ஷர் கோரி முகம்மதுவாகவே இருக்கக் கூடும். இவ்வாருனால், கி.பி. 1178-ல் கோரி முகம்மதுவைத் தோற்கடித்த பின், சில ஆண்டுகளிலேயே ஜாவாலிபுரத்தைத் தமது இருப்பிடமாகக் கீர்த்திபாலர் கொண்டார் என்று நாம் முடிவு செய்யலாம். அவருடைய அண்ணனை கெல்கணரின் ஆட்சிக் காலத்திலேயே (சுமார் கி.பி. 1163-1192) இது நிகழ்ந்தது. ஏனெனில், கீர்த்திபாலர் கி.பி. 1185க்கு முன் காலமாகிவிட்டார். பரமாரர்களிடமிருந்தே ஜாவாலிபுரத்தை இவர் கைப்பற்றினாரென்று சிலர் கருதுகின்றனர்.

ஜாவாலிபுரத்தில் தமது இருக்கையை அமைக்குமுன் கீர்த்திபாலர் நத்துலத்தில் அரசராயிருந்தார் என்று சுந்தாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. தம் அண்ணனோடு மிகவும் ஒற்றுமையாயிருந்து செல்வாக்குடன் அரசர்போல் இவர் விளங்கியதே இதற்குக் காரணமாக இருக்கலாம். நத்துலத்து அரியணைபற்றிய விஷயத்தில் தம் அண்ணனுடன் முரண்பட்டு ஜாவாலிபுரத்துக்கு இவர் சென்றிருக்கலாமென்றும் சிலர் கருதுவர்.

உதயசிம்மர்

கி.பி. 1182க்குச் சற்று முன்பு கீர்த்திபாலரது மகனான சமரசிம்மர் ஜாவாலிபுரத்தில் அரியணை ஏறினார். லக்கணபாலர், அபயபாலர், ருதலதேவி என்ற தம்பிகளும் தங்கையும் அவருக்கு இருந்தனர். ஜாவாலிபுரத்தில் சிவாலயமொன்றை ருதலதேவி கட்டினார். கி.பி. 1182ஐயும் 1185ஐயும் சேர்ந்த இரு ஜாவாலிபுரத்துக் கல்வெட்டுகள் மகாராஜா சமரசிம்மர் அப்பொழுது ஆட்சியில் இருந்ததைக் கூறுகின்றன. சமரபுரம் என்ற ஒரு நகரை அவர் நிறுவினார். இது எங்கிருந்தது என்பதை உணர முடியவில்லை. ஜாவாலிபுரத்துக் கோட்டை 'கனகாசலம்' (பொன்மலை) என்று இவரது காலத்தில் அழைக்கப்பட்டது. இவ் வரசரது மகள் லீலாதேவி என்பவர் குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசர் இரண்டாம் பீமருக்குத் திருமணம் செய்து

கொடுக்கப்பட்டார். மானவசிம்மர், உதயசிம்மர் என்ற இரு பிள்ளைகள் இவருக்கு இருந்தனர். கல்வெட்டுச் சான்றுகள் எவையும் இல்லாமற் போயினும், மூத்தவரான மானவசிம்மரே தம் தந்தையின் மரணத்துக்குப் பின் அரியணை ஏறியிருக்கலாம். அல்லது மானவசிம்மர் தம் தந்தைக்கு முன்பே காலமாகிவிட்ட தாலோ அல்லது வேறு காரணத்தினாலோ அவரது தம்பியான உதயசிம்மர் அரியணை ஏறினார். மானவசிம்மரது பேரனான விஜயதர் அல்லது தேவராஜர் என்பவர் தேவதத்தில் (Devada) மற்றொரு கிளை வம்சத்தைப் பின்னர் நிறுவினார்.

உதயசிம்மரது நான்கு கல்வெட்டுகள் பின்மாலில் உள்ளன. கி.பி. 1205 முதல் 1248 வரையில் அவர் நிச்சயம் ஆட்சிபுரிந் தார் என்பதை அவற்றின்மூலம் நாம் அறிகிறோம். உதயசிம்மர் நத்துலம், ஜாவாலிபுரம், மாண்டவ்யபுரம், வாக்பட்டமேரு, சூரசந்தம் (Surachanda), ராடரதம் (Ratahrada), கேதம் (Kheda), ராமசாய்னியம் (Ramasainya), ஸ்ரீமாலம், ரத்னபுரம், சத்தியபுரம் போன்ற இடங்கள்மீது ஆதிக்கம் செலுத்தினா ரென்று சுந்தாமலைக் கல்வெட்டில் கூறப்படுகிறது. மாண்டவ்ய புரம் என்பது இன்றைய மண்டோர் (Mandor) ஆகும். வாக் பட்டமேரு என்பது இன்று பார்மர் (Barmer) என்றழைக்கப்படு கிறது. பார்மர் இருந்த மல்லணி (Mallani) என்ற ராஜபுதனத் துச் சுதேச அரசிலேயே இங்குக் குறிப்பிடப்படும் வேறு சில ஊர் களும் இருந்தன. ஸ்ரீமாலம் என்பது பின்மால். ரத்னபுரம் என்பது இன்றைய ரத்தன்பூர். சத்தியபுரமானது இன்றைய சஞ்சோர் (Sanchor). உதயசிம்மர் வல்லமைமிக்க அரசராயிருந் திருக்க வேண்டுமென்பதை இதன்மூலம் நாம் அறிந்துகொள் கிறோம். டெல்லியை ஆட்சிபுரிந்த சுல்தான் அல்தாமிஷ் கி.பி. 1216க்கும் கி.பி. 1226க்குமிடையில் இருமுறை உதயசிம்மர்மீது படையெடுத்து வந்தார் என்பதை ஹசன் நிசாமி போன்ற முஸ்லிம் நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். 1216-ல் ஜாவாலி புரம் முற்றுகையிடப்பட்டது. உதயசிம்மர் பணிந்து திறை செலுத்தி, பகைவரைத் திருப்பியனுப்பினார். கி.பி. 1226-ல் மண்டோர் கைப்பற்றப்பட்டுச் சூறையாடப்பட்டது.[1]

சௌளுக்கிய அரசர் இரண்டாம் பீமரை எதிர்த்து உதய சிம்மர் போரிட்டார். லாட்டத்தின்மீது ஆட்சிபுரிந்த சாகமான அரசர் சிந்துராஜருக்கெதிராகவும் போர் நிகழ்வுற்றது. இவ்விரு வருமே உதயசிம்மரால் தோற்கடிக்கப்பட்டனர். உதயசிம்மரது மகள் வாகேல வம்சத்து வீரமருக்கு மணம் முடித்துத் தரப்பட்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

டார். இந்த வீரமர் வீரதவலரது மூத்த மகனுவார். கி.பி. 1226-ல் அல்தாமிஷ் குஜராத்தின்மீது படையெடுத்த பொழுது வீரதவல ருக்கு உதயசிம்மர் படையுதவி செய்தார். உதயசிம்மர் பரத நாட்டிய சாத்திரத்தில் வல்லவராயிருந்தார் என்று கூறப்படு கிறது. இரண்டு சிவாலயங்களையும் அவர் ஜாவாலிபுரத்தில் கட்டினுர். அவருக்குப் பிரகலாதனதேவி என்ற மனைவியின்மூலம் சாசிகதேவர், சாமுண்டராஜர் என்னும் பிள்ளைகள் இருந்தனர். இச் செய்திகளையெல்லாம் சுந்தாமலைக் கல்வெட்டுமூலம் நாம் அறிகிறேம். வாகதசிம்மர் என்ற இன்னெரு மகனும் அவருக்கு இருந்தார் என்று ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

சசிகதேவர்

உதயசிம்மருக்குப் பின் சசிகதேவர் (Chachigadeva) என்ப வர் அரசராணுர். இவரது ஐந்து கல்வெட்டுகள் கி.பி. 1266க்கு முன்பு இவர் அரியணை ஏறி, 1278க்குப் பின் காலமாணுர் என் பதைத் தெரிவிக்கின்றன. தம் தந்தையின் காலத்தில் குஜராத்தைச் சேர்ந்த வீரதவலரின் மகன் வீரமரை இவர் தோற்கடித்த செய்தி சுந்தாமலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படு கிறது. சல்யர், பாதுகர், சங்கர், நகரர் போன்ற வேறு சிற்றர சர்களையும் இவர் தோற்கடித்தாராம். இவர்கள் யாவர் என்பது புலப்படவில்லை. சுந்தாமலைக் கல்வெட்டு இவரது காலத்தைச் சேர்ந்தது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. ஜோத்பூர் மாவட்டத்தில் ஜஸ்வந்தபுரத்துக்கு வடக்கில் 10 மைல் தொலைவி லுள்ளது இந்த மலை. கி.பி. 1262ஆம் ஆண்டில் பொறிக்கப் பட்ட இப் பிரசஸ்தி ஜெயமங்களசூரி என்ற சமணரால் புனையப் பட்டது. இந்த வம்சத்தின் வம்சாவளியை நமக்குத் தருவது இக் கல்வெட்டேயாகும். இது மட்டுமின்றி, வேறு நான்கு கல் வெட்டுகளும்கூட இவரைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன.

முடிவு

சுந்தாமலைக் கல்வெட்டுப் போன்ற வேறு கல்வெட்டு எதுவும் கிடைக்காததால், சசிகதேவருக்குப் பிந்திய வரலாற்றை அறிந்துகொள்வது கடினமாயுள்ளது. சசிகதேவருக்கு லக்ஷ்மி தேவி என்ற மனைவியின்மூலம் ரூபாதேவி என்ற மகள் இருந் தாள்; ஆனுல், மகன்களைப்பற்றிய எவ்விதத் தகவலும் இல்லை. கி.பி. 1282க்கும் 1298க்குமிடையில் சாமந்தசிம்மர் என்பவர் ஆட்சிபுரிந்தார். ராஜபுத்திரக் கதைப் பாடல்கள் உதயசிம்மரின் மகனென்றே இவரைப்பற்றிப் பேசுகின்றன. ஆனுல், சசிகரின்

மகனென்றே இவரை அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] சாமந்த சிம்மரது கல்வெட்டொன்று கன்ஹத தேவர் (Kanhada) என்ற ஒருவர் நிர்வாகத்தைச் சாமந்தசிம்மரோடு பகிர்ந்து கொண்டார் என்பதைக் குறிப்பிடுகிறது. இவர் சாமந்த சிம்மரது மகனாகவும் யுவராஜாவாகவும் இருந்திருக்கலாம். அலாவுதீன் கில்ஜிக்குத் திறை செலுத்தி அடங்கியாண்டுவந்த கானர் தேவ் (Kaner Deo) இந்தக் கன்ஹத தேவராகவே இருக்கவேண்டும். கி.பி. 1310-1311-ல் அலாவுதீன் கில்ஜியின் படைகள் கன்ஹத தேவரையும் அவரது மகன் வீரமரையும் போரில் கொன்று ஜாவாலிபுரம், சஞ்சோர் ஆகிய ஊர்களைக் கைப்பற்றிக் கொண்டன. ஜாவாலிபுரத்துச் சாகமான அரசு அழிந்தது.

வம்சாவளி

- 1. கீர்த்திபாலர்
    - 2. சமரசிம்மர்
        - மானவசிம்மர்
        - 3. உதய சிம்மர்
            - 4. சசிகதேவர்
                - 5. சாமந்தசிம்மர்
                    - 6. கன்ஹத தேவர்
                        - வீரமர்
                - ருபாதேவி
            - சாமுண்டராஜர்
            - வாகதசிம்மர்
        - லீலாதேவி
    - ருதலதேவி
    - லக்கணபாலர்
    - அபயபாலர்

[1] H. C. Ray, *Dynastic History of Northern India* (refer the details and the geneological table).

10. தொமரர்கள்

இவர்கள் யார்?

வட இந்தியாவை ஆண்ட அரச வம்சங்களுள் தொமரர்கள் (Tomaras) என்போர் முக்கியமல்லாதவர் என்றாலும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் துவக்கம் முதல் இன்று வரையிலும் இந்தியாவின் தலையாய நகரமாக விளங்கிவரும் டெல்லியை நிறுவி, அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களைச் சிறிது காலம் ஆட்சிபுரிந்ததால் தொமரர்களைப்பற்றி நாம் படிக்க வேண்டியுள்ளது. இவர்களைப்பற்றிய செய்திகளும் அதிகம் கிடைக்கவில்லை.

முப்பத்தாறு ராஜபுத்திர குலங்களுள் தொமரர்களும் ஒன்று என்று ராஜஸ்தானத்து மரபுகள் சொல்லும். இவர்கள் துவர்கள் (Tvars) என்றும், தொன்வர்கள் (Tonwar) என்றும்கூட அழைக்கப்பட்டனர். இவர்கள் ஹரியானாப் பகுதியில் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். விக்கிரம அப்தம் 792-ல் (கி.பி. 736) அனங்கபால துவர் (Anangpal Tvar) என்ற தொமர சிற்றரசர் தில்லிகா அல்லது தில்லிபுரம் என்ற நகரை நிறுவியதாகப் பழம்பாடல்கள் தெரிவிக்கின்றன. அவரது வழியில் வந்த இருபதாவது அரசரான மற்றொரு அனங்கபாலர் என்பவர் தமது பேரக் குழந்தையான சாகமானப் பிருதிவிராஜரை அரசராக்கும் நோக்கத்துடன் அரியணையைத் துறந்தாராம். தொமரர்களிடமிருந்து சாகமானர்களின் கைக்கு டெல்லி நகரம் மாறியதையே பிற்காலத்தைச் சேர்ந்த சில கதைகள் இவ்வாறு திரித்துக் கூறின. டெல்லி நகரம் கி.பி. 736-ல் நிறுவப்பட்டது என்ற கூற்றையும் வேறு ஆதாரங்களின்றி உண்மையென ஏற்றுக்கொள்வதற்கில்லை. எனினும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் டெல்லிப் பகுதியைத் தொமரர்கள் நிச்சயம் ஆட்சிபுரிந்தனரென்று ஐயத்துக்கிடமின்றித் தெரிகிறது. இவர்களது பூர்விகம்பற்றி எவ்விதச் சான்றுமில்லை. ஹரியானாப் பகுதியில் நெடுங்காலமாகவே இவர்கள் வாழ்ந்து வந்திருக்க வேண்டும்.

பெகோவாக் கல்வெட்டு

கன்னிங்ஹாம் அவர்கள் தொமரர்களின் நாணயங்களை ஆராய்ந்தார்.[1] அவற்றிலுள்ள பெயர்களை வைத்து, கி.பி.

[1] Cunningham, *Coins of Mediaeval India.*

பத்தாம் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரையில் ஆட்சிபுரிந்ததாக ஐந்து தொமர அரசர்களின் பெயர்களை அவர் குறிப்பிட்டார். ஆயினும், இதற்கு முன்பே தொமரர்கள் பிரதிகாரப் பேரரசர்களின் குறுநில மன்னர்களாக அல்லது உயர் அதிகாரிகளாக இன்றைய ஹரியாஞ மாநிலத்தில் கர்ஞல் (Karnal) மாவட்டத்தில் இருந்ததாகப் பிரதிகார அரசர் மகேந்திரபாலரது பெகோவா (Pehowa) பிரசஸ்தி குறிப்பிடுகிறது. தொமரர்களைப்பற்றிக் குறிப்பிடும் முதலாவது சாசனம் இதுவே. ஜாவ்லர் (Jaula), வஜ்ரதர், ஜஜ்ஜுகர், பூரணராஜர், தேவராஜர், கொக்கர் (Gogga) ஆகிய ஆறு தொமரர்களின் பெயர்கள் அப் பிரசஸ்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஜாவ்லர் 'ராஜா' என்றழைக்கப்படுகிருர். அவருக்கும் வஜ்ரதருக்கும் இடையில் என்ன உறவு இருந்தது என்பதோ, எத்தனை தலைமுறைகள் கழிந்தன என்பதோ அதில் குறிப்பிடப்படவில்லை. நிர்வாகத்தை நேர்மையோடு நடத்திப் பெரும் புகழ் பெற்றவர் என்று மட்டுமே வஜ்ரதரைப்பற்றி அக் கல்வெட்டுச் சொல்கிறது. வஜ்ரதரின் மகஞன ஜஜ்ஜுகருக்கு இரண்டு மனைவிகள் மூலம் பிறந்த மூன்று மகன்கள் அதில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் மகேந்திரபாலரது அதிகாரிகளாக இருந்தனர். பெகோவாக் கல்வெட்டில் குறிக்கப்படும் தொமரர்களின் வம்சாவளியைக் கீல்ஹார்ன், H. C. ரே ஆகியோர் கீழ்வருமாறு வரைகின்றனர்:[1]

ஜாவ்லர்
⋮
வஜ்ரதர்
|
பூரணராஜர் | தேவராஜர் | கொக்கர்

கொக்கர் 'பூநாதர்' (Bhunata) என்று குறிப்பிடப்படுகிருர். ஒரு பகுதியைச் சிற்றரசர் போல அவர் ஆட்சிபுரிந்ததால் மகேந்திரபாலரது கல்வெட்டு அவரை இவ்வாறு குறிப்பிடுகிறது போலும்! பதினென்ரும் நூற்றுண்டின் ஆரம்பத்தில் டெல்லி அரசானது தானேசுவரத்தையும் உள்ளடக்கி இருந்தது என்று ஃபெரிஷ்தாவின் நூல் தெரிவிக்கிறது. தானேசுவரத்துக்குச் சுமார் இருபது கல் மேற்கிலுள்ள பெகோவாவும் டெல்லியைச் சேர்ந்த ஆட்சிப் பிரிவுக்குள் அடங்கியதாகவே இருந்திருத்தல் வேண்டும். அக் காலத்தில் பிர்தூடகம் (Prdudaka) என்ற பெயரில் குருக்ஷேத்ர பூமியில் சரஸ்வதி நதியின் கரையில் ஒரு

[1] H. C. Ray, *The Dynastic History of Northern India.*

புண்ணியத் தலமாகப் பெகோவா விளங்கிற்று. அங்குப் பூநாதராகிய கொக்கரும், அவரது சகோதரர்களான பூரணராஜரும் தேவராஜரும் விஷ்ணுவுக்கு மூன்று ஆலயங்களை அமைத்த செய்தியைக் கூறுவதற்காகவே இந்தப் பிரசஸ்தி வெளியிடப்பட்டது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதலே டெல்லியைச் சுற்றியிருந்த பிரதேசத்தில் தொமரர்கள் குறுநில மன்னர்களாக இருந்தனர் என்பதற்கு ஆதாரம் இதுவே. துவக்கத்தில் சுதந்திரமானவர்களாகவோ, பெயர் தெரியாத வேறு அரசர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவோ இருந்த தொமரர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பிரதிகார அரசர் போஜர் அல்லது மகேந்திரபாலரின் காலத்தில் பிரதிகார ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

நாணயச் சான்றுகள்

கன்னிங்ஹாம் அவர்கள் ஐந்து அரசர்களின் நாணயங்களை டெல்லிக்கு அருகில் கண்டெடுத்தார். 'டெல்லியையும் கனோஜையும் சேர்ந்த தொமரர்கள்' (Tomaras of Delhi and Kanauj) என்ற தலைப்பில் கீழ்வருமாறு அவர்களை அவர் வரிசைப்படுத்தினார்:

1. சல்லக்ஷணபாலர் (சுமார் கி.பி. 978-1003)
2. அஜயபாலர் (சுமார் கி.பி. 1003-1019)
3. குமாரபாலர் (சுமார் கி.பி. 1019-1049)
4. அனங்கபாலர் (சுமார் கி.பி. 1049-1079)
5. மகிபாலர் (சுமார் கி.பி. 1103-1128)

இவர்கள் ஐவரையும் எந்தக் காரணத்தைக் கொண்டு தொமரர்கள் என்று கன்னிங்ஹாம் அடையாளம் காண்கிறார் என்று தமக்குப் புலப்படவில்லையென்று டாக்டர் H. C. ரே கூறுவது சிந்திக்கத் தக்கது. அமீர் குஸ்ரு என்ற பெருங் கவிஞர் தமக்கு ஐந்நூறு அல்லது அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அனங்கபால் என்ற அரசர் டெல்லியை நிறுவினாரென்று அந்நகரில் பேசப்பட்டு வந்த செவிவழிக் கதையைக் குறிப்பிட்டார். இந்த அனங்கபால் மேலே குறிப்பிடப்பட்ட பட்டியலிலுள்ள நான்காவது அரசர் அல்லரென்றும், அதற்கு முன்பே கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு அனங்கபாலராகவே இருக்க வேண்டுமென்றும் கன்னிங்ஹாம் கருதினார். அப்படியொரு அனங்கபாலர் இருந்தார் என்பதை ராஜஸ்தானத்துப் பழம் பாடல்கள் தெரிவிக்கின்றன.

முடிவுரை

சந்தனர் என்ற சாகமான அரசர் தொமர அரசர் ருத்ரேனர் (தொமரேச பூப ருத்ரேணு) என்பவரைப் போரில் கொன்ருர் என்று சந்தனரது கொள்ளுப் பேரரான இரண்டாம் விக்கிரகராஜரது ஹர்ஷமலேக் கல்வெட்டு (கி.பி. 973) தெரிவிக்கிறது என்பதை முன்பே பார்த்தோம். சந்தனரது பேரரும் இரண்டாம் விக்கிரகராஜரது தந்தையுமான சிம்மராஜர் என்பவரும் தொமர அரசர் சலவனர் என்பவரைத் தோற்கடித்து அவரது படைவீரர்கள் பலரைச் சிறைப் பிடித்ததாக அதே கல்வெட்டில் சொல்லப்படுகிறது. சந்தனரும் சிம்மராஜரும் முறையே கி.பி. பத்தாம் நூற்ருண்டின் துவக்கத்திலும் நடுப்பகுதியிலும் வாழ்ந்தவராதல் வேண்டும். இவ்வாறு பத்தாம் நூற்ருண்டு முதலே சாகம்பரிச் சாகமானர்களுக்கும் தொமரர்களுக்குமிடையில் பகைமை நிலவிற்று. இது தலைமுறை தலைமுறையாக நீடித்து, இறுதியில் பன்னிரண்டாம் நூற்ருண்டில், நான்காம் விக்கிரகராஜர் என்ற கீர்த்திமிக்க சாகமான அரசர் டெல்லியைக் கைப்பற்றுவதில் முடிந்தது. கி.பி. 1164ஆம் ஆண்டில் நான்காம் விக்கிரகராஜ விசாலதேவர் டெல்லியில் அமர்ந்து ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார். தொமரர்களின் ஆட்சி கி.பி. 1164க்குச் சற்று முன்பு டெல்லியில் முடிவுற்றது.

11. சாகிகள்

பூர்விகம் : சான்றுகள்

ஆப்கானிஸ்தானத்தில் காபூல் பள்ளத்தாக்கில் சாகிகள் (ஷாஹிகள்—Sahis) நெடுங்காலமாக ஆட்சிபுரிந்து வந்தனரென்பது பாரசீக, கிரேக்க, அரேபிய, சீனச் சான்றுகளால் தெரிய வருகிறது. இச் சான்றுகளையெல்லாம் தொகுத்து, நாணயங்கள் பலவற்றையும் திரட்டி ஒப்பிட்டு அறிஞர்கள் பலர் சாகிகளைப் பற்றிப் பல்வேறு ஆராய்ச்சி நூல்களையும் கட்டுரைகளையும் எழுதினர். ஸ்டீன், ரேவர்டி, எலியட், ஸ்மித் போன்றவர்களை இங்கு நாம் முக்கியமாகக் குறிப்பிடலாம்.[1] இந்திய, பாரசீக நாணயங்களை ஆராய்ந்த கன்னிங்ஹாம், ரேப்சன் (Rapson) போன்ற பல அறிஞர்களும், கல்வெட்டுகளை ஆராய்ந்த ஃபிளீட் (Fleet) போன்ருேரும் தங்களது நூல்களில் நாணயங்களையும் கல்வெட்டுகளையும் விளக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுக் குறிப்புகளையும் கட்டுரைகளையும் வரைந்துள்ளனர். சாகிகளின் ஆரம்ப கால வரலாறு இருள் மண்டியதாக உள்ளது. எனினும், மேலே கூறப்பட்ட ஆராய்ச்சியாளர்களது உதவியைக் கொண்டே அந்த இருளிலும்கூட சாகிகளின் வரலாறுபற்றிய சில செய்திகளை நம்மால் ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டு முதல் சாகிகளின் வரலாற்றை அறிவதற்கு முஸ்லிம் நூலாசிரியர்கள் நமக்குத் துணை நிற்கின்றனர்.

குஷானர்கள்

துருக்கியர்களா ?

குஷானப் பேரரசு அழிந்ததற்குப் பின்னர்க் குஷானச் சிற்றரசர்கள் சிலர் மேலும் சிறிது காலம் பஞ்சாப், ஆப்கானிஸ்தானம், ஆக்சஸ் நதிப் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளில் தொடர்ந்து இருந்தனர். குஷானர்கள் யுவே-சி (Yuey-Chi) என்ற மத்திய ஆசிய மக்கட் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்

[1] M. A. Stein, A Note on *The Sahi of Udabhanda* in his translation of *Rajatarangini;* Major H. G. Raverty, *Notes on Afghanistan;* H. M. Elliot, A Note on *The Hindu Kings of Kabul* in Vol. II of *The History of India as told by its own Historians;* V. A. Smith, *Early History of India.*

என்பதை வரலாற்று மாணவர்கள் அறிவர். இந்த யுவே-சிகள் துருக்கியர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அறிஞர்கள் பலரது கருத்து. எனவேதான், காபூலை ஆட்சிபுரிந்த முதலாவது சாகி அரச வம்சமானது துருக்கி வம்சத்தைச் சேர்ந்தது என்று வின்செண்ட் ஸ்மித் எழுதினர். கிதாபுல் ஹிந்த் (Kitab-ul-Hind) என்ற அருமையான நூலை எழுதிய அல்பெருனி காபூலை ஆட்சி புரிந்த இந்து அரசர்கள் துருக்கியர்கள் என்று எழுதினர்.[1] சாகியா (அல்லது ஷாஹியா) என்ற பட்டத்தோடு காபூலில் அறுபது தலைமுறைகள் வரை அவர்கள் அரசாண்டனர் என்றும் அவர் தெரிவிக்கிறர். இந்த வம்சத்தில் கனிக் என்ற ஓர் அரசர் இருந்தாரென்றும், அவர் பௌத்தர் என்றும் அல்பெருனி எழுதினர். புருஷபுரத்தில் பௌத்த விகாரம் ஒன்றைக் கனிக் கட்டினரென்றும், அது 'கனிச் சைத்தியம்' என்று அழைக்கப்பட்டதென்றும் அல்பெருனி தெரிவிக்கிறர்.

குஷான அரசுகள்

வாசுதேவருக்குப் பின் இந்தியாவில் குஷானர்களது ஆதிக்கம் சீர்குலைந்தது என்றாலும், பல குஷான அரசுகள் வடமேற்கு இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும், ஆக்சஸ் சமவெளியிலும் நிலைபெற்றிருந்தன என்பதைச் சீனச் சான்றுகள் தெரிவிக்கின்றன. அவற்றுள் ஒன்று, கி-பின் (Ki-Pin) என்று சீனர்களால் கி.பி. மூன்றும் நூற்றுண்டில் அழைக்கப்பட்டது. ஆக்சஸ் நதிச் சமவெளியிலிருந்த யுவே-சி பேரரசர் ஒருவருக்கு இச் சிற்றரசுகள் அனைத்தும் உட்பட்டிருந்தனவாம். பின்னர் நான்கு, ஐந்தாம் நூற்றுண்டுகளில் ஹூணர்களின் நெருக்குதல் காரணமாக இந்த யுவே-சி பேரரசு நிலைகுலைந்தது. அப்பொழுது கி-டோ-லோ (Ki-to-lo) என்ற யுவே-சி சிற்றரசன் ஒருவன் இந்துகுஷ் மலைகளைக் கடந்துவந்து ஃபோ-லு-ஷா (Fo-lu-Sha) என்ற பெஷாவர் அல்லது புருஷபுரத்தில் குஷானச் சிற்றரசு ஒன்றை நிறுவினும். இச் செய்தியைச் சீனவின் வீய் (Wei) வம்சத்தைச் சேர்ந்த வரலாற்றுக் குறிப்புகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இந்தக் குஷான அரசுக்குத்தான் வீய் வம்சத்துச் சீனப் பேரரசரின் தூதராகக் கி.பி. 520-ல் சாங்-யுன் (Song-Yun) என்பவர் வந்தார். அக் குஷான அரசு கண்-டோ-லோ (Kan-to-lo) என்று சீனர்களால் அழைக்கப்பட்டது. காந்தாரம் என்ற பெயரே இவ்வாறு மருவிற்று என்பதில் ஐயமில்லை.

[1] Sachan's translation reads as follows: 'The Hindus had Kings residing in Kabul, Turks were said to be of Tibetan origin.' But Elliot's translation is different: 'Kabul was formerly governed by princes of the Turkish race. It is said that they were originally from Tibet.'

ஆறும் நூற்றுண்டின் நடுப் பகுதியில் மேலைத் துருக்கியர்கள் என்போரும், சாசானிய (Sasanids) அரசர்கள், இந்திய அரசர்களான யசோதர்மன் போன்றவர்களும் ஹூணர்களைத் தாக்கி அவர்களது ஆதிக்கத்தைச் சிதைத்தனர். அப்பொழுது சாசானிய அரசரான முதலாம் குஸ்ராவ் (Khusrau I, 531-79) என்பாருக்குக் காந்தாரத்தைச் சேர்ந்த குஷான அரசு கட்டுப்பட்டது.

கி.பி. ஏழாம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்த யுவான் சுவாங் இந்தக் குஷான அரசுக்கு விஜயம் செய்தார். அதைக் கியா-பி-ஷி (Kia-pi-shi) என்று அவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு நூற்றுண்டிலும் ஒவ்வொரு விதமாக இப் பிரதேசத்தைச் சீன நூலாசிரியர்கள் பெயரிட்டு அழைத்தனர். இந்தக் கியா-பி-ஷி என்பது காபிசா (Kapisa) என்று அப் பகுதி மக்களால் அழைக்கப்பட்டது. காபிசாவில் பெஷாவர்ப் பகுதியான காந்தாரமும் அடங்கியிருந்தது என்று யுவான் சுவாங்கே குறிப்பிட்டுள்ளார். கியா-பி-ஷி, காபிசா ஆகிய சொற்களெல்லாம் காபூல் அரசைத் தாம் குறிக்கின்றன. அதன் அரசர் ஒரு க்ஷத்திரியர் என்றும், அவ்வரசின் எல்லைகளாகக் காஷ்மீரமும் தக்ஷசீலமும் விளங்கின என்றும், காஷ்மீரத்தில் அப்பொழுது அரசராக இருந்தவர் கார்க்கோட வம்சத்தைச் சேர்ந்த துர்லபவர்தனர் என்றும் பல வகையான தகவல்களை யுவான் சுவாங் நமக்குத் தருகின்றார்.[1]

அல்பெருனி குறிப்பிடும் கனிக் என்ற அரசர் கனிஷ்கரே என்பதில் ஐயமில்லை. புருஷபுரத்தில் பௌத்த ஆலயமொன்றைக் கனிஷ்கரே நிறுவியிருந்தார் என்பதை யுவான் சுவாங் நூல் உட்படப் பல சான்றுகளும் நமக்குத் தெரிவிக்கின்றன.

சாகி என்ற பெயர்

'அரசர்களுக்கு அரசர்' என்ற பட்டத்தைப் பண்டைக் காலத்துப் பாரசீக அரசரான முதலாம் டரயஸ் (Darius I) என்பவரே முதன் முதலில் சூடியிருந்தார். 'க்ஷாயதீய க்ஷாயதீயாணும்' என்று பாரசீக மொழியில் இப் பட்டத்தை டரயஸ் சூடியிருந்தார். இதுவே பின்னர் மேற்கு ஆசியாவைச் சேர்ந்த பல்வேறு அரசர்களாலும் சூடிக்கொள்ளப்பட்டது.[2] இந்தோ-சைத்திய அரசர்களும் ஆரம்பகாலக் குஷான அரசர்களும் இத் தகைய பட்டத்தைக் கிரேக்கத்தில் மொழிபெயர்த்தும், சமஸ்கிருதத்தில் ராஜாதிராஜர், ராஜராஜர் என்று மொழிபெயர்த்தும் சூடியிருந்தனர் என்பதை அவர்களது நாணயங்களில் பொறிக்கப்

[1] T. Watters, *On Yuan Chwang's Travels in India.*

[2] *Cambridge History of India,* Vol. I,

பட்டுள்ள வாசகங்கள் காண்பிக்கின்றன. க்ஷாயதீய க்ஷாயதீயாணும் என்பதே நாளடைவில் பலவாறு திரிந்து, சாகி-சாகானு சாகி (Sahi-Sahanusahi) என்று மாறிற்று என்று நாம் கொள்ள லாம். சக அரசர்களின் (Sakas) சிற்றரசர்களாக இருந்தவர்கள் (சாமந்தர்கள்) சாகிகள் என்று பட்டம் சூடியிருந்தனர் என்றும், அவர்களது பேரரசர்கள் சாகானுசாகி என்ற பட்டத்தைச் சூடியிருந்தனர் என்றும் சமணநூற் சான்றுகள் தெரிவிக்கின்றன.[1] குப்தப் பேரரசர் சமுத்திர குப்தரது அலகாபாத் பிரசஸ்தியில் 'தெய்வ புத்திர - சாகி - சாகானுசாகி' என்று, பஞ்சாபையும் ஆப்கானிஸ்தானத்தையும் சேர்ந்த குஷான அரசர்கள் குறிப் பிடப்படுகின்றனர். இதுவே கி.பி. ஆறும் நூற்றுண்டு முதல் பாரசீகத்தில் 'ஷஹின்ஷா' (Shahansha) என்று வழங்க லாயிற்று என்பதைச் சாசானிய அரசர்களின் நாணயங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இவ்வாறு சமுத்திரகுப்தரின் காலமாகிய நான்காவது நூற்றுண்டு முதற் கொண்டு, அல்லது அதற்கும் சிறிது முன்பே கூட சாகி (ஷாஹி) என்ற பட்டமானது ஆப்கானிஸ்தானத்தையும் பஞ்சாபையும் சேர்ந்த குஷானச் சிற்றரசர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. இவர்களது வரலாறு நமக்குத் தெரியவில்லை என்றாலும், அறுபது தலைமுறைகள் வரை இந்த சாகிகள் காபூல் பிரதேசத்தில் ஆட்சி புரிந்தனர் என்ற அல் பெருனியின் கூற்றுனது ஓரளவு மிகைபட்டதாக இருக்கலாம். ஆயினும், கசினி மகமூதுவே சாகி அரசுக்கு இறுதியாக முடிவு கட்டியவர் என்று அல்பெருனி கூறுவதை நாம் கருதிப் பார்க்க வேண்டும். இதன்படி, ஏறத்தாழக் கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றுண்டு முதல் பதினொன்றும் நூற்றுண்டு வரை சாகிகள் ஆட்சி செலுத்தினர் என்று முடிவு செய்யலாம்.

இந்து குஷானர்கள்

கி.பி. 870-ல் அராபியத் தளபதி ஒருவன் காபூலைக் கைப் பற்றியது வரையில் துருக்கிய சாகி அரசர்கள் அங்கு ஆட்சி புரிந்தனர் என்று ஸ்மித் எழுதினர். துருக்கியர்களாகிய யுவே-சி குலத்திலிருந்து வந்தவர்களே குஷானர்களாதலால், இந்த சாகி அரசர்களையும் துருக்கியர்கள் என்றே அல்பெருனி குறிப்பிட் டார். இதையே ஸ்டீன், ஸ்மித் போன்றவர்கள் பின்பற்றினர்.

[1] Ray Chaudhuri, *Political History of Ancient India.*

குஷானர்கள் சில தலைமுறைகளுக்குப் பின்னர் இந்துப் பண்பாட்டையும் சமயத்தினையும் ஏற்று, இந்துக்களாகவே மாறினர் என்பதைக் குஷான அரசர்களின் வரலாறு தெளிவாகக் காண்பிக்கின்றது. ஹூணர்களின் ஆதிக்கத்துக்குப் பிறகு குஷானர்கள் அனைவருமே அழிந்து போயிருக்க வேண்டுமென்றும், எனவேதான் க்ஷத்திரியர் ஒருவர் ஆப்கானிஸ்தானத்தில் ஆட்சி புரிந்ததாக யுவான் சுவாங் குறிப்பிட்டார் என்றும், பாரசீகர்களைப் பார்த்து சாகி என்ற பட்டத்தை அவர் சூடியிருந்தாலும், அவர் ஆரிய க்ஷத்திரியரே தவிர, துருக்கியர் அல்லர் என்றும் C. V. வைத்தியா வாதிடுகின்றார்.[1] இந்த க்ஷத்திரிய வம்சத்தையே கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கல்லர் என்ற பிராமண அமைச்சர் வீழ்த்திவிட்டு, பிராமண சாகி வம்சமொன்றைத் தோற்றுவித்தார் என்று அல்பெரூனி எழுதியுள்ளதை வைத்தியா சுட்டிக் காட்டுகிறார். ஆரம்பம் முதலே சாகிகள் இந்துக்களே என்பது அவரது கூற்று. ஆனால், ஆதியில் துருக்கியர்களான குஷானர்களே சாகி பட்டத்தைப் பூண்டு ஆட்சி புரிந்ததால், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் லகதூர்மான் (Lagaturman) வரையிலான சாகி அரசர்கள் துருக்கிய சாகிகள் என்றும், கல்லர் முதல் ஆட்சிக்கு வந்த சாகி வம்சம் இந்து சாகி வம்சத்தினரென்றும் இரண்டு வகையாக ஸ்மித் போன்றோரால் பிரிக்கப்படுகின்றனர். காபூல் அரசர் க்ஷத்திரியர் என்று யுவான் சுவாங் குறிப்பிடுவதை ஆதாரமாக வைத்து அவர் ஆரிய க்ஷத்திரியர் என்று வாதிடுவதும், குஷானர்களின் வழியில் அவர் வந்தவர் என்பதை மறுப்பதும் பொருத்தமாகாது. யுவான் சுவாங் இந்திய சாகிகள்பற்றிக் கூறியிருக்கும் பல தகவல்கள் தவறானவையாக உள்ளன என்பதையும் இங்கு நாம் மறந்து விடக்கூடாது.[2] எனவே, குஷானர்களின் வழியில் வந்த ஒரு வம்சமே காபூலை ஆண்ட சாகி வம்சமென்று கொள்வதில் தவறில்லை. குஷான அரசர் வாசுதேவரைப் போல இவர்களும் இந்து சமயத்தை ஏற்றுக் கொண்டு இந்துக்களாக மாறிப் போனதால், யுவான் சுவாங் க்ஷத்திரியர்கள் என்று இவர்களைக் கருதியதில் தவறொன்றுமில்லை.

1. துருக்கிய சாகிகள்

துருக்கிய சாகி வம்சத்தை நிறுவியவர் பர்ஹ்டிஜின் (Barhtigin) என்று அல்பெரூனி குறிப்பிடுகிறார். இவ்வரசர் பற்றி அல்பெரூனி சொல்லும் கதைகள் நமக்கு எவ்விதத்திலும்

[1] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.* Refer the Note '*Was the First Shahi Dynasty of Kabul, Turki in origin ?*' in the above book.

[2] H. C. Ray, *The Dynastic History of Northern India, Vol. I.*

பயன்படவில்லை. காபூல் அரசர்களின் வம்சாவளியும் பிறச் செய்திகளும் நகர்கோட் (Nagar-kot) என்ற கோட்டையில் பட்டுத் துணியில் எழுதப்பட்டுப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன என்றும், ஆயினும் பல்வேறு காரணங்களினால் அவற்றைத் தம்மால் பார்க்க முடியாமற் போய்விட்டதென்றும் அல்பெருனி தெரிவிக்கிறார். பர்ஹ்டிஜின் வழியில் வந்த கனிக் அல்லது கனக் (Kanak) என்ற அரசரைப்பற்றி அவர் கூறுவன அனைத்தும் கனிஷ்கரைப்பற்றிய செய்திகளாகவே உள்ளன. இந்தத் துருக்கிய சாகி வம்சத்தின் கடைசி அரசர் கட்டோர்மன் (Katorman) என்றும், அவருக்குக் கல்லர் என்ற பிராமண அமைச்சர் ஒருவர் இருந்தார் என்றும் அல்பெருனி தெரிவிக்கிறார். கட்டோர்மன் என்ற பெயர் லட்டூர்மன், லக்துஜமான் (Laktuzaman) என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. [கட்டோர்மன் என்ற சொல்பற்றி H. M. எலியட் அவர்கள் தமது நூலில் விளக்கமாக விவரித்து இருப்பதைப் படிப்பது நலம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் சித்ரல் (Chitral), ஜில்ஜிட் (Gilgit) ஆகியவற்றின் மலைக்குலத் தலைவர்கள் அல்லது குறுநில மன்னர்கள் ஷா கட்டோர் (Shah-Kator) என்ற பட்டத்தைச் சூடியிருந்ததை எலியட் கண்டார்.] இதற்கு மேல் துருக்கிய சாகி அரசர்களைப்பற்றித் தெரிந்துகொள்வதற்குத் தேவையான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. கனிஷ்கருக்கு முந்திய எவரோ ஒரு குஷானச் சிற்றரசர் காபூலைக் கைப்பற்றி ஆண்டிருக்க வேண்டும். அத்தகைய சிற்றரசனின் பெயரையே பர்ஹ்டிஜின் என்று அல்பெருனி குறிப்பிட்டார். அலப்டிஜின், சபக்டிஜின் போன்ற பெயர்களில் வரும் 'டிஜின்' என்ற துருக்கிய வார்த்தைக்குத் துணிச்சல்காரன் அல்லது வீரன் என்று பொருள். இதற்கு மேல் இந்தப் பெயரைப்பற்றி ஆராய்ச்சி செய்வதில் பயனில்லை.

கனிஷ்கரது ஆட்சிக் காலத்தில் பெரிதும் விரிவடைந்திருந்த குஷானப் பேரரசு அடுத்த சில நூற்றாண்டுகளில் சிதைவுற்று, சிறுசிறு சிற்றரசுகள் உருவெடுத்தன. அவற்றுள் சிந்து, காபூல் (காபிசா), சாபூல் ஆகிய மூன்றைப்பற்றிக் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபிய நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இந்த சாபூல் என்பது சாபூலிஸ்தானம் (Zabulistan) என்றழைக்கப்பட்ட கசினிப் பகுதியாகும். காபூலுக்குத் தெற்கில் இது இருந்தது.

அராபியப் படையெடுப்புகள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் அராபியர்கள் காபூல், சாபூல் ஆகிய இரண்டு இந்து அரசுகளின்மீதும் படையெடுக்கத்

துவங்கினர். முதன் முதலில் ஈரான் கைப்பற்றப்பட்டது. கி.பி. 640-ல் மக்ரான் (Makran) பிரதேசமும், அதையடுத்து ஹீரட்டும் (Herat) கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர், கி.பி. 650-ல் பஸ்ராவில் (Basra) ஆளுநராக இருந்த அப்துல்லா இப்னு-அமீர் என்பவர் அர்-ரப்பி-இப்னு-சியாத் (Ar-Rabi-Ibn-Ziyad) என்பவனின் தலைமையில் படையொன்றை அனுப்பினர். இவன் காபூல் பள்ளத்தாக்கில் சாகி அரசில் அல்லது அதன் எல்லையிலிருந்த சிஜிஸ்தான் (Sijistan) என்ற பிரதேசத்தைத் தாக்கினன். இப் பிரதேசம் சகஸ்தான் அல்லது சகஸ்தானம் (Sakastana—சகர்களின் நாடு) என்று ஆதியில் சமஸ்கிருதத்தில் மட்டுமின்றி, பாரசீகத்திலும் அழைக்கப்பட்டது. பின்னர் சஜஸ்தான், சிஜிஸ்தான் என்று அராபிய மொழியிலும், செயிஸ்தான், சீஸ்தான் (Sistan) என்று பாரசீக மொழியிலும் மருவலாயிற்று. அந்தச் சிஜிஸ்தானத்தின் தலைநகரம் சரஞ் (Zaranj) என்றழைக்கப்பட்டது. அதை ஆட்சி புரிந்தவர் சத்ரப் (Satrap) என்று பலாதுரி (Baladhuri) என்ற முஸ்லிம் ஆசிரியரால் அழைக்கப் படுகின்றுர். எனவே, காபூல் அரசின் ஒரு மாநிலமாகவே சிஜிஸ்தான் இருந்தது என்று நாம் கொள்ளலாம். கடும் போருக்குப் பிறகு சரஞ் நகரம் கைப்பற்றப்பட்டது. ஆனல், சிறிது காலத்திற்குப் பின் அராபியப் படைகள் அங்கிருந்து விரட்டப்பட்டன.

சிஜிஸ்தானம் கைப்பற்றப்படுதல்

கி.பி. 653-ல் ஆளுநர் இப்னு அமீர் என்பார் அப்துர் ரஹ்மான் என்பவரைச் சிஜித்தானத்துக்கு அனுப்பினர். அப்பிரதேசத்தின் ஒரு சிறு பகுதியை அப்துர் ரஹ்மான் கைப்பற்றி, சத்ரப்பிடமிருந்து பெரும் பொருளை வசூலித்து, காபூலை நோக்கி முன்னேறினர். இம் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன. சரஞ் மக்கள் கிளர்ந்து எழுந்து முஸ்லிம் படைகளை விரட்டியடித்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு மற்ருெரு படையுடன் அப்துர் ரஹ்மான் சென்று, காபூலையும் சாபூலையும் கைப்பற்றினர். இவ்வாறு பலமுறை அராபியர்கள் வெற்றி பெற்றனரெனினும், அங்கு வசித்த இந்துக்களும் இந்து அரசர்களும் அடிக்கடி கிளர்ச்சி செய்து அராபியப் படைகளை விரட்டிவிட்டு விடுதலை பெற்றனர். இத் தகவல்களையும் மிகவும் விவரமாகப் பலாதூரியின் 'கிதாப் ஃபுதூஹுல் புல்தான்' (Kitab Futuh-al-Buldan) என்ற நூல் தருகிறது. சிஜிஸ்தானத்தில் மட்டும் அராபியர்களின் ஆதிக்கம் வெற்றிகரமாகக் கி.பி. ஏழாம் நூற்ருண்டின் முடிவில் நிறுவப் பட்டது.

சாகி அரசின்மீது படையெடுப்புகள்

இராக்கில் முஸ்லிம் ஆளுநராயிருந்த அல்-ஹஜ்ஜாஜ் (al-Hajjaj) என்பவர் உபைதுல்லா என்பவரைச் சிஜிஸ்தானத்தில் ஆளுநராக நியமித்தார். சிஜிஸ்தானத்திலிருந்து காபூலையும் சாபூலையும் ஆண்ட சாகி அரசரான ரத்பீல் (Ratbil) மீது உபைதுல்லா போர் தொடுத்தார். உபைதுல்லாவின் படையானது சூழ்ந்து கொள்ளப் பட்டது. தம் மகன்கள் மூவரையும் காபூல் அரசரிடம் பிணையமாக ஒப்படைத்த பின்னரே உபைதுல்லா திரும்பிப் போக அனுமதிக்கப்பட்டார். உபைதுல்லாவின் தளபதிகளுள் ஒருவரான ஷுரைஹ் (Shuraih) என்பவர் காபூல் அரசர்மீது மீண்டும் போர் தொடுத்தார். ஆனால், அவர் போரில் தோல்வியுற்றதுடன், கொல்லவும்பட்டார். உபைதுல்லாவும் துயரத்தினல் மரணமுற்ருர். இவையனைத்தும் கி.பி. 696-98-ல் நடைபெற்றிருக்க வேண்டும். இராக்கில் பஸ்ரா போன்ற நகரங்களில் காபூல்மீதான போருக்கென்றே தனி வரிகள் வசூலிக்கப்பட்டு, மாபெரும் படையொன்று அப்துர் ரஹ்மானின் தலைமையில் கி.பி. 699-ல் அல் ஹஜ்ஜாஜால் அனுப்பி வைக்கப் பட்டது. அப்துர் ரஹ்மான் பெரு வெற்றி பெற்ருலும், ஹஜ்ஜாஜுடன் ஏற்பட்ட பகைமை காரணமாக இப் படையெடுப்பு வீணுயிற்று. (விவரங்களைப் பின்னர்ப் பார்க்க.) இறுதியில், ஏழு (அல்லது ஒன்பது) ஆண்டுகள் வரையில் ரத்பீலின்மீது போர் தொடுப்பதில்லையென்று ஹஜ்ஜாஜ் சமாதானம் செய்து கொண்டார். அப் பகுதியை ஆண்ட சாகி அரசர்கள் ஓரளவு வலிமையுடன் விளங்கினுர்கள் என்ருலும், முஸ்லிம்களின் இடைவிடாத தாக்குதல்களிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆண்டுதோறும் ஒன்பது லட்சம் வெள்ளிக் காசுகளைத் (dirham) திறையாகச் செலுத்துவதற்கு ரத்பீல் இணங்கினுர்.

ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் அமைதி நீடித்தது. கி.பி. 710-ல் கொராசான் (Khorasan) மாநிலத்தின் ஆளுநர் குதைபா (Qutaiba) என்பவர் ரத்பீலின்மீது போர் தொடுத்தார். இப் பொழுதும் தோல்வியே கிட்டிற்று. கி.பி. 713-ல் ஹஜ்ஜாஜின் மரணத்திற்குப் பிறகு, காபூல்ஷா (ஷாஹி என்பதே ஷாவாக மருவிற்று) கப்பம் செலுத்த மறுத்தார். கி.பி. 754-755-ல் கலீஃபாவாயிருந்த அல்-மன்சூர் (al-Mansur) காபூல்ஷா மீது போர் தொடுத்து, திறை வசூலிப்பதற்கென்று படையொன்றை அனுப்பினுர். முஸ்லிம் படைகளால் அர்-ருக்கஜ் (Ar-Rukhkhaj) போன்ற ஓரிரு நகரங்கள் மட்டும் கைப்பற்றப்பட்டன வாயினும், காபூலைக் கைப்பற்ற முடியவில்லை. காபூலும் சாபூலும் ரத்பீல் என்று பொதுவாக அழைக்கப்பட்ட ஓர் அரசர் வசமே இருந்தன

எனத் தெரிகிறது. சிஜிஸ்தானமும் முஸ்லிம்களுக்கெதிராகக் கிளர்ச்சிகள் நடத்திற்று. கி.பி. 786-ல் புகழ்மிக்க கலீஃபா வான ஹாரூன் அல்-ரஷீத் (Haroun al-Rashid) ஒரு பெரும் படையை அப்பாஸ் (Abbas) என்பவரின் தலைமையில் அனுப் பினார். இப் படை காபூலைக் கைப்பற்றி, அதற்கு அருகிலிருந்த ஒரு பௌத்த விகாரத்தைச் சூறையாடியது. இந்த விகாரம் இருந்த இடமானது இன்றும் ஷா விகார் (Shah Bihar) என்றழைக் கப்படுகிறது. அப்பொழுது ஆட்சிபுரிந்த அரசரும் ரத்பீல் என்றே பலாதூரி குறிப்பிடுகின்றார். காபூல் அரசரும் மக்களும் பௌத்தர்களாக இருந்தனர். முஸ்லிம் படைகள் திரும்பிச் சென்ற பின், சாகி அரசர் திரும்பவும் வந்து காபூலிலிருந்து ஆளத் துவங்கினார். ஹாரூன்அல் ரஷீதின் மகனான அல்-மாமூன் (al-Mamun) என்பார் காபூலை வென்று, அதன் அரசரை முஸ்லி மாக மாற்றியதாகப் பலாதூரி குறிப்பிடுகிறார். ஆனால், அவர் இந்துவாகவே கி.பி. 867-லும் ஆண்டு கொண்டிருந்தாரென்பது பல நூல்களால் தெரியவருகிறது. கி.பி. 870-ல் ஹீரட் நகரை முஸ்லிம்கள் இறுதியாகக் கைப்பற்றிக் காபூலை நோக்கி மீண்டுமொருமுறை படை நடத்தினர். காபூல் கைப்பற்றவும் பட்டது.

காபூலைச் சேர்ந்த சாகி அரசர்கள் இஸ்லாமிய ஆக்கிரமிப்பு களை எதிர்த்து இடைவிடாமல் போரிட வேண்டியிருந்தது, இந்து அரசர்கள் பலரது பெருமதிப்பைச் சம்பாதித்துத் தந்தது.—லலிதாதித்திய முக்தாபீடர் தம்முடைய அவைக்கு வந்த சாகி அரச குமாரர்கள் சிலரைப் பெரிதும் மரியாதையுடன் நடத்தினார் என்று கல்கணர் தெரிவிக்கிறார். காஷ்மீர அரசில் பல உயர் பதவிகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டனவாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் இவ் வாறு இஸ்லாமியர் ஆக்கிரமிப்புகளை எதிர்த்துத் தனது சுதந் திரத்தைக் காத்து நின்ற காபூல் கி.பி. 870-ல் இறுதியாக வீழ்ச்சியுற்றது. ரத்பீல் என்ற அரசரே இரண்டு நூற்றாண்டு காலத்துக்கும் அதிகமாகக் காபூலில் ஷாவாக இருந்தாரென்று பலாதூரி குறிப்பிடுவதன் பொருள் விளங்கவில்லை. 'ரத்பீல்' என்பது ஒருவேளை சாகி அரசர்களின் பொதுப் பெயர் அல்லது விருதுப் பெயராக இருந்திருக்க வேண்டும்.

துருக்கிய சாகிகளின் வீழ்ச்சி

துருக்கிய சாகி வம்சத்தின் கடைசி அரசர் கட்டோர்மான் அல்லது லகதூர்மான்[1] என்று அல்பெருனி கூறியதை முன்பே

[1] கட்டோர்மான், லகதூர்மான் என்ற வேறுபாடுகள் இரண்டு விதமான மொழி பெயர்ப்புகளின் விளைவே.—Ref. Elliot's 'Note A' in his famous work.

பார்த்தோம். இந்த க்ஷத்திரிய அரசருக்கு லல்லியர் அல்லது கல்லர் என்ற பிராமண அமைச்சர் ஒருவர் இருந்தார். இவர் லகதூர்மானுக்கு எதிராக மக்களிடையில் நிறுவிய அதிருப்தியைப் பயன்படுத்தி, கி.பி. 870-ல் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். துருக்கிய சாகி வம்சம் லகதூர்மானுடன் முடிவுற்றது. லல்லியர் எனப்பட்ட கல்லரால் புதிய அரச வம்சமொன்று நிறுவப்பட்டது. இதுவே 'இந்து சாகி வம்சம்' என்று அழைக்கப்படுகிறது.

லல்லிய சாகி ஆட்சிக்குவந்த சில மாதங்களிலேயே யாகூப்-இப்னு-லைத் (Yaqub-Ibn-Layth) என்ற முஸ்லிம் அரசர் ஹீரட் நகரைக் கைப்பற்றினர். அதன்பின், காபூலுக்குத் தாம் வந்து இந்து அரசருக்கு மரியாதைகள் செய்ய விரும்புவதாக யாகூப் தகவல் அனுப்பினுராம். அதை உண்மையென்று நம்பி அவரைச் சந்திக்கப்போன காபூல் அரசர் யாகூபால் வெட்டி வீழ்த்தப்பட்டாராம். இதுபற்றிக் குறிப்பிடும் நூருத்தீன் முகம்மது ஊஃபி (Ufi) என்ற முஸ்லிம் நூலாசிரியர் அவரெழுதிய ஜாமி-உல்-ஹிகாயத் (Jami-ul-Hikayat) என்ற நூலில் அவ்வாறு கொல்லப்பட்ட காபூல் அரசர் ருசல் (Rusal) என்கிருர்.[1] ரத்பீல் என்பதே இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கலாம். எனினும், இந்த அரசர் துருக்கிய சாகி வம்சத்தின் கடைசி அரசரான லகதூர்மாருகவும் இருக்கக் கூடும். இதுபற்றிய உண்மையை அறிய இயலவில்லை. லகதூர்மான் இவ்வாறு கொல்லப்பட்ட பின், லல்லிய சாகி தானே அரசராகி இருக்கக் கூடும். காபூல் இவ்வாறு முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்ட பின், லல்லிய சாகி ராவல் பிண்டி மாவட்டத்தில் அட்டாக் (Attock) நகருக்குப் பதினைந்து மைல் வடக்கில் சிந்து நதியின் வலது கரையில் உதபாண்டா (Udabhanda) என்ற ஊரைத் தலைநகராக்கிக் கொண்டார். இவ்வூர் இன்று உந்த் (Und) என்ற பெயரில் சிறு கிராமமாக உள்ளது. இவ்வாறு கி.பி. 870-ல் ஆப்கானிஸ்தானத்தில் இந்து ஆட்சி முற்றிலுமாக அழிந்தது.

2. இந்து சாகிகள்

இந்து சாகி அரசர்களைப்பற்றி அல்பெருனி, கல்கணர் ஆகிய இருவரே முதன் முதலில் முக்கியமான தகவல்களை நமக்குத் தருகின்றனர். பின்னர் ஊஃபி (Ufi), உத்பி (Utbi), மின்ஹாஜுத்தீன், ஃபெரிஷ்தா போன்ருேர் பிற்காலத்திய இந்து சாகி அரசர்களைப் பற்றித் தகவல் தருகின்றனர்.

[1] Elliot and Dowson, *The History of India as told by its own Historians*; *Rajatarangini*, M A. Stein's translation.

லல்லிய சாகி

அல்பெருனியின் பட்டியல்

துருக்கிய சாகி வம்சத்தின் கடைசி அரசரான லகதூர்மானை அவரது பிராமண அமைச்சரான கல்லர் சிறைப்படுத்திவிட்டு, புதிய அரச வம்சமொன்றை நிறுவினர் என்று அல்பெருனி தெரிவிக்கிருர். கல்லருக்குப் பின் சாமந்தர், கமலூ, பீமர், ஜெயபாலர், ஆனந்தபாலர், திரிலோசனபாலர், பீமபாலர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர் என்று அவர் எழுதுகிருர். கடைசி இருவர் கொல்லப்பட்ட ஆண்டுகளையும் அவரே நமக்குத் தருகிருர். திரிலோசனபாலர் ஹிஜிரா ஆண்டு 412-ல் (கி.பி. 1021) கொல்லப்பட்டதாகவும், அவரது மகனை பீமபாலர் இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்க் கொல்லப்பட்டதாகவும் அல்பெருனியின் நூல் குறிப்பிடுகிறது. இதற்கு மேல் இந்து சாகிகளைப்பற்றிய செய்திகளை அந் நூலில் காணமுடியவில்லை. எனவே, கல்கணரது ராஜதரங்கிணி, வேறு முஸ்லிம் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவற்றை நாம் நாடவேண்டி யுள்ளது. அல்பெருனியின் பட்டியலில் லல்லியரது பெயர் காணப்படவில்லையென்பதை நாம் கவனித்தல் வேண்டும்.

கல்கணரின் சான்று

ஆனல், கல்கணரோ லல்லிய சாகியே உதபாண்டபுரத்தில் இந்து சாகி வம்சத்தைத் தோற்றுவித்தவர் என்று எழுதுகிருர். அவரது தலைநகரமான அந்த உதபாண்டபுரத்தில் அரசர்கள் பலர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அடைக்கலம் புகுந்திருந்தனர் என்றும் ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது. காஷ்மீர அரசர் சங்கரவர்மனின் (கி.பி. 883—சுமார் கி.பி. 900) காலத்தவரே கீர்த்திமிக்க லல்லிய சாகி என்றும் அது குறிப்பிடுகிறது. அப்படியானல், லல்லிய சாகியைப்பற்றி அல்பெருனி குறிப்பிடாததும், கல்லரைப்பற்றிக் கல்கணர் குறிப்பிடாததும் ஏன் என்ற கேள்வி எழுகிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்த கன்னிங்ஹாம் அவர்கள் கல்லரும் லல்லியரும் ஒருவரே என்று முடிவு கூறினர். லல்லியர் கீர்த்தியும் வலிமையுமிக்க அரசர் என்றும், உதபாண்டாவில் புதிய அரச வம்சமொன்றைத் தோற்றுவித்தவர் என்றும் கல்கணர் தரும் தகவல்கள் 'இந்து சாகி வம்சத்தைத் தோற்றுவித்த வலிமைமிக்க அரசர் கல்லர்' என்று அல்பெருனி கொடுக்கும் வர்ணனையுடன் ஒத்துள்ளன. எனவே, ஸ்டீன் (Stein) போன்ற ஆராய்ச்சியாளர்கள் கன்னிங்ஹாமின் முடிவு சரியானதே என்று ஏற்றுக் கொண்டனர். எலியட்டும் (Elliot) இதே முடிவுக்கே வந்தார். ஆனல், கி.பி. 850ஆம் ஆண்டு

வாக்கில் லல்லியர் அரசராகியிருக்க வேண்டும் என்பது எலியட்டின் கருத்து.

லல்லியரின் வலிமை

லல்லிய சாகியின் அரசு துருக்ஷர்கள் ஆட்சிபுரிந்த காபூல் பள்ளத்தாக்குக்கும் காஷ்மீரின் வடபகுதியில் தரத்கள் (Darads) வாழ்ந்த பிரதேசத்துக்குமிடையில் இருந்ததாகக் கல்கணர் சான்று பகர்கிருர். பஞ்சாபில் ஜீலம் நதிக்கும் சீனுப் நதிக்குமிடையிலான பிரதேசத்தை அலகானர் என்ற கூர்ஜர அரசர் ஒருவர் லல்லிய சாகியின் சிற்றரசராக ஆண்டுகொண்டிருந்தாரென்று அவர்தெரிவிக்கிருர். அலகானரைச் சங்கரவர்மன் தோற்கடித்து லல்லியர்மீதும் படையெடுத்தார். ஆனுல், லல்லியரைத் தோற்கடிக்கும் முயற்சி வெற்றிபெறவில்லை. வடக்கத்திய அரசர்கள் அனைவரைக்காட்டிலும் லல்லியரின் கீர்த்தியே அதிகமாகப் பிரகாசித்தது என்பது கல்கணரின் கூற்று.

கமலூகர்

லல்லியரின் ஆட்சி எப்போது முடிவுற்றது என்பது புலப்படவில்லை. அவருக்குப் பின் சாமந்தர் என்பவர் அரியணையைக் கவர்ந்து கொண்டிருக்க வேண்டும். ராஜதரங்கிணியில் இவரது பெயரே குறிப்பிடப்படவில்லை. ஆயினும், கல்லருக்குப் பின் சாமந்தர் ஆட்சிபுரிந்தார் என்ற அல்பெருனியின் செய்தியை ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப் பகுதி, பஞ்சாப் முதலிய இடங்களில் கிடைத்த சில நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஸ்ரீசாமந்தர் என்ற பெயர் அந் நாணயங்களின்மீது பொறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 902ஆம் ஆண்டு வாக்கில் காஷ்மீரத்தில் அரியணை ஏறிய கோபாலவர்மன் (சங்கரவர்மனின் மகன்) இரண்டே ஆண்டுகள் அரியணைமீது இருந்தார். நிர்வாகத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் பிரபாகரர் என்பவர் சாகி அரசின்மீது படையெடுத்துச் சென்று, உதபாண்டபுரத்தைக் கைப்பற்றி, தமக்குப் பகைவராக விளங்கிய சாகி அரசரை விரட்டிவிட்டு, அவருக்குப் பதிலாக லல்லிய சாகியின் மகனை தோரமானரைக் 'கமலூகர்' என்ற புதிய பெயருடன் அரியணைமீது அமர்த்தினுரென்று ராஜதரங்கிணி எழுதுகிறது. அரியணையிலிருந்து விரட்டப்பட்டதாகப் பெயர் சொல்லாமல் குறிப்பிடப்படும் சாகி அரசர் சாமந்தரே என்று நாம் கொள்ளலாம். எவ்வித உரிமையுமின்றி அரசுரிமையைக் கவர்ந்து கொண்டுவிட்டதாலேயே கல்கணர்

அவரது பெயரைக் குறிப்பிடவில்லை போலும்! கமலூ என்று அல்பெரூனி குறிப்பிடும் அரசர் கமலூகரே என்பதில் சிறிதும் ஐயமில்லை. முகம்மது ஊஃபியின் ஜாமி-உல் ஹிகாயத் என்ற நூலும் இவரைப்பற்றி நமக்குத் தெரிவிக்கிறது. இது முதல் சாகி அரசர்கள் 'இந்துஸ்தானத்து ராஜாக்கள்' (Rais of Hindustan) என்று முஸ்லிம் நூலாசிரியர்களால் அழைக்கப்படுகின்றனர். காபூல் பள்ளத்தாக்கு முஸ்லிம்களின் ஆட்சிக்கு உட்பட்டு, சாகிகள் இந்துஸ்தானத்துக்குள் சென்று ஆளத் துவங்கியதையே இது காண்பிக்கிறது. கமலூகரது மகனுன பீமரது கல்வெட்டு அவரது தந்தையைக் (கமலூகரை) கலாவர்மன் (கமலவர்மன்) என்று குறிப்பிடுகிறது.

கோபாலவர்மனின் காலத்தில் கமலூகர் அரசராஞரென்று சொல்லப்படுவதால், கி.பி. 902க்கும் 904க்குமிடையில் அவர் அரியணை ஏறியிருத்தல் வேண்டும். சாபூலிஸ்தானத்தில் முஸ்லிம் ஆளுநராயிருந்த ஃபர்த்தகான் (Fartaghan) என்பவர் சாகி அரசின்மீது படையெடுத்து, சக்காவந்த் (Sakawand) என்ற புண்ணியத்தலத்தைக் கொள்ளையிட்டார். இது ஜலாலாபாதுக்கு அருகில் இருந்தது.

பீமர்

கமலூகருக்குப் பின், அவரது மகனுன பீமர் அரியணை ஏறினர். 'மகாராஜாதிராஜ பரமேசுவர ஷாஹி ஸ்ரீ பீமதேவர்' என்று துவங்கும் அவரது கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இவர் கலாகாராவின் அரசர் சிம்மராஜருக்குத் தம் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். காஷ்மீரத்தின் தென்மேற்கில் இன்றைய புஞ்ச் (Punch) பகுதியே அன்று லொகாரா (Lohara) என்றழைக்கப்பட்டது. இந்த சாகி இளவரசியின் மூலம் சிம்மராஜருக்குப் பிறந்த திட்டாவே (Didda) காஷ்மீர அரசர் க்ஷேமகுப்தரை (கி.பி. 950-58) மணந்து காஷ்மீரத்தின் வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தை வகித்தார். இந்த உறவினல் காஷ்மீரத்துடன் சாகி அரசருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. காஷ்மீரத்தில் பீமேசுவரம் என்ற பெயரில் விஷ்ணுவுக்கு ஆலயமொன்றைப் பீமர் எழுப்பினர். இந்த ஆலயத்துக்கு அரசி திட்டா ஏராளமான நிலங்களை மானியமாக அளித்தார். மார்த்தாண்டத்துக்கருகில் இந்த ஆலயமானது முஸ்லிம் ஆலயமாக மாற்றப்பட்டுப் பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இருந்ததை ஸ்டீன் (Stein) கண்டார். திட்டாவுக்குப் பின் வந்த ஹர்ஷர் போன்ற வேறு அரசர்களும்

அந்த ஆலயத்துக்கு மானியங்கள் தந்தனர். 'ஸ்ரீ பீமதேவர்' என்று குறிக்கப்பட்ட இவரது வெள்ளி நாணயங்கள் நிறையக் கிடைத்துள்ளன. தோராயமாக, கி.பி. 940 முதல் 960 வரையில் பீமர் ஆட்சி புரிந்திருக்கலாமென்று C. V. வைத்தியா கருதுகின்றார்.[1]

இடைக்காலத்து அரசர்கள்

பீமருக்குப் பின், ஜெயபாலர் அரசு புரிந்ததாக அல்பெருனி குறிப்பிடுகிறார். ஜெயபாலரின் தந்தையின் பெயர் இஷ்டபாலர் என்று ஃபெரிஷ்தா தெரிவிக்கிறார். எனவே, ஜெயபாலர் பீமரது மகனல்லர் என்பது தெளிவாகிறது. கல்கணரோ ஜெயபாலர் பற்றி ஒன்றையும் தெரிவிக்கவில்லை. க்ஷேமகுப்தருக்குப் பின் காஷ்மீரத்தில் அரசரான அவரது மகன் அபிமன்யுவின் காலத்தில் (கி.பி. 958-72) சாகி அரசராக இருந்தவர் தக்கனர் என்று அவர் குறிப்பிடுகிறார். அந்தத் தக்கனர் காஷ்மீரத்துப் படைத்தலைவரான யசோதரரால் தோற்கடிக்கப்பட்டு, கப்பம் வசூலிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இவற்றை யெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, பீமருக்கும் ஜெயபாலருக்குமிடையில் ஓரிரு அரசர்கள் ஆட்சி புரிந்தனர் என்பது புலனாகிறது. இதற்கு மேல் இந்த சாகி அரசர்களைப்பற்றி வேறு எதையும் இன்றைய நிலையில் உறுதியாகக் கூறுவதற்கில்லை.

ஜெயபாலர்

அடுத்த முக்கியமான சாகி அரசரான ஜெயபாலர் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் அரசரானார். ஸ்வாட் (Swat) நதிப் பள்ளத்தாக்கில் 'பரமபட்டாரக மகாராஜாதிராஜ ஸ்ரீஜெயபால தேவர்' என்று குறிப்பிடும் சாசனமொன்று பாறை மீது செதுக்கப்பட்டுள்ளது. இவரது காலத்தில்தான் கசினி சுல்தானின் படையெடுப்புத் துவங்கிற்று. அலப்டிஜினும் சபக்டிஜினும் சாகி அரசின்மீது கி.பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதி முதல் படையெடுப்புகளை நிகழ்த்தலாயினர். இத்தாக்குதல்களின் விளைவாகக் கிழக்கு ஆப்கானிஸ்தானத்தில் பல பகுதிகளை சாகிகள் சிறிது சிறிதாக இழந்தனர். இவ்வாறு துருக்கிய முஸ்லிம்களால் நெருக்கப்பட்ட ஜெயபாலர் பஞ்சாபுக்குள் தமது அரசை விரிவுபடுத்த வேண்டி நேர்ந்தது.

லாகூரைக் கைப்பற்றுதல்

கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் அல்தாமிஷின் காலத்தில் முகம்மது-இப்னு-மன்சூர் என்பவர், லாகூரை ஆண்டு வந்த

[1] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.*

அரசர்களுடன் ஜெயபாலர் நிகழ்த்திய போர்களைப்பற்றி விவரிக்கிருர்.[1] அதன்படி, கி.பி. 999-ல் லாகூரை ஜெயபாலரது படைகள் அவரது மகன் ஆனந்தபாலரது தலைமையில் சென்று கைப்பற்றிக் கொண்டன. லாகூரை மையமாகக் கொண்ட அரசு ஜெயபாலரால் இணைத்துக் கொள்ளப்பட்டது. ஜெயபாலரது அரசு சர்ஹிந்திலிருந்து லம்கான் (Lamghan) வரையிலும், காஷ்மீரத்தின் எல்லையிலிருந்து மூல்தான் வரையிலும் பரந்திருந்ததென்றும், பஞ்சாபிலுள்ள பட்டிண்டாவிலுள்ள (Bhatinda) கோட்டையிலேயே அவர் வசித்து முஸ்லிம்களை எதிர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார் என்றும் ஃபெரிஷ்தா எழுதினுர். முஸ்லிம்களின் தாக்குதல் காரணமாகப் பழைய தலைநகரான உதபாண்டாவைக் கைவிட்டு, முதலில் லாகூருக்கும், பின்னர் பட்டிண்டாவுக்கும் ஜெயபாலர் தமது தலைநகரை மாற்றினுர் என்று தெரிகிறது. ‘லாகூர் அரசர்’ என்று ஜெயபாலரை ஃபெரிஷ்தா பல இடங்களில் குறிப்பிடுவதை இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

கசினி மகமூதின் படையெடுப்பு

ஜெயபாலருக்கும் கசினி சுல்தான்களுக்குமிடையில் நிகழ்ந்த போர்களைப்பற்றி மற்ருெரு அத்தியாயத்தில் விரிவாகப் படிக்கலாம். துவக்கத்தில் ஜெயபாலரது அரசு கிழக்கு ஆப்கானிஸ்தானம் (லம்கான்), வடமேற்கு எல்லைப்புறப் பகுதி, மேற்குப் பஞ்சாபின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. ஆனுல், சபக்டிஜின் சாகி அரசின்மீது படையெடுத்துக் கிழக்கு ஆப்கானிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புறம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் விளைவாக, ஜெயபாலர் தமது தலைநகரைப் பஞ்சாபுக்குள் மாற்ற வேண்டியது அவசியமாயிற்று. சபக்டிஜின் கி.பி. 997-ல் இறந்த பின்னர், சிறிய இடைவெளிக்குப் பின், அவரது மகனுன மகமூது கசினியில் சுல்தானுனுர். கி.பி. 1000 ஆண்டில் மகமூதின் இந்தியப் படையெடுப்புகள் துவங்கின. சிந்து நதிக்கு மேற்கிலிருந்த பல பிரதேசங்களும் கோட்டைகளும் அதே ஆண்டில் கசினி சுல்தானுல் கைப்பற்றப்பட்டன. அடுத்த ஆண்டில் கி.பி. 1001-ல் பெஷாவருக்கருகில் இரு தரப்புக்குமிடையில் கடும் போர் ஒன்று நிகழ்ந்தது. (சபக்டிஜின், மகமூது ஆகியோரது இப் போர்களையெல்லாம்பற்றி உத்பி எழுதிய தாரிக்கெ-யமீனி அல்லது கிதாபெ யமீனி என்ற நூல் விரிவாக வர்ணிக்கிறது.)[2] இந்துப்

[1] *Adab ul-Muluk wa Kifayat ul-Mamluk* of Muhammad Ibn Mansur.

[2] Elliot and Dowson, *History of India as told by its own Historians.*

படை படுதோல்வியுற்று ஜெயபாலர், அவரது மகன்கள், பேரன்கள், முக்கிய அதிகாரிகள் முதலியோர் சிறைப்பிடிக்கப்பட்டனர். நிறைய நஷ்ட ஈடும் கப்பமும் செலுத்துவதாக ஜெயபாலர் உறுதியளித்த பின், அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மகமூது உதபாண்டபுரத்தைக் கைப்பற்றிச் சூறையாடினர். உதபாண்டாவை வைகிந்த் (Waihind) என்று முஸ்லிம் நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். உத்பீயின் தகவல்களை நிசாமுதீன் எழுதிய தபக்காத்தெ அக்பரி, ஃபெரிஷ்தா எழுதிய தாரிக்கெ ஃபெரிஷ்தா போன்ற நூல்களும் உறுதி செய்கின்றன. இப்படையெடுப்பின் முடிவில் அளவற்ற பெருஞ் செல்வத்தோடு மகமூது கசினிக்குத் திரும்பினர்.[1]

ஜெயபாலர் முடிதுறத்தல்

முஸ்லிம்களிடம் பலமுறை தோல்வியுற்றதுடன், இறுதியில் மகமூதால் கைதும் செய்யப்பட்டு, பெருத்த அவமதிப்போடு நடத்தப்பட்ட ஜெயபாலர் பெரிதும் அவமானமுற்றுத் தமது தலைநகருக்குத் திரும்பியதும், தம்முடைய மகன் ஆனந்தபாலரிடம் அரியணையை ஒப்படைத்துவிட்டுத் தீக்குளித்து உயிர் நீத்தார். உத்பியும் ஃபெரிஷ்தாவும் இச் செய்தியை நமக்குத் தருகின்றனர். கி.பி. 1001-ல் அல்லது 1002-ல் இவ்வாறு ஜெயபாலர் மரணமுற்றார். அவரது ஆட்சி கி.பி. 960 முதல் 980 வரையில் நீடித்தது என்று C. V. வைத்தியா அவர்கள் கணக்கிடுவது தவறு என்பதை ஜெயபாலரது காலத்தைச் சேர்ந்த உத்பியின் சான்று நமக்குத் தெரிவிக்கிறது.

ஆனந்தபாலர்

ஜெயபாலருக்குப் பின் அரசரான ஆனந்தபாலர் தமது ஆட்சியின் துவக்கம் முதலே மகமூதின் தாக்குதல்களுக்கு எதிராகத் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவரானர். அப்பொழுது சாகி அரசுக்குத் தெற்கிலான மூல்தானை முஸ்லிம் அமீர் ஒருவர் ஆண்டு கொண்டிருந்தார். அந்த அமீரும் சாகிகளும் நண்பர்களாயிருந்தனர். ஆயினும், ஜெயபாலர்மீது மகமூது படையெடுத்த பொழுது, மூல்தான் அமீர் சாகிகளுக்கு உதவ மறுத்துவிட்டார். கி.பி. 1004-ல் கசினி மகமூது மற்றொரு படையெடுப்பை மேற்கொண்டார். ஆனந்தபாலரால் பல்வேறு காரணங்களினுல் கப்பம் செலுத்த முடியவில்லை. என்றாலும், மகமூதுடன் நல்லுறவு பூண்டிருக்கவே அவர் விரும்பினர். பலுசிஸ்தானத்தின் மூலமாகப் படை நடத்தி,

[1] M. Habib, *Sultan Mahmud of Gheznin*

பட்டியா (Bhatiah) என்ற நகரைக் கைப்பற்ற முயன்றூர் மகமூது. அந் நகரம் அப்பொழுது பிஜய்ராய் (Bijay Rai) அல்லது பஜிராய் என்ற சிற்றரசரால் ஆளப்பட்டு வந்தது. இவர் ஆனந்தபாலருக்கு அடங்கிய அரசராக இருந்து, பின்னர் அவருக்குத் திறை செலுத்த மறுத்துவிட்டார். தமது நகரை முஸ்லிம் படைகள் சூழ்ந்து கொண்டதை அறிந்து, மூன்று நாட்கள் உறுதியோடு போரிட்ட பின், அண்டையிலிருந்த மலைகளுக்கு பஜிராய் (Baji Rai) ஓடிவிட்டார். அங்கும் முஸ்லிம் படைகள் சூழ்ந்து கொள்ளவே, தம்மிடமிருந்த குத்துவாளைக் கொண்டு தன்னைத்தானே குத்திக் கொண்டு அவர் உயிர் நீத்தார். பட்டியாவில் சிறிது காலம் தங்கியிருந்தபின், அங்கு ஓர் ஆளுநரையும் படையையும் நிறுத்திவிட்டு, கி பி. 1005-ல் மகமூது கசினிக்குத் திரும்பினூர். இந்தப் பட்டியா என்ற ஊர் எது என்பது உறுதியாகத் தெரியவில்லை.

ஆனந்தபாலரின் தோல்வி

அடுத்தபடியாக, மூல்தானைக் கைப்பற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அமீரான அபுல் ஃபத்தஹ் தாவூத் (Abul-Fath-Daud) அல்லது ஃபத்தே தாவூத் என்பவர் ஷீஆப் பிரிவைச் சேர்ந்த முஸ்லிமாக இருந்ததால், சுன்னீப் பிரிவைச் சேர்ந்த மகமூது அவரைத் தண்டிக்க விரும்பினூராம். பெரும் சேனையுடன் புறப்பட்ட கசினி மகமூது பட்டியாவை அடைந்து, சாகி (ஷாஹி)ப் பிரதேசத்தின் வழியாகச் சென்று மூல்தானை அடைய எண்ணினூர். தாவூத் ஆனந்தபாலரின் உதவியை நாடினூர். எனவே, முஸ்லிம் படையின் வழியை சாகிப் படைகள் மறித்தன. பெஷாவருக்கருகில் நடைபெற்ற கடுஞ் சண்டையில் ஆனந்தபாலர் தோற்கடிக்கப்பட்டு, வெகு தூரம் வரையில் விரட்டிச் செல்லப்பட்டார். ஆனந்தபாலரின் பிள்ளைகளுள் ஒருவரான (அல்லது ஜெயபாலரின் பல பேரர்களில் எவரோ ஒருவரான) சுகபாலர் என்பவர் பகைவரால் சிறைப் பிடிக்கப்பட்டார். கி.பி. 1006-ல் மகமூது மூல்தானைக் கைப்பற்றினூர்.

சுகபாலரின் தோல்வி

கசினி அரசின் வடக்குப் பகுதியை மாபெரும் துருக்கிய அரசரான இலாக் கான் (Ilak Khan) என்பவர் இப்பொழுது தாக்கினூர். எனவே, அவசரமாக இந்தியாவைவிட்டு மகமூது செல்ல வேண்டியிருந்தது. சிறைப்பிடிக்கப்பட்ட சுகபாலரை நவாசா ஷா (Nawasa Shah) என்ற பெயரில் முஸ்லிமாக மாற்றி, இந்தியாவில் தாம் வென்றிருந்த பகுதிகளுக்கு அவரை

ஆளுநராக்கிவிட்டு, மகமூது வெளியேறினர். அவர் அவ்வாறு வெளியேறிய உடனேயே சுகபாலர் மீண்டும் இந்துவாக மாறி, முஸ்லிம் அதிகாரிகளையெல்லாம் அகற்றிவிட்டு, சுதந்திரமான அரசராகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்டார். கி.பி. 1007-ல் சுல்தான் மகமூது இந்தியாவுக்கு மீண்டும் வந்து, சுக பாலரைத் தோற்கடித்துத் திரும்பினர். சுகபாலர் சிறை யிலேயே கிடந்து உயிர்விட நேர்ந்தது. இப் படையெடுப்பின் போது சுகபாலருக்கு உதவாமல் மகமூதின் நட்பைக் கோரு வதற்காக ஆனந்தபாலர் கடிதம் எழுதி முயற்சி செய்தார்.

மீண்டும் ஆனந்தபாலரின் தோல்வி

கி.பி. 1008-ல் ஆனந்தபாலருக்கெதிராக மீண்டும் ஒரு முறை படையெடுத்தார் கசினி மகமூது. உதபாண்டாவுக்கு அருகில் ஆனந்தபாலரின் மகன் பிரம்மபாலரின் தலைமையில் சாகிப் படைகள் அவரை எதிர்த்தன. இந்துஸ்தானத்தைச் சேர்ந்த பல்வேறு அரசர்கள் ஆனந்தபாலருக்கு உதவியாகப் படையனுப்பினர் என்ற ஃபெரிஷ்தாவின் பிற்காலத்திய தகவல் கள் ஆதாரமற்றவை. உத்பி போன்ற சம காலத்து நூலாசிரி யர்கள் இதுபற்றிக் குறிக்கவேயில்லை. சாகிப் படைகள் மீண்டும் படுதோல்வியுற்றன. உதபாண்டாவுக்குப் பின் நகர்கோட் (Nagarkot) என்ற முக்கியமான கோட்டையும் கைப்பற்றப் பட்டது. அளவற்ற செல்வத்தை அக் கோட்டையிலிருந்து மகமூது கைப்பற்றினுரென்று உத்பி விவரமாக எழுதுகிருர். நகர்கோட் (இன்றைய காங்ரா கோட்டை) வரையிலான பகுதி களை ஆனந்தபாலர் இதுமுதல் இழந்தார். சாகி அரசு மிகவும் சுருங்கிப் போயிற்று. சால்ட் (Salt Ranges) மலைகளிலிருந்த நந்தனம் (Nandanah) என்ற ஊரை ஆனந்தபாலர் தலைநகராகக் கொண்டார்.

ஆனந்தபாலரின் முடிவு

இவ்வாறு பலமுறை தோல்வியுற்ற ஆனந்தபாலர் மேலும் போரிடுவது பயனற்றதென்பதை உணர்ந்து, கசினி மகமூதுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார்: ஆண்டு தோறும் ஐம்பது யானைகள் சுமக்குமளவுக்குப் பெருஞ் செல் வத்தை யனுப்பிவைப்பதாக அவர் உறுதியளித்தார். இதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 1012ஆம் ஆண்டு வாக்கில் ஆனந்தபாலர் இறந்தார். அதுவரையில் மகமூது சாகி அரசின்மீது படையெடுக்கவில்லை.

திரிலோசனபாலர்

ஆனந்தபாலரின் மரணத்துக்குச் சில மாதங்களுக்கு முன்னர், கசினி மகமூதின் படைகள் சாகி அரசின் வழியாகச் சென்று அதற்கு அப்பாலிருந்த தானேசுவரத்தைக் கைப்பற்றிச் சூறையாடின. இச் செயல்களெல்லாம் ஆனந்தபாலருக்கு அடுத்து அரசரான அவரது மகன் திரிலோசனபாலருக்குப் பிடிக்கவில்லை போலும்! எனவே, கசினி மகமூதுமீது மீண்டும் பகைமை ஏற்பட்டது. கி.பி. 1013-14-ல் கசினிப் படைகள் திரிலோசனபாலரின்மீது படையெடுத்து, நீண்ட போருக்குப் பிறகு பல பகுதிகளைக் கைப்பற்றின. காஷ்மீரத்து அரசர் சங்க ராமராஜரது படையொன்று துங்கரின் தலைமையில் வந்து திரிலோசன பாலருக்கு உதவிற்று. கசினிப் படைகள் பனி மூட்டம் காரணமாகவும், பகைவரின் வீரம் காரணமாகவும் பெருத்த சேதத்துக்கு ஆளாயின. சாகிப் படைகளுக்குத் திரிலோசனபாலரின் மகனான பீமபாலர் தலைமை தாங்கினார். சாகிகளின் தலைநகரான நந்தனம் முற்றுகையிடப்பட்டது. மிகுந்த தீரத்துடன் போராடிய பின், திரிலோசனபாலரும் பீமபாலரும் காஷ்மீரத்துக்குப் பின்வாங்கிச் சென்றனர். நந்தனம் மகமூதால் கைப்பற்றப்பட்டது. அவரது படைகள் காஷ்மீரின் எல்லையில் திரண்டிருந்த திரிலோசனபாலரது படைகளை மீண்டும் தோற்கடித்தன. அங்கிருந்து திரிலோசனபாலர் கிழக்குப் பஞ்சாபுக்குள் ஓடினார். பின்னர் ஏராளமான செல்வத்துடன் கசினி மகமூது தமது நாட்டுக்குத் திரும்பினார்.

ஷர்வத்துடன் போர்

இத் தோல்விகளுக்குப் பின்னர், கிழக்குப் பஞ்சாபில் ஒரு சிற்றரசர் போலத் திரிலோசனபாலர் தொடர்ந்து ஆண்டுவந்தார். வீழ்ந்துகிடந்த நிலையிலும் சாகிகளின் வீரம், விடா முயற்சி ஆகியவை பெரிதும் பாராட்டத் தக்கனவாயிருந்தன என்று கல்கணர் எழுதுகிறார். அல்பெருனியும்கூட சாகிகளின் பெரும் கீர்த்திபற்றிப் பெரிதும் புகழ்ந்துள்ளார். சர்ஹிந்தைத் (Sirhind) தலைநகராகக் கொண்டு, திரிலோசனபாலர் சுமார் ஐந்தாண்டு காலம் வாழ்ந்தார். இக் காலத்தில் அண்டையிலிருந்த ஷர்வம் (Sharva) என்ற சிற்றரசை ஆண்டு கொண்டிருந்த சாந்த் ராய் (Chand Rai) என்பவர்மீது பல போர்கள் நிகழ்த்தப் பெற்றன. இறுதியில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது: பீமபாலருக்குச் சாந்த் ராயின் மகளை மணமுடிப்பதென முடிவாயிற்று. திருமணத்துக்காக ஷர்வம் சென்ற பீமபாலரைச் சாந்த் ராய் சிறையிலடைத்து, முந்திய போர்களுக்கான நஷ்ட

சட்டைக் கோரினர். இவ்வாறு இருதரப்பினர்க்குமிடையில் மீண்டும் பகைமை மூண்ட வேளையில், கசினி மகமூதின் படைகள் கனேஜுக்குச் செல்லும் வழியில் கி.பி. 1018-ல் கிழக்குப் பஞ்சாபை அடைந்தன. அவரை எதிர்த்துப் போரிடும் வலிமையின்றி, திரிலோசனபாலர் மாளவத்தில் அடைக்கலம் புகுந்தார்.

திரிலோசனபாலரின் முடிவு

திரிலோசனபாலர் மாளவத்துக்குச் சென்று பரமார போஜரது அவையில் சிறிது காலம் வாழ்ந்தார். அவர் தமது அரசுக்கு மீண்டும் திரும்பினரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. இதற்கிடையில், சந்தெல்ல அரசர் வித்தியாதரருடன் திரிலோசனபாலர் நட்புறவு செய்து கொண்டார். கி.பி. 1019-ல் கனேஜை மகமூது தாக்கிய பொழுது, கோழைத்தனமாக அவருக்குப் பணிந்து போன பிரதிகார அரசர் ராஜ்யபாலரைச் சந்தெல்ல வித்தியாதரர் போரிட்டுக் கொன்றார். வித்தியாதரரைத் தண்டிப்பதற்கெனக் கி.பி. 1020-21-ல் கசினி மகமூது மற்றுமொருமுறை படையெடுத்து வந்தார். ஏதோ ஒரு பெரிய நதியின் கரையில் திரிலோசன பாலர் முஸ்லிம் சேனையை எதிர்த்தார். அதில் தோல்வியுற்று, வித்தியாதரரைச் சென்று அடையும் நோக்கத்தோடு போய்க்கொண்டிருந்த திருலோசன பாலரைச்சில இந்துக்களே வழிமறித்துக் கொன்றனர். இதற்கான காரணம் புலப்படவில்லை. திரிலோசனபாலர் கொல்லப்பட்ட ஆண்டு கி.பி. 1021 என்ற அல்பெருனியின் சான்றை முன்பே குறிப்பிட்டோம்.

முடிவு

திரிலோசனபாலரின் மகன் பீமபாலர் லொகாராவுக்குத் தெற்கில் மலைகள் சூழ்ந்த பிரதேசத்தில் மேலும் ஐந்தாண்டு காலம் வாழ்ந்து வந்தார். குறுநில மன்னராக அப் பகுதியில் அவர் இருந்திருக்கக் கூடும். லொகாராவின்மீது கி.பி. 1021-லும் அதற்குச் சிறிது பின்னரும் மகமூது படையெடுத்த பொழுது பீமபாலரின் நிலை எவ்விதம் பாதிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. கி.பி. 1026-ல் பீமபாலர் கொல்லப்பட்டதாக அல்பெருனியின் நூலின் மூலம் அறிகிறோம். இதன் பின்னர், தலைவரை இழந்த சாகி அரச குடும்பம் காஷ்மீர அரசரிடம் அடைக்கலம் புகுந்தது. அப்பொழுது அரியணையிலிருந்த லொகாரா வம்சத்தினர் சாகி வம்சத்தின் பழைய வீரத்தையும் கீர்த்தியையும் மறவாமல், பல உயர் பதவிகளை அவர்களுக்கு அளித்தனர். ருத்ரபாலர், அணங்கபாலர் போன்ற பல சாகி

இளவரசர்கள் (சாகி புத்திரர்கள்) காஷ்மீர அரசர்களுக்கு எவ்வாறு உறுதுணையாக இருந்தனர் என்பதை ராஜதரங்கிணி பலவிடங்களில் வர்ணிக்கிறது. காஷ்மீர அரசர் ஹர்ஷரது பட்டத்தரசியான வசந்தலேகா என்பவள் சாகி இளவரசியே. சாகி என்ற விருதுப் பெயரைச் சூடி, சாகி குலத்திலிருந்து வந்தவர்கள் தாங்கள் என்று பல க்ஷத்திரிய அரசர்கள் பெருமை பாராட்டினார்கள் என்று கல்கணர் எழுதுவது கருதத்தக்கது. 'இந்து சாகி வம்சம் இப்பொழுது அழிந்துவிட்டது. அதைச் சேர்ந்த ஒருவருமே இன்று எஞ்சியிருக்கவில்லை. ஆயினும், கீர்த்தியும் புகழும் மிகுந்த அந்த வம்சத்தினர் நல்லது என்றும், சரியானதென்றும் தாங்கள் கருதிய எதையும் விடாமுயற்சியோடு நிறைவேற்ற முயன்றார்கள் என்பதையும், உயரிய எண்ணங்களும் உயரிய தன்மைகளும் கொண்டவர்களாக அவர்கள் விளங்கினர் என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும்,' என அல்பெருனி எழுதிய பாராட்டுரையை இங்குக் குறிப்பிடுவது மிகமிகப் பொருத்தமாகும்.[1]

[1] 'The Hindu Shahiya dynasty is now extinct, and of the whole house there is no longer the slightest remnant in existence. We must say that, in all their grandeur, they never slackened in the ordent desire of doing that which is good and right, that they were men of noble sentiment and noble bearing.' E. C. Sachau's *Alberuni's India.*

12. சிந்து

1. அரார்பியப் படையெடுப்புக்கு முன்

யுவான் சுவாங்கின் குறிப்புகள்

ஹர்ஷர் சிந்துவின்மீது படையெடுத்த காலத்தில் சிந்து ஓரளவு முக்கியமான அரசாக அப் பகுதியில் விளங்கியிருக்க வேண்டுமென்பது யுவான் சுவாங்கின் குறிப்புகள்மூலமாகத் தெரிய வருகிறது. சிந்து அரசரைத் தாக்கி அவரது செல்வத்தை அல்லது அதிருஷ்டத்தை ஹர்ஷர் கவர்ந்து கொண்டாரென்று பாணபட்டர் எழுதுவதன் முழுப்பொருள் புரியவில்லை. அப் பொழுது ஆண்டு கொண்டிருந்த அரசரது பெயரும் பாணபட்ட ரால் குறிப்பிடப்படவில்லை. ஹர்ஷரால் சிந்துவைக் கைப்பற்றி அடிமைப்படுத்த முடியவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. கி.பி. 641-ல் சீன யாத்திரிகரான யுவான் சுவாங் சிந்துவில் சிறிது காலம் இருந்தார். சிந்துவையாண்ட அரசர் சூத்திரர் என்றும், பௌத்த சமயத்தைத் தழுவியவர் என்றும் அவர் எழுதியுள்ளார். சிந்து அரசரின் பெயரை அவர் குறிப் பிடாதது மிகவும் வருந்தத் தக்கது. சிந்து அரசு சுதந்திரமாய் இருந்தது என்றும், அண்டையிலிருந்த மூன்று சிற்றரசுகள் அதற்கு அடங்கியவையாக இருந்தன என்றும் யுவான் சுவாங் தெரிவிக்கிறார். ஆனால், இந்தச் சிற்றரசுகள் யாவை என்பதுவும் குறிப்பிடப்படவில்லை.

சச்செ-நாமா

சிந்து மாநிலம் தார்ப் பாலைவனம் காரணமாக யமுனை-கங்கைச் சமவெளியிலிருந்தும் மற்றக் கிழக்கத்தியப் பகுதிகளி லிருந்தும் துண்டிக்கப் பட்டிருந்தது. அதற்கு மேற்கிலான மக்ரான், பலுசிஸ்தானம் ஆகிய பகுதிகள் நாகரிகத்தில் பின் தங்கிக் கிடந்த மலைவாழ் இனங்களின் இருப்பிடமாக இருந்தன. தெற்கில் கடலால் அது அரண் சூழப்பட்டிருந்தது. இந் நிலை யில் வட இந்தியாவின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடியாமல் சிந்து மாநிலம் தனித்திருந்ததில் வியப் பில்லை. அராபியர்கள் சிந்து அல்லது அஸ்-சிந்து (as-Sind) என்று அழைத்த பிரதேசமானது மூல்தானுக்குத் தெற்கில்

கடற்கரை வரையிலான சிந்துச் சமவெளியின் தென் பகுதியே யாகும். இன்றைய சிந்து மாநிலத்தை மட்டுமின்றி, பலுசிஸ் தானத்தின் பெரும் பகுதியையும் சேர்த்தே சிந்து என்று அராபிய நூலாசிரியர்கள் குறிப்பிட்டனர். இந்தச் சிந்துவுக்கு வடமேற்கில்தான் காபூலிஸ்தான் இருந்தது. இதைத்தான் 'காபிசா' என்று யுவான் சுவாங் அழைத்தார். காபூலுக்குத் தெற்கில் சாபூல் அல்லது சாபூலிஸ்தானம் என்ற பிரதேசம் இருந்தது என்பதை முன்பே குறிப்பிட்டோம். காபூலிஸ்தான் என்பது காபூல் நதிப் பள்ளத்தாக்கே என்பது போல, சாபூலிஸ் தான் என்பது ஹெல்மந்த் (Helmand) நதியின் பள்ளத்தாக்கா கும். காபூலிஸ்தானம், சாபூலிஸ்தானம் ஆகியவற்றின் வரலாறு எப்படித் தெளிவாகப் புலப்படாமல் உள்ளதோ அதே போல் தான் சிந்துவின் வரலாறும் உள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றுண்டு முதல், பேரரசர் அக்பர் கி.பி. பதினும் நூற்றுண்டில் சிந்துவை இணைத்துக் கொண்டது வரை யிலான அந் நாட்டின் வரலாற்றை இருண்ட காலம் என்றே நாம் அழைக்கலாம். அதன்மீது ஆட்சிபுரிந்த இந்து அல்லது பௌத்த அரசர்கள் பிற்காலத்துக்குப் பயன்படக் கூடிய எத் தகைய வரலாற்றுச் சான்றையும் விட்டுச் செல்லவில்லை. ஹர்ஷரது காலம் முதல் கி.பி. 712-ல் முகம்மது காசிம் படை யெடுத்தது வரையிலான காலத்தைப்பற்றி அறிந்துகொள் வதற்கு முக்கியமான சான்றுகளாக உள்ளவை 'சச்செ நாமா' (Chachi-Nama) போன்ற நூல்களாகும். தாரிக்கெ-ஹிந்த்-வ-சிந்த் (Tarikhi-Hind-wa-Sind) என்றும், ஃபத்ஹ் நாமா (Fath-Nama) என்றும்கூட சச்செ நாமா அழைக்கப்படுகிறது. துவக்கத் தில் அராபிய மொழியில் எழுதப்பட்டிருந்த இந் நூலானது முகம்மதலீயெ ஹமீதெ அபூபக்கர் கூஃபி (Muhammad Ali-i Hamid-i Abu Bakr Kufi) என்பவரால் 1216ஆம் ஆண்டில் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. சச் என்ற பிராமணர் ஒரு வரால் நிறுவப்பட்ட வம்சத்தைப்பற்றியும் இந் நூல் குறிப்பிடுவ தால் சச்செ-நாமா என்று இது அழைக்கப்படுகிறது.[1] தாரிகெ-மாசூமி, (Tarikhi Masumi—இந் நூலுக்குத் தாரிகெ-சிந்த் என்ற வேறொரு பெயரும் உண்டு.) துஹ்ஃபத்துல் கிராம் (Tuhfat-ul-Kiram) ஆகிய வேறு இரு நூல்களும்கூடச் சிந்துவின் வரலாறு பற்றிய செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol. I.

ராய் வம்சம்

பிராமணராகிய சச் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றித் தம்முடைய வம்சத்தை நிறுவுவதற்கு முன்னர், ராய் வம்சம் (Rai Dynasty) என்பது ஆட்சி புரிந்ததாக இந் நூல்கள் தெரிவிக்கின்றன. இந்த வம்சத்தைச் சேர்ந்த ஐந்து அரசர்கள் 137 ஆண்டு காலம், அதாவது, சுமார் கி.பி. 485-லிருந்து கி.பி. 622 வரையில் ஆட்சி புரிந்துவந்தார்களென்று அவை தெரிவிக்கின்றன. இவை குறிப்பிடும் ஆண்டுகளும் மற்றுமுள்ள தகவல்களும் பலவிதங்களில் வேறு சான்றுகளுடன் முரண்படுபவையாக உள்ளன எனினும், இவை கூறுவன வரலாற்று அடிப்படையில் ஓரளவு உண்மையானவையே என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

ராய் திவாஜி (Diwaji), ராய் சிஹ்ராஸ் (Sihras), ராய் சாகசி (Sabasi), இரண்டாவது ராய் சிஹ்ராஸ், இரண்டாவது ராய் சாகசி ஆகிய ஐந்து அரசர்களே ராய் வம்சத்தைச் சேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். 'ராய்' என்பது அரசர் என்று பொருள்படும் சொல்லே தவிர வேறில்லை. இந்த ஐந்து அரசர்களும் ஒருவர் பின் ஒருவராகத் தோராயமாகக் கி.பி. 450 முதல் 650 வரையில் ஆட்சிபுரிந்தனர் என்று நாம் வைத்துக் கொள்ளலாம். இவர்களுள் கடைசி அரசரான இரண்டாம் சாகசியின் காலத்திலேயே யுவான் சுவாங் சிந்துவுக்குச் சென்றுர் போலும்! சூத்திர குலத்தவர் என்றும் பௌத்த சமயத்தினர் என்றும் அவர் இவ் வரசரையே குறிப்பிட்டிருக்கலாம். ராஜஸ்தானத்தில் சித்தூர்ப் பகுதியில் ஆட்சிபுரிந்துவந்த தம் உறவினரான சிற்றரசர் ஒருவரை இரண்டாம் சாகசி போரில் கொன்றுர் என்று துஹ்ஃபத்துல்-கிராம் கூறுகிறது. சித்தூர்ப் பகுதியில் அப்பொழுது பரமார இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினராகிய மோரிகள் அல்லது மௌரியர்கள் என்போர் ஆண்டுவந்தனர். இவர்கள் சாகசிக்கு உறவினர்களாய் இருந்தனர் என்று சொல்லப்படுவதால், இவர்கள் சூத்திரர்கள் என்ற யுவான் சுவாங்கின் சான்றை ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது.

சாகசியின் தலைநகரம் அர்-ரூர் (ar-Rur) என்று முஸ்லிம் நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அலோர் (Alor) என்பதே இவ்வாறு குறிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இது ரோஹிரி (Rohri) என்ற பெயரில் சிந்து நதியின் இடது கரையில் சிதைவுற்ற நிலையில் இன்றும் உள்ளது. சாகசிக்குக் கீழ்ப்பட்டவர்களாக மூன்று அல்லது நான்கு சிற்றரசர்கள் அண்டையில்

ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களுள் ஒருவர் லோகன (Lohana) வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் பிராமணுபாத் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தார். அவ்வூர் சிந்துவில் உள்ள ஐதராபாதுக்கு அருகில் எங்கோ இருந்தது. அலோருக்குத் தெற்கில் அது இருந்திருக்க வேண்டும். தேபல் (Debal) என்ற கடற்கரைப் பட்டினம் இந்தச் சிற்றரசிலேயே இருந்திருக்க வேண்டும். மற்ருெரு சிற்றரசர் சிவிஸ்தானத்தை (Siwistan) ஆண்ட ராஜபுத்திரர் ஆவார். பண்டைக் காலத்தில் சிபிகள் (Sibis) என்போர் சிந்து நதியின் மேற்கில் ஆட்சிபுரிந்து வந்ததாக மகாபாரதம் போன்ற நூல்கள் தெரிவிக்கின்றன. அலெக்சாந்தரது படையெடுப்பின்போது இந்த சிபிகள் அவரை எதிர்த்துப் போரிட்டனர். இந்த சிபி நாடே சிபிஸ்தானம் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்டது. (ஜெயத்ரதன் என்ற சிந்து நாட்டரசன் சிபி நாட்டையும் அடக்கி ஆண்டான் என்று மகாபாரதத்தில் கூறப்படுவதை C. V. வைத்தியா அவர்கள் இது பற்றிச் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.)[1] சாகசி விரிவான ஓர் அரசை ஆட்சிபுரிந்தார் என்பது தெளிவு. பௌத்த சமயமே தலையாய சமயமாக அந் நாட்டில் அப்பொழுது விளங்கிற்று.

இரண்டாம் சாகசியின் தந்தையான இரண்டாம் சிஹ்ராஸ் (அல்லது சகிராஸ்) பாரசீகத்தின் ஒரு பகுதியான நிம்ருஸ் (Nimruz) என்ற மாநிலத்தை ஆண்டுவந்த அரசன் ஒருவனோடு சண்டையிட்டுப் போரில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றுக்கு மேல் வேறு முக்கிய செய்தி எதுவும் இந்த ராய் வம்சத்து அரசர்களைப்பற்றிக் கூறப்படவில்லை.

சச் வம்சம்

சச் அரசராதல்

இரண்டாம் சாகசி நோய்வாய்ப்பட்டுக் காலமானார். அவரது அமைச்சராயிருந்த சச் (Chach) என்ற பிராமணர் தம்மையே அரசராக்கிக் கொண்டார். [சச்சா (Chacha) என்பதன் திரிபாகவே சச் என்ற சொல் இருக்கலாம்.] இதை விரும்பாத மாநில ஆளுநர்களும் மற்ற அதிகாரிகளும் சச்சை அரசராக ஏற்றுக் கொள்ள மறுத்தனர் என்று 'சச்செ நாமா' தெரிவிக்கிறது. இந் நிலையில், சாகசியின் விதவை மனைவியைச் சச் திருமணம் செய்து தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டு, தமக்கு அடங்க மறுத்த அதிகாரிகளையும் பிரபுக்களையும்

[1] C. V. Vaidya, *History of Mediaeval Hindu India*, Vol. I.

அடக்கினர். சாகசிக்குப் பிள்ளையில்லையென்று சச்செ நாமாவே தெரிவிக்கிறது. பல்வேறு மாநில ஆளுநர்களையும் சிற்றரசர்களையும் தம் வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் சச் ஒரு படையுடன் சென்று போர்களில் ஈடுபட்டார். காஷ்மீரத்தின் எல்லை வரையிலான பகுதிகளை அவர் வென்றாராம். சாகசியின் தூரத்து உறவினரான சித்தூர் அரசர் சிந்துவின்மீது படையெடுத்து வந்து சச்சை விரட்ட முயன்றார். சச்சின் படைகள் இம் முயற்சியை முறியடித்தன.

பின்னர், சிந்து நதியைக் கடந்து, மக்ரான் பிரதேசத்தில் நுழைந்து, சிவிகளின் (சிபிகளின்) அரசரான மட்டா (Mattah) என்பவரைச் சச் தோற்கடித்து விரட்டினார்; பின்னர், பிராமணாபாதை ஆண்டு கொண்டிருந்த அகம் லோகனு (Agham Lohana) என்ற அரசரின்மீதும் படையெடுத்தார். இவ் வரசர் பௌத்தர் என்று தெரிகிறது. அவரது தலைநகரம் முற்றுகையிடப்பட்டது. நீண்ட முற்றுகையின்போது அகம் இறந்துவிடவே அவரது வாரிசான சிறுவன் தொடர்ந்து போரிட விரும்பாமல், சச்சுக்குப் பணிந்தான். பிராமணரான சச் அப் பகுதியில் வாழ்ந்த பௌத்தர்களுக்கெதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதாகச் சச்செ நாமா தெரிவிக்கிறது.

இவ்வாறு பல பகுதிகளையும் கைப்பற்றிய சச் அவற்றில் வாழ்ந்த லோகனர்கள், ஜாட்டுகள் (Jats) ஆகியோருக்கெதிராகப் பல ஆணைகளைப் பிறப்பித்தார். ஆயுதங்கள், பட்டாடைகள் ஆகியவற்றை அவர்கள் தரிக்கக் கூடாதென்றும், கறுப்பு அல்லது சிவப்பு நிறத்திலான மேல் துணிகளையே அவர்கள் அணிய வேண்டுமென்றும், செருப்பும் தலைப்பாகையுமின்றியே அவர்கள் வெளியில் நடமாட வேண்டுமென்றும், சேணமில்லாத குதிரைகளின்மீதே அவர்கள் சவாரி செய்ய வேண்டுமென்றும் சச் ஆணை பிறப்பித்தாராம். மிகவும் கீழான வேலைகளே இவர்களுக்கெல்லாம் அளிக்கப்பட்டனவாம். இதே கட்டுத் திட்டங்களைப் பின்னர் முகம்மது இப்னு காசிமும் தொடர்ந்து வலியுறுத்தினரென்று சச்செ நாமா குறிப்பிடுகிறது. க்ஷத்திரியர்களும் குடியானவர்களுமாகிய ஜாட்டுகளையும் லோகனர்களையும் இவ்வாறு சச் சிறுமைப்படுத்தியதன் நோக்கம் நமக்குத் தெரியவில்லை. (பின்வரும் பக்கம் 383 பார்க்க.)

தாகர்

சச் எவ்வாண்டில் ஆட்சிக்கு வந்தார், எப்பொழுது அது முடிவுற்றது என்பன தெரியவில்லை. அவருக்குச் சாகசியின்

முன்னுள் மனைவியின்மூலம் தகர்சியா (Daharsiah), தாகர் (Dahar) அல்லது தாகிர் என்ற இரு மகன்கள் இருந்தனர். (சச்சின் மகள் ஒருத்தி காஷ்மீர அரசர் ஒருவருக்குத் திருமணம் செய்து தரப்பட்டிருந்தாள்.) அவ் விருவரும் சிறுவர்களாயிருந்த தாலோ அல்லது வேறு எக் காரணத்தினுலோ சச்சின் தம்பி யான சந்தர் என்பவரே அடுத்த அரசரானுர். ஆயினும், ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் சந்தர் துறவறம் பூண்ட பின், அவரது மகனுன துராஜும் சச்சின் மகன்களும் அரியணைக்குப் போட்டியிட்டனர். துராஜின் தந்தையே முந்திய அரசராயிருந் ததால், அரியணையைப் பெறுவது இவருக்கு எளிதாக இருந்தது. ஆனுல், விடாமுயற்சியுடைய சச்சின் மூத்த மகனுன தகர்சியா சிறிது காலத்திற்குள்ளாகவே துராஜை விரட்டிவிட்டுத் தம் தந்தையின் அரசைப் பெற்ருர். பின்னர், ஒரு பாதியை அவரும், மற்ருெரு பாதியை அவரது தம்பியான தாகருமாகப் பங்கிட்டுக் கொண்டு ஆளத் துவங்கினர். தகர்சியாவும் விரை வில் இறந்துவிடவே, தாகரே அண்ணனின் அரசையும் சேர்த்து ஆளலானுர். தாகர் முப்பத்துமூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்த தாகச் சச்செ நாமா குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில், தாகர் 712 — 33 = கி.பி. 679-ல் அரசராகியிருக்கக் கூடு மென்று நாம் வைத்துக் கொள்ளலாம். ஆனுல், மேலே கூறப் பட்ட முஸ்லிம் நூல்களில் கொடுக்கப்படும் ஆட்சியாண்டுகளின் படி கணக்கிட்டால், பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் முன்பே கவனித்தோம்.

ஆண்டுபற்றிய சிக்கல்கள்

சான்ருக, ஒரே ஒரு சிக்கலை மட்டும் இங்குப் பார்ப்போம். துஹ்ஃபத்துல்-கிராம் என்ற நூல் ராய் அரசவம்சத்தின் ஆட்சிக் காலம் கி.பி. 485-லிருந்து 622 வரையில் (137 ஆண்டுகள்) என்று குறிப்பிடுவதை முன்பே பார்த்தோம். இதன்படி பார்த் தால், கி.பி. 622-ல் இரண்டாம் சாகசி இறந்து, பிராமணரான சச் அரசரானுர் என்று ஆகிறது. ஆனுல், கி பி. 641-ல் சிந்து வுக்கு விஜயம் செய்த யுவான் சுவாங் அந் நாட்டின் அரசர் சூத்திரர் என்பதையும் பௌத்தர் என்பதையும் கண்டார். சச்சும் அவரது குடும்பத்தினரும் பிராமணர்களும் இந்துக்களு மாவர். எனவே, சச் அரியணையைக் கவர்ந்து கொள்வதற்கு முன்னமேயே யுவான் சுவாங்கின் சிந்துப் பயணம் நிகழ்ந் திருக்க வேண்டும். இதனுல் கி.பி. 622-ல் சச் அரசரானுர் என்ற கூற்றினை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தாகரின் முடிவு

சச்சின் காலத்தில் தோற்கடிக்கப்பட்ட சிவிஸ்தானத்து அரசர் மட்டா கனோஜ் அரசருடைய உதவியோடு தாகரின் காலத்தில் படையெடுத்து வந்தார். இப் படையெடுப்பு முறி யடிக்கப்பட்டது. ஓரளவு வலிமைமிக்க அரசராகத் தாகர் இருந் திருக்கக்கூடும். முகம்மது-இப்னு-காசிம்[1] படையெடுத்துவந்து, தாகரைக் கொன்று, சிந்துவைக் கைப்பற்றியதுபற்றிப் பின் வரும் பக்கங்களில் விரிவாகப் படிக்கலாம்.

2. சிந்துவை அராபியர் கைப்பற்றுதல்

அராபியப் படையெடுப்புகள்

அராபியரின் எழுச்சி

அராபிய தீபகற்பத்தில் வலிமையும் வேகமும் மிக்க இளம் அரசு ஒன்றை நிறுவிய பின், கி.பி. 632-ல் நபி நாயகமான முகம்மது காலமானர். இந்த அரசின் வியக்கத்தக்க துரித வளர்ச்சியானது உலக வரலாற்றில் ஒரு விந்தையாகப் பலரால் கருதப்படுகிறது. ஒரு நூற்ருண்டு முடியு முன்பாகவே மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா, ஸ்பெயின் போன்ற பரவலான பகுதிகள் முஸ்லிம் கலீஃபாக்களால் வெல்லப்பட்டன; இஸ்லாமிய பேரரசு உருவாயிற்று. இந்தப் பல திசை வெற்றிகளின் ஒரு பகுதியாகவே இந்தியப் படையெடுப்பையும் முஸ்லிம்கள் நிகழ்த்தினர்.

முகம்மது நபி இறந்த ஐந்தே ஆண்டுகளில் கிழக்கிலிருந்த வலிமைமிக்க பாரசீகப் பேரரசைக் கி.பி. 637-ல் காதிசியா (Cadesia) என்ற போர்க்களத்தில் புதிய அராபியக் குதிரைப் படைகள் வீழ்த்தின. அடுத்த ஐந்தே ஆண்டுகளில் பாரசீகம் முழுவதும் அராபியர்களால் கைக்கொள்ளப் பட்டது. இதை யடுத்து, ஆக்சஸ் நதிக்கரை வரையில் அராபியப் படைகள் வெற்றிமேல் வெற்றி எய்திச் சென்றன. கி.பி. 650ஆம் ஆண்டு வாக்கில் ஆக்சஸ் நதிக்கும் இந்துகுஷ் மலைகளுக்குமிடையிலான பரந்த பிரதேசங்கள் அனைத்தும் அராபியரின் வசமாயின. இந்துகுஷ் மலைகளை அடைந்த பின், அவர்களுக்கு அடுத்த இலக்காக இருந்தது இந்தியாவே.

[1] 'இப்னு' (Ibn) அல்லது 'பின்' (Bin) என்னும் சொல் 'Son of' (மைந்தர்) என்று பொருள்படும். முகம்மது இப்னு காசிம் என்ருல், காசிமின் மைந்தர் முஹம்மது என்பது பொருள். இப்படியே எங்கும் கொள்க.

கடற்படைத் தாக்குதல்

இந்தியாவை வடமேற்கில் சூழ்ந்திருந்த மலை அரண்களை ஊடுருவுவதற்கு நெடுங்காலம் பிடிக்குமென்பதை உணர்ந்த அராபிய அரசர்கள் கடல் வழியாகவும் இந்தியாவைத் தாக்கு வதற்கு ஆரம்பம் முதலே முயற்சிகள் செய்தனர். கி.பி. 634 முதல் 644 வரையில் கலீஃபாவாக இருந்த உமர் (Umar) என்பாரின் காலத்தில் ஹிஜிரா ஆண்டு 15-ல் (கி.பி. 636) அராபியக் கப்பற் படையொன்று பம்பாய்க்கு அருகிலுள்ள தாணுவையும் (Thana) குஜராத்திலுள்ள புரோச்சையும் (Broach) தாக்கிற்று. இத்தகைய ஆரம்பகாலப் படையெடுப்புகளை யெல்லாம்பற்றி பலாதூரியின் நூல் வெகு விரிவாகக் குறிப்பிடுகின்றது.[1] ஏறத் தாழ அதே நேரத்தில் முஸ்லிம் படையொன்று சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த தேபல் (Debal) வளைகுடாவில் கரையிறங்கித் தாக்கலாயிற்று. [புரோச்சை பர்வாஸ் (Barwas) என்றும், தேபலை தேய்புல் (Daibul) என்றும் பலாதூரி குறிப்பிடுகின்றார்.] இம் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன.

சிந்து மாநிலத்துக்கு மேற்கிலான மக்ரான் (Makran) பிரதேசமானது வரண்ட, நீரற்ற, கடத்தற்கரிய மலைப்பிரதேசமாக விளங்கிற்று. இதன் வழியாகப் படையெடுத்துச் செல்வது மிகவும் கடினமென்பதை அராபியப் படைத்தலைவர்கள் கண்டனர். ஆயினும், எட்டுத் திக்கிலும் வெற்றியோடு முன்னேறி வந்த அராபியர்களின் உறுதியை எந்த இயற்கை அரணும் குலைக்க முடியாமற் போயிற்று.

அடுத்த படையெடுப்புகள்

தோல்விகளால் மனம் தளராமல் முஸ்லிம் படைகள் அடுத்தடுத்துப் பல தாக்குதல்களை மேற்கொண்டன. கி.பி. 643-ல் தேபல் துறைமுகமானது மீண்டுமொருமுறை தாக்கப்பட்டது. அராபியப் படைகள் சிறுசிறு வெற்றிகளைப் பெற்றாலும், இறுதியில் தோல்வியே அடைந்தன. முஸ்லிம் படைத்தலைவன் ஒருவன் கி.பி. 643-ல் தேபலுக்கு அருகில் நடந்த போர் ஒன்றில் சிந்து நாட்டரசரான சச்சின் ஆளுநர் ஒருவரால் தோற்கடித்துக் கொல்லப்பட்டதாகச் சச்செ நாமா குறிப்பிடுகிறது. எவ் வழியிலேனும் சிந்துவைக் கைப்பற்ற வேண்டுமென்று கருதிய கலீஃபா உமர் அதைப்பற்றி எல்லாத் தகவல்களையும் தமக்கு அனுப்புமாறு இராக்கில் இருந்த தமது ஆளுநருக்கு ஆணை

[1] *Kitab Futuh al-Buldan* of Baladhuri, Translated into English by Hitti and Murgotten.

யிட்டார். சிந்து அரசு படைவலிமை மிக்கதென்றும், இஸ்லாமிய ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட அது இணங்காதென்றும் ஆளுநரின் அறிக்கை கூறிற்று. அடுத்த கலீஃபாவான உத்மானுக்கும் இதே போன்ற தகவல்களே தெரிவிக்கப்பட்டன. படைகள் கடக்க வேண்டிய மக்ரான் பிரதேசம் 'நீரற்றது; அங்குக் கிடைக்கும் பேரீச்சம் பழங்கள் வற்றி உலர்ந்தவை. சிறு படை அனுப்பப்பட்டால் அதைக் கடப்பது கடினமாயிருக்கும்; பெரும் சேனையை அனுப்பினுலோ உணவும் நீருமின்றி அழிய நேரிடும்,' என்று உத்மானுக்கு அறிவிக்கப்பட்டது.[1] எனவேதான், உமரும் உத்மானும் இந்தியாவுக்குள் தரைப்படையை அனுப்பவில்லை.

பின்னர், கலீஃபாவான அலீயின் காலத்தில் பெரும் படையொன்று அனுப்பிவைக்கப்பட்டது. போலன் கணவாய்ப் பகுதியில் அக்காலத்திலிருந்த கிக்கான் அல்லது கிக்காஞன் (Kikan or Kikanan) என்ற பிரதேசம் வரையில் அப் படை முன்னேறிற்று. ஆனுல், அங்குக் கிக்கான் மக்கள் திரண்டு முஸ்லிம் படையைத் தோற்கடித்து விரட்டினர். முஸ்லிம் படைத்தலைவன் அல்-ஹாரித் (al-Harith) கொல்லப்பட்டான். கி.பி. 660-662-ல் இப் படையெடுப்பு நிகழ்ந்தது. அடுத்தடுத்துப் பல படைகள் கிக்கான்மீது ஏவப்பட்டன. கி.பி. 664-ல் அல்-முஹல்லப் (al-Muhallab) என்பாரின் தலைமையில் அனுப்பப்பட்ட படையொன்று கிக்கானைக் கடந்து, காபூலுக்கும் முல்தானுக்குமிடையிலிருந்த பன்னு (Bannah), அல்-அஹ்வார் (al-Ahwar) ஆகிய இரு நகரங்களையும் கைப்பற்றிற்று. (அல்-அஹ்வார் என்பதே இன்றைய லாகூர் ஆகும்.) ஆனுல், விரைவிலேயே அல்-முஹல்லபும் விரட்டியடிக்கப்பட்டார். கலீஃபா முஆவியா (Muawiyah) போன்ருேரின் காலத்தில் மேலும் மேலும் இத்தகைய படையெடுப்புகள் பல நிகழ்த்தப்பட்டனவென்றும், பல படைத் தலைவர்கள் தோல்வியுற்றனரென்றும் கொல்லப்பட்டனரென்றும் பலாதூரியின் நூலில் குறிப்பிடப்படுகின்றன. மக்ரான் பிரதேசம் இத்தகைய பல முயற்சிகளுக்குப் பிறகு இராக்கின் ஆளுநராக இருந்த சியாத் (Ziyad) என்பாரது முயற்சியினுல் கி.பி. 700க்குச் சற்று முன்னர்க் கைப்பற்றப்பட்டது. வெற்றி பெற்ற இந்த அராபியப் படைகளுக்குத் தளபதியாக இருந்தவர் இப்னுல்-ஹாரி அல்-பாகில்லி (Ibn-al-Harri al-Bahilli) என பலாதூரி தெரிவிக்கிருர். மக்ரான் இவ்வாறு கைப்பற்றப்பட்ட பின், சிந்துவின்மீது தாக்குதல் தொடுக்கும் முயற்சி எளிதாயிற்று.

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol. I; H. C. Ray, *The Dynastic History of Northern India*, Vol. I.

காபூலும் சாபூலும்

இதனிடையில், காபூலையும் சாபூலையும் கைப்பற்றுவதற்கும் அராபியர்கள் பல முயற்சிகள் செய்தனர். இம் முயற்சிகளைப்பற்றி முன்பே சுருக்கமாகக் குறிப்பிட்டோம். சிஜிஸ்தான் அல்லது சீஸ்தான் கி.பி. 650ஆம் ஆண்டு வாக்கில் அராபியர்களால் கைப்பற்றப்பட்ட பின், அங்கு அராபிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். கலீஃபா முஆவியாவின் காலத்தில் (கி.பி. 661-80) சிஜிஸ்தானத்தில் ஆளுநராயிருந்த அப்துர் ரஹ்மான் என்பவர் காபூலை நோக்கிப் படையுடன் சென்று, நீண்ட முற்றுகைக்குப் பின் அதைக் கைப்பற்றினார். பின்னர், அங்கிருந்து தெற்காகச் சென்று, ஹெல்மந்த் பிரதேசமான சாபூலிஸ்தானத்துக்குள்ளும் அவர் படையெடுத்தார். சிறிது காலத்திலேயே அப்துர் ரஹ்மான் திரும்பிச் சென்றவுடன், காபூலிஸ்தானத்தையும் சாபூலிஸ்தானத்தையும் சேர்ந்த இந்துக்கள் கிளர்ந்தெழுந்து முஸ்லிம் படைகளை விரட்டியடித்தனர். சிஜிஸ்தானத்தின் அடுத்த ஆளுநர் மீண்டும் அவர்கள்மீது போர் தொடுத்து அவர்களைப் பணிய வைத்தார். ஆனால், கி.பி. 683-ல் மறுபடியும் காபூலில் கிளர்ச்சியொன்று நடைபெற்றது. அதை ஒடுக்குவதற்காகச் சென்ற சிஜிஸ்தானத்து ஆளுநரும் அவரது படைத் தலைவர்களும் தோற்கடித்துக் கொல்லப்பட்டனர். இதைக் கண்டு தைரியமுற்ற சாபூலிஸ்தானத்து அரசரும் அடுத்த ஆண்டில் கிளர்ச்சி செய்தார். அராபியர்கள் கி.பி. 685-ல் அவரைத் தோற்கடித்துக் கொன்றனர். அடுத்த அரசரான அவரது மகனும் முஸ்லிம்களுக்கெதிராகத் தொடர்ந்து போராடினார். படையெடுத்து வந்த அராபியப் படைகளை மலைப் பகுதி ஒன்றில் சுற்றி வளைத்துக் கொண்டு நெருக்கி ஓர் உடன்படிக்கையில் அவர் கையெழுத்திடுமாறு செய்தார். காபூலை இனித் தாக்குவதில்லை யென்று அராபியப் படைத் தலைவன் உறுதி கூறிய பின்னரே அவனது படைகளால் பத்திரமாக வெளியேற முடிந்தது. ஆனால், இதுபற்றி அறிந்த கலீஃபா இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி, அப் படைத் தலைவனையும் பதவியிலிருந்து அகற்றினார்.

கி.பி. 695-ல் இராக்கின் ஆளுநராக அல்-ஹஜ்ஜாஜ் (al-Hajjaj) நியமிக்கப்பட்டார். காபூலையும் சாபூலையும் பணிய வைப்பதற்காக உபைதுல்லா என்ற படைத் தலைவரை ஹஜ்ஜாஜ் ஏவினார். காபூல், சாபூல் ஆகிய இரு நாடுகளும் ஓரரசராலேயே ஆளப்பட்டு வந்தன என்று தெரிகிறது. அந்த அரசர் ரத்பீல் என்றே பொதுவாகக் குறிக்கப்படுகிறார். அது காபூலையும் சாபூலையும் ஆண்ட அரசர்களின் பொதுப் பெயராக இருக்க

வேண்டுமென்பதை முன்பே பார்த்தோம். ரத்பீலும் அவரது சிற்றரசர்களும் சேர்ந்து உபைதுல்லாவின் படையைப் படு தோல்வியுறச் செய்தனர். திரும்பிச் செல்லும் வழி நெடுகிலும் அராபியப் படையினர் தாக்கப்பட்டு ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர். ஒரு சிலராலேயே உயிருடன் தப்ப முடிந்தது. அதிர்ச்சியும் துயரமும் காரணமாக உபைதுல்லா உயிர் நீத்தார். இச் செய்தியை அறிந்த ஹஜ்ஜாஜ் பஸ்ரா (Basra), கூஃபா (Kufa) ஆகிய நகரங்களில் பெரும் போர் வரி யொன்றை வசூலித்து, பெரும் சேனையொன்றைத் திரட்டி, அப்துர் ரஹ்மானின் தலைமை யில் அனுப்பி வைத்தார். இப் பெரும் சேனையானது கி.பி. 699-ல் சாபூலைக் கைப்பற்றி, அந் நாடு முழுவதையும் சூறை யாடிற்று. ஆனால், ஒரு சில மாதங்களிலேயே ஹஜ்ஜாஜுக்கும் அப்துர் ரஹ்மானுக்குமிடையில் வேற்றுமைகள் தோன்றின. ஹஜ்ஜாஜின் தண்டனைக்குப் பயந்து, அவர்மீதே போர் தொடுத் தார் அப்துர் ரஹ்மான். இராக்குக்குள் நுழைந்து ஹஜ்ஜாஜின் ஒரு தலைநகரமான பஸ்ராவையே ரஹ்மான் கைப்பற்றினர். ஆயினும், கலீஃபாவின் உதவியோடு ரஹ்மானைச் சீக்கிரமே தோற்கடித்து விரட்டினர் ஹஜ்ஜாஜ். படைகளையெல்லாம் இழந்து, முன்னாள் பகைவரான சாபூல்-காபூல் அரசரான ரத்பீலிடமே ரஹ்மான் அடைக்கலம் புகவேண்டிய நிலை உரு வாயிற்று. ஓராண்டுக்குப் பிறகு இந்து அரசர் ஹஜ்ஜாஜுடன் ஒத்துப்போக எண்ணி, ரஹ்மானைக் கொலை செய்து, அவரது தலையைப் பஸ்ராவுக்கு அனுப்பி வைத்தார். இதனால் மகிழ்ந்த ஹஜ்ஜாஜ் ரத்பீலுடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டார். ஏழு அல்லது ஒன்பது ஆண்டுகளுக்கு அவரது நாட்டின்மீது படையெடுக்கப்படமாட்டாது என்றும், அதுவரை யில் ஆண்டுதோறும் ரத்பீல் கப்பம் செலுத்தி வரவேண்டுமென் றும் இந்த உடன்படிக்கை கூறிற்று. கி.பி. 713-ல் ஹஜ்ஜாஜ் இறக்கும் வரையில் இந்த உடன்படிக்கை இரு தரப்பினராலும் பின்பற்றப்பட்டது. ஆனால் ஹஜ்ஜாஜ் இறந்த பின், ரத்பீல் கப்பம் செலுத்துவதற்கு மறுத்துவிட்டார்.

காசிமின் சிந்துப் படையெடுப்பு

காரணங்கள்

ஹஜ்ஜாஜின் காலத்தில் சிந்து நாட்டின்மீதும் படையெடுப் பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைக்கும் பாரசீகம், அராபியா ஆகிய நாடுகளுக்குமிடையில் வாணிபப் போக்குவரத்து ஏற்கெனவே துவங்கிவிட்டது. சிந்து மாநிலத் தின் கடற்கரையோரமாக இத்தகைய கப்பல்கள் செல்லும்

போது கடற் கொள்ளைக்காரர்களால் அவை அடிக்கடி தாக்கப் பட்டிருக்க வேண்டும். சிந்துக் கரைப் பகுதி கடற் கொள்ளைக் காரர்கள் மிகுந்ததாக இருந்தது என்பதை யுவான் சுவாங்கே குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கடற் கொள்ளைக்காரர்களின் தாக்குதல் ஒன்றே சிந்துவின்மீது முகம்மது இப்னு காசிம் படை யெடுப்பதற்குக் காரணமாயிருந்தது. ஆயினும், இதை மட்டுமே காரணமாகக் கருதுவது தவறாகும். எல்லாத் திசைகளிலும் படையெடுத்துப் பல்வேறு நாடுகளையும் கைப்பற்றி ஆளவேண்டு மென்ற கலீஃபாக்கள், அவர்களது ஆளுநர்கள் போன்றோரின் ஆசைகளே அடிப்படைக் காரணமாகும். இத்தகைய படை யெடுப்புகளின் போது நாடு நகரங்கள் சூறையாடப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் மலை போன்ற செல்வங்கள் இந்த ஆசைகளை மேலும் தூண்டி விட்டன. முஸ்லிம் ஆட்சியாளர்களின் இந்த ஆதிக்க ஆசைக்கும் பொருளாசைக்கும் இஸ்லாமிய சமயம் ஒரு போர்வையாக விளங்கிற்று. நபிநாயகத்தின் சமயத்தைப் பரப்புவது முஸ்லிம் போர் வீரன் ஒவ்வொருவனின் கடமை யாகுமென்று ரத்தம் கொதிக்கப் பிரசாரம் செய்து, முஸ்லிம் இளைஞர்கள் போருக்கும் கொலைக்கும் தூண்டப்பட்டனர். சுய நலமும் பேராசையும் பிடித்த தமது அரசர்கள், ஆளுநர்கள், பிரபுக்கள், படைத்தலைவர்கள் ஆகியோரின் இந்தச் சமயவெறிப் பிரசாரத்துக்கு லட்சக்கணக்கான இளைஞர்கள் பலியாயினர். அவர்களின் வீரத்தைக் கொட்டி, நாடுகள் பிடிக்கப்பட்டு, பேரரசு உருவாக்கப்பட்டது. நாடுகள் பிடிக்கப்பட்ட பின் வழக்கம் போல இந்த இளைஞர்களின் தியாகம் மறக்கப்பட்டு, முஸ்லிம் பிரபுக்களின் (Muslim aristocracy) ஆதிக்கமே எங்கும் நிலைபெற்றது.

காசிமின் சிந்துப் படையெடுப்புக்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சிபற்றிச் சற்று மாறுபட்ட கதைகளை முஸ்லிம் நூலாசிரியர் கள் கூறுகின்றனர். அப்பொழுது அராபியப் பேரரசின் கலீஃபா வாக[1] இருந்தவர் வலீத் (Walid, 705-15 A.D.) என்பவராவார். இராக்கிலுள்ள பாக்தாத் நகரம் அவரது தலைநகராயிருந்தது. அவருக்கு இலங்கையிலிருந்து முத்து, நவரத்தினங்கள் ஆகிய வற்றை இலங்கை அரசர் பரிசுப் பொருளாக ஒரு கப்பல் மூலம் அனுப்பி வைத்தாராம். அதே கப்பலில் முஸ்லிம் ஆண்களும் பெண்களும் ஹஜ் யாத்திரைக்காகப் பயணம் செய்தனராம். தமது நாட்டில் இறந்து போன சில அராபிய வணிகர்களின் அநாதைப் பெண்களை அக் கப்பலில் இலங்கை அரசர் அனுப்பி

[1] 'கலீஃபா' என்னும் அரப் சொல், 'பிரதிநிதி' என்று பொருள்தரும். இச் சொல்லே Caliph என்று மருவிற்று.

வைத்தாரென்றும் வேறு கதைகள் கூறுகின்றன. இலங்கை அரசர் இஸ்லாமிய சமயத்தைத் தழுவி, கலீஃபாவுக்குக் காணிக்கையாக விலையுயர்ந்த பொருள்களை அனுப்பினாரென் கிறது இன்னொரு கட்டுக்கதை. இக் கப்பல் புயற்காற்றில் சிக்கி, சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த தேபல் (Debal) துறை முகத்தில் ஒதுங்க வேண்டியதாயிற்று. அங்கிருந்த கடற் கொள்ளைக்காரர்கள் அதைக் கொள்ளையிட்டனர். அதிலிருந்த செல்வமனைத்தையும் கவர்ந்து சென்றதுடன், முஸ்லிம் பெண் களையும் அவர்கள் கடத்திச் சென்று விட்டனராம்.

இச் செய்தியை அறிந்த அல்-ஹஜ்ஜாஜ் சிந்துவின் அரச ரான தாகர் அல்லது தாகிருக்குக் (Dahar or Dahir) கடிதம் எழுதி, கொள்ளை போன பொருட்களையும் பெண்களையும் மீட்டுத் தர வேண்டுமென்றும், கொள்ளைக்காரர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும் கோரினார். கடற் கொள்ளைக்காரர்கள் தமக்குக் கட்டுப்பட்டவர்களல்லர் என்றும், அவர்களைத் தண் டிப்பதோ கொள்ளை போனவற்றை மீட்பிப்பதோ இயலாதென் றும் தாகர் பதிலளித்தார். உடனே தாகருக்கெதிராகப் படை யொன்றை அனுப்புவதற்குக் கலீஃபா வலீதின் அனுமதியை ஹஜ்ஜாஜ் கோரினார். அனுமதி கிடைத்ததும், படையெடுப்புக் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இந் நிகழ்ச்சி கள் அனைத்தும் கி.பி. 710ஆம் ஆண்டுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும்.

போர் நடவடிக்கைகள்

இப் போருக்குச் செலவிட நேரும் தொகையைப் போல் இருமடங்கு செல்வத்தைச் சிந்துப் படையெடுப்பின் போது படைவீரர்கள் கொள்ளைப் பொருளாகச் (Spoils of war) சம்பா தித்துக் கொள்ளலாமென்று ஆசை காட்டி, கலீஃபா வலீத் அறிக்கையொன்றை வெளியிட்டார். பெரும் சேனையொன்று ஹஜ்ஜாஜின் மற்றொரு தலைநகரமான கூஃபா நகரில் திரட்டப் பட்டது. முதலில் உபைதுல்லா என்பவர் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் நடத்திச் சென்ற படை யானது தாகரால் தோற்கடிக்கப்பட்டது. உபைதுல்லாவும் போரில் கொல்லப்பட்டார். இதற்குப் பின் புதைல்-இப்னு-தஹ்ஃபா (Budail-Ibn-Tahfah) என்பவரின் தலைமையில் மற்றொரு படை அனுப்பி வைக்கப்பட்டது. தேபலுக்கருகில் தாகரின் மகன் ஜெயசிம்மரின் தலைமையில் சிந்து நாட்டின் படையானது புதைலைத் தோற்கடித்தது. புதைலும் கொல்லப்பட்டார்.[1]

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Vol. I; *Cambridge History of India*, Vol. III.

காசிமின் படையெடுப்பு

இரு முறை இவ்வாறு தோல்வியுற்றபின், தம்முடைய மருமகனை முகம்மது இப்னு காசிமின் தலைமையில் மற்றொரு பெரும் சேனையை ஹஜ்ஜாஜ் திரட்டினார். இந்த இளைஞர் துடிதுடிப்பும் போராற்றலும் மிகுந்தவர். சிரியாவிலிருந்து நன்கு போர்ப் பயிற்சி பெற்ற 6,000 குதிரை வீரர்களை கலீஃபா அனுப்பி வைத்தார். நகரத்தின் கோட்டை மதில்களைத் தகர்ப்பதற்கென விசேஷ எந்திரங்களும் காசிமின் படையில் இருந்தன. அவை ஷீராஸ் (Shiraz) துறைமுகத்தில் கப்பல்களில் ஏற்றப்பட்டு முற்கூட்டியே அனுப்பிவைக்கப்பட்டன. முகம்மது இப்னு காசிம் பெரும் படையுடன் மக்ரான் பிரதேசத்தின் வழியாகத் தேபலை நோக்கிச் சென்றார். வழியில் அபுல் அசுவத் ஜஹான் (Abul Aswad Jahan) என்பாரின் தலைமையில் மற்றொரு அராபியப் படையானது காசிமுடன் சேர்ந்து கொண்டது. சிந்துவை அவர் அடையும் பொழுது கிட்டத்தட்ட 25,000 போர் வீரர்கள் அவர் தரப்பில் இருந்தனர்.

தேபலின் வீழ்ச்சி (712)

இன்றைய கராச்சிக்கு அருகில் தேபல் நகரம் இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதன் இடிபாடுகள் இன்றுவரை கண்டறியப் படவில்லை. அந் நகரை அராபியப் பெருஞ்சேனை நெருங்கிய பொழுது தாகர் அதற்குச் சுமார் 150 மைல் தொலைவிலிருந்த தம் தலைநகரான அலோரில் (Alor) இருந்தார். முஸ்லிம்கள் இவ்வாறு படையெடுத்து வருவார்கள் என்பதை இம் மன்னர் எதிர்பார்க்கவேயில்லை என்பது தெரிகிறது. ஒரு சிறிய படையோடு, தம் நாட்டைக் காக்கும் நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமல் அவர் வீணே காலங் கழித்து வந்தார். அலஃபீ (Alafi) என்ற அராபியர் ஒருவரின் தலைமையில் தாகரிடம் 500 பேர்களைக் கொண்ட முஸ்லிம் படையொன்றும் இருந்ததாகச் சச்செ நாமா தெரிவிக்கிறது. தேபலில் 4,000 துருப்புகள் மட்டுமே அப்பொழுது இருந்தன. இந் நகரை 25,000 பேர்களைக் கொண்ட முஸ்லிம் சேனை சூழ்ந்து கொண்டது. கலீஃபாவால் முகம்மது ஹாருன் (Harun) என்பவரின் தலைமையில் முற்கூட்டியே அனுப்பப்பட்டிருந்த முற்றுகை எந்திரங்கள் கரையிறக்கப்பட்டு அந் நகரின் மதில்களைத் தகர்த்தன. கல்லெறி எந்திரங்கள் நகரின்மீது பெரும் கற்களை மாரியெனச் சொரிந்து பெருஞ் சேதத்தை உண்டுபண்ணின. சிந்து அரசரின் குடிமக்களில் சிலர் பகைவருடன் ஒன்றுகூடி, நகரத்தின் ஆலய கோபுரத்தின்மீது பறந்து கொண்டிருந்த

சிவப்பு நிறக் கொடியை அறுத்து வீழ்த்துமாறு தூண்டினராம். ஒரு கல்லினால் அந்தக் கொடிக் கயிறு அறுத்து வீழ்த்தப்படுமானல், அந் நகரின் வீழ்ச்சி உறுதியாகிவிட்டது என்று மூட நம்பிக்கையுள்ளோர் கருதினர். உடனே சிந்துப் படைகள் நம்பிக்கை தளர்ந்தனவாம். அராபியர்கள் ஏணிகள் மீதேறி மதிலைத் தாண்டி நகருக்குள் குதித்தனர். மூன்று நாட்கள் அந் நகரில் கொலையும் கொள்ளையும் தொடர்ந்தனவென்று கூறப்படுகிறது. இஸ்லாத்தை ஏற்க மறுத்த பதினேழு வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆடவரும் கொல்லப் பட்டனரென்றும், பெண்கள், குழந்தைகள் அனைவரும் அடிமைகளாக்கப் பட்டனரென்றும் விவரிக்கப் படுகிறது. சமயப் பித்தில் மூழ்கியிருந்த முஸ்லிம் நூலாசிரியர்கள் பலரும் இவ்வாறு குறிப்பிடுகின்றன ரெனினும், இதை முழுக்க முழுக்க உண்மையென்று எடுத்துக் கொள்வது தவறாகும். ஆலயங்கள் தகர்க்கப்பட்டு அவற்றின் செல்வங்கள் கவர்ந்து கொள்ளப் பட்டன. பல ஆலயங்கள் மசூதிகளாக்கப் பட்டன. கொள்ளைப் பொருட்களில் ஐந்தில் ஒரு பகுதி வழக்கம் போல கலீஃபாவுக்கு ஹஜ்ஜாஜின் மூலமாக அனுப்பி வைக்கப் பட்டது. இவ்வாறு தேபல் நகரம் முகம்மது இப்னு காசிமால் வெல்லப்பட்டது.

தேபலின் ஆளுநராக அப்பொழுது இருந்தவர் ஜகின்புத் (Jahin Budh) என்ற பௌத்தர் எனச் சச்செ நாமா மூலம் நாம் அறிகிறோம். இவர் நகரிலிருந்து தப்பித்து நெரூன் (Nerun) என்ற விடத்திலிருந்த ஜெயசிம்மரிடம் (தாகரின் மகன்) சென்று சேர்ந்து கொண்டார்.

நெரூனின் வீழ்ச்சி

தேபலைக் கைப்பற்றியபின், புதிய நிர்வாக ஏற்பாடுகளைச் செய்வதற்கென முகம்மது இப்னு காசிம் சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார். ஹஜ்ஜாஜுடன் ஒட்டகமேறிகள் மூலமாக இடைவிடாத தகவல் தொடர்புகள் நடந்து வந்தன. முதல் வெற்றிக்குப் பின் முஸ்லிம் படைவீரர்களின் உற்சாகமும் நம்பிக்கையும் மேலும் அதிகரித்தன. தேபலின் பாதுகாப்புக்காக 4,000 பேர்களைக் கொண்ட படையொன்றை அங்கே நிறுத்திவிட்டு, நெரூன் நகரை நோக்கி முகம்மது இப்னு காசிம் புறப்பட்டார். தேபலுக்கு வடகிழக்கில் 75 கல் தொலைவில் இன்றைய (சிந்து) ஐதராபாதுக்குச் சற்றுத் தெற்கில் சிந்து நதியின் மேற்குக் கரையில் இந் நகரம் அமைந்திருந்தது. ஏழு நாட்கள் பயணம் செய்த பின், அந்நகரை முஸ்லிம் சேனை நெருங்கிற்று.

அந் நகரிலிருந்த ஜெயசிம்மர்[1] தம் தந்தையின் ஆணையின்பேரில் சிந்து நதியைக் கடந்து, பிராமணாபாதுக்குப் பின்வாங்கினர். அந் நகரின் ஆளுநரான பௌத்தர் ஒருவரும் பௌத்த சந்நியாசிகளும் தங்கள் நகரை அழிவிலிருந்து காப்பதற்காக முகம்மது இப்னு காசிமின் முகாமுக்குச் சென்று பணிந்து போக இணங்கினர். இதற்குக் கைம்மாருக அந் நகரை அழிப்பதில்லை யென்று முகம்மது உறுதி கூறினர். இதன் பின்னர், அவரது படைகள் எதிர்ப்பின்றி நெருனுக்குள் நுழைந்தன. அங்கு மசூதி ஒன்றினைக் கட்டி, பாதுகாப்புக்கும் நிர்வாகத்துக்குமான ஏற்பாடுகளைச் செய்த பின், சிவிஸ்தானத்தை நோக்கி முகம்மது முன்னேறினர்.

மற்ற நகரங்களின் வீழ்ச்சி

அடுத்தபடியாக, முகம்மது இப்னு காசிம் சிவிஸ்தானத்தை நோக்கிப் புறப்பட்டார். இப் பகுதியைச் சேர்ந்த சிவி அல்லது சிபி மக்கள் முன்னுள் சிந்து அரசரான சந்தரின் மகன் ஒருவரால் ஆளப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இதன்படி பார்த்தால், அவர் தாகரின் சிற்றப்பர் மகனுவார். அவரது பெயர் பச்ரா (Bachra) என்று குறிக்கப்படுகிறது. வஜ்ரா அல்லது வத்சராஜா என்ற ஏதோ ஒரு பெயரே இவ்வாறு முஸ்லிம் நூலாசிரியரால் அழைக்கப்படுகிறது என்பதில் ஐயமில்லை. அவரது தலைநகரமா யிருந்த மதில் சூழ்ந்த ஒரு நகரை முஸ்லிம் சேனை முற்றுகை யிட்டது. அவ்வூரிலிருந்த பௌத்த பிட்சுகளும் வணிகர்களும் போரிடாமல் பகைவருக்குப் பணிந்து போகுமாறு தம் அரசனை வேண்டினராம். இவ் வேண்டுகோளை நிராகரித்து, பச்ரா போரை நடத்தினர். இறுதியில், தோல்வி உறுதி என்ற நிலை ஏற்பட்ட போது அவரும் அவரது ஆட்களும் நள்ளிரவில் பூதியா (Budhia) நகருக்குப் பின்வாங்கினர். ஒரு வார முற்றுகைக்குப் பிறகு இவ்வாறு சிவிஸ்தானத்தின் தலைநகரம் முகம்மதுவால் கைப்பற்றப்பட்டது. அவ் ஊரிலிருந்த செல்வங்கள் கொள்ளை யிடப்பட்டன. பின்னர், அராபியப் படை பூதியாவை நோக்கிச் சென்றது. அவ்வூரும் எளிதில் கைப்பற்றப் பட்டது. இதன் பின்னர், கும்ப் (Kumbh) என்ற நதியின் கரையிலிருந்த ஜாட்டுகளின் நகரமான சிசாமையும் (Sisam) முகம்மது கைப் பற்றினர்.

சிந்து நதிக்கு மேற்கிலான பிரதேசத்தில் இருந்தபொழுது, ஒரு குறுநில மன்னனுக விளங்கிய மொக்கா (Mokha) என்பவரின் எதிர்பாராத உதவி முகம்மதுவுக்குக் கிடைத்தது. இவர்

[1] தாகரின் மகன் 'ஜெய்சியா' என்று முஸ்லிம் நூலாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறர். இது ஜெயசிம்மர் (அல்லது ஜெய்சிங்) என்பதன் திரிபாகவே இருக்கக்கூடும்.

தாகரைக் கைவிட்டு, வெல்லும் கட்சியான முகம்மதுவுடன் சேர்ந்துகொண்டு அவருக்குப் பலவிதங்களிலும் உதவிபுரிய முன் வந்தார். இதற்குக் கூலியாகச் சிந்து நதியின் மேற்குக் கரையில் ஒரு பிரதேசம் அவருக்கு வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பல்வேறு நகரங்களிலும் சிறு சிறு அராபியப் படைப் பிரிவுகளை நிறுத்த வேண்டியிருந்ததால், முகம்மதுவின் படையானது இப்பொழுது மிகவும் சுருங்கி விட்டது. எனவே, ஹஜ்ஜாஜிடமிருந்து புதிதாக 2,000 குதிரை வீரர்கள் இப்பொழுது வந்து சேர்ந்தனர். போர்த் திறமை மிகுந்த ஜாட்டுகளும் 4,000 போர் வீரர்களைத் தந்து உதவி புரிந்தனர். ஜாட்டுகளிடையில் எழுந்த ஒரு கிளர்ச்சியை அடக்கிவிட்டு, சிந்துவின் மேற்குக் கரையிலேயே இரண்டு மாதங்கள் முகம்மது காலந்தாழ்த்தினுர். இதை யறிந்த ஹஜ்ஜாஜ் வெகுண்டு, உடனடியாகச் சிந்து நதியைக் கடந்து தாகரைத் தாக்குமாறு ஆணையிட்டார்.

தாகரின் மரணம்

மொக்கா போன்ருேர் அளித்த படகுகளில் முகம்மது இப்னு காசிமின் படை சிந்து நதியைக் கடந்து, கிழக்குக் கரையை அடைந்தது. தாகரும் போருக்கான ஏற்பாடுகளை ஏற்கெனவே மேற்கொண்டிருந்தார். ஜெயசிம்மரின் தலைமையிலான ஒரு படை அராபியர்களின் முன்னேறும் வழியைத் தடுத்து நின்றது. அதற்குப் பின்னுல் தாகரின் படையும் போருக்குத் தயாராக நின்றது. சிந்துப் படையில் ஏறத்தாழ 50,000 வீரர்கள் இருந்தனர் என்று சொல்லப்படுகிறது. இதன் பெரும் பகுதி போர்ப் பயிற்சியில்லாத காலாட் படையாகும். ரவார் (Rawar or Raor) என்ற ஊருக்கருகில் பல நாட்கள் சிறு சிறு கைகலப்புகள் நடந்தபின், கி.பி. 712ஆம் ஆண்டு, ஜுன் 20-ல் கடும் போர் மூண்டது. அராபியர்களுக்கு மொக்கா, அவரது தம்பியான ராசீல் (Rasil) போன்ற பல ஜாட்டுகளும் தாக்கூர்களும் (Thakurs) உதவிபுரிந்தனர். தாகர் யானையின் மீதமர்ந்து போர் நடத்திக் கொண்டிருந்தார். தாகரது மகன் ஜெயசிம்மர் வலது அணியையும், தாகரின் அண்ணன் மகன் ஜாகின் (Jahin) இடது அணியையும் தலைமை தாங்கி நடத்தினர். மாலை நான்கு மணியளவில் அராபியர்கள் விடுத்த நெருப்பு அம்புகள் தாகரின் யானைமீது விழவே அது அச்சமுற்று ஓடலாயிற்று. தாகரும் யானைப் பாகனும் கீழே தள்ளப்பட்டனர். உடனே அராபியர்களது சிறு படையொன்று அவர்களைச் சூழ்ந்து கொண்டு கொன்றதாம். யானைமீதமர்ந்திருந்த தாகர் அராபியரின் அம்பு நெஞ்சில் பாய்ந்து வீழ்ந்திறந்தார் என்றும் கூறப்படுகிறது.

இதன் பின்னர்த் தாகரின் படைகள் புறமுதுகு காட்டி ஓடலாயின. ஜெயசிம்மர் பிராமணுபாதுக்குப் பின்வாங்கினார்.[1]

தாகரின் மனைவியான அரசி ராணிபாய் ரவார் கோட்டையிலிருந்தார். முஸ்லிம் படைகள் அக் கோட்டையைச் சூழ்ந்து தாக்கின. அரசியும் மற்றப் பெண்களும் தீக்குளித்து மாண்டனர். இதன் பின்னர், முஸ்லிம் படையானது அக் கோட்டையையும் கைப்பற்றிற்று.

பிராமணுபாதின் வீழ்ச்சி

ரவாரிலிருந்து பிராமணுபாதை நோக்கி முஸ்லிம் படை சென்றது. ஜெயசிம்மர் பெரும் படையொன்றுடன் அங்குப் பகைவருக்காகக் காத்திருந்தார். வழியிலிருந்த பஹ்ரோர் (Bahror), தஹ்லிலா (Dahlila) என்னும் இரு நகரங்களையும் கைப்பற்றிய பின், பிராமணுபாதையும் முஸ்லிம் சேனை அணுகிற்று. இரவு முழுவதிலும் முஸ்லிம் படைகள் கடுந் தாக்குதலுக்குள்ளாயின. ஆயினும், பகைவனுக்கெதிராகப் போரிட்டு வெல்வது கடினமென்பதை உணர்ந்து ஜெயசிம்மர் படையுடன் ஒரு பகுதியை மட்டும் பிராமணுபாத் கோட்டைக்குள் நிறுத்தி விட்டு, மற்றொரு பகுதியுடன் பாலைவனத்துக்குப் பின்வாங்கினார். மொக்கா போன்றோரின் உதவியோடு, நீண்ட முற்றுகைக்குப் பிறகு, பிராமணுபாதை முகம்மதுவின் படைகள் கைப்பற்றின. அக் கோட்டையிலிருந்த தாகரின் மற்றொரு மனைவியான ராணி லாதி (Rani Ladi) என்பவரும் அவரது பெண்களான சூரியதேவி, பரிமளதேவி ஆகியோரும் முகம்மதுவால் சிறைப்பிடிக்கப் பட்டனரென்று சொல்லப்படுகிறது. ஜெயசிம்மருக்கெதிராக அனுப்பப்பட்ட ஒரு படை அவரைத் தோற்கடித்துச் சித்ரூர் (Chitrur) என்ற ஊருக்கு விரட்டியடித்தது. முக்கியமான நகரங்களுள் ஒன்றான பிராமணுபாதின் வீழ்ச்சி முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் வெற்றியாகும். சிந்து மாநிலத்தின் தென் பகுதி முழுவதும் இவ்வாறு அராபியர் வசமாயிற்று.

அலோர் கைப்பற்றப்படுதல்

பிராமணுபாதிலிருந்து வடக்கு நோக்கி முஸ்லிம் சேனை சென்றது. வழியில் முஸ்தல் (Musthal) போன்ற பல நகரங்கள் கைப்பற்றப்பட்டன. (முஸ்லிம் நூலாசிரியர்கள் சொல்லும் நகரங்களின் பெயர்களைக் கொண்டு அவற்றில் பலவற்றை அடையாளங் கண்டு கொள்ள இயலவில்லை.) அங்கு வாழ்ந்த

[1] See Chach-Nama in Elliot's *History of India as told by its own Historians*, Vol. I.

பிராமணர்கள், பௌத்தர்கள், ஜாட்டுகள் முதலிய பலரும் பகைவர் முன் பணிந்தனர். இறுதியில், சிந்து அரசின் தலைநகரமும் சிந்து அரசிலேயே மிகவும் பெரியதுமான அலோர் நகரத்துக்கு (இதை அரோர்—Aror என்று சச்செ நாமா போன்ற நூல்கள் குறிக்கின்றன.) அராபியப் படை வந்தது. ஜெயசிம்மரின் தம்பியான ஃபூஃபி (Fufi) என்பவர் அதைக் காத்துப் போரிட்டாரென்று சொல்லப்படுகிறது. வெற்றியில் நம்பிக்கையிழந்த குடிமக்களும் வணிகர்களும் முகம்மது இப்னு காசிமுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பினர். எனவே, ஃபூஃபி அந் நகரை விட்டோடி, சித்ருரிலிருந்த (இது ராஜஸ்தானத்திலுள்ள சித்தூரே என்று C. V. வைத்தியா கருதுகிறார்) ஜெயசிம்மருடன் சேர்ந்து கொண்டார். அலோரும் வழக்கம் போலக் கைப்பற்றப் பட்டுப் படுகொலைக்கும் பெரும் சேதத்துக்கும் உள்ளாயிற்று.

மூல்தான் கைப்பற்றப்படுதல்

சிந்து அரசின் வடகோடியிலிருந்த மூல்தான் நகரை நோக்கிக் கி.பி. 713ஆம் ஆண்டின் துவக்கத்தில் முகம்மது இப்னு காசிம் படையுடன் சென்றார். வழியில் பீஸ் (Beas) நதியின் கரையில் பாபியா (Babia) என்றவிடத்தில் முன்னாள் அரசர் சந்தரின் மகன்களுள் ஒருவரான கக்சர் (Kaksa) என்பவர் போரிடுவதில் பயனில்லை என்பதையுணர்ந்து பணிந்தார். தாகரின் கருவூல அமைச்சராக இருந்தவர் இவர். பின்னர், கோல்கொண்டா (Golkondah) என்ற ஒரு நகரமும் கொடூரமான படுகொலைக்குப் பின் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு பல நகரங்களையும் கோட்டைகளையும் கைப்பற்றிய பின், மூல்தானை முகம்மது முற்றுகையிட்டார். இரண்டு மாதங்கள் முற்றுகை நீடித்த பின், துரோகிகள் சிலரது உதவியுடன் அந் நகரை முஸ்லிம்கள் கைப்பற்றினர். வழக்கம்போல், ஆயிரக்கணக்காேனோர் வெட்டி வீழ்த்தப்பட்டனர். பெருந்திரளான தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவை பகைவர்களுக்குக் கிடைத்தன. அந் நகரில் பெரிய மசூதி ஒன்றை முகம்மது கட்டினார்.

இறுதிப் போர்கள்

கி.பி. 713-ல் மூல்தானைக் கைப்பற்றியபின், முகம்மதுவின் படை நடவடிக்கைகள் குறித்து ஒன்றுக்கொன்று முரண்படும் தகவல்களே தெரியவருகின்றன. கினோஜ் (Quinnauj) என்ற நகரை ஆண்டு கொண்டிருந்த ஜிட்டல் (Jhital) என்ற அரசரது மகன் ஹரிச்சந்திரன் (ஹர் சந்திரன்—Har Chandra) என்பவருடன் முகம்மது அடுத்துப் போரிட்டதாகக் கூறப்படுகிறது.

புகழ்மிக்க நகரமான கனேஜே இங்குக் குறிப்பிடப்படும் கினேஜ் என்று R. C. மஜும்தார் போன்ற பல ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனல், கனேஜும் கினேஜும் ஒன்றே என்ற கூற்றினை H. C. ரே, உல்சி ஹேக் போன்ற ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.[1] கக்கர் (Gaggar) நதிக்கரையில் (கங்கை நதிக்கரையில் அன்று) அல்வானுவுக்குத் (Alwana) தெற்கில் பதினன்கு கல் தொலைவிலிருந்த ஓதிப்பூர் (Odipur) என்ற ஊரிலிருந்த ஹரிச்சந்திரரை நோக்கியே முஸ்லிம் படை சென்றது என்று தெரிவதால், கினேஜ் என்பது முற்றிலும் வேருன ஊர் என்கிருர் பேராசிரியர் ஹேக்.

கினேஜுக்கெதிராக அபூ ஹக்கீம் (Abu Hakim) என்பாரது தலைமையில் 10,000 குதிரை வீரர்களை அனுப்பிவிட்டு, காஷ்மீரத்தை நோக்கி முகம்மது காசிம் சென்ருர் என்கிறது சச்செ-நாமா. அராபிய நூல்களோ, காஷ்மீரத்தையும் கனேஜையும் பற்றி ஒன்றுமே சொல்லாமல், கிராஜ் (Kiraj) என்ற நாட்டை அவர் கைப்பற்றினர் என்கின்றன. இந்தக் கிராஜ் என்பது காங்ராப் பள்ளத்தாக்கான கீரமே (Kira) என்பதில் ஐயமில்லை. காஷ்மீரத்தின் எல்லையிலிருந்த கீரத்தை அவர் வென்றதையே சச்செ நாமா மேற்கூறிய வகையில் குறிப்பிடுகிறது போலும்! மேலும், கனேஜ் அரசரான யசோவர்மனும் காஷ்மீர அரசரான லலிதாதித்தியரும் அராபியப் படையெடுப்புக் காரணமாகவே சீனுவுக்குத் தூதனுப்பினர் என்பதையும் முன்பே குறிப்பிட்டோம். இவ்விருவருமே ஒரு வேளையில் ஒன்று திரண்டு, அராபியப் படைகளை எதிர்த்திருக்கலாம் என்று உணர இடமிருக்கிறது. இவ்வாறு முகம்மது இப்னு காசிமின் படைகள் சிந்து, பஞ்சாப் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியதோடு, அவற்றுக்கு அப்பாலும் சென்று தமது படையெடுப்புகளை நிகழ்த்தின. எனினும், திட்டவட்டமான தகவல்கள் இல்லாத நிலையில் மூல்தானுக்குப் பின் எவ்வெவ்விதமான போர் நடவடிக்கைகளை முகம்மது மேற்கொண்டார் என்பதை முறையாக அறிந்து கொள்ள இயலவில்லை.

முகம்மது இப்னு காசிமின் மரணம் (கி.பி. 715)

மேலும் வெற்றிகளை நிகழ்த்துவதற்கு முன், முகம்மது இப்னு காசிமின் முடிவு எதிர்பாராமல் திடீரென்று நெருங்கிற்று. போர்களில் மட்டுமின்றி, நிர்வாகத் திறமையிலும் முகம்மது சிறந்து விளங்கினர் என்பதை நாம் குறிப்பிட வேண்டும். அவரது

[1] Sir Wolseley Haig, *The Cambridge History of India*, Vol. III: *Turks and Afghans*.

நிர்வாக ஏற்பாடுகள்பற்றிப் பின்னர் விரிவாகப் படிக்கலாம். இவ்வளவு திறமை மிகுந்த இளைஞரான முகம்மதுவின் முடிவு இவ்வளவு விரைவில் நெருங்கியது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

கி.பி. 713ஆம் ஆண்டின் முடிவில் அல்லது அடுத்த ஆண்டின் துவக்கத்தில் முகம்மதுவின் மாமனாரான ஹஜ்ஜாஜ் காலமானார். அடுத்த ஓராண்டுக்குள்ளாகவே கலீஃபா வலீதும் மறைந்தார். அவருக்குப் பிறகு அவரது தம்பியான சுலைமான் அடுத்த கலீஃபாவாகப் பதவியேற்றார். இவர் நெடுங்காலமாகவே ஹஜ்ஜாஜையும் அவரது குடும்பத்தினரையும் வெறுத்தவர். எனவே, ஹஜ்ஜாஜின் உறவினர்கள், அதிகாரிகள் முதலிய அனைவரையும் கொடுமைப்படுத்த இவர் முடிவு செய்தார். யசீத் (Yazid) என்பவர் சிந்துவில் ஆளுநராக நியமிக்கப்பட்டு, முகம்மது காசிம் கைதியாக இராக்குக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கு முகம்மது சிறைப்படுத்தப்பட்டாரென்றும், சங்கிலியால் பிணைக்கப்பட்டுச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டாரென்றும் பலாதூரியின் கிதாப்-ஃபுத்தூஹுல்-புல்தான் (Kitab Futuh al-Buldan) என்ற நூலில் குறிப்பிடப்படுகிறது. இதுவே உண்மையெனத் தெரிகிறது.

இருப்பினும், சச்செ நாமா, தாரிக்கெ-மாசூமி[1] போன்ற நூல்களும் முகம்மது காசிமின் மரணத்துக்குக் காரணமாகச் சில கதைகளைக் கூறுகின்றன. இவை வெறும் கற்பனையே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். வழக்கம் போலப் போர்களில் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன்கூடப் பரிமளதேவியும் சூரிய தேவியும் (சூரஜ் தேவி என்றும் இவரது பெயர் தரப்படுகிறது) புதிய கலீஃபாவுக்கு முகம்மது காசிமால் அனுப்பப்பட்டனராம். தங்களது தந்தையின் மரணத்துக்காக முகம்மது காசிமின்மீது பழிவாங்க வேண்டுமென்று முடிவுசெய்து, இப் பெண்கள் கலீஃபாவிடம் பொய்யொன்றைக் கூறினராம். முகம்மது காசிம் தங்களைச் சிறைப்பிடித்து, மனைவிகளாகச் சிறிது காலம் வைத்திருந்த பின்னரே கலீஃபாவிடம் தாங்கள் அனுப்பப்பட்டதாக இவர்கள் சொல்லினராம். இதனால் சீற்றமுற்ற கலீஃபா உடனே ஓர் ஆணையைச் சிந்துவிலிருந்த அதிகாரிகளுக்கு அனுப்பினாராம். கடிதம் கண்டவுடனேயே மாட்டின் பச்சைத் தோலில்

[1] Tarikh-i-Masumi (alias Tarikh-i-Sindh) of Mir Muhammad Masum of Bhakkra. Extracts from this are given in Elliot, Vol. I. கி.பி. 1600 ஆம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்ட இந் நூல் சிந்துவின் வரலாற்றை முகம்மது காசிம் முதல் அக்பர் வரை தருகிறது. இதன் முதற் பகுதி சச்செ நாமாவை அடிப்படையாகக் கொண்டதே இருப்பினும், முகம்மது காசிமின் வெற்றிக்குக் காரணங்கள் போன்ற பல முக்கியமான தகவல்களை இந் நூல் தந்து உதவுகின்றது.

முகம்மது காசிமை வைத்துத் தைத்துத் தம்மிடம் அனுப்பி வைக்குமாறு அவ்வாணையில் கண்டிருந்தது. கலீஃபாவின் ஆணையை மதிக்கும் இயல்புடைய முகம்மது காசிம் தம்மைத் தாமே பச்சைத் தோலில் அவ்வாறு கிடத்தித் தைத்துக் கொண்டதாகவும், மூன்று நாட்களுக்குப் பிறகு அவரது உயிராகிய பறவை உடலாகிய கூட்டை விட்டகன்று வானுலகம் சென்றதாகவும் மீர் மாசூம் எழுதுகிறார். இதன் பின்னர் அவரது சடலமானது ஒரு பேழையிலிட்டுப் பாக்தாதுக்கு அனுப்பப்பட்டது. முகம்மது காசிம் இவ்வாறு இறந்ததற்குப் பின்னர், தாகரின் பெண்கள் இருவரும் மகிழ்ந்து, தாங்கள் முன்பு கூறியது பொய்க் கதை என்ற உண்மையைக் கலீஃபாவிடம் தெரிவித்தனராம். ஆத்திரமுற்ற கலீஃபா அவர்கள் இருவரையும் குதிரைகளின் வாலில் கட்டி இழுத்தோடச் செய்து கொல்லுவித்தாராம்.

3. சிந்துவில் முஸ்லிம் ஆட்சி

முகம்மது காசிமின் மரணத்துக்குப் பின்

முகம்மது காசிம் இராக்கில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். அவருக்குப் பதிலாகச் சிந்துவில் தளபதியாகவும் ஆளுநராகவும் நியமிக்கப்பட்ட யசீத் சிந்துவுக்கு வந்த பதினெட்டே நாட்களில் காலமானார். எனவே, ஹபீப் (Habib) என்பவர் அடுத்த ஆளுநராகச் சிந்துவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். முஸ்லிமல்லாதார் பெரும்பான்மையிலிருந்த ஒரு நாட்டை முஸ்லிம் அதிகாரிகள் சிலரை மட்டுமே கொண்டு ஆட்சி புரிவது முடியாது என்பதை ஹபீப் நன்குணர்ந்தார். எனவே, பழைய அரச குடும்பத்தினரிடமும் சிற்றரசரிடமும் அவர் மிகுந்த இணக்கத்துடன் நடந்து கொண்டார். முகம்மது காசிமின் காலத்தில் நாட்டிலிருந்து விரட்டப்பட்டிருந்த அரச குமாரர்களும் சிற்றரசர்களும் திரும்பி வருமாறு அழைக்கப்பட்டனர். தாகரின் மகனான ஜெயசிம்மர் திரும்பி வந்து பிராமணாபாதில் முஸ்லிம்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசராகப் பதவியேற்றார். அலோர் நகர் முஸ்லிம் ஆளுநரின் தலைநகராயிற்று. இன்றைய சிந்து மாநிலமும், பலுசிஸ்தானத்தின் ஒரு பகுதியும், பஞ்சாபின் தென்கோடியும் முஸ்லிம் ஆட்சியிலிருந்தன. ஆளுநரான ஹபீப் புதிய பிரதேசங்கள் எதையும் வெல்லும் முயற்சியில் ஈடுபடவில்லை. அங்குமிங்கும் தோன்றிய ஒரு சில கிளர்ச்சிகளை அடக்கியதோடு அவர் நின்றுவிட்டார். சுமார் இரண்டு ஆண்டுகள் இவர் ஆளுநராயிருந்த பின், கி.பி. 717ஆம் ஆண்டில் புதிய கலீஃபாவான இரண்டாம் உமர் (கி.பி. 717-720) ஹபீபுக்குப்

பதிலாக அம்ர் (Amr) என்பவரை அடுத்த ஆளுநராக நியமித்தார். அவரது காலத்தில் இந்து சிற்றரசர்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினால் மட்டுமே தொடர்ந்து பதவியிலிருக்கலாமென்று விதிக்கப்பட்டது. ஜெய சிம்மர் முதற் கொண்டு பலரும் அவ்வாறே முஸ்லிம்களாயினர். இஸ்லாத்தை ஏற்ற பின், அராபியப் பெயர்களை அவர்கள் சூட்டிக் கொண்டனர் என்று பலாதூரி குறிப்பிடுகிறார். ஹல்லிஷா (Hullisha) என்பது ஜெயசிம்மரின் புதிய பெயராயிற்று.

ஜுனைத்

கி.பி. 724 முதல் 743 வரையில் ஹிஷாம் (Hisham) என்பவர் கலீஃபாவாக இருந்தார். அவரது காலத்தில் கி.பி. 725-ல் அப்துர் ரஹ்மானின் மகனான ஜுனைத் என்பவர் சிந்துவில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஓரிரு ஆண்டுகளே இவர் ஆளுநராயிருந்தார் என்றாலும், முக்கியமான சில நிகழ்ச்சிகள் இவரது காலத்தில் நிகழ்ந்தன. ஜெயசிம்மர்மீது ஏதோ காரணம்பற்றி ஜுனைதின் காலத்தில் போர் தொடுக்கப்பட்டது. ஜெயசிம்மர் மீண்டும் இந்துவாக மாறியதே இதற்குக் காரணமாயிருக்கக்கூடுமென்று கருதப்படுகிறது. கலீஃபாவுக்கு வழக்கம் போல் திறை செலுத்துவதாகவும் அடங்கி நடப்பதாகவும் ஜெய சிம்மர் கூறிய பின்னரும், ஜுனைத் அவர்மீது போர் தொடுத்து அவரைத் தோற்கடித்துக் கொன்றார். இந் நடவடிக்கைக்கு எதிராக இராக்குக்குச் சென்று கலீஃபாவிடம் விண்ணப்பம் செய்து கொண்டார் ஜெயசிம்மரின் தம்பியான சச் என்பவர். ஆனால், அவரையும் நண்பர் போல அழைத்துக் கைகுலுக்கிய பின் குத்திக் கொன்றார் ஜுனைத். சச்சின் அரச வம்சம் ஜெய சிம்மருடன் முடிவுற்றது. அக் குடும்பத்தில் எஞ்சியிருந்தவர்கள் ராஜஸ்தானம், காஷ்மீரம் போன்ற இடங்களுக்குச் சென்று வாழலாயினர்.

சிந்துவுக்கு அப்பாலிருந்த பல பகுதிகளின்மீதும் ஜுனைதின் காலத்தில் படையெடுக்கப்பட்டது. உஜ்ஜெயினி, புரோச், பின்மால், ஏதோ ஒரு கூர்ஜர அரசு (இந்தக் கூர்ஜர அரசு கட்ச் பகுதியாக இருக்கக்கூடுமென்று எலியட் கருதுகிறார்.) முதலிய பலவற்றின்மீது ஜுனைத் படையெடுத்துச் சென்றார் என்று பலாதூரி எழுதுகின்றார். அண்டையிலிருந்த பல பகுதிகளின்மீது ஜுனைத் படையெடுத்திருக்கக் கூடுமென்பதை லாட்டத்தைச் சேர்ந்த சாளுக்கியச் சிற்றரசரான புலிகேசி அவனி ஜனாஸ்ரயரது கி.பி. 738ஆம் ஆண்டைச் சேர்ந்த நவ்சாரி (Nausari) செப்பேடு தெரிவிக்கிறது. தாஜிக் (அராபிய) படையொன்று

சிந்து, கட்ச், சௌராஷ்டிரம் போன்ற இடங்களின் வழியாக வந்ததென்றும், நவ்சாரிக்கு அருகில் தன்னால் அது தோற்கடிக் கப்பட்டதென்றும் அச் செப்பேட்டில் அச் சிற்றரசர் கூறிக்கொள் கிறார். கூர்ஜரப் பிரதிகார அரசரான முதலாம் போஜரது குவாலி யர்க் கல்வெட்டு, கி.பி. 725ஆம் ஆண்டு வாக்கில் அவந்தியில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த அவரது முன்னோரான நாகபட்ட ரால் மிலேச்சப் படையொன்று தோற்கடிக்கப்பட்டதாகக் கூறு கிறது. அல்பெருனியும் சமணப் பிரபந்த ஆசிரியர்கள் பலரும் அராபியர்களின் பல தாக்குதல் காரணமாகப் புகழ்மிக்க கடற் கரைப் பட்டினமான வலபீ சேதமுற்றது என்பதைத் தெரிவிக் கின்றனர்.[1] கிராஜ் (அல்லது கீரத்தை) மறுபடியும் ஜுனைத் வென்று கைப்பற்றினார் என்று கூறப்படுகிறது.

ஆயினும், இத்தகைய படையெடுப்புகளினால் புதிய பிரதேச மெதையும் ஜுனைதால் கைப்பற்ற முடியவில்லை. மேலும், நாடு நகரங்களைக் கொள்ளையிடுவதே ஜுனைதின் நோக்கமாக இருந் திருக்கக்கூடும். இவரது முயற்சிகள் மெச்சத்தக்கன என்ப தாலோ அல்லது வேறு ஏதோ காரணத்தினாலோ அராபியப் பேரரசின் கிழக்குப் பகுதிக்கு ஆளுநராக ஜுனைத் மாற்றப்பட் டார். முக்கியமல்லாத சிந்துவைவிட்டு, அதி முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு மாநிலத்துக்கு மாற்றப்பட்டது ஜுனைதுக்கு அளிக்கப்பட்ட முக்கியப் பதவியுயர்வாகும்.

ஹக்கம்

ஜுனைதுக்குப் பின், தம்மீம் (Tammim) என்பவர் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் தாராளமும் பெருந் தன்மையும் மிக்கவர் என்பதற்குமேல் இவரைப்பற்றிப் பலாதூரி யின் நூலில் எச் செய்தியுமில்லை. இவருக்குப் பின் ஹக்கம் (Hakam) என்பவர் சிந்துவின் ஆளுநரானார். இஸ்லாமிய சமயத்தைச் சிந்துநாட்டில் பலரும் கைவிட்டுவிட்டதையும், முன்பு போலவே விக்கிரக வழிபாட்டில் அவர்கள் ஈடுபட்டதை யும் அவர் கண்டார். முஸ்லிம்கள் பத்திரமாக வாழ்வதற்கென மஹ்ஃபூசா (Mahfuza) என்ற ஒரு நகரை ஏரிகரை ஒன்றில் நிறுவி, அதையே புதிய தலைநகராகவும் அவர் ஆக்கினார். மஹ்ஃபூசா என்ற சொல்லுக்குப் 'பாதுகாப்புள்ளது' என்பது பொருள். முகம்மது இப்னு காசிமின் மகனான அம்ர் அல்லது அம்ரு (Amr or Amru) என்பவர் ஹக்கமுக்கு அடுத்த உயர் அதிகாரியாக இருந்து வந்தார். இவ்விருவருமாகச் சேர்ந்து

[1] Dr. H. C. Ray, *The Dynastic History of Northern India*, Vol. I. and Dr. Edward E. Sachau, *Alberuni's India*.

இந்துக்களை முஸ்லிம்களாக மாற்றுவதற்குப் பெருமுயற்சி செய்தனர். கிளர்ச்சி செய்தோரையும் மற்றுமுள்ள பகைவர்களையும் இவர்கள் கொன்று குவித்தனர். ஹக்கமின் காலத்தில் மன்சூரா (Mansurah) என்ற புதிய நகரை அம்ரு கட்டியெழுப்பினுர். பின்னர், சிந்துவின் தலைநகரானது இந் நகரமே. அல்-இத்ரீசி (al-Idrisi) என்பார் அப்பாசி வம்சத்து கலீஃபாவான அல்-மன்சூராலேயே மன்சூரா நகரம் கட்டப்பட்டது என்று பிற்காலத்தில் குறிப்பிட்டார். இது தவறு என்பதில் ஐயமில்லை. ஏனெனில், உமையா வம்சத்தின் ஆட்சியில் ஹக்கம் ஆளுநராயிருந்தபோது, முகம்மத் இப்னு காசிமின் மகனுன அம்ருவால் மன்சூரா நகரம் நிறுவப்பட்டதென்று பலாதூரி குறிப்பிடுவதே ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.[1]

அப்பாசிகள் அரியணை ஏறுதல்

கி.பி. 749-ல் அராபியப் பேரரசில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. அதுவரை அரியணையிலிருந்து வந்த உமையா வம்சத்தை (Umayyads) அப்பாசி என்ற வம்சத்தினர் (Abbasids) வீழ்த்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். இப் புதிய வம்சத்தினர் எல்லா மாநிலங்களிலும் உமையா வம்சப் பழைய ஆளுநர்களையும் அதிகாரிகளையும் நீக்கிவிட்டுத் தமது ஆட்களையே நியமிக்க முயற்சிகள் மேற்கொண்டனர். அதற்கென எல்லா மாநிலங்களுக்கும் படைகள் அனுப்பப்பட்டன. சிந்துவில் உமையா வம்சத்தின் கடைசி ஆளுநராக இருந்தவர் அல்-மன்சூர் (al-Mansur) என்பவர். இவர் அப்பாசிகளால் அனுப்பப்பட்ட படைகளை எதிர்த்துச் சிறிதுகாலம் வெற்றியோடு போரிட்டார். ஆயினும், இறுதியில் மூசா (Musa) என்ற அப்பாசித் தளபதியால் கி.பி. 751-ல் மன்சூர் தோற்கடிக்கப்பட்டார். தம்முடைய சிப்பாய்கள் அனைவராலும் கைவிடப்பட்டு, தார்ப் பாலைவனத்துக்குள் ஓடி, குடிக்க நீர்கூட இல்லாமல் மன்சூர் உயிர்விட்டார். இதன் பின்னர்ச் சிறிதுகாலம் மூசாவே சிந்துவில் ஆளுநராக இருந்தார். இவர் மன்சூரா நகரைப் புனர் நிர்மாணம் செய்து, அங்கிருந்த மசூதியை விரிவுபடுத்தினுர். அப்பாசி வம்சத்தின் இரண்டாவது கலீஃபாவான அல்-மன்சூர் (al-Mansur, 754-775) திறமைமிக்க அரசர். ஹிஷாம் (Hisham) என்பவரைச் சிந்துவின் ஆளுநராக அவர் நியமித்தார். பழைய உமையா வம்சத்தை ஆதரித்த அதிகாரிகள் மூல்தான் போன்ற பல பகுதி

[1] அராபிய நாட்டில் கலீஃபா பதவிக்கு இருசாராரிடையே எப்பொழுதும் போட்டியும் போராட்டமும் இருந்துவந்தன. அவற்றுள் ஒரு சாரார் அப்பாஸ் என்பவரின் வழித் தோன்றல்களான அப்பாசிகள் (Abbasids) ஆவர்; மற்றொரு சாரார் உமையா என்பவரின் வாரிசுகளான உமையாக்கள் (Umayyads) ஆவர்.

களைத் தொடர்ந்து தம்வசம் வைத்திருந்தனர். அவர்களுக்கெதிராக ஹிஷாம் போரிட்டு, மூல்தான் முதலிய எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றினர். கந்துகார் (Kanduhar) என்ற ஊரையும் பல வேறு ஊர்களையும் இவர் கைப்பற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கந்துகார் என்பது காண்டகாரோ அல்லது வேறு ஊரோ தெரியவில்லை. காஷ்மீரத்தையும் ஹிஷாம் வென்றதாகச் சொல்லப்படுகிறது. காஷ்மீரத்தின் எல்லைப் பகுதிகளின்மீது இவர் தாக்குதல்கள் தொடுத்தமையே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. லலிதாதித்திய முக்தாபீடர் அராபியச் சிற்றரசன் ஒருவனது படைகளை மூன்று முறை தோற்கடித்ததாகக் கல்கணர் கூறுவது இதை உறுதிப்படுத்துகிறது.

இந்துக்களின் கிளர்ச்சிகள்

ஹிஷாம் மேற்குக் கடற்கரையில் பரடா (Barada) என்ற பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக ஒரு கப்பற்படையை அனுப்பினர். கத்தியவாரிலுள்ள இன்றைய பர்டா மலைப் பகுதியே (Barda Hills) இங்குக் குறிப்பிடப்படுகிறது. இது சைந்தவர்கள் என்போரால் அப்பொழுது ஆளப்பட்டது. ஹிஷாமின் முயற்சி வெற்றி பெறவில்லை. அடுத்த கலீஃபாவான அல்-மஹ்தீயின் (al-Mahdi, 775-85) காலத்தில் மீண்டும் பரடா தாக்கப்பட்டது. அப் பகுதியில் ஏதோ ஒரு நகரமும் அராபியக் கப்பற்படையால் கைப்பற்றப்பட்டது. ஆனால், தோல்வி அல்லது கொள்ளை நோய் காரணமாக முஸ்லிம்கள் நூற்றுக் கணக்காகத் தமது வீரர்களை இழந்து பின்வாங்க நேரிட்டது. மேற்குச் சௌராஷ்டிரத்தில் ஆட்சிபுரிந்த சைந்தவச் சிற்றரசரான (மகாசாமந்தர்) முதலாம் அக்குகர் (Agguka) பகைவர் அனுப்பிய கடற்படையிலிருந்து தம்முடைய நாட்டை மீட்டார் என்று அவரது கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

ஏற்கெனவே அராபியர்களால் கைப்பற்றப்பட்டிருந்த சிந்துவின் மேற்குப் பகுதியில் மக்கள் அடிக்கடி கிளர்ச்சிகள் நடத்தினர். ஹாரூன் ரஷீத் (கி.பி. 786-809) முதலிய பல கலீஃபாக்கள் இக் கிளர்ச்சிகளை அடக்குவதில் அடிக்கடி ஈடுபட்டனர். சிந்துவின் பழைய தலைநகரமான அலோர் போன்ற பல இடங்களில் ஜாட்டுகள், மேத்கள் (Meds) போன்ற மக்கள் அடுத்தடுத்துப் பலமுறை கிளர்ச்சிகள் நடத்தினர். கலீஃபா அல்-மாமூன் (al-Mamun—813-33) காலத்தில் கட்சிலிருந்த சிந்தான் (Sindan) என்ற ஒரு பகுதி கைப்பற்றப்பட்டது. ஆனால், விரைவிலேயே அப் பகுதியிலிருந்த இந்துக்கள் திரண்டெழுந்து முஸ்லிம் அதிகாரிகளைக் கொலை செய்தனர். பலாதூரி போன்ற

முஸ்லிம் ஆசிரியர்கள் இத்தகைய கிளர்ச்சிகள் அடிக்கடி நிகழ்ந்தன என்பதைக் குறிப்பிடுகின்றனர். ஹாரூன் ரஷீத், அல்-மாமூன் ஆகியோரது காலத்தவரான கூர்ஜரப் பிரதிகார அரசர் இரண்டாம் நாகபட்டர் மேற்கில் துருக்ஷர்களுடன் அடிக்கடி போரிட்டுப் பல பகுதிகளைக் கைப்பற்றியதாக அவரது காலத்துச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு சிந்துவில் இந்துக்களின் கிளர்ச்சிகள் நடைபெற்றுவந்த அதே வேளையில் அண்டையிலிருந்த பிரதிகாரர்கள், சாகமானர்கள் போன்ற பலரது தாக்குதல்களுக்கும் அராபியர்கள் ஆளாயினர். இவை காரணமாக அவர்களது ஆதிக்கம் சிந்துவுக்குக் கிழக்கில் பரவ முடியாமல் போனது மட்டுமின்றி, சிதைவுறவும் துவங்கிற்று. மேலும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் அப்பாசி வம்ச கலீஃபாக்களின் ஆதிக்கம் வீழ்ச்சியுறத் துவங்கிற்று. சிந்துவில் அராபியர் ஆதிக்கம் நிலைகுலைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

சிந்து அராபிய அரசின் சிதைவு :

கலீஃபா அல்-மாமூனின் காலத்தில் சிந்துவில் ஆளுநராக இருந்த பஷர் (Bashar) மத்திய அரசுக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். கஸ்ஸான் (Ghassan) என்பவரின் தலைமையில் கலீஃபாவின் படையொன்று சிந்துவுக்கு வந்து பஷரைத் தோற்கடித்துச் சிறைப்பிடித்து, பாக்தாதுக்குக் கொண்டு சென்றது. மூசா என்பவர் சிந்துவில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கலீஃபாவின் ஆதிக்கம் பலதிசைகளிலும் சீர்குலைந்து வருவதைக் கண்ட மூசா ஓரளவு சுதந்திரமாகவே சிந்துவில் ஆதிக்கம் செலுத்தினர். தமக்குப் பின் தமது மகனை அம்ரான் (Amran) என்பவரே சிந்துவை ஆளுவார் என்று அவர் அறிவித்தார். கலீஃபா இதை ஆமோதித்தாலும்கூட, மூசாவின் வம்சம் சிந்துவின் ஆட்சியில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்க ஒரு மாறுதலாகும். அம்ரான் ஆட்சிக்கு வந்ததும் கிளர்ச்சி செய்த ஜாட்டுகள்மீது போர் தொடுத்து, அவர்களை அடக்கினர். கந்துகாரை ஆண்டுவந்த முகம்மது-இப்னு-கலீல் என்ற அதிகாரிமீதும் போர் தொடுத்து அவரைக் கொன்றார். கட்ச் கடற்கரையில் வாழ்ந்த மேத்கள்மீது போர்தொடுத்து, அவர்களில் மூவாயிரம் பேரைக் கொன்று, கிழக்குக் கட்சிலிருந்த அதோயி (Adhoi) வரையில் அம்ரான் சென்று திரும்பினர். இதற்குமேல் சிந்துவில் அராபியர்களின் ஆட்சிபற்றித் தெளிவாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

கி.பி. 870-71-ல் சிந்து, பல்க் (Balkh), துக்காரிஸ்தான், சிஜிஸ்தான், கிர்மான் போன்ற பல பிரதேசங்களை யாகூப்

இப்னு லேத் (Yaqub Ibn Layth) என்ற ஒரு படைத்தலைவரிடம் கலீஃபா ஒப்படைத்தார். இவ்வாறு இப் பிரதேசங்களில் யாகூபால் சஃப்ஃபாரி (Saffarid) வம்சம் ஆட்சிக்கு வந்தது. கி.பி. 903-ல் சஃப்ஃபாரி அரச வம்சத்தைத் தோற்கடித்து, சாமானி (Samanids) அரச வம்சம் ஆட்சியைக் கவர்ந்து கொண்டது. இம் மாறுதல்களெல்லாம் சிந்துவை அதிகம் பாதித்தனவாகத் தெரியவில்லை. சிந்து வெகு தூரத்திலிருந்ததாலும், இஸ்லாமிய சமயமும் முஸ்லிம் ஆதிக்கமும் அங்கு உறுதியாக நிறுவப்படாததாலும், சஃப்ஃபாரிகள் சிந்துவைப்பற்றி அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, சஃப்ஃபாரிகளின் காலத்திலோ அல்லது அதற்குச் சிறிது பின்னரோ சிந்துவிலிருந்த முஸ்லிம் அரசானது இரண்டாகப் பிளவுற்றது. கடற்கரையிலிருந்து அலோர் வரையிலான தென்பகுதி மன்சூராவைத் தலைநகராகக் கொண்ட ஒரு தனியரசாகவும், அதற்கு வடக்கிலிருந்த பிரதேசமனைத்தும் மூல்தானைத் தலைநகராகக் கொண்ட மற்றொரு தனியரசாகவும் ஆயின. அதாவது, இன்றைய சிந்து மாநிலம் முழுவதும் ஒரு அரசாகவும், அதற்கு வடக்கிலான தெற்குப் பஞ்சாப் பிரதேசம் மற்றொரு அரசாகவும் ஆயின எனலாம். கி.பி. 870 முதல் கசினி மகமூது சிந்துவைக் கைப்பற்றியது வரையிலான ஒன்றரை நூற்றாண்டு காலத்தைச் சிந்துவைப் பொறுத்தவரையில் இருண்ட காலமென்றழைக்கலாம். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் அல்-மஸ்ஊதி, இப்னு-குர்தத்பி (Ibn Khurdadbih), இஸ்தக்ரி (Istakhri), இப்ன்-ஹௌக்கல் (Ibn Hauqual) ஆகியோர் மூல்தான், மன்சூரா ஆகிய இரு பகுதிகளுக்கும் சென்று திரும்பி எழுதிய குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன.[1]

இவ்விரு முஸ்லிம் அரசுகளும் அடிக்கடி இந்து அரசர்களின் தாக்குதல்களுக்கும் இந்துக் குடிகளின் கிளர்ச்சிகளுக்கும் ஆளாயின என்று இவர்களது குறிப்புகள் அனைத்தும் தெரிவிக்கின்றன. இஸ்லாமிய சமயம் பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை யென்பதும் பழைய இந்து சமயத்தின்படியான உருவ வழிபாடே தொடர்ந்து நடைபெற்றது என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இந்தியாவுக்கு வந்த சுலைமான் கூர்ஜர அரசர்களே இஸ்லாமிய சமயத்தின் கொடிய பகைவர்களாக இருந்தனர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அல் மஸ்ஊதியும் கூடக் கனோஜைச் சேர்ந்த பிரதிகாரர்களே பெரும் பகையாயிருந்தனர் என்று கூறியுள்ளார். மூல்தான் அரசின்மீது கூர்ஜரப் பிரதிகாரர்கள் அடிக்கடி

[1] For extracts from their works, see Elliot and Downson, Vol. I.

படையெடுத்தனர். மூல்தானிலிருந்த புகழ்மிக்க இந்து ஆலய மொன்றையும் அதிலிருந்த மந்திரசக்தி வாய்ந்த விக்கிரகம் ஒன்றையும்பற்றிக் கிட்டத்தட்ட எல்லா முஸ்லிம் பயணி களுமே தமது நூல்களில் விவரித்துள்ளனர். பல்வேறு திசை களிலிருந்தும் லட்சக் கணக்கான இந்துக்கள் அந்த ஆலயத் துக்கு ஆண்டுதோறும் யாத்திரை வந்தனராம். இதற்கு மேல் சிந்துவில் முஸ்லிம்கள் நிகழ்த்திய ஆட்சிபற்றி அதிகத் தகவல்க ளில்லை.

முடிவுரை: வீழ்ச்சியும் விளைவுகளும்

அப்பாசி வம்சத்தின் சீர்குலைவு, இந்துக் குடிகளின் கிளர்ச்சி, அண்டையிலிருந்த இந்திய அரசர்களின் தாக்குதல்கள் முதலிய பல காரணங்களினால் சிந்துவில் முஸ்லிம் ஆதிக்கம் வலுப் பெற வில்லை. மேல்மட்டத்தில் முஸ்லிம் பிரபுக்களும் அதிகாரிகளும் ஆதிக்கம் செலுத்தினாலும்கூட, பெருவாரியான மக்கள் இந்துக் களாகவே தொடர்ந்து இருந்து வந்தனர். ஓரிரு முக்கியமான நகரங்கள், கோட்டைகள் நீங்கலாக எல்லா இடங்களிலும் இந்து அதிகாரிகள் வசமே நிர்வாகம் முழுவதும் இருந்து வந்தது. மக்ரான் வழியாக வரண்ட மலைப் பிரதேசத்தைக் கடந்து சிந்து வுடன் தொடர்பு கொள்வதும் கலீஃபாக்களுக்குக் கடினமாக இருந்தது. சிந்துவுக்குக் கிழக்கிலான தார்ப் பாலைவனம் முஸ்லிம் களுடைய ஆதிக்கம் கிழக்கில் விரிவடைவதற்குத் தடையாயிருந் தது. இந்திய அரசர்கள் ஒற்றுமையின்றித் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருந்தனராயினும், அவர்களுக்கெதிராகப் பெரும் படையை அனுப்பித் தீவிரமான போர் முயற்சிகளை மேற் கொள்வது கலீஃபாவுக்கும் சிந்துவின் முஸ்லிம் ஆளுநர்களுக்கும் கடினமாயிருந்தது. இத்தகைய பல்வேறு காரணங்களினா லேயே கி.பி. எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சிந்துவை யும் தெற்குப் பஞ்சாபையும் கைப்பற்றிய முஸ்லிம்களால் யமுனை- கங்கைச் சமவெளியை எட்டமுடியாமல் போயிற்று. மற் றெல்லாத் திசைகளிலும் குறுகிய காலத்தில் துரித வெற்றிகளைப் பெற்ற அராபியர்களாலும் இஸ்லாமிய சமயத்தாலும் இந்தியா வில் மட்டும் வேகமாக ஊடுருவ முடியவில்லை என்பதை எல்பின் ஸ்டன் (Elphinstone), உல்ஸ்லி ஹேக் போன்ற மேனாட்டு அறிஞர் கள் கண்டு வியந்தனர். 'சிந்துவை அராபியர்கள் கைப்பற்றிய தானது இந்தியாவின் வரலாற்றில் ஒரு சின்னஞ்சிறு நிகழ்ச்சி யாக மட்டுமே இருந்துவிட்டது; பரந்த அந் நாட்டின் எல்லைப் புறத்திலுள்ள சின்னஞ்சிறு பகுதி ஒன்றை மட்டுமே அது பாதித்

தது' என்று ஹேக் குறிப்பிடுகிருர்.[1] 'வட இந்தியா முழுவதையும் அராபியப் படையெடுப்பு உலுக்கிற்று என்று கர்னல் டாட் எழுதியது தவறு' என்பதை ஹேக் எடுத்துக் காட்டுகிருர். ஆயினும், பிற்காலத்தில் ஐந்து நூற்ருண்டு காலம் இந்தியாவின் பெரும் பகுதிமீது ஆதிக்கம் செலுத்திய இஸ்லாமிய சமயம் இந்தியாவின் எல்லைப் பிரதேசத்தில் இப் படையெடுப்புக் காரணமாகவே புகுந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சிந்துவில் அராபிய நிர்வாகம்

சிந்துவின் நிலைமை

அராபியர்கள் கைப்பற்றிய பல்வேறு நாடுகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கையில், சிந்துவில் பல்வேறு சிக்கல்களை முகம்மது-இப்னு-காசிம் சமாளிக்க வேண்டியவராயிருந்தார். அம் மாநிலத்தில் வாழ்ந்த மக்கள் இந்துக்களாகவும் பௌத்தர்களாகவுமிருந்தனர். ஆரம்ப காலத்தில் வாள் முனையில் அவர்களை முஸ்லிம்களாக்குவதும், அவ்வாறு சமய மாற்றத்துக்கு இணங்காத ஆடவர்களை ஆயிரக்கணக்கில் கொல்வதும், சிறுவர்களையும் பெண்களையும் அடிமைப்படுத்துவதும் முஸ்லிம்களின் கொள்கையாயிருந்தது. ஒவ்வொரு நகரும் கைப்பற்றப்பட்ட பின் இத்தகைய கொடுமைகளே புரியப்பட்டன என்பதைச் சச்செ நாமா, பலாதூரியின் நூல் முதலிய சான்றுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பதுக்கி வைக்கப்பட்டுள்ள செல்வங்களைக் கண்டுபிடிப்பதற்காகவும், இஸ்லாமிய சமயத்தை நிலைநாட்டுவதற்காகவும் இந்து, பௌத்த ஆலயங்கள் அழிக்கப்பட்டன. இக் கொலைத் தொழிலிலும் அழிவு வேலையிலும் மேலும் தீவிரமாக முகம்மது-இப்னு-காசிம் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று அல்-ஹஜ்ஜாஜ் அவரை அடிக்கடி வற்புறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. தம்முடைய எசமானரும் மாமனுருமான ஹஜ்ஜாஜின் ஆணைகளை முகம்மது கடைப்பிடித்தார்

[1] 'It was a mere episode in the history of India and affected only a small portion of the fringe of that vast country. It introduced into one frontier tract the religion which was destined to dominate the greater part of India for nearly five centuries, but it had none of the far-reaching effects attributed to it by Tod in the Annals of Rajasthan ......nor was the whole of northern India, as Tod maintains, convulsed by the invasion of the Arabs. ...The tide of Islam, having overflowed Sind and the lower Punjab, ebbed, leaving some jetsam on the strand. The rulers of states beyond the desert had no cause for alarm. That was to come later, and the enemy was to be, not the Arab, but the Turk, who was to present the Faith of the Arabian Prophet in a more terrible guise than it had worn, when presented by native Arabians,' Sir. Wolseley Haig, in *The Cambridge History of India*, Vol. III.

என்பதில் ஐயமில்லை. தாகரும் மற்றச் சிற்றரசர்களும் தோற்கடித்துக் கொல்லப்பட்டு, சிந்து மாநிலமும் தெற்குப் பஞ்சாபும் அராபியரின் ஆதிக்கத்துக்குள் வந்த பின்னர், ஓர் உண்மை முகம்மது-இப்னு-காசிமுக்கும் மற்ற அராபிய அதிகாரிகளுக்கும் தெளிவாகப் புலப்படலாயிற்று.

இவ்வளவு கொடுஞ் செயல்களுக்குப் பின்னரும் பெருவாரியான சுதேசிகள் தங்களது பழைய சமயத்தினை விட்டு இஸ்லாமிய சமயத்தை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்ட மற்ற நாடுகளுக்கும் இந்தியாவுக்குமுள்ள இந்த வேற்றுமை அராபியத் தலைவர்களைச் சிந்திக்கச் செய்தது. மிகச் சிறுபான்மையான ஒருசிலரே இஸ்லாமிய சமயத்தைத் தழுவி அராபியர்களுக்குப் பணிந்து போக முன் வந்தனர். இவ்வாறு வாள் முனையில் சமய மாற்றம் செய்யும் கொள்கை தோல்வியுற்றது. இந் நிலையில், தூரத்திலிருந்து வந்த அராபியர்களால் சுதேச இந்துக்கள், பௌத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பின்றி நிர்வாகத்தை நடத்துவது இயலாததாயிற்று. தாம் கைப்பற்றிய பகுதிகளை விரைவிலேயே முற்றிலுமாக அராபியர்கள் இழந்துவிட வேண்டும்; அல்லது சுதேசிகளை நன்முறையில் நடத்தி, அவர்களது சமயத்தை மதித்து, அவர்களது ஒத்துழைப்புடன் நிர்வாகத்தை நடத்த முன்வர வேண்டும் என்ற உண்மை அவர்களுக்கு வெகு விரைவிலேயே புரியலாயிற்று. எனவே, நிலைமையை நன்கு சீர்தூக்கிப் பார்த்து, வேறு வழியின்றி, நிர்வாகத் தேவைகளை மனத்தில் கொண்டு, சுதேசிகளை முன்னைவிட நல்ல முறையில் நடத்துவது அவசியமென்பதை அராபியர்கள் உணர்ந்தனர்.

சமயக் கொள்கை

எனவே, பழைய கொடுமைகளையெல்லாம் ஓரளவு கைவிட்டுச் சிறிது சமயப் பொறையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமாயிற்று. அராபியர்கள் பாலஸ்தீனம், சிரியா, எகிப்து, ஸ்பெயின் போன்ற பகுதிகளைக் கைப்பற்றிய பொழுது அங்கு வாழ்ந்த ஏராளமான யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களாக மாற்றுவதற்கு முடியவில்லை. எனவே, தங்களது கொள்கைகளைச் சிறிது தளர்த்தி, அவர்களது சமயச் சுதந்திரத்தை மதிக்க வேண்டியது அராபியர்களுக்கு இன்றியமையாததாயிற்று. அதே போல், இந்தியாவிலும் அவர்கள் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரிடமிருந்து 'ஜெசியா' என்ற வரி எவ்வாறு வசூலிக்கப்பட்டதோ அதே போல், சிந்துவிலும் தெற்குப் பஞ்சாபிலும்

வாழ்ந்த இந்துக்களின் மீதும் பௌத்தர்களின் மீதும் அவ் வரியினை முகம்மது-இப்னு-காசிம் விதிக்கலானார். முஸ்லிம்களாக மதம் மாற மறுக்கும் சுதேசிகள் ஜெசியா என்ற இத் தலை வரியைச் செலுத்த வேண்டியதாயிற்று. இந்த வரிக்குக் கைம் மாறாக அவர்கள் தங்களது பழைய சமயத்தினையே தொடர்ந்து பின்பற்றவும், தமது பழைய விக்கிரகங்களையே வழிபடவும், இராணுவத்தில் சேராமலிருக்கவும் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு ஜெசியாவைச் செலுத்தி முஸ்லிம் ஆட்சியாளர்களின் பாதுகாப்பைப் பெற்ற யூதர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகியோர் சிம்மிகள் (Zimmis) என்றழைக்கப்பட்டனர். 'பாதுகாக்கப்பட்ட மக்கள்' என்பது இதன் பொருள்.

சமுதாய நிலைமை :

எனினும், மூன்றாந்தரக் குடிகளாகவே இந்துக்களும் பௌத்தர்களும் நடத்தப்பட்டனர். வெளியிலிருந்து படையுடன் வந்து சிந்துவையும் தெற்குப் பஞ்சாபையும் கைப்பற்றிய அராபியர்களும் மற்ற அன்னிய முஸ்லிம்களும் மட்டுமே மேற் குடிகளாயிருந்தனர். சூழ்நிலையையும் சுயநலத்தையும் உள்ளத்துள் கொண்டு இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய இந்தியர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாயினர். பழையபடி இந்துக்களாகவும் பௌத்தர்களாகவுமே இருக்க முடிவுசெய்த சுதேசிகள் மூன்றாம் தர அல்லது கடைநிலைக் குடிகளாக ஆயினர். மேலும், முன்னாள் அரசர்களின் காலத்தில் ஜாட்டுகள், மேத்கள் போன்ற மக்களின்மீது விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுத் திட்டங்கள் முஸ்லிம் ஆட்சியாளர்களாலும் தொடர்ந்து நீடிக்கப்பட்டன. சச்சின் காலத்தில் இவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுத்திட்டங்களைப்பற்றி முன்பே நாம் குறிப்பிட்டோம். சாதிப் பாகுபாடுகள் மலிந்த இந்து சமுதாயத்தில் இந்து அரசர்களால் இவர்கள் தாழ்வாக நடத்தப்பட்டது புரிந்துகொள்ளத் தக்கது. ஆனால், சாதிப் பாகுபாட்டை ஏற்றுக் கொள்ளாத முஸ்லிம் ஆட்சியாளர்களும் அக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றியது சூழ்நிலை காரணமாகவே என்று நாம் கொள்ளலாம். இந்து சமுதாயத்தில் மலிந்திருந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும் பாகுபாடுகளையும் மாற்றுவதற்குப் புதிதாக வந்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் விருப்பமும் முயற்சியுமின்றி இருந்தனர். ஜாட்டுகள், லோகனர்கள், மேத்கள் போன்றோர் பட்டாடை தரித்தல், தலைப்பாகை அல்லது தொப்பி அணிந்து கொள்ளுதல், காலில் செருப்பு அணிதல், சேணம் பூட்டிய குதிரைகளின்மீதேறிச் செல்லல் போன்றவை தொடர்ந்து முஸ்லிம் ஆட்சியாளர்களாலும் தடைசெய்யப்பட்டன. முஸ்லிம் ஆளுநரையும் அதிகாரியையும் காண வரும்

பொழுது அடையாளம் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அவர்கள் நாய்களோடு வரவேண்டுமென்ற வழக்கமும் தொடர்ந்து நீடித்தது. ஆட்சியாளர்களுக்கு அவர்கள் விறகு கொணர்ந்து தருதல், ஒற்று வேலை செய்தல் போன்றவையும் தொடர்ந்து நீடித்தன. ஜாட்டுகள், மேத்கள் போன்றோர் அடிக்கடி முஸ்லிம்களுக்கெதிராகக் கிளர்ச்சிகள் நடத்தியதற்கு இதுவும் ஒரு காரணமாயிருந்தது என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் வழிப்போக்கர்களுக்கு மூன்று பகலும், மூன்று இரவும் உண்ண உணவும் தங்க இடமும் பொது மக்களால் அளிக்கப்படவேண்டு மென்று புதிய ஆட்சியாளர்களால் நிபந்தனை விதிக்கப்பட்டது. (முஸ்லிம் குடிமக்கள் $2\frac{1}{2}\%$ 'ஜக்காத் வரி' தவறாமல் செலுத்த வேண்டுமென்னும் சட்டமும் இருந்தது.)

முஸ்லிமல்லாத சுதேசி மக்கள் ஜெசியா வரி செலுத்துவதற் கென மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். முதல் பிரிவினர் ஜெசியா வரியாக ஆண்டுதோறும் 48 திர்ஹம்களும் (Dirhams)[1], இரண்டாம் பிரிவினர் 24 திர்ஹம்களும், மூன்றும் பிரிவினர் 12 திர்ஹம்களும் செலுத்த வேண்டுமென விதிக்கப்பட்டன. மற்றப் படி, இந்துக்களின் சமுதாய வாழ்வில் முஸ்லிம் ஆட்சியாளர்கள் அதிகமாகத் தலையிடவில்லை. இந்து அரசர்களின் ஆட்சிக் காலத்திலேயே கீழ்ப்பட்டோர்களாகவும் அடிமைகள் போலவும் நடத்தப்பட்டு வந்த பாமர மக்களுடைய வாழ்வில் மேலே குறிப் பிடப்பட்டதற்கு மேல் எந்தச் சிறுமையும் ஏற்பட்டதென்று கூற முடியாது. கி.பி. பதினொன்றும் நூற்றாண்டு முதல் இந்தியாவில் ஊடுருவி ஆதிக்கம் பெற்ற துருக்கியர்களைப் போலல்லாமல், அராபியர்கள் சுதேசிகளை ஓரளவு நல்ல முறையிலேயே நடத் தினர். தாங்கள் கைப்பற்றிய எல்லா நாடுகளிலும் சுதேசிகளை அராபியர்கள் இவ்வாறே ஓரளவு பொறையுடன் நடத்தினர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நிர்வாக ஏற்பாடுகள் :

பரந்த பகுதிகளைக் கைப்பற்றிய முகம்மது-இப்னு-காசிம் அவற்றின் நிர்வாகத்துக்காகப் பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியவரானார். சிந்துவையும் தெற்குப் பஞ்சாபையும் இக் தாக்கள் (Iqtas) என்ற பல மாவட்டங்களாக அவர் பிரித்தார். ஒவ்வொரு இக்தாவின் நிர்வாகம் முழுவதும் அராபியத் தளபதி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தகைய அராபியத் தளபதிகள் தம்முடன் சிறுசிறு அராபியப் படைகளை வைத்துக் கொண்டு மக்கள் தமக்குக் கீழ்ப்படியுமாறு செய்தனர். தமது

[1] திர்ஹம் (Dirham) என்பது 25 காசு (கால் ரூபாய்) வெள்ளி நாணயமாகும்.

இக்தாவில் அமைதியும் ஒழுங்கும் இவர்களால் பேணப்பட்டன. படையெடுப்புகளின்போது ஆளுநருக்கு இவர்கள் படையனுப்பி உதவிபுரிந்தனர். இவர்களுக்குக் கீழ் ஒவ்வொரு இக்தாவின் நிர்வாகம் முழுவதும் பெரும்பாலும் இந்து அதிகாரிகள் வசமே இருந்தது. சிறிய எண்ணிக்கையிலிருந்த அராபிய முஸ்லிம்கள் தமது எண்ணிக்கை, அன்னிய மொழி போன்ற பல்வேறு காரணங்களினால் பழைய இந்து அதிகாரிகளையே தொடர்ந்து பதவியில் வைத்திருந்தனர். இந்த இந்து அதிகாரிகள் பெரும்பாலும் பெரிய நிலப்பிரபுக்களாக இருந்தனர். இவர்கள் ஜெசியா வரியோடுகூட, கரஜ் (Kharaj) என்ற நிலவரி ஒன்றையும் செலுத்த வேண்டியவர்களா யிருந்தனர். ஆண்டுதோறும் சிந்துவின் முஸ்லிம் ஆளுநர் கலீஃபாவுக்கு $11\frac{1}{2}$ லட்சம் திர்ஹம்களும், 150 ராத்தல் மரமும் அனுப்பியதாக அல் மஸ்ஊதி குறிப்பிடுகின்றார். மக்களிடமிருந்து பாஜ் (Baj), அஷரீ (Ashari or Ushari) போன்ற வேறு வரிகளும்கூட வசூலிக்கப்பட்டன என்று சச்செ நாமா எழுதுகிறது. இவ் வரிகளைப்பற்றி விளக்கமாக இதற்குமேல் எதுவும் தெரியவில்லை. (ஒரு லட்சம் திர்ஹம் என்பது ஏறத்தாழ 2,300 பிரிட்டிஷ் பவுன்களுக்குச் சமம் என்று எலியட் கணக்கிட்டார்.)

அராபியப் படை வீரர்களுக்குச் சிறுசிறு நிலங்கள் வழங்கப்பட்டன. இவை சுதேசக் குடியானவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களே என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் படைத் தலைவர்களுக்கு ஜாகீர்கள் வழங்கப்பட்டன. படைகள் பெரும்பாலும் முக்கிய நகரங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. முஸ்லிம் முல்லாக்கள் (சமய அறிஞர்கள்) மௌலவிகள் போன்றோருக்கும் மசூதிகளுக்கும்கூட மானியமாக நிலங்கள் வழங்கப்பட்டன. மற்றப்படி நிர்வாக அமைப்பில் பெருத்த மாறுதல்கள் அதிகமாகச் செய்யப்படவில்லை. வரி வசூலித்தல் போன்ற எல்லா நிர்வாகப் பணிகளும் பழைய இந்துக் கிராம அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தன. குடியானவர்களிடமிருந்து நிலவருவாயில் $\frac{1}{3}$ முதல் $\frac{1}{4}$ வரையில் நிலவரியாக வசூலிக்கப்பட்டது. இவற்றை வசூலிக்கும் உரிமை சிற்சில பகுதிகளில் ஏலம் விடப்பட்டதாகவும் தெரிகிறது.

நீதி நிர்வாகம்

அராபியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாய் இருந்த காரணத்தினால், மற்றத் துறைகளைப் போலவே நீதி நிர்வாகத்திலும் பழைய அமைப்பினை அதிக மாறுதல் எதுவுமின்றி அப்படியே தொடர்ந்து வைத்திருக்க வேண்டியதாயிற்று. தலை நகரிலும் முக்கியமான நகரங்களிலும் மட்டுமே இஸ்லாமிய

சட்டத்தின்படி வழக்குகளை விசாரிப்பதற்கெனக் காசிகள் (Qazi) என்போர் நியமிக்கப்பட்டனர். முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தையும் இவர்களே விசாரித்தனர். முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையிலான வழக்குகளிலும் இஸ்லாமியச் சட்டமே பின்பற்றப்பட்டது. (இஸ்லாமியச் சட்டம் 'ஷரீஅத்'—Shariat—எனப்பட்டது.) ஒரே குற்றத்துக்காக முஸ்லிம்களுக்குக் குறைந்த தண்டனையும் இந்துக்களுக்குக் கடுந் தண்டனையும் விதிக்கப்பட்டன. இந்துக்களுக்கிடையிலான வழக்குகள் பழைய இந்து நீதிபதிகளாலேயே இந்துச் சட்டங்களின்படி விசாரித்து முடிவு செய்யப்பட்டன. கிராமப் புறங்களிலும் நகரின் பல்வேறு பேட்டைகளிலும் ஊர்ப் பெரியவர்கள் அடங்கிய பஞ்சாயத்துகள் இருந்தன. கொலை, ராஜத்துரோகம் போன்ற கடுங் குற்றங்கள் நீங்கலாக மற்றச் சாதாரணக் களவு, கொள்ளை போன்ற குற்றங்கள், பாகப்பிரிவினை, நிலத்தகராறு, அடிதடி போன்ற தகராறுகள் முதலியவை அனைத்தும் இப் பஞ்சாயத்துகளிலேயே விசாரிக்கப்பட்டன. மாவட்டத் தலை நகரங்களில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் இருந்தனர். எனினும், ஒழுங்கான நீதி நிர்வாக அமைப்பு இருந்ததாகக் கூறமுடியாது. பஞ்சாயத்துகளிலும் நீதி மன்றங்களிலும் பின்பற்றப்பட்ட முறைகளும் வழக்கங்களும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தனவென்றும் கூறமுடியாது. சாதி வேறுபாடு மலிந்திருந்ததால், ஒவ்வொரு சாதிக்கும் ஒரு பஞ்சாயத்து ஒவ்வொரு ஊரிலுமிருந்தது. பழைய மரபுகளை ஒட்டியே இப் பஞ்சாயத்துகளெல்லாம் செயல்பட்டு வந்தன. இந்துக்களிடையிலும் பழைய வழக்கத்தின்படி உயர்குலத்தோர், செல்வாக்குடையோர், செல்வம் மிக்கோர் போன்றவர்களுக்குக் கடுங் குற்றத்துக்கும் எளிய தண்டனைகளே விதிக்கப்பட்டன.

அராபிய ஆதிக்கத்தின் விளைவுகள்

சிந்துவை அராபியர்கள் கைப்பற்றியது முக்கியத்துவமற்ற ஒரு சிறு நிகழ்ச்சியே என்று பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளதை முன்பே பார்த்தோம். வட இந்தியாவின் அரசியலில் பெருத்த மாற்றமெதையும் இது தோற்றுவிக்கவில்லை. சிந்து, தெற்குப் பஞ்சாப் ஆகியவை நீங்கலாக மற்ற வட இந்திய அரசுகள் அனைத்தும் இதனால் சிறிதும் பாதிக்கப்படாமல் வழக்கம்போல் தமது பழைய நியதிகளின்படி இயங்கி வந்தன. மேலும், இந்தியாவின் சமயம், பழக்க வழக்கங்கள், மொழி, சட்டம், கலைகள் போன்றவற்றிலும் அராபிய ஆதிக்கத்தினால் பெருத்த மாறுதல் எதுவும் விளைந்திடவில்லை. எனினும், அராபியர்களோடு ஏற்பட்ட

இப் புதிய தொடர்பு காரணமாக எந்தவித விளைவுகளும் அறவே தோன்றிவிடவில்லை என்று கூறமுடியாது.

இஸ்லாத்தின் வருகை

அராபியப் படையெடுப்பினுல் ஏற்பட்ட மிகமிக முக்கிய மான விளைவு இந்தியாவில் இஸ்லாமிய சமயம் புகுந்ததே யாகும். ஏற்கெனவே முஸ்லிம் அராபிய வணிகர்கள் வாணிபம் காரணமாக இந்தியாவுக்கு வருவது வழக்கமாயிருந்தது என் பதைப் பல்வேறு சான்றுகள்மூலமாகவும் அறிந்து கொள்ள முடி கிறது. இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பட்டினங்களுடனும் இலங்கையுடனும் அராபிய வணிகர்கள் பன்னெடுங்காலமாகவே வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். அரேபியாவில் இஸ் லாம் ஆதிக்கம் பெற்றதும், இந்த வாணிப நடவடிக்கைகளுக் குப் புதிய தெம்பும் வேகமும் ஊட்டப்பட்டன. முஸ்லிம் வணி கர்கள் இந்தியக் கடற்கரைப் பட்டினங்களுக்கு அடிக்கடி வந்து போயினர். ஆயினும், போர் முனையில் இந்தியர்களைத் தோற் கடித்து அரசியல் ஆதிக்கத்தை அராபிய முஸ்லிம்கள் சிந்துவில் நிறுவியது முதல் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. முதன் முத லாக ஆளும் சமயமாக அல்லது ஆட்சிபுரிவோரின் சமயமாக இந்தியாவுக்குள் இஸ்லாம் நுழைந்தது. இந்துக்களும் பௌத்தர் களும் பிறரும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவுமாறு வாள் முனை யில் வற்புறுத்தப்பட்டனர். உயிருக்கு அஞ்சியும், உடைமை களைக் காப்பதற்கும், பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டும் பல இந்தியர்கள் இப் புதிய சமயத்தினை ஏற்றுக் கொண்டனர். இவ் வாறுதான் இந்தியாவில் முதன் முதலாக ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினர். அவ்வாறு மதம் மாறியோருக்குப் பல்வேறு சலுகைகளும் நல்கப்பட்டன. சூழ் நிலை காரணமாகத் தமது விருப்பத்துக்கும் மாருகப் புதிய சம யத்தை ஏற்றுக் கொண்டவர்களில் பலர் தக்க தருணம் வாய்த்த போது இஸ்லாத்தை உதறிவிட்டுத் தமது பழைய சமயத்துக்கே திரும்பிச் சென்றனர் என்ருலும், ஆயிரக்கணக்கான இந்தியர் கள் முஸ்லிம்களாகவே தொடர்ந்து இருந்தனர். முஸ்லிம்களின் கரத்திடை ஆட்சியும் ஆதிக்கமும் இருந்தவரையில் இவர்களுக் குப் பாதுகாப்பும் செல்வாக்கும் இருந்துவந்தன. முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே என்ருலும், ஆயிரக்கணக்கான இந்தியர்கள் அராபியப் படையெடுப்பின் காரணமாகவே முஸ்லிம்களாயினர் என்ற உண்மையை மறுக்க முடியாது.

நாளடைவில் சிந்துவானது கலீஃபாவின் ஆட்சியிலிருந்து துண்டிக்கப்பட்டுத் தனித்து நின்றபோது இந்த இந்திய முஸ்லிம்

களும், அவர்களது அராபியக் கலப்புடைய ஆட்சியாளர்களும் பல்வேறு இந்திய பழக்க வழக்கங்களை ஏற்றுப் பழைய இஸ்லாமிய மரபுகளிலிருந்து பிறழ்ந்தனராயினும், அவர்கள் தொடர்ந்து முஸ்லிம்களாகவே இருந்தனர் என்பதில் ஐயமில்லை.

வாணிப உறவு

சிந்துவை அராபியர்கள் கைப்பற்றிய பின்னர், மேற்கு ஆசியாவுடன் சிறிது காலம் வாணிபத் தொடர்புகள் அதிகரித்தன. ஒட்டகங்களும், குதிரைகளும், கோவேறு கழுதைகளும் வியாபாரப் பண்டங்களைச் சுமந்து கொண்டு கொராசானிலிருந்து காபூல், பாமியான் (Bamian) ஆகியவை வழியாகச் சிந்துவுக்கு வந்தனவாக மஸ்ஊத் போன்ற பலரும் குறிப்பிட்டுள்ளனர். பாமியானிலிருந்த அல்-லகூம் (al Lahum) என்ற நகரம் இந்த வியாபார மார்க்கத்தின் மையமாக விளங்கிற்று. பிற்காலத்தில் சிந்துவுக்கும் மற்ற முஸ்லிம் நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் அறுந்துபோன போது இத் தரைவழி வாணிபம் நின்று போயிற்று. வாணிபம் செழித்து நடைபெற்ற காலத்தில் மூல்தான் நகரம் வணிகர்கள் நிறைந்து காணப்பட்டதாம். கொராசானிலிருந்து பல வழியூடே வந்த வணிகர்கள் மூல்தானில் ஒன்று கூடினரென்று மஸ்ஊத் தெரிவிக்கிறார். கடல் வாணிபமும் சுறுசுறுப்புடன் நடைபெற்றது. அராபிய வணிகர்கள் இலங்கை, மலேயா தீபகற்பம், கிழக்கிந்தியத் தீவுகள், சீனா ஆகிய நாடுகளோடு வாணிபம் செய்தனர். அந் நாடுகளின் பண்டங்கள் கடல் வழியாகச் சிந்துவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து மூல்தானுக்கும், அதன் பின்னர்த் துருக்கிஸ்தானத்துக்கும், கொராசானுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. ஆயினும், அராபியப் பேரரசு சீர்குலைந்த போதும், சிந்துவில் அராபியரின் ஆட்சி பழைய ஊக்கத்தையும் வலிமையையும் இழந்த போதும் சிந்துப் பிரதேசம் தனது வாணிப முக்கியத்துவத்தை இழந்தது.

கலாசார உறவுகள்

கி.பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் அராபியக் கலாசாரத்தைவிட இந்திய கலாசாரம் மிகவும் மேம்பட்டதாக இருந்தது. எனவே, இந்தியாவுடனான இத் தொடர்பினால் அராபிய கணிதம், விஞ்ஞானம், மருத்துவம், தத்துவம் போன்றவை பெரிதும் பயனடைந்தன. இந்து சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்து விளங்கிய பிராமணப் பண்டிதர்களின் பல்துறை அறிவும் ஆற்றலும் அராபியர்களை வியப்பில் ஆழ்த்தின. பல அராபியர்கள் இந்தியாவுக்கு வந்து சமஸ்கிருதத்தையும் கணிதம் போன்ற பல நூல்களையும் கற்றுத் தேர்ந்தனர். இந்தியப் பண்டிதர்கள்

பலர் கலீஃபாவின் தலைநகரமான பாக்தாதுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கலீஃபாக்களால் ஆதரிக்கப்பட்டனர். அல்-மன்சூரின் காலத்தில் (கி.பி. 753-774) சில அராபிய அறிஞர்கள் இந்தியாவுக்கு வந்து கல்வி கற்றபின் பாக்தாதுக்குத் திரும்பும்போது இந்திய அறிஞர்கள் பலரையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். இந்த இந்திய அறிஞர்களின் உதவியோடு அல்-மன்சூரின் காலத்தில் பிரம்ம குப்தர் எழுதிய பிரம்ம சித்தாந்தம் போன்ற நூல்கள் அராபிய மொழியில் பெயர்க்கப்பட்டன. பல்கில் (Balkh) நோ-பஹார் (நவ் விகார் = புதிய விகாரம்) என்ற பெயரில் பௌத்த விகாரம் ஒன்று இருந்தது. அங்கு பர்மக்கீகள் (Barmakis) எனப்பட்ட பௌத்த குடும்பம் ஒன்று அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தது. அல்-மன்சூர், ஹாரூன்-ரஷீத் போன்ற அப்பாசி கலீஃபாக்களின் அவையில் இந்த பர்மக்கீ குடும்பத்தினர் அமைச்சர்களாக அரை நூற்றாண்டு காலம் இருந்து வந்தனர். இக் கலீஃபாக்களின் காலத்தில் மருத்துவம், தத்துவம், வானசாத்திரம் முதலிய பல நூல்கள் அராபிய மொழியில் பெயர்க்கப்பட்டன. இந்தியாவிலிருந்தே அராபியர்கள் எண்களைக் கற்றனர் என்பதை அல்பெருனி தெரிவிக்கின்றார். பஞ்சதந்திரம் போன்ற நூல்கள் அல்பெருனியின் காலத்துக்கு முன்பே அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன. அதே போல், சாரகரது (Caraka) தத்துவ நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. பல்கைச் சேர்ந்த அபூ மஸ்ஹர் (Abu Mashar) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் காசிக்குச் சென்று பத்தாண்டுகள் கல்வி கற்ற பின் திரும்பிச் சென்று, சிறந்த வான நூலறிஞராகத் திகழ்ந்தார். இந்திய கணித மேதையான ஆசர் (Asa) என்பாரின் நூல்கள் முஸ்லிம் கணித நூல் வல்லுநரால் பயிலப்பட்டு, ஹிந்த்சா (Hindsa) என்றழைக்கப்பட்டதாக 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெருங் கவிஞரான அமீர் குஸ்ரு தெரிவிக்கிறார்.

பாக்தாதுக்குச் சென்று கலீஃபாக்களின் ஆதரவின் கீழ்ப் பணியாற்றிய மானகர் (Manaka), பாலர், தனர் (Dhana), பசிகர் (Bazigar) போன்ற பலரது பெயர்கள் அராபிய நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. மானகர் சிறந்த மருத்துவராக இருந்து, பலராலும் குணப்படுத்த முடியாத ஒரு கொடிய நோயிலிருந்து ஹாரூன் ரஷீதைக் குணப்படுத்தினார். பாக்தாதிலிருந்த மருத்துவ மனையொன்றில் தலைமை மருத்துவராகத் தனர் இருந்து வந்தார். இந்தியக் கட்டடக் கலைஞர்கள், ஓவியர்கள் ஆகியோர் பாக்தாதில் பள்ளிவாசல்களையும் அரண்மனைகளையும் கட்டி அழகு செய்தனர். இவ்வாறு அராபியக் கலாசாரமானது இந்தியத் தொடர்பு காரணமாகப் பெரிதும் பயன்பெற்றது.

13. இந்து அரசுகளில் நிர்வாகம், சமுதாயம், பொருளாதாரம், சமயம் முதலியன

1. அரசியல் அமைப்பும் நிர்வாகமும்

பொது அம்சங்கள்

கி.பி. ஏழாம் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரையிலான வட இந்தியாவில் பல்வேறு அரசுகள் இருந்து வந்தன என்பதை முன்பே பார்த்தோம். அவற்றின் நிர்வாக அமைப்புகள் குப்தப் பேரரசின் நிர்வாக அமைப்பை ஓரளவு தழுவியனவாகவே இருந்தன. ஏனெனில், கிட்டத்தட்ட அவை யனைத்துமே குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கும் ஹர்ஷரது பேரரசின் வீழ்ச்சிக்கும் பின்னர்ப் பிறந்த வாரிசு அரசுகளே (Succession States) யாகும். மேலும், இவ் வரசுகளுக்கிடையில் நிர்வாக அமைப்பில் அல்லது அரசியல் அமைப்பில் ஒன்றுக்கொன்று பெருத்த வேறுபாடுகள் இருந்தனவென்று கூறமுடியாது. வட கோடியிலிருந்த காஷ்மீர அரசின் நிர்வாக அமைப்புக்கும், தெற்கிலிருந்த பரமார அரசின் நிர்வாக அமைப்புக்கும், கிழக்கி லிருந்த பல அரசுகளின் நிர்வாக அமைப்புக்குமிடையில் சிற் சில வேறுபாடுகள் இருந்தன என்பதில் ஐயமில்லை. ஆயினும், பொதுப்படையான சில அம்சங்களைப்பற்றி மட்டுமே இங்கு நாம் பார்க்க முடியும். வரலாற்றின் பல கட்டங்களில் கிட்டத்தட்ட இப் பகுதிகள் அனைத்துமே மௌரியப் பேரரசு, கனிஷ்கப் பேரரசு, குப்தப் பேரரசு, ஹர்ஷப் பேரரசு, கூர்ஜரப் பிரதிகாரப் பேரரசு போன்றவற்றில் அடங்கியிருந்த காரணத்தினுல், இவற் றின் மாவட்டப் பிரிவுகள், மாவட்ட ஆட்சி முறை முதலியவற் றில் ஒருவித ஒற்றுமை நெடுங்காலமாகவே இருந்து வந்தது. நகர் நிர்வாகம், கிராம நிர்வாகம் போன்றவற்றில் தொன்று தொட்டு நிலவிய பழைய நிர்வாக முறைகளே பின்பற்றப்பட் டன. எனவே, இவற்றுக்கிடையில் ஏராளமான பொது அம்சங் கள் இருந்தன.

மேற்கூறிய காலத்தில் நிறுவிய நிர்வாக அமைப்பைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கும் நூல்களோ மற்றச் சான்றே

அதிகமில்லை. இந்து அரசர்களது கடமைகளையும், உரிமைகளை யும், நிலையையும், பிறவற்றையும் பொதுவாகக் குறிப்பிடும் நூல் கள் ஏராளமாக உள்ளன எனினும், நிர்வாக அமைப்பைப்பற்றி மட்டும் விரிவாகக் குறிப்பிடும் தனி நூல்கள் இயற்றப்படவில்லை. உதாரணமாக, கல்கணரது ராஜதரங்கிணி, போஜரது சிருங்கார மஞ்சரி கதா, யுக்தி கல்பதரு, சமராங்கண சூத்திரதாரம், லக்ஷ்மீ தரரது கிருத்திய-கல்பதரு, சோமதேவரது நீதிவாக்கியா மிருதம், ஜினசேனரது ஆதி புராணம் போன்ற நூல்கள் அரசர் களது மகிமை முதலியவற்றையும் மற்றுமுள்ள செய்திகளையும் நமக்குப் பொதுப்படையாகத் தெரிவிக்கின்றன. பரமாரர், பாலர், பிரதிகாரர் போன்ற ஒவ்வொரு வமிச அரசின் நிர்வாக அமைப்பையும்பற்றித் தனித்தனியாக விவரிக்கும் நூல்கள் எழுதப்படாமை ஒரு பெருங் குறையேயாகும்.

அரசரது நிலை

மேற்கத்திய அரசியல் நூலார் பண்டை இந்திய அரசிய லமைப்பைக் கிழக்கத்திய எதேச்சாதிகாரம் (Oriental Despotism) என்று வருணித்துள்ளதை இங்குக் குறிப்பிட வேண்டியது அவ சியமாகும். இந்திய அரசர்கள் சர்வ அதிகாரமும் பெற்றவர் களாகவே இக் காலத்திலும் தொடர்ந்து இருந்தனர். வட இந்தியா முழுவதிலும் முடியாட்சி முறையே தொடர்ந்து இருந் தது. கிட்டத்தட்ட எல்லா அரசர்களுமே 'மகாராஜாதிராஜர் கள்', 'மகாராஜர்கள்' என்றே தங்களை அழைத்துக் கொண் டனர். வலிமைமிக்க அரசர்களான பரமாரபோஜர் போன்றோர், 'பரமபட்டாரக-மகாராஜாதிராஜ-பரமேசுவரர்' என்ற விருதை யும் பூண்டிருந்தனர். இரண்டாம் வாக்பதி முஞ்சர், சிந்து ராஜர், முதலாம் போஜர் போன்ற பரமார அரசர்களும், மிகிர போஜர், முதலாம் மகேந்திரபாலர் போன்ற பிரதிகார அரசர் களும் இந்த விருதினைப் பூண்டிருந்தனர். 'மகாராஜர்' என்ற விருது மிகிரபோஜர் போன்ற பேரரசர்களாலும் சூடப்பட்டிருந் தது என்றாலும், பொதுவாகச் சாதாரண அரசர் ஒருவரது பட்ட மாகவே அது இருந்தது. மகாராஜர், நிருபர், பூபர் போன்ற விருதுகளைச் சாதாரண அரசர்களும் சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் பூண்டிருந்தனர். இவையன்றி, 'ஸ்ரீமத்' (Srimat), 'சார்வபௌம சக்கரவர்த்தி' என்பன போன்ற வேறு விருது களும் அக் காலத்தில் புனையப்பட்டன. காகதவால அரசர்கள் அசுவபதி, கஜபதி, நரபதி, ராஜதிரயாதிபதி முதலிய புதிய விருதுகளை அணிந்திருந்தனர். பொதுவாக, சாமந்தர், மகா சாமந்தர், மகாசாமந்தாதிபதி போன்ற விருதுகள் தலைமை அரசர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களையே குறிப்பிட்டன.

அரசர்களது அதிகாரம் அளவற்று இருந்தது : எவரையும் கலந்து ஆலோசனை செய்து, அல்லது எவருடைய ஆலோசனைக்கும் கட்டுப்பட்டு அவர்கள் ஆட்சிநடத்த வேண்டுமென்பதில்லை. தொன்று தொட்டு வந்த மரபினையொட்டி, அமைச்சர்களையும் மாநில ஆளுநர்களையும் பிறரையும் அவர்கள் ஆலோசனை கேட்டு நிர்வாகத்தை நடத்தியது பழைய வழக்கமும் வசதியும் காரணமாகவே யொழிய வேறில்லை. அவர்களது ஆலோசனைகளைக் கேட்டே அரசர் முடிவெடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. எந்த அவையும் அரசரது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அன்றில்லை. நிர்வாக வசதிக்கென அமைச்சர், சேனாதிபதி போன்றோர் அடங்கிய குழுவொன்று அடிக்கடி சந்தித்து அரசருக்கு உதவிவந்தது. இந்த அவையில் எவரெவர் உறுப்பினர், இதன் அதிகார வரம்புகள் யாவை என்பன போன்ற எதுவும் வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு அரசனது அதிகாரம் வரம்பின்றி இருந்ததானது கடவுளுக்கும் தேவருக்கும் அவன் நிகராயிலங்கினான் என்று கருதத்தக்கதாயிருந்தது என்று பல்வேறு புலவர்களும் புகழ்பாடினர். வலிமைமிக்க அரசர்கள் அனைவரும் அவ்வாறே கருதப்பட்டனர்.[1]

அன்றாட நிர்வாகம் வழக்கத்தையொட்டி நடந்து வந்தது. போர், சமாதானம் போன்ற முக்கியமான விவரங்களில் அமைச்சர், சேனாதிபதி போன்றோர் அரசருடன் கலந்துபேசிய பின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அதிகாரமனைத்தும் தலைநகரில் அரசரிடமும், அவரது சொற்படி செயல்படும் அமைச்சர், சேனாதிபதி முதலியோரிடமும் மட்டுமே இருந்தன. ஓரரசின் பல்வேறு மாநிலங்கள் அல்லது மாவட்டங்கள் அரசப் பிரதிநிதிகள் அல்லது சிற்றரசர்கள் முதலியோரால் நிர்வகிக்கப்பட்டன. பேரரசரின் அல்லது அரசரின் வலிமை குன்றிய போது இவர்கள் தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து முழு உரிமைபெற்ற மன்னராயினர். தத்தம் பகுதிகளில் இவர்களது அதிகாரமும் வரம்பின்றியே இருந்தது. தமக்குத் தலைவனான அரசன் ஒருவனுக்கு மட்டுமே இவர்கள் அஞ்சி நடந்தனர். பழைய வழக்காறுகள், பொதுமக்களின் கிளர்ச்சிகள், தலைமை அரசன் வழங்கும் தண்டனைகள் முதலியவை மட்டுமே இவர்கள் சர்வாதிகாரத்துடன் கொடுங்கோன்மையைக் கடைப்பிடிக்க முடியாவண்ணம் அரண் செய்து வந்தன. 'பேரரசு' என்பது பேரரசரால் நியமிக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகளால் ஆளப்படும் மாநிலங்களையும், தொன்றுதொட்டு வழக்கமாகச்

1. Altekar, *State and Government in Ancient India.*

சிற்றரசர்களாலும் குறுநில மன்னர்களாலும் ஆளப்படும் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. இந்தச் சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் கிளர்ச்சிகளுக்கும், தொன்று தொட்டு நிலவிவந்த வழக்காறுகளுக்கும் அஞ்சியே அரசர்கள் ஆட்சி புரிந்தனர். எனவே, 'வரம்புடை முடியாட்சி' யாகவே இந்திய முடியாட்சி இருந்தது.

சமண அறிஞரான சோமேசுவர சூரியின் நீதிவாக்கியாம்ருதம் போன்ற நூல்கள் இளவரசர்களுக்கு ஆயுதப் பயிற்சி, நவரத்தினங்களைத் தரங்காணும் பயிற்சி, பல்மொழிப் பயிற்சி ஆகியவை அவசியமென்று குறிப்பிடுகின்றன. தர்மசாத்திரம், காமசாத்திரம், அர்த்தசாத்திரம், தனுர்வேதம் முதலிய பல கலைகளையும் தகுதியுடைய ஆசிரியர்களைக் கொண்டு அரசகுமாரர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று அக்னிபுராணம் முதலிய நூல்களைப் பின்பற்றி எல்லாப் புலவர்களும் எழுதினர். அரசனிடம் பெருந்தன்மை, புலனடக்கம், கொடை, நடுநிலைமை, சமயப்பற்று முதலிய பல நற்குணங்கள் இருக்க வேண்டுமென்றும் அவர்கள் எழுதினர். தனபாலரது திலகமஞ்சரி என்ற நூல் அரசனது முக்கியமான கடமைகள் யாவை என்பதுபற்றிக் கூறுகிறது. சாமந்தர்கள் (சிற்றரசர்கள்) அனைவரையும் அடக்கியாளுதல், அனைத்து மாநிலங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல், கோட்டைகள் அனைத்திலும் நம்பிக்கையுள்ள படைகளை வைத்திருத்தல், பலரையும் தன் பக்கம் ஈர்த்தல் போன்றவற்றைச் செய்பவனே சிறந்த அரசன் என்று தனபாலர் குறிப்பிடுகிறார். போஜரது 'சிருங்கார மஞ்சரி கதா' என்ற நூலானது வேட்டை, காட்டுப் பயணம், நீராடல், குதிரைச் சவாரி, விற்பயிற்சி, மற்ற ஆயுதப்பயிற்சி, நண்பர்களுடன் கூடியிருத்தல் போன்ற அனைத்திலும் அரசன் சிறந்து விளங்க வேண்டுமென்று எழுதுகிறது.

அரசகுமாரன்

பெரும்பாலும் அரசுரிமை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்கே உரியதாயிருந்தது. பொதுவாக, அரசனின் மூத்த மகனே பட்டத்து வாரிசாக நியமிக்கப்பட்டான். ஆண்பிள்ளையில்லாத போதும், மகன் மிகவும் சிறுவனா யிருந்தபோதும் மட்டுமே அரசனின் தம்பி அல்லது சிறிய தந்தை போன்றோர் பட்டத்து வாரிசாக நியமிக்கப்பட்டனர். அரசன் இறப்பதற்கு முன்பே வாரிசுப் பட்டம் கட்டும் வழக்கம் இருந்தது. பட்டத்து வாரிசான ஒருவன் யுவராஜன், மகாகுமாரன், மகாராஜகுமாரன், மகாராஜபுத்ரன் என்றெல்லாம் அழைக்கப்பட்டான்.

யுவராஜன் அரசனுக்கு நிர்வாகத்திலும் போரிலும் உதவுவது வழக்கமாயிருந்தது. அவனுக்கு ஒரு பயிற்சியாகவும் இது விளங்கிற்று. ஏறத்தாழப் பதினறு வயது நிரம்பிய பின்னரே மூத்த அரசகுமாரன் (இவன் குமாரன் என்றே அதுவரை அழைக்கப்பட்டான்) யுவராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டான். இளவரசுப்பட்டம் கட்டும் முன்பாகவே அரசன் மரணமடைந்து விட்டால், அவனது குடும்பத்தினரும் அமைச்சர் போன்ற அதிகாரிகளும் முறைப்படி அடுத்த அரசனை அரியணைமீது அமர்த்துவர்.

பட்டத்தரசி

அரசர்களின் மனைவியருள் மூத்தவரோ, அல்லது குலப் பெருமை முதலியவற்ருல் அதிக செல்வாக்குள்ள ஒருவரோ 'பட்டமகிஷி' என்று அழைக்கப்பட்டார். 'அக்ரா' என்றும் இவர் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அரசனுக்கு அடுத்த படியாக இவருக்கே அதிக மரியாதைகள் வழங்கப்பட்டன. முக்கியமான சடங்குகள், நிகழ்ச்சிகளின்போது அரசனுக்கருகில் அரியணையில் அமர்ந்தவர் இவரே. இவருக்கென்று ஏராளமான கிராமங்களும், தொகைகளும் அரசரால் வழங்கப்பட்டன வென்று தெரிகிறது. கிராமங்களையும் நிலங்களையும், ஆலயங்களுக்கும் வேதியர்களுக்கும் வேறு சிலருக்கும் இவர் மானியமாக அளித்ததை எண்ணற்ற சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அரசன் இறந்து, பட்டத்து வாரிசான யுவராஜா சிறுவனுக இருந்தால் பட்டத்தரசியே அவனுக்குப் பாதுகாவலராக (regent) இருந்து, உரிய வயதை அவன் அடையும் வரையில் ஆட்சிப் பொறுப்பை நிர்வகித்தார்.

அரசனது அதிகாரிகள்

எந்த அரசனும் தனது அரச காரியங்களைத் தான்மட்டுமே நிர்வகிக்க முடியாதென்றும், பல அதிகாரிகளை அவன் உறுதுணையாகக் கொண்டிருக்க வேண்டுமென்றும் சோமதேவசூரி குறிப்பிடுகிருர். அவ் வதிகாரிகளுள் தலையாயவர் **மகா மந்திரி** அல்லது மந்திரி என்றழைக்கப்பட்டார். ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக ஒரு மந்திரி இருந்ததாகத் தெரியவில்லை. மூன்று, நான்கு மந்திரிகள் இருந்திருக்கக் கூடுமென்றும், அவர்களுள் முக்கியமானவரே 'மகா மந்திரி' என்றழைக்கப்பட்டிருக்கலாமென்றும் கருத இடமிருக்கிறது. சோமதேவரது நீதி வாக்கியாம்ருதம் என்ற நூல் 3 அல்லது 5 அல்லது 7 அமைச்சர்கள் இருக்கவேண்டுமென்று கூறுகிறது. இம் மந்திரிகள் கூட்டு அமைச்சரவை போல இருந்து செயல்படவில்லை; அவரவரும்

தனிப்பட்ட முறையிலேயே செயல்பட்டனர். முதலமைச்சர் பரமார அரசில் 'மகா பிரதானர்' என்றழைக்கப்பட்டார். 'மகா சச்சிவர்', 'புத்தி சச்சிவர்' என்றுங்கூட இவர்கள் அழைக்கப்பட்டனர். அரச காரியங்கள் அனைத்தையும்பற்றி அவர்களுடன் அரசன் கலந்து ஆலோசித்தான். 'அமாத்தியர்' என்றும் சில சாசனங்கள் மந்திரியைக் குறிப்பிடுகின்றன.

ஒவ்வொரு அரசனுக்கும் ***புரோகிதர்*** ஒருவர் இருந்தார். பதினெட்டு முக்கியமான அதிகாரிகள் ஒவ்வொரு அரசனுக்கும் இருக்க வேண்டுமென்று மகாபாரதம் குறிப்பிடுகிறது.[1] இவர்களுள் மந்திரிக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடப்படுபவர் புரோகிதரே. இவர் அரசருக்கு ராஜநீதி, தர்மசாத்திரம் போன்றவற்றை விளக்கிக் கூறி, வேள்விகள் முதலிய சடங்குகளையும் நடத்தி உதவினர். அமைச்சர்களுக்கும் தர்ம சாத்திரங்கள் போன்றவற்றை இவரே எடுத்தோதினர். புரோகிதருக்கு அரசர்கள் ஒவ்வொரு வேள்வி அல்லது சடங்கின் போதும் பெரும் பொருளையும் நிலத்தையும் மானியமாக அளித்தனர். புரோகிதர்களுள் மிகவும் சிறந்தவர்களை 'மகா புரோகிதர்' என்று சில செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. அடுத்த முக்கியமான அதிகாரியாகக் குறிப்பிடப்படுபவர் ***சேனுபதி***. மகாசேனுதிபதி என்றும் இவர் அழைக்கப்பட்டார். போரில் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர் இவரே. ***சாந்தி விக்கிரஹிகர்*** அல்லது 'மகா சாந்தி விக்கிரஹிகர்' என்பவர் போர், சமாதானம் முதலியவற்றுக்கான அமைச்சராக விளங்கினர். இவரும் சேனுபதியும் வெவ்வேறு அதிகாரிகளென்றே தெரிகின்றனர். சாந்தி விக்கிரஹிகர் என்பது சிற்றரசர் ஒருவரது அமைச்சரைக் குறிப்பதாகவும், மகா சாந்திவிக்கிரஹிகர் என்பது பேரரசர் ஒருவரது அமைச்சரைக் குறிப்பதாகவும் இருந்தன.

பிரதிகாரர் அல்லது 'மகாபிரதிகாரர்' என்ற அதிகாரியும் முக்கியமானவராவார். அரண்மனையிலும் அரசரைச் சுற்றியும் காவலுக்கு ஏற்பாடு செய்த அதிகாரி இவரே. பண்டை நூல்களில் 'துவாரபாலர்' என்றழைக்கப்பட்ட அதிகாரிகளே இப்பொழுது பிரதிகாரர் என்று பெயர் பெற்றனர். அரசனைப் பாதுகாப்பது இவர்களது முக்கியமான கடமையாகும். ***மகா தண்டநாயகர்*** என்றொரு அதிகாரியுமிருந்தார். 'தண்டம்' என்ற சொல்

[1] அப் பதினெட்டு அதிகாரிகள் கீழ்வருமாறு: மந்திரி, புரோகிதர், யுவராஜா, சேனுபதி, துவாரபாலர், அந்தர் வேசிகா, காராகாராதிகாரி (Karagaradhikarin), திரவ்யசஞ்சயகிருத் (Dravyasancayakrit), சன்னிதாத்திர் (Sannidhatr), பிரதேஸ்திர் (Pradestr), நகராத்யக்ஷர், கார்யநிர்மாணகிருத், தர்மாத்யக்ஷர், சபாத்யக்ஷர், தண்டபதி, துர்கபாலர், ராஷ்டிராந்தபாலர், அடவிபாலர்,

அபராதம் அல்லது தண்டிக்கும் கோல் என்று பொருள் படும். எனவே, காவல் துறை (பொலீஸ்) அதிகாரியைப் போல இவர் விளங்கினரென்று எல்லா ஆசிரியர்களும் கருதுகின்றனர். நீதிபதியாகவும் இவர் இருந்திருக்கலாம். அரசின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தண்டநாயகர் நியமிக்கப்பட்டிருக்கக் கூடும். சான்ருக, பரமார அரசின் வடக்குப் பகுதியில் உத்தராபத தண்டநாயகர், தெற்கில் தட்சிணபத தண்டநாயகர் ஆகிய இருவர் இருந்தனர் என்று பரமாரப் பேரரசர் போஜரது காலத்தில் தனபாலரால் எழுதப்பட்ட 'திலக மஞ்சரி' தெரிவிக்கிறது. **தர்மஸ்தேயர்கள்** என்ற அதிகாரிகளைப்பற்றியும் அந் நூலில் குறிப்பிடப்படுகிறது. இவர்கள் தர்மத்தை நிலைநிறுத்தும் நீதிபதிகளாக விளங்கியிருக்கக் கூடும். ***மகாதர்மாத்யக்ஷர்*** என்ற தலைமை நீதிபதியும் பிரதிகாரர் போன்ற சில அரசுகளில் இருந்தனர். ***மகா அக்ஷபதலிகர்*** அல்லது 'அக்ஷபதலிகர்' என்பவர் அரசாங்க ஆவணங்கள் அனைத்தையும் வைத்துப் பாதுகாக்கும் அதிகாரியாக இருந்தார். இவர் முக்கியமான அதிகாரிகளுள் ஒருவராக இருந்தாரென்று தெரிகிறது.

அரசனுக்கு ஜோசியர், வைத்தியர் போன்ற அதிகாரிகளுமிருந்தனர். நிமித்தியங்களை எடுத்தியம்பியமையால் இந்த ஜோசியருக்கு 'நைமித்திகர்' என்ற பெயர் ஏற்பட்டது. மருத்துவர் 'பிசாக்' (Bhisak) என்றழைக்கப்பட்டார். பல தூதர்கள் அரசருக்கு இருந்தனர். இவர்கள்மூலமாகவே அண்டை அரசர்களுடன் முக்கியமான கடிதப் போக்குவரத்துகள் நிகழ்ந்தன. யுக்தகர், நியுக்தகர் போன்ற கணக்கர்கள் இருந்தனர். தந்திரபாலர் என்றெரு அதிகாரியும் அரசருக்கு இருந்தார். தண்டிகர் என்ற சிறை அதிகாரி, அந்தபுரிகர் என்ற அந்தப்புரக் காவல் அதிகாரி, யானைகளையும் குதிரைகளையும் பராமரிக்கும் கார்யாதிகார புருஷர், துரகாதிகாரபுருஷர், நகரங்களை மேற்பார்வையிடுவதற்காகப் பட்டணதிகாரபுருஷர், சுரங்கங்களை மேற்பார்வையிடும் அகராதிகாரபுருஷர் முதலிய வேறுபல சிற்றதிகாரிகளும் இருந்தனர். கடிதங்களையும் பிறவற்றையும் எழுதுவதற்கெனக் கரணிகர், காயஸ்தர் போன்ரேரும் இருந்தனர். இவர்களன்றி, ஏராளமான நபர்கள் அடங்கிய ஒற்றர்ப் படையுமிருந்தது. பல்வேறு நூல்களும் பலதரப்பட்ட அதிகாரிகளைப்பற்றித் தெரிவிக்கின்றன வாயினும், முக்கியமான அதிகாரிகளாகக் கருதத்தக்கவர்கள் மேலே கூறப்பட்ட இவர்களே. காஷ்மீரத்தில் முக்கியமான அதிகாரிகள் 'கர்மஸ்தானங்கள்' எனப்பட்டனர். மகாபாரதத்தில் கூறப்படும் பதினெட்டு உயர் அதிகாரிகளைப் போல்

காஷ்மீரத்திலும் பதினெட்டுக் கர்மஸ்தானங்கள் இருந்தனர் என்பதை 'ராஜ தரங்கிணி' எடுத்துக் கூறுகிறது.

மாநில நிர்வாகம்

நிர்வாக வசதிக்கென ஒவ்வோர் அரசும் மாநிலங்களாகவும் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. புக்தி (Bhukti), பூமி, மண்டலம் என்று மாநிலங்கள் அழைக்கப்பட்டன. மாநிலங்கள் 'விஷயங்கள்' என்ற பெயரில் பல மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தன. மாநில அதிகாரியாக இருந்தவர் 'மண்டலேசு வரர்' அல்லது 'மகா மண்டலேசுவரர்' எனப்பட்டார். பரமார அரசு போன்றவற்றில் விஷயம், போகம் என்ற பிரிவுகள் இருந் தன. மாவட்டப் பிரிவுகளே இச் சொற்களால் குறிப்பிடப்படு கின்றன என்ருலும், இவ் விரண்டுக்குமுள்ள வித்தியாசம் இன்ன தென்று புலப்படவில்லை. இவற்றின் அதிகாரிகள் விஷயபதி, போகபதி எனப்பட்டனர். இவை சில அரசுகளில் பாதகம் (Pathakas), பிரதிஜாதகரணகம் எனும் சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. பிரதிகாரப் பேரரசு, பாலப் பேரரசு போன்றவை பல சிற்றரசுகளை உள்ளடக்கியிருந்தன. அவற்றை ஆட்சிபுரிந்தவர்கள் சாமந்தர்கள், மகா சாமந்தர்கள், மகா குமாரர்கள், நரேந்திரர்கள், நிருபர்கள், மண்டலேசுவரர்கள் என்பன போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். இவர்கள் தங்களது பகுதிகளில் அரசர்களைப் போன்றே சர்வ அதிகாரமும் பெற்றுத் திகழ்ந்தனர். சிறு சிறு படைகளும் இவர்களது வசம் இருந்தன. மண்டலேசுவரராகவும் சாமந்தராகவும் இருந்த பலரே பின்னர்ச் சுதந்திர அரசர்களாகித் தனி அரசுகளை நிறுவினர்.

பல மாநிலங்களின் ஆளுநர்களாக அரச குமாரர்கள் நிய மிக்கப்பட்டனர். இவர்கள் 'ராஜபுத்திரர்கள்' என்றும் 'மகா குமாரர்க'ளென்றும் அழைக்கப்பட்டனர். புக்தி, மண்டலம், விஷயம் ஆகியவற்றின் ஆளுநர்களுக்கு உதவியாகப் பல்வேறு அதிகாரிகள் இருந்தனரென்பதைச் சாசனங்கள் வாயிலாக நாம் அறிகிருேம். முக்கியமான நகரங்களிலும் பிற இடங்களிலும் கோட்டைகள் அமைக்கப்பட்டு, 'கோட்ட பாலர்கள்' என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மாநில ஆளுநர்களுக்கும் 'உபரிகாமாத்தியர்' என்ற பெயரில் அமைச்சர்கள் இருந்தனர் என்று தெரிகிறது. துரோதிகாரி (Dhurodhikari), தண்டபாசி கர், சவுல்கிகர் போன்ற பல அதிகாரிகள் மாநில ஆளுநர்க்கு உதவிபுரிந்தனர். தண்டபாசிகர் பொலீஸ் அதிகாரியாக விளங் கினர். சவுல்கிகர் (Saulkika) என்பவர் சுங்க அதிகாரியாக்

இருந்தார். ஒவ்வொரு விஷயத்தையும் (மாவட்டத்தையும்) நிர்வகித்துவந்த தலைமையதிகாரி 'விஷயாபதி' எனப்பட்டார். ஊரிலும் விஷயத்திலும், செல்வம் அந்தஸ்து போன்றவற்றால் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்கள் மகாஜனங்கள், விப்ரர்கள் (Vipras), கோஷ்டிகள் (Gosthikas) எனப்பட்டனர். மாவட்ட நிர்வாகத்தில் இவர்களைக் கலந்து அடிக்கடி ஆலோசனைகள் நிகழ்த்தப்பட்டன. திருடர், வழிப்பறிக் கொள்ளைக் காரர் ஆகியோரைப் பிடிப்பதற்கென்று 'சௌரிகர்' (Caurika) என்ற அதிகாரி இருந்தார். இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான அதிகாரிகளின் பெயர்கள் ஆயிரக்கணக்கான சாசனங்களில் குறிப்பிடப்படுகின்றன. அப் பெயர்களை வைத்து அவர்களின் பொறுப்புகளைத் தெரிந்து கொள்வது சிரமமாக உள்ளது.

மற்றப் பிரிவுகள்

'விஷயங்கள்' என்ற மாவட்டங்கள் மேலும் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அச் சிறு பிரிவுகளின் பெயர்கள் இடத்துக்கிடம் மாறுபட்டன. சான்றாக, மேற்கு இந்தியாவில் விஷயங்கள் ஆகாராக்களாகவும் (Aharas), ஆகாராக்கள் பாதகங்களாகவும் (Pathakas), பாதகங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன என்பதைச் சமண நூல்கள் வாயிலாக அறிகிறோம். கூர்ஜரப் பிரதிகார அரசு போன்றவற்றில் விஷயங்கள் அக்ர காரங்களாகவும் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஊர்கள், பள்ளி, பத்ரம் (Padra), பத்ரகம் (Padraka), கிராமம் என்ற பெயர் முடிவைக் கொண்டிருந்தன. பிராமணர்களுக்கு வழங்கப் பட்ட ஊர்கள் அக்ரகாரம் என்றும், பிராமணர்கள் வசித்த ஊர்கள் பிரம்மஸ்தானம் அல்லது பிரம்மபுரி என்றும் வழங்கப் பட்டன. கிராமத்தின் தலைவன் கிராமபதி, காமகாமிகன் (Gamagamika) என்பன போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டான். ஊர்ப் பெரியவர்கள் அடங்கிய சபையொன்று ஒவ்வோர் ஊரிலுமிருந்தது. ஊரில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரித்து, வரிவசூல் முதலியவற்றைக் கிராமபதி நிகழ்த்தினார்.

நகரங்கள் 'புராதியக்ஷன்' (Puradhyaksa) என்ற அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டன. ஒவ்வொரு நகரத்திலும் நகரப் பெரியவர்கள் அடங்கிய குழுவொன்று இருந்தது. இவர்கள் 'நகர ரட்சகர்கள்' என்று அழைக்கப்பட்டனர். நகரங்களில் வாணியர், வெல்லம் காய்ச்சுவோர், குயவர், சாராயம் காய்ச்சுவோர், நகை வியாபாரிகள், கொல்லர் போன்ற தொழிலாளிகள் தனித்

தனியாகச் சங்கங்களை (Guilds) அமைத்திருந்தனர். தமது பொருள்களின் விலை, வியாபார விதிகள் முதலியவற்றைப்பற்றிச் சங்கத்தில் இவர்கள் முடிவு செய்தனர். ஒவ்வொரு சங்கமும் தன் தன் உறுப்பினர்மீது சிறு கட்டணமொன்றை விதித்து, அதைக் கொண்டு கோயில் பணிகள் போன்றவற்றை மேற்கொண்டது. நகர நிர்வாகத்திலும் இந்தத் தொழிலாளர்-வணிக சங்கங்கள் பணியாற்றின. கிராமத்திலும் நகரத்திலும் 'பஞ்சகுலம்' (Pancakula) என்ற அதிகாரியோ அல்லது அவையோ இருந்ததாகத் தெரிகிறது. அரசுக்குரிய வருமானத்தை வசூலித்தல், கணக்குகளை வைத்திருத்தல், அரசாங்க முத்திரையை வைத்திருத்தல், நிதி விவகாரங்களைக் கவனித்தல், இந் நான்கையும் மேற்பார்வை யிடுதல் என்ற ஐந்து தொழில்களைப் பஞ்சகுலம் செய்ததாகச் சோமதேவர் எழுதுகிறார். வணிகர்களும் தங்கள் சங்கத்தின் மூலமாகப் பஞ்சகுல அதிகாரிகளாக இருந்தனர். நகரத்தின் முக்கிய மனிதர்களான மகாஜனங்கள் என்போரும், விப்ரர்கள் என்போரும், வணிக-தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த (இச் சங்கங்கள் கோஷ்டிகள் என்றும் அழைக்கப் பட்டன) உறுப்பினர்கள் சிலரும் நகர அவையில் உறுப்பினர்களாக இருந்தனர். நகர வரி, யாத்திரை வரி, தொழில் வரி போன்றவற்றை வசூலிக்கும் உரிமை இந்தச் சபைக்கும், பஞ்சகுலத்துக்குமிருந்தது. 'பஞ்சகுலம்' என்ற சொல்லின் பொருள் விளங்கவில்லை.

நிதி நிர்வாகம்

நிதி நிலையை நல்ல நிலையில் வைத்திருப்பது அவசியம் என்பதைப்பற்றி வலியுறுத்தாத ஆசிரியர்கள் இல்லையெனலாம். அரசன், அரசவை, அதிகாரிகள், படை, போர் போன்ற அனைத்துக்கும் பெரும் பொருள் தேவைப்பட்டது; எனவே, பலவிதமான வரிகள் விதிக்கப்பட்டன. பொதுவாக, நிலவருவாயில் ஆறில் ஒரு பங்கு வரியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இது இடத்துக்கிடம், காலத்துக்குக் காலம் மாறுபட்டதாயினும், பொதுவாக ஆறில் ஒன்றே வழக்கமாயிருந்தது என்று கூறலாம். மக்களுக்கும் அவர்களது சொத்துகளுக்கும் பாதுகாப்பையளித்த இந்திய அரசன் அதற்குக் கைம்மாருக ஆறில் ஒரு பங்கு வருவாயை எடுத்துக் கொண்டான் என்று அல்பெருனி குறிப்பிடுகிறார். பல நேரங்களில் ஆறில் ஒன்றுக்குக் குறைவாகவும் கூடுதலாகவும் கூட வசூலிக்கப்பட்டது. வரி வசூலுக்கென நிலங்கள் அளக்கப் பட்ட செய்தியைப் பல சாசனங்கள் வாயிலாக நாம் அறிகிறோம். செக்கில் ஆட்டப்படும் எண்ணெய், வெற்றிலை போன்ற பல்வேறு பண்டங்களின்மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. நிலவரியானது

'பாகம்' எனப்பட்டது. 'போகம்' என்ற மற்ரெரு வரியும் விதிக்கப்பட்டது. இதன் பொருள் விளங்கவில்லை. கரம் (Kara), பாலிகம் (Palikas), விம்சோபகம் (Vimsopakas), உத்ரங்கம் (Udranga), பிரஸ்தகம் (Prasthaka) என்பன போன்ற பல்வேறு வரிகள் குறிப்பிடப்படுகின்றன; ஆனால், இவைபற்றிய எல்லாத் தகவல்களும் நமக்குத் தெரியவில்லை. சுரங்கம், புதையல்கள், கால்நடைகள் போன்றவற்றின் மீதும், பலதரப்பட்ட தொழில்கள்மீதும் வரி வசூலிக்கப்பட்டது. ஆண்வாரிசு இல்லாதவர்களின் சொத்துகள் அரசனுக்குச் சொந்தமாயின. தண்டம், பறிமுதல் போன்ற தண்டனைகள் மூலமாகவும் அரசாங்கத்துக்குக் கணிசமான வருவாய் கிடைத்தது. முஸ்லிம்கள் படையெடுத்து வந்தபோது, 'துருக்ஷ தண்டம்' என்ற புதிய வரி விதிக்கப்பட்டது. சாசனங்களில் கூறப்படும் யமலி கம்பலம், கூடகம், அக்ஷபடலாதயம் முதலிய வரிகளைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. பலவிதமான வரிகள் இவ்வாறு வசூலிக்கப்பட்டனவாயினும், அவை போதாமல் அரசர்கள் அண்டை அரசுகளின்மீது அடிக்கடி போர் தொடுத்து, அவற்றிலிருந்த நகரங்களையும் கிராமங்களையும் கொள்ளையிட்டு, மேலும் மேலும் நிதி தேடினர்.

அரசவை ஆடம்பரங்கள், இடையருத போர்கள், அளவற்ற தானதர்மங்கள், ஊதாரிச் செலவுகள் போன்றவை காரணமாகப் பெரும் பொருள் செலவழிந்தது. கிட்டத்தட்ட அதிகாரிகள் அனைவருமே ரொக்க ஊதியத்துக்குப் பதிலாக மானியங்களையும் அரசரின் தானதர்மங்களையும் நம்பியே இருந்தனர். பல கிராமங்கள் அல்லது ஒரு சிறு தாலுக்காவே கூட ஜாகீர்களாக உயர் அதிகாரிகளுக்கு அரசர்களால் அளிக்கப்பட்டன.

வாணிபமும் நாணயமும்

வாணிபச்சங்கத்தினர் (கோஷ்டி) வட இந்தியா முழுதிலும் வியாபாரப் பண்டங்களைக் கொண்டு சென்றனர். தரை வாணிபமே முக்கியமானதாகத் திகழ்ந்தது. கடல் வழியாகத் தூரத்து நாடுகளுடன் பண்டைக் காலத்தில் நடந்து வந்த வாணிபம் கி.பி. 5, 6ஆம் நூற்றாண்டுக்குப் பின் நின்று போய்விட்டது. கடல் கடந்து சென்று வாணிபம் செய்வதற்கு எதிராகச் சமய அடிப்படையிலான பல தடைகள் எழுப்பப்பட்டன.[1] மேற்குக் கடற்கரைப் பட்டினமான புரோச் ஒரு காலத்தில்

[1] 'திரைகட லோடியும் திரவியம் தேடு' என்பது நீண்ட காலத் தமிழர் சித்தாந்தம்; ஆனால், வட நாட்டினர் 'கடலைக் கடப்பது மகாபாவம்' என்று தடை விதித்து விட்டனர்!

தலைசிறந்த துறைமுகமாக இருந்தது. ஆனால், இப்பொழுதோ தனது பழைய வாணிபத்தை அது இழந்து சிறு நகரமாகத் தேய்ந்தது. நல்ல சாலைகள் இல்லாமையாலும், அடிக்கடி சண்டைகள் நடைபெற்றமையாலும் உள்நாட்டுத் தரை வாணிபமும் விரிவான அளவில் நடைபெறவில்லை. இந் நிலையில் ஏறத்தாழ அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்திலுமே சுயநிறைவு பெற்றவையாகக் கிராமங்கள் மாறின; இதனால் பெருமளவில் வியாபாரம் நடைபெறுவதற்கு வழியில்லாமற் போயிற்று. வாணிபப் பண்டங்களின்மீது அரசன், சிற்றரசன், மாவட்ட அதிகாரிகள், கிராம அதிகாரிகள் ஆகிய பலராலும் சுங்கவரி விதிக்கப்பட்டது. பல முறை இவ்வாறு வரி செலுத்த வேண்டியிருந்த கட்டமானது வாணிபத்தின் வளர்ச்சிக்கு மற்றொரு முக்கிய தடையாக விளங்கிற்று. அரசனின் சுங்க அதிகாரி 'சவுல்கிகன்' என்று அழைக்கப்பட்டான். சுல்கம் (Sulka) என்பது சுங்கவரியாகும். இந்த வரி ஐந்து சதவீதத்திலிருந்து பத்துச் சதவீதம் வரையில் இருந்தது என்பதைப் பல நூல்களும் தெரிவிக்கின்றன.

பண்டமாற்று வாணிபமே பெரிதும் நடைபெற்று வந்தது. ஐரோப்பாவில் இடைக்காலத்தில் வாணிபம் பெருமளவில் வளர்ச்சியுறுவதற்குக் காரணமாயிருந்த வெனிஸ், ஜினோவா போன்ற நகரத்துக் கோடீசுவர வணிகர்கள் மாதிரி இந்தியாவில் இல்லை; அத்தகையோர் தோன்றுவதற்கேற்ற சூழலும் இந் நாட்டிலில்லை. எனவேதான், சிறிய அளவிலேயே இந்திய உள்நாட்டு வாணிபம் நடைபெற்று வந்தது. பண்டமாற்று முறையில் வாணிபம் விரிவடைவதற்கு வழியில்லை. போதிய பாதுகாப்பும் சாலைவசதிகளும் இல்லாத நிலையில் பண்டங்களை இடம்விட்டு இடம் கொண்டு செல்வதில் சொல்லொணாச் சிரமங்களிருந்தன.

பல்வேறு அரசர்களும் நாணயங்களை வெளியிட்டனர் என்பதை நாம் முன்பே பார்த்தோம். கிரேக்கர்களான இந்தோ-பாக்டீரிய அரசர்கள் 65 குன்றிமணி எடையுள்ள திராஷ்மே (Drachsmae) என்ற நாணயத்தினை வெளியிட்டனர். இதைப் பின்பற்றி, திரம்மா (Dramma) என்ற பெயரில் மிகிரபோஜர் போன்ற அரசர்கள் வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். கூர்ஜரப் பிரதிகாரர்களின் சியதோனி (Siyadoni) சாசனமானது அவர்களது நாணயங்களைப்பற்றி நமக்கு விளக்கமாகத் தெரிவிக்கிறது. தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் நமக்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. இந் நாணயங்கள் வியாபாரத்துக்கு

அதிகம் பயன்பட்டனவாகத் தெரியவில்லை. காரணம், அவற்றின் எடை, தரம், மதிப்புப் போன்றவை அடிக்கடி மாறுபட்டன. ஒழுங்கான நாணயமுறை யொன்று வட இந்தியா முழுவதிலும் எல்லா அரசுகளிலும் நிலவிற்று என்பதற்கான ஆதாரங்களில்லை. ரூபகம் என்ற ஒரு நாணயமும் குஜராத் போன்ற பகுதிகளில் வழக்கில் இருந்தது. இதுவே பின்னர் முஸ்லிம்களின் காலத்தில் 'ரூப்யா' (ரூபாய்) என்றும் மருவிற்று. சூர்ப்பம் (Surpa) என்பதே மிகவும் குறைந்த மதிப்புள்ள காசாகக் குஜராத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது. இரண்டு காசைக் கொடுத்து ஒரு பூமாலை வாங்கியதாக திவ்யாஸ்ரய காவியத்தில் ஹேமசந்திரர் குறிப்பிடுவதன்மூலம் இதை உணரலாம். பாகிகம் (Bhagika—அரை ரூபக மதிப்புள்ளது), பிரஸ்தம் (Prastha) போன்ற பல்வேறு நாணயங்களின் பெயர்களையும் அவர் குறிப்பிடுகிறார். வின்சோபகம் (Vinsopaka), கபர்திகம் (Kapardika), காகினி (Kakini), வராடகம் (Varataka) ஆகியவை மதிப்பிற் குறைந்த செப்புக் காசுகள் என்பதை அவர்மூலம் நாம் அறிகிறோம். இருபது ரூபகம் முதல் நாற்பது ரூபகம் வரையில் மதிப்புடைய நிஷ்கம் (Nishka), விஷ்டம் (Vishta), பலம் (Pala) ஆகிய தங்க நாணயங்களைப்பற்றியும் அவர் தெரிவிக்கிறார். ஆனால், இவையனைத்தும் மேற்கிந்தியாவில் புழக்கத்திலிருந்த நாணயங்களே. இடத்துக்கிடம் அல்லது அரசுக்கரசு நாணயங்கள் பெரிதும் மாறுபட்டன. பணம், ஹர்ஷபணம் ஆகிய நாணயங்கள் வட இந்தியாவில் பல பகுதிகளிலும் பரவலாகப் புழக்கத்திலிருந்தன. எனினும், எல்லா அரசுகளிலும் நிலவிய நாணய முறைபற்றி அறிந்துகொள்வதற்குப் போதுமான சான்றுகள் இல்லை.

நீதி நிர்வாகம்

இந்து நீதி சாத்திரம்பற்றிய பல நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. முற்காலத்திய ஸ்மிருதி நூல்களுக்குப் பல அறிஞர்களால் விளக்க உரைகள் இப்போது எழுதப்பட்டன. மேடாதிதி (Medhatithi), விசுவரூபர் போன்றோர் நீதிசாத்திரம்பற்றிப் பல நூல்களை எழுதினர். விசுவரூபர் தந்தையின் சொத்துகளைப் பாகப் பிரிவினை செய்வதுபற்றிய பிரச்சினை குறித்து யாக்ஞவல்க்கியரின் ஸ்மிருதி நூலுக்கு விளக்க உரை எழுதினார். மேடாதிதி நீதி நிர்வாகம்பற்றி விவரித்தார். மனுதர்ம சாத்திரத்துக்கு மேடாதிதி எழுதியுள்ள உரை இன்றும் பலராலும் போற்றப்படுகிறது. அரசனது நீதி மன்றத்தில் எவரெவர் உறுப்பினராக இருக்க வேண்டும், அவர்களுக்குரிய தகுதிகள் யாவை, நீதி விசாரிக்கும் முறைகள் என்ன என்னும் பலவற்றையும்பற்றி

இந்த அறிஞர் எழுதியுள்ளார். சொத்துரிமை, தண்டனைகள் போன்ற முக்கியமான விவகாரங்கள் அனைத்தையும் இவரது வியாக்கியானம் அலசி ஆராய்கிறது. மனு, யாக்ஞவல்க்கியர், நாரதர் போன்றவர்களின் பண்டைக் காலத்து ஸ்மிருதி நூல்கள் அனைத்தின் சாரமாக 'ஸ்மிருதி சங்கிரகம்' என்ற ஒரு பெரு நூலைப் பெயர் தெரியாத ஓர் அறிஞர் இக் காலத்தில் தொகுத்துச் சென்றுர். இந் நூல்கள் அனைத்துமே பிற்காலத்தில் விஞ்ஞா னேசுவரர் போன்ற அறிஞர்களுக்கு அடித்தளமாகப் பயன்பட் டன. இந்து தர்மத்தின்படி சொத்துரிமைபற்றி இவர்கள் வெளி யிட்டிருக்கும் கருத்துகளே பிற்காலத்திய இந்து நீதிபதிகளால் ஆதாரமாக மேற்கொள்ளப்பட்டன.

அரசனே தலைமை நீதிபதியாக விளங்கினுன். ஸ்மிருதி நூல்களை அடிப்படையாகக் கொண்டு அரசனது அதிகாரிகள் நீதி வழங்கினர். நீதி மன்றங்கள் சபையென்றும், நீதிபதி சபாபதியென்றும், அவருக்குத் துணையாக இருக்கும் ஜூரிகள் சப்யர்கள் (Sabhyas) என்றும் நீதிவாக்யாம்ருதம் என்ற நூலில் அழைக்கப்படுகின்றனர். ஆயினும், இப் பெயர்கள் அரசுக்கு அரசு மாறுபட்டன. அரசனது சபையில் (நீதி மன்றத்தில்) நீதி சாத்திரத்தில் வல்ல பிராமணர்கள் அரசனுடனிருந்து ஆலோசனைகள் கூற வேண்டுமென்று மேடாதிதி குறிப்பிட் டார். மந்திரிகளும் நீதி நூல்களில் வல்லவர்களா யிருக்கவேண்டு மென்று அவர் கருதுகிருர். நாடு முழுவதும் சிவில் வழக்குகளை யும் கிரிமினல் வழக்குகளையும் விசாரிப்பதற்காக நீதி மன்றங்கள் இருந்தன. எனினும், இவற்றின் அமைப்புப்பற்றி நம்மால் அதிகம் அறிந்து கொள்ள இயலவில்லை. நீதிபதிகள் எவ்வாறு நியமிக்கப்பட்டனர், விசாரணை முறைகள் யாவை என்பன போன்ற செய்திகள் நமக்கு விளங்கவில்லை. சோமதேவரின் நீதிவாக்யாம்ருதம் நீதி வழங்குவதைப்பற்றி விவரமாகக் குறிப் பிடுகின்ற இடத்திலும் நீதிமன்ற அமைப்பு முறையைப்பற்றிக் குறிப்பிடாதது ஒரு பெருங் குறையாகும். கிராம நீதிமன்றங்கள், நகர நீதிமன்றங்கள் ஆகியவற்றின் முடிவுகளால் திருப்தியடை யாதவர்கள் அரசனது நீதிமன்றத்துக்கு மனுச் செய்துகொள்ள லாம் என்று அவர் தெரிவிக்கிருர். ஆனுல், இடையிலான நீதி மன்றங்களைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை. சௌளுக்கிய அரச ரான குமாரபாலர் நாள்தோறும் நான்காவது பிரகாரமான சுமார் பிற்பகல் மூன்று மணிக்கு வழக்குகளை விசாரிப்பதற்காகச் சபையைக் கூட்டினுரென்றும் கூறப்படுகிறது. சாட்சிகள், பட்டயங்கள் (பட்டா போன்ற பத்திரங்கள்) போன்றவை அடிப் படையான சான்றுகளாகக் கருதப்பட்டன.

சாட்சி கூறுமுன், உறுதி அல்லது பிரமாணம் எடுத்துக் கொள்ளும் வழக்கம் அன்றே பின்பற்றப்பட்டது. பிராமணர்கள் தமது பூணூலையும், க்ஷத்திரியர்கள் ஆயுதம் அல்லது நகையையும், வைசியர்கள் தமது காதையும், சூத்திரர்கள் பால் அல்லது தானியத்தையும் தொட்டு அதன்மீது பிரமாணம் செய்தனர். வழக்கானது 'வியவகாரம்' என்று அழைக்கப்பட்டது. கிராமங்களில் ஊர்ப் பெரியவர்களைக் கொண்ட பஞ்சாயத்துகளே நீதி மன்றங்களாகச் செயல்பட்டன. இந்தியாவுக்கு வந்த அராபிய வணிகரான சுலைமான் இத்தகைய பொதுமக்கள் நீதி மன்றங்கள் எல்லா ஊர்களிலுமிருந்தன என்பதைக் கண்டார்.

வழக்கு விசாரணைமுறை

விசாரணைமுறைபற்றி அங்குமிங்குமாகப் பல விவரங்கள் இந்திய நூல்களில் தரப்படுகின்றன. அல்பெருனியின் நூலானது இதுபற்றிச் சில விவரங்களை நமக்குத் தருகிறது.[1] ஒருவர் ஒரு நீதிபதிமுன் மற்றொருவருக் கெதிராக ஒரு குற்றச்சாட்டினைக் கொண்டுவரும் பொழுது எழுத்து மூலமாக அது இருத்தல் வேண்டுமென்று அல்பெருனி சொல்கிறார். பத்திரம் அல்லது ஆவணம் போன்ற எதுவும் இல்லாத போது சாட்சிகளை வைத்து உண்மை அறியப்பட்டது. சாட்சிகளின் எண்ணிக்கை நான்குக்குக் குறையாமல் இருக்க வேண்டும். போதுமான சாட்சிகள் இல்லாத போது உண்மையை அறிவதற்காக வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டன. கொதிக்கும் நீருள்ள ஒரு பாத்திரத்தில் காசு போன்ற ஒரு பொருளைப் போட்டு அதை எடுக்கச் சொல்வது ஒரு முறை. பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையில் பிடிக்கச் செய்வது மற்றொரு முறை. அக் காசைக் கொதி நீரிலிருந்து எடுத்த பின், அல்லது பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் பிடித்து ஏழு அடி நடந்த பின் ஒரு வாரத்துக்குள் அவனது கை முற்றிலுமாகக் குணமடைந்து விட்டால், அவன் குற்றமற்றவன் அல்லது உண்மை சொல்பவன் என்று முடிவாகும். இம் முறை இடைக்கால ஐரோப்பாவிலும் பின்பற்றப்பட்டு வந்தது. இதையொத்த வேறு பல சோதனைகளும் நீதி மன்றங்களில் நிகழ்த்தப்பட்டன என்று அல்பெருனி தெரிவிக்கிறார். நீச்சல் தெரியாத ஒருவனை வெள்ளத்தில் தள்ளி, அவன் மூழ்காமல் தப்பினால் அவனை நிரபராதி என்று விடுதலை செய்யும் வழக்கமும் இருந்ததாம். ஒருவித நஞ்சையூட்டி, அதனால் தீங்கு ஏற்படாமற் போனால், அவன் குற்றமற்றவன் என்று உணரப்பட்டதாம். வணிகர்கள் தங்களுக்கிடையிலான வழக்கு

[1] E. C. Sachau, *Alberuni's India.*

களைத் தமது பெரியவர்கள் அடங்கிய நீதிமன்றங்களிலேயே வைத்து முடிவு செய்தனர் என்று மேடாதிதி குறிப்பிடுகிருர். கூட்டங்கூட்டமாக வியாபாரப் பண்டங்களோடு செல்லும் இவ் வணிகர்களைச் சிரேனிகள் என்றும் கணங்கள் என்றும் அவர் அழைக்கிருர்.

தண்டனைகள்

சாதி அடிப்படையில் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தது என்பதையும் அல்பெருனியின் நூலின்மூலம் நாம் அறிகிரும். பிராமணன் ஒருவன் வேறு சாதியைச் சேர்ந்த ஒருவனைக் கொலை செய்தால் உபவாசம், தானம், தவம் போன்றவற்றின் மூலமாகக் கழுவாய் தேடுமாறு அவனுக்கு விதிக்கப்பட்டதாம். எக் குற்றத்துக்காகவும் பிராமணர் அல்லது க்ஷத்திரியருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களது சொத்துகள் மட்டுமே அரசனுல் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

நோயாளிக்கு வைத்தியன் மருந்து கொடுப்பது போன்றதே அரசன் தண்டனை வழங்குவது என்பது சோமதேவரின் கூற்று. அபராதத்தின்மூலமாகப் பணம் வசூலிப்பது ஒன்றே நோக்கமாக இருக்கக் கூடாது என்கிருர் அவர். காசு சேர்ப்பதற்காக மருத்துவம் செய்வதும் நீதி வழங்குவதும் கீழ்த்தரமான செயல்கள் என்று இப் பெரியாரின் நீதிவாக்யாம்ருதத்தில் கண்டிக்கப் படுகின்றன. எட்டு விதமான தண்டனைகள் சமண நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. வருத்தம் தெரிவிக்கச் செய்தல், நாடு கடத்தப்படுதல், சிறைத் தண்டனை, மரண தண்டனை, அபராதம் விதித்தல், கசையடி அல்லது பிரம்படி கொடுத்தல் போன்றவை முக்கியமானவை. பிராமணர்கள், துறவிகள், பெண்கள் ஆகியோருக்கு மரண தண்டனை, கசையடி, பிரம்படி ஆகியவை விதிக்கப்படல் கூடாவெனப் பல நூல்கள் கூறுகின்றன; அவர்களது காது, மூக்கு ஆகியவற்றை அறுத்தலும் கூடாதாம். சாதாரணக் குற்றவாளிகளை மொட்டையடித்து, கருந்துணி அணிவித்து, கழுதைமேலேற்றித் தெருவில் இட்டுச் செல்வதும் ஒரு தண்டனையாயிருந்தது. கொலை செய்தல், கொள்ளையடித்தல், சோரம் போதல், அரச துரோகம் ஆகிய நான்குமே பெருங் குற்றங்களாகக் கருதப்பட்டன. சில அரசர்கள் இத்தகைய கொடுங் குற்றத்துக்காகச் சூத்திரர், வைசியர் போன்ருேருக்கு மரண தண்டனையையும், க்ஷத்திரியருக்கும் பிராமணருக்கும் கை அல்லது கால்களை வெட்டுதல், கண்களைக் குருடாக்கி

விடுதல் போன்ற தண்டனையையும் அளித்தனர் என்று அல் பெருனி தெரிவிக்கிறார்.

படையமைப்பு

பண்டை மரபினையொட்டிக் காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய மூன்று பிரிவுகள் இடைக்கால இந்தியாவில் இருந்தன. அரசனே படைகளுக்குத் தலைவனாகக் கருதப் பட்டான். க்ஷத்திரியர்களுக்கே போர்த் தொழில் உரியது என்ற தத்துவம் தொடர்ந்து பேசப்பட்டாலும், க்ஷத்திரியரல்லாதோரும் போருக்குச் சென்றனர் என்பதில் ஐயமில்லை. பிராமணர்கள்கூடப் படைத் தளபதிகளாக இருந்தனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. இந்திய அரசர்கள் பெரும் சேனைகளை (சைனியங்களை) வைத்திருந்தனர் என்பதை அல்பெருனி, சுலைமான், அல்மஸ்ஊதி போன்ற வெளிநாட்டார் பலரும் நமக்குத் தெரிவிக்கின்றனர். குப்தரது காலத்துக்கு முன்பே தேர்ப்படை வழக்கொழிந்து போயிற்று. யானைப் படையே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. அதற்கு அடுத்ததாகக் குதிரைப்படைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கூர்ஜரப் பிரதிகாரர்கள் மிகப்பெரிய குதிரைப் படையொன்றையும் ஏராளமான ஒட்டகங்களையும் போரில் பயன்படுத்தினர் என்று சுலைமான் தெரிவிக்கிறார்.[1] இப் படைக்கான குதிரைகள் பாரசீகம், அரேபியா போன்ற வெளி நாடுகளிலிருந்து வந்தன. யானையின்மீது அம்பாரி வைத்து அதில் அமர்ந்து அரசர், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், பிரபுக்கள் ஆகியோர் போரிட்டனர். பெரும்பாலும் வில்லும் அம்புமே அவர்களது ஆயுதமா யிருந்தன. குதிரை வீரர்கள் வாளேந்திப் போரிட்டனர். காலாள் வீரர்கள் வாளுடன், ஈட்டி, வில்லம்பு போன்றவற்றைப் போர்க் கருவிகளாகக் கொண்டிருந்தனர். காயமுற்ற போர் வீரர்களுக்கு மருத்துவம் செய்வதற்கென மருத்துவப் பிரிவு ஒன்றும் இருந்ததாகக் கல்கணர் தெரிவிக்கிறார். கல்லெறி எந்திரங்களையும் இந்தியப் படைகள் கொண்டிருந்தன. சதக்னி (100 பேரைக் கொல்லும் எந்திரம்) என்ற ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது. கேடயம், உடற் கவசம், தலைக் கவசம், கழுத்துக் கவசம், யானைத்தலைக் கவசம் போன்றவற்றையும் இந்தியர்கள் பயன்படுத்தினர்.

பரமார அரசர் போஜர் கலச்சூரிக் காங்கேய தேவர்மீது போரிட்டபோது 44,000 குதிரைப் படைகளையும், 5 லட்சம்

[1] Elliot and Dowson, *History of India as told by its own Historians*, Voll .This work contains extracts from Sulaiman's account.

காலாட்படைகளையும், இருநூறு யானைகளையும் வைத்திருந்தாரென்று சமணப் பிரபந்தங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு எதிராகக் காங்கேய தேவரிடம் 1400 யானைகளும், 5 லட்சம் குதிரைகளும், 21 லட்சம் காலாட் படைகளும் இருந்தனவாம். இக் கூற்றுச் சிறிதும் நம்பத் தகுந்ததாயில்லை எனினும், இந்திய அரசர்களிடம் பெரும் சேனைகள் இருந்தன என்பதில் ஐயமில்லை. உத்பி, ஃபெரிஷ்தா, அல்மஸ்ஊதி போன்றோர் இந்திய அரசர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற போரின் போது இருதரப்பினரது படைப் பலம் எவ்வாறு இருந்தது என்பதுபற்றித் தரும் விவரங்கள் ஓரளவு உண்மையாக இருக்கக்கூடும். எனினும், முஸ்லிம் படைகளின் வீரத்தைப் பெரிதுபடுத்திப் பாராட்டும் நோக்கத்துடன் இந்தியப் படைகளின் எண்ணிக்கையை மிகைபடுத்தியே பல நேரங்களில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சான்றாக, தரைன் போரின்போது பிருதிவிராஜர்வசம் இரண்டு லட்சம் குதிரைகளும், 3000 யானைகளும் இருந்தனவென்று ஃபெரிஷ்தா எழுதியுள்ளது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை.

தலைமைத் தளபதியாகிய மகாசேனாதிபதியின்கீழ்ப் பல படைத் தளபதிகள் இருந்திருக்க வேண்டும். பலாதியக்ஷர்கள், பலாதிகிருதர்கள், கௌல்மிகர்கள் (Gaulmika) என்போர் போன்ற பல படையதிகாரிகளின் பெயர்கள் நூல்களில் காணப்படுகின்றன. ஆனால், இவர்களுக்கிருந்த பரஸ்பரப் பணிகள் இன்னவை என்று நமக்குப் புலப்படவில்லை. படையானது ஷடங்கம்[1] என்று ஆறு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை அவர் வரைந்த திவ்யாஸ்ரய காவியத்தில் ஹேமசந்திரர் தெரிவிக்கிறார். அரசரிடமுள்ள நிரந்தரமான படை, சிற்றரசர்கள் கொண்டுவரும் துணைப்படை, போரின் போது திரட்டப்பட்டுப் போர் முடிவில் கலைக்கப்படும் கூலிப்படை, வணிகக் கோஷ்டிகள் (சங்கங்கள்) தந்துதவும் ஸ்ரேனிப்படை, பகைவரிடமிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது கட்சி மாறிவந்த படை, காடுவாழ் குடிகளைக் கொண்ட 'அடவிபலம்' என்ற படை ஆகிய ஆறுமே 'ஷடங்கம்' என்று அழைக்கப்பட்டன. அர்த்த சாத்திரம், ராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களிலும் ஷடங்கங்கள் குறிப்பிடப்படுகின்றன. அரசனது படைகளுடன்கூட அடிமைகள், வேலையாட்கள், வணிகர்கள், விலைமாதர்கள், கைவினைஞர்கள், பிச்சைக்காரர்கள் முதலிய ஆயிரக்கணக்கானோர் போர்க்களம் சென்று பெருங் குழப்பம் விளைவித்தனர். ஓஹிந் (Ohind) அல்லது உதபாண்டாப் போரின் போது கசினி மகமூது

[1] 'ஷட்' என்னும் வடமொழிச் சொல்லுக்கு ஆறு (6) என்பது பொருளாம்.

தோல்வியுறும் நிலையில் இருந்தாரென்றும், அப்பொழுது இந்துப் படையின் பின்னணியிலிருந்த ஆயிரக் கணக்கான அடிமை வேலைக்காரர்கள் செய்த பெருங்கிளர்ச்சி காரணமாகவே கசினிப் படைகளுக்கு வெற்றி கிடைத்ததென்றும் உத்பி தெரிவிக்கிறார். இந்தியப் படையில் ஏராளமான 'தூதபிரசானிகர்கள்' என்ற வேவுகாரர்களும் இருந்தனர். பகைப் படையின் பலம், அமைப்புமுறை, பகைக் கோட்டையின் அமைப்புமுறை, சுரங்க வழிகள் போன்ற பலவற்றையும் இவர்கள் அறிய முயன்றனர். பகைவனின் படையினருக்கு நஞ்சு கலந்த மது, நீர், உணவு போன்றவற்றை இவர்கள் விற்றனர். பகைவனது யானை, குதிரைகளுக்கும் இவர்கள் இவ்வாறே நஞ்சூட்டிக் கொல்லக் காத்திருந்தனர்.

2. சமுதாயம்

இடைக்காலத்து இந்து சமுதாயத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் சாசனங்கள், அக் காலத்தில் இந்தியாவில் எழுதப்பட்ட நூல்கள், அல்பெருனி போன்றோரின் குறிப்புகள் ஆகியவையே சான்றுகளாக விளங்குகின்றன. இதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்த வர்ணம், ஜாதி ஆகிய பாகுபாடுகள் குலம், பிறப்பு, தொழில் முதலிய வேறுபாடு காரணமாக இந்த இடைக் காலத்தில் மேலும் சிக்கலடைந்தன. ஜாதிப் பாகுபாடுகள் ஓரளவு தீவிரமடைந்தன என்றே சொல்ல வேண்டும். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் பல்வேறு உட்பிரிவுகளாகப் பிரிந்து, நூற்றுக் கணக்கான சாதிகள் தோன்றிவிட்டிருந்தன. ஒவ்வொரு சாதியிலும்கூடப் பல உட்பிரிவுகள் முளைத்தன.

பிராமணர்கள்

நான்கு வருணங்களிலும், அனைத்துச் சாதிகளிலும் பிராமணர்களே உயர்ந்தோராகக் கருதப்பட்டனர். இந்திய நூல்கள் மட்டுமின்றி, அல்பெருனி, அல்மஸ்ஊதி போன்ற அயல் நாட்டினரும் இதுபற்றி விவரமாகக் குறித்துள்ளனர். கல்வியிற் சிறந்திருந்ததோடு, புரோகிதர்களாகவும் மதத் தலைவர்களாகவும் பிராமணர்கள் இருந்த காரணத்தால், அரசர்கள் அனைவராலும் ஆதரிக்கவும் மதிக்கவும் பெற்று, இந்த உயரிய நிலையை அவர்கள் அடைந்ததில் வியப்பொன்றுமில்லை. அரசர்களுக்கு அமைச்சர்களாகவும் புரோகிதர்களாகவும், சில வேளைகளில் படைத் தலைவர்களாகவும் பிற அதிகாரிகளாகவும்கூடப் பிராமணர்கள் பணியாற்றி, அரசனுக்கு இன்றியமையாதவர்களாக

விளங்கினர். கல்வி, கலாசாரம், சமயம் ஆகியவற்றின் காவலர்களாயிருந்து, கிராமங்களிலும் நகரங்களிலும் மக்களிடையில் மிகுந்த மதிப்பைப் பிராமணர்கள் பெற்றிருந்தனர்.

பிராமணர்களிடையிலும் பற்பல கோத்திரங்கள், பிரவாராக்கள் (Pravaras) என்ற பிரிவுகள் இருந்தன. பாரத்துவாஜ, காஸ்யப, வாசிஷ்ட, வத்ச, சாண்டில்ய, கௌதம, பாராசர, பவித்திர, ஆத்ரேய, கௌடிண்ய — இத்தகைய மேலும் பல கோத்திரங்கள் அக்காலத்திலிருந்தன என்பது சாசனங்களின் வாயிலாகத் தெரியவருகிறது. விசுவாமித்திர, அம்பரீச, பார்கவ, ஜாமதக்ன, பார்கஸ்பதிய, பாரத்துவாஜ, கௌசிக, கௌதம முதலிய பல பிரவாராக்களின் பெயர்களும் இவ்வாறே நமக்குத் தெரிய வருகின்றன. மேலும் தீட்சிதர், பாதக் (Pathak), யாக்னி, திரிபாதி, அக்னி கோத்ரி, சதுர்வேதி, மிஸ்ரா போன்ற உட்பிரிவுகளும் பிராமண சமுதாயத்தில் இப்போது ஏற்பட்டிருந்தன. ஒரு தீயை வளர்க்கும் பிராமணர் 'இஷ்டி' என்றும், மூன்று தீயை வளர்க்கும் பிராமணர் 'அக்னிகோத்ரி' என்றும், இவற்றுடன்கூட அக்னியில் ஆகுதி பொழியும் பிராமணர் 'தீட்சிதர்' என்றும் அழைக்கப்பட்டனரென அல்பெருனி கவனமாகக் குறிப்பிட்டார். தங்களது பூர்விகத்தைக் குறிப்பிடும் வகையிலும் சில அந்தணர்கள் நாகரபிராமணர்கள், தாட்சிணாத்திய பிராமணர்கள், ஸ்ரீமாலி பிராமணர்கள் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர்.

பிராமணர்களுக்குக் கல்வி கற்றல் (அத்யயனம்), கல்வி கற்பித்தல் (அத்யாபனம்), தட்சணைகளைப் பெறுதல், யக்ஞம் செய்தல் ஆகிய நான்குமே தலையாய கடமைகளெனப் பண்டை நூல்கள் கூறின. அல்பெருனியும் இவ்வாறே குறிப்பிடுகிருர். பிராமணன் ஒருவன் தனது ஏழாம் வயதுக்குப் பின் கல்வி கற்கத் தொடங்குகிரு னென்றும், அதுமுதல் இருபத்தைந்தாம் வயது வரையில் பிரம்மசரியம் என்றும், அதற்கு மேல் ஐம்பதாம் வயது வரையில் கிருகஸ்தம் என்றும், ஐம்பது முதல் எழுபத்தைந்து வரையில் வானப்பிரஸ்தம் என்றும், அதன் பின்னர் மரணம் வரையில் காஷாயம் உடுத்தும் சன்னியாசம் என்றும் விஷ்ணு புராணம் போன்ற நூல்கள் கூறுவதை அல்பெருனி நடைமுறையில் கண்டதாகக் கூறுகிருர். எல்லா அந்தணர்களுமே இவ்வாறே இருந்தனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. கால மாறுதல்களுக்கு ஏற்ப அவர்களது வாழ்க்கை முறையிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை. போர்த் தொழிலில் ஈடுபட்ட பிராமணர்கள் (பரசுராமர்,

துரோணர் போன்றோர்) பண்டைக் காலத்திலுமுண்டு; இடைக் காலத்திலுமுண்டு. கூர்ஜரப் பிரதிகார அரசரான முதலாம் போஜர் குவாலியர்க் கோட்டையில் தமக்குரிய படையதிகாரியாக அல்லர் (Alla) என்ற ஒரு பிராமணரையே நியமித்திருந்தார். சில அந்தணர்க் குலங்கள் அரசுத் தொழில் புரிந்து பிரம்ம-க்ஷத்திரியர்களாக மாறின என்பதை முன்பே நாம் குறிப்பிட்டோம். பரமாரர்கள், கூர்ஜர அரசர் அரிச்சந்திரர், சாகமானர்கள், குகிலர்கள் முதலிய பலரை இதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டலாம். பிராமண அமைச்சர்கள் பலர் படை நடத்திப் போர்க்களம் புகுந்ததை எல்லாச் சான்றுகளும் தெரிவிக்கின்றன. போருக்கும் சமாதானத்துக்குமான அமைச்சரான சாந்திவிக்கிரஹிக்கர் என்ற பதவியைப் பல பிராமணர்கள் வகித்தனர்.

அரசர்களின் பிரசஸ்திகளைப் புனைந்தவர்களில் பலர் பிராமணர்களாகவே இருந்தனர். அரசரது தூதர்களாகவும் அவர்கள் அனுப்பப்பட்டனர். போஜதேவரது 'சிருங்கார மஞ்சரி கதா' என்ற நூலில் சிங்கள நாட்டில் வர்த்தகம் புரிந்து பெரும் பொருள் ஈட்டி, நாடு திரும்பிய மாதவர் என்ற ஒரு பிராமணரைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. வைசியரது தொழிலாகிய வாணிபத்தில் ஈடுபடுவதும் பொருளீட்டுவதும் கீழான செயல்கள் என்ற கருத்து மாறிவிட்டதை இது நன்கு உணர்த்துகிறது. பல்வேறு காரணங்களினால் பிராமணர்கள் குடும்பம் குடும்பமாக நாடுவிட்டு நாடு சென்று வேற்று அரசர்களது ஆதரவின்கீழ் வாழ்ந்ததையும் நாம் காண்கிறோம். சான்றுகப் பரமார அரசர்கள் மத்திய தேசம், கர்நாடகம், மகதம், கௌடம், மதுரா போன்ற பகுதிகளிலிருந்து வந்து மாளவத்தில் குடியேறிய பிராமணர்களை ஆதரித்தனரெனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ராஷ்டிரகூடர்கள் வட இந்தியாவின்மீது படையெடுத்தபோது, பல பிராமணக் குடும்பங்கள் தெற்கிலிருந்து வடநாடு சென்று குடியேறின.

க்ஷத்திரியர்கள்

அடுத்த வருணத்தினரான க்ஷத்திரியர்கள் பொதுவாக அரசர்த் தொழிலையும் போர்த் தொழிலையும் மேற்கொண்டனர். இவர்கள் தமது கோத்திரங்களைக் குறிப்பிடுவதைக் கைவிட்டுக் குலங்களையே இக்காலத்தில் குறிக்கலாயினர். சாகமான அரசர் இரண்டாம் ஜெயசிம்ம ஜெயவர்மனது மாந்தாதாக் கல்வெட்டில் அவ்வரச குடும்பத்தின் கோத்திரம் குறிப்பிடப்படுவது ஒரு விதிவிலக்கேயாகும். வேதவேள்விகள் நிகழ்த்தப்படுவதும், அவை

நிகழ்வுறும்போது கோத்திரமும் பிரவாரமும் குறிப்பிடப்படுவதும் மறைந்து போகவே, கோத்திரத்தைக் குறிப்பிடும் வழக்கம் க்ஷத்திரியரிடம் மறைந்தது போலும்! (பண்டைக் காலத்திலும் க்ஷத்திரியர்கள் தமது புரோகிதர்களது கோத்திரத்தையே தமது கோத்திரமாகக் கூறிவந்தனர்) ராஜபுத்திரர்கள் பூர்விகத்தில் க்ஷத்திரியர்களாக இல்லாத காரணத்தினாலும் கோத்திரத்தைக் குறிக்கும் வழக்கம் இல்லாதொழிந்தது என்று சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். கோத்திரமும் பிரவாரமும் பிராமணர்களுக்கே உண்டு என்று மேடாதிதி கூறுவதும், தமது புரோகிதர்களது கோத்திரத்தையும் பிரவாரத்தையுமே க்ஷத்திரியர்களும் வைசியர்களும் கொள்ளவேண்டுமென்று மிட்டாக்ஷரர் (Mitakshara) கூறுவதும் இங்குக் குறிப்பிடத் தக்கன.[1] க்ஷத்திரியர்களைப்பற்றிச் சிறப்பாகவும் தனியாகவும் குறிப்பிடும் சாசனங்களோ நூல்களோ அதிகமில்லை. அரசுத் தொழில் காரணமாக இவர்களிடையிலும் கல்வி கேள்விகள் வளரலாயின. வேதங்களைக்கூட இவர்கள் கற்கவும் படிக்கவும் அனுமதிக்கப்பட்டன ரென்றும், ஆனால் அவற்றை ஓதுதற்கு அனுமதிக்கப்படவில்லையென்றும் அல்பெரூனி எழுதினார். படைத் தளபதிகளாகவும் போர் வீரர்களாகவும் அதிகாரிகளாகவும் க்ஷத்திரியர்கள் இருந்திருக்க வேண்டும். பிழைப்புக்காக வேறு தொழிலை அவர்கள் மேற்கொள்வதை இடைக்காலத்திய நூலெதுவும் கண்டித்ததாகத் தெரியவில்லை.

வைசியர்கள்

மூன்றாவது வருணத்தினரான வைசியர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வாணிபம் போன்ற தொழில்களில் ஈடுபட வேண்டுமென்று மனுஸ்மிருதி குறித்தது. ஆனால், நாளாவட்டத்தில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுப் போயின. பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டதாலும், வேறு பல காரணங்களினாலும் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் வைசியர்களால் கைவிடப்பட்டன. வாணிபம், வட்டித் தொழில் போன்றவை மட்டுமே அவர்களது தொழிலாயிற்று. விவசாயம் செய்வதும், ஆடு மாடு வளர்ப்பதும் கொலைத் தொழில்களாகப் பௌத்த சமயத்தாலும் இவர்களாலும் கருதப்பட்டிருக்க வேண்டும். செல்வாக்கு மிகுந்த 'சிரேஷ்டிகள்' என்ற வணிகர்களைப்பற்றிப் பல நூல்களும் சாசனங்களும் குறிப்பிடுகின்றன. கனோஜ், ஸ்ரீநகர், உஜ்ஜெயினி, ஸ்ரீமாலம், புரோச், மதுரா, வாராணசி முதலிய பல நகரங்களிலும் வணிகர்கள் பெருஞ் செல்வத்தோடு வாழ்ந்து வந்தனர்.

[1] Pratipal Bhatia, *The Paramaras ;* U. N. Ghosal's chapter on Social Condition in the Volume, *'The Age of Imperial Kanauj'*.

குஜராத் போன்ற பகுதிகளில் வாழ்ந்துவந்த வைசியர்களின் செல்வத்தையும் செல்வாக்கையும்பற்றிச் சமணப் பிரபந்தங்கள் நிறையக் குறிப்பிடுகின்றன.

வைசியர்கள் வேதங்களைக் கற்பதும், ஓதுவதும், செவியுறக் கேட்பதும்கூட அறவே தகாவென்று பண்டை ஸ்மிருதி நூல்கள் விதித்தன. வேதம் ஓதும் வைசியனின் நா அறுக்கப்படுமென்று தாம் கேள்வியுற்றதை அல்பெருனி எழுதினர். ஆயினும், இது பழங் கதை என்பதில் ஐயமில்லை. வணிகர்கள் வியாபாரத் தொழில் காரணமாகப் பல ஊர்களுக்கும் நாடுகளுக்கும் செல்ல நேர்ந்தமையால், அவர்களது உலக அறிவும் கல்வியும் மேம்பட்டன என்பதற்குச் சமண நூல்களே சான்று. யானைகளையும் குதிரைகளையும் வளர்த்தல், ஓவியம் வரைதல், பண்ட வியாபாரம், அரச நிர்வாகம், சிறு தொழில்கள் நடத்துதல் முதலிய பலவற்றிலும் வைசியர்கள் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். இவர்களுக்கிடையிலும் உபசாதிகள் (கிளைச் சாதிகள்) பல தோன்றியிருந்தன. அரசாங்கத்தில் பல முக்கியமான பதவிகளும் இவர்களுக்கு அளிக்கப்பட்டன. செல்வம் மிகுந்த வைசியர்களுக்கு மதிப்பு நிறைந்த ஓரிடம் அரசனது அவையில் அளிக்கப்பட்டது. நகர நிர்வாகத்தில் வணிகக் கோஷ்டிகள் (கில்டுகள்) மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தன. பொதுப்பணி, ஆலயம், கல்வி போன்றவற்றுக்குப் பெரும் பொருளை இவர்கள் கொடையளித்தனர். மகாஜன கோஷ்டிகள் என்ற இத்தகையோரைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. ஆலயங்களின் தர்மகர்த்தாக்களாகவும் (அறங்காவலர்களாகவும்) வைசியர்கள் பெரும் பங்கு ஆற்றிவந்தனர். இவ்வாறு இவர்களது நிலை உயர்ந்த பின்னர், வேதங்களைக் கற்றலாகாது என்ற பழைய விதி உடைந்தது. சான்றாக, வேதங்களை வைசியர் கற்கலாமென்று கிருத்யகல்பதரு (Krtyakalpataru) என்ற நூலில் லக்ஷ்மீதரர் திட்டவட்டமாகச் சொல்வது இங்குக் குறிப்பிடத் தக்கது. சூத்திரர்களும் வாணிபத் தொழிலில் இறங்கிவிட்டதாலும்; அவர்களைவிட வைசியர்கள் மேம்பட்டவர்கள் என்பதை வலியுறுத்துவதற்காகவும், நவரத்தினம், தானியம் முதலிய முக்கியமான பொருள்களையே வைசியர்கள் விற்க வேண்டுமென்றும், உப்பு, மது, பால், தயிர், வெண்ணெய், நெய், தோல், அரக்கு, அவுரிச்சாயம், நஞ்சு ஆகிய வியாபாரத்தில் அவர்கள் ஈடுபடலாகாது என்றும் சில நூல்கள் கூறலாயின.

சூத்திரர்கள்

நான்காவது வருணத்தினரான சூத்திரர்கள் விவசாயம் செய்வோராகவும், வேலையாட்களாகவும், பிற எளிய தொழில்

களைப் புரிவோராகவுமிருந்தனர். கைவினைஞர்கள் பலரும் சூத்திரர்களாகவே இருந்தனர். பொற்கொல்லர், கட்டட நிபுணரான ஸ்தபதிகள், தச்சர், செதுக்கு வேலை செய்வோர், குயவர், வெல்லம் காய்ச்சுவோர், மருத்துவர், கருமார், குறி சொல்லுவோர் முதலிய பலரும் நான்காவது வருணத்தினராகவே இருந்தனர். இவர்கள் வேதங்களைக் கற்பதும் ஓதுவதும் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டிருந்தன. சமுதாயத்தில் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்களாகச் சாத்திரங்கள் இவர்களைக் கருதினாலும்கூடத் தாங்கள் மேற்கொண்டிருந்த தொழிலால் (விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைத் தொழில்கள் முதலியன) சமுதாயத்தின் முக்கியமான ஒரு அங்கமாக இவர்கள் திகழ்ந்தனர். பண்டைக் காலத்தில் வைசியர்கள் செய்துவந்த இத் தொழில்கள் இப்பொழுது சூத்திரர்களுக்கு உரித்தாயின. சைவ சமயமும் சமணமும் வளர்ச்சியுற்றபோது சூத்திரர்கள் அவற்றைத் தழுவினர். இச் சமயங்கள் கடை வருணத்தாராக இவர்களைக் கருதாமல் சமுதாயத்தில் இவர்களது அந்தஸ்து மேம்படுவதற்குத் துணை செய்தன. பண்டைச் சாத்திரங்களின்படி, சூத்திரர்களுக்குச் சொத்துரிமை, சுதந்திரம், சமஸ்காரங்கள் செய்யும் உரிமை ஆகியவை இல்லையென்று விதிக்கப்பட்டது. ஆனால், கால மாறுபாட்டைப் புரிந்து கொண்ட மேடாதிதி இவ்வுரிமைகளனைத்தும் சூத்திரர்களுக்கும் உண்டு என்று எழுதலானார். மேல் வருணத்தாரான பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகியோருக்கு இவர்கள் குற்றேவல் புரிய வேண்டிய அவசியமில்லை யென்றும் அவர் எழுதினார். பல்வேறு தொழிலையும் செய்து வந்த சூத்திரர்கள் தொழில் அடிப்படையில் பல சங்கங்களை அமைத்து அவற்றின் விதிமுறைகளின்படி செயல்பட்டனர். பொற்கொல்லர், ஸ்தபதிகள், குயவர், எண்ணெய் வணிகர் போன்ற ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்கென ஸ்ரேனி அல்லது கோஷ்டி என்ற கில்டு (Guild) நிறுவனங்களை அமைத்திருந்தனர்.

ஏனைச் சாதியினர்

இந்த நான்கு வருணங்கள் நீங்கலாக வேறு பல சாதியினரும் இடைக்கால இந்தியாவில் காணப்பட்டனர். சமுதாயமானது நான்கு வருணத்துக்குள் அடங்கிவிடவில்லை. நீதி நூல்களில் மட்டுமே இந் நான்கு வருணங்களும் தெளிவுபடக் காணப்பட்டனவேயொழிய உண்மையில் சமுதாய அமைப்பில் சாதிப் பிரிவுகள் பலதரப்பட்டவையாகவும் சிக்கல் நிறைந்தவையாகவுமே இருந்தன. சான்றாக, காயஸ்தர் என்போரை எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் யாக்ஞவல்கியரின் காலத்தில் கணக்கராகவும் எழுத்தராகவுமிருந்தனர் என்பதை அவரது ஸ்மிருதி

எண்பிக்கிறது. ஆனால், இடைக்காலத்திலோ, அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் முக்கியமான பதவிகளை இவர்கள் வகித்தனரென்பது தெரிகிறது. அதிகாரிகளாக இருந்த காயஸ்தர்கள் அரசாங்கப் பணத்தைக் கையாடியும் மக்களை ஏமாற்றியும் நிறையப் பொருள் சேர்த்ததாக சிருங்காரமஞ்சரி கதா தெரிவிக்கிறது. பல அரசர்களின் சாசனங்களையும் பிரசஸ்திகளையும் காயஸ்தர்கள் இயற்றினர். பரமார அரசர் இரண்டாம் சீயகரது ஹர்சொலாச் (Harsola) சாசனம் காயஸ்தரான குணதரரால் வரையப் பெற்றது. பரமார போஜரது திலகவாத (Tilakawada) சாசனம் ஜவலரது மகன் சோகிகன் என்ற காயஸ்தரால் வரையப் பட்டது. காயஸ்தர்கள் ஒரு தனி சாதியாகவே அக்காலத்தில் உருவாகி இருந்தனர் என்பதை எல்லாச் சான்றுகளும் தெரிவிக்கின்றன.

அந்த்யஜர்கள் (Antyajas) என்ற ஒரு சாதியினரைப்பற்றி அல்பெருனி குறிப்பிடுகிறார். வண்ணான், சக்கிலி, கூடை முடைவோர், மீன்பிடிப்போர், வேட்டையாடுவோர், நெசவு நெய்வோர் முதலிய எட்டுச் சாதியினராக இவர்கள் இருந்தனர் என்று அவர் தெரிவிக்கிறார். இவர்கள் அனைவரும் ஊருக்கு வெளியே வாழ்ந்தனர். மேலும் ஹாதி (Hadi), தொம்பர், சண்டாளர் போன்றோர் ஊரைத் துப்புறவு செய்தல், பிணங்களைப் புதைத்தல் முதலிய தொழில்களைச் செய்து வாழ்ந்து வந்தனர் என்றும் அல்பெருனி குறிப்பிடுகிறார். ஆயினும், இத்தகைய பல சாதியினரைப்பற்றி முழுமையான விவரங்களைத் தரக்கூடிய நூலெதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இந்திய சமுதாயத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய சான்றுகள் இல்லாமற் போயினமை பெரும் குறையாகும்.

பெண்டிர் நிலை

பெண்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனரென்று பல நூல்களும் குறிப்பிடுகின்றன. ஆயினும், பெண் குழந்தைகள் பிறப்பதைப் பெற்றோர்கள் விரும்பவில்லை. ஈமச் சடங்குகளைச் செய்வதற்கு ஆண்பிள்ளை அவசியமென்ற நம்பிக்கை ஒருபுறமிருக்க, தள்ளாமையின்போது ஆண் பிள்ளைகளே பெற்றோரைக் காக்க முடியுமென்ற எண்ணமும் இதற்கொரு காரணமாயிருத்தல் வேண்டும். ஆண்பிள்ளை வேண்டுமென்றே பலரும் தெய்வத்தை வழிபட்டதாகப் பார்க்கிறோம். இவ்வாறு பெண் குழந்தைகள் விரும்பப்படவில்லை யென்றாலும், பெண்கள் மதிப்புடனேயே நடத்தப்பட்டனர் என்பதில் ஐயமில்லை. பெண் குழந்தைகளைத் திருமணம் செய்து கொடுப்பது சம்பந்தமாக விளையும் சிரமங்

களும் சிக்கல்களும் செலவுகளுமே பெற்றோர்கள் பெண் குழந்தை களை விரும்பாமைக்கு முக்கிய காரணமா யிருந்திருக்க வேண்டும்.

திருமணங்கள்

தன்னைவிட உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை ஒருவன் திருமணம் செய்து கொள்வது பிரதிலோமம் (Pratiloma) எனப்பட்டது. நீதி சாத்திரங்களனைத்தும் இத்தகைய திரு மணத்தைக் கண்டித்தன. தன்னினும் தாழ்வான சாதியைச் சேர்ந்த பெண்ணை உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் திரு மணம் செய்து கொள்ளும் முறையானது அனுலோமம் (Anuloma) எனப்பட்டது. உதாரணமாக, பிராமணன் ஒருவன் க்ஷத்திரிய அல்லது வைசியப் பெண்ணை மணந்து கொள்வது அனுலோம மாகும். அல்பெரூனி, இப்னு குர்தத்பா (Ibn Khurdadba) போன்ற வெளிநாட்டு முஸ்லிம் ஆசிரியர்கள் பிரதிலோம மணம் சட்டவிரோதமானது என்பதையும், அனுலோம மணம் அனுமதிக்கப்பட்டது என்பதையும் மிகவும் விளக்கமாகத் தெரி விக்கின்றனர். கூர்ஜர அரசரான அரிச்சந்திரர் க்ஷத்திரியப் பெண் ஒருத்தியை மணந்ததை நாம் ஏற்கெனவே குறிப்பிட் டோம். ராஜசேகரரது 'கர்ப்பூர மஞ்சரி'யில் ராஜசேகரன் என்ற பிராமணன் அவந்திசுந்தரி என்ற க்ஷத்திரியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டது குறிப்பிடப்படுகிறது. எனினும், இத்தகைய அனுலோம மணங்கள் அரிதாகவே நடைபெற்றன என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். கடைசி வருணத்தைச் சேர்ந்த சூத்திரப் பெண்ணைப் பிராமணனோ க்ஷத்திரியனோ மணப்பதை மேடாதிதி போன்றோர் கடுமையாகக் கண்டித்தனர்.

சிறு வயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. எட்டிலிருந்து பத்து வயதுக்குள் பெண் களுக்குத் திருமணம் செய்துவைத்துவிடல் வேண்டுமென்று பல ஸ்மிருதிகள் கூறுகின்றன. பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பெண்ணைப் பிராமணன் மணப்பது பாவமாகக் கருதப்பட்டது என்கிறார் அல்பெரூனி. பலதார மணங்கள் அன்று வழக்கிலிருந் தன. பெரும்பாலும் வசதிமிக்கோரே பல மனைவியரை மணந்து கொண்டனர். ஒரு பெண்ணுக்கு ஒருமுறை ஏற்பட்ட திருமண உறவு மரணம் வரை நீடிப்பதாகுமென்றும், மணமுறிவு அல்லது ரத்து என்பது கிடையாதென்றும் அனைத்துச் சான்றுகளும் தெரி விக்கின்றன. விதவா விவாகம் நடைபெறவில்லை. உடன் கட்டை ஏறும் வழக்கம் கட்டாயமில்லை என்றாலும், அரச குடும்பங்

களில் அது பின்பற்றப்பட்டதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. பாணரது 'காதம்பரி' இந்த வழக்கத்தைச் சாடுகிறது. மேடாதிதி போன்ற வேறு பலருங்கூட இப் பழக்கத்தைக் கண்டிக்கின்றனர். ஆயினும், விதவையாக வாழ்ந்து இந்து சமுதாயத்தின் கொடிய கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டு மாய்வதைவிட உடன்கட்டை ஏறுவது மேல் என்று பலர் கருதினர் போலும்! அரசர்கள் இறந்தபோது அவர்களது மனைவிமார் உடன்கட்டை ஏறினர் என்பதை அல்பெருனி முதலியோர் தெரிவிக்கின்றனர். இத்தகைய பல நிகழ்ச்சிகள் வரலாற்றில் காணக்கிடக்கின்றன.

ஆடை அணிகள்

பெண்கள் முகத்திரை அணிந்து கொள்ளும் வழக்கம் வட இந்தியாவில் நிலவிற்று. அவர்கள் காதிலும் கழுத்திலும் மூக்கிலும் நகைகளை அணிந்தனர்; சேலை, பாவாடை, ரவிக்கை ஆகியவற்றை அணிந்தனர் என்பதற்குத் திலக மஞ்சரி, சிருங்காரமஞ்சரி கதா போன்ற நூல்கள் சான்றாகும். செல்வக் குடியில் பிறந்த பெண்கள் பட்டாடை அணிந்தனர். கொண்டை போடுதல், சடை பின்னிக் கொள்ளுதல், கூந்தலில் பூச்சூட்டிக் கொள்ளுதல் போன்ற பழக்கங்கள் அப்போதே இருந்தன. சந்தனப்பொடி, குங்குமம், அஞ்சனம், நறுமணத் தைலங்கள் முதலியவற்றைப் பெண்கள் உபயோகித்தனர். கல்வி கற்ற பெண்கள் சிலரைப்பற்றியும் நூல்களில் நாம் படிக்கிறோம். இசை, ஓவியம், நாட்டியம் போன்ற பல கலைகளையும் கற்ற கணிகையர் அக்காலத்தில் இருந்தனரென்று தெரிகிறது. சீதா என்ற பெண்பாற் புலவர் அக்காலத்திலிருந்தார். பரமார அரசர் உதயாதித்தியரது கல்வெட்டிலுள்ள சில செய்யுட்களை வரைந்தவர் ஹரசுகா என்ற பண்டிதையே ஆவார். இவையனைத்தும் விதிவிலக்குகளே தவிர, பெரும்பாலான பெண்கள் கல்வி கற்காதவர்களாகவே யிருந்தனர். இறுதியாக, ஆண்களுக்கு அடுத்தபடியான இரண்டாவது நிலையே பெண்களுக்கு அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். பெண்களுக்குத் தந்தையின் சொத்தில் பங்கில்லை; ஸ்ரீதனம் மட்டுமே அவர்களுக்கு உரித்தாயிருந்தது. பெண்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை, கசையடி போன்றவை கொடுக்கப்படவில்லை என்பதை முன்பே பார்த்தோம்.

ஏழைப் பெண்கள் பொன்னாலான நகைகளை அணிய முடியாத நிலையில் பனையோலையால் ஆன ஆபரணங்களையே காதில் அணிந்தனர். வளையும், கங்கணம், சந்தகை போன்ற நகைகள்

கையிலும், தாடங்கம், தந்தபத்திரம், குண்டலம், கர்ணபூரம், காஞ்சடி போன்ற அணிகலன்கள் காதிலும், ஜாலகண்டி, ஏக வலி, சொனஜாலம், சஞ்சல் ஆரம் போன்றவை கழுத்திலும், மாணிக்க வளையம் என்பது இடையிலும் அணியப்பட்டன. கால்களில் நூபுரம் அணியப்பட்டது. வெற்றிலை போடும் பழக்க மும் அக்காலத்திலிருந்தது.

ஆடவர்கள் வெப்பம் காரணமாக மேலாடையின்றியே வெளியில் சென்றனர் என்று அல்பெருனி குறிப்பிடுகிறார். அவர்கள் தலையில் நீண்ட முடியும், தாடியும் மீசையும் வைத் திருந்தனர். காலில் செருப்பணியும் வழக்கமும் இருந்தது. ஆயி னும், பெண்கள் மட்டும் பெரும்பாலும் வெறுங்காலுடனேயே நடந்தனர். ஆடவர்கள் இன்றைய குர்த்தா போன்ற சட்டை களை அணிந்தனரென்று முஸ்லிம் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர். கால் சராய்களும்கூட அணியப் பட்டனவாம்; தலைப்பாகையும் கூட அணிந்து கொள்ளப்பட்டது. ஏழை ஆடவர்களும் சிறுவர் களும் கோவணத்துடனேயே வெளியில் சென்றதை அல்பெருனி முதலியோர் கண்டனர்.

உணவு

அரிசி, கோதுமை, பருப்பு, பார்லி, கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, இறைச்சி, பால், எண்ணெய், வெண்ணெய், தயிர், நெய் போன்ற உணவுப் பொருள்கள் அக்காலத்திய நூல் களில் குறிப்பிடப்படுகின்றன. பிராமணர்கள் இறைச்சி யுணவு அருந்துவதில்லை யென்பதை அல்மஸ்ஊதி குறிப்பிடுகிறார்.[1] ஆயினும், சில விலங்குகளின் இறைச்சியை அவர்கள் அருந்தி னர் என்று அல்பெருனி எழுதுகிறார். அல்பெருனியின் கூற்று உண்மையென்பதில் ஐயமில்லை. பரமார போஜர் போன்றோரது கல்வெட்டுகள் சில பிராமணர்களும் புலால் உண்டனர் என்ப தற்குச் சான்று பகர்கின்றன. ஆடு, மான், முயல், காண்டா மிருகம், எருமை, புரு, மயில் போன்றவற்றின் இறைச்சி அருந்தப்பட்டதாக அல்பெருனி பட்டியல் தருகிறார்.[2] பசு, குதிரை, கழுதை, கோவேறு கழுதை, யானை, கோழி, காகம், கிளி, குயில், எல்லாவிதமான முட்டைகள் ஆகியவற்றைப் பிராமணர்கள் உண்ணக்கூடாது என்பதை அவர் கண்டார். இவ்வுயிர்கள் பலவற்றை க்ஷத்திரியர், வைசியர் ஆகியோரும் கூட உண்பது தடைசெய்யப் பட்டிருத்தல் வேண்டும். வெங் காயம், வெள்ளைப்பூண்டு, சுரையினத்தைச் சேர்ந்த காய்கள்,

[1] Elliot and Dowson, Vol. I.
[2] E. C. Sachau, *Alberuni's India.*

27

கருணைக்கிழங்கு, குளத்தைச் சுற்றி முளைத்த நாளி (Nali) என்ற ஒரு செடியின் காய் ஆகிய ஐந்தையும் பிராமணர்கள் உண்பதில்லையாம். பசு, எருமை ஆகியவற்றின் பாலை அனைவரும் அருந்தினர். மேற்கிந்தியாவில் சமண சமயம் அதிக செல்வாக்குப் பெற்று நிலவிய காரணத்தினால் புலாலுண்ணும் பழக்கம் அப்பகுதியில் அருகியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆயினும், பிராமண சமயத்தைப் பின்பற்றியோர் புலாலைக் கைவிடவில்லை. பெண்களும் பிராமணர்களும்கூட மது அருந்தினர் என்பதைச் சிருங்கார மஞ்சரி கதா கூறுகிறது. இப்னு குர்தத்பா, அல்பெருனி போன்றோரும் இந்தியர்கள் மது அருந்தினர் என்பதைக் குறிப்பிட்டுள்ளனர். எனினும், மது அருந்தும் வழக்கத்தை நீதி நூல்கள் தொடர்ந்து கண்டித்தே வந்தன. தங்களது சமயம் மது அருந்துதலைக் கண்டிக்கிறது என்பதால் இந்துக்கள் அதை விடவில்லையென்றும், தங்களது மதியை மழுங்கச் செய்து புலன்களை அழிக்கின்ற காரணத்தினால் மட்டுமே அவர்கள் அதை அருந்துவதில்லையென்றும் அல்மஸ்ஊதி எழுதினர். அராபிய வணிகரான சுலைமானும்கூட இவ்வாறே குறிப்பிட்டார். எனினும், பெருவாரியான மக்கள் மது அருந்தினர் என்பதில் ஐயமில்லை. பிராமணர்களிடையிலும் வேறு சிலரிடையிலும் மட்டுமே மதுப் பழக்கமும் புலாலுணவும் வேகமாக அருகி வந்தன.

பலவகையான பழங்களை மக்கள் விரும்பிச் சாப்பிட்டனர். அவற்றுள் மாம்பழமே மிகவும் விரும்பப்பட்டதாம். இனிப்புப் பண்டங்களும் அதிகம் விரும்பப்பட்டன. ஒரு துளி ரசக்கற்பூரத்தைச் சேர்த்துத் தாம்பூலத்துடன் ஆடவரும் பெண்டிரும் போட்டுக் கொண்டனர். பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு ஆகியவற்றை எப்பொழுதும் பயன்படுத்தியதன் காரணமாக அவர்களின் பற்கள் காவியேறி யிருந்தன என்று அல்பெருனி கவனமாகக் குறிப்பிடுகிறுர். பெண்கள் வாயும் உதடும் சிவந்து அழகுடன் தோன்றுவதற்கென்றே தாம்பூலம் தரித்துக் கொண்டனரென்று 'சிருங்கார மஞ்சரி கதா' தெரிவிக்கிறது.

பழக்க வழக்கங்கள்

அக்காலத்திய மக்கள் சகுனம் பார்த்தல், குறிகேட்டல் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். பகைவர்களுக்கெதிராகச் சூனியம் வைக்கும் வழக்கமும் இருந்து வந்தது. பலவிதமான பண்டிகைகள் கொண்டாடப்பட்டன. சிவராத்திரி, ஏகாதசி, சித்ரா பௌர்ணமி, சாவித்திரி விரதம், கிருஷ்ண ஜயந்தி, நவராத்திரி போன்ற பல பண்டிகைகளைப்

பற்றி அக்காலத்திய நூல்களில் நாம் படிக்கிறோம். மேற்கிந்தியாவில் சுகராத்திரி (Sukaratri) என்ற ஒரு பண்டிகை கொண்டாடப்பட்டது. அப்பொழுது கிணற்றங்கரை, ஆற்றங்கரை, மரம், ஆலயம், வீதி, குன்றின் உச்சி, வீட்டின் முகப்பு ஆகியவை விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. நமது கார்த்திகைத் தீபத்தைப் போன்ற ஒரு பண்டிகையாக இது இருந்திருக்க வேண்டும். தீபாவளியும் கொண்டாடப்பட்டதாகப் பல நூல்கள் தெரிவிக்கின்றன. விழாக்களின் போது பிராமணர்களுக்கு அன்னமிடுவது முக்கியமானதாகக் கருதப்பட்டது. அவர்களது விருந்துக்கெனப் பல விலங்குகள் கொல்லப்பட்டன என்று கூறப்படுகிறது. சுமங்கலிகள் தவருமல் சாவித்திரி விரதமிருக்க வேண்டுமென்றும், கணவன் அகால மரணமடைந்து கைம்மை நிலையை அடைவதிலிருந்து பெண்களை அது காக்குமென்றும் கருதப்பட்டது. கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று கௌமுதி மகோத்சவம் என்ற பண்டிகை மிகுந்த குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. வீடும் தெருவும் விளக்குகளாலும் தோரணங்களாலும் அப்போது அலங்கரிக்கப்பட்டன. ஆடவரும் பெண்டிரும் புத்தாடை புனைந்து ஆடல் பாடல்களில் ஈடுபட்டனர். குழந்தைகளின் பிறந்தநாள் (ஜன்மோத்சவம்), பெயர்சூட்டும் நாளான நாமகரணம், முதன்முதலாகக் கல்வி தொடங்கும் நாளான வித்தியாரம்பம் அல்லது உபநயனம் போன்ற சடங்குகளும் கொண்டாடப்பட்டன. வீட்டில் சொக்கட்டான், கந்துகம் என்ற பந்தாட்டம் ஆகியவற்றில் பெண்கள் ஈடுபட்டனர். மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடுவது அவர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. ஆடவர்கள் சூதாட்டம், வேட்டை, நீச்சல் போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டனர். பலவிதமான கேளிக்கைகளுக்கும் வசதிசெய்து தரும் பல வீடுகளும் மன்றங்களும் அவர்களுக்கு இருந்தன. ஆண்களும் பெண்களும் ஓரிடத்தில் கூடி மதுஅருந்தி ஆடலிலும் பாடலிலும் ஈடுபடும் வழக்கமும் இருந்தது என்பதைப் பல நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அரசர், அரசி, அவர்தம் குடும்பத்தினர் போன்ற பலரும்கூட இவ்வாறு பொழுது போக்குகளில் ஈடுபட்டனர்.

இறந்தவர்களில் துறவிகள் போன்றோரைப் புதைப்பதும், குடும்பத்தோரை எரிப்பதும் வழக்கமாயிருந்தது. எரிக்கும் செலவைத் தாங்க முடியாத ஏழைகள் சிலர் இறந்துபோன தமது உற்ருர் உறவினரின் சடலங்களை ஆற்றிலும் தூரத்து இடங்களிலும் எறிந்தனர். பௌத்தர்கள் பெரும்பாலும் தங்களது பிணங்களை ஆற்றிலேயே விட்டனர். மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகளை எரிக்கக் கூடாது என்ற விதி இருந்தது. சவத்தை எரித்த

பின், அஸ்தியைக் கங்கை நீரில் சேர்ப்பித்தால் இறந்தவரின் பாவங்கள் தீருமென அப்பொழுதே கருதப்பட்டது. உடலை எரித்த இடத்தில் சுண்ணும்பாலும் கல்லாலுமான ஒரு சிறிய தூண் அல்லது நடுகல் எழுப்பப்பட்டது. இப் பழக்க வழக்கங்களையெல்லாம்பற்றி அல்பெருனி, அல் உத்பீ ஆகியோர் நிறைய எழுதியுள்ளனர். மரணம் நிகழ்ந்த இல்லத்தில் பதினைந்து நாட்கள் வரையிலும், பின்னர் அந்த ஆண்டு முழுவதும் நடைபெற்ற சடங்குகள், அனுசரிக்க வேண்டிய விரதங்கள் ஆகியவைபற்றி அல்பெருனி விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். சூரியகிரகணம், சந்திரகிரகணம் போன்ற நாட்களில் மக்கள் வெறும் வயிற்றுடன் இருந்து, பின்னர்க் கிரகணம் முடிந்த பிறகே குளித்துவிட்டு உணவருந்தினர். கடல் கடந்து அயல்நாடுகளுக்குச் செல்வது தீட்டும் பாவமுமாகும் என்ற கருத்து இக் காலத்தில் வலிமை பெற்றது.

கல்வி

அரசர்களும் செல்வந்தர்களும் கல்வியிற் சிறந்த துறவிகளிடமும் புரோகிதர்களிடமும் தங்களது பிள்ளைகளைக் கல்வி கற்கச் செய்தனர். ஆறு வயதிலிருந்து தொடங்கிப் பதினாறு ஆண்டு முடியும் வரையில் கல்வி கற்பிக்கப்பட்டது. விஜயதசமி போன்ற நல்ல நாளில் கல்வி போதனை தொடங்கப்பட்டது. இப் பத்தாண்டுகளில் மாணுக்கர்கள் ஒழுக வேண்டிய முறைபற்றிப் பல நீதி நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன.[1] பிராமண மாணுக்கர்கள் வேதங்கள், வேதாந்தங்கள், புராணங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றையே சிறப்பாகப் பயின்றனர். இலக்கணம், வானநூல், சோதிடம் போன்ற வேறு பலவும்கூட அவர்களால் பயிலப்பட்டன. இந்திய தத்துவ தரிசனங்கள் பலவும்கூட முக்கியமானவையாக விளங்கின. செய்யுள் இலக்கணம், பிற மொழிகள் ஆகியவற்றையும் அவர்கள் கற்றனர். அரச குமாரர்களும் பிரபுக்களுமான க்ஷத்திரியர்கள் தமக்கேற்புடைய தர்மம், அர்த்தம் (பொருள்நூல்), காமம் போன்ற சாத்திர நூல்களோடு, வில்வித்தை, உடற்பயிற்சி ஆகியவற்றையும் கற்றனர். நிர்வாக முறை, அரச தந்திரங்கள், போர் முறை போன்றவற்றுக்கு இவர்களால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வைசியர்கள் அவர்கள் தொழில்களுக்குரிய கணக்கு, வியாபார வித்தைகள் போன்றவற்றைத் தெரிந்து கொண்டனர். ஆயுர்வேதம் போன்ற மருத்துவ முறைகளும் அவர்களால் விரும்பிக் கற்கப்பட்டன. பல்வேறு கலைகளையும், குதிரை வளர்ப்பு, யானை

[1] R. K. Mookerji, *Ancient Indian Education.*

வளர்ப்புப் போன்றவற்றையும் சூதாட்டம் போன்றவற்றையும் வைசியன் கற்க வேண்டுமென்று சிருங்காரமஞ்சரி கதா போன்ற நூல்கள் குறிப்பிட்டன. நகர நிர்வாகத்தில் வைசிய வணிகர்கள் பெரும் பங்கு ஆற்றியதால் அர்த்தசாத்திரமும் அவர்களுக்கு ஓரளவில் அவசியமாயிற்று. பெண்களுக்கு ஓவியம் தீட்டுதல், வாய்ப்பாட்டு, இசைக் கருவிகளை இயற்றுதல், நடனம் ஆகியவை மிகவும் அவசியமென்று திலகமஞ்சரி போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

அக்காலத்திலிருந்த பள்ளிகளைப்பற்றி அதிக செய்திகள் நமக்குத் தெரியவில்லை யென்றாலும், ஊர்தோறும் பிராமணர்கள் தமது இல்லங்களில் பள்ளிகளை நடத்திவந்தனர் என்பது நன்கு புலப்படுகிறது. பழைய குருகுல முறைகள் பெரிதும் அருகி விட்டன என்றாலும் கிராமந்தோறும் பிராமணர்கள் நடத்திவந்த இப் பள்ளிகள் மாணுக்கர்களின் கல்வித் தேவைகளை ஓரளவு நிறைவு செய்தன. செல்வந்தர்களுடைய பிள்ளைகள் தனிப்பட்ட பிராமணக் குருவிடம் கல்வி கற்றனர். பல ஊர்களில் பொதுமக்களின் கல்விக் கூடமாக ஆலயங்கள் திகழ்ந்தன. இங்கு எண்ணும் எழுத்தும் மற்றப் புராணக் கதைகளும் ஊர் மாணுக்கர்களுக்குச் சொல்லித் தரப்பட்டன. சமணர்களும் சைவர்களும் நாடு முழுவதிலும் பல்வேறு மடங்களை நிறுவி, நிறைந்த புலமையோடு தம்மை நாடிவரும் மாணுக்கர்களுக்கு இலக்கண இலக்கியங்களையும் சாத்திரங்களையும் புகட்டினர். பரமார அரசர் போஜரால் தலைநகரான தாராவில் நிறுவப்பட்டிருந்த போஜசாலை என்ற கல்விக் கூடத்தைப்பற்றி முன்பே படித்தோம். உத்தண்டபுரியில் பௌத்தர்களது மாபெரும் கல்வி நிலையம் ஒன்று பல்கலைக் கழகம் என்று அழைக்கப்படும் அளவுக்கு ஏராளமான மாணவர்களைக் கொண்டு சிறப்புறத் திகழ்ந்தது. அபு (Abu) சமஸ்கிருதக் கல்விக்குப் பெயர் போன இடமாக விளங்கிற்று. உத்தண்டபுரிக்கும் அபுவுக்கும் வட இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மாணுக்கர்கள் வந்தனர். தாந்திரிய (Tantrik) நூல்களில் வல்ல பேரறிஞர்கள் அபுவில் வாழ்ந்தனர். எனவே, சாக்த பீடம் (Saktapita) என்றே அபு அழைக்கப்பட்டது. காசி, உஜ்ஜெயினி, மட்டமயூரம் போன்ற ஊர்களில் கல்வியிற் பெயர்போன மடங்களும் விகாரங்களுமிருந்தன.

புலமையிலும், தர்க்கத்திலும், தத்துவங்களிலும் சிறந்த புலவர்களும் அறிஞர்களும் ஊர்ஊராகச் சென்று அங்கு வாழ்ந்த கற்றறிந்த புலவர்களுடன் வாதுகள் நிகழ்த்தித் தமது அறிவினை

எடுத்துக்காட்டியதோடு, இத்தகைய புலமைகள் மேம்படுவதற்கும் காரணமாயிருந்தனர். அரசனது அவைகளிலும் மற்றப் பொது மன்றங்களிலும் பண்டிதர்களுக்கிடையிலான இத்தகைய வாதப் போர்களைப்பற்றிப் பல நூல்களும் நமக்குத் தெரிவிக்கின்றன. கல்வியின் முடிவில் குருக்களுக்கும் ஆசாரியர்களுக்கும் மாணுக்கர்களின் செல்வ நிலையைப் பொறுத்துத் தட்சிணைகள் வழங்கப்பட்டன. அரசகுமாரர்களும் செல்வர்களும் நிலத்தையும் கிராமங்களையும்கூடக் குருதட்சிணையாக அளித்தனர். பொன், ஆடைகள், பிறபொருள்கள் ஆகியவையும் இவ்வாறு அளிக்கப்பட்டன. குருதட்சிணை வாங்கிக் கொள்ள மறுத்த பல ஆசிரியர்களைப்பற்றியும் நாம் படிக்கிருேம்.

3. பொருளாதாரம்[1]

விவசாயம்

இந்தியாவில் இடைக்காலத்தைச் சேர்ந்த விவசாயம், கைத்தொழில்கள், வாணிபம் ஆகியவைபற்றி அறிந்து கொள்வதற்கும் திட்டவட்டமான சான்றுகளில்லை. எனவே, நூல்களிலும் செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் வரும் குறிப்புகளைக் கொண்டே இவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

விவசாயமே இந்தியர்களின் முக்கியமான தொழிலாக இருந்தது. பெருவாரியான மக்கள் விவசாயத்தையே நம்பியிருந்தனர். விவசாயத்தைப்பற்றிப் படிக்கும் பொழுது நில உடைமை முறையைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆனுல், இதற்கான சான்றுகள் பெரும்பாலும் இல்லையென்றே கூறவேண்டும். பல்வேறு நூல்களில் அங்குமிங்கும் காணப்படும் சில குறிப்புகளைக் கொண்டே நாம் நிலஉடைமை முறையைப்பற்றி ஊகித்துக்கொள்ள வேண்டியுள்ளது. அரசனுக்கே நிலம் சொந்தம் என்று நீதி நூல்கள் பலவும் கூறினவாயினும், உண்மையான நிலை நமக்குத் தெரியவில்லை. குடியானவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்தனரா, அல்லது பிரபுக்களிடமிருந்து நிலங்களைப் பெற்றுப் பயிரிட்டனரா என்பது எந் நூலிலும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. காஷ்மீரத்தைப் பொறுத்த வரையில் ராஜதரங்கிணியில் வரும் பல குறிப்புகள் நமக்கு ஓரளவு பயன்படுகின்றன. தாமரர்கள் (Damaras) என்ற நிலப் பிரபுத்துவ வகுப்பு ஒன்று

[1] B. P. Majumdar, *Social and Economic History of Northern India.*

காஷ்மீரத்தில் இருந்தது. ஏராளமான விவசாய நிலங்கள் இவர்களுக்குச் சொந்தமாயிருந்தன. படை திரட்டி அரசர்களையும் எதிர்க்கும் அளவுக்கு இவர்கள் வலிமை பெற்றவர்களாக விளங்கினர். இவர்களது நிலங்கள் குடியானவர்களால் குத்தகைக்காகப் பயிரிடப்பட்டன என்று நாம் ஊகிக்கலாம். அப்படியானால் விளைச்சலில் எவ்வளவு பகுதி குடியானவனைச் சேர்ந்தது, நிலப் பிரபுவுக்குக் குடியானவன் தரவேண்டிய பங்கு என்ன என்பன போன்றவை எதுவும் நமக்குத் தெரியவில்லை. தாமரர்களுக்குத் தரப்பட்டது போக எஞ்சியிருந்த நிலங்களின் ஒரு பகுதி குடியானவர்களுக்கே சொந்தமாயிருந்திருக்கக் கூடும். மற்றொரு பெரும் பகுதி அரசனுடைய சொந்த நிலமாக (Crown lands) இருந்தது. இவ்வரச நிலங்களையும் குடியானவர்களே குத்தகைக்குப் பயிரிட்டிருக்க வேண்டும்; அல்லது அரசனுடைய அதிகாரிகளின் மேற்பார்வையில் விவசாயக் கூலிகளை வைத்து இவை பயிரிடப்பட்டிருக்கலாம்.

குடியானவர்களின் நிலை

தாமரர்கள் தமது நிலங்களிலிருந்து ஏராளமான வருவாயைப் பெற்று, கொழுத்த செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர் என்று கல்கணர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். அரசனே எல்லா நிலங்களுக்கும் உரியவன் என்று நெடுங்காலமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதால், குடியானவர்களின் வருவாயில் கணிசமான பகுதியொன்று காயஸ்தர்கள் என்ற அரச அதிகாரிகளால் அரசனது சார்பில் நிலவரியாக வசூலிக்கப்பட்டது. நிலப் பிரபுக்களான தாமரர்களுக்கும் அரசனுக்கும் வருவாயில் பெரும் பகுதியை இவ்வாறு இழந்தபின் குடியானவர்கள் வறுமையில் வாழ்ந்தனர். இதைக் கல்கணரது ராஜதரங்கிணியும் க்ஷேமேந்திரரது சமயமாத்ரகம் (Samayamatrka) என்ற நூலும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. காயஸ்தர்கள் அறுவடை நேரத்தில் தவறாமல் வந்து குடியானவர்களின் விளைச்சலை ஈவிரக்கமின்றி, மீன்களைச் செம்படவர்கள் அள்ளிச் செல்வதுபோல, கொள்ளையிட்டுச் சென்றனர் என்று க்ஷேமேந்திரர் தெரிவிக்கிறார். இக்கொள்ளையில் கணிசமான பகுதி அரசனுக்குச் செலுத்தப்படாமல் காயஸ்தர்களாலேயே கவர்ந்து கொள்ளப்பட்டது எனவும் அவர் தெரிவிக்கிறார். சில அரசர்கள் குடியானவனுக்கு எதையுமே விட்டுவைக்காமல் விளைச்சல் முழுவதையும் அபகரித்துச் சென்றனர் என்பதை ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது. குடியானவர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாயிருந்தது என்பதை எல்லா நூல்களுமே தெரிவிக்கின்றன. பிரபுக்கள் கொழுத்த இறைச்சி, விலையுயர்ந்த மது போன்றவற்றை

அருந்தி மகிழ்ந்த வேளையில், குடியானவர்கள் பதரான நெல்லை யும் பார்லியையும் குத்திச் சாப்பிட்டனரென்று கல்கணர் எழுது கிருர். வாழ்க்கையில் வெறுப்புற்ற குடியானவர்கள் நாட்டில் குழப்பம் ஏற்பட்டபோதெல்லாம் வாளேந்திக் கிளர்ச்சி செய்வ தற்குத் தயாராயிருந்தனர் என்பதையும் அவர் தெரிவிக்கின்ருர். காஷ்மீரத்தைப் பொறுத்தவரையில், ராஜதரங்கிணியும், க்ஷேமேந்திரரால் பதினொன்ரும் நூற்ருண்டில் எழுதப்பட்ட சமய மாத்ரகம், நர்மமாலா (Narmamala), தேசோபதேசம் (Desopadesa) ஆகிய மூன்று நூல்களும் இவ்வாறு பல தகவல்களைத் தரு கின்றன. ஆனல், வடஇந்தியாவின் ஏனைப் பகுதிகளைப்பற்றி இத்தகைய செய்திகளைத் தரும் நூல்கள் மிகவும் குறைவே. எனினும், அங்கும் ஏறத்தாழ இதே நிலையே காணப்பட்டது என்று நாம் கொள்ளலாம்.

நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்துக்காக ஏரி, குளம், வாய்க்கால் போன்ற வற்றை வெட்டுவது அரசனது கடமையென்று நீதி நூல்கள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. மாளவத்தில் இரண்டாம் வாக்பதி முஞ்சரால் வெட்டப்பட்ட முஞ்ச சாகரம், போஜரால் வெட்டப் பட்ட போஜ சாகரம், உதயாதித்தியரால் வெட்டப்பட்ட உதய சாகரம் போன்ற ஏரிகளைப்பற்றி நாம் முன்பே படித்தோம். போபாலுக்கருகில் போஜரால் வெட்டப்பட்ட பெரிய ஏரி ஒன்று இன்றும் உள்ளது; அரசி, அரசகுமாரர்கள், அமைச்சர்கள், குறுநில மன்னர்கள் போன்ற பலரும் இவ்வாறே ஏரி, குளம், கிணறு ஆகியவற்றை அகழ்ந்தனர். காஷ்மீரத்தில் ஆண்டு தோறும் ஆறுகள் பெருக்கெடுத்துக் கரைகள் உடைந்து விவசாய நிலங்கள் அடிக்கடி அழிவுக்குள்ளாயின. எனவே, ஆற்றின் கரைகளைப் பலப்படுத்துதல், ஆறுகளின் திசைகளை மாற்றுதல் போன்ற பல பொதுப் பணிகளைக் காஷ்மீர அரசர்கள் மேற்கொண்டனர். லலிதாதித்தியர், தாமோதரர், பாலாதித் தியர் போன்ற அரசர்களும் அவர்களது அமைச்சர்களும் பல மைல் நீளத்துக்குக் கருங்கல்லைக் கொண்டு கரைகளைப் பலப் படுத்தியதோடு, அணைகளையும் மதகுகளையும் அமைத்ததைப் பற்றியும் கால்வாய்களை வெட்டியதுபற்றியும் ராஜதரங்கிணியில் நாம் படிக்கிறோம். அவந்திவர்மனின் அமைச்சரான சுய்யர் மேற்கொண்ட வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளைப்பற்றியும் நாம் முன்பே பார்த்தோம். எனினும், காஷ்மீரத்தில் வெள்ளப் பெருக்கும் சேதமும் அடிக்கடி நிகழ்ந்தே வந்தன.

விவசாயப் பண்டங்கள்

நெல், கோதுமை, பார்லி, தினை வகைகள், கொள், கடுகு, எள், மஞ்சள், குங்குமப்பூ, பருத்தி, கரும்பு போன்றவை பயிரிடப்பட்டன. நெல், பருப்பு முதலியவற்றில் என்ன என்ன வகைகள் இருந்தன என்பதையெல்லாம் அக்காலத்திய நூல்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு பயிருக்குமேற்ற நிலங்களும் பருவமும் யாவை என்பனபற்றி 'அபிதான ரத்னமாலா' என்ற நூல் விவரிக்கிறது. பருத்தியோடுகூட, துணி நெய்வதற்காக ஒருவிதச் சணலும் பயிரிடப்பட்டது. வகை வகையான காய் களும் பழங்களும்கூடப் பயிரிடப்பட்டன. மேற்கு இந்தியாவில் நிலம் செழிப்பாக இருந்ததென்றும், விளைச்சல் அபரிமிதமாகக் காணப்பட்டதென்றும் இந்தியாவுக்கு வந்த அராபியர்கள் குறிப் பிட்டுள்ளனர். தென்னை, எலுமிச்சை ஆகியவை குஜராத்தில் நிறைந்திருந்தனவாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அபினி, அவுரி, வெற்றிலை ஆகியவையும் எல்லா இடங்களிலும் பயி ராயின. கரும்பை நசுக்கிச் சாறு பிழியும் எந்திரம் அக்காலத்தி லிருந்தது. கிணற்றிலிருந்து வயல்களுக்கு நீர்பாய்ச்சுவதற்கெனக் கபிலைகள் பத்தாம் நூற்றாண்டிலேயே பயன்படுத்தப்பட்டன.

தொழில்கள் : நெசவு

மனித குலத்தின் தொழில்களுள் முதன்மையானவற்றுள் ஒன்று நெசவுத் தொழில். பன்னெடுங் காலமாகவே புராணங் களும் வேறு நூல்களும் நெசவுத் தொழிலைப்பற்றி எழுதி வந் துள்ளன. பருத்தி, பட்டு, கம்பளம், மான் மயிர், ஒருவிதச் சணலினாலான நார்த் துணி (linen) போன்ற ஆடைகள் அணியப் பட்டு வந்தன. நெசவாளி, தையல்காரன், சாயக்காரன் போன்றவர்களைப்பற்றி நூல்களில் படிக்கிறோம். ஜரிகைகள் இழைக்கும் தொழிலும் அக்காலத்தில் இருந்தது. நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை, தறி போன்ற நெசவு சாத னங்கள் முதலியவைபற்றி எந்த நூலிலும் விரிவாகக் குறிப்பிடப் படவில்லை. பெண்கள் நூல் நூற்றல், ஜரிகை இழைத்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர்.

உலோகத் தொழில்

இரும்பு, பித்தளை, செம்பு, காரீயம், வெள்ளீயம், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் அன்று பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோரிடம் பெயர் பெற்றதாக இருந்தது. சான்றாக, கிழக்கு வங்கம், அங்கம், சூர்ப்பாரகம் (Surparaka), ரிஷிகம் (இன்னமும் அடையாளம் தெரியாத ஊர்), கடிகத்தரம்

(Khatikhattara) போன்ற ஐந்து இடங்கள் உலோகத் தொழிலுக்குப் பெயர் பெற்றவை என்று அக்னி புராணம் குறிப்பிடுகிறது. சூர்ப்பாரகம் என்பது பின்னர்ச் சோபாரா (Sopara) என்றழைக்கப்பட்டு, மேலைக் கடற்கரையில் புகழ் மிகுந்து விளங்கிய ஓர் ஊராகும். சிந்து அரசிலிருந்த தேபல் வாள் செய்வதில் புகழ் பெற்றிருந்ததென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சௌராஷ்டிரம் வெண்கலத் தொழிலுக்குப் பெயர் பெற்றிருந்தது. அதேபோல், கிழக்கு வங்காளம் ஈயத் தொழிலில் சிறந்ததாய் இருந்தது. போஜரது காலத்தில் தாரா நகரில் நிறுத்தப்பட்டதாகக் கருதப்படும் இரும்புத்தூண் ஒன்று இன்றும் உள்ளது. நமது உலோகத் தொழிலின் வளர்ச்சியை இத் தூண் நன்கு புலப்படுத்துகிறது. கொல்லன், பொற்கொல்லன், தச்சன், கன்னன் போன்ற பல தொழிலாளிகளும் அக் காலத்திலிருந்தனர். இவர்கள் அனைவரும் இரும்பினாலான கருவிகளையே பயன்படுத்தினர். போஜரது யுக்தி கல்பதரு என்ற நூல் பல வகையான இரும்பைப்பற்றிக் குறிப்பிடுகிறது. எஃகு, வார்ப்பிரும்பு போன்ற இரும்புகள் அக்காலத்திலேயே செய்யப்பட்டன என்பதை இந் நூல் தெளிவாக்குகிறது. கிரவுஞ்சம் (Krouncha), பத்ரம் (Bhadra), கலிங்கம், சாமானியம், வஜ்ரம், பண்டி (Pandi), நிரங்கம் (Niranga), காந்தம் (Kantha) போன்ற பல வகை இரும்புகளின் பெயர்களைப் போஜர் குறிப்பிடுகிறார். இரும்பைக் கொண்டு பலவிதமான போர்க் கருவிகள் செய்யப்பட்டன. வாள், குத்துக் கத்தி, விவசாயத்துக்குத் தேவையான பல கருவிகள், கைவினைஞர்கள் பயன்படுத்திய பல கருவிகள், அம்பு முனை, ஈட்டி முனை, விளக்குகள் போன்ற பலவும் இரும்பினால் செய்யப்பட்டன. செம்பினாலும் பித்தளையினாலும் பலவகைப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. தங்கமும் வெள்ளியும் செம்புடன் சேர்த்து நகைகளுக்கும் நாணயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

திலக மஞ்சரி, சிருங்கார மஞ்சரி கதா, அக்னி புராணம் போன்ற நூல்கள், தங்கம், வெள்ளி, மாணிக்கம், வைடூரியம், முத்து, பவழம், வைரம் போன்றவற்றாலான நகைகளைப்பற்றித் தெரிவிக்கின்றன. முப்பத்துமூன்று வகையான மணிகளும் ரத்தினங்களும் கூறப்படுகின்றன. உலோகத்தினால் முகம் பார்க்கும் கண்ணாடிகளும் செய்யப்பட்டிருந்தன. சுரங்கங்கள் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தன என்றாலும், அவற்றைப்பற்றிய வர்ணனைகள் எங்கும் கிடைக்காமை ஒரு பெரும் குறையாகும். உலோகங்களினால் அக்காலத்தில் செய்யப்பட்ட பல சிலைகள் கிடைத்துள்ளன. கண்ணாடியும்கூடச் சில

இடங்களில் இருந்திருக்கலாமென்பது சில குறிப்புகளால் உணரப் படுகிறது. சான்ருக, ராஜதரங்கிணியில் கண்ணுடியினுலான ஜாடிகள் குறிப்பிடப்படுகின்றன.

பிற தொழில்கள்

கிராமங்களிலும் நகரங்களிலும் வெல்லம் காய்ச்சுதல், படகு செய்தல், செருப்புப் போன்ற காலணிகள் செய்தல், தந்த வேலே, குடைகள் செய்தல் போன்ற பல்வேறு தொழில்கள் காணப்பட்டன. படகுகளின் பல்வகையைப்பற்றியும், அவற்றுக்கான மரம்பற்றியும், அவை செய்யும் விதம்பற்றியும், அவற்றின் தராதரம்பற்றியும் போஜரின் யுக்தி கல்பதரு தரும் தகவல்கள் மிகவும் சுவையுள்ளவை. ஒவ்வொரு வகுப்பினரும் உபயோகித்த குடைகளேப்பற்றியும்கூட இவ்வாறே அந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரத்தாலும் உலோகத்தாலுமான நாற்காலிகள், கட்டில்கள் போன்றவையும் பல நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. வெல்லம் காய்ச்சும் தொழில் வட இந்தியாவின் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்பட்டது. ஒவ்வோர் ஊரிலும் வாணியர், தச்சர், கருமார், பொற்கொல்லர் போன்ற தொழிலாளிகள் இருந்து வந்தனர். தோல் பதனிடுதலும் செருப்புச் செய்தலும்கூட முக்கியத் தொழில்களாக இருந்தன. தோலினுலான பையில் காயஸ்தரான அதிகாரிகள் ஊர்விட்டு ஊர் செல்லும்போது நீர் சுமந்து சென்றனர் என்று ராஜதரங்கிணி தெரிவிக்கிறது. படகுகள், வண்டிகள், பல்லக்குகள் போன்றவை மரத்தினுல் செய்யப்பட்டன. செம்படவர், தோட்டக்காரர், மாலே கட்டுவோர், அம்பட்டர் போன்ற பல்வேறு தொழிலாளிகளும் நூல்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

உள்நாட்டு வாணிபம்

வழக்கம் போல, வர்ணிபத்தைப்பற்றியும் நமது நூல்கள் தேவையான சான்றுகளே நமக்கு அளிக்கவில்லே. ஒருசில குறிப்புகளே மட்டுமே வைத்து வட இந்தியாவில் நடைபெற்ற வாணிபத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. நல்ல சாலேகளும் பாதுகாப்பும் இல்லாத காரணத்தினுல், வணிகர்கள் கூட்டங் கூட்டமாகவே பயணம் செய்தனர். தானியங்கள், வெல்லம், துணி, தேங்காய், உப்பு, பாக்குப் போன்ற பல பொருட்கள் இவ் வணிகர்களால் ஊர் ஊராகக் கொண்டு செல்லப்பட்டன. சிரேஷ்டிகள், பனியாக்கள் (Banias) என்றெல்லாம் வணிகர்கள் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு வாரத்திலும் குறிப்பிட்ட நாளொன்றில் பல ஊர்களில் சந்தைகள் கூடுவது

வழக்கமாயிருந்தது. திருவிழா நாட்களிலும் இத்தகைய சந்தைகள் கூடின. பல்வேறு பண்டங்களையும் வணிகர்கள் கொண்டு வந்து அப்பொழுது விற்றனர். ஊரின் எல்லைகளிலும் சந்தைகளிலும் ஆறுகளைக் கடக்கும் பொழுதும், மற்றொரு அரசுக்குள் நுழையும் பொழுதும் அவர்களிடமிருந்து சுங்கம் வசூலிக்கப் பட்டது. எருது, எருமை, கோவேறு கழுதை போன்ற விலங்குகள் பூட்டிய வண்டிகளில் வியாபாரப் பண்டங்கள் கொண்டு செல்லப்பட்டன. மேற்கிந்தியாவில் ஒட்டகங்கள்மீதும் பொதிகள் ஏற்றப்பட்டன. கள்ளர்ப் பயம் நிறைந்திருந்ததால் வணிகர்கள் கூட்டங் கூட்டமாகவே பயணம் செய்தனர். ஒவ்வொரு வணிகக் குழுவுக்கும் தலைவன் ஒருவன் இருந்தான். இத் தலைவனே அரசனிடமும் அதிகாரிகளிடமும் சென்று குறைகளை எடுத்துக் கூறித் தேவையான பல சலுகைகளைப் பெற்றான் என்பதைப் பல கதைகள் தெரிவிக்கின்றன. ஆறுகளும் வியாபார மார்க்கமாகப் பயன்படுத்தப்பட்டன. பண்டங்களை ஆறுகளில் எடுத்துச் செல்வதற்காகப் பலவிதமான படகுகள் பயன்படுத்தப்பட்டன. சாலைகளின் ஓரங்களில் வணிகர்கள் தங்கி ஓய்வு கொள்வதற்காகப் பல அறைகளைக் கொண்ட சத்திரங்கள் அல்லது தர்மசாலைகள் கட்டப்பட்டிருந்தன. அங்கு உணவு, படுக்கை, மருத்துவம் ஆகியவற்றுக்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தன. தர்மசாலைகள் ஒழுங்காகச் செயல்பட வேண்டுமென்பதில் அரசர்கள் பெருங் கவனம் செலுத்தினர். வற்றாத கிணறு ஒன்றும் நிழல்தரும் மரங்களும் அவற்றைச் சுற்றியிருந்தன. இத்தகைய வணிகர்களின் மூலமாக அரசனும் அதிகாரிகளும் நாட்டின் நிலைமைபற்றி அறிந்துகொள்ள முடிந்தது.

வணிகர்கள் பல மொழி தெரிந்தவர்களாக இருந்தனர். எல்லா அரசர்களாலும் அவர்கள் நல்ல முறையிலேயே நடத்தப் பட்டனர். வட இந்தியாவில் ஹட்டா (Hatta) அல்லது ஹட்டி என்ற சொல் சந்தை அல்லது பண்டகசாலை என்ற பொருளை உடையதாயிருந்தது. இத்தகைய ஹட்டா அல்லது ஹட்டிகள் வட இந்தியா முழுவதிலும் இருந்தனவென்று நூல்களிலும் சாசனங்களிலும் கூறப்படுகின்றன. காஷ்மீரத்தில் லலிதாதித்தியரின் அரசிகளுள் ஒருவர் பரிகாசபுரத்தில் கமலா ஹட்டம் என்ற சந்தையொன்றை நிறுவியதாகச் சொல்லப்படுகிறது. மேற்கிந்தியாவில் வணிக ஹட்டங்கள் (Vanika-Hatta) என்பவை பெரிய நகரங்கள் அணைத்திலுமிருந்தன என்பதைச் சாசனங்கள் அறிவிக்கின்றன. அசாமிலுள்ள கௌஹாத்தி (Gauhati) என்ற நகரம் பண்டைக் காலத்தில் மாட்டுச் சந்தைக்குப் பேர்போன ஓர் ஊராகும்.

அயல்நாட்டு வாணிபம்

சீன யாத்திரிகரான யுவான் சுவாங் இந்தியாவுக்கு வந்த போது வியாபார மார்க்கத்தைப் பின்பற்றியே பயணமாகி வந்தார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. காபிசா, காந்தாரம் ஆகிய வற்றின் வழியாக வந்து, பாராமூலா (Baramula) கணவாயில் நுழைந்து, ஹுஷ்கபுரத்தை (Huskapura) அவர் அடைந்தார். அங்கிருந்து தலைநகரான ஸ்ரீநகரையோ பிரவரபுரத்தையோ அவர் அடைந்தார். பின்னர், தென்மேற்கில் எழுநூறு லி (li) தூரம் பயணம் செய்து, புஞ்ச்சையும் (Punch) அங்கிருந்து அதே திசையில் மேலும் நானூறு லி பயணம் செய்து ராஜபுரியையும் யுவான் சுவாங் அடைந்தார். இந்தியாவில் நுழைவதற்கு முன் அவர் பயணம் செய்த துருக்கிஸ்தானம், பிறகு தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் போது அவர் கடந்து போன காஷ்கார் (Kashgar), கோட்டான் (Khotan) போன்ற பகுதிகளெல்லாம் பண்டைக் காலத்து வாணிப மார்க்கங்களே. இந்தியாவுக்கும் மத்திய ஆசியாவுக்குமிடையிலான வாணிபத்தை இவற்றின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். எட்டாவது நூற்றுண்டின் இடைப்பகுதியில் காஷ்மீரத்தையடைந்த சீன யாத்திரிகரான ஊகாங் (Ou Kong) என்பாரும் இதே வழியிலேயே வந்தார். அல்பெருனியும் காந்தாரத்தின் வழியாகவும் பாராமூலாவின் வழியாகவும் ஏகிக் காஷ்மீரத்தை அடைவதே சிறந்த வழி என்று குறிப்பிட்டார். பல திசைகளிலிருந்து வரும் வணிகர்களும் கூடும் ஒரு கேந்திரமாகக் காபிசா விளங்கிற்று. காந்தாரத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று வழிகள் மூலமாகச் சீனுவை வணிகர்கள் அடைந்தனர். இவ் வழிகளெல்லாம் சீன எல்லையிலிருந்த யு-மென்-குவான் (Yu-Men-Kuan) என்ற ஊரில் சந்தித்தன என்று சொல்லப்படுகிறது. கில்கிட் (Gilgit) வழியாக மத்திய ஆசியாவுக்கும் சீனுவுக்கும், லடாக் வழியாகத் திபேத்துக்கும் சீனுவுக்கும் இரு மார்க்கங்களிருந்தன.

சிங்கள திவீபம் (இலங்கை), சுவர்ண திவீபம் (கிழக்கிந்தியத் தீவுகள்) போன்ற நாடுகளுக்கும் குஜராத்தைச் சேர்ந்த வணிகர்கள் சென்றனர் என்பது சிருங்காரமஞ்சரி கதா, திலக மஞ்சரி போன்ற நூல்கள் வாயிலாகத் தெரிய வருகிறது. லாட்டத்திலிருந்த புரோச் (Broach) துறைமுகம் அயல் நாட்டுக் கப்பல்கள் வந்து கூடுமிடமாக இருந்தது. உஜ்ஜெயினி போன்ற நகரங்களிலிருந்து நர்மதை நதி வழியாகவும் தரைமார்க்கமாகவும் பண்டங்கள் புரோச்சை அடைந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. வங்காளத்திலிருந்தும் வாணிபக் கப்பல்கள் கீழை நாடுகளுக்குச் சென்று வந்தன. கி.பி. ஏழு, எட்டாம்

நூற்றுண்டு முதல் அராபியர்கள் இந்து மாக்கடல் வாணிபத்தில் பெரும் பங்காற்றத் துவங்கினர். தெற்கு அரேபியாவிலிருந்து அரபிக் கடலுக்குள் புகுந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வழியாக இலங்கை, மலேசியா, சீனு வரையில் அவர்கள் சென்றனர். இந்தியா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் காண்டன் நகர் (சீனு) வரையில் சென்றன என்று அல் மஸ்ஊதி தெரிவிக்கிருர். இந்திய வணிகர்கள் கடல் கடந்து கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பியதைப்பற்றி அக் காலத்திய நூல்களில் ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன.

துறைமுகங்கள்

அராபியர்களது நூல்கள் வாயிலாக இந்தியாவின் துறைமுகங்களைப்பற்றி நாம் அறிகிறேம்.[1] சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த தேபல் நகரம் அக்காலத்தில் முக்கியமான துறைமுகமாக விளங்கிற்று. காம்பே (Cambay), தாணு, சோபாரா (Sopara), சஞ்சான் (Sanjan), கொல்லம் ஆகியவை மேலைக் கடற்கரையிலிருந்த முக்கியமான துறைமுகங்களாகும். வங்கத் துறைமுகங்களுக்கு அராபிய வணிகர்கள் அக் காலத்தில் வராமையால் அவைபற்றிய செய்திகள் நமக்குத் தெரியவில்லை. சந்தனக்கட்டைகள், கற்பூரம், நறுமணப் பொருட்கள், பருத்தி ஆடைகள், மூங்கில், அவுரிச்சாயம், பிரம்புகள் போன்றவை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின. அபூ-சயீத் (Abu-Said), இப்னு குர்தத்பா (Ibn Khurdadbah), அல்மஸ்ஊதி, சுலைமான் போன்ருரின் சான்றுகள்மூலம் இவற்றை நாம் தெரிந்து கொள்கிறேம். மேலும், கவரிமான் மயிர், காண்டா மிருகத்தின் கொம்பு, தேக்கு, தேவதாரு போன்ற மரங்கள், சில விலங்குகளின் தோல்கள் ஆகியவையும் ஏற்றுமதியாயின. இலவங்கம், ஏலக்காய், மிளகு, ஜாதிக்காய் முதலிய நறுமணப் பொருள்களின் பெயர்கள் அராபிய வணிகர்களின் நூல்களில் குறிப்பிடப்படுகின்றன. இந்தியாவின் எந்த எந்தப் பகுதிகள் என்ன என்ன வியாபாரப் பண்டங்களுக்குப் பெயர் போனவையாய் விளங்கின என்பதுபற்றிக் 'காவிய மீமாம்சம்' என்ற நூல் தெரிவிக்கிறது.

இந்தியாவில் குதிரைகள் அதிகமில்லையென்றும், மேற்கு ஆசியாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்துமே அவை வந்தன

[1] Elliot and Dowson, Vol. I,

என்றும் அராபியரின் நூல்கள் கூறுகின்றன.[1] குதிரைகளுக்கு அக்காலத்தில் இடப்பட்டிருந்த பெயர்கள் இதை மெய்ப்பிக்கின்றன. வடமேற்கிந்தியா குதிரைகளுக்குப் பெயர்போன இடமாக விளங்கியது. குதிரைகள் பாரசீகக் குதிரைகள், சிந்துக் குதிரைகள், காம்போஜக் குதிரைகள், துருக்ஷக் குதிரைகள், பல்க் குதிரைகள் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தன. காபிசாவிலிருந்து சிறந்த மது இறக்குமதி செய்யப்பட்டது. பஸ்ராவிலிருந்து (Basra) பேரீச்சம் பழங்கள் கொண்டு வரப்பட்டன. சீனத்துப் பட்டு இடைக்காலத்திலும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.

4. சமயம்

பொது அம்சங்கள்

குப்தப் பேரரசின் காலத்தில் பிராமண சமயத்தின் செல்வாக்கு ஓங்கி, சமண சமயமும் பௌத்த சமயமும் வட இந்தியாவில் வீழ்ச்சியுறத் துவங்கின. இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர்கள் அனைவருமே இந் நிலையை நன்கு கண்டனர். ஹர்ஷரது காலத்தில் பௌத்தம் அப் பேரரசரால் ஆதரிக்கப்பட்டது என்றாலும், பிராமண சமயத்தின் வளர்ச்சியை அது பாதிக்கவேயில்லை. தக்கணத்திலும் மேற்கிந்தியாவிலும் மட்டுமே சமண சமயம் சிறிது வலுவுடன் காணப்பட்டது. பீகாரிலும் வங்காளத்திலும் பௌத்த சமயம் ஓரளவு செல்வாக்குடன் விளங்கி வந்தது. எனினும், இவையிரண்டும் பிராமண சமயத்துக்கு அடுத்த இரண்டாவது நிலையையே பெற்றிருந்தன. அதே நேரத்தில், அரசர்களும் மக்களும் மிகுந்த சமயப் பொறை உடையவர்களாக, பிற சமயங்களைச் சிறிதும் வெறுக்காமல் இருந்தனரென்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. உருவ வழிபாடும் ஆலய நிர்மாணமும் வெகு வேகமாக வளர்ச்சியுற்று வந்தன. நாம் படிக்கின்ற காலத்தின் மிகமிக முக்கியமான அம்சங்களாக இவற்றை நாம் கொள்ள வேண்டும். லட்சக் கணக்கில் பணம் செலவிடப்பட்டு, விசாலமும் அழகும் நிறைந்த ஆலயங்கள் இக்காலத்திலேயே கட்டப்பட்டன.

சமணம்

அரசர்களின் ஆதரவில்லாத காரணத்தினாலும், பிராமண சமயத்தின் போட்டி காரணமாகவும் சமண சமயமானது பல

[1] 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று 2000 ஆண்டுகட்கு முற்பட்ட 'பட்டினப்பாலை' அறிவிப்பதையும் கவனியுங்கள். குதிரைகள் கடல் கடந்த நாடுகளிலிருந்தே இங்கு வந்தன.

நூற்றுண்டு காலமாகவே சிறுகச் சிறுகத் தனது செல்வாக்கை இழந்து வந்தது. மேற்கிந்தியாவும் தக்கணமும் மட்டுமே இதற்கு விதிவிலக்கு என்று கூறவேண்டும். ஒழுக்கமும் துறவும் பக்தியும் நிறைந்த வாழ்க்கை, சிறந்த புலமை, பொருளீட்டுவதில் நாட்டமின்மை போன்ற உயர்ந்த குணங்களால் மேற்கிந்தியாவில் சமண ஆசாரியர்கள் அரசர்களையும் பிரபுக்களையும் உயரதிகாரிகளையும் மிகவும் கவர்ந்தனர். செல்வந்தர்களான வணிகர்களது ஆதரவும் சமணர்களுக்கு இருந்தது. பிறப்பும் இறப்புமற்ற, நோயும் வலியுமற்ற கைவல்ய நிலையை எய்துவதே சமணர்களின் இலட்சியம். நல்ல ஞானம், நல்ல நம்பிக்கை, நல்ல செயல் ஆகிய மூன்றின்மூலம் கைவல்ய நிலையை எய்தலாமென்று அவர்கள் கருதினர். இதற்கான சாதனமாக இல்லறத்தாருக்குக் கிருஹதர்மம் என்பதையும், துறவிகளுக்குச் சாது தர்மம் என்பதையும் அவர்கள் வகுத்தனர். கிருக தர்மத்தின்படி இல்லறத்தான் ஒருவன் அனைவரையும் நேசித்து, சினம், பேராசை, கர்வம் ஆகிய மூன்றையும் கைவிடவேண்டுமெனக் கூறப்பட்டது. ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி, தேவையான உணவு மட்டுமே உண்டும், சமண ஆலயங்களுக்கு முறை தவருமல் சென்று, சமண ஆசாரியர்களை மரியாதையுடன் வணங்கி, நலிந்தவரையும் நோயுற்றவரையும் ஆதரித்தும் நன்னெறியில் அவர்கள் ஒழுகிக் கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டது. இந்தக் கிருக தர்மத்தை ஏற்றுப் பின்பற்றுவதில் ஒருவருக்குமே சிரமமில்லை. எனவே, பிராமண சமயத்துக்கும் இதற்குமிடையில் எவ்வித வேறுபாட்டையும் காணுத மக்களில் பலர் குஜராத்திலும் மாளவத்திலும் சமண சமயத்தைத் தொடர்ந்து தழுவியிருந்தனர். துறவிகளுக்குரிய சாது தர்மம் அல்லது யதி தர்மமானது (Yati Dharma) உண்மை பேசுதல், தூய்மை, கற்பு, துறவு, புலனடக்கம், எளிமை, அடக்கம், பொறுமை, விரதங்கள், புறங்கூறுமை, பெருமை பாராட்டாமை, கடுஞ்சொல் கூறுமை போன்ற பல உயர்ந்த பண்புகளை வலியுறுத்திற்று. இவற்றைப் பின்பற்றி மக்களிடையில் நிறைந்த மதிப்பையும் செல்வாக்கையும் சமணப் பெரியார்கள் பெற்றனர். பொருளாசையும் தீயொழுக்கங்களுமின்றிப் பல சமணப் பெரியார்கள் வாழவே, மிகுந்த மரியாதை அவர்களுக்கு இயற்கையாகவே கிடைத்தது. அவர்களது புலமைக்கு ஈடு இணையாக வேறு எச்சமயத்தினரும் விளங்கவில்லை. இப் புலமையாலும்கூட அவர்களுக்கிருந்த மதிப்பும் செல்வாக்கும் மேம்பட்டன.

சாப்பர்களும் சமணர்களும்

திகம்பரர்கள், சுவேதாம்பரர்கள் என்று இரண்டு பிரிவாகச் சமணர்கள் இருந்தனர். இவ்விரு பிரிவுகளும் கணம், குலம், சாகம்

(Sakha), கச்சம் (Gachha) என மேலும் நான்கு சிறு பிரிவுகளாகப் பிரிவுற்றிருந்தன. மேற்குக் கடற்கரையை ஒட்டியிருந்த சாப்பர்கள் (Chapas) சமண சமயத்தை ஆதரித்தனர். சாப்பர்களது இரண்டு வம்சங்கள் குஜராத்தில் வர்த்தமானம் என்ற நகரத்தையும் அணகிலப்பாடகம் என்ற நகரையும் கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் தலைநகராகக் கொண்டிருந்தன. வர்த்தமானம்என்பதே சமண சமயத்தைத் தோற்றுவித்தவரான மகாவீர வர்த்தமானரது பெயரைத் தாங்கியிருந்தது. சௌளுக்கிய மூலராஜர் கி.பி. 940ஆம் ஆண்டுவாக்கில் இவ்விரு அரசுகளையும் கைப்பற்றினர். சாப்ப அரசர்கள் சைவர்களாகவும் சாக்தர்களாகவும் (Saktas) விளங்கிய போதிலும், நாட்டிலிருந்த முக்கியமான அதிகாரிகள் பலரும் சமணர்களாகவே இருந்தனர். முதல் அரசரான வனராஜரது பிரதம மந்திரியாக இருந்த சமண வணிகர் சம்பர் (Champa) என்பவரே சம்பானர் (Champaner) என்ற நகரை நிறுவினர். நன்னயர், அவரது மகனுன லகோரர் (Lahora) போன்ற சமணர்களும் வனராஜரது ஆட்சியில் முக்கிய அதிகாரிகளாக இருந்தனர். இவ் வரசரும் இவரது சந்ததியினரும் சமண ஆலயங்கள் பலவற்றைக் கட்டினர்.

சௌளுக்கியரும் சமணமும்

குஜராத்தில் சௌளுக்கியர் ஆட்சியிலும் சமண சமயம் மிகவும் ஆதரிக்கப்பட்டது. துர்லபராஜரின் ஆட்சியில் ஜினேஸ்வர சூரி என்ற சமணப் பெரியார் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கினு ரென்பதைப் பல நூல்களும் தெரிவிக்கின்றன. அடுத்த அரசரான பீமரது அமைச்சரும் தளபதியுமான விமலர் என்பவரே அபுக் குன்றிலுள்ள புகழ்மிக்க சமண ஆலயங்களுள் ஒன்றைக் கட்டியவர். பீமரது மகனுன கர்ணரும் சமண சமயத்துக்கு ஆதரவு நல்கினுர். ஜெயசிம்ம சித்தராஜரது ஆட்சியில் சமணப் புலவரான ஹேமசந்திரர் அரசவையில் மிகுந்த மரியாதையோடு வைத்துப் போற்றப்பட்டார். ஹேமசந்திரரை முதலில் ஆதரித்தவரான உதயணன் என்பார் ஹேமசந்திரரது செல்வாக்குக் காரணமாகச் சித்தராஜரது அமைச்சர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். சந்து (Santu), முஞ்சலர் போன்ற வேறு சமண அமைச்சர்களும் சித்தராஜருக்கு இருந்தனர். சமணர்கள் இக்காலத்தில் தங்களுக்குள்ளேயே சண்டைகளில் ஈடுபட்டதானது அவர்களது வலிமையையும் செல்வாக்கையும் குறைத்தது. குமுத சந்திரர் என்ற கீர்த்தி மிக்க திகம்பர சமண அறிஞர் ஒருவர் குஜராத்துக்கு வந்து சுவேதாம்பர ஆசாரியர்களுடன் வாதப் போர்கள் நிகழ்த்தினுர். சித்தராஜரது முன்னிலையிலேயே இவ் வாதப் போர் நிகழ்ந்தது. சுவேதாம்பரர்

களின் தலைவராக இருந்தவர் ஹேமசந்திரரது குருவான தேவ சந்திரசூரி என்பவராவார். சுவேதாம்பரர்களே இறுதியில் வெற்றி பெற்றனர்.

ஜெயசிம்ம சித்தராஜர், மற்றச் சௌளுக்கிய அரசர்களைப் போலவே, சோமநாதரையே குலதெய்வமாகக் கொண்டவர். சந்தனம், பூ, அரிசி, தீர்த்தம் ஆகியவற்றோடு மது பார்க்கத்தையும் (தேன், நெய், இனிப்புப் பண்டங்கள், தயிர் ஆகியவை சேர்ந்ததே மதுபார்க்கமாகும்) வைத்துச் சோமநாதரைச் சித்தராஜர் வழிபட்டாராம். ஆயினும், தாம் விரும்பியபடி ஆண் குழந்தை பிறக்காமல் போகவே, அவர் உஜ்ஜயந்தம் (Ujjayanta) என்ற ஊருக்குச் சென்று கருப்பஞ்சாறு, நெய், பால், தயிர், தேன் ஆகியவற்றையும் பூக்களையும் பழங்களையும் வைத்து, நேமிநாதரை வழிபட்டாரென்று ஹேமசந்திரரது திவ்யாஸ்ரய காவியம் தெரிவிக்கிறது. சமணர்களும் மிகுந்த சமயப் பொறையுடனேயே நடந்து கொண்டனர். சான்றாக, ஹேமசந்திரர் தம்மை ஆதரித்த அரசர்களான சித்தராஜர், குமாரபாலர் ஆகியோரது அழைப்பினை ஏற்று அவர்களோடுகூடச் சோமநாதர் ஆலயத்துக்குச் சென்றதுடன், சோமநாதரின் பெயரில் செய்யுள் ஒன்றையும் இயற்றியதாக மெருதுங்கரது பிரபந்த சிந்தாமணி தெரிவிக்கிறது. குமாரபாலர் சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளைக் கொண்ட தேர் உற்சவத்தின் போது அதில் கலந்து கொண்டார்.[1]

பரமாரரும் சமணமும்

பரமார அரசர்களும் சமண ஆசாரியர்கள் பலரை ஆதரித்தனர். பரமார அரசின் தலைநகரான தாராவிலிருந்த பார்சவ நாதர் ஆலயம் புகழும் செல்வமும் பெற்றுத் திகழ்ந்தது. இரண்டாம் வாக்பதி முஞ்சர் சமண ஆசாரியர்களான அமிதகதி (Amitagati), மகாசேனர், தானேசுவரர் ஆகியோரை ஆதரித்தார். பரமார போஜர் பிரபாசந்திரர், தனபாலர் போன்றோரை ஆதரித்தார். தனபாலரது திலக மஞ்சரி போஜரது வேண்டுகோளின்படியே இயற்றப்பட்டது எனவும், அந் நூலைப் படிக்கக் கேட்டு மகிழ்ச்சி எய்திய போஜர் 'சரஸ்வதி' என்ற பட்டத்தை அந் நூலாசிரியருக்கு வழங்கினாரெனவும் அறிகிறோம். திலக மஞ்சரியைக் கேட்டபின், போஜரே சமணராகி விட்டாரென்று சொல்லப்படுகிறது. வேறு சமணப் புலவர்களும் ஆசாரியர்களுமான நயநந்தி, புத்திசாகரர், ஜினேஸ்வரசூரி போன்றோரும் போஜரால் ஆதரிக்கப்பட்டு, தாரா நகரிலேயே வாழ்ந்தனர்

[1] A. K. Majumdar, *Chaulkyas of Gujarat*

என்று நம்பப்படுகிறது. போஜருக்குப் பின் ஆட்சி புரிந்த முதலாம் ஜெயசிம்மர், நரவர்மன் ஆகியோரும் சமணர்களை ஆதரித்தனர். போஜரால் ஆதரிக்கப்பட்ட பிரபாசந்திரர் முதலாம் ஜெயசிம்மராலும் ஆதரிக்கப்பட்டார். ஆசாரிய ஜினவல்லபர் என்ற பேரறிஞர் நரவர்மனுடைய அழைப்பை ஏற்றுத் தாராவுக்கு வந்து வாழ்ந்தார். ஜினவல்லபரின் வேண்டுகோளின்மீது ராஜஸ்தானத்திலுள்ள சித்தூரிலிருந்த சமண ஆலயங்களுக்குப் புதிதாகப் பல மண்டபங்களை நரவர்மன் கட்டினார்.[1]

குஜராத்தைச் சேர்ந்த சௌளுக்கிய அரசரான குமாரபாலர் பரமார அரசின்மீது படையெடுத்து மாளவத்தைக் கைப்பற்றிய பின், அவரது ஆதரவு காரணமாகச் சமண சமயம் மேலும் வலிமை பெற்றது. பரமார அரசர் விந்தியவர்மன் தரசேனர், மகாவீரர், ஆசாதரர் போன்ற பல சமணப் புலவர்களையும் ஆசாரியர்களையும் ஆதரித்தார். விந்தியவர்மனுக்குப் பின் அரியணை ஏறிய சுபதவர்மன் சமணர்களை எதிரிகளாகக் கருதினார். சௌளுக்கிய அரசின்மீது படையெடுத்த இம்மன்னர் அங்கிருந்த சமண ஆலயங்களையும் படிமங்களையும் அழித்தாரென்று கூறப்படுகிறது. இவரையடுத்து முதலாம் அர்ஜுனவர்மன் அரியணை ஏறியபின், சமண சமயம் மீண்டும் ஆதரவு பெற்றது. இவரது காலத்திலேயே ஆசாதரர் சமணத்தின் செல்வாக்கை மேலும் விரிவுபடுத்துவதற்கெனப் பல நூல்களை எழுதினார். பண்டித ஆசாதரர் அடுத்த அரசர்களான தேவபாலர், ஜெய்துகி ஆகியோராலும் மிகவும் மதிக்கப்பட்டார். சமணப் பெரியார்களின் பணி காரணமாக ஏராளமான சமண ஆலயங்கள் எழுப்பப்பட்டன.

அற்புத மண்டலம், வாகதம், கிராடு (பின்மால்) ஆகிய பரமார அரசுகளிலும் சமணம் வலுவுடன் திகழ்ந்தது. அபுவில் சமணத் தீர்த்தங்கரர்களுக்கு ஆலயங்கள் பல எழுப்பப்பட்டன. அற்புத மண்டலத்து (அபு)ப் பரமார அரசர்கள் பிராமண சமயத்தையே தழுவியிருந்தனராயினும், சமணத்தை அவர்கள் மிகவும் ஆதரித்தனர். சமணப் பெரியார்கள் நிர்வாணமெய்திய இடங்கள் புண்ணியத் தீர்த்தங்களாகக் கருதபபட்டன. அத் தீர்த்தங்களுக்குச் சமணர்கள் யாத்திரை சென்றனர். ஆயினும், இந்துக்களைப் போலவே சாதிப் பாகுபாடுகள் சமணர்களுக்கிடையிலும் புகுந்து விட்டன. தீபாவளி போன்ற பண்டிகைகளைச் சமணர்களும் கொண்டாடினர். தாந்திரிகத் (Tantrik)

[1] Dr. C. Ganguly, *The History of Paramara Dynasty*.

தத்துவங்களும் வழக்கங்களும் சமணர்களிடையிலும் புகுந்து விட்டன.

சமணச் சிலைகள்

மேற்கிந்தியாவிலும் வேறு சில பகுதிகளிலும் மகாவீரர், தீர்த்தங்கரர்கள் ஆகியோரது சிலைகள் இக்காலத்தில் செதுக்கப் பட்டன. குஜராத், ராஜஸ்தானத்தின் ஒரு பகுதி ஆகியவற்றில் பெருமளவிலும், வங்காளம் பீகார் ஒரிசா போன்ற இடங்களில் சிறிய எண்ணிக்கையிலும் இச் சிலைகள் உருவாக்கப்பட்டன. அபுக் குன்றில் உள்ள பளிங்குக் கல்லாலான அழகிய சமண ஆலயங்கள் இக் காலத்திலேயே உருவாயின. அவற்றுள் விமலர், தேஜபாலர் ஆகியோரால் கட்டப்பட்ட ஆலயங்களே மிகவும் எழில் மிக்கவை. தீர்த்தங்கரர்களான ரிஷபநாதர், பார்சவநாதர் போன்ருேரது சிலைகளே மகாவீரரது சிலைகளுக்கு அடுத்தபடியாகப் பெரும் எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இந்து சமயத்தின் செல்வாக்குக் காரணமாக யக்ஷர்களும், யக்ஷிணிகளும் தீர்த்தங்கரர்களைச் சுற்றி உபாசகர்களாகவும் சாசன தேவதைகளாகவும் பணியாற்றுவது போல் சித்திரிக்கப் பட்டுள்ளனர். சிவன், பிரமன் ஆகியோரும் யக்ஷர்களாக இச் சமணச் சிற்பங்களில் காணப்படுகின்றனர். சிவன் கோமுகன் என்ற புதிய பெயரில் காளைமீதமர்ந்து காளை முகமுடையவனுக ரிஷப நாதரது யக்ஷனுகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். பிரமன் நான்கு முகங்களுடன் தாமரையில் அமர்ந்துள்ள நான்கு கரத்தா னுகச் செதுக்கப்பட்டுள்ளான். ஈசுவர யக்ஷன், சண்முக யக்ஷன் போன்ற பெயரிலும் யக்ஷர்கள் தீர்த்தங்கரர்களைச் சுற்றிச் செதுக்கப்பட்டுள்ளார்க ளென்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்தம்

காஷ்மீரத்தில் பௌத்தம்

வட இந்தியாவில் பௌத்த சமயமானது கி.பி. ஏழாம் நூற்றுண்டுக்குப் பின் வெகுவேகமாகத் தனது செல்வாக்கை இழந்தது. யுவான் சுவாங்கின் குறிப்புகள் இதைத் தெளிவாக நமக்குத் தெரிவிக்கின்றன.[1] பீகார், வங்காளம், காஷ்மீரம் ஆகியவை நீங்கலாக மற்றெல்லாப் பகுதிகளிலும் பௌத்த சமயம் முற்றிலுமாக மறைந்து விட்டது என்று நாம் கூறலாம். திபேத்திய அறிஞரான தாரநாதர் எழுதிய பௌத்த சமயத்தின் வரலாறுபற்றிய நூல் வங்காளத்தை ஆட்சி புரிந்த பால அரசர்

[1] Thomas Watters, *On Yuan Chwang's Travels in India.*

போன்ருேர் பௌத்த சமயத்துக்கு ஆற்றிய பணிபற்றி நாம் அறிந்து கொள்ள உதவுகின்றது. காஷ்மீரத்தில் பௌத்த சமயத்தின் நிலைபற்றிக் கல்கணரது ராஜதரங்கிணியில் நிறையக் குறிப்புகள் உள்ளன. பாலர்களது சாசனங்களும் 'மஞ்சு ஸ்ரீ மூலகம்பம்' போன்ற நூல்களும் இத் துறையில் நமக்கு மிகவும் உதவுகின்றன.

யுவான் சுவாங் போன்ருேரின் சான்றுகள்

யுவான் சுவாங் கி.பி. 630 முதல் கி.பி. 644 வரையில் இந்தியாவில் பயணம் செய்தார். கி.பி. 631-32-ல் அச் சீனப் பெரியார் காஷ்மீரத்திலிருந்தார். காஷ்மீரத்தில் அப்பொழுது ஆட்சி புரிந்து கொண்டிருந்த கார்க்கோட அரசர்கள் விஷ்ணு, சிவன், சூரியன் போன்ற கடவுளரையே வணங்கினரெனினும், யுவான் சுவாங்கைக் காஷ்மீர அரசர் (துர்லபவர்தனராக இவர் இருக்கக்கூடும்) மிகுந்த மரியாதையோடு வரவேற்று அவருக்கு வேண்டிய உதவிகளனைத்தையும் புரிந்தார். ஓரிரு ஆண்டுகள் ஸ்ரீநகர் அல்லது பிரவரபுரத்தில் தங்கிப் பல பௌத்த ஏடுகளை யுவான் சுவாங் பிரதி செய்து கொண்டார். அப்பொழுது காஷ்மீரம் பௌத்த சமயத்தின் முக்கியமான மையங்களுள் ஒன்ருகத் திகழ்ந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார். பின்னர்க் காஷ்மீரத்திலிருந்து கனோஜ், நாளந்தா போன்ற இடங்களுக்கும் இச் சீனப் பெரியார் சென்ருர். கி.பி. 672 முதல் 688 வரையில் இந்தியாவில் பயணம் செய்த மற்ருெரு யாத்திரிகர் இத்சிங் (Itsing) ஆவார். இவரும் இந்தியாவில் பௌத்தத்தின் நிலைபற்றி நமக்குத் தெரிவிக்கிருர். கபிலவஸ்து, வாராணசி, கயா, குசி நகரா போன்ற பல பௌத்த ஸ்தலங்களுக்கு இவ்விருவருமே விஜயம் செய்தனர். பீகாருக்கும் வங்காளத்துக்கும் அடுத்தபடியாகக் காஷ்மீரத்திலேயே பௌத்தர்கள் அதிகமாகக் காணப்பட்டதாக யுவான் சுவாங்கின் சான்றுகளிலிருந்து தெரிகிறது. காஷ்மீரத்தில் மட்டும் சுமார் 100 பௌத்த ஆலயங்கள் இருந்தனவென்றும் அவற்றில் 5,000 பௌத்த பிட்சுக்கள் இருந்தனரென்றும் அவர் தெரிவிக்கிருர். பல ஸ்தூபங்களையும் விகாரங்களையும் யுவான் சுவாங் அங்குக் கண்டார். அசோகரால் கட்டப்பட்ட நான்கு ஸ்தூபங்கள் ஏழாம் நூற்ருண்டிலு மிருந்தன வென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜதரங்கிணியின் சான்று

அரசர் துர்லபரின் மனைவியான அனங்கலேகா என்பவர் பௌத்த விகாரமொன்றைக் கட்டியதாகவும், அது 'அனங்க

பவனவிகார'மென்று பெயர் பெற்றதாகவும் கல்கணர் கூறுகிருர். லலிதாதித்திய முக்தாபீடர் பரிகாசபுரத்தில் ராஜவிகார மென்பதையும் சைத்தியம் ஒன்றையும் நிறுவினுராம். ஹுஷ்கபுரத்திலும் அவரால் ஒரு விகாரமும் ஸ்தூபியும் கட்டப்பட்டன. இவ்வாறு பல அரசர்களும் அமைச்சர்களும் பிறரும் காஷ்மீரத்தில் பல பௌத்த ஆலயங்களையும் மடங்களையும் நிறுவினர். லலிதாதித்தியரால் நிறுவப்பட்ட பரிகாசபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ் பறிக்கும் வேலைகளின்போது இவையனைத்தும் கண்டறியப்பட்டன. போதி சத்வர், புத்தர் ஆகியோரது சிலைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பௌத்த சமயம் நிறையச் செல்வாக்குடன் விளங்கிற்று என்பதை இவையனைத்தும் நன்கு தெரிவிக்கின்றன. கி.பி. 753 முதல் 763 வரையில் காஷ்மீரத்தில் தங்கியிருந்து, பௌத்தர்களின் புண்ணியத் தலங்களைத் தரிசிப்பதிலும் நூல்களைக் கற்பதிலும் ஈடுபட்ட இன்னெரு சீன யாத்திரிகரான ஊ-காங் (Ou Kong) முந்நூறு பௌத்த விகாரங்களையும் எண்ணற்ற ஸ்தூபங்களையும் விக்கிரகங்களையும் அங்குக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. ஏழு, எட்டாம் நூற்ருண்டுகளில் காஷ்மீரத்தில் இவ்வாறு பரவலாகக் காணப்பட்ட பௌத்த சமயமானது சைவம், வைணவம் ஆகியவற்றின் துரித வளர்ச்சி காரணமாக விரைவில் வீழ்ச்சியுற்றது. கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் கார்க்கோட வம்சம் முடிவுற்றபின், பௌத்த சமயத்தை ஆதரிப்பார் ஒருவருமில்லாமல் போனதும் இதற்கொரு காரணமாயிருத்தல் வேண்டும். இப்பொழுது ஆட்சியைப் பற்றிய உத்பல வம்சம் பௌத்தத்தை முற்றிலுமாக மறந்து பிராமண சமயத்தை மட்டுமே ஆதரிக்கலாயிற்று. சான்ருக, உத்பல வம்சத்தின் முதலரசரான அவந்திவர்மன் (855-883) அவந்திபுரமென்ற புதிய நகரமொன்றினைக் கட்டியெழுப்பி, இந்துக் கடவுளரான சிவன், விஷ்ணு போன்ரேருக்கு அங்கு ஆலயங்களை நிறுவினுரேயொழிய, பௌத்த விகாரமெதையும் நிறுவவில்லை. அந்நகரில் தொல்பொருள் ஆராய்ச்சியினர் நடத்திய அகழ்வுப் பணியின்போது இந்துக் கடவுள்களின் விக்கிரகங்கள் மட்டுமே கிடைத்தன; புத்தர் அல்லது போதிசத்வரது விக்கிரகம் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. எனினும், பௌத்த சமயத்துக்கு எதிராகப் பகை நடவடிக்கை எதையும் உத்பல அரசர்கள் மேற்கொண்டதாக ராஜதரங்கிணியில் தகவல்களில்லை.

அடுத்த நூற்ருண்டுகளில் ஆட்சிபுரிந்த க்ஷேம குப்தர் (கி.பி. 950-58), ஹர்ஷர் (கி.பி. 1089-1101) ஆகிய இரு அரசர்களும்

பௌத்த சமயத்துக்கு எதிராகச் சில நடவடிக்கைகளை மேற் கொண்டனர். ஜயேந்திர விகாரமென்ற கீர்த்தி மிக்க பௌத்த மடாலயமொன்றை க்ஷேம குப்தர் எரியூட்டி அழித்தார்; அதன் கற்களைக் கொண்டு தமது பெயரால் சிவாலயமொன்றை அவர் கட்டினர். அந்த விகாரத்துக்குச் சொந்தமான முப்பத்திரண்டு கிராமங்களையும் இவ் வரசர் பறிமுதல் செய்தார். ஆயினும், காஷ்மீரத்திலிருந்த மற்றப் பௌத்த ஆலயங்களைத் தொடாமல் இதை மட்டுமே அவர் அழித்தாரென்று சொல்லப் படுவதால், இதன்மீது மட்டும் ஏதோ காரணத்தினல் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது என்பது புலப்படுகிறது. நிதி திரட்டும் பேராசை யினல் ஹர்ஷர் உந்தப்பட்டு, புத்தர், சிவன், விஷ்ணு போன்ற பல விக்கிரகங்களையும் கைப்பற்றினர். பௌத்த ஆலயங் களோடுகூட இந்து ஆலயங்களும் சூறையாடப்பட்டன.[1]

கி.பி. 1128-ல் அரியணை ஏறிய ஜெயசிம்மர் பழைய பௌத்த விகாரங்களைப் புதுப்பித்ததுடன், புதிதாகவும் பலவற்றைக் கட்டினர். உச்சலரால் பாதியளவுக்குக் கட்டப்பட்டிருந்த சல்ல விகாரம் (Sullavihara) என்பதை ஜெயசிம்மர் கட்டி முடித்தார். இவரது அமைச்சரான ரில்கணர் (Rilhana) என்பவர் காலஞ் சென்ற தம் மனைவியான சுஸ்சலா என்பவரின் நினைவாக மற்ருெரு பௌத்த விகாரத்தை யமைத்தார். இவ்வாறே ஜெய சிம்மரது மற்ற அமைச்சர்களும் தளபதிகளும் வேறு பௌத்த ஆலயங்களை நிறுவினர். பௌத்த சமயம் இந்து ஆட்சி முடியும் வரையில் காஷ்மீரத்தில் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. காஷ்மீரத்திலிருந்து காபூல், காண்டகார், பாக் டீரியா, மத்திய ஆசியா, சீன, திபேத், நேபாளம் போன்ற பல நாடுகளுக்கும் பௌத்தத் துறவிகளும் அறிஞர்களும் சென்றனர். இவ்வாறு அயல் நாடுகளில் பௌத்தத்தைப் பரப்புவதிலும் காஷ்மீரம் பெரும் பங்காற்றிற்று. முஸ்லிம்களின் ஆதிக்கம் ஏற் பட்ட பின், பௌத்த சமயம் திடீரென்று அஸ்தமிக்கத் துவங் கிற்று.

பாலர்களும் பௌத்தமும்[2]

ஹர்ஷருக்குப் பின் பௌத்தத்தை ஆதரித்த மாபெரும் அரச வம்சம் வங்காளத்தையும் பீகாரையும் ஆட்சிபுரிந்த பாலவம்சமே யாகும். அவ் வம்சத்தைத் தோற்றுவித்த கோபாலர் முதல், நான்கு நூற்றுண்டு காலம்வரை ஆட்சிபுரிந்த அவ் வம்ச அரசர்க ளனைவருமே பௌத்தர்களென்பதை நாம் இங்குக் குறிப்பிடு வது அவசியம். கோபாலர் நாளந்தாவிலிருந்த பௌத்த

[1] S. C. Ray, *Early History and Culture of Kashmir*.

[2] R. C. Majumdar, (Editor) *History of Bengal*.

மடாலயத்தைப் பழுதுபார்த்துப் புதுப்பித்து அதற்குப் புத்துயிர் ஊட்டினர். புதிதாகப் பௌத்த மடாலயங்கள் பலவற்றையும் கோபாலர் கட்டி, பௌத்தத் துறவிகளுக்குப் பல வகையிலும் உதவிகள் புரிந்தார். இவரது காலத்திலேயே பௌத்த உபாசகர் ஒருவர் உத்தண்டபுரியில் ஏராளமான பொருளைச் செலவிட்டு, உயர்ந்த கோபுரத்தையுடைய மடாலயமொன்றினை நிறுவினர். இதுவே பிற்காலத்தில் ஓடந்தபுரி (Odantapuri) மடாலயமென்று பெயர் பெற்று, ஒரு பல்கலைக் கழகமாகக் கருதப்படுமளவுக்கு வளர்ச்சியுற்றது. பிற்காலத்தில் இதைப்பற்றிக் கேள்வியுற்ற திபேத்தியரான தாரநாதர் இதன் பெருமையிலும் கலையழகிலும் தம் மனத்தைப் பறிகொடுத்தார். மேலும், கோபாலரது காலத்தைச் சேர்ந்த சாந்தரக்ஷிதர் (Santharakshita) என்ற பௌத்தத் தத்துவ ஞானி திபேத்திய அரசர் ஒருவரின் அழைப்பை ஏற்றுப் பல காலம் அந் நாட்டில் வாழ்ந்த பின், கி.பி. 762-ல் இந்தியாவுக்குத் திரும்பி நாளந்தாவில் ஆசாரியராகப் பணிபுரிந்தார். பண்டித போதிசத்வர் அல்லது தர்மசாந்தி கோஷர் என்று திபேத்தில் இவர் அழைக்கப்பட்டார்.

அடுத்த பால அரசரான தர்மபாலர் ஐம்பதுக்கு மேற்பட்ட பௌத்த மடாலயங்களைக் கட்டினரென்று தாரநாதரால் குறிப்பிடப்படுகிறது. விக்கிரமசீல விகாரத்தை நிறுவியவரும் இவ்வரசரே யாவார். இதுவும் விரைவிலேயே ஒரு பல்கலைக்கழகமாக வளர்ச்சியுற்றது. இவரது காலத்தில் வாழ்ந்த பௌத்த ஆசாரியர்கள் பலரைப்பற்றிப் பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்படுகின்றன. அவர்களில் ஒருவரான புத்தஞானபாதர் என்பவர் தர்மபாலருக்கு ராஜகுருவாயிருந்து விக்கிரமசீல மடாலயத்தின் முதலாவது தலைவராகவும் பொறுப்பேற்றார். மகதத்தில் கங்கை நதியின் கரையில் மலையுச்சியின்மீது அமைக்கப்பட்ட இந்த மடாலயம் 108 அறைகளைக் கொண்டதாக இருந்ததென்றும், இதில் 108 பண்டிதர்களும் எண்ணிறந்த மாணவர்களும் அடங்கியிருந்தனரென்றும் தாரநாதர் தெரிவிக்கிறார். இம் மடாலயத்தின் தலைவர்கள் வஜ்ராசாரியர்களென்று அழைக்கப்பட்டனர். இவர்களில் பன்னிரண்டு பேரின் பெயர்களைத் தாரநாதர் குறிப்பிட்டுள்ளார். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் விக்கிரமசீல மடாலயமானது அயல்நாடுகளைச் சேர்ந்த பல மாணவர்களையும் தன்வயம் ஈர்க்கும் பெற்றிமிக்க ஒரு கல்வி நிறுவனமாக வளர்ச்சியுற்றது.

அடுத்த அரசரான தேவபாலரும் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தார். இன்றைய பாகர்பூர் (Paharpur) அக் காலத்தில் திரைகூடகம் (Traikutaka) அல்லது சோம

புரி என்றழைக்கப்பட்டது. அங்கு நெடுங்காலமாக மண் மூடிக் கிடந்த பௌத்த ஆலயமொன்றைத் தேவபாலர் புதுப்பித்தார். இது 'சோமபுரி விகார' மென்று அக் காலத்தில் புகழ்பெற் றிருந் தது. இம் மன்னரது காலத்தில்தான் சுவர்ண தீவீபத்தில் ஆட்சிபுரிந்துவந்த சைலேந்திரப் பேரரசரான பாலபுத்திரதேவர் தூதர் ஒருவரை அனுப்பி, நாளந்தாவில் ஒரு மடாலயத்துக்கு மானியமளிக்குமாறு வேண்டினர். ஐந்து கிராமங்கள் இதன்படி மானியமாக அளிக்கப்பட்டன. தேவபாலர் காலத்திலும் அவருக்கு அடுத்து ஆட்சிபுரிந்த பால அரசர்கள் காலத்திலும் வாழ்ந்த பல பௌத்தப் பெரியார்கள்பற்றித் தாரநாதரின் வர லாற்று நூல் குறிப்பிடுகிறது. இந்தப் பௌத்தப் பெரியார்கள் திபேத் போன்ற நாடுகளுக்குச் சென்று தாந்திரிக பௌத் தத்தைப் பிரசாரம் செய்தனர்.

பௌத்தச் சிலைகள்

நின்ற நிலையிலும் அமர்ந்த நிலையிலும் உள்ள புத்தரின் விக்கிரகங்கள் பல இக் காலத்தில் வடிக்கப்பட்டன. புத்தரது மகாபரிநிர்வாணத்தைச் சித்திரிக்கும் ஓரிரு அழகிய சிற்பங்களும் இக் காலத்தில் செதுக்கப்பட்டன. புத்தரது வாழ்க்கைபற்றிய பல கதைகளும்கூடச் சிற்பவடிவில் மிக அழகாகக் கற்பலகை களின்மீது செதுக்கப்பட்டன; போதிசத்வர் சிலைகளும் நிறையச் செதுக்கப்பட்டன. கிழக்கு இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட தியானி போதிசத்வர், பத்மபாணி அவலோகிதேசுவரர், மைத் ரேயர் போன்றோரின் சிலைகள் போதிசத்வரின் சிலைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் எண்ணற்ற சிலைகள் எடுக்கப்பட்டதைப் பார்த்தே பௌத்தர் களும் இவ்வாறு செய்யலாயினர் என்று கருதுவதற்கு இடமிருக் கிறது. மஞ்சுஸ்ரீ என்ற பெயரிலும் பல போதிசத்வ சிலைகள் உருவாக்கப்பட்டன. மஞ்சுஸ்ரீ போதிசத்வர்களில் சிலர் சிங்க வாகனத்தின்மீது அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர்; வேறு சிலர் தாமரையின்மீது அமர்ந்து காணப்படுகின்றனர். சிம்மநாத லோகேசுவரர் என்பாரது அழகிய சிலை மூன்று கண் களை உடையதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. சில அவலோகிதேசுவரரது சிலைகள் நான்கு அல்லது ஆறு அல்லது பன்னிரண்டு கரங்களையும் பெற்றுள்ளன. பெண் போதிசத்வர் களுள் தாராவின் (Tara) சிலைகளே நிரம்பவும் காணப்படு கின்றன. மகாசீனதாரா, வஜ்ரதாரா போன்ற பல பெயர்களில் வெவ்வேறு வகையில் இச் சிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்து சமயத்தை எந்த அளவுக்கு மகாயான பௌத்தம் பின்பற்றலாயிற்று என்பதைப் புலப்படுத்துகின்றன.

ஹயகிரீவர், குபேரர், கணபதி போன்ற இந்து தெய்வங்கள் பௌத்தர்களாகி,போதிசத்வர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை மற்ருெரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சைவமும் வைணவமும்

பரந்த மனப்பான்மை

குப்தர்கள் காலத்தில் ஊக்கமும் ஆக்கமும் பெற்ற பிராமண சமயம் சிவனையும் விஷ்ணுவையும் வழிபடும் இரு பிரிவுகளாகிய சைவம், வைணவம் என்ற இரு கிளைகளாக இடைக்காலத்தில் வளர்ச்சியுற்றது. சிவனை வழிபட்டோர் சைவர்களென்றும் விஷ்ணுவை வழிபட்டோர் வைணவர் என்றும் தங்களை அழைத்துக் கொண்டனராயினும், இவ் விருவருமே மிகுந்த சகிப்புத் தன்மை யுடையவர்களாக, ஏனை இந்து தெய்வங்களையும் வழி படும் பரந்த மனம் பெற்றிருந்தனர். சைவர்கள் விஷ்ணுவையும், வைணவர்கள் சிவனையும் வெறுக்காமல் இரு கடவுளருக்குமே வழிபாடு செய்யும் வழக்கமிருந்தது. ஒரே அரச குடும்பத்தில் வெவ்வேறு தெய்வத்துக்கு முதலிடம் கொடுக்கும் அரசர்களை நாம் காண்கிறேம். சான்ருக, பிரதிகாரப் பேரரசர்களை எடுத்துக் கொள்ளலாம். இரண்டாம் நாகபட்டர், துகிரபோஜர், முதலாம் மகேந்திரபாலர் ஆகியோர் தங்களைப் பகவதி பக்தர்கள் என்று சாசனங்களில் அழைத்துக் கொள்கின்றனர். இரண்டாம் போஜரோ வைணவர் என்று குறிப்பிடப்படுகிருர். இரண்டாம் மகேந்திரபாலர் மகேசுவரரை வழிபட்டவரென்று குறிப்பிடப்படுகிருர். பகவதி பக்தரான மிகிரபோஜர் விஷ்ணுவுக்கு மரியாதை செய்யும் வகையில் ஆதிவராக நாணயங்களை (Adivaraha type of coins) வெளியிட்டார். ராமபத்திரர், மகிபாலர் போன்ற பிரதிகார அரசர்கள் சூரியனை முதற்கடவுளாகக் கொண்டிருந்தனர். அதே சமயம், மகிபாலரது முத்திரையில் பகவதியின் உருவம் மையத்தில் பொறிக்கப்பட்டது.

இடைக் காலத்திய இந்து அரசர்களின் சமயப் பொறைக்கு இதுபோல் எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பிரதிகாரர்களைப் போலவே காகதவாலர்களும் பிராமண சமயத்தைத் தழுவியவர்களாக இந்துக் கடவுளரையே வழிபட்டனர். ‘பரம மகேசுவரர்கள்’ என்பது அவர்கள் புனைந்து கொண்ட பட்டம். ஆயினும், அவர்களது சாசனங்களனைத்தும் லக்ஷ்மி, தாமோதரர் (கணேசர்; விஷ்ணு அல்லர்) ஆகிய இரு கடவுளரின் அனுக்கிரகத்தைக் கோரும் செய்யுளுடனேயே துவங்குகின்றன. மேலும், விஷ்ணுவின் சின்னங்களான

கருடன், சங்கு ஆகியவை அவர்களது முத்திரைகளில் இடம் பெற்றுள்ளன.

சைவ சமயம்

கி.பி. ஏழாம் நூற்றுண்டுக்கும் பதினென்ரும் நூற்ருண்டுக்கு மிடையிலான இக் காலத்தில் சைவ சமயம் இந்தியாவின் தலையாய சமயமாக வளர்ச்சியுற்றது. வட இந்தியாவைச் சேர்ந்த பல அரச குடும்பங்கள் சைவத்தைத் தழுவியிருந்தன. ஆயினும், சைவ சமயமானது ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமான தன்மைகளைப் பெற்றுப் பல கிளைகளைக் கொண்டதாக இருந்தது. சிவனை வழிபட்டவர்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் வெவ்வேறு விதமான தத்துவத்தையும் கோட்பாடுகளையும் உருவாக்கினர். எனவே, சைவம் என்பது இடத்துக்கிடம் மாறுபட்டதென்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

சங்கரர்

இக் காலத்தில்தான் சைவ ஆசாரியர்களுள் மிகப் பெரியவரான சங்கராசாரியர் (ஆதிசங்கரர்) தெற்கில் சேரநாட்டில் அவதரித்தார். கி.பி. 788-ல் வடக்குத் திருவாங்கூரில் தோன்றியவரென்று கருதப்படும் சங்கரர் இந்தியா முழுவதிலும் **அத்வைத வேதாந்தத்தின்** அடிப்படையில் புதிய தெம்பூட்டப் பெற்ற சைவ சமயத்தைப் பரப்பினுர். முப்பத்திரண்டே ஆண்டு வாழ்ந்த இந்த யோகி, தமது குறுகிய வாழ்வில் இந்தியா முழுவதும் கால்நடையாகவே சென்று தமது தத்துவத்தைப் பரப்பி, அச் செயலைத் தொடர்ந்து செய்வதற்கெனப் பல்வேறு ஊர்களில் மடங்களை நிறுவினுர். அவ்வாறு நிறுவப்பட்ட மடங்களுள் முக்கியமானவை காஞ்சி, பூரி, சிருங்கேரி, துவாரகை, பத்திரிநாத் ஆகிய இடங்களிலுள்ளன. பிரம்ம சூத்திரங்கள், முக்கியமான உபநிடதங்கள், பகவத் கீதை போன்றவற்றுக்குப் பாஷியங்கள் எழுதியதோடு, 'உபதேச சாகஸ்ரீ' போன்ற நூல்களையும் இப் பெரியார் இயற்றினுர். சிவனைப்பற்றிய பல துதிப்பாடல்கள் இவரால் இயற்றப்பட்டன. உஜ்ஜெயினியில் பாசுபதாசாரியர் ஒருவரையும், அதேபோல் மற்ற இடங்களில் மாறுபட்ட சைவத் தலைவர்கள் பலரையும் சங்கரர் வாதுகளில் வென்ருர். காஷ்மீரத்துக்கும் இவர் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. சைவ சமயத்துக்குப் புத்துயிரூட்டிய ஆசாரியர்களுள் தலைசிறந்தவர் இவரே.

காஷ்மீரத்துச் சைவம்

காஷ்மீரத்தில் ஆதியிலிருந்தே சிவ வழிபாடும் லிங்க வழிபாடும் இருந்தனவென்பதை ராஜதரங்கிணிமூலம் நாம் நன்கு

அறியலாம். அசோகர்கூட, 'சிவ அசோகேசுவரர்' என்ற பெயரில் இரு சிவாலயங்களைக் கட்டினாரென்று தெரியவருகிறது. கி.பி. ஆறும் நூற்றாண்டில் காஷ்மீரத்தையாண்ட ஹூணரான மிகிரகுலர்கூட, காஷ்மீர மக்களைத் திருப்தி செய்யும் வகையில், ஸ்ரீநகரில் மிகிரேசுவரர் என்ற பெயரில் சிவனுக்கு ஆலய மொன்றைக் கட்டினாரென்று தெரிகிறது. கார்க்கோட வம்சத்தைச் சேர்ந்த பலர் சிவனை வழிபடுபவர்களாகவே யிருந்தனர். லலிதாதித்தியர், அவரது தாயாரான நரேந்திர பிரபா ஆகிய இருவரும் பல சிவாலயங்களைக் கட்டினர். உத்பல வம்சத்து அரசர்களும் சைவத்தையே ஆதரித்தனர். அவந்தி வர்மன், சங்கரவர்மன் போன்ற அரசர்களும், அவர்களின் மனைவிமார்களும் அமைச்சர்களும்கூட இவ்வாறே பல ஆலயங்களைக் கட்டினர். அடுத்து ஆட்சிபுரிந்த பல அரச வம்சங்களும் இதுபோலவே சைவத்துக்குப் பல வகையிலும் ஆதரவு நல்கின. காஷ்மீர அரசர்களால் கட்டப்பட்ட பல சிவாலயங்களும் முஸ்லிம்கள் ஆட்சி செலுத்திய காலத்தில் அழிந்தனவாயினும், ஸ்டீன் போன்ற அறிஞர்கள் அவற்றின் அடையாளங் கண்டு கூறியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

ஆரம்பகாலக் காஷ்மீர சைவம் பாசுபத (Pasupata) வகையைச் சேர்ந்தது. 'சிவாகமங்களின் தந்தை' யென்று கருதப்படும் சிவஸ்ரீகண்டர் என்பவரால் பாசுபதத் தத்துவம் தோற்றுவிக்கப் பட்டதென்று மகாபாரதத்தில் கூறப்படுகிறது. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அத்வைதத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு திரிக சாத்திரம் (Trika Sastra) என்ற பெயரில் காஷ்மீர சைவம் புதிய வடிவம் பெற்றது. வசுகுப்தர், கல்லாடர் போன்றோரால் இத் தத்துவமானது விளக்கப்பட்டது. சிவனை மட்டுமே ஒரே தெய்வமாகக் கொண்டு மற்றத் தெய்வங்களை மறுக்கும் தீவிரமான ஒருமை வாதத்தைக் (Monism) காஷ்மீர சைவர்கள் வகுத்தனர். இத் துறையில், அபிநவ குப்தரால் கி.பி. 991 முதல் கி.பி. 1015ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இயற்றப்பெற்ற 'பரமார்த்த சாரம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

குஜராத்தில் சைவம்

குப்தர்கள் காலத்தில்தான் பல புராணங்கள், குறிப்பாக, வாயு புராணம், மத்சய புராணம் முதலியன இறுதி வடிவம் பெற்றன வென்று தெரிகிறது. இதுவும், குப்தர்களது ஆதரவும் சைவத்தின் வளர்ச்சிக்கு மிகவும் துணைபுரிந்தன. காளிதாசரும் சிவபக்தராகவே இருந்து கந்தரது அவதாரம்பற்றிய புராணக்

கதைகளைக் ‘குமாரசம்பவ’த்தில் இறவாப் புகழுடைய இலக்கிய மாகப் படைத்தார். ஆருவது நூற்றுண்டில் வாழ்ந்த பெருங் கவிஞராகிய பாரவி (Bharavi) கிராதார்ஜுனீயம் என்ற பெரு நூலை இயற்றினுர். இத்தகு பணிகள் சைவ மத வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தன. புஷ்பபூதி வம்சத்தைச் சேர்ந்த பலர், வங்காளத்து அரசரான சசாங்கர், வலபீயிலிருந்து ஆட்சி செலுத்திய மைத்ரகர்கள் ஆகியோர் சைவர்களாகவே யிருந் தனர். குஜராத்தில் சமண சமயம் செல்வாக்குடன் திகழ்ந்த அதே வேளையில் சைவமும் அதற்கீடான செல்வாக்குடனேயே மிளிர்ந்தது. சௌராஷ்டிரத்தில் சோமநாதபுரத்தில் உள்ள சோமநாதர் ஆலயம் மேற்கிந்தியாவிலேயே தலைசிறந்த புண்ணி யத் தலமாகக் கருதப்பட்டது. சௌளுக்கிய அரசர்கள் அனை வருமே சைவர்களாயிருந்து சோமநாதரையே குலதெய்வமாகக் கொண்டிருந்தனர். சோமநாதபுரமும் பாசுபதர்களுக்கு ஒரு மையமாக விளங்கிற்று. பாசுபத ஆசாரியர்களுள் ஒருவரான திரிபுராந்தகர் என்பவர் சோமநாதர் ஆலயத்தையடுத்து மேலும் ஐந்து சிவாலயங்களைக் கட்டினுர். குஜராத்தில் சிவனேடுகூட, அம்பா, காளிகா, துர்க்கா ஆகிய பெயர்களில் சக்தியும் வழி படப்பட்டாள். பாசுபதர்களே சோமநாதர் ஆலயத்தின் தலைமைப் பூசாரிகளாக இருந்துவந்தனரென்பது குறிப்பிடத் தக்கது. பாசுபதர்களோடுகூடக் காபாலிகர்கள், கௌலர்கள் (Kaulas) ஆகிய சைவப் பிரிவுகளும் குஜராத்தில் காணப்பட்டன. சிவனேடுகூட, சூரியன், துர்க்கை ஆகியவையும் வழிபடப் பட்டன. மோதேராவில் (Modhera) சூரியனுக்கு முதலாம் பீமரது காலத்தில் எழுப்பப்பட்ட ஆலயம் இன்றும் உள்ளது. துர்க்கைக் குத் ‘துர்க்கா பூஜை’ என்ற விழா மிகுந்த கோலாகலத்துடன் நடத்தப்பட்டது. ஒன்பது நாட்கள் நீடித்த இப் பெருவிழாவே **நவராத்திரி** என்று அழைக்கப்பட்டது. இந்திர பூஜை நடத்தப் பட்டு, இந்திரனும் வழிபடப்பட்டான்.

பரமாரர்களும் சைவமும்

பரமாரர்களது சாசனங்களனைத்தும் ‘ஓம் நமசிவாய’ என்று துவங்குகின்றன. எனவே, இவர்களுக்கும் சிவனே முதற் கடவு ளாக இருந்தான் என்பதில் ஐயமில்லை. பரமாரர்களது சாசனங் கள் ஹரன், நீலகண்டேசுவரன், மகேசன், சம்பு, பவானிபதி, சோமநாதன், காசிவிசுவேசுவரன், கேதாரேசுவரன் போன்ற பல பெயர்களில் சிவபெருமானைக் குறிக்கின்றன. இந்தியாவில் மொத்தம் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள் உள்ளன என்பது ஐதிகம். அவற்றுள் மூன்று, பரமார அரசுள் இருந்தன. மகா காலர், அமரேசுவரர், ஓங்கார மாந்தாதர் ஆகியவையே அம்

மூன்றுமாகும். உஜ்ஜெயினியிலுள்ள மகாகாலரது ஆலயம் வட இந்தியா முழுவதிலும் இடைக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிற்று. பரமார போஜர் சைவ ஆகமங்களை விளக்குவதற்காகவே 'தத்துவப் பிரகாசம்' என்ற நூலை இயற்றினர். தெளிவாகவும் எளிமையாகவும் ஆகமங்களை விளக்கும் நூலாக நெடுங்காலம் வரை அது போற்றப்பட்டது. ஸ்ரீகண்டன், மகாதேவன் போன்ற பெயர்களால் சிவனும், கிரிஜா, பார்வதி போன்ற பெயர்களால் சக்தியும் பல ஆலயங்களில் வழிபடப்பட்டனர். சிந்துராஜர், வாக்பதி முஞ்சர், போஜர், முதலாம் ஜெயசிம்மர், நரவர்மன் முதலிய பல அரசர்களும் பல்வேறு இடங்களில் சிவனுக்கு ஆலயங்களை எழுப்புவித்தனர். அவ் வாலயங்களுள் பல இன்றும் நிலைத்து நிற்கின்றன. உதயாதித்தியருடைய ஆட்சி மாளவத்தில் சைவத்தின் பொற்காலமாகக் கருதப்பட்டது. அவர் நிறுவிய உதயபுரத்தில் (உதயபூர்) உதயேசுவரர் அல்லது நீலகண்டேசுவர மகாதேவர் என்ற பெயரில் கி.பி. 1059-1080-ல் அழகிய ஓர் ஆலயம் கட்டப்பட்டது. இவரால் கட்டப்பட்ட பல ஆலயங்கள் இன்றும் உள்ளன. நரவர்மன் வைஷ்ணவராக இருக்கக் கூடுமென்று சிலர் கருதுகின்றனர். எனினும், அவரும் சம்புவையும் கார்த்திகேயரையும் வழிபட்டாரென்று அவரது சாசனம் தெரிவிக்கிறது. பாசுபதப் பிரிவைத் துவக்கியவரான லகுலீசர் மாளவத்துக்கு அண்மையிலுள்ள பிருகுகச்சத்திலேயே (புரோச்சில்) பிறந்தாரெனக் கருதப்படுகிறார். பின்னர், சிவனின் அவதாரமாகவே இவர் கருதப்பட்டு, இவருக்கும் ஓரிரு ஆலயங்கள் எடுக்கப்பட்டன. அபு, கிராடு ஆகியவற்றைச் சேர்ந்த பரமாரர்களும் சைவர்களே.

சிவன் லிங்கவடிவில் வட இந்தியா முழுவதிலும் இப்பொழுது வழிபடப்பட்டான். போஜரால் போஜபுரத்தில் கட்டப்பட்ட போஜேசுவரர் ஆலயத்தில் ஏழரை அடி உயரமுள்ள மாபெரும் லிங்கமொன்று அமைக்கப்பட்டது. இன்றும் அதற்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. அதேபோல், உதயபூரிலுள்ள உதயேசுவரர் ஆலயத்திலும் மற்ற இடங்களிலும்கூடச் சிவலிங்கங்களே வைத்து வழிபடப்பட்டன. நடேசன் என்ற பெயரில், கூத்தனாக ஆடும் நிலையில், சிவனது சிலைகள் பல ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பதி, பசு, பாசம் ஆகிய மூன்று சிவ தத்துவங்களையும் உரிய வயதில் உணர்த்தித் தீக்ஷை செய்யும் வழக்கம் அக் காலத்திலேயே தோன்றியிருந்தது. பரமார அரசில் சைவ மடாலயங்கள் பல இடங்களிலிருந்தன. மட்டமயூரப் பாசுபத ஆசாரியர்களின் மிகப் பெரிய மடமொன்று உபேந்திரபுரத்தி லிருந்தது. மிகமிகக் கீர்த்தி மிக்கதாக அது அக் காலத்தில் திகழ்ந்தது.

மற்றப் பகுதிகளில் சைவம்

பரமார அரசர்கள் பகவதி, சூரியன், விஷ்ணு, சிவன் போன்ற பல கடவுள்களை வணங்கினர். சிவனை மட்டுமே வணங்கிய பிரதிகார அரசர் இரண்டாம் மகேந்திரபாலர் ஒருவரே யாவார். யமுனை-கங்கைச் சமவெளியில் சைவம் பத்தாம் நூற்றாண்டு வரையில் நன்கு வேரூன்றவில்லை என்பதையே இது காட்டுகிறதென்று நாம் கொள்ளலாம். அவர்களுக்குப் பின் கனோஜை ஆண்ட காகதவாலர்கள் அனைவருமே சைவர்களாவர். ஜெய்ச்சந்திரர் மட்டும் சிவனுடன்கூட, கிருஷ்ணன், புத்தர் ஆகியோரையும் வழிபட்டார். பிரதிகாரர்கள், காகதவாலர்கள் ஆகிய இரு வமிசத்தினருமே மிகுந்த சமயப் பொறை உடையவர்களாக விளங்கினர்.

சந்தெல்ல அரசர்களில் பலரும் சிவனை வழிபட்டனர். தங்கர் (Dhanga) சம்புவுக்குப் பெரிய ஆலயமொன்றை எழுப்பினாரென்று அவரது கஜுராஹோக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அக் கல்வெட்டேகூட 'ஓம் நமசிவாய' என்றே துவங்குகிறது. ருத்திரன், சூலாதரன், மகேசுவரன் என்றெல்லாம் சந்தெல்லர்களின் கல்வெட்டில் சிவன் குறிக்கப்படுகிறான். சந்தெல்லர்கள் காலிஞ்சரில் ஸ்ரீநீலகண்டருக்குப் பெரிய ஆலயமொன்றை எழுப்பினர். இன்றும் காலிஞ்சர்க் கோட்டைக்குள் இவ் வாலயம் உள்ளது. சந்தெல்லரின் பல கல்வெட்டுகள் இந்த ஆலயத்தில் காணப்பட்டன. 'பரம மகேசுவர காலஞ்சராதிபதிகள்' என்ற பட்டத்தைப் பல சந்தெல்ல அரசர்கள் சூடியிருந்ததும் அவர்களது சமயத்தை நமக்கு உணர்த்துகிறது. அவர்களது வேறு பல சாசனங்களும் 'நமசிவாய' என்றே துவங்குகின்றன. ஆயினும், பரந்த மனப்பான்மை கொண்ட இந்த மன்னர்கள் லக்ஷ்மியையும் வழிபட்டனர். கஜலக்ஷ்மியின் உருவம் அவர்களது செப்பேடுகள் ஓரிரண்டில் காணப்படுகின்றது. கோரக்பூர் கிளையைச் சேர்ந்த கலச்சூரி அரசர்களும் சைவர்களே. சிவராஜர், சங்கரகானர் போன்ற இவர்களது பெயர்களே இதற்குப் போதுமான சான்றுகளாம். திரிபுரியைச் சேர்ந்த கலச்சூரிகளில் பலரும்கூடச் சிவனை வழிபட்டனர். முதலாம் யுவராஜர் மட்ட மயூரப் பிரிவைச் சேர்ந்த சைவப் பெரியாரான பிரபாவ சிவர் என்பவரை வேறு எங்கிருந்தோ தம் நாட்டுக்கு வருமாறு செய்து ஒரு மடாலயத்தில் தலைவனாக்கினாரென்று ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சத்பாவ சம்பு என்ற மற்றொரு சைவ ஆசாரியரும் இம் மன்னரால் ஆதரிக்கப்பட்டார். மட்டமயூரப் பிரிவைச் சேர்ந்த சைவத் துறவிகள் சிலர் இரண்டாம் யுவராஜரின் காலத்தில் பில்ஹரியில் (Bilhari) கல்வெட்டொன்றைச் செதுக்கினர்.

இக் கல்வெட்டு அக் கலச்சூரி வம்சத்தின் வம்சாவளியைத் தருவ தோடு, அவ் வம்சத்து அரசர்களால் மரியாதை செய்யப்பட்ட சைவ ஆசாரியரின் பெயர்களையும் தெரிவிக்கிறது. பல சிவா லயங்களுக்கு இந்த வம்சத்து மன்னர்கள் நிறைய மானியங்களை அளித்துள்ளனர். சிவனோடுகூட, பிரமனையும் இவர்களில் ஓரிருவர் வழிபட்டனர். சில கல்வெட்டுகள் 'ஓம் பிரமனே நம' என்று துவங்கி, சிவனைத் துதிக்கும் செய்யுள்களைக் கொண் டுள்ளன.

சாகம்பரிச் சாகமானர்கள் சிவனையும் கௌரியையும் துதித் தனர். மூன்றும் பிருதிவிராஜரது தந்தையான சோமேசுவரரது நாணயங்களில் ஒரு பக்கம் நந்தியின் உருவம் காணப்படுகிறது. அதே சமயம் சில சாகமான அரசர்கள் பார்சவ நாதர் போன்ற சமணத் தீர்த்தங்கரர்களுக்கும் மரியாதை செய்தனரென்பது சில கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகிறது. குகில அரசர்கள் உதயபூருக்கருகிலிருந்த ஏகாலிங்கர் (ஏகாலிங்காஜி) என்ற தெய்வத்தையே தமது குலதெய்வமாகக் கொண்டிருந்தனர் என் பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேடபாடத்துக் குகிலர்களின் நாணயங்கள் சிலவற்றில் லிங்கம், திரிசூலம், நந்தி ஆகியவை காணப்படுகின்றன. அதே சமயம் விஷ்ணுவுக்கும் இவர்கள் ஓரிரு ஆலயங்களை எழுப்பியுள்ளனர். அவர்களது பரந்த மனப் பாங்கையே இது உணர்த்துகிறது.

வைணவ சமயம்—வளர்ச்சி

குப்தர்கள் காலம் முதல் வைணவ சமயம் வட இந்தியாவில் பற்பல அரசர்களின் ஆதரவைப் பெறத் துவங்கிற்று. துவக்கத் தில் இது 'பாகவத சமயம்' என்றழைக்கப்பட்டது. இரண்டாம் சந்திர குப்தரும், அவருக்குப் பின் ஆட்சிபுரிந்த குப்த அரசர் களும் 'பரம பாகவதர்கள்' என்ற விருதினைச் சூட்டிக் கொண்ட னர். கருட துவஜத்தைத் தமது சின்னமாகச் சமுத்திர குப்தர் மேற்கொண்டார். குப்தர்களுக்குப் பின் ஆட்சி புரிந்த பல அரச குடும்பங்கள் பரம பாகவதர்கள், பரம வைஷ்ணவர்கள் என்றெல்லாம் தங்களை அழைத்துக் கொண்டன. குப்தர்கள் காலத்திலேயே விஷ்ணுவின் அவதாரங்கள்பற்றிய புராணக் கதைகள் உருவாக்கப்பட்டன. 'சதபத பிராமணம்' போன்ற நூல்கள் வாமன அவதாரம், வராக அவதாரம், மத்சய அவ தாரம், கூர்ம அவதாரம் ஆகியவைபற்றிக் குறிப்பிட்டன. இதன் பின்னர், நரசிம்ம அவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதாரம், கிருஷ்ணவதாரம், புத்தாவதாரம், கல்கி அவ தாரம் ஆகிய ஆறும் சேர்க்கப்பட்டுத் தசாவதாரங்கள் பூர்த்தி

அடைந்தன. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த காஷ்மீரக் கவிஞர் க்ஷேமேந்திரர் 'தசாவதார சரிதம்' என்ற நூலை எழுதினார். புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்பது மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்பதை அந் நூல் தெளிவாகக் காண்பிக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்தில் வாழ்ந்த ஜெயதேவரும் தாமியற்றிய 'கீத கோவிந்த'த்தில் இந்தப் பத்து அவதாரங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தசாவதாரக் கதைகள் முழு வடிவம் பெற்றுவிட்டன என்பது நன்கு தெரிகிறது. குப்தர்களது ஆதரவு பெற்ற வைணவ சமயம் இந்த அவதாரக் கதைகளின் துணையோடு வட இந்தியா முழுவதிலும் வெகு வேகமாகப் பரவிற்று.

பிரதிகாரர்களின் பிரதேசத்தில் விஷ்ணுவுக்கு ஆலயங்கள் எடுக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. பிரதிகாரர்களது சாசனங்களில் விஷ்ணு, நாராயணன், வாமனசுவாமி, சக்கரசுவாமி, திரிபுவனசுவாமி, முராரி போன்ற பல பெயர்களால் இக் கடவுள் குறிப்பிடப்படுகிறார். நாகபட்டர், இரண்டாம் போஜர் ஆகிய இரு பிரதிகார அரசர்களும் வைணவர்களாகவே இருந்தனர். தேவபாலரும், விஷ்ணுவையே வழிபட்டிருக்கக் கூடுமென்பதற்கான சான்றுகள் உள்ளன. காகதவால அரசர்கள் அனைவரும் சைவர்களாகவே இருந்தனரென்றாலும், ஜெயசந்திரர் மட்டும் கிருஷ்ணனையும் புத்தரையும்கூட வழிபட்டார்.

காஷ்மீரமும் வைணவமும்

காஷ்மீரத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரேயே விஷ்ணு வழிபடப்பட்டாரென்பதை ராஜதரங்கிணி தெரிவிக்கிறது. கார்க்கோட அரசகுலம் விஷ்ணுவைத் தனது இஷ்ட தேவதையாகக் கொண்டிருந்தது. துர்லபவர்த்தனர் 'விஷ்ணு துர்லபசுவாமி' என்ற பெயரிலும், சந்திராபீடர் 'விஷ்ணு திரிபுவனசுவாமி' என்ற பெயரிலும் இரண்டு ஆலயங்களை எழுப்பினர். லலிதாதித்தியரும் விஷ்ணுவுக்குப் பல கோயில்களைக் கட்டினார். வெள்ளியாலும் தங்கத்தாலும் பல விஷ்ணு விக்கிரகங்களை லலிதாதித்தியரும் அவரது மனைவி கமலாவதியும் பிரதிஷ்டை செய்தனர். தலைநகரான பரிகாசபுரத்தில் 'பரிகாச கேசவர்' என்ற பெயரில் விஷ்ணுவுக்கு ஆலயம் கட்டப்பட்டது. கார்க்கோட அரசர்களின் அமைச்சர்கள் பலரும் விஷ்ணுவுக்கு ஆலயங்களை எழுப்பினர். கருடன், ஆதிசேடன் போன்றவையும் இவ்வாலயங்களில் இடம் பெற்றன. உத்பல வம்சத்து

அரசர்களுள் சிலரும் விஷ்ணுவை வழிபட்டனர். 'அவந்தி சுவாமி' என்ற பெயரில் விஷ்ணுவுக்கு அவந்திவர்மன் பல கோவில்களை எழுப்பினுரென்று சொல்லப்படுகிறது. அவரது தம்பிகளும் அமைச்சர்களும்கூட இவ்வாறே செய்தனர். கோகுலங்களும் கட்டப்பட்டன. நான்கு முகம், மூன்று முகம், நான்கு கைகள் முதலிய பல அம்சங்களமைந்த விஷ்ணுவின் சிலைகளும் சிற்பங்களும் காஷ்மீரத்தின் பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அரசி சுகந்தா, அரசர் பார்த்தன், யசஸ்கரர், பர்வ குப்தர், க்ஷேம குப்தர், அரசி திட்டா ஆகிய பலரும் விஷ்ணுவுக்கு ஆலயங்களைக் கட்டினர். அரசி திட்டாவின் தாய்வழிப் பாட்டனுரான சாகி அரசர் பீமர் 'பீமகேசுவரம்' என்ற பெயரில் மிகப் பெரிய ஆலயமொன்றைக் காஷ்மீரத்தில் நிர்மாணித்ததாகக் கல்கணர் தெரிவிக்கிருர்.

ஹர்ஷரின் காலத்தில் புத்தர், சிவன், விஷ்ணு ஆகிய சிலைகள் அழிக்கப்பட்டன. பரிகாச கேசவரது சிலையும் அழிக்கப்பட்டதென்றும், பின்னர் அடுத்த நூற்ருண்டில் உச்சலர் ஆட்சியில் பரிகாச கேசவரது மற்ரெரு சிலை வடிக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்றும் கூறப்படுகின்றன. வைஷ்ணவ மடங்களும் அமைக்கப்பட்டன. 'வைகுந்த மடங்கள்' என்று அவற்றில் சில அழைக்கப்பட்டன.

பரமாரரும் வைணவமும்

பரமாரர்களிடையில் வைணவம் ஓரளவு அதிகமாகவே பரவியிருந்தது என்பது தெரிகிறது. கருடனே அவர்களது சின்னமாக விளங்கிற்று. இரண்டாம் சீயகரது ஹர்சொலாச் செப்பேட்டில் நரசிம்மனுகிய விஷ்ணுவின் அனுக்கிரகம் கோரப்படுகிறது. அவரது மகனுன வாக்பதி முஞ்சர் முராரியை வழிபட்டார். நரவர்மனது நாகபுரிப் பிரசஸ்தியில் விஷ்ணுவின் பல அவதாரங்கள் குறிப்பிடப்பட்டுத் துதிக்கப்படுகின்றன. 'நிர்வாண நாராயணன்' என்ற விருதினை நரவர்மன் புனைந்து கொண்டார். பரமாரர்களது சாசனங்கள் விஷ்ணுவையும் அவரது அவதாரங்களையும் மிகவும் விவரமாகக் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கன. அர்ஜுன வர்மன், தேவபாலர், ஜெய்துகி, இரண்டாம் ஜெயவர்மன் போன்ற மற்றப் பரமார அரசர்களும் கூட விஷ்ணுவுக்கு மிகுந்த மரியாதைகள் செய்தன ரென்பது தெரியவருகிறது. அற்புத மண்டலத்துப் பரமார அரசரான பூரணபாலர் ஹரியை வழிபட்டார். 'ஓம் நமோ நாராயண' என்று இந்த வம்சத்தினரின் சாசனங்கள் சில துவங்குகின்றன. பிரதாபசிம்மர் என்ற அற்புத மண்டலத்து அரசரும் மஹா

விஷ்ணுவையே வழிபட்டார். பரமார அரசில் பல விஷ்ணு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. ஆயினும், விஷ்ணுவைவிடச் சிவனே பரமார அரசில் மட்டுமின்றி, வட இந்தியா முழுவதிலுமே அதிகமாக வழிபடப்பட்டார்.

மற்ற அரசுகளில் வைணவம்

கலச்சூரி அரசர்களில் ஒரு சிலரும் விஷ்ணுவை வழிபட்டனர். காங்கேய தேவர் சிவனையே வழிபட்டாரென்றாலும், அவரது நாணயங்களில் லக்ஷ்மியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. திரிபுரிக் கலச்சூரி வம்சம் விஷ்ணுவின் வழியிலேயே வந்தது என்று யசகர்ணரது கைராச் (Khaira) செப்பேடு குறிப்பிடுகிறது. அச் செப்பேட்டில் காணப்படும் முத்திரையில் கஜலக்ஷ்மியோடு நந்தியின் உருவமும் சேர்ந்து காணப்படுவது வேடிக்கையானது. 'ஓம் நமோ பிரம்மனே' என்று அது துவங்குகிறது. சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மூன்றுக்கும் மரியாதை செய்வது போல் இச் செப்பேடு உள்ளது. இவ்வரசரது ஜபல்பூர்ச் செப்பேடும் இவ்வாறே காட்சியளிக்கிறது.

குஜராத்தின்மீது ஆட்சி புரிந்த சௌளுக்கிய அரசர்களுள் முக்கியமானவரான ஜெயசிம்ம சித்தராஜரின் தோஹத் (Dohad) தூண் கல்வெட்டானது 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்று துவங்குகிறது. ஆதிசேஷனைப் போல ஜெயசிம்மர் உலகத்தைத் தாங்கினாரென்றும் அது குறிப்பிடுகிறது. சோமநாதரை இவர் வழிபட்டாரென்றாலும், இந்துக்களின் வழக்கம் போல விஷ்ணுவையும் இவர் வழிபடத் தவறவில்லை என்பதை இதன்மூலம் உணருகிறோம். சௌளுக்கிய அரசர்கள் பலரும் இவ்வாறே பரந்த மனம் படைத்தவர்களாகவே இருந்தனர். மற்றொரு சௌளுக்கிய அரசரான இரண்டாம் பீமரது ஒரு கல்வெட்டானது உமாபதியோடுகூட லங்கேச-நாராயண அவதாரத்தையும் துதிப்பதாகக் கூறிக்கொள்கிறது. நாராயணனது அவதாரமாகவே பீமபாலர் குறிப்பிடப்படுகிறார். அதே போல, மற்றொரு சௌளுக்கிய அரசரான சாரங்க தேவர் தம் பெயருக்கு ஏற்ப நாராயணன், லக்ஷ்மி ஆகிய தெய்வங்களிடமே அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இருப்பினும், பொதுவாக வட இந்தியாவில் வைணவத்தைக் காட்டிலும் சைவமே மிகவும் வலிமை பெற்றதாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

மற்றக் கடவுள்கள்

முப்பெரும் கடவுளருள் முதலாவதாகச் சிவனுக்கும், இரண்டாவதாக விஷ்ணுவுக்குமே அதிகமாக வழிபாடுகள் நிகழ்த்தப்

பட்டன. பிரமன் மிகவும் செல்வாக்கிழந்து காணப்பட்டார். எங்கோ ஒருசில சாசனங்களில் மட்டுமே இக் கடவுள் துதி செய்யப்படுகிறுர். பிரமனுக்கு ஓரிரு இடங்களில் மட்டுமே ஆலயங்கள் எழுப்பப்பட்டன. சான்ருக, பரமார அரசில் வசந்த்கர், சந்த்ராவதி போன்ற இடங்களில் விஷ்ணுவுக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. மற்றப்படி, பிரமனுக்கென்று தனிப்பட்ட ஆலயங்கள் எதுவும் எழுப்பப்படவில்லை. மற்ற ஆலயங்களில் அவரது விக்கிரகங்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதோடு பிரம்ம வழிபாடு முடிவுற்றது.

சூரியன் பல இடங்களிலும் வழிபடப்பட்டான். பிரதிகாரரது சாசனங்கள் பல்வேறு பெயர்களால் சூரியனைக் குறிப்பிடுகின்றன. பரமார அரசில் பில்சா நகரில் பைல்ல சுவாமி என்ற பெயரில் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில் சூரியனுக்கு ஆலயமொன்று இருந்தது. 'ஓம் நமோ சூரியாய' என்று துவங்கும் இரு கல்வெட்டுகளும் பில்சாவில் காணப்பட்டன. பின்மாலிலும் ஜகத்சுவாமி என்ற பெயரில் சிவனுக்கு ஓர் ஆலயமிருந்தது. ஆண் குழந்தை வேண்டி விஜயசப்தமி தினத்தில் சூரியன் வழிபடப்பட்டானென்று 'சிருங்காரமஞ்சரி கதா' குறிப்பிடுகின்றது. காஷ்மீரத்தில் சூரிய வழிபாடு மிகவும் பரவலாக வழக்கிலிருந்தது. லலிதாதித்தியர் லலிதபுரம் என்ற பெயரில் ஆதித்தனுக்கு ஓர் ஆலயத்தை அமைத்தார். மார்த்தாண்டன் என்ற பெயரில் சூரியனுக்கு மற்ரெரு பெரிய ஆலயத்தையும் இம் மன்னர் நிறுவினுர். அப் பெரும் ஆலயம் இன்றுள்ள இடிந்த நிலையிலும் பார்ப்போர் அனைவரையும் கவரும் தன்மைமிக்கதாக உள்ளது. வேறு காஷ்மீர அரசர்களும் இவ்வாறே சூரியனை வழிபட்டனர்.

மேலும், வட இந்தியாவில் கார்த்திகேயன், கணேசன் போன்ற கடவுள்களும் வழிபடப்பட்டனர். எல்லா அரசுகளிலும் செல்வம், அதிருஷ்டம் ஆகியவற்றின் சின்னமாக லக்ஷ்மி வழிபடப் பட்டாள். பல்வேறு கல்வெட்டுகளிலும் லக்ஷ்மி குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது. லக்ஷ்மி, பகவதி, துர்க்கை, சண்டிகை, சாமுண்டி, அம்பாள், கனகதேவி போன்ற பல பெயர்களால் லக்ஷ்மி வழிபடப்பட்டாள். வாம மார்க்க பக்தர்களால் சக்தியும் பரவலாக வழிபடப்பட்டாள். சைவர்கள் சிவசக்தியைத் துர்க்கை அல்லது பகவதி என்றும், வைணவர்கள் விஷ்ணு சக்தியை 'ஸ்ரீ' அல்லது லக்ஷ்மி என்றும் வணங்கினர். சாவித்திரியும் சரஸ்வதியும் பிரம சக்திகளாகக் கருதப்பட்டனர். துர்க்கை போன்ற தேவதைகளுக்கு உயிர்ப்பலி இடப்பட்டது. சப்தமாதாக்கள் என்ற பெயரில் சக்தியின் வடிவங்கள் வழிபட்

பட்டன. தாந்திரிக சமயத்தின் வளர்ச்சிக்குச் சக்தி வழிபாடே தூண்டுதலா யிருந்தது. சிருஷ்டி, அழிவு, வழிபாடு, முக்தி ஆகியவற்றைப்பற்றி விளக்குவதே தந்திரங்களின் (Tantras) முக்கியமான இலட்சியமாகும். முக்தியை அடைவதற்கு மந்திரங்கள், யந்திரங்கள் (கல்லிலும், உலோகத்திலும், தாளிலும் வரையப்படும் கட்டங்களே யந்திரங்கள்), முத்திரைகள் (கை, விரல்கள் ஆகியவற்றின் அமைப்பு) ஆகியவையும், சாதனைக்கள் (Sadhanas) யோகங்கள் ஆகியவையும் தாந்திரிக சமயத்தில் வலியுறுத்தப்பட்டன. நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட காபாலிகர்கள், கௌலர்கள் (Kaulas) ஆகியோர் தாந்திரிகப் பிரிவைச் சேர்ந்தவர்களே. புண்ணியத் தலங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் யாத்திரை செல்லுதல் இக்காலத்தில் பலராலும் பின்பற்றப் பட்டது.

5. இலக்கியம்

மொழிகள்

வட இந்தியாவில் இக்காலத்தில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி, அபபிரம்சங்கள் (Apabhramsas) ஆகிய மொழிகள் வழக்கிலிருந்தன. சமஸ்கிருத மொழி குப்தர்கள் காலத்துப் பெரும் புலவர்களுக்குப் பின்னர், கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் பாரவி (Bharavi), மாகா (Magha) போன்ற பெரும் புலவர்களைத் தோற்றுவித்த பின், சிறிது சிறிதாகப் பொது மக்களது பேச்சு மொழியாக இல்லாதொழிந்து வெறும் இலக்கிய மொழியாக மாறி வந்தது. பிராகிருத மொழிகள் இதுவரை வெறும் பேச்சு மொழிகளாகவே இருந்து வந்த நிலை மாறி, இக்காலத்தில் இலக்கிய வடிவம் பெற்று, வெகு விரைவில் பல்வேறு பிரதேச மொழிகளுக்குத் தாயாக உருமாறின. பாலி மொழி தனது சீர்குலைவின் இறுதிக் கட்டத்தை இக்காலத்தில் எட்டிவிட்டிருந்தது. முக்கியமல்லாத ஒரு சில பௌத்த நூல்கள் மட்டுமே இம் மொழியில் இப்பொழுது படைக்கப்பட்டன. இலங்கையில் மட்டுமே இம் மொழி மேலும் சிறிது காலம் வலுவுடன் உயிர்பெற்றிருந்தது எனலாம். பிராகிருத மொழி தேச மொழிகளாக, அதாவது பிராந்திய மொழிகளாக வளர்ச்சியுற்று, மராட்டி, வங்காளி, குஜராத்தி, இந்தி போன்ற மொழிகள் தோன்றுவதற்கான ஒரு கட்டத்தை எட்டியிருந்தது. இதுவே அபபிரம்சம் எனப்படுகிறது. அதாவது, பழைய பிராகிருதத்துக்கும் பிற்காலத்திய குஜராத்தி, மராட்டி, வங்காளி, இந்தி போன்ற மொழிகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையே அபபிரம்சமாகும். பிராகிருத மொழி

களின் வளர்ச்சியில் கடைசிக் கட்டமே அபபிரம்சம் என்றும் கூறலாம்.

பரத முனிவரின் 'நாட்டிய சாத்திரம்' என்ற நூல் அக் காலத்தில் இந்தியாவில் நிலவிய மொழிகளைப்பற்றி நமக்குத் தெரிவிக்கின்றது. சமஸ்கிருதம், பிராகிருதம் என்ற இரு பெரும் வகையாக அம் மொழிகளைப் பரத முனிவர் பிரித்தார். பிராகிருதத்தின் ஒரு வகையாகத் தேச பாஷைகள் (தேசிபாஷா) என்பதை அவர் குறித்தார். மாகதி, அவந்தி, பிராச்யம் (Prachya), சௌரசேனி, அர்த்தமாகதி, பால்ஹிக்கா (Balhika) தாக்ஷிணாத்தியா என்ற ஏழு தேசபாஷைகளின் பெயர்களை அவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றைச் சபரர்கள், ஆபீரர்கள், சண்டாளர்கள், சச்சரர்கள் (Sacharas), திராவிடர்கள், ஒட்டரர்கள் (Odras), வனசரர்கள் (Vanacharas) ஆகியோர் பயன்படுத்தினரென்று நாட்டிய சாத்திரம் கூறுகிறது. பிராந்திய மொழிகள் உருவாகி வந்தன என்பதையே இது நமக்கு உணர்த்துகிறது. பிராகிருதத்தையும் அதன் வகைகளான இவ்வேழு மொழிகளையும், பாலியையும்—சுருக்கமாக, சமஸ்கிருதமல்லாத பிற மொழிகள் அனைத்தையும்—அபபிரம்ச மொழிகள் என்று பரத முனிவரும் வேறு பலரும் கருதினர். இவை விபாஷைகள் (இரண்டாந்தர மொழிகள்) எனவும் கருதப்பட்டன. அபபிரம்ச மொழிகள் கி.பி. ஆறும் நூற்றுண்டில் ஓரளவு நன்கு வளர்ச்சியுற்று இலக்கிய மொழியாக உருப்பெற்று விட்டன. அந் நூற்றுண்டில் வாழ்ந்த பாமகர் (Bhamaha), தண்டி (Dandin) ஆகிய இலக்கண நூற் புலவர்கள் சமஸ்கிருதத்துக்கும் பிராகிருதத்துக்கும் இணையான ஒரு மொழியாக அபபிரம்சத்தைக் கருதலாயினர். சமஸ்கிருத நூல்களில் அபபிரம்ச உரையாடல்களும் சொற்களும் நிறையப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

சமஸ்கிருத இலக்கியம்

கி.பி. ஆறும் நூற்றுண்டிலேயே சமஸ்கிருதக் கவிஞர்கள் பொது மக்களது அறிவுக்கு அப்பாற்பட்ட அணிகள், சொற்றொடர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, வெறும் புலவர் மொழியாகவே அதை வளர்க்கத் துவங்கியிருந்தனர். தமது சொற்புலமையை வெளிக்காட்டும் நோக்கத்துடனேயே பல புலவர்களால் வீண் அலங்காரமும் ஆடம்பரமுமிக்க செய்யுள்கள் புனையப்பட்டன. (அவற்றுள் பல உச்சரிக்கவே முடியாவண்ணம் கோக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.) இருப்பினும், அழகும் இனிமையும் எளிமையும் நிறைந்த சமஸ்கிருத நூல்கள் பல

மேலும் ஓரிரண்டு நூற்றுண்டுகள் வரையில் தொடர்ந்து சில கவிஞரால் இயற்றப்பட்டே வந்தன.

நாடகங்கள்

'முத்ரா ராக்ஷசம்' என்ற நாடகத்தை எழுதிய விசாகதத்தர் ஏழு அல்லது எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்திருக்க வேண்டுமென்று பல்வேறு சான்றுகளாலும் கருதப்படுகின்றுர். நந்தர்களை ஒழித்துவிட்டுச் சந்திரகுப்த மௌரியரைப் பாடலிபுத்திரத்தில் அரசராக்குவதற்குச் சாணக்கியர் கடைப்பிடித்த சூழ்ச்சிகளை இந் நாடகம் விவரிக்கின்றது. வரலாற்று நிகழ்ச்சி யொன்றை வைத்து, கதாநாயகி இல்லாமல் மிக நேர்த்தியான நாடகமொன்றைப் புனைவதில் விசாகதத்தர் அபார வெற்றி பெற்று விட்டாரென்றே அனைவரும் கருதுகின்றனர். அவரது தந்தையான பாஸ்கரதத்தர், பாட்டனுர் வாதீசுவரதத்தர் (Vatisvara-datta) ஆகிய இருவரும் எங்கோ குறுநில மன்னர்களாக இருந்தனர். விசாகதத்தரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மற்ருெரு நாடகமான 'தேவீ சந்திரகுப்தம்' என்பது குப்தர் வரலாற்றில் வேறு சான்றுகள் வாயிலாகத் தெரிய வராத ராமகுப்தர், துருவதேவி ஆகியோரைப்பற்றி நமக்கு அறிவித்து வைக்கின்றது. இவரால் எழுதப்பட்ட 'அபிசாரிகா வாஞ்சிதகம்' (Abhisarika-vanchitaka) என்ற இன்ருெரு நாடகத்தின் சில பகுதிகள் போஜர் போன்றேர் எழுதிய ஏடுகளில் மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டுள்ளன.

பீமர் அல்லது பீமதர் (Bhimata) என்பவர் விசாகதத்தருக்குப் பின்பு வாழ்ந்து, ஐந்து நாடகங்களை இயற்றினுர். சந்தெல்ல அரசர் ஹர்ஷரது காலத்தை இவர் சேர்ந்தவராக இருக்கலாமென்று கருதப்படுகிருர் (ஒன்பதாம் நூற்றுண்டு). 'பிரதிபா சாணக்கியர்' (Pratipachanakya) என்ற இவரது நாடகம் முத்ரா ராக்ஷசத்தைப் பின்பற்றியது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவரது நாடகங்களில் பலவகையிலும் சிறந்தது, 'ஸ்வப்ன தசானனம்' (Svapnadasanana) என்பதாம். ஏறத்தாழ இவரது காலத்திலேயே முராரியும் வாழ்ந்தார். மாகிஷ்மதியைச் சேர்ந்த கலச்சூரி அரசர் ஒருவரால் இவர் ஆதரிக்கப் பட்டிருக்கலாமென்பது புலனுகிறது. 'அனர்க்க ராகவம்' (Anargha-Raghava) என்ற இவரது நாடகம் ராமனது கதையைச் சித்திரிக்கிறது. ஏறத்தாழ இதே காலத்தைச் சேர்ந்த சக்தி பத்திரர் என்பவர் 'சூடாமணி' என்ற நாடகத்தை எழுதினுர். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று உறுதியாகத் தெரிய வரும் ஹஸ்திமல்லர் என்ற சமணர் விக்கிராந்த கௌரவம்,

சுபத்ராஹரணம், ஸமிதிலி கல்யாணம் போன்ற எட்டு நாடகங்களையும் ஏராளமான தனிக் கவிதைகளையும் இயற்றியுள்ளார்.

பலவகைப் புலமையும் பெற்று மிகவும் புகழுடன் திகழ்ந்த பெருங் கவிஞராகிய ராஜசேகரர் தர்துகர் (Darduka) என்ற அமைச்சர் ஒருவரின் மகனுவார். பிரதிகார அரசரான மகேந்திர பாலரது குருவாக ராஜசேகரர் இருந்து, அவரது காலத்திலும் அவரது மகனுன மகிபாலரது காலத்திலும் பாலராமாயணம், பால பாரதம் போன்ற நாடகங்களை இயற்றினுர். சாகமான வம்சத்து அரசகுமாரியான அவந்தி சுந்தரி என்பவரை இவர் மணந்து அவரது விருப்பத்துக்கிணங்கப் பிராகிருதத்தில் 'கற்பூர மஞ்சரி' என்ற அருமையான நாடகத்தையும் இயற்றினுர். சைவ சமயத்தினரான இப் புலவர் மகாராஷ்டிரத்தில் பிறந்து, பல்வேறு அரசர்களாலும் போற்றப்பட்டு, பெருங்கீர்த்தி பெற்றவராக விளங்கினுர். க்ஷேமீசுவரர், காஷ்மீரத்தைச் சேர்ந்த க்ஷேமேந்திரர் போன்ற வேறு பல நாடகப் புலவர்கள்பற்றியும் நமக்குத் தெரியவருகின்றது. 'மகாநாடகம்' என்ற பெயரில் கி.பி. 10ஆம் நூற்ருண்டில் ராமாயணம் ஒன்று நாடகக் காவியமாகப் பெயர் தெரியாத ஒரு பெரும் புலவரால் இயற்றப்பட்டது. இது பின்னர்ப் பல புலவர்களாலும் அரசர்களாலும் வெவ்வேறு புதுப்புது வடிவில் வெளியிடப்பட்டது. சோமதேவர் என்பவர் சாகமான அரசர் விசாலதேவரால் ஆதரிக்கப்பட்டு, 'லலித விக்கிரக ராஜ நாடகம்' என்பதனை இயற்றினுர். சௌளுக்கிய அரசரான கர்ணதேவரது காதல் திருமணத்தைப் புகழும் வகையில் 'கர்ணசுந்தரி' என்ற நாடகத்தைப் பில்கணர் எழுதினுர். இவ்வாறு மேலும் பல நாடகங்கள் இக்காலத்தில் புனையப்பட்டன.

காவியங்கள்

சமணர்களும் பௌத்தர்களுமே இக் காலத்தில் முக்கியமான பல காவியங்களை இயற்றினர். அவர்களுள் முக்கியமானவர்கள் சிவசுவாமி என்ற பௌத்தர், ஜினசேனர் என்ற சமணர் ஆகியோராவர். சிவசுவாமி 'கப்பணுபியூதயம்' (Kapphanabhyudaya) என்ற காவியத்தைப் பன்னிரண்டு காண்டங்களில் இயற்றினுர். அரசர் கப்பணர் எவ்வாறு பௌத்தரானுர் என்பதைக் கூறுவதே இக் காவியத்தின் நோக்கம். காஷ்மீரத்தில் அவந்திவர்மனுல் ஆதரிக்கப்பட்டு இவர் வாழ்ந்தார். ஜினசேனரால் இயற்றப்பட்ட 'ஹரிவம்சம்' கி.பி. 783-ல் எழுதி முடிக்கப்பட்டதென அந் நூலிலேயே குறிப்பிடப்படுகிறது. 'பார்சவபியூதய காவியம்' என்ற மற்ருெரு நூலையும் இவர் இயற்றினுர்.

சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கையைக் கூறும் ஆதிபுராணத்தின் முதல் நாற்பத்திரண்டு அத்தியாயங்கள் இவராலேயே இயற்றப்பட்டன. இவரது மாணுக்கரான குணபத்திரர் ஆதி புராணத்தின் தொடர்ச்சியாக ரிஷபர் முதலான தீர்த்தங்கரர்களின் வரலாற்றினை உத்தரபுராணம் என்ற பெயரில் தீட்டினர். லோகசேனர் (Lokasena—கி.பி. 898), ரவிஷேனர் (Ravishena) ஆகிய சமணக் கவிஞர்களும் முக்கியமானவர்கள். ரவிஷேனரின் 'பத்ம புராணம்' கி.பி. 678-ல் இயற்றப்பட்டது. கி.பி. 753-ல் அசகர் (Asaka) என்ற மற்றொரு சமணப் பெரியார் 'வர்த்தமான சரிதம்' அல்லது 'மகாவீர சரிதம்' அல்லது 'சன்மித்திர சரிதம்' என்று பல வகையாலும் அழைக்கப்படும் பெருங்காவியத்தைப் பதினெட்டுக் காண்டங்களில் இயற்றினர். இவரால் வேறு பல நூல்களும் இயற்றப்பட்டன.

காஷ்மீரத்தில் பல காவியங்கள் இப்பொழுது இயற்றப்பட்டன. ஜெயாபீடர், அவந்திவர்மன் ஆகியோரது காலத்தில் ரத்னகரர் என்பவர் 'ஹர விஜயம்' என்ற காவியத்தை இயற்றி, அந்தகன் என்ற அசுரனைச் சிவன் வதம் செய்த கதையினை விவரித்தார். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த அபிநந்தன் என்ற காஷ்மீரக் கவிஞர் 'காதம்பரி கதாசாரம்' என்ற பெயரில் பாணரது காதம்பரியையே ஒரு காவியமாகப் படைத்தார். இக் கவிஞரது முன்னேர்கள் வங்கத்தைச் சேர்ந்தவர்கள். மற்றொரு அபிநந்தர் என்ற கவிஞர் 'ராம சரிதம்' என்ற மற்றொரு காவியத்தை இயற்றினர். இவரும் வங்கத்துடன் தொடர்பு கொண்டவரே.

வரலாற்றுக்குப் பயன்படும் 'நவசாகசாங்க சரிதம்' என்ற ஒரு காவியத்தை இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும். மிருகாங்க குப்தர் என்பாரது மகனை பத்ம குப்தர் அல்லது பரிமளர் என்பாரால் கி.பி. 1000 ஆண்டு வாக்கில் இது எழுதப்பட்டது. மாளவத்துப் பரமார வம்சத்து அரசரான சிந்துராஜர் என்ற நவசாகசாங்கரின் கதையை ஓரளவு இது குறிப்பிடுகின்றது. எனினும், இது பெரிதும் கற்பனை சூழ்ந்த கதையே. போஜர், க்ஷேமேந்திரர், வர்த்தமானர் ஆகியோரால் பத்ம குப்தர் குறிப்பிடப்படுகிறர்.

கனேஜில் பன்னிரண்டாம் நூற்றுண்டில் காகதவாலர்களின் ஆட்சியில் வாழ்ந்த ஸ்ரீஹர்ஷர் 'நைஷத சரிதம்' (நைஷதம்) என்பதை இயற்றினர். நளன்-தமயந்தி கதையைக் கூறும் இந்நூல் அதன் செய்யுளழகு காரணமாக மகாகாவியமாகக் கருதப்படுகிறது. காளிதாசர், பாரவி, மாகர் ஆகியோருக்கிணையான

ஒரு மகாகவியாக ஸ்ரீஹர்ஷர் கொண்டாடப்படுவதற்கு நைஷத சரிதமே காரணமாயிற்று. பதினொன்றாம் நூற்றாண்டில் காஷ்மீரத்தில் அனந்தரது அவையில் பெருங் கவிஞராகிய க்ஷேமேந்திரர் வாழ்ந்தார். 'பாரத மஞ்சரி', 'ராமாயண மஞ்சரி' என்ற இரு நூல்களில் முறையே பாரதம் ராமாயணம் ஆகிய இரண்டையும் இவர் வடித்துத் தந்துள்ளார். இப் புலவர் இயற்றிய 'தசாவதார சரிதம்' விஷ்ணுவின் பத்து அவதாரங்களை விவரிக்கிறது. விஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரமாகப் புத்தர் இதில் வர்ணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. வியாசதாசர் என்றும் க்ஷேமேந்திரர் அழைக்கப்பட்டார். காஷ்மீரத்தில் மங்கர் (Mankha), ஜெயத்ரதர் போன்ற வேறு கவிஞர்களும் இக் காலத்திலிருந்தனர்.

சிலேடைக் காவியங்கள் (சமஸ்கிருதத்தில் சிலேஷ காவியங்கள்) என்ற வகையைச் சேர்ந்த காவியங்கள் பதினொன்றாம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்டன. சந்தியாகரநந்தியின் 'ராம சரிதம்' இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ராமனது கதையைச் சொல்வதுபோல், வங்காளத்தில் இரண்டாம் மகிபாலர் கொல்லப்பட்டு ராமபாலர் தமது அரசைப் பெற்ற கதையினை இது கூறுகிறது. தனஞ்சயர், கவிராஜர் ஆகிய இருவர் 'ராகவ பாண்டவீயம்' என்ற ஒரே பெயரில் தனித்தனியாக இரண்டு காவியங்களை எழுதினர். தனஞ்சயரது காவியம் இடமிருந்து வலமாகப் படித்தால் ராமனது கதையையும், வலமிருந்து இடமாகப் படித்தால் பாண்டவரது கதையையும் கூறுவதாக அமைந்துள்ளது. அதேபோல், கவிராஜரது காவியமும் அமைந்துள்ளது. இதைப் போன்ற மேலும் பல சிலேடைக் காவியங்கள் இக் காலத்தில் எழுதப்பட்டன.

வழக்கமாகப் பிராகிருதத்திலேயே தங்களது ஆகமங்கள் போன்றவற்றினை எழுதிவந்த சமணர்கள் கூடப் புலவர்களிடையில் சமஸ்கிருதம் பெற்றிருந்த மதிப்பினை உணர்ந்து, அம் மொழியினைக் கற்று அதிலேயே தங்களது நூல்களை இக் காலத்தில் இயற்றியமை இங்குக் கவனிக்கத் தக்கது. எனவேதான், சமண சமயக் கதைகள் சமஸ்கிருதக் காவிய வடிவில் இப்பொழுது உருப் பெற்றன. இக் காலத்திய சமஸ்கிருத மகா காவியங்களில் முக்கியமான பலவற்றை இயற்றியவர்கள் சமணர்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 'யசோதர சரிதம்' என்ற பெயரில் கனகசேனர், மாணிக்கிய சூரி ஆகியோர் இரு வெவ்வேறு காவியங்களைப் படைத்தனர். தீர்த்தங்கரர்களின் வரலாற்றைக் கூறும் வேறு பல காவியங்களும் படைக்கப்பட்டன.

கவிதைகளும் செய்யுள்களும்

சிறு சிறு கவிதை நூல்களும் அல்லது செய்யுள்களும்கூட அக் காலத்தில் புனையப்பட்டன. சங்கரரால் எழுதப்பட்ட 'துவன்யலோகம்' (Dhvanyaloka) என்ற தோத்திரப் பாடல் அழகும் சுவையும் மிகுந்ததாகக் கருதப்படுகின்றது. பல சதகங்களும் இப்பொழுது பாடப்பட்டன. மயூரரால் எழுதப்பட்ட 'மயூர சதகம்', பாணரால் எழுதப்பட்ட 'சண்டி சதகம்', ஆனந்த வர்தனரால் எழுதப்பட்ட 'தேவி சதகம்', போன்ற படைப்புகள் இங்குக் குறிப்பிடத் தக்கவை காஷ்மீரத்து அரசர் ஜெயாபீடரின் அமைச்சரான தாமோதர குப்தரால் எழுதப்பட்ட 'குட்டணி மடம்' (Kuttani Mata) என்ற நீதிக் களஞ்சியம் இக்காலத்தைச் சேர்ந்ததே. பல்லதர் (Bhallata) என்பார் சங்கர வர்மனின் காலத்தில் (ஒன்பதாம் நூற்றுண்டு) 'பல்லத சதகம்' என்ற கவிதையை எழுதினுர். சம்பு வகையைச் சேர்ந்த யாப்புகளும் இப்பொழுது இயற்றப்பட்டன. சமணரான சோம தேவரால் பத்தாம் நூற்றுண்டில் இயற்றப்பட்ட 'யஸஸ்திலக சம்பு' (Yasastilakachampu) இதற்கோர் நல்ல உதாரணம். இதே கவிஞரால் இயற்றப்பட்ட 'நீதிவாக்யாம்ருதம்' என்பது அரசனுக்கு நீதி நெறிகளைப் புகட்டும் ஒரு நூலாகும்.

பாடுவதற்கென்றே அமைந்த அழகிய இசைப் பாடல்களைக் கொண்ட 'கீத கோவிந்தம்' என்ற சுவை மிகுந்த சமஸ்கிருத செய்யுள் திரட்டை இயற்றிப் பெரும் புகழ் பெற்ற ஜெயதேவர் 12-ம் நூற்றுண்டில் வங்காளத்தில் லட்சுமணசேனரது அவையில் வாழ்ந்த ஒரு புலவராவார். கிருஷ்ணன், ராதை ஆகியோரின் ஊடல்களை நவரசமும் பொருந்த இனிய சமஸ்கிருதப் பாடல்களில் ஜெயதேவர் வர்ணிப்பது அனைவராலும் பாராட்டப்படுகிறது. பல கவிதைத் திரட்டுகளும் இக் காலத்தில் வெளியிடப்பட்டன. கி.பி. 12-ம் நூற்றுண்டில் 'சுவாக்ஷிதாவலி' என்ற ஓர் அருமையான திரட்டுக் கோவை வெளியிடப்பட்டது. பிற்காலத்தில் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டது என்றுலும், முதன் முதலில் சுமார் 350 பாடல்களை மட்டுமே அது கொண்டதாக இருந்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த நூலை முதலில் தொகுத்தவர் வல்லபதேவராவார். ஸ்ரீதர தாசர் என்பவர் லட்சுமணசேனரது காலத்தில் கி.பி. 1206-ல் 'சதுக்தி கர்ணும்ருதம்' என்ற மற்றேர் அருமையான தொகுப்பினை வெளியிட்டார். 485 புலவர்கள் அல்லது வெளியீடுகளைச் சேர்ந்த 2370 அழகிய பாடல்கள் இதில் இடம் பெற்றிருந்தன. இத்தகைய பல அருமையான பாமாலைத் தொகுப்புகள் இக் காலத்தில் வெளியிடப்பட்டன.

வரலாற்றுக் காவியங்கள்

பத்ம குப்தரது 'நவசாகசாங்க சரிதத்'தைப்பற்றி நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். இது பதினொன்றும் நூற்றாண்டில் எழுதப்பட்டது. காஷ்மீரத்தைச் சேர்ந்த பில்கணர் கல்யாணிச் சாளுக்கிய அரசர் ஆறும் விக்கிரமாதித்தர்பற்றி 'விக்கிரமாங்க தேவசரிதம்' என்ற ஓர் அருமையான மகாகாவியத்தை எழுதி அருங்கீர்த்தி பெற்றது இக் காலத்தில்தான். கல்கணரது ராஜ தரங்கிணி செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட ஒரு வரலாற்று நூல். ராமபாலர்பற்றி ராமசரிதம் இயற்றிய சந்தியாகரநந்தி ராமபாலர் பதவிக்கு வந்தது முதல் மதனபாலர் வரையிலான வரலாற்றினை எழுதினார். பெரும் சமண அறிஞரான ஹேமசந்திரர் 'குமார பால சரித'த்தில் சௌளுக்கிய அரசரான குமாரபாலரது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். சமஸ்கிருதம், பிரா கிருதம் ஆகிய இரு மொழிகளும் கலந்து இவ் வரலாறு எழுதப் பட்டுள்ளதால் இதற்கு 'திவ்யாஸ்ரய காவியம்' என்றும் பெயர் தரப்பட்டுள்ளது. காஷ்மீரத்தைச் சேர்ந்த ஜெயானகரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'பிருதிவிராஜ விஜயம்' மூன்றும் பிருதிவிராஜர் கோரி சுல்தான் ஷிகாபுதீனின்மீது பெற்ற வெற்றி களைப் பாராட்டிப் பாடுகிறது. முற்றுப் பெறாத இப் புத்தகம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் எழுதப்பட்டது. குஜராத்தையாண்ட வாகேல அரசர்களின் அமைச்சரான வாஸ்துபாலரைப்பற்றிக் 'கீர்த்தி கௌமுடி' எனும் தலைப்பில் சோமேசுவரதத்தரும், 'சுக்ரித சங்கீர்த்தனம்' எனும் தலைப்பில் அரிசிம்மரும் எழுதினர். வாஸ்துபாலரது வாழ்க்கை வரலாற்றை அடுத்த நூற்றாண்டுகளிலும் பலர் பாடினர்.

கதை நூல்கள்

செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் பல கதைப் புத்தகங்கள் இக் காலத்தில் இயற்றப்பட்டன. அவற்றுள் முக்கிய மானவை இரண்டு: ஒன்று, குணாத்தியரால் எழுதப்பட்ட 'பிருகத் கதா'; மற்றது, 'பஞ்சதந்திரம்'. பைசாசி மொழியில் எழுதப் பட்டதாகக் கூறப்படும் குணாத்தியரின் மூலநூல் கிடைக்க வில்லை. அதையே காஷ்மீரத்தைச் சேர்ந்த க்ஷேமேந்திரர் பதினொன்றும் நூற்றாண்டில் 'பிருகத் கதா மஞ்சரி' என்ற பெய ரில் சுருக்கமாக எழுதினார். அதே நூற்றாண்டைச் சேர்ந்த சோமதேவர் என்ற மற்றொரு காஷ்மீரத்துப் புலவர் 'கதாசரித் சாகரம்' என்ற பெயரில் சற்று விரிவாக எழுதியுள்ளார். நேப்பாளத்தைச் சேர்ந்த புத்தசுவாமி என்பவர் 'பிருகத்கதா சுலோக சங்ரகம்' என்ற பெயரில் எட்டாம் நூற்றாண்டில் எழுதிய

படைப்பானது தொலைந்துபோன பிருகத் கதையைப் பெரிதும் நிகர்த்துள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர். பாச மகாகவி போன்றோர் பிருகத் கதைகளை அறிந்திருந்தனர். எனவே, கி.பி. முதலாம் நூற்றாண்டு தொட்டே அக் கதை நூல் வடக்கில் இருந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. இதே போல், நெடுங் காலமாக நிலவி வந்த கதைகள் பஞ்சதந்திரமென்ற பெயரில் இக்காலத்தில் உருப்பெற்றன. பிருகத்கதா மஞ்சரி, கதாசரித் சாகரம் ஆகிய வற்றிலும்கூடப் பஞ்சதந்திரக் கதைகள் பல அடங்கியுள்ளன. பஞ்சதந்திரமானது வடமேற்கிந்தியா, வங்காளம், தென் இந்தியா போன்ற இடங்களில் பல்வேறு புதிய புதிய கதைகளைக் கொண்டதாக வெளியிடப்பட்டது. வங்காளத்தில் பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண் டில் நாராயணர் என்பவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'ஹிதோபதேசம்' என்ற நீதிவாக்கியம் பஞ்சதந்திரத்தின் ஒரு புதிய வடிவமேயாகும். 'கதாசரித் சாகரம்', 'பஞ்சதந்திரம்' ஆகியவை பழைய உரைநடை ஆக்கங்களாகும்.

'வேதாள பஞ்சவிம்சதிகம்' என்ற ஒரு கதைப் புத்தகமும் இவ்வாறே நீண்ட நாள் வழக்கிலிருந்தது. காஷ்மீரத்தைச் சேர்ந்த க்ஷேமேந்திரர், சோமதேவர் ஆகியோரும் வேறுபலரும் இதைச் செய்யுள் வடிவிலும் உரை நடைவடிவிலும் தமக்கே உரிய முறையில் பல புதுமைகளோடு மாற்றி எழுதினர். திரிவிக்கிரமசேனன் என்ற ஓர் அரசன் வேதாளம் விடுத்த விடுகதைகளுக்கு விடை கூறியதைப்பற்றியதே இக் கதை. திரிவிக்கிரமசேனனது பெயர் விக்கிரமாதித்தன் என்று பின்னர் மாற்றப்பட்டு, 'விக்கிரமாதித்தன் கதைகள்' தோன்றின.

மருத்துவம்

மருத்துவத் துறையில் முக்கியமான பல சம்ஹிதைகள் ஏற் கெனவே எழுதப்பட்டிருந்தன. அவற்றைத் தொடர்ந்து மாதவ கரர் என்பவர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வாக்கில் 'மாதவ நிடனம்' (Madhava Nidana) என்ற ஒரு நிகண்டை எழுதினார். அனைத்து நோய்களையும்பற்றிய ஓர் ஆகராதி போல் இது காணப்படுகிறது. அந் நோய்களுக்கான சிகிச்சை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தைச் சேர்ந்த பலர் இந் நிகண்டுக்கு வியாக்கியானம் வரைந்தனர். அவ்வளவு சிறந்த படைப்பாக இது கருதப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு 'சித்தயோகம்' அல்லது 'விருந்த மாதவம்' என்ற ஒரு நூல் எழுதப்பட்டது. விருந்தர் என்ற இதன் ஆசிரியர் மாதவ நிடனத்தைப் பின்பற்றி இதை எழுதியதாலேயே இதற்கு

இப் பெயர் ஏற்பட்டது. கி.பி. பத்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவ ராக இவரைக் கருதலாம். குப்தர்கள் காலத்தைச் சேர்ந்த 'தன்வந்திரி நிகண்டு' என்ற ஈடிணையற்ற மருத்துவ சாத்திரம் பற்பல திருத்தங்களுடன் அடுத்த நூற்றுண்டுகளில் பல பதிப்பு களாக வெளியாயிற்று. பழைய நூல் மறைந்து போய்ப் பத்து, பதினொன்றும் நூற்றுண்டுகளில் பதிப்பிக்கப்பட்ட தனவந்திரி நிகண்டே இன்று கிடைப்பதாகும். அமரர் (Amara) என்பவர் இதனைப் பின்பற்றி 'அமர கோசம்' என்ற ஒரு மருத்துவ நூலை இக்காலத்தில் எழுதினுர்.

கி.பி. எட்டாம் நூற்றுண்டில் பாதரசத்தின் உபயோகங்களை இந்திய மருத்துவர்கள் அறிந்திருந்தனர். அதைப்பற்றி நாகார் ஜுனர் என்பவர் 'ரச ரத்ஞகரம்' என்ற அருமையான நூலை எழுதினுர். பாதரசம் கலந்து செய்யப்படும் மருந்துகள் நீண்ட ஆயுள், இளமை முதலியவற்றைத் தருமென்று நம்பப்பட்டது. சாரகர் (Charaka), சுஸ்ருதர் (Susruta) போன்ற மருத்துவ நிபுணர் கள் முற்காலத்தில் எழுதியிருந்த நூல்கள் இப்பொழுதும் தொடர்ந்து ஆராயப்பட்டு வந்தன. சான்ருக, பதினொன்ரும் நூற்றுண்டில் வங்காளத்தில் வாழ்ந்த சக்கரபாணிதத்தர் என்ப வர் சாரகரது நூலுக்கு 'ஆயுர்வேத தீபிகை' என்ற பெயரிலும் சுஸ்ருதரது நூலுக்குப் 'பானுமதி' என்ற பெயரிலும் இரண்டு விளக்க உரைகளை எழுதினுர். இவர் 'சிகிச்சாசார சங்கிரகம்', 'சப்தசந்திரிகை', 'திரவிய குண சங்கிரகம்' போன்ற வேறு பல மருத்துவ ஏடுகளையும் எழுதினுர். இதே நூற்றுண்டைச் சேர்ந்த சுரேசுவரர் அல்லது சுரபாலர் என்பவரும், அவரது தந்தை, பாட்டனுர் ஆகியோரும் ராமபாலர், கோவிந்தசந்திரர் போன்ற பால அரசர்களுக்கு மருத்துவர்களாயிருந்தனர். சுரேசு வரர் 'சப்தபி ரதீபா', 'விருக்ஷாயுர்வேதா' என்பன போன்ற பல நூல்களை எழுதினுர். வங்கசேனர், போஜர், மில்கணர் (Milhana), சாரங்காதரர் போன்ற பலரும் பதினொன்ரும் நூற் ருண்டு முதல் பதின்மூன்ரும் நூற்றுண்டுவரை வாழ்ந்து பல ஏடுகளை எழுதினர்.

கணிதம், வானசாத்திரம்

ஸ்ரீதரர் என்ற ஓர் அறிஞர் கணிதசாரம் என்ற நூலினைக் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றுண்டுகளில் எழுதினுர். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மகாவீரர் என்பவர் 'சாரசங்கிரகம்' என்ற மற்ரெரு கணித நூலை எழுதினுர். கனேஜைச் சேர்ந்த பலபத்திரர் கணிதத்தின் ஒரு கிளையாகக் கருதப்பட்ட 'ஜோதிட சாத்திரம்' பற்றிப் பல நுணுக்கங்களை

வரைந்ததை அல்பெருனி வாயிலாக அறிகிறோம். இரண்டாம் ஆரிய பட்டர் என்பவர் இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த கணித மேதைகளுள் ஒருவர். இவரது 'ஆரிய சித்தாந்தம்' என்ற நூல் பாஸ்கராசாரியர், பட்டோத்பலர் போன்ற பல அறிஞர்களாலும் அடுத்த நூற்றுண்டுகளில் எடுத்தாளப்பட்டது. விஜயநந்தி, பட்டோத்பலர், வட்டேசுவரர் முதலிய பல கணித அறிஞர்களைப் பற்றி அல்பெருனி வெகுவாகப் புகழ்ந்து பாராட்டுகிருர். 'கணித ஸ்கந்தம்' என்ற நூல் பட்டோத்பலரால் எழுதப்பட்டது. 'பிருகத் சம்ஹிதை' என்ற நூலுக்கு இவர் எழுதியுள்ள வியாக்கியானத்தின் வாயிலாக இந்தியாவில் கணித சாத்திரம் ஆதியில் வளர்ந்த வரலாறுபற்றி மிகவும் பயனுள்ள செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. இந்த வியாக்கியானமானது கி.பி. 966-ல் எழுதப்பட்டது. கல்யாண வர்மன் என்பார் கி.பி. ஏழாம் நூற்றுண்டில் எழுதிய 'சாராவளி' என்ற நூலையும் பட்டோத்பலர் பல புதிய திருத்தங்களுடன் வெளியிட்டார்.

பதினென்றும் நூற்றுண்டில் ஸ்ரீதரர் என்பவரால் 'திரிசதி' (Trisati) என்ற நூல் வெளியிடப்பட்டது. பெருங்கணித மேதை யென்று கருதப்படும் பாஸ்கராசாரியர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவராவார். 'சித்தாந்த சிரோமணி' என்ற இவரது நூல் பிற்காலத்தில் அனைவராலும் பாராட்டப்பட்டது. இதிலுள்ள லீலாவதி, பீஜகணிதம் என்னும் இரண்டு அத்தியாயங்கள் அனைவராலும் போற்றப்படுகின்றன. இதே நூலிலுள்ள கிரககணிதம் போன்ற அத்தியாயங்கள் வானியலைப் பற்றியன. இடைக்காலத்தில் கணித, வான சாத்திரங்களில் ஈடிணையற்று விளங்கியவர் பாஸ்கராசாரியரே. 'கர்ண குதூகலம்' என்றொரு நூலையும் இப்பெரியார் எழுதினுர். போர்ஜர், சதானந்தர் ஆகியோர் பதினென்றும் நூற்றுண்டில் எழுதிய வானியல் தொகுப்பேடுகள் இரண்டு கிடைத்துள்ளன.

பிராகிருத இலக்கியம்

இந்து சமயத்துக்குச் சமஸ்கிருதமும் பௌத்த சமயத்துக்குப் பாலியும் புனித மொழிகளாக விளங்கினவே போல, சமணர்களுக்குப் பிராகிருதம் விளங்கிற்று. எனவேதான், ஆகமங்கள் போன்ற அவர்களது முக்கியமான படைப்புகளனைத்தும் பிராகிருதத்திலேயே எழுதப்பட்டன. ஆயினும், சமஸ்கிருதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தங்களது ஆகமங்களுக்குச் சமஸ்கிருதத்திலேயே விளக்க உரைகளைச் சமண முனிவர்கள் இப்பொழுது எழுதலாயினர். சமஸ்கிருதம் அறிந்தோரிடையே

சமணத்தைப் பரப்புவதும் ஒரு நோக்கமாய் இருந்திருத்தல் வேண்டும். இவ்வாறு ஆகமங்களுக்குச் சமஸ்கிருத உரை எழுதத் துவங்கிய முதலிரண்டு சமணப் பண்டிதர்கள் சித்தசேன திவாகரும் ஹரிபத்ரருமே யாவர். ஹரிபத்ரர் எட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர்களது வழியைப் பின்பற்றி ஏராளமான உரைகளை எழுதிப் பெரும் புகழ்பெற்ற மற்ருெருவர் கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண்டில், சௌளுக்கிய அரசரான குமாரபாலரது அவையில் வாழ்ந்த பெரும் புலவரான ஹேமசந்திரர் ஆவார்.

அதே சமயம் பிராகிருதத்தை முற்றிலுமாகச் சமணர்கள் கைவிட்டுவிடவில்லை. முன்பு நாம் குறிப்பிட்ட ஹரிபத்ரர் பிராகிருதத்திலும் சிறந்த ஓர் எழுத்தாளராக விளங்கினுர். 'சமராதித்திய கதா', 'தூர்த்தாக்கியானம்' (Dhurtakhyana) ஆகிய இரண்டு நூல்களை இவர் எழுதினுர். இவற்றிலும் இவரது சமஸ்கிருத வியாக்கியானங்களிலும் ஏராளமான பிராகிருதச் சிறு கதைகள் எளிய அழகிய நடையில் கூறப்படுகின்றன. சமராதித்திய கதா என்பது பெரும்பகுதி எளிய உரைநடையிலும் சிறு பகுதி செய்யுள் வடிவிலும் எழுதப்பட்டுள்ளது. சமராதித்தியனுடைய ஒன்பது பிறப்புகளை இது கூறுகிறது. தூர்த்தாக்கியானம் முழுக்க முழுக்கச் செய்யுளாகவே அமைந்துள்ளது. நகைச்சுவை நிறைந்த வேடிக்கைக் கதைகள் இதில் அடங்கியுள்ளன.

'குவலய மாலா' என்ற புகழ்மிக்க நூலும் இக் காலத்தைச் (கி.பி. 778) சேர்ந்ததே. பிராகிருத உரைநடையிலும் செய்யுளிலும் ஒரு சம்பு காவியம் போல உத்யோதனசூரி என்பவர் இதை எழுதினுர். இதில் பதினெட்டுப் பிராகிருத மொழிகள் குறிப்பிடப்படுகின்றன; அவற்றுள் பல இந் நூலிலேயே எடுத்தாளவும்படுகின்றன. நிறைய எடுத்தாளப்படும் பிராகிருத மொழி மகாராஷ்டிரியே. இதுவும் ஒரு கதை நூலே. சமணர்களல்லாத சிலரும் பிராகிருதத்தில் பாடல்களை இயற்றினர். அக் காலத்திய வெளியீடுகள் பலவற்றில் தனிப்பாடல்களாக இவை காணப்படுகின்றன.

சமண மகாராஷ்டிரி

மகாராஷ்டிரப் பிராகிருதம் (Maharashtri) பற்றியும் இங்குச் சிறிது குறிப்பிடுவது அவசியம். பெரிதும் சமணர்களாலேயே இது இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டதால், 'சமண மகாராஷ்டிரி' (Jain Maharashtri) என்றும் இது அழைக்கப்படுகிறது.

கி.பி. மூன்றும் நூற்றுண்டு முதல் பதினென்காம் நூற்றுண்டு வரையில் இது வழக்கில் இருந்தது. இதில் முக்கியமான பல நூல்கள் சமணப் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறு வனவாக உள்ளன. சில கதை நூல்களும் தோத்திரப் பாடல் களும்கூட மகாராஷ்டிரியில் இயற்றப்பட்டுள்ளன. கி.பி. பத் தாம் நூற்றுண்டு முதல் பெரிய கதை நூல்களும் இம் மொழியில் எழுதப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, தானேசுவரர் என்ப வரால் கி.பி. 1038-ல் எழுதப்பட்ட 'சுரசுந்தரி சரியா' (Sura-sundari-Chariya) என்ற நூலாகும். கி.பி. 1082-ல் குணசந்திரர் என்பவர் 'மகாவீர சரிதம்' என்ற பெயரில் மகாவீரரின் முற் பிறப்புப் போன்ற கதைகளை மிக விரிவாக எழுதினுர். கி.பி. 1103-ல் வர்த்தமானர் என்பவர் 'ஆதிநாத சரிதம்' என்ற பெயரில் ரிஷபரது வாழ்க்கை வரலாற்றினை வரைந்தார்.

இக் காலத்தைச் சேர்ந்த சமண அறிஞர்களில் மிகவும் முக்கியமானவர் ஹேமசந்திரர் ஆவார். இவர் கி.பி. 1088-ல் பிறந்து, 1172-ல் காலமானுர். ஜெயசிம்ம சித்தராஜரால் ஆதரிக்கப்பட்ட இப் பெரும் புலவரே அடுத்த அரசர் குமாரபாலர் சமணராக மதம் மாறுவதற்குக் காரணமாயிருந்தார். இவரது 'குமாரபால சரிதம்' என்ற நூல் பிராகிருத இலக்கணத்தை விளக்குகிறது. இந் நூலில் சௌரசேனி, மாகதி, பைசாசி போன்ற பல பிராகிருதக் கிளைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள் ளன. இவரது காலத்தைச் சேர்ந்த ஹரிபத்ரர் பத்தொன்பதா வது தீர்த்தங்கரரான மல்லிநாதரைப்பற்றி 'மல்லிநாத சரிதம்' என்ருெரு நூலை எழுதினுர். இதே காலத்தைச் சேர்ந்த சோமப் பிரபா என்பவர் 'குமாரபால பிரதிபோதம்' என்ற நூலில் சௌளுக்கிய வம்சத்தின் பல அரசர்களைப்பற்றியும் குமார பாலரைப்பற்றியும் எழுதியுள்ளார்.

அபபிரம்ச இலக்கியம்

அபபிரம்ச மொழியில் சமணர்களும் பௌத்தர்களும் இடைக் காலத்தில் பல பாடல்களை இயற்றினர். இத்தகைய தனிப் பாடல்கள் பிற்காலத்தில் திரட்டுகளாக வெளியிடப்பட்டன. சமணரான சுவயம்புதேவர் தமக்கே உரிய முறையில் ராமா யணத்தையும் மகாபாரதத்தையும்கூட அபபிரம்சத்தில் நீண்ட நூல்களாக வெளியிட்டார். இவரது ராமாயணம் 'பௌமசரியு' (Bauma-Chariu) என்றும், மகாபாரதம் 'ஹரிவம்ச புராணம்' என்றும் அழைக்கப்பட்டன. இவ்விரு நூல்களும் முற்றுப்

பெருமல் விடப்பட்டன என்றும், இவரது மகனை திரிபுவன சுவயம்புவே இவற்றை முடித்துவைத்தாரென்றும் தெரிகிறது. அபபிரம்சக் கவிஞர்களில் முதல்தரமானவராகக் கருதத் தக்கவர் புஷ்பதந்தர் என்பவராவார். இவர் ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கிருஷ்ணரது காலத்தில் மானிய கடகத்தில் வாழ்ந்தாரென்றாலும், இவரைப்பற்றி இந் நூலில் குறிப்பிடுவது தவருகாது. இவரது 'மகாபுராணம்', 'நயகுமார சரியு' (Nayakumara-Chariu) போன்ற நூல்கள் மிகவும் போற்றப்படுகின்றன. ஆதியில் சைவப் பிராமணர்களா யிருந்து, பின்னர்ச் சமணர்களான பெற்ருேருக்குப் பிறந்த புஷ்பதந்தர் எங்கோ ஒரு குறுநில மன்னனின் அவையில் சிறிது காலம் இருந்த பின், ஏதோ ஒரு துயர நிகழ்ச்சி காரணமாக அங்கிருந்து மானிய கடகத்துக்குக் குடிபெயர்ந்தார். அங்குக் கிருஷ்ணரது அமைச்சர் பரதரது ஆதரவின்கீழ் வாழ்ந்துவந்த காலத்திலேயே மேலே குறிப்பிடப்பட்ட நூல்கள் எழுதப்பட்டன. மூன்றும் கிருஷ்ணருக்குப் பின் அவரது தம்பியான கொட்டிக (Khottiga) தேவரது காலத்தில் கி.பி. 972-ல் பரமார அரசர் இரண்டாம் சீயகர் மானிய கடகத்தைக் (அல்லது மானிய கேதம்) கைப்பற்றி அழித்ததையும் இவரது செய்யுளொன்று குறிப்பிடுகிறது.

கனகாமரர் (Kanakamara), தனபாலர், ஹரிபத்ரர் போன்ற பல்வேறு புலவர்கள் எழுதிய காவியங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. செய்யுள் வடிவில் பல சிறுகதை நூல்களும் அபபிரம்ச மொழியில் வெளியிடப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, ஸ்ரீசந்திரரால் பத்து அல்லது பதினென்றும் நூற்றுண்டில் எழுதப்பட்ட 'கதாகோசம்' என்னும் நூலாகும். இவ் வாசிரியரும் கவிஞரே. நீதிநெறி புகட்டுவதற்கென்றே இக் கதைகள் எழுதப்பட்டன. இருபத்துமூன்று தீர்த்தங்கரர்களின் வாழ்க்கையைப் 'பார்சவ புராணம்' என்ற பெயரில் பத்மகீர்த்தி என்பவர் இக் காலத்தில் எழுதினர். யோகிசந்திரர், லக்கம தேவர் போன்ற வேறு பலரும் சிறந்த சமண எழுத்தாளர்களாக விளங்கினர். ஹரிபத்ரர் பிராகிருதத்தில் மல்லிநாத சரிதத்தை எழுதினரென்பதை முன்பே குறிப்பிட்டோம்.

மராட்டி, வங்காளி

கி.பி. பத்தாம் நூற்றுண்டு முதல் மராட்டி மொழியானது இலக்கிய வடிவம் பெறத் துவங்கிற்று. முதலாவது முக்கிய மராட்டிய நூலானது 'விவேகசிந்து' என்ற தத்துவ நூல். இது முகுந்தராஜர் என்பவரால் கி.பி. 1190-ல் வெளியிடப்பட்டது,

இதற்கு முன்பே எழுதப்பட்ட மராட்டிச் செய்யுள்களும் பாடல்களும் பல நூல்களில் தனிப்பாடல்களாக அங்குமிங்கும் காணப்படுகின்றன. ஏறத்தாழ அதே சமயத்தில் வங்காளி மொழியும் கூட இலக்கிய மொழியாக வடிவம் பெற்றது. ஆயினும், இவற்றின் முக்கியமான இலக்கியப் படைப்புகளனைத்தும் ஓரிரு நூற்றாண்டுகளுக்குப் பிந்தியவையே.

பிற்சேர்க்கை
(Annexure)

ராஜபுத்திரர்களின் பூர்விகம்

36 ராஜபுத்திர குலங்கள்

ஹர்ஷரது காலத்துக்கும் இஸ்லாமியர்களின் ஆட்சிக் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வட இந்தியாவில் அரசோச்சி வந்த பல அரச வம்சங்களும் ராஜபுத்திர குலத்தைச் சேர்ந்தவையெனக் கருதப்படுகின்றன. கல்கணரது ராஜதரங்கிணியும் அதற்குச் சற்றுப் பிந்திய சந்த் பர்தாயின் பிருதிவிராஜ ராசோ என்ற நூலும் மொத்தம் முப்பத்தாறு ராஜபுத்திர குலங்களின் பெயர்களைப் பட்டியலிட்டுத் தருகின்றன. இப் பட்டியலில் காணப்படும் எல்லாக் குலங்களும் அரச குலங்களாக விளங்கின என்று அவை கூறுகின்றன. அவற்றுள் முக்கியமான சில குலங்கள் கீழ்வருமாறு: பரமாரர், சாகமானர், சௌளுக்கியர், குகிலர், பிரதிகாரர், கலச்சூரிகள், சாபோட்கதர்கள் (Chapotkata), ராத்தோர்கள் ஆகியோர். சந்த் பர்தாயைப் பின்பற்றிப் பிற்காலத்திய ராஜபுத்திர நூல்களும் முப்பத்தாறு ராஜபுத்திர குலங்களைப்பற்றி எழுதலாயின. ஆனால், பல்வேறு நூல்களிலும் தரப்படும் ராஜபுத்திர குலங்களின் பெயர்கள் நூலுக்கு நூல் வேறுபடுகின்றன. சந்த்பர்தாயின் காலத்தைச் சேர்ந்த குமாரபால சரிதமும் இத்தகைய பட்டியலொன்றைத் தருகிறது. ஆனால், இப் பட்டியலில் முப்பத்தாறுக்குக் குறைவான பெயர்களே உள்ளன. இவற்றையெல்லாம் வைத்து ஆராய்ச்சி செய்த கர்னல் டாட் (Tod) பல பெயர்களை நீக்கிவிட்டு, முப்பது பெயர்களைக் கொண்ட பட்டியலை மட்டுமே வரைந்தார்.

இப் பட்டியலிலும்கூட, கோட்டபாலர், ராஜபாலர், தன்யபாலர், கவிநீசர், அனங்கர், யவ்திகர் (Yautika), காமாக்ஷர் (Kamasha) போன்ற பல குலங்கள்பற்றி எவ்விதமான வரலாற்றுச் சான்றும் நமக்குக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில், சந்தெல்லர், கச்சபகாடர் போன்ற ராஜபுத்திர அரச குலங்களின் பெயர்கள் அப் பட்டியலில் காணப்படவில்லை. எனவே, இப் பட்டியலை முற்றிலும் ஆதாரபூர்வமானது என்று ஏற்றுக் கொள்வதில் சில சிக்கல்கள் உள்ளன. இப் பட்டியலில் ஹுலா (Hula)

என்ற ஒரு பெயர் காணப்படுகிறது. ஹூணர் (Huna) என்பதே இங்குத் தவருக இவ்வாறு தரப்பட்டுள்ளது என்று மோகன்லால் பாண்டியா (Mohanlal Pandya) போன்ற சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஹூணர்களும் ராஜபுத்திர குலங்களின் பட்டியலில் இடம் பெற்றுவிட்டதற்கு இதையும் ஓர் ஆதாரமாகக் கொண்டு, ராஜபுத்திரர்கள் ஹூணர்களோடு சேர்ந்து இந்தியாவுக்கு வந்த அன்னியர்களே என்று ஒரு சாரார் வாதிக்கலாயினர்.[1]

பிருதிவிராஜரது அவையில் வாழ்ந்த சந்த் பர்தாய் (Chand Bardai) என்பவரால் 'பிருதிவிராஜ ராசோ' என்ற காவியம் புனையப்பட்டதாயினும், பிற்காலத்தில் பல்வேறு இடைச் செருகல்கள் இதில் நுழைக்கப்பட்டன என்று கவிராஜ சியாமல்தாஸ் போன்ற ஆராய்ச்சியாளர்கள் கருதினர். வின்செண்ட் ஸ்மித் போன்றவர்களும் இவ்வாறே கருதினர். பிருதிவிராஜரது காலத்து நிகழ்ச்சிகள்பற்றிக்கூட அந் நூலின் இன்றைய வடிவில் தவருன செய்திகளும் ஆண்டுகளும் இடம்பெற்றிருப்பதுடன், ராஜபுத்திர அரச குலங்கள்பற்றியும் ஆதாரமற்ற சில செய்திகள் காணப்படுகின்றன. இவையனைத்தும் பிற்காலத்திய இடைச் செருகல்களுக்குப் போதுமான சான்றுகளாகும் என்பதில் ஐயமில்லை. அந் நூலில் தரப்படும் ராஜபுத்திர குலங்கள்பற்றிய பட்டியலும்கூடப் பிற்காலத்தில் பலவிதமான மாறுதல்களுக்கு உள்ளாகி யிருக்கலாமென்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

'ராஜபுத்திரர்' என்ற சொல்லின் பொருள்

'ராஜபுத்திரர்' என்ற சொல் அரசகுமாரர்கள் அல்லது அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பொருளில் பண்டை நூல்களில் காணப்படுகின்றது. ராஜபுத்திரர் என்ற சொல் ஆண்பாலருக்கும் ராஜபுத்திரி என்ற சொல் பெண்பாலருக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதே சமயம், க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ராஜபுத்திரர் என்ற சொல் வழங்கப்பட்டு வந்ததை மகாபாரதம் போன்ற நூல்களில் காணலாமென்று C. V. வைத்தியா போன்ற அறிஞர்கள் சுட்டிக்காட்டுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கி.பி. ஏழாம் நூற்றுண்டைச் சேர்ந்த பவபூதி க்ஷத்திரிய குலப் பெண்ணுகிய கௌசல்யாவை 'ராஜபுத்திரி' என்ற சொல்லால் குறிப்பிடுகிருர். அதே நூற்றுண்டைச் சேர்ந்த பாணபட்டரும் க்ஷத்திரிய வீரர்களை ராஜபுத்திரர் என்ற சொல்லால் குறிப்பிடுகின்ருர். எனவே,

[1] For the list of Rajput Clans refer: (1) Tod, *Annals and Antiquities of Rajasthan*; (2) C. V. Vaidya, *History of Mediaeval Hindu India.*

உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள் ராஜபுத்திரர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர் என்பது தெளிவு.

எனினும், ராஜஸ்தானத்தை அல்லது ராஜபுதனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே ஏன் ராஜபுத்திரர்கள் என்று அழைக்கப் பட்டனர் என்ற கேள்விக்கு விடை காணுவதற்குப் போதுமான சான்றுகளில்லை. மற்றப் பகுதிகளைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள் பலரும் இந்து சமயத்தைக் கைவிட்டுப் பௌத்தம் போன்ற பிற சமயங்களைத் தழுவிய வேளையில், ராஜஸ்தானத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள் மட்டுமே தொடர்ந்து இந்துக்களாகவே இருந் தனரென்றும், எனவேதான் உண்மையான ஆளும் வகுப்பைச் சேர்ந்த தூய்மையான க்ஷத்திரியர்கள் தாங்களே என்று அறி வித்துக் கொள்ளும் வகையில் ராஜபுத்திரர்கள் என்ற பெயரை இவர்கள் சூடிக் கொண்டிருக்கலாமென்றும் C. V. வைத்தியா கருதுகின்றார். ராஜபுதனத்தைச் சேர்ந்த ரர்ஜபுத்திர அரச வம் சங்களனைத்தும் இந்து க்ஷத்திரிய வம்சங்களேயென்று யுவான் சுவாங் குறிப்பிட்டதையும் இவர் சுட்டிக் காட்டுகிறார். 'பழைய இந்து சமயத்திலிருந்து பிறழாத தூய்மையான இந்து க்ஷத்திரி யர்கள் என்பதே ராஜபுத்திரர் என்பதன் பொருள்' என்பது இந்த ஆராய்ச்சியாளரின் முடிவு. இதற்கு மேல் ராஜபுத்திரர் என்ற சொல்லின் பூர்விகம், முழுப்பொருள் ஆகியவைபற்றி மேலும் உறுதியாக எதையும் கூறுவதற்கில்லை. யுவான் சுவாங் கின் நூலில் இவர்கள் க்ஷத்திரியர்களென்று அழைக்கப்படு கின்றனரேயொழிய, ராஜபுத்திரர்களென்று குறிப்பிடப்படவே யில்லை. பத்து அல்லது பதினொன்றும் நூற்றாண்டுக்குப் பின்னரேதான் ராஜபுத்திரர் என்ற பெயர் இவர்களுக்கு வழங்க லாயிற்று. 'வெளியிலிருந்து வந்து, கி.பி. ஐந்து, ஆறும் நூற்றாண்டுகளில் இந்தியாவுக்குள் புகுந்து, நாளடைவில் இந்து சமுதாயத்தில் கலந்து, க்ஷத்திரியர்களாக மாறிப் போன அன்னியர்களே ராஜபுத்திரர்கள்' என்று டாட், D. R. பந்தர்கார் முதலிய பல அறிஞர்கள் கருதுவதையும் இங்குக் குறிப்பிடுதல் அவசியம்.

ராஜபுத்திரர்கள் அன்னியர்களா ?

ராஜஸ்தானத்துப் பண்டைச் சுவடிகளை ஆராய்ந்து அப் பிரதேசத்தின் வரலாற்றினை முதன் முதலாக வரைவதற்கு முற்பட்டவர் கர்னல் டாட் ஆவார். ராஜபுத்திரர்கள் அன்னியர் களே என்ற கூற்றினை முதன் முதலில் எடுத்துக் கூறியவர் இவரே. டாடின் நூலைப் பின்னர்ப் பதிப்பித்து வெளியிட்டவ ரான வில்லியம் குருக் (W. Crooke) என்பவரும் இதே கருத்தினை

ஏற்றிருந்தார். ராஜபுத்திரர்கள் வேத காலத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர் வழியில் வந்தவர்கள் என்று கூறி, டாடின் கூற்றை மறுப்பதற்குச் சில ஆராய்ச்சியாளர்கள் முன்வந்தனர். இதற்குப் பதிலிறுக்கும் வகையில் கீழ்வரும் கருத்துகளைக் குருக் அவர்கள் தாம் பதிப்பித்த டாடின் நூலின் முன்னுரையில் வெளியிட்டார்:

'ராஜபுத்திர குலங்களில் பல இந்தியாவின்மீது படையெடுத்து வந்த சாகர்கள் (Sakas) அல்லது குஷாணர்கள் ஆகியோரது காலத்தைச் சேர்ந்தவை. மேலும் திட்டவட்டமாகச் சொல்லப் போனால், கி.பி. 480-ல் குப்தப் பேரரசை அழித்த வெள்ளை ஹூணர்கள் (White Huns) காலத்தை அவர்கள் சேர்ந்தவர்கள். பிற்காலத்திய மக்களோடு தொடர்புடைய கூர்ஜரக் குலமானது (Gurjar Tribe) இந்து சமயத்தைத் தழுவிற்று. அக் குலத்தின் தலைவர்களின் வம்சத்திலேயே முக்கியமான ராஜபுத்திர குடும்பங்கள் பிற்காலத்தில் தோன்றின. ஆட்சிபுரியத் தலைப்பட்ட இக் குடும்பத்தினர் தமது செல்வாக்கை விரிவாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன், பிராமண சமயத்தையும் பழக்க வழக்கங்களையும் தழுவலாயினர். அப்பொழுதுதான், மகாபாரதம், ராமாயணம் ஆகிய இதிகாசங்களின் கதாநாயகர்களோடு தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளும் பல கதைகளை இவர்கள் உருவாக்கினர். ராஜபுத்திர வம்சங்கள் சூரியனுடனும் சந்திரனுடனும் தொடர்புடையவை என்ற கதைகள் தோன்றினமை இவ்வாறே'. இதுவே குருக் அவர்களது கூற்றின் சுருக்கமாகும்.

வின்செண்ட் ஸ்மித் அவர்களும் இதையொத்த கருத்தினையே வெளியிட்டார்.[1] 'ராஜஸ்தானத்திலும் மேற்குக் கங்கைச் சமவெளியிலும் புகுந்த அன்னிய குலத்தினர் சுதேச அரசர்களுடன் மோதிய போர்களில் முற்றிலுமாக அழிந்து போகவில்லை. அவர்களில் பலர் மடிந்து போனாலும், வேறு பலர் உயிருடன் எஞ்சியிருந்து இந்திய மக்களோடு கலந்து போயினர். தங்களுக்கு முன்பு இந்தியாவுக்குள் வந்த சாகர்கள், யுவேச்சி (Yue-Chi) போன்றவர்களைப் போலவே இவர்களும் இந்து சமுதாயத்தில் கலந்து இந்துக்களாயினர். இவர்களுள் குறுநில மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் உயர்ந்த சிலரும், அவர்களது வம்சத்தினரும், சுற்றத்தினரும் க்ஷத்திரியர்களெனவும் ராஜபுத்திரர்களெனவும் மற்ற இந்து அரச குடும்பங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஐந்து, ஆறும் நூற்றுண்டுகளில்

[1] V. A. Smith, *Early History of India.*

வட இந்தியாவுக்குள் நுழைந்த பல அநாகரிக அன்னிய குலத்தினரே பிரதிகாரர்கள் அல்லது பரிகாரர்கள் (Parihars) போன்ற பல புகழ்மிக்க ராஜபுத்திர குலங்களாகப் பின்னர் உருவாயினர். அவ்வன்னியர்களில் கீழ்மட்டத்தைச் சேர்ந்த சாதாரண மனிதர்களே கூஜர்கள் (Gujars), ராஜபுத்திரர் களுக்குக் கீழான சாதியினர் போன்ற கீழ் வகுப்பினராக ஆயினர். இவர்களுக்குத் தெற்கில் வாழ்ந்துவந்த சுதேசப் பழங்குடி மக்களும் இதே போல் இந்துக்களாக மாறிப் பரிணும மடைந்தனர். கோண்டுகள் (Gonds), பார்கள் (Bhars), கார் வாக்கள் (Kharwas) போன்ற பழங்குடியினர் இவ்வாறுதான் சந்தெல்லர்கள், ராத்தோர்கள், ககர்வார்கள் (Gaharwars) போன்ற ராஜபுத்திர குலங்களாக நாளடைவில் மாறினர். சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வழியில் தாங்கள் வந்தவர்க ளென்று தங்களது வம்சாவளிகளில் இவர்கள் கூறிக் கொள்ள லாயினர்.'

ஸ்மித் அவர்களின் கருத்தின் சுருக்கம் இதுவே. ராஜ புத்திரர்களை இரண்டு பிரிவுகளாக இவர் பிரிப்பதை நாம் காண லாம். ஹூணர்கள் போன்ற அநாகரிக அன்னியர்களோடுகூட, சுதேசப் பழங்குடியினர் சிலரும் ராஜபுத்திர குலங்களாக மாறி, அரச வம்சங்களை நிறுவினரென்றும், அன்னியர்களில் பாமர மக்களா யிருந்தவர்கள் கூஜர்கள் போன்ற கீழ்ச்சாதியினராக ஆயினரென்றும் ஸ்மித் முடிவு செய்தார். டாக்டர் D. R. பந்தர் கார் முதலிய இந்திய ஆராய்ச்சியாளர்கள் சிலரும் கூட இவ் வாறே கருதினர்.

வைத்தியா அவர்களின் மறுப்பு

ராஜபுத்திர அரச குலங்களின் பூர்விகம்பற்றிய கதைகள் சூரிய வம்சம், சந்திர வம்சம் ஆகியவற்றைச் சேர்ந்த க்ஷத்திரி யர்களே அவர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றன. மகாபாரதத் திலும் ராமாயணத்திலும் வரும் பல வீரர்களின் வழியில் அவர் கள் வந்தவர்களென்றும் அவை கூறுகின்றன. கி.பி. 1901-ல் மக்கட் கணிப்பு (Census) நடத்தப்பட்டது. அப்பொழுது அந்த அறிக்கையைத் தயார் செய்த சர் ஹென்ரி ரிஸ்லி (Sir Henry Risley) இந்திய மக்களின் தலை, மூக்கு, உயரம் முதலியவற்றைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு பிரதேசத்தில் வாழ்பவரும் எந்த எந்த இனத்தைச் சேர்ந்தவர்களென்பதை முடிவு செய்வதற்கு முயன்றார். ஆரிய இனத்தின் முக்கியமான அடையாளங்க ளாகக் கருதப்படும் நீண்ட தலை, நெடிய உருவம், நேரான மூக்கு ஆகிய அங்க அமைப்புகளை இந்தியாவில் பஞ்சாபிலும்

ராஜஸ்தானத்திலும் மட்டுமே காணமுடிகிறது என்று ரிஸ்லி குறிப்பிட்டார். இந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, ஆதிகாலத்தில் இந்தியாவுக்கு வந்த வேதகால ஆரியர்களின் வழித்தோன்றல்களே ராஜபுத்திரர்களென்று C. V. வைத்தியா அவர்கள் முடிவு செய்தார். வேதகால ஆரியர்களது வழியில் வந்தகாரணத்தினுல்தான் ராஜபுத்திரர்களால் முஸ்லிம்களுக்கு எதிராகத் தங்களது நாட்டைக் காத்து அவ்வளவு வீரத்துடன் போர் புரிய முடிந்தது என்று வைத்தியா அவர்கள் கூறுவது நம்மால் ஏற்றுக்கொள்ளத் தக்கதா யில்லை. எனினும், ராஜ புத்திரர்கள் வெளியிலிருந்து இந்தியாவுக்குள் வந்தவர்களென்ற வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவிதமான வரலாற்றுப் பூர்வமான சான்றும் இல்லாத நிலையில், அவர்கள் நெடுங்கால மாக இந்தியாவில் வாழ்ந்து வந்தவர்களே என்ற கூற்றினை மறுப்பதற்கு நம்மால் இயலவில்லை.

ராஜபுத்திரர்களின் முன்னேடிகள் என்று கருதப்படும் கூஜர் கள் (Gujars—கூர்ஜரர்கள் என்ற சொல் கூஜர் என்பதன் மற்ெருரு வடிவமே என்று கருதப்படுகிறது) இன்றும் பஞ்சாபில் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். கூரிய நேரான மூக்கு, நீளமான தலையமைப்பு, நல்ல உயரம் ஆகியவற்றில் கூஜர்களும், சீக்கியர்களும், ராஜஸ்தானத்தைச் சேர்ந்தவர் களுமே இந்திய மக்களில் முதலிடம் வகிக்கின்றன ரென்பதை ரிஸ்லி தமது அறிக்கையில் மிக விரிவாகச் சுட்டிக் காட்டினுர். சென்னை, மத்திய மாநிலங்கள் (Central Provinces), சோட்டா நாகபுரி, வங்காளம், பம்பாய், ஐக்கிய மாநிலங்கள் (United Provinces) போன்றவற்றின் மக்களது மூக்களவு, தலையளவு போன்றவற்ரேடு இவர்களது அளவுகளையும் ரிஸ்லி ஒப்பிட்டுப் பார்த்து, இவர்களிடமே ஆரியருக்குரிய அடையாளங்கள் முழுக்க முழுக்கக் காணப்படுகின்றன என்று எழுதினுர்.[1] ராஜ புத்திரர்கள் ஹூணர்களோடு இனத்தொடர்பு உடையவர்க ளல்லர் என்பதற்கும், இந்தியாவுக்கு வந்த ஆரியர்களில் ஒரு பகுதியினராகவே அவர்கள் இருக்கக் கூடுமென்பதற்கும் ரிஸ்லி யின் கூற்றை நாம் ஆதாரமாகக் கொள்ளலாம். எனவே, வைத்தியா அவர்களின் கருத்துகளை ஆதாரமற்றவை என்று கூறுவதற்கு இயலவில்லை.

கூஜர்கள்

பஞ்சாபில் வாழும் கூஜர்களைப்பற்றியும் இங்குச் சிறிது குறிப்பிடுவது பயனுள்ளதா யிருக்கும். இன்று இவர்கள் குஜர்கள்

[1] Refer C. V. Vaidya's Note on 'Jats, Gurjars and Marathas' in the first volume of his *History of Mediaeval Hindu India.*

என்றும் அழைக்கப்படுகின்றனர். கனோஜைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த பரிகாரர்கள் என்ற கூர்ஜரப் பிரதிகாரர்கள் கூஜர்களுடன் நெருங்கிய உறவு பூண்டவர்களே (First cousins of the Gujars) என்பது வின்சென்ட் ஸ்மித்தின் முடிவு. ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டில் ராஜபுதனத்துக்குள் வந்து நுழைந்த அநாகரிக அன்னிய குலங்களின் வழியில் தோன்றியவர்களே இப் பிரதிகாரர்கள் என்றும் ஸ்மித் எழுதுகிருர். அவருக்கு முன்பேகூட டாக்டர் D. R. பந்தர்கார் இதே கருத்தினை 1911ஆம் ஆண்டிலேயே 'இந்து மக்களில் அன்னியர் கலப்பு' (*'Foreign Elements in the Hindu Population'* —an article in Indian Antiquary, Vol. XL) என்ற ஒரு கட்டுரையில் விளக்கமாக எடுத்துரைத்தார். ஹூணர்களோடுகூடக் கசர்கள் அல்லது கஜர்கள் (Khazars) என்பாரும் இந்தியாவுக்குள் வந்திருக்கக் கூடுமென்றும், அவர்களது வழியில் வந்தவர்களே குஜர்கள் அல்லது கூஜர்களென்றும் பந்தர்கார் முடிவு செய்தார். பெயர் ஒற்றுமையை வைத்தே கஜர்களுக்கும் குஜர்களுக்கும் இவர் முடிச்சுப் போட்டார். கஜர்கள் மாநிறமும் குள்ளமான உருவமும் உடையவர்கள். ஆனுல், கூஜர்களோ சிவப்பு மேனியும், உயரமும், எடுப்பான அங்க அடையாளங்களும் உடையவர்கள்.

கி.பி. ஏழாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இந்தியாவுக்கு வந்த யுவான் சுவாங் ஹூணச் சிற்றரசர்கள் அங்குமிங்கும் ஆட்சி புரிந்து வந்ததைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஹூணர்கள் நீங்கலாக வேறு எந்த அன்னியச் சிற்றரசர்களையும் அவர் இந்தியாவில் காணவேயில்லை. கூர்ஜர அரசர் க்ஷத்திரியரென்றும், பிராமணச் சமயத்தைச் சேர்ந்தவரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளது சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. கூர்ஜரர்கள் அன்னியர்களாக இருந்திருந்தால், அதைப்பற்றிக் குறிப்பிடாமல் யுவான் சுவாங் விட்டிருப்பாரா என்பது சிந்தித்தற்குரியது. இவ்வாறு பல சான்றுகளையும் வைத்துப் பார்க்கையில், ராஜபுத்திரர்கள் அன்னியர்கள் என்பதற்கான ஆதாரங்கள் அதிகமுள்ளதாகத் தோன்றவில்லை.

அக்னி குலம்பற்றிய கதைகள்

பிருதிவிராஜரையும் அவரது சாகமான வம்சத்தையும் சிறப்பிப்பதற்காக வென்றே 'பிருதிவிராஜ ராசோ' என்ற ஒரு காவியத்தைச் சந்த் பர்தாய் படைத்தார். இந் நூலில்தான் அக்னி குலம்பற்றிய கதையானது முதன் முதலில் கூறப்பட்டது. மிலேச்சர்களால் இன்னலுற்று வந்த மக்களைக் காப்பதற்காக

வசிஷ்டர் தமது வேள்வித் தீயிலிருந்து நாற்பெரும் வீரர்களைத் தோற்றுவித்தாரென்று இக் கதை சொல்கிறது. முதலில் பரமாரர் என்பவர் தோற்றுவிக்கப்பட்டாராம். இவரால் மிலேச்சர்களை வெல்ல முடியாமற் போயினமையால், சௌளுக்கியரையும், இவருக்குப் பின்னால் பிரதிகாரரையும் வசிஷ்டர் தோற்றுவித்தாராம். இவர்களும் வெற்றி பெறாமல் போகவே, பெரு வல்லமை படைத்த சாகமானரை வசிஷ்டர் தோற்றுவித்தாராம். இந்தச் சாகமானரின் வழியிலேயே பெரு வீரரான பிருதிவிராஜர் தோன்றினாரென்பதே சந்த் பர்தாயின் கதை. புலவர்கள் வழக்கமாகக் கூறும் இக் கதைக்கு உட்பொருள் என்ன என்பதைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் கர்னல் டாட் போன்றவர்கள் இறங்கினர். பரமார, சௌளுக்கிய, பிரதிகார, சாகமான வம்சங்கள் மட்டுமே ராஜபுத்திர வம்சங்களுள் அக்னி குல வம்சங்களாகும் என்று சந்த் பர்தாய்க்குப் பிற்பட்ட ராஜ புத்திரக் கதைகள் கூறலாயின. இதன் பொருள் என்ன என்பது பற்றிச் சில கருத்துகள் வெளியிடப்பட்டன.

அன்னிய மக்கள் இந்தியாவுக்குள் வந்து, இந்து சமுதாயத்தால் தாங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று கருதி, அக்னி சடங்குகள் செய்து இந்துக்களாக மாறியதையே சந்த் பர்தாயின் கதை புலப்படுத்துகிறது என்று டாட், குருக் போன்றவர்கள் கருதலாயினர். பௌத்த சமயம், சமண சமயம் போன்றவற்றை நசுக்குவதில் தங்களுக்குப் பயன்படும் பொருட்டே இத்தகைய கதைகள் பிராமணர்களால் புனையப் பட்டன என்று குருக் அவர்கள் டாடின் நூலுக்கான தமது முன்னுரையில் எழுதினார். இந்த நான்கு அக்னிகுல ராஜபுத்திர வம்சத்தினரும் ஹூணர்களோடு சேர்ந்து இந்தியாவுக்குள் புகுந்த அன்னியர்களே என்று முடிவு செய்வதற்கும் அவர்களுக்கு இக் கதை பயன்பட்டது.

பிரதிகாரர்கள், சாகமானர்கள், சௌளுக்கியர்கள், பரமாரர்கள் ஆகியோரது கல்வெட்டுகளும் சாசனங்களும் தாங்கள் அக்னி குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையோ அல்லது தாங்கள் ஆரம்பத்தில் அன்னியர்களாயிருந்து இந்துக்களாக ஆனவர்கள் என்பதையோ ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை. இவ் வம்சங்களின் பூர்விகம்பற்றி, அவைபற்றிய அத்தியாயங்களில் சிறிது விரிவாக இந் நூலில் பின் வரும் பக்கங்களில் நாம் கூறியுள்ளோம். ராமனது தம்பியான லக்ஷ்மணனது வழியில் தாங்கள் வந்தவர்களென்று பிரதிகாரர்களது குவாலியர்க் கல் வெட்டும், சூரிய குலத்தைச் சேர்ந்த கூவகரது வழியில் தாங்கள்

வந்தவர்களென்று சாகமானரது ஹர்ஷமலைக் கல்வெட்டும், இதேபோல் வேறு சான்றுகளும் கூறுவதைப் பிந்திய அத்தியாயங்களில் நாம் காணலாம். இவர்கள் அன்னியர்கள் என்பது பற்றி இவர்களது சாசனங்களோ இவர்களின் பகைவர்களது சாசனங்களோ ஓரிடத்திலும் குறிப்பிடவேயில்லை.

இந்தியாவின் பல அரச வம்சங்களின் பூர்விகம்பற்றிப் பல விதமான வேடிக்கைக் கதைகளைப் புலவர்கள் புனைந்துள்ளனர். வாதாபிச் சாளுக்கியர்கள், கல்யாணிச் சாளுக்கியர்கள், ஹொய்சளர்கள் போன்ற பலரது பூர்விகம் குறித்தும் இத்தகைய கதைகள் வழங்குகின்றன. இவையனைத்தும் புலவர்களின் கற்பனையே என்று கருதுவதோடு நாம் நின்றுவிடவேண்டும்.

இரண்டாம் பகுதி

முஸ்லிம் அரசர்கள் காலம்

14. கசினி சுல்தான்கள்

1. கசினியின் எழுச்சி

அலப்டிஜின்

கி.பி. 749-ல் ஆட்சிக்கு வந்த அப்பாஸீ கலீஃபாக்கள் (Abbasid Caliphs) கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டு முதல் வலி குன்றி வீழ்ச்சியுறலாயினர். அராபியப் பேரரசின் பல்வேறு பகுதிகளும் கலீஃபாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடத் துவங் கின. ஸ்பெயின், எகிப்து போன்றவை சுதந்திர அரசுகளாக ஆயின. இராக், பாரசீகம், துருக்கிஸ்தானம் ஆகியவற்றில் பல முஸ்லிம் தலைவர்கள் சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். அவர்களுள் ஒருவரே அமீர் இஸ்மாயீல் சாமானீ (Amir Ismail Samani) என்பவர். இவரது வம்சம் சாமான் (House of Saman) எனப்பட்டது. பொகாராவைத் (Bokhara) தலைநகராகக் கொண்டு, ஆக்ஸஸ் நதியின் அக்கரைப் பிரதேசத்தை (Trans-oxiana) ஆண்ட இவ் வம்சத்தினர் விரைவிலேயே கிழக்குப் பாரசீகமாகிய கொராசானையும் (Khorasan) கைப்பற்றினர். இஸ்மாயீலுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த இரண்டாம் நாசர் (கி.பி. 913-43) காலத்தில் சாமானீப் பேரரசு மிகவும் விரிவடைந்து வலிமையோடு விளங்கிற்று. ஆக்ஸஸ் நதியின் அக்கரைப் பிரதேசம், பாரசீகம், இன்றைய ஆப்கானிஸ்தானம் ஆகிய பகுதிகள் அதில் அடங்கியிருந்தன. பெயரளவில் மட்டுமே சாமானீ அரசர்கள் அப்பாஸீ கலீஃபாக்களுக்குக் கட்டுப்பட்ட வர்களாகக் காட்சியளித்தனர். அவர்களது பேரரசிலிருந்த பொகாரா, சமர்கந்த் ஆகிய இரு நகரங்களும் கலீஃபாவின் தலைநகரமான பாக்தாதைவிடச் செழிப்பிலும் அழகிலும் மேம் பட்டனவாக விளங்கின. கி.பி. 962-ல் சாமானீ அரசரான அப்துல் மாலிக் காலமானதும், அவரது தம்பியும் சிற்றப்பரும் அரியணைக்குப் போட்டியிட்டனர். அப்பொழுது கொராசானில் ஆளுநராக இருந்த அலப்டிஜின் (Alptigin) பல பிரபுக்களின் ஆதரவுடன் அப்துல் மாலிக்கின் சிற்றப்பரை அரசராக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், இதற்கிடையில் அப்துல் மாலிக்கின் தம்பியான மன்சூர் பிரபுக்களின் உதவியைப் பெற்று, பொகாராவில் அரசராகிவிட்டார். இதனால் அலப்டிஜின்

தமக்கு ஆபத்து நேரலாம் என்பதை உணர்ந்து, தமது படையுடன் புறப்பட்டுச் சென்று, கசினியை ஆண்டு கொண்டிருந்த அபூபக்கர் லாவிக் (Abu Bakr Lawik) என்ற அமீரைத் தோற்கடித்து, கி.பி. 963ஆம் ஆண்டு வாக்கில் சாபூலிஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டு, கசினியில் வீற்றிருந்து ஆளத் துவங்கினர். அப்பொழுது அவருக்கு உதவியாயிருந்த பல படைத் தலைவர்களுள் ஒருவரே சபக்டிஜின் ஆவார். சாபூலிஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு மன்சூர் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் அலப்டிஜினால் தோற்கடிக்கப்பட்டன. அலப்டிஜின் மரணமுற்ற ஆண்டு பற்றி உறுதியாக எதுவும் சொல்வதற்கில்லை. கி.பி. 963-லிருந்து 969-க்குள் ஏதோ ஓர் ஆண்டில் அவர் காலமாகியிருக்க வேண்டும்.

சபக்டிஜின்

இளமைக் காலம்

யமீனி வம்சத்தைக் கசினியில் நிறுவியவரான நாசிருதீன் சபக்டிஜின் (Sabuktigin) முன்னோய பாரசீக அரசர் யஸ்திஜுர்தி ஷஹ்ரெயார் (Yazdijurdi Shahryar) என்பாரின் வழியில் வந்தவரெனக் கருதப்படுகிறார். முஸ்லிம் ஆட்சிக்கு முந்திய பாரசீகத்தின் கடைசி அரசர் ஷஹ்ரெயாரே. கலீஃபா உதுமானின் காலத்தில் ஷஹ்ரெயார் கொல்லப்பட்ட பின், அவரது குடும்பத்தினர் துருக்கிஸ்தானத்துக்குச் சென்று வாழ்ந்து வரலாயினர். பல தலைமுறைகள்வரை அங்கேயே வாழ்ந்ததற்குப் பின்னர், இப் பாரசீகக் குடும்பத்தினர் தாங்களும் துருக்கியராயினர். அக் குடும்பத்தில்தான் சபக்டிஜின் பிறந்தார். துருக்கியக் குலங்களுக்கிடையில் அப்பொழுது அடிக்கடி சச்சரவுகள் மூண்டுவந்தன. அத்தகைய ஒரு சண்டையின்போது பகைவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டார் சபக்டிஜின். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு. இச் சிறுவனை ஹாஜி நாசர் (Haji Nasr) என்ற ஒரு வணிகர் விலைகொடுத்து வாங்கித் தமது அடிமையாக்கிக் கொண்டார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் நாசர் பொகாராவுக்கு வந்தபோது, சபக்டிஜினும் உடன் கொண்டுவரப்பட்டு, அங்கு அடிமைச் சந்தையில் விற்கப்பட்டார். இப்பொழுது அவரை விலை கொடுத்து வாங்கியவர் சாமானீ அரசில் உயர்ந்த அதிகாரியாகவும், தளபதியாகவும், ஆளுநராகவுமிருந்த அலப்டிஜினே. துகாரிஸ்தானத்திலும் (Tukharistan), பின்பு கொராசானிலும் ஆளுநராக அலப்டிஜின் நியமிக்கப்பட்டபோது, சபக்டிஜின் பலவிதங்களிலும் அவருக்கு உதவிபுரிந்து, அவரது அன்புக்கும் பரிவுக்கும் ஆளாயினர்.

கி.பி. 963-ம் ஆண்டு வாக்கில் அலப்டிஜின் சாபூலிஸ்தானத்தையும் கசினியையும் கைப்பற்றிய பின், இந்தியாவை அடுத்திருந்த பிரதேசத்தின் ஆளுநர்ப் பதவி சபக்டிஜினுக்கு அளிக்கப்பட்டது. தமது அடிமையாகிய சபக்டிஜினின் ஆற்றலையும் விசுவாசத்தையும் கண்டு மகிழ்ந்த அலப்டிஜின் தம்முடைய மகள் ஒருத்தியையும் அவருக்குத் திருமணம் செய்து தந்தார். அலப்டிஜின் காபூலையும் வேறு சில பகுதிகளையும்கூடக் கைப்பற்றியிருக்க வேண்டுமென்று டாக்டர் நஸீம் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] எனினும், ஆட்சிக்கு வந்த பின் ஒருசில ஆண்டுகளிலேயே அவர் இறந்து போனார்.

அரசராதல்

அவருக்குப் பின், அவரது மகனான அபூ இஸ்ஹாக் (Abu Ishaq) என்பவர் அரசராகி ஓராண்டிலேயே காலமானார். இதன் பின்னர், பல்காட்டிஜின் அல்லது பில்காட்டிஜின் (Bilkatigin) என்ற தளபதி ஒருவர் பிரபுக்களால் அரசராக்கப்பட்டார். இவர் அலப்டிஜினின் முக்கியமான தளபதிகளுள் ஒருவராக இருந்தவர். ஏறத்தாழப் பத்தாண்டு காலம் கசினியில் இவர் அரசராக இருந்தாரென்று மின்ஹாஜுத்தீன் சிராஜ் தெரிவிக்கிறார். மின்ஹாஜுத்தீனின் தபகாத்தெ-நாசிரி என்ற நூல் அலப்டிஜின் எட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தாரென்றும், இஸ்ஹாக் ஓராண்டும், பில்காட்டிஜின் பத்தாண்டுகளும், பிரிட்டிஜின் ஓராண்டும் ஆட்சிபுரிந்தனர் என்றும் தெரிவிக்கிறது. பில்காட்டிஜினுக்குப் பிறகு அலப்டிஜினின் மற்றொரு தளபதியான பிரிட்டிஜின் (Piritigin) அரசராக்கப்பட்டார். ஆனால், பிரபுக்கள் அவரது நயவஞ்சகத்தையும் தீக்குணங்களையும் விரும்பாமல் ஒரே ஆண்டில் அவரை அகற்றிவிட்டு, சபக்டிஜினை அரசராக்கினர். சபக்டிஜின் கி.பி. 977-ல் இவ்வாறு அரியணை ஏறினார். அலப்டிஜின் காலம் முதல் தாம் அரியணை ஏறிய காலம் வரையிலான பதினைந்து ஆண்டுகளில் சபக்டிஜின் இந்தியாவின்மீது அடிக்கடி படையெடுத்ததாக ஃபெரிஷ்தா தெரிவிக்கிறார்.

சாகிகளுடன் முதற்போர்

பிரிடிஜின், பிராய் அல்லது பிரே என்றுங்கூட முஸ்லிம் நூலாசிரியர்களால் அழைக்கப்படுகின்றார். இவருக்குப் பின் அரசரான சபக்டிஜின் தமது உரிமையைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், பொகாராவிலிருந்த சாமானீ அரசர் இரண்டாம் நூஹ் (Nauh II) என்பாரின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் தாமே முன்வந்து ஏற்றுக் கொண்டார். தமது சிற்றரசராக நூஹுவினால் இவர் கருதப்பட்டாரெனினும், உண்மையில்

[1] Dr. Nazim, *Life and Times of Sultan Mahmud of Ghazna.*

சுதந்திரமான அரசராகவே சபக்டிஜின் விளங்கினரென்பதில் ஐயமில்லை. ஆரம்பத்திலிருந்தே திறமைமிக்கவராக சபக்டிஜின் விளங்கினர். பிரபுக்களையும் அதிகாரிகளையும் திருப்தி செய்து அமைதிப்படுத்திய பின், அண்டைப் பிரதேசங்களின்மீதான இவரது படையெடுப்புகள் துவங்கின. பஸ்த் (Bust), தாவார் (Dawar), குஸ்தார் (Qusdar), பாமியான் (Bamiyan), துகாரிஸ்தான், கூர் (Ghur) அல்லது கோர் (Ghor) போன்ற பல பகுதிகள் சபக்டிஜினல் வென்று இணைத்துக் கொள்ளப்பட்டன. உதபாண்டாவிலிருந்து ஆட்சிபுரிந்துகொண்டிருந்த சாகி அரசர் ஜெயபாலரின் அரசு கிட்டத்தட்டக் காபூல் வரையிலும் அப்பொழுது பரவியிருந்தது. சாகி அரசின்மீதும் சபக்டிஜின் தாக்குதல்களைத் தொடுத்தார். எல்லைப்புறத்திலிருந்த மலைக்கோட்டைகள் சிலவற்றைக் கி.பி. 978-ல் சபக்டிஜின் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டாரென்று கூறப்படுகிறது. அல் உத்பீயின் (al-Utbi) தாரிகெ-யமீனி என்ற நூல் இதுபற்றிய எல்லாச் செய்திகளையும் நமக்கு அளிக்கிறது.[1] பைஹக்கீ என்பவர் எழுதிய தாரிகெ-சபக்டிஜின் என்ற நூலும் சபக்டிஜினின் வாழ்க்கை வரலாற்றை நமக்குத் தெரிவிக்கிறது.[2]

சபக்டிஜினின் இத் தாக்குதல்களால் ஆத்திரமடைந்த சாகி அரசர் ஜெயபாலர் ஒரு படையுடன் போருக்குப் புறப்பட்டார். லம்கான் (Lamghan) பள்ளத்தாக்கை அவர் எட்டிவிட்டார் என்பதைக் கேள்வியுற்று, சபக்டிஜினும் அவரது மகன் மகமூதும் கசினியிலிருந்து விரைந்து வந்தனர். லம்கானுக்கும் கசினிக்குமிடையில் பல நாட்கள் வரையில் கடும்போர் நிகழ்ந்தது; இறுதியில் ஜெயபாலர் தோற்கடிக்கப்பட்டார். பகைவர்கள் தோற்றுவித்த பனிப்புயல் காரணமாகவே ஜெயபாலரும் அவரது படையினரும் ரத்தம் உறைந்து போரில் தோல்வியுற்றனரென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் எழுதினர். இப் போரானது கி.பி. 986-87-ல் நடைபெற்றிருக்கலாமென்று டாக்டர் நஸீம் கருதுகிருர். ஆனல், இதுபற்றி உறுதியாகக் கூறுவதற்கில்லை. பத்து லட்சம் வெள்ளிக் காசுகளும் (dirhams) ஐம்பது யானைகளும் தருவதாகச் சொல்லி, சமாதானம் செய்து கொண்டபின் ஜெயபாலர் நாடு திரும்பினர்.

இரண்டாவது போர்

தமது தலைநகருக்குத் திரும்பிய ஜெயபாலர் சபக்டிஜினுக்கு எதிராக மீண்டும் போர் தொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார்.

1 Al-Utbi, *Tarikh-i-Yamini*.

2 Baihaki, *Tarikh-i-Sabuktigin*; for extracts from both the works, see Elliot and Dowson, Vol. II.

பத்து லட்சம் திர்ஹம்களை வசூலிப்பதற்காக சபக்டிஜின் அனுப்பிய தூதர்கள் லாகூரில் சிறையிலடைக்கப்பட்டனர். இத் தொகைக்கு உத்தரவாதமாக சபக்டிஜின் பிடித்து வைத்திருந்த ஆட்களை விடுதலை செய்தாலொழிய இத் தூதர்களைத் தம்மால் விடுதலை செய்ய முடியாதென்று சபக்டிஜினுக்குச் செய்தியனுப்பினார் ஜெயபாலர். சபக்டிஜின் போருக்குத் தயாரானார். அவரது படைகள் சாகி அரசுக்குள் புகுந்து லம்கான் நகரைக் கைப்பற்றிக் கொள்ளையிட்டன. ஜெயபாலர் மற்ற இந்திய அரசர்களுக்குத் தூதர்களை அனுப்பி உதவி கோரினாரென்றும், டெல்லி, அஜ்மீர், கனோஜ், காலஞ்சர் போன்ற பல நாட்டு அரசர்கள் படைகளும் பொருளும் அனுப்பிவைத்தன ரென்றும் ஃபெரிஷ்தா எழுதினார். மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த ஃபெரிஷ்தாவின் கூற்று எவ்வளவு உண்மை என்பது தெரியவில்லை. அவருக்கு முந்திய எந்த முஸ்லிம் நூலாசிரியரும் இதைப் பற்றிக் குறிப்பிடாத காரணத்தினால், இதை உண்மையென ஏற்றுக்கொள்ளப் பலரும் தயங்குகின்றனர். அண்டையிலுள்ள அரசர்கள் அல்லது சிற்றரசர்கள் சிலரது படையுதவி ஜெயபாலருக்குக் கிடைத்திருக்கக் கூடுமென்று கொள்வதில் தவறில்லை. ஒரு லட்சம் குதிரை வீரர்கள், எண்ணிறந்த காலாட்படையினர் ஆகியோருடன் ஜெயபாலர் போருக்குப் புறப்பட்டதாகக் கூறப்படும் செய்தி மிகையானதே. சிறிய படைகளை வைத்துக் கொண்டு மிகப் பெரிய இந்து சேனைகளை முஸ்லிம்கள் தோற்கடித்தனர் என்பதை வலியுறுத்தும் நோக்கத்துடனேயே இத்தகைய மிகையான கூற்றுகளை முஸ்லிம் நூலாசிரியர்கள் எழுதலாயினர்.

லம்கான் பள்ளத்தாக்கே மீண்டும் போர்க்களமாயிற்று. மாபெரும் இந்துப் படைகளைக் கண்ட சபக்டிஜின் உயரமான மலைப்பகுதி ஒன்றின்மீது தமது துருப்புகளை அணிவகுத்து நிறுத்தினார். அவற்றை ஐந்நூறு, ஐந்நூறு குதிரை வீரர்களைக் கொண்ட பல பிரிவுகளாக அவர் பிரித்தார். இப் பிரிவு ஒவ்வொன்றும் மாறி மாறிப் பள்ளத்தாக்கிலிருந்த சாகிப் படைகளைத் தாக்கிற்றும். இதனால் சாகிப் படையில் குழப்பம் ஏற்படவே இறுதியில் தமது முழுப் பலத்தையும் கொண்டு சபக்டிஜின் தாக்குதல் தொடுத்தாராம். கடுமையான சண்டை சில மணி நேரம் நீடித்த பின், சாகிப் படை தோற்று ஓடலாயிற்று. பல்லாயிரக் கணக்கான சாகிப் படை வீரர்கள், யானைகள், குதிரைகள், ஆயுதங்கள் முதலியவை முஸ்லிம்களின் வசமாயின. லம்கானுக்கும் பெஷாவருக்குமிடையிலான பகுதி முழுவதும் சபக்டிஜினுக்கு இப் போரின்மூலம் கிடைத்துவிட்டது.

பெஷாவரில் ஈராயிரம் துருப்புகளைக் கொண்ட படையணி ஒன்றை அவர் நிறுத்தினார். புதிதாக வெல்லப்பட்ட பிரதேசம் முழுவதிலும் வரிவசூல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இப் போரானது, கி.பி. 986-87-ல் நடைபெற்றதாகக் கருதப்படும் முதற் போருக்கு ஓரிரு ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

சபக்டிஜினின் மரணம்

இப் போருக்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு சாமானீ அரசர் இரண்டாம் நூஹுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டது. கொராசானின் (பாரசீகத்தின் கிழக்குப் பகுதி) ஒரு பகுதியில் நூஹுவின் ஆளுநராயிருந்த அபூ அலீ சஞ்சூர் (Sunjur—இவரது பெயர் சிஞ்சூரி—Sinjuri—என்றும் சில அறிஞர்கள் எழுதுகின்றனர்) என்ற ஒருவர் கிளர்ச்சியைத் துவக்கினார். அதை அடக்குவதற்கு சபக்டிஜினின் உதவியை நூஹ் நாடினார். இந்த வாய்ப்பினை நழுவவிடாமல், சபக்டிஜின் ஒரு பெரும் படையுடன் தம்முடைய மகன் மகமூதையும் உடன் அழைத்துக் கொண்டு கொராசானை நோக்கிச் சென்றார். ஹீரட்டுக்கு (Herat) அண்மையில் நடைபெற்ற கடும்போர் ஒன்றில் சபக்டிஜினும் மகமூதும் சஞ்சூரை அடியோடு முறியடித்தனர். இந்த உதவிக்குக் கைம்மாறாக இவ் விருவருக்கும் நூஹ் பல விருதுகளை வழங்கினார். 'நாசிருத்தீன்-வத்-தௌலா' (Nasiruddin-Wad-Daulah) என்ற விருது சபக்டிஜினுக்கும், 'சைஃபுத்-தௌலா' (Saifud-Daulah) என்ற விருது மகமூதுக்கும் வழங்கப்பட்டன. கொராசான் மாவட்டத்திலிருந்த சாமானீப் படைகளின் தளபதியாக மகமூத் நியமிக்கப்பட்டார். இது ஆளுநர்ப் பதவிக்கு ஒப்பாகும். நிஷாப்பூர் (Nishapur) என்ற ஊர் மகமூதின் தலைநகராயிருந்தது. இந் நிகழ்ச்சிகள் கி.பி. 994-ல் நிகழ்ந்தன. அடுத்த ஆண்டில் நிஷாப்பூரை நோக்கி ஒரு படையுடன் சஞ்சூர் வந்தார். ஆனால், சபக்டிஜினும் மகமூதும் அவரைத் தோற்கடித்து விரட்டினர். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின், கி.பி. 997-ல், பல்கின் (Balkh) எல்லையில் சபக்டிஜின் காலமானார். அப்பொழுது அவருக்கு வயது ஐம்பத்தாறு.

சபக்டிஜின்பற்றிய மதிப்பீடு

இருபதாண்டு கால ஆட்சிக்குப் பின் சபக்டிஜின் காலமானார். அடிமையாயிருந்து அரசரான அவர், திறமை மிகுந்த மனிதர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அலப்டிஜினின் அடிமையாகவும் தளபதியாகவும் இருந்து, நிறைந்த அனுபவ முதிர்ச்சி பெற்ற பின், அரியணையைப் பெற்று, கசினி அரசை சபக்டிஜின் விரிவுபடுத்தினார். பொறுமையும் நிதானமும், சிந்தித்துச் செயலாற்றும்

இயல்பும் உடையவரான அவர், பிரபுக்களுடைய ஆதரவையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். போர்த் திறமையோடுகூட, பிரபுக்களின் மதிப்பும் ஒத்துழைப்புமே சபக்டிஜினின் வெற்றிக்குக் காரணமாயிருந்தன. 'அமீர்' (Amir—தளபதி) என்ற பட்டத்தையே அவர் சூடியிருந்தார். இந்தியாவின்மீதான மகமூதின் படையெடுப்புக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் சபக்டிஜினே ஆவார்.

2. சுல்தான் மகமூத்

அரியணையைக் கைப்பற்றுதல்

சபக்டிஜினுக்கு மகமூத், இஸ்மாயீல், நாசர், யூசுஃப் என்னும் நான்கு மைந்தர்களிருந்தனர். சபக்டிஜினின் மரணத்தின் போது மகமூத் கொராசானில் நிஷாப்பூரிலிருந்தார். பல்கின் எல்லைப்புறத்தில் தந்தையுடனிருந்த இரண்டாவது மகனான இஸ்மாயீல் தம்மையே அடுத்த வாரிசாக நியமிக்குமாறு சபக்டிஜினைத் தூண்டினார். மூத்த மகனே பட்டத்து வாரிசாவான் என்ற விதி ஏதும் முஸ்லிம் வம்சங்களில் இல்லையாதலால், இஸ்மாயீலையே தமது வாரிசாக நியமித்துவிட்டு, சபக்டிஜின் காலமானார். அதன்படி, இஸ்மாயீலே அமீராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். மூத்தவரான மகமூதுக்கு இது விருப்பமில்லை. தம்பி இஸ்மாயீலுக்குக் கடிதமொன்றை அவர் எழுதி, அமீர்ப் பதவிக்கு அண்ணனான தமது உரிமையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அதற்கு இணங்கினால் பல்க், கொராசான் ஆகிய இரு மாநிலங்களிலும் அவரையே ஆளுநராக நியமிப்பதற்குத் தாம் ஒருப்படுவதாகவும் அக்கடிதத்தில் மகமூத் கூறியிருந்தார். இதை இஸ்மாயீல் ஏற்றுக் கொள்ளவில்லை. இருவருமே தத்தம் படைகளுடன் தலைநகரான கசினியை நோக்கிப் புறப்பட்டனர். கசினிக்கு அருகில் கடும் போர் நிகழ்ந்தது. போர் அனுபவமிகுந்த மகமூத் வெகு எளிதாகவே இஸ்மாயீலைத் தோற்கடித்தார். போர்க்களத்திலிருந்து ஓடி ஒரு கோட்டையில் அடைக்கலம் புகுந்த இஸ்மாயீலை அவரது பிரபுக்கள் சிலர் பிடித்து மகமூதிடம் ஒப்படைத்தனர். தம்முடைய தம்பியை ஒரு கோட்டையில் போதிய பாதுகாப்புடன் காவலில் வைத்து, அவருக்குத் தேவையான பல வசதிகளையும் மகமூத் செய்து தந்தார். வாழ்நாள் முழுவதும் அக்கோட்டைக்குள்ளேயே இஸ்மாயீலின் நாட்கள் கழிந்தன. இவ்வாறு கி.பி. 998-ல் தமது இருபத்தேழாவது வயதில் கசினியில் அமீரானார் மகமூத்.[1]

[1] அவருக்கு அப்பொழுது வயது முப்பது என்கிறார் பேராசிரியர் ஹபீப். Refer *Sultan Mahmud of Ghaznin* by Mohammad Habib.

ஆட்சியின் துவக்கம்

நடுத்தர உயரமும், திட்டமான பருமனும், பெரியம்மைத் தழும்புகள் நிறைந்த முகமும் உடையவராக மகமூத் காணப்பட்டார். கி.பி. 971-ல் பிறந்ததாகக் கருதப்படும் இவ் வரசருக்கு இளமையில் குர்ஆன் போன்ற பல சமய நூல்கள் போதிக்கப் பட்டன என்றாலும், எழுத்தறிவற்றவராகவே அவர் இருந்தார். தமது தந்தையின் காலத்தில் ஜெயபாலர், அபூ அலீ சஞ்சூர் ஆகியோருக்கெதிரான போர்களில் அத் தந்தைக்கு உதவியாக இருந்து, இவர் தமக்கிருந்த போர்த் திறமையை நன்கு வெளிக் காட்டினார். நிஷாப்பூரில் தளபதியாகவும் ஆளுநராகவுமிருந்து, தமக்கிருந்த நிர்வாகத் திறமையையும் புலப்படுத்தினார் மகமூத். இளம் வயதிலேயே கல்வி, போர், நிர்வாகம் ஆகியவற்றில் போதுமான பயிற்சி பெற்றவராக இவர் இருந்தது பிற்காலத்தில் புகழ்மிக்க சுல்தானாக இவர் திகழ்வதற்குப் பெரிதும் பயன் பட்டன. உறுதியும் விடாமுயற்சியும் இவரது இயல்புகளில் குறிப்பிடத்தக்கன.

பொகாராவில் சாமானீ அமீராக இருந்த இரண்டாம் நூஹ் சபக்டிஜின் காலமான கி.பி. 997ஆம் ஆண்டிலேயே மரண மடைந்தார். அவருக்கு அடுத்து அரசரான மன்சூர் என்பவர், மகமூதும் இஸ்மாயீலும் போரிட்டுக் கொண்டிருந்த நேரம் பார்த்து, பேக்துசுன் (Begtuzun) என்பவரைக் கொராசானில் மகமூதுக்குப் பதிலாக ஆளுநராக நியமித்தார். மகமூதின் ஆட்சேபணையைப் பொருட்படுத்தாமல் பேக்துசுன் நிஷாப் பூருக்கு வந்து ஆளுநராகப் பதவியேற்றார். ஆனால், விரை விலேயே பேக்துசுன் மன்சூருக்கெதிராகத் திரும்பி அவரைச் சிறைப்பிடித்து, அவரது கண்களைக் குருடாக்கிய பின் அவரது தம்பியான அப்துல் மாலிக் என்ற சிறுவனை அரியணையிலமர்த் தினார். உடனே மகமூத் படையுடன் சென்று, கொராசான் முழுவதையும் கைப்பற்றினார். அதே சமயத்தில் காஷ்கரில் (Kashgar) (துருக்கிஸ்தானத்தில்) ஆளுநராக இருந்துவந்த இலாக்கான் (Ilak Khan) ஜக்சர்தீஸ் (Jaxartes) நதியைக் கடந்து வந்து, கி.பி. 999-ல் பொகாராவைக் கைப்பற்றி, சாமானீ அரசுக்கு முடிவுகட்டினார். சாமானீ அரசை இலாக்கானும் மகமூதும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். ஆக்சஸ் நதிக்கு வடக்கிலான பிரதேசங்களை இலாக்கானும் தெற்குப் பிரதேசங் களை மகமூதும் எடுத்துக் கொண்டனர். ஹீரட், பல்க் போன்ற பகுதிகள் இதன்மூலம் மகமூதுக்குக் கிடைத்தன. புதிதாகக் கைப்பற்றப்பட்ட இப் பகுதிகளில் தம்முடைய இரண்டாவது தம்பியான நாசரை ஆளுநராக மகமூத் நியமித்தார்.

இதையெல்லாம் கண்ட கலீஃபா அல்-காதிர் பில்லாஹ் (Al Qadir Billah) மகமூதுக்கு அரசர்க்குரிய ஆடைகளை அனுப்பி, முறையான அரசராக அவரை அங்கீகாரம் செய்தார்—(கி.பி. 999). 'யமீனுத் தௌலா', 'அமீனுல் மில்லா' என்ற இரு விருதுகளும்கூட கலீஃபாவால் மகமூதுக்கு இப்பொழுது அளிக்கப்பட்டன. கலீஃபாவுக்குக் கீழ்ப்பட்ட அரசராகத் தாம் இருப்பதாகவும், அவருக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்துக்களின் நாடான இந்தியாவின்மீது புனிதப் போர் (Holy War) தொடுப்பதாகவும் அப்பொழுது மகமூத் உறுதியெடுத்துக் கொண்டாரென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். அதன்படி, பதினேழு முறை அவர் இந்தியாவின்மீது படையெடுத்தாரென்று பலர் கருதுகின்றனர். எனினும், முஸ்லிம் சான்றுகளுக்கிடையிலான பலவகை முரண்பாடுகள் காரணமாக உண்மையில் எத்தனை தடவை இந்தியாவின்மீது மகமூத் படையெடுத்தாரென்பதை நிச்சயமாக நம்மால் அறிய இயலவில்லை.[1]

இந்தியாவின்மீது முதற் படையெடுப்பு

எலியட் அவர்கள் மகமூதின் பதினேழு படையெடுப்புகளை வரிசையாக வருணித்து, முஸ்லிம் நூலாசிரியர்களின் குறிப்புகளை மேற்கோள் காட்டி, புகழ்மிக்க தமது நூலின் இரண்டாம் தொகுதியில் பிற்சேர்க்கையாகத் தனிக் கட்டுரை ஒன்றையே எழுதியுள்ளார். உல்ஸ்லி ஹேக் போன்ற அறிஞர்கள் பதினேழு படையெடுப்புகள்பற்றிய கூற்றினை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றாலும், எலியட் அவர்களின் கட்டுரை படித்து ஆராய்வதற்குரியது என்பதில் ஐயமெதுவும் இருப்பதற்கில்லை.[2] இக்கட்டுரையின் அடிப்படையிலும், தமது சொந்த ஆராய்ச்சியின் விளைவாகவும், பதினேழு படையெடுப்புகளே மேற்கொள்ளப்பட்டன என்ற முடிவினை ஹபீப் அவர்களும் மேற்கொண்டார். எனவே, நாமும் பதினேழு படையெடுப்புகளை மகமூத் நிகழ்த்தினார் எனக் கொண்டு அவற்றுள் முக்கியமான சிலவற்றைப்பற்றி இப்பொழுது பார்ப்போம். இடைக் காலத்தைச் சேர்ந்த முஸ்லிம் நூலாசிரியர்கள் பலர் பன்னிரண்டு படையெடுப்புகளையே மகமூத் நிகழ்த்தினாரென்று எழுதியுள்ளனர். ஆயினும், அவர்களது நூல்களிலேயே பன்னிரண்டுக்கு மேற்பட்ட படையெடுப்புகள்பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

[1] W. Haig, *The Cambridge History of India*, Vol. III — Turks and Afghans.

[2] Elliot and Downson, Vol. II—'Note D' on ***Mahmud's Expedition to India.***

மகமூதின் முதலாவது இந்தியப் படையெடுப்புக் கி.பி. 999 அல்லது 1000-ல் நிகழ்ந்தது. சீஸ்தானையும் இந்தியாவின் எல்லைப் பகுதிகளிலிருந்த சில நகரங்களையும் கைப்பற்றி அங்குத் தமது அதிகாரிகளை நியமித்துவிட்டு, அவர் கசினிக்குத் திரும்பினார்.

இரண்டாவது படையெடுப்பு

அவரது அடுத்த படையெடுப்புக் கி.பி. 1001 செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்டது. 15,000 குதிரை வீரர்களுடன் கசினியை விட்டு அவர் புறப்பட்டு, பெஷாவரை அடைந்தார். அங்கு 12,000 குதிரை வீரர்கள், 30,000 காலாட் படையினர், 300 யானைகள் அடங்கிய சேனையுடன் சாகி அரசர் ஜெயபாலர் அவரை எதிர்த்தார். முஸ்லிம்கள் விடுத்த அம்புகள் எதிர்த் தரப்பிலிருந்த யானைகளைக் காயப்படுத்தி மதம் மூட்டிவிடவே, அங்குக் குழப்பம் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்தி, கசினிப் படையிலிருந்த குதிரை வீரர்கள் தாக்குதல் தொடுத்து, பெருத்த வெற்றி பெற்றனர். இப் பெஷாவர்ப் போர் நவம்பர் 27-ல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. 5000 இந்தியத் துருப்புகள் இப் போரில் கொல்லப்பட்டன. ஜெயபாலரும் பதினைந்து அரச குமாரர்களும் பகைவரால் சிறைப்பிடிக்கப் பட்டனர். இதன் பின்னர் மகமூதின் படைகள் வைகிந்த், உந்த், ஹிந்த், ஓகிந்த் என்று பலவாறாக முஸ்லிம் நூலாசிரியர்களால் அழைக்கப்படும் நகரை நோக்கிச் சென்றன. இந் நகரம் சிந்து நதியின் மேற்குக் கரையில் அட்டாக் (Attock) நகருக்குப் பதினைந்து மைல் கிழக்கில் இன்று உள்ளது. அன்று லாகூருக்கும் பெஷாவருக்குமிடையிலான வாணிப மார்க்கத்தின் வழியில் அமைந்து செழிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு நகரமாக இந்த வைகிந்த் நகரம் இருந்தது. உதபாண்டா என்று இந்துக்களால் அழைக்கப்பட்ட இந் நகரம் சாகிகளின் தலைநகரமாகவும் சிறிதுகாலம் இருந்தது. இதை மகமூத் கைப்பற்றிச் சூறையாடி, ஏராளமான செல்வத்தைப் பெற்றார். பெருந் தொகையொன்றையும் நூற்றைம்பது யானைகளையும் தந்தால் ஜெயபாலரை விடுவிப்பதாக மகமூத் கூறினார். உடனடியாக அத் தொகையைத் திரட்ட முடியாததால், பிணையமாக அவரது மகன் ஒருவரையும் பேரன் ஒருவரையும் வைத்துக் கொண்டு ஜெயபாலரைப் பகைவர் விடுதலை செய்தனர். அவரது மூத்த மகனான ஆனந்தபாலர் உடனே அத் தொகையைத் திரட்டிக் கொடுத்து, அவ் வரச குமாரர்களை மீட்டுக் கொண்டார். இதன் பின்னர் மகமூத் கசினிக்குத் திரும்பினார் (1002). பெஷாவர்ப் போருக்குப் பின் சிறைப் பிடிக்கப்பட்ட பல அரச குமாரர்களில் சுகபாலரும் ஒருவர். இவர் ஜெய

பாலரின் பேரர். இவரே பின்னர் நவாஸ்ஷா என்ற பெயரில் முஸ்லிமாக மாறி மகமூதுக்குப் பணிபுரியலானார்.

முஸ்லிம்களால் பலமுறை தோற்கடிக்கப்பட்டு அவர்களது கைதியாகவும் சிறிது காலமிருந்து விடுதலை பெற்ற ஜெயபாலர், தொடர்ந்து அரசராக இருக்க விரும்பவில்லை. மக்களும் அவ்வாறே கருதினரென்று கூறப்படுகிறது. எனவே, அவர் தீக்குளித்து மாண்டார். இதன் பின்னர் அவரது மகனான ஆனந்தபாலருக்கு முடிசூட்டப்பட்டது.

மகமூதுக்கு 'சுல்தான்' பட்டம்

கி.பி. 1002-ல் தலைநகருக்குத் திரும்பிய மகமூத் மேற்கிலுள்ள சீஸ்தானம் அல்லது சிஜிஸ்தானத்தில் நடைபெற்ற கிளர்ச்சியை அடக்குவதில் பல மாதங்களைச் செலவிட்டார். இக்கிளர்ச்சி காரணமாக, சுமார் இரண்டாண்டுகள் வரையில் இந்தியாவின்மீது படையெடுப்பது முடியாமற் போயிற்று. எனவே, கி.பி. 1004-ல் அவரது மூன்றுவது இந்தியப் படையெடுப்புத் துவங்கிற்று. அதைப்பற்றி விவரிக்குமுன், மகமூதுக்கு 'சுல்தான்' என்ற பட்டம் எவ்வாறு வந்தது என்பதைக் குறிப்பிடுவது பயனுள்ளதாகும். சீஸ்தானத்துக் கிளர்ச்சியின் தலைவரானவர் மரணதண்டனை பெறுவதற்காக மகமூதின் முன்னர்க் கொண்டு வரப்பட்டாராம். நாவாற்றலில் கெட்டிக்காரரான அத் தலைவர் மகமூதைப் பார்த்தவுடனேயே மிகவும் மரியாதையுள்ள சொல்லாகிய **'சுல்தான்'** என்ற பெயரால் அவரை அழைத்தாராம். எந்த முஸ்லிம் அரசர்மீதும் அதுவரை புனைந்துவிடப்படாத 'சுல்தான்' என்ற இப் பட்டம் மகமூதைப் பெரிதும் பரவசத்தில் ஆழ்த்தியதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் கைம்மாருக அத் தலைவருக்கு உயிர்ப் பிச்சையோடு ஒரு மாநில ஆளுநர்ப் பதவியும் அளிக்கப்பட்டதாம். கலீஃபாவாலேயே சுல்தான் என்ற பட்டம் மகமூதுக்கு வழங்கப்பட்டதெனவும் ஒரு சான்று தெரிவிக்கிறது. மற்ற எல்லா முஸ்லிம் அரசர்களும் வெறும் அமீர் என்ற பட்டத்தினை மட்டுமே பெற்றிருந்த வேளையில், இவருக்குத் தனிச் சலுகையாக சுல்தான் என்ற பட்டத்தை கலீஃபா அளித்தாரென்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. கலீஃபா இப்பட்டத்தை உண்மையில் இவருக்கு அளித்திருப்பாரேயானுல், இவரது நாணயங்களில் அது நிச்சயமாகப் பொறிக்கப்பட்டிருக்கும். கலீஃபா வழங்கியிருந்த அமீர் என்ற பட்டம் மட்டுமே இவரது பெயருக்கு முன்னுல் நாணயங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. உண்மை எவ்வாறிருப்பினும், 'சுல்தான்' என்று

அழைக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் மன்னர் கசினி மகமூதே என்பதில் ஐயமில்லை.

மூன்ருவது படையெடுப்பு

கி.பி. 1004-ல் மகமூதின் மூன்ருவது இந்தியப் படையெடுப்புத் துவங்கிற்று. முகம்மது இப்னு காசிமால் வெல்லப்பட்ட சிந்து மாநிலத்தில் இப்பொழுது பல சிற்றரசுகள் தோன்றியிருந்தன. அவற்றுள் ஒன்று, வடக்கேயிருந்த பாட்டியா (Bhatiya) ஆகும். இதை பஜிராய் (Baji Rai) என்பவர் அப்பொழுது ஆட்சி புரிந்து வந்தார். இவ் வரசர் சபக்டிஜினுடன் நல்லுறவு பூண்டிருந்தார். ஆனுல், சாகி அரசர் ஆனந்தபாலருக்குக் கீழ்ப்பட்டவராக இவர் இருந்த காரணத்தினுல், மகமூதுக்கு இவர் போரில் உதவிபுரியவில்லையாம். இவர்மீது மகமூத் போர் தொடுத்ததற்கு இதுவே காரணமென்று சொல்லப்படுகிறது. மகமூதின் படைகள் பலுசிஸ்தானத்தின் வழியாக வந்து, மூல்தானுக் கருகில் சிந்து நதியைக் கடந்து, பாட்டியாவை அடைந்தன. உயர்ந்த மதிலால் சூழப்பட்டிருந்த அவ்வூரை முஸ்லிம் படைகள் முற்றுகையிட்டன. மூன்று நாட்கள் போரிட்ட பின், நான்காம் நாளன்று தோல்வி உறுதி என்பதை உணர்ந்த பஜிராய் நகரத்தை விட்டு வெளியேறிச் சிந்து நதியின் கரையிலிருந்த காட்டுக்கு ஓடினுர். அவரது ஓட்டத்தைக் கண்ட முஸ்லிம் படையினர் சிலர் அவரைச் சூழ்ந்து கொண்டு சிறைப்பிடிக்க முயன்றனர். அவர் ஒரு குத்துக் கத்தியால் தன்னைத் தானே குத்திக் கொண்டு உயிர் நீத்தார். அவருடன் சென்ற வீரர்கள் போரிட்டு மடிந்தனர். பாட்டியாவை மகமூத் கைப்பற்றிக் கொள்ளையிட்டார். நூற்றிருபது யானைகளும் அளவற்ற செல்வமும் பகைவர்களிடம் சிக்கின. பின்னர், கைப்பற்றிய பிரதேசத்தைக் கசினியரசுடன் இணைத்துக் கொள்ளும் எண்ணத்துடன் அங்கேயே சில மாதங்கள் மகமூத் தங்கியிருந்தார். முஸ்லிம் அதிகாரிகளை அங்கு நியமித்தும், ஆயிரக் கணக்கான இந்துக்களை முஸ்லிம்களாக மதம் மாறச் செய்தும் தமது பணியினை ஓரளவு முடித்துக் கொண்டு, கி.பி. 1005-ல் மாரிக் காலத்தில் அவர் கசினியை நோக்கித் திரும்பினுர். பெருக்கெடுத்தோடிய சிந்து நதியைக் கடக்கையில், அவர் பாட்டியாவிலிருந்து எடுத்துச் சென்ற கொள்ளைப் பொருட்களில் பெரும் பகுதியை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. மூல்தானைச் சேர்ந்த அரசர் அபுல்-ஃபத்தஹ் தாவூத் (Abul Fath Daud) என்பவரும் மகமூதின் படைகளைத் தாக்கிப் பெரும் சேதத்தை விளைவித்தார்.

பாட்டியா என்ற ஊர் எது என்பதுபற்றி நிச்சயமாகத் தெரிய வில்லை. சால்ட் மலைகளுக்கு (Salt Range) அருகில் ஜீலம் நதியின் மேற்குக் கரையிலுள்ள பெஹ்ரா (Behra) என்ற ஊரே அது என்று எலியட் கருதினர். ஆனல், சிந்து நதியை மகமூதின் படைகள் கடந்தே பாட்டியாவை அடைந்தன என்று சொல்லப் படுவதால், அவ்வூர் இன்றைய உச் (Uch) என்ற ஊராகவே இருத்தல் வேண்டுமென்பது உல்ஸ்லி ஹேக் அவர்களின் கருத்து. இன்றைய பாட்டிண்டாவே (Bhatinda) அவ் வூரென்று கருதும் ஆசிரியர்களும் உளர்.

மூல்தான்மீது படையெடுப்பு

சபக்டிஜினின் காலத்தில் மூல்தானைத் தலைநகராகக் கொண்ட சிற்றரசை ஷேக் ஹமீத் லோடி (Shaikh Hamid Lodi) என்பவர் ஆட்சிபுரிந்து வந்தார். அவர் சபக்டிஜினுடன் நட் புறவு பூண்டு, அவருக்கு வெகுமதியாகப் பல பொருட்களையும் அனுப்பி வைத்தார். ஆனல், அவரது பேரரான அபுல் ஃபத்தஹ் தாவூதோ மகமூதின் இந்தியப் படையெடுப்புகளை விரும்பாமல், அண்டையிலிருந்த பாட்டியாவை அவர் கைப் பற்றித் திரும்பும் போது அவரது படைகளைத் தாக்கிச் சேதம் விளைவித்தாரென்பதை முன்பே பார்த்தோம். மேலும், தாவூத் இஸ்லாமிய சமயத்தின் பல்வேறு கிளைகளுள் ஒன்ருன கர்மத்திய (Carmathian) அல்லது இஸ்மாயீலி (Ismaili) பிரிவைத் தழுவி யிருந்தார். சுன்னீப் பிரிவைச் சேர்ந்த மகமூதுக்கு இது ஒரு சமய விரோதச் செயலாகப்பட்டது. தாவூதின்மீது படை யெடுப்பதற்கு இதுவுமொரு காரணமாயிற்று. கி.பி. 1005ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் தாவூதுக்கெதிரான 'புனிதப் போரை' மகமூத் துவக்கினர். தெற்குப் புறமாகச் சென்ருல் வெள்ளப் பெருக்கெடுத் தோடும் பல நதிகளைக் கடக்க வேண்டியிருக்கு மென்பதால், வைகிந்தின் வழியாக ஆனந்தபாலரது சாகி அரசுக்குள் நுழைந்து, மூல்தானை நோக்கி மகமூத் முன்னேறி ஞர். தாவூதின் வேண்டுகோளுக்கிணங்கவும், தமது பிரதேசங் களினூடே மகமூத் செல்வதை விரும்பாமலும் ஆனந்தபாலர் பகைவனை வழிமறித்துப் போரிட்டார். மகமூத் வெகு எளிதாக ஆனந்தபாலரைத் தோற்கடித்து, அவரைக் காஷ்மீரத்துக்குள் விரட்டினர்; பின்னர் மூல்தானை நோக்கி முன்னேறி, அந் நகரை முற்றுகையிட்டார். வெற்றியில் நம்பிக்கையிழந்த தாவூத் ஆண்டுதோறும் 20,000 வெள்ளிக் காசுகளைத் (dirhams) திறையாகச் செலுத்துவதாகவும் இஸ்மாயீலிப் பிரிவைக் கைவிட்டு சுன்னீயாக மாறுவதாகவும் உறுதியளித்தார். கசினி யரசின் வடக்குப் பகுதியை இலாக்கான் படையெடுத்துள்ளார்

என்ற செய்தி இத் தருணத்தில் மகமூதுக்கு எட்டிற்று. எனவே, மூல்தானில் இருந்தவாறே காலம் தாழ்த்த விரும்பாமல் உடனே அவர் தம் தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்லலானார். எனினும், ஜெயபாலரது பேரர்களுள் ஒருவரான சுகபாலர் என்பவரை நவாசாஷா (Nawasa Shah) என்ற பெயரில் முஸ்லிமாக மதம் மாறச் செய்து, கைப்பற்றப்பட்ட இந்தியப் பிரதேசங்களை வைகிந்திலிருந்துகொண்டு ஆளுநராக நிர்வகித்து வருமாறு அமர்த்திய பின்னரே மகமூத் இந்தியாவை விட்டகன்றார். மூல்தான்வாசிகளிடமிருந்து வரியாகத் திரட்டிய இரண்டு கோடி திர்ஹம்கள், சாஹி அரசான பஞ்சாபிலிருந்து கொள்ளையடித்த பெரும் பொருள்கள் ஆகியவற்றுடன் அவர் கசினியை அடைந்தார்.

சுகபாலரின் முடிவு

துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்த இலாக்கான்கள் (இது அவ்வரசர்கள் அனைவரின் பொதுப் பெயராகும்) சாமானீ அரசின் வடபகுதியைப் பெற்று, பொகாராவிலிருந்தவாறு ஆண்டு வந்தனரென்பதை முன்பே படித்தோம். கி.பி. 1006-07-ல் இலாக்கானான முதலாம் அபுல் ஹுசைன் நாசர் என்பவர் கசினி அரசின் பகுதிகளான கொராசான், பல்க் ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். மகமூத் கசினிக்குத் திரும்பிப் படையைத் திரட்டி, இலாக்கானைப் பல போர்களில் தோற்கடித்து விரட்டினார். பல்கில் பெய்த கடுமையான பனி காரணமாகவும், சுகபாலர் பகைவராகிவிட்டாரென்ற செய்தி வந்ததாலும், வடக்கில் தமது போர்களை முடித்துக் கொண்டு பல்கிலிருந்து கசினிக்கு வந்து அங்கிருந்து உடனேயே இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார் மகமூத்.

இலாக்கானுடன் போரில் ஈடுபட்டிருந்த மகமூத் துவக்கத்தில் சில களங்களில் தோல்வியுற்றதைக் கண்டு அவரது முடிவு நெருங்கிவிட்டதென்று சுகபாலர் கருதினார் போலும்! இஸ்லாத்தையும் நவாஸ் ஷா என்ற பெயரையும் துறந்து, மீண்டும் இந்துவாக மாறி, சுதந்திரமான அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார் இவர். முஸ்லிம் அதிகாரிகள் விரட்டப்பட்டனர். கசினி மகமூத் வைகிந்தை நோக்கிப் புறப்பட்டார். ஏற்கெனவே வைகிந்த் பகுதியில் மகமூதிடமிருந்து பெரும் பெரும் நிலப் பண்ணைகளைப் பெற்றிருந்த நிலமானியப் பிரபுக்கள் ஒன்றுதிரண்டு, சுகபாலரைத் தோற்கடித்துக் கைது செய்து மகமூதிடம் ஒப்படைத்தனர் (கி.பி. 1007). சுகபாலர் சிறையிலடைக்கப்பட்டு, மரணமுறும் வரையில் கைதியாகவே வாழ்ந்தார்.

ஆனந்தபாலரின் தோல்வி : வைகிந்த் போர்

அடுத்த ஆண்டில் சாகி அரசர் ஆனந்தபாலருக் கெதிராக ஒரு படையெடுப்பைக் கசினி மகமூத் மேற்கொண்டார். முன்பு மூல்தானுக் கெதிராக மகமூத் படையெடுத்துச் சென்ற போது ஆனந்தபாலர் அவரை வழிமறிக்க முயன்றதே இப்படையெடுப் புக்குக் காரணமென்று கூறப்படுகிறது. உஜ்ஜெயினி, குவாலி யர், காலிஞ்சர், கனோஜ், டெல்லி, அஜ்மீர் முதலியவற்றின் அரசர்கள் தத்தம் படைகளை அனுப்பி ஆனந்தபாலருக்கு உதவி யதாக ஃபெரிஷ்தா எழுதுகிறார். (ஜெயபாலர் காலத்திலும் இவ் வாறே பல வடஇந்திய அரசர்கள் படையுதவி செய்ததாக ஃபெரிஷ்தா குறிப்பிட்டுள்ளதை முன்பே படித்தோம்.) பஞ்சா பில் வாழ்ந்து வந்த கொக்கர் அல்லது கக்கர் (Khokars or Gakhars) என்ற மலைக் குலத்தினரும் ஆனந்தபாலருடன் இப் பொழுது சேர்ந்து கொண்டனர். இந்துப் படைகள் வைகிந்துக் கும் பெஷாவருக்குமிடையில் முகாமிட்டு மகமூதின் தாக்குதலை எதிர்நோக்கித் தயாராக இருந்தன. கசினிப் படைகள் ஏற் கெனவே பெஷாவரை யடைந்து, பின்னர் மேலும் முன்னேறி, இந்துப் படைகளுக் கெதிராக முகாமிட்டிருந்தன. நாற்பது நாட்கள் வரையில் ஒருவரது தாக்குதலை மற்றவர் எதிர்நோக்கி விழிப்பாகக் காத்திருந்தனர். இந்துக்களின் சேனை பெரிது என் பதை முற்கூட்டியே அறிந்திருந்த மகமூத், வழக்கத்துக்கு மாறாக ஒரு மிகவும் பெரிய படையுடன், பலத்த முன்னேற்பாட்டுடனும் எச்சரிக்கையுடனும் போர்க்களத்துக்கு வந்திருந்தாரென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். வழக்கமாக மிகுந்த துணிச்சலுடன் தாமே தாக்குதலைத் துவக்கும் சுபாவ முள்ள மகமூத் இப்பொழுது தமது படை முகாமைச் சுற்றிலும் ஆழமான அகழிகளைத் (trenches) தோண்டுவித்துப் பலத்த காவல் அமைத்திருந்ததாகவும், இந்துப் படைகளே முதலில் தாக்குதலைத் தொடங்கட்டுமென்று காத்திருந்ததாகவும் முஸ்லிம் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவரது முன்னெச்சரிக்கையையும் திட்டங்களையும் உண ராத சாகிகள் அவசரப்பட்டுத் தாக்கத் துவக்கினர். உடலில் கவசமோ காலில் காலணிகளோ அணியாத 30,000 கொக்கர்ப் படையினரே இந்து சேனையில் முன்னணியில் நின்றனர். முஸ் லிம்களின் காவல் நிலைகள் தகர்க்கப்பட்டு, பாதுகாப்பு அகழி கள் இந்துக்களால் கடக்கப்பட்டன. சிறிது நேரத்திலேயே ஐயா யிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பின்வாங்குவதற்கும்கூட மகமூத் தயாராயிருந்த நிலையில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஆனந்தபாலரைச் சுமந்து வந்த யானை மதங்

கொண்டு, கட்டுக்கடங்காமல் போர்க்களத்தை விட்டு அப் பொழுது ஓடலாயிற்று. தங்களுடைய அரசர் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டு ஓடுகிறுர் போலும் என்று தவருகப் புரிந்து கொண்ட சாகிப்படையினர் தாங்களும் புறமுதுகு காட்டிச் சிதறி ஓடினர். உற்சாகமடைந்த முஸ்லிம் வீரர்கள் இந்துக்களை விரட்டிச் சென்று, ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்று குவித்தனர். எவ்வளவு இந்தியர் கொல்லப்பட்டன ரென்பதைப் பற்றி வெவ்வேறு நூலாசிரியரும் வெவ்வேறு எண்ணிக்கையைத் தருகின்றுர். இவையனைத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல எனினும், இந்துக்கள் படுதோல்வியுற்றனர் என்பது மட்டும் உண்மை.

இந்துக்களை விரட்டிக்கொண்டு மகமூதின் படைகள் பீம்நகர் வரையில் முன்னேறின. அவ்வூர் நகர்கோட் (Nagarkot) எனவும் வழங்கப்பட்டது. இன்று கோட்காங்ரா (Kot Kangra) என்று அது அழைக்கப்படுகிறது. [கோட் காங்ராவுக்கு அருகில் ஒரு மைல் தொலைவில் இன்று உள்ளது பீம் நகர். நகர்க் கோட்டையானது (நகர்கோட்) பீஸ் (Beas) நதியின் கரையில் இன்றும் ஒரு குன்றின்மீது உள்ளது.] நீரால் சூழப்பட்ட குன்று ஒன்றின் மீது அமைந்திருந்த அக் கோட்டையில்தான் சாகி களின் பொக்கிஷங்களனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந் தனவாம். பகைவர்கள் அவ்வளவு தூரம் வருவார்களென்பதைச் சற்றும் எதிர்பாராத காரணத்திஞல் அக் கோட்டை போதிய பாதுகாப்பில்லாம லிருந்தது. அக் கோட்டைக்குள்ளிருந்த ஆல யத்தின் பிராமணர்கள் ஏழு நாட்கள் வரையில் படையுதவி வரும் என்று காத்திருந்த பின், தம்மைச் சூழ்ந்திருந்த முஸ்லிம் படைகளிடம் சரணடைய முடிவு செய்தனர். மகமூத் கோட்டைக்குள் அனுமதிக்கப்பட்டார். அங்கு ஏழு லட்சம் தங்கக் காசுகள் (dinars), எழுநூறு மணங்கு எடையுள்ள தங்க-வெள்ளிப் பாத்திரங்கள், இருநூறு மணங்கு சொக்கத் தங்கம், இரண்டாயிரம் மணங்கு வெள்ளி, இருபது மணங்கு எடையுள்ள நவரத்தினங்கள் ஆகியவை அவருக்குக் கிடைத்தனவாம். இப் பெரும் நிதிக் குவியலுடன் கி.பி. 1009-ல் மகமூத் கசினிக்குத் திரும்பிஞர். அங்கு அவரது அரண்மனையெதிரில் கம்பளங்கள் விரிக்கப்பட்டு, இச் செல்வம் கொட்டிக் குவடு கட்டப்பட்டுக் குடிமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட தாம்! துருக்கிஸ்தானம் போன்ற அண்டை நாடுகளிலிருந்து கூட அரச தூதர்கள் இந்தச் செல்வக் குவியலைப் பார்வையிடுதற் கென்று வந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டாவது வைகிந்த் போரும், நகர்க்கோட்டையைக் கைப்பற்றியதும்

(கி.பி. 1008-09) மகமூதின் மிகப் பெரிய வெற்றிகளுள் ஒன்ருகும்.

நாராயண்மீது படையெடுப்பு

கி.பி. 1009-ல் மீண்டுமொருமுறை இந்தியாவின் மீது மகமூத் படையெடுத்தாரென்று உத்பீ தெரிவிக்கிருர். இப் படையெடுப்பு இந்தியாவுக்குள் சற்றுத் தொலேவில் அமைந்திருந்த நாராயண் என்ற ஊருக்கெதிராக நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ராஜஸ்தானத்தில் ஆல்வார் (Alwai) சிற்றரசிலிருந்த நாராயண்பூர் (Narayanpur) என்ற ஊரே இது எனக் கன்னிங்ஹாம் அவர்கள் கருதுகின்ருர். நாராயணின் அரசர் போரில் தோற்கடிக்கப்பட்டு, அவ்வூரிலிருந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டு, ஏராளமான கொள்ளேப் பொருட்களோடு மகமூத் கசினிக்குத் திரும்பினுர். மகமூதுடன் உடன்படிக்கை செய்து கொள்ள ஆனந்தபாலர் எண்ணி, தமது தூதர்களே இப் போருக்குப் பின்னர் கசினிக்கு அனுப்பினுரென்று உத்பீ எழுதுகிருர். அத் தூதர்கள் சுல்தான் மகமூதிடம் ஆனந்தபாலரின் சமாதான விருப்பத்தைச் சொல்லி, அவருக்கு ஆனந்தபாலரது நல்வாழ்த்துகளேயும் தெரிவித்தனராம். இறுதியில், ஆண்டு தோறும் முப்பது யானேகளேயும், இரண்டாயிரம் சேவகர்களேயும் மகமூதுக்கு அளிப்பதாக ஆனந்தபாலர் உறுதி கூறினுர். சாகி அரசருக்கெதிராக இனிப் போர் தொடுப்பதில்லேயென்று மகமூத் உறுதியளித்தார். ஆனந்தபாலரின் மரணம் வரையில் இந்த உடன்படிக்கையை இரு தரப்பினருமே மீருமல் பேணி வந்தனர். சாகி அரசின் வழியாக யமுனே-கங்கைச் சமவெளியை நோக்கி கசினி சுல்தானின் படைகள் செல்வதற்கு இதனுல் வழிப்பாதை திறந்துவிட்டது.

கோர் நகரம் கைப்பற்றப்படுதல்

கி.பி. 1010-ல் கசினிக்கு வடக்கிலிருந்த கோர் அரசின்மீது கசினி சுல்தான் படையெடுத்தார். கூர்—Ghur—என்பதே சரியான உச்சரிப்பாகுமென்று உல்ஸ்லி ஹேக் போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழில் கோரி என்றே வழக்கமாக இது குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. (கோரி என்ருல் கோர் நகரைச் சேர்ந்தவன் என்பது பொருள்.) இச் சிற்றரசானது தாஜிக் (Tajik) அல்லது பாரசீகச் சிற்றரசரான முகம்மது-இப்னு-சூரி (Suri) என்பவரால் அப்பொழுது ஆளப்பட்டு வந்தது. எக் காரணத்திஞல் இதன்மீது சுல்தான் மகமூத் படையெடுத்தாரென்பது தெரியவில்லே. கோரி வீரர்கள் பத்தாயிரம் பேர்

மிகுந்த வீரத்துடன் போரிட்டனரெனினும், இறுதியில் தோற் கடிக்கப்பட்டனர். மகமூதிடம் கைதியாகக் கொண்டுவரப்பட்ட முகம்மது-இப்னு-சூரி நஞ்சு தோய்ந்த ரத்தினமொன்றினை விழுங்கித் தற்கொலை செய்து கொண்டார். கோர் அரசு கசினிப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று.

மூல்தான்மீது அடுத்த படையெடுப்பு

கி.பி. 1006-ல் மகமூதுக்குப் பணிந்தும், கப்பம் செலுத்த இணங்கியும் தம்மைக் காப்பாற்றிக் கொண்ட மூல்தானின் அமீர் தாவூத் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை போலும்! எனவே, மீண்டுமொருமுறை கி.பி. 1010ஆம் ஆண்டு இறுதி யில் மூல்தானின்மீது சுல்தான் மகமூத் படையெடுத்து வந்தார். தாவூதைப் போரில் தோற்கடித்துச் சிறைப்பிடித்து, ஏராள மான இஸ்மாயீலிகளின் கைகளையும் கால்களையும் வெட்டியும், அவர்களைக் கொன்றும் குவித்த பின், இஸ்லாமிய சமயத்துக்குப் பெருந்தொண்டு ஆற்றிவிட்ட மனநிறைவோடு மகமூத் கசினிக்குத் திரும்பினார். மூல்தான் கசினியரசின் ஒரு பகுதி யாயிற்று. கோர்ப் பிரதேசத்தில் ஒரு கோட்டையிலடைக்கப் பட்டுக் கைதியாகவே தாவூர் உயிர் நீத்தார்.

தானேசுவரப் படையெடுப்பு

கி.பி. 1011-ல் தானேசுவரத்தின்மீது படையெடுப்பதற்கு மகமூத் முடிவு செய்தார். அவ்வூரிலிருந்த சக்கரசுவாமி ஆலயம் இந்துக்களுக்கு ஒரு புனிதத்தலமாக விளங்கிற்றென்றும், அதில் ஏராளமான பொன்னும் மணியும் பாதுகாப்பாக வைக்கப்பட் டிருந்தன என்றும் மகமூதுக்குச் செய்தி வந்ததாம். மேலும், போருக்கு மிகவும் பயன்படக்கூடிய இலங்கையைச் சேர்ந்த உயர்ந்த சாதி யானைகள் பல அந் நகரிலிருந்தன என்ற செய்தி யும்கூட இப் படையெடுப்புக்குக் காரணமென்று சொல்லப்படு கிறது. அவ்வூரைக் கொள்ளையிடும் நோக்கத்தோடு கி.பி. 1011-ல் தலைநகரை விட்டுக் கசினி சுல்தான் புறப்பட்டார். சாகிப் பிரதேசத்தினூடேயே கசினிப் படைகள் கடந்து சென் றன. தாம் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்துக்குக் கட்டுப் பட்டு, அவற்றை ஆனந்தபாலர் தடுப்பதற்கோ எதிர்ப்பதற்கோ முன்வரவில்லை. ஆயினும், புண்ணியத்தலமான தானேசு வரத்தைத் தாக்க வேண்டாமென்று மகமூதுக்கு ஆனந்தபாலர் ஒரு வேண்டுகோளை விடுத்தார். அதற்கு ஈடாகப் பெரும் பொருளைத் தருவதாகவும் அவர் உறுதி கூறினாராம். எனினும், மகமூத் தமது திட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனந்த பாலரின் தம்பி இரண்டாயிரம் படைவீரர்களோடு கசினி

மகமூதின் உதவிக்கென்று அனுப்பப்பட்டார். சாகி அரசிலிருந்த வணிகர்கள் முதலியோர் முஸ்லிம் படைகளுக்கு எல்லா உதவிகளும் அளிக்குமாறு ஆனந்தபாலரால் வேண்டப்பட்டனர். இவ்வாறு பல நாட்கள் முன்னேறி, தேரா (Dera) என்ற ஒரு பகுதியைக் கசினிப் படைகள் சென்று எட்டின. அது நதியொன்றின் கரையிலிருந்ததென்று கூறப்படுகிறது. அதன் சிற்றரசரான ராமர் என்பவர் முஸ்லிம் படைகளை எதிர்த்துத் தோல்வியுற்றார். போரின் முடிவில் ஏராளமான யானைகள் கசினிப் படைகளிடம் சிக்கின.

தானேசுவரமானது அப்பொழுது டெல்லி அரசருக்குச் சொந்தமாயிருந்தது. அவ்வரசர் அண்டை அரசர்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து, உதவி வேண்டினார். எவருடைய உதவியும் வந்து சேர்வதற்கு முன்பதாகவே முஸ்லிம் படைகள் தானேசுவரத்தை எட்டின. அரசர் நகரை விட்டோடினார். போரின்றித் தானேசுவர நகருக்குள் முஸ்லிம் படைகள் நுழைந்தன. அந் நகரம் பெரும் கொள்ளைக்கு ஆளாயிற்று. ஆலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, அவற்றிலிருந்த செல்வங்கள் முற்றும் அபகரிக்கப்பட்டன. சக்கரசுவாமியின் வெண்கலச் சிலை கசினிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, குதிரைப் பந்தய மைதானத்தில் போடப்பட்டு, குதிரைகளின் குளப்படியில் மிதிபட்டதாக அல்பெருனி எழுதியுள்ளார். சக்கரத்தைக் கையிலேந்திய விஷ்ணுவைச் சக்கரசுவாமி என்று அல்பெருனி குறிப்பிட்டுள்ளார். நேராக டெல்லியை நோக்கிச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்பினாரென்றாலும், ஆனந்தபாலரது ஒத்துழைப்பை முற்றிலும் நம்பி இப் படையெடுப்பை மேற்கொள்வது ஆபத்தானது என்று அதிகாரிகள் அறிவுரைகளை உபதேசித்தனர். அவ்வுபதேசத்தை ஏற்றுத் தம் நகருக்கு சுல்தான் மகமூத் திரும்பினார். அவ்வாறு திரும்பும் வழியில் ஆனந்தபாலர் பல விதங்களிலும் கசினிப் படைகளுக்கு உதவிகள் புரிந்தார்.

கலீஃபாவுடன் தகராறுகள்

கி.பி. 1012-ல் மகமூதின் படைகள் ஆப்கானிஸ்தானத்தை அடுத்திருந்த கர்ஜிஸ்தான் (Gharjistan) என்ற பிரதேசத்தைக் கைப்பற்றின. பின்னர், கலீஃபாவான அல் காதர் பில்லாவின் வசம் கொராசானில் எஞ்சியிருந்த சில மாநிலங்களைத் தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு அவருக்கு மிரட்டல் கடிதம் எழுதினார் மகமூத். கலீஃபா இதற்கு இணங்க வேண்டியவராயினார். இதையடுத்து, சமர்க்கந்தையும் (Samarkhand) கலீஃபா தம்மிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று மற்றொரு கோரிக்கையை

மகமூது விடுத்தார். இதற்கு இணங்க முடியாதென்று கலீஃபா பதில் கடிதம் எழுதியதும், மிகுந்த வெறிகொண்டு, அவர்மீதே படையெடுத்து கலீஃபாவின் தலைநகரத்தைக் கைப்பற்றிச் சூறையிடப் போவதாக அவரது தூதரிடம் மகமூத் மிரட்டினார். எனினும், இத்தகைய செயலின் விளைவுகளைப்பற்றிப் பின்னர் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்த பொழுது, இஸ்லாமிய உலகில் தமக்குப் பெருத்த அவமானமே விளையுமென்பது அவருக்குப் புரிந்தது. எனவே, கலீஃபாவிடம் அவர் மன்னிப்புக் கோர வேண்டிய நிலை உருவாயிற்று. ஆயினும், கலீஃபா சுயமே முன்வந்து, சமர்க்கந்தை மகமூதிடம் ஒப்படைப்பதற்கு இணங்கினார் (கி.பி. 1013). இவ்வாறு கசினிப் பேரரசு வடக்கில் மேலும் விரிவடைந்தது.

திரிலோசனபாலரின் மீது போர்

மகமூதின் தானேசுவரப் படையெடுப்புக்குப் பின் ஆனந்த பாலர் மரணமடைந்து அவரது மகன் திரிலோசனபாலர் சாகி அரியணைமீது ஏறியிருந்தார். வைகிந்த் நகரம் கைப்பற்றப்பட்ட பின், சால்ட் மலைப்பிரதேசத்திலிருந்த நந்தனம் (Nandana) என்ற ஊர் சாகிகளின் தலைநகராயிருந்தது. திரிலோசனபாலரின் மகன் நிடர் பீமபாலர் என்று முஸ்லிம் எழுத்தாளர்களால் குறிப்பிடப்படுகின்றார். நிடர் (Nidar) என்றால் அச்சமில்லாதவர் என்று பொருளாம்.[1] இவர் கசினியுடன் சுமுக உறவுகளை நீடிக்க விரும்பவில்லையென்றும், எனவே இவராலேயே சாகி அரசின் மீது சுல்தான் மகமூத் மீண்டும் படையெடுக்கவேண்டியிருந்தது என்றும் சொல்லப்படுகின்றன. கி.பி. 1013-ம் ஆண்டில் கசினியை விட்டு சுல்தான் புறப்பட்டார். பனிக்காலம் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டிருந்ததால், எல்லைக் கணவாய்களை அவரால் கடக்க முடியவில்லை. எனவே, எல்லையிலேயே ஓரிரு மாதங்கள் தங்கியிருந்து, இளவேனிற் காலம் வந்தபின், கி.பி. 1014-ல் மேலும் அதிகப்படைகளுடன், உயர்ந்த மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், பெருகியோடிய நதிகளையும் மிகவும் சிரமத்துடன் இரண்டுமாத காலம் கடந்து, நந்தனத்தைக் கசினிப் படைகள் நெருங்கின. திரிலோசனபாலர் இப் படையெடுப்பை எதிர்பார்க்கவேயில்லை. பீமபாலர் படைத்தலைமை ஏற்று, ஒரு கணவாயை அடைத்து நின்றார். இது ஜீலம் நதிக்கு வெகு அண்மையிலிருந்த மர்கலாக் கணவாயாகவே (Margala Pass) இருக்கவேண்டுமென்று எலியட் கருதுகிறார். சாகிகளின் தரப்பில் காஷ்மீர அரசர் சங்கராமராஜரது படையணியொன்று

[1] 'டர்' (Dar) என்னும் உர்தூ சொல் அச்சம் என்று பொருள்தரும். அதன் எதிர்மறை 'ந-டர்'. இது 'நி-டர்' என்று திரிந்தது.

துங்கரின் தலைமையில் வந்து போரிட்டது. போர் பல நாட்கள் இடைவிடாமல் நடைபெற்றது. சாகிப் படைகளைக் கணவாயி லிருந்து மகமூதால் விரட்டியடிக்க முடியவில்லை. எனினும், அவசரப்பட்டு முன்னேறித் தாக்குவதற்கு முயன்ற காஷ்மீரப் படைத்தலைவர் துங்கர் தோற்கடிக்கப்பட்டார்.

விரைவிலேயே பீமபாலருக்கு உதவியாகப் புதிய படைகள் வந்து சேர்ந்தன. இதனால் துணிச்சல் பெற்ற பீமபாலர் கண வாயை விடுத்துச் சமவெளிக்கு வந்து பகைவர்களை எதிர்க்க முற்பட்டார். கடுமையான சண்டை மூண்டது. முஸ்லிம் படைத்தலைவர்கள் பலர் அம்பு பாய்ந்து காயமுற்றனர். எனி னும், முடிவில் சிந்துப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான சாகிவீரர்களைக் கொன்று, நூற்றுக் கணக் கான யானைகளைக் கைப்பற்றினர் கசினிப் படையினர். பீம பாலர் நந்தனத்துக்குப் பின்வாங்கிச் சென்று, அதன் பாது காப்புக்கென ஒரு பெரும் படையை நிறுத்திவிட்டு, தம் தந்தை யுடன் காஷ்மீர்ப் பள்ளத்தாக்குக்குப் பின்வாங்கினர். பாலநாத் (Balanath) என்றும், தில்லா (Tilla) என்றும் அழைக்கப்படும் குன்றின் மீதமைந்திருந்த நந்தனநகரை முஸ்லிம் படைகள் முற்றுகையிட்டன. (தில்லா என்றாலே அப் பிரதேசத்து மொழி யில் மலை என்றே பொருள்.) விரைவிலேயே கோட்டை வீழ்ச்சி யுற்றது. அவ்வூரிலிருந்த பெருஞ் செல்வமனைத்தும் மகமூதின் வசம் சிக்கின. சாகி அரசின் பெரும் பகுதி மகமூதால் இணைத்துக் கொள்ளப்பட்டது.

நந்தனத்திலிருந்து காஷ்மீர்ப் பள்ளத்தாக்கை நோக்கி மகமூத் சென்றார். அங்கு இவரால் தோற்கடிக்கப்பட்ட திரி லோசனபாலர் கிழக்குப் பஞ்சாபுக்கு ஓடினர். ஏராளமான இந்துக்களை அடிமைகளாக்கி, கசினிக்கு அவர்களைத் தம்மோடு மகமூத் இழுத்து வந்தார். நந்தனத்தில் சாருக் (Sarugh) என்ற ஒரு படைத்தலைவன் முஸ்லிம் ஆளுநனாக நியமிக்கப்பட்டான்.

காஷ்மீர்மீது மீண்டும் படையெடுப்பு

அடுத்த ஆண்டில் (கி.பி. 1015) மீண்டுமொருமுறை காஷ்மீர்மீது கசினி சுல்தான் படையெடுத்தார். முன்பு வெல்ல முடியாத காஷ்மீரத்தை இப்பொழுது வெல்வதற்காகவே இப் படையெடுப்பு நிகழ்த்தப்பட்டதெனத் தெரிகிறது. லோகோட் (Lohkot) எனவும் லோகர்கோட் (Loharkot) எனவும் அழைக்கப் பட்ட ஒரு மலைக்கோட்டையே இவரால் முதலில் தாக்கப்பட் டது. இன்று லொஹாரின் (Loharin) என்று இவ்வூர் அழைக்கப்

படுகிறது. பல மாதங்கள் முற்றுகையிட்டும், இக் கோட்டையை அவரால் கைப்பற்ற முடியவில்லை. காஷ்மீரத்திலிருந்து புதிய துருப்புகள் கொண்டுவரப்பட்டு, லோகோட்டிலிருந்த இந்துப் படைகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. கோடைக்காலம் முடிவுற்று, மூடுபனி சூழத் துவங்கிற்று. தாமிட்ட திட்டத்தில் வெற்றி பெறுமல், கசினியை நோக்கி சுல்தான் திரும்பிஞர். பழக்கமில்லாத மலைப்பகுதிகளில் கசினிப்படைகள் வழி தெரியாமல் அங்குமிங்கும் அலைந்தன. பனிமாரியிலும் பெருவெள்ளத்திலும் ஏராளமான படைவீரர்கள் மடிந்தனர். இறுதியில் ஒருவாறு மலைப்பிரதேசத்திலிருந்து வெளியேறிக் கசினியை 1016-ல் அவர் சென்று அடைந்தார்.

குவாரிசம் கைப்பற்றப்படுதல்

வடக்கில் குவாரிசம் (Khwarizm) அரசை ஆண்டு கொண்டிருந்த அபுல் அப்பாஸ் மாமூன் (Abul Abbas Mamun) என்பவர் மகமூதின் தங்கையை மணந்திருந்தார். இத் திருமணத்துக்குப் பின் ஓராண்டிலேயே குவாரிசத்தில் கிளர்ச்சியொன்று ஏற்பட்டு அபுல் அப்பாஸ் கொல்லப்பட்டார். காஷ்மீரத்திலிருந்து கசினிக்குத் திரும்பிய சுல்தான் இதனையறிந்து, ஒருபெரும் படையுடன் சென்று, கிளர்ச்சிக்காரர்களைத் தோற்கடித்து, குவாரிசத்தைக் கைப்பற்றி, தமது தளபதிகளுள் ஒருவரான அல்தூனுஷ் (Altunash) என்பவரைக் 'குவாரிசம் ஷா' என்ற பட்டத்துடன் அங்கு ஆளுநராக நியமித்தார். மேலும், சில பகுதிகளை வடக்கில் கைப்பற்றுவதிலும் கிளர்ச்சிகளை ஒடுக்குவதிலும் அவர் ஈடுபட வேண்டியிருந்ததால், அடுத்த ஆண்டிலும் இந்துஸ்தானத்தின்மீது மகமூதால் படையெடுக்க முடியவில்லை.

கனோஜ் படையெடுப்பு

கி.பி. 1018-ல் மேலும் மகத்தான ஒரு படையெடுப்புத் திட்டத்தினைக் கசினி சுல்தான் வகுத்தார். வட இந்தியாவில் பல பேரரசுகளுக்குத் தலைநகராக விளங்கிய புகழ்மிக்க கனோஜைக் கைப்பற்றுவது என்று திட்டமிடப்பட்டது. யமுனை-கங்கைச் சமவெளி வரையில் இவரது படைகள் செல்ல வேண்டியிருந்தமையால், பல மாதங்கள் வரையில் இதற்கான தயாரிப்புகள் மேற்கொள்ளப் பெற்றன. ஒரு லட்சம் குதிரை வீரர்கள், 20,000 காலாட் படையினர் ஆகியோரைத் துருக்கிஸ்தானம், கொராசான் முதலிய பல பகுதிகளிலிருந்தும் தருவித்து, கி.பி. 1018ஆம் ஆண்டில் குளிர்காலம் முடிந்தபின், கசினியை விட்டு மகமூத் புறப்பட்டார். சிந்து, ஜீலம், சீனுப், ராவி, பீஸ், சட்லெஜ் ஆகிய ஆறு நதிகளும் மிகுந்த சிரமத்துடன் கடக்கப்

பட்டன. வழியிலிருந்த பல சிற்றரசர்களும் கசினி மகமூதுக்குத் தமது வணக்கத்தையும் பணிவையும் செலுத்தினர். காஷ்மீரத்தைச் சேர்ந்த லொகாரா வம்சத்து அரசர் சங்கராமராஜரும் மகமூதுக்குப் படைகளை அனுப்பி வழிகாட்டினுரென்று சொல்லப்படுகிறது. கிழக்குப் பஞ்சாபில் சர்கிந்த் (Sirhind) பகுதியில் ஆட்சி புரிந்துவந்த திரிலோசனபாலர் அப் பகுதியை விட்டு, மாளவத்தை ஆண்டுகொண்டிருந்த பரமார அரசரிடம் சென்று அடைக்கலம் புகுந்தார். மூன்று மாத நெடும் பயணத்துக்குப் பிறகு யமுனையைக் கசினிப் படைகள் அடைந்தன. டிசம்பர் இரண்டாம் தேதி யமுனை நதியைக் கடந்து, அதன் கிழக்குக்கரை ஓரமாகவே தெற்கு நோக்கி அப் படைகள் சென்றன. டெல்லியைக் கைப்பற்றும் நோக்கம் அவற்றுக்கில்லை. இன்று உத்தரப் பிரதேசத்தில் புலந்த்ஷகர் (Buland-shahr) என்றழைக்கப்படும் பரண் (Baran) என்ற ஊரினைக் கசினி சுல்தான் அடைந்தார். அவ்வூரின்மீது ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ஹர்தத் (Hardat) என்பவர் முஸ்லிம்களின் பெருஞ் சேனையைக் கண்டு ஓடிவிட்டாரென்று சிலர் எழுதுகின்றனர். உத்பீ போன்ற வேறு சிலர் ஹர்தத் தம்முடனிருந்த 10,000 போர் வீரர்களுடன் மகமூதிடம் சரணடைந்தாரென்று கூறுகின்றனர். இப் பதினுயிரம் போர்வீரர்களும் முஸ்லிம்களாக மதம் மாறுவதற்கு இணக்கம் தெரிவித்துத் தங்கள் உயிரைக் காத்துக் கொண்டனர். உயிர்ப்பிச்சைக்குக் கூலியாகப் பத்து லட்சம் திர்ஹம்களையும் முப்பது யானைகளையும்கூட அவர்கள் தரவேண்டியிருந்தது. இத்தகைய செல்வங்களின் விளைவாக, பரண் நகரம் படுநாசப் பேரழிவிலிருந்து காக்கப்பட்டது.

இதையடுத்து, மதுரா மாவட்டத்தில் யமுனை நதிக் கரையிலுள்ள மகாபன் (Mahaban) மகமூதின் இலக்காயிற்று. யமுனையின் கிழக்குக் கரையிலிருந்த அவ் ஊரைக் குல்சந்த் என்ற சிற்றரசர் ஆண்டுவந்தார். இவர் தமது தலைநகரைக் கைவிட்டு, காட்டிலிருந்த ஒரு கோட்டைக்குத் தமது படைகளுடன் பின்வாங்கினுர். அங்கு இருதரப்பினருக்கும் கடுஞ்சண்டை நிகழ்வுற்றது. தோல்வியடைந்த இந்துக்களில் பலர் யமுனையில் குதித்து உயிர் தப்பினர். குல்சந்த் தம் மனைவியையும் இளம் மகனையும் கொன்றுவிட்டு, தற்கொலை செய்து கொண்டார். கிட்டத்தட்ட ஐயாயிரம் இந்துக்கள் இப் போரில் கொல்லப்பட்டனர். சுமார் இருநூறு போர் யானைகளும் வேறு செல்வங்களும் முஸ்லிம்களின் கையில் சிக்கின.

அடுத்தபடியாக, யமுனையின் மறுகரையில் (மேற்குக் கரையில்) அமைந்திருந்த புராதன நகரமான மதுராபுரியை நோக்கி

முஸ்லிம் படைகள் சென்றன. புண்ணிய நகரங்களில் ஒன்ருகக் கருதப்படும் இவ் வூரில் செல்வம் நிறைந்த ஆலயங்கள் ஏராள மாக இருந்தன. பலத்த கற்சுவரால் சூழப்பட்டிருந்த இந் நகருக்கு நதிக்கரையில் இரண்டு உயரமான வாயில்கள் இருந் தன. டெல்லி அரசரால் அது ஆளப்பட்டு வந்ததென்று கூறப் படுகிறது. ஆயினும், எந்தவிதமான எதிர்ப்புமில்லாமலே அந் நகரினுள் கசினி சுல்தானின் படைகள் நுழைந்தன. அந் நகரின் அருகிலிருந்த மாபெரும் ஆலயமும் மற்ற ஆலயங்களும் கொள்ளை யிடப்பட்டன. இவற்றிலிருந்த ஐந்து தங்க விக்கிரங்களைப்பற்றி முஸ்லிம் நூலாசிரியர்கள் விரிவாக விவரித்துள்ளனர். இவை, இருநூறு வெள்ளி விக்கிரகங்கள், கோவிலிலிருந்த பொன், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவற்றையும் கைக் கொண்ட பின், எல்லா ஆலயங்களையும் தீயிட்டு அழிக்குமாறு மகமூத் ஆணையிட்டார். இருபது நாட்கள் வரையில் அந் நகரம் முழு வதும் சூறையாடப்பட்டது. செல்வம் முழுவதையும் கவர்ந்து கொண்ட பின், அவ் வூரைச் சாம்பலாக்கிவிட்டுக் கசினி சுல்தான் கனோஜை நோக்கி முன்னேறினர்.

மதுராவுக்கு அண்மையிலிருந்த பிருந்தாவனமும், அங் கிருந்த மாளிகைகளும் கோட்டைகளும் அடுத்தபடியாகக் கொள்ளையிடப்பட்டன. பின்னர், வழி நெடுகிலுமிருந்த பல இடங்களையும் கைப்பற்றிய பின், டிசம்பர் இருபதாம் தேதி மகமூத் கனோஜ் நகரை அடைந்தார். பலத்த அரண்களாலும் ஏழு கோட்டை வாயில்களாலும் சூழப்பட்டிருந்த அந் நகரத்தில் 10,000 ஆலயங்க ளிருந்தனவாம். அதை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ராஜ்யபாலர் அச்சமுற்று, கங்கையின் மறு கரைக்கு ஓடி, பரீ (Bari) என்ற நகரில் அடைக்கலம் புகுந்தார். ஆயிரக்கணக்கான நகரவாசிகளும் ஊரை விட்டோடினர். ஒரே நாளில் ஏழு கோட்டைகளையும் கைப்பற்றி, எஞ்சியிருந்த மக்க ளனைவரையும் வாளுக்கிரையாக்கி, ஊரைக் கொள்ளையிட்டன கசினிப் படைகள். வழக்கம்போல எல்லா ஆலயங்களும் அழிக் கப்பட்டன. ராஜ்யபாலர் மகமூதுக்குப் பணிந்து போவதாகச் சொல்லி, சமாதானம் செய்து கொண்டு, கனோஜுக்குத் திரும்பி வந்து, எண்பத்தைந்து யானைகளையும், பெருமளவிலான பொன் னையும் மணியையும் அவருக்குக் கப்பமாகக் கொடுத்தார் என ஒரு சான்று தெரிவிக்கிறது.

கனோஜிலிருந்து புறப்பட்டு முஞ்ச் (Munj) என்ற நகரை சுல்தான் மகமூத் அடைந்தார். கான்பூருக்குப் பத்து மைல் தெற்கில் ஒன்றும், எட்டாவாவுக்குப் (Etawah) பதினுன்கு மைல்

வடகிழக்கில் மற்றென்றுமாக மஞ்சவன் (Manjhawan) என்ற பெயரில் இரண்டு ஊர்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றே முஞ்ச் என்று ஊகிக்கப்படுகிறது. இவ்வூர்க் கோட்டையிலிருந்த துருப்புகள் இருபத்தைந்து நாட்கள்வரை போரிட்ட பின், தோல்வியெய்தின. அவ் வூரிலிருந்த பலர் பெண்டு பிள்ளைகளுடன் தீயில் வீழ்ந்து மடிந்தனர். அவ் வூரையும் கொள்ளையிட்ட பின், இன்றைய ஃபத்தஹ்பூருக்கு (Fatehpur) அண்மையிலுள்ள அஸ்னி (Asni) என்ற ஊரை மகமூத் அடைந்தார். இதன் அரசர் சந்திரபால் பூர் (Chandrapal Bhur) என்று அழைக்கப்படுகிறார். முஸ்லிம்களின் படை அவரது கோட்டையை நெருங்கியதும், அவ் வரசர் தைரியமிழந்து ஓட்டம் பிடித்தார். அக் கோட்டையைக் கைப்பற்றியழித்து, ஊரிலிருந்த அனைவரையும் கொன்று தீர்த்த பின் ஷர்வா (Sharva) என்ற ஊரை நோக்கி மகமூத் புறப்பட்டார். திரிலோசனபாலரின் மகனை நிடர் பீமபாலர் ஷர்வாவின் அரசர் சாந்த் ராய் (Chand Rai) என்பாரின் மகளை மணந்திருந்தார். ஆனால், சாகிகளுக்கும் இவருக்குமிடையே பகைமை மூண்டு, பீமபாலர் தம் மாமனாரின் சிறையில் கிடந்து வாடினார். சுல்தான் மகமூதை எதிர்ப்பது இயலாது என்று பீமபாலர் எடுத்தியம்பிய அறிவுரையை ஏற்றுச் சாந்த்ராய் செல்வமனைத்தையும் எடுத்துக் கொண்டு நகரைவிட்டு வெளியேறினார். அவரைத் தேடிச் சென்று தோற்கடித்த பின் (கி.பி. 1019, ஜனவரி 6) மகமூத் திருப்தியடைந்து வந்த வழியே திரும்பலானார். பீமபாலர் எவ்வாறோ ஷர்வாவிலிருந்து தப்பித்துத் தம் தந்தையுடன் சேர்ந்து கொண்டார். இப் படையெடுப்புகளின் முடிவில் இரண்டு கோடி திர்ஹம்கள், 50,000 போர் வீரர்கள், 350 போர் யானைகள் முதலியவற்றோடு கசினிக்கு மகமூத் திரும்பினார். இச் செல்வத்தைக் கொண்டே கசினியில் ஜும்மா மசூதி என்ற புகழ்மிக்க மசூதி ஒன்றை சுல்தான் மகமூத் கட்டினாரென்று ஃபெரிஷ்தா குறிப்பிடுகிறார். கசினிப் பேரரசிலும் அதற்கப்பாலும் 'தேவலோக மணப்பெண்' (Celestial Bride) என்று இம் மசூதி பெயர் பெற்று விளங்கிற்று. அதற்கருகில் ஒரு பல்கலைக் கழகம், நூல் நிலையம், பொருட்காட்சி சாலை ஆகியவற்றையும் மகமூத் கட்டினார். பல்வேறு மொழிகளிலும் ஆயிரக்கணக்கான நூல்கள் அந் நூல்நிலையத்தில் இருந்தன.

வித்யாதரர்மீது படையெடுப்பு

அடுத்த ஆண்டிலேயே (கி.பி. 1020) கசினி சுல்தானின் மறு படையெடுப்புத் துவங்கிற்று. கசினி மகமூதிடம் கனோஜ் அரசர் ராஜ்யபாலர் பணிந்து சமாதானம் செய்து கொண்டதை

விரும்பாத சந்தெல்ல அரசர் கண்டரது (Ganda) மகனுன வித்யாதரர் ஒரு படையுடன் சென்று, ராஜ்யபாலரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டார். தமக்குக் கீழ்ப்பட்ட ராஜ்யபாலரை இவ்வாறு வித்யாதரர் கொன்றதைக் கேள்வியுற்ற கசினி சுல்தான் வெகுண்டு, அவருக்கெதிராக இப்பொழுது படையெடுத்து வந்தார். இதையறிந்த வித்யாதரர் சாகி அரசர் திரிலோசன பாலருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். ஏதோ ஒரு நதியின் கிழக்குக் கரையில் திரிலோசனபாலர் தமது படைகளை அணிவகுத்துப் போருக்குத் தயாராக இருந்தார். மறு கரையிலிருந்த கசினிப் படைகள் பகைவர்களின் எதிர்ப்புகளைச் சமாளித்து அந் நதியைக் கடந்து, அம்பு மாரி பொழிந்து, சாகிப்படையைக் கதிகலங்கச் செய்தன. திரிலோசனபாலர் தோற்றுப் போர்க்களத்தை விட்டோடினுர். அவரது 270 யானைகள் கசினி சுல்தானிடம் சிக்கின. வித்யாதரரை அடைவதற்காகச் சென்று கொண்டிருந்த திரிலோசனபாலரை இந்துக்கள் சிலர் ஏதோ காரணத்தினுல் வழிமறித்துக் கொன்றனர். திரிலோசன பாலரது மகனுன பீமபாலர் இனியும் ஐந்தாண்டுகள்வரை உயிர் வாழ்ந்தார் என்பதற்கான சான்றுகள் உள்ளன. அஜ்மீரில் இந்த ஐந்து ஆண்டுகளையும் கழித்து, கி.பி. 1026-ல் அவர் காலமானுர். ஆயினும், சாகி அரசானது திரிலோசன பாலரது தோல்விக்குப் பின் கி.பி. 1020-ல் முற்றிலுமாகக் கசினி அரசுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ராஜ்யபாலரது மரணத்துக்குப் பின் அவரது மகனுன பிரதிகார அரசர் திரிலோசனபாலர் பரீ (Bari) யிலிருந்து ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார். இவருக்கெதிராக மகமூத் புறப்பட்டுச் சென்றுர். கலவரமுற்றுத் திரிலோசனபாலர் ஓடிவிடவே, பரீ நகரம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இதனையடுத்து வித்யாதரருக் கெதிராகக் கசினிப் படைகள் சென்றன. [சந்தெல்ல அரசராக அப்பொழுது இருந்தவர் நந்தர்—Nanda—என்று முஸ்லிம் நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கண்டரது பெயரே நந்தர் என்று தவருக இவர்களால் எழுதப்பட்டது. மேலும், மகமூதின் இப் படையெடுப்பின்போது கண்டர் இறந்து வித்யாதரரே காலஞ்சர மண்டலத்தில் ஆட்சியிலிருந்தாரென்பதை உள்நாட்டுச் சான்றுகளனைத்தும் தெரிவிக்கின்றன. சில முஸ்லிம் சான்றுகள் பீடா (Bida) என்ற காலஞ்சரா அரசர் மகமூதால் தோற்கடிக்கப்பட்டாரென்று சொல்கின்றன. இந்த பீடா வித்யாதரரே என்பதில் ஐயமில்லை.] வித்யாதரர் 45,000 காலாட்படையினர், 36,000 குதிரை வீரர்கள், 640

யானைகள் முதலியவற்றுடன் போருக்குத் தயாராயிருந்தார் என்று ஃபெரிஷ்தா எழுதுகிறுர். படைகளின் இந்த எண்ணிக்கையை மேலும் மிகைபடுத்திக் கூறும் ஆசிரியர்களும் உள்ளனர். இஸ்லாமிய சமயத்தைத் தழுவி, தமக்குக் கப்பம் செலுத்திப் பணிந்து போகுமாறு கசினி சுல்தான் அனுப்பிய கோரிக்கைகள் வித்யாதரரால் நிராகரிக்கப்பட்டன. மலைமீதேறி, பகைவரின் படைப் பலத்தைக் கண்ட மகமூத் மனந்தளர்ந்து தரையில் விழுந்தழுதாரென்று சொல்லப்படுகிறது. பேரபாயத்திலிருந்து தப்பித் திரும்பிச் செல்வதே அறிவுள்ளது என்று அவர் எண்ணியிருந்த வேளையில் ஒரு சிறிய கைகலப்பு நிகழ்ந்தது. துவக்கத்தில் சிறு தோல்வி வந்தவுடனேயே நம்பிக்கையிழந்துபோன வித்யாதரர் இரவோடு இரவாகப் போர்க்களத்தைவிட்டு ஓடிப்போனுர். வித்யாதரரின் படை மிகவும் பெரிதாக இருப்பதைக் கண்டும், தாம் திரும்பிச் செல்லும் வழியை அது துண்டித்துவிடக் கூடுமென்று அஞ்சியும், மேலும் முன்னேறிச் சென்று சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் மகமூத் கசினிக்குத் திரும்பிச் செல்ல முடிவு செய்தார். வித்யாதரர் ஓடிச் சென்ற பின், அவரது படைமுகாமி லிருந்த 580 யானைகளைக் கைப்பற்றியதோடு மகமூத் திருப்தியடைந்து, வந்த வழியே மீண்டார்.

ஆக்சஸ் நதி அக்கரைப் பிரதேசத்தில் மகமூத்

கசினிக்குத் திரும்பிய மகமூத் தமது பேரரசின் வடக்கில் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்குவதற்காக உடனே அங்குச் செல்ல வேண்டியவராயினுர். ஏறத்தாழ 55,000 குதிரைகளையும், 1500 யானைகளையும் கொண்ட பெரும் சேனையுடன் வடக்கே சென்று, ஆக்சஸ் நதியைக் கடந்து, அதன் அக்கரைப் பிரதேசத்தில் (Trans-oxiana) சமர்க்கந்த் போன்ற பல சிற்றரசுகளின் அரசர்களை கசினி மகமூத் அடக்கினுர். செல்ஜூக்குகள் (Seljuqs) அப்பொழுது ஆக்சஸ் நதிக்கரையில் குடிபுக ஆரம்பித்திருந்தனர். அப் பகுதியைச் சேர்ந்த எல்லாச் சிற்றரசர்களுமே அந்த செல்ஜூக்குகளைக் கண்டு அஞ்சினர். எனவே, அவர்களை ஆக்சஸ் நதிக்கு அப்பால் கொண்டு சென்று மகமூத் குடியமர்த்தினுர். நாலாயிரம் செல்ஜூக் குடும்பங்கள் இவ்வாறு அகற்றப்பட்டு வடமேற்குக் கொராசானில் குடியமர்த்தப்பட்டன.

சோமநாதபுரப் படையெடுப்பு

கி.பி. 1024 அக்டோபர் 18-ல் இன்னுமொருமுறை இந்தியாவை நோக்கி மகமூத் புறப்பட்டார். குஜராத்திலிருந்த

புகழ்மிக்க சோமநாதர் ஆலயத்தைச் சூறையாடுவதே அவரது நோக்கமாகும். கத்தியவாரின் கடற்கரையில் அமைந்திருந்த இந்த ஆலயம் சௌளுக்கிய அரசர்களால் நன்கு ஆதரிக்கப் பட்டு, ஏராளமான செல்வத்தைக் கொண்டதாக இருந்தது. முஸ்லிம் நூலாசிரியர்கள் பலரும் அதைப்பற்றி வர்ணித்துள்ள னர். அவ் வாலயத்தின் லிங்கம் ஏழரை அடி உயரம் இருந்த தாகச் சொல்லப்படுகிறது. தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவை அந்த ஆலயத்தின் சுவர்கள், தூண்கள் போன்றவற் றில் பதிக்கப்பட்டிருந்தனவாம். அவ்வாலயத்தின் மணியை அடிப்பதற்கான சங்கிலிகூட இருநூறு மணங்கு எடையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டிருந்ததாம். பூசை செய்வதற்காக ஆயிரம் பிராமணர்களும், யாத்திரிகர்களிடமிருந்து முடி காணிக்கை வாங்குவதற்காக முந்நூறு நாவிதர்களும், தெய்வத் தின்முன் நாடோறும் ஆடல் பாடல் நிகழ்த்துவதற்காக ஆணும் பெண்ணுமாக முந்நூற்றைம்பது தேவடியார்களும் இருந்தன ரென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் எழுதியுள்ளனர். அந்த ஆலயத்துக்குச் சொந்தமாகப் பத்தாயிரம் கிராமங்கள் இருந்தன வாம். கர்ப்பக்கிரகத்துக்கு அருகிலிருந்த ஓர் அறையில் பல நூற்றுண்டுகாலமாகச் சேகரிக்கப்பட்டுவந்த தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம் போன்றவை வைக்கப்பட்டிருந்தனவாம். அல்பெருனி, ஃபெரிஷ்தா போன்ருேர் இந்த ஆலயத்தைப் பற்றித் தந்துள்ள வர்ணனைகள் படிக்கத்தக்கவை.

30,000 குதிரைப் படைகளுடனும் எண்ணற்ற காலாட் படைகளுடனும் மூல்தானை அடைந்து, அங்கிருந்து பாலைவனத் தின் வழியாகக் குஜராத்தை நோக்கி மகமூத் சென்ருர். சாகம் பரிச் சாகமான அரசர் மகமூத் வருவதை யறிந்து தமது தலை நகரைவிட்டு ஓடியதாகவும், அஜ்மீர் நகரம் கொள்ளையிடப்பட்ட தாகவும் முஸ்லிம் நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனல், இது முற்றிலும் உண்மையெனத் தெரியவில்லை. ஜெய்சால்மிருக் குப் பத்துக் கல் வடமேற்கிலிருக்கும் லோதோர்வா (Lodorva) என்ற ஊரினைப் போரிட்டு மகமூத் வென்ருர். அப்பால் வேறு பல இடங்களையும் வென்ற பின்னர், குஜராத்தின் தலைநகரான நகர்வாலாவை (Nahrwala) ஜனவரி 1025-ல் அவர் அடைந்தார் என்று சொல்லப்படுகிறது. இவ்வூர் அணகிலப்பாடகமே என்று அறிஞர்களால் கருதப்படுகிறது. மகமூதின் படைகள் வருவதை யறிந்த சௌளுக்கிய அரசர் முதலாம் பீமர் தலைநகரைவிட்டுக் கட்சிலிருந்த (Kutch) கந்தகோட் என்ற ஊருக்கு ஓடிப்போனுர். அத் தலைநகரைக் கைப்பற்றி, தமது படைகளுக்குத் தேவை யான உணவுப் பொருட்கள் முதலியவற்றைச் சேகரித்துக்

கொண்ட பின், மஹ்மூத் மீண்டும் பாலைவனத்தின் வழியாக மந்தேர் (Mundher), தேவல்வாரா (Dewalwara) ஆகிய ஊர்களை அடைந்தார். இந்த இரண்டாவது ஊர் சோமநாதபுரத்துக்கு நாற்பது கல் கிழக்கில் தேல்வாடா (Delvada) என்ற பெயரிலுள்ளது. அவ்வூரில் கடும்போர் நிகழ்ந்ததென்றும், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு, ஆலயங்கள் கொள்ளையிடப்பட்டன வென்றும் சொல்லப்படுகின்றன.

தேல்வாடாவிலிருந்து இரண்டு நாள் பயணம் செய்து சோமநாதபுரத்தை மகமூத் அடைந்தார். அவ்வூர் கோட்டை மதிலால் சூழப்பட்டிருந்தது. அடுத்த நாள் வெள்ளிக்கிழமை கசினிப் படைகள் தாக்குதலைத் துவக்கின. இரவு முடிவதற்குள் மதில்களை முஸ்லிம்கள் கைப்பற்றினர். சனிக்கிழமையன்று நகருக்குள் முஸ்லிம் படை நுழைந்தது. ஆனால், நகரினுள் இந்துக்களின் எதிர்ப்புக் கடுமையாக இருந்தது. வெளியிலிருந்து புதிய படைகள் வந்து இந்துக்களின் எதிர்ப்பு வலிமையடையவே, தோல்வி வந்துவிடுமோ என்று மகமூத் அஞ்சினாராம். அல்லாவுக்கு விசேடத் தொழுகைகள் நடத்திவிட்டு, தமது எதிர்த் தாக்குதலை மகமூத் தொடுத்தாரென்றும், உதவிக்குவந்த புதிய படைகளைத் தோற்கடித்து அவர் வெற்றி பெற்றாரென்றும் வர்ணிக்கப்படுகிறது. தோல்வியுற்ற இந்துக்கள் அனைவரும் ஆலயத்துக்குள் அடைக்கலம் புகுந்தனர். ஆலயத்தைச் சூழ்ந்து கொண்ட முஸ்லிம் படை இவர்களில் 50,000 பேரைக் கொன்றதென்பதாகச் சொல்லப்படுகிறது. கடல் வழியாகத் தப்பித்துச் செல்ல முயன்ற ஆயிரக்கணக்கான வேறு பிறரும் கொல்லப்பட்டனர். ஆலயத்தினுள் புகுந்து சிவலிங்கத்தை உடைத்தெறிந்து விட்டு, கருவூல அறையிலிருந்த பெருஞ் செல்வமனைத்தையும் எடுத்துக் கொண்டு மகமூத் வெளியேறினார்.[1] சோமநாதபுரத்தில் அவர் இரண்டு வாரங்கள் தங்கியிருந்து, அழிவு வேலையைச் செய்து முடித்தார். இரண்டு கோடி திர்ஹம் மதிப்புள்ள செல்வங்கள் அவருக்குக் கிடைத்தன. சோமநாதர் ஆலயம் அவரது ஆணையின்படி தரைமட்டமாக்கப் பட்டது. (பிற்காலத்திய குஜராத் அரசர்கள் இந்த ஆலயத்தை மீண்டும் புதிதாகக் கட்டியெழுப்பினர்.) லிங்கத்தின் உடைந்த கற்கள் கசினிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஜும்மா மசூதிக்குச் செல்லும் அனைவரது காலிலும் மிதிபடும்படியாக அதன் வாயிற் படிக்கட்டாகப் பயன்படுத்தப்பட்டன.

மகமூத் திரும்பிச் செல்லும் வழியில் அவரை வழிமறித்துப் போரிடுவதற்காகப் பரமதேவர் என்ற ஓர் அரசரின் தலைமையில்

[1] K. M. முன்ஷி வரைந்துள்ள 'ஜெய் சோம்நாத்' என்னும் நவீனத்தில் முழு விளக்கமும் காணலாம்.

இந்துச் சிற்றரசர்கள் பலர் தத்தம் துருப்புகளுடன் திரண்டிருந்தனர். இவர்களை எதிர்த்துப் போரிடுவதிலுள்ள அபாயத்தை உணர்ந்த மகமூத், வந்த வழியை விட்டு, கட்ச், சிந்து ஆகிய வற்றின் வழியூடே திரும்புவதற்கு முடிவு செய்தார். வழியில் சௌளுக்கிய அரசர் பீமர் அடைக்கலம் புகுந்திருந்த கந்த கோட்டை முஸ்லிம் படை அடைந்தது. உடனே அங்கிருந்தும் பீமர் ஓட்டம் பிடித்தார். அங்கிருந்து சிந்துவையடைந்து, பாலைவனத்தின் வழியாகப் பல நாட்கள் பயணம் செய்த பின், (சிந்து) ஐதராபாதுக்கு அருகிலிருந்த மன்சூராவை மகமூதின் படைகள் அடைந்தன. அதன் முஸ்லிம் அரசரான கஃபீஃப் (Khafif) என்பாரைத் தோற்கடித்தபின், மூல்தானை நோக்கி அவை முன்னேறின. அப் பிரதேசத்தில் வாழ்ந்த ஜாட்டுகள் முஸ்லிம் படைகளை மறைந்து மறைந்து தாக்கிப் பெருத்த சேதத்தை உண்டாக்கினர். மிகுந்த இன்னல்களுக்கெல்லாம் ஆளான பின்னரே மகமூத் கசினியை அடைந்தார்.

சோமநாதபுரத்தின் அழிவுபற்றிக் கேள்வியுற்ற கலீஃபா, மகமூதுக்கும் அவரது மகன்களுக்கும் தம்பிகளுக்கும் புதிய விருதுகளை அளித்துக் கௌரவித்தார். சோமநாதர் ஆலயத்து லிங்கத்தின் இரண்டு துண்டுகள் மக்கா, மதீனு நகர்களுக்கு அனுப்பப்பட்டு, தெருக்களில் மக்களால் மிதிக்கப்படுவதற்கெனப் போடப்பட்டனவாம்.

ஜாட்டுகளின் மீது போர்

கி.பி. 1026-ல் தாம் திரும்பி வந்துகொண்டிருந்த பொழுது, தமது படைகளுக்குத் தொல்லை தந்த ஜாட்டுகளைத் தண்டிப்பதற்கென்றே அடுத்த ஆண்டில் தமது கடைசி இந்தியப் படையெடுப்பை மகமூத் மேற்கொண்டார். முதலில் மூல்தானுக்கு வந்து, நதிகளிலிருந்து போரிடுவதற்கு வாய்ப்பாக 1400 படகுகளை அவர் கட்டச் செய்தார். அவற்றின் இரு புறங்களிலும் கூரிய இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு படகிலும் இருபது வில்வீரர்களும், நெருப்புக் குண்டு வீசுவோரும் இருந்தனர். 4000 படகுகளில் ஜாட்டுகள் எதிர்த்து வந்தனர். கூரிய இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்ட பகைவரது படகுகளால் ஜாட்டுகளின் படகுகள் குத்தித் துளைக்கப்பட்டு நாசத்துக்குள்ளாகவே, அவர்கள் தோல்வியுற்றனர். போரிட்ட ஜாட்டுகள் அனைவருமே நீரில் மூழ்கியும் அம்புக்கு இரையாகியும் உயிர் துறந்தனர். அண்டைத் தீவுகளில் பாதுகாப்புக்காக விடப்பட்டிருந்த அவர்களது பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாகக் கசினிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதுவே மகமூதின் கடைசி இந்தியப் படையெடுப்பாகும்.

மகமூத்பற்றிய மதிப்பீடு

மரணம்

அடுத்த இரண்டு ஆண்டுகளும் செல்ஜுக்குகளுடனான போரிலும் வேறு போர்களிலும் கழிந்தன. இஸ்ஃபாஹான் (Isfahan) என்ற பாரசீகத்தின் மேற்குப் பகுதியும் புவைஹித் (Buwaihid) வம்சத்தினரால் ஆட்சி புரியப்பட்டுவந்த ரே நகரும் (Ray—இது இன்றைய தெஹ்ரானுக்கு அண்மையிலிருந்த ஒரு புராதன நகரம்) இக்காலத்தில் வெல்லப்பட்டுக் கசினிப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. கி.பி. 1029-ல் கடுமையான க்ஷய நோயினுல் மகமூத் பீடிக்கப்பட்டார். அப்பொழுது போர் முனையிலேயே அவர் இருந்தார். எனவே, தமது மகன் மஸ்ஊதிடம் (Masud) இஸ்ஃபாஹானின் நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டு, பல்குக்கு மகமூத் திரும்பினுர். அங்கு அவரது உடல் நிலை மேலும் சீர்கெட்டுப் போயிற்று. கி.பி. 1030ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் கசினிக்கு அவர் கொண்டுவரப்பட்டார். ஏப்ரல் 30-ல் தமது அறுபத்துமூன்ருவது வயதில் அவர் காலமானுர். அங்கு ஃபெரோஸ் ஷா அரண்மனையில் (Ferozeshah Palace) அவரது சடலம் புதைக்கப்பட்டது.

மகமூதின் பெருமை

ஆசியாவில் ஆட்சிபுரிந்த மாபெரும் முஸ்லிம் அரசர்களுள் மகமூதும் ஒருவராவார். பாக்தாதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கலீஃபாவைக் காட்டிலும் மிகவும் விரிவான ஒரு பேரரசின்மீது மகமூத் ஆட்சி புரிந்தார். ஆக்சஸ் நதி முதல் யமுனை நதி வரையிலும், மேற்கில் பாரசீகம் முதல் கிழக்கில் காஷ்மீரத்தின் எல்லை வரையிலும் அவரது பேரரசு பரந்து கிடந்தது. போர்களில் பகைவர்களால் தோற்கடிக்கப்படாத பெருமையுடையவர் சுல்தான் மகமூத். அவரது போர் வெற்றிகளைப்பற்றி முஸ்லிம் நூலாசிரியர்கள் எழுதியுள்ளவற்றில் மிகைபடுத்தப்பட்ட கூற்றுகள் நிறைய உள்ளன என்ருலும், அவரது வெற்றிகளின் பெருமையை நாம் குறைத்து மதிப்பிடுவது தவருகும். அவரது காலத்தில் போர்த் திறமையிலும் சாதனைகளிலும் அவருக்கு ஈடான மற்ருேர் அரசர் இல்லையென்றே நாம் கூறலாம். இந்தியாவைக் கைப்பற்றி அதை ஆளவேண்டுமென்ற எண்ணம் சற்றும் அவருக்கிருந்ததாகத் தெரியவில்லை. பஞ்சாபை மட்டுமே தமது அரசுடன் அவர் இணைத்துக் கொண்டார். அதற்கப்பாலான இந்தியாவில் பல நூற்ருண்டு காலமாக அரசர்களாலும் ஆலயங்களாலும் சிறிது சிறிதாகச் சேர்த்து

வைக்கப்பட்டிருந்த பெருஞ் செல்வத்தை அள்ளிச் செல்வதே அவரது முக்கிய நோக்கமாயிருந்தது. தன்னம்பிக்கை, துணிச்சல், தளராத முயற்சி, போர்த்திறமை போன்ற பலவற்றுக்கும் அவரது படையெடுப்புகள் போதுமான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. போரில் அவர் புரிந்ததாகச் சொல்லப்படும் படுகொலைகளும் அழிவுகளும் முஸ்லிம் நூலாசிரியர்களால் மேலும் அதிகமாக மிகைபடுத்திக் கூறப்பட்டன. படையெடுப்புகளின்போது அக் காலத்திய அரசர்கள் (எந் நாட்டினராயிருப்பினும், எம் மதம் தழுவியவராக இருப்பினும்) இத்தகைய படுகொலைகளையும், நகருக்குத் தீயிடுதல் போன்ற வெறிச் செயல்களையும் புரிவது வழக்கமா யிருந்துவந்தது. உலகப் போர்களில் இருபதாம் நூற்றுண்டிலும் கூட 'நாகரிகத்திற் சிறந்த' ஐரோப்பிய வல்லரசுகள் இத்தகைய கொடுமைகளைப் புரிந்து வந்துள்ளன.

மகமூத் இந்துக்கள் போன்ற பிற சமயத்தினர்மீது வெறுப்புக் கொண்ட 'இஸ்லாமிய வெறியர்' என்று பல ஆசிரியர்கள் கருதுகின்றனர். இது முழுக்க முழுக்க உண்மை என்றோ, அல்லது தவறு என்றோ கூறுவதற்கில்லை. மத்திய ஆசியா, பாரசீகம் போன்ற அண்டைப் பிரதேசங்கள் ஏற்கெனவே கலீஃபாவாலும் அவருக்குக் கட்டுப்பட்ட மற்ற முஸ்லிம் அரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன. அப் பகுதிகளில் போர் நிகழ்த்தினால், இஸ்லாமிய சமயத்துக்கும் முஸ்லிம் சமுதாய உலகுக்கும் புனிதத் தலைவரெனக் கருதப்பட்ட கலீஃபாவுக்கெதிரான போரில் ஈடுபட்ட குற்றமும் பாவமும் தன்னைச் சூழும் என்று மகமூத் அஞ்சினார். எனவேதான், வலிமைமிக்க, ஆனால் தங்களுக்கிடையே ஒற்றுமையே இல்லாத அரசர்களிருந்த பஞ்சாப் போன்ற பகுதிகளின்மீது அவரது போர் முயற்சிகள் திரும்பின. இஸ்லாமிய சமய உணர்வானது இப் போர்களில் படைவீரர்களை உசுப்பி முடுக்கி விடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதென்றாலும், அதை வைத்து மகமூதை மத வெறியர் என்று கூறுவது பொருத்தமாகாது. இஸ்லாமிய சமயத்தைச் சாராத இந்துக்கள் வாழும் இந்தியாவின்மீது ஆண்டுதோறும் படையெடுக்கப் போவதாக அவர் எடுத்துக் கொண்டதாகக் கூறப்படும் சூளுரை முஸ்லிம் நூலாசிரியர் சிலரின் விபரீதக் கற்பனையே என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர். குவியல் குவியலாகத் தங்கமும், வெள்ளியும், விலையுயர்ந்த மணிகளும் ஆலயங்களில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தினாலேயே ஆலயங்களை மகமூத் சூறையிட்டார் என்ற வாதத்தினை மறுப்பது கடினம்.

கலை, இலக்கியப் பணிகள்

இளமையில் குர்ஆன் போன்ற நூல்கள் அவருக்குப் போதிக்கப்பட்டன என்றாலும், சுல்தான் மகமூதுக்கு எழுதப் படிக்கத் தெரியுமென்பதற்கான சான்றுகளில்லை. இருப்பினும், கொடை வழங்கல், பெருந்தன்மை காண்பித்தல் ஆகிய நற்குணங்களால் பல அறிஞர்களையும் புலவர்களையும் இம் மன்னர் ஆதரித்தார். எனினும், சமஸ்கிருதம், கணிதம், வானநூல், தத்துவம் போன்றவற்றில் சிறந்த அறிஞராக விளங்கிய அல்பெருனி இம் மன்னரால் வெறுக்கப்பட்டார். இந்தியத் தத்துவத்தை அல் பெருனி வெகுவாகப் புகழ்ந்தாரென்ற காரணத்தினால் குவாரிசத்திலிருந்து அவரைக் கைதியாகக் கொண்டு வந்து சிறையிலிட்டு, பின்னர் இந்தியாவுக்கு அவரை இவர் நாடுகடத்திவிட்டார் என்று சொல்லப்படுகிறது. பாரசீக மொழியில் தலை சிறந்த கவிஞர்களுள் ஒருவராகக் கருதப்படும் ஃபிர்தௌசி (Firdausi) மகமூதாலேயே கொராசானிலிருந்து கசினிக்குக் கொண்டுவரப்பட்டு, பல ஆண்டுகள் பேணிக் காப்பாற்றப்பட்டார். இப் பேருதவியை மறக்காமல் சுல்தான் மகமூத்பற்றி *ஷாநாமா* என்ற பெருங் காவியத்தை இவர் புனைந்தார். பாரசீக மொழியில் இன்றும்கூட மிகச் சிறந்த காவியமாக இது கருதப்படுகின்றது. 'தாரிகெ-யமீனி' என்றும், 'கிதாபுல்-யமீனி' என்றும் அழைக்கப்படும் சிறந்த வரலாற்று நூலை எழுதிய அல் உத்பீ (Al-Utbi) சுல்தான் மகமூதின் செயலாளராகப் பணிபுரிந்தவர். கி.பி. 1020 வரையில் சபக்டிஜின், மகமூத் ஆகியோரின் ஆட்சி நிகழ்ச்சிகளைப்பற்றி இவர் நமக்குத் தெரிவித்துள்ளார். 'தாரிக்கெ-சபக்டிஜின்' அல்லது 'தாரிக்கெ பைஹக்கீ' என்ற மற்றொரு வரலாற்று நூலை எழுதிய அபுல் ஃபசல் அல் பைஹக்கீ (Abul Fazl Al-Baihaki) என்ற அறிஞரையும் சுல்தான் மகமூத் ஆதரித்தார். இந் நூல் சபக்டிஜின், மகமூத், மஸ்ஊத் ஆகியோரின் வரலாற்றினை நமக்குத் தெரிவிக்கிறது. கி.பி. 1059ஆம் ஆண்டுடன் இந் நூல் முடிவுறுகிறது. தத்துவத்தில் தேர்ந்த ஃபராபி (Farabi), கசினியில் அவைக்களப் புலவராக இருந்த உன்சுரீ (Unsuri) போன்ற வேறு பலரையும்கூட கசினி மகமூத் ஆதரித்தார். உன்சுரீயின் தலைமையில் நானூறு புலவர்கள் கசினி நகரில் சுல்தானுக்கு அன்றாடம் உவப்பூட்டினரென்று சொல்லப்படுகிறது. பாரசீக மொழியின் மறுமலர்ச்சிக் காலத்தில் மகமூத் அரசராயிருந்தது இதற்கொரு காரணம்.

அல்பெருனி மகமூதால் தண்டிக்கப்பட்டது போலவே ஃபிர்தௌசியும் பிற்காலத்தில் மகமூதால் அவமதிக்கப்பட்டாரென்று கதைகள் கூறுகின்றன. அவிசென்னா (Avicenna) என்றழைக்கப்

படும் புகழ்பெற்றவரான ஷேக் அபூ அலீ சீனு (Shaikh Abu Ali Sina) என்ற, மருத்துவத்திலும் உடல் நூலிலும் சிறந்த நிபுணத்துவம் பெற்ற பேரறிஞரும் இக் காலத்தைச் சேர்ந்தவரே. சுல்தான் மகமூதின் போக்கும் இயல்புகளும் கருத்துகளும் பிடிக்காமையால் கசினிக்கு அவர் வர மறுத்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. அவரைப் பிடித்து இழுத்து வருமாறு மகமூதால் அனுப்பப்பட்ட ஆட்களிடம் சிக்காமல், ஊர் ஊராக ஓடி ரே (Ray) நாட்டில் புவைஹித் (Buwaihid) வம்சத்து அரசர் ஒருவரிடம் இவர் அடைக்கலம் புகுந்தார்.[1] இம் மூன்று அறிஞர்களுக்கும் நேர்ந்த கதியானது வழக்கம் போல எதேச்சாதிகார மன்னராகவே மகமூத் இருந்தாரென்பதைத் தெளிவாக்குகிறது.

கசினி நகரம் புதிதாக அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், மதரசாக்கள் (சமயக் கல்லூரிகள்) ஆகியவை கட்டப்பட்டு, மகமூதால் அழகுபடுத்தப்பட்டது. அவரால் நிறுவப்பட்ட கல்லூரி, ஜும்மா மசூதி, நூல் நிலையம் ஆகியவைபற்றி முன்பே நாம் குறிப்பிட்டோம்.

முடிவுரை

சமயப் பற்று மிகுந்த சுன்னீ முஸ்லிமாக மகமூத் இருந்தார். சமய விரோதிகள் என்று சுன்னீப் பிரிவைச் சேராத முஸ்லிம்களையும் கருதுவது அன்று வழக்கமாயிருந்தது. மூல்தானில் வாழ்ந்த இஸ்மாயீலிகளுக்கெதிரான மகமூதின் கொடுமைகள் இக் குறுகிய சமய நோக்கினுல் விளைந்தனவே. இடைக்காலத்து இந்திய நூலாசிரியர்கள் இவரைப்பற்றி மிகுந்த அருவருப்புடனும் வெறுப்புடனுமே எழுதியுள்ளனர். முஸ்லிம் நூலாசிரியர்களோ, தமது சமயத்துக்குப் பெருந் தொண்டாற்றிய ஒரு மாமன்னன் என்று இவரைப்பற்றி எழுதினர். இவரால் நிறுவப்பட்ட கசினிப் பேரரசு நீண்டநாள் நிலைத்திருக்கவில்லையென்பதை நாம் அடுத்த தலைப்பில் படிக்கலாம்.

3. மகமூதுக்குப் பிந்திய யமீனி அரசர்கள்

முதலாம் மஸ்ஊத்

சுல்தான் முகம்மது

சுல்தான் மகமூதுக்கு மூன்று மைந்தர்களிருந்தனர். அவர்களுள் மூத்தவர்களான முகம்மது, மஸ்ஊத் (Masud) ஆகிய இருவரும் ஒரே நாளில் பிறந்த இரட்டையர்கள். எனவே, எவர்

[1] M. Habib, *Sultan Mahmud of Ghaznin.*

மூத்தவர் என்பதைச் சொல்வது கடினமென்று பல நூலாசிரியர்களும் கூறுகின்றன ரென்றாலும், சுல்தான் மகமூத் முகம்மதுவையே கசினிக்கும் இந்தியப் பிரதேசங்களுக்கும் தமக்குப் பிந்திய வாரிசாக நியமித்திருந்தார். மஸ்ஊதுக்குக் கொராசான், இராக், பாரசீகம் ஆகிய மூன்றும் அளிக்கப்பட்டன. கி.பி. 1029-ல் ரே (Ray) நகரிலிருந்து பல்குக்குத் திரும்பிய சுல்தான் மகமூத், மஸ்ஊதையே கொராசானிலும் புதிதாக வெல்லப்பட்ட பகுதிகளிலும் அரசப் பிரதிநிதியாக நியமித்து விட்டு வந்தாரென்பதை முன்பே பார்த்தோம். பாரசீகத்தில் தமது கடைசி நாட்களில் மகமூத் நிகழ்த்திய போர்களில் மிகுந்த உதவியாக இருந்தவர் மஸ்ஊதே. அப் போர்களின்போது மஸ்ஊதின் போர்த் திறமை நன்கு வெளியாகியிருந்தது. அவருடைய போர்த் திறமைகளையும் உடல் வலிமையையும் கண்ட அவரது தந்தையே அவர்மீது பொறுமையுற்று முகம்மதுவைக் கசினிக்கு வாரிசாக்கினாரென்றும், அந்த முடிவை கலீஃபாவுக்குத் தெரிவித்து அதை ஆமோதிக்கும் ஆணை ஒன்றை அவரிடமிருந்து பெற்றாரென்றும் சொல்லப்படுகின்றன. தலைமை அமைச்சராக (வசீர்) இருந்த ஹஸ்னக் (Hasnak) என்பவரும் முக்கியமான பிரபுக்கள் பலரும் கூட முகம்மதுவையே அரசராக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர். மஸ்ஊத் அப்பொழுது பாரசீகத்தில் ஹமதான் (Hamadan) என்னும் ஊரிலிருந்தார். முகம்மதுவோ தமது தந்தையுடன் கசினியிலிருந்தார். இந்த ஏற்பாடுகளையெல்லாம்பற்றிக் கேள்வியுற்ற மஸ்ஊத் அவற்றை உடனே எதிர்க்கலானார். தம் தந்தை எழுதி வைத்துள்ள உயிலைக் காட்டிலும் வாள்முனைத் தீர்ப்பே முடிவானது என்று மஸ்ஊத் கூறியதாக மரணப் படுக்கையிலிருந்த சுல்தான் மகமூதுக்குச் செய்தி வந்தபோது அவரால் எதுவுமே செய்ய இயலவில்லை.

தந்தை இறந்ததும், பிரபுக்களின் உதவியுடன் கசினியில் சுல்தானாகப் பதவியேற்றார் முகம்மது. அவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து, அராபிய மொழியில் செய்யுள் இயற்றும் திறமையும் பெற்றிருந்தா ரெனினும், மஸ்ஊதை எதிர்க்கக்கூடிய வல்லமையோ ஆற்றலோ அவரிடமில்லை. மஸ்ஊத் உடனே கசினியை நோக்கிப் படையுடன் புறப்பட்டார். முகம்மதுவும் அவரை நோக்கிப் படையுடன் புறப்பட்டுத் தக்கினாபாத் (Takinabad) என்ற இடத்தையடைந்தார். அங்கு ரம்சான் மாதம் நோன்பிலும் தொழுகையிலும் கழிந்தது. இறுதியில், காலஞ்சென்ற சுல்தான் மகமூதின் தம்பியான யூசுஃப்-இப்னு-சபக்டிஜின் என்பவரும் வசீரான ஹஸ்னக்கும் வேறு பிரபுக்களும்

தங்களது பழைய முடிவினை மாற்றிக் கொண்டு, மஸ்ஊதையே ஆதரிப்பதாக முடிவுகட்டி, கி பி. 1030 அக்டோபரில் திடீரென்று முகம்மதுவைக் கைதுசெய்து, காண்டகாரிலிருந்த ஒரு சிறைக்கு அனுப்பினர். பின்னர், மஸ்ஊதைச் சந்திப்பதற்காக ஹீரட்டுக்கு அவர்கள் சென்றனர். அங்கு அவர் இவர்களை உடனே சிறையிலடைத்தார். சிற்றப்பரான யூசுஃப் சிறையில் தள்ளப்பட்டார். பல அமீர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். ஹஸ்னக் பல்குக்கு அனுப்பப்பட்டு, அங்குப் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கமாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார். முகம்மதுவின் கண்கள் பிடுங்கப்பட்டன. ஏழே மாதங்கள் அரியணையிலிருந்த பின் முகம்மதுவின் ஆட்சி இவ்வாறு முடிவுற்றது.

மஸ்ஊதின் ஆட்சித் துவக்கம்

பகைவர்களை யெல்லாம் ஒழித்துவிட்டு இவ்வாறு அரியணையைக் கைப்பற்றிய மஸ்ஊத் பல்கையே சிறிது காலம் தலைநகராகக் கொண்டிருந்தார். மகமூதின் காலத்தில் அரியாருக் (Ariyaruq) என்ற துருக்கியர் பஞ்சாபில் ஆளுநராக நியமிக்கப் பட்டிருந்தார். அவரை பல்குக்கு உடனே வருமாறு அழைத்துச் சிறையிலிட்டுக் கொன்றுர் மஸ்ஊத். இதன் பின்னர், பல மாதங்கள் யோசனை செய்யப்பட்டதன் விளைவாக, அகமத் நியால்டிஜின் (Ahmad Niyaltigin) என்பவர் பஞ்சாபின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

பல்கிலேயே ஆறு மாதங்களுக்கு மேல் இருந்தபின், கி.பி. 1031 மே மாதத்தில் கசினி நகருக்குத் திரும்பினுர் மஸ்ஊத். அங்குத் தம் சகோதரன் முகம்மதுவால் அரியணை ஏறிய நேரத்தில் பிரபுக்கள் பலருக்கும் அளிக்கப்பட்டிருந்த மானியங்கள், பரிசுப் பொருள்கள் போன்ற அனைத்தையும் மஸ்ஊத் பறிமுதல் செய்துவிட்டார்.

தொல்லைகள்

சுல்தான் மகமூதின் மரணத்துக்குப் பிறகு கசினிப் பேரரசின் சிற்சில பகுதிகளில் தொல்லைகள் முளைத்தன. மேற்குப் பாரசீகத்தில் கிளர்ச்சி யொன்று எழுந்து, புதிதாக அமர்த்தப் பட்ட ஆளுநர் ஒருவரால் அடக்கப்பட்டது. பஞ்சாபிலிருந்து திருப்பி அழைக்கப்பட்ட ஆளுநரான அரியாருக்குக்குப் பதிலாக வேறு எவரை அங்கு அனுப்புவதென்பது குறித்துப் பல மாதங்கள் யோசிக்கப்பட்ட பின்னரே நியால்டிஜின் நியமிக்கப்பட்டார். இந்த இடைவேளையில் அபுல் ஹசன் என்ற ஷீராசி காசி (Shirazi Qazi—ஷீராஸ் நகரத்துக் காசி என்பது பொருள்) வரி

வசூல் செய்வதற்காகவும், அரியாருக்கின் ஊழல்களைப்பற்றி விசாரணை செய்வதற்காகவும் பஞ்சாபுக்கு அனுப்பப்பட்டிருந் தார். சில மாதங்களுக்குப் பின் நியால்டிஜின் நியமிக்கப்பட்டுப் பஞ்சாபுக்கு வந்ததும், தமக்குப் போட்டியாக வந்துவிட்ட இவரைக் காசி விரும்பவில்லை. எனவே, அவ் விருவருமே பரஸ்பரம் மற்றவருக் கெதிராக மஸ்ஊதுக்குப் புகார்களை அனுப் பினர். இறுதியில், நிர்வாகம், இராணுவம் ஆகிய இரண்டை யும் ஆளுநரான நியால்டிஜினிடம் விட்டுவிட்டு, வரிவசூலை மட்டுமே அபுல் ஹசன் கவனிக்க வேண்டுமென்று மஸ்ஊத் ஆணையிட்டார். நியால்டிஜின் முந்திய சுல்தானான முகம்மது வுக்குத் தான் மகனாகப் பிறந்ததாகப் பெருமை பேசிக் கொண்டு மிகுந்த ஆணவத்தோடு நடக்கலானார்.

வடக்கில் பல்கைச் செல்ஜுக்குகள் படையெடுக்கக் கூடிய அபாயம் இருந்தது. கலீஃபாவான அல்-காதர்பில்லா அச் சமயத்தில் இறந்துவிடவே, இராக்கில் கிளர்ச்சி மூளக் கூடு மென்று அதன் ஆளுநர் மஸ்ஊதுக்கு எழுதி வந்தார். இந் நிலை யில், மஸ்ஊத் பஞ்சாபுக்குச் சென்று நிலைமையைச் சீர்செய்ய வேண்டுமென்று கொண்டிருந்த தமது திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை வந்து வாய்த்தது.

அகமத் நியால்டிஜின்

பஞ்சாபின் ஆளுநரான நியால்டிஜினின்மீது அடிக்கடி புகார்கள் வந்துகொண்டே இருந்தன. மஸ்ஊதின் அனுமதி யில்லாமலேயே பஞ்சாபின் எல்லைக்கு அப்பால் படையெடுப்பு ஒன்றினை இவர் மேற்கொண்டார். கி.பி. 1033 அல்லது 1034-ல் இந்தியக் குறுநில மன்னர்கள் பலரைத் தோற்கடித்து, கங்கை நதியைக் கடந்து, திடீரென்று வாராணசியை நியால்டிஜின் தாக்கலானார். கலச்சூரி அரசர் காங்கேய தேவரது ஆட்சியின் கீழ் அது அப்பொழுது இருந்தது. பட்டு, தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த நவரத்தினங்கள், வாசனைத் திரவியங்கள் போன்ற பொருள்களின் வியாபாரத்தில் வட இந்தியாவிலேயே செழித்து விளங்கிய காசிநகரின் கடைவீதிகள் பன்னிரண்டு மணி நேரம் காலையிலிருந்து மாலைவரையில் சூறையாடப் பட்டன. கொள்ளையிட்ட பெருஞ் செல்வத்துடன் லாகூருக்குத் திரும்பிய நியால்டிஜின் மஸ்ஊதுக்குரிய பங்கினை அனுப்பாமல் விட்டுவிட்டார். அபுல் ஹசனிடமிருந்து இதுபற்றிய ரகசியத் தகவல்கள் சுல்தானுக்கு வந்தன. பல பிரபுக்களுடன் கூடிக் கொண்டு கிளர்ச்சியை நடத்துவதற்கும் சுதந்திரமான அரசராக ஆவதற்கும்கூட நியால்டிஜின் திட்டமிட்டு வருகிறாரென்று

பலரிடமிருந்து கசினிக்குச் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. நியால்டிஜினைத் தோற்கடிப்பதற்கு முஸ்லிம் படைத்தலைவர் எவரும் முன்வராமற் போகவே, திலக் (Tilak) என்ற இந்துவின் தலைமையில் சுல்தான் மஸ்ஊத் படையை அனுப்பினார். சுல்தான் மகமூதின் ஊழியர்களுள் ஒருவராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, பின்பு பிரபுவாகவும் இந்துக்களைக் கொண்ட படைப் பிரிவின் தளபதியாகவும் உயர்ந்து, இந்தியாவைப்பற்றி நன்கு அறிந்திருந்த காரணத்தினால் திலக் இப்போது நியால்டிஜினுக்கு எதிராக அனுப்பப்பட்டார். இதையறிந்த நியால்டிஜினும் மஸ்ஊதின் ஆட்களுக்கெதிராக ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். லாகூர் நகரம் முற்றுகையிடப்பட்டுத் திலக்கால் கைப்பற்றப்பட்டது. லாகூரை விடுத்து நியால்டிஜின் பாலைவனத்துக்கு ஓடினார். அவரது படையினர் திலக்குடன் சேர்ந்து கொண்டனர். இறுதியில் ஜாட்டுகளால் நியால்டிஜின் கொல்லப்பட்டார். நியால்டிஜின், அவரது மகன் ஆகியோரது தலைகளை மஸ்ஊதிடம் ஒப்படைத்து அதற்கான பல வெகுமதிகளைத் திலக் பெற்றார்.

இந்தியாவின்மீது படையெடுப்பு

கி.பி. 1036 ஆகஸ்டில் சுல்தான் மஸ்ஊதின் இரண்டாவது மகனான மஜ்தூத் (Majdud) பஞ்சாபில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். நோய்வாய்ப்பட்டிருந்த மஸ்ஊத் குணமடைந்த பின்னர், கி.பி. 1037 அக்டோபரில், இந்தியாவின்மீது படையெடுத்து ஹான்சியைக் (Hansi) கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் கசினியைவிட்டுப் புறப்பட்டார். நவம்பரில் ஜீலம் நதிக் கரைக்கு வந்த அவர் அளவுமீறிய குடிப் பழக்கத்தினால் மீண்டும் நோய்வாய்ப்பட்டார்; இரண்டு வாரங்களுக்குப் பின் மீண்டும் குணமடைந்து தொடர்ந்து படைநடத்தி, டிசம்பர் 20ஆம் தேதியன்று ஹான்சிக் கோட்டையை முற்றுகையிடலானார். கி.பி. 1038 ஜனவரி முதல் தேதியன்று வலுமிக்க ஹான்சிக் கோட்டையானது சுல்தான் மஸ்ஊதால் கைப்பற்றப்பட்டது. வழக்கம் போல இந்துக்கள் அனைவரும் வாளுக்கு இரையாயினர். பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாகக் கசினிக்குக் கொண்டுவரப் பட்டனர். அதற்கு முன்பே செல்ஜுக்குகளின் தாக்குதல்கள் வடக்கில் துவங்கியிருந்தன.

மஸ்ஊதின் முடிவு

ரே நகரைக் கைப்பற்றிக் கொராசான்மீது அவர்கள் படையெடுத்தனர். ஓராண்டு காலம் வரை மஸ்ஊதின் படைகள் பல

இடங்களில் தோற்கடிக்கப்பட்டன. முடிவில், தன்னம்பிக்கை யின்றிக் காலந்தாழ்த்தி, தாமே தலைமையேற்றுப் படையுடன் சென்ற மஸ்ஊத் மெர்வ் (Merv) நகருக்கருகில் பெருந் தோல்வி யுற்ருர்; உடனே அவர் கசினிக்குத் திரும்பி வந்தார். அடுத்தபடி யாக பல்கையும் செல்ஜூக்குகள் முற்றுகையிட்டனர். முஸ்லிம் படைத் தலைவர்கள் முற்றிலுமாக நம்பிக்கை தளர்ந்தனர். அச் சத்திஞல் பீடிக்கப்பட்ட மஸ்ஊத் தமது பெண்டு பிள்ளைகள், பொக்கிஷங்கள், குருடாக்கப்பட்ட சகோதரன் மகமூத் ஆகியோ ருடன் கசினியைவிட்டு அதே ஆண்டில் நவம்பர் 13ஆம் தேதி லாகூருக்குப் புறப்பட்டார். அவருடன் வந்த படைகளுக்கே அவரது செயல் இழிவானதாகத் தோன்றிற்று. அவரது காவலாளிகள் அவரது செல்வங்களைக் கவர்ந்து கொண்டு அவரைக் கைது செய்தனர். குருடரான முகம்மதுவே அடுத்த சுல்தாஞக அவர்களால் அறிவிக்கப்பட்டார். கைதியாகத் தமது அண்ணனின் முன் கொண்டுவரப்பட்டார் மஸ்ஊத். பெருந் தன்மை மிகுந்த முகம்மது தம் சகோதரன்மீது தமக்குக் காழ்ப்பு எதுவுமில்லையென்றும், மதிப்புடன் எந்த ஓர் இடத்துக்கும் சென்று அவர் வாழலாமென்றும் தெரிவித்தார். கிரி (Giri) என்ற கோட்டையில் சென்று வாழ விரும்புவதாக மஸ்ஊத் தெரிவிக் கவே, அவர் அங்கு அனுப்பப்பட்டார். ஆஞல், சில மாதங் களுக்குப் பின்னர் முகம்மதுவின் மகஞன அகமதின் ஆட்கள் மஸ்ஊதைக் கொலை செய்தனர்.

மௌதூத்

ஆட்சியைக் கைப்பற்றுதல்

மஸ்ஊதின் மகன் மௌதூத் (Maudud) பல்கில் செல்ஜூக்கு களை எதிர்த்து அப்பொழுது போரிட்டுக் கொண்டிருந்தார். தம் தந்தை அரியணையிலிருந்து அகற்றப்பட்டுவிட்டாரென்ற செய்தியை அறிந்தவுடனேயே, கசினியை நோக்கிப் படை யுடன் அவர் புறப்பட்டார். இதையறிந்த முகம்மதுவும் திரும்பிச் சென்று போருக்குத் தயாராஞர். கசினி நகருக்கும் சிந்து நதிக்குமிடையில் நங்கிரகார் (Nangrahar) என்னுமிடத்தில் கி.பி. 1041ஆம் ஆண்டின் முடிவில் இருதரப்புக்கும் இடையே கடுமை யான போர் நிகழ்ந்தது. முகம்மதுவும் அவரது பல பிள்ளைகளும் தோற்கடிக்கப்பட்டுச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். இவ்வாறு மௌதூத் ஆட்சியைக் கைப்பற்றிஞர். போர் நிகழ்ந்த இடத்தில் பயணர் விடுதி ஒன்றையும், ஃபதஹாபாத் (Fathabad) என்ற சிற்றூர் ஒன்றையும் மௌதூத் நிறுவியபின், கசினிக்குத் திரும்பிஞர். கொல்லப்பட்ட முகம்மது அவருடைய

மகனுன நாமியை (Nami) மூல்தானுக்கும் பெஷாவருக்கும் ஆளுந ராக நியமித்திருந்தார். அவருக்கெதிராக மௌதூதால் ஒரு படையனுப்பப்பட்டது. நாமி கொல்லப்பட்டார். மௌதூதின் தம்பியான மஜ்தூத் (Majdud) அவருடைய தந்தையான மஸ்ஊ தால் பஞ்சாபில் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை முன்பே பார்த்தோம். அவர் திறமை மிக்கவர். தம்முடைய அண்ணனின் ஆதிக்கத்தை அவர் ஏற்க மறுத்து, தானேசு வரத்தைக் கைப்பற்றி, டெல்லியின்மீது படையெடுப்பதற்காக ஹான்சி சென்றிருந்தார். மௌதூதின் துருப்புகள் தம்மை ஒழிப்பதற்காக வருகின்றன என்பதைக் கேள்வியுற்றுக் கி.பி. 1042 ஜூலை 27-ல் லாகூருக்குத் திரும்பினுர் மஜ்தூத். மௌதூ தின் படைத் தலைவர்கள் மஜ்தூதை எதிர்ப்பது கடினமென்பதை உணர்ந்து, கட்சி மாறுவதற்குத் தயாராயினர். ஆனுல், ஜூலை 30ஆம் தேதி காலை மஜ்தூதின் பிணமே அவரது பள்ளியறைப் படுக்கையில் காணப்பட்டது. திடீரென்று ஏற்பட்ட நோயோ, மௌதூதின் இரகசிய ஆட்கள் புகட்டிய நஞ்சோ இந்த மரணத் துக்குக் காரணமாயிருந்திருக்கவேண்டும். மஜ்தூதின் படைகள் மௌதூதுக்குப் பணிந்தன. இவ்வாறு பஞ்சாபும் மௌதூதின் ஆட்சியின்கீழ் வந்தது.

டெல்லி அரசரின் மீட்புப் பணி

கசினிப் பேரரசின் வடக்குப் பகுதியை செல்ஜூக்குகள் இடைவிடாமல் தாக்கிவந்தனர். மேற்கிலும் வடக்கிலும் பல பகுதிகள் கசினியின் பிடியிலிருந்து நழுவிக் கொண்டிருந்தன. இந் நிலையைப் பயன்படுத்தி டெல்லி அரசரும் அவரது சிற்றரசர் களும் ஒன்று திரண்டு இழந்த பகுதிகளை மீட்பதற்குத் தயாரா யினர். டெல்லி அரசரின் பெயர் மகிபால் என்று முஸ்லிம் நூலா சிரியர்கள் சிலரால் குறிக்கப்படுகிறது. இவர் ஹான்சி, தானேசு வரம், காங்ரா (நகர்கோட்) ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றுகக் கைப்பற்றி முஸ்லிம் அதிகாரிகளையெல்லாம் விரட்டி விட்டு, லாகூரையும் முற்றுகையிட்டார் (கி.பி. 1043-44). ஏழு நாள் முற்றுகைக்குப் பிறகு லாகூர்க் கோட்டைக்குள்ளிருந்த முஸ்லிம் படைகள் இந்துப் படைகளைத் தோற்கடித்தன. எனினும், ராவி நதிக்குக் கிழக்கிலான பகுதிகளனைத்தும் இந்தி யர்களால் விடுவிக்கப்பட்டன. பஞ்சாபில் முக்கியமான நகரங் களில் லாகூர் மட்டுமே கசினி சுல்தானின் வசமிருந்தது. இங்குக் குறிப்பிடப்படும் மகிபால் தொமர வம்சத்தைச் சேர்ந்த எவரோ ஒருவராகவே யிருக்கவேண்டும்.

மௌதூதின் மரணம்

கி.பி. 1044-ல் கோர் சிற்றரசில் கிளர்ச்சியொன்று எழுந்தது. மௌதூதின் படைகள் அதை அடக்கி, அவ்வரசைச் சேர்ந்த இரண்டு அரசகுமாரர்களைக் கசினிக்குக் கொண்டு வந்து சிரச்சேதம் செய்தன. பஞ்சாபில் முஸ்லிம் பிரபுக்களிடையில் பூசல்கள் நிலவின. இவற்றினை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் தமது மூத்த பிள்ளைகளுள் இருவரான மகமூதையும் மன்சூரையும் முறையே லாகூரிலும் பெஷாவரிலும் ஆளுநர்களாக மௌதூத் நியமித்தார். இந்துக்களின் தாக்குதல்களிலிருந்து பஞ்சாபைக் காப்பதற்காகக் கசினியில் கொத்வாலாக (Kotwal—காவல் அதிகாரி) இருந்த அலீ ஹசன் என்பவரையும் மௌதூத் இந்தியாவுக்கு அனுப்பினார். பஞ்சாபில் இந்துக்களுக்கெதிராகப் பல இடங்களில் போரிட்டு ஏதோ ஒரு கோட்டையை இவர் வென்றார் என்று சொல்லப்படுகிறது.

செல்ஜூக் தலைவர் ஒருவரின் மகளையே மௌதூத் மணம் செய்திருந்தார். செல்ஜூக்குகளின் வலிமையும் செல்வாக்கும் எந்த அளவுக்கு வளர்ச்சியுற்றிருந்தன என்பதை இது காண்பிக்கிறது. கசினி அரசின் சீர்குலைவைக் குறிக்கும் வகையில் பிரபுக்களும் அதிகாரிகளும் அடிக்கடி பலவிதமான சதிகளில் ஈடுபட்டு வந்தனர். இந் நிலையில், கி.பி. 1049 டிசம்பரில், மௌதூத் காலமானார். அதிகாரிகள் சிலர், செல்ஜூக் குலத்தைச் சேர்ந்த மனைவியின் மூலம் மௌதூதுக்குப் பிறந்த மூன்று வயது சிறுவன் இரண்டாம் மஸ்ஊத் என்பவனை அரசனாக்கினர்.

குழப்பங்கள்

இதை விரும்பாத வேறு பிரபுக்கள் ஏழே நாட்களில் (டிசம்பர் 29-ல்) அச் சிறுவனை அகற்றிவிட்டு, முதலாம் மஸ்ஊதின் மகனும், மௌதூதின் தம்பியுமான அலீ அபுல் ஹசன் என்பவரைக் கசினியில் அரசராக்கினர். இறந்துபோன சகோதரன் மௌதூதின் விதவை மனைவியான செல்ஜூக் அரசகுமாரியை இவர் மணந்துகொண்டு செல்ஜூக்குகளின் ஆதரவைப் பெற முயன்றார். ஆனால், நாட்டில் சதித் திட்டங்கள் பலரால் தீட்டப்பட்டன. அலீ அரியணைக்கு வந்த சில மாதங்களிலேயே அவரது அதிகாரிகளுள் ஒருவரான அலீ-இப்னு ருபியா என்பவன் கருவூலத்திலிருந்த தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவற்றைத் திருடிக்கொண்டு சில துருப்புகளோடு பெஷாவருக்கு ஓடிப்போனான். அங்குச் சுதேசிகள் அடங்கிய படையொன்றைத் திரட்டி, மூல்தானையும் சிந்துவை

யும் அவன் கைப்பற்றினன். அலீ அபுல் ஹசனின் கையாலாகாத் தனத்தைக் கண்ட அமைச்சர்களும் அதிகாரிகளும் கசினி மகமூதின் ஆருவது மகனை இஸ்ஸுத்தௌலா அப்துர் ரஷீத் (Izzuddaulah Abdur Rashid) என்பவரை நீண்ட காலம் அவர் அடைபட்டிருந்த சிறையிலிருந்து கி.பி. 1052-ல் விடுவித்தனர். அவர் கசினியை நோக்கிப் படையுடன் வந்து தம் தம்பி மகனை அலீ அபுல் ஹசனை அகற்றிவிட்டு அரியணையைக் கைப்பற்றினர். அலீயின் செல்ஜுக் மனைவி அவளுடைய தந்தையிடம் சென்று முறையிட்டுக் கொண்டாள்.

அப்துர் ரஷீதும் திறமைமிக்கவரல்லர். நுஷ்திஜின் ஹாஜிப் (Nushtigin Hajib) என்பவரைப் பஞ்சாபில் ஆளுநராக இவர் நியமித்தார். கி.பி. 1043 முதல் இந்துக்களின் வசமிருந்த நகர்க் கோட்டை இந்த ஆளுநர் மீண்டும் கைப்பற்றினர். இவரது தளபதிகளுள் ஒருவரான துக்ரில் ஹாஜிப் (Tughril Hajib) சீஸ்தானத்தில் கிளர்ச்சியொன்றை அடக்குவதற்காக அனுப்பப் பட்டார். கிளர்ச்சியை அடக்கிய பின் கொராசானைக் கைப்பற்றியிருந்த செல்ஜுக்குகள்மீது போரிட்டு இவர் வெற்றிகள் பெற்றூர். இவ்வாறு தமக்குக் கிடைத்த புதிய படையைக் கொண்டு, கி.பி. 1052ஆம் ஆண்டின் இறுதி வாக்கில் கசினியைக் கைப்பற்றி அப்துர் ரஷீதையும் அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்ற ஒன்பது பேர்களையும் கொன்றுவிட்டுத் தாமே அரசரானர் துக்ரில். ஆனல், நாற்பதே நாட்களில் அரண்மனைக் காவற்படையானது இவரைக் கொன்று தீர்த்தது. துக்ரிலின் துரோகத்தைப்பற்றிக் கேள்வியுற்ற உடனேயே தமது படையுடன் இந்தியாவிலிருந்து கசினியை நோக்கிப் புறப்பட்டார் நுஷ்திஜின். துக்ரிலின் கொலைக்குச் சில நாட்களுக்குப் பின்னரே இவர் கசினிக்கு வந்து சேர்ந்தார். பிரபுக்களுடன் துக்ரில் ஆலோசனை நடத்தி எவரை அடுத்த அரசராகப் பிரகடனம் செய்யலாம் என்பதுபற்றி முடிவெடுத்தார். நீண்ட காலமாக முதலாம் மஸ்ஊதின் இரண்டு பிள்ளைகளான ஃபாருக்சாத் (Farrukhzad), இப்ராஹீம் ஆகியோர் ஒரு கோட்டையில் சிறைப்பட்டுக் கிடந்தனர். அவர்களுள் இப்ராஹீமையே அடுத்த அரசராகப் பிரபுக்கள் தேர்ந்தெடுத்தனர். ஆனல், சிறையிலிருந்து வெளிவந்த இப்ராஹீம் நோஞ்சானக இருந்த காரணத்தினல் ஃபாருக்சாதே அரசராக்கப்பட்டார்.

மௌதூத், அலீ அபுல் ஹசன் ஆகிய இருவரும் மணந்து கொண்ட செல்ஜுக் அரசகுமாரி தன் தந்தையிடம் சென்று முறையிட்டுக் கொண்டாள் என்பதை முன்பே குறிப்பிட்டோம்.

அவளது தந்தையாரான சகர் பேக் தாஊத் (Chaghar Beg Daud) என்பவர் இப்பொழுது படையெடுத்துவந்து நுஷ்திஜினுல் தோற் கடிக்கப்பட்டார். தாஊதுக்கு உதவியாக வந்த ஆற்றல் மிக்க அவரது மகன் அல்ப் அர்சலான் (Alp Arsalan) என்பவர் இன்னொரு படையுடன் வந்து ஃபாருக்சாதைப் போரில் தோற் கடித்தார். இறுதியில் ஓர் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன் பின், கி.பி. 1059 மார்ச்சில் ஃபாருக்சாத் இறந்தபின், அவருடைய தம்பியாகிய இப்ராஹீம் அரசரானார். அர்சலானின் மகன் மாலிக்ஷா என்பவரது மகள் இப்ராஹீமின் மகன் மஸ்ஊ துக்குத் திருமணம் செய்விக்கப்பட்டாள். இதற்குப் பின் சுமார் இருபதாண்டு காலம் வரையில் செல்ஜூக்குகளுக்கும் யமீனி களுக்கு மிடையே அமைதி நிலவிற்று.

இப்ராஹீம்

இப்ராஹீம் கி.பி. 1059 முதல் 1099 வரையில் நாற்ப தாண்டு காலம் அரசராயிருந்தார். செல்ஜூக்குகளுடன் நிலவிய அமைதி காரணமாக இந்தியாவின் பக்கம் அவரால் கவனம் செலுத்த முடிந்தது. பலமுறை பஞ்சாபுக்கப்பால் படையெடுத் துத் தபர்ஹிந்தா (Tabarhindah—இன்றைய சர்ஹிந்த்), அம்பா லாவுக்கருகில் யமுனை நதிக் கரையிலுள்ள பூரியா (Burya), ஜலந்தர், இன்று பாக் பட்டண் (Pak Pattan) என்றழைக்கப்படும் அஜூதன் (Ajudhan), ரூபால் (Rupal) போன்ற பல இடங்களை அவர் கைப்பற்றினார். கி.பி. 1075-ல் இப்ராஹீமின் மகனை மகமூத் பஞ்சாபின் ஆளுநரானார். இவர் மேலும் கிழக்கு நோக்கிப் படையெடுத்து, ஆக்ராவை ஜெயபால் எனும் ஒரு சிற்றரசனிட மிருந்து கைப்பற்றினார். ராஷ்டிரகூட வம்சம் ஒன்றினுல் ஆளப் பட்டு வந்த கனோஜ் ஒன்றையும் அடுத்தபடியாக இவர் வென் றார். பின்னர் உஜ்ஜெயினிமீது படையெடுத்த இவரைப் பரமார அரசர் லக்ஷ்மணதேவர் தோற்கடித்து விரட்டினார். சந்தெல்ல அரசராகிய கீர்த்திவர்மனுக்குச் சொந்தமான காலஞ்சராக் கோட்டையையும் சில நாட்கள் முற்றுகையிட்டு வெற்றி பெரு மல் திரும்பினார் மகமூத். வெறும் கொள்ளை நோக்கத்துடனேயே இப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிகிறது.

மூன்றும் மஸ்ஊத்

சுல்தான் இப்ராஹீமுக்கு 36 மகன்களும் 40 மகள்களும் இருந்தனர். அவர்களுள் இருபத்துமூன்ருவது மகனை மூன்றும் மஸ்ஊதே தம் தந்தையின் மரணத்துக்குப் பின் கி.பி. 1099

ஆகஸ்டில் அரசரானார். இவர் செல்ஜுக் மாலிக்ஷாவின் மகளை மணந்திருந்தாரென்பதை முன்பே பார்த்தோம். இவளது உடன் பிறந்த சகோதரரான சுல்தான் சஞ்சார் (Sanjar) என்பவரே புகழ்மிக்க செல்ஜுக் பேரரசராயிருந்தவர். மூன்றும் மஸ்ஊதின் படைத் தளபதிகளுள் ஒருவரான ஹாஜிப் துகாடிஜின் என்பவர் (Hajib Tughatigin) கங்கை நதியைக் கடந்து, காகதவாலர்கள் ஆட்சிபுரிந்த கனோஜின்மீது படையெடுத்தார். கனோஜ் அரசர் மல்ஹி (Malhi—இவர் காகதவால மதனசந்திரராகவே இருக்க வேண்டும்) இவரால் தோற்கடிக்கப்பட்டுச் சிறைப்பிடிக்கப் பட்டார். ஆனால், மதனசந்திரரின் மகன் கோவிந்தசந்திரர் முஸ்லிம் படையைத் தோற்கடித்து, தம் தந்தையை மீட்டுக் கொண்டார். கோர் நகரையாண்ட ஷன்சபானீ வம்சத்து அமீர்கள் இவரது காலத்திலும் கசினியின் மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டிருந்தன ரென்பது தெரிகிறது. செல்ஜுக்குகள் கசினிப் பேரரசின் பல பகுதிகளையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றலாயினர். எனவே, கசினியைவிட்டு லாகூருக்கு அரச குடும்பம் குடிவந்தது. இதுமுதல் பஞ்சாபிலுள்ள லாகூரே யமீனி வம்சத்து அரசர்களின் மையமாயிற்று.

பஹ்ராம்ஷா

கி.பி. 1115-ல் மஸ்ஊத் இறந்த பின், அவரது மகனான ஷர்சாத் (Shirzad) என்பவர் அரசரானார். அடுத்த ஆண்டிலேயே இவரது சகோதரரான அர்சலான் அப்துல் மாலிக் என்பவரால் இவர் விரட்டப்பட்டார். தம் சகோதரர்களனைவரையும் அர்சலான் சிறையிலடைத்தார். அவர்களுள் ஒருவரான பஹ்ராம் (Bahram) மட்டும் தப்பித்துச் சென்று கொராசானில் ஆண்டு கொண்டிருந்த செல்ஜுக் சுல்தானும், தம் தாய் மாமனுமான சஞ்சாரின் உதவியை நாடினார். செல்ஜுக் படைகள் கசினியைக் கைப்பற்றி, பஹ்ராமை அரியணையில் அமர்த்தின. லாகூருக்கு ஓடிச் சென்ற அர்சலான் ஒரு படையுடன் திரும்பி வந்து மீண்டும் கசினியைக் கைப்பற்றினார். கி.பி. 1118-ல் பஹ்ராம் மற்றொரு செல்ஜுக் படையுடன் திரும்பிவந்து கசினியைப் பிடித்தார். அர்சலான் சிறை செய்யப்பட்டுச் சிறிது காலத்திற்குப் பின் கொல்லப்பட்டார்.

அர்சலானால் பஞ்சாபில் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த முகம்மது பஹ்லிம் (Bahlim) என்பவர் பஹ்ராமுக்குப் பணிய மறுத்தார். அவருக்கெதிராகப் படை நடத்தி அவரைப் பணிய வைத்தார் பஹ்ராம். சுல்தான் பஹ்ராம் திரும்பிச்சென்ற

உடனேயே பஹ்லிம் ஆளுநராக இருக்க விரும்பாமல், நாகவுர் (Nagaur) என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு, சுதந்திர அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். பஹ்ராம் திரும்பி வந்து மூல்தானுக்கருகில் இவரைத் தோற்கடித்தார். போர்க்களத்திலிருந்து தப்பித்து ஓடிய பஹ்லிமும் அவரது இரண்டு மகன்களும் தொந்தி மணற் குன்றின்மீது செல்கையில் அதில் அமுந்தி இறந்து போயினர்.

கசினியை இழத்தல்

கோர் நகரில் தம் அண்ணனுடன் தகராறு செய்து கொண்டு கசினியில் அடைக்கலம் புகுந்தார் குத்புதீன் முகம்மது என்ற கோர் இளவரசர். அங்கு பஹ்ராமின் சகோதரியை அவர் மணந்து கொண்டார். எனினும், தமக்கு எதிராக அவர் சதி செய்கிறாரென்பதை அறிந்த பஹ்ராம் இரகசியமாக நஞ்சு கொடுத்து அவரைக் கொன்றார். இதற்கிடையில், கோரில் குத்புதீனின் தம்பியான சைஃபுதீன் (Saifuddin) என்பவர் அரசராகியிருந்தார். அவர் இதுபற்றிக் கேள்வியுற்று, கசினிமீது படையெடுத்து, அதைக் கைப்பற்றி, பஹ்ராமை விரட்டியடித்தார். இதன் பின்னர் கசினியே அவரது தலைநகராயிற்று. தம் தம்பியான பஹாவுதீன்சாம் (Bahauddinsam) என்பவரை கோரில் அரசப் பிரதிநிதியாக நியமித்துவிட்டு, கசினியிலேயே தங்கிவிட்டார் சைஃபுதீன். அவரது படைகளில் பெரும் பகுதியும் கோரிலேயே இருந்தது. எனவே, கி.பி. 1149-ல் லாகூரிலிருந்து பஹ்ராம் திரும்பிவந்து கசினி நகரைக் கைப்பற்றிக் கொள்வது எளிதாயிற்று. பகைவன் வசம் சிக்கிய சைஃபுதீன் மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

கசினி எரிக்கப்படுதல்

இச் செய்தியைக் கேள்வியுற்ற பஹாவுதீன்சாம் கடுஞ் சினம் கொண்டு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு புறப்பட்டார். வழியில் திடீரென நோயுற்று அவர் காலமாகிவிடவே, அவரது தம்பியான அலாவுதீன் ஹுசைன் படை நடத்தி, மூன்று போர்களில் பஹ்ராமை முறியடித்துப் பஞ்சாபுக்கு விரட்டிவிட்டு, கசினி நகரைக் கைப்பற்றினார். அந் நகர் ஏழு நாட்கள் சூறையாடப்பட்டுத் தீயிட்டு அழிக்கப்பட்டது. சுல்தான் மகமூத், முதலாம் மஸ்ஊத், இப்ராஹீம் ஆகிய மூவரது கல்லறைகள் நீங்கலாக மற்ற எல்லாக் கசினி அரசர்களின் கல்லறைகளும் உடைத்தெறியப்பட்டன. ஆயிரக்கணக்கான ஆடவர்கள் கொல்லப்பட்டு, பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். கசினி அரசிலிருந்த மற்ற நகரங்களையும்

நினைவுச் சின்னங்களையும் இவ்வாறே அழித்த பின் கோர் நகருக்கு அவர் திரும்பினார். கசினியைத் தீயிட்டு அழித்த காரணத்தினால் 'ஜஹான்சூஸ்' (Jahansuz—உலகை எரித்தவர் என்பது இதன் பொருள்) என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

அடுத்த ஆண்டிலேயே செல்ஜூக் சுல்தான் சஞ்சாரை எதிர்த்து அலாவுதீன் போரிட்டு, சிறிது காலம் சிறையிலடைக்கப் பட்டார். அதுதான் தருணமென்று பஹ்ராம் திரும்பிவந்து கசினியைக் கைப்பற்றிக் கொண்டார். ஓராண்டுக்குப் பின் கி.பி. 1152-ல் அவர் அங்கேயே காலமானார்.

யமீனி வம்சத்தின் முடிவு

பஹ்ராமின் மகனான குஸ்ராவ் ஷா (Khusrav Shah) கி.பி. 1152 முதல் கி.பி. 1157 வரையில் கசினியிலேயே ஆட்சி புரிந்தார். துருக்மானியருள் ஒரு பிரிவினரான குஸ்கள் (Ghuzz) இப்பொழுது கொராசானின் மீது படையெடுத்து, சுல்தான் சஞ்சாரைச் சிறைப்பிடித்துக் கொன்றனர் (கி.பி 1157). பின்னர், கசினியையும் அவர்கள் கைப்பற்றினர். கி.பி. 1158-ல் கசினியை இழந்து லாகூருக்குக் குஸ்ராவ் ஷா ஓடினார். இங்ஙனமாக, கசினியை யமீனிகள் முற்றிலும் இழந்து போயினர். பஞ்சாபில் லாகூரே அவர்களது தலைநகராயிற்று.

லாகூரில் குஸ்ராவ் ஷா கி.பி. 1160-ல் காலமானார். அவருக்குப் பின் அவரது மகனான குஸ்ராவ் மலிக் அரசரானார். இவரே யமீனி வம்சத்தின் கடைசி அரசராவார். கோர் நாட்டைச் சேர்ந்த ஷம்சுதீன் (கியாசுதீன்) குஸ்களைத் தோற்கடித்து, கி.பி. 1173-ல் கசினியை வென்றார். பின்னர் அங்குத் தம் தம்பியான ஷிகாபுதீனை (கோரி முகம்மது) அவர் அரசராக்கினார். முயீசுதீன் என்று இது முதல் அழைக்கப்பட்ட ஷிகாபுதீன் கி.பி. 1181-ல் லாகூர் மீது முதன் முதலாகப் படையெடுத்தார். கி.பி. 1186-ல் மூன்றாவது முறையாக லாகூரின்மீது படையெடுத்த முயீசுதீன் அந் நகரைக் கைப்பற்றியதுடன், யமீனிகளின் ஆட்சி முடிவுற்றது. குஸ்ராவ் மலிக்கும் அவரது மகனான பஹ்ராமும் கோரி சுல்தானான கியாசுதீனிடம் அனுப்பி வைக்கப் பட்டனர். ஆறாண்டு காலம் ஃபைரூஸ்குஹ் (Firuzkuh) என்ற இடத்தில் அவர்கள் சிறையில் அடைபட்டுக் கிடந்தனர். கி.பி. 1192-ல் கியாசுதீனும் முயீசுதீனும் குவாரிசம் நாட்டு சுல்தானை எதிர்த்துக் கடுமையான போரில் ஈடுபட வேண்டி

யிருந்தது. அப்பொழுது குஸ்ராவ் மலிக்கையும் அவரது மகன் பஹ்ராமையும் இனியும் உயிருடன் வைத்திருந்தால் சிக்கல்கள் நேரலாமென்று கருதப்படவே, அவர்களைக் கொன்று விடுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

யமீனி வம்சாவளி

- 1. சபக்டிஜின்
  - 3. மகமூத்
    - 4. முகம்மது
    - 5. முதலாம் மஸ்ஊத்
      - 6. மௌதூத்
        - 7. இரண்டாம் மஸ்ஊத்
      - 8. அலீ
      - 10. ஃபாருக்சாத்
      - 11. இப்ராஹீம்
        - 12. மூன்றும் மஸ்ஊத்
          - 13. ஷர்சாத்
          - 14. அர்சலான்
          - 15. பஹ்ராம் ஷா
            - 16. குஸ்ராவ் ஷா
              - 17. குஸ்ராவ் மலிக்
    - 9. அப்துர்ரஷீத்
  - 2. இஸ்மாயீல்

15. கோரி முகம்மது

1. கோரி அரசின் துவக்கம்

ஷன்சபானீ வம்சம்

இன்றைய காபூலுக்கும் பல்குக்குமிடையில் கூர் (Ghur) என்ற பிரதேசமிருந்தது. இன்றைய ஆப்கானிஸ்தானத்தின் வடக்குப் பகுதியில் அது உள்ளது. புஷ்து மொழியில் கர் (Ghar) என்ற சொல்லுக்கு மலையென்று பொருள். இதுவே பின்னர் கோர் என்றும் மருவலாயிற்று. உயர்ந்த மலைகளையும், குறுகிய பள்ளத்தாக்குகளையும், விரைந்தோடும் சிற்ருறுகளையும் உடைய பிரதேசமாக அது உள்ளது. இதனுல் அங்கு ஒவ்வொரு கோட்டையும் ஒரு சிற்றரசாகப் பத்தாம் நூற்ருண்டில் விளங்கி வந்தது. அவற்றுள் ஒன்றே கோர் ஆகும். அதைச் சேர்ந்த கோரி மக்கள் பலரும் ஆப்கானியர்களாக இருந்தாலும், கோரியில் சிற்றரசர்களாக இருந்தவர்கள் கிழக்குப் பாரசீகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.[1]

அப் பிரதேசத்தை ஆண்டுவந்த அரசவம்சம் ஷன்சபானீ (Shansabani) என்றழைக்கப்பட்டது. ஷன்சப் (Shansab) என்பாரால் அந்த வம்சம் தோற்றுவிக்கப்பட்டது எனப் பிற்காலத்தில் கதைகள் வழங்கின. அவரே முதன் முதலாக இஸ்லாமிய சமயத்தைத் தழுவி, தம்முடைய மக்களையும் முஸ்லிம்களாக ஆக்கி, இந்த அரசவம்சத்தை நிறுவினுரென்று சொல்லப்படுகிறது. கலீஃபா அலீயின் காலத்தில் இது நிகழ்ந்திருத்தல் வேண்டும். பிற்காலத்தில் அலீயைக் கொன்றுவிட்டு, உமையா வம்சத்தினர் கலீஃபாப் பதவியை ஏற்றபோது ஷன்சபானீகள் அவர்களுக்குக் கட்டுப்பட மறுத்தனர். அவர்களை வெல்வதற்கென்று பல முறைகள் படைகள் அனுப்பப்பட்டன. செங்குத்தான மலைகள் சூழ்ந்த பகுதியில் அவர்கள் வாழ்ந்து வந்தமையால், முற்றிலுமாக அவர்களை அடக்குவது முடியாததாயிருந்தது. கசினி அரசரான சபக்டிஜின் இப் பகுதியை வென்று திறை வாங்கி வந்தார். ஆனுல், அவரது மரணத்துக்குப் பின்னர்த் திறை செலுத்துவது நிறுத்தப்பட்டது. மேலும், அவ்

[1] Sir, W. Haig, *The Cambridge History of India*, Vol. III.

வழியூடே நடமாடிவந்த கசினி வணிகர்கள் கோரிகளால் தாக்கப்பட்டனர். இத்தகைய செயல்களால் ஆத்திரமடைந்த கசினி சுல்தான் மகமூத் கி.பி. 1010 முதல் கி.பி. 1020 வரையில் கோரின் பல்வேறு பகுதிகளைத் தாக்கி ஏறத்தாழ அப் பிரதேசம் முழுவதையும் தமது மேலாதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். சுல்தான் மகமூதின் மகனுன மஸ்ஊத் தம் தந்தை பிறப்பித்த ஆணைப்படி ஓரிரு ஆண்டுகள் இப் பகுதியில் போரிட்டு, அங்கு ஆட்சி புரிந்த அமீர்கள் அனைவரையும் கசினிக்குக் கட்டுப்படு மாறு செய்தார்.

தபகாத்தெ-நாசிரி

இவ் வம்சத்தைப்பற்றி அறிவதற்கு நமக்கு மிகவும் உதவும் ஒரு நூல் 'மின்ஹாஜுத்தீன் சிராஜ்' என்றும், 'மின்ஹாஜுஸ் சிராஜ்' என்றும் அழைக்கப்படுகின்ற ஆசிரியரால் எழுதப்பட்ட தபகாத்தெ-நாசிரி என்ற நூலேயாகும். கோரியைச் சேர்ந்தவ ரான இவர் இந்தியாவை வென்ற கோரி வம்சத்து அரசர்களின் காலத்தில் வாழ்ந்தவர். கி.பி. 1227-ல் சிந்து, உச் (Uch), மூல்தான் ஆகிய பகுதிகளுக்கு இவர் வந்தார். உச்சில் ஃபை ரோஸி மதரசா (Firozi College) என்ற பள்ளி ஒன்றின் முதல்வ ராக இவர் நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் ஷம்சுதீன் அல்தாமிஷால் நாசிருதீன் குபாச்சா (Qubacha) தோற்கடிக்கப் பட்டு டெல்லி கைப்பற்றப்பட்டதும், மின்ஹாஜும் டெல்லிக்கு வந்து அல்தாமிஷைச் சந்தித்தார். அல்தாமிஷால் குவாலியர் வெல்லப்பட்டபோது அங்கு அதிகாரியாக இவர் நியமிக்கப்பட் டார். பின்னர், வட இந்தியாவின் பல பகுதிகளுக்கும் இவர் பயணம் செய்து, பல்வேறு இடங்களிலும் பல பதவிகளை வகித் தார். கி.பி. 1259 வரையிலான இஸ்லாமிய வரலாற்றை அறிவ தற்கு இவரது நூல் நமக்குத் துணை புரிகின்றது. இந் நூலிலுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆதாரபூர்வமானவை என்று அறிஞர் கள் கருதுகின்றனர்.[1]

கசினியின் ஆதிக்கம்

கசினி சுல்தான் மகமூதுக்கெதிராகக் கிளர்ச்சி செய்த கோரி அமீர் முகம்மது இப்னு சூரி (Ibn-Suri) என்பவராவார். அவரை அடக்கிய பின்னர், அவரது மகனுன அபூ அலீ என்பவரை மகமூத் கோரில் அரசராக்கினுர். இவரது ஆட்சியில் பல மசூதி களும் மதரசாக்களும் கோரி அரசில் கட்டப்பட்டன. அபூ அலீயை அவரது தம்பி மகன் அப்பாஸ் என்பவன் சிறையிலிட்டு

[1] Minhajuddin Siraj, *Tabakat-i-Nasiri :* for extracts from this, refer Elliot and Dowson, Vol. II.

அரியணையைக் கவர்ந்து கொண்டான். அவனது ஆட்சியில் பல கொடுமைகள் புரியப்பட்டமையால், கோரைச் சேர்ந்த பல பிரபுக்கள் கசினி சுல்தான் இப்ராஹீமிடம் முறையிட்டனர். அவர் படையெடுத்து வந்து, அப்பாசைச் சிறைப்பிடித்து, கசினிக்குக் கொண்டு சென்றார். அப்பாசின் மகன் முகம்மது என்பவரே இப்ராஹீமால் கோரில் அடுத்த அரசராக நியமிக்கப்பட்டார். இவர்கள் அனைவருமே ஷன்சபானீ வம்சத்தைச் சேர்ந்தவர்களே.

செல்ஜுக்குகளின் ஆதிக்கம்

இந்த முகம்மதுவுக்குப் பின் அவரது மகன் குத்புதீன் ஹசன் அரியணை ஏறினார். தமது அரசை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது ஒரு போரில் இவர் கொல்லப்படவே, இவரது மகன் இஸ்சுதீன் ஹுசைன் என்பவர் அடுத்தபடியாக அரசரானார். இவர் கி.பி. 1110 முதல் 1146 வரையில் அரசராயிருந்தார். இப்ராஹீமுக்குப் பிறகு கசினிப் பேரரசு செல்ஜுக்குகளிடம் பல்வேறு பிரதேசங்களையும் இழந்து வலிமை குன்றிற்று. செல்ஜுக் பேரரசரான சஞ்சார் கோரின்மீது படையெடுத்து இஸ்சுதீனைச் சிறைப்பிடித்தார். அதுமுதல் ஷன்சபானீகள் செல்ஜுக்குகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக ஆயினர். இஸ்சுதீனுக்கு ஏழு மகன்களிருந்தனர். 'ஏழு விண்மீன்கள்' (Seven Stars) என்று வேடிக்கையாக இவர்கள் பின்னர் அழைக்கப்பட்டனர். இந்த எழுவரும் தந்தையின் மரணத்துக்குப் பின் கோரி அரசை ஏழு பகுதிகளாகப் பிரித்து ஆளலாயினர்.[1] இவர்களுள் ஒருவரான குத்புதீன் சிறிது காலத்திற்குப் பின்னர்த் தம் மூத்த அண்ணன் சைஃபுதீன் சூரி (Saifuddin Suri) என்பாருடன் மாறுபட்டு, கசினிக்குச் சென்று பஹ்ராம் ஷாவிடம் அடைக்கலம் புகுந்தார். சிறிது காலத்திற்குள்ளாகவே குத்புதீனின் செயல்கள் பஹ்ராமுக்கு ஐயமூட்டின. எனவே, அவரைச் சிறையிலடைத்து நஞ்சூட்டிக் கொன்றார் பஹ்ராம். இதனாலேயே சைஃபுதீன் கசினியைக் கைப்பற்றி, சுல்தான் என்ற பட்டத்தோடு அவ் ஊரிலேயே அரசாளத் துவங்கினார்.

கசினியில் அமைதி ஏற்பட்டுவிட்டது என்று தவறாகக் கருதிய சைஃபுதீன் தம் தம்பி பஹாவுதீன்சாம் என்பவரையும் படையின் பெரும் பகுதியையும் கோர் நகருக்கு அனுப்பி வைத்தார். கசினி அதிகாரிகள் சிலர் இதுதான் தருணமென்று பஹ்ராம் ஷாவுக்குச் செய்தியனுப்பினர். குளிர்காலம் காரணமாக,

[1] Habib and Nizami, *A Comprehensive History of India*, Vol. V—The Delhi Sultanat.

கோருக்கும் கசினிக்குமிடையில் அமைந்துள்ள சாலைகளெல்லாம் பனிமூடிக் கிடந்தன. இந் நிலையில், திடீரென்று கசினியைத் தாக்கி மீட்டுக் கொண்டார் பஹ்ராம். சைஃபுதீன் கைதியாக்கப் பட்டுத் தெரு நெடுகிலும் அவமானப்படுத்தப்பட்டு இறுதியில் கொல்லப்பட்டார். இதைக் கேட்டு வெகுண்ட பஹாவுதீன்சாம் கசினிமீது படையெடுத்து வரும் வழியில் திடீரென்று கி.பி. 1149-ல் காலமானார். ஏழு தம்பிகளுள் கடைசியானவராகிய அலாவுதீன் ஹுசைன் அடுத்தபடியாகப் படையெடுத்து வந்து, கசினியைக் கைப்பற்றி, ஆயிரக் கணக்கானவரைக் கொன்று, ஏழு நாட்கள் அதை எரியும்படி செய்து, 'ஜஹான்சூஸ்' என்ற பெயரினை எடுத்தாரென்பதை முன்பே பார்த்தோம். விரைவி லேயே செல்ஜுக் அரசர் சஞ்சாரால் இவர் தோற்கடிக்கப் பட்டுக் கைது செய்யப்பட்டார். கசினி இத் தருணத்தில் மீண்டும் பஹ்ராமால் கைப்பற்றப்பட்டது. விரைவிலேயே விடுதலை பெற்று கோருக்குத் திரும்பி, தமது அரசைப் பல திசை களிலும் விரிவுபடுத்தத் துவங்கினார் அலாவுதீன். சஞ்சார் குஸ் துருக்கியர்களால் கொல்லப்பட்டமை இவருக்குப் பெரும் வாய்ப் பாகப் போயிற்று. கர்ஜிஸ்தான் (Gharjistan), பாமியான் போன்ற பகுதிகள் இவரால் வெல்லப்பட்டன. அலாவுதீனின் மரணத்துக்குப் பின் (1161) அவரது மகன் சைஃபுதீன் முகம்மது அடுத்தபடியாக அரசராகி ஒரு கைகலப்பில் உயிர் நீத் தார். இதற்குப்பின் கோரி அரசுக்கு வாரிசுகளாக விளங்கியோர் பஹாவுதீன் சாமின் மகன்களான கியாசுதீன் (Ghiyasuddin), ஷிகாபுதீன் ஆகிய இருவரே. இவ் விருவரின் காலத்திலேயே கோரி அரசு ஒரு பேரரசாக வளர்ச்சியுற்றது.

2. கோரி முகம்மதுவின் ஆட்சி

அண்ணனின் கொடை

சைஃபுதீன் முகம்மதுவுக்குப் பின் கியாசுதீனே (கி.பி. 1163—1203) அரசரானார். இவரது இயற்பெயர் ஷம்சுதீனே என்றும், அரியணை ஏறிய பின்னரே இவர் கியாசுதீன் என்று அழைக்கப்பட்டாரென்றும் மின்ஹாஜின் நூல் தெரிவிக்கிறது. தம் தம்பியான ஷிகாபுதீன்மீது மிகுந்த அன்பு பாராட்டிய இவர், அரியணை ஏறிய உடனேயே அவரை (ஷிகாபுதீனை)த் தக்கினாபாதில் (Takinabad) ஆளுநராக நியமித்தார். அவ்வாறு ஆளுநரானதும், அவர் அண்ணனின் ஆணையின்படி, குஸ் துருக்கியர்களின் வசமிருந்த கசினி நகரைக் கி.பி. 1173-ல் கைப் பற்றினார். முஸ்லிம் அரச குடும்பங்களில் நிலவிவந்த வழக்கத் துக்கு மாறாக, தம்பிமீது அளவிறந்த அன்பு பாராட்டிய கியாசு

தீன் அந்தத் தம்பியையே கசினியில் முழு உரிமை பெற்ற மன்னராக உயர்த்திவிட்டார். இதுமுதல் (கி.பி. 1173) ஷிகாபுதீனின் பட்டப் பெயர் முயீசுதீன் (Muizuddin) ஆயிற்று. இவ்வாறு கசினியில் கி.பி. 1203 வரையில் சுதந்திர அரசராக முயீசுதீன் இருந்து, இந்தியாவின்மீது படையெடுத்து, கசினிச் சிற்றரசை ஒரு பேரரசாக விரிவுபடுத்தினுரெனினும், இறுதி வரையில் தம் அண்ணனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசராகவே பணிவுடன் நடந்து கொண்டது அண்ணனிடம் இவர் காட்டிய அன்பினையும் பெருந்தன்மையினையும் வெளிக்காட்டுகின்றது. கி.பி. 1203-ல் தம் அண்ணன் இறந்த பின்னரே சுதந்திரமான அரசராக இவர் தம்மைக் கருதிக் கொண்டார். அது வரையில் அண்ணனின் அனுமதியின்றி எந்த ஒரு படையெடுப்பையும் இவர் நிகழ்த்தவில்லையென்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

கியாசுதீன், ஷிகாபுதீன் ஆகிய இருவருமே சிறு வயதில் முகம்மது என்ற பெயராலேயே அழைக்கப்பட்டனர். இதனுலேயே முயீசுதீன் முகம்மது என்ற பெயர் கோரி முகம்மதுவுக்கு ஏற்பட்டது. கி.பி. 1203 வரையில் கசினியிலிருந்தே முயீசுதீன் ஆண்டாரென்றுலும், கோரி முகம்மது என்றே வழக்கமாக இவர் அழைக்கப்படுகிருர். இவருக்கும் இவருடைய அண்ணனுக்குமிடையில் நிலவிய உறவினையும், அண்ணனிடம் இவர் காண்பித்த மரியாதையையும்பற்றிப் புகழ்ந்து எழுதாத ஆசிரியரே இல்லை. இதுபற்றி உல்ஸ்லி ஹேக் அவர்கள் எழுதியுள்ள வரிகள் இங்குக் குறிப்பிடத்தக்கவை.[1]

இந்தியப் படையெடுப்புகள்

காரணங்கள்

கோரி முகம்மது ஊக்கமும் முயற்சியும் மிக்க மனிதர். கசினியிலிருந்து ஆளத் துவங்கியது முதல், முன்பு கசினி மகமூதின் காலத்தில் கசினிப் பேரரசில் அடங்கியிருந்த இந்தியப்

[1] 'The relations between the brothers exhibit a pleasing contrast to the almost invariable tale of envy, jealousy, and fratricidal strife furnished by the records of other Muslim dynasties. Ghiyasuddin commanded, until his death, the loyal assistance of his brother, and in return reposed in him a confidence which was never abused and permitted to him a freedom of action which few other Eastern rulers have dared to tolerate in a near relation. Mohammad acquired territory and wealth which would have enabled him, had he been so minded, to overthrow his brother and usurp his throne, and was described on his coins as "the great and victorious Sultan", but the place of honour was always assigned to his brother's name, which was distinguished by epithets denoting his superiority'.—Sir Wolseley Haig, *The Cambridge History of India*, Vol. III.

பிரதேசங்களை யெல்லாம் வெல்ல வேண்டுமென்று அவர் எண்ணியதில் வியப்பில்லை. கசினியைச் சேர்ந்த யமீனி வம்சம் அப்பொழுது பஞ்சாபில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது. அந்தப் பஞ்சாப் பிரதேசமும் தம் வயமே வந்து சேர வேண்டு மென்று கோரி முகம்மது கருதினர். சிந்துவும் மூல்தானும்கூடப் பல முஸ்லிம் சிற்றரசர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்தன. மூல்தானனது இஸ்மாயீலிகள் என்றும் கர்மாத்தியர்கள் என்றும் அழைக்கப்பட்ட ஷீஆப் பிரிவினரான முஸ்லிம்களால் ஆளப் பட்டு வந்தது. சுன்னீயான கோரி முகம்மது இந்த இஸ்மாயீலிப் பிரிவினரைத் தமது சமய விரோதிகளென்று கருதினர். மேலும், கசினி மகமூத் காட்டிய வழியில் சென்று, ஆப்கானிஸ்தானத்தை அடுத்திருந்த வட இந்தியாவை வெல்ல வேண்டுமென்று இவர் கருதியதும் இயற்கையே. இவ்வாறு பல்வேறு காரணங்களினுல் இந்தியாவின்மீது இவரால் படையெடுப்புகள் நிகழ்த்தப்பட்டன. தங்கள் தாயகத்தின் வடக்கில் குவாரிசம் ஷாவுக்கெதிராக இவரும் இவரது தமையனும் இடைவிடாது போரிட வேண்டியிருந்தது. அத்தகைய பெரிய பகைவன் ஒருவன் மட்டும் வடக்கில் இல்லாமல் இருந்திருந்தால், இந்தியாவில் மேலும் பெரிய வெற்றிகளை முயீசுதீன் முகம்மது ஈட்டியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

கசினி மகமூதின் இந்தியப் படையெடுப்புகளுக்கும் இவரது படையெடுப்புகளுக்குமிடையிலுள்ள ஒரு முக்கிய வேறுபாட்டினைச் சிறிது மிகைபட்ட வகையில் பல்வேறு அறிஞர்களும் எடுத்துக் காட்டுகின்றனர். சுல்தான் மகமூதின் நோக்கம் இந்து சமயத்தை அழிப்பதும், இந்து ஆலயங்களைத் தரைமட்டமாக்குவதும், இஸ்லாமிய சமயத்தை இந்தியாவில் வாள்முனையில் புகுத்துவதுமே என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். இது முழு உண்மையென ஏற்றுக் கொள்வதற்கில்லை. பேரரசை உருவாக்குவதற்கும், ஆக்கிரமிப்புகளை நிகழ்த்துவதற்கும், இந்து ஆலயங்களில் நீண்ட நெடுங்காலமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த செல்வங்களைக் கொள்ளையிடுவதற்கும் ஏற்ற ஒரு சாதனமாகவே இஸ்லாமிய சமயம் சுல்தான் மகமூதால் பயன்படுத்தப்பட்டது. கசினி மகமூதின் நோக்கம் சமயச் சார்பானதென்றும், முயீசுதீன் முகம்மதுவின் நோக்கம் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவுவதென்றும் அந்த அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். டெல்லியைக் கைப்பற்றி இந்தியாவில் முஸ்லிம்களால் டெல்லி சுல்தானியம் நிறுவப்படுவதற்குக் கோரி முகம்மது காரணமாயிருந்தா ரென்பதை மறுக்க முடியாது. அதே சமயத்தில், கசினி மகமூதுக்கு அத்தகைய நோக்கம் எதுவுமே இல்லை

யென்று கூறுவது உண்மையாகாது. பஞ்சாபையும் மூல்தானை யும் கசினியுடன் அவர் இணைத்துக் கொண்டதே இக் கூற்றினைப் பொய்ப்பிக்கிறது. தாம் படை நடத்தித் தாக்கிக் கொள்ளை யிட்ட பிரதேசங்களனைத்தையும் சுல்தான் மகமூத் தமது பேரர சோடு இணைத்துக் கொள்ளாததற்குக் காரணம் அவரது அரசியல் விவேகமே. குஜராத், காலிஞ்சர், கனோஜ் ஆகிய தூரத்துப் பிரதேசங்களை யெல்லாம் அவர் பேராசைப்பட்டு இணைத்துக் கொண்டிருப்பாரேயானால், கசினிப் பேரரசு வலிமையையும் கட்டுக்கோப்பையும் இழந்துவிட் டிருக்கும். தமது கண்ணெதிரி லேயே பல பிரதேசங்கள் தமது பிடியிலிருந்து நழுவிச் செல் வதை அவர் கண்டிருப்பார். அத்தகைய நிலை ஏற்படக் கூடா தென்பதைச் சிறந்த அரசராகிய அவர் நன்கறிவார். எனவே தான், பஞ்சாபுடனும் மூல்தானுடனும் அவரது பேரரசு நின்று போயிற்று.

கோரி அரசானது கசினி அரசைப் போல வடக்கில் ஆக்சி யானு அக்கரைப் பிரதேசம், மேற்கில் பாரசீகம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கவில்லை. அப் பகுதிகளை ஷன்சபானீ வம்சத் தினர் வெல்ல முடியாத அளவுக்கு வலிமை மிக்க அரசர்கள் அப்பொழுது ஆண்டு வந்தனர். எனவே, ஒற்றுமையில்லாமல் சின்னஞ்சிறு சிற்றரசுகளாகச் சிதறுண்டு கிடந்த வட இந்தியா வின் பக்கம் முயீசுதீன் தமது ஆக்கிரமிப்புப் பார்வையைத் திருப்பினுர். வட இந்தியாவில் முஸ்லிம் அரசு ஒன்றை நிறுவு வதற்கான சூழ்நிலை கசினி மகமூதைக் காட்டிலும் கோரி முகம்மதுவின் காலத்தில் சாதகமாக இருந்தது.

மூல்தான்மீது படையெடுப்பு

பஞ்சாபில் கடைசி யமீனி அரசரான குஸ்ராவ் மலிக் அப் பொழுது ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். ஏதோ காரணத்தி ஞல் அப் பகுதியை நோக்கித் தமது முதல் படையெடுப்பை மேற்கொள்ளாமல், வழக்கமான கைபர் கணவாயை விடுத்து, கோமல் கணவாயின் (Gomal Pass) வழியாகப் புகுந்து முயீசுதீன் கி.பி. 1175-ல் தமது முதலாவது இந்தியப் படை யெடுப்பைத் துவக்கினுர். கைபரை விடக் கோமல் கணவாய் மிக அதிக தூரமில்லாத குறுக்கு வழியாக அவருக்குத் தோன் றிற்றுப் போலும்! அல்லது யமீனிகளின் பிரதேசமான பஞ்சாபின் மீதான தாக்குதலைச் சிறிது காலந் தாழ்த்தி நிகழ்த்தலாமென்று அவர் கருதியிருக்கலாம். கசினிப் பேரரசின் சீர்குலைவுக்குப் பின் மூல்தானில் இஸ்மாயீலிப் பிரிவைச் சேர்ந்த பழைய முஸ்லிம் வம்சமானது மறுபடியும் தனது ஆதிக்கத்தை நிறுவி

யிருந்தது. இவர்கள் சுன்னிகளல்லர்; எனவே, முயீசுதீன் இவர்களைத் தீர்த்துக் கட்டுவதில் அதிக அக்கறை காட்டினர். வெகு எளிதில் மூல்தானைக் கைப்பற்றி, இஸ்மாயீலிகளை ஈவிரக்கமின்றி அவர் வெட்டி வீழ்த்தினர். இஸ்மாயீலிப் பிரிவை வேரறுக்க வேண்டுமென்ற எண்ணம் அவரிடம் தீவிரமாகக் காணப்பட்டது. இப் படுகொலைக்குப் பின், இஸ்மாயீலிகளால் அரசியல் சக்தியாகத் தலைதூக்கவே முடியவில்லை. எனினும், இதற்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் ஒரு இஸ்மாயீலியனே (கர்மாத்தியனே) கி.பி. 1206-ல் முயீசுதீனைக் கொல்லுவித்தான்.

உச் படையெடுப்பு

மூல்தானைக் கைப்பற்றி, அங்கு ஆளுநர் ஒருவரை நியமித்த பின், அதற்குத் தெற்கிலிருந்த உச் (Uch) கோட்டையை நோக்கி முயீசுதீன் புறப்பட்டார். இப் படையெடுப்பைப்பற்றி மின்ஹாஜுத்தீன் சிராஜின் தபகாத்தெ-நாசிரி தொடர்ச்சியாகக் குறிப்பிடவில்லை. நிசாமுதீன் அகமதின் 'தபகாத்தெ-அக்பாரி' என்ற நூலும், மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த ஃபெரிஷ்தாவும் இதுபற்றிக் குறிப்பிடுகின்றனர். கி.பி. 1176-ல் உச் கைப்பற்றப் பட்டதாக ஃபெரிஷ்தா தெரிவிக்கிறர். அங்கு அலீ கிர்மாஜ் (Ali Kirmaj) என்பவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவ்வூர் கைப்பற்றப்பட்ட விதத்தைப்பற்றி ஒரு கதையும் கூறப்படுகிறது. அவ்வூரின் இந்து அரசருக்கும் அவரது அரசிக்குமிடையில் வெறுப்பு இருந்து வந்ததாக அறிந்து, அக் கோட்டையைத் தம் வசம் ஒப்புவித்தால் அந்த அரசியைத் தாம் மணந்து கொள்வதாக முயீசுதீன் செய்தியனுப்பினராம். அந்த அரசி தனக்குப் பதிலாகத் தன் மகளை முயீசுதீன் மணந்து கொள்ள வேண்டுமென்று கேட்டு, அதற்கு அவர் இணங்கியபின், தன் கணவனைக் கொன்று, அவ்வூரினுள் முஸ்லிம் படைகளை அனுமதித்தாளாம். பின்னர், தாயையும் மகளையும் முயீசுதீன் கசினிக்கு அனுப்பினர். அங்குத் தன் மகளாலேயே வெறுக்கப்பட்டுத் தாய் இறந்ததாகவும், அதற்கு இரு ஆண்டுகளுக்குப் பிறகு மகள் இறந்ததாகவும் சொல்லப்படுகிறது.

குஜராத்தில் தோல்வி

கி.பி. 1178-ல் மூல்தான், உச் ஆகியவற்றின் வழியாக இந்தியப் பாலைவனத்துக்குள் நுழைந்து குஜராத்தின்மீது முயீசுதீன் முகம்மது படையெடுத்து வந்தார். முன்பு கசினி மகமூது இவ் வழியாக வந்ததை இவர் உதாரணமாகப் பின்பற்றினர் போலும்! அபுக் குன்றின் அடிவாரத்தை முஸ்லிம் படை அடைந்ததும், குஜராத்தை ஆண்டு வந்த சௌளுக்கிய அரசர்

இரண்டாம் மூலராஜரது படைகள் அங்குக் காத்துக்கிடந்தன. நீரற்ற பாலைவனத்தின் வழியாக நெடுந்தூரம் வந்த முஸ்லிம் படைகள் அங்குப் படுதோல்வியுற்றன. அக் குன்றின் அடிவாரத்திலிருந்த கயத்ரா (Kayadra) என்ற சிற்றூருக்கு அருகிலேயே இப் போர் நிகழ்ந்ததென்று சொல்லப்படுகிறது. அப்பொழுது இரண்டாம் மூலராஜர் சிசுவாயிருந்தாரென்றும், அவரது தாயான நாயகிதேவி என்பார் தம் மகனை மடியில் வைத்துக் கொண்டு முஸ்லிம் படைகளை எதிர்த்து வென்றாரென்றும் இந்தியச் சான்றுகள் சொல்கின்றன. முஸ்லிம்களால் கயத்ரா என்றழைக்கப்படும் ஊர் கதரகட்டம் (Gadaragatta) என்று இந்திய நூல்களில் குறிப்பிடப்படுகிறது. முயீசுதீனை எதிர்த்துப் போரிட்ட இந்திய அரசர் இரண்டாம் மூலராஜரின் தம்பியான இரண்டாம் பீமரே என்று மின்ஹாஜ் போன்ற முஸ்லிம் நூலாசிரியர்கள் எழுதியுள்ளது தவறு[1] என்று இந்திய அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. 1178-லேயே மூலராஜர் இறந்து இரண்டாம் பீமர் அரசரானார்.[2] படையின் பெரும் பகுதியை இழந்து, வந்த வழியே கசினிக்குத் திரும்பினார் முயீசுதீன்.

பெஷாவர் கைப்பற்றப்படுதல்

இத் தோல்விக்குப் பின், முயீசுதீனின் திட்டங்களில் மாறுதல்கள் தோன்றின. தெற்கத்திய கணவாயை விட்டு, கசினி மகமூத் பின்பற்றிய வடக்கு வழியாகவே தமது அடுத்த படையெடுப்பை முயீசுதீன் நிகழ்த்தலாயினார். கி.பி. 1179-ல் பஞ்சாபை ஆண்ட குஸ்ராவ் மலிக்கின் ஆளுநர் ஒருவர் வசமிருந்த பெஷாவர் நகரம் முயீசுதீனால் கைப்பற்றப்பட்டது. பஞ்சாபுக்கெதிரான இந்த முதல் வெற்றியினால் இந்தியாவுக்குள் நுழைவதற்குப் புதிய வழிப்பாதை யொன்று அவருக்குப் புலப்பட்டது.

பஞ்சாபை வெல்லுதல்

கி.பி. 1181-ல் மீண்டுமொருமுறை இதே வழியாக முயீசுதீன் படையெடுத்து வந்தார். எதிர்க்க முடியாது என்பதை உணர்ந்த குஸ்ராவ் மலிக் தமது மகனையும் யானையொன்றையும் பிணையமாக ஒப்புவித்து, தமது மரியாதையைத் தெரிவித்து முயீசுதீனுடன் நல்லுறவை மேற்கொள்ள விரும்புவதாகக் கூறினார். ஏதோ காரணத்தினால் இதை ஏற்றுக்கொண்டு,

[1] முன் பக்கம் 262 பார்க்க.

[2] K. M. Munshi, *Glory that was Gurjaradesa*, Part II ; R. C. Majumdar (Editor), *The Struggle for Empire*, Article by D. C. Ganguly.

முயீசுதீன் திரும்பிச் சென்ருர். அடுத்த ஆண்டில் (கி.பி. 1182) பழையபடியே சிந்து மாநிலத்துக்குள் நுழைந்து, தேபல் நகரம் உள்ளிட்ட கடற்கரைப் பகுதி முழுவதையும் அவர் கைப்பற்றினர். அப் பகுதியை ஆண்டுவந்த சும்ரா (Sumra) குலத்து அரசர் இம் முஸ்லிம் படைக்கு முன் பணிந்து கப்பம் செலுத்தி, முயீசுதீனின் கீழ்ச் சிற்றரசராக இருப்பதற்கு இணங்கினர்.

அடுத்த இரண்டு ஆண்டுகள் வரை அமைதி நிலவிற்று. குஸ்ராவ் மலிக் ஜம்மு அரசரான சக்கரதேவருக்கு எதிராகக் கொக்கர்களுக்கு (Khokars) உதவிபுரிந்து, அவர்கள் வழக்கமாக ஜம்முவுக்குச் செலுத்தி வரும் திறைகளை நிறுத்தச் செய்தார். இதன் விளைவாக ஆத்திரமுற்ற சக்கரதேவர் முயீசுதீனுக்குத் தூதனுப்பிப் பஞ்சாபின்மீது படையெடுத்து வருமாறும், அப்பொழுது தாம் படையுதவி புரிவதாகவும் கூறியதாக 'ராஜ் தர்ஷனி' (Raj Darshani) என்ற பிற்கால நூலொன்று குறிப்பிடுகின்றது. இந்த அழைப்பினை ஏற்றுக் கி.பி. 1185-ல் பஞ்சாபின் மீது தமது இரண்டாவது தாக்குதலை முயீசுதீன் தொடுத்தார். லாகூர் வரையிலான பிரதேசம் முயீசுதீனுல் கொள்ளையிடப்பட்டது. லாகூரின் கதவுகளை அடைத்து முற்றுகையைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைக் குஸ்ராவ் மலிக் மேற்கொண்டார். அந் நகரைக் கைப்பற்ற ஏனே விரும்பாமல், முயீசுதீன் திரும்பிச் சென்ருர். அவரது படையதிகாரிகள் அவரது ஆணையின்படி சியால்கோட்டைக் (Sialkot) கைப்பற்றி அதன் கோட்டையைப் புதுப்பித்து வலுப்படுத்தினர்.

முக்கியமான இக் கோட்டையைப் பகைவன் வசம் விடுவது ஆபத்தாகுமென்று கருதிய குஸ்ராவ் மலிக் கொக்கர்களின் உதவியுடன் அதை முற்றுகையிட்டார். இம் முற்றுகை தோல்வியில் முடிந்தது. இந்த முற்றுகைக்காகப் பழிவாங்கும் நோக்கத்துடன் அடுத்த ஆண்டிலேயே (கி.பி. 1186) குஸ்ராவ் மலிக்குக்கெதிராக மற்ருெரு படையெடுப்பினை முயீசுதீன் மேற்கொண்டார். லாகூர் நகரம் முற்றுகையிடப்பட்டது. முற்றுகை மூலம் லாகூரைக் கைப்பற்ற முடியாது என்பதைக் கண்ட பின், ஏமாற்று வித்தையில் இறங்கினர் முயீசுதீன். குஸ்ராவ் மலிக்குடன் தாம் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாரென்றும், அதற்கு இணங்கித் தமது முகாமுக்கு அவர் வருவாரேயானுல் அவருக்கு எந்த விதமான தீங்கும் இழைக்கப்படமாட்டாது என்றும் உறுதி கூறினர் கோரி முகம்மது. இப் பொய் வார்த்தையை மெய்யென்று நம்பிப் பகைவனின் முகாமுக்கு வந்த குஸ்ராவ் மலிக்கைக் கோரி முகம்மது கைது செய்து,

கர்ஜிஸ்தானத்தில் சிறை வைத்தார்.[1] அங்குக் கி.பி. 1192-ல் பலர்வான் (Balarwan) கோட்டையில் குஸ்ராவ் மலிக் கொலை செய்யப்பட்டார். லாகூர் நகரம் இவ்வாறு சூழ்ச்சியின்மூலம் கைப்பற்றப்பட்டது. லாகூர் முற்றுகையின்போது சக்கரதேவருக்குப் பின் ஜம்முவின் அரசரான அவரது மகன் விஜயதேவர் முயீசுதீனுக்கு உதவி நல்கினுரென்று சொல்லப்படுகிறது. மூல்தானில் ஆளுநராயிருந்த அலீ கர்மாக் (Ali Karmakh) இப்பொழுது லாகூரில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு யமீனி வம்சத்துக்கு முடிவுகட்டிவிட்டுப் பஞ்சாபைத் தமது ஆதிக்கத்தின்கீழ் முயீசுதீன் கொண்டு வந்தார்.

மூல்தான், உச், தேபல், பெஷாவர், சியால்கோட், லாகூர் ஆகிய இடங்களில் முயீசுதீனின் படைகள் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டன. இதன்மூலம் பஞ்சாபிலும் சிந்துவிலும் முயீசுதீனின் ஆதிக்கம் வலுவாக நிறுவப்பட்டது. கோரி அரசுடன் இப் பிரதேசங்களை இறுக்கமாகப் பிணைக்கும் வகையில் நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மின்ஹாஜுதீனின் (தபகாத்தெ-நாசிரியின் ஆசிரியர்) தந்தையான மௌலாஞ சிராஜுதீன் இப்பொழுதுதான் லாகூரில் நீதி நிர்வாகத்தை மேற்பார்வையிடும் ஓர் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கோரிப் பேரரசின் கீழ்க்கோடி மாநிலமாகச் சிந்துவும் பஞ்சாபும் ஆயின. இப் பகுதிகளை வென்று தமது ஆட்சியை அங்கு உறுதியாக நிறுவிய பின்னரே மேலும் கிழக்கு நோக்கித் தமது அடுத்த படையெடுப்புகளை முயீசுதீன் மேற்கொண்டார். கிட்டத்தட்ட, சட்லெஜ் வரையில் அவரது கிழக்கு எல்லை விரிவடைந்திருந்தது என்று நாம் கொள்ளலாம்.

பாட்டிண்டா கைப்பற்றப்படுதல்

லாகூரிலிருந்து டெல்லியை நோக்கி வரும் வழியில் பாட்டியாலா சமஸ்தானத்தின் மேற்குப் பகுதியில் பாட்டிண்டா (Bhatinda) உள்ளது. கி.பி. 1191-ல் பாட்டிண்டாவைக் கோரி முகம்மதுவின் படைகள் கைப்பற்றின. அது சாகமான அரசர் மூன்றுவது பிருதிவிராஜரின் அரசில் அப்பொழுது அமைந்திருந்தது. அதைக் கைப்பற்றிய பின்னர், சியாவுதீன் என்பவரது தலைமையில் அங்கு ஒரு படையை நிறுத்திவிட்டுத் தமது தலைநகருக்குத் திரும்புவதற்குக் கோரி முகம்மது ஏற்பாடுகள் செய்தார். ஆனுல், விரைவிலேயே பாட்டிண்டா கைப்பற்றப்பட்டு விட்ட செய்தி மூன்றும் பிருதிவிராஜருக்கு எட்டிற்று. அவர் ஒரு

[1] Habibullah, *The Foundation of Muslim Rule in India.*

பெரும் படையோடு பாட்டிண்டாவை மீட்பிப்பதற்காகப் புறப் பட்டு வந்தார்.

(முஸ்லிம் நூலாசிரியர்களில் பிற்காலத்தைச் சேர்ந்த பலர் இக் கோட்டையை சர்ஹிந்த் என்றும், பாட்டிண்டா என்றும், தபர்ஹிந்தா என்றும் பலவகையாகக் குறிப்பிட்டனர். இந்தச் சிக்கல் இறுதியாக முடிவு செய்யப்பட்டு விட்டதாகக் கூற இய லாது. உல்ஸ்லி ஹேக், ஹபீபுல்லா, ஹபீப் போன்ற அறிஞர்கள் அப் பிரதேசத்தில் வழங்கும் கதைகள், தொல்பொருள் ஆராய்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தபர் ஹிந்தா என்பது பாட்டிண்டாவே என்று கொண்டனர்; ஃபெரிஷ் தாவும் இவ்வாறே எழுதியுள்ளார். லாகூரிலிருந்து ஹான்சிக்கு வருவதற்கு இதுவே சுருக்கு வழி என்பதால் இம் முடிவினை மேற் கூறிய அறிஞர்கள் கொண்டனர். D. C. கங்குலி போன்றவர்கள் சர்ஹிந்தே தபர்ஹிந்தா என்று குறிப்பிடுகின்றனர். பாட்டிண் டாவை அடுத்தே தரைன் உள்ளது என்றாலும், பாட்டிண்டாவுக் கும் தரைனுக்குமுள்ள தூரமானது சர்ஹிந்துக்கும் தரைனுக்கு மிடையேயுள்ள தூரத்தைப்போல் இருமடங்கு என்றும், எனவே சர்ஹிந்தே தபர்ஹிந்தா என்று கொள்வது பொருத்தமானது என்றும் கங்குலி கருதுகின்றார்.)

தரைன் போர்

டெல்லியைச் சேர்ந்த கோவிந்தராஜர் போன்ற பல சிற் றரசர்கள் தங்கள் படைகளைத் திரட்டிக்கொண்டு பிருதிவிராஜ ருடன் வந்தனர். இரண்டு லட்சம் குதிரைகளும், மூவாயிரம் யானைகளும் பிருதிவிராஜரின் தரப்பில் இருந்தனவென்று ஃபெரிஷ்தா தரும் தகவல் மிகையானது என்பதில் ஐயமில்லை. கசினிக்குத் திரும்புவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்த முயீசு தீன் முகம்மது உடனே போர்க்களத்தை நோக்கிப் புறப்பட் டார். தரைன் (Tarain) என்ற விடத்தில் இரு படைகளும் சந்தித்தன. (இப் போர்க்களம்பற்றியும் ஓரளவு சச்சரவு நிலவு கின்றது. மின்ஹாஜ், நிஜாமுதீன், ஃபெரிஷ்தா ஆகியோர் தரைன் என்றே இதைக் குறிப்பிட்டனர். பிற்காலத்தைச் சேர்ந்த வேறு சிலரோ நரைன் அல்லது நாராயண்—Narain— என்று இதைக் குறிப்பிட்டனர். ஃபெரிஷ்தா இந்த இடத்துக்குத் தரவாரி அல்லது தராவ்ரி—Taraori—என்றும் மற்றொரு பெயர் உண்டு என்று எழுதினார். இவ் விடங்கள் எங்குள்ளன என்பது பற்றி எல்பின்ஸ்டன், ரேவர்டி, கன்னிங்ஹாம் போன்ற பலர் ஆராய்ச்சிகள் செய்தனர். பொதுவாக, டெல்லிக்கு எண்பது மைல் தூரத்தில் தானேசுவரத்துக்கு அருகிலுள்ள தரைனே இப்

போர்க்களமென்று பெரும்பாலோர் கூறுவதையே நாம் ஏற்றுக் கொள்ளலாம்.)

இப் போர் நிகழ்ந்த விதம்பற்றியும் மின்ஹாஜ், ஃபெரிஷ்தா ஆகியோர் வெவ்வேறு கதைகளைக் கூறுகின்றனர். போர் நடந்து கொண்டிருந்த வேளையில் கோரி முகம்மதுவின் இடது பாரிசமும் வலது பாரிசமும் உடைந்து துருப்புகள் நிலைகுலைந்து ஓடின. நடுவிலிருந்த அணியும் உடையும் தறுவாயிலிருந்தது. எனவே, லாகூரை நோக்கி ஓடுவதே உசிதமென்று சில படைத் தலைவர்கள் கூறினராம். இதைக் கேட்டுக் கோபமுற்ற முகம்மது உருவிய வாளுடன் கோவிந்தராஜரை நோக்கி விரைந்தார். யானைமீதிருந்த கோவிந்தராஜரும் அவரை நோக்கி வரவே, முகம்மதுவின் கையிலிருந்த நீண்ட ஈட்டி தாக்கியதால் அவரது முன் பற்கள் இரண்டும் உடைந்தன. கோவிந்தராஜர் ஓர் ஈட்டியை எறிந்து சுல்தான் முகம்மதுவின் புஜத்தில் பெரிய காயத்தை ஏற்படுத்தினர். வலி பொறுக்கமாட்டாமல் குதிரையிலிருந்து கீழே விழவிருந்த சுல்தானைக் குதிரைவீரன் ஒருவன் கண்டு, அவரது குதிரையின்மீது பாய்ந்து ஏறி, அவரைப் பிடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் போர்க்களத்தை விட்டு வெளியேறினன். இதற்குப் பின் முஸ்லிம் படைகள் நிலைகுலைந்து ஓடின. இச் செய்திகளை ஃபெரிஷ்தாவே நமக்குத் தருகின்றார்.

அவர் தந்துள்ள இந்த வர்ணனை மின்ஹாஜின் விவரங்களோடு ஓரளவு ஒத்துள்ளது. முகம்மது காயமுற்றுக் கில்ஜி வீரன் ஒருவனல் வெளியே கொண்டுவரப்படுவதைக் கண்ட அமீர்களும் அதிகாரிகளும் தங்களது ஈட்டிக் கோல்களையே படுக்கையாகக் கட்டி, முகம்மதுவைத் தூக்கிவந்து காப்பாற்றினரென்று மின்ஹாஜ் எழுதினர்.

பிருதிவிராஜர் பாட்டிண்டாவை நோக்கி முன்னேறி அதை முற்றுகையிடலானர். தொடர்ந்து பதின்மூன்று மாதங்கள் உறுதியோடு இம் முற்றுகையைச் சமாளித்த பின்னரே சியாவுதீன் சரணடைந்தார்.

போரில் தோல்வியுற்ற கோரி முகம்மதுவைப் பிருதிவிராஜர் சிறைப் பிடித்து, பின்னர் மூல்தானுக்குச் செல்லுமாறு விடுவித்தார் என 'ஹம்மீர மகாகாவியம்' கூறுகிறது. இது நம்பத்தக்க செய்தியன்று.

இரண்டாவது தரைன் போர்

முதல் தரைன் போரில் கிட்டிய தோல்விக்குப் பின் கசினிக்கு மீண்ட முயீசுதீன் மிகவும் அவமானமுற்று, வழக்கம் போல

உணவு, உடை, மது ஆகியவற்றில்கூட அக்கறை காட்டாமல் பெரும் படையொன்றைத் திரட்டுவதிலேயே கவனம் செலுத்தினாரென்று ஃபெரிஷ்தா குறிப்பிடுகிறார். இடையில் ஒருமுறை கோர் நகருக்கும் சென்று தம் அண்ணனை முயீசுதீன் பார்த்து வந்தார். ஓராண்டு காலம் முயன்று ஒரு பெரும் சேனையைத் திரட்டிய பின், படைத் தலைவர்களிடம்கூட எங்குச் செல்கிறோமென்பதைச் சொல்லாமல் பெஷாவரை நோக்கி அவர் வந்தார். அங்குத் தான் முதன்முறையாகப் பிருதிவிராஜருக்கெதிராகப் போருக்குச் சென்று கொண்டிருப்பதாக அவர் தம் தளபதிகளிடம் கூறினாராம். பெஷாவரிலிருந்து மூல்தான் வழியாக லாகூரை அவர் அடைந்தார். ஓரிலட்சத்து இருபதாயிரம் பேர் அவரது சேனையிலிருந்தனர். லாகூரிலிருந்து கொண்டு, ருக்னுத்தீன் ஹம்சா (Ruknuddin Hamza) என்பாரைப் பிருதிவிராஜரிடம் முயீசுதீன் தூதனுப்பினார். தமக்குப் பணிந்து போகுமாறு முயீசுதீன் விடுத்த கோரிக்கையானது சாகமான அரசரால் நிராகரிக்கப்பட்டது. பிருதிவிராஜரின் படையமைப்புப்பற்றி நம்பத் தகுந்த தகவல்கள் இல்லை. மூன்று லட்சம் ராஜபுத்திர ஆப்கானிய குதிரை வீரர்கள் அவர் தரப்பில் இருந்தனர் என்ற ஃபெரிஷ்தாவின் தகவல் ஏற்றுக் கொள்ளத் தக்கதாயில்லை. கசினிப் படையிலோ கார்பக் (Kharbak), கார்மில் (Kharmil), இலாஹ் (Ilah), முக்கல்பா (Mukalba) போன்ற நான்கு கீர்த்தி மிக்க தளபதிகள் இருந்தனர். அவர்களோடுகூடத் தாஜுதீன் யல்தூஸ் (Yalduz), குபாச்சா, அய்பக் ஆகியோரும் இருந்தனர்.

பழைய போர்க்களத்திலேயே இரு தரப்புப் படைகளும் முகாமிட்டன. முகம்மது தமது படைகளை ஐந்து பிரிவாகப் பிரித்து, அவற்றுள் ஒன்றான 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு பிரிவினை இறுதித் தாக்குதலுக்குப் பயன்படுமென்று போர்க்களத்திலிருந்து சற்றுத் தூரத்துக்கு அப்பால் வைத்திருந்தார். மற்ற நான்கு பிரிவுகளையும் சேர்ந்த குதிரை வீரர்கள் இந்துக்களின்மீது அம்பு மாரி பொழிந்து கொண்டே இருந்தனர். காலையிலிருந்து மாலை வரையில் இவ்வாறு அம்பு மாரிகளுக்கு இலக்கான இந்துப் படைகள் கைகலந்து போர் புரிய முடியாமல் சோர்ந்து போயின. இத் தருணத்தில் தமது ஐந்தாவது படைப் பிரிவை முகம்மது பயன்படுத்தினார். களைத்துப் போயிருந்த இந்துக்கள் விரைவில் தோற்கடிக்கப்பட்டனர். டெல்லியின் சிற்றரசரான கோவிந்தராஜர் போரில் கொல்லப்பட்டார். முன் பல் இரண்டு இல்லாத அவரது வாயை வைத்தே முகம்மது அவரை அடையாளம் கண்டு கொண்டார். பல ஆயிரக் கணக்கான இந்துப் போர் வீரர்கள் மடிந்து

விழுவதைக் கண்ட பிருதிவிராஜர் யானைமீதிருந்து இறங்கிக் குதிரை ஒன்றின்மீது ஏறி விரைந்தோடுவதற்கு முயன்றார். முஸ்லிம் குதிரைவீரர்களில் சிலர் அவரை விரட்டிச் சென்று சர்சுதி (Sursuti) என்றவிடத்துக் கருகில் கைது செய்தனர். இது சரஸ்வதி நதியாக இருக்கலாமென்று சிலரால் கருதப் படுகின்றது. இந்த இரண்டாவது தரைன் போர் கி.பி. 1192-ல் நடைபெற்றது.

மற்ற இடங்கள் கைப்பற்றப்படுதல்

இப் பெரும் வெற்றிக்குப் பின், முயீசுதீன் வெகு வேகமாக முன்னேறி, ஹான்சி (Hansi), குஹ்ரம் (Guhram), சாமனு (Samana) போன்ற பல கோட்டைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றி, அஜ்மீரை அடைந்தார். அந் நகரமும் கைப்பற்றப் பட்டுச் சூறையாடப்பட்டது.

தாஜுல் மஆசிர் (Tajul Maasir) என்ற நூலை ஹசன் நிசாமி என்பார் எழுதியுள்ளார்.[1] குத்புதீன் அய்பக்கின் பெருமைகளைக் குறிப்பிடுவதற்காகவே இது முக்கியமாக எழுதப்பட்டது. ஆயினும், கி.பி. 1191-92-ல் இரண்டாவது தரைன் போருக்குக் கோரி முகம்மது ஏற்பாடு செய்யத் துவங்கினது முதல், குத்புதீன் இறந்த ஏழாவது ஆண்டு (கி.பி. 1217) வரையிலான செய்தி களை இது நமக்கு அளிக்கிறது. இந் நூலாசிரியரான ஹசன் நிசாமியின் கூற்றின்படி, பிருதிவிராஜர் அஜ்மீருக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சிறிது காலம் அங்கு அரசாட்சி புரியவும் அனு மதிக்கப்பட்டார். ஆனால், முகம்மதுவுக்கு எதிராக அவர் சதி செய்வது தெரிய வந்தபோது அவர் சிரச்சேதம் செய்யப்பட் டார். பிருதிவிராஜரது நாணயங்கள் சிலவற்றின் பின்புறம் ‘ஸ்ரீ முகம்மது சாம்’ என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள் ளன. (கோரி முகம்மதுவின் நாணயங்களில் சுல்தான் முயீசுதீன் முகம்மது இப்னு சாம் என்று அவரது பெயர் வழக்கமாகக் குறிப் பிடப்படுகிறது.) இதன் பின்னர்ப் பிருதிவிராஜரது மகன் அரச னுக்கப்பட்டதாக இதே சான்றுகள் தெரிவிக்கின்றன. ஆனால், ஹம்மீர மகா காவியம் பிருதிவிராஜரது தம்பி ஹரிராஜர் அரச ரானாரென்கிறது. முஸ்லிம் நூற்சான்றுகளே நம்பத்தக்கவை என்று பலரும் கருதுகின்றனர். அஜ்மீர் நகரத்துச் சாகமான அரசு கோரி முகம்மதுவுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாக இவ்வாறு ஆயிற்று.

[1] For extracts, refer Elliot, Vol. II.

டெல்லி கைப்பற்றப்படுதல்

அஜ்மீரிலிருந்து டெல்லிக்குச் சென்றார் சுல்தான் முகம்மது. முஸ்லிம் படைகளின் முற்றுகையைச் சில நாட்கள் வரையில் கூடச் சமாளிக்க முடியாமல், கோவிந்தராஜரின் மகனும் தளபதிகளும் சரணடைந்தனர். தவருமல் கப்பம் செலுத்துவதாகவும், முகம்மதுவுக்குக் கீழ்ப்பட்டு ஆட்சி புரிவதாகவும் கோவிந்தராஜரின் மகன் அளித்த உறுதிமொழியினை ஏற்று, அவரிடமே ஆட்சிப் பொறுப்பை விட்டுவிட்டு, சுல்தான் முகம்மது கசினிக்கு மீண்டார். குத்புதீன் அய்பக், குஹ்ரம் சாமனு ஆகியவற்றின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். டெல்லிக்குப் பத்து மைல் அருகிலிருந்த இந்தர்பட் (Indarpat) என்ற ஊரைக் குத்புதீன் தமது இருப்பிடமாகக் கொண்டார்.

குத்புதீன் அய்பக்

மத்திய ஆசியாவில் முக்கியமான போர்களை நிகழ்த்துவதில் சுல்தான் முகம்மதுவின் கவனம் இதற்குப் பின் திரும்பிற்று. எனவே, இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கத்தை வலுப்படுத்திப் பரப்பும் பொறுப்புக் குத்புதீன் அய்பக்கையே சார்ந்தது. வட இந்தியாவில் முஸ்லிம் அரசை நிறுவியவர் குத்புதீன் அய்பக்கே என்று கூறினால், அது தவருகாது. துருக்கிஸ்தானத்தில் பிறந்த அய்பக் அடிமையாக நிஷாப்பூருக்குக் கொண்டுவரப்பட்டு, அதன் ஆளுநரால் விலை கொடுத்து வாங்கப்பட்டார்; பின்னர்ப் பல கைகள் மாறி, இறுதியில் முயீசுதீன் முகம்மதுவின் அடிமையாக வந்து சேர்ந்தார். நிஷாப்பூரில் ஆளுநரது பிள்ளைகளுடன் சேர்ந்து ஓரளவு எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு, போர்ப் பயிற்சியும் பெற்றார் குத்புதீன். கசினியில் குத்புதீனின் திறமை, விசுவாசம் ஆகிய குணங்கள் சுல்தான் முகம்மதுவைப் பெரிதும் கவர்ந்தன. படைப் பிரிவு ஒன்றுக்குத் தலைவராகவும், வேறு முக்கியமான பதவிகளிலும் அவர் அடுத்தடுத்து நியமிக்கப்பட்டார். இரண்டாவது தரைன் போரில் உயர் அதிகாரிகளுள் ஒருவராக இவர் பணி புரிந்தார். சுல்தான் முகம்மது இவர்மீது வைத்திருந்த நம்பிக்கையினாலேயே டெல்லிக்கு அருகில் இந்திரப்பிரஸ்தத்தில் (இந்திரபட்) ஒரு சேனையுடன் குத்புதீன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். முயீசுதீனின் பிரதிநிதியாகவே இவர் நியமிக்கப்பட்டிருந்தாரென்று தாஜுல் மஆசிர் குறிப்பிடுகிறது. இவ்வகையில் முழு அதிகாரமும் அவர் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது.

டெல்லி தலைநகராதல்

தரைன் போருக்குப் பின் சிறிது காலத்திலேயே ஜட்வான் (Jatwan) என்ற சிற்றரசர் ஒருவர் (இவர் குஜராத்தை ஆண்ட சௌளுக்கிய அரசர் பீமருக்குக் கட்டுப்பட்டிருந்த சிற்றரசராவார்) ஜாட்டுகளைக் கொண்ட ஒரு படையுடன் ஹான்சியின் மீது படையெடுத்து வந்தார். அங்கு முஸ்லிம் ஆளுநராக இருந்த நுஸ்ரத்துத்தீன் (Nusratud-ddin) தோற்கடிக்கப் படவே, அவர் ஹான்சிக் கோட்டையில் ஒளிந்து கொள்ள வேண்டிய கதியை எட்டினர். குத்புதீன் அய்பக் செப்டம்பர் மாதத்தில் ஒரு படையுடன் ஹான்சிக்கு விரைந்து சென்று ஜாட்டுகளை விரட்டியடித்து விட்டு, ஜட்வானையும் கொன்று விட்டு, மீண்டும் அப்பகுதியில் முஸ்லிம் ஆதிக்கத்தை நிறுவினர். பின்னர் அவர் குஹ்ரமுக்குத் திரும்பி, அங்கிருந்து யமுனைநதியின் கரையிலிருந்த மீரட்டை நோக்கிச் சென்றர். மீரட்டும் பரனும் (Baran-இன்றைய புலந்த்ஷகர்) அய்பக்கால் கைப்பற்றப் பட்டன. இவ்விடங்களில் கோட்டைகள் பலப்படுத்தப்பட்டு, முஸ்லிம் படைகள் அங்கங்கே நிறுத்தப்பட்டன. பரனைக் கைப் பற்றியது முதல் முஸ்லிம் அரசு யமுனை நதிக்கு அப்பாலும் பரவலாயிற்று. அதை ஆண்டு கொண்டிருந்த தோர் (Dhor) ராஜபுத்திரக் குறுநில மன்னர் காகதவாலர்களுக்குக் கட்டுப்பட்டவராக இருந்து வந்தார்.

இதற்குப் பின்னர், டெல்லியைக் கைப்பற்றவும் அய்பக் முடிவு செய்தார். அங்கு ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த கோவிந்தராஜரின் மகன் இஸ்லாமிய ஆதிக்கத்துக்கெதிராகச் சதி செய்கிறனென்ற செய்தி வந்ததே இதற்குக் காரணம். மீரட்டிலிருந்து கி.பி. 1192ஆம் ஆண்டின் இறுதியில் படையோடு சென்று டெல்லியை அய்பக் கைப்பற்றினர். இதையடுத்து, அஜ்மீரின்மீது அவர் படையெடுக்க வேண்டியவராயினர். அங்குக் கோரி முகம்மதுவால் அரசராக நியமிக்கப்பட்டிருந்த பிருதிவிராஜரது மகனை அவனது சிற்றப்பரான ஹரிராஜர் விரட்டிவிட்டு அரசராகியிருந்தார். ஏற்கெனவே அய்பக்கால் வெல்லப்பட்டிருந்த ராந்தம்பார் (Ranthambhor) கோட்டையையும் ஹரிராஜர் கைப்பற்றிக் கொண்டிருந்தார். அய்பக் படையுடன் சென்று, ஹரிராஜரைத் தோற்கடித்து விட்டு, பிருதிவிராஜரது மகனையே மீண்டும் அரசராக்கினர். ஹரிராஜர் முற்றிலுமாக முறியடிக்கப்படுவதற்கு முன்பாகவே டெல்லியில் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது. டெல்லியில் ஆளும்படி அனுமதிக்கப்பட்டிருந்த பழைய தொமர அரசர் இப்பொழுது மீண்டும் கிளர்ச்சியை நடத்தினர். எனவே, அய்பக் டெல்லிக்கு

விரைந்து வந்து அக் கிளர்ச்சியை அடக்கி, அந் நகரைத் தமது நேரடி நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வந்தார். கி.பி. 1193 முதல் டெல்லியே முஸ்லிம்களின் இந்தியத் தலைநகராயிற்று.

இவ்வாறு பல நெருக்கடிகள் ஏற்பட்டுவந்த வேளையில், சுல்தான் முகம்மதுவின் அவசர அழைப்பிற்கிணங்கக் குத்புதீன் அய்பக் கசினிக்கு விரைந்து செல்ல வேண்டியவராயினர். அதற்கான காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. அய்பக்குக்கு எதிராக யாரோ சிலர் முகம்மதுவிடம் கோள்மூட்டிவிட்டதாகவும், அதுபற்றி நேரில் விசாரிப்பதற்கே கசினிக்கு அவர் அழைக்கப் பட்டாரென்றும் சில சான்றுகள் கூறுகின்றன. ஆறுமாத காலம் கசினியில் இருந்த பின், முஸ்லிம் ஆதிக்கத்தினை இந்தியாவில் மேலும் பரப்பும் திட்டமொன்றுடன் கி.பி. 1193-ல் குத்புதீன் டெல்லிக்குத் திரும்பினர். வந்தவுடனேயே யமுனை நதியைக் கடந்து, கங்கை-யமுனை இடைநிலத்தில் கோயில் (Koil—இன்றைய அலிகர்) போன்ற கோட்டைகளை அவர் கைப்பற்றிக் கொண்டார்.

கோரி முகம்மதுவின் காசிப் படையெடுப்பு

அதே ஆண்டில் (கி.பி. 1193-ல்) சுல்தான் முகம்மது இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். 50,000 குதிரை வீரர்களுடன் முகம்மதுவும் அய்பக்கும் காகதவால அரசர் ஜெயச்சந்திரருக்கு எதிராகப் படையெடுத்தனர். கனோஜுக்கு அருகில் முகம்மது முகாமிட்டுத் தங்கி, ஆக்ராவுக்கும் எட்டாவாவுக்கும் (Etawah) இடையில் யமுனை நதிக் கரையில் சந்தாவார் (Chandawar) என்னுமிடத்தில் படையுடன் போருக்குத் தயாராக இருந்த ஜெயச்சந்திரருக்கெதிராக அய்பக்கை அனுப்பினர். அங்கு நிகழ்ந்த கடும்போரில் முஸ்லிம்கள் தோற்கும் நிலையில் இருந்த பொழுது யானைமீதிருந்த ஜெயச்சந்திரரின் கண்ணில் அம்பு தைக்கவே அவர் கீழே வீழ்ந்தார்; இதனால் அவரது படையினர் பீதியுற்று நிலைகுலைந்து ஓடலாயினர். ஆயிரக் கணக்கான இந்துக்கள் கொல்லப்பட்டனர். காலடியில் மிதிபட்டு உருக் குலைந்த நிலையில் ஜெயச்சந்திரரது சடலம் கண்டுபிடிக்கப் பட்டது. அடுத்தபடியாக, அஸ்னியும் காசியும் கைப்பற்றப் பட்டன. (கனோஜும் கைப்பற்றப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.) காசியில் பல ஆலயங்கள் சூறையாடப்பட்டு, பெருஞ் செல்வம் சுல்தான் முகம்மது வசம் சிக்கிற்று. இத்துடன் அவர் கசினிக்குத் திரும்பலானர். கங்கைச் சமவெளியிலிருந்த முக்கிய அரசான காகதவால அரசும் இவ்வாறு தோல்வியுற்றது.

அஜ்மீர்மீது மீண்டும் படையெடுப்பு

எஜமானர் (சுல்தான் முகம்மது) திரும்பிச் சென்றதும், புதிதாகத் தோன்றியிருந்த கிளர்ச்சிகளை மீண்டும் அடக்கும் வேலையில் அய்பக் ஈடுபடலானார். கோயிலில் (இது கோல்—Kol—என்றும் அழைக்கப்பட்டது) தோர் ராஜபுத்திரர்களும் அஜ்மீரில் ஹரிராஜரும் மீண்டும் தமது எதிர்ப்பினைத் துவக்கியிருந்தனர். கோயில் மீண்டும் கைப்பற்றப்பட்டு, தோர்கள் அடக்கப்பட்டனர். அடுத்தபடியாக, ஹரிராஜரால் கைப்பற்றப்பட்டிருந்த அஜ்மீர் முற்றுகையிடப்பட்டது. தப்பிக்க முடியாது என்பது தெரிந்தவுடன் ஹரிராஜர் தம் குடும்பத்தினருடன் தீக்குளித்து உயிர்விட்டார். கைப்பற்றப்பட்ட அஜ்மீரில் மீண்டும் பிருதிவிராஜரது மகனை அரசராக்காமல், முஸ்லிம் அரசோடு அய்பக் அதை இணைத்துக் கொண்டார் (கி.பி. 1194). இச் சமயத்தில் தான் குத்புதீனால் இடிக்கப்பட்ட இருபத்தேழு இந்து, சமண ஆலயங்களின் கற்களைக் கொண்டு டெல்லியில் 'குவ்வத்துல் இஸ்லாம்' (Quwwat-ul-Islam) என்ற மசூதி அய்பக்கால் கட்டுவிக்கப்பட்டது. கி.பி. 1196-ல் அஜ்மீரில் பழைய இந்து அரசர் விசாலதேவரால் கட்டப்பட்டிருந்த சமஸ்கிருதக் கல்லூரி இடிக்கப்பட்டு, மற்றொரு மசூதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த மசூதியைக் கட்டி முடிப்பதற்கு நான்கு ஆண்டுகள் ஆயின.

சுல்தான் முகம்மதுவின் அடுத்த படையெடுப்பு

கி.பி. 1195-ல் மீண்டுமொருமுறை முயீசுதீன் முகம்மது இந்தியாவுக்கு வந்தார். பயானா (Bayana), குவாலியர் ஆகிய இரு சிற்றரசுகள் அவரால் இப்பொழுது தாக்கப்பட்டன. பயானாவை அப்பொழுது ஆட்சிபுரிந்தவர் யது வம்சத்தைச் சேர்ந்த குன்வர்பாலர் என்பவர். இவரும் ராஜபுத்திரரே. இவர் தங்கர் அல்லது தகன்கர் (Tahangarh) என்ற கோட்டையிலிருந்து போரிட்ட பின், முயீசுதீனிடம் சரணடைந்தார். குவாலியர் அப்பொழுது கச்சபகாட அரசர் (பரிகார குலத்தினர் —Parihar) சல்லக்ஷணபாலரால் ஆளப்பட்டுவந்தது. வலிமைமிக்க குவாலியர்க் கோட்டையை நீண்டகாலம் முற்றுகையிட்டும் பயன் விளையவில்லை. புதிதாக வெல்லப்பட்ட இப் பிரதேசங்களில் பஹாவுதீன் துக்ரில் (Bahauddin Tughril) என்பவரை ஆளுநராக நியமித்துவிட்டு, கி.பி. 1196-ல் முகம்மது கசினிக்குத் திரும்பினார். சல்லக்ஷணபாலர்மீது மேலும் ஓராண்டு காலம் தொடர்ந்து போரிட்ட பின்னரே துக்ரிலால் குவாலியரைக் கைப்பற்ற முடிந்தது.

அய்பக்கின் குஜராத் படையெடுப்பு

அஜ்மீரில் கி.பி. 1195-96-ல் கிளர்ச்சியொன்று தோன்றிற்று. அங்கு வாழ்ந்துவந்த மெகர்கள் (Mhers) என்ற ராஜபுத்திரப் பழங்குடியினர் சௌளுக்கிய அரசரின் உதவியுடன் போர் தொடுத்தனர். அஜ்மீரிலிருந்த முஸ்லிம் ஆளுநர் அய்பக்கின் அவசர உதவியைக் கோரினார். அஜ்மீருக்கருகில் மெகர்களை எதிர்த்த குத்புதீன் தோல்வி ஏற்படும் முன்பாகவே போர்க்களத்தை விட்டு அஜ்மீருக்குள் வந்து கதவுகளை அடைத்துக் கொண்டார். அந் நகரம் மெகர்களால் முற்றுகையிடப்பட்டது. அத் தருணத்தில் கசினியிலிருந்து துணைப் படைகள் வராமற் போயிருந்தால், முடிவு வேறுவிதமாய் இருந்திருக்கும். புதிய படைகள் வருவதைக் கண்டவுடனேயே மெகர்கள் முற்றுகையைக் கைவிட்டுப் பின்வாங்கினர்.

இதற்கெதிராகப் பழிவாங்கும் நோக்கத்துடன் அடுத்த ஆண்டில் சௌளுக்கியத் தலைநகரான அணகிலப்பாடகத்தின் மீது குத்புதீன் படையெடுத்தார். அந் நாட்டரசரான இரண்டாம் பீமர் தமது தலைநகரை விடுத்து, தூரத்துக் கோட்டை ஒன்றினுக்கு ஓடிப் போனார். அற்புத மண்டலத்துப் பரமார அரசரான தாராவர்ஷர், ராய் கரண் (Rai Karan) ஆகியோர் ஒன்றுதிரண்டு, அபுக் குன்றின் அடிவாரத்தில் குத்புதீனை எதிர்த்தனர். அவர்களைத் தோற்கடித்து 50,000 பேர்களைக் கொன்று, 20,000 பேரைச் சிறைப்படுத்தியபின் அணகிலப்பாடகத்தைக் குத்புதீன் கைப்பற்றினார். அவ் ஊரிலிருந்த ஆலயங்களும் அரண்மனைகளும் கொள்ளையிடப்பட்டன. இதன்பின்னர் அங்கு ஓர் ஆளுநரை நியமித்துவிட்டுத் திரும்பிச் சென்றார் குத்புதீன். இரண்டாம் பீமர் திரும்பிவந்து தமது தலைநகரை விரைவிலேயே மீட்டுக் கொண்டார். தூரத்திலிருந்த குஜராத்தை அவசரப்பட்டு இணைத்துக் கொள்வது ஆபத்திலேயே முடியுமென்று கருதிய முஸ்லிம்கள் ஒரு நூற்றாண்டு காலம் வரை அதை விட்டு வைத்தனர்.

கடைசிப் போர்கள்

கி.பி. 1197-98-ல் கங்கைக்கு அப்பாலிருந்த பதாவுன் (Badaun) கைப்பற்றப்பட்டது. வாராணசி, சந்தாவார் போன்ற விடங்களில் எழுந்த கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டு, அவை மீண்டும் கைப்பற்றப்பட்டன. கனோஜும் இப்பொழுது கைப்பற்றப்பட்டது. கி.பி. 1199-1200-ல் ராஜஸ்தானத்தில் பல இடங்களைத் தாக்கி மாளவத்தையும் சூறையாடிவிட்டு, அய்பக் டெல்லி திரும்பினார். கொள்ளை நோக்கத்துடனேயே இத் தாக்குதல்கள்

நிகழ்த்தப்பட்டன என்று தெரிகின்றது. கி.பி. 1202-ம் ஆண்டில் சந்தெல்ல அரசரான பரமார்த்தி தேவர் வசமிருந்த காலஞ்சராக் கோட்டை நீண்டகாலம் முற்றுகையிடப்பட்டது. அச் சந்தெல்ல அரசர் அய்பக்குடன் பேச்சு வார்த்தைகள் துவக்கியதை அவரது அமைச்சரான அஜயதேவர் போன்ருேர் எதிர்த்தனர். இத் தருணத்தில் பரமார்த்தி தேவர் இறந்துபோகவே, அஜயதேவர் பேச்சுவார்த்தையை நிறுத்தி, தொடர்ந்து போரிடுவதற்குத் தயாரானுர். கோட்டையில் நீரும் உணவும் அற்றுப் போன நிலையில் அஜயதேவர் பேச்சுவார்த்தைக்கு இணங்கினுர். சந்தெல்லர்கள் அக் கோட்டையையும் அண்டைப் பிரதேசங் களையும் விடுத்து அப்பால் சென்று அஜய்கரில் (Ajaigarh) ஒரு புதிய தலைநகரை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். காலஞ்சர், மகோபா, கஜுராஹோ ஆகியவை முஸ்லிம் களின் வசமாயின. ஹசன் அர்னல் (Hasan Arnal) என்பவர் இப் புதிய பிரதேசத்தில் முஸ்லிம் ஆளுநராக நியமிக்கப் பட்டார்.

இவ்வாறு குத்புதீன் அய்பக்கின் முயற்சியினுல் இஸ்லாமியர் ஆட்சி கிழக்கில் கனேஜ் வரையிலும், தெற்கில் கஜுராஹோ வரையிலும் நிறுவப்பட்டது. கி.பி. 1197-ல் இந்தியாவிலிருந்து கசினிக்குத் திரும்பிய முயீசுதீன் முகம்மதுவும் அவரது அண்ண னும் கொராசானில் போரிடுவதிலேயே அடுத்த ஐந்து ஆண்டு கள் வரை தமது முழுக் கவனத்தைச் செலுத்தினர். எனவே, அய்பக்கே இந்திய விவகாரங்கள் அனைத்தையும் இக் காலத்தில் கவனித்து வந்தார்.

பக்தியார் கில்ஜி

இவரது இளமை

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் முஸ்லிம் ஆதிக்கத்தைப் பரப்பும் முயற்சியில் அதே சமயத்தில் ஈடுபட்டிருந்தவர் இக்தி யாருதீன் முகம்மது பக்தியார் கில்ஜி (Ikhtiyaruddin Muhammad Bakhtiyar Khilji) என்பவராவார். இஸ்ஸுதீன் முகம்மது பக்தி யார் கில்ஜி என்றும் இவர் அழைக்கப்படுகின்ருர். கோரிமுகம்மது, குத்புதீன் அய்பக் ஆகியோர் காகதவால அரசை வீழ்த்திக் கனேஜைக் கைப்பற்றுவதுடன் நின்றுபோக எண்ணியிருந்த போது, அதற்கப்பாலும் கிழக்கிலான பிரதேசங்களைக் கைப் பற்றத் துணிந்த மனிதர் இவர். அய்பக்குக்கோ சுல்தானின் பெரிய படை பக்கபலமாக இருந்தது. ஆனுல், பக்தியாருக்கோ அப்படி எதுவுமில்லை. தமக்கு மேற்பட்ட அதிகாரிகளிடமிருந்தும்

தமது சொந்த முயற்சியினைக் கொண்டும் திரட்டிய சிறு படையுடனேயே பெரும் சாதனைகளை இம் மனிதர் நிகழ்த்தினரென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சீஸ்தானத்துக்கும் கசினிக்குமிடையிலான பிரதேசம் கர்ம்சீர் (Garmsir) என்று அழைக்கப்பட்டது. அங்குக் கில்ஜிகள் (Khiljis) என்ற துருக்கிய மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தக் கில்ஜிக் குலத்தில் பிறந்தவரே முகம்மது பக்தியார் ஆவார். சாதாரண வறிய குடும்பம் ஒன்றிலேயே இவர் பிறந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. பிழைப்புக்காகக் கசினிக்கு இவர் வந்தார். நல்ல வேலை எதுவும் அங்குக் கிடைக்காததால், இந்தியாவை நோக்கி அவர் நடக்கலானர். கோரி முகம்மதுவின் படையெடுப்பைத் தொடர்ந்து இவரைப் போல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இவ்வாறு இந்தியாவுக்குள் வந்தனரென்பதை இங்குக் குறிப்பிடுவது அவசியம். பார்ப்பதற்கு அருவருப்பான தோற்றமுடையவராய் பக்தியார் இருந்தாரென்றும், அவரது கைகள் அவர் நிற்கும்போது கால் முட்டுக்குக் கீழ் வரையில் நீண்டிருந்தன என்றும் இக் காரணங்களினுல் படையில் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கே எவரும் முன்வரவில்லையென்றும் பின்னர்க் கதைகள் எழுதப்பட்டன. அவரது பெரிய சாதனைகள் காரணமாகப் பிற்காலத்தில் கூறப்பட்ட பல்வேறு கதைகளில் கற்பனைச் செய்திகள் பல புகுந்துவிட்டன என்பதில் ஐயமில்லை. டெல்லியிலும் அவருக்கு முஸ்லிம் சேனையில் வேலை கிடைக்காமல் போகவே, கி.பி. 1193-ல் பதாவுனுக்கு அவர் வந்தார். அங்குப் படையதிகாரிகளுள் ஒருவராக இருந்த ஹிசாப்ருதீன் ஹசன் அதீப் என்பவர் (Hizabruddin Hasan Adib) இவரைத் தம் படைப்பிரிவில் சேர்த்துக் கொண்டார். பக்தியாரின் உறவினர்களில் சிலர் இரண்டாவது தரைன் போரில் பங்கு பெற்றிருந்தனர். இதனுல் வேறு முஸ்லிம் அதிகாரிகளும் இவருக்குத் தமது படைகளில் இடமளிக்க முன்வந்தனர். அயோத்தி (Oudh) பிரதேசத்தில் மாலிக் ஹிசாமுதீன் ஆகூல் பேக் (Hisamuddin Aghul Bek) என்பவர் படையதிகாரியாக இருந்து வந்தார். தமது சொந்த முயற்சியினுலேயே படையொன்றைத் திரட்டி காசி, அயோத்தி ஆகிய பகுதிகளில் இவர் ஆதிக்கம் செலுத்தி வந்தாரென்றும் சிலர் கருதுகின்றனர். இவர் பக்தியாரின் துணிச்சலையும் திறமையையும் கண்டு, அவரைத் தமக்குக் கீழ்ப்பட்ட படை அதிகாரிகளுள் ஒருவராக நியமித்துக் கொண்டார்.

கிழக்கு எல்லையைக் காவல் புரியும் பணி பக்தியார் கில்ஜியிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கெனக் கங்கை நதிக்கும்

சோணை நதிக்குமிடையிலான சில பர்காணுக்கள் இவருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டன. அவை இன்றைய மிர்சாப்பூர் மாவட்டத்தின் தென்கிழக்குக் கோடியிலுள்ளன.

இவரது பீகார்ப் படையெடுப்புகள்

இங்குத் தமது சிறிய வருவாயைக் கொண்டு துணிச்சல் மிகுந்த சில முஸ்லிம் இளைஞர்களைத் திரட்டிக் கொண்டு தமக்குக் கிழக்கிலான பீகார், திர்ஹூத் (Tirhut) ஆகிய பிரதேசங்களின் மீது இவர் தாக்குதல்கள் தொடுக்கலானார். சேன அரசின் மேற்கு எல்லையிலிருந்த இப் பிரதேசத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் இவரால் தாக்கப்பட்டுப் புறமுதுகு காட்டி ஓடினர். தங்கம், வெள்ளி, குதிரைகள் போன்ற பலவும் இக் கொள்ளையின்போது இவருக்குக் கிடைத்தன. இதனால் இவரது படைப்பலம் பெருகலாயிற்று. அடுத்தபடியாகப் பீகாரிலிருந்த பெரிய நகரமான ஓடந்தபுரியைத் (Odantapuri) தாக்குவதற்கு இவர் திட்டமிட்டார். அது சேன அரசர்களின் முக்கியமான நகரங்களுள் ஒன்றாக இருந்தது. குத்புதீன் அய்பக்கின் அனுமதியைப் பெற்று இதன்மீது பக்தியார் தாக்குதல் தொடுத்தார். அதைக் காப்பதற்கென இந்து வீரர்கள் யாருமே இல்லாத அவ்வூர் வெகு எளிதில் இம் முஸ்லிம் படையினால் கைப்பற்றப்பட்டுக் கொள்ளையிடப்பட்டது. அவ்வூரின் பௌத்த மடாலயமும் அதிலிருந்த கல்விக்கூடம், நூலகம் ஆகியவையும் தரைமட்டமாக்கப்பட்டன. பௌத்த பிட்சுக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்.

15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திபேத்திய வரலாற்று ஆசிரியரான தாரநாதர் விக்கிரமசீலம், நாளந்தா ஆகிய நகரங்களையும் அவற்றின் மடாலயங்களையும் பக்தியார் கில்ஜி அழித்தாரென்று குறிப்பிடுகிறார். ஓடந்தபுரியில் பக்தியாரால் கோட்டையொன்று கட்டப்பட்டதென்றும் அவரே தெரிவிக்கிறார். காஷ்மீரத்தைச் சேர்ந்த சாக்கிய ஸ்ரீபத்ரர் என்ற பௌத்தப் பெரியார் ஒருவர் இந் நிகழ்ச்சிகளுக்கு ஓரிரு ஆண்டுகளுக்குப் பின் ஓடந்தபுரிக்கும் (இது உத்தண்டபுரி என்று இந்துக்களால் அழைக்கப்பட்டதென்பதை முன்பே விளக்கியுள்ளோம்) விக்கிரம சீலத்துக்கும் சென்று அவற்றின் புகழ்மிக்க மடாலயங்கள் அழிந்து கிடந்தனவற்றைக் கண்டார்.

வங்காளத்தின்மீது படையெடுப்பு

கி.பி. 1203-ல் பதாவுன் சென்று அய்பக்கைச் சந்தித்தார் பக்தியார். இருபது போர் யானைகளையும் பொன்னையும் மணியை

யும் தங்கக் காசுகளையும் அய்பக்குக்கு அவர் பரிசளித்தார். அய்பக் பக்தியாரின் சாதனைகளைப்பற்றிக் கேள்வியுற்று அவரை மிகவும் பாராட்டியதோடு, தாமும் பதிலுக்குப் பல பரிசுப் பொருட்களைக் கொடுத்துத் திருப்பியனுப்பினார். பின்னர், வங்காளத்திலிருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்த சேனர்கள் மீது பக்தியாரின் படையெடுப்புகள் துவங்கின. பீகாரிலிருந்து பெரிய குதிரைப் படையுடன் வேகமாகச் சேன அரசர் லக்ஷ்மண சேனரது தலைநகரமான நாடியாவை (Nadiya) நோக்கி அவர் சென்றார். அவரது படைகள் மிகவும் பின்தங்கிப் போயினவாக வும், பதினெட்டே குதிரை வீரர்களுடன் பக்தியார் நாடியாவை அடைந்ததாகவும் மின்ஹாஜ் குறிப்பிடுகிறார். எதிர்ப்பதற்கு எவருமில்லாமல் தலைநகருள் இவர்கள் நுழைந்தனர். குதிரை வியாபாரிகள் என்றெண்ணி ஊரின் காவலாளிகளும் மக்களும் இவர்களை வேடிக்கை பார்த்தனர். அரண்மனையைப் பக்தியார் அடையும் தறுவாயில் அவரது படைகளும் நகருக்குள் நுழைந் தன. எதையும் அறிந்து கொள்வதற்கு முன்பாகவே அரண் மனைக் காவலாளிகள் தாக்கப்பட்டுப் பெரிய அமளி எழுந்தது. அப்பொழுது நடுப்பகல் உணவருந்திக் கொண்டிருந்த லக்ஷ்மண சேனர் நிலைமையை உணர்ந்து, அவசர அவசரமாகப் பின் வாயில் வழியாகக் கிழக்கு வங்காளத்துக்கு ஓடிப் போனாராம். நாடியாவை மிகவும் எளிதாகவே பக்தியார் கைப்பற்றினார் என்ற செய்தியினை மின்ஹாஜுக்கு யாரோ சிலர் இவ்வாறு ஓரங்க நாடகம் போல் எடுத்துக் கூறினர் போலும்! நாடியாவை முஸ்லிம்கள் கைப்பற்றினர் என்பது மட்டுமே இக் கதையில் நாம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாம். கி.பி. 1205-ல் டாக்கா மாவட்டத்தில் லக்ஷ்மணசேனர் அளித்த நிலக் கொடைகள் பற்றிய சாசனங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. எனவே, சேனர்கள் கிழக்கு வங்காளத்தில் தொடர்ந்து ஆட்சி புரிந்தன ரென்பது தெளிவு.

லக்ஷ்மணுவதி என்ற நகரை நோக்கி முஸ்லிம் படை சென் றது. இது வங்காளத்தின் வடக்கில் சேனர்களின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகக் கங்கை நதிக்கரையிலிருந்தது. லக்னவ்டி (Lakhnauti) என்று முஸ்லிம் நூலாசிரியர்களால் இது அழைக்கப் பட்டது. இதையும் பக்தியார் கில்ஜி கைப்பற்றினார். வங்காளத் தின் தென் பகுதியிலிருந்த நாடியாவைவிட வடக்கிலிருந்த லக்னவ்டியே பக்தியாரின் தலைமையகம் அல்லது தலைநகரமாக ஆயிற்று. இவ்வூரில் மசூதிகள், மதரசாக்கள் போன்றவை கட்டப் பட்டன. அங்கிருந்தவாறே அதற்கும் அப்பாலிருந்த பல பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொள்வதற்கு அவர் திட்டமிட்டார்.

இதற்கெனப் படையை வலுப்படுத்தியதுடன், அண்டையிலிருந்த மலைக்குலத்தினருடன் பேச்சு வார்த்தைகளையும் இவர் துவக்கினார்.

பக்தியாரின் மரணம்

லக்னவ்டியிலிருந்து எத்திசையில் இவர் அடுத்தபடியாகப் படைநடத்திச் சென்றாரென்பது புரியவில்லை. கோச் (Koch) என்ற பழங்குடிக் குலம் ஒன்றைச் சேர்ந்த ஒருவன் வழிகாட்டிச் செல்ல, மலையடிவாரத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு நதியை இவரது படை அடைந்தது. இது பிரம்மபுத்திரா நதியாகவே இருக்கக்கூடும். அதைக் கடப்பதற்குக் கல்லால் அமைந்த பாலம் ஒன்று அங்கு இருந்தது. அப் பாலத்தினருகில் காமரூபத்து (அஸ்ஸாம்) அரசரிடமிருந்து தூதன் ஒருவன் வந்து பக்தியாரைச் சந்தித்து ஒரு செய்தியைத் தெரிவித்தான். அடுத்த ஆண்டு வரையில் இப் படையெடுப்பினைப் பக்தியார் ஒத்திப் போட்டால் தாமும் அவருக்குப் படையுதவி செய்ய முடியுமென்று காமரூப அரசர் செய்தியனுப்பியிருந்தார். இதில் சிறிதும் அக்கறை காட்டாமல், திபேத்தில் விசாலமான ஒரு பள்ளத்தாக்கினுள் பக்தியாரின் படை நுழைந்தது. அங்கு மக்களது எதிர்ப்புக் கடுமையாக இருந்தது. தம்மை எதிர்ப்பதற்கு 50,000 பேர்களைக் கொண்ட துருக்கியப் படையொன்று வந்து கொண்டிருப்பதாக அவருக்குச் செய்தி எட்டிற்றும். உடனே அச்சமுற்று, வந்த வழியே திரும்புமாறு படைகளுக்கு அவர் ஆணையிட்டார். வழி நெடுகிலும் மலைக்குல வீரர்கள் அவரது படையினரைத் தாக்கிக் கொன்றனர். அவர் கடந்து வந்த கற்பாலமானது அசாமியப் படையினால் உடைக்கப்பட்டிருந்தது. அண்டையிலிருந்த ஆலயமொன்றில் அவரும் எஞ்சியிருந்த ஒரு சிலரும் அடைக்கலம் புகுந்தனர். அங்குப் பகைவர்கள் இவர்களை முற்றுகையிடலாயினர். இவர்கள் அனைவரும் வேகமாகப் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றில் குதித்துத் தப்பிக்க முயன்றனர். பக்தியாரும் மற்ற நூறு பேரும் மட்டுமே நீந்தி எதிர்க் கரையை அடைய முடிந்தது. பழைய கோச் குலத்து வழிகாட்டி இங்கு அவரைச் சந்தித்து, தேவ்கோட் (Deokot) என்ற ஊருக்கு அழைத்து வந்தான். அவ்வூரில் பக்தியார் நோயுற்றுப் படுக்கையில் கிடந்தார். பிறர் முகத்தில் விழிப்பதற்குக்கூட அவர் கூசினாரென்று சொல்லப்படுகிறது. இச் சமயத்தில் சுல்தான் முயீசுதீன் முகம்மது கொல்லப்பட்டு விட்டாரென்ற செய்தியும் வரவே, பக்தியார் கில்ஜியின் நோய் முற்றிற்று. இறுதியில் அவரது அமீர்களில் ஒருவரான அலீ மர்தான் என்பவர் தேவ்

கோட்டுக்கு வந்து, படுக்கையில் கிடந்த பக்தியாரைக் குத்து வாள் ஒன்றினால் குத்திக் கொன்றார் (கி.பி. 1206).

ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளவே அலீ மர்தான் முயன்றார் போலும்! ஆனால், பக்தியார் திபேத்துக்குச் சென்றிருந்த வேளையில் நிர்வாகப் பொறுப்பினை மேற்கொண்டிருந்த முகம்மது இப்னு ஷீரான் (Shiran) என்ற கில்ஜி அதிகாரி அலீ மர்தானை விரட்டியடித்தார். அலீ மர்தான் லாகூருக்கு ஓடிச் சென்று, பின்னர் அய்பக்கைச் சந்தித்து, பக்தியாருதீன் கைப்பற்றிய பிரதேசங்களை அமீர்களிடையில் பிரித்துத் தருவதற்கு என அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அயோத்தியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இவ்வாறு நியமிக்கப்பட்டு, பிரதேசங்கள் பங்கிடப்பட்ட போது கைகலப்பு ஒன்று ஏற்பட்டது. அதில் முகம்மது இப்னு ஷீரான் கொல்லப்பட்டார். இதற்குப்பின் அலீ மர்தானே அப் பிரதேசத்தில் ஆளுநராக அய்பக்கால் நியமிக்கப்பட்டார்.

பக்தியார் கில்ஜி திறமைமிக்க ஒரு போர் வீரர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமது சொந்த முயற்சியினாலேயே முன்னுக்கு வந்த மனிதர் அவர். பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளை வென்று, முஸ்லிம் ஆதிக்கத்தினை அங்கு நிறுவியவர் இவரே. அய்பக்குக்கு இருந்த அரச ஆதரவும், அதிகாரமும், படைப்பலமும் பிற வசதிகளும் இவருக்கும் இருந்திருக்குமேயானால், மேலும் முக்கியமான ஒரு சிறப்பிடத்தை இந்திய வரலாற்றில் இவர் பெற்றிருப்பார்.

பக்தியார் கில்ஜியின் படையெடுப்புகள் முயீசுதீன் முகம்மது அல்லது அய்பக் போன்ற எவருடைய கட்டளையின்படியும் நிகழ்த்தப்பட்டனவல்ல. தமது சொந்த முயற்சியும் திட்டமும் காரணமாகவே அவை நிகழ்த்தப்பட்டன. ஆயினும், கோரி முகம்மதுவுக்குக் கட்டுப்பட்ட ஒரு போர் வீரராகவே பக்தியார் கில்ஜி தம்மைக் கருதிவந்தார். நோயுற்றுப் படுக்கையிலிருந்த இறுதி நாட்களிலும் முயீசுதீன் முகம்மதுவையே மிகுந்த மரியாதையுடன் அவர் நினைத்துக் கொண்டிருந்தாரென்று முஸ்லிம் நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். முகம்மதுவின் மரணத்துக்குப் பின் பக்தியார் கில்ஜி உயிருடன் இருந்திருந்தால், பீகாரையும் வங்காளத்தையும் தமது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்து, குத்புதீன் அய்பக்குக்குப் போட்டியாகத் திகழ்ந்திருப்பார் என்பது நிச்சயம்.[1] ஏறத்தாழ ஒரே சமயத்தில் முயீசுதீன்

[1] Habib and Nizami, *A Comprehensive History of India*, Vol. V—The Delhi Sultanat.

முகம்மதுவும் பக்தியார் கில்ஜியும் மரணமடைந்தமை அய்பக்குக் குச் சிறந்த ஒரு வாய்ப்பாக அமைந்தது.

கோரி முகம்மதுவின் மரணம்

கி.பி. 1196-ல் இந்தியாவை விட்டுச் சென்ற கோரி முகம்மது தம் அண்ணனுக்கு உதவியாகக் குவாரிசம் ஷாமீது புரிந்த கடுமையான போர்களில் தமது மரணம் வரையில் ஈடுபட வேண்டியவரானுர். குவாரிசம் ஷாக்களும் கோரி சுல்தான்களும் தத்தம் பேரரசை விரிவுபடுத்தும் திட்டத்தில் இறங்கி, ஒருவருக் கெதிராக ஒருவர் பகைமை பூண்டு போரிட்டனர். தகாஷ் (Takash) என்ற குவாரிசம் ஷாவால் அவமதிக்கப்பட்ட கலீஃபா, கியாசுதீன் முகம்மதுவைக் கொராசானின்மீது படை யெடுக்குமாறு தூண்டினுர். தகாஷ் கி.பி. 1200-ல் இறந்தபின், அவரது மகனும் பேரனும் அரியணைக்குப் போட்டியிட்டனர். இத் தருணத்தைப் பயன்படுத்தி, கோரிப் படைகள் கொராசா னின்மீது படையெடுத்து நிஷாப்பூர், மெர்வ், துஸ் (Tus) போன்ற முக்கியமான நகரங்களைக் கி.பி. 1201-ல் கைப்பற்றின. ஆனுல், அடுத்த குவாரிசம் ஷாவான அலாவுதீன் முகம்மது என்பவர் (இவர் இரண்டாவது அலெக்சாந்தர் என்றும் அழைக் கப்பட்டார்) கோரிப் படைகளை எதிர்த்துப் போரிட்டு நிஷாப் பூரை மீட்டார். போர் இவ்வாறு நடந்து கொண்டிருந்த வேளை யில் சுல்தான் கியாசுதீன் முகம்மது காலமானுர். அவர் கால மான ஆண்டு கி.பி. 1202 என்று பலரும் கருதுகின்றனர். ஆனுல், கி.பி. 1203 பிப்ரவரி அல்லது மார்ச்சிலேயே கியாசுதீன் மரணமடைந்திருக்க வேண்டுமென்று உல்ஸ்லி ஹேக், ஹபீப் ஆகியோர் கருதுகின்றனர்.

கோரி முகம்மதுவின் தோல்வி

தம் அண்ணனின் மரணச் செய்திபற்றிக் கேள்வியுற்ற வுடனேயே குவாரிசம் ஷாவுக்கு எதிராக நடைபெற்ற போரை நிறுத்தி, கோருக்குத் திரும்பினுர் ஷிகாபுதீன் (முயீசுதீன்). கசினியையும் இந்தியப் பிரதேசங்களையும் தமதுவசம் வைத்துக் கொண்டு, தம் அண்ணனின் பகுதிகளை அவரது மருமகன், மகன், சகோதரி மகன் ஆகியோரிடையில் ஷிகாபுதீன் பங்கிட்டளித்தார். தம் அண்ணனின் மகனுன கியாசுதீன் மகமூதைக் கோர் நகரில் சுல்தானுக இவர் நியமிக்காதது கவனிக் கத் தக்கது. கோர் பிரதேசத்தையும் தலைநகரான ஃபைரோஜ் கோஹையும் (Firoz Koh) தன் அண்ணனின் மருமகன் சியாவு தீனுக்கும், பஸ்த் (Bust) போன்ற சில பகுதிகளைக் கியாசுதீன்

மகமூதுக்கும், ஹீரட்டை அல்ப் காசி (Alp Ghazi) என்ற தம் சகோதரி மகனுக்குமாக அவர் பங்கிட்டுத் தந்தார். தம் அண்ணன் மகன்மீது ஷிகாபுதீனுக்கு நம்பிக்கையில்லையென் பதை இப் பங்கீடு தெளிவாக உணர்த்துகின்றது. இம் மூவருக் கும் மேற்பட்ட கோர் சுல்தானாக ஷிகாபுதீனே இப்பொழுது பதவியேற்றார்.

ஆனால், விரைவிலேயே குவாரிசத்துப் படைகள் மெர்வ் நகரைத் தாக்கிக் கைப்பற்றின. ஷிகாபுதீனால் அங்கு நியமிக் கப்பட்டிருந்த ஆளுநர் சிறைப் பிடித்துக் கொல்லப்பட்டார். அடுத்தபடியாக ஹீரட்டும் முற்றுகையிடப்பட்டது. அல்ப் காசி கதிகலங்கி அலாவுதீன் முகம்மதுவிடம் சரணடைந்தார். இவற்றையெல்லாம்பற்றி அறிந்த முயீசுதீன் பெரும் படை யொன்றைத் திரட்டிக் கொண்டு அந்த்கூத் (Andhkud) என்ற இடத்தை அடைந்தார். அந்த்கூய் (Andhkhui) என்றும் சில ரால் இது அழைக்கப்படுகிறது. அங்கு நடந்த கடும் போரில் அலாவுதீன் முகம்மதின் குவாரிசப் படைகள் முயீசுதீன் முகம் மதுவைக் கடுமையாக முறியடித்தன. தமது பெரும்படை முழு வதையும் இழந்து, பகைவர்களின் அம்புகளால் உடல் துளைக்கப் பட்டு, அடிமை ஒருவனின் உதவியோடு போர்க்களத்தைவிட்டு எவ்வாறோ உயிர்தப்பி முயீசுதீன் வெளியேறினார் (கி.பி. 1205). இப் பெருந் தோல்விக்குப் பின் கோர் அரசு முழுவதையும் குவாரிசம் ஷாவுக்கு இலக்காக விட்டுவிட்டுத் தமது தலைநகரான கசினிக்கு முயீசுதீன் திரும்பினார்.

முயீசுதீனின் மரணம்

இத் தோல்விபற்றிய செய்தி எல்லாத் திசைகளிலும் பர விற்று. முயீசுதீன் தப்பிப் பிழைத்ததுபற்றிய உண்மை ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்ததால், அவர் போர்க்களத்தில் கொல்லப்பட்டுவிட்டாரென்றே அனைவரும் நம்பினர். அந்த்கூத் போரில் கலந்துகொண்ட அவரது படைத்தளபதிகளுள் ஒருவ ரான அய்பக்பக் (Aibakbak) என்பவர்கூட முயீசுதீன் கொல்லப் பட்டார் என்றே கருதி, ஒரு சிறிய படையோடு போர்க்களத்தி லிருந்து தப்பித்து வெளியேறி மூல்தானை அடைந்து, அதன் ஆளுநரைக் கொன்றுவிட்டு, தம்மைச் சுதந்திரமான அரசராக அறிவித்துக் கொண்டார். சுல்தான் முயீசுதீன் கொல்லப்பட்டு விட்டதற்கு இதனினும் வேறு சான்று தேவையில்லை என்று கருதிய கொக்கர்கள் போன்ற இந்திய மலைக் குலத்தினர் பலர் பஞ்சாபில் திரண்டெழுந்து முஸ்லிம் அதிகாரிகளை விரட்டியடிக் கத் துவங்கினர். சால்ட் மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ராய்

சால் (Rai Sal) என்பவர் இஸ்லாமிய சமயத்தைக் கைவிட்டு, மீண்டும் இந்துவாக மாறி, லாகூரைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தார். லாகூர் நகர மக்களும் அவரோடு சேர்ந்து கொள்ளவே, அது எளிதாகக் கைப்பற்றப்பட்டது. இக் கிளர்ச்சிகளை ஒடுக்குமாறு குத்புதீன் அய்பக்குக்கு ஆரம்பத்தில் ஆணையிட்டிருந்த முயீசுதீன், நிலைமை மேலும் சீர்கெட்டுவிட்டதைக் கண்டு, கி.பி. 1205 அக்டோபரில் கசினியை விட்டுத் தாமே புறப்பட்டார். உடனே படையுடன் புறப்பட்டுத் தமக்குதவியாகப் பஞ்சாபுக்கு வருமாறு அய்பக்குக்கும் அவரால் ஆணையிடப்பட்டது.

நவம்பரில் ஜீலத்துக்கும் சீனுபுக்குமிடையில் கொக்கர்களை எதிர்த்துக் கடும்போர் நிகழ்ந்தது. யாருக்கும் வெற்றி தோல்வியில்லாமல் பல மணி நேரம் போர் நடந்து கொண்டிருந்த வேளையில், எதிர்த் திசையிலிருந்து அய்பக்கும் வந்து சேரவே, முயீசுதீனுக்கே இறுதியில் வெற்றி கிட்டிற்று. கொக்கர்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலைக்கு ஆளாயினர். அவர்களில் எண்ணற்றோர் அடிமைகளாகக் கசினிக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். மற்றப் பகைவர்களையும் ஒடுக்குவதில் மூன்று மாதம் செலவிட்ட பின், முயீசுதீனும் அய்பக்கும் கி.பி. 1206 பிப்ரவரியில் லாகூரை அடைந்தனர். அங்குத் தமது ஆதிக்கத்தை மறுபடியும் உறுதியாக நிறுவிய பின், அய்பக்கை டெல்லிக்குத் திரும்பிச் செல்லுமாறு முயீசுதீன் ஆணையிட்டார். சில நாட்களில் அவரும் கசினியை நோக்கிப் புறப்பட்டார். அங்கு வழியில் சிந்து நதியின் கரையில் தம்யக் (Damyak) என்ற ஓரிடத்தில் மாலைத் தொழுகையில் முயீசுதீன் ஈடுபட்டிருந்த பொழுது மார்ச் 15ஆம் தேதியன்று சிலர் அவரது முகாமுக்குள் நுழைந்து அவரைக் கொலை செய்தனர். அவ்வாறு கொலை செய்தவர்கள் ஷிஆப் பிரிவைச் சேர்ந்த இஸ்மாயீலிகளாகவே இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அவர்கள் கொக்கர்களே என்றும் வேறு சிலர் கருதுகின்றனர். கோரி முகம்மதுவால் குருடாக்கப்பட்டுச் சிறையில் கிடந்த பிருதிவிராஜரே இக் கொலைக்குக் காரணமென்று பிற்காலத்தைச் சேர்ந்த சில நூல்கள் குறிப்பிடுவது கட்டுக் கதை என்றே அனைவராலும் கருதப்படுகிறது.

சுல்தான் முயீசுதீனின் உடல் கசினிக்குக் கொண்டு செல்லப்பட்டுப் புதைக்கப்பட்டது. அவரது அண்ணன் மகனான கியாசுதீன் மகமூத் அரியணையைக் கைப்பற்றி அடுத்த சுல்தானாகப் பதவியேற்றார். ஆனால், குவாரிசம் ஷாவான அலாவுதீன் முகம்மது விரைவிலேயே கோரி, கசினி ஆகிய பிரதேசங்கள்

முழுவதையும் கைப்பற்றி, ஷன்சபானீ வம்சத்துக்கு முடிவு கட்டினர். இந்தியப் பிரதேசங்கள் மட்டுமே கோரி முகம்மது வின் அடிமைகளுக்கு எஞ்சியிருந்தன.

மதிப்பீடு

கோரி முகம்மது திறமை மிகுந்த அரசர். கசினி மகமூதைப் போல் எப் போரிலும் தோல்வியுருத மாபெரும் வீரராக சுல்தான் முயீசுதீனை நாம் கருத முடியாது எனினும், இந்தியாவில் நிலையான இஸ்லாமிய ஆட்சிக்கு அடிக்கல் நாட்டியவர் அவரே யாவார். டெல்லியை மையமாகக் கொண்ட முஸ்லிம் சல்தனத் இந்தியாவில் சீக்கிரமே வேரூன்றித் தழைத்து ஓங்குதற்கு மூலகாரணமாயிருந்தவர் முயீசுதீனே. குவாரிசம் ஷாவுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட போரில் தோல்வியுற்றதால் மத்திய ஆசியாவில் அவரது ஆதிக்க ஆசைகள் தவிடுபொடி யாயின. இருப்பினும், வட இந்தியாவில் முஸ்லிம் அரசு ஒன்றை நிறுவுவதற்கு அவரது படையெடுப்புகளே காரணமாயமைந்தன. அவருக்குப் பின் அவரது அரசினை ஆள்வதற்குச் சொந்தப் பிள்ளைகள் அவருக்கில்லை. அவரால் வளர்க்கப்பட்ட அடிமைகளே சொந்த மகன்களைப் போலிருந்து, தமது அரசுக்கு வாரிசுகளாவார்கள் என்று கோரி முகம்மதுவே கூறியிருந்தாரென்று குறிப்பிடப்படுகின்றது. அய்பக், யல்தூஸ், துக்ரில் (Tughril) போன்ற ஆற்றல் மிக்க அடிமைகளைப் பொறுக்கி எடுத்து முக்கியமான இடங்களில் ஆளுநர்களாகவும் படைத் தளபதிகளாகவும் கோரி முகம்மது அவர்களை நியமித்த செயல் அவரது கூரிய மதியினைப் புலப்படுத்துகிறது. ஆண்டுதோறும் ஆக்ஸஸ், ஜக்சர்டீஸ் (Jaxartes), கங்கை ஆகிய நதிப் பிரதேசங்களை நோக்கி இடைவிடாமல் அவர் போரிட்டது அவரது போர் ஆற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஓய்வு ஒழிவற்ற இப் போர்களுக் கிடையிலும் சில அறிஞர்களை இவர் ஆதரித்தார். சான்ருக, மிகச் சிறந்த கவிஞராகக் கருதப்பட்ட நிசாமி உருசி (Nizami Uruzi) 'உலகை எரித்த அலாவுதீ'னின் நண்பராயிருந்த பின், கியாசுதீன் முயீசுதீன் ஆகிய இருவராலும் ஆதரிக்கப்பட்டு வாழ்ந்தார். தத்துவத்திற் சிறந்த ஃபக்ருத்தீன் ராஸி (Fakhruddin Razi) என்பவரும் இவரால் ஆதரிக்கப் பட்டார். இவர் தமது நூல்களுள் ஒன்ருன லதைஃபுல்-கியாசி (Lataiful Ghiyasi) என்பதைக் கியாசுதீன் முகம்மதுவின் நினைவுக்குக் காணிக்கையாக்கினர். ஃபக்ருதீன் முபாரக் ஷா என்ற மற்ருெரு எழுத்தாளரும் முயீசுதீனல் ஆதரிக்கப்பட்டு ஷன்சபானீ வம்சத்தின் வரலாறு போன்ற பல சரித்திர நூல்களை எழுதினர்.

3. குத்புதீன் அய்பக் அரசராதல்

மூன்று அடிமைகள்

சுல்தான் முயீசுதீனின் இறுதி முடிவு திடீரென ஏற்பட்டது. தமக்குப் பின் தமது அரசின் ஆட்சிக்கான ஏற்பாடுகளை அவர் செய்வதற்கு முன்பாகவே அவருக்கு மரணம் ஏற்பட்டது. இந் நிலையில் அவரது அடிமைகளில் மூவர் இந்தியாவில் முக்கியமான வர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் யல்தூஸ் (Yalduz), அய்பக், குபாச்சா (Qubacha) ஆகியோர். முகம்மது பக்தியார் கில்ஜி நோயுற்றுப் படுக்கையில் கிடந்தார். முயீசுதீனின் மரணம் அவருக்குத் தெரியாது என்றே நூற்சான்றுகள் அனைத் தும் அறிவிக்கின்றன. விரைவிலேயே அவரும் கொலை செய்யப் படாமல் இருந்திருந்தால் மேலே கூறப்பட்ட மூவருடன் நான்கா வது போட்டியாளராக அவரும் இடம் பெற்றிருப்பார். வடமேற் கில் கோர் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காகக் குவாரிசம் ஷாவான அலாவுதீன் மகமூது படைகளைத் திரட்டிக் கொண் டிருந்தார். ஃபைரோஸ் கோஹ் நகரில் ஆட்சியைக் கைப்பற்ற சுல்தான் கியாசுதீனின் மகன் மகமூத் முயற்சிகளை மேற் கொண்டிருந்தார். விரைவிலேயே இம் முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றுக் குவாரிசம் ஷாவின் ஆதரவைக் கோரி, அவ ருக்குக் கீழ்ப்பட்ட அரசராக ஃபைரோஸ் கோஹிலிருந்து அவர் ஆளவும் துவங்கினர். (கி.பி. 1212-ல் கியாசுதீன் மகமூத் கொலை செய்யப்பட்டார். இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்க் கோர் அரசின் தலைநகரமான ஃபைரோஸ் கோஹே குவாரிசம் ஷாவின் வசப்பட்டது.)

யல்தூஸின் தயாரிப்புகள்

இவ்வாறு கோரி முகம்மதுவின் மரணத்துக்குப் பின்னர் எல்லாத் திசையிலும் பல வகையான சிக்கல்கள் உருவாயின. இந்தியாவைப் பொறுத்த வரையில், சுல்தான் முயீசுதீன் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று அடிமைகளிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். அவர்களுள் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர் தாஜுதீன் யல்தூஸே. இவர் கிர்மா னில் (Kirman) ஆளுநராகக் கோரி முகம்மதுவால் நியமிக்கப் பட்டிருந்தார். இப் பிரதேசம் வடக்குச் சிந்துவுக்கும் ஆப்கானிஸ் தானத்துக்கும் இடையில் இருந்தது. கோரி முகம்மதுவின் ஆணையின்படி, இவரது ஒரு பெண் குத்புதீன் அய்பக்குக்கும் மற்றொரு பெண் நாசிருதீன் குபாச்சாவுக்கும் திருமணம் செய்து தரப்பட்டிருந்தனர். கோரி முகம்மது இறந்தவுடனேயே

யல்தூஸ் படையுடன் புறப்பட்டுச் சென்று கசினி நகரைக் கைப் பற்றிக் கொண்டார். இதற்குச் சற்று முன்பு ஃபைரோஸ் கோஹ் நகரைக் கியாசுதீன் மகமூத் கைப்பற்றி சுல்தாஞக இருந்தார். சுல்தான் கியாசுதீன் மகமூதுக்கு ஆளனுப்பி, அவரிடமிருந்து அடிமைத் தளையிலிருந்து விடுதலை அளிக்கும் (Manumission) பத்திரம் ஒன்றையும் கசினியின் ஆட்சி உரிமையையும் யல்தூஸ் பெற்ருர். கசினியில் இவ்வாறு அரசரானவுடன், கோரி முகம் மதுவின் காலத்திலும் கசினி மகமூதின் காலத்திலும் கசினி அரசின் அங்கமாய் விளங்கிய பஞ்சாப் தமக்கே சேர வேண்டு மென்று யல்தூஸ் கூறினுர்.

அய்பக்கின் வெற்றி

வயதில் யல்தூஸுக்கு அடுத்தபடியாக இளையவர் அய்பக்கே. இவரது மைத்துனியைக் குபாச்சா மணந்திருந்தார். கோரி முகம்மது இறந்த போது அய்பக் டெல்லியிலிருந்தார். அக்கணமே நிலைமையை அவரால் நன்ருகப் புரிந்து கொள்ள முடிந்தது. குபாச்சா அப்பொழுது உச்சில் (Uch) ஆளுநராக இருந்துவந் தார். வயதிலும் அனுபவத்திலும் இளைஞரான இவர் யல்தூஸுக்கும் அய்பக்குக்கும் சமமாகத் தம்மால் போட்டியிட முடியாது என்பதை உணர்ந்து, உரிய தருணத்துக்காகக் காத் திருந்தார். மேலும், அய்பக்கின் மேலாதிக்கத்தை ஏற்று அவருக்கு அடங்கிப்போகவும் குபாச்சா முடிவு செய்தார். அய்பக் கி.பி. 1210-ல் இறந்த பின்னரே அரியணைக்குப் போட்டியிடும் துணிச்சல் குபாச்சாவுக்குப் பிறந்தது.

பஞ்சாபின் முக்கியமான நகரமான லாகூரிலிருந்த படை யதிகாரிகளும் பிரபுக்களும் குத்புதீன் அய்பக்கை ஆதரித்தனர். அவர்களது அழைப்பை ஏற்று டெல்லியிலிருந்து லாகூருக்குச் சென்று கி.பி. 1206 ஜூனில் அய்பக் பதவியேற்ருர். இவ்வாறு தான் வட இந்தியாவில் அடிமை வம்சத்தின் ஆட்சி துவங்கிற்று. 'சுல்தான்' என்ற பட்டத்தை அவர் சூடிக் கொள்ளாததோடு, தமது பெயரில் நாணயத்தையும்கூட அவர் வெளியிடாதது குறிப்பிடத்தக்கது. மாலிக் (Malik), சிப்பாஹ்சலார் (Sipahsalar) எனும் பட்டங்களையே அவர் சூடியிருந்தார் என்பதை அவரது சாசனங்கள் தெரிவிக்கின்றன. மேற்கில் கசினியிலிருந்து யல்தூஸும் தெற்கில் சிந்துவிலிருந்து குபாச்சாவும் படை யெடுத்து வரக்கூடுமென்று எதிர்பார்த்து, லாகூரையே சுமார் இரண்டாண்டுகள் வரையில் தமது தலைமையகமாக அய்பக் கொண்டிருந்தார். கி.பி. 1208-ல் யல்தூஸ் சிந்துவின்மீது படையெடுத்துச் சென்று குபாச்சாவை விரட்டியடித்த பின்,

பஞ்சாபுக்குள்ளும் நுழைந்தார். தாம் எதிர்பார்த்த வாய்ப்புக் கிட்டிவிட்டதை உணர்ந்த அய்பக் யல்தூஸைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, கசினியையும் கைப்பற்றிக் கொண்டார். அப்பொழுது தூதுவர் ஒருவரை சுல்தான் கியாசுதீன் மகமூதிடம் அனுப்பி, அடிமைத் தளையிலிருந்து விடுதலையளிக்கும் பத்திரத்தையும் இந்துஸ்தானத்தின் மீதான ஆட்சி உரிமையையும் தமக்கு அளிக்குமாறு அய்பக் வேண்டினர். இவையிரண்டும் அளிக்கப்பட்டு, அதற்கடையாளமான சிவப்பு அங்கி ஒன்றும் சுல்தான் மகமூதால் அய்பக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கசினியிலிருந்து அய்பக் விரைவிலேயே விரட்டப்பட்டாரென்ருலும், இந்தியாவில் அவரால் நிறுவப்பட்ட முஸ்லிம் அரசு உறுதியாக நிலைகொண்டது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600 031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1976 டிசம்பர் முடிய 737 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

மேலும் விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39	நூல்கள்
சட்டம்	—	12	,,
மருத்துவம்	—	18	,,
இயற்பியல்	—	23	,,
வேதியியல்	—	20	,,
தாவரவியல்	—	13	,,
விலங்கியல்	—	14	,,
கணிதம்	—	17	,,
வணிகவியல்	—	37	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	11	,,
வரலாறு	—	29	,,
மனையியல்	—	1	,,
தத்துவம்	—	4	,,
உளவியல்	—	8	,,
புள்ளியியல்	—	8	,,
கல்வி	—	15	,,
நிலப்பொதியியல்	—	6	,,
அரசியல்	—	19	,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை-600 006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்.